OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 JUN 1913
MADRAS

# முகவுரை

மஹாராஷ்ட்ர பாஷையிலிருந்த இந்த தாசர்களின் சரித்திரங்களை தஞ்சாவூரில் பிரக்கியாதி பெற்றிருந்த துளஸி அய்ய என்பவர் முதல் முதலில், திராவிடத்தில் காவ்ய ரூபமாக எழுதினார். அதை அநுசரித்து, எமது ஆசார்யராகிய ஸ்ரீமாந் - கோயில் - தநால - தேவராஜ ஸ்வாமி என்பவர், தெலுங்கு பாஷையில் வசனமாக அநேக பகவத்கீதா வாக்யங்களுடனும் ஆசார்யர்கள் அருளிய அர்த்த விசேஷங்களுடனும், பிரமாணங்களுடனும், ஸ்தோத்ரங்களுடனும் எழுதி இருக்கின்றனர். இப்போது நாங்கள், அதை அநுசரித்தே, தமிழில், இனிய வசன நடையில் சந்தர்ப்பத்திற் குகந்தவாறு நாலாயிரம், பாகவதம், பாரதம், அஷ்டப் பிரபந்தம், குறள் முதலிய பல சிறந்த நூல்களிலிருந்து மேற்கோள்களைச் சேர்த்து, நல்ல காகிதத்தில், முத்துப்போன்ற எழுத்துக்களால், எழுத்துப் பிழைகளின்றித் திருத்தமாய் அச்சிட்டு இருக்கின்றோம்.

இதுவரையில் பக்தவிஜயம் அச்சிடப்பட்டு வெளிவந்திருந்தாலும் இது மஹாராஷ்ட்ர பாஷையில் பல பண்டிதரால் இயற்றப்பட்டு வெளிவந்திருக்கும் பல நூல்களையும் தழுவி எழுதப்பட்டமையால் இந்நூல் மற்றவர்கள் வெளியிட்ட பக்தர்கள் சரித்திரங்களைவிட கதைகளிலும் விஷயங்களிலும் விரிவாகவும் விளக்கமாகவும் இருக்கும்.

இந்தப் புத்தகம் அச்சிட எங்களுக்கு உதவிசெய்த மஹாவித்வான் ஸ்ரீமாந் ராமஸ்வாமி நாயுடவர்களுக்கும், ம-ா-ா-ஸ்ரீ, மாணிக்கவாசகம் பிள்ளை அவர்களுக்கும், நாங்கள், நன்றி செலுத்துகிறோம்.

சென்னை,
1913ளு மேமீ 18உ }

இப்படிக்கு
எம். ஆதி கம்பெனி.

120786

# இந்தப் புத்தகத்தில் அமைக்கப்பட்டுள்ள படங்களின் விவரம்.


1. கிரந்த கர்த்தாவாகிய தநால தேவராஜ ஸ்வாமி. [ம்.
2. ஸ்ரீ பண்டரீபுரம், சந்திரபாகா நதி, ஸ்ரீ பாண்டுரங்கன் ஆலய
3. ஸ்ரீ ஞானதேவர் மஹிஷத்தால் வேதாத்யயனம் செய்வித்தது.
4. புலியின்மேல் ஆரோஹணித்து வந்த சாரங்கதேவர், 'நிவர்த்தி தேவ சோபானதேவ முக்தாபாயுடன் மண்சுவர்மேல் ஆரோஹணித்து, அதையே வாகனமாக நடப்பித்துக் கொண்டு வந்த ஸ்ரீ ஞானதேவரைச் சரணடைதல்.
5. நாமதேவ்வர் பஜனை செய்தல்.
6. பாண்டுரங்கன் நரஹரிபக்தருக்காக ஹரிஹர ரூபமாய்சேவை சாதித்தல்.
7. ஸ்ரீ துக்காராம் ஸ்வாமி பஜன கோஷ்டியிலிருந்து நிஜ சரீரத்துடன் விமானா ரூடாராய் வைகுந்தத்திற்குப் போதல்.
8. புண்டரீகன் பக்திக்கு திருவுள்ளமுவந்து ஸ்ரீ பண்டரிநாதன் ருக்மிணி தேவியுடன் செங்கல்லின்மீது நின்று சேவை சாதித்தல்.


# பக்த விஜயத்தில அடங்கி யிருக்கிற விஷயங்கள்.


| | | பக்கம். |
|---|---|---|
| | ஸத்தியபிரகாசிகை. | |
| | அவதாரிகை. | 1 |
| 1. | கலியுக தர்மம். | 35 |
| 2. | ஸ்ரீஜய தேவர் சரித்திரம். | 38 |
| 3. | ஸ்ரீஜயதேவர் ததீயாராதன வைபவத்தை அரசனுக்கு உபதேசித்தல். | 42 |
| 4. | துளசிதாஸர் சரித்திரம். | 48 |
| 5. | மாதா தேவியார் துளசிதாஸர்க்கு ஆத்மஹிதத்தை ஸ்மரிப்பித்தல். | 49 |
| 6. | ஸ்ரீ நாம தேவர் சரித்திரம். | 62 |
| 7. | கபீர் தாஸர் சரித்திரம். | 71 |
| 8. | கபீர், பகீருக்கு அவிக்ரஹ, சவிக்ரஹோபாஸங்களின் தாரதம்யத்தை நிரூபித்தல். | 73 |
| 8a. | கமால்தாஸர் சரித்திரம். | 75 |
| 9. | நிவர்த்திதேவர், ஞானதேவர், சோபானதேவர், முக்தாபாய் இவர்களின் உற்பத்தி சரித்திரம். | 84 |
| 10. | ஞானதேவர் மஹிஷத்தால் வேதாத்யயனம் செய்வித்தல். | 92 |
| 11. | ஞானதேவர் நாமதேவருடன் தீர்த்தயாத்திரை செய்த சரித்திரம். | 98 |





| | | பக்கம். |
|---|---|---|
| 12. | நாமதேவர் ஞானதேவருக்கு ஸ்வாநுபவத்தை விண்ணப்பம் செய்தல். | 103 |
| 13. | ஞானதேவரும் நாமதேவரும் கபீர்தாஸர் வீட்டிற்கு வரும் சரித்திரம். | 106 |
| 14. | கபீர்தாஸரின் மனைவி தன் மனத்தில் பதிவிரதா தர்மத்தை ஊஹித்தறிதல், | 107 |
| 15. | கபீர்தாஸர், வர்த்தகனுக்கு ஹிதோபதேசம் செய்தல். | 110 |
| 16. | ஞானதேவ நாமதேவர்களுடைய தீர்த்த யாத்திரையில் கிணற்றுநீர் தனக்குத்தானே பிரவகித்தல், நாகநாதன் சந்நிதி இவர்களுக்கு எதிர் முகமாகத் திரும்புதல். | 112 |
| 17. | பகவான், நாமதேவர் செய்த தீர்த்த யாத்திரைக்காக உத்யாபனம் செய்வித்த சரித்திரம். | 115 |
| 18. | ஸ்ரீபுண்டரீகவரதன் பிராமணர்களிடம் பிராயச்சித்தம் செய்து கொண்ட சரித்திரம். | 120 |
| 19. | ஸ்ரீ பண்டரிநாதன் பிராமணர்களுக்கு ஜீவாத்ம ஸ்வரூபத்தை உபதேசித்தல். | 121 |
| 20. | பகவான், பிராமணர்களுக்கும் பக்தர்களுக்கும் நிஜரூப தரிசனம் கொடுத்த சரித்திரம். | 128 |
| 21. | கூர்மதாஸர் சரித்திரம். | 132 |
| 22. | ராகா சரித்திரம். | 141 |
| 23. | கோராகும்பார் சரித்திரம். | 146 |
| 24. | நாமதேவர் சதாசார்யரை ஆசிரயித்த சரித்திரம். | 151 |
| 25. | கோராகும்பார் ஞானதேவர் சந்நிதியில் பாஞ்ச பௌதிக கடஸ்வரூபத்தை விண்ணப்பம் செய்து, அவர்கள் கட்டளையின்படி கட பரீக்ஷை செய்தல். | 152 |
| 26. | பண்டரிநாதன் ஆசார்ய சமாசிரயண வைபவத்தை நாமதேவர்க்கு உபதேசித்தல். | 154 |
| 27. | வீசோபாகேசர், நாமதேவருக்கு ஞானோபதேசம் அநுக்ரஹம் செய்தல். | 156 |
| 28. | ஸ்பரிச பாகவதர் சரித்திரம். | 161 |
| 29. | ஸ்பரிசபாகவதருக்கு நாமதேவர், அர்த்தம் அநர்த்தமென்று நிரூபித்தல். | 163 |
| 30. | ஜகந்மித்ர நாகநாதர் சரித்திரம். | 168 |
| 31. | சோகாபரமானந்தர் சரித்திரம். | 173 |
| 32. | ஸ்ரீ பகவத் கீதா வைபவம். | 174 |
| 33. | நரஹரி பக்தன் சரித்திரம். | 178 |
| 34. | ஸ்ரீ பண்டரிநாதன் ஸ்ரீ நரஹரி பக்தருக்கு ஹரிஹரரூபம் தரிசனம் செய்வித்தல். | 180 |
| 35. | நாமதேவரை, பண்டரிநாதர் பரீக்ஷை செய்த சரித்திரம். | 181 |
| 36. | ஏகாதசி விரதத்தின் மகிமை. | 185 |
| 37. | ஜநாபாய் சரித்திரம். | 189 |
| 38. | நாமதேவர், குருபரம்பராநுசந்தான பூர்வகமாய் ஸ்ரீ பாத தீர்த்தத்தை சேகரித்து ஸ்வீகரித்தல். | 204 |
| 39. | மச்சேந்திரநாதர் சரித்திரம். | 205 |
| 40. | ஸ்ரீ தாரக ப்ரஹ்ம வைபவம். | 206 |

பக்கம்.

41. குரு பரம்பரையின் பிரபாவம். 211
42. சாரங்கதேவர் சரித்திரம். 213
43. சோகாமேளர் சரித்திரம். 218
44. பண்டரிநாதன், ஜநாபாயோடு ஊழியம் செய்த சரித்திரம். 226
45. கபீர் தாசரின் சிஷ்யனாகிய பத்மநாபர் சரித்திரம். 230
46. பத்மநாபர் உஜ்ஜீவனோபாயத்தைச் சிந்தித்தல். 231
47. பத்மநாபர், மனுஷ்ய சரீரம் கிடைப்பது துர்லபமென்று வர்த்தகனுக்கு உபதேசித்தல். 233
48. கபீர்தாஸர், பதினாயிரம் சாதுக்களுக்கு சதாவர்த்தி வழங்கின சரித்திரம். 235
49. கபீர்தாஸர், விசேஷ தர்மம் இன்னதென்று நிச்சயித்தல் 236
50. ரோஹிதாஸர் சரித்திரம். 239
51. ஞானஸ்வரூபம். 241
52. ரோஹிதாஸரின் ஆராதநக் கிரமம். 242
53. புரோஹிதருக்கும் ரோஹிதாஸருக்கும் சம்வாதம். 243
54. பீபாஜிராஜர் சரித்திரம். 249
55. காளிகாதேவி பீபாஜிராஜருக்கு ஆத்ம ஹிதத்தை உபதேசம் செய்தல். 251
56. பீபாஜிராஜருடைய சாத்வீக சம்ரக்ஷணையினால் சதாசார்யரை ஆசிரயித்து பரமார்த்தோபதேசத்தை அடைதல். 256
57. பீபாஜிராஜர், சர்வமும் பிரம ஸ்வரூபமென்று தன் மனைவிக்குத் தெரிவித்து புலிக்கு ஹிதோபதேசம் செய்தல். 258
58. நரசிம்மமேதை சரித்திரம். 263
59. ஸ்ரீ கிருஷ்ணன் சிவனுக்கும் நரசிம்மமேதைக்கும் ராஸக்ரீடா வைபவத்தை தரிசிப்பித்தல். 266
60. நரசிம்மமேதை தன் குமாரனுக்கு விவாஹம் செய்வித்த சரித்திரம். 271
61. நரசிம்மமேதை ஹுண்டித் திருமுகம் கொடுத்த சரித்திரம். 276
நரசிம்மமேதை தமது மகளுக்கு வரிசை எடுத்த சரித்திரம். 281
62. ராமதாஸர் சரித்திரம். 285
63. ராமதாஸர் பகவானைத் துதித்தல். 286
64. கல்யாணதாஸர் சரித்திரம். 296
65. கல்யாணதாஸர், பிரமசாரிக்கு கிருகஸ்த தர்மத்தை உபதேசித்தல். 298
66. ஸூர்தாஸர் சரித்திரம். 307
67. ஸூர்தாஸர் பகவானை ஸ்துதித்தல். 308
68. கோபிகைகள், கிருஷ்ணனுடைய பிரிவை ஆற்றமாட்டாதவர்களாய் அலைந்த விதத்தை, ஸூர்தாஸர் பகவானுக்கு விண்ணப்பம் செய்தல். 309
69. ஸூர்தாஸர் செய்த பகவத் கீர்த்தன வைபவம். 314
70. சேநா நாவி சரித்திரம். 314
71. சேநாநாவி செய்த மானஸிக ஆராதனம். 316
72. சாத்வீக ராஜர் சரித்திரம். 322
73. கர்மாபாய் சரித்திரம். 326
74. ஜகந்நாத யாத்திரை வந்த பாகவதர்கள் கர்மாபாய்க்கு பரமார்த்தோபதேசம் செய்தல். 327



பக்கம்.

75. தசாவந்தன் சரித்திரம். 331
76. தசாவந்தர், அரசனுக்கு ஆத்ம ஹிதத்தைக் கற்பித்தல். 333
77. தசாவந்தர் ஈசுவரனுடைய மஹிமையை வர்ணித்தல். 337
78. மனமோஹன ஸூரதாஸர் சரித்திரம். 339
79. ரஸிகமுராரி சரித்திரம். 347
80. ரஸிக முராரி தன்னுடைய சிஷ்யனுக்கு ஸ்ரீபாத தீர்த்த அங்கீகார கிரமத்தை உபதேசித்தல். 348
81. மீராபாய் சரித்திரம். 356
82. மீராபாய், தன்னுடைய தந்தைக்கு பகவானுடைய வைபவத்தைத் தெரிவித்தல். 357
83. காநோபாத்ரி சரித்திரம். 364
84. காநோபாத்ரி தன்னுடைய தாயாருக்கு சம்சாரம் நிஸ்ஸாரமென்று நிரூபித்தல். 365
85. பண்டரியாத்திரை செய்யும் பாகவதர்கள் காநோபாத்ரிக்கு ஸ்ரீ பாண்டுரங்கன் மகிமையை தெரியப்படுத்துதல். 370
86. தாமாஜி பண்டிதர் சரித்திரம். 376
87. பிரமாபார ஸ்துதியினால் தாமாஜி பண்டிதர், பண்டரிநாதனைத் துதித்தல். 382
88. தலையாரியாய் வேடம்பூண்ட பண்டரிநாதன் பெதரிபுரத்தின் அரசனுக்கு, தன் நிஜரூபத்தைச் சொல்லுதல். 383
89. சாந்தபமணிராஜர் சரித்திரம். 386
90. பநுகு என்பவர் உபதேசித்தால் சாந்தபமணிராஜர் சர்வசங்க பரித்யாகம் செய்துகொண்ட சரித்திரம். 388
91. மிருத்யுஞ்சயன் பவராய ஜங்கமனுக்கு தத்வோபதேசம் செய்தல். 389
92. பானுதாஸர் சரித்திரம். 392
93. ஸூர்ய நாராயணன் பானுதாஸரை அநுக்ரஹித்து பகவத்ஜ்ஞானத்தை உண்டு பண்ணுவித்தல். 393
94. பானுதாஸர், வஸ்திரங்களைவாங்க வந்தவர்களுக்கு தத்வோபதேசம் செய்தல். 397
95. ராமராஜர் சரித்திரம். 400
96. பண்டரி க்ஷேத்ரவாஸியாகிய பிராமணன் பண்டரிபுர மஹாத்மியத்தை, ராமராஜருக்குத் தெரிவிதீதல். 401
97. ராமராஜர் பாகவத வைபவத்தை பிரசம்ஸித்தல். 407
98. பயரமபட்டின் சரித்திரம். 409
99. பயரமபட்டு சொன்ன சுபாஷிதம். 411
100. நாகநாதர் பயரமபட்டிற்கு ஜீவாத்ம ஸ்வரூபத்தை உபதேசித்தல். 413
101. ஏகநாத ஸ்வாமி சரித்திரம். 415
102. ஏகநாதஸ்வாமி, ஜநார்த்தன பண்டிதரிடம்போய் அரிஷட்வர்க்கத்தால் உண்டாகும் கஷ்டங்களை விண்ணப்பம் செய்து அவரைச் சரணடைதல். 416
103. ஏகநாதஸ்வாமி சிஷ்யாசார்ய கிரமத்தை ஊஹித்தல். 417
104. ஏகநாதஸ்வாமி வீட்டில் பண்டரிநாதர் பரிசாரகனாயிருந்த சரித்திரம். 426

| | | பக்கம். |
|---|---|---|
| 105. | துவாரகையிலிருந்து வந்த பிராமணன், பரிசாரகனு யிருந்த பண்டரிநாதனை வெளிப்படுத்தல். | 433 |
| 106. | ஏகாதஸ்வாமியின் மனைவி, மாயமான பண்டரிநாதன் செய்த காரியங்களை, நினைத்து நினைத்துத் துக்கித்தல். | 434 |
| 107. | ஸமர்த்த ராமதாஸ் சரித்திரம். | 436 |
| 108. | ஸமர்த்த ராமதாஸ் நிஜமனோரத சித்திக்காக ஆஞ்ஜநேயரை பிரார்த்தித்தல். | 440 |
| 109. | ஸமர்த்த ராமதாஸ், ஸ்ரீபண்டரிநாதன் ரூபத்தை தரிசித்து நிஷ்டூர வார்த்தைகள் சொல்லுதல். | 443 |
| 110. | துக்காராம் ஸ்வாமி சரித்திரம். | 447 |
| 111. | துக்காராம் ஸ்வாமி, தன்னைத் துதித்தவர்கள்மேல் வெறுப் புற்றும், தன்னை நிந்தித்தவர்களைப் போற்றியும் வாழ்தல். | 450 |
| 112. | துக்காராம்ஸ்வாமி, சிவாஜிராஜன் தனக்கு சமர்ப்பித்த தனத்தை உபேக்ஷித்து அவருக்கு வைராக்யத்தை உபதே சித்தல். | 451 |
| 113. | துக்காராம் ஸ்வாமியின் மனைவி சர்வத்தைவும் தானம் செய்த சரித்திரம். | 456 |
| 114. | துக்காராம் ஸ்வாமி, தன்னுடையவும் தன் தாய் தந்தையர் களுடைய நிஜ ஸ்வரூபத்தை தன் மனைவிக்கு தெரியப் படுத்துதல். | 457 |
| 115. | துக்காராம்ஸ்வாமி தன் மனைவிக்கு தத்வோபதேசம் செய்தல் | 459 |
| 116. | தன் பாதங்களை கல்லால் நசுக்க வரும் துக்காராம் ஸ்வாமி மனைவியைப் பார்த்து ஸ்ரீபண்டரிநாதன் பயப்படுதல். | 461 |
| 117. | துக்காராம் ஸ்வாமி ஸ்ரீபண்டரிநாதனுக்கு விண்ணப்பப் பத்தி ரிகை அனுப்பின சரித்திரம். | 462 |
| 118. | சிஞ்சவடியில் துக்காராம் ஸ்வாமி ஸ்ரீ பண்டரிநாத கணபதி களுடன் ஸஹபங்தி போஜனம் செய்தல். | 466 |
| 119. | துக்காராம் ஸ்வாமி ஸ்ரீபண்டரி நாதனுக்கு கடிதம் வரைதல். | 468 |
| 120. | ஸ்ரீ பண்டரிநாதன் கருடாரூடனாய் துக்காராம் ஸ்வாமிக்கு சேவை சாதித்த சரித்திரம். | 473 |
| 121. | பகவான், துக்காராம் ஸ்வாமிக்கு ஒரு கடிதம் வரைந்து கருட னிடம் கொடுத்தனுப்புதல். | 474 |
| 122. | நிம்பராஜன் சரித்திரம். | 477 |
| 123. | ஸ்ரீ பண்டரிநாதன் துக்காராம் ஸ்வாமி வீட்டில் போஜனம் செய்தல். | 484 |
| 124. | ஸ்ரீ துக்காராம் ஸ்வாமி நிஜசரீரத்துடன் பரமபதத்திற்கு எழுந் தருளின சரித்திரம். | 483 |
| 125. | லோஹ நகரவாஸியான வர்த்தகனுக்கு அவன் மனைவி ஆத்ம ஹிதத்தை ஸ்மரிப்பித்தது. | 493 |
| 126. | போஸலபாவா சரித்திரம். | 498 |
| 127. | போஸலே ஹரிகீர்த்தனம் செய்யும்போது ஸ்ரீ பண்டரிநாதன், பாம்பு கடித்து இறந்தவனைப் பிழைப்பித்த சரித்திரம். | 511 |
| 128. | போஸலே தன்னுடைய நிலத்தில் விதைத்த சோளங்களெல் லாம் சுரைக்காய்கள் காய்த்து, அந்த காய்களில் கோதுமை அரிசிகள் நிறைந்திருந்த சரித்திரம். | 520 |





| | | பக்கம். |
|---|---|---|
| 129. | கணேசநாதர் சரித்திரம். | 521 |
| 130. | கணேசநாதர் பகவானைத் துதித்தல். | 522 |
| 131. | கணேசநாதர், அரசனுக்கு நரகத்தின் ஸ்வரூபத்தை தெரியப் படுத்துதல். | 526 |
| 132. | விருக்ஷம், கணேசநாதர் உபதேசம் அடைந்து, அவர் இட்ட அன்னத்தைப் புசித்த சரித்திரம். | 530 |
| 133. | கேசவஸ்வாமி சரித்திரம். | 532 |
| 134. | கேசவஸ்வாமி பகவானை ஸ்தோத்ரம் செய்தல். | 533 |
| 135. | கோமாபாய் சரித்திரம். | 538 |
| 136. | கோமாபாய் ஸ்ரீ பண்டரிநாதனைத் துதித்தல். | 539 |
| 137. | லத்திப் சாஹேப் சரித்திரம். | 545 |
| 138. | லத்திப் சாஹேப் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை துதித்தல். | 546 |
| 139. | லத்திப் சாஹேப், பாச்சாவுக்கு, போகங்கள் சாஸ்வதங்கள் அல்ல என்று உபதேசித்தல். | 550 |
| 140. | சந்தோபா சரித்திரம். | 552 |
| 141. | சந்தோபா, தன் மனைவிக்கு ஆத்மஹிதம் உபதேசித்தல். | 554 |
| 141a. | நீளோபா சரித்திரம். | 567 |
| 142. | பண்டரி நாதன் பரிசாரகனாய் நீளோபா வீட்டிற்கு வருதல். | 570 |
| 143. | உத்தவ சித்குணர் பகவானைத் துதித்தல். | 573 |
| 144. | உத்தவ சித்குணர் கர்ம பரிபக்வத்தை அரசனுக்குச் சொல்லு தல். | 575 |
| 145. | வீஸோபா வர்த்தகர் சரித்திரம். | 579 |
| 146. | அஷ்டவித வைஷ்ணவ லக்ஷணம். | 580 |
| 147. | வீஸோபா, கடன் ஆமுஷ்மிக பலனுக்கு விரோதியென்று வர்த்தகனோடு சொல்லுதல். | 582 |
| 148. | விரித்த புருஷன் யமகிங்கர சம்வாதத்தை வீஸோபாவுக்குச் சொல்லுதல். | 585 |
| 149. | வீஸோபா, பகவானைத் துதித்தல். | 589 |
| 150. | புண்டரீகன் சரித்திரம் | 591 |
| 151. | புண்டரீகனுக்கு ஸ்ரீ பாண்டுரங்கன் சேவை சாதித்தல் | 601 |


## தியாகராஜ கீர்த்தனைகள்.

தியாகராஜ ஸ்வாமிகள் இயற்றியருளிய கீர்த்தனங்கள் இதுவரை ஒருங்கு சேரப் புத்தகரூபமாக வெளிவந்ததில்லை. அவருடைய சிஷ்யர்கள் பலர் தத்தமக் குக் கிடைத்தமட்டில் பாடம் செய்து வழங்கி வருவாராயினர். அவற்றையெல் லாம் ஒன்று திரட்டி அச்சிடுவது பெருங் கஷ்டமாக முடிந்தது. இக் கீர்த்த னங்கள் தெலுங்குபாஷை புணர்ந்தவர்களுக்குமட்டும் உபயோகப்பட்டு வந்தன. அக் கீர்த்தனங்கள் பெரும்பாலும் தமிழுணர்ந்தவர்களால் அப்யசிக்கப்படுவ துணர்ந்து அவை தமிழ் அறிந்த யாவர்க்கும் உபயோகமாகும்படி அவற்றை தெலுங்கு உச்சரிப்பு ஒத்துவருமாறு தமிழில் எழுதி வெளியிட்டிருக்கின்றோம். எந்தக் கீர்த்தனையையும் விரைவில் எடுத்துப் பாடுவோருடன் ஒத்திட்டுப் பார்க்க அனுகூலமாகும்படி ஓர் அட்டவணையும் அமைக்கப்பட்டுள்ளது. ஸ்வாமிகளுடைய சரித்திரம் திருவுருவப் படத்தோடு முகப்பில் அமைக்கப்பட் டிருக்கின்றது.

**விலை ரூபா 1—4—0.**

# தமிழ் நவீன நாவல்கள்

## மோஹனா

ஸ்திரீகளின் கல்விபயிற்சியை யபிவிருத்திசெய்யவேண்டிய இக்காலத்தில் இது ஒவ்வொரு ஸ்திரீயும் அவசியம் வாசிக்க வேண்டிய ஒரு நாவல். இக்காலத்தில் ஸ்திரீகள் வாசிக்கக்கூடிய நாவல்கள் பல விருந்தபோதிலும், இந்த நாவலில் அவர்களுக்கு இன்றியமையாதிருக்கவேண்டிய பூஷணமாகிய கற்பின் தன்மையைப் பற்றியே அறிவுறுத்தக்கூடிய விஷயங்கள் யாவும் அடங்கியிருக்கின்றது. இதன் விலை அணா 5.

## அயாஷா

அல்லது

ஐயாயிரவருடம் வாழ்ந்த அரசி.

இக்கதையால் நமது மதத்தில் அடங்கியுள்ள அனேக விஷயங்கள் உண்மையானவையென்றே ருசுவாகிறது. இக்கதாநாயகி சுமார் 5000 வருடங்கள் சீவித்திருந்ததாக கூறப்படுகிறதும் உண்மை யென்றே இந்நூலை ஆங்கிலத்தில் எழுதிய கிரந்த கர்த்தா கூறுகிறார். இக்கதை இறந்தவர் மறுபடி பிறப்ப துண்மையே யென்றும், பிறப்பு இறப்பைச் சேர்ந்த இன்னும் பல இரகசியங்களும் வெளியாகின்றன. இதில் அடங்கியுள்ள விஷயங்கள் அற்புதத்திலும் மகா அற்புதமாய்த் தோன்றினாலும், அசம்பாவிதமானவைகளாய்ப் புலப்படவில்லை.

இது இரண்டு பாகங்களாய், நேர்த்தியான ஹாப்டோர்ன் படங்களோடு அமைந்திருக்கிறது. ஒவ்வொரு பாகமும் விலை அணா 12.

## இந்திரஜித்தன்

அல்லது

கள்ளர் தலைவன்

இது ஒரு அபூர்வமானகள்ளன்கதை. இவனுடைய அதி யுக்தி சாமர்த்தியமான செயல்கள் இவன் பெயருக்குப் பொருந்தினவைகளா யிருப்பது மிக்க ஆச்சரியத்தை விளைவிக்கும். இக்கதையால்ஒருவன் எவ்வளவுசாமர்த்தியமாய் தான் துஷ்ட காரியங்களைச் செய்தாலும், அச்சமயம் அவைகள் வெளிவராமல் மறைபட்டு அவன் க்ஷேமத்தை யனுபவிப்பதுபோல் தோன்றினாலும், முடிவில் யாவும் வெளியாகி அவன் அவமானத்தையும், உலக நிந்தனையையும், துன்பத்தையும் அடைவது திண்ணமென்றும், நேர்மை, சத்தியம், இரக்கம் ஆகிய நற்குணங்களைக் கடைப்பிடித்த ஒருவன், தற்காலம் கஷ்ட திசையை யனுபவிப்பதாய்த் தோன்றினாலும், கூடிய சீக்கிரத்தில் புகழையும் செல்வத்தையும்பெற்று மனோ நிம்மதியோடு க்ஷேமத்தை யனுபவிப்பானென்பது உண்மை யென்றும் நன்கு விளங்கும். இதன் விலை அணா 12.

## எம். ஆதி கம்பெனி,

188, சைனபஜார் ரோட், சென்னை.


# ஸத்திய பிரகாசிகை

புராண சமுச்சயம்

శ్లో ॥ అధీత్యాసిచతుర్వేదం । సర్వశాస్త్రాణిసర్వశః ।
బ్రహ్మతత్వంనజానాతి । దర్వీపాక రసంయథా ॥

(இதன் பொருள்)

ஒருவன், நான்குவேதங்களை ஓதினவனே ஆயினும், ஸமஸ்த சாஸ்த்ரஞான நிறைந்தவனாயினும், பாக ஸாதனமாக இருந்தும் அதன் சுவையை அறியாத அகப்பையேபோல, பரப்ரஹ்ம தத்வத்தை அறியான்.

இதன் கருத்து.

பகவத் கடாக்ஷத்தால், பரப்ரஹ்ம தத்வ ஞானம் பெறல் ஆகுமே அன்றி வேதம் ஓதுதலினாலும் சாஸ்த்ர ஆராய்ச்சியினாலும் ஆகாது.

ஸ்ரீ பகவத்கீதை - ஸ்ரீ பகவான் வாய்மொழி.

శ్లో ॥ మనుష్యానాంసహస్రేషు । కశ్చిద్యతతిసిద్ధయే ।
యతతామపిసిద్ధానాం । కశ్చిన్మాంవేత్తితత్వతః ॥

(இதன் பொருள்)

"ஆயிர மனிதர்களுக்குள் ஒருவனே ஞானவானாக முயற்சி செய்கிறான்; அப்படி முயற்சி செய்கிறவர்களுக்குள் தளராத எவனோ ஒருவன் என்னை அறிகின்றான்" என்று ஸ்ரீ கிருஷ்ணன் கூறினான்.

ஸ்ரீ விஷ்ணு புராணம் - பிரகலாதர்

బ్రహ్మత్వేసృజతేసర్వం । స్థితౌపాలయతేపునః ॥
రుద్రరూపాయకల్పాంతే । నమస్తుభ్యంత్రిమూర్తయే ॥

(இதன் பொருள்)

"எல்லாவற்றையும் பிரமரூபியாய்ப் படைத்து, மறுபடியும் ஸ்திதிகாலத்திற் காப்பாற்றி, கற்பாந்த காலத்தில் உருத்திர ரூபியாய் விளங்கும் மும்மூர்த்தி ஸ்வரூப! உன்னை நமஸ்கரிக்கின்றேன்" என ப்ரஹ்லாதர், பகவானைத் துதித்தார்.

ஸ்ரீ விஷ்ணுபுராணம்—அக்ரூரர்.

బ్రహ్మవిష్ణుశివాఖ్యాభిః । కల్పనాభిరుదీరితః ।
అనాఖ్యేయస్వరూపాత్మ । న్ననాఖ్యేయప్రయోజన ॥
అనాఖ్యేయాభిధానంత్వాం । నతోఽస్మిపరమేశ్వర ।
నయత్రనాథవిద్యన్తే । నామజాత్యాదికల్పనాః ।
తద్బ్రహ్మపరమంనిత్య । మవికారీభవానజః ॥

"பிரமவிஷ்ணு சிவவாக்யாதி கற்பனைகளினுல் புகழப்பட்டனை; சொல்லற்கரிய குணனுபவம் உடையவன் நீ; பேசற்கரிய பிரயோஜனம் உடையவன் நீ; சொல்லற்கரிய நாமம் உடையவன் நீ; ஓ பரமேச்வரா! உன்னைக்குறித்து நமஸ்கரிக்கின்றேன். (என்றால், பரமேச்வரன் பல நாமம் உடையவன்; ஆதலால், தனக்கென ஒரு நாமம் இல்லாதவன்) என்பது கருத்து. எந்த வஸ்துவில் குறி குலம் முதலிய கற்பனைகள் இல்லையோ, அப்படிப்பட்ட வஸ்துவாகிய நீ, பிரமமாய், நித்யமாய், பரமாய், விகாரரஹிதனுய் அஜனுய் இருக்கின்றனை" என்று அக்ரூரர் பகவானைத் தோத்திரஞ் செய்தார்.

ஸ்ரீமத் பாகவதம் சதுர்த்தஸ்கந்தம், அத்திரிமுனிவர்.

శ్లో॥ విశ్వోద్భవస్థితిలయేషువిభజ్యమానై । ర్మాయాగుణైరనుయుగంవిగృహీతదేహాః ।
తేబ్రహ్మవిష్ణుగిరిశాః ప్రణతోఽస్మ్యహంవ స్తేభ్యఃకఏవభగవాన్మఇహోపహూతః ।
ఏకోమయేహభగవాన్విబుధప్రధానై । శ్చిత్తీకృతఃప్రజననాయకథన్నుయూయమ్
అత్రాగతా స్తనుభృతాంమనసోఽపిదూరా । బ్రూతప్రసీదతమహానిహవిస్మయోమే ॥

(புத்திரார்த்தியாகிய அத்திரி மாமுனிவர், பரமாத்மா தமக்கு ஸாந்நித்யம் ஆகவேண்டும் என்று தவஞ்செய்தனர்; அப்போது, திரிமூர்த்திகள் பிரத்யக்ஷமானுர்கள். அவர்களை நோக்கி அம்முனிவரர் பின்வருமாறு வினவுகின்றனர்.")
"பிரபஞ்சத்தினுடைய ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களில் ஏற்படுத்தப்பட்ட ப்ரக்ருதி குணங்களால், பலயுகங்கள்தோறும் பிரம, விஷ்ணு சிவவடிவங்களைப் பரிக்ரஹிக்கும் உங்களைக் குறித்து வணங்குகின்றேன்; நீவிர் மூவரில், புத்திரப்பேற்றைப் பொருந்துமாறு, என்னால் அழைக்கப்பட்டவன் யாவன்? மனிதர் கண்ணுக்குத்தோன்றாத நீவிர் மூவீரும் இங்கு வருங்காரணம் என்னை? எனக்கிது ஆச்சரியமா இருக்கின்றது"

அத்திரி முனிவர்க்குத் திருமூர்த்திகளுடைய விடை.

శ్లో॥ యథాకృతస్తేసంకల్పో । భావ్యంతేనైవనాన్యథా ।
సత్సంకల్పస్యతేబ్రహ్మన్ । యద్వైధ్యాయతితద్వయమ్॥

"உனது சங்கற்பத்துக்கு அந்நியமாக ஒன்றும் நடவாது; சற்சங்கற்பனுகிய உன்னால் தியானிக்கப்படுகிற ஜகதீச்வராக்ய தத்வமே மூவரா நிலவுகின்றோம்" என்று திரிமூர்த்திகள் அத்திரிமா முனிவர்க்கு ஸமாதானம் சொன்னுர்கள்.



கடவுள் (அல்லது) ஜிதேந்த்ரய வணக்கம்.

శ్లో॥ నతేరూపంనచాకారో । నాయుధానినచాస్పదం ।
తథాపిపురుషాకారో । భక్తానాంత్వంప్రకాశసే ॥

"உனக்கு உருவமும், ஆகாரமும், ஆயுதங்களும், இருப்பிடமும் கிடையா; அங்ஙனம் இருந்தும் பக்தர்களுக்காக மேற்கூறிய ரூபம், ஆகாரம், ஆயுதங்கள் இருப்பிடம் ஆகிய இவைகளைப் பெற்று, புருஷ சரீரியாய்ப் பிரகாசிக்கின்றனை." (என்றால், பகவானுடைய திவ்யாத்ம சொரூபம், நாமரூப ரஹிதமான தென்றும் நாமரூப ரஹிதமான பகவத் ஸ்வரூபத்தை ஸாந்நித்யம் செய்து கொள்ளுதல் அஸாத்யம் ஆகையால், பக்தரிடத்துள்ள அநுக்ரஹ காரணத்தால், பகவான், நாமரூபாதிகளோடு கூடியிருக்கின்றனன் என்றும் கருத்து.)

நம்மாழ்வார்.

(கலி விருத்தம்.)

உயர்வற வுயர்நல முடையவன் யவனவன்
மயர்வற மதிநல மருளினன் யவனவன்
அயர்வறு மமரர்க ளதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே. (க)

அவரவர் தமதம தறிவறி வகைவகை
அவரவ ரிறையவ ரெனவடி யடைவர்கள்
அவரவ ரிறையவர் குறைவில ரிறையவர்
அவரவர் விதிவழி யடையநின்றனரே. (உ)

சுரரறி வருநிலை விண்முதல் முழுவதும்
வரன்முத லாயவை முழுதுண்ட பரபரன்
புரமொரு மூன்றெரித் தமரர்க்கு மறிவியந்து
அரனய னெனவுல கழித்தமைத் துளனே. (ங)

(கலி விருத்தம்.)

பலபலவே யாபரணம் பேரும் பலபலவே
பலபலவே சோதி வடிவுபண் பெண்ணில்
பலபல கண்டுண்டு கேட்டுற்று மோந்தின்பம்
பலபலவே ஞானமும் பாம்பணைமே லாற்கேயோ. (ச)

ஆணல்லன் பெண்ணல்ல னல்லா அலியுமல்லன்
காணலு மாகா னுளனல்ல னில்லையல்லன்
பேணுங்கால் பேணு முருவாகு மல்லனுமாம்
கோணை பெரிதுடைத்தெம் பெம்மானைக் கூறுதலே. (ரு)

(அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.)

ஒளிமணி வண்ண னென்கோ வொருவனென் றேத்த நின்ற
நளிர்மதிச் சடைய னென்கோ நான்முகக் கடவு ளென்கோ
அளிமகிழ்ந் துலகமெல்லாம் படைத்தவை யேத்த நின்ற
களிமலர்த் துளவ னெம்மான் கண்ணனை மாயனையே. (சு)

யாவையும் யவரும் தானா யவரவர் சமயந் தோறும்
தோய்விலன் புலனைந் துக்கும் சொலப்படா னுணர்வின் மூர்த்தி
ஆவிசே ருயிரி னுள்ளா லாதுமோர் பற்றிலாத
பாவனை யதனைக் கூடி லவனையும் கூடலாமே. (௭)

(எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

மூவராகிய மூர்த்தியை முதல் மூவர்க்குமுதல் வன்றன்னைச்
சாப முள்ளன நீக்குவானைத் தடங்கடல் கிடந் தான்றன்னைத்
தேவ தேவனைத் தென்னி லங்கை யெரியெழச் செற்ற வில்லியைப்
பாவ நாசனைப் பங்க யத்தடங் கண்ணனைப்பர வுமினோ. (௮)

(கலிநிலைத்துறை)

திருமால் நான் முகன் செஞ்சடை யானென் றிவர்களெம்
பெருமான் தன்மையை யாரறி கிற்பார் பேசியென்
ஒருமா முதல்வா வூழிப்பி ரானென்னை யாளுடை
கருமா மேனிய னென்பனென் காதல் கலக்கவே. (௯)

(அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்)

யானும் தானா யொழிந்தானை யாதும் யவர்க்கும் முன்னோனை
தானும் சிவனும் பிரமனு மாகிப் பணைத்த தனிமுதலை
தேனும் பாலும் கன்னலு மமுது மாகித் தித்தித்தென்
ஊனி லுயிரி லுணர்வினில் நின்ற வொன்றை யுணர்ந்தேனே. (௧௦)

(எழுசீர்க்கழிலெடி ஆசிரிய விருத்தம்)

முடிவிவள் தனக்கொன் றறிகிலே னென்னும் மூவுல காளியே யென்னும்
கடிகமழ் கொன்றைச் சடையனே யென்னும் நான்முகக் கடவுளே என்னும்
வடிவுடை வானோர் தலைவனே யென்னும் வண்திரு வரங்கனே யென்னும்
அடியடை யாதாள் போலிவ ளணுகி யடைந்தனள் முகில்வண்ணனடியே

(அறுசீர்க்கழிநெடி லடி ஆசிரிய விருத்தம்) (௧௧)

முனியே நான்முக னேமுக் கண்ணப் பாஎன் பொல்லாக்
கனிவாய்த் தாமரைக் கண்கரு மாணிக்க மேயென் கள்வா
தனியே னாருயிரேயென் தலைமிசை யாய்வந் திட்டு
இனிநான் போக லொட்டே னொன்றும்மா யம் செய்யேலென்னையே. (௧௨)

அவாவ றச்சூ ழரியை யயனை யரனை யலற்றி
அவாவற்று வீடு பெற்ற குருகூர்ச்சடகோ பன்சொன்ன
அவாவி லந்தா திகளா லிவையா யிரமும் முடிந்த
அவாவி லந்தா தியிப்பத் தறிந்தார் பிறந்தா ருயர்ந்தே. (௧௩)



## திருமங்கை ஆழ்வார்.

(எண் சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்)

பாருருவி நீரெரிகால் விசும்பு மாகிப் பல்வேறு சமயமுமாய்ப் பரந்து நின்ற
ஏருருவில் மூவருமே யென்னநின்ற விமையவர்தம் திருவுருவே றெண்ணும் [போது
ஓருருவம் பொன்னுருவ மொன்று செந்தீ ஒன்றுமா கடலுருவ மொத்து [நின்ற
மூவுருவும் கண்டபோ தொன்றும் சோதி முகிலுருவ மெம்மடிக ளுருவந் [தானே (௧௪)

## பொய்கை ஆழ்வார்.

(நேரிசை வெண்பா)

அரன்நா ரணன்நாமம் ஆன்விடைபுள் ளூர்தி
உரைநூல் மறையுறையும் கோயில் - வரை நீர்
கரும மழிப்பளிப்புக் கையதுவேல் நேமி
உருவமெரி கார்மேனி யொன்று. (௧௫)

தமருகந்த தெவ்வுருவ மவ்வுருவம் தானே
தமருகந்த தெப்பேர்மற் றப்பேர் - தமருகந்து
எவ்வண்ணம் சிந்தித் திமையா திருப்பரே
அவ்வண்ண மாழியா னாம். (௧௬)

(நேரிசை வெண்பா)

எற்றான்புள் ளூர்தா னெயிலெரித்தான் மார்விடந்தான்
நீற்றான் நிழல்மணி வண்ணத்தான் - கூற்றொருபால்
மங்கையான் பூமகளான் வார்சடையான் நீண்முடியான்
கங்கையான் நீள்கழலான் காப்பு. (௧௭)

## பேயாழ்வார்.

(நேரிசை வெண்பா)

தாழ்சடையும் நீண்முடியு மொண்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால் - சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமே லெந்தைக்கு
இரண்டுருவு மொன்றா யிசைந்து (௧௮)



கோயில்-தநால தேவராஜ ஸ்வாமி. (கிரந்தகர்த்தா)

## ப்க்தவிஜய - ஸாரஸங்க்ரஹம்.

(1) உலககாரணப் பொருளாகிய பரமாத்மா ஒன்றே.

(2) பரமாத்மா உருவ முதலியவைகள் இல்லாதது.

(3) ஜீவாத்மாவுக்குக் கன்ம வசத்தால் ஜன்மம் உண்டானது போல, பரமாத்மாவுக்கு இச்சைவசத்தால் உத்தம ஜன்மம் உண்டாயிருக்கின்றது.

(4) பரமாத்மாவுக்கு நாமரூபங்கள் பலவாய் இருக்கின்றன.

(5) பரமாத்மாவுக்கு உடன்பாடாயிருக்கின்ற நாமரூபங்களில், அவரவர்க்கு இஷ்டமாயுள்ள நாம ரூபங்களால் பரமாத்வை உபாசிக்கத் தகும்..

ஜகதீஸன் எனக்குள்ளிருந்து உணர்த்திய விஷயங்களையே, இப் பக்த விஜயப் பாயிரத்தில் எழுதினேன்; அல்லாமல், பேரையும் பொருளையும், புகழையும் விரும்பி தத்வேஷங்கொண்டு எதையும் நான் இதனில் எழுதினவன் அல்லேன். பகவானுடைய பரமகிருபா கடாக்ஷத்தால், என் புத்திக்குப் புலப்பட்ட அர்த்தத்தை, எல்லாரும் அனுபவித்து ஆனந்திக்கவேண்டுமென்று, இதனைத் தொடங்கினேன். பக்த விஜயத்தில் கூறப்பட்டுள்ள பக்தர்கள், இக்கருத்தையே கொண்டார்கள்.

> ''தாமின் புறுவ துலகின் புறக்கண்டு.
> காமுறுவர் கற்றுணர்ந்தார்'' என்றபடி,

எனக்கு, இந்த அவதாரிகை எழுதவேண்டிய கடமை ஏற்பட்டது நல்லது கெட்டது பகுத்தறியும் ஞானவான்களாகிய சாதுக்கள் இந்த அவதாரிகையை ஆதியோடந்தமாய்ப் பொறுமையோடு கவனித்துப் பார்த்து, இந்த ஸாரஸங்க்ரஹத்தில் வெளிப்பட்டுள்ள ஐந்து விஷயங்களே இந்த அவதாரிகை முக்கிய விஷயங்களென்றும், இவைகளுக்கு உதவியாகவே மற்ற விஷயங்கள் எழுப்பட்டிருக்கின்றன என்றும் தெரிந்துகொள்ளக் கோருகிறேன்; இந்த ஐந்து விஷயங்கள் உசிதமானவையானல் சந்தோஷித்து எனதுமுயற்சி இடையூறின்றி ஈடேறும் பொருட்டு என்னை ஆசிர்வதிக்க வேண்டுகிறேன்; இதுவும் அன்றி இந்த ஐந்து விஷயங்களில் எதுவானுலும் முறண்பட்டிருக்குமேல் அதனைத் திருத்தி எனக்கு நல்லறிவு சுடர் கொளுத்தி, அநுக்ரஹஞ் செய்ய வேண்டுமென்று, ப்ராத்திக்கின்றேன்.

இப்படிக்கு

சாதுக்களின் பாததூளியாகிய,

கோயில் - தநால - தேவராஜ தாஸன்.



అగ్రేకృత్వాకమపిచరణంజానునైకేనతిష్ఠన్ ।
పశ్చాత్పార్థంవివలినజుషాచక్షుషాప్రేక్ష్యమాణః ।
సవ్యేతోత్రంకరసరసిజేదక్షిణేజ్ఞానముద్రాం ।
అబిభ్రాణోరథమధివసన్ పాతునస్సూతవేషః ॥

பார்த்தன்வெம் போர்க்கோலத் துடன்தன்னைப் பார்த்தபடி தேர் மேல் வைகப்-, பார்த்தர்க்குத் தேர்த்தட்டின் முற்புறத்திற் பரிந்தமர்ந்து முழங்கால் ஊன்றிச்-, சீர்த்திமிகும் வலக்கரத்தில் திகழ்ஞான முத்திரையைத் தெரியக் காட்டிக்-, கார்த்திரள்போல் விளங்குகண்ண பிரான்சூத வேடமெனைக் காக்குமாலோ.



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீபாண்டுரங்க பரப்ரஹ்மணே நம:

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
2-JUN 1913
MADRAS.

# பக்தவிஜயம்

## அவதாரிகை

శ్లో॥ అచింత్యావ్యక్తరూపాయ । నిర్గుణాయగుణాత్మనే ।
సమస్తజగదాధార । మూర్తయేబ్రహ్మణేనమః ॥

"வாக்குமனக் கெட்டா வடிவத்தைத் தன்வண்ணம்
நோக்கி அறியாத நுட்பத்தை—வீக்கியென்றும்
எல்லா வுலகுக்கும் ஏதுவாய் நின்றவொன்றைப்
பல்லாண்டு கூறிப் பழிச்சு.

உயர்வற வுயர்நலம் உடையவன் யவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே"

நித்யசூரிகளுக்குச் சமானமான * பிராப்தி, தமக்கும் உண்டாயிருப்பதறியாமல், † அநாதிகாலமாய் தேகமே ஆத்மா என்றும், கேட்டல், தொடுதல், சுவைத்தல், பார்த்தல், மோத்தல்களாகிய உடலின்ப வுணர்ச்சிகளே ‡ போக்யம் என்றும் விரும்பி உழல்பவர்களே § பத்த ஸம்ஸாரிகளாவார்கள். அவர்களிற் சிலர்க்கு, ஸ்ரீயஃபதியான ஸர்வேஸ்வரன் $ நிர்ஹேதுக கடாக்ஷத்தால், தனது ஸ்வரூப ரூபகுண ¶ விபூதிகளுக்கு வாசகமான திருநாம ப்ரபாவத்தைக் காட்டியருளினன். அங்ஙனம் அதனைக் கண்டவர்களே பக்தர் எனப் படுவார்.

---

* பிராப்தி - உயர்பதவி பெறுதல்.
† அநாதிகாலம் - தோன்றுதொட்டு ; என்றென்றும்.
‡ போக்யம் - இன்பநுகர்ச்சி.
§ பத்தஸம்ஸாரி - ஸம்ஸாரத்திற் கட்டுப்பட்டவன்.
$ நிர்ஹேதுக கடாக்ஷம் - காரணமின்றி அருள்புரிதல்.
¶ விபூதி - ஐஸ்வர்யம்.

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றுணர்ந் தார்"

என்ற பொய்யா மொழிப்படி, பக்தர்களாகிய அவர்கள், 'தாம் கண்டதை, தாமே அநுபவிக்கவும், * அதனை விரும்புபவர்களை அநுபவிக்கச்செய்யவும் வல்லவர்களாய், ஸ்ரீ வல்லபனை மகிழ்விக்கின்றார்கள்.

† ஐஹிகத்தில் புண்ணியபாவ கருமங்களைச் செய்ததனால், ‡ ஆமுஷ்மிகத்தில் சுவர்க்க நரக பலன்களை அநுபவிப்பதையே, மாறிமாறித் தமது தொழிலாகக் கொண்டிருப்பவர்கள், ஸம்ஸாரிகள் ஆவார்கள்.

புண்ணியபாவ கருமபலன்களை, சுவர்க்க நரகங்களில் அநுபவித்த இவ்வாத்மா, § கர்மசேஷத்தால், பூமியில் கருவாசம் செய்யவருகின்றது. வரும் வழியில் இது படும்பாடு, வேதாந்தத்தில் பஞ்சாக்னி வித்தை என்னும் இடத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆத்மா நரகபலனை அநுபவிக்கும்போது, யாதனாசரீரத்தோடிருக்கும்; அவ்வநுபவ முடிவில் அச்சரீரத்தை விட்டுப் புண்ணிய சரீரத்தைப்பெற்று, சுவர்க்கபலனை அநுபவிக்கும்; பிறகு, அந்தச் சரீரத்தையும் விட்டு, வேறு சூக்ஷ்ம சரீரம் பெற்று, ஆகாசத்தில் வாசஞ்செய்யும். தனது கிரணங்களால், நீரை ஆவியாக்கி மேகங்களிற் கலக்கச் செய்யும் சூரியனால், இந்த ஆத்மாவும் இழுக்கப்பட்டுப் பிறகு மழை ஜல வடிவமாய்ப் பூமியில் இறங்கும் நீராவியோடு கலந்துவரும். மழை ஜலம் பயிருக்குத் தாரகமாய்ப் பிரவேசிக்கும்போது இதுவும் அதனில் நுழையும். அந்தப் பயிர், உயிருக்கு ஆதாரமாகிய அன்ன ரூபமாய் மாறும்வரையில், இது அதனில் இருந்து, அன்னம் புருஷ சரீரத்தில் சுக்லமாய்ப் பரிணமிக்கும்போது, அதனோடு கலந்துவிடும். பிறகு ஸ்த்ரீபுருஷ சம்பந்தத்தால், இது சுக்லத்தோடே, ஸ்த்ரீ சரீரத்தில் நுழைந்து கருவுருவாகும். கருவாசஞ் செய்கிற காலத்தில்,

అత్యమ్లకటుతీక్ష్ణోష్ణ । లవణైర్మాతృభోజనైః ।
అతితాపిభిరత్యర్థం । వర్ధమానాతివేదనః ॥

"மாதா வுணவில் மருவுவெம்மை சிதறுப்பால்
பாதாதி கேச பரியந்தம்—மாதா
கருவிற் சிசுநுகரும் கஷ்டங்கள் யாரே
தெரிகிற்பார் நீயன்றிச் செப்பு" என்றபடி

மாதாவுணவில் கலந்துள்ள கொடிய பதார்த்தங்களால், இது வேதனை அடைந்து தவித்துக்கொண்டிருக்கும். அன்றியும், இது நஞ்சுக்கொடி முதலியவைகளால் கட்டப்பட்ட பிண்டரூபமாய், தன் உறுப்புக்களை அசைக்க முடியாமல்,

* அதனை - அவ்வநுபவத்தை
† ஐஹிகம் - இவ்வுலகம்.
‡ ஆமுஷ்மிகம் - மறுவுலகம்.
§ கர்மசேஷம் - வினையின்மிகுதி - விட்டகுறை, தொட்டகுறை.



క్లేశాన్నిష్క్రాంతిమాప్నోతి । జఠరాన్మాతురాతురః ॥

"பிரசூத வாயு பிடித்துந் துவதால்
சிரசுகீ ழாகச் சிசுவும்—பரசுகெடும்
குன்றேறி வீழ்வான்போல் குன்றி நடுநடுங்கித்
தன்தாய் வயிறகலுந் தான்" என்றபடி

துக்கத்துடன் பிறக்கும்; பாலிய தசையில் அசுத்த இடங்களிற் கிடந்து

కండూయనేఽపి చాశక్తః । పరివర్తేఽప్యనీశ్వరః ।
స్నానపానాదిచాహార । మప్యాప్నోతి పరేచ్ఛయా ॥

"ஈகொசுகு மூட்டையெறும்பு எத்தனைதான் தன்னையண்மி
வேக முடன்கடித்து மென்றாலும்—தாகமுடன்
வெம்பசியோ யோங்கிநமை மேவிடினும் மாதாவை
நம்பியழும் பிள்ளை நலிந்து" என்றபடி

நமை உண்டாயின் சொறிந்துகொள்ளவும், ஈ, எறும்பு, கொசுகு, மூட்டை முதலிய கடிக்கின் அவைகளை ஓட்டிக்கொள்ளவும் சக்தியின்றி, அன்ன பானாதிகளுக்குப் பிறரை எதிர்பார்த்து, இங்ஙனம் பலவித துக்கத்தோடு குழந்தைப் பருவத்தைக் கடக்கிறது. பிறகு ஆத்மா, தானே ஒரு காரியத்தைச் செய்ய வல்லவனாகின்றான்.

తస్మాద్బాల్యేవివేకాత్మా । యతేత శ్రేయసేసదా ॥

"காலையிலே தெய்வத்தைக் காதலித்துப் போற்றாதார்
மாலையிலே வஞ்சநமன் வாதனைக்கென் செய்குவரோ" என்றபடி

அக்காலத்தில் அவன், பகவானுக்குக் கீழ்ப்படிந்து நடப்பவனாயிருக்க, அங்ஙனம் செய்யாமல், (బాల్యేక్రీడనకాసక్తః) 'இளங்கன்று பயம் அறியாது' என்றபடி, துள்ளித் திரிந்து துடுக்குச்செய்து, விளையாட்டு விநோதங்களில் போதுபோக்கி, பதினாறு பிராயமுள்ள வாலிபன் ஆகின்றான். அக்காலத்தில் அவன் நரககாரண விஷயாந்தரங்களிற் காலங் கழித்து, * வார்த்திக்யத்தை அடைந்து, வலியற்றுக் காலங்கழித்துத் திடீரென்று மரணம் வர

క్లేశాదుత్క్రాంతిమాప్నోతి । యామ్యకింకరపీడితః ॥

"மரணவேதனை யாவரால் அறியலாம் மயங்கியைம் புலனந்தக்
கரணம் யாவையும் கலங்கிட வருந்துயர் கடவுளே அறிகிற்பார்"
என்றபடி

அந்த † உத்க்ரமணதசையில் துன்பத்தை அநுபவித்து, பிறகு நமனுக்கு ஆளாகின்றான்.

இப்படிப்பட்ட ஸம்ஸாரிகளுடைய ‡ அனர்த்த பரம்பரைகளைப்

* வார்த்திக்யம் - விருத்தாப்பியம்
† உத்க்ரமணம் - நிர்யாணம் - நீக்கம் - (உயிர்) நீங்குதல்
‡ அனர்த்தம் - துன்பம் அநுபவிப்பது

பார்த்து,

సుహృదంసర్వభూతానాం !

"ஞாலத் தூடே நடந்தும் நின்றும் கிடந்திருந்தும்
சாலப் பலநா ளுகந்தோ றுயிர்கள் காப்பானே" என்றபடி

பரம சுகிர்தனான சர்வேஸ்வரன், இவர்களுடைய உஜ்ஜீவனத்திற்காக

మానంప్రదీపమివకారుణికోదదాతి

"நாவினுள் நின்று மலரும் ஞானக் கலைகளுக் கெல்லாம்
ஆவியு மாக்கையுந் தானே அழிப்போ டளிப்பவன் தானே" என்றபடி.

சாஸ்திர * ப்ரதானம் செய்தனன்; சித்தின் இயற்கையையும் அசித்தின் இயல்பையும் ஈஸ்வரனுடைய தன்மையையும் வேதம் விவரித்துக் காட்டுகின்றது. பிறவிக் குருடனுக்குக் கண்கொடுத்தது போலவும், இருட்டில் விளக்கு வைத்தது போலவும், சேதனசேதனங்கள் சரீரமென்றும், ஈஸ்வரன் சரீரி என்றும், ஈஸ்வரனோடு சேதனசேதனங்களுக்கு உண்டாயிருக்கும் சம்பந்தத்தை வேத சாஸ்திரங்கள் விளக்குகின்றன; இன்னும் அவைகள், சேதனனுக்கு அசித்தின் சம்பந்தம் கர்மோபாதிகமென்றும், அவன் அந்த † ஸம்ஸர்க்கத்தை விட்டு, நித்ய விபூதியில் நித்ய சூரிகளுக் குகந்த போகத்தை அனுபவித்தல், ஸ்வரூபானுரூபமான புருஷார்த்தமென்றும் கூறுகின்றன. ஈஸ்வரன் இங்ஙனம் நன்றிசெய்திருந்தும், இதனை உணராத சேதனர்களிற் சிலர், வேத ‡ பாஹ்யர்களாகவும், வேறுசிலர், வேதவழியில் நுழைந்தும்,

త్రుత్త్రీవ కేపి చకలాశ్శలభీభవంతి

"விளக்கில் விழுந்து இறக்கும் விட்டில் போல", அதன் கருத்தை அறியாமல் அழிபவர்களாகவும் இருக்கின்றார்கள். ஆகையால், பகவான் தான் செய்தருளிய வேதப்ரதானம் வீணானதை உணர்ந்து, ஆஜ்ஞை செல்லாத இடத்தில் படையெடுக்கும் அரசர்களைப்போல, ஸம்ஸாரிகளில் ஒருவனாய் அவதரித்த காலத்தில், சிசுபாலாதிகளைப்போல நிந்தித்துச் சிலரும், ஹிரண்ய ராவணாதியர்களைப்போல எதிர்த்துச் சிலரும் நசித்ததனால், அவதாரம் வீணாயிற்று. ஆனாலும், ஈச்வரனாகிய தான், தனது உடைமைகளாகிய ஆத்மாக்களை

"விட்டுவிட நினைவையேல் தட்டழிவ தல்லாது
வேறுகதியேது புகல்வாய்" என்றபடி

விட்டுவிட நினையாமல், அவர்களுடைய அநுகூலத்திற்குச் சமயம் பார்த்திருப்பான். சேதனர்களிடத்தில் § யாத்ருச்சிக சுகிர்தம் உண்டாவதையே, நன்னிமித்தமாகக்கொண்ட பகவான், அவர்கள்மேற் கடாக்ஷம்

* ப்ரதானம் செய்தனன் - கொடுத்தருளினன்
† ஸம்ஸர்க்கம் - கலப்பு. ‡ பாஹ்யர்கள் - புறம்பானவர்கள்
§ யாத்ருச்சிக சுகிர்தம் - தம் இச்சையிற் செய்யும் நற்கருமம்



செலுத்தி, * அத்வேஷாபிமுக்யங்களை உண்டாக்குவான்; அன்றியும், அநந்தர சாஸ்த்ர வாஸனையாலும், ஆசார்யோபதேசத்தாலும், தான் நிருபாதிகசேஷியென்றும், இவ்வாத்மா தனக்கு அநந்யார்ஹ சேஷமென்றும் அவர்களுக்கு அறிவித்து, அவர்களை யதாஜ்ஞானம் பெறச்செய்வான்; அதனால் அவர்களுக்கு, அனந்தர ஸ்வரூபானுரூபமான புருஷார்த்தத்தில் ருசி உண்டாகும்படி, தனது விசேஷ கடாக்ஷத்தால் அவர்களை நிலை நிறுத்துவான். இங்ஙனம் நிலைநிறுத்தப்படுவதனால் அவர்கள், புருஷார்த்த லாபத்திற்கு உபாயம் ஏதோ என அபேக்ஷிப்பார்கள்; அந்தப்பக்குவமுணர்ந்த பகவான், அவர்களுக்கு, சாஸ்த்ரசம்மதமான கர்மயோக முதலிய உபாயங்களைக் காட்டி, "இவை † துஷ்கரம்; ஆலஸ்யமாய்ப் பலனைக் கொடுக்கும்; பிரமாதம் உண்டாக்கும். ஆதலால், இவைகளில் நுழையக் கூசுபவர்களுக்கு ஈச்வரனே உபாயம்; இது வேதாந்தக் கூற்று" என விளக்கி யருள்வான். கர்மஜ்ஞான பக்தியோகங்கள் அஸாத்யமாவனபோல, ப்ரபத்தி நிஷ்டாஹேதுவான மஹா விஸ்வாஸமும் சிலர்க்குத் துர்லபம். ஆகையால், இதனிலும் நுழையக் கூசுபவர்களுக்கு, "ஸர்வாதிகாரமான பகவந்நாம சங்கீர்த்தனமே சேதனர்களுடைய பாபத்தை ஓட்டும்; சுகிர்தானுகூலமான கர்மயோகாதிகளைக் கூட்டும்; பிரபத்தியை மூட்டும்; விரோதியைப் போக்கி பிராப்யத்தை நாட்டும்; நிர்வாஹகமான வைபவத்தை ஈட்டும்" எனப் பகவான் அநுக்ரஹிப்பான். ஆகையால் பக்தரனைவரும் திருநாம சங்கீர்த்தனபரராவார்கள்.

இவர்கள் இங்ஙனம் ஸங்கீர்த்தனபரர்கள் ஆவதற்கு, ஸ்ரீ விஷ்ணு தர்மமே காரணமா யிருக்கின்றது. இந்த விஷ்ணுதர்மம் என்னும் கிரந்தம் உண்டான விதம் வருமாறு—பாண்டவர்களில் அர்ச்சுனனுக்குப் பேரன் ஸ்ரீ பரீக்ஷித்து; இவனுடைய முதற்பிள்ளை ஜனமேஜயன்; இவனுடைய புதல்வன் சதாநீகன்; இவன், யாஜ்ஞவல்க்யரால் வேதத்தையும், கிருபாசாரியரால் தனுர்வேதத்தையும் உணர்ந்து, கொடிய விஷயானுபவங்களில் விரக்திபூண்டு, ‡ முடிசூடிக்கொண்டது முதல் மனுநீதிதவறாமல், எளியார்க்கு வலியாரால் இடையூறெய்தாவண்ணம் அரசாண்டுவந்தான். அங்ஙனம் அரசாளுங்காலத்தில், இவன், "§ ஆமுஷ்மிக ஹேதுவாக நமது குடிகட்கு நாம் செய்யத்தக்க நன்றி எது?" என்று சிந்தித்து, ஸ்ரீ சௌனகரிடத்திற்குச் சென்று "தேசபோஷணபரராய், துன்மார்க்க வர்த்திகளாய் விளங்கும் ஸம்ஸாரிகளுக்கு உஜ்ஜீவனோபாயத்தை அனுக்ரஹிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தான். அதற்கு அவர் "காலம், கலிகாலமா யிருக்கின்றது; பாவம் மேலிட்டிருக்கின்றது; ஆதலால் வேறெதற்கும் அதிகாரிகள் இல்லை.

* அத்வேஷாபிமுக்யம் - விருப்பு வெறுப்பின்மை
† துஷ்கரம் - செய்யமுடியாதது
‡ முடிசூடிக்கொள்ளுதல் - அபிஷிக்தனாதல்
§ ஆமுஷ்மிகஹேது - பரலோக காரணம்; மோக்ஷ காரணம்

ஸர்வாதிகாரியாகிய பகவந்நாம சங்கீர்த்தனமே, ஆத்மாக்களுக்கு உஜ்ஜீவனோபாயமாயிருக்கின்றது" என்று அருளிச்செய்தார். இப்பேர்ப்பட்ட திருநாமஸங்கீர்த்தன வைபவம், ஸ்ரீ பாண்டுரங்க பாதபத்மங்களில் * ப்ரவணமாகிய மனங்கொண்ட பரமபக்தர்களால் விளக்கப்பட்டது.

இந்த பக்தவிஜயத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பக்தர்கள் விஷ்ணுபக்தர்கள். ஆனாலும், சிற்சில இடங்களில் சிவபஜனமும் செய்திருக்கின்றார்கள். இப்படியே வசிஷ்ட வியாச நாரதாதி மஹர்ஷிகள், ஹரிபக்தி செய்தார்களென்று வைஷ்ணவ புராணங்களிலும், சிவபக்தி செய்தார்களென்று சைவபுராணங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றன. வைஷ்ணவ ஸித்தாந்தத்தில் விஷ்ணு பரமாத்மா என்றும், பிரமன், சிவன், இந்திரன் முதலிய இதர தேவதைகள் ஜீவாத்மாக்கள் என்றும், இவர்கள் பூர்வ ஜன்மங்களில் விஷ்ணுவை உபாஸித்துத் தத்தம் பதவிகளைப் பெற்றார்கள் என்றும், இன்னும் இவர்கள், விஷ்ணு பக்தர்களாய் விளங்கியிருந்து விஷ்ணுவைப் பூஜிக்கின்றார்கள் என்றும், முடிவில், இவர்கள், விஷ்ணுவின் கடாக்ஷ வீக்ஷண்யத்தால், மீட்சியில்லாத மோக்ஷ பதவியைப் பெறுவார்கள் என்றும், இவர்கள், தங்களை உபாஸிப்பவர்களுக்கு மோக்ஷம் அளிக்கச் சக்தியற்றவர்கள், இதர பலன்களை ஈயவல்லவர்கள் என்றும், இவர்கள் விஷ்ணுவால், சிற்சில இடங்களிற் † பரிபவிக்கப்பட்டார்கள் என்றும், மோக்ஷத்தை விரும்புகிறவர்கள், இவர்களுக்கு வந்தனாதிகள் செய்யக்கூடாதென்றும், இவர்களுடைய ‡ நிர்மாலியத்தை அங்கீகரிக்கக்கூடாதென்றும், இவர்களை உபாஸிப்பவர்களோடு ஸஹவாஸ ஸல்லாபங்கள் செய்யக்கூடாதென்றும், பரமாத்மாவாகிய விஷ்ணுவைவிட்டு இதர தெய்வங்களை ஆராதிப்பதும், அவர்களை விஷ்ணுவோடு ஸமமாக நினைப்பதும் ஸ்வரூப விரோதமென்றும், வைஷ்ணவர்களுக்கு § ஊர்த்வ புண்ட்ர தப்த சக்ராங்கநாதிகள் $ உபாதேயங்கள் என்றும், ¶ த்ரிபுண்ட்ர ருத்ராக்ஷதாரணாதிகள் ‖ த்யாஜ்யங்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன.

சைவஸித்தாந்தத்தில் சிவன் பரமாத்மா என்றும், விஷ்ணு, பிரமன், இந்திரன் முதலிய இதர தேவதைகள் ஜீவாத்மாக்கள் என்றும், இவர்கள் தமது பூர்வஜன்மங்களில் சங்கரனை உபாஸித்துத் தத்தம் பதவிகளை அடைந்தார்கள் என்றும், இப்போதும் இவர்கள் சிவ பக்தர்க

* ப்ரவணமாகிய - செலுத்திய; ஈடுபட்ட

† பரிபவிக்கப்படுதல் - துன்பப்படுத்தப்படுதல்

‡ நிர்மாலியம் - ப்ரஸாதம்; தெய்வத்துக்குப் படைத்துவிட்டது

§ ஊர்த்வபுண்ட்ரதப்த சக்ராங்கநாதிகள் - மேல் நோக்கின அடையாளமும் சுட்ட சங்கு சக்கரக்குறி முதலியவும்.

$ உபாதேயங்கள் - கொள்ளத்தக்கவைகள்

¶ த்ரிபுண்ட்ரம் - மூன்று பிரிவுள்ள குறுக்கடையாளம்

‖ த்யாஜ்யம் - தள்ளத்தக்கது



ளாய் சிவோபாஸனம் செய்கிறார்கள் என்றும், கடைசியில் இவர்கள், சிவகடாக்ஷத்தால் மீட்சியில்லா மாட்சிமை தங்கிய மோக்ஷபதவியை அடைவார்கள் என்றும், இவர்கள், தங்களை உபாஸிப்பவர்களுக்கு மோக்ஷம் அளிக்க வல்லரல்லர், இதரபலன்களை ஈய வல்லார் என்றும், இவர்கள் சிற்சில இடங்களில் சிவனால் பரிபவிக்கப்பட்டார்கள் என்றும், மோக்ஷத்தை விரும்புகிறவர்கள் இவர்களுக்கு வந்தனாதிகள் செய்யக்கூடாதென்றும், இவர்களுடைய நிர்மால்யத்தை அங்கீகரிக்கக்கூடாதென்றும், இவர்களை உபாஸிப்பவர்களுடன் ஸஹவாஸ ஸல்லாபங்கள் செய்யக்கூடாதென்றும், பரமாத்மாவாகிய சிவனைவிட்டு இதர தெய்வங்களை ஆராதிப்பதும், அவர்களை சிவனோடு சமமாக நினைப்பதும் ஸ்வரூப விரோதம் என்றும், சிவாலயங்களில் சிவபரிவார தெய்வங்களாகிய விஷ்ணு முதலியோர் விஷயத்தில் வந்தன கீர்த்தன நிர்மால்ய ஸ்வீகாராதிகள் கூடும் என்றும், சைவர்களுக்கு த்ரிபுண்ட்ர ருத்ராக்ஷ தாரணாதிகள் உபாதேயங்கள் என்றும், ஊர்த்வ புண்ட்ர தப்த சக்ராங்கநாதிகள் த்யாஜ்யங்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன.

மேலும், வைஷ்ணவ ஸித்தாந்தத்தில், விஷ்ணூபாஸனம் செய்த வஸிஷ்ட்ட வியாஸாதி மஹர்ஷிகள், வைஷ்ணவ வேஷதாரிகளாய் இருந்தனர் என்றும், சைவஸித்தாந்தத்தில், அந்த மஹர்ஷிகளே, சிவோபாஸனம்செய்து சைவ வேஷதாரிகளாய் இருந்தனர் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன.

இவ்விதமே ஒவ்வொரு ஸித்தாந்தத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனாலும், உதாஹரணமாக, சைவ வைஷ்ணவ ஸித்தாந்தங்கள் மாத்திரம் இங்கே எழுதப்பட்டன.

பக்தவிஜயத்தில் உதாஹரிக்கப்பட்ட பக்தர்கள் விஷயத்தில், சைவ வைஷ்ணவர் முதலான ஆஸ்திகர்கள், அசூயைப்படாமல் இருக்கும் பொருட்டு, ஆஸ்திக ஸித்தாந்தங்களை ஐக்யம் செய்து, சமாதானம் எழுதுகின்றேன்:—

பரமாத்மா ஒருவன் என்றும், அந்தப் பரமாத்மாவுக்கு ஸமானரும் அதிகரும் இல்லையென்றும், அந்தப் பரமாத்மாவை உபாஸித்து மோக்ஷத்தை அடையவேண்டும் என்றும், ஸர்வ ஸித்தாந்தங்களும் ஒரே அபிப்பிராயப்படுகின்றன. இதை யோசிக்கும் அளவில் ஸர்வ ஸித்தாந்தங்களிலும் மோக்ஷத்தை விரும்புவோர்களால் உபாஸிக்கப்படும் பரப்ரஹ்மம் ஒன்றே என்று நிச்சயமாகின்றது. அந்தப் பரப்ரஹ்மம் நாம ரூபம் இல்லாதது.

అవ్యక్తోయమచింత్యోయ । మవికార్యోయముచ్యతే ।
తస్మాదేవంవిదిత్వైనం । నానుశోచితుమర్హసి ॥

"கண்களால் ஜீவாத்மா காணப் படாதென்றும்
எண்ணு மனதிற்கெட் டாதென்றும்—நண்ணும்

விகார ரஹித விளக்கமென்றும் வல்ல
மகான்கள் உரைப்பர் மதித்து"

"ஜீவாத்மாவானது, கண்ணுக்கும் மனதுக்கும் எட்டாதது" என்றும், "அது எந்நாளும் அழியாதது" என்றும் பகவத்கீதையில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஜீவாத்மாவுக்கே, நாமரூபங்கள் இல்லாதபோது, பரமாத்மாவுக்கு அவைகள் எங்ஙனம் உண்டாகும்? கர்மசம்பந்தத்தினால் ஜீவாத்மாவுக்குச் சரீரம்தோன்றி, அதன் மூலமாய் நாம ரூபங்கள் உண்டானதுபோல, பரமாத்மாவுக்குத் தன் இச்சையால் திவ்ய சரீரம்தோன்றி, அதன் மூலமாய் நாமரூபங்கள் உண்டாயின.

బహూనిమేవ్యతీతాని । జన్మానితవచార్జున ।

"எனக்கும் உனக்கும் இதுவரையில் ஜன்மம்
கணக்குவழக் கில்லை கழிந்தவைகள் அர்ச்சுனனே"

"அர்ச்சுன! எனக்கும் உனக்கும் அநேக ஜன்மங்கள் ஆயின" என்றும்,

అజోఽపిసన్నవ్యయాత్మా । భూతానామీశ్వరోఽపిసన్ ।
ప్రకృతింస్వామధిష్ఠాయ । సంభవామ్యాత్మమాయయా ॥

"நானோ ஜன்ம ரஹிதன் அழிவிலேன்
எல்லா வுயிர்க்கும் ஈசன் ஆவேன் (எனினும்)
என்றன் உடைமையாம் ப்ரக்ருதிக் கிசைவாய்
என்றன் மாயையால் இங்கே
அவதரிக் கின்றேன் அகமகிழ் வுறவே"

"நான், ஜன்மமிலேன், அழிவிலேன், எல்லா வுயிர்களுக்கும் ஈசன் ஆவேன்; என்றாலும், எனது உடைமையாம் மூலப்ரக்ருதிக்கு இணங்க, எனது மாயையால் இவ்வுலகில் அவதரிக்கின்றேன்" என்றும், பகவத்கீதையில் பகவான் தானே அருளிச்செய்தனன். இந்தச் சமாதானத்தால், பரமாத்மாவுக்கு அனந்த சரீரங்கள் உண்டானபடி, நாம ரூபங்களும் எண்ணில என்று வேறு சொல்ல வேண்டியதில்லை.

இனி, நித்ய விபூதியை யோசிக்கையில், ஸ்ரீ வைகுண்ட திவ்ய லோகத்தில், ஸ்ரீ வைகுண்ட திவ்ய ஜனபதத்தில், ஸ்ரீ வைகுண்ட திவ்ய நகரத்தில், ஸ்ரீ வைகுண்ட திவ்ய விமானத்தில், ஆனந்தமண்டபத்தில், பர்யங்கவித்யையில் சொல்லப்பட்டுள்ள த்யானப்படி ஸர்வேச்வரன் ஸந்நிதிசெய்து இருக்கின்றான் என்று பிரமாணங்கள் ஏற்படுகின்றன. இதனால், * "த்ரிபாத்விபூதியில், ஜனபதங்களும் நகரங்களும் விமானங்களும் மண்டபங்களும் ஆங்காங்கு சந்நிதிசெய்து எழுந்தருளியிருக்கும் பகவன்மூர்த்திகளும் எண்ணில" என † வ்யக்தமாகின்ற தல்லவா? "நித்ய விபூதியில் அயோத்யை யென்னும் தேச விசேஷம் உண்டு;

* த்ரிபாத்விபூதி - பரமபதம்.
† வ்யக்தமாதல் - நன்றாய்த்தெரிதல்.



அவ்விடத்தில், பகவான் ராமரூபியாய் இருக்கின்றான்" என்று ராமதாபனீயத்திலும், "நித்ய விபூதியில் கோலோகமென்னும் ஸ்தலவிசேஷம் உண்டு; அவ்விடத்தில், பகவான் கோபாலரூபியாய் இருக்கின்றான்" என்று கோபாலதாபனீயத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றன. இப்படியே சைவஸித்தாந்தத்தில் "நித்ய விபூதியில் கைலாஸம் இருக்கின்றது; அதனில், பரமாத்மா பிரமதகண ஸேவிதனாய், சிவரூபியாய் இருக்கின்றான்" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. சிவபரமான உபநிஷத்துக்கள் அந்தச் சித்தாந்தத்துக்குப் பிரமாணங்களாய் இருக்கின்றன.

ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் இரண்டாம் அம்சத்தில், நான்காம் அத்தியாயத்தில்; "பகவான், ப்லக்ஷத்வீபத்தில் ஸோமரூபியாயும், சால்மலித்வீபத்தில் வாயு ரூபியாயும், குசத்வீபத்தில் சதுர்முக ரூபியாயும், க்ரௌஞ்சத்வீபத்தில் சிவரூபியாயும், சாகத்வீபத்தில் ஸூர்யரூபியாயும் அந்தந்த த்வீப வாஸிகளால் ஆராதிக்கப்படுகின்றான்" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. பாகவதத்தில், பஞ்சமஸ்கந்தத்தில், "பகவான் சிவரூபியாய் இளாவ்ருத வர்ஷத்துக்கும், ஹயக்ரீவ ரூபியாய் பத்ராஸ்வ வர்ஷத்துக்கும், நரசிம்ஹரூபியாய் ஹரிவர்ஷத்துக்கும், மன்மதரூபியாய் கேதுமால வர்ஷத்துக்கும்; கூர்மரூபியாய் ஹிரண்மய வர்ஷத்துக்கும், ராமரூபியாய் கிம்புருஷ வர்ஷத்துக்கும், பதரீநாராயண ரூபியாய் பாரத வர்ஷத்துக்கும் அதிபதியாயிருக்கின்றான்; அவ்வவ் வர்ஷ ஜனங்கள், அவ்வம்மூர்த்தி விஷயமான மந்த்ர ஜப த்யானாதிகளால் பகவானை உபாஸித்து, ஐஹிகாமுஷ்மிக பலன்களை அடைகிறார்கள்" என்று கூறப்பட்டிருக்கின்றது. சைவ புராணங்களும் இங்ஙனமே கூறுகின்றன. இந்தப் புராணக்கூற்றுகளில் பரஸ்பரம் ஏதேனும் பேதம் உண்டானால், கல்பபேதமே அதற்குக் காரணம் என்று அங்கீகரிக்கவேண்டும்.

வைஷ்ணவர்களுக்கு முக்ய ப்ரபந்தமான திருவாய்மொழியில்,

"பலபலவே யாபரணம் பேரும் பலபலவே
பல்பலவே சோதி வடிவுபண் பெண்ணில்
பலபல கண்டுண்டு கேட்டுற்று மோந்தின்பம்
பலபலவே ஞானமும் பாம்பணைமே லாற்கேயோ" என்று

நம்மாழ்வார் அருளிய இரண்டாம் பத்து, ஐந்தாந் திருவாய்மொழி ஆறாம்பாசுரத்தின்படி, ஸர்வேஸ்வரனுக்கு நாமரூபாதிகள் பல என்றும்,

"தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவம் தானே
தமருகந்த தெப்பேர்மற் றப்பேர்—தமருகந்து
எவ்வண்ணம் சிந்தித் திமையா திருப்பரே
அவ்வண்ணம் ஆழியா னாம்" என்று

பொய்கையாழ்வார் அருளிய முதற்றிருவந்தாதி, நாற்பத்துநான்காம் பாசுரத்தின்படி, பகவான், தனது * ஆஸ்ரிதர் அபேக்ஷிக்கும் நாம

* ஆச்ரிதர் - தாஸர், அடியார்

ரூபங்களுடன் * உபாஸ்யன் ஆவான் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. இங்ஙனமே சைவ ப்ரபந்தங்களும் பகர்கின்றன.

இவ்வுலகிற் பிறக்கும் சிசுக்களுக்கு, தாய் தந்தையர் உருவம், அல்லது தந்தையின் தாய் தந்தையர் உருவம், அல்லது தாயின் தாய் தந்தையர் உருவம், அல்லது இவ்விருவழிகளில் நெருங்கின சுற்றத்தார் உருவம் உண்டாவது இயற்கை. சில சிசுக்களுக்கு மூக்குத் தகப்பனைப்போலவும், கால் பாட்டனைப்போலவும், கை முதலிய மற்ற அவயவங்கள் மற்ற சுற்றங்களைப்போலவும் இருக்கக் காண்கின்றோம். † தோஹத வித்யையில் தேர்ந்தவர்கள், இரண்டு மரங்களை ஒன்று சேர்த்து, வேறுவித மூன்றாவது மரத்தை உண்டாக்குகிறார்கள்; அதற்குக் காரணமான இரண்டு மரங்களின் உருவங்களும் அதிற் கலந்திருக்கின்றன. இதனால், காரியவர்க்கங்களாகிய சேதனா சேதனங்களுக்குக் காரணவர்க்கங்களின் உருவங்கள் உண்டாகின்றன என்று உணர்கின்றோம். ஆதலால், ஸகலத்துக்கும் முதற்காரணனாகிய ஸர்வேஸ்வரனுக்கு, பிரமன் முதல் ‡ பிபீலிகம் ஈறு வுள்ள காரியவர்க்கங்களினுடைய ஸமஸ்த ரூபங்களும் உண்டு. அதனால்தான் அவ்வ்களுக்கு அந்த ரூபங்கள் உண்டாயின.

"தன்னுளேதிரைத்தெழுந்த ரங்கவெண்தடங்கடல்
தன்னுளேதிரைத்தெழுந்தடங்குகின்ற தன்மைபோல்
நின்னுளேபிறந்திறந்து நிற்பவுந்திரிபவும்
நின்னுளேயடங்குகின்ற நீர்மைநின்கண் நின்றதே" என்று

திருமழிசைப்பிரான் திருவாய் மலர்ந்தருளிய திருச்சந்த விருத்தம் பத்தாம் பாசுரம் இங்கே பொருந்துவது காண்க. ஒவ்வொரு ரூபமும் ஒவ்வொருநாமம் பெற்றே விளங்கும்; அப்படியே ஒவ்வொரு நாமமும் ஒவ்வொரு ரூபம் பெற்றே விளங்கும். § சசவிஷாணம் என்னும் நாமம் உண்டு; "இதற்கு ரூபம் உண்டா?" என்று ஆக்ஷேபம் உண்டாகும். அங்ஙனம் உண்டாயின், அதற்கு—"முயல் என்றும் கொம்பு என்றும் இரண்டு சொற்கள் சேர்ந்து ஒரு சொல்லாயின; முயல் என்னும் சொல்லுக்கும் கொம்பு என்னும் சொல்லுக்கும் வெவ்வேறாக ரூபம் உண்டல்லவா; இவ்விரண்டு சொற்களையும் சேர்த்ததுபோல, முயலுக்குக் கொம்பை ஒட்டி இரண்டுருவங்களையும் ஒன்று சேர்த்தால், முயற்கொம்பு என்னும் மூன்றாவது உருவம் உண்டாகும்" என்பதே சமாதானம். கேசவாதி பன்னிரு நாமங்களுக்கும் பன்னிரு ரூபங்கள் உண்டாயிருப்பனபோலவே, ஆயிர நாமங்களுக்கும் ஆயிர ரூபங்கள் உண்டு. விஷ்ணு ¶ ஸஹஸ்ர நாமங்களில் "ஸர்வஶ் சர்வஶ் சிவஸ்தாணுః" என்று சிவ நாமங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

* உபாஸ்யன் - வணக்கத்தை ஏற்றுக்கொள்பவன்.

† தோஹதவித்யை - செடிகளின் இயற்கையறிந்து அவைகளைப் பாதுகாக்கும் வித்தை.

‡ பிபீலிகம் - எறும்பு. § சசவிஷாணம் - முயற்கொம்பு. ¶ ஸஹஸ்ரம் - ஆயிரம்.



నమో౽స్త్వనంతాయసహస్రమూర్తయే । సహస్రపాదాక్షిశిరోరుబాహవే
సహస్రనామ్నేపురుషాయశాశ్వతే । సహస్రకోటీయుగధారిణేనమః ॥

"உடலாயிரம் உடையாயுனைத் தொழுவேனொரு நானே
அடல்சேர்கரந் தோளாயிரம் தலையாயிரம் உடையாய்
நடமாடருங் கர்லாயிரம் கண்ணாயிரம் நாமம்
இடமாயிரம் யுகமாயிரம் உடையாயெனக் கருள்வாய்" என்றபடி,

பகவானுக்கு ரூபம் ஆயிரம் என்றும், நாமம் முதலியவைகள் ஆயிரம் என்றும் ப்ரஹ்மஸ்துதியில் இருக்கின்றன.

(అనంతరూపో౽నంతశ్రీః)

"எண்ணில் குணமும் பெயரும் இயைந்தென்றும்
நண்ணும் பகவான் நயந்து" என்றபடி,

பகவான் அனந்தகுண ரூபங்களை உடையவன் என்றும்,

(ఏకో౽నైకః)

"ஒன்றுபலவாயொருவனைப்பலராய்ப்பகவான்
நன்று விளங்கும் நயந்து"

என்றபடி, பகவான், ஒருவனைப் பலராய் இருப்பான் என்றும் விஷ்ணு ஸஹஸ்ர நாமங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

"ஆயிரம் தோள்பரப்பி முடியாயிரமின்னிலக
ஆயிரம் பைந்தலைய அனந்த சயனனாளும்மலை
ஆயிரம் ஆறுகளும் சுனைகள் பலவாயிரமும்
ஆயிரம் பூம்பொழிலும் உடைமாலிருஞ்சோலையதே"

என்று, பெரியாழ்வார் அருளிய நாலாம்பத்து, மூன்றாந் திருவாய்மொழி பத்தாம் பாசுரமும்,

"மாயிருங் குன்றமொன்றுமத் தாக மாசுணம் அதனொடு மளவி
பாயிரும் பெளவம் பகடுவிண் டலறப் படுதிரை விசும்பிடைப் படர
சேயிரு விசும்பும் திங்களும் சுடரும் தேவரும் தாமுடன் திசைப்ப
ஆயிரம் தோளா லலைகடல் கடைந்தா னரங்கமா நகரமர்ந் தானே
ஆயிரம் குன்றம் சென்றுதொக் கனைய அடல்புரை யெழில்திகழ் திரள்
ஆயிரம் துணிய வடல்மழுப் பற்றி மற்றவ னகல்விசும் பணைய [தோள்
ஆயிரம் பெயரா லமரர்சென் றிறைஞ்ச அறிதுயி லலைகடல் நடுவே
ஆயிரம் சுடர்வா யரவணைத் துயின்றா னரங்கமா நகரமர்ந் தானே"

என்று திருமங்கையாழ்வார் அருளிய ஐந்தாம் பத்து, ஏழாந்திருவாய்மொழி, நான்காம், ஆறாம் பாசுரங்களும்,

"சொல்லினால்தொடர்ச்சி நீசொலப்படும்பொருளும் நீ
சொல்லினால்சொலப்படாது தோன்றுகின்ற சோதி நீ
சொல்லினால்படைக்க நீபடைக்க வந்து தோன்றினார்
சொல்லினால்சுருங்க நின்குணங்கள் சொல்ல வல்லரே

இன்னை யென்று சொல்ல லாவ தில்லை யாதும் இட்டிடைப்
பின்னை கேள்வ னென்ப ருன்பி ணக்கு ணர்ந்த பெற்றியோர்
பின்னை யாய கோல மோடு பேரு மூரு மாதியும்
நின்னை யார்நி னைக்க வல்லர் நீர்மை யால்நி னைக்கிலே.

ஒன்றி ரண்டு மூர்த்தி யாயு றக்க மோடு ணர்ச்சியாய்
ஒன்றி ரண்டு கால மாகி வேலை ஞால மாயினாய்
ஒன்றி ரண்டு தீயு மாகி யாய னாய மாயனே
ஒன்றி ரண்டு கண்ணி னானு முன்னை யேத்த வல்லனே"

என்று திருமழிசைப்பிரான் திருவாய் மலர்ந்தருளிய திருச்சந்தவிருத்தம் பதினொன்றும், பதின்மூன்றும், ஏழாம் பாசுரங்களும் இங்கே அமைவுடையன காண்க. இப்படியே சைவசித்தாந்தத்திலும் கண்டுகொள்க. இதனால் "ஸர்வேஸ்வரனுடைய நாமரூபங்களுக்கு அளவுண்டு, ஆஸ்திகர் அனைவரும், பரமாத்மாவுக்கு வழங்கிவரும் நாம ரூபங்களெல்லாம் பொய்." என்று வாதிப்பவர்கள் வாதம், பக்ஷபாதவாதமே அன்றி, நியாயமான உண்மை வாதம் அல்ல என்று விளங்குகின்றது.

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு" என்று

ஸத்தியத்தைப்புகழ்ந்து கூறுகிறது வேதம். ஆதலால் அனைவரும் பொய்யைத்தள்ளி மெய்யைத்தழுவ வேண்டும். பக்ஷபாத வாதத்தை நீக்கி, நியாயமான ஸத்தியவாதத்தை மேற்கொண்டிருப்பதே உத்தம மார்க்கம்.

இந்தச் சமாதானங்களால், நித்திய விபூதியிலும் லீலாவிபூதியிலும் ஸ்தல விசேஷங்களும், அவ்வத்தலங்களில் உள்ள பகவன்மூர்த்தி விசேஷங்களும், அவ்வம்மூர்த்திகளுடைய நாம ரூபங்களும் அனந்தங்கள் என்று ஏற்படுகின்றன. பலவித நாம ரூபங்களோடு, பலவித ஸித்தாந்தங்களில், பல ஜனங்களால் ஆராதிக்கப்படும் பரமாத்மா ஒன்று என்று ஏற்படுகின்றது. இங்ஙனம் ஆக; வைஷ்ணவ கிரந்தங்களில், சிவன் ஜீவாத்மா என்றும், சைவ கிரந்தங்களில் விஷ்ணு ஜீவாத்மா என்றும் சொல்லப்பட்டிருக்கிறதற்குக் காரணம் என்ன என்றால்— வைஷ்ணவ ஸித்தாந்தப்படி, விஷ்ணுரூபியான பரமாத்மாவால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவகோடிகளில், சிவனென்று ஜீவாத்மா ஒருவன் உளன் என்றும், இவன் விஷ்ணுகடாக்ஷத்தால் சிவபதத்தை அடைந்தான் என்றும், அவ்விஷ்ணு கடாக்ஷத்தாலேயே, இனி மோக்ஷபதவியை அடைவான் என்றும், இவனுக்கு மோக்ஷத்தை அளிக்கும் சக்தி இல்லை என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. சைவ ஸித்தாந்தப்படி, சிவரூபியான பரமாத்மாவால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவ கோடிகளில், விஷ்ணு வென்னும் ஜீவாத்மா ஒருவன் உளன் என்றும், அவன் சிவ கடாக்ஷத்தால் விஷ்ணுபதத்தை அடைந்தான் என்றும், அச்சிவ கடாக்ஷத்தாலேயே, இனி மோக்ஷ பதவியை அடைவான் என்றும்,



இவனுக்கு மோக்ஷத்தை அளிக்கும் சக்தி இல்லை என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன.

சைவ சித்தாந்தத்தில், விஷ்ணு, சிவனை ஆயிரம் கமலங்களால் ஸஹஸ்ர நாமார்ச்சனை செய்தபோது, ஒரு புஷ்பம் குறைந்தபடியால் தன் கண்ணைப் பிடுங்கி அர்ச்சித்தான் என்றும், சிவன் அக்கினி ஸ்தம்பமானபோது, விஷ்ணு வராஹமாய் அவர் பாதத்தைத் தேடினான் என்றும், சிவன் நடனம் புரிந்தபோது, விஷ்ணு மத்தளம் அடித்தான் என்றும், பிரமஹத்தி தோஷ சாந்திக்காக, விஷ்ணு, ராமாவதாரத்தில் லிங்கார்ச்சனை செய்தான் என்றும், இன்னும் பல இடங்களில், விஷ்ணு, சிவனால் பல * பரிபவங்களை அடைந்தான் என்றும் கூறப்பட்டிருக்கின்றன. இதற்காக, வைஷ்ணவர்கள் அசூயைப்படுவதும், அந்தக் கிரந்தங்களைத் தூஷிப்பதும், அவைகளைப் புனை சுருட்டுக் கதைகள் என்பதும் நியாயம் அல்ல. அந்தக் கதைகளெல்லாம் மெய்க்கதைகளே. சிவனால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவாத்மாவாகிய விஷ்ணு ஒருவன், அங்ஙனஞ் செய்தனன் என்று, அவைகள் அறைகின்றனவே அன்றி, வைஷ்ணவர்கள் ஆராதிக்கும் பரமாத்மாவாகிய விஷ்ணுவைப்பற்றி ஒன்றுஞ் சொல்லவில்லை, இங்ஙனமே சிவனுக்கு, விஷ்ணுவால் பலவித பரிபவங்கள் உண்டாயின என்று வைஷ்ணவ கிரந்தங்கள் சொல்லுகின்றன. அதற்குச் சைவர்கள் அசூயைப்பட்டு, வைஷ்ணவ கிரந்தங்களை நிந்திக்கவேண்டியதில்லை. வைஷ்ணவ கிரந்தங்கள் சொல்லுவதும் சத்தியந்தான்; விஷ்ணுவால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவாத்மாவாகிய சிவன் ஒருவன், அவ்விஷ்ணுவால் பரிபவிக்கப்பட்டானென்று அவைகள் சொல்லுகின்றனவே அன்றி, சைவர்கள் ஆராதிக்கும் பரமாத்மாவாகிய சிவனைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. இதற்கு ஒரு † நிதர்ஸனம் உதஹரிக்கின்றேன். ஒரு வீட்டில் யஜமானன் பெயர் தேவதத்தன்; சேவகன் பெயர் யஜ்ஞதத்தன். மற்றொரு வீட்டில் யஜமானன் பெயர் யஜ்ஞதத்தன்; இந்த யஜ்ஞதத்தன் மேற்கூறிய தேவதத்தனுடைய சேவகன் அல்லன். இந்த யஜ்ஞதத்தன் வீட்டில், தேவதத்தன் என்றொரு சேவகன் உளன்; இந்த தேவதத்தன், மேற்கூறிய வீட்டின் யஜமானன் அல்லன். தேவதத்தன் சேவகனாகிய யஜ்ஞதத்தன் சிக்ஷிக்கப்பட்டால், யஜ்ஞதத்தன் வீட்டில் உள்ளவர்களுக்குப் பரிபவம் இல்லை. அப்படியே யஜ்ஞதத்தன் சேவகனாகிய தேவதத்தன் சிக்ஷிக்கப்பட்டால், தேவதத்தன் வீட்டில் உள்ளவர்களுக்குப் பரிபவம் இல்லை. இங்ஙனமே, பரமாத்ம சிவன் விஷயமான சைவகிரந்தங்களில் உள்ள ஜீவாத்ம விஷ்ணுவின் பரிபவத்துக்கு, வைஷ்ணவர்கள் வருந்தவேண்டியதில்லை; பரமாத்ம விஷ்ணு விஷயமான வைஷ்ணவ கிரந்தங்களில் உள்ள ஜீவாத்ம சிவ பரிபவத்துக்குச் சைவர்கள் சோகிக்கவேண்டியதில்லை. சர்வ ஸித்தாந்தங்களிலும் முமுக்ஷு ஜனங்கள், பலவித நாம

* பரிபவங்கள் - தோல்விகள் - இழிவுகள்.

† நிதர்ஸனம் - திருஷ்டாந்தம்.

ரூபங்களால் ஆராதிக்கும் பரமாத்மா, ஒன்றாயிருக்கின்றது; அவ்வஸ்லிதாந்தங்களிலும் தாழ்வாகச் சொல்லப்பட்டிருக்கும் தேவதைகள், ஜீவாத்மாக்களாய் இருக்கின்றார்கள். ஆகையால் புத்திமான்கள் நாமரூப விஷயத்தில் அவ்வளவாய் ஊன்றியிருக்கவேண்டியதில்லை. அவரவர்களுக்கு இஷ்டமான நாம ரூபங்களோடு பரமாத்மாவை ஆராதிக்கலாம். பரமாத்ம புத்தியால் செய்யப்படும் ஆராதனம் ஸ்வரூபோசிதம் என்றும், ஜீவாத்ம புத்தியால் செய்யப்படுவது ஸ்வரூபஹானியென்றும் அவரவர் எண்ணங்களில் ஊன்றியிருக்கவேண்டும்; இதுவே ஸாது ஜனங்களுக்கு அவஶ்ய * கர்த்தவ்யம்.

இனி, வைஷ்ணவ கிரந்தங்களில், வைஷ்ணவர்களுக்குச் சிற்சில சின்னங்களை விதித்து, சைவ சின்னங்களைத் தியாச்சியங்கள் என்று சொல்லியிருப்பதற்கும், சைவ கிரந்தங்களில், சைவர்களுக்குச் சிற்சில சின்னங்களை விதித்து, வைஷ்ணவ சின்னங்களைத் தியாச்சியங்கள் என்று சொல்லியிருப்பதற்கும் காரணமாக, ஒரு திதர்ஶனம் கூறுகின்றேன்.

விஷ்ணுவர்மனென்றும், சோமவர்மனென்றும் இரண்டு ராஜகுமாரர்கள் இருந்தார்கள். இவ்விருவர்க்கும், சரீரத்தில், ஒரே காலத்தில் ஒரே விதமான வியாதி உண்டாயிற்று. இவ்விருவரும் சிகிச்சையை நாடி, ஒரு வயித்தியனிடத்திற்குப் போனார்கள். அந்த வைத்தியன் இவ்விருவருடைய வியாதி ஸ்வபாவத்தையும், ஆரோக்யாபேக்ஷையையும், நாடியை நாடித்தெரிந்துகொண்டு, இருவருக்கும் வியாதி ஒன்றாகையால், ஒரே மருந்து கொடுத்தான். ஆனாலும் அவன், உஷ்ண சரீரியாகிய விஷ்ணுவர்மன், மருந்தை நெய்யிற் கலந்து புசித்து, பத்தியத்திற்கு வெண்டைக்காய் சேர்த்துக்கொள்ளவேண்டும்; கத்தரிக்காய் முறிப்பு என்றும்; சீதள சரீரியாகிய சோமவர்மன், மருந்தைத் தேனிற் கலந்து புசித்து, பத்தியத்திற்குக் கத்தரிக்காய் சேர்த்துக்கொள்ளவேண்டும், வெண்டைக்காய் முறிவு என்றும் விதித்தான். இதுபோலவே இங்கு, வைஷ்ணவனென்றும் சைவனென்றும் ஜீவாத்மாக்கள் உண்டானார்கள். இவர்களுக்கு, பவரோகம் உண்டாயிற்று; ஆதலால் இவர்கள், மோக்ஷமென்னும் ஆரோக்யாபேக்ஷை உடையவர்களாய், பரமாத்மா என்னும் பரிகாரியை ஆஶ்ரயித்தார்கள்; அந்தப் பரமாத்மாவென்னும் பவரோக வைத்தியன், தன்னை,

కచ్చిన్నోభయవిభ్రష్ట । శ్ఛిన్నాభ్రమివనశ్యతి
అప్రతిష్ఠోమహాబాహో । విమూఢో బ్రహ్మణఃపథి ॥

"பரமாத் † மாநுஸந் தானம் பண்ணா
மாட்டா மூடன் மாநில மதனில்
ஆதர வின்றி ஆதி கர்ம
ஞான மிரண்டிலும் நவையுற் றவனாய்ச்

* கர்த்தவ்யம் - செய்யத்தக்கது.
பரமாத்ம † அநுஸந்தானம் - பரமாத்மாவின் கூட்டுறவு



சிதறின மேகம் போல
அழிவன் அன்றோ அறைகுவாய் எனக்கே" என்றபடி,

"பரமாத்மாநுஸந்தானம் பண்ண மாட்டாத மூடன், ஆதரவற்றவனாய், கர்மஜ்ஞானங்கள் இரண்டிலும் தாழ்ந்தவனாய், சிதறின மேகங்கள் போல அழிந்து போவான் அல்லவா?" என்று கேட்ட அர்ச்சுனனை நோக்கி,

(పార్థనైవేహనాముత్ర । వినాశస్తస్యవిద్యతే । నహికల్యాణకృత్ కశ్చిత్
దుర్గతింతాతగచ్ఛతి।ప్రాప్యపుణ్యకృతాంలోకా।నుషిత్వాశాశ్వతీస్సమాః
శుచీనాంశ్రీమతాంగేహే।యోగభ్రష్టోభిజాయతే ॥ అథవాయోగినామేవ।
కులేభవతిధీమతాం। ఏతద్ధిదుర్లభతరం। లోకేజన్మయదీదృశం॥ తత్రతంబు
ద్ధిసంయోగం। లభతేపౌర్వదైహికం। యతతేచతతోభూయస్సంసిద్ధౌకురు
నందన॥)

"பரமாத் மாநுஸந் தானம் பண்ணா
மாட்டா தவனைத் தாழ்ந்த மனிதன்
தனக்கிக பரலோ கங்களில் தளர்ச்சி
சிறிது மில்லை; நன்மை செய்தவன்
என்றும் துர்க்கதி எய்த மாட்டான்;
புண்ணியஞ் செய்தவர் பொருந்திய வுலகில்
பலநாள் வாசம் பண்ணிப் பிறகு
ஸதாசார வான்க ளாகும் சற்குணர்
வீட்டிற் பிறப்பன் அல்லது விமல
ஞான யோகிகள் நற்குல மதனில்
பிறப்பன்; இந்தப் பிழைதீர் ஜன்மம்
கிடைப்ப தரிதது கிடைத்தபின் பூர்வ
ஜன்மார்ச் சிதமாந் தத்துவத் திரய
ஞானம் அடைந்து நவிலருஞ் சித்தி
அடையும் பொருட்டுத் தடையிலது
முயற்சி செய்குவன் மூதுல கிடையே" என்றபடி,

பரமாத்மாநுஸந்தானம் பண்ண முயன்று, அங்ஙனம் செய்யமாட்டாமல் தாழ்ந்த ஒருவனுக்கு, இகபரலோகங்களில் எப்போதும் தளர்ச்சி கிடையாது; நன்மைசெய்த ஒருவன், எப்போதும் துர்க்கதி அடையமாட்டான். அவன், புண்ணியர்கள் வாழும் உலகிற் பலநாள் வசித்து, பிறகு ஸதாசாரவான்களான சற்குணர் வீடுகளில் அல்லது உத்தம ஞான யோகிகள் குலத்திற் பிறப்பான். இப்பேர்ப்பட்ட ஜன்மம், இவ்வுலகிற் கிடைத்தல் அரிது; அது கிடைத்தவன், பூர்வஜன்மத்தில் சம்பாதித்த தத்வத்ரய ஞானத்தை மறுபடி யடைந்து சித்திபெறும்பொருட்டு முயற்சிசெய்வான்" என்று பகவத்கீதையில் பகவான் சொல்லியருளியபடி, பவரோகவைத்யனாகிய பகவான், இந்தப் பவரோகிக

ளுடைய பூர்வஜன்ம வாசனை யென்னும் நாடியைப் பரீக்ஷித்து, இவர்களுடைய வியாதியையும் ஆரோக்யாபேக்ஷையையும் அறிந்துகொண்டு, இருவர்க்கும் வியாதி ஒன்றாய் இருந்தமையால், ஈஶ்வரோபாஸனம் என்னும் ஒரே ஔஷதத்தைக்கொடுத்தான். ஆயினும் அவ்வைத்தியன், "வைஷ்ணவன், அம்மருந்தை விஷ்ணுநாமரூபங்களாகிய அநுபானத்துடன் சேர்த்து ஸ்வீகரிக்கவேண்டும்; அதற்குப் பத்தியம், ஊர்த்வபுண்ட்ர தப்த சங்கசக்ராங்கந தாரணாதிகள்; அபத்தியம், த்ரிபுண்ட்ர ருத்ராக்ஷ தாரணாதிகள்" என்றும், "சைவன், அம்மருந்தை சிவநாமரூபங்களாகிய அநுபானத்தோடு சேர்த்து ஸ்வீகரிக்கவேண்டும்; அதற்குப் பத்தியம், த்ரிபுண்ட்ர ருத்ராக்ஷ தாரணாதிகள்; அபத்யம், ஊர்த்வபுண்ட்ர தப்த சங்க சக்ராங்கந தாரணாதிகள்" என்றும் விதித்தான்.

ஆகையால், விஷ்ணுபக்தர்களுக்கு வைஷ்ணவசின்னங்கள் உபாதேயம், சைவசின்னங்கள் தியாச்சியம் என்றும்; சிவபக்தர்களுக்குச் சைவசின்னங்கள் உபாதேயம், வைஷ்ணவ சின்னங்கள் தியாச்சியம் என்றும் * நிர்ணீதம் ஆயிற்று. அகண்டஞானிகள், பரப்ரஹ்மத்தை நாநாவிதங்களில் உபாசிப்பார்கள்; அவ்வவ்வுபாசனத்துக்குத் தக்க சின்னங்களை உபாசனகாலத்தில் † பரிக்கிரகிப்பார்கள். சிலர், வைராக்ய முதலிய ஆந்தர வேஷங்களையே உயர்வாக மதித்து, ‡ பாஹ்யசின்னங்களைப் பூணாமலும் இருப்பார்கள்.

వైష్ణవం ద్వివిధం ప్రోక్తం। బాహ్యమభ్యంతరం తథా
బాహ్యంశంఖచక్రాది। హ్యంతరావిరాగతా ॥

"ஆந்தரம் பாஹ்யம் ஆமிரு வகைகள்
ஆகும் வைஷ்ணவம்; அவைகளில், ஆந்தரம்
வைராக் யாதிகள் மருவுதல்; பாஹ்யம்
சங்கசக் ராதிகள் தம்மைத் தரித்தல்
(இவைகளில்)
ஆந்தரம் முக்யம்; ஆகையால், அதனைச்
சர்வேஶ்வரனும், சாது ஜனங்களும்
உயர்வென மதிப்பர் உலகின் மிசையே." என்றபடி,

ஆந்தர வைஷ்ணவம் என்றும் பாஹ்ய வைஷ்ணவம் என்றும், வைஷ்ணவம் இரண்டுவிதம்; இவைகளில் ஆந்தரம், வைராக்யாதிகளைப் பொருந்தியிருத்தல்; பாஹ்யம், தப்தசங்கசக்ராங்கநாதிகளைத் தரித்தல்; இவ்விரண்டில் ஆந்தரவேஷமே முக்யமானது. ஆகையால், சர்வேஶ்வரனும் சாதுக்களும், இதனையே உயர்வென் மதிப்பார்கள். ஸ்ரீ விஷ்ணு புராணத்தில், யமகிங்கரஸம்வாதத்தில், "வைஷ்ணவர்கள் எப்பேர்ப்பட்டவர்கள்?" என்றுகேட்ட கிங்கரர்களை நோக்கி, யமன், ஆந்தர

* நிர்ணீதம் - தீர்மானம், † பரிக்கிரகித்தல் - ஏற்றுக்கொள்ளல்.
‡ பாஹ்யசின்னங்கள் - வெளிவேடங்கள்.



வேடத்தை விஸ்தாரமாகச் சொன்னானே யல்லாமல், பாஹ்ய வேடங்களில் ஒன்றையாகிலும் சொல்லவில்லை. இதர ஸித்தாந்தங்களிலும் இப்படியே ஆந்தரவேடம் மிகவும் கௌரவிக்கப் பட்டிருக்கின்றது.

చక్రాదిధారణం పుంసాం। పరసంబంధవేదనం।
పతివ్రతానిమిత్తం హి। వలయాదివిభూషణం॥

"கற்புடை மனைவி கைவளை முதலிய
அணிகளணிந்து விளங்குதல் போல
சக்ரா திதாரணம் வைஷ்ணவன் தனக்கு
விஷ்ணு சம்பந்தம் விளங்கும் பாஹ்ய
வேஷமே அன்றி மேவரும் ஆந்தர
வேஷம் போல விசேஷ மாகாதே" என்றபடி,

பதிவிரதைக்கு வளையல் முதலிய பாஹ்ய வேஷங்களைப்போல வைஷ்ணவனுக்குச் சக்ராதிதாரணம், விஷ்ணு சம்பந்த பிரகாச மாத்திரமே யல்லாமல், ஆந்தர வேஷத்தைப்போல முக்யம் அல்ல.

నజాతిభేదం నకులం। నలింగం నగుణక్రియాః
నదేశకాలౌనావస్థా। యోగోహ్యయమపేక్షతే॥

"* பிரபத்தி யோகம் ஜாதிபே தங்களைக்
குலவே ஷங்களைக் குணக்கிரி யைகளைக்
காலதே சங்களைக் கருதிநந் தாதே" என்றபடி,

"பிரபத்தியோகம், ஜாதிபேதங்களையும், குலத்தையும், வெளிவேஷத்தையும், குணத்தையும், கிரியையும், காலதேசவர்த்தமானங்களையும் எண்ணி விரும்பாது" என்று பாரத்வாஜ ஸம்ஹிதையில் சொல்லப்பட்டிருக்கின்றது. சில இடங்களில், பாஹ்ய வேஷம் கொண்டாடப்பட்டிருந்தபோதிலும், அது, † ப்ரஶம்ஸாபரம் என்று புத்திமான்கள் ஊஹித் துணரவேண்டும். பராஶரஸ்ம்ருதியில்,

అగ్నితప్తేనచక్రేణ। బాహుమూలేతులాంఛితాః।
తేయాంతిపరమంస్థానం। పునరావృత్తివర్జితం॥

"தப்தசக் ராங்கனத்தைத் தமது
‡ பாஹு மூலத்திற் § பரிக்ர ஹித்தோர்
மீட்சி யில்லா மாட்சி
தங்கிய பரம பதத்தைச் சார்வரே". என்றபடி,

* பிரபத்தியோகம் - அடைக்கலயோகம்; ஸ்ரீராமபிரானைச் சரணடைந்த விபீஷணாழ்வான், ஜாதிபேதம், குலபேதம், வெளிவேஷம், குணம், கிரியை, காலம், தேசம், வர்த்தமானாதிகளைக் கவனியாதிருந்தமையை யூகித்துணர்க.
† ப்ரஶம்ஸாபரம் - புகழ்ச்சி யளவாயுள்ளது; உண்மையல்ல.
‡ பாஹு - தோள்;
§ பரிக்ரஹித்தோர் - நன்றாக வகித்தவர்கள்

"தோள் மூலத்தில் தப்த சக்ராங்கனத்தைப் பெற்றுக்கொண்டவர், இரும்புண்ட நீர்போலத் திரும்பாத மாட்சிமை தங்கிய பரமபதத்தைப் பெறுவார்கள்" என்று சொல்லியிருக்கின்றது. இப்படியே, இன்னும் சில இடங்களில், சங்க சக்ர ஊர்த்வ புண்ட்ர துளஸீ நளிநாக்ஷ மாலாதாரணங்களை மிகவும் புகழ்ந்து சொல்லியிருக்கின்றது. சைவசித்தாந்தத்திலும், பாஹ்ய சின்னங்களை மிகவும் பெருமையாகச் சொல்லியிருக்கின்றது. இந்த வசனங்கள், பிரசம்ஸாபரமென்று அங்கீகரியாமல், நிஜமென்று ஒப்புக்கொண்டால், பல பிரமாதங்களுக்கு இடம் உண்டாகும். எங்ஙனம் எனில்; பாஹ்ய சின்னங்களைப் புகழ்ந்து சில பிரமாணங்களும், முக்கியமல்லவென்று சில பிரமாணங்களும் சொல்லுகிறபடியால், இவைகளுக்குப் பரஸ்பரவிரோதம் இல்லாமல் அர்த்தம் நிர்வகிக்கவேண்டும். அங்ஙனம் செய்யாவிடில், அந்த பிரமாணங்கள், * அப்பிரமாணங்களாய், உன்மத்தர் உளறல்கள் ஆகும்; பாஹ்யசின்னங்களை மாத்திரம் தரித்து, மஹா பாதகங்களைச் செய்பவர்களுக்கும், மோக்ஷப்ராப்தி தவறாதென்று சொல்லவேண்டியிருக்கும். அஜகர முனிவர் முதலிய பரம யோகிகள், † பாஹ்ய சின்ன ரஹிதராய் இருந்தார்கள் என்று பிரமாணங்கள் கூறுகின்றன. இந்த பாஹ்யசின்னதாரிகளிற் சிலர், நிஷித்தாநுஷ்டானங்களாலே, நரகத்தை அடைந்தார்கள் என்னும் பிரமாணங்கள் இருக்கின்றன. இந்த சமாதானங்களால், பாஹ்யவேஷத்தை, கௌரவிக்கும் வசனங்கள், பிரசம்ஸாபரம் என்பதற்குச் சந்தேகம் இல்லை. ஆகையால், சில பூர்ணாதிகாரிகள், பாஹ்ய வேஷத்தை அத்தனை விசேஷமாய்க் கொண்டாடமாட்டார்கள். ‡ ததீயருக்கு முக்ய லக்ஷணமாகவுள்ள வைராக்யாதி ஆந்தர வேஷங்களைச் சோதித்தறிதல் மிகவும் அஸாத்தியம். § உபதேசாநுவர்த்தநாதிகளுக்கே, இங்ஙனம் சோதித்தறிதல் முக்யம். அன்றி, || ஸத்காரமாத்திரத்துக்கு அத்தனை முக்யம் அல்ல. பகவத் விபூதியான சேதனர் எல்லாரையும் ததீயர்கள் என்றெண்ணி, சத்கரிக்கவேண்டும். அரசிளங்குமரன் ஒருவன், உன்மத்தனாய்த் தன்னையும் தனது பிதா மாதாக்களையும் மறந்திருந்தான் ஆயினும், உலகத்தார் அவனை அரசிளங்குமரனென்று கௌரவிக்குமாறுபோல, ஈஸ்வர ஸந்தானமாகிய சேதனர்களில் சிலர், தமது ஸ்வரூபத்தையும், ஈச்வர ஸ்வரூபத்தையும் மறந்து, விவேகசூன்யராய் இருந்தபோதிலும், அவர்களை அவமதிக்காமல், ததீயர்கள் என்றெண்ணி ஸத்கரித்தல் உசிதம். இப்பேர்ப்பட்ட பெருந்தன்மையாகிய எண்ணம் உள்ளவர்களுக்கு ஸர்வேச்வரன், ¶ வசவர்த்தியாயிருப்பான் என்பதற்குச்

* அப்பிரமாணங்கள் - ப்ரமாணம் ஆகாதவைகள்.

† பாஹ்யசின்ன ரஹிதர் - வெளிவேஷம் இல்லாதவர்கள்.

‡ ததீயர் - ஈச்வரசம்பந்திகள்.

§ உபதேசம் + அநுவர்த்தனம் + ஆதிகள் - உபதேசம் பெறுதல், அங்ஙனம் உபதேசம் செய்தவர்களுக்குச் சிஷ்யராகுதல் முதலியவைகள்.

|| சத்காரம் - வரவேற்று உபசரித்தல். ¶ வசவர்த்தி - வசப்பட்டிருப்பவன்.



சிறிதும் ஐயம் இல்லை. நிரந்தர பகவத் தியானத்தில் மனங்குவியாதவர்கள், பாஹ்யசின்னங்களைத் தரிக்கும்போது, அந்தச் சின்னங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிற மந்திரங்களை உச்சரித்துக்கொண்டும், அவைகளின் அர்த்தங்களை மனனஞ் செய்துகொண்டும், அதிதேவதைகளைத் தியானஞ் செய்துகொண்டும் இருப்பதனால், நாளாவர்த்தியில் நிரந்தர தியான நிஷ்டையும், வைராக்யாதி ஆந்தரவேஷமும் கைகூடி, மோக்ஷமும் பெறுவார்கள் என்பதே பாஹ்யசின்னங்கள் மோக்ஷப்ரதங்கள் என்னும் பிரமாணங்களின் உட்கருத்தாகும்.

"ஒன்றை மற்றொன்றாக பிரமிக்கிறவர்களுக்கு, நினைத்தபலன் கைகூடாது; ஒருவன், புளியங்கிளையென்றெண்ணி, முருங்கைக்கிளையைப் பிடித்துத் தொங்கினால், அது முறிந்து, அதனோடு அவனும் பூமியில் விழுவானே அல்லாமல், அவனுடைய எண்ணத்துக்காக, முருங்கைக்கிளை, புளியங்கிளையாகி அவனைத் தாங்காது. அதுபோல, ஜீவாத்மாவைப் பரமாத்மாவென்று ப்ரமித்து ஆச்ரயித்தால், பரமாத்மா தந்தருளக்கூடிய மோக்ஷபதம் அவனுக்குச் சித்திக்காது" என்று சிலர் சொல்லக்கூடும். இதற்குச் சமாதானம் வருமாறு—அவன் நம்பும் புளியங்கிளை அசேதனம் ஆகையால், அவனது நம்பிக்கை வீணாகும். அதற்கு ஸர்வேச்வரனைப்போல, * ஸர்வஜ்ஞத்வ ஸர்வசக்தித்வங்கள் இல்லாமையால், அவனது விச்வாஸத்தை அறிதற்கும், அவன் பிடித்த முருங்கைக்கிளையில் ஆவேசித்து அவனைக் காத்தற்கும், அவகாசம் இல்லாமற் போகும். அவன், பரமாத்ம புத்தியால் மற்றொரு வஸ்துவை ஆச்ரயித்தால், அந்தப் பரமாத்மா, ஸர்வஜ்ஞத்வ, ஸர்வசக்தித்வ விசிஷ்டன் ஆகையால், அவனுடைய † அத்யவஸாயத்தை அறிந்து, அவன் ஆச்ரயித்த வஸ்துவில் ஆவேசித்து, அவனுடைய எண்ணத்தை ஈடேற்றுவான். இதற்கோர் நிதர்சனம் வருமாறு-ஏகலவ்யன் என்னும் வேடன் ஒருவன், துரோணாசாரியரை தநுர்வித்தைக்காக ஆச்ரயித்தான். அவர் சம்மதிக்கவில்லை. ஆதலால், அவன் தானிருந்த காட்டகத்தில், நிர்மாநுஷ்ய ஸ்தலத்தில், துரோணரைப்போன்ற பிரதிமை ஒன்று செய்துவைத்துக்கொண்டு பக்திசெய்துவந்தகாலத்தில், துரோணரால் அர்ச்சுனனுக்குக் கைகூடிய தநுர்வித்யா விசேஷங்கள் எல்லாம் அவனுக்குக் கிடைத்தன. இந்த ஏகலவ்யனுக்கு, துரோணரும் உபதேசிக்கவில்லை; துரோண ரூபப்பிரதிமையும் உபதேசிக்கவில்லை. இவன், ஆசார்யபக்தி செய்துவந்தபடியால், ஜகதாசார்யனும், சர்வ குருபரம்பரைகளுக்கும் பிரதமாசார்யனுமாகிய ஸர்வேச்வரன், இவன் பக்திக்குக் கருணைகூர்ந்து, துரோண ரூப ப்ரதிமையில் ஆவேசித்து இவனது அபீஷ்டத்தை நிறைவேற்றினான். ஆதலால் ஒருவன், பரமாத்மபுத்தியுடன் எந்தப்பொருளை ஆச்ரயித்தாலும், ஸர்வஜ்ஞத்வ, சர்வ சக்தித்வ யுக்தனான ஜகந்நாதன், அவனது இருதயத்தை அறிந்து, அவனாச்ரயித்த

* ஸர்வஜ்ஞத்வம் - எல்லாம் உணர்தல்.

† அத்யவஸாயம் - அன்பின் உறுதி.

வஸ்துவில் ஆவேசித்து, அவன் மனோரதத்தை நிறைவேற்றுவான் என்பதற்குச் சந்தேகம் இல்லை. அன்றியும், "அண்டத்தில் உள்ள அனைத்தும் பிண்டத்திலும் உண்டு; மனுஷ்ய சரீரத்தில் அனந்தாத்மாக்கள் இருக்கின்றன; அந்தச் சரீரத்தில் சிரசு சத்தியலோகம், நாபிப்பிரதேசம் பூலோகம், பாதங்கள் பாதாளலோகம், இவைகளின் இடையில் இதரலோகங்கள் இருக்கின்றன. ஆதலால், மனுஷ்யசரீரம் சதுர்த்தச புவனங்களாலாகிய ஓரண்டமாயிருக்கிறது; பிரமாண்டத்தில் உள்ள தேவர்கள் யாவரும், இந்தப் பிண்டாண்டத்தில் இருக்கின்றார்கள்" என்று, கருடபுராணத்தில் பகவான் சொல்லியருளினன். பகவத்கீதையில்,

> యథాకాశస్థితోనిత్యం। వాయుస్సర్వత్రగోమహాన్ ।
> తథాసర్వాణిభూతాని। మత్స్థానీత్యుపధారయ ॥

> "எங்கும் வியாபித் திருக்கின்ற காற்றுதான்
> அங்கண் விசும்பில் அடங்கியே—தங்கி
> இருக்கின்ற வாறென் னிடத்திற்பூ தங்கள்
> இருக்கின்ற ஒன்றாய் இயைந்து"

என்றபடி, "எங்கும் பரவியிருக்கின்ற காற்றானது, ஆகாசத்தில் அடங்கியிருக்கின்றதுபோல, சமஸ்த பூத ப்ரபஞ்சங்களும் என்னிடத்தில் இருக்கின்றன" என்று பகவான் கூறியிருக்கின்றான். ஆகையால், ஒவ்வொருபதார்த்தத்திலும், * தத்வத்ரயம் † மிஸ்ரமாயிருக்கின்றது. நெல்லிக்கனியின் புளிப்பினால் வாயுவும், துவர்ப்பினால் சிலேஷ்மமும், மதுரத்தினால் பித்தமும் நசிக்கும். ஆகையால், மூன்று சுகங்களில் எந்தச் சுகத்தை விரும்பினவர்களும் அக்கனியைப் பரிக்ரகிக்கிறதுபோல, தத்வத்ரயத்திற் கலந்துள்ள மூன்று தத்வங்களிலும் அவரவர் விருப்பத்தின்படி எந்தத் தத்வத்தையாகிலும் கௌரவிக்கலாம். எங்ஙனம் என்னில், விஷ்ணு ஆலயத்திலிருக்கும் விஷ்ணு பிம்பத்தை வைஷ்ணவன் பரமாத்மாவென்றும், சைவன் ஜீவாத்மாவென்றும், பரப்ரஹ்மம் நாமரூப ரஹிதமானதென்று அபிப்பிராயப்பட்டவன் அசித் என்றும் ‡ அத்யவஸிக்கலாம். சிவாலயத்திலிருக்கும் சிவபிம்பத்தைச் சைவன் பரமாத்மா என்றும், வைஷ்ணவன் ஜீவாத்மா என்றும், நாமரூபரஹித பரமாத்மோபாஸகன் அசித் என்றும் அத்யவஸிக்கலாம். ஸர்வ பதார்த்தங்களும் தத்வத்ரயாத்மகம் ஆகையால், அவனவனுடைய அத்யவஸாயமும் உசிதமாகவே இருக்கின்றது. ஒரேபுருஷன், தன் பாட்டனுக்குப் பேரனாகவும், தகப்பனுக்குப் பிள்ளையாகவும், தமயனுக்குத் தம்பியாகவும், தம்பிக்குத் தமயனாகவும், மனைவிக்குக் கணவனாகவும், மகனுக்குத் தகப்பனாகவும், பேரனுக்குப் பாட்டனாகவும், எஜமானனுக்குச் சேவகனாகவும், சேவகனுக்கு எஜமானனாகவும், தோழ

* தத்வத்ரயம் - ஜகஜ்ஜீவபரம் - ஜகமாகிய அசித்து, ஜீவாத்மா, பரமாத்மா.
† மிச்ரம் - கலப்பு. ‡ அத்யவஸிக்கலாம் - உறுதியாய் அன்புபூணலாம்.



னுக்குத் தோழனாகவும், பகைவனுக்குப் பகைவனாகவும், கொடுப்போனுக்குக் கொள்வோனாகவும், கொள்வோனுக்குக் கொடுப்போனாகவும் விளங்கியிருக்கின்றான். இத்தனை தர்மங்களும் ஒருவனிடத்தில் இருக்கின்றபடியால், அவ்வொருவனே எல்லார்க்கும் அத்தனை விதங்களாயிருக்கின்றான். தத்வத்தை விசாரிக்கும்போது, அவரவர் அத்யவஸாயப்படி, அந்தப் புருஷனுக்கு அவ்வப்பெயர் தந்திருக்கின்றார்களே அன்றி, பேரன், பிள்ளை, தம்பி, தமயன், கணவன், தகப்பன், பாட்டன், சேவகன், எஜமானன், தோழன், பகைவன், கொள்வோன், கொடுப்போன் என்னும் இப்பெயர்களில் ஒன்றாவது அவனுக்குச் சரியான நாமம் அல்ல. இப்படியே, ஒவ்வொரு பதார்த்தத்திலும் மூன்று தத்வங்களும் கலந்து, அதததனுடைய தருமங்களும் பொருந்தியிருக்கிறபடியால், அவ்வப்பதார்த்தத்தை அவரவர் அத்யவஸாயப்படி அவ்வப்பெயரால் வியவகரித்தல் உசிதம். கடைசியில், அந்தப் பதார்த்தம் கேவல பரமாத்மாவும் அல்ல, கேவல ஜீவாத்மாவும் அல்ல, கேவல அசித்தும் அல்ல; இம்மூன்றினுடைய கலப்பாகையால், அவரவரால் அத்யவஸிக்கப்படும் தத்வதருமம், அவரவர்க்கு அதனில் விளங்கிக் கொண்டிருக்கும். அகண்டஜ்ஞான பரிபூர்ணர்கள் இம்மூன்று தத்வங்கள் எங்கும் உண்டென எண்ணுகிறார்கள்.

சிலர், நாமரூபங்கள் இல்லாமலே, பரமாத்மாவை உபாசிப்பார்கள். அப்படி நாமரூபரஹித கேவல பரமாத்மோபாஸநம் செய்பவர்களில் சிலர் அநாமியும், அரூபியுமாகிய பகவானுக்கு நாமரூபங்களைக் கற்பித்து உபாஸித்தல் அநீதியென்று *ஸவிக்ரஹோபாஸகரை வெறுக்கிறார்கள். அதுவும் நியாயம் அல்ல, எங்கும் நிறைந்திருக்கின்ற பரமாத்மா, இவர்கள் உத்தேசித்து வணங்கும் விக்ரஹத்தில் மாத்திரம் இல்லாமற்போயிற்றோ? சிலர், ஔஷதத்தைச் சிரத்தையுடன் ஸ்வீகரிப்பார்கள். அங்ஙனம் ஸ்வீகரிக்கச் சகியாதவர்கள், அவர்களுக்கிஷ்டமான பதார்த்தங்களில் அதனைக்கலந்து புசிப்பார்கள். அதுபோல, கேவலம் பரமாத்மாவை † ஸாந்நித்யம் செய்துகொள்ளச் சக்தியற்றவர்கள் நாமரூபவிசிஷ்டமாய் உபாஸிக்கிறார்கள். ‡ பஞ்சீகரணத்தால் எங்கும் ஸூக்ஷ்மரூபியாய் வியாபித்திருக்கும் அக்னியை, பரமயோகிகள் தமது இச்சா மாத்திரத்தால் ஸாந்நித்யம் செய்து கொள்வார்கள். அப்படிச் செய்யச் சக்தியற்றவர்கள், § அரணியைக் கடைந்து அக்னியைப் பெறுவார்கள். இதுபோலவே, ¶ தாரணை திடப்பட்டவர்கள், கேவலம் பரமாத்மோபாஸனம் செய்வார்கள். அது, திடப்படாதவர்கள் விக்ரகவிசிஷ்டமாய் உபாஸிப்பார்கள். ஸர்வதேச, ஸர்வகால, ஸர்வா-

* ஸவிக்ரக உபாஸகர் - விக்ரகாராதனை செய்பவர்.
† ஸாந்நித்யம் - அருகிற் பொருந்துதல்.
‡ பஞ்சீகரணம் - பஞ்சபூத அமிசகூட்டம். § அரணி - தீக்கடை கோல்.
¶ தாரணை - அட்டாங்கயோகத் தொன்று; அஃது, இதயம், கண்டம், கபோலம், நாபி, நெற்றி யிவற்றொன்றிற் சிந்தைவைத்திருத்தல்.

வஸ்துக்களிலும் பகவானிடத்தில் *அவிச்சின்ன ஸ்மரணை உடைமையே தாரணை எனப்படும். ஆகையால், இவ்விருவகை உபாசனைகளும், அவரவர் அதிகாரானுகுணத்தின்படி உசிதமாயிருக்கின்றன. அல்ல நாடும், ராஜ பரிக்ரகமான பதார்த்தங்கள், பிரஜைகளுக்கு பூஜ்யங்கள் ஆவனபோல, தாரணை இடப்பட்டவர்களும், தங்களுக்கு ஸவிக்ரகோபாஸனம் அநாவஸ்யகம் ஆனபோதிலும்,

నతేరూపంనచాకారం। నాయుధానినచాస్పదం।
తథాపిపురుషాకారో। భక్తానాంత్వంప్రకాశసే॥

" எங்குமுளன் கண்ணன் என்றமகனைக் காய்ந்து
இங்கில்லை யாலென் றிரணியன் தூண்புடைப்ப
அங்கப் பொழுதே அவன்வீயத் தோன்றியஎன்
சிங்கப்பி ரான்பெருமை ஆராயும் சீர்மைத்தே"

என்று கிலருக்கிலேயும், நம்மாழ்வார் அருளிய இரண்டாம் பத்து எட்டாந் திருவாய்மொழி ஒன்பதாம் பாசுரத்திலேயும் முறையே சொல்லியிருக்கிறபடி, குழந்தையின் ஆரோக்கியத்திற்காக, மாதா ஔஷத ஸேவை செய்வதுபோல, நாமரூபாஹிதனான பரமாத்மா, பக்தர்களுக்காக அவ்விக்ரகத்தைப் பரிக்ரகித்தது என்றெண்ணிக் கௌரவிப்பார்கள். ஆகையால்,

" மனிசரும் மற்றும் முற்றுமாய் மாயப் பிறவிபிறந்த
தனியன் பிறப்பிலி தன்னைத் தடங்கடல் சேர்ந்தபிரானை
கனியைக் கரும்பினின் சாற்றைக் கட்டியைத் தேனையமுதை
முனிவின்றி யேத்திக் குனிப்பார் முழுதுணர் நீர்மையினோரே"

என்று நம்மாழ்வார் அருளிய மூன்றும்பத்து, ஐந்தாந் திருவாய்மொழி, ஆறும் பாசுரத்தின்படி, எவ்விதத்தாலாகிலும் பரமாத்மோபாஸனமே முக்யமாயிருக்கின்றது; † அவிக்ரக ஸவிக்ரக ரூபவிஷயங்களில் மாற்சரியப்படுவது உசிதம் அல்ல.

பக்தவிஜயத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பக்தர்களிற் சிலர், தாழ்ந்த குலங்களில் பிறந்தவர்கள் என்று, சிலர் அகௌரவமாக எண்ணக்கூடும். அவ்வெண்ணம் நரகஹேதுவாய், பகவந் நிக்ரஹத்துக்குக் காரணமாயிருப்பதால், அது குறித்து இங்கே சிறிது பிரஸ்தாபிப்பாம்.

ஜீவாத்மாக்களுக்கு ஜாதிபேதம் இல்லை, அவைகள் ஞானானந்த ஸ்வரூபமாய் ஞானகுணகமாய் அந்யோந்யபேதம் இல்லாமல் ஒரே விதமாய் விளங்குகின்றன. ஜாதிபேதங்கள் சரீரத்தைப்பொறுத்தவைகள். ஆத்மாக்களுக்கு ஶமம், தமம், முதலிய ஆத்மகுணங்களால் பகவானுடைய அங்கீகாரம் உண்டாகும்; அன்றி, ஜாதியினால் உண்டாகாது. ஸ்ரீ மஹாபாரதத்தில் ஆரண்யபர்வத்தில்,

* அவிச்சின்ன ஸ்மரணை - இடையறு நினைப்பு அல்லது தியானம்.

† அவிக்ரகம் - விக்ரக நீக்கம் - பரமாத்மாவை உருவின்றி வணங்குதல்.



బ్రాహ్మణః కోభవేద్రాజన్

பிராமணன் எப்படிப்பட்டவன் என்று கேட்ட * அஜகரத்தை நோக்கி,

సత్యందానంశమంశీలం। అనృశంస్యంతపోఘృణా।
దృశ్యంతేయత్రనాగేంద్ర। సబ్రాహ్మణఇతిస్మృతః॥
శూద్రేతుయద్భవేల్లక్ష్మ। ద్విజేతచ్చనవిద్యతే।
నవైశూద్రోభవేచ్ఛూద్రః। బ్రాహ్మణోనచబ్రాహ్మణః॥

" ஸத்யம் தானம் † ஶமம் சீலம்
அந்ருஶம் ஸ்யம்தவம் தயைமுத லாகிய
குணங்க ளெவனிடங் குடிகொண் டுள்ளவோ
அவனே அந்தணன் ஆவான்; இந்தக்
குணங்கள் சூத்திரன் இடத்திற் குடிகொண்
டிருக்குமேல் அவனைச் சூத்திரன் என்றுநாம்
இயம்ப லாகா; இந்தக் குணங்கள்
வேதிய னிடத்தில் விலகி இருக்குமேல்
(அவனை)
வேதிய னென்று விளம்ப லாகாதே" என்றபடி,

"ஸத்யம், தானம், ஶமம், சீலம், ‡ அந்ருஶம்ஸ்யம், தவம் ஆகிய குணங்கள் எவனிடத்திருக்கின்றனவோ, அவனே பிராஹ்மணன் ஆவான்; இக்குணங்கள் சூத்திரனிடத்திலிருந்தால், அவன் சூத்திரன் அல்லன்; பிராஹ்மணனிடத்தில் இல்லாவிட்டால், அவன் பிராஹ்மணன் அல்லன்" என்று தர்மபுத்திரர் சொன்னார்.

నాహందేవోనమర్త్యోవా। నతిర్యక్స్థావరోపివా।
జ్ఞానానందమయస్త్వాత్మా। శేషోహిపరమాత్మనః॥

" தேவனு மல்லேன் மனிதனு மல்லேன்
மிருகமு மல்லேன் மரமு மல்லேன்
ஞானனந்த வடிவங் கொண்ட
ஆத்ம சொரூபி ஆவேன்
பரமாத் மசேஷனாப் பரிணமிப்பேனே" என்றபடி,

" நான் தேவனும் அல்லேன்; மனிதனும் அல்லேன்; மிருகமும் அல்லேன்; மரமும் அல்லேன்; ஞானானந்தமே வடிவமாகவுடைய ஆத்மசொரூபியாகவும், பரமாத்மாவுக்குச் சேஷபூதனாகவும் இருக்கின்றேன்" என்று, பரம யோகீந்திரரான ஜடபரதர் கூறினார்.

* அஜகரம் - மலைப்பாம்பு.

† ஶமம் - சாந்தம்.

‡ அந்ருஶம்ஸ்யம் - பாபம் இன்மை.

నాహం విప్రో న చ నరపతిర్నాపి వైశ్యో న శూద్రః
నో వా వర్ణీ న చ గృహపతిర్నో వనస్థో యతిర్వా ॥
కింతు శ్రీమద్భువనభవనస్థిత్యపాయైకహేతోః ।
లక్ష్మీభర్తుర్నరహరితనోర్దాసదాసస్య దాసః ॥

பிராமணன் அல்லேன் க்ஷத்ரியன் அல்லேன்
வைசியன் அல்லேன் சூத்ரனும் அல்லேன்
பிரஹ்மசாரியும் அல்லேன் வானப்
பிரஸ்தனுமல்லேன் கிருஹஸ்தனுமல்லேன்
சந்நியாசியும் அல்லேன் சகல
உலகப் படைப்பளிப் பழிப்பினுக்குற்ற
ஏதுவாய் இலக்குமி மணாளனாய் நார
சிங்க ரூபியாய்ச் சிறந்த பகவான்
தனது தாஸ தாஸ
தாஸன் ஆவேன் சத்தியம் இதுவே" என்றபடி,

"நான் பிராமணன் அல்ல; க்ஷத்ரியன் அல்ல; வைசியன் அல்ல; சூத்திரனும் அல்ல; பிரஹ்மசாரி அல்ல; கிருஹஸ்தன் அல்ல; வானப் பிரஸ்தன் அல்ல; சந்நியாசியும் அல்ல; எல்லா உலகப் படைப்புக்கும், காப்புக்கும், அழிப்புக்கும் காரணனாய், இலக்குமி மணாளனாய் நரசிங்கரூபியாய் உள்ள பகவானுக்குத் தாஸனுக்குத் தாஸனுக்குத் தாஸனாவேன்" என்று அந்தரங்க பகவத் பக்தராகிய பிரகலாதர் கூறினார். தேவதிர்யங் மனுஷ்ய ஸ்தாவரங்கள், பிராஹ்மண க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள், பிரமசாரி கிருஹஸ்த வானப் பிரஸ்த சந்நியாசிகள் என்னும் பேதங்கள், ஜீவாத்மாக்களுக்குக் கர்மானுகுணமாகக் கிடைத்த கவசரூப சரீரங்களுக்கே அல்லாமல், ஆத்மாவுக்கு இல்லை என்பதும், இவ்வாத்மா, ஞானானந்த ஸ்வரூபமாய், ஸத்வாதி சுகுணங்களையும் பகவத் பாகவத சேஷத்வத்தையும் முக்ய நிரூபங்களாகப் பெற்றுள்ளதென்பதும் இம்மூன்று சுலோகங்களால் நன்கு விளங்குகின்றன. ஸ்ரீ விதுரருடைய நிர்யாணகாலத்தில், அவர் சரீரத்திற்கு அக்னி ஸம்ஸ்காரம் செய்யப்புகுந்த தர்மபுத்திரரை நோக்கி, அசரீரியாகிய பகவான்,

భో భో రాజన్ న దగ్ధవ్యం । ఏతద్విదురసంజ్ఞకం
కళేబరమిహైతత్తే । నైష ధర్మస్సనాతనః ।
లోకా వైలక్షణో నామ భవిష్యత్యస్య పార్థివ ।
యతిధర్మమవాప్తోఽసౌ । న శోచ భరతర్షభ ॥

"அரசே விதுரர் அழகிய உடலைக்
கொளுத்த வேண்டா கொளுத்த வேண்டா



யதிதர் மத்துடன் அமைந்து விளங்கி
இருந்த இவர்தம் உடற்குக் கிரியை
உலக * விலக்ஷண மாக வுகந்து
நடத்த வேண்டும் நற்குண நிறைந்தவிப்
பரம ஹம்ஸரின் பரிசுத் தமான
உடலைத் தகனம் செய்தலில் விலகிற்
பழைய தர்ம மல்ல
வருந்த வேண்டா மன்னவ நீயே" என்றபடி,

"ஓ ராஜாவே! இவ்விதுரர் சரீரத்தைத் தகனம் செய்யவேண்டாம்; யதி தர்மத்துடன் கூடியிருந்த இவருடைய உடலுக்கு, உலகவிலக்ஷணமான கிரியை நடத்தவேண்டும். இப்பேர்ப்பட்ட பரமஹம்ஸரின் சரீரத்தைத் தகனம் செய்தல், பழைய தர்மத்தின் பாங்கல்ல. இதற்காக நீ வருந்தவேண்டா" என்று கூறினான்.

కశ్చిద్ద్విజాతిప్రవరో । వేదాధ్యాయీ తపోధనః ।
తపస్వీ ధర్మశీలశ్చ । కౌశికో నామ భారత ।
సాంగోపనిషదాన్ వేదాన్ । అధీతే ద్విజసత్తమః ॥

"வேதியரில் உத்தமன் வேதமோதியவன்
தவசிரேஷ்டன் தர்மசீலன்
அங்கங்களுடனே உபநிஷத்துக்களை
ஆய்ந்தவனாகிய கௌசிக முனிவன்
தர்மவ்யாதனென்னும் † சவரனை
அடுத்து வணங்கி அருமையாகிய
தர்ம சந்தேகங்களைத்
தீர்த்துக் கொண்டு சிறந்திருந்தனனே" என்றபடி,

"பிராமணோத்தமன், வேதாத்யயனம் செய்தவன், தவத்திற் சிறந்தவன், தர்மசீலன், அங்கங்களையும் உபநிஷத்துக்களையும் அத்யயனம் செய்தவன் ஆகிய கௌசிக முனிவன், தர்மவ்யாதன் என்னும் வேடனை அடுத்து வணங்கி, தர்ம சந்தேகங்களைத் தீர்த்துக்கொண்டனன்" என்று ஸ்ரீ மஹாபாரதத்தில் ஆரணியபர்வத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

"நைமிசாரண்யத்தில் வாழ்ந்த மகருஷிகள், தாங்கள் செய்த தீர்க்க ஸத்திரயாகத்தில், ரோமஹர்ஷணன் என்பவன் ‡ பிரதிலோம ஜாதியிற் பிறந்தவன் ஆயினும், அவனுக்கு பிரஹ்மாஸனம் கொடுத்தார்கள்" என்று ஸ்ரீ பாகவதத்தில் தசமஸ்கந்தத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. "யாகத்திற் கிரியாலோப ரூபதோஷத்தால் ஒரு பிராமணனுக்கு நேர்ந்த பிரமராக்ஷஸ ஸ்வரூபத்தை, பஞ்சமஜாதியிற்

* விலக்ஷணமாக - வேறாக. † சவரன் - வேடன்.
‡ பிரதிலோமன் - இழிகுலத் தந்தைக்கும் உயர்குலத் தாய்க்கும் பிறந்தவன்

பிறந்த பாகவதோத்தமன் ஒருவன், தான், பகவானைத் துதித்த * கைசிகம் என்னும் பாட்டின் பலத்தால் விடுவித்தான்'' என்று வராஹ புராணத்தில், பகவான் பூதேவிக்குச் சொன்னான் என்று கூறப்பட்டிருக்கின்றது. ஸ்ரீ மஹாபாரதத்தில்,

మద్భక్తంశూద్రసామాన్యా । దవమన్యన్తియేనరాః ।
నరకేష్వవతిష్ఠంతి । వర్షకోటీర్నరాధమాః ॥
చండాలమపిమద్భక్తం । నావమన్యేతబుద్ధిమాన్ ।
అవమానాత్పతత్యేవ । రౌరవేనరకేచసః॥

“எனது பக்தனை இழிந்த சூத்திரன்
என்று நினைத்தவ மதித்திருக் கின்ற
† நராதமர் தமக்கு நரகானுபவம்
கோடி வருஷம் குறையா திருக்குமால்
எனது பக்தன் சண்டாளனேனும்
அவனைப் புத்திமான் அவமதித் திருத்தல்
ஆகாத காரியம் அதனைச் செய்தால்
ரௌரவ நரகில் தப்பாது
வீழ்ந்து வருந்துவன் மெய்யிது வாமே'' என்றபடி,

“எனது பக்தனை ஸாமாந்ய சூத்திரனாக நினைத்து, அவமதிக்கும் நராதமர்கள் கோடிவருஷங்கள் நரகிற் கிடப்பார்கள்; எனது பக்தன், சண்டாளன் ஆயினும், அவனைப் புத்திமான் அவமதித்தல் தகாத காரியம்; அதனைச் செய்தால், ரௌரவ நரகம் தப்பாது சித்திக்கும்''. என்றும்,

నశూద్రాభగవద్భక్తా । విప్రాభాగవతాస్స్మృతాః ।
సర్వవర్ణేషుతేశూద్రా । యేహ్యభక్తాజనార్దనే॥

“பகவத் பக்தன் சூத்திரன் அல்லன்
(அவனை)
விப்ர னென்றும் விளங்குபாகவதன்
என்றும் எண்ண வேண்டும் எல்லாச்
சாதிகளிலும் சோதில் பகவத்
பக்தரல்லாப் பண்புடையோரைச்
சூத்திர ரென்று சொல்லத் தகுமே'' என்றபடி,

“பகவத் பக்தன் சூத்திரன் அல்லன்; அவனை விப்ரன் என்றும் பாகவதன் என்றும் எண்ணவேண்டும்; எல்லாச்சாதிகளிலும் பகவத் பக்தரல்லாதார் சூத்திரர் ஆவார்'' என்றும்.

* கைசிகம் - ஒருவிதப் பண்
† நராதமர்கள் - நர + அதமர்கள் - மனிதப்பதர்கள்.



భక్తిరష్టవిధాహ్యేషా । యస్మిన్మ్లేచ్ఛేపివర్తతే ।
సవిప్రేంద్రోమునిశ్శ్రీమాన్ । సయతిస్సచపండితః ॥
తస్మైదేయంతతోగ్రాహ్యం । సచపూజ్యోయథాహ్యహం ।

“அஷ்ட விதங்களாம் பக்தி அடங்கலும்
மிலேச்சனிடத்தில் விளங்கினும் விப்பிரன்
அவனே முனிவன் அவனே ஸ்ரீமான்
அவனே யதிபதி அவனே பண்டிதன்
அவனுக் குபதேசானுக் கிரகம்
பண்ணலும் அவன்பால் அதனைப் பெறுதலும்
தகுதி யாகும் அவனை
என்னைப் போல ஏத்தலாமே'' என்றபடி,

“அஷ்டவித பக்திகளும் மிலேச்சனிடத்தில் இருந்தாலும், அவனே பிராமணோத்தமன்; அவனே முனீந்திரன்; அவனே ஸ்ரீமான்; அவனே யதீந்திரன்; அவனே பண்டிதன்; அவனுக்குபதேசானுக்கிரகம் செய்தலும், அதனை அவனிடத்திருந்து பெறுதலும் தகுதியாகும்; அவனை என்னைப்போலவே பூசிக்கலாம்'' என்றும் பல இடங்களில் பாகவதர் வைபவத்தைப் பகவான், தானே வெளிப்படுத்தியருளினான்.

మద్భక్తంశ్వపచంవాపి । నిందాంకుర్వంతియేనరాః ।
పద్మకోటిశతేనాపి । నక్షమామివసుంధరే ॥

“பூமா தேவியே புகலுவேன் கேளாய்
எனது பக்தன் இழிந்தநாய் மாமிஸம்
தன்னை யுண்ணும் சண்டாள குலத்திற்
பிறந்தவனாயினும் சிறந்தவன் அவனை
நிந்தனை செய்யும் நீசரைப் பத்ம
கோடி சதங்களாக் குறிக்கும் ஆண்டுகள்
மாண்ட போதிலும் மன்னிக் கேனே'' என்றபடி,

“ஓ பூமாதேவியே! எனது பக்தன் நாய் மாமிஸத்தை உண்ணும் நீச குலத்திற் பிறந்தவனாயினும், அவனை நிந்திக்கும் நீசரை, பத்மகோடி சதவருஷங்கள் ஆனபோதிலும் மன்னிக்க மாட்டேன்'' என்று வராஹபுராணத்தில் பகவான் அருளிச்செய்தனன்.

శ్వపచోపిమహీపాల । విష్ణుభక్తోద్విజాధికః।
విష్ణుభక్తివిహీనస్తు । యతిశ్చశ్వపచాధమః ॥

“இழிந்தநாய் இறைச்சியை இன்பமா யுண்ணும்
சண்டாள குலத்தில் ஜனித்தவனாயினும்
பகவத் பக்தன் பிராமணனைவிட

உயர்ந்தவன் ஆவான் உத்தம பகவத்
பக்தியில் லாதவன் பற்றில் லாத
சந்நி யாசி யாயினும் தகாதாய்
இறைச்சியுண் போனினும் இழிந்தவன் ஆமே என்றபடி,

"நாய் மாமிஸத்தை உண்ணும் நீச ஜாதியில் பிறந்தவன் ஆயினும், பகவத் பக்தன், பிராமணனைக்காட்டிலும் உயர்ந்தவன்; பகவத்பக்தி யில்லாதவன், ஸந்நியாசியானாலும், நாய் மாமிசத்தை உண்பவனைவிட இழிந்தவன்" என்று ஸ்ரீ பாகவதம் பகர்கின்றது.

యఃపశ్యతిశుభాచారం । వైష్ణవంపీతకల్మషం ।
యస్మిన్కస్మిన్కులేజాతం । ప్రణమేద్దండవద్భువి ॥

"ஸதாசார வானும் சால்புடை ஒருவன்
குற்றஞ் சிறிதும் இன்றிக் குறைவிலா
ஈச்வர * வ்யாப்தியை என்றும் விடாமல்
அநுஸந் தானம் செய்கின் றதனுல்
வைஷ்ணவன் என்று வழுத்தப் படுமே
பகவத் பக்தனைப் பார்த்த வுடனவன்
எந்தக் குலத்திற் பிறந்தவன் எனினும்
அவற்கடி யற்ற மரம்போல்
† பிரணா மஞ்செயல் பெரியோர் கடனே" என்றபடி,

"குற்றமின்றி ஸதாசாரவானுய் ஈச்வரவியாப்தியை விடாமல் அநுஸந்தானம் செய்வதால், ஒருவன் வைஷ்ணவன் என்று சொல்லப்படுவான். பகவத் பக்தனைப் பார்த்தவுடனே, அவன் எக்குலத்தோன் ஆயினும், அவனுக்கு அடியற்ற மரம்போல், பிரணாமம் செய்வது பெரியோர் கடன்" என்று லிங்கபுராணம் சொல்லுகிறது. இன்னும் பல பிரமாணங்கள் இருக்கின்றன. ஆனாலும், நூல் விரிவாகும் என்று அஞ்சி இவ்வளவோடு நிறுத்தினேம். இந்தப் பிரமாணங்களை நன்று யோசித்தால், "பகவத் பக்தருக்குக் குணம் முக்கியமே அன்றி, குலம் முக்கியம் அல்ல" என்று விளங்கும். ஆகையால், பக்தவிஜயத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள பக்தர்கள் அனைவரும், எக்குலத்தோராலும் வணங்கப்படத்தக்கவர் என்பதற்கு ஐயம் இல்லை.

மேற்குறித்த விஷயங்களை யெல்லாம் தீர விசாரித்து "ஸர்வஸித்தாந்தங்களிலும் உள்ள முமுக்ஷுக்களுக்குப் பரமாத்ம பாவனையால் உபாஸ்யமான பரப்பிரமம் ஒன்றே; அவ்வச் சித்தாந்தங்களில் நிகர்ஷமாகச் சொல்லப்பட்டிருக்கும் தேவதைகள், ஜீவாத்மாக்கள்; நாம் கண்டும் கேட்டும், காணாமலும் கேளாமலும் இருக்கும் ரூபநாமங்கள் எல்லாம் பரமாத்மாவுக்கு உண்டு; அத்தனை ரூபநாமங்களும், ஜீவாத்

* வ்யாப்தி - எங்கும் நிறைதல்.
† பிரணாமம் - வணக்கம்.



மாக்களுக்கும், அவரவர் யோக்யதாநுசாரமாக உண்டாயிருக்கின்றன; எங்கும் தத்வத்ரயம் கலந்திருக்கின்றபடியால், உபாஸகர் மனோரதப்படி ஜீவாத்ம பரமாத்மாக்களின் ஸாந்நித்யம் விதிக்கும்; அவரவர் உபாஸநாநுகுணமாக ஜீவாத்ம பரமாத்மாக்களை நிச்சயிக்கவேண்டுமே யல்லாமல், நாமரூப மாத்திரத்தாலேயே அங்ஙனம் செய்தல் அசாந்தியம்; அவ்வவ்வுபாஸனைகளுக்குத் தக்கபடி அவ்வச் சித்தாந்தங்களில் விதிக்கப்பட்ட சின்னங்களைத் தரிப்பது அவரவர்க்கு உசிதம்; பாஹ்ய சின்னங்களைத் தரித்திருப்பதனாலேயே, ஒருவர் யோக்கியரென்றும், அவையில்லாமையினாலேயே, இன்னொருவர் அயோக்கியர் என்றும் நிச்சயித்தல் உசிதம் அல்ல; அவரவர் ஞானானுஷ்டானங்களை நன்றாய்ப் பரீக்ஷித்து, அவரவர் யோக்கியதையைத் தெரிந்துகொண்டு, அயோக்கியர் ஸாங்கத்ய ஸல்லாபங்களைப் பற்றறவிட்டு, ஞானமும் விரக்தியும் சாந்தியும் உடையாராகிய பரமஸாத்விகரோடு, ஸஹவாஸ ஸல்லாபங்கள் செய்யவேண்டும்; பகவத் பக்தருடைய யோக்கியதையைப் பார்த்துக் கௌரவிக்கவேண்டும் அன்றி, ஜாதியைப் பார்த்து அவமதித்தல் பிரமாத ஹேதுவாம்" என்று தீர்மானிப்பது பெரியோர்கடன். "ஈச்வர விபூதியாகிய சேதநா சேதனங்களில் விரோதத்தை விட்டு, பாகவதாபசாரத்துக்கு அஞ்சி, அன்யோன்யமாகிய சிநேகத்தை, திடமாய்ப் பற்றி, ஸர்வாத்மாக்களிடத்திலும் சகோதரபாவனை செய்தல், பகவத் பக்தர்களான முமுக்ஷுக்களுடன் கூடிப் பொழுதுபோக்கல், அப்படிப்பட்ட சகவாஸம் சித்திக்காதபோது, ஏகாந்தஸ்தலத்தில் வசித்து, பகவத்தியானம் செய்தல், மோக்ஷத்தை விரும்பாதவர்களுக்கு, மோக்ஷ காரணமாகிய ஞானத்தை உபதேசித்தல், ஆசாரஹீனருக்குத் தம்முடைய உபதேசானுஷ்டானங்களால் ஆன்ருசம்ஸ்யம் முதலான ஸதாசாரங்களை உண்டாக்குதல், அது பலியாத இடத்தில் அனுதாப யுக்தராய், அவர்களுக்காக பகவானைப் பிரார்த்தித்தல், தமக்குத் தீங்கு செய்பவர்களை த்வேஷிக்காமல், 'நம்முடைய கர்மானுகுணமாக, பகவான், இவர்களால் இப்படிச் செய்தான்' என்று நினைத்தல், 'சாந்த சித்தராய், ஜிதேந்திரியராய், மிதாஹாரராய், யதாலாப ஸந்துஷ்டராய் வாழ்தல்' ஆகிய இவைகளே புத்திமான்களுடைய செய்கைகளாம். இங்ஙனம் வாழ்பவர்கள், பகவானுக்கு, அத்யந்தம் அபிமத விஷயம் ஆவார்கள்.

இந்தப் பக்தவிஜயத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள பக்தர்கள், இப்படிப்பட்ட நிஷ்டைகளுடன் கூடி, பக்தக்ரீதனான ஸ்ரீ பாண்டுரங்கனைத் தங்களுக்கு ஸ்வாதீனனாக்கிக்கொண்டு, அவனுடன் கலந்து, பரமானந்தத்தை அனுபவித்தார்கள். அன்றியும் அவர்கள் தங்களுடைய ஞானானுஷ்டானங்களால், பலரையும் தங்களைப்போல, ஜீவன் முக்தர்களாக்கினார்கள். ஆகையால், அப்பேர்ப்பட்ட பரமபக்தர்கள் சரித்திரத்தை, பக்தியுக்தராய் வாசிக்கிறவர்கள் விஷயத்தில், ஸ்ரீ பாண்டுரங்கநாதன், பரமதயாளுவாய் விளங்குவான்; கன்றையிழந்த பசு, அக்

கன்றின் தோலினால் மூடப்பட்ட பொய்க்கன்றைப் பார்த்தளவில், தன் கன்றை நினைத்துக்கொண்டு பால் சுரப்பதுபோல, ஸ்ரீஜயதேவ, ஞானதேவ, நாமதேவர்கள் முதலிய பூரணபக்தர்கள் இல்லாத இக்காலத்தில், அவர்களுடைய சரித்திரங்களைப் பிரேமையுடன் வாசிப்பவர்களை, அந்த ஜயதேவாதியரென நினைத்துப் பகவான், அவர்கள் விஷயத்தில் செய்த கடாக்ஷத்தை, இவர்கள் விஷயத்திலும், செய்வான் என்பதற்கு ஐயம் இல்லை.

*அவரவர் தமதம தறிவறி வகைவகை*
*அவரவர் இறையவர் எனவடி யடைவர்கள்*
*அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்*
*அவரவர் விதிவழி அடையநின் றனரே.*

(வெண்பா.)

*எவரெவரெவ் வாறிறைஞ்சு வாறவ்வா றீசன்*
*அவரவர்க்குக் காட்சி அருள்வான்—எவரெவர்*
*என்னென்ன வேண்டினும் ஈவான்பற் றற்றவர்க்கு*
*உன்னத முத்தி உவந்து.*

அவதாரிகை ஸம்பூர்ணம்.

ஸ்ரீபாண்டுரங்க பரப்ரஹ்மணே நம:



ஸ்ரீபண்டரிபுரம், சந்திரபாகை நதி, ஸ்ரீபாண்டுரங்கன் ஆலயம்.
(பக்கம் 31)



ஸ்ரீ

அஸ்மத்குருப்யோநம:

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீ பாண்டுரங்க பரப்ரஹ்மணே நம:

# பக்தவிஜயம்

விஷ்வக்ஸேநர் என்னும் சேனை முதலியார்
வணக்கம்

(நிலமண்டில ஆசிரியப்பா)

சூரியன் இருளைத் துரத்துவதுபோல்
சகலவிக் கினமுந் தவிர்த் தெமை யாளும்
வேத்திரக் கரத்தர் விமலர் அணிதிகழ்
ஸூத்திர வதியின் துகள்தீர் மணாளர்
விஷ்ணு கணநிபர் விஷ்வக் ஸேநர்
சரண நளினந் தலைக்கணி வர்மே.

ஆழ்வார் பன்னிருவர் வணக்கம்

(கலிவெண்பா)

பொன்மணக்குங் காஞ்சிநகர்ப் பொய்கையார் தாள்போற்றி
சொன்மணக்கு மாபலியின் தொன்னகரில்-மன்னி
அவதரித்த பூதத்தாழ் வார்தாள்கள் போற்றி
தவசிகள்வாழ் தென்மயிலை தன்னில்-அவதரித்த
பேயாழ்வார் தாள்போற்றி பேரார் திருமழிசை
மேயார்தாள் போற்றி வியன்கோளூர்த்-தூயார்
மதுரகவி மென்மலர்த்தாள் போற்றி குருகூர்ச்
சதுரன் சடகோபன் பாதப்-புதுநளினம்
போற்றிகுல சேகரன்தன் பொன்மலர்த்தாள் போற்றிஜய
போற்றி பெரியாழ்வார் பூந்தாட்கள்-போற்றிஜய
போற்றிஆண் டாள்கமலப் பொன்னடிகள்-போற்றிதிரு
மண்டங் குடியில்வாழ் மாண்புடையார் மாதவன்தன்
தொண்ட ரடிப்பொடியாந் தூயவர்தாள்-தண்டாத்

திருவுறையூர் திருவுறையூர்ச் செந்நெற் பயிரில்·
மருவுதிருப் பாணாழ்வார் மாறுக்-கருவசற்றும்
மாமலர்த்தாள் போற்றிமங்கை மன்னனடி போற்றிபரந்
தாமனருள் போற்றியவன் தாள்.

ஜனகர், பரதர், பிரஹலாதர் முதலியோர் வணக்கம்

(நிலமண்டில ஆசிரியப்பா)

கருமயோ கத்தால் கமலக் கண்ணன்
அருமை மலரடிக் கன்பு செய்த
ஜனகா தியர்தந் தாமரைத் தாள்களை
ஞானயோ கத்தால் நாரணன் அடிமலர்
பரிவுடன் முடித்த பரதா தியர்களாம்
யோகியர் தமதுதாள் உசள மலர்களை
பக்தியோ கத்தால் பத்மநா பன்தன்
சரண மலர்தொழு உம்பிரக லாதன்
முதலிய பெரியோர் பதமலர் இணைகளைப்
பரிவுடன் தொழுவாம் பவமறற் பொருட்டே.

வசிஷ்டர், நாரதர் முதலியோர் வணக்கம்

(நிலமண்டில ஆசிரியப்பா)

வசிஷ்டர் நாரதர் யாஞ்ஞ வல்க்யர்
ஹாரிதர் சுகர்பரா சரர்பலி கார்க்யர்
வியாசர் சௌனகர் வீஷ்மர் விதுரர்
அம்ப ரீஷர் அர்ச்சுனர் தால்பியர்
புண்டரீகர் புரைதீர் உருக்மாங்
கதர்முத லோர்மலர்ப் பதம்பணி வாமே.

ஸ்ரீஜயதேவர் வணக்கம்

(வெண்பா)

நயவஞ்சக் கள்வர்க்கும் நன்மையே செய்த
ஜயதேவர் தாள்தொழுஉம் தாஸர்-நயவின்றி
இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயஞ் செய்து விடல்.

ஞானதேவர் வணக்கம்

(கண்ணி)

எருமைக் கடாவாயால் எண்ணரிய வேதம்
அருமையுடன் ஓதுவித்தார்க் கன்புசெய்வ தெந்நாளோ (௧)

மோன நிலையுணர்ந்து முத்தியெனும் சித்திபெற்ற
ஞானதே வர்க்கடிமை நான்புரிவ தெந்நாளோ (௨)



நூற்பயன்

(வெண்பா)

பாண்டுரங்கன் பாதமலர்ப் பங்கே ருகந்தொழுது
நீண்டபுகழ்ப் பக்தர் நெடுஞ்சரிதை-தாண்டரிய
பாவ வனம்வேவப் பற்றுநெருப் பென்றதனை
ஆவலுடன் தீட்டவமர்ந் தேன்.

அவையடக்கம்

(வெண்பா)

புண்ட ரிகவரதன் பொன்னடிக்கே பக்திசெய்த
தொண்டர் புகழடியேன் சொற்பிழைகள்-கொண்டதமிழ்
வெள்ளை மொழியில் விளங்கும்பா ரார்பாரார்
பிள்ளை மொழியிற் பிழை

தசாவதாரங்களின் சிறப்பு.

மச்சாவதாரங்கொண்ட மாயோன் மகிமை.

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)

நிலைபிட மெங்கு மின்றி நெடுவெள்ள மும்பர் வளநாடு மூட விமை யோர்-தலையிட மற்றெ மக்கோர் சரணில்லை யென்ன வரனுவ னென்னு மருளால் - அலைகடல் நீர்கு ழம்ப வகடாட வோடி யசல்வா னுரிஞ்ச முதுகில் - மலைகளை மீது கொண்டு வருமீன மாலே மறவா திறைஞ் சென் மனனே. (1)

கூர்மாவதாரங்கொண்ட கோபாலன் பெருமை.

செருமிக வாளெயிற்ற வரவொன்று சுற்றித் திசைமண்ணும் விண்ணு முடனே-, வெருவர வெள்ளை வெள்ள முழுதுங் குழம்ப விமை யோர்க ணின்று கடையப்-, பருவரை யொன்று நின்று முதுகிற் பரந்து சுழலக் கிடந்து துயிலும்-, அருவரை யன்ன தன்மை யடலாமை யான திருமால் நமக்கோ ரரணே. (2)

வராஹாவதாரங்கொண்ட வாசுதேவன் வைபவம்.

தீதறு திங்கள் பொங்கு சுடரும்ப ரும்ப ருலகேழி னோடு முடனே-மாதிர மண்சு மந்து வடகுன்று நின்ற மலையாறு மேழு கடலும்-பாதமர் சூழ்கு ளம்பி னகமண்ட லத்தி னொருபா லொடுங்க வளர்சேர்-ஆதிமு னேன மாகி யரணாய மூர்த்தி யதுநம்மை யாளு மரசே. (3)

சிங்காவதாரங்கொண்ட திருமால் சிறப்பு.

தளையவிழ் கோதை மாலை யிருபால் தயங்க வெரிகான் றிரண்டு தறுகண் அளவெழ வெம்மை மிக்க வரியாகி யன்று பரியோன் * சினங்கள் வீழ-வளையுகி ராளி மொய்ம்பில் மறவோன தாக மதியாது சென்றொ ருகிராற் பிளவெழ விட்ட குட்ட மதுவைய மூடு பெருநீரின் மும்மை பெரிதே.

* சினங்களவிழ என்றும் பாடம்.

வாமனாவதாரங்கொண்ட மாதவன் மகிமை.

வெந்திறல் வாணன் வேள்வி யிடமெய்தி யங்கோர் குறளாகி மெய்ம் மை யுணரச் -, செந்தொழில் வேத நாவின் முனியாகி வைய மடிமூன் றிரந்து பெறினும்-, அந்தர மீது போகி மதிநின் றிறைஞ்ச மலரோன் வணங்க வளர்சேர்-, அந்தர மேழி னூடு செலவுய்ந்த பாத மது நம்மை யாளு மரசே. (5)

பரசுராமாவதாரங்கொண்ட பத்மநாபன் புகழ்ச்சி.

இருநில மன்னர் தம்மை யிருநாலு மெட்டு மொருநாலு மொன்று முடனே -, செருநுத லூடு போகி யவராவி மங்க மழுவாளில் வென்ற திறலோன்-, பெருநில மங்கை மன்னர் மலர்மங்கை நாதர் புலமங்கை கேள்வர் புகழ்சேர் -, பெருநில முண்டு மிழ்ந்த பெருவாய ராகி யவர் நம்மை யாள்வர் பெரிதே. (6)

இராமாவதாரங்கொண்ட எம்பிரான் பெருமை.

இலைமலி பள்ளி யெய்தி யிதுமாய மென்ன வினமாய மான்பி னெழில்சேர் -, அலைமலி வேற்க ணாளை யகல்விப்ப தற்கோ ருருவாய மானை யமையாக் -, கொலைமலி யெய்து வித்த கொடியோ னிலங்கை பொடியாக வென்றி யமருள் -, சிலைமலி செஞ்ச ரங்கள் செலவுய்த்த நங்கள் திருமால் நமக்கோ ரரணே. (7)

அம்ஸாவதாரங்கொண்ட ஆயன் சிறப்பு.

முன்னுல கங்க ளேழு மிருள்மண்டி யுண்ண முதலோடு வீடு மறியாது -, என்னிது வந்த தென்று இமையோர் திகைப்ப எழில்வேத மின்றி மறைய -, பின்னும வானவர்க்கும் முனிவர்க்கும் நல்கி யிருள் தீர்ந்திவ் வைய மகிழ -, அன்னம தாயி ருந்தங் கறநூ லுரைத்த அது நம்மை யாளு மரசே. (8)

கிருஷ்ணாவதாரங்கொண்ட கேசவன் விபவம்.

துணைநிலை மற்றெ மக்கோ ருளதென் றிராது தொழுமின்கள் தொண்டர் துலைய -, உணமுலை முன்கொ டுத்த வுரவோள் தாவி யுகவுண்டு வெண்ணெய் மருவிப் -, பணைமுலை யாயர் மாத ருரலோடு கட்ட அதனோடு மோடி அடல்சேர் .-, இணைமரு திற்று வீழ நடைகற்ற தெற்றல் வினைபற்ற றுக்கும் விதியே. (9)

கொலைகெழு செம்மு கத்த களிறொன்று கொன்று கொடியோ னிலங்கை பொடியாச்-, சிலைகெழு செஞ்ச ரங்கள் செலவுய்த்த நங்கள் திருமாலை வேலை புடைசூழ் -, கலிகெழு மாட வீதி வயல்மங்கை மன்னு கலிகன்றி சொன்ன பனுவல் -, ஒலிகெழு பாடல் பாடி யுழல்கின்ற தொண்ட ரவராள்வ ரும்ப ருலகே. (10)

தசாவதாரவணக்கம்.

(வெண்பா)

அச்சுதஸ்ரீ தேவிபூ தேவிநீ ளாதேவி
உச்சிதஸ்ரீ தாபதி யின்பதந்தா-மச்சாகூர்



மாகோலா சிங்காவா மாராமா ராமாரா
மாகோபா லாமாவா வாய்.

ஸ்ரீயஃபதியும், அகிலஹேய ப்ரத்யநீகனும், ஸமஸ்த கல்யாண குணாத்மகனுமாகிய ஸர்வேஸ்வரன், பூபார நிவாரணார்த்தம், ஸ்ரீகிருஷ்ணாவதாரஞ்செய்து, பண்டிதர் பாமரர் என்னும் பாகுபாடின்றி, யாவர்க்கும் கட்புலனான சொரூபத்தோடு, தனது குணகணங்களையும் லீலாவிநோதங்களையும் விளக்கியருளினான். பூதநா சகட யமளார்ஜுநாரிஷ்டதேநுக, காளியகேசி குவலயாபீட சாணூர கம்ஸாதி துஷ்டநிக்ரஹஞ்செய்து, எல்லையில்லாத் தயா * ஸௌஹார்த் † தாநுராகக் கருணாலமாக வுள்ள தனது கடாக்ஷ வீக்ஷண்யத் திருவாயமுதத்தால் உலக ரக்ஷகனாய் விளங்கினான். நிரதிசய சௌந்தர்ய சௌசீல்யாதி குணங்களால், அக்ரூர மாலாகாராதியரைப் பரம பாகவதர்களாக்கி, அர்ஜுனற்கு யுத்த விஷயத்தில் உற்சாகம் உண்டாக்கு நிமித்தம்,

"உபநிட தங்களே உத்தம கோக்கள்
அர்ஜுனன் அவைகளின் அருங்கன் றாகச்
செய்து கோபாலச் செல்வன் தானாய்க்
கீதா மிர்தக் கேதயில் பாலைக்
கறந்துஸா துக்களாங் கரவிலாப்
போக்தர் நுகரப் புரிந்தனன் அன்றே" என்றபடி,

ஸர்வோப நிஷதங்களும் கறவற் பசுக்களாகவும், அர்ஜுனன் அவைகளுக்குக் கன்றாகவும் செய்து, தானேயிடையனாக இருந்து, கீதாம்ருதமென்னும் இன்சுவைத் தீம்பாலைக் கறந்து, களங்கரஹித மனமுடைய ஸாதுக்களாகிய செல்வர்கள் உண்டு களிக்கச் செய்தனன். அதனால், பரம புருஷார்த்த லக்ஷண மோக்ஷஹேதுவாக, வேதாந்தங்களில் சொல்லப்பட்டுள்ள கர்ம ஜ்ஞானாங்க பக்தியோகம் வெளியாயிற்று. பகவான் தனது நித்யலோகமாகிய பரமபதத்தை யடைந்தனன். பிறகு, இவ்வுலகில், கலிதர்மம் மிகுந்து, பாவம் பரவியது.

இந்தக் கலிகாலத்தில், வர்ணாசிரமாசாரங்கள் ஒழுங்கற்றன. அவைகள் தவறினபடியால், வேதோக்தமான யாகாதி நற்கருமங்கள் இல்லையாயின. அதனால் விதிப்படி யியற்றும் விவாகங்கள் ஒழிந்தன. குரு சிஷ்ய கிரமம் மாறியது. கணவன் மனைவியர் மரியாதையற்றது. தேவயாகாதிகள் குறைந்தன. பலவானே குலவானாய் நராதிபதியானான். சில வித்தைகள் சிறப்பற்றன; தனவானே கன்யாதானத்துக்குகந்தவனானான். சாஸ்திரங்களில் விதித்துள்ள தீக்ஷைகள் பிராமணர்களிடத்தில் இல்லையாயின. சாஸ்திரோக்த பிராயச்சித்தங்கள் தள்ளப்பட்டன. பிரிய வசனங்கள் யாவும் சாஸ்திர வசனங்கள் ஆயின. * பிரமசர்யம் முதலிய ‡ நான்காஸ்ரமங்களுக்கும் எல்லாரும் அதிகாரிகள் ஆனார்கள்.

* ஸௌஹார்த்தம் - நட்பு. † அநுராகம் - ஆசை.
‡ பிரமசர்யம், கிருஹஸ்தம், வானப்ரஸ்தம், சந்நியாசம்

(ఊర్ధ్వరోహమహంభోగీ)

“ மூர்த்திரிமேற் காணி மிகுவதேற் கீழ்தன்னை
இந்திரனு வெண்ணி விடும் என்றபடி,

சிறிதுபொருள் வருவாயுண்டாயின் ஒவ்வொருவர்க்கும் நான் என்னும் அகங்காரம் அதிகரித்து, நானே ஈச்வரன்; நானே இந்திரன், என்கிற துரபிமானம் உண்டாயிற்று.

“ பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானு மாணாப் பிறப்பு” என்றபடி,

பொருளல்லாப் பொருளாகிய செல்வப் பொருளிற் சிந்தை செலுத்தின ஸ்திரீகள்,

“ கல்லானே ஆனாலுங் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்-இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல்”. என்றபடி,

தம்மைக் கொண்ட கணவர்க்குப் பணம் இல்லாமையால் இரண்டகஞ் செய்து, பணக்காரர்களாகிய பரபுருஷா நுராகம் உடையவர்கள் ஆனார்கள்.

“ யானென தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும் ” என்றபடி,

யான், எனது என்னும் அகங்கார மமகாராதிகளை நிர்மூலப்படுத்தும் ஆத்ம ஞானத்தை அலக்ஷியம் செய்து, உலகஞான விஷயமான சிறு பொருள் ஈட்டு முயற்சியே சிறந்ததென மதித்து, மாந்தரனைவரும் அதனைக் கைக்கொண்டார்கள்.

“ இன்னல் தரும்பொருளை ஈட்டுதலும் துன்பமே
பின்னதனைப் பேணுதலும் துன்பமே-அன்ன
தழித்தலும் துன்பமே அந்தோ பிறர்பால்
இழத்தலும் துன்பமே யாம் ” என்றபடி,

அங்ஙனம் அவர்கள் வருந்தித் தேடிய சிறுபொருளை யாகாதி நற்கருமங்களுக்குப யோகிக்காமல், அவைகளை உபேக்ஷித்து,

“ பொய்வீடு கட்டிப் புலால்வீட்டை யிச்சித்து
மெய்வீட் டினையிழந்த மேடங்காள்-பொய்வீடு
போவென்று முங்கள் புலால்வீட்டை உண்பதற்கு
வாவென்று நல்லவனம் ” என்றபடி,

பொய்வீட்டை அபேக்ஷித்து; அதனுடைய நிர்மாணாதிகளுக்குச் செலவழித்தார்கள்; அங்ஙனம் கட்டின பொய்வீட்டை மெய்வீடு தேடுங் காரியங்களாகிய, அதிதிபூசை முதலியவற்றிற்கு அன்றி, தமது சிற்றின்பங்களுக்கே உபயோகித்தார்கள். அநியாயமாய்ப் பொருள் தேடினவர்களிடத்தில் ஆண்மக்கள் அதிக அன்புடையாரானார்கள்.



“ அரிசி விற்றிடும் அந்தணர்க் கோர்மழை
வரிசை தப்பிய மன்னவர்க் கோர்மழை
புருஷனைக் கொன்ற பூவையர்க் கோர்மழை
வருஷ மூன்று மழையெனப் பெய்யுமே” என்றபடி,

காலமழையின்றி மாந்தரனைவரும் பசிப்பிணி அதிகரித்து, வானோக்கி வாழ்ந்தார்கள் ; அக்னிபூசை, தேவபூசை, அதிதிபூசை, பிண்டோதக தான ரூப பிதிர்பூசை ஆகிய இவற்றை,

“ தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
கைம்புலத்தா றோம்பல்தலை” என்ற

வேதமொழிப்படி செய்யாமல் விட்டு, ஸ்நானம் இன்றிப் புசித்துக் காலங்கழித்தார்கள். ஸ்திரீகள், பேராசை நிறைந்த பெட்டகமாகிய குற்றுடம்புடையவர்களாய்,

“ உண்டிசுருங்குதல் பெண்டிர்க்கழகு”
என்பதற்கு விரோதமாக மிதமிஞ்சிப் புசித்து,
“ பன்றிபலகுட்டி பயந்ததனு லேதுபயன் ” என்றபடி,

பலனற்ற பல பிள்ளைகளைப்பெற்றும், வறியவர்களாய்க் காலங்கழித்தார்கள்; இன்னும் அவர்கள், தமது இருகரங்களிற் றலைசொரிதல், கணவன் மாதுலன் முதலிய பெரியோர்உரைகளை அநாதரவு செய்தல், சரீரசுத்தி இன்மை, நல்லெண்ணம் இன்மை, கடுஞ்சொற் கூறல், பொய் பேசுதல் முதலியவற்றிற்கு ஆளானார்கள்.

“ நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகும் அறிவு” என்றபடி,

குலஸ்திரீகள், துராசார ஸ்திரீகளோடு கூடி, அதனால் அந்தத் துராசாரங்களைத் தாமும அடைந்து, கொண்ட கணவர்க்குப் பலவிதத்திலும் கேடு சூழ்ந்தார்கள். பிரம்மசாரிகள், விரதாநுஷ்டான ரஹிதர்களாய், வேதாத்யயனம் செய்தார்கள். கிருஹஸ்தர்கள், யாகாதி நற்கருமங்களைச்செய்தல் முதலிய சன்மார்க்கத்தில், தமது பொருளைச் செலவழிக்கவில்லை. வானப்ரஸ்தர்கள், புசிக்கத்தகா வென விலக்கின பதார்த்தங்களைப் புசிக்கலானார்கள். சந்நியாசிகள், தமது மனைவிமக்களிடத்தில் அன்புடையரானார்கள். பிரஜைகள் துன்மார்க்கவர்த்திகள் ஆனதனால், ஆயுள் குறுகி, மாதர்கள் தமது சிறுபிராயத்திலேயே மக்கட்பேற்றுக்குக் காரணிகளானார்கள். ஜனங்கள், சோற்று*வியாபாரஞ் செய்பவர்கள் ஆனார்கள். வேதியர், வேதவியாபாரஞ் செய்பவர்கள் ஆனார்கள். குருமார்கள், தமது சிஷ்யர்களுக்கு நல்லறிவுச் சுடர்கொளுத்தலை விட்டு, அவர்களுடைய பொருளை அபகரிக்கலானார்கள். இங்ஙனம் கலியால்வருந்தி, துக்கசாகரத்தில் மூழ்கிக் கிடக்கும் ஜனங்கள் எல்லாருக்கும் ஸ்ரீமந் நாராயணன் இரங்கி அருள்கூர்ந்து, தனது பாதஸேவையையே பெரும்பற்றெனப் பற்றி,

* வியாபாரம் - விலைக்குவிற்றல்.

"பற்றுக பற்றற்றான் பற்றினையப் பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" என்றபடி,

மற்றொரு பற்றின்றி விளங்கும் தனது அந்தரங்க பக்தர்களை அழைத்து,
"நான் ராமகிருஷ்ணாதி அவதாரங்கள்செய்து, உலகைக்காத்தபடி,
நீங்கள், ஸ்ரீபண்டரீபுரம் முதலிய புண்யக்ஷேத்திரங்களில் ஜனித்து,
பகவந் நாம ஸங்கீர்த்தனபரர்களாய், உலகத்தாரை ஈடேற்றுங்கள்.
நான் உங்களிடத்தில் ஆவேசித்து உமது முயற்சி தடையின்றி நிறை
வேறச் செய்கின்றேன்" என்று அநுக்ரஹித்தனன். அந்தப் பக்தரனை
வரும், தேவ தேவனுடைய திவ்ய கட்டளையைச் சிரசாவகித்து, ஸ்ரீபண்
டரீபுரம் முதலிய திவ்ய க்ஷேத்திரங்களில் அவதரித்து, தமது ஞானா
நுஷ்டானங்களால், ஸம்ஸாரிகளுக்கு, பகவத்விஷயத்தில் பக்தியும்,
ஸம்ஸாரத்தில் விரக்தியும் உண்டாக்கி அவர்களை உஜ்ஜீவிக்கச்செய்
தார்கள்.

ஸ்ரீகிருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:

## இரண்டாம் அத்தியாயம்

# ஸ்ரீஜயதேவர் சரித்திரம்

வட இந்தியாவில், ஸ்ரீ ஜகந்நாதம் என்னுந் திருப்பதிக்குச் சமீ
பத்தில் உள்ள திந்து பில்வம் என்னுங் கிராமத்தில், ஸ்ரீ ஜயதேவர் அவ
தாரஞ் செய்தார். இவர், தெய்வத்திருவருளால், ஸ்ரீ கிருஷ்ண வியா
ஸாம்சமாகத் தோன்றினவர். தாய் தந்தையர் இவர்க்கு உபநயனாதி
களைச்செய்து, வித்தியாப்யாஸம் செய்யாமல் இருந்தார்கள். இருந்
தும், தெய்வ பலத்தால் சகல சாஸ்திரங்களையும் தமக்குத்தாமே ஓதா
துணர்ந்து, பல நக்ஷத்திரங்களுக் கிடையில் உள்ள சந்திரனென, இவர்,
மற்றவர்களுக்கு மத்தியில் விளங்கினார். வேதவியாஸர் அக்காலத்தில்
ஸ்ரீ கண்ணபிரானுடைய குணங்களிலும் செய்கைகளிலும் ஈடுபட்டிருந்
ததைப்போலவே, அம்முனிவர் அம்சமாக அவதரித்த ஸ்ரீ ஜயதேவ
ரும், அப்பிரானுடைய குணானுபவபரராய், கீதகோவிந்தம் என்னும்
ஒரு பிரபந்தத்தைச்செய்து, எல்லா உலகத்தாரும் ஈடேறும் வழியைக்
காட்டினார்.

அக்காலத்தில், ஸ்ரீ ஜகந்நாதத்தை ஆண்ட ஸாத்யகி என்னும் அர
சன் தானும் ஒருபிரபந்தம் செய்தான். அது, ஜயதேவர் அருளிய
கீதகோவிந்தம் போன்றது. ஆகையால், அந்த அரசன், தான்செய்த
பிரபந்தமும், அதனைப்போலவே விளங்கவேண்டுமென்ற எண்ணமுடைய
னாய்த் தன் ஆட்சிக்கு உட்பட்ட எல்லாரும் தன் பிரபந்தத்தையே



ஓதவேண்டும் என்று கட்டளை பிறப்பித்தான். அப்போது வித்வான்கள்
எல்லாரும் ஒன்றுகூடி, அரசன் கட்டளையைக் கடந்து, அவன்
சமூகத்திற்சென்று, "ஓ அரசே! உனது பிரபந்தம், ஸ்ரீ ஜயதேவர்
பிரபந்தத்துக்குச் சமமாகுமா? சர்வேச்வரனானாலும் தற்புகழ்ச்சி சரி
யல்லவே! தன்னைப் புகழ்பவன் தண்ணீர் விட்டு விளக்கேற்றுபவ
னுக்குச் சமானனாவான் என்பதை நீர் அறியீரோ? உம்முடைய
கிரந்தம் உமக்கே அங்கீகாரமாகும் அல்லாமல், பகவானுக்கும் பக்தர்
களுக்கும் உவப்பாகாது. ஸ்ரீ ஜயதேவர் கிரந்த மாத்திரமே நாங்
கள் ஓதவும், கேட்கவும், சிந்திக்கவும் சிறந்ததாகும்" என்றார்கள்.
அதைக்கேட்ட அரசன், அந்த இரண்டு கிரந்தங்களையும், ஸ்ரீ ஜகந்நா
தன் சந்நிதானத்தில் வைத்தால், அவைகளில் எது, பகவானுக்கு உவப்
பாகுமோ பார்க்கலாம் என்றான். அவன் வார்த்தைக்கு அவர்கள் சம்ம
தித்து, அந்த இரண்டு கிரந்தங்களையும் ஒருநாள் இரவில், ஸ்ரீ ஜகந்நாதன்
சந்நிதியில் வைத்துக் கதவுகளைச் சாத்தி முத்திரையிட்டுத் திறவுகோலை
அரசனிடத்தில் ஒப்புவித்தார்கள். மறுநாள் அவர்கள் அரசனோடு
சென்று சந்நிதிக் கதவுகளைத்திறந்து கோயிலுக்குள் நுழைந்து சோதித்
துப்பார்க்கையில், ஸ்ரீ ஜயதேவர் கிரந்தம், பகவானுக்குச் சமீபத்தில்
இருந்தது; அரசன் கிரந்தம் சந்நிதிக்கு வெளியில் வீசி எறியப்பட்டுக்
கிடந்தது. இவ்வற்புதத்தைக் கண்டார் யாவரும் பேரானந்த முற்
றார்கள்; அரசன் மட்டும் மனமடங்கி நாணித் தலை குனிந்திருந்தான்.
அக்காலத்தில் அது கண்டார் யாவரும், "ஸ்ரீ ஜயதேவர் கிரந்தத்துக்கு
அரசன் கிரந்தம், பத்தில் ஒரு பங்கும் சமானமாகாது; ஆகையால்
அதனை ஸ்ரீ ஜகந்நாதன் மதிக்கவில்லை" என்றார்கள். அதைக்கேட்ட
அரசன் மிக்க துக்கப்பட்டவனாய், பகவான் சந்நிதியில் நின்று, பல
விதத்திலும் தோத்திரம் செய்து, "எல்லார்க்கும் பொதுவாயுள்ளவனா
கிய நீ, ஒருவனைத் தள்ளுதலும் மற்றொருவனைக் கொள்ளுதலும் உசிதமா
காது; தாய்தந்தையர், தம் பிள்ளைகளெல்லாரையும் சமானமாகக்
கொள்கிறபடி நீயும், உனது பக்தர்கள் எல்லார்க்கும் பொதுவான
வனாய் இருக்கவேண்டும்; அங்ஙனம் இல்லாமல், ஸ்ரீ ஜயதேவர் கிரந்
தத்தை மாத்திரம் ஆதரவுசெய்து என் கிரந்தத்தை அநாதரவு செய்தது
அநீதியாய் முடிந்தது. உன்னால் அவமதிக்கப்பட்ட நான், என்
தலையை உனது திருவடிகளுக்கே அர்ப்பணம் செய்கின்றேன்" என்று
நிஷ்டுர வார்த்தைகளைப் பேசினான். அங்ஙனம்பேசின அரசனுக்குக்
கருணைக்கடலாகிய ஸ்ரீமந்நாராயணன், காட்சிதந்து, அவன் கிரந்தத்
தின் இருபது திருப்பாடல்களை ஸ்ரீ ஜயதேவர் கிரந்தத்தில் சேர்த்து,
அவனைக் களிக்கச் செய்து மறைந்தான்.

அக்காலத்தில் ஸ்ரீ ஜகந்நாதத் திருப்பதியில் வாழ்ந்த தனவந்தனான
பிராமணனொருவனுக்குப் பெண்மகவொன்று பிறந்தது. அம்மகவின்
கண்ணழகைக்கண்ட பெற்றோர்கள், அதற்கு பத்மாவதியென, அவ
யவத்தால் விளங்கு பெயரிட்டு வளர்த்தார்கள். பிறகு அது கன்னிகை

யான காலத்தில் அவர்கள், "இத்தனை அழகிய கன்னிகையாகிய இவளுக்கு ஸ்ரீமந்நாராயணனே வரனாக வரவேண்டும்" என்று மனோராஜ்யம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். ஆகையால், அவளை வதுவாக விரும்பிக்கேட்ட சுற்றத்தார்க்கு, அவள் ஸ்ரீ கண்ணனுக்கு உரியவளானாள் என்று, அவர்கள் சொல்லத் தலைப்பட்டார்கள். இப்படி அவள், நாளொருமேனியாய் வளர்ந்துவருகையில் ஒருநாள், ஸ்ரீ ஜகந்நாதன் அந்தப் பிராமணனுடைய கனவிற் காட்சிதந்து "பிராமணோத்தமா! உன் மகளை எனக்கு உரியவளாக்கினை யல்லவா? என் விருப்பத்தின்படி அவளை எனது அம்சாவதார புருஷனாகிய ஸ்ரீ ஜயதேவனுக்குக் கொடுத்துப் பாணிக்கிரஹணஞ் செய்விப்பாய். அதனால் எனக்குப் பேரானந்தம் பெருகும்" என்று அநுக்கிரகம் செய்து மறைந்தான்.

பிராமணன் விழித்தெழுந்து, கனவை நனவாக்கி ஆனந்த சாகரத்தில் மூழ்கினவனாய், அப்போதே ஸ்ரீ ஜயதேவரைவேண்டி, அழைத்து வந்து, மணமண்டபாலங்காரஞ்செய்து, நல்வேளையில், பகவான் நியமனப்படி, ஸாலங்க்ருத கன்னியாதானம்செய்து, "தொண்டர்தம் பெருமையைச் சொல்லவும் பெரிதே" என்றபடி பெரியோராகிய ஸ்ரீ ஜயதேவர், தனக்கு மருகரான மாண்பை எண்ணியெண்ணி, அதனால் உள்ளங் குளிர்ந்து உடல் பூரித்தான்; தன்மகளே ஸ்ரீ ஜயதேவர் மனைவியாக அவள் செய் தவத்தை வியந்து மெச்சினான். ஸ்ரீ ஜயதேவர்க்குப் பகவான் விஷயத்தில் நாளுக்குநாள் பரமபக்தி அதிகரித்து வந்தது.

அக்காலத்தில், பிறன்மனை புகுதல், பிறன்பொருள் வெளவல், பொய்ச்சான்று கூறல், புலால் புசித்தல், மதுவருந்தல் முதலிய துன்மார்க்கங்களை விலக்கினவனும், ஜீவகாருண்யம், இரக்கம், சாஸ்திர விஸ்வாஸம், பிராமணஸ்திரீ புருஷ பணிவிடை முதலிய சன்மார்க்கங்களைக் கடைப்பிடித்த நல்லகுணப் பெருந்தகையுமாகிய பரதேச வணிகன் ஒருவன், தான் கடைத்தேறும்வண்ணம் ஸ்ரீ ஜயதேவ சுவாமிகளை வழிபடுவானாயினான். அப்பெரியோர் அவனைப் பகவத் பக்தியோக நிஷ்டாபரனாகும் வண்ணம் கிருபை செய்தார். பிறகு அவ்வணிகன், சதானுபவயோக்கியரான ஸ்ரீ ஜயதேவரை நோக்கி, "தேவரீர் அடியேனுடைய ஊருக்கு எழுந்தருளி, அடியேன் அகத்தில் அனவரத வாசஞ் செய்யவேண்டும்" என்று வேண்டிக்கொள்ள, கிருபாநிதியாகிய அப்பெரியார் அப்படியே செய்து, இடைவிடாமல் அவனுக்கு நல்லறிவுச் சுடர்கொளுத்தி வந்தார்.

தன் வீட்டில் தன்னுடன்பொருந்தி வாழ்ந்துவந்த ஸ்ரீ ஜயதேவர்க்கு அவ்வணிகன், தன்னாலான பணிவிடைகள் செய்து வந்தான். அவைகளை ஏற்றுக்கொண்ட ஸ்ரீ ஜயதேவர் அவன் விஷயத்தில் மிகக் களித்தவராய்ச் சுமார் ஒருமாதகாலம் அங்கேயே வாசஞ்செய்து,



திரும்பியும் தாம் ஜகந்நாதம் போகவேண்டும் என்று அவனுக்குத் தெரிவித்தார். அதை உணர்ந்த வர்த்தகன் அவர்க்குப் பலவித வந்தனோபசாரங்கள் கூறி அடியற்ற நெடும்பனைபோல், அவர் பாத கமலங்களில் தனது பாதக மலங்கள் நீங்க வீழ்ந்து பணிந்தெழுந்து, அவரை ஒரு தேரேற்றிப் பவனிவரச்செய்து, அவரோடு இருசேவகரையுங் கூட்டி அவர் ஊர்க்குப் போக்கினான். அவர், தேர்ச்சி உடையவராதலால், அதனைத் தேர்ந்த அவ்வணிகன், தான் நல்வழியில் தேர்ந்த நவரத்னாதி திரவியங்களை, அத்தேரின் ஒருபுறத்தில், அவர் அறியாவண்ணம் நிரப்பி, அதனை அவர் இல்லாட்குக் காணிக்கையாகக் கொடுத்துத் திரும்பி வந்து தனக்கு அறிவிக்கும்படி, அவருடன் சென்ற சேவகர்களுக்குக் கட்டளை யிட்டிருந்தான்.

இடைவழியில், வஞ்சநெஞ்சக் காவலாளர்களாகிய இருவரும், ஸ்ரீ ஜயதேவரை வஞ்சிக்க எண்ணங்கொண்டார்கள். அவர்களில் ஒருவன் அவரை அணுகி, "ஐய, அடியேன் மனைவிக்குப் பேறுகாலம், இன்றோ, நாளையோ என இருத்தலால், அடியேன், தேவரீரைத் தொடர்ந்துவர அசக்தனாயிருக்கின்றேன்" என்றான். மற்றவன், "சுவாமி, அடியேனும் அதிமுக்கியமான வேலைமேற் செல்லவேண்டியவனாயிருக்கின்றேன்; அதனால் தங்களுடன்செல்ல வலியில்லேன்" என்றான். பரம கருணாநிதியாகிய ஸ்ரீ ஜயதேவர், அவர்கள் குறைப்பாட்டுக்கும் முறைப்பாட்டுக்கும் இரங்கிக் குளிர்ந்த மனத்துடன் விடைதந்தார். தடையின்றி விடைபெற்ற தீவினையாளர் இருவரும், சிறிது தூரம் தேர் செல்லுமட்டும் ஓர் ஒதுக்கிடத்தில் பதிவிருந்து, வழிமறிக் கொள்ளையாளரென அதனைத் தாக்கிச் சாரதியை வெருட்டித் துரத்தி யடித்தோட்டிவிட்டு, அதனில் புதையலென வணிகன் சேமித்து வைத்த நவநிதிப் பொருள்களையெல்லாம் கைப்பற்றினர். இன்னும் அவர்கள், ஸ்ரீ ஜயதேவரை உயிரோடு விடின், அவரால் தமது துஷ்கர்மம் வெளியாமென ஐயுற்று, அவரை வலிந்து பற்றி அவருடைய கால்கரங்களைத் துண்டித்து முடமாக்கி, அவரை ஒருபாழ்ந்துரவில் எறிந்து சென்றார்கள்.

அப்போது, ஸ்ரீ ஜயதேவர், தம்மை மறந்து, இடையறாத பக்தியுடன் பகவந்நாம சங்கீர்த்தனம்பண்ணிப் பேரானந்த பரவசராய் இருந்தார். அந்தருணத்தில் விந்திய தேசாதிபதியாகிய அரசன் ஒருவன் தற்செயலாய் அங்கு வந்தான். அவன் அன்று இரவில்தான், அந்த அடவியில் வந்து சேர்ந்திருந்தான். அவன், தான் தங்கியிருந்த இடத்திலிருந்தபடியே ஸ்ரீ ஜயதேவர் வீழ்ந்திருந்த பாழ்ந்துரவில் ஜோதியொன்று தோன்றக்கண்டான். அந்த ஜோதிதோன்றிய வழியே சென்று சோதித்த அவன், தியானயோகபரரான ஸ்ரீ ஜயதேவர், பகவந்நாம சங்கீர்த்தனம் பண்ணினவராய் அதனுள் இருக்கக்கண்டான்; உடனே அவரை அத்துரவின் வெளியில் தூக்கிவிட்டு, அவருடைய நிர்ப்பாக்கிய தசைக்கு இரங்கி, "தேவரீர்க்கு இத்தகைய துன்பம் நேரிட்டகாரணம்

யாது?" என வினவினான். அதுகேட்ட ஸ்ரீ ஜயதேவர், தமக்குவந்த துன்ப காரணரான சேவகருடைய கொடுஞ் செய்கைகளை மறைத்து, தாம்பிறவிமுடவரென அவ்வரசனுக்கு விடைகூறினர். இங்ஙனம் ஸாதுக்களுடைய தன்மை, என்றும் உள்ளதென்பதை, ஸ்ரீ வைதேஹியாகிய ஸீதையும், ஒற்றைக்கண்ணி (ஏகாக்ஷி) முதலாகிய அரக்கிகளால், தனக்கு நேரிட்ட கொடுமைகளை ஸ்ரீராமபிரானுக்குக் கூறாது மறைத்தமையாலும் காண்க.

ஸ்ரீ ஜயதேவர் மொழியைக்கேட்ட அரசன், "இவர் யாரோ பெரியவர்; பரமபக்தர்; இத்தனை துன்பநேரிட்ட காலத்தும், பிறர்கேடு கூறாமல், தமக்குக் கெடுதிசெய்தவர்களுடைய குற்றங்களை மறைக்கிறார்" என்று எண்ணி, அவரை வேண்டி, ஒரு சிவிகையிலேற்றிக்கொண்டு தன் பட்டணஞ்சேர்ந்து, ஒரு வசதியான இடத்தில் அமைத்து, ஐம்பது வேலையாட்களை நேமித்து, அவர்க்குப் பலவித வழிபாடுகள்செய்து வந்தான். அரசன் எண்ணம்போலவே, வேலையாட்களும், பரமபாகவதராகிய ஸ்ரீ ஜயதேவர்க்குப் பணிவிடைசெய்யும் நல்வினை தங்களுக்கு வாய்த்ததற்காக ஆனந்தப்பட்டு, அதிஜாக்கிரதையாய் அதனைச்செய்து வந்தார்கள். அரசன் ஒவ்வொருநாளும் தவறாமல்வந்து, ஸ்ரீ ஜயதேவரைச் சேவித்துச் செல்வானாயினான்.

அக்காலத்தில் ஒருநாள் அவ்வரசன், தனக்கு, மோக்ஷமடைய சுலபசாதனம் ஒன்றை அருளிச்செய்யுமாறு, ஸ்ரீ ஜயதேவரை வேண்டினான். அதற்கு ஸ்ரீ ஜயதேவர், "சாதுக்களாகிய தொண்டர்களை ஆராதிப்பதைவிட மேலானதர்மம் இல்லை. 'தொண்டர்தம் பெருமையைச் சொல்லவும் பெரிதே', என்றிருக்கின்றதன்றோ? 'திருமால் அடியார் அல்லாதவர் வீடில்லாதவரே' என்றிருந்தும், திருமாலாம் அச்சுதனை ஆராதிப்பார்க்கு, ஒருகால் மோக்ஷசித்தி சந்தேகமானாலும் ஆகும்; அவன் அடியாரை ஆராதிப்பவர்க்கோ, அங்ஙனம் அன்று; மோக்ஷசித்தி அதிநிச்சயம். தொண்டர்களுக்கு வெளிமுகவேடமும் நாமமுமே முக்கியமானவை அல்ல; உண்முகமாகிய வைராக்கியாதி வேடங்களாலேயே அவர்களை நிச்சயிக்கவேண்டும்.

"கறிக்கொட்டை சாலக் கறுப்பேயானாலும்
கறிக்கச் சுறுக்கென்னுங் கண்டாய் - வெறிக்கத்
திரிந்திடினு ஞானி திறமிப் படியே
தெரிந்திதனை நெஞ்சே தெளி" என்பதனால்,

மிளகுக்கொட்டை மேலுக்குக் கறுப்பாய் அவலக்ஷணமாயிருந்தும், உள்ளுக்குக் காரம் உறைக்க இருப்பதுபோல, பரம ஞானியும் உண்முகவேடஞ் சிறந்து, வெளிமுகத்தில் உன்மத்தனேபோல் திரிவான். அதனால் அவனை அறிவது அசாத்தியம் என்று விளங்குகின்றது. ஆகையால் உண்முகவேடத்தை உணர்வது மிகவும் அருமை. உபதேசாதிகளுக்கே, உண்முகவேடத்தைச் சோதித்தறியவேண்டும் அன்றி,



பூசனைக்கு அங்ஙனஞ் செய்தல் அவசியம் அன்று. பகவத்பாக்கியம் எனச்சிறந்த பரமஞானிகளாம் பக்தர்களெல்லாரையும், தொண்டர்கள் என்று பூசனை செய்வாய். அரசிளங்குமரன் ஒருவன், உன்மத்தனாய்த் தன் உருவத்தையும், தனது தாய்தந்தையர் உருவங்களையும் மறந்திருந்தாலும், உலகத்தார், அவனை அரசிளங் குமரனென்றே, அறிந்து பூசித்து நேசிப்பதுபோல, ஈஶ்வர பரம்பரையான பரம ஞானிகளிற் சிலர், தமது சொரூபத்தையும் ஈஶ்வர சொரூபத்தையும் மறந்து ஜடத்தன்மைபெற்று வாழ்ந்தாலும், நீ, அவர்களை அவமதிக்காமல், தொண்டர்களென மதித்துப் பூசிக்கக்கடவாய். இப்படிப்பட்ட பெருந்தகுதியான மதிப்பால், ஈஶ்வரன் உனக்கு முன்னிற்பான். ஆகையால் நீ, தினந்தோறும் தொண்டராராதனைசெய்து வாழ்வது உசிதம்" என்று நியமித்தார். "அப்படியே செய்கின்றேன்; தங்கள் சித்தம் என் பாக்கியம்" என்று அவ்வரசன் அவர் கட்டளையைச் சிரஸாவகித்து, தேசாந்தரிகள் முதலியோராகிய (ததீயர்களுக்கு) தொண்டர்களுக்கு, பக்தி கவன பூர்வகமாய் அன்னவஸ்திராதிகளைத் தந்து ஆராதித்து வந்தான்.

இப்படி இருக்க, ஸ்ரீஜயதேவரை வதைசெய்த தீவினைக்காவலாளர், அவ்வரசன் செய்துவரும் தொண்டர்ஆராதனையின் பெருமையை அருமையாய்க் கேள்விப்பட்டார்கள். ஆகையால், இருவரும் சாதுக்களாம் தொண்டர்களென வேடம்தாங்கி, அரசன் அரண்மனையிற் பிரவேசித்தார்கள். அங்கே அவர்கள், அகஸ்மாத்தாய் ஸ்ரீ ஜயதேவரைக் கண்டு, பயந்து, விடவிடவென நடுங்கினார்கள். பரமசாந்தரும், பிறர் குற்றம் பொறுத்துக்கொள்பவருமாகிய ஸ்ரீ ஜயதேவர், அவர்களைப் பெருமையுடன் ஒப்பி எற்றுத் தழுவிக்கொண்டு, அருகிலிருந்த பரிசாரகர்களை நோக்கி, "இவர்கள் இருவரும் பரமபாகவதர்கள்; இதுவரையில் இப்படிப்பட்ட உத்தமர்கள் இங்கு வந்தது கிடையாது. ஆகையால், இவர்களை அரசனிடத்திற் கொண்டுபோய் அதிக மரியாதை செய்யும்படி சொல்லுங்கள்" என்று நியமித்தார். அந்த ஏவலாளரும் "தேவர் இஷ்டம் எங்கள் அதிஷ்டம்" என்று சிரமேற் கூப்பிய கையராய், ஸ்ரீ ஜயதேவர் கட்டளையை அரசனுக்குத் தெரிவித்தார்கள். அரசன் அவர்களைக் கண்டமாத்திரத்தில், தன் இருக்கை விட்டெழுந்து அஞ்சலியஸ்தனாய் நல்வரவேற்றுப் பலவித பூசனைகள் செய்து அவர்கள் மனங்கொண்ட பணக்குவியல்களை வழங்கினான்; சிலநாள் அவர்கள் தன் அகத்தில்வாழ்ந்து அதனால் தன்னைக் கிருதார்த்தனாக்கும்படி வேண்டிக்கொண்டான். அவர்கள் கள்ளவேடம்பூண்ட கள்வர்கள் ஆகையால், ஸ்ரீ ஜயதேவர் கட்டளையால், அரசன் தங்களை எவ்வாறு தண்டிப்பானோ எனப்பயந்து, தினந்தினமும் உடல்மெலிந்து வாடினார்கள். ஸ்ரீ ஜயதேவர், அக்கள்ளவேடருடைய உடல் மெலிவை அரசனால் கேள்விப்பட்டு, "அரசே! இவர்கள் பரம பாகவதர்கள்; கேட்டல், தொடுதல் முதலாகிய விஷய உணர்ச்சிகளில் வெறுப்புள்ளவர்கள்.

ஆகையால் இவர்களுக்கு உடல்மெலிவு நாளுக்குநாள் அதிகரித்துவருகின்றது. இப்படிப்பட்ட பெரியோர் ஒருகணநேரமும், ஓரிடத்தில் நிலையாய் வசிக்கமாட்டார்கள்; உன் புண்ணியவசத்தால், இத்தனை நாள் இங்கு வசித்திருந்தார்கள். ஆகையால், இனி இவர்களைக் கட்டாயப்படுத்தி நிறுத்தாமல், இவர்கள் இஷ்டம்போல் செல்லவிடுவாய்" என்றார். அதைக்கேட்ட அரசன் அவர்களுக்கு வந்தனம்செய்து, "பெரியோர்களே! இத்தனைநாள் அடியேன் கட்டாயப்படுத்தியபடியால் இங்கு வசித்தீர்கள்; இனி நீவிர் உமது இஷ்டம்போற் போகலாம்" என்று அதிவிநயமாய்வேண்டி விடைகொடுத்தான். பிறகு அவன் அவர்கள் விரும்பியபடியே இரண்டு தேர்கள் அலங்கரித்துச் சித்தப்படுத்தி, அவைகளில் நவரத்நாதி திரவியராசிகளைக் குவித்து, அவர்களை அவைகளில் ஏற்றி, சில சேனாவீரர்களையுங்கூட்டி அனுப்பினான். அக்கள்ளவேடர்கள், ஸ்ரீ ஜயதேவரை நமஸ்காரஞ்செய்து, அவர்பால் விடைபெற்றுப் புறப்பட்டுக் காட்டிற்போய்க்கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களுடன் சென்ற வீரரிற் சிலர், அவர்களைநோக்கி, "பரமபாகவத சிரோமணிகளே! இதுவரையில் எமது அரசன் அரண்மனைக்கு அநேககோடிபாகவதர்கள் வந்திருக்கின்றார்கள். அவர்களில் எவருக்கும் ஸ்ரீ ஜயதேவர் இத்தனை மரியாதை செய்வித்தது கிடையாது. உங்கள் விஷயத்தில் அவர்க்கு இருந்த விசுவாசம் மிகவும் ஆச்சரியப்படத்தக்கதாய் இருக்கின்றது; இதற்குக் காரணம் தெரிவிக்கவேண்டும்" என்று மிக்க வந்தனத்தோடும் வேண்டிக்கொண்டார்கள். அதற்கு அந்தக் கோணல் மனக்குறும்பர் "அவந்திதேசத்தரசனிடத்தில் ஸ்ரீ ஜயதேவர் பிரதானி, நாங்கள் சேவகர்களாய்ச் சிலகாலம் சேவித்தோம். ஒருநாள் ஸ்ரீ ஜயதேவர் பெருங்குற்றம் செய்ததனால், அரசன் கோபித்து, அவரைக் கொலைசெய்து வாருங்கள் என்று எங்களுக்குக் கட்டளையிட்டான். நாங்கள் அவரைக் குண்டுருட்டாய்க்கட்டி, மனிதவாசமற்ற காட்டுக்குக் கொண்டுபோய், அக்கொடுங்கோல் அரசன் கட்டளைப்படி கொல்லாமல், கைகால்களை மாத்திரம் துணித்து, ஒரு பாழ்ந் துரவில் வீழ்த்தினோம். இதனை அரசன் அறியின் தண்டிப்பான் எனப் பயந்து, அது முதல் நாங்கள், துறவிகளாய், யாத்திரை செய்துகொண்டிருந்து இங்கு வந்தோம். வந்த இடத்தில், தன்னைக்காத்த பேருபகாரிகளென்று, எங்களைக்கண்ட ஸ்ரீ ஜயதேவர், செய்ந்நன்றி மறவாமையால், எங்களுக்கு இத்தனை மரியாதைசெய்வித்தார்" என்று கூறினார்கள்.

இப்பெரும் புளுகைச் சகிக்காமல், பூமி இருபிளவுகளாயிற்று. அங்ஙனம்ஆக, அவ்வஞ்சகர்கள், தேர்களுடனே, அப்பிளவுகளில் விழுந்து மறைந்துபோனார்கள். இந்த அதிசயத்தைக்கண்ட சேனாவீரர்கள் விரைந்தோடிவந்து, நடந்த விருத்தாந்தங்களை, அரசனுக்கும், ஸ்ரீ ஜயதேவருக்கும் விண்ணப்பித்தார்கள். அதுகேட்ட ஸ்ரீ ஜயதேவர், மிக்க துக்கமுற்றவராய், சர்வேசுவரனைப் பலவிதமாய்த் தோத்திரம்



செய்து, "ஜகதீசா! உனக்குக் கேடுசூழ்ந்த பூதனைக்கும் கம்ஸனுக்கும் சிசுபாலனுக்கும் பரமபதம் வழங்கிக் காத்ததுபோல, எனக்கு விரோதம் செய்த இந்த வஞ்சகர்கள் இருவரையும் காக்கவேண்டும்" என்று வேண்டினார். அவ்வேண்டுகோளுக்கு இரங்கின ஸ்ரீ ருக்மிணி * காந்தன் காட்சிதந்து, ஸ்ரீ ஜயதேவர்க்குக் கால் கைகளை வழங்கி மறைந்தான்.

இந்த அற்புதத்தைக்கேட்ட அரசன், பயபக்திகளோடு ஸ்ரீ ஜயதேவரை வணங்கி, † சதுரங்கசேனைகளுடன், பின் தொடர்ந்துவர, தாம் காட்டுக்குப்போனார். அப்போது பூமிக்குள் இறங்கின கள்ளவேடர் இருவரும், எல்லா ஜனங்களும்காண ‡ திவ்விய விமானாரூடராய் ஆகாயத்தில் நின்று ஸ்ரீ ஜயதேவரைப்பார்த்து, "ஓ பெரியோரே, பகவானுக்குக் கேடு சூழ்ந்து நற்கதி அடைந்த பூதனை, கம்ஸன், சிசுபாலன் முதலியோர்களைப்போல, தேவரீர்க்குத் தீங்குசெய்த அடியேம், தேவரீர் கிருபையால் வைகுந்தம் போகின்றோம்; எங்களை மறவாமல் இருக்கவேண்டும்" என்று வேண்டிக்கொண்டு மறைந்தார்கள். எல்லாரும் "இப்படிப்பட்ட அற்புதத்தைக் கண்டும் கேட்டும் அறியோம்" என்று பலவிதமாகத் தோத்திரஞ்செய்து ஸ்ரீ ஜயதேவரைப் பின்தொடர்ந்து பட்டணம் சென்றார்கள்.

அரசனும் மிகவும் ஆச்சரியப்பட்டவனாய், ஸ்ரீ ஜயதேவருக்கு வந்தனம்செய்து "சுவாமி! இதற்குமுன்நடந்த விருத்தாந்தங்களை மறைக்காமல் சொல்லவேண்டும்" என்று வேண்டிக்கொண்டான். ஆகையால் அவர், அதுவரையில் நடந்த எல்லா விருத்தாந்தங்களையும் தெரிவித்தார். அதைக்கேட்ட அரசன் பேரானந்த பரவசனாய் "உத்தமதேசிகரே! தேவரீருடைய பத்தினியை, அடியேன் சேவித்துப் பூசித்துப் பரிசுத்தனாகவேண்டும் என்று மிகவும் விருப்பமுள்ளவனாய் இருக்கின்றனன். கருணாகரராகிய தேவரீர் அடியேனுடைய மனோரதங்களை ஈடேற்ற வேண்டும்" என்று பலவிதங்களிற் பிரார்த்தித்தான். ஆகையால், அவர், அவன் வேண்டுகோளை அங்கீகரித்து, உத்தரவு கொடுத்தார். அக்கட்டளையை சிரமேற்றாங்கி, அரசன் சேனா சமேதனாய், ஸ்ரீ ஜகந்நாதம்சென்று, ஸ்ரீ ஜயதேவர்தேவிக்குப் பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து, அவருடைய கட்டளையை அவ்வம்மைக்கு அறிவித்தான்.

அதுகேட்டு மிகக்களித்த அத்தேவியார், தன்னுடன் தொடர்ந்துவர, அவ்வரசன், தன் இராஜதானியை யடைந்து, அவ்வம்மையை ஸ்ரீஜயதேவர் சந்நிதியில் விட்டு வணங்கினான். அக்கற்புக் கரசியார் தமது உத்தம நாயகருக்குப் பிரதக்ஷிண வந்தநங்கள் செய்து, அவர் குறிப்பின்வழி நின்றாள். அரசன், அவ்வுத்தமிக்கு அநேக ஆடையா

* காந்தன் - கணவன்

† சதுரங்கம் - யானை, தேர், குதிரை, காலாள்.

‡ திவ்விய விமானம் ஆரூடர் - சிறந்த தெய்விகத்தேர் ஏறினவர்கள்.

பரணங்கள் வழங்கித் தன் மனைவியைநோக்கி, "நீ அதிஜாக்கிரதை யுடையவளாய்ப் பயபக்தியோடு பத்மாவதி தேவியைப் பூஜை பண்ணிக் கொண்டிரு. நானும் அவ்வாறே ஸ்ரீ ஜயதேவரைப் பூஜித்துக்கொண் டிருக்கின்றேன்" என்று நியமித்தான். அந்த நியமனப்படியே அவ்விராஜ ஸ்திரி புருஷர் இருவரும் பயபக்தி விசுவாசத்தோடு ஸ்ரீ பத்மாவதி ஜயதேவர் இருவருக்கும் பணிவிடை செய்துகொண்டிருந்தார்கள்.

ஒருநாள் பத்மாவதி சிறந்த ஆசனம் ஒன்றில் அமர்ந்திருந்தபோது, அரசன் மனைவி, பல பாங்கியர்களோடு அத்தேவியைச் சூழ்ந்திருந்தாள். அச்சமயத்தில் ஒரு சேவகன்வந்து, "ஓ மஹாராணி! உன் உடன்பிறந்தார், மரித்தார்; அவர் தாரமும் உடன்கட்டை ஏறி இறந்தது" என்று சொல்லக்கேட்டு அரசன் மனைவி அதிக துக்கப்பட்டுக் கொண்டிருந்தாள். அப்போது கற்புக்கரசியாம் சாவித்திரியையனைய பத்மாவதி மௌனமாயிருக்க, அரசன்மனைவி அவ்வம்மையாரைப் பார்த்து, "தாயே! என் சகோதரர் இறக்க, அவர் மனைவியும் உடன் கட்டையேறி மாண்டதைக் கேட்டு, நீ அதிசயிக்காமல் சும்மாவிருப்பதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டாள். அதற்குப் பத்மாவதி "என் உயிர்த்தோழி, சரீரத்தைவிட்டு நிழலும், சூரியனை விட்டுப் பிரகாசமும் பிரிந்திராததுபோல, கற்புடையாளுக்கு, கணவன் மரணம் கேட்டபோதே உயிர் நீங்கவேண்டுமே யல்லாமல், அதற்காக முயற்சி செய்து, உடன்கட்டை ஏறி அங்ஙனம் செய்தல் ஆச்சரியம் அன்று" என்றார். அதைக்கேட்ட அரசன் மனைவி, பத்மாவதி வார்த்தைகளை அநுபவ சித்தமாய்ப் பரிசோதித்து அறியவேண்டும் என்று சமயம் பார்த்துக்கொண்டிருந்தாள்.

ஒருநாள் அரசன் ஸ்ரீ ஜயதேவருடன் வேற்றூருக்குப் போயிருந்த போது, அரசன்மனைவி மந்திரியை அழைத்து, "ஸ்ரீ ஜயதேவர் இறந்து பட்டார் என்று ஒரு தூதனிடத்தில் நீ சொல்லி யனுப்பு" என்று கட்டளையிட்டாள். மந்திரி அக்கட்டளையின்படி ஒரு தூதனை அனுப்பினான். அவன் பட்டணத்துக்கு வந்து, பத்மாவதிக்குச் சமீபத்திலிருந்த அரசன் மனைவிக்கு வந்தனம்செய்து, "தாயே! நமது அரசன் ஸ்ரீ ஜய தேவருடன் வநநடுவில் போய்க்கொண்டிருந்தபோது, அகஸ்மாத்தாய் ஒரு புலி வந்து ஸ்ரீ ஜயதேவரைக் கொன்று சென்றது" என்று சொல்லி, அதற்கு அடையாளமாக இரத்தவஸ்திரம் ஒன்றைக் காட்டினான். அப்போது அரசன்மனைவி அழுபவள்போல் பாசாங்குபண்ணினாள். இதனைக்கேட்டவுடனே கற்புக்கரசியாராகிய பத்மாவதிதேவியார் கணவரை நினைத்தபடியே தம்மைமறந்து பூமிமேல் விழுந்து இறந்தார்.

அப்பொழுது அரசன்மனைவி இத்துன்பக் கடலை எதனால் நீந்திக் கடக்கலாமென்று பயந்திருந்தாள். உடனே அரசனும் ஸ்ரீ ஜயதேவர் சமேதனாய்ப் பட்டணம் வந்து சேர்ந்தான்; நடந்த விருத்தாந்தங் களைக் கேள்விப்பட்டான் ஆகையால், அவன் தன் மந்திரியை வரவழைத்து, ஆதியோடந்தமாய் எல்லாவிஷயங்களையும் தெரிந்துகொண்



டான். அந்த ஆபத்துக்குக் காரணியாயிருந்த தன் மனைவியைக் கொன்றால் பெண்வதை பிராப்தமாகும் என்று அரசன் எண்ணினவனாய்த் தன் பிராணனை விடுவதுமேலெனத் துணிந்தான்; தனது மகனை வரவழைத்துச் சிறந்த புத்திமதிகளைச்சொல்லி, நெருப்பை மூட்டி வளர்த்தி, அந்நெருப்பை வலம்வந்து, அதில் வீழ்வதற்கு முன்னே, ஸ்ரீ ஜயதேவர் கட்டளையைப் பெறவேண்டுமென்று எண்ணி, அவர் சந்நிதியிற் சென்று சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, "ஏ, குருநாதா! அடியேன் பெரும்பாதகனாகையால், தேவரீருடைய உத்தம தேவியார்க்குத் தேக வியோகம்நேரிட்டது. இதற்கு மூலபுருஷனாகிய எனக்கு அக்கினிப் பிரவேசம் தவிர வேறு பிராயச்சித்தம் கிடையாது. தேவரீர்க்குச் சுவாதீனமாயுள்ள இவ்வடியேனுடைய ஆத்மாவுக்குக் கால பயம் மாறி, பகவத் விஷயானுகூலம் உண்டாகும்படி கிருபைசெய்யவேண்டும்" என்று வேண்டினான்.

ஸ்ரீ ஜயதேவர், சமீபத்தில் இருந்தவர்களால் சகல சங்கதிகளையும் கேள்விப்பட்டு, அரசன்கையைப் பிடித்துக்கொண்டு "அரசனே! நீ பிராணத்யாகம் செய்யற்க" என்று பலவாறு இதவசனங்கள் கூறி, பத்மாவதி தேகவியோகமான இடத்துக்கு வந்து, ஸ்ரீயஃபதியைத் தியானித்து இருபத்துநான்கு அஷ்ட பதிகளைப் பாடி, ஆனந்த பரவசராய் நடனம்செய்து, ஆயிரந் திருநாமங்களை, "கேசவா, முகுந்தா, மதுசூதனா, மாயா, கண்ணா, மணிவண்ணா, கமலாக்ஷா, கோவிந்தா" என உச்சரித்துப் பஜித்து, "ஸ்ரீ ஜகந்நாதா! 'எண்ணித்துணிக கருமம், துணிந்தபின் எண்ணுவமென்ப திழுக்கு' என்றதை உணராமல், முன் ஆலோசனையின்றிச் செய்து, அதனால் நேரிட்ட பெண்பழியினின்றும் இவ்வரசனைக் காக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார். அதுகேட்ட பக்தவச்சலன், கன்றுக்கிரங்கும் கறவைபோல் காட்சிதந்து ஸ்ரீ ஜய தேவரைத் தழுவிக்கொண்டு "ஏ! சாதுசிரோமணி! உன் தோத்திரங்களைக் கேட்டுப் பரவசனானேன். நீ பாடின அஷ்டபதிகளைப் பக்தியோடு படிப்பவர்களிடத்தில், நான் லக்ஷ்மீ சமேதனாய்ப் பொருந்தியிருப்பேன்" என்று அநுக்கிரகஞ்செய்து, பத்மாவதி தேவியைப் பிழைப்பித்து மறைந்தான். பத்மாவதி தேவியார் தமது உத்தம நாயகரைப் பிரதக்ஷிண நமஸ்காரம்செய்து, கூப்பியகரங்களுடன் நின்றார். அப்போது தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். அரசன் தன் குடும்பத்தோடும் ஸ்ரீ ஜயதேவரைச் சரணடைந்து அதிஜாக்கிரதையாய்ப் பணி விடை செய்துகொண்டிருந்தான்.

வணிகன், இந்த விருத்தாந்தங்களை யெல்லாங் கேள்விப்பட்டு வியந்து களிப்படைந்தவனாய், ஸ்ரீ ஜயதேவர் சந்நிதானத்தை அடைந்து, பயபக்தியோடு பணிவிடை செய்துவந்தான். உலகத்தார் யாவரும் ஸ்ரீ ஜயதேவ மான்மியத்தைக் கொண்டாடி, அவர் அருளிச்செய்த ஸ்ரீ கீதகோவிந்தத்தைப் பக்தி சிரத்தையோடு இடைவிடாமல் பாடிக் கொண்டிருந்தார்கள்.

## மூன்றாம் அத்தியாயம்

# துளசிதாஸர் சரித்திரம்

அஸ்தினா புரத்தில் பிராமண குலத்தில் ஆத்மா ராமர் என்பவர்க்கு வால்மீகமுனிவர் அம்சத்தில் ஒரு புத்ர ஸந்தானம் உண்டாயிற்று. அந்தப் புத்திரருக்குப் பன்னிரண்டாநாள் துளசிதாசர் என்று நாமகரணம் செய்யப்பட்டது. அக்காலத்தில் அத்தேசத்திற்கு, நீதிமானாகிய அக்பர் பாச்சா அரசனாயிருந்தான். அவன் ஆத்மாராமரை அன்பாய் ஆதரித்துத் துளசிதாஸரையும் அபிமானித்து வந்தான். அவர்க்குப் பன்னிரண்டாவதுவயதில், மாதாதேவியென்னும் கன்னிகையைப் பாணிக்கிரகணம் செய்வித்தார்கள். அப்பெண்மணி, சுத்த மனத்து உத்தமி; பேரழகி ஆகையால், கணவன் மனைவியர் இருவருக்கும் காதல் அதிகரித்து இருந்தது. இவர்கள் இருவரும் இடையறாமல் நல்ல ஆடை அணிகளையும் கஸ்தூரிமுதலிய நறுமணங்களையும் அணிந்து, தினந்தோறும் புதிது புதிதாகிய விஷய சுகானுபவங்களால் காலங்கழித்து வந்தார்கள். துளசிதாஸர்க்கு க்ஷணநேரமும் மாதாதேவியாரின் பிரிவு சகிக்கமுடியாமல் இருந்தது. கற்புக்கரசியாரான மாதாதேவியார், துளசிதாஸர் விஷயத்தில், இடையறாத அன்புடன், சமயோசிதமாகப் பலவித பணிவிடைகள் செய்து மகிழ்ந்தார்.

ஒருநாள், அரசனான, அக்பர்பாச்சா, துளசிதாஸரையும், உடன் அழைத்துக்கொண்டு விநோதமாய் உலாவப்போனான். அச்சமயத்தில், மாதாதேவியார், பிறந்தகத்திலிருந்து, ஒருவன் வந்து, "தாயே! உனது தாய், நோய் அதிகரித்து, உடல் மெலிந்திருக்கிறபடியால், உன்னைக்காண விரும்பி அழைத்துவரும்படி என்னை அனுப்பினாள்" என்றான். அதைக்கேட்ட மாதாதேவியார் தனது நற்றாயைக்காணும் விருப்பமுடையவராய்த் தமது காதலர் வீட்டில் இல்லாதபடியால், மாமன் மாமி உத்தரவுபெற்று, தம்மை அழைக்கவந்தவனுடன், பிறந்தகம்போனார். துளசிதாஸர், அன்று மாலையில் வீடுசேர்ந்து, தமது நற்றாயால், தம்மனைவியார் செயலை உணர்ந்து, அவர் பிரிவாற்றாமையால் மெலிந்து, ஊண் உறக்கம் ருசிக்காதவராய், தாய் தந்தையர்க்குத் தெரிவிக்காமலே புறப்பட்டு, காடு, மலை, வனம், வனாந்தரங்களை எல்லாம் தைரியத்தோடு கடந்து சென்று, இரவு மூன்றாம் யாமத்தில், மாமனார்வீடு சேர்ந்தார். அப்போது நடுராத்திரி ஆகையால் எல்லாரும் தம்மைமறந்து, உறங்கிக் கிடந்தார்கள். இவர் எத்தனை முறைக் கதவைத்தட்டி அழைத்தாலும் ஒருவரும் பேசினார் இல்லை. ஆகையால்,

"ஊன மிகுங் காமம் ஒங்குமனத் தோரென்றும்
மானபயந் தம்மைமரு வார்" என்றபடி,

துளசிதாஸர் மானபயங்களைவிட்டு எவ்வழியாலாவது வீட்டில் நுழைய வேண்டுமென்று, சுற்றிச்சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தார். அப்போது



அவர், சுவர்மேல் தூங்கின ஒரு பாம்பின்வாலை அங்கு ஒருபுறத்தில்கண்டு, காம இருட்டால் மனக்கண்மறைந்து அப்பாம்பின் வாலை தாம்பிடித்து ஏறி வீட்டில் நுழைவதற்கு ஆதரவாகத் தன் மனைவியார், கட்டித்தொங்கவிட்ட கயிறென்று தீர்மானித்தார். அதுவே பற்றுக்கயிறாக சுவர்ஏறிக் குதித்து உள்ளேசென்று, அவர், தமது மனைவியாரைத் தரிசித்துப் பரிசித்த மாத்திரத்தில், அவ்வம்மையார் சொற்ப ஊண் உறக்கங்கள் அருந்திப் பொருந்தி இருந்தாராகையால் துண்ணென விழித்துக்கொண்டார். கணவரைக் கண்டமாத்திரையிலேயே ஆச்சரியப்பட்டு விரைந்தெழுந்து ஒடிவந்து பயபக்தி விசுவாசங்களோடு அவரை வலம் வந்து, வந்தனம்செய்து * அர்க்யபாத்யாஸனங்கள் கொடுத்து, கூப்பிய கரத்துடன் அவ்வம்மையார் ஒருபுறம் நின்றார்.

துளசிதாஸர், தமது, உத்தம மனைவியை நோக்கி, "எனது உயிர்க் காதலீ! என்னைத் தனியாய்விட்டு, இங்ஙனம் நீவருதல் தருமந்தானா? உனது பிரிவால் எனது பிராணன் பிரியாதிருக்குமா?" என்று விரக தாபத்தால் தம்மைமறந்து பேசினார். இங்ஙனம்பேசின தமது கணவர் வார்த்தைகளை மாதாதேவியார் கவனித்துக்கேட்டு, "அரை இரவில் கதவைமூடித் தாளிட்டு, வீட்டகத்தில் அனைவரும் தம்மை மறந்து உறங்குந்தருணத்தில், தாங்கள் உள்ளே வந்தவிதம் எப்படி?" என்று ஆச்சரியத்தோடுவினவி அறிந்துகொண்டார். தாம் அறியாமல், சுவரின் மேல் கயிறுதொங்கின காரணம் அறியவேண்டி அவ்வம்மையார், ஒரு திருவிளக்குங் கையுமாய் அங்குச்சென்று பார்த்தபோது, அஃது கயிறல்ல; கரும்பாம்பாய் இருந்தது. அதை உணர்ந்த அவர், அக்கரும்பாம்பு தமது கணவரைக் கடியாதிருந்ததற்கு வியந்து, இப்படிப்பட்ட அபாயத்தில் காத்தளித்த ஆபத்சகாய ஆதிமூலப்பொருளாகிய ஸ்ரீ வல்லபனைக் கொண்டாடி தமது ஆசைநாயகரை அந்தப்புரத்துக் கழைத்துக் கொண்டுபோய், ஒருபீடத்தில் இருத்தி, பயபக்தி விசுவாஸத்தோடு, வணங்கி "ஓ, பிராணநாயகா! துணை ஒருவரும் இல்லாமல், அரை இரவில் இப்படிப்பட்ட துணிவான காரியம் செய்வாரும் உண்டா? நான் பேதையேயானாலும் மேதாவியாகிய தேவரீர் எனது உருவுகண்டு எள்ளாதிருக்கவேண்டும்; மலைபோலிருக்குந் தேர், சிறு சுள்ளாணியால் நிலை பெறுகின்றது. இதுபற்றியே, "உருவுகண்டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்-கச்சாணி யன்னா ருடைத்து" எனத் தமிழ்வேதமும் முறையிடுகின்றது. ஆகையால் அடியேன் விண்ணப்பத்தைத் தேவரீர் கவனித்தருளி அஃது கொள்ளத்தக்கதானால், அங்ஙனம் செய்வீர்களென்று வேண்டுகின்றேன். தேவரீர் என்னிடத்துள்ள காதற்பெருக்கத்தால், தாய் தந்தையர் அநுமதிபெறாமலும், அவர்கட்குச் செய்யவேண்டிய பணிவிடையை மறந்தும், அரைஇரவில், அச்சம் இன்றிக் காடுமலைகளைக் கடந்துவந்தீர்கள். பழுதையிற் பாம்பு என்ற மயக்கமாறிப் பாம்பிற்

* அர்க்யம்-நல்வரவு ஏற்றல். † பாத்யம்-பாதம் அலம்ப நீர் தருதல்.
‡ ஆஸனம் - பீடம்.

பழுதையாய் அதன்வாலைப்பற்றிச் சுவர்ஏறிக் குதித்து வீட்டுள் நுழைந்தீர்கள். இது நல்லோர் நடக்கை அன்று; அந்தப் பாம்பு கடித்திருந்தால் நேரிட்டிருக்கக்கூடிய மரணத்தையும் நிந்தையையும் தடுப்பார் எவர்?

“சுடச்சுட மாற்றேறும் சொன்னம்போல் துக்கப்
படப்பட மாந்தர் பலரும்—இடப்படலால்
ஸம்ஸார மென்றிதனைச் சாற்றுவார் சாற்றநெஞ்சே
ஸம்ஸா கரமெனநீ சாற்று” என்றபடி,

ஸம்ஸாரம் துக்க ஸாகரம்; இதனைக் கடக்கும் புணை, பகவான் திருவடி இணை. இதனை அறியாதார் ஸம்ஸாரம் இன்பஸாகரம் என்று எண்ணி ஏமாறுவார்கள்; தாம், நிலையாய் என்றும் இருப்போம் என மயங்குவார்கள்:

“துக்க வுலகந் துயர வுலகம்பொய்
மிக்க வுலகிதனில் மேவுபல—மக்கள்
ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல” என்றபடி,

நிலையாமை பகைகருதிப் பேராசை வசப்பட்டுப் பேதுறுவார் பலர்.

“ நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியம் தேடி
நலமொன்றும் அறியாத நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க எழுகின்ற புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர் கைவிடவு மாட்டீர்
கவட்டுத்தொல் மரத்திடுக்கில் கால்நுழைத்துக் கொண்டே
ஆப்பதனைப் பிடித்தசைத்த பேய்க்குரங்கு போல
அகப்பட்டீர் கிடந்துழல அகப்பட்டீர் நீரே” என்றபடி,

ஸம்ஸார ஸாகரத்தில் வீழ்ந்து, மனைவிமக்களாகிய மகரங்கள் பற்ற அவைகளினின்று மீள வழிதெரியாமல் அலைகுவார் அநேகர். உடம்பு நீரிற் குமிழி போன்றது; இவ்வுலக இன்பங்கள் நிலையல்ல.

“ மாதர் உடம்பும் மலப்பாண்டம் ஆதலினால்
ஏதமிலா இன்பவர்பால் எய்தாய்நீ—சூதரவர்
பொன்னையும் ஆடையையும் பூணுரேல் ஆசைதனை
என்னகண்டு வைப்பாய் இயம்பு” என்றபடி,

பெண்களால் பெறும் சுகம் கேவலமானது. ஆகையால் இது சிற்றின்பம் என்னப்படும். இந்தச் சிற்றின்பப் பிரியர்கள் மற்றின்பம் யாவையும் கைவிடுகிறார்கள்.

“முற்றுந்தாம்
பேரின்ப மாக்கடல் ஆடுவார் வீழ்பவோ
பாரின்பப் பாழ்ங்குழியில்” என்றபடி,



பேரின்பப் பிரியர்களாம் பெரியோர், சிற்றின்பப் பிரியர்களாய் வாழமாட்டார்கள். ஆகையால் என்மேல் தேவரீர் வைத்துள்ள ஆசையில் ஆயிரத்தில் ஒருபங்கு பகவான் விஷயத்தில் வைப்பீரானால்,

“ பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார்
இறைவனடி சேராதார்” என்றபடி,

பிறவிக்கடலை நீந்தி, என்றும் அழியாத உயர்கதியாம் கரை ஏறி வாழலாம்:

“பெண்மயக்கம் பொல்லாது பேய்பிடித்தாற் போலெவர்க்கும்
உண்மயக்கும் செல்வம் ஒழிவிக்கும்—வண்மையுள்ள
ஈசனடி நேசத்தை என்று மறக்கவைத்து
நாச மியற்றி நலிவிக்கும்” என்றபடி,

தேவரீர்க்கு என்மேல் உள்ள மயக்கத்தால் உண்மை தோன்றாதிருக்கின்றது. தேவரீர் இங்ஙனம் இருப்பது அதிசயம் அல்ல. முற்காலத்திலும் காமக்குருடர்களாய், செய்வது இது, தவிர்வது இது என அறியாதவர்களாய்,

“ காமமே குலத்தினையும் நலத்தினையும் கெடுக்கவந்த களங்கமாகும்
காமமே தரித்திரங்க ளனைத்தினையும் புகட்டிவைக்குங் கடாரமாகும்
காமமே பரகதிக்குச் செல்லாமல் வழியடைக்கும் கவாடமாகும்
காமமே அனைவரையும் பகையாக்கிக் கழுத்தரியும் கத்திதானே” என்றபடி,

தம் குலநலங் கெட்டு, தரித்திரப்பட்டு, பரகதிவிட்டு, பகைமை மேலிட்டு விளங்கினவர், அநேகர்:—அவர்களில் அகலிகைக்காக இந்திரனும், திலோத்தமைக்காக சுந்தோபசுந்தர்களும், மேனகைக்காக விசுவாமித்திரனும், மாந்தாதாவின் பெண்களுக்காக ஸௌபரியும், பிரமோசனைக்காக கண்டுமுனிவனும், சர்மிஷ்டைக்காக யயாதியும், இரதிதேவிக்காக சம்பரனும், தாரைக்காக சந்திரனும், சசிதேவிக்காக நகுஷனும், அரம்பைக்காக இராவணனும், குசநாப புத்திரிகளுக்காக வாயுதேவனும், திரௌபதிக்காக சயிந்தவ கீசகர்களும், தமயந்திக்காக திக்பாலகரும் கலிபுருஷனும் வேடனும், சத்தியவதிக்காக உக்ராயுதனும், ஊர்வசிக்காக புரூரவனும், கைகேயிக்காக தசரதனும், சுநீதிக்காக உத்தானபாதனும், முனிவர் மனைவியர்க்காக அக்னிதேவனும், சித்திராங்கிக்காக இராஜராஜ நரேந்திரனும், சைப்யைக்காக ஜ்யாமக்வனும், இன்னும் அநேக அரிவையர்க்காக அநேகரும் காமநோயாளராய்ப் பரிபவப்பட்டதை நாம் கேட்டறியோமா?

“ தமோ குணவழிசேர் தையலர்மால் பூண்டார்
நமோநா ராயணவென் னார்” என்றபடி,

மகளிர்சேர்க்கை, தமோகுணவழிப் படுத்தும் எனப் பெரியார் பணித்திருக்கின்றனர் அன்றோ?

“மகத்துவ முள்ளவிம் மானிட தேகம்
ஜகத்தி லடைந்த ஜனங்காள்—மிகத்தொழுவீர்
வெண்ணாந் துளவன் விமலன் கமலாக்ஷன்
தண்ணாந் துளவன் சரண்” என்றபடி,

பகவான் நம்மீதுவைத்த பரமகிருபாகடாக்ஷத்தால் கிடைத்தது இம் மானிடதேகம். இதனைப் பெற்ற ஜனங்களாகிய நாம், இதனை இழந்துவிடுமுன்னமே அவனடி வணங்கவேண்டும். அவனடிவணங்கும் அவாவை அவனருளே தூண்டும். அதற்குக்காரணங் கிடையாது. தாய்க்குக் குழந்தையின் மீதுள்ள அன்பிற்குக் காரணமுமுண்டோ? அங்ஙனம் காரணமின்றி அவனருள்தூண்டிய அவனடிப்பற்றைப் பெரும்பற்றாகப் பற்றுதார் ஒன்றுக்கும் பற்றுதாராவார்.

“பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு” என்றபடி,

இக்கரசரணாதி அவயவங்களைப் பெற்றபயன் அவனடி தொழுவதே ஆகும் அன்றோ? அங்ஙனம் அவைகளை அவனடி ஸேவைகளில் உபயோகிக்காமல் வேறுபுரியும் மாந்தர்க்கும் மந்திகளுக்கும் என்ன பேதம்? கரசரணாதிகளை அவன் ஸேவையில் உபயோகித்து, அவனை உபசரிக்காமல் விபசரிக்கிறவர்கள், மிகத்துரிதத்தில் யமவாகனமகிஷ கண்ட கண்டாமணி ஓசையைக்கேட்டுக் கலங்குவார்கள்:

“பெண்சங்க மத்தில் பெரிதுமுழன் றிம்மையிலே
கண்கெட்ட மானிடரைக் காலபடர்—விண்கெட்ட
பாழ்நரகில் வீழ்த்திப் பரிதாபம் இல்லாமல்
மாழ்குவிப்பார் விட்டுவிடார் மற்று”

“திருமாலைப் போற்றாத தீவினையார்தம்மைக்
கருமேதி யூர்திகறுக்கும்—ஒருநீவிர்
என்செய்தீர் அச்சுதனை ஏத்தாமல் என்னுமேல்
என்னவிடைசொல்வார் இவர்” என்றபடி,

அச்சுதாராதனையை நீத்திருந்தார் தம்மை அங்ஙனம் இருந்தமைக்குக் காரணங் கேட்பான் யமன். அவன் கேட்கும் கேள்விக்கு அவர்கள் என்ன உத்தரம் சொல்வார்கள்? பெண்டுபிள்ளை பண்ட பதார்த்தங்களையும், வீடு வாசல் மாடு சுற்றங்களையும் தங்கள் பிராணனிற் பெரிதாயெண்ணி அநேகர், வீட்டு நெறியாம் பகவத்தியானத்தை அறமறந்து பிறப்பிறப்பில் அகப்பட்டு உழல்கின்றார்கள். இதுவரையில் அநேக ஜன்மங்கள் எடுத்தோம்! சமுத்திரக்கரையிலுள்ள நுண்ணிய மணலையும் அளவிடலாகும்; அதற்கும் மிக்க நமது ஜன்மங்களைக் கணக்கிடமுடியாது. கேட்டல் தொடுதல் முதலிய விஷய வுணர்ச்சிகளின்முதிர்ச்சியால் பகவந்நாமசங்கீர்த்தனாதிகளை மறத்தலே, மீட்டுமீட்டும் பிறத்தலாகிய இக்கேட்டுக்குக் காரணமாகும். இந்திரியவசப்பட்டு இறப்பதற்கே காரணாய் நின்ற ஒருவற்குப் பகவத்சேவையாதி சத் கைங்கரியங்கள் எங்ஙனம்



இன்பு தரும்? நாகந்தீண்டிய ஒருவற்கு வேம்புகரும்பானாற்போல, ஸம்ஸார மயக்கந் தலைக்கேறிய ஒருவர்க்கு, நரககாரணங்களான தீவினைகளெல்லாம் நல்வினைகளாய்த்தோன்றும். ஓ, உயிர்க்காதல! இனியேனும் தீயவிஷய வுணர்ச்சிகளைவிட்டு நல்வினைப் பயனடைய முயல்வீர்களென்று பிரார்த்திக்கின்றனன்.

“வேலையுல கிற்பிறக்கும் வேலையொழிந் தோமில்லை
மாலையரங் கேசனைநாம் மாலையினும்—காலையினும்
உன்னிநைந் தோமில்லை உடலெடுத்த அன்று முதல்
என்னினைந்தோ நெஞ்சே யிருந்து” என்றபடி,

சென்றநாட்கிரங்கி இனியேனும்,

“கேசவனையே செவிகள் கேட்க திருவரங்கத்
தீசனையே சென்னி யிறைஞ்சிடுக—நேசமுடன்
கண்ணனையே காண்கவிரு கண்ணிணர் கொள்காயாம்பூ
வண்ணனையே வாழ்த்துகவென்வாய்” என்றபடி,

கேசவா, கோவிந்தா, கண்ணா, மணிவண்ணா வெனப் பகவந்நாமசங்கீர்த்தனம் செய்து வாழ்வீர்கள் என்று தேவரீர் பாதகமலங்களைப் பணிந்து மன்றாடுகின்றேன்.

அடியேன் தேவரீர் பாததூளிக்கும் பற்றாத சிறுபெண்; அடியாள் கூறியதைச் சீரியதாக்கொள்ளினும் அன்றி அதனைத்தேவரீர் தள்ளினும் தகும்.

“தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்” என்பதனாலும்,

“வேசி துயிலும் விறல் மந்திரிமதியும்” என்பதனாலும், தேவரீரைக் காக்கு நிமித்தம், அரசற் கடங்கி உறுதி கூறும் அமைச்சனே போல, பேதையாகிய அடியேன்; தேவரீர்க்கு, அடங்கிக்கூறுவதே அன்றி, மீறுவதும் உண்டோ? தேவர்சித்தம் அடியாள் பாக்கியம்” என்று பயபக்தி விசுவாசத்தோடு கூறி, வாய்புதைத்துக் கைகட்டி ஒருபுறமாக நின்றார்.

இதைக்கேட்ட துளசிதாஸர்க்கு ஞானோதயமாயிற்று. அதனால் அவர் தமது மனைவியாரைநோக்கி, “காதலீ! உனது நல்லுபதேசத்தால், நான் பரிசுத்தன் ஆனேன். மஹாபாபியாகிய எனக்குப் பகவான் கிருபையால் நீ கூறிய உறுதிமொழிகள் பிரம்மவித்தையாய் எனது அக்கண்களைத் திறக்கவைத்தன; இதுவரையிற் காணாத காட்சிகளைக் காண்கின்றேன்; என் தவம் இன்றே பலித்தது” என்று கூறி, அவரைக் குருவென மதித்து, அவர் பாதங்களில் சாஷ்டாங்க நமஸ்காரம்செய்து,

“மூர்த்திதலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கு
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே” என்றபடி,

பலதிருப்பதிகளுக்கும் சென்று, திருமாலைத் தொழ மனங்கொண்டு, குடும்பக் கூட்டத்தை வெறுத்து, கமலக் கண்ணனையே கருதிய நெஞ்ச

முடையவராய் தமது வீட்டைத் துறந்து சென்று, பல திருப்பதிகளையும் பணிந்து, இறுதியில் மனிதவாசம் அற்ற ஒரு காட்டில் தங்கினார்.

"ஒன்றை,

நினையாதமுன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளு மீசன்செயல்" என்றபடி,

தாம் நினையாமலே, தமக்குத் தமது மனைவியாராகிய மாதாதேவியார் மூலமாகக் கிடைத்த ஞானோபதேசத்தால், தாம் பெற்ற தத்வஞான பக்திவைராக்கியங்களுக்கு ஆனந்தமுற்றவராய், துளசிதாஸர், காய் கனி கிழங்குகளை அருந்தி ஸ்ரீராமசந்திர பாதகமலதியான பரராய் வீற்றிருந்தார். ஒவ்வொருநாளும் விடியற்காலையில் தாம் கைகால் அலம்பி மிகுந்த ஜலத்தை, அவர், ஒருமரத்தடியில் ஊற்றி, பிறகு ஸ்நாநாநுஷ்டானங்களை நிறைவேற்றிக் கொஞ்சதூரத்தில் உள்ள ஒரு கிராமத்தருகில் ஸ்ரீராம சரித்திரத்தையோதி, மாலையில், தமது இருப்பிடம் செல்லுவாராயினார். ஒருநாள் அவர், தமது வழக்கப்படி, கைகால் அலம்பி மிகுந்த ஜலத்தை மரத்தடியில் ஊற்றிக்கொண்டிருக்கையில், ஒரு பிரமராட்சதன் கோரரூபத்துடன் அவர்க்கெதிரே நின்று "ஓ பெரியோய், உன் விஷயத்தில் நான் மிகக் களித்தேன்; உனது எண்ணத்தை வெளியிடு; நான் அதைப் பூர்த்திசெய்கின்றேன்" என்றான். அதைக்கேட்ட துளசிதாஸர், "நீ யார்? என் எண்ணத்தை நிறைவேற்றக் காரணம் என்ன?" என, பிரமராட்சதன், "நான், அநேக நாளாய் இங்கேவசிக்கும் பிரமராட்சதன்; ஆறு, குளம், ஏரிகளிலுள்ள ஜலத்தைத் தொடுவதற்கு எனக் கதிகாரம் இல்லை; குடிக்கத் தண்ணீரில்லாமல் மிக வருந்தியிருந்தேன்; சென்ற பன்னிரண்டாண்டுகளாக, இந்த மரத்தடியில் நீ ஊற்றிவந்த மிச்ச ஜலத்தைக்குடித்து எனது தாகந்தணிந்து வந்தேன்; இன்று உன்விஷயத்தில் நான் சந்தோஷப்பட்டு, உனது எண்ணத்தைக் கொடுக்க விரும்பிவந்தேன்; ஆகையால் நீ அஞ்சாமல் உனது கோரிக்கையை வெளியிடு" என்று கூறினான். அதைக்கேட்ட துளசிதாஸர் "இது என்ன விநோதம்! அமுதம் விரும்பியவனுக்கு விஷங் கிடைத்தபடி ஸ்ரீராமசந்திரதரிசனம் விரும்பிய எனக்கு பிரமராட்சத தரிசனம் கிடைத்தது" என்று சிறிது யோசித்துப் பிரமராட்சதனைப்பார்த்து "ஸ்ரீராமசந்திர தரிசனம் எனக்குப் பிரியம். நீ அது தரவல்லவனாயின், தா" என்றார். அதற்குப் பிரமராட்சதன், "இது எனக்கு அசாத்தியமான காரியம். ஆனாலும் ஸ்ரீராமசந்திர தரிசனத்தை விரும்பின உனக்கு, அது கிடைக்கும் உபாயம் கூறுகின்றேன்; நீ தினந்தோறும் ஸ்ரீரகுநாத சங்கீர்த்தனஞ் செய்யுமிடத்தில் ஒரு கிழப்பிராமணர் வந்து உனக்கெதிரில் உட்காருகிறார்; நீ செய்யும் ஸ்ரீராமநாம சங்கீர்த்தனத்தைக் கேட்டுத் தலைமேற் கூப்பிய கையராய், ஆனந்தபாஷ்பம் நிறைந்த விழிகளுடையவராய் அவர் தம்மை மறந்து இருக்கிறார்; அவர் தரித்த உடை பழங்கந்தை; அவர் ஒரு பிரமசாரி. அவர் யார் தெரியுமா? அவரே,



இராக்ஷதகுல நாசகராகிய மாருதி. இதை நீ தெரிந்துகொண்டு, அந்த ஸ்ரீராம பக்தராகிய ஆஞ்சநேயரை வேண்டி, அவர் மூலமாய் உனது கோரிக்கையை நிறைவேற்றிக்கொள்ளக் கடவாய்" என்று சொல்லி மறைந்து போனான்.

துளசிதாஸர் பேரானந்த பரவசராய், ஸ்நாநுஷ்டாநங்களை முடித்துக்கொண்டு தமது வழக்கப்படி ஸ்ரீராமநாம சங்கீர்த்தனஞ் செய்யும் இடத்திற்குச் சென்று அதனை முடித்து, பிரமராக்ஷதன் கூறிய அடையாளப்படி ஆஞ்சநேயரைத் தரிசித்தார்; அவர் பாதங்களில் சாஷ்டாங்க நமஸ்காரங்கள்செய்து, அஞ்சலி ஹஸ்தராய் எழுந்து நின்று அவரைப் பலவாறு துதித்து, "ஸ்ரீராமபக்த மாணிக்கமே! அடியேனைத் தேவரீர் பரிசுத்தனாக்கவேண்டும்; அடியேற்கு ஸ்ரீராம தரிசனம் பிராப்தியாகும்படி கிருபை செய்யவேண்டும்; இது என் நெடுநாளைய கோரிக்கை" என்று பிரார்த்தித்தார். ஆஞ்சநேயர் அதற்கு உடன்பட்டு அவர்மேற் கிருபை உடையவராய், அவருடைய கோரிக்கை நிறைவேறும்வண்ணம் உண்மை நாதராகிய ஸ்ரீ ஜானகி ராமரைப் பிரார்த்தித்தார். சக்ரவர்த்தி திருமகனார், அதனை அங்கீகரித்து, அதற்கடையாளமாக தாம் ஒரு துருக்கராஜ வேடந்தரித்து, அதற்கு உடந்தையான ஒரு பெரிய துருக்க சேனையோடு துளசிதாஸர் ஆசிரமத்துக்குச் சமீபத்தில் எழுந்தருளினார். அதுகண்ட துளசிதாஸர், "இவன் யாரோ துருக்க அரசன்; சேனா சமேதனாய்ச் செல்கின்றான்" என்று எண்ணி அவர்க்குச் செய்யவேண்டிய வந்தன வழிபாடுகள் செய்யாமல் வாளா இருந்தார்; பகவான் மறைந்தார். அப்போது ஆஞ்சனேயர் தோன்றித் துளசிதாஸரைப் பார்த்து, "ஏ, பெரியோய்! ஸ்ரீ ஜானகிமனோகரர் நினது ஆசிரமத்துக்கு எழுந்தருளினபோது, நீயேன் அவரை வணங்காமல் பிணங்கி இருந்தனை?" என்றார். அதுகேட்ட துளசிதாஸர் மிகப்பயந்து "ஏ, மாருதீ! ஸ்ரீராமஸ்வாமியின் திருவிளையாடல்களை நான் அறியாமல் மோசம்போனேன்; யாரோ துருக்கன் என்று அலக்ஷியஞ் செய்தேன். கோதண்டபாணியாய், சீதாலக்ஷ்மண சமேதனாய், பகவான் மறுபடியும் எனக்குச் சேவை தந்தருள முயற்சி செய்தருள்க" எனப் பலவிதமாய் வேண்டிக்கொண்டார். ஸ்ரீராமபக்தி நிலயரான வாயுபுத்திரர், மறுபடியும் அவர் வேண்டுகோளுக்கிரங்கி, அவர் இச்சையை நிறைவேற்ற ஸ்ரீராமபத்திரனைப் பிரார்த்தித்தார். கோசல ராமனாகிய பகவான், மீட்டும் அவர் பிரார்த்தித்தபடியே, துளசிதாஸர்க்கு ஸ்ரீ சீதாலக்ஷ்மண சமேதனாய்க் காட்சிதந்து, தனது பாதகமலங்களை அவர் முடியிற் சூட்டி அமுதூறும் அத்திருவடிகள் இரண்டும் இடைவிடாமல் அவர் இதயஸ்தானத்தில் மலர்ந்து, அவைகளின் ஊற்றெடுக்கும் பரமானந்தத் தேனை உண்டு, மது உண்ட வண்டென, அவர் தம்மை மறந்து பரவசராய் நிஜபக்தராய் வாழச்செய்து மறைந்துபோனான். அப்போது ஆஞ்சநேயர் துளசிதாஸரைநோக்கி "பிராமணோத்தமா!

"எத்திரு நாமம் எளிதிலுரைத் தாலரியின்
அத்திரு நாமங்கள் ஆயிரமும்—சொற்றபலன்
தந்திடுஞ்சொல் லீரென்று தாக்ஷா யணிக்கரனும்
பந்தமுடன் சொல்லும் பரிந்து" என்றபடி,

'எந்தத் திருநாமம், எளிதில் உரைத்தால், ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் ஆயிரந்திருநாமங்களையும் உச்சரித்த பலனைக்கொடுக்கும்? அதனைத் தேவரீர் சொல்லியருளவேண்டும்' என்று கேட்ட பார்வதிக்கு,

"ஸ்ரீராம ராம ஜெயராம ராமஸ்ரீ
தாராம ராமவெனுந் தாரகமே—நேரான
சீதரன்பேர் ஆயிரமும் செப்புபலன் தந்திடுமென்
றாதரவாய்ச் சொன்னான் அரன்" என்று,

ஈஸ்வரன் மனப்பூர்வகமாய்ச் சொன்னபடியே ஸ்ரீராமநாம படனத்தால் ஸஹஸ்ர நாம பாராயணபலன் சித்தியாகும். இன்னும் இந்தத் தாரக மந்திரமாகிய ஸ்ரீராமநாமபாராயணம் பக்தி முக்திகளையும் சித்திபெறச் செய்யும். ஆகையால், சித்த சுத்தியுடன் இந்த மஹா மந்திரத்தை ஜீவாத்மாக்களுக்கு உபதேசித்து, அவர்களை, விஷயவைராக்கியர்களாகவும், மோக்ஷவிடாயினர்களாகவும் மனந்திருப்பி, அதனால் நீ, ஸ்ரீராமசந்திரனுடைய பரிபூர்ணகிருபைக்குப் பாத்திரவானாகக்கடவாய் என உபதேசித்து மறைந்தார்.

பிறகு, துளசிதாஸர், முக்திநகராமாகிய காசிக்குச்சென்று, அங்கே, ஸ்ரீராமபிரானுடைய நற்குணக்கடலைச் சங்கீர்த்தனமடை வழியாய்ப் பெருகி ஓடச்செய்து சகலரையும் களிப்பித்தார். அங்குள்ள சகல ஜனங்களும் துளசிதாஸரை சூழ்ந்திருந்து நாளேற நாளேற ஸ்ரீராமசந்திரபக்தி முதிர்ந்து, அப்பிரானுடைய நற்குணக்கடலில் ஆடி, அவருடைய திருநாம தாரகமந்திர ஜபசீலராய் வாழ்ந்தார்கள். துளசிதாஸருடைய மடத்தில் தினந்தோறும், கணக்கில்லாத ராமபக்தர்கள், போஜனம் பண்ணி, இடைவிடாமல் பகவந்நாம சங்கீர்த்தனம் செய்து வந்தார்கள். துளசிதாஸர்க்கு ஸ்ரீராமநாமாமிர்தம் தவிர, இதர விஷயங்கள் வெறுப்புற்றிருந்தன. அவர் ஸ்ரீராமநாம சங்கீர்த்தனம் செய்ய ஆரம்பித்தவுடனே, அதுகேட்ட யாவரும் அதனால்மெய்மறந்து சித்திரப்பாவைபோல் இருப்பார்கள். இரவு பகல் என்ற வித்தியாசம் இல்லாமல், மடத்தில் எப்போதும் ஸ்ரீராமபஜனை நடந்துகொண்டேயிருக்கும். சில சீமான்கள் நன்கொடையாகத் தந்த பொன் வெள்ளிப் பூஜாபாத்திரங்கள் மடம் எங்கும் இடம் இல்லை என்னும்படி நிறைந்திருக்கும். துளசிதாஸர் ஓட்டையும் பொன்னையும் ஒப்பநோக்குபவர் ஆகையால் எந்தப்பொருளையும் கவனியாதிருந்தார்.

இங்ஙனம் இருக்க, இருவர் கள்ளர்கள் மடத்தில் நுழைந்து, தேவ பூஜாபாத்திரங்களைக் களவுசெய்து மெல்ல நழுவுகையில், சர்வஜாக்கிரதையுடன் பராக்கிரமசாலிகளான இருவர் வில்லிகள் வாசலில் இருக்



கிறதைக் கண்டார்கள். கண்ட அவ்விரு கள்ளர்களும் வெருண்டு, "இவர்களியாரோ, முன்பு இங்கே இல்லை; இப்போது வந்திருக்கின்றார்கள்" என்று எண்ணி வேறொரு வாசல்வழியாய்த் தப்பியோட முயன்றார்கள்; அங்கேயும் அவ்விரு மஹாபுருஷர்கள் நிற்கக்கண்ட கள்ளர்கள் பயந்து தாம் திருடின பொருள்களை யதாஸ்தானத்தில் எறிந்துவிட்டு ஓடிப் போகும்போது அந்த வாசற்காவலர் அவர்களைப் போகவிடாமல் தடுத்தார்கள். அதற்குள் சூரியோதயம் ஆனபடியால், துளசிதாஸர் ஸ்நானஞ் செய்வதற்காக மடத்தின் வாசலை நெருங்கினபோது, சோரர்கள் அவரை அடைக்கலம் புகுந்து நடந்த விருத்தாந்தங்களை அவர்க்கு விண்ணப்பஞ்செய்து தங்களைக் காக்கவேண்டும் எனப் பிரார்த்தித்தார்கள். கள்ளரைத் தடுத்த உத்தமபுருஷர்கள், பக்திவலையிற் படுபவர்களாகிய ஸ்ரீராம லக்ஷ்மணர்கள் என வுணர்ந்த துளசிதாஸர், பலவித சங்கீர்த்தனங்கள் செய்து, கள்ளர்களை நோக்கி, "நீங்கள் மஹா பாக்கியசாலிகள் ஆகையால், சுலபமாய்ப் பகவத்ஸேவை சித்திக்கப் பெற்றீர்கள்.

"காயிலை தின்றுங் கானிலுறைந்துங் கதிதேடித்
தீயிடை நின்றும் பூவலம்வந்தும் திரிகின்ற"

யோகிகட்கும் கிடைத்தற் கரிய பகவத்சொரூபம் உங்களுடைய கண்களுக்குத் தோன்றிற்று. நீங்கள்செய்த புண்ணியம் பலித்தது" என்று அனுக்கிரகம் செய்தார். அதன்பிறகு அக்கள்ளர்கள், பகவான் கடாக்ஷத்தால் சாத்விககுணமுடைய யதீஸ்வரர்களாய், துளசிதாஸர் திருவடி நிழல்போல், அவரை விட்டு அரைக்கணமும் அப்பால் அகலாமல், பரமபாகவத நிஷ்டானுபவர்களாயிருந்தார்கள்.

ஒருநாள் துளசிதாஸர்மடத்தில் பரமபாகவதர்கள் அநேகர் வந்து, போஜனம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லாரும் ஒன்றுகூடி துளசிதாஸரைப்பார்த்து "ஏ, பாகவத சிரேஷ்டரே! மஹாபாபி ஒருவன் நமது கோஷ்டியிற் கலந்திருக்கின்றான். ஆகையால் அவனோடு நாங்கள் உண்பது தகாதகாரியம்" என்றார்கள். துளசிதாஸர் அவர்களை நோக்கி, "பகவத் பக்தர்களே! ஸ்ரீ தாரக நாமமான ராமமந்திர பாராயணத்தால் பிரமஹத்தி முதலிய மஹா பாதகங்கள் உடனே நசிக்கும்; பெருநெருப்புக்கு ஈரம் உண்டா?

"பாதியாய் அழுகியகால் கையரேனும்
பழிதொழிலும் இழிகுலமும் படைத்தா ரேனும்
ஆதியாய் அரவணையாய் என்ப ராகில்
அவரன்றோ யாம்வணங்கும் அடிக ளாவார்" என்றபடி,

பாகவதனாயுள்ளவனுடைய பூர்வ விருத்தாந்தங்கள் எப்படியிருந்த போதிலும், அவைகளைக் கவனிக்கக்கூடாது. ஆகையால் அப்பேர்ப்பட்டவனுடன் பந்திபோஜனம் பண்ணுதல் தோஷமல்ல" என்று கூறினர். அங்ஙனங்கூறிய அவருடைய இன்சொற்களை ஒப்புக்கொள்ளாமல், அக்

கோஷ்டியாளர், "ஏ, பாகவத சிரேஷ்டரே! தங்கள் வார்த்தைகள் நாங்கள் ஒப்புந்தரத்தன அல்ல; பகவந்நாம சங்கீர்த்தனப் பிரபாவத்தால் மஹா பாதகங்கள் நசிக்கும் என்பதற்கு ஏதாவது ஒரு காட்சிப் பிரமாணங் காட்டுவீர்களானால், தங்கள் வார்த்தையை அங்கீகரிப்போம்" என்றார்கள். அப்போது துளசிதாஸர், அந்தக் காசியம்பதியில் விஸ்வேஸ்வரர் சந்நிதிக்கெதிரில் வீற்றிருக்கும் நந்திகேஸ்வரர் முன்னிலையில் கொஞ்சம் அன்னத்தைவைத்து விசுவநாதரை நோக்கி "ஏ, கங்காதரா! ஸ்ரீராமநாம பாராயணத்தால், கொலையாதி பாதகங்கள் நசிக்கும் என்னும் பிரமாணம் நிஜமானால், நந்திகேஸ்வரர் எழுந்து இந்த அன்னத்தைப் புசிக்கவேண்டும்" என்று விண்ணப்பித்தார். உடனே, ஸ்ரீ விசுவநாதர் அநுமதியால், சிவகணாதிபதியாகிய நந்திகேஸ்வரர் எழுந்து, அந்த அன்னத்தைச் சிறிதும்விடாமல் புசித்து எப்போதும் போல அமர்ந்திருந்தார். இந்த அற்புதத்தை அனைவரும் பார்த்து, ஆனந்தபரவசர்களாய் "ஸ்ரீராமராம" என்று கோஷித்து, துளசிதாஸரைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, "தாரகநாம ஜபசீலர்களில் நீர் முதன்மையானவர்; உம்மை, சாக்ஷாத் ஸ்ரீராம பக்தராகும் மாருதியோ, அன்றி ஸ்ரீ தாரக நாம பாராயணரான பார்வதீபதியோ என அநுமானிக்கின்றோம்" என்று கொண்டாடி, தங்களால் வெறுக்கப்பட்ட பாகவதனுடைய பூர்வ விருத்தாந்தங்களைக் கவனியாமல் அக்கோஷ்டியாளர் அனைவரும் சமபந்தியிலிருந்து மனமொப்பிப் புசித்தார்கள்.

பிறகு, அந்த வாரணாசிப்பதியில் வர்த்தகன் ஒருவன் மரித்ததனால் அவன் மனைவி, உடன்கட்டையேறத் தீர்மானித்து, பிணத்தைப் பின்பற்றி, வழியே போகையில், துளசிதாஸர் மடத்தின்வாசலில் வந்து "இந்த மஹானைச் சேவித்து, இவர் அனுமதிபெற்றுச் செல்வேன்" என்று எண்ணி, துளசிதாஸர்க்கு வந்தனஞ் செய்தாள். அவர் அந்த ஸ்திரீயைக் கருணையோடுநோக்கி, "நீ தீர்க்க சுமங்கலையாய் எண்மர் மக்களைப்பெற்று சுகமாய் வாழ்க" என ஆசீர்வதித்தார். அந்த ஸ்திரீ துளசிதாஸரைப் பார்த்து "எனது கணவர் மரித்ததனால், நான் உடன் கட்டையேறுவதற்காக அவர் உடலைப் பின்பற்றிச் செல்கின்றேன். இடைவழியில், பரமபாகவத சிரேஷ்டரான தேவரீரைச் சேவித்துத் தேவரீர் அனுக்கிரகத்தைப்பெறத் தீர்மானித்து இங்குப் போந்தேன். இந்தச் சமயத்தில் தேவரீர் கூறிய ஆசீர்வாதம் வேறுவிதமாய் இருக்கின்றது" எனக் கேட்டுத் துளசிதாஸர் "எனக்குள் கரந்துறையும் ஸ்ரீராமசந்திரர் சத்தியவிரதர்,

'தசரத ராமர் சத்திய விரதர்
சொன்னசொல் தவறாச் சுத்த மனத்தர்
அவர்சொல் மாறா தாகையால்
எனதுவாய் மொழியால் இன்படைவாயே'



ஸ்ரீராமர் என்றும் சத்தியத்தையே பேசுவார். அவர்க்கு அடிமையான எனது வாக்குப் பலிக்காமற் போகாது. அந்தப் பிரேதத்தை இங்கே கொண்டுவாருங்கள்" என்று சொல்லி அதனை வரவழைத்து,

'கோசல ராமா குறையாக லாமாவுன்
தாசரை ஆளத் தகும்' என்றவுடனே

அப்பிணம், பிணத்தன்மை நீங்கி மணத்தன்மைபெற்று எழுந்து நின்றுகொண்டு, சந்தோஷத்தோடு துளசிதாஸர்க்கு வந்தனம் செய்தது. துளசிதாஸர் கணவன் மனைவியரை ஆசீர்வதித்து அவர்கள் இருப்பிடம் செல்ல உத்தரவளித்தார். இவ்வற்புதத்தைக் கண்டார் கேட்டார் அனைவரும் ஸ்ரீ துளசிதாஸ மான்மியத்தை அநேகவிதமாகக் கொண்டாடத் தலைப்பட்டார்கள்.

பிறகு, அரசனான அக்பர் பாதுஷா, இவ்வற்புதங்களைக்கேட்டு, ஆச்சரியப்பட்டு, சோதிக்கவேண்டும் என்று எண்ணி, துளசிதாஸரை அழைத்துவரும்படி தனது பிரதானியைக் காசிக்கு அனுப்பினான். ஆகையால் அந்தப்பிரதானி, காசிக்குவந்து துளசிதாஸரைச்சேவித்து "ஓ, சுவாமி! எமது பாதுஷா, தேவரீரைத் தரிசிக்க இச்சையுடையவராய் அழைத்துக்கொண்டுவரச்சொன்னார்" என்று விண்ணப்பஞ்செய்தான். அதற்குத் துளசிதாஸர் சம்மதித்து, அந்தப் பிரதானியைப்பின்பற்றி, ஸ்ரீராமநாம பாராயணம் பண்ணிக்கொண்டு, அஸ்தினபுரத்துக்குச் சமீபமாய் வருகையில், பாதுஷா எதிர்கொண்டுவந்து அவரைச் சகல மரியாதையோடும் அழைத்துக்கொண்டுபோய் உன்னத ஆஸநம் ஒன்றில் எழுந்தருளப்பண்ணி "ஓ சாதுக்கள் தலைவரே, தேவரீர் தற்காலத்தில் அநேக அற்புதங்களைக் காசி நகரத்தில் காட்டினீர்கள் என்று கேள்விப்பட்டேன்; அவைகள் யார் வல்லமையால் நடந்தன" என்று கேட்டான். அதற்குத் துளசிதாஸர் "ஓ, அரசனே! ஜகந்நாதனாகிய ஸ்ரீராமபத்திரனுடைய திவ்யநாம வல்லமையால்" என்று கூறினார். அதுகேட்ட அரசன் "இது நிஜமானால், அவ்வற்புத நாமவாச்சியனை ஜாநகிரமணனைக் காட்டுக, காட்டீரேல், உம்மை எடுத்தடிவைக்க விடமாட்டேன்" என்று சொல்லித் துளசிதாஸரைக் காவலில் வைத்தான். அப்போது துளசிதாஸர் ஆஞ்சநேயரைத் தோத்திரஞ்செய்ய, அந்த ஸ்ரீராம பக்த முதல்வர், உடனே காட்சிதந்து, துளசிதாஸருடைய வந்தனோபசாரங்களை அங்கீகரித்து, அவர்க்கு அரசனால் நேரிட்ட கஷ்டங்களைக்கேட்டு, நினைத்தமாத்திரையிலேயே ஒருபதினாயிரம் வானர வீரர்களை வரவழைத்து, "ஓ வானர வீரர்களே! நீங்கள் மூன்றேமுக்கால் நாழிகையில் உங்கள் இயற்கைக் குறும்புகளை இவ்வரசனுக்குக் காட்டுங்கள்" என்று நியமித்தார். உடனே அக்கபிவீரர்கள் அம்புகள்போல் ஆகாயத்தில் தாண்டிக்குதித்துப் பட்டணவாசிக[illegible] ஜனங்களை ஒருவர்மேல் ஒருவர் விழவெறிந்து, மரங்களை வே[illegible] பிடுங்கி மாடமாளிகை கூளிகை கூடகோபுரங்களை நிலத்தோ[illegible]னார்கள்; உலோபிகளான தனவான்களுடைய பணப்புதைய[illegible]

பிறருக்காக்கி, பகவத்பக்தியற்ற பாமரர்களை வருத்தினார்கள். இப்படிப் பலவிதமான சேஷ்டைகளால் நேரிட்ட துன்பங்களை ஆற்றாமல் அப்பட்டணவாசிகள் அல்லோல கல்லோலப்பட, அதனை அரசன் பார்த்துப் பயப்பட்டு, அதற்குக் காரணம் என்னவென்று விசாரிக்க! புத்திமானாகிய மந்திரி, "ஓ அரசனே! நீ, ஸ்ரீராமபக்த முதல்வரான தாஸரைக் காவலில்வைத்துக் கஷ்டப்படுத்தியதால்,

"பக்தர் வருத்தப் படுமிடத்தில் மன்னவர்க்குச்
சக்தி குறையும் தவங்குறையும்—மெத்தமெத்தப்
பஞ்சங்கள் நேர்ந்து பலநோயால் மாந்தருக்குக்
கொஞ்சமல்ல நேருங் குறை" என்றபடி,

நமது நாட்டுக்கு இப்படிப்பட்ட அனர்த்தங்கள் உண்டாயின. ஆகையால், பூஜிக்கப்படுபவராகிய துளசிதாஸரைச் சரண்புகுந்து, நீ, அவர் விஷயத்தில் அனுதாபப்படுபவனாய், மன்னிப்புக் கேட்டுக்கொள்வையானால் உனக்கும் உனது இராஜ்யத்துக்கும் நன்மை உண்டாகும்" என்று சொன்னான். அதை அரசன் அங்கீகரித்துத் துளசிதாஸர் சந்நிதிக்குவந்து, தண்டனிட்டு எழுந்துநின்று சென்னியிற் கூப்பிய கையனாய் "ஸ்ரீராமபக்த சிரேஷ்டரே! என் குற்றங்களை மன்னித்து என்னையும் எனது இராஜ்யத்தையும் காக்கவேண்டும்" என்று வேண்டினான். அதைக்கேட்ட துளசிதாஸர், புன்முறுவல்பூத்து, "ஓ அரச! ஸ்ரீராமசந்திரனை உனக்குக் காட்டவேண்டும் என்றனை யல்லவா? சூரியோதயத்திற்கு முந்தின அருணோதயத்தைப்போல, பல்லுயிர் நாதனாகிய ஸ்ரீரகுநாதன் வருமுன்னே, அவற்கு ஐக்கியமான வானரவீரர்கள் வந்துகொண்டிருப்பார்கள். எங்கள் ராமசுவாமிக்கு எழுபத்திரண்டு வெள்ளம் வானரவீரர்கள் உளர்! அவர்களில் ஒருபதினாயிரவர் முந்தி வந்தார்கள். இவர்களுக்குப் பின்னே மற்ற வீரர்களும் வருவார்கள். அவர்கள் வந்தபிறகு ஸ்ரீராமசந்திரன் எழுந்தருளுவான்" என்றார். அதுகேட்ட டில்லி பாதுஷா நடுக்கமும் பயமும்கொண்டு ஒடுங்கினவனாய், "சுவாமி, ஒருபதினாயிரம் வானர வீரர்களால் பட்டணம் அல்லோல கல்லோலப்பட்டது; மற்ற வானரவீரர்களும் வந்தால் என்ன கதியாமோ, தெரியாது; தேவரீருடைய தரிசனமே எங்களுக்குப் போதும்; ஸ்ரீராமபத்திர தரிசனம் இதைவிட மேலானதல்ல. இந்த வானரவீரர்கள் இவ்விடம் விட்டுப்போகும்படி அனுக்கிரகிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தான். துளசிதாஸர்க்குக் கருணைமிகுந்து பக்தியுடன் ஆஞ்சநேயரைத் தியானித்து வானரவீரர்களை மறையச்செய்தார். துளசிதாஸருடைய அற்புத சரித்திரத்தைக் கண்கூடாகக்கண்ட அரசன் ஆனந்த பரவசனாய், அவருடைய பாத கமலங்களுக்கு வந்தனங்கள்செய்து, "தேவரீர் சிலகாலம் இங்கே வசித்து என்னைப் பரிசுத்தனாக்கவேண்டும்" என்று வேண்டிக்கொண்டான். அதனை அங்கீகரித்த துளசிதாஸர் ஒரு வருடம் அங்கே வசித்து அந்நாட்டார் யாவரையும் ஸ்ரீராமநாம சங்கீர்த்தனபரர்களாக்கிப் பரிசுத்தப்படுத்தினார்.



அதன்பிறகு, துளசிதாஸர், அரசன் அனுமதிபெற்று, அவ்விடம் விட்டு, முக்திதரும் முதல்நகரமும், பகவத்வாசம் நீங்காத க்ஷேத்திரமும், ஸ்ரீவாமந தவப் பிரதேசமும், ஸ்ரீசத்ருக்நனால் ஏற்படுத்தப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணாவதாரஸ்தலமுமாகிய மதுரா நகரத்துக்கெழுந்தருளிக் கோகுல பிருந்தாவன கோவர்த்தனங்களைத் தரிசித்துப் பரிசுத்த தீர்த்த யமுனையில் ஸ்நானஞ்செய்து, அங்கே ஒருமாதகாலம் வசித்து அநேகரை ஸ்ரீராமபக்தர்களாக்கிப் பகவத் பக்தர்களோடுகூடிக் களித்திருந்தார்.

அக்காலத்தில் அங்கே பிரியதாஸன் என்னும் பிராமணோத்தமன் ஒருவன், பகவத்பக்த முதல்வனாய் விளங்கியிருந்தான். கலியுகத்தில் உலகத்தார் பிழைக்கும்வண்ணம், பகவான் நியமனப்படி அவதரித்த ஸ்ரீஜயதேவர் முதலிய பக்தர்களுடைய சரித்திரம், அந்தப் பாகவத சிரேஷ்டனாகிய பிராமணனால் சம்ஸ்கிருத பாஷையில் எழுதப்பட்டிருந்ததைக்கேட்ட துளசிதாஸர், அவனிடத்துக் கெழுந்தருளி "நீ எழுதின பக்தசரித்திரத்தை நான் கேட்க விரும்புகின்றேன்; எனது கோரிக்கையை ஈடேற்றவேண்டும்"; என்று பிரார்த்தித்தார். அதற்குப் பிரியதாஸனென்னும் அப்பிராமணன் கருணைகூர்ந்து, "இந்தத் துளசிதாசருடைய அவதாரத்துக்கு முந்தி அவதரித்த பகவத் பக்தர்களுடைய சரித்திரங்களை, பகவான் கிருபையால் உணர்ந்து, தெளிவாக விவரித்து வரைந்தேன். நல்லகுணப் பெருந்தகையாகிய இந்தத் துளசிதாஸர் சரித்திரத்தைமட்டும் எழுதாமல் புத்திமயங்கி மோசம்போனேன்" என்று வருந்தி, "ஆனாலும் என்னால் எழுதப்பட்ட பக்த சரித்திரத்தை இந்த மஹாத்மாவின் நியமனப்படி இவர்க்கு வாசித்துக் காட்டுவேன்" என்று எண்ணி, வாசித்துவருகையில், அப்பிராமணனுக்குத் தெரியாமலே, ஸ்ரீதாரக பிரமம், துளசிதாஸர் சரித்திரத்தை அந்நூலில் எழுதி அமைத்தது. பிரியதாஸன் என்னும் அப்பிராமணன், கிரமமாய்ப் பகவத் பக்த சரித்திரங்களை வாசித்துத், தனக்குத் தெரியாமலே தனது புஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ள துளசிதாஸர் சரித்திரத்தைப் பார்த்து, அதன் சொன்னோக்கும், பொருள்நோக்கும், தொடைநோக்கும், நடைநோக்கும், துறைநோக்குமாகிய எந்நோக்கும் தன்னை வியப்பிக்க வியந்து, அங்கிருந்த சகல பாகவதர்களுக்கிடையில், அதனை வாசித்துச்,

"செவிக் குணவில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்" என்றபடி,

அவர்கள் செவிக் கமுதமாகக் கேட்பித்தான். அப்போது அங்கிருந்த பாகவதர்களெல்லாரும், ஸ்ரீராமசந்திரனுடைய சொந்தக் கையெழுத்தாலாகிய துளசிதாஸ வைபவநூலைத் தமது தலையால் வகித்துப் பரமானந்த பரிதர்களாய், பிரியதாஸ துளசிதாஸர்களைப் பன்முறை துதித்துத் தத்தம் இருப்பிடம் சென்றார்கள்.

ஸ்ரீராமசந்திர பரப்ரஹ்மணே நம:

### நான்காவது அத்தியாயம்

# ஸ்ரீ நாமதேவர் சரித்திரம்

ஸ்ரீமத் பண்டரிபுரத்தில், தாமாஜி என்னும் ஒரு பாகவத சிரேஷ்
டர், இடைவிடாமல் ஸ்ரீ கண்ணபிரானைப் பூசிப்பவராய் வாழ்ந்துவந்
தார். அவருடைய இல்லாளாகிய குணபாயென்னும் கற்புக்கரசி,

"தெய்வந் தொழாள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை" என்றபடி,

இடைவிடாமல் கொழுநனைப் பூசிப்பவளானாள். இந்த மனைவி கணவர்
இருவரும் ஸ்ரீமத் பாண்டுரங்கனை உள்ளன்புடனே ஆராதித்து நிவே
தித்த அன்னத்தைப் புசித்து, பகவானுடைய திருநாமசங்கீர்த்தனம்
செய்து பேரானந்த பரவசராய்க் காலங்கழித்து வந்தார்கள்.

ஒருநாள் குணபாய், தனது கணவரைப் பார்த்து "எனது காதல!
நமக்குப் பிள்ளைப்பேறு இல்லையாதலால், அது குறித்து, ஸ்ரீ பாண்டு
ரங்கனை வேண்டிக்கொள்வோம்" என்றாள். அவ்வார்த்தைகளைக் கேட்ட
தாமாஜி, "ஓ மாதே! அஜ்ஞானத்தால் இங்ஙனம் புகல்கின்றாய், நமது
கிழவயதில், நமக்குப் புத்திரப்பேறு எங்ஙனம் உண்டாகும்? பாண்டு
ரங்கன் நமக்கு எந்த விதத்தில் சந்ததி அளிப்பான்?" என்றார்.
அதற்குக் குணபாய் "உயிர்க்காதல! என் இப்படிக் கூறுகின்றீர்?
எல்லாம் வல்ல ஈசனாகிய நமது பாண்டுரங்கனுக்கு அருமையான காரி
யமும் உண்டோ. ஸ்ரீராமாவதார காலத்தில் வானரர்களால் கற்களைத்
தண்ணீரில் மிதக்கச்செய்யவில்லையா, கருங்கல்லை பெண்ணாக்கவில்லையா,
இறந்த பிராமணப்பிள்ளையை உயிர்ப்பிக்கவில்லையா? ஸ்ரீகிருஷ்ணாவ
தாரத்தில், அதிபாலியத்தில், பூதனையையும் சகடாசுரனையும் கஞ்சனையும்
வதைக்கவில்லையா; வனத்தில் எரிந்த நெருப்பை அணைத்து, கோக்களை
யும் கோபாலர்களையும் காப்பாற்றவில்லையா; பிரமன், கன்றுகளையும்
பசுக்களையும், கோபாலர்களையும் மறைத்துவைத்தபோது, தான் அந்
தந்த உருவங்களையும்பூண்டு நடிக்கவில்லையா? அதுவுமன்றி, மரித்த குரு
புத்திரனை எழுப்பி, குருதக்ஷிணையாக அளிக்கவில்லையா; இறந்தபிள்ளை
களை வைதிகனுக்கு எழுப்பித் தரவில்லையா? இன்னும் நமது ஸ்ரீவிட்டல
நாதனுடைய அதிமானுஷ சரித்திரங்களைக் கணக்கிட நான்முகன்
முதலியோராலும் முடியுமா? இப்பேர்ப்பட்ட சர்வ வல்லமையுள்ள
வன் நமக்கொரு புத்திரதானம் பண்ணுதல் அருமையா?" என்றாள்.

தன் மனைவிவார்த்தையைக்கேட்ட தாமாஜி கொஞ்சம் யோசித்து,
அவள் சொன்னவைகள் யாவும் உண்மை என்று மனமகிழ்ந்து, பகவான்
சந்நிதியிற் பிரவேசித்து, ஸ்ரீ பாண்டுரங்கனை நமஸ்கரித்து, "ஓ புண்
டரீகவரதா! எனது மனைவி உமது கடாக்ஷத்தால், ஒரு புத்திரனைப் பெற
வேண்டுமென்று இச்சிக்கின்றாள்; தேவரீர் கிருபைசெய்யவேண்டும்"
என்று வேண்டித் தேவாலய முதன்மண்டபத்தில் படுத்துறங்கினார்.



அப்போது அவர் கனவில் ஸ்ரீமத் பண்டரிநாதன் பிரத்யக்ஷமாய்
"உனக்கு என்போன்ற நற்புத்திரனைத் தந்தோம், வருந்தவேண்டாம்;
விடியற்காலையில் பீமநதியில் ஸ்நானஞ் செய்யப்போவாய்; அங்கே ஒரு
முத்துச்சிப்பி, ஜலத்தில் மிதந்துகொண்டு உன்னெதிரில் வரும்; அதனுள்
உனக்கொரு ஆண்குழந்தை அகப்படும்; என் அனுக்கிரகப்பிராப்தியான
அக்குழவி, என்னிடத்தில் மிக்க பக்திபூண்டு எனக்கு அதிக அன்புள்ள
தாயிருக்கும். அப்புத்திரன் பரமபாகவதனான உத்தவாம்சத்தில் உல
கத்தார்க்குப் பகவத் பக்தி உண்டாக்கு நிமித்தம் எனது நியமனப்
படி அவதரித்தவன் ஆவான்" என்று சொல்லி மறைந்தான். உடனே
தாமாஜி விழித்தெழுந்து சுவாமிக்குக் கணக்கில்லா வந்தனங்கள் சமர்ப்
பித்துப் பலவிதமாகத் தோத்திரம் செய்து, தமது கிருகத்துக்கு வந்து
கனவின் விவரத்தை மனைவிக்குச்சொல்லி, அவ்வம்மைக்கு மிதமில்லாத்
ஆனந்தத்தை உண்டாக்கி, இருவரும் ஸ்ரீபாண்டுரங்க சங்கீர்த்தனம்
செய்து இரவைக் கழித்தார்கள். விடியற்காலத்தில் தாமாஜி விழித்
தெழுந்து பீமநதிக்குச்சென்று அதனில் பகவந்நாமோச்சாரணத்துடன்
ஸ்நானஞ்செய்து, நித்திய கருமங்களை முடித்து, மகன் வரவை எதிர்
நோக்கியிருந்தார். அப்போது ஸ்ரீபாண்டுரங்கன் அருளால், பிரவாக
வசப்பட்டு முத்துச்சிப்பி ஒன்று ஜலத்தில் மிதந்து வந்துகொண்டு இருந்
தது. தாமாஜி அப்போது ஆனந்தபரவசராய் "கிருஷ்ணானந்த, முகுந்த
முராரே, வாமன மாதவ கோவிந்த, ஸ்ரீதரகேசவ ராகவ விஷ்ணோ,
லக்ஷ்மிநாயக நரஸிம்ம" என்று பகவானைத்துதித்து, அம்முத்துச்
சிப்பியை எடுத்து, அதனில் க்ஷேமமாயிருந்த குழவியைத் தமது கிருகத்
துக்குக் கொண்டுபோய் மனைவிகையிற் கொடுத்து, "இம்மதலைக்குப்பால்
கொடுத்துக் காப்பவர் யாவர்! நான் இல்லாதவனாகையால், பசும்பால்
கொடுத்தாலும் குழந்தையை வளர்ப்பதற்கு சக்தி இல்லாதவனாய்
இருக்கின்றேன்" என்று எண்ணிக் கொண்டிருக்கையில், ஸ்ரீ பாண்டு
ரங்கன் அருளால், குணபாய்க்கு அபரிமிதமாய்ப் பால் சுரந்தது.
அப்போது அவ்வற்புதத்தைக்கண்ட கணவன் மனைவியார் இரு
வரும் அதிசயித்து, இது பக்தவத்ஸலன் திருவிளையாட்டு எனத் தீர்மா
னித்து, நினைத்ததைத் தரவல்லவனாகிய ஸ்ரீ பாஞ்சஜன்ய பாணியைத்
துதித்து, அக்குழவிக்கு நாமதேவர் என நாமகரணஞ்செய்து, பிரியத்
தோடு வளர்ப்பாராயினர்.

அப்புத்திர சிகாமணி குழந்தைப் பருவத்தைக் கடந்து, ஞானா
னுஷ்டானபரராய், தமதுதேகம் வளர்வதுபோலவே பகவத்பக்தியும்
வளர விளங்கினார். ஒருநாள் தாமாஜி, பக்கத்துக் கிராமத்துக்குப்
போகவேண்டியகாரியம் நேரிட்டபடியால், தமதுமனைவியை அழைத்து
"நீ இன்றைக்குப் பூஜாதிரவியங்களை நமது நாமதேவன் கையிற்
கொடுத்து ஸ்ரீபாண்டுரங்கனைப் பூசித்துவரும்படி ஏற்பாடு செய்; நான்
ஒரு காரிய நிமித்தமாகப் பக்கத்துக் கிராமத்துக்குச்சென்று நாளைக்கு
வருவேன்" என்று சொல்லிப் புறப்பட்டுப் போய்விட்டார். கணவர்

கூறியபடி, குணுபாய், பூஜாதிரவியங்களை நாமதேவர்கையிற் கொடுத்து ஸ்ரீபாண்டுரங்கன் சந்நிதிக்கு அனுப்பினாள். நாமதேவர், உள்ளன்புடைய பயபக்தியோடு ஸ்ரீமத் பாண்டுரங்கனைப் பூசித்து, நன்றாய்ச் சமைத்த பரிசுத்தமான அன்னத்தை அவற்கெதிரேவைத்து, "ஸ்ரீபாண்டுரங்க! புசித்தருள்க; புசித்தருள்க" என்று பிரார்த்தித்தார். இப்படிப் பிரார்த்தித்தும், பகவான் புசிக்காதபடியால் அவர் விசனமுற்றவராய், "ஓ, சுவாமீ! நான் நிவேதித்த அன்னத்தை, நீ ஏன் புசிக்கமாட்டாய்? உனது உண்மை அன்பராகிய தாமாஜி, கிராமாந்தரம் போகவேண்டியிருந்தபடியால், உனது ஆராதனைக்கு என்னை நியமித்தார். நீ, அன்னத்தை உட்கொள்ளாமல் சும்மா இருந்தால், 'சுவர்மிக்கு நீ என்ன அபராதம் செய்தனை' என்று என் தாய் என்னை அடிப்பாள்; என் தந்தைகேட்டால் வைவார்" என்று கூறித் தேம்பித்தேம்பி அழுது, "ஜகந்நாதா! புசித்தருள்க; நான் என்னபிழை செய்தேன்? உன்னை ஆராதிக்கும் ஒழுங்கை நானறியேன். ஆனாலும் என்மேற் கருணைகூர்ந்து விரைந்துவந்து புசித்தருள்க. பசிதாகங்கள் என்னை வருத்துகின்றன; நான் என்செய்வேன்!" என்று பலவாறு வேண்டிக்கொண்டார். அப்போது கிருபைக்கடலாகிய பகவான், நிஜரூபத்துடனே காட்சிதந்து, அவரைத் தழுவிக்கொண்டு, உச்சிமோந்து, உடம்பைத் தடவி, கபோலத்தைக் கிள்ளி முத்தமிட்டு, கண்ணீர்துடைத்து, கொண்டாடி, அவர் நிவேதித்த அன்னத்தை விடாமற்புசித்து "ஓ, அன்ப! இவ்விருத்தாந்தங்களை நீ யார்க்கும் சொல்லாதே; வீட்டுக்குப்போ" என்று அருமையாய்க் கூறி மறைந்தான். பிறகு நாமதேவர் ஸ்ரீ வாசுதேவற்கு நமஸ்காரஞ்செய்து பலவாறு துதித்து ஆனந்தபரவசராய் வீட்டுக்கு வந்தார்.

குணுபாய், தன்புத்திரனை நோக்கி, "நைவேத்தியத்தை நீ என்ன செய்தாய்?" என்றுகேட்க, நாமதேவர் "ஓ அம்மா! நான் அதனை யார்க்கும் கொடுத்து விடவில்லை; நமது பாண்டுரங்கர் நன்றாய்ப் புசித்தார்" என்று சொன்னார். குணுபாய், தன்பிள்ளையின் மழலைவார்த்தைகளைக் கேட்டு அதிசயமுற்று, மறுநாள் தனது கணவர் வந்தவுடனே இவ்வதிசயத்தை அவரிடத்தில் மெல்லவுரைத்தாள். தாமாஜி மிகவும் ஆச்சரியமடைந்து, "ஓ நாமதேவா! நீ கொண்டுசென்ற அன்னத்தை நமது பாண்டுரங்கர் எப்படிப் புசித்தாரோ! அதை நான் பார்க்கவேண்டும். இன்றைக்கும் நீயே பகவானை ஆராதனைசெய்; நானும்உன் பின்னே வருகின்றேன்" என்று பூஜாதிரவியங்களைக் கைக்கொண்டு இருவரும் பகவான் சந்நிதிக்குப் போனார்கள். நாமதேவர், தேவதேவனுக்குப் பயபக்தி விசுவாசத்தோடு, முன்போலவே பூஜைசெய்து, "அன்னத்தைப் புசித்தருள்க" என வேண்டினார். அப்போது ஜகதீசர் தாமாஜி கண்ணுக்ககப்படாமல், நாமதேவர்க்குமட்டும் காட்சிதந்து, "ஓ குழந்தாய்! உனதுதந்தை உன்னைப் பின்பற்றிவந்தபடியால், நான் நேற்றுண்டதுபோல உண்ணமாட்டேன்; அவர்க்கு எனது தரிசனம் தரமாட்டேன்



என" நாமதேவர் "ஓ சுவாமீ! எல்லார்க்கும் பொதுவான உனக்குப் பக்ஷபாதம் தகுமா? எனது தந்தையைத் தள்ளி எனக்கு மாத்திரம் நீ காட்சி கொடுத்ததனால் உன்னை நான் சும்மா விடமாட்டேன்; நான் மாத்திரம் உனக்கென்ன வெகுமதி கொடுத்தேன்? எல்லாராலும் போற்றப்பட்டவனாகிய நீ, ஏன் நிந்தைக்கு ஆளாகிறாய்? 'வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன் நீ' என வேதமுகத்தாற் கூறி, நீயே ஒழுக்கத்திற் பிசகி நடக்கலாமா? நீ இப்படி வரம்பு கடந்து நடந்தால், உன்னைத் திருத்துவதற்கு வசுதேவ நந்தகோப சாந்தீபர் முதலியோர் இருக்கின்றனரா? பாலகன் வாயிற் பிறந்ததானாலும், நியாயவசனமாயிருப்பதைக் கொள்ளவேண்டும் அல்லவா?" என்று விண்ணப்பஞ் செய்தார். அவருடைய மழலைவார்த்தைகளைக் கேட்ட பகவான் கருணைகூர்ந்து, அவர்க்கும் அவர் தந்தைக்கும் பொதுவில் காட்சி தந்து, அன்று நிவேதித்த அன்னத்தையும் புசித்து மறைந்தார். அப்போது, தாமாஜி, நாமதேவரைப் பார்த்து,

"நண்ணிய யோகத் தாலிக் கண்ணனை நாடு மேலோர்
எண்ணிலா நந்தமாகியிருப்பதின் றறிந்தோம்". என்றபடி,

"யோகிகள் ஞானக் கண்ணால் காணும் ஸ்ரீபகவான் சேவை, உன்னால் எனக்குக் கிடைத்தது; நீ புத்திரன் அல்ல; எனது குலதெய்வம்" என்று கொண்டாடி உச்சி மோந்து தழுவிக்கொண்டு, தமது கிருகத்துக்குப்போய், நடந்த விருத்தாந்தங்களை மனைவிக்கு அறிவித்து, தமது புத்திரனைப் பக்ஷமுடன் பரிபாலித்து வந்தார்.

தாமாஜி, குணுபாய் இருவரும் தமது பந்துக்களை விசாரித்து, ராதாபாய் என்னும் ஒரு கன்னிகையை மணம்பேசி, நாமதேவர்க்குப் பாணிக் கிரகணஞ் செய்வித்தார்கள். சில காலத்துக்குப் பிறகு, ராதாபாய் கருவுற்று, ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். அப்போது, தாமாஜி, குணுபாய் இருவரும் அதிக சந்தோஷப்பட்டு, பன்னிரண்டாநாள் அக்குழவிக்கு நாமகரணஞ் செய்ய ஏற்பாடுசெய்து, ஸ்ரீமத் பண்டரீநாதனை விருந்துக்கு அழைத்தார்கள். பகவான், அம்மகவின் மேல் அதிக அன்புடையவராய், வரிசை கொண்டு வந்தார். குணுபாய், பகவானை நோக்கி, "ஓ, சுவாமீ! நாமதேவன் குழந்தைக்கு என்ன நாமம் சூட்டலாம்?" என்று கேட்டு, ஸ்ரீ வாசுதேவன் அனுமதியால், "நாராயணன்" என்று திருநாமந் தரித்தார்கள். ஜகதீசன் அக்குழவிக்கு ஆபரணங்களையும், ராதாபாய்க்கு ஆடை முதலியவைகளையும் வழங்கி, திருக்கோயிலுக்கெழுந்தருளினான். தாமாஜி, குணுபாய் இருவரும் அதிக மூப்படைந்து தரித்திரர்களாய் வாழ்ந்தார்கள். அதனால், குணுபாய், தனது குமாரனைப் பார்த்து "ஓ நாமதேவா! நீ, இரவுபகல் ஒழிவின்றி எந்நேரமும் பகவத் பந்தி சாகரத்தில் மூழ்கிக் கிடந்தால், குடும்ப காரியம் எங்ஙனம் நிறைவேறும்? உன்போன்ற பகவத் பக்தர்கள் அநேகர், லௌகிக வைதிக காரியங்கள் இரண்டினும் சமமாய்

கப்பட்டிருக்கவில்லையா? உன் இருப்பு மாத்திரம் வேறுவிதமாய் இருக்கின்றது. வீட்டில் ஊண் உடை இன்றி பெண்களும் குழந் தைகளும் படும் கஷ்டத்தைப் பார்த்து எங்ஙனம் பொறுக்கலாம்?" என்று கேட்டாள். தமது தாய் மொழியைக் கேட்ட நாமதேவர், பாண்டுரங்கன் சந்நிதிக்குப்போய், பகவானுக்குப் பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து, "ஸ்ரீ ருக்மிணீகாந்தா! என்னை, என் துக்கம் நிறைந்த சமுசார ஸாகரத்தில் அழுத்தினாய்? இந்தப் பெருந் துக்கத்தை எங்ஙனம் பொறுப்பேன்?" என்றார். அதுகேட்ட பகவான் அவருடைய அன்பு மொழிகளுக்கு இரங்கி, "ஓ பக்தா! இன்று உன்னையார் வருத்தினார்கள்?" என்று கேட்டுக் கண்ணீர் துடைத்து, நல்ல வார்த்தைகள் பேச, நாமதேவர் "தேவ தேவ! எனது தாய், சமுசார விஷயத்தில் குறைகளைச் சொல்லி, எனக்கு மிகுந்த மனத் துயரத்தை உண்டாக்குகின்றாள். உனது உன்னத பாதாரவிந் தங்களை இச்சித்து வேறு இச்சையற்ற என்னை, இத்துக்கத்தை நீக்கி ஆட்கொள்ளவேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தார். புண்டரீக வரதன் புன்னகைசெய்து, "பக்த! நீ என்னருகில் இருப்பையானால், ராஜஸகுண சம்பந்தமான காமக் குரோதாதிகள் உன்னை வருத்த மாட்டா. எனது உண்மை அன்பனாகிய உனக்கும் எனக்கும் எப்போ தும் துக்கம் என்பது கிடையாது. அங்ஙனம் இருக்க, நீயேன் இரங்கு கின்றாய்?" எனக்கேட்ட நாமதேவர், "ஓ ஜகந்நாதா! எனக்கித்தனை உபசார வார்த்தைகள் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. உனது நாமம் என் மனத்தில் அனவரதம் குடிகொண்டிருக்கின்றது. இந்தக் குடும்பம் எனக்கொரு பாரம் அல்ல. எனது மனம் உனது உருவில் கலந்திருக்கின்றது. சூரியனுக்கெதிரில் இருள் தலை எடுக்காது. அது போல, உனது பக்தர்களுக்கெதிரில் குடும்ப ஆரவாரம் தலை எடுக் காது,

"எல்லாமுன் அடிமையே எல்லாமுன் உடைமையே
எல்லாமுன் னுடைய செயலே"

என்றபடி; நான் உன் உடைமையாயிருக்கின்றேன். நீ எனது தலைவனாயிருக் கின்றனை.

"எனக்கே திருவரங்க னெம்பிரான் எம்மான்
தனக்கே அடிமை தமியேன்—புனக்கேழ்
மருத்துளவோன் மேலன்றி மற்றொருவர் மேலென்
கருத்துளவோ வாராயுங் கால்"

என்றபடி, நான் உனது அடிமை; எனக்கு உன்மேலன்றி வேறு இடத்தில் மனம் செல்லாது. அடிமையை ஆட்கொள்ளும் பொறுப்பு தலைவ னுக்கே அன்றி அந்த அடிமை தனித்தென்ன செய்யக்கூடும்?

"பொன்னாற் பிரயோஜனம் பொன் படைத்தார்க்குண்டு அப்பொன் படைத்தோன், தன்னாற் பிரயோஜனம் பொன்னுக்கில்லை யந்தத் தன்மை



ஸ்ரீ நாமதேவர் பஜனை பண்ணுதல்.
(பக்கம் 66)

யைப்போல், உன்னுற் பிரயோஜனம் எனக்கிருக்கவேண்டும், என்னுற் பிரயோஜனம் உனக்கொன்றும் கிடையாது''.

"இருளினும் வெளியினும் மருளினும் தெருளினும்
இன்பமே அடையினும் துன்பமே மிடையினும
ஒருவர்முன் புகழினும் இருவர்பின் இகழினும்
ஊனிறந் தழியினும் யான்மறந் தொழிவனோ
சுருதிநின் றேலிடுங் கரதலங் நாலொடுக்
துவளுநான் மார்பமும் பவளவாய் ஊரலும்
திருவரங் கேசர்தஞ் சுருள்கருங் கேசமும்
செய்யநீள் முடியுமத் துய்யசே வடியுமே'' என்றபடி,

என்றென்றும் எங்கெங்கும் எழுபிறப்பினும் உனது பாத கமலங்களை மறவாமல் சிந்திக்கவேண்டும்; உன்னை என் தலையாரப் பணிந்து கேட்டுக்கொள்ளுகின்றேன்; இதற்கு மாறாக நான் மோக்ஷ முதலியவைகளையும் இச்சியேன்'' என்றார். அதற்குப் பகவான் புன்சிரிப்புக்கொண்டு அவரை ஆலிங்கனஞ் செய்து, ஸ்ரீ ருக்மிணி தேவியைப் பார்த்து, "ஓ மாதே! இவருடைய இருவினை ஒப்பும் மல பரிபாகமும் தெரிந்து கொண்டனையா?'' என்று சொல்லி, பிரியவார்த்தை யாடிக்கொண்டிருந்தான்.

இப்படியிருக்க, நாமதேவருடைய நன்மனைவி யாகும் ராதாபாய், தனது மாமியை நோக்கி, "உனது குமாரர் என் பிறந்தாரோ அறியேன். நானும் எனது குழந்தையும் அன்ன வஸ்திரங்களின்றிக் கஷ்டப்படுகின்றோம். இவருடைய அடிமைத் தன்மையை அங்கீகரிக்கும் ருக்மிணிகாந்தன் நமது குடும்பத்துக்கு இந்தத் துன்பத்தை உண்டாக்கினான் என்று தோன்றுகிறது. அசக்தர்களாகிய நாம் என்ன செய்யக் கூடும்? சமுசார ஸாகரத்திற்குக் கரைகாணமாட்டோம்'' என்று வருந்தியிருக்கும்போது, இந்தக் கூக்குரல் ஸ்ரீபாண்டுரங்க வரதனுடைய திருச்செவிக்கேறிற்று. கருணைக் கடலான அப்பகவான், நாமதேவர்க்குத் தெரிவிக்காமல், கேசவ செட்டி என்னும் ஒரு வர்த்தகன்போல் வேடந் தாங்கி, கருடனை ஓர் எருதாக்கி, அதன்மேல் பராகன் மூட்டை ஏற்றிக் கொண்டு, நாமதேவர் கிருகத்தை விசாரித்துக்கொண்டு வரும்போது, அந்தத் தெருவிலிருப்பவர்கள், "நாமதேவர் வீட்டில், அன்னம், சுன்னம்; பருப்பு, கருப்பு; நெய், பொய் இங்ஙனம் இருக்க, இந்த வர்த்தகன், உண்டிவிரும்பி, விருந்துக்கு வருபவனைப் போன்றுகின்றான். இவன், என் அங்குப் போகின்றான்?'' என்று தங்களுக்குள் மொணமொண வென்று பேசிக்கொண்டிருந்தார்கள். வேறு சிலர், "அதைப்பற்றி நமக்கென்ன?'' என்று அவ்வர்த்தகனுக்கு நாமதேவர் வீட்டைக் காட்டினார்கள். வர்த்தகன் அவ்வீட்டு வாசலில் வந்து, நாமதேவர் மனைவியைக் கண்டு, "ஓ அம்மணி! உங்கள் வீட்டுக்கு நான் விருந்தாளியாய் வந்தேன்'' என்றான். அது கேட்ட ராதாபாய், "வீட்டில் முதலாளி இல்லை'' என்று சொல்லி, அண்டை வீட்டுக்காரரோடு, "எங்கள் வீட்

டுக்குப் பாகவதர்கள் அநேகர் வழக்கமாய் வருகின்றார்கள்; எங்கள் எஜமானர், வீட்டின் இருப்பை விசாரிக்காமலே, வருகிறவர்களுக்கு அன்னம் போடும்படி சொல்லுகின்றார். நான் என்ன செய்வேன்? இவ்வறுமையை எங்ஙனம் சகிப்பேன்?" என்று வருத்தத்தோடு கூறினாள். அதைக்கேட்ட அவ்வணிகவேஷதாரி ராதாபாயைப் பார்த்து "அம்மா! உங்கள் வீட்டு நடையில் உட்கார்ந்திருக்க மட்டும் எனக்குக் கொஞ்சம் இடங்கொடு" என்று கேட்டன். ராதாபாய், வாசலுக்குக் குறுக்கே நின்றுகொண்டு, "நீ யார், வந்தகாரியம் என்ன; உன் நாமதேயம்என்ன?" என்று கேட்க, வர்த்தகன், "என் பேர் கேசவ செட்டி; நாமதேவர் எனக்கு நெருங்கிய நண்பர்; ஆகையால் அவரைக் காணவந்தேன். எனது பிராண நண்பரான நாமதேவர் மிகுந்த தரித்திரராய் இருக்கின்றாரென்று கொஞ்சம் பணம் கொண்டு வந்தேன்." என்றான். அது கேட்ட ராதாபாய் அவனுக்கு உபசாரம் செய்து, வீட்டுக்குள் அழைத்துக்கொண்டுபோய் ஆசனங் கொடுத்து உட்காரவைக்க, வர்த்தகன் ராதாபாயைப் பார்த்து, "ஓ அம்மணி! எனது பிரிய நண்பராகிய நாமதேவரைக் குடும்ப விஷயமாய் வருத்தாதே; இந்தத் திரவியத்தை வைத்துக்கொண்டு குடும்ப பாரத்தைத் தாங்கிக்கொள். நான் வந்த விஷயத்தை உனது கணவர்க்கு அறிவி" என்று சொல்லித், தான் கொணர்ந்த திரவியத்தை அவளிடத்தில் ஒப்புவித்து, அந்த இடம் விட்டு அப்பால் அகன்றான். ராதாபாய் அதிக சந்தோஷப்பட்டு, "எனது கணவர் செய்யும் சேவைக்கு இரங்கியருள் சுரந்து, பகவானே இந்தத் திரவியத்தைக் கொடுத்தான்" எனத் தீர்மானித்து, வராகன் மூட்டையைப் பத்திரப்படுத்தி, அதிலிருந்து கொஞ்சம் பணத்தை எடுத்துக்கொண்டு கடைவீதிக்குப் போய், யோக்கியனான ஒரு வர்த்தகன் கையில் அதனைத் தந்து, அவன் மூலமாய்த் தன்வீட்டுக்கு வேண்டிய சகல பதார்த்தங்களையும் தருவித்துக்கொண்டாள். நாமதேவர் நற்றாயாகிய குணாபாய், கேசவசெட்டி வந்தகாலத்தில் வீட்டில் இல்லாதபடியால், நடந்த விருத்தாந்தங்களில் ஒன்றும் அறியாள்.

குணாபாய் எங்கேயோ போய், கொஞ்சம் அரிசி கடன் வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வரும்போது, நாமதேவர் மேல் உள்ள கோபத்தோடு, ஸ்ரீ பண்டரிநாதன் திருக்கோயிலிற் புகுந்து, அவன் சந்நிதிக்கெதிரில்நின்றுகொண்டு, "வெண்ணெய் திருடியுண்டவாயனே! ஆயனே! மாயனே! அன்பர்களாகிய எங்களுக்குத் துன்பம் தந்த நீ, கருணையற்றவன். இனி எங்களுக்கு உன்னால் என்ன பிரயோஜனம்? நாங்கள் படமுடியாத பாடுபட்டு வளர்த்த பிள்ளைக்கு எங்களிடத்தில் ஆசையில்லாமற்செய்து, உனக்குத் தாஸனாக்கிக்கொண்டனை. இது முறையோ, தருமமோ; நீதிதானோ? சாதுக்கள் உன்னை தயாளன் என்கிறார்கள்; அது நிஜம் அன்று. குசேலர் தந்த அவலைத் தின்று அவர்க்கு அஷ்டைசுவரியங்கள் அளித்தனை. பாம்பறியும் பாம்பின்கால் என்றபடி விபீஷணனால், இராவணாதி ராக்ஷஸர்களுடைய பலாபலம் உணர்ந்து,



அவனுக்கு இலங்கை அரசு உதவினாய். துருவன், கஜேந்திரன், பிரஹலாதன், திரௌபதி முதலிய பக்தர்கள் தாம்தாம் செய்த தவ வலிமையால் உன்னைத்தம் வசப்படுத்தி உன்னால் உதவிபெற்றார்கள். தீனதயாளன் என்ற பேரைமட்டும் நீ பூண்டிருக்கின்றனை; உன்னை நம்பின கோபிகைகளைப் படாதபாடு படுத்தினை. இதுவன்றிப் பிறன்மனைப் புகுதல், பிறன்பொருள் வெளவல், தகாதவழியிற் பொருள் ஈட்டல், பெண்கொலை, கோவதை முதலிய உனது துர்க்குணங்களை எண்ணமுடியாது; எழுதப்புகின், ஏடிடங்கொள்ளாது" என்று நிஷ்டூரங் கூறினாள். அங்ஙனங் கூறிய குணாபாயைப்பார்த்துப் பகவான்மந்தஹாஸஞ்செய்து, "ஓ அம்மே! கோபங்கொள்ளாதே; என்னை ஏன் வீணாய் நிந்திக்கின்றாய்? உன் பிள்ளைக்கு உன்மேல் இச்சை உண்டானால், அழைத்துக்கொண்டு போ; உண்மை உரைக்கின்றேன்; கேள்: நாமதேவன் என் பிள்ளை அல்லாமல் உன் பிள்ளை அல்ல. என் மீது அவன் வைத்துள்ள அன்பின் மிகுதியால் உலகத்தார்க்கு உன்மத்தனெனத் தோன்றுகின்றான்; தனக்குத்தானே பழுத்த பழம் மரத்தில் ஒட்டாத விதம்போல, எனது மனத்தகத்தில் பழுத்த மனமுடைய நாமதேவனுக்குக் குடும்பத்தில் தனக்குத்தானே ஆசையற்றது. எனக்கும் அவனுக்கும் உள்ள சம்பந்தம் அநாதியாய், ஒப்புயர் வில்லாததாய் இருக்கின்றது. உங்களுக்கு அவனிடத்தில் சம்பந்தம் நிலையற்றதாய் இருக்கின்றது. இங்ஙனம் இருக்க நீங்கள் என் அவனுக்காக வருந்துகின்றீர்கள்?" எனக்கேட்ட குணாபாய், "நல்ல வார்த்தை சொல்லுகின்றாய்! கொடுங்கோலரசன் குடிகளுடைய ஆஸ்திகளைக் கொள்ளைகொண்டு, அவர்கள் ஊண் உடைக்கு ஒன்றும் உதவாமல் வருத்தும் விதம்போல், நாங்கள் பெற்று வளர்த்த பிள்ளையை, எங்களுக் குதவாமல் உனக்கடிமை யாக்கிக் கொண்டனை. சொல்வன்மை பெற்றவன் ஆகையால் உனது தப்புகளை ஒப்புகளாக நீ சாதிக்கின்றனை. இவ்வநீதி உனக்குமட்டும் நீதியாய் இருக்கின்றது. நான் வளர்த்த பிள்ளைக்கு நீ எஜமானன் என்று யார்தான் ஒப்புவார்கள்? தாய்தந்தையர்களாகிய நாங்கள் திக்கற்று நடுவீதி நாராயணா என்று அலைகிறபோது, எங்கள் பிள்ளையை உன் பிள்ளை என்று, பெற்று வளர்த்தவன்போல, வெட்கம் இன்றி வம்பளக்கின்றாய்" என்றாள். அந்த வெறுப்பு மொழிகளைக் கேட்ட பகவான், "இவ்வம்மையார்க்கு, இச்சமயத்தில், நயவார்த்தை சொல்லாமல் விட்டால், நமக்கு நிந்தை உண்டாகும்" எனத் தீர்மானித்து, 'ஓ பாக்யவதி! நீ பெரும் புண்ணியவதி; உனது மனம் மலரகிதமானது ஆகையால், எனக்குப் பேரன்பனாகிய நாமதேவனை உனக்கு புத்திரனாகத் தந்தேன். உலகத்தார் பிழைக்கும் வண்ணம், பிரமபுத்திரனாய் அவதரித்த நாரதமுனிவன் போல, நாமதேவன் உன் புத்திரனாய் அவதரித்தான். நாமதேவர்க்குப் பால்கொடுத்து வளர்த்த உனது புண்ணிய விசேடத்தைக் கொண்டாட யாராலாகும்?" என்று சொன்ன வார்த்தைகளைக் கேட்ட குணாபாய், "நீ எப்படிச் சொன்னாலும் செல்லும்" என்று கூறி ஸ்ரீ ருக்மிணிதேவி சந்நிதியிற் சென்று, "சகல கலியாண குணவானெனப் பிர

சித்திபெற்ற பகவான், என் பிள்ளையை இங்ஙனஞ் செய்தல் நியாயம் அல்ல" என்று விண்ணப்பித்து, மறுபடியும் விட்டலநாதனுடைய சந்நிதிக்கு வந்து தன் பிள்ளையைப் பார்த்து "ஓ நாமதேவா! நீ என் இங்கிருக்கின்றாய்? இந்த மாயன் இந்திரஜாலம் வல்லவன்; துரியோதன குலநாசன்; கோபிகாமனக்கள்வன்; ஜகன் மோஹனன்; இடுப்பில் ஊன்றிய கையனாய்ச் செங்கல்மேல் நின்று, சாதுக்களுடைய மனங்களைக் கொள்ளை கொள்கின்றான்; புண்டரீகன், இவனுக்கு இடங்கொடுத்தபடியா லல்லவா இத்தனை அனர்த்தங்கள் உண்டாயின" என்று, சுவாமியைப் பார்த்து, "பாண்டுரங்கா! ஏழைகளாகிய எங்கள்மேல் உனக்கேன் கருணை யில்லை? உனது மனம் கல்லோ, இரும்போ அறியேன்." எனக் கூறினாள். அதற்குக் கருணைக் கடலாகிய பகவான், "ஓ குணாபாய்! என்னை வெறுக்காதே; உன் மகனை அழைத்துக் கொண்டுபோ" என்று, நாமதேவர் கரத்தைப் பற்றிக் குணாபாய் கரத்தில் வைத்து ஒப்புக்கொடுத்தான். குணாபாய், நாமதேவனைத் தன் கையிற் பற்றி வீட்டுக்குப் போகையில், "ஓ மகனே! நீ, இப்பிரபஞ்ச ஞானத்தை விட்டு, பண்டரிநாதனை விடாமல் பிடித்திருந்தால் நாங்கள் என் செய்வோம்?" என்றாள். அவர் தமது தாயார்க்கு மறுமொழி கூறாமல், மெய்ஞ்ஞான பரராய், பகவானை நினைத்த மனத்துடன் ஆனந்தபாஷ்ப வாரி மடைதிறந்தோடத் தமது தாயுடன் வீடு சேர்ந்தார்.

அங்குப் பல பதார்த்தங்களும் நிரம்பி, அதனால் தனது மருகியான ராதாபாய், பலவித பலகாரங்களுடன் சோறு கறிகள் சமைத்துக்கொண்டிருக்கக் கண்டு குணாபாய், பகவான் சித்தம் திரும்பியது என்று உணர்ந்து, சந்தோஷித்தாள். நாமதேவர் இவர்களை நோக்கி, மனத்தில் சந்தேகங்கொண்டு, "இந்த ஆஸ்தி எப்படிக் கிடைத்தது?" என்று கேட்டார். அதற்கு அவர் தாயார் தனக்கொன்றும் தெரியாதென்றாள். மனைவியாகிய ராதாபாய் அவரை வணங்கிக் கை கால் அலம்ப நீர் தந்து உபசரித்து, "உண்ண வாருங்கள்" என்று அழைத்தாள். அதற்கு நாமதேவர் ஆச்சரியப்பட்டு, "இதுஎன்ன அதிசயம்; இந்த ஸ்த்ரீ இத்தனை நாள்போல் வெறுத்துரையாமல் இன்றைக்குச் சந்தோஷமாய்ப் பேசுகின்றாள்! இந்த ஆஸ்தியைக் கண்ட ஆனந்தங் காரணமோ!

'பணந்தானே அறிவாகும் பணந்தானே
வித்தையுமாம் பரிந்து தேடும்
பணந்தானே குணமாகும் பணமில்லா
தவர்பிணமாம் பான்மை சேர்வர்
பணந்தானே பேசுவிக்கும் பார்த்தனுக்குச்
சாரதியே! பாரின் மீது
பணந்தானே பந்தியுறுங் குலங்கீழாங்
குப்பையிலே படுக்குந் தானே'

என்றபடி,



பெரியார் வாய்மொழி வாய்மைமொழியா யிருக்கின்றது" என்று தமக்குள் எண்ணி, அவ்வாஸ்தி வந்த வரலாற்றைச் சொல்லுமாறு, தமது மனைவியைக் கேட்டார். அதற்கு அவள், உண்மை சொன்னால் அவ்வாஸ்தியை அவர், ஊரார்க்குத் தானஞ்செய்து நாஸ்தியாக்கி விடுவாரென எண்ணிப் பயந்து மௌனமா யிருந்தாள். அப்பொழுது, பணிப்பெண்ணாகிய ஜனாபாய், பண்டரிநாதன் கேசவசெட்டி யென வந்து திரவியந் தந்துபோன வரலாற்றை விவரமாய்ச் சொன்னாள். அம்மொழிகளைக் கேட்ட நாமதேவர், "கிருபைக்கடலே! உற்றதுணையே! எல்லை இல்லா அன்பின் இருப்பே!" எனத் துதித்து, "அலிக்குக் கன்னிகையைத் தானஞ்செய்தபடியும், அந்தகனுக்கு விளக்கைத் தானஞ்செய்தபடியும், வெறுக்கைமேல் வெறுக்கைவைத்த எனக்குப் பகவான், திரவியதானஞ் செய்தது எதற்கு?" எனக்கூறி, அவ்வூர் ஏழைகளுக்குத் தன் வீட்டில் உள்ள ஆஸ்தி முழுவதையும் தானம்செய்து, பரிசுத்த மனமுடையவராய், ஸ்ரீபாண்டுரங்கன் சந்நிதானத்துக்குப் போய்ப் பகவத் தியான பரராய், பரமானந்தக்கடலில் மூழ்கி யிருந்தார்.

ஸ்ரீமத் பாண்டுரங்க பரப்ரஹ்மணேநம:

## ஐந்தாம் அத்தியாயம்.

# கபீர்தாஸர் சரித்திரம்

கங்கைக் கரையில் தமால் மோக்கீம் என்னும் துருக்கன் ஒருவன் புடவை நெய்து ஜீவனம் பண்ணினான். இவன், நூல் அலம்புவதற்காக, கங்கைக்குப் போய், நீரில் மிதந்து கொண்டு பிரவாகவசப்பட்டுத் தன்னருகில் வந்த முத்துச்சிப்பி ஒன்றை எடுத்து, அதில் ஸ்ரீ சுகாமிசமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்த குழந்தை ஒன்றைக்கண்டு, ஆனந்த பரவசனாய், அதனைத் தனது வீட்டுக்குக் கொண்டுபோய், மனைவி கையிற் கொடுத்து, "சந்ததி யற்றவர்களாகிய நமக்கு, இக்குழந்தை, பகவான் கிருபையால் கிடைத்தது" என்று சொன்னான். அவன் சொன்னதைக் கேட்டவுடனே, அவனது மனைவிக்குப் பால்சுரந்து பெருகிற்று. தாய்தந்தையர் அக்குழந்தைக்குக் "கபீர்" என்று நாமகரணம் செய்தார்கள். அக்குழந்தை பேசக் கற்றவுடனே அனவரதமும் ராமநாம உச்சாரணம் செய்துகொண்டிருந்தது. அதனைக் கண்டார் யாவரும் ஆச்சரியம் அடைந்து, "இந்தத் துருக்கனுக்குப் பரம பாகவதர் பிள்ளையாகப் பிறந்தார்" என்று தோத்திரம் செய்ய ஆரம்பித்தார்கள். தாய்தந்தையர், கபீர் தாஸருக்குச் சரியான காலத்தில் கலியாணம் செய்தார்கள். கபீர்தாஸர் உலக வியாபாரத்தில் மனம் செலுத்தாதவராய், எல்லா ஆத்துமாக்களையும் சமமாக எண்ணி, கேட்டல் தொடுதல் முதலிய விஷய வுணர்ச்சிகளை விலக்கி, ஸ்ரீராம நாமபஜனம் செய்துவந்தார். இப்பேர்ப்பட்ட நடக்கைகளைக் கண்ட உலகத்தார் எல்லாரும் அவ

ரைப் பிச்சன் எனக்கூறி நகைத்தார்கள். தாய் தந்தையர் மட்டும் அன்புடன் வளர்ப்பவராகையால் அவரை அன்பாய் ஆதரித்தார்கள். இங்ஙனம் இருக்கக் கபீர்தாஸர் தாமே குடும்ப நிர்வாகம் செய்யத் தகுந்த வயதை அடைந்தார். தண்மைக்கும் வெம்மைக்கும் போல, விஷத்துக்கும் அமிர்தத்துக்கும்போல, இருளுக்கும் வெளிச்சத்துக்கும் போல, உலக ஞானத்துக்கும் பகவத் ஞானத்துக்கும் விரோதம் உண்டாகையால், கபீர்தாஸர் உலக ஞானத்தை ஒழித்து, பகவத் ஞானத்தோடு கூடி உன்மத்தர்போல வாழ்ந்தார். இதைக்கண்ட அவர் தாயார், அவரை அழைத்து, "மகனே! நீ இப்படி உலக விவகாரத்தில் மனஞ்செலுத்தாமல் வாழ்ந்தால் குடும்பகாரியங்கள் எப்படி நடக்கும்?" என்று பலவிதமாய் இதங் கூறிப் புடைவை நெய்ய அவருக்குக் கட்டளையிட்டாள். அவர் ஆடைநெய்ய ஆரம்பித்து, அப்போதைக் கப்போது ஸ்ரீராமசந்திரரைத் தியானித்து மெய்ம் மறந்திருப்பாராயினார். அவர் தாய் அதனைக்கண்டு, தன் கையைத் தட்டி, அவரை எச்சரித்து, வேலைசெய்யத் தூண்டிச் செல்வாள். கபீர்தாஸர், கொஞ்ச நேரம் ஆடை நெய்து மறுபடியும் ஸ்ரீராமநாம தியானபரராய் இருப்பார்.

இந்த நிலையை, ஜகந்நாதனாகிய ஸ்ரீராமசந்திரன் உணர்ந்து, தியானபரராய் இருக்கும் கபீர்தாஸரிடத்திற்கு வந்து, குந்தி இருந்து, தானே புடைவைகளை நெய்ய ஆரம்பித்தான். மஹாயோகியர்க்கும் அகப்படாத ஸ்ரீ ஜானகீரமணன், நெய்யும்போது, கபீர் தாஸர், நனவிற் பொருந்தி தாமும் கொஞ்சம் நெய்வார். அப்போது தாசரதி மறைந்திருப்பான். திரும்பவும் உடனே கபீர்தாஸர் தியானபரராய் இருப்பார். எப்போதும்போல ரகுநாதன் மறுபடியும் அதை நெய்வான். இப்படி இருவரும் நெய்து முடித்த ஆடையைக் கபீர்தாஸர் மடித்துத் தாயார் கையில் கொடுக்க, அந்தம்மாள், கடைக்குப்போய் அதனை விற்றுவரும்படி தன்புத்திரரையே நியமித்தாள். அவர், கடைக்குப்போய், ஆடையை எதிரே வைத்துக்கொண்டு குந்தியிருந்து, மனத்தகத்தில் ஸ்ரீராமதியானம் பண்ணிக்கொண்டும், வாக்கால் ஸ்ரீராமநாமத்தை ஜபித்துக்கொண்டும், தாம் வந்த காரியத்தை மறந்திருந்தார். வழியே வந்துகொண்டும் போய்க் கொண்டும் இருக்கிற ஜனங்கள் அந்த ஆடையைக் கண்டு, "இது விலையில்லாதது; இதனை விலைகொடுத்து வாங்க நாம் அசக்தர்கள்" என்று சொல்லி, ஆடை விலை எத்தனையெனக் கேளாமலே போய்விட்டார்கள். வேறு சிலர் சமீபத்தில் வந்து, இவ்வாடையை நன்றாய்ப் பார்க்கவும் அஞ்சினார்கள். ஒவ்வொருவருக்கும், தத்தம் சக்திக்கு மிஞ்சின பதார்த்தம் என அந்த ஆடை காணப்பட்டது. ஆகையால், ஒருவரும் அதனைக் கொள்ளாமற் போனார்கள். அதற்குள் சூரியன் மறைந்தபடியால் கடைகள் அடைக்கப்பட்டன. கபீர்தாஸர் கண்களைத் திறந்து நோக்கி, "அனைவரும் அவரவர் வீட்டுக்குச் சென்றார்கள். நமது ஆடை விற்கப்படாதது ஆயிற்று. வீட்டுக்குப்போனால் தாயார் அடிப்பாள்" எனப்



பயந்து, அருகில் இருந்த ஒரு பாழ்ங்குடிசையிற் புகுந்து ஸ்ரீராம நாம தியானம் செய்திருந்தார். இங்ஙனம் இருக்கப் பகவான், இவருடைய சஞ்சல மற்ற நிஷ்டையைக் காண இஷ்டப்பட்டு, ஒரு கிழப்பிராமண வேடம்பூண்டு, கிழிந்த பழங்கந்தை உடுத்து, விடவிடவென்று நடுங்கிக்கொண்டே அங்குவந்து, "நான் பக்தன்; ஆடையின்றிக் குளிரால் வருந்துகின்றேன். ஆகையால் எனக்கொருவஸ்திரம்கொடு" என்று வேண்டினான். அதுகேட்ட கபீர்தாஸர், தன் கையிலுள்ள புத்தாடையைச் சரிபாதியாய்க் கிழித்துக் கொடுத்து, எப்போதும்போலத் தியானபரராய் இருந்தார். விருத்த வேதியனாகவந்த ஜானகீரமணன் அந்த வேடத்தை நீக்கி ஒரு பக்கீர்வேடம் பூண்டு மறுபடியும் கபீர்தாஸர்க்கு எதிரில் நின்று, "சர்வேசன் அரூபியாயிருக்க, நீஏன் உருவத்யானம் பண்ணிக்கொண்டிருக்கின்றாய்?" என்று கேட்க, அவர் அப் பக்கீரைப் பார்த்து "ஓ சாது! ஜகதீசனுக்கு உருவமும் அருவமும் சமமாயிருக்கும்;

"உருவென அருவென உளனென இலனென
அருமறை இறுதியும் அறிவரு நிலைமையை" என்றபடி,

அரூபியான பகவான், தொண்டர்களுக்காக ஸரூபியாயும் இருப்பான்; பகவானுடைய திவ்யாத்ம சொரூபத்தை ஆராயப்புகுந்தால், அது அரூபமாய் முடியும். அரூபியான ஜீவாத்மாவுக்குத் தேகசம்பந்தத்தால் உருவம் உண்டானபடி பரமாத்மாவுக்கு, திவ்ய மங்கள விக்கிரகசம்பந்தத்தால் உருவம் உண்டாயது. ஜீவாத்மாக்களுடைய தேகங்கள் கர்ம சம்பந்தமானவை. பரமாத்ம சம்பந்தமான விக்ரகங்கள், ஜ்ஞான சம்பந்தமானவை. ஜீவாத்மாக்களுடைய தேகங்கள் பஞ்சபூத சம்பந்தமானவை. பரமாத்ம சம்பந்த விக்ரகங்கள், பஞ்சோபநிஷண்மயமானவைகளாயிருக்கின்றன. குடத்திலிட்ட விளக்கொளியை, அக்குடமே மறைக்கிறபடி, பஞ்சபூத சரீரியான ஜீவனுடைய ஜ்ஞான ஒளியை அச்சரீரமே மறைக்கின்றது. சர்வேசுவரனாலும், கர்மம் ஒழிந்தவர்களான நித்திய முக்தர்களாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளவைகளும், பஞ்சோபநிஷண்மயமானவைகளுமான சரீரங்கள் (விக்ரக சொரூபங்கள்) தங்களுக்குள்ளே ஜீவாத்ம பரமாத்மாக்களுடைய ஜ்ஞானவியாபகத்தை இருமடங்கு விளங்கச்செய்யும். ஆகையால், பரமாத்மாவை அவரவர் இச்சைப்படி அரூபமாயும் சரூபமாயும் பஜிக்கலாம்" என்றார். அதைக்கேட்ட பக்கீர், "உன் உத்தரம் மிகவும் நன்றாய் இருக்கின்றது. நான் குளிரால் வருந்துகின்றேன். ஆகையால், எனக்கோராடை தருக" என்று கேட்டார். அதற்குக் கபீர்தாஸர், தாம் பிராமணனுக்குக் கொடுத்து மிகுந்த ஆடையை அவர்க்குக்கொடுத்து, அது விலையாகவில்லை என்ற எண்ணத்தை முழுதும் விட்டு, ஸ்ரீராமசந்திர தியானஞ் செய்துகொண்டிருந்தார். கபீர்தாஸர் கையிலிருந்த ஆடையைப் பகவான் இவ்வண்ணம் கைக்கொண்டு, ஒரு வேதியவேடனாய் அவர் தாயினிடத்தில் சென்று, "ஓ அம்மனி, உன்மகனாகிய கபீர், ஆடையை விற்காமல் கடையிலே ராமதியானஞ்செய்து குந்தியிருந்து, சூரியாஸ்தமன

வெளியில் அவ்வாடையை இரண்டாய்க் கிழித்து, ஒரு பாதியை ஒரு பிராமணனுக்கும், மறுபாதியை ஒரு பக்கீருக்கும் கொடுத்து, ஒரு பாழ்ங் குடிசைக்குள் நுழைந்து ராமதியானம் செய்துகொண்டிருக்கின்றான். நான் தூரத்தில் இருந்து எல்லாவற்றையுங் கண்டு வந்தேன்; மிகவும் விசனமாயிருக்கின்றது. எந்த விதத்திலாகிலும் நீங்கள் சுக ஜீவிகளாய் வாழவேண்டுமென்பதே எனது கோரிக்கை" என்றான். அதுகேட்ட அம்மாது வெருண்டு, "அவன் வந்தவுடனே தண்டிக்கின்றேன்" என்றாள். வேதியன் அந்தப் பெண்மணியைநோக்கி, "அவன் இப்போது வீட்டுக்கு வரமாட்டான்; உனக்குப் பயந்து ஒளித்திருக்கின்றான்; நீ என்னோடு வந்தால் அவனைக்காட்டுகிறேன்; வா" என்று கூப்பிட்டுக்கொண்டுபோய் அக்குடிசையைக் காட்டி, தான் வெளியில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான். அக் காரிகை, குடிசைக்குள் நுழைந்து, "எட, கபீர்! விற்கக் கொண்டுவந்த ஆடை எங்கே? உண்மை சொல்லாயானால் உன்னை அடிப்பேன்; பார்" என்று பயமுறுத்தினாள். அப்போது, பகவத்யானபரராயிருந்த கபீர்தாஸர், தம் தாயார்வந்து தம்மோடு பேசுவதை அறியாமல் மௌனமாயிருந்தார். அம் மடந்தை, அவர் பயத்தால் பேசாதிருந்தார் என எண்ணி, ஒரு கோலால் அவரைப் புடைத்தாள். அதையும் அறியாமல் அவர், தியானபரராய் இருந்தார். அந்த அடி, வெளியில் நின்றுகொண்டிருந்த வேதியவேடனாகிய தாசரதிமேல் பட்டது. அப்போது ஜகதீசன், "இந்தக் கபீரைத் தண்டிக்கும்படி இவர் தாயைத் தூண்டிவிட்டு, அதன் பலத்தை நானே அனுபவித்தேன்; இவன் பக்தி மிகவும் திடப்பட்டது. நான், பக்திவலையிற் படுபவனானேன்" என்று கூறிக் கோதண்டபாணியாய், மாணிக்கமுடி சூடி, குண்டல கேயூராதி திவ்யாபரணங்களைத் தரித்து, சீதாலக்ஷ்மண சமேதனாய், உண்மை அன்பராகிய ஆஞ்சநேயர் வாகனமாய்த் தாங்க, கபீர்தாஸர்க்குக் காட்சி தந்தருளினான். கபீர்தாஸர், பகவானைப் பணிந்து வலம் வந்து பலமுறை தொழுது, துதிக்க நாவெழாமல், தேம்பித்தேம்பித் தண்டாகாரமாய்ப் பூமியில் வீழ்ந்து, ஆனந்தபாஷ்பங்களால் பகவான் திருவடிகளுக்கு மஞ்சனமாட்டினார். பக்தவத்ஸலனான ஸ்ரீராமபத்திரன், அவரை எடுத்துத் தழுவி, "ஓ பக்த சிரோமணி! எனக்கு உன்போன்ற அன்பர்கள் மூன்று உலகிலும் இலர்; உன் பிரிவை ஆற்றேன்" என்று ஹிதவசனங்கூறி, அவர் தாயைநோக்கி, "நீ செய்ததவம், எத்தவமோ! இப்பேர்ப்பட்ட புத்திரசிகாமணி உனக்குக் கிடைத்தானல்லவா! இவன் கூட்டுறவால் உனக்கு எனது சேவை கிடைத்தது. இதுமுதல், நீயும் என்னைப் பஜித்துக்கொண்டிரு" என்று அருளிச் செய்து மறைந்தான். கபீர்தாஸருடைய தாயார் பேரானந்தமடைந்து, மகனைத்தழுவிக்கொண்டு, உச்சிமோந்து, "எனது அருமை மகனே! உன்நிமித்தம் உலக காரணனாகிய ஸ்ரீராமசந்திர தரிசனம் எனக்கும் கிடைத்தது. பிரமாதியர்களுக்கும் கிடைத்தற் கரிதான இந்தப் பெரும் பேறு எனக்குக்



கிடைத்தபடியால், என்போன்ற சௌபாக்கியவதி இவ்வுலகில் இல்லை" என்று ஆனந்த பரவசமுடையவராய் மகனை அழைத்துக்கொண்டு தனதுவீடுபோய்ச் சேர்ந்தார்.

ஸ்ரீசீதாலக்ஷ்மண ஹநூமத்ஸமேத ஸ்ரீராமசந்திரஸ்வாமிநே நம:

## ஆறும் அத்தியாயம்

## கமால்தாஸர் சரித்திரம்

பகவானாகிய ஸ்ரீராமசந்திரன் காட்சிதந்து, "ஸ்ரீராமபஜனம் செய்துகொண்டிரு" என்று நேமித்தபடி, கபீர்தாஸருடைய தாயார், அனவரதமும் ஸ்ரீராமபஜனை செய்துகொண்டு, முன்போலத் தமது புத்திரரை வருத்தாமல் பெரிதும் பாராட்டிச் சந்தோஷத்துடன் இருந்தார். கபீர்தாஸருடைய மனைவியார், அநசூயாதேவிக்குச் சமானமான கற்புடையாராகையால், கணவன் குறிப்பின்வழி நின்றார். அப்படி இம்மூவரும் ஜ்ஞானவைராக்கியம் நிறைந்தவர்களாய், காலங் கழித்து வந்தார்கள். இப்படியிருக்கையில் கபீர்தாஸர் மனைவியார், கருவுற்று, ஓர் ஆண்மகவை ஈன்றார். அக்குழந்தைக்கு, பன்னிரண்டாம் நாளில், கமால் என்று நாமகரணஞ் செய்தார்கள். அக்குழந்தை நாளொருமேனியாய் வளர்ந்து, ஜ்ஞானவைராக்கியம் நிறைந்தவனாய், தன் தந்தையோடு ஸ்ரீராமநாம தியானம் செய்துகொண்டிருந்தான். ஆறும் வயதில் அவன், தன் தகப்பனுக்கு வந்தனஞ் செய்து, "தந்தாய்! தீர்த்தயாத்திரை செய்யவேண்டுமென்று எனக்கு ஆசைபிறந்திருக்கின்றது; இது தேவரீர்க்கும் உடன்பாடு ஆனால், கட்டளையிடவேண்டும்" என்றுவேண்டினான். அதற்குக் கபீர்தாஸர், தமது மகனுடைய நல்லெண்ணத்துக்கு மிகமகிழ்ந்து, அங்ஙனஞ்செய்ய அவற்கு உத்தரவு கொடுத்து, ஆசிர்வதித்து அனுப்பினார். கமால், பிதாவின் கட்டளையைத் தலைமேற்றாங்கி, வீட்டிலிருந்து வெளியேறி, ஸ்ரீராமநாம தியானம்செய்துகொண்டே, யாத்திரை போய்க்கொண்டிருந்தார். வழியில் இவரைக்கண்டபாகவதர்கள் அனைவரும், தத்தம் இடங்களுக்கு அழைத்துக்கொண்டுபோய் உபசரித்து வாழ்த்தி அனுப்பினார்கள். இவர் இரவும் பகலும் இடைவிடாமல் நாரதரைப்போல ஸ்ரீராம நாமதியானபரராய், ஸ்ரீ துவாரகைக்குப் போய்ப் பகவத்பக்திசெய்துகொண்டு, நாலுமாதம் அங்கேவசித்தார். அங்கிருந்து புறப்பட்டு, இவர், பலதீர்த்தங்களில் மூழ்கி, பீமநதிக்கரைக்குவந்து திரிகோடி தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, அங்கிருந்த விஷ்ணு பக்தர்களோடுகூடி ஆனந்தபரவசராய் இருந்தார். அங்கே விஷ்ணு தாஸன் என்னும் வர்த்தகன் ஒருவன், கமால்தாஸரைத் தனது கிருகத்துக்கு அழைத்துக் கொண்டுபோய், பூசித்து நேசித்து அவர் பக்திக்காக சந்தோஷித்து, "நிராசையாளராகிய இவருக்கு நாம் என்ன கொடுக்கலாம்" என யோசித்து,

தனது பணப் பெட்டியிலிருந்த விலையில்லா மாணிக்கம் ஒன்றைக் கொண்டு வந்து அவர் பாதங்களில் காணிக்கையாக வைத்து, "ஓ, சுவாமி! இந்தமாணிக்கம் உலகத்தை விலை மதிக்கத்தகுந்தது; இருட்டிடங்களில் வேறு விளக்குகள் வேண்டாமலே இது பிரகாசித்துக்கொண்டிருக்கும். இம்மணியை ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று வேண்டினான். கமால்தாஸர் அவனை நோக்கி, "நான் இம்மணியைக்கொண்டு போனால் வைராக்கிய சீலரான எனது தந்தையார் கோபிப்பார்; மேலும், பசியுள்ளவனுக்கு அன்னமிடுவதுபோல, இதனை விரும்புகிறவர்களுக்கு இதனைக்கொடுப்பது உத்தமம். பசியில்லாதவனுக்கு அன்னங்கொடுப்பதுபோல, இதனை விரும்பாத எனக்கு இதனைக் கொடுத்தல் வீண்" என்றார். அதற்கு அவ்வர்த்தகன் சிறிது யோசித்து, கமால்தாஸர்க்குத் தெரிவிக்காமல் அம்மணியை அவர் ஆடையின் முன்தானையில் பத்திரமாய் முடிந்துவைத்தான். அவனிடத்தில் விடைபெற்றுச் சென்ற அவர், இடைவழியில் முடியை யவிழ்த்துப் பார்த்து, "வர்த்தகன் எனக்குத் தெரிவிக்காமலே, அன்பின் மிகுதியால் செய்தகாரியம் இது" எனத்தீர்மானித்து, தம்து வீடுசேர்ந்து, தந்தையாராகிய கபீர்தாஸருக்குச் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, அம்மாணிக்கத்தை அவர் பாதகமலங்களில் அர்ச்சனைசெய்து, நடந்த விருத்தாந்தங்களை விண்ணப்பித்தார். அதுகேட்ட கபீர் அழ ஆரம்பித்தார். அப்போது அவர் மனைவியார் விரைந்தோடிவந்து, தீர்த்தயாத்திரைபோய் வந்த செல்வனை எதிரில் வைத்துக்கொண்டு புலம்பும் கணவரை நோக்கி, "எனது உயிர்க்காதல! இப்போது தேவரீர் விசனப்படும் காரணம் யாது?" எனவினவினார். அதற்குக் கபீர்தாஸர் தமது புத்திரனைப் பார்க்கச் சகியாதவராய் மனைவி முகத்தை நோக்கி, "இந்தச் சிறு பிள்ளையால் நாமெல்லாம் நாசமாய்ப்போவோம்; இப்பேதை, ஸ்ரீராம நாமத்தை விற்று ஒரு மாணிக்கம் பெற்று வந்தான். கஸ்தூரி கொடுத்து கழுதைச்சாணம் வாங்கி வந்ததுபோல இம்மூடன் ஸ்ரீராமநாமத்தைக் கொடுத்து, செங்கல்லைக் கொண்டுவந்தான்" என்றுகூறி மூர்ச்சையடைந்து பூமிமேல் வீழ்ந்தார். அதுகண்ட கமால்தாஸர் பயந்து, திக்பிரமைகொண்டு வீடுவிட்டுப் புறப்பட்டு, அந்த வர்த்தகன் வீட்டுக்குப் போய், மணியை அவனிடத்திற் சேர்த்துத் திரும்பித் தமது வீடுசேர்ந்து தந்தையை வணங்கி, "ஓ, தந்தாய்! அடியேனை மன்னிக்கவேண்டும். மணியை வர்த்தகனிடம் சேர்த்து விட்டேன்" என்று விண்ணப்பஞ்செய்தார். அப்பொழுது கபீர்தாஸர் சந்தோஷித்துத் தமது மகனைத் தழுவிக்கொண்டார்.

இவர்களிருவரும் ஸ்ரீராம பஜனம் செய்துகொண்டு வாழ்ந்து வருகிறகாலத்தில், ஒருநாள் இராத்திரி தீர்த்தயாத்திரை செய்பவர்களாகிய சிலர், பாகவத முதல்வர்களாகிய இவர்கள் வீட்டுக்கு வந்தார்கள். கபீர்தாஸர், அவர்களை எதிர்கொண்டுபோய்ச் சேவித்து, உபசாரத்துடன் அழைத்துக்கொண்டுவந்து, ஆஸனங்கொடுத்து எழுந்தருளப்



பண்ணி மனைவி மகனோடு கூடிச் சந்தோஷித்திருந்தார். ...
தாஸர், தமது இல்லாளைநோக்கி, "இப்பாகவதர்கள், நாம்செ...
ணியவசத்தால் நமது வீட்டுக்கு எழுந்தருளினார்கள்; இவர்க...
அமுது ஊட்டவேண்டும்" என்று கூறினார். அதற்கு அக்கற்புக்க...
யார், கணவரைநோக்கி, "பிராணநாதா! நான் என் செய்வேன்! வீட்டில் ஒரு வஸ்துவானாலும் இல்லையே! கடன் மிகுந்திருப்பதனால் இனித் தருவார் யாருமிலர். இப்புண்ணிய புருஷர்களைப் பட்டினியிருக்கச் செய்வதைவிட நாம் இறப்பது மேல்" என்று கூறினார். அதுகேட்ட தந்தை மைந்தர் இருவரும் சிறிது யோசித்துக் கடைக்குப் போய்த் திருடிவந்தாலும் பக்தர்களை உண்பிக்கவேண்டும் எனத் தீர்மானித்து ஆயுதபாணிகளாய் கடை வீதியிற் புகுந்து, அங்கொரு கடையிற் கன்னமிட்டார்கள். கமால்தாஸர் அதற்குள் நுழைந்து அரிசி, பருப்பு முதலான போஜன பதார்த்தங்களை, வேண்டியமட்டுந் திருடி, வெளியே நின்ற தந்தையிடத்திற் கொடுத்தார். தமது வேலை முடிந்தபிறகு தாம் சும்மாப்போய்விட்டால், அந்நியர்கள் நுழைந்து, அக்கடையிலுள்ள பண்டங்களைக் கொள்ளையடிப்பார்கள் என்றெண்ணின கமால்தாஸர், அங்கே உறங்கிக்கிடந்த அக்கடை வர்த்தகனைத் தமது கைதட்டி எழுப்பி, தாம் வெளியேறுவதற்காக, கன்னமிட்டவழியில் நுழைந்தார். இதற்குள் வர்த்தகன் விழித்தெழுந்தோடிவந்து, அவர் கால்களை இறுகப் பிடித்துக்கொண்டான். கமால் தாஸருக்குப் பாதி சரீரம் வெளிப்புறமாகவும் பாதி சரீரம் உட்புறமாகவும் இருந்தபடியால், அவர் தமது தந்தையை நோக்கி, "தந்தாய்! மிருகம் வலையிலகப்பட்டபடி நான் வர்த்தகனிடத்தில் அகப்பட்டுக்கொண்டேன். இவன் மூலமாய் எனக்கு இராஜ தண்டனை கிடைக்குமேல், உலகத்தார் நம்மை வெளி வேஷதாரிகள் என மதித்து, நம்மைப்போன்ற ஸ்ரீராமநாம பஜனை கோஷ்டிகளைப் பலவிதமாய் அவமதிப்பார்கள். நமது வீட்டுக்கு வந்திருக்கும் சாதுஜனர்கள் இந்த விருத்தாந்தத்தைக் கேட்டால், துஷ்டர்கள் என்று நம்மைக் கை விடுவார்கள். அதனால் இனி எப்பொழுதும் சாதுக்கள் நம்மைச் சேரார்கள். ஆகையால், தேவரீர் சிறிதும் சிந்திக்காமல் என் தலையை அறுத்துக்கொண்டு போகக் கோருகிறேன். புத்திரனென்ற அபிமானத்தை விட்டு ததீயாராதனபரராய், மலரகிதராய்த் தேவரீர் வாழவேண்டுகின்றேன்" என்று கூறினார். அதற்குக் கபீர்தாஸர் மிக மகிழ்ந்து, தமது மைந்தனுடைய உத்தம வார்த்தைகளைக் கொண்டாடி, தமது கரத்திலிருந்த வாளால் கமால்தாஸர் சிரத்தைத் துணித்துக்கொண்டு வீட்டுக்குவந்து, திருடிக்கொண்டுவந்த பதார்த்தங்களுடனே, தமது மகன் தலையையும் மனைவிகையிற்கொடுத்து, நடந்த விருத்தாந்தங்களை அறிவித்தார். அக்கற்புக்கரசியார், தமது புத்ரசிகாமணியின் நற்குணங்களை நினைந்து, கண்ணீர்விட்டு, "ஓ மகனே! சாதுக்களுக்காக மரணத்தைத் திரணமாக மதித்தனையல்லவா! நீயே பாக்கியவான்; புத்ரன் என்றபேர் உனக்கே தகும்; எங்களை நரகின் மீட்டனை;

...மூவாமருந்து’ என்ற மூதுரை உனக்கே தகும்” எனக் ...ண்ணீரைத் துடைத்துக்கொண்டு மனதைத் தைரியப்படுத்திச் சமாதானத்தோடு சமையல் செய்யப்புகுந்தார்.

முற்காலத்தில் சடாயு, பகவான் விஷயமாகத் தமது சரீரத்தைக் கொடுத்தார். தற்காலத்தில் கமால்தாஸர், பாகவதர்கள் விஷயமாக தமது சரீரத்தைக் கொடுத்தார். ஆகையால், இக்கமால் தாஸருடைய தவமுயற்சி சால வியக்கத்தக்கது. பிறகு கபீர்தாஸருடைய மனைவியார் அறுசுவையோடு கூடிய உணவாதிகளைப் பாகஞ்செய்து, பகவானுக்கு நிவேதனம்பண்ணி, பாகவதர்களை யுண்பித்தார். அவர்கள் அனைவரும் உண்டுகளித்துச் சுகமாய் உறங்கி, விடியற்காலையிலெழுந்து, புறப்பட்டுப் போகும்போது, அவர்களை வழிவிட்டுவர, கபீர்தாஸர், பின்பற்றிப் போனார். மகனுடைய தலையைக் கபீர்தாஸர் அறுத்துக் கொண்டு வந்தபிறகு, அவ்வர்த்தகன், அம்முண்டத்தை அரசனுக்குக் காட்டி, நடந்தவிருத்தாந்தங்களை விண்ணப்பித்தான். ஜனங்கள் நடமாடுகிறவழிக்குச் சமீபத்தில் எல்லாரும் பார்க்கும்படி அவ்வரசன் அம்முண்டத்தை ஒரு சூலத்திற் குத்தி இருத்துங்கள் என்று காவலாளர்களுக்குக் கட்டளை யிட்டான். கபீர்தாஸர், பாகவதர்களோடு வழியே போய்க்கொண்டிருக்கையில், அம்முண்டம் அவர்களைக் கைகூப்பித்தொழுதது. அதனைப்பார்த்த அப்பாகவதர்கள், அதிசயமடைந்து, “இம்முண்டம் நம்மைக் கைகூப்பித் தொழுதல் மிக்க விநோதமாய் இருக்கின்றது” என்றார்கள். கபீர்தாஸர், அவர்களைநோக்கி, “சாதுக்களே! இது விநோதம் அன்று; ஸ்ரீ பீஷ்மாசாரியர் அம்புப் படுக்கையில் கிடந்தும், உத்தராயணத்தை எதிர்பார்த்துத் தமது தேகத்தில் பிராணனை இருத்தி வைக்கவில்லையா? சடாயு, இராவணன் கைவாளால் எறியப்பட்டு பூமியில் விழுந்தும், ஸ்ரீ ராமரைக்காணும் அவாவால் உயிர்பிழைத்திருக்க வில்லையா? அப்படி இவ்வைணவ மகாபுருஷன், எந்தக்காரணத்தினாலேயோ, தலை யிழந்திருந்தும் பரமபாகவதர்களாகிய தேவரீரைச் சேவிக்கு நிமித்தம் பிராணனோடு பிழைத்திருக்கிறவன் போல் தோன்றுகின்றது. இப்பொழுது அவனுடைய நல்லெண்ணம் ஈடேறினதனால், அவன் ஆத்மா பரமபதம் சேரச் சந்தேகமில்லை” என்றார். அதுகேட்ட பாகவதர்கள், நடந்ததை ஒளிக்காமற் சொல்லும்படி அவரை வற்புறுத்தினார்கள். அதனால் அவர் சந்தோஷத்தோடு, நடந்த விருத்தாந்தத்தை உள்ளது உள்ளபடி விண்ணப்பஞ்செய்தார். அதற்குப் பாகவதர்கள் மிகவும் இரங்கிக் கபீர்தாஸர் மனைவியாரைக் கமால் தாஸருடைய தலையோடு வரச்செய்து, அம்முண்டத்தைச் சூலத்துச்சியிலிருந்து கீழிறக்கி, அதனோடு அத்தலையை ஒட்டுவித்துத் தமது கரங்களால் தொட்டுத் தடவிப் பகவானைத் தியானித்து, கருணாகரனும் அவனது தண்ணளியால் அச்சிறுபிள்ளை பிழைக்கக்கடவன் என வாழ்த்தினார்கள். உடனே கமால்தாஸர் உறங்கி விழித்தவர்போல எழுந்து, பாகவதர்களுக்கும் தாய் தந்தையர்களுக்கும் பிரதக்ஷிண



நமஸ்காரங்கள் செய்தார். இவ் வற்புதங்களைக் கண்ட வாரணாசிஜனங்கள் பாலர்முதல் விருத்தர்வரையில் எல்லாரும், கபீர்தாஸர், கமால் தாஸர் ஆகிய இவ்விரு பாகவதசிகாமணிகளுடைய ததீயாராதன வைபவத்தைப் பலவாறு கொண்டாடினார்கள். பாகவதர்கள் கபீர்தாஸரைச் சன்மானித்து அவருடைய பெண்டு பிள்ளையுடன் அவரை வீட்டுக்கு அனுப்பித் தாங்கள் தீர்த்தயாத்திரை போனார்கள்.

ஸ்ரீ ஹரிதாஸேப் யோநம:

## ஏழாம் அத்தியாயம்

# கபீர் தாஸர் சரித்திரம்

ஒருநாள் கபீர் தாஸர் ராமநாம பாராயணம் பண்ணிக்கொண்டு கடைவீதியிற் போகும்போது, பெண்ணொருத்தி இயந்திரத்தில் மாவரைப்பதைக்கண்டு சிறிது நேரம் கவனித்துத் தம்குரலெடுத்து அழ ஆரம்பித்தார். அங்கிருந்தார் அனைவரும், “ஐயா! தாங்கள் என் அழுகிறீர்கள்? தங்கள் விசனத்துக்குக் காரணம் என்ன? தங்களை யார் என்னசொன்னார்கள்?” என்றுகேட்க, அதற்கவர் “இவர்களுக்கு என் துக்கத்தைத் தீர்க்கவல்லமை யுண்டா! ஒருவன் தன்னைப் போலவே, துக்கப் படுகிறவர்களோடு, தன் துக்கத்தைச் சொல்லிக் கொள்வதனால் பிரயோஜனம் என்ன! சகோரப்பறவைக்கு நேரிட்ட பசிநோய் சந்திரோதயத்தால் தீருமாறுபோல எனது துக்கம் பரமாத்மதரிசனத்தால் தீருமல்லாமல் வேறொன்றால் தீராது” என்றெண்ணி மௌனமாயிருந்தார். அப்போது நிரஞ்சனர் என்னும் பகவத்பக்தர் ஒருவர், அங்கு வந்து அவரைப்பார்த்து, “ஓ, சாது! என் அழுகின்றீர்” என்று கேட்டார். அதற்குக் கபீர்தாஸர் தமது கண்ணீரைத்துடைத்துக்கொண்டு அவரைப் பார்த்து, சந்திர தரிசனத்தால் சமுத்திரம் பொங்குவதுபோல ஆனந்தமடைந்து, “உத்தமபக்த! நான் இங்கே வரும்போது பெண்ணொருத்தி இயந்திரத்தில் மாவரைத்துக்கொண்டிருந்தாள். அதைப்பார்த்த வுடனே, சாதுக்கள் சொல்லுகிறபடி சமுசார சக்கரத்தில் அகப்பட்ட அஞ்ஞானிகளாம் ஜீவர்கள் தாங்கள் செய்த தீவினைப்பயனாகிய யமவேதனையை அநுபவித்துக்கொண்டிருக்கிற விஷயம் என் புத்தியில் புலப்பட்டது. இயந்திரத்தின் மேற்கல், ஆகாசம் என்றும் கீழ்க் கல், பூமி என்றும் அவ்விரண்டிற்கும் இடையிலகப்பட்ட * தண்டுலம், ஜீவர்கள் என்றும் அதனைச் சுழற்றிக்கொண்டிருக்கிற பெண், இயமன் என்றும் எண்ணி, தெரிந்தும் தெரியாமலும் மனவாக்கு காயங்களால் பகவானையும் பாகவதர்களையும் அவமதித்து, அதனால் தீவினையில் முதிர்ந்த எனக்கும் இப்பேர்ப்பட்ட துக்கம் நேரிடுமல்லவா என்று அழுதேன்” எனக்கூறினார். அதுகேட்ட நிரஞ்ச

* தண்டுலம் - அரசி.

னர், கபீர்தாஸரைப்பார்த்து, "உமது எண்ணம் மிக நன்றாய் இருக்கின்றது. ஆனாலும், அவ்வியந்திரத்தின் நடுவிலிருக்கும் அச்சைச்சூழ, ஓர் அங்குலம் அல்லது ஈரங்குல தூரத்துக்குள் அகப்பட்ட அரிசி, அவ்விரு கற்களின் இடையில் இருந்தும் மாவாகாமல் தப்பி நிற்கவில்லையா?" என்று கூறி, அதனைக் கபீர்தாஸருக்குக் காட்டி, "விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையில் உள்ள எல்லாப் பிராணிகளையும் இயமன் தண்டித்துக்கொண்டிருப்பது உண்மை ஆனாலும் இயந்திர அச்சைச் சார்ந்த தானியம்போல, பகவந்நாமத்தைக் கடைப்பிடித்து,

'தானத்திற் சிறந்தது அன்னதானம்
யாகத்திற் சிறந்தது ஜபயாகம்'

என்றபடி,

பகவான், தானே கொண்டாடின ஜபயாகத்தில் நிஷ்டைகூடி நிற்கும் ஜீவராசிகளுக்கு, ஒருகாலத்திலும் பயமில்லை" என்று சமாதானம் கூறினர். அதற்குக் கபீர் தாஸர், அவரைவந்தனஞ்செய்து, தமது துக்கத்தைவிட்டு, ஸ்ரீராம நாமதியானம் பண்ணிக்கொண்டு, தம்வீடு போய்ச் சேர்ந்தார். பிறகு கபீர் தாஸர் அனவரதமும் ஸ்ரீ ராம நாம பஜனபரராய், உலகத்தார் உய்யும் வண்ணம் பலகீர்த்தனங்களை இயற்றி ஆனந்த மடைந்திருந்தார்.

ஒருநாள் தாம் ஒன்றியாய் இருந்து பின்வருகிறபடி சிந்திக்கலானார்:—

"அன்பில்லாப் பகவத் கீர்த்தனங்களைப் போலவும் அருளில்லா ஞானத்தைப்போலவும் வைராக்கியம் இல்லாத்துறவியைப் போலவும் உத்தம குருபரன் இல்லாப் பகவத்பக்தி, விளக்கம் உறாது. ஆகையால் ஞானநுஷ்டான பானுநிய ஆசாரியனை அடைந்து, நான்ஈடேற வேண்டும்.

'ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையிற் பேதையார் இல்'

என்றபடியும்,

'தனக்கொரு மந்திரம் தெரியாதாம்
தான் சிலபேர்க்குக் குருவாம்'

என்றபடியும்,

ஞானசூனிய அவிவேக பூரண குருவை அடைந்தும் பலன் என்ன!. ஞானமில்லாதவன் குருடன்; அநுஷ்டானம் இல்லாதவன் முடவன்; ஞானநுஷ்டானங்கள் இரண்டும் உண்டானால், ஒருவன், தனக்கும் பிறர்க்கும் பயன் படுவான். ஆகையால், நான், ஓர் ஆசாரிய சுவாமிகளை அடைந்து பரிசுத்தனாவேன்"

என்றிப்படிப்பலவாறு யோசித்து, காசியம் பதியில் வசித்துக் கொண்டிருந்த ஸ்ரீராமாநந்த ஸ்வாமிகள் என்னும் துறவியைச் சரணடைய வேண்டுமென்று, கபீர்தாஸர் இச்சித்தார். ஸ்ரீ சீதாதேவியும் ருக்மிணிதேவியும், பல்லரசர்களையும் பராமரித்து, ஸ்ரீராமருக்கும் கிருஷ்ணருக்கும் மாலையிட்டதுபோல, கபீர்தாஸர், பல்லாசிரியரையும் பரா



மரித்து, ஸ்ரீராமாநந்தஸ்வாமிகளைப் பரமாசாரியராக வரிக்கவேண்டி, அவரது ஆசிரமத்துக்குப்போய்த் தூரத்தே நின்று, சாஷ்டாங்க நமஸ்காரங்கள்செய்து, கைகூப்பித்தொழுது, "சுவாமீ! அடியேனைக்கடைக்கண் பார்த்து ஞானோபதேசம் செய்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தார். ஸ்ரீராமானந்த சுவாமிகள், கபீர்தாஸர், துருக்கரானபடியால், அவர்க்கு உபதேசித்தால், உலக நிந்தனைக்கு இடமாமென்று எண்ணி மௌனமாயிருந்தார். கபீர்தாஸர், மடத்துக்கு வெளியே நின்று, "நான், கீழ் மகன்; ஒன்றுக்கும்பற்றாதவன்; தேவரீருடைய பாதகமலங்களை அடியேனுடைய பாதக மலங்களறச் சரணடைகின்றேன்; சரணடைந்தவனைத் தள்ளல் தருமமன்று" என்று விண்ணப்பித்து, மேகஜலத்தை எதிர்பார்க்கும் சாதகப்பறவைபோலே, குருகடாக்ஷத்தை எதிர்பார்த்திருந்தார். ஸ்ரீராமானந்தர், உள்ளிருந்தபடியே, "நீ, மிலேச்சன் ஆகையால், நான் உபதேசிக்கமாட்டேன்" என்று சொல்லி மௌனமாயிருந்தார். அப்போது கபீர்தாஸர், "என்மனம் தேவரீர் திருவடித் தாமரைகளை விரும்பியிருக்கின்றது. பூர்வத்தில், தன்னைத்தள்ளின துரோணாசாரியரை, விடாமல் பக்திசெய்து, சித்திபெற்ற ஏகலைவனைப்போல, தேவரீர் வெறுத்துத்தள்ளினாலும் நான் விடாமல் பக்திசெய்து எவ்விதத்திலானாலும் தேவரீர் கடாக்ஷத்திற்குப் பாத்திரவானாவேன்" என்று விண்ணப்பித்துத் தம்வீடுபோய்ச் சேர்ந்தார். பிறகு ஒருநாள், கபீர்தாஸர், "ஸ்ரீராமானந்தர் வாக்கால் ஸ்ரீராமநாமத்தைக் கேட்கவேண்டும்; அவர் காற்பொடி என்தலையில் தாக்கவேண்டும்; இதற்குச் செய்யவேண்டிய உபாயம் யாது!" என்று சிந்தித்து, ஸ்ரீராமானந்தர் ஸ்நானஞ் செய்யப்போகும் வழியில், பூமிக்குள் ஒரு பள்ளம் எடுத்து அதனில் குந்தி, தலையை மாத்திரம் வெளியில் காட்டி, மேகவரவை எதிர் நோக்கும் சாதகப் புள்ளேபோல, ஸ்ரீராமானந்தர் வரவை எதிர் நோக்கியிருந்தார். விடியற்காலையில் ராமானந்தர், கங்காஸ்நாநத்துக்காக வெளிப்பட்டுவந்து, கபீர்தாஸர் தலைமேல் அடிவைத்து, "ஓஹோ, ஓஹோ! இருட்டிலே தெரியாமல், யார்மேலேயோ, கால்வைத்து மிதித்து விட்டேன்" என்று இரக்கத்துடன் "ஸ்ரீ ராம ராம" என்று உச்சரித்துக்கொண்டிருந்தார். கபீர்தாஸர், உடனே எழுந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து,

"அரியவற்றுளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்"

என்றபடி,

பேரானந்தப்பட்டு, "ஆசாரியசுவாமிகளே! தேவரீருடைய பாதகமலங்களால் அடியேனுடைய உத்தமாங்கத்தை அலங்கரித்து ஸ்ரீ தாரகமந்திரத்தை உபதேசித்தீர்கள்; என்போன்ற பாக்கியவான் மூவுலகினும் இல்லை. எனது தவப்பயன் இன்று ஈடேறிற்று" என்று துதித்தார். ஸ்ரீ ராமானந்தர், ஸ்ரீ ராமநாமதியானம் பண்ணிக்கொண்டு, விஷ்ணுபதி என்னும் கங்கையில்மூழ்கி, சந்தியாவந்தனாதி அநுஷ்டானங்களை முடித்து, தமது ஆசிரமம் சேர்ந்து, "கபீரைப் போன்ற மஹா பாகவத

சிரோமணியை இதுவரையில் இந்நிலவுலகில் கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை. உயர்ந்த பொன்னை நெருப்பிலிட்டுக் காய்ச்சிச் சோதிப்பதுபோல, அவனுடைய உறுதியை இனிச் சோதித்துப்பார்ப்பேன்" என்று எண்ணிக்கொண்டிருந்தார்.

இங்ஙனம் இருக்க, ஒருநாள் கபீர்தாஸர், கடைவீதியில் ஸ்ரீராமநாமசங்கீர்த்தனம் பண்ணிக்கொண்டு ஆனந்தபரவசராய், "எமது குருபராகிய ஸ்ரீ ராமானந்த சுவாமிகள் என்மீதுள்ள கருணையால் ஸ்ரீ தாரகநாமத்தை உபதேசித்தார்" என்று கூறி,

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்" என்றபடி,

அவர் பெருமையைப் பாராட்டி, அன்பின் மிகுதியால் ஆனந்தக் கூத்தாடினார். அதனைச் சில பிராமணர் கண்டு வெறுப்புற்றவர்களாய், அவர் செய்கையை ஸ்ரீ ராமானந்தருக்கு விண்ணப்பஞ் செய்தார்கள். ஸ்ரீ ராமானந்தர், கபீர்தாஸர் விஷயத்தில் அதிக அன்புடையவராய் இருந்தும், தன் எண்ணத்தைப் பிறர்க்குஞ் வெளியிடாமல், கோபங்கொண்டவர்போல நடித்து, உடனே கபீர்தாஸரிடத்திற்கு வந்தார். தம்மைக்கண்டவுடனே *பயபக்தி விஸ்வாஸமுடையவராய் வணங்கிக் கைகூப்பிநின்ற கபீர்தாஸரை, இராமாநந்தர், "அட! துருக்கக் கீழ்மகனே! நான் உனக்கு மந்திரோபதேசம் செய்தேன் என்றும், அதனால் நீ என் சிடன் ஆனாய் என்றும் ஏன் மதங்கொண்டு வம்பளக்கின்றனை? நான் உனக்கு உபதேசித்ததற்குச் சாக்ஷி யாவர்?" எனக்கேட்டார். கோபிகைகள், கண்ணன்செய்த குறும்புகளைக் கூறி முறையிட்டபோது, யசோதை, தனக்குள் நிரம்பியிருந்த ஆசையை வெளியேகாட்டாமல், அவர்களைத் திருப்திசெய்யுமாறு, கண்ணனைத் தண்டித்தபடி, ஸ்ரீ ராமாநந்தரும், கபீர்தாஸர்மீதுள்ள தமது அன்பை மறைத்து, கோள் சொன்னபிராமணர்களைத் திருப்தியடைவிக்கு நிமித்தம், கோபங்கொண்டவர்போல நடித்து, தமது பாதுகையால் கபீர்தாசரை மத்தகத்தில் புடைத்தார். அப்போது, கபீர்தாஸருக்குப் பாதுகை மோதுகையால், உதிரம் பெருகியது. அவர், பரமானந்தபரவசராய், "என்னை யாண்ட உத்தம தேசிகமணியே! தேவரீர், தாஸனாகிய எனக்கு ஸ்ரீ தாரகநாமத்தை உபதேசித்தபோது, அருகில் ஒருவரும் கண்டார் இலர். நம்மைச் சிஷ்யாசாரியர்களாய்க் கூட்டிவைத்த சர்வ சாக்ஷாத்கார ஸர்வேஸ்வரன் ஒருவனே சாக்ஷியாய் இருந்தனன். அக்குறைதீர இப்போது, தேவரீர், விருத்தர் முதல் பாலர் வரையிலுமுள்ள எல்லாருங்காண, எனக்கு எய்ப்பில் வைப்புப்போன்ற பாதுகையால், தாஸனாகிய எனது உத்தமாங்கத்தை அழகு பெறச் செய்தீர்கள். ஓ ஜனங்காள்! சமுசாரக் கடலில் மூழ்கித் துறைதெரியாமல் அலையும் எனக்கு ஸ்ரீ தாரகநாம ஞானத்தை அருளிப் பரம கிருபாகடாக்ஷத்தால் என்னைக் கரையேற்றின மஹா புண்ணிய சீலர் இவரே; எல்லாரும் வாருங்கள்; இவரைப் பாருங்கள்" என்றுசொல்லி, மிகவணக்கத்துடன்



கைகூப்பி நின்றார். ஸ்ரீ ராமானந்தர் மிகவியந்து களிப்படைந்து, கபீர்தாஸர் சென்னியில், தமது அபயாஸ்தத்தைவைத்து, "பாகவதமுதல்வ! இடைவிடாமல், ஸ்ரீ தாரக நாமோச்சாரணம் செய்துகொண்டிருக்கக் கடவாய்" என்று தமது மடத்துக்குச்சென்றார்.

கபீர்தாஸர் ஆனந்த பரவசராய், அநேகவிதமாக ஸ்ரீ ராமசந்திரனுடைய நற்குணங்களைப் புகழ்ந்து, காசிவாசிகளால் கொண்டாடப்பட்டு வாழும் நாளில், சில துஷ்டர்கள், உதாரபுருஷனைப் பார்த்து உலோபனும், குலமகளைப் பார்த்து விலை மகளும், பண்டிதனைப் பார்த்துப் பாமரனும், ஆஸ்திகனைப் பார்த்து நாஸ்திகனும், சீரியனைப் பார்த்துப் பூரியனும் மனவெறுப் படையுமாறு, கபீர்தாஸருடைய நற்குணத் தொகுதிகளைக்கண்டு கேட்டுப் பொறுக்காதவர்களாகித் துரியோதனாதி துஷ்டர் கூட்டம், ஸ்ரீ கிருஷ்ணற் கன்புடையாராகிய பாண்டவர்க்குக் கேடுசூழ்ந்து, ஒருபதினாயிரம் சிஷ்யராசிகளுடன் துர்வாசமுனிவரை அனுப்பினாற்போல, கபீர்தாஸருக்குக் கேடுநினைத்துத் தேசாந்தரங்களில் உள்ள பாகவதர் எல்லாரும் ஒரேதினத்தில் காசியில் ஒன்றுகூட வேண்டுமென்று, காபீர்தாஸர் கோரி எழுதினபடி, விண்ணப்பப் பத்திரங்கள் எழுதி, அவர் கையெழுத்திட்டு அனுப்பினார்கள். அப்பத்திரங்களைக்கண்டமாத்திரையில், அயோத்தி, பிருந்தாவனம், மதுராபுரி, கோகுலாபுரி, துவாரகாபுரி, ஸ்ரீமத் பண்டரிபுரம், ஸ்ரீஜகந்நாதம் முதலிய புண்ணியஸ்தலவாசிகளான பாகவதர்கள் எல்லாரும், வாஸ்தவத்தில்கபீர்தாஸர் தம்மை வரவழைத்தார் என நம்பி, ஒரே காலத்தில் ஒரு நூறாயிரவர்க்கும் அதிகமாகவாரணாசியில்வந்து ஒருங்குசேர்ந்தார்கள். வஞ்சனையாய்அவர்களைவரவழைத்ததுஷ்டர்கள், "கபீர்தாஸர் இத்தனை பேர்க்கும் எப்படி உபசரித்து நிர்வகிப்பாரோ நாம் பார்க்கலாம்" எனக் கண்குளிர வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். பாகவத சிரோமணியாகிய கபீர்தாஸர், அங்குவந்த பாகவதர்களை எதிர்கொண்டு ஆலிங்கன வந்தனாதி உபசாரங்கள் செய்து, "இன்று, சடுதியில் அநேக பரம பாகவத தரிசனம் கிடைத்தது" என்று சந்தோஷித்திருந்தார். ஸ்ரீ கிருஷ்ணர், ராஸக்ரீடையென்னும் கூத்தாட்டத்தில் பல உருவங்களெடுத்து ஒவ்வொரு கோபிகைக்கும் ஒவ்வொரு கிருஷ்ணனாக இருந்தபடி, கபீர்தாஸருடைய வழிபடு கடவுளாகிய ஸ்ரீஜானகீரமணர், அளவற்ற கபீர்தாஸ உருவங்களெடுத்துக் கங்கைக்கரையில் கூடியிருந்த பாகவதர்களில் ஒவ்வொருவரிடத்திற்கும் ஒவ்வொருகபீர்தாஸரெனப்போய் உபசரிக்கலானார்: ஒரு சாதுவை க்ஷேமலாபம் கேட்டார்; ஒருவர்க்குக் கைகால் அலம்ப நீர் தந்து உபசரித்தார்; ஒருவர்க்கு ஸ்நானஞ் செய்வித்து மடி உடை தந்தார்; ஒருவர்க்குப் பூசைக்கு வேண்டிய பொருள்கள் தந்தார்; ஒருவரைப் பீடத்திருத்தி விசிறிகொண்டு விசிறினார்; சிலரைப் பந்தி உட்காருவித்து அறுசுவை உண்டி பரிமாறினார்; சிலர்க்குச் சந்தன தாம்பூலாதிகள் தந்து உபசரித்தார்; சிலரோடு பகவந்நாம சங்கீர்த்தனம் பண்ணிக்கொண்டிருந்தார்; சிலர்க்கு

சன்மார்க்க நீதிபோதித்தார்; சிலர் கரங்களைப்பற்றிக் கூத்தாடினார். இப்படி மூன்று நாள் இரவும் பகலும் அனைவருக்கும் பலவித உபசாரங்கள் செய்து, ஸ்ரீ ஜானகீரமணர், அவர்களை இருப்பிடத்துக்கு விடைகொடுத்து அனுப்பினார். கபீர்தாஸர் ஆனந்தபரவசராய், ஸ்ரீராம நாம சங்கீர்த்தனம் பண்ணிக்கொண்டிருந்தார். இவர்க்குக் கேடு நினைத்த துஷ்டர், தங்கள் எண்ணம் ஈடேறாமல் போனபடியால், நாணி, இவர் சந்நிதியில் வந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, தாங்கள் செய்த குற்றங்களை மன்னிக்க மன்றாடி, இவர் அருளைப்பெற்று, காமாதி குற்றங்களை விட்டு, சன்மார்க்கர்களாய், தாங்களும் ஸ்ரீராமபஜனம் செய்து வாழ்ந்தார்கள்.

அனந்த ரூபாயநம:

# எட்டாம் அத்தியாயம்

## நிவர்த்திதேவர், ஞானதேவர், சோபானதேவர், முக்தாபாய் இவர்களுடைய அவதார சரித்திரம்

கங்காதீரத்தில், அப்புபுரத்தில், கோவிந்தபண்டிதர் என்னும் வைஷ்ணவ உத்தமர் ஒருவர் இருந்தார். அவர் இல்லாள் நிராபாய் என்னும் பெயருடையாள். இவர்கள் இருவரும் சந்ததியில்லாமல் வருந்தி, பகவானைப் பிரார்த்தித்துக்கொண்டிருந்தார்கள். அவனருளால், அவர்களுக்கொரு மகன் பிறந்தான். பிறந்த பன்னிரண்டாநாள் அவனுக்கு விட்டோபா என்று நாமகரணஞ்செய்து, தாய்தந்தையர் அவனை அன்பாய் வளர்த்து வந்தார்கள்; எட்டாம்வயதில் உபநயனஞ்செய்து அப்பிள்ளைக்குச் சாங்கோபாங்கமாய் வேதாத்தியயனம் செய்வித்தார்கள். இந்த விட்டோபா, தீர்த்தயாத்திரை செய்யவேண்டித் தீர்மானித்து, வைராக்கியமுடன், தாய்தந்தையர் அநுமதிபெற்று, பகவத்தியானஞ்செய்து புறப்பட்டு, அநேக தீர்த்தங்களில் மூழ்கி, திவ்ய க்ஷேத்திரங்களில் எழுந்தருளியிருக்கும் பகவன் மூர்த்திகளைத் தரிசித்து, அளகாபுரிக்குவந்து சக்ரதீர்த்த ஸ்நானஞ்செய்து ஜபஞ்செய்கிற காலத்தில், அந்தத் திருப்பதியிலுள்ள சித்தபண்டிதன் என்னும் பிராமணன் அங்கு ஸ்நானஞ்செய்ய வந்து, பிரமசாரி நிஷ்டையைப்பார்த்து, சந்தோஷித்து வணங்கி, "ஓ மஹாத்மா! உனது தேசம்யாது; இங்கு வந்தகாரியம் என்ன; உனது தாய்தந்தையர் ஜீவந்தர்களாயிருக்கிறார்களா?" என்று கேட்டான். அதற்கு விட்டோபா, "நான், கங்கைக் கரையில் அப்புபுரத்தில் வசிப்பவன்; அங்கு எனது தாய்தந்தையர் இருக்கின்றார்கள்; நான் தீர்த்தயாத்திரை செய்யப் புறப்பட்டுத் துவாரகை முதலிய திவ்ய திருப்பதிகளைத் தரிசித்துப் புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து, இந்தச் சக்ர தீர்த்தத்துக்கு வந்தேன்" என்றார். அது



கேட்ட சித்தபண்டிதன் சித்தங்களித்து, விட்டோபாவை வேண்டித் தன் அகத்துக்கு அழைத்துக் கொண்டுபோய்ச் சர்வோபசாரங்கள் செய்து, அறுசுவையோடு கூடிய பகவந் நிவேதனான்னத்தைப் புசிப்பித்து, "இன்றெல்லாம் எனது கிருகத்தில் தாங்கள் வசிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தான். அதற்கு விட்டோபா ஒப்பினார். அன்றிரவு சித்தபண்டிதன் கனவில் ஸ்ரீ பாண்டுரங்க நாதன் பிரசன்னமாய், "ஓ சித்தபண்டிதா! இப்பிரமசாரிக்கு உன் மகளை *(ஸாலங்க்ருத) கன்னியாதானம்செய்" என்று நியமித்து மறைந்தான். சித்தபண்டிதர், உடனே விழித்து, பேரானந்தம் அடைந்து, கனவின் விவரத்தைப் பிரமசாரிக்குக் கூறினார். அதற்கு அப்பிரமசாரி, "பகவான் நியமனம் அப்படியானால், நான் ஒப்புக்கொள்ளத் தடையில்லை" என்றார். மறுநாள் இரவில் விட்டோபா கனவில், ஸ்ரீ பண்டரி நாதன் வந்து, "ஓ விட்டோபா! உனக்கு, நால்வர் திவ்யமூர்த்திகள் அவதரிக்கவேண்டியிருப்பதால், என் நியமனப்படியே, இந்தச் சித்தபண்டிதர் கன்னிகையை மணக்கக்கடவாய்" எனக்கட்டளையிட்டு உடனே மறைந்தான். அப்போது பிரமசாரி, விழித்தெழுந்து சந்தோஷ சித்தராய்த் தமது கனவின் விருத்தாந்தங்களைச் சித்தபண்டிதரிடத்தில் அறிவித்தார். அவரும் சந்தோஷப்பட்டு அந்தக்ஷணத்திலேயே பிராமணரை வரவழைத்து முகூர்த்த நிச்சயம்பண்ணிச் சகல பொருள்களையும் சேகரித்து, விவாகமண்டபம் அலங்கரித்து, வதூவரர்களைச் சிங்காரித்து, மங்கள வாழ்த்துகள் செய்து, மணமகனைச் சாக்ஷாத் விஷ்ணு சொரூபமாகப் பாவித்து (ஸாலங்கிருத) கன்னியாதானம் செய்தார். திருக்கலியாணம் முடிந்த நாலைந்து தினங்களுக்குப் பிறகு, சித்தபண்டிதர், மகளையும் மருமகனையும் அழைத்துக்கொண்டு, பகவத் பக்தி நிலயமாகிய ஸ்ரீபண்டரி புரத்துக்குப்போய், ஸ்ரீபாண்டுரங்கனைத் தரிசித்து, ஆலிங்கனஞ்செய்துகொண்டு, சர்வோபசாரங்களுடன் ஆராதனை செய்து, உற்சவத்தைச் சேவித்தார். பிறகு விட்டோபா, தமது மாதுலராகிய சித்த பண்டிதரைப்பார்த்து, "நான், சேதுயாத்திரை சென்று சீக்கிரமாய் வருவேன்" எனச்சொல்லி, அவர் உத்தரவுபெற்றுப் புறப்பட்டுப் போய்விட்டார். சித்தபண்டிதர், குடும்பசமேதராய் அளகாபுரிக்குச் சென்றார். விட்டோபா, மாதுலர் அநுமதியுடன் ஸ்ரீமத் பண்டரிநாதருடைய நியமனமும் பெற்று, அநேக புண்ணிய தீர்த்தங்களாடி, அங்கங்கே திவ்விய திருப்பதிகளில் எழுந்தருளியிருக்கும் பகவானைத் தரிசித்துப்போய் சேதுஸ்நானஞ்செய்து, திரும்பித் தமது மாதுலர் அகம் சேர்ந்தார். அங்கே நான்கு தினங்களானபிறகு, மாமனாரைப்பார்த்து, "அப்புபுரியில் வசிக்கும் எனது தாய்தந்தையரைத் தரிசிக்க விரும்புகிறேன். ஆகையால், நான் அங்குப் போய்வர விடைகொடுக்கவேண்டும்" என்று கேட்டார். சித்தபண்டிதர், "இவர்க்கு என் மகளைக்கொடுத்து விவாகஞ் செய்த விஷயம் இவருடைய

* ஸாலங்க்ருதம் - அலங்காரத்தோடுகூடின.

தாய்தந்தையர்க்குத் தெரியாது; ஸ்ரீமத் பண்டரிநாதனே காரியஸ்தனாய் இருந்து விவாகத்தை நிறைவேற்றினான். ஆகையால், நான், குடும்ப சமேதனாய் இவரைப் பின்தொடர்ந்துபோய்; இம் மகாத்மாவின் தாய் தந்தையர்களைக் கண்ணாரத்தரிசித்து வருவது உசிதம்" என்று நிச்சயித்து, மருமகனையும் மகளையும் அழைத்துக்கொண்டு குடும்ப சமேதராய்ப் புறப்பட்டு, அப்பு புரத்திற்குப்போய், கோவிந்தபண்டிதரைத் தரிசித்து, ஸ்ரீ பாண்டுரங்கன் நியமனப்படி நடந்த கலியாண விருத்தாந்தங்களை விண்ணப்பித்தார். விட்டோபாவின் தாய் தந்தையர், ஆனந்தக் கடலில் குளித்தவர்களாய்த் தமக்கு வந்தனஞ்செய்து நின்ற மகனுக்கும் மருகிக்கும் மங்கள வாழ்த்துக்கூறி, சித்தபண்டிதர்க்கும் அவர் மனைவிக்கும் பல நன் கொடைகள் அளித்தனர். சித்தபண்டிதர் அவ்விடத்தில் சில நாட்கள் வசித்து, தன் மகளுக்குப் புத்திமதிகள் சொல்லி, கோவிந்த பண்டிதரிடத்தில் விடைபெற்று, மனைவியுடன் அளகாபுரம் சேர்ந்தார்.

விட்டோபா, மனைவியுடன், தமது தாய் தந்தையர்களுக்கு, பய பக்தி விசுவாசத்தோடு பணிவிடை செய்துவந்தார். சில காலங் கழித்து, அவ்விருத்தர்கள், ஸ்ரீ பாண்டுரங்கனுடைய பரம கிருபாகடாக்ஷத்தால் பரமபதம் சேர்ந்தார்கள். விட்டோபா,

"நில்லாத வற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை" என்றபடி,

தேகநிலையாமை உணர்ந்து,

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்" என்றபடி,

மனத்துறவுடையோராய்,

"பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு" என்றபடி,

பிறவி நீங்க உண்மைப்பொருளை அறிந்து,

"வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்ப தில்" என்றபடி,

அவா வற்று,

"காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றின்
நாமங் கெடக்கெடு நோய்" என்றபடி,

முக்குணங்களையுங் கடந்து, அழியாத பக்தியோகத்தால் பகவானைச் சேவித்துக்கொண்டிருந்தார். இவ்விருத்தாந்தங்களைச் சித்தபண்டிதர் கேட்டு விசனமுற்றவராய், அங்குவந்து, வைராக்கிய சீலரான மருகரைப்பார்த்து, "ஓ, மகாத்மா! நீர், இப்பேர்ப்பட்ட விரக்தியோடு சமுசாரத்தைத் தாங்குதல் கஷ்டம். ஆகையால், என் வீட்டுக்கு வந்து சுகமாயிருக்கலாம்" என வேண்டினார். அதற்கவர் சம்மதித்து, மனைவியோடு அளகாபுரம் போனார். அவர்கள் அனைவரும் ஒரு கிருகத்தில் வாழ்ந்து, ஸ்ரீமத் பண்டரி நாதனைப்புகழ்ந்து, ஒவ்வோர் ஆடி, கார்த்திகை மாதங்களிலும் ஸ்ரீமத் பண்டரீபுரத்துக்குத் தவறாமல் போய்த் திருவிழாத்தரிசனம் செய்துகொண்டு சுகமாய் வாழ்ந்தார்கள்.



இங்ஙனமிருக்க, விட்டோபாவுக்கு நாளேற நாளேற வைராக்கியம் முதிர்ந்து, மனைவியைப்பார்த்து, "நமக்குக் கலியாணமாய் அநேக நாளாயின. இதுவரையில் புத்திரப்பேறு இல்லாமற் போய்விட்டது; இனி அஃது உண்டாவது அசாத்தியமென்று தோன்றுகின்றது; நான், காசிக்குப்போய் அங்கே துறவறமேற்கொண்டு வாழ விரும்புகிறேன். இதற்கு உனது அனுமதி எதிர்பார்க்கின்றேன்" என, ருக்மாபாய், துக்கமுற்றுக் கணவர்க்கு மறுமொழி சொல்லாமல் மௌனமாயிருந்து தனது பிதாவைப்பார்த்து, "தந்தாய்! தங்கள் மருகர், சந்நியாஸம் வகிக்க நிச்சயித்து, என் அனுமதி கேட்டார்; நான் மௌனமாயிருந்தேன்" என்று விசனத்தோடு கூறினாள். அதுகேட்ட சித்தபண்டிதர், "மகளே! நீ வருந்தாதே; புத்திரசந்தானமுற்று, பிதாவின் கடன் தீர்த்துப் பிறகு சந்நியாஸம் பெறவேண்டும். இப்படியே சாஸ்திரமும் சொல்லுகிறது;

'தம்பொரு ளென்பதம் மக்கள் அவர்பொருள்
தந்தம் வினையான் வரும்' என்பது,

தமிழ்வேதம். ஆகையால், இவர் எப்படிச் சாஸ்திரவிரோதமாக நடந்துகொள்வார்? நீ அஞ்சவேண்டாம்; ஒன்றும் பேசாமல் மௌனமாயிரு. 'மௌனம் கலகநாஸ்தி' என்கிறார்களே தெரியாதா?" என்று சொன்னார். சிலநாட்களுக்குப் பிறகு, விட்டோபா, தமது மனைவி தூக்கமயக்கத்தால் சித்த சுவாதீனம் தப்பியிருந்தபொழுது, "ஏடி! நான், கங்காயாத்திரை போய்வருவேன்" என்றார். ருக்மாபாய், அவர் என்னவோ சொல்லுகிறார் என்று எண்ணி, "அப்படியே செய்யுங்கள்" என்றாள். விட்டோபா, "இதுவே நல்லசமயம்; 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும்' என்ற எண்ணமுடையவராய், கருடன் வாயினின்று விடுபட்ட நாகம் போலப் பேரானந்தமடைந்து, புறப்பட்டுப் பிரயாகைக்குப்போய்த் திரிவேணீசங்கமத்தில் ஸ்நானஞ் செய்து, புஷ்கரத்துக்கு வந்து, சுயம்புமூர்த்தியாகிய விஷ்ணுவடிவம் என்னும் அந்த ராஜதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, அங்கு, வைணவர்கள் ஸ்ரீ பகவத்கீதை பாராயணம் பண்ணிக்கொண்டிருக்க, தாம் அதனைக்கேட்டு மகிழ்ந்திருந்தார். ஒருநாள், பாராயணம் நடந்துக்கொண்டிருக்கையில், மோக்ஷ சந்நியாச யோக சம்பந்தமாகிய பதினெட்டாம் அத்தியாயத்தில்,

"தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்" என்ற,

தமிழ்வேத உண்மையடங்கிய (అసక్తబుద్ధిః) என்னும் சுலோகத்தை அவர், தமது செவியாரக்கேட்டார்: "உலகஞானத்தை விட்டு, மனதைத் தன் வசப்படுத்திக்கொண்டு, ஆசையறுத்து ஐம்பொறியின் பயனை ஒழிப்பவன் உத்தமனாகி சித்திபெறுவான்" என்பது இந்தச் சுலோகத்தின் கருத்து.

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்"
"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" என்ற,

தமிழ்வேத உண்மைகளடங்கிய (వివిక్తసేవీ లఘ్వాశీ యతవాక్కాయమానసః) என்னும் சுலோகத்தையும் கவனித்தார்: "ஒன்றி இருந்து, மிதமாய் உண்டு, மனவாக்குக் காயங்களைத் தன் வசப்படுத்தி, அனவரதமும் தியானயோகஞ் செய்ய வல்லவனாய், வைராக்கியமடைந்து, அகங்கார சித்தியின்று முளைத்த காமக்குரோதங்களைவிட்டு, எனது உடைமை என்னும் மமகாரத்தை நாசஞ்செய்து, சாந்த சிந்தனையவன் பரப்பிரம பிராப்திக்கு வல்லவனாவான்" என்பது இந்தச் சுலோகத்தின் கருத்து. ஆகையால், விட்டோபா "கொடிய நோய்களாகிய சுறாக்கள் கடிக்கவும், பசியாகிய முதலை விழுங்கவும், மோகமாகிய வலையில் அகப்பட்டு, பெண்டு பிள்ளை பண்ட பதார்த்தம் என்னும் பாறைகள் மோதச் சம்சாரசாகரத்தில் அலைந்து கிடக்கும் நான், ஸ்ரீ கீதாசாரியர் உபதேசப்படி, குடும்ப பரித்தியாகஞ் செய்துகொண்டு பரப்பிரமானுபவத்தால் சுகப்படுவேன்" என்று நிச்சயித்து,

"அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்" என்றபடி,

சற்குருபரனை நாடிக் காசிக்கு வந்து, ஞானானுஷ்டான சம்பன்னரான ஸ்ரீ ராமானந்த ஸ்வாமிகள் ஆசிரமத்தில் பிரவேசித்து, அவரைச் சரண் அடைந்து, "சுவாமீ! அடியேனுக்குச் சந்நியாஸம் அளித்துக் கிருபை செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்தார். அப்போது ஸ்ரீராமானந்தர், விட்டோபாவை நோக்கி, "நீ, புத்திரனைப் பெற்றுப் பிதிர்க்கடனின் மீண்டனையா? தாய்தந்தையர்க்கும் பெண்டு பிள்ளைகட்கும் யாதொரு குறையுமின்றி அவர்களைத் திருப்திசெய்து, அவர்கள் அனுமதிபெற்று வந்தனையா? உலக விஷயத்தில் ஆசையற்றனையா?" என்று கேட்டார். அதற்கு விட்டோபா உண்மையை ஒளித்து, "தேவரீர் கேட்டபடி, எல்லாவற்றையும் நிறைவேற்றி வந்திருக்கின்றேன்; என் தாய்தந்தையர் பரலோகஞ் சேர்ந்தார்கள்" என்று விண்ணப்பித்தார். அவர் வார்த்தையை நம்பின ஸ்ரீராமானந்தர், அவர்க்குச் சந்நியாஸங் கொடுத்தார். இவ்விருத்தாந்தங்களை, இவர் மனைவியாகிய ருக்மாபாய் கேள்விப்பட்டு, மூர்ச்சையடைந்து, கொஞ்சநேரத்தில் தெளிந்து, தன் துக்கத்துக்குக் கரைகாணாமல் தவித்துக்கொண்டிருந்தாள். இவளது வருத்தத்தைக்கண்ட தாய்தந்தையர், பலவிதமாகத் தேற்றிச் சமாதானப்



படுத்தினார்கள். அதனாலும் அவள் தேறாமல், "நான் இனி என் செய்வேன்! அநாதை ஆனேனே! எனது காதலர் என்னை வஞ்சித்து, சந்நியாசம் பூண்டாரே!" என்று சொல்லி,

மாவிற் சிறந்தது அரிமா
மரத்திற் சிறந்தது அரசு
பூவிற் சிறந்தது அரவிந்தம்
புள்ளிற் சிறந்தது கருடன்
தேவிற் சிறந்தவர் திருமால் என்றபடி,

சாக்ஷாத் பகவத் சொரூபமாய், நினைத்தது நினைத்தபடி அளிக்க வல்லதாய், உள்ள அரசமரத்திற்குப் பயபக்தியோடு பூசைசெய்து பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து வந்தாள்.

இவள் இப்படிச் செய்துகொண்டிருக்க, அரசமரத்து அரிநாராயணற்கு அருள் சுரந்தது; இவள் கோரிக்கை நிறைவேறத் தகுந்த காலம் நெருங்கியது: இவள் கணவராகிய விட்டோபாவுக்குக் குருவாகிய ஸ்ரீராமானந்தர், சேதுயாத்திரை நிமித்தம் புறப்பட்டு வரும் வழியில் அளகாபுரியை அடைந்து, ருக்மாபாய் வழிபடும் மரவரசின்கீழ் எழுந்தருளி இருந்தார். அப்போது, அரசமரத் தரிநாராயணனைப் பூசித்துப் பிரதக்ஷிணஞ் செய்துகொண்டிருந்த ருக்மாபாய், இந்த யதீந்திரரை நமஸ்கரித்தாள். அவர், "நீ, சற்புத்திரர்களைப் பெற்று, தீர்க்கசுமங்கலியாய் வாழ்க" என ஆசீர்வதித்தார். அதுகேட்ட ருக்மாபாய், புன்னகை செய்ய, ஸ்ரீ ராமானந்தர், "ஓ, நல்லாய்! நீ சிறுநகைசெய்யுங்காரணம் என்ன?" என, ருக்மாபாய், "தேவா! புருஷன் இல்லாமல் பிள்ளைகள் எங்ஙனம் பிறப்பார்கள்? எனது கணவர், சந்நியாசம் பூண்டார் என்பது தெரியாமலே, தேவரீர் இங்ஙனம் ஆசீர்வதித்தீர் போலும். நிர்ப்பாக்கியவதியாகும் என் நிமித்தம், பெரியோராகிய தேவரீர் ஆசீர்வாதத்திற்குத் தவறுநேரிட்டதென்று என் அதிஷ்டானத்தை எண்ணி நகைத்தேன்" என்றாள். அதற்கு ஸ்ரீ ராமானந்தர், "பிள்ளையில்லாதவன் துறவு பூணத் தகாதென்று சாஸ்திரமரியாதை ஏற்பட்டிருக்க, இதற்கு விரோதமாய்த் துறவு பூண்பவனும், அவனுக்கு அதனைத்தருபவனும் தண்டனைக்குட்படுவார்கள்" என்று கூறி, ருக்மாபாய் மூலமாகப் பூர்வ விருத்தாந்தங்களை விவரமாய்த் தெரிந்து கொண்டு, "ஓஹொ, ஓஹொ! இந்த பிரமாதத்திற்கு நானே காரணனானேன். விட்டோபா என்னை வஞ்சித்து என்னால் சந்நியாஸம் பெற்றான்.

உத்தமம் ஓராண்டு
மத்திமம் ஓரயனம்
அதமம் மும்மதி } என்றபடி,

குறைந்த பக்ஷம் மூன்றுமாத காலமேனும் சிஷ்யனைச் சோதித்த பிறகே, குரு உபதேசிக்க வேண்டும். அங்ஙனம் இன்றி நான், விட்டோ

பாவைச் சோதிக்காமலே அவனை நம்பி மோசம் போனேன்" என்று சிறிதுயோசித்து "உனது தாய்தந்தையர் ஜீவவந்தர்களாய் இருக்கின்றார்களா?" என்று கேட்டார். அதற்கு ருக்மாபாய், "எனக்குத் தாய்தந்தையர் முதலிய எல்லாக் கிளைஞரும் இருக்கின்றனர்; யாரிருந்தும் என்ன பலன்? கணவனில்லாக் காரிகையானேன்" என்று வருந்தினாள். ஸ்ரீ ராமானந்தர் அவள் தந்தையை வரவழைத்தார். அவர் வந்து தண்டனிட்டு, "யதிசேகரா! தேவரீர் எங்கிருந்து எங்குச் செல்கின்றீர்?" என்று கேட்க, ஸ்ரீ ராமானந்தர், "நான் காசிவாசி; சேதுயாத்திரைமேற்கொண்டு இங்குவந்தேன்; வந்த இடத்தில் உனது மகள் தனது சரித்திரத்தைக் கூறினாள்; நடந்த கெடுதிக்கு நானே மூல புருஷன் ஆனேன். ஆகையால், என்பிழையைத் திருத்திக்கொள்ள மறுபடியும் காசிக்குச் செல்வேன். நீ உனது மகளை அழைத்துக் கொண்டு என்னுடன் வரக்கடவாய்" என்று நியமித்துக் காசிக்குத் திரும்பிப்போனார். சித்தபண்டிதர் சந்தோஷ சித்தமுடையவராய்த் தமது மகளை அழைத்துச்கொண்டு அவரைப் பின் பற்றிப் போய்க் காசி சேர்ந்தார்.

ஸ்ரீ ராமானந்தர் தமது ஆசிரமத்தை அடைந்தவுடனே, விட்டோபாவை அழைத்து, "நீ என் பொய்பேசி என்னை வஞ்சித்தாய்? இப்போதாயினும் உண்மை பேசு" என்று கூற, விட்டோபா, பயநிறைந்த மனமுடையவராய் உண்மையைவிண்ணப்பித்து, "சந்நியாசம் பூணும் பேரவாவால், பொய்பேசினேன்;

'பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்' என்றபடி,

நடந்துகொண்டேன்; தேவரீர் அடியேனை மன்னித்தருள்க" எனப் பிரார்த்தித்தார். ஸ்ரீ ராமானந்தர், "நான் உனது மனைவியை அழைத்துக்கொண்டு வந்தேன்; நீ அவளோடு கூடி உனது வீடுசேர்ந்து இல்லறத்தானாய்ச் சுகித்திரு; இது மாறு என்று எண்ணற்க. அருச்சுனன், காம்பில்ய புரத்தில் மச்சயந்திரத்தை அறுத்துத் திரௌபதியை அழைத்துக்கொண்டு குந்திதேவியிடத்தில் வந்து, "ஓ அம்மணி! நான் ஒரு பிச்சைகொண்டுவந்தேன்" என்று சொல்ல, மறைவில் இருந்த குந்திதேவி, யோசிக்காமலே, "அப்பிச்சையை நீங்கள் ஐவரும் புசியுங்கள்" என்று சொல்லி வெளியில வந்து, மின்னற் கொடிபோல் பிரகாசிக்கிற திரௌபதியைப் பார்த்து, "நான், விசாரிக்காமல், நீங்கள் ஐவரும் புசியுங்கள் என்று சொன்னேன்; இது வரையிலும் என் மொழி பழுதானது கிடையாது; நீங்களும் என்மொழியைக் கடந்து நடந்ததில்லை. இதற்கு என்ன செய்யலாம்!" என்று சிந்தித்தாள். தருமபுத்திரர் தம்தாயின் நியமனம் அசாத்திய மானதென்று சொல்ல, ஸ்ரீவேதவியாச முனிவர் எழுந்தருளி, ஐவருக்கும், திரௌபதி அழியாதபத்தினி ஆகவேண்டிய சிலகாரணங்களைக் கூறிக் குந்திதேவி வார்த்தை பலிக்குமாறு பாண்டவர் ஐவருக்கும் திரௌபதிக்கும் பாணிக் கிரகணம் செய்வித்தார். ஒரு புருஷனுக்கு மனைவியாய் இருக்கத் தகுந்த திரௌபதி, ஐவருக்கு மனைவியாகியும், கற்புக்கரசி என்று மூன்றுலகத்தாராலும் கொண்டாடப்படுகிறாள். எனக்குள் அந்தரியாமி யாயிருக்கும் ஸ்ரீ ராம பத்திரன் இது வரையிலும் என்வாயால் பொய்யுரை கூறச் செய்தது கிடையாது. 'சற்புத்திரர்களைப்பெறுக' என்று உனது மனைவியை ஆசீர்வதித்தேன்; என்னை அறியாமல் ஸ்ரீராம சந்திரர் என்வாயால் இப்படிப் பேசுவித்ததனால் நான் சொன்னது வீண் போகாது; ஸ்ரீ பாண்டுரங்கன் உனக்குக் கனவில் காட்சிதந்து ருக்மாபாயை பாணிக்கிரகணஞ் செய்யென்று நியமித்தகாலத்தில் உன்னால் நால்வர் திவ்ய மூர்த்திகள் அவதாரம் ஆகவேண்டியிருக்கின்றதென்று அநுக்கிரகித்தார் அல்லவா? இந்தச் சந்தர்ப்பங்களை எல்லாம் நன்றாய் யோசித்து நீ இல்லறத்தானாகி, பகவான் நியமனப்படி புத்திரவுற்பத்தி செய்யக்கடவாய். இதனால் உனக்குக் குற்றமுண்டாகாது. விஷ்ணுமூர்த்தி உன்னைக் காத்தருள்வார்" என்றுஏற்படுத்தி, விட்டோபாவை ருக்மாபாயோடு கூட்டிச் சித்தபண்டிதர்முதலிய சுற்றங்களுடன் அளகாபுரிக்கு அனுப்பினார்.

இங்ஙனம் இருக்கச் சிலர், இதனை ஒப்பாதவர்களாய், "விட்டோபா, துறவி ஆய், பிறகு எங்ஙனம் இல்லறத்தானாகக் கூடும்? இவனது பூர்வ ஜன்ம வினை, இவனை மறுபடியும் இல்லறத்தானாகச் செய்தது. இவன் சிற்றின்பப்பிரியன். ஆகையால், இப்பேர்ப்பட்ட இடையூறு சம்பவித்தது" என்று பலவாறாய்ச் சொல்லத்தொடங்கினார்கள். விட்டோபா, தமது ஆசிரியர் கட்டளையைச் சிரசாவகித்துச் சித்தத்திற் களங்கமற்றிருந்தார். இதனை ஒப்பாத சிலர், விட்டோபாவை, குலங்கெட்டவர் என்று நீக்கினார்கள். இவர், வனத்திற் குடிசைவேய்ந்து, பிச்சைபுக்குண்டு, ஸ்ரீராமநாம தியானபரராய் இருக்க, பன்னீராண்டு கழித்து, ருக்மாபாய் வயிற்றில் மூன்று ஆண்குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் பிறந்தன. ஆண்குழந்தைகளில் மூத்தகுமாரனான நிவர்த்திதேவன், சிவாம்சமாகவும், இரண்டாங்குமாரனான ஞானதேவன், விஷ்ணுவாம்சமாகவும், மூன்றாங்குமாரனான சோபானதேவன், பிரமாம்ச மாகவும், பெண்குழந்தையான முக்தாபாய், யோகமாயாம்சமாகவும், உலகத்தார் உய்யும் வண்ணம் அவதரித்தார்கள்.

ஸ்ரீமத் பாண்டுரங்க பரப்ரஹ்மணேநம:

## ஒன்பதாம் அத்தியாயம்

# ஞானதேவர், * மகிடத்தால் வேதாத்தியயனம் செய்வித்தல்

நிவர்த்திதேவர், ஞானதேவர், சோபானதேவர், முக்தாபாய் இவர்கள் நால்வரும் நாளொருமேனியாய் வளர்ந்துவருங் காலத்தில், உலகத்தார் இவர்களைப் பலவிதமாய்த் தூஷித்துச் சுயஜாதியில் சேர்க்காமல் தள்ளிவிட்டார்கள். ருக்மாபாய் தன் கணவரைப்பார்த்து, "நமது பிள்ளைகளுக்குப் பிராமண கருமம் இல்லாமல் இருப்பது, எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது" என்றுசொல்ல, அவர், பிள்ளைகளை அழைத்துக்கொண்டு பிராமண சபைக்குப்போய் நமஸ்காரம்பண்ணி, "வேதமூர்த்திகளே! என்மேல் தயவுசெய்து, என் குற்றங்களை மன்னித்துத் தரும சாஸ்திரவிதிப்படி எங்களுக்குப் பிராயச்சித்தம் விதிக்க வேண்டும்" என்று வேண்டினார். அவர்கள் இவ்வசனங்களைக்கேட்டு, "உங்களுக்கு மரணாந்த பிராயச்சித்தம் தவிர வேறொரு பிராயச்சித்தம் கிடையாது. உங்களுடைய சரீரங்களைத் திரிவேணீ சங்கமத்தில் வீழ்த்த வேண்டும்" என்று சொல்ல, விட்டோபா அதற்கு ஒன்றும் பேசாமல் தமது மனைவிமக்களைத் துறந்து, தேசாந்தரம் போய்விட்டார். அப்பொழுது அங்குள்ள பிராமணர்கள் ஆச்சரியமடைந்து, "விட்டோபா, மிக வருந்தி, குடும்பத்தைவிட்டுத் தேசாந்தரியானார், தப்புணர்ந்து வருந்துவதைவிடப் பிராயச்சித்தம் வேறொன்றுமில்லை" என்று சொன்னார்கள்.

மறுநாள், நிவர்த்திதேவர் முதலியோர் பிராமணரிடம் வந்து, "எமது பிதா, பரதேசியானார்; இப்பொழுது எமக்கு என்ன பிராயச்சித்தம் விதிப்பீர்கள்" என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், "நீங்கள் பைட்டினி புரத்துக்குப் போங்கள்; அங்கே பல சாஸ்திரிகள் இருக்கின்றனர்; உங்களுக்குப் பிராயச்சித்தம் விதிக்க அவர்களே வல்லவர்கள். ஆகையால், நீங்கள் அவர்கள் கையெழுத்தடங்கிய ஒரு கடிதம் கொண்டுவந்தால், நாங்கள் அதன்படி நடந்துகொள்வோம்" என்றார்கள். அப்பொழுது நிவர்த்திதேவர் முதலியோர், அப்பிராமணர்களிடத்திலிருந்து, பைட்டினி புரவாசிகளான பிராமணர்களுக்கு ஓர் அறிமுகக் கடிதம் வாங்கிக்கொண்டு புறப்பட்டுப்போய்க் கோதாவரியில் ஸ்நாநஞ் செய்து அதன் கரையில் உள்ள பைட்டினி புரத்துக்குப் பக்கத்துக் கிராமமாகிய பிரமச புரத்துக்குவந்து, விதி விலக் குணர்ந்தவர்களான பிராமணர்களுக்கு வந்தனஞ்செய்து, தாங்கள் கொண்டுவந்த அறிமுகக் கடிதத்தைக் கொடுத்தார்கள். அவர்கள், நடந்த விருத்தாந்தங்களை அறிந்துகொண்டு, "நீங்கள் சந்நியாசிக்குப் பிறந்தவர்கள் ஆகையால், உங்களுக்குப் பிராயச் சித்தம் கூடாது. பரிசவேதியால்

* மகிடம் - எருமைக்கடா



ஓடு,பொன் ஆகாததுபோல, உங்களுக்குப் பிராயச் சித்தம் செய்வதால் பிராமணத்தன்மை உண்டாகாது; ஆனாலும், உங்களைப்போன்றவர்களுக்கு, வேத சாஸ்திர சம்மதமாய்ப் பிழைக்கும் வழி ஒன்றுண்டு: அது, பகவானைச் சரண் அடைந்து, சமரச ஞானிகளாய், ஸ்ரீ ஹரியே எல்லாப் பூதங்களிலும் பரந்து நிறைந்திருக்கிறான் என்று தெளிந்து, நின்றாலும் இருந்தாலும் நடந்தாலும் கிடந்தாலும் மென்றாலும் துயின்றாலும் இமைத்தாலும் விழித்தாலும் அவனடியை மறவாதவர்களாய் நீங்கள் வாழவேண்டியதேயாம்" என்றார்கள். அந்தச் சாஸ்திர வாக்கியத்தைக் கேட்ட அவர்கள், "எங்கள் மனம்போல் விதித்தீர்கள்" என்று சொல்லிச் சந்தோஷித்தார்கள். பிறகு அந்தப்பிராமணர்கள், இவர்களுடைய ஊர், பேர்களை விசாரித் தறிந்துகொண்டு, ஞானதேவரைப் பார்த்து, "உனக்கிப்படிப்பட்ட பெயரிட்டதற்குக்காரணம் என்ன? ஐயந்திரிபற வேதாத்தியயனம் செய்தனையா? அறுபத்துநான்கு கலைகளையும் பயின்றனையா? இவைகளில் எதுவும் இன்றி இப்பெயரைப் பூண்டிருப்பது, இந்த்ரிய லோலனாகிய வொருவன், விரக்தன் என்றும், வறியவன், செல்வன் என்றும், துர்ப்பலன், சூரனென்றும் பெயர் பெற்றமைபோல் இருக்கிறது" என்று பரிகாசம்பண்ணிக்கொண் டிருந்தார்கள். அப்போது, துருக்கன் ஒருவன், மகிடத்தின்மேல் தோல் பையை ஏற்றி, வந்து கொண்டிருந்தான். பிராமணர்கள் ஞானதேவரைப் பார்த்து, "நாங்கள் இம்மகிடத்திற்கு ஞான நாதர் என்று நாமகரணம் செய்வோம்" என்றார்கள். அதற்கு ஞானதேவர், பிராமணர்களைக் கைகூப்பித்தொழுது மிகவும் வணங்கி, "ஓ, விப்பிரசிகாமணிகளே! அங்ஙனம் செய்யலாம்; இம்மகிடத்துக்கும் எனக்கும் சிறிதும் பேதமில்லை. ஸ்ரீதரனான பரமாத்மா ஒருவனே,

'உபயகிரிப் புயராம னெடுகண்ணன் முதலான
விபவவுரு வமுமெடுத்து வீறுமுயிர் தோறுங்குடிகோள்
அந்தரியா மியுமான தமையாமே யெளிதாக
இந்தநெடு வேங்கடத்தில் எல்லோரும் தொழநின்றாய்' என்றபடியும்,

'கருதரிய வுயிர்க்குயிராய்க் கரந்தெங்கும் பரந்துறையும்
ஒருதனிநா யகமென்றால் உன்புகழ்க்கு வரம்பாமோ' என்றபடியும்,

எல்லாப் பூதங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கின்றான். (క్షేత్రజ్ఞంచాపి మాంవిద్ధి । సర్వక్షేత్రేషుభారత) என்று ஸ்ரீகீதையிலும் சொல்லப்பட்டிருக்கின்றது: 'எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கின்ற பரம்பொருள் நானே என்று தெரிந்துகொள்' என்பது இதன் கருத்து. ஆபரணங்கள் பல; அவைகளில் வியாபித்திருக்கும் பொன் ஒன்றேயாகுமாறுபோல, பூதங்கள் பல; அவைகளில் வியாபித்திருக்கும் பரம்பொருள் நாராயணன் ஒருவனே" என்று கூறினார். அதுகேட்ட பிராமணர்கள், அவரைப் பார்த்து, "நீ, கூறும் உறுதிமொழி உண்மையானால், இவ்வெருமைக் கடாமேல் தாக்கும் அடித்தழும்பு, உன் உடம்பிற் காணவேண்டும்"

என்று சொல்லித் தூருக்களைத் தாண்டி அவ்வெருமைக்கடாவை அடிக்கச்செய்தார்கள். உடனே ஞானதேவர் முதுகில் அத்தழும்பு தோன்றிற்று. இதனைக்கண்ட பிராமணர்கள், "உனக்கும் எருமைக்கடாவுக்கும் கொஞ்சமேனும் பேதமில்லாவிட்டால், இதன் வாயால் வேதாத்தியயனம் செய்வி; பார்க்கலாம்" என்றார்கள். ஞானதேவர், எருமைக்கடாவுக்கு அருகிற்சென்று, தமது கரத்தால் அதன் சிரத்தைப் பரிசித்து, "நீ, வேதங்களை உச்சரித்து இப்பிராமணர்களுக்குச் சந்தோஷம் உண்டாக்கு" என்று சொன்னவுடனே, அவ்வெருமைக்கடா, வேத பாராயணம் பண்ணத்தொடங்கிற்று. அப்போது அனைவரும் அவ்வாச்சரியத்தைப் பார்த்துக்களித்து, இப்படிப்பட்ட அதிசயத்தை நாங்கள் எப்பொழுதும் கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை" என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள். சூரியோதயத்தால் இருள் நசிக்கிறபடி, அப்பிராமணர்களுக்குப் பிறவிக்கல்விச் செருக்கு குலைந்தது. "நாம் வேதசாஸ்திரங்களை அப்பியசித்ததனால் உலகத்தார்க்கு என்ன அற்புதங்காட்டினோம்! ஞானதேவர் செய்ததுபோல, எருமைக்கடாவை வேதமோதச்செய்ய, நமக்குச் சக்தி ஏது! இவ்வற்புதம், பிரமாதியர்களுக்கும் அசாத்தியமானது; இவர்கள் மூவரும் மும்மூர்த்திகளேயாவார்கள்; இம்மூவருக்கும் தங்கையாராகிய முக்தாபாய், யோகமாயாவதார சொரூபி என்பதில் தடையில்லை; அவதார மூர்த்திகள் அல்லரேல், இவர்களுக்கு இப்படிப்பட்ட அற்புதச் சக்தி எப்படி உண்டாகும்? இவர்களுடைய பாதபரிசத்தால் தீர்த்தத்துக்கும், தீர்த்தத்வமுண்டாகும்; இப்பேர்ப்பட்ட புண்ணியர்களுக்கு வேறொரு பிராயச்சித்தமும் வேண்டுமா? இவர்களே மூவுலகுந்தொழு மூர்த்திகளாவார். இவர்களைப் பெற்ற தாய்தந்தையர்களே தவசிரேஷ்டர். இவர்களே சத்திய பிராமணர்கள். நாம், சம்சார சாகரத்தில் ஆசைச் சுழியில் அகப்பட்டு அலைகின்றோம். சிஷவர்க்கங்களாகிய பிறர்பொருளைக் கொள்ளைகொள்ளும் நாம், ஞானசூன்னிய குருபரர்களே அன்றி, ஞானானுஷ்டான குருசிரேஷ்டர் ஆகோம்" என்று அவர்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஞானதேவர், அவர்களைப்பார்த்து, "அந்தணர்காள்! நாங்கள் அஞ்ஞானிகள்; தாங்கள் மெய்ஞ்ஞானிகள்; தங்களுக்கு அசாத்தியமானது ஏதுவுமில்லை. இப்போது, இங்கு நிகழ்ந்தகாரியம் தங்கள் ஆசீர்வாத விசேடமே அன்றி வேறன்று" என்றார். அதற்குப் பிராமணர்கள், இவருடைய உறுதி மொழிக்கு மிக மகிழ்ந்து, இந்நான்கு அவதார மூர்த்திகளையும் தமது கோஷ்டியிற்கூட்டி மேன்மை பெறச்செய்தார்கள்.

ஞானதேவர், அப் பைட்டினி புரத்திலுள்ள ஒரு வீட்டில், தமது உடன் பிறந்தார்களோடு வசித்து, எல்லார்க்கும் தெய்வ பக்தி உண்டாகும்படி அரிநாம சங்கீர்த்தனஞ் செய்துகொண்டிருந்தார். ஒரு நாள், இவர்கள் குடியிருக்கும் வீட்டுக்கு உடையவனும், பாகவத பக்தனுமாகிய சுசீலன் என்னும் பிராமணன் தந்தைக்குச் சிரார்த்தம் வந்தது;



ஸ்ரீஜ்ஞான தேவர் மஹிஷத்தால் வேதாத்யயனம் செய்வித்தல்.
(பக்கம் 94)

அப்போது, சுசீலன் அவ்வூர்ப் பிராமணர்களைச் சிரார்த்தத்துக்காக அழைத்தான். அதற்குச் சில மூர்க்கர்கள், "உன் வீட்டில் சந்நியாசி மக்கள் குடியிருக்கிறபடியால் நாங்கள் பிராமணார்த்தத்துக்கு வரமாட்டோம்" என்று மற்றவர்களையும் வரவொட்டாமல் தடுத்தார்கள். இதனால் அச்சுசீலன் மிக வருந்தியிருக்க, ஞானதேவர், அவனுடைய விசனகாரணத்தைக்கேட்டுத் தெரிந்துகொண்டு, "நீ, வருந்தாதை; சந்தோஷமாய்ச் சமையல் காரியத்தை நடத்து; நிஜமாகவே உனது மூதாதைகள் வந்து புசிப்பார்கள்" என்று கூறினார். சுசீலன் அவ்வார்த்தையை நம்பி, சமையலை முடிப்பித்து ஞானதேவர்க்கு அறிவித்தான். அவர், மந்திரஞ்செய்து அக்ஷதைகளை எடுத்துப் போட்டவுடனே சுசீலனுடைய பிதுர்த் தேவதைகள் தமது நிஜரூபங்களுடன் வந்து தோன்றினார்கள். உடனே சுசீலன் பயபக்தி யுக்தனாய், அவர்களைச் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, அவர்கள் பாதங்களை நறுநீரால் அலம்பி உபசரித்து, அறுசுவை யுண்டி பரிமாறினன். அவர்கள் மனமகிழ்ந்து புசித்துக்கொண்டிருந்தார்கள். சிராத்தத்திற்கு யாரும் போகக்கூடாதென்று கட்டுப்பாடுசெய்த துஷ்டர்கள் இவ்விருத்தாந்தங்களைக் கேள்விப்பட்டு, ஆச்சரியமடைந்து, சுசீலன் வீட்டிற் பிரவேசித்து, பிதுரர்கள் தமது நிஜரூபங்களோடு யதேச்சையாய்ப் புசித்துக்கொண்டிருப்பதைப் பார்த்து, அவ்வூர்ப் பிராமணர்களுக்குத் தெரிவிக்க, அனைவரும் வந்து அவ்வதிசயத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பிதுரர்கள், விருந்துண்டு, சந்தனபுஷ்ப தாம்பூலாதிகளை ஏற்று, சுசீலன் செய்த பிரதக்ஷிண நமஸ்காராதிகளுக்குச் சந்தோஷம் அடைந்து, "நாங்கள் திருப்தி அடைந்தோம்" என்று கூறிமறைந்தார்கள்.

பைட்டினிபுர வாசிகளான பிராமணர்கள், "இப்பேர்ப்பட்ட அதிசயத்தை எப்போதும் எந்த இடத்திலும் கண்டறியேம்; கேட்டுமறியேம். ஞானதேவர், செய்தற்கரிய காரியம் செய்தார்;

'செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்' என்றபடி,

அவரே பெரியார்; ஞானசிரோமணி. நாம் சிறியரிற் சிறியேம்; ஆகையால், செயற்கரிய செய்கலாதார் ஆயினோம்; துரபிமானம் பூண்டு நசித்தோம்; ஞானதேவர் முதலிய நால்வரும் மூவுலகையும் பரிசுத்தமாக்க வல்ல புண்ணிய மூர்த்திகள்; சாக்ஷாத் திரிமூர்த்தி சொரூபிகள்" என்று புகழ்ந்து, அங்கு நிகழ்ந்த அற்புத விசேஷங்கள் அனைத்தையும் ஒரு கடிதத்தில் விவரமாய் வரைந்து, இவர்கள்கையிற் கொடுத்தார்கள். ஞானதேவர், "வேதம் ஓது" என்று நியமித்த எருமைக்கடா, அதுமுதல் இடைவிடாமல் தெளிவாய் வேதாத்தியயனம் செய்துகொண்டிருந்தது. ஆகையால், ஞானதேவர் முதலியோர், அவ்வெருமைக்கடாவுக்கு எஜமானாகிய ஆருக்கனிடத்திற் சென்று, "இதனை எமக்குத்தா" எனக் கேட்டு வாங்கிக்கொண்டு, பைட்டினிபுர வேதியர்கள் உத்தரவுபெற்றுத் தமதூர்க்குப் போகப் புறப்பட்டார்கள். அவ்வேதியர்கள், ஒரு

நாழிகைதூரம் அவர்களை வழிவிட்டனுப்பி, ஆனந்த முதிர்ந்தவர்களாய் அவர்களை நன்கு மதித்து வாழ்த்தித் தம் வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

ஞானதேவர் முதலியோர், ஹரிநாமசங்கீர்த்தனம் செய்துகொண்டு எருமைக்கடாவுடன் காலவக்ஷேத்திரத்திற்கு வந்து, பிரவரதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்துகொண்டு, அங்கே சிலநாட்கள் வசித்தார்கள். மந்தமாந்தரும் நன்றாய் உணருமாறு, பகவத்கீதைக்கு ஒரு புத்துரை வரைந்தார், ஞானதேவர்; நிவர்த்திதேவர் அநுமதியுடன், நாஸ்திகரது மனவிருள் இரிய, தத்துவஞானம் ஒரு புத்தகம் ஆக்கப்பட்டது. அங்கிருந்து புறப்பட்டு, அந்நால்வரும், தமதூர் வழிபற்றிப் போய்க்கொண்டிருக்கையில், அயோமுகி என்னும் கிராமத்தில் அவ்வெருமைக்கடா மரணம் அடைந்தது; அதனைப் பூமிக்குள் புதைத்து, அதற்கொரு சமாதிகட்டிச் சென்றார்கள். அச்சமாதி இக்காலத்தும், எல்லாருங் காண இருக்கின்றது. பிறகு அச்சாதுக்கள் நால்வரும், தமதூர் சேர்ந்து, அங்குள்ள வேதியரிடத்தில், பைட்டிணிபுரவேதியர் தந்த கடிதத்தைக் கொடுத்தார்கள். அவர்கள் அதனைப் பெறுமுன்பே, பைட்டிணிபுரத்தில் நடந்த அற்புதங்களைக் கேட்டிருந்தார்கள்; ஆகையால், இவர்களை எதிர்கொண்டுவந்து, சுகக்ஷேமலாபங்களை விசாரித்து, ஆலிங்கனஞ்செய்து, பைட்டிணிபுரத்திலிருந்து வந்த கடிதத்தை வாசித்துச் சந்தோஷித்து, வியாழபகவான் சாஸனத்தைத் தேவேந்திராதியர் சன்மானிக்கிறபடி, பைட்டிணிபுர வேதியர் நியமனத்தைத் தலைமேல் தாங்கி, ஞானதேவர் முதலிய நால்வரையும், திரிமூர்த்திகளுடையவும், யோகமாயையினுடையவும் அவதாரங்களென்று நிச்சயித்து, அவர்கள் இயற்றும் ஹரிகீர்த்தனங்களைச் சிரவணானந்தமாய்க் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

இங்ஙனம் இருக்க, அவ்வூரில் வாழும் வீசோபாகேசன் என்னும் வஞ்சகவேதியன் ஒருவன் மாத்திரம், இந்நால்வரையும், சந்நியாசிமக்கள் என்று தூஷித்துக்கொண்டு வெறுப்புற்றிருந்தான். அக்காலத்தில், தீபாவளித்திருநாள் வந்தது. அன்று நிவர்த்திதேவர், முக்தாபாயை நோக்கி, "தங்காய்! இன்று பண்டிகை நாள். ஆகையால், சில பலகார வகைகளைச் செய்" என்று சொல்ல, அந்தம்மாள் நல்லதென்று ஒப்பி, அதற்காக வேண்டிய எல்லாப் பதார்த்தங்களையும் சேகரித்து, புதுப் பாண்டங்கள் வாங்குவதற்காக, குயவன் வீடுநோக்கிப் போகையில், வீசோபாகேசன் வழிமறித்து, "ஏ சிறுமி! நீ என்னகாரியத்துக்காக, எங்கேபோகின்றாய்?" என்று பயமுறுத்தினான். அதற்கு முக்தாபாய், சிங்கத்தைக்கண்ட பெண் யானைபோலப் பயந்து நடுங்கினவளாய், "அண்ணன் ஏவினபடி, பண்டிகைப்பலகாரம் செய்வதற்கு வேண்டிய புதுப் பாண்டங்கள் வாங்கக் குயவன்வீட்டுக்குப் போகின்றனன்" என்றாள். அதுகேட்ட வீசோபாகேசன், அந்தம்மாளைத் தாடையிற்புடைத்து, அவளுக்குமுந்திக், குயவன்வீடு சேர்ந்து, "இப் பெண்ணுக்குப், பாண்டங்களை, நீ கொடாதே; கொடுத்தால், எனக்கு நீ கடன் பட்டிருக்கும்



தொகை முழுவதையும் இப்போதே கொடுக்கவேண்டும் என்று வருத்துவேன்" என்றான். அதற்குக் குயவன், மிகவருந்தி. "நான் எனது வரவுக்கு மிஞ்சிச் செலவு செய்தபடியால், இக்கடன் நேரிட்டது; இளமையில் வறுமையும், முதுமையில் மக்கள் இழவும், கயவனிடத்திற் கடனும், மிகுந்த துயர்தருவனவாம். நான் இத்துஷ்டனிடத்திற் கடன் பட்டபடியால், இவனுக்கு அஞ்சி, பரமசாதுக்கள் விரும்பியதைக் கொடுக்கக்கூடாதவனா யிருக்கின்றேன்; அதிஷ்ட ஈனன் ஆகையால் நான் இவ்வீனனுக்குக் கடன்காரன் ஆனேன்" என்று எண்ணி, முக்தாபாய்க்குப் பாண்டங்களைத் தரமாட்டேன் என்றான். அச்சிறுமி, வீட்டுக்குவந்து வருந்தி நிற்கையில், ஞானதேவர் கண்டு, கண்ணீர் துடைத்து, அவள் வருந்துங் காரணங்கேட்டு, நடந்த விருத்தாந்தத்தை உணர்ந்து, "தங்காய்! வீசோபாகேசன் மானபங்கஞ் செய்தான் என்று வருந்தாதை; அவன் இயற்கைக் குணத்துக்கு நாம் என் செய்யக்கடவோம்; நமது ஊழ்வினை நுகர்ந்து தீரவேண்டும்;

'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்' என்ற

முதுமொழி பொய்க்காது" எனச் சமாதானங்கூறி, "நீ செய்யவேண்டிய சிற்றுணவை, எனது முதுகின்மீது செய்க" என்று சொல்லி, தனது யோகாநுகூலத்தால், ஜடராக்கினியைப் பெருக்கி, வாயில் நெருப்புச் சுவாலை வீசக் கண்கள் தீப்பொரி பறந்து சிவக்க, முதுகைக், காய்ந்த இருப்புத்தகடுபோல் ஆக்கினார். முக்தாபாய், தனது தமயனார் நியமித்தபடி, அவர் முதுகின்மேல் சிற்றுணக்கள் செய்து, அவைகளைப் பதமுடன் எடுத்து, ஒழுங்காய் அடுக்கிவைத்தாள். ஞானதேவர், ஜடராக்கினியை எப்போதும்போலத் தணித்துக்கொண்டார்.

வெளியே போயிருந்த நிவர்த்திதேவர், சோபானதேவர் இவர்கள் இருவரும் வந்தபிறகு, எல்லாருங்கூடி, சுவானுபவம் என்னும் சுவர்ன பாத்திரத்தில், பரம பக்தியென்னும் பாலைவிட்டு, விஷயவொடுக்கச் சுகானுபவம் என்னும் சர்க்கரையைக் கலந்து, பகவத் குணானுபவம் என்னும் அப்பத்தைச் சேர்த்து, பரமானந்தம் என்னும் சுவையை அனுபவித்து, "இவ்வானந்தாவனுபவ நுகர்ச்சிக்குத் தகுந்தவன், ஸ்ரீ வாசுதேவனே" என உணர்ந்து, முக்தாபாய் சமைத்துவைத்த சிற்றுணக்களைப் பகவானுக்கு நிவேதித்து, அதனால் பரிசுத்தமாய் மிகுந்தவைகளை, கோவிந்தநாம தியானத்துடன் புசித்துக்கொண்டிருந்தார்கள். வீசோபாகேசன், மறைந்திருந்து, இவ்வதிசயத்தைக்கண்டு, தனது அக்கிரமத்துக்கு வருந்தி, "ஆஹ! ஆஹ!! நான் எத்தனை மூடன்! எத்தனை அதிஷ்ட ஈனன்! இவர்கள் அவதார மூர்த்திகள் என அறியாமற் போனேன்; அதிஷ்டம் இல்லாதவன் மாணிக்க மணிகளைக் கற்களென்று நினைத்தது போல, புண்ணியர்களான இவர்களைக் கேவல மானிடர்களென்றெண்ணி இவர்களுக்குக் கெடுதிசெய்தேன். இப்படிப்பட்ட நான் எங்குச் சென்றாலும் நற்கதி அடையமாட்டேன்.

பக்தருக்குக்கேடு சூழ்ந்த பாவத்தைப் பரிகரிப்பதற்குப் பகவானும் சமர்த்தன் அல்லன். எல்லாம் வல்ல ஈசன் இவ்விஷயத்தில் மாத்திரம் வலியற்றவனாய் இருக்கின்றான். முற்காலத்தில், பரம பாகவதரான அம்பரீஷர் விஷயத்தில் அபசார மடைந்த தூர்வாச முனிவர், மூவுலகினும் திரிந்தும், ரக்ஷகரைக் காணாமல், பகவானைச் சரணடைந்தார். அப்போது பகவான், 'தூர்வாச! பக்தருக்குக்கேடு சூழ்ந்தவர்களைக் காப்பதற்கு நான் வல்லவன் அல்லேன். முள்ளை முள்ளால் வாங்குவது போலவும், இரும்பை இரும்பால் அறுப்பது போலவும், எனது அபிமானவதார புருஷனாகிய அம்பரீஷனுக்கு நீ செய்த அபசாரம், அவனாலேயே பரிகரிக்கப்படவேண்டும். ஆகையால் அவனைச் சரணடையக் கடவாய்' என்று நியமிக்க, தூர்வாசர் அங்ஙனமே செய்து பரிசுத்தர் ஆனார் அல்லவா! ஆகையால் நான் இம்மஹான்களைச் சரணடைந்து, இவர்கள் அருளுக்குப் பாத்திரன் ஆவேன்" என்று நிச்சயித்து வீட்டுக்குள் நுழைந்து, ஞானதேவர் பிச்சிலை வலிந்து கைப்பற்றி உட்கொண்டு, அந்த மகத்துவத்தால், அஞ்ஞானத்தை வேரோடு களைந்து, பகவத்பக்தி, சம்சாரவிரக்தி, பாகவதப் பிரீதி முதலியவை அதிகரித்து, ஞானதேவர் பாதாரவிந்தங்களுக்குச் சாஷ்டாங்க நமஸ்காரங்கள் செய்து, "திக்கற்றவனும், திருவடிகளில் அடைக்கலம் புகுந்தவனும், எண்ணிலாக்குற்றம் நிறைந்ததனால், அடிவயிற்றில் திக்கென்று பயமிகுந்த கீழ் மகனுமாகிய என்னை, கடைக்கண்பார்வையால் காப்பாற்றியருளவேண்டும்" என்று பிரார்த்தித்தான். அதனைக்கேட்ட ஞானதேவர், அவனுடைய உள்ளக்கருத்தை உணர்ந்து, அவன் தலைமேல் தமது அபயாஸ்தத்தை வைத்துக் கருணைசெய்தார். அதுமுதல், ஞானதேவருடைய அருட் பிரசாதத்தால் விசோபாகேசன், பரம சாதுவாய், அவர்க்கு நெருங்கிய சிஷ்யனாய், பக்த சிகாமணியென்று எல்லாராலும் கொண்டாடப்பட்டு வாழ்ந்தான்.

ஸ்ரீ ஹ்ருஷீகேசாய நம:

பத்தாம் அத்தியாயம்

# ஞானதேவர், நாமதேவருடன் தீர்த்தயாத்திரை செய்யும் சரித்திரம்

ஞானதேவர் பண்டரிபுரத்துக்கு வந்து, நாமதேவரைத் தரிசிக்கு நிமித்தம், அவர் வீடு நோக்கிப் போகையில், அவர் எதிர் கொண்டு,

"வைணவனென்பானிவ் வையகத்தில் தன்போன்ற
வைணவனைக் கண்டால் வலம்வந்து தாழ்ந்திடுமால்" என்றபடி,

தண்டாகாரமாய் வீழ்ந்து வணங்கி, அழைத்துக்கொண்டுபோய் உபசரித்துப் பூசித்து, "ஞானகர சுவாமீ! சம்சார சாகரத்தில் மூழ்கிக்கிடக்



கிறவர்களாகிய ஜீவர்களைக் கரையேற்றுமாறு, அவதரித்த புண்ணியராகிய தேவரீர், பரம கிருபையால் இக்குடிசைக்கு எழுந்தருளினீர்கள், நான் பரிசுத்தனானேன்" என்று கூறித் திரும்பவும் வலம் வந்து தொழுது வீழ்ந்து பணிந்து எழாமற் கிடந்தார். அப்போது ஞானதேவர், நாமதேவரைக் கைதூக்கி எடுத்துத் தழுவி, "ஓ நாமதேவா! உனது பாக்கியத்துக்கு அளவில்லை; பகவத் பக்தியா லநுபவிக்கும் சுகம், உனக்கே பலித்திருக்கின்றது. காம, குரோத, லோப, மோக, மத, மாற்சரியங்களை வேரோடு களைந்து, ஸ்ரீ ருக்மிணிகாந்தனிடத்தில், உள்ளன்பு மிகுந்த பக்தியைச் செய்கின்றனை; உனது பாக்கியமே பாக்கியம்!

"நந்தங் குலத்தில் நாரணற் கடிமைசெய்
வைணவன் ஒருவன் வந்தவ தரித்தான்
ஆதலால் உய்ந்தோம் அனைவரும் என்று
காதலால் ஆடிக் களிப்பர்மு தாதையர்
தென்புலத் தாரெலாம் ஜெயஜெய வென்று
சிரகர கம்பிதம் செய்து
கோஷிப் பார்மிகக் குதூகல மாயே" என்றபடி,

உனது பிதிரர்கள், 'நமது குடும்பத்தில் ஒரு வைணவன் பிறந்தான், நம்மை ஈடேற்றுவான்' என்று கோஷிக்கிறார்கள்; உனது மூதாதையர், பேரானந்த முற்றவர்களாய் நடனஞ் செய்கிறார்கள். அவர்கள் செய்தவத்தை நான் என்னென்று சொல்வேன்!" என்று கூறி, "உன்னிடத்தில், எனது எண்ணத்தை இரகசியமாய்ச் சொல்லவேண்டியிருப்பதால், ஒரு தனியிடத்திற்குச் செல்வோம்; வா" என்று, அவர் கையைப்பற்றி அழைத்துக்கொண்டுபோய், யாரும் அற்ற இடத்தில் குந்தவைத்துக் கொண்டு, "தீர்த்த யாத்திரையையும், தேவ தரிசனத்தையும் நாம் இருவரும் சேர்ந்து செய்யவேண்டுமென்று விரும்புகின்றேன்; நீ எனது எண்ணத்தை ஈடேற்றுக" என்று மிகவும் வேண்டிக்கொண்டார். நாமதேவர், அவ்வார்த்தையைக் கேட்டு, விசன நிறைந்த சித்தமுடையவராய், "ஸ்ரீ பண்டரி நாதனுடைய நித்திய சேவையையும், அத்திருப்பதி வாசத்தையும் கைவிட்டு வேறொன்றை விரும்புவது, கையிலுள்ள நீரைக் கவிழ்த்துவிட்டு, மழை ஜலத்தை விரும்புவதுபோல் இருக்கிறது" என்று எண்ணி, ஞானதேவரை நோக்கி, "ஓ சுவாமி! நான் பண்டரி நாதனுக்குச் சொந்தமானவன்; நான் பிறந்தது முதல் இன்றளவும் எனது தேகயாத்திரையும் ஆத்மயாத்திரையும் ஸ்ரீ பாண்டுரங்கன் அதீனத்தில் இருக்கின்றன; மன வாக்குக் காயங்களால் அவற்காகவே பிழைத்திருக்கின்றேன்; அத்தேவதரிசனம் இடையறாமல் செய்துகொண்டிருக்கும்படி எனக்கு அருள் புரியவேண்டும்" என்று பிரார்த்தித்தார். ஞானதேவர், நாமதேவரை ஆலிங்கனஞ்செய்துகொண்டு, "ஓ நாமதேவ! உனது உள்ளக் கருத்து எனக்கு நன்றாய்

ORZ:U1 95
115



விளங்கியது ; உனது எண்ணம் அங்ஙனம் ஆனால், ஸ்ரீ பண்டரீ நாதனிடத்திற்குச் செல்வோம், வா" என்று அவர் கரத்தைப் பற்றிச் சந்நிதானத்தில் நுழைந்து, பலிபீடத்துக்குச் சமீபத்தில் நமஸ்காரஞ் செய்து, மூலஸ்தானத்துக்குள்ளே வந்து, செங்கல்மேல், நின்ற திருக்கோலத்தோடு எழுந்தருளியிருக்கும் சுவாமியைக் கண்கண்ட பலனைச் சேவித்து, விதிப்படி பூசித்துத் தோத்திரஞ்செய்து, தமது எண்ணத்தை விண்ணப்பஞ்செய்ய, ஸ்ரீனிவாசன் கேட்டு, "ஞானதேவா! வெள்ளைப் படிகத்தைப்போலக் களங்கமற்ற நீ, மனஞ்சலித்துத் தீர்த்த யாத்திரையை விரும்புதல், சூரியன் வெப்பத்தையும், சந்திரன் தட்பத்தையும் விரும்புவதுபோல் இருக்கின்றது" என்றான். அதற்கு ஞானதேவர், "ஜகதீசா! தேவரீருடைய திருவாய்மொழி உண்மையானாலும் ஞானத்தைவிட பக்தியே மேன்மையானது ; இந்நாமதேவர், பரமபக்தி நிலயர்; இவருடன்கூடிவாழ்ந்து, பரமபக்தியினாலுண்டாகும் பேரானந்தாமிர்தத்தைப் பானம் பண்ணவேண்டுமென விரும்பி விண்ணப்பஞ் செய்தேன். ஆகையால், தேவரீர், திருவருள் சுரந்து எனது எண்ணத்தை நிறைவேற்ற வேண்டும்" என்று பிரார்த்தித்தார். அப்போது ஸ்ரீ பண்டரி நாதன், புன்னகையுடன் நாமதேவரைப் பார்த்து, "ஓ, அன்ப! ஞானதேவரைச் சாக்ஷாத் பரப்பிரம்ம சொரூபம் என்று தெரிந்துகொள் ; அவர் உனது நட்பை விரும்பியிருக்கின்றார். ஆகையால், நீ அவருடன் போய், அவர் திருவுளப்படி நடந்துகொள்; எல்லா இடங்களிலும் எல்லாக் காலங்களிலும், கனவு நனவு முதலிய எல்லா அவஸ்தைகளிலும் என்னை மறவற்க ; எனது பிராணனுக்கு இருப்பிடமாகிய உனது பிரிவு சகிக்கக் கூடாததாயிருக்கின்றது. அதனால், விரைவில் திரும்பி வந்துவிடு" என்று கூறி, ஞானதேவரைப் பார்த்து "நீ, பரிசுத்த சாந்தமூர்த்தி, மெய்ஞ்ஞான சொரூபி ; உன்னை ஒன்று வேண்டுகிறேன் : நாமதேவன், எனக்கு ருக்மிணியைவிட அதிக விருப்பம் உள்ளவன் ; அப்பேர்ப்பட்டவனை உனது தாக்ஷிணியத்துக்காக உன்னுடன் அனுப்புகிறேன். அவனிடத்தில் அதிக விசுவாசம் வைத்துக் காப்பாற்றி அழைத்துக்கொண்டு வந்து என்னிடத்தில் ஒப்புவிக்க வேண்டும்" என்று சொல்லி, நாமதேவருடைய கையைப்பற்றி, ஞானதேவர் கையில் ஒப்புக்கொடுத்து, அவர் பிரிவாற்றாமைக் கடையாளமாக அப்போதே கண்ணீர் உகுத்து, "ஞானதேவா! எனது பிராணவைப்பாகிய இந்நாமதேவனை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்" என்று கூறினான். அது கேட்ட ஞானதேவர், ஆனந்த பரவசராய் ஸ்ரீ பண்டரீசரைச் சேவித்து, நாமதேவரைக் கரங்கோத்துக்கொண்டு, சந்திரபாகை என்னும் நதிக்கு வந்து, இருவரும் ஸ்நானஞ்செய்து, தீர்த்தயாத்திரை செய்ய மன உறுதிகொண்டு, புண்டரீக வரதனுடைய சரணாரவிந்தங்களுக்குச் சாஷ்டாங்க வந்தனம் செய்து,

"சிந்திக்கத் தித்திக்குஞ் செவ்வாய் துவர்த்துப்பாம்
புந்திக்குளேயின் புனிமேவு—நந்தம்



கருவரங்கங் கைத்தழலுங் காவிரியி னூடே
திருவரங்கத் தேவளருந் தேன்" என்றபடி,

கேசவ நாம தோத்திரஞ்செய்துகொண்டு புறப்பட்டுப் போனார்கள். ஸ்ரீ பண்டரிநாதன், கொஞ்சதூரம் இவ்விருவரையும் தொடர்ந்துசென்று வழிவிட்டுத் தன்கோயில் சேர்ந்தான். அப்போது ருக்மிணிதேவி, சுவாமி திருவடிகளை அலம்புவதற்குத் தீர்த்தங் கொண்டுவந்து, அவர் கண்களிற் பெருகும் விசனக்கண்ணீரைக்கண்டு, அதிசயித்து "எனது பிராணநாதா! இவ்விசனத்துக்குக் காரணம் யாது? என்று கேட்க, பக்தவத்ஸலன் "ஓ சகி ; எனது உயிருக்கிருப்பிடமாகிய நாமதேவன், பிதா, மாதா, மகன், சகோதரன், மனைவி, மித்திரன் முதலிய எல்லாரும் நானே என எண்ணியிருப்பான். அப்பேர்ப்பட்டவனை ஞானேச்வரன் பின்னே அனுப்பினேன். அவன், இவனை எங்ஙனம் அழைத்துக்கொண்டு போவானோ அறியேன். அந்நாமதேவன் பிரிவு எனக்கு விசனத்தை உண்டாக்குகிறது. பரமபக்த மணியாகிய நாம்தேவன் ஒருபொழுதும் என்னைப்பிரிந்தவன் அல்லன் ; அப்பேர்ப்பட்டவனை பிரிந்து இருப்பதனால் என் மனது எதனிடத்திலும் பொருந்தாமல் இருக்கின்றது. நான் உலகமாகிய மரத்துக்கு வேராய் இருக்கின்றேன் ; நாமதேவன் அவ்வேர்க்கு ஆதாரமாகிய நீராய் இருக்கின்றான். அப்படிப்பட்ட ஜலத்தை ஞானதேவமேகம் கைக்கொண்டு சென்றது" என்று விசனப்பட்டான். அதுகேட்ட ருக்மிணிதேவி "ஓ, பக்திவலையிற்படும் பரம்பொருளே! உனது வாய்மொழி வாய்மைமொழி ஆனாலும்.

"ஒன்றாகி மூன்று வடிவாய் அடியவர் உள்ளத்துள்ளே
நின்றாய் புறத்தும்புள் ளேறிவங் தாயெங்கும் நீ நிறைந்தாய்" என்றபடி,

சர்வஜீவ மனத் தாமரைகளில் நிறைந்தவனாகிய உனக்கு நாமதேவன் பிரிவு எங்ஙனம் நேரிடும்? ஏன் இப்படி விசனப்படுகின்றனை?" என்று கூற, சகல கல்யாண குண நிதியான பகவான், ஜகந்மாதாவை நோக்கி, "நான் உருவிலன் ஆயினும், பக்தர் அனுபவ நிமித்தம் ஸ்ரீவைகுண்ட முதலிய ஸ்தலங்களில் உருவத்துடன் இருக்கின்றேன். அப்படிப்பட்ட திவ்ய மங்கள விக்ரக விசிஷ்டனாகிய எனக்கு, அவ்வத் தேசவாசிகளான பக்தர்களும், அவர்களுக்கு நானும், உயிர்பொருந்தும் இடமாய் இருப்போம். சூரியனோடு கிரணத்துக்கும், பூவோடு மணத்துக்கும் நீக்கம் இல்லாதபடி என்னோடு என்றுங் கலந்திருப்பவர்களாகிய எனது அந்தரங்க பக்தர்களுக்கு நீக்கம் இல்லை; அப்பேர்ப்பட்டவர்களுக்குள் முதன்மை பூண்டவனாகிய நாமதேவனுடைய பிரிவை நான் எப்படி ஆற்ற வல்லேன்" என்று சொல்லி, மனமுருகி யிருந்தான். ஸ்ரீருக்மிணி தேவியும், மற்றும் அநேக பக்தர்களும் பக்தவத்ஸலனுக்குப் பலவிதமாய்ச் சமாதானஞ் சொல்லித் துக்க பரிகாரஞ்செய்து கொண்டு இருந்தார்கள்.

120786

இங்கு இப்படி இருக்க, நாமதேவரும், ஞானதேவரும், வழியே போய்க்கொண்டிருக்கையில், நாமதேவர் அடிக்கடித் திரும்பிப் பார்த்துக்கொண்டு "ஓ, கிருபைக்கடலே! ஓ, ஜகந்நாதா! ஓ, பண்டரிநாதா! ஓ, பிராணநாதா!

"மருவு தந்தையுங் குருவு மெந்தையு மருள்கெடுப்பதும் அருள் கொடுப்பதும், உருகு நெஞ்சமும் பெருகு தஞ்சமும் உரிய ஞானமும் பெரிய வானமும், திருவ ரங்கனு ரிருவ ரங்கனுர் செங்கண் மாயனு ரெங்க ளாயனு, ரருண்மு குந்தனுர் திருவை குந்தனு ரமல நாதனுர் கமல பாதமே" என்றபடி,

எனது அரும் பொருள் யாவும் நீயே ஆக, இப்போது உன்னை விட்டு வரவேண்டி வந்தது" என்று வருந்தினவராய்த் தம்மை மறந்து தரையில் விழுந்து, தாயைவிட்ட குழவியைப்போல் புலம்பினர். ஞானதேவர் அவரைப்பார்த்து, "பக்தசிகாமணீ! பரிபூர்ணனும் எல்லாப்பொருளினும் மறைந்திருப்பவனுமாகிய ஸ்ரீ விட்டலநாதன், உனது இதயகமலத்தில் வசித்து, சர்வ சாக்ஷாத்காரமாய் இருக்க, நீ என் விசன நெருப்புக்கு இரையாகின்றாய்? அதிஷ்டஈனன் ஒருவன் தனது பெரியோர் புதைத்துவைத்த நிதியைக் கண்டுபிடித்து அனுபவிப்பதற்குத் திறமையின்றி வருந்துவதுபோல், சாது ஜனங்களுக்கு எய்ப்பில் வைப்பாகும் கோபால சூடாமணி, உனது மனத்தகத்தனாயிருக்க, அவனை அனவரதமும் தரிசித்து ஆனந்திக்காமல் 'பாண்டுரங்கனைப் பிரிந்தேன்' என்று ஏன் அஞ்சுகின்றாய்?" எனக் கேட்டார். அதற்கு நாமதேவர், "ஓ, சுவாமி! அரூபமாய் மறைந்திருக்கும் ஒன்றை வணங்க, நான் யோக மேற்கொண்டவன் அல்லேன்; திவ்விய மங்கள விக்கிரகத் தலைவனும், அனந்த கலியாண குணநிதியாய்க் கேட்பவர் கேட்டபடி கொடுக்க வல்லவனும், சனகாதி பரம யோகியர் சேவையை ஏற்றுக் கொள்பவனும், ஸ்ரீ ருக்மிணீ சமேதனும் நாரத வீணாகானவிநோதனும், புண்டரிக வரதனும், ஜீவன்முக்திநிக்ஷேபனும், பீமநதிக்கரையில் செங்கல்மேல்நிற்பவனும், பரிபக்குவாத்துமாக்களை எதிர்கொண்டு காட்சிதரக் காத்திருப்பவனும் ஆகிய ஸ்ரீ பாண்டுரங்கனைத் தவிர என் மனம் வேறொன்றினும் பற்றாது. அப்பகவானது திவ்விய சரணாரவிந்தங்களை, நான், அனவரத தரிசனம் செய்யுமாறு கிருபை செய்யவேண்டும், அப்படி யாகாவிட்டால் எனது பிராணங்கள் நில்லா. அப்பகவானது தரிசன கீர்த்தன தியானங்களே, எனக்குத் தாரக போஷகானுபவங்களாயிருக்கின்றன" என்று இப்படி அனவரதமும் சொல்லித் தனது களங்கமற்ற வார்த்தைகளால் ஞானதேவர்க்குப் பரமானந்தத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தார். ஒருநாள் ஞானதேவர், நாமதேவரை நோக்கி, "பரம பக்த சிகாமணி! நீ, எங்ஙனம் இருடிகேசனை, உள்ளங்கை நெல்லிக்கனி யாக்கிக்கொண்டனை; எங்ஙனம் பஜித்தனை; எங்ஙனம் தியானித்தனை; ஆத்யாத்மிக ஆதிபௌதிக ஆதிதைவிக ரூபங்களாகிய தாபத்ரயாக்னிகள் மூன்றையுங் குளிரச்செய்து,



ஜனன மரண வெள்ளத்துக்குத் தப்பி, நரகத் தீயைத்தணிக்கவல்ல வாசுதேவ தருநிழலை எங்ஙனம் பெற்றனை?" என்று கேட்டார். அதற்கு நாமதேவர், அவரை நமஸ்கரித்து, "ஓ, சுவாமீ! நான் கயவன்; மூடன். ஸ்ரீ பண்டரிநாதன், எனது ஆத்மரக்ஷணையைத் தேவரீருடைய சுவாதீனத்தில் விட்டிருக்க, மூடர்களில் முதல்வனாகிய என்னை, திவ்விய ஞானானந்த மூர்த்திகளான தேவரீர் இப்படி வினவுதல், காமதேனு, பிறரை, புல் இரப்பது போலாம்" என்று சொல்லிச் சும்மாவிருந்தார். அப்போது ஞானதேவர், "ஓ, நாமதேவா! உனது இதயம் சமுத்திரம் போல் மிகவும் ஆழ்ந்திருக்கின்றது; உனது மழலை மொழிகள் சுவானுபவானந்த ரசத்தைப்பார்க்கிலும் மிக்க இன்பத்தை தருகின்றன. அமுதூறிச் சிறந்த நினது இதவசனங்களை அனவரதமும் சிரவணானந்தமாய்க் கேட்கக் கோருகின்றனன். உன்னைப்போன்ற உள்ளன்புடைய பக்தர்கள் இந்நில உலகில் இலர். இப்பேர்ப்பட்ட அனுபவத்தில் ஆசைவைத்து, அதனால், உனது கூட்டுறவை, ஸ்ரீ பாண்டுரங்கன் தண்ணளியால் நான் பெற்றேன். உன்னைப்போல, எல்லையில்லா அன்பின் இன்பை அனுபவிக்கிறவர்கள் இவ்வையகத்தில் இலர்.

"திருமா லடியார் சேர்க்கைசெங் கதிரோன்
ஒளியைப் போன்மென் றுவமங் கூறலாம்
செங்கதி ரொளியால் செல்லும் புறவிருள்
ஒன்றே திருமாற் குகந்தவர் சேர்க்கை
நாத்திகப் புறவிருள் நலிவிப் பதன்றிக்
கர்ம மாதிய கரிசக இருளையும்
தீமை தீரத் தீர்க்கும்
என்மனர் பெரியோர் இனிதெரி மனனே" என்றபடி,

சூரியனுடைய சந்நிதியில் புறவிருள் ஒழியும். உன்போன்ற விஷ்ணு பக்த சூரியர் சந்நிதியில், நாஸ்திக சகவாசத்தால் வரூஉம் புறவிருளும், காம, குரோதாதிகளால் வரூஉம் அகவிருளும் நசிக்கும். நீ, கூச்சத்தைவிட்டு, எனக்கு, உனது அனுபவத்தைச் சொல்லி; எனது எண்ணத்தை நிறைவேற்றுக" என்று பிரார்த்தித்தார். அதுகேட்டவுடனே நாமதேவர், அவரை வணங்கி, அடக்கத்துடன், "ஓ, சுவாமி! உலகம் ஈடேறும்படி அவதரித்த குருமணீ! தந்தை, தனது பிள்ளையினுடைய மென்மதுர மொழிகளை ஆசையுடன் கேட்க விரும்புவதுபோல, தேவரீர் எனது வாக்கினால் என் சுவானுபவத்தைக்கேட்க விரும்பி, இத்தனை உபசாரங்களைச் சொல்லுகின்றீர்கள். தேவரீர் நியமித்தபடியே, தேவரீருடைய பரமகிருபையால் அடியேற்குக் கிடைத்த அனுபவத்தை விண்ணப்பஞ் செய்கின்றேன்: முதன் முதல் ஒருவற்கு உறுதி வைராக்கியம் உண்டாகவேண்டும்; அஃதுண்டான பிறகு பூததயை உண்டாகும்; அப்போது, நீ, நான் என்னும் வேறுபாடு ஒழியும். இப்பேர்ப்பட்ட நிலை எவற்குளதோ, அவனே பரிசுத்த தைவ வணக்கத்துக் கதிகாரியா

வான். இவ்விலக்கணம் அமையாத கடவுள் வணக்கம் ஈயைக் கூட்டி உண்ட அன்னம் போலாம். எனது இதயத்தில், ஞானானந்த சொரூபியாகிய ஸ்ரீ விட்டல மூர்த்தியைச் சர்வ சக்தியுள்ள கடவுளாய் எண்ணி யிருக்கின்றனன்; அதுவே எனக்குத் தியானம். இந்த உணர்ச்சியே எனது இன்பத்திற்குப் பிறப்பிடமா யிருக்கின்றது; இது அழியாத் தன்மை யுடையது. அசுணப் பறவை, தனது உடலை மறந்து, ஒலியில் மனம் ஒடுங்கினபடி, தேக நினைவை நீத்து, பகவத் விஷய சிரவணத்தில் ஒருவன் மனம் ஒடுங்கவேண்டும். உலோபியானவன் தன் சித்தத்தைப் பல வேறு விவகாரங்களில் செலுத்தி இருந்தாலும், திரவியம் தேடுதலில் ஊன்றி யிருப்பதுபோல, ஸ்ரீமந் நாராயணனே அழியாப்பொருள் என்று நிச்சயித்த மனமுடையவனா யிருக்கவேண்டும். சாதகப்பறவை, ஆகாயத்தில் சஞ்சரித்துக்கொண்டு, மேகத்தில் லக்ஷியம் வைப்பது போலவும்; பசு, மலைப்பிரதேசத்தில் அல்லது காட்டிடத்தில் மேய்ந்து கொண்டு, தனது கன்றினிடத்தில் மனம் வைப்பது போலவும்; சம்சாரத்தில் உழைத்துக் கொண்டிருந்தும், மனத்தகத்தில் எல்லாப் பாவனைகளாலும் ஸ்ரீபாண்டுரங்கனைப் பாவிக்கவேண்டும். ராஜஸ, தாமஸ குணங்களை நீக்கிச் சத்வகுண சீலனாய், பகவத் பிரிய பாத்திரனாய், நியமத்துடன் தனியே குந்தியிருந்து, ஸ்ரீ ஹரியைத் தியானிக்கவேண்டும். இது பரம ஸாதனம்; மற்ற சாதனங்கள் அநேக பந்தனைகளோடு கூடியவை. இப்படி எனது மனவாக்குக் காயங்களால் அனுபவிக்கும் அனுபவத்துக்கு ஸ்ரீ ருக்மிணீகாந்தன், சாக்ஷியாய்த் தலைமை பூண்டிருக்கின்றான்." என்று கூறினார். இவ்வநுபவ வாக்கியங்களைக் கேட்ட நாமதேவர், சந்தோஷித்து, "ஓ நாமதேவா! முக்காலத்திலும், விஷ்ணு பக்தர்களில் உனக்குச் சமானமானவர்கள் இலர். உனது திருவாய் மொழியாகிய அமுதம் எனக்குக் கிடைத்தபடி, எக்காலத்தும், எவர்க்கும் கிடைக்காது. மஹாயோகியரும், முனிவரும் பலவித யோகாப்பியாஸம் செய்பவர்கள் ஆயினும், அவர்களில், உன்போன்ற பரமாத்மாக்கள் இலர்" என்று சொன்னார். இங்ஙனம், தினந்தோறும்,

"முக்த ரானவர் பிரமமொன் றெனத்தனி மொழிவார்
வித்தை சேர்தரு முளத்தினோர் விராட்டுவை நயப்பார்
சுத்த ரானவர் பரமவான் மாவெனச் சொல்வார்
பக்தி யோர்பக வானென வேநனி பகர்வார்"

"கேடில் வேதமு மகங்களுங் கெழுமிய தவமு
நீடி யோகமுந் தானமு நிகழ்த்திய கதியுங்
கூடு மாயையுந் தருமமுங் குலவிய வீடு
நாடு ஞானமு நவிலி ஞாராயண னெனுமால்" என்றபடி,

பக்தர்களாம் இவர்கள் இருவரும், ஸ்ரீமந் நாராயணனே பரம்பொருளென வுணர்ந்து, அவன் பற்றே பெரும் பற்றாகப் பற்றி,

"இன்ப மிடையறு தீண்டு மவர்வென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்" என்றபடி,



மற்றொன்றிற் பற்றற்றவர்களாய், பரமானந்தத்தை அனுபவித்துக் கொண்டு, அஸ்தினாபுரத்துக்கு வந்தார்கள். நாமதேவர், ஸ்ரீஹரி கலியாண குணங்களை எடுத்துக் கூறும் பரமானந்தத்தை அப்பட்டண வாசிகள் அனைவருங் கண்டு, அதிசயித்து, ஆண் பெண் பாகுபாடின்றி, பகவந்நாம சங்கீர்த்தனம் பண்ணிக்கொண்டு மெய்மறந்து பக்தி பரவசராய் இருந்தார்கள்.

இவ்விருத்தாந்தங்களை அவ்வூர் அரசன் கேட்டு, "நான், இவருடைய உள்ளக் கருத்தைச் சோதித்து அறிவேன்; வஞ்சனையா யிருந்தால் இவருக்குத் தவறாமல் அவமானம் வருவிப்பேன்" என்று தீர்மானித்துக்கொண்டு, நாமதேவர் பரமானந்தபரராய்ச் சங்கீர்த்தனம் செய்யும் இடத்திற்குப் பிணப்பசு ஒன்றைக் கொண்டுவந்து அவரை நோக்கி, "இச்சவப் பசுவை, நீ பிழைப்பித்தால், நினது பக்தி உண்மையென நம்புவேன்; அங்ஙனம் செய்யாவிடில், வெளிவேட்டாரியாம் நின்னைத் தண்டிப்பேன்" என்று சொல்லுகையில், நாமதேவருடன் சங்கீர்த்தனம் பண்ணிக்கொண்டிருந்தவர்கள் எல்லாரும் சித்திரப் பாவைகள்போல் அசைவற்றிருந்தார்கள். அப்போது, அத்துருக்க அரசன், நாமதேவரைநோக்கி, "இப்பசுவை எத்தனை தினங்களுக்குள் பிழைப்பிப்பாய்?" என்று கேட்க, "நான்கு தினங்களுக்குள் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, இப்பசுவைப் பிழைப்பிப்பார்" என்று நாமதேவர் விடையளித்தார். அது கேட்ட அரசன், சில சேவகர்களைக் காவல் வைத்து, தனது அரண்மனைக்குப் போனான். அப்போது நாமதேவர், ஸ்ரீ ஹரியைத் தியானித்து,

"மாதவா கோவிந்தா மாயச் சகடுதைத்தோய்
யாதவா கோபாலா எங்களையாள்—நாத!
அறவாழி அந்தணனே அம்புயக்கண் மாலே
மறவாழி சங்கேந்தி வா" என்றும்,

"கஞ்சனைக் காய்ந்தோய் கமல மலர்மேவும்
மஞ்சனைப் பெற்றோய் மதகரியை—அஞ்சற்க
என்றளித்தோய் கன்னி யிமிழ்திரைக்கு நாதவனை
அன்றியெனக் குற்றதுணை யார்?" என்றும்,

பலவாறு துதித்து, அப்பசுவின் தலையைத் தமது மடிமேல் இருத்தி, ஸ்ரீ பண்டரி நாதா! அநாதநாதா! ஆதிமூலப்பொருளே! சீக்கிரம் வா, நான் அழைக்க, நீ தாழ்க்கக் காரணம் என்ன? ஸ்ரீ ருக்மிணியுடன் காதலுரையாடியதனால் என்னை மறந்தனையா? பக்தர் கீர்த்தனங்களைக் கேட்டு மயங்கினையா? யோகியர் மனத்தகத்தில் அழுந்தினையா? நம்பினவர்கள் சங்கடத்தை நாசமாக்க எங்காவது சென்றனையா? பண்டரிபுரத்தில் நினது தரிசனார்த்தம் யாராவது பரம பக்தர்கள் வந்தார்களா?" என்று மனமுருகி அழைத்தகாலத்தில், ஸ்ரீ பாண்டுரங்க வரதன் காட்சி தந்தான். உடனே நாமதேவர் இருக்கை விட்டெழுந்து,

சுவாமியின் பாத கமலங்களைப் பற்றிக்கொண்டு, "அநாதபந்தோ! ஸ்ரீபக்தபாந்தவா! என் நான்கு நாட்களாய் என்னை அசட்டை செய்தனை, இது உனக்குத் தருமமா?" என்று கேட்க, பகவான், "ஓ நாமதேவா! என்மீது தப்பில்லை; இப்பசு நாலு நாட்களுக்குள் பிழைக்கும் என்று நீ கூறினை. ஆகையால் நான் தாமதித்து வந்தேன்; உடனே பிழைக்கும் என்று நீ கூறியிருந்தால் நான் அப்போதே வந்து அப்பசுவைப் பிழைப்பித்து இருப்பேன். எனது பக்தர் வாய்மொழிகளை, வாய்மை மொழிகள் ஆக்குதல் எனக்கு முக்கியவிரதம். நான் உள்ளன்புடைய பக்தர்கள் வசப்பட்டு நிற்பவன்" என்று கூறிப் பசுவை எழுப்பி மறைந்தான். சேவகர், இவ்வதிசயத்தை அரசற்கறிவிக்க, அவன் வந்து, நாமதேவர் திருவடித் தாமரைகளுக்கு வந்தனம் செய்து, "சுவாமீ! தேவரீரே பரிசுத்த புண்ணியர்; ஸ்ரீஹரிக்கு உள்ளன்புடைய உமது பரம பக்தி வைபவம் தேவர்களுக்கும் வாசாமகோசரம். மூடனாகிய அடியேன் தேவரீரைச் சோதிக்கவந்த பிழையைப் பொறுத்தாண்டு, அடியேனைத் தாசனாக்கிக் காத்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்துத், தானும் பகவந்நாம தியானம் செய்துகொண்டிருந்தான். அப்போது அங்கிருந்தார் அனைவரும் நாமதேவர் பிரபாவத்தைப் பலவாறு புகழ்ந்து கொண்டாடினார்கள்.

ஸ்ரீ பக்தவத்ஸலாய நம:

பதினொராம் அத்தியாயம்

# ஞானதேவரும் நாமதேவரும், கபீர்தாஸர் வீட்டுக்கு வரும் சரித்திரம்

ஞானதேவருடன் நாமதேவர், அஸ்தினாபுரத்தில் சில நாட்கள் வசித்து, அங்குள்ளாரைப் பகவத் பக்தியிற் சிறந்தவர்களாக்கி, அவ்விடம் விட்டுக் காசிக்குவந்து கங்காஸ்நானம்செய்து, அங்குள்ள தேவாலயங்களுக்குப்போய், பகவானைத் தரிசித்துக்கொண்டு நான்குமாத காலம் அங்கே வசித்தார். ஒருநாள் இரவில் இவ்விருவரும் கபீர்தாஸர் வீட்டுக்குப் போனார்கள். அப்போது அவர், தமது மனைவியுடன் இவர்களை எதிர்கொண்டு சாஷ்டாங்க நமஸ்காரம்செய்து வீட்டுக்குள் அழைத்துக்கொண்டு போனார். அச்சுசீலர்வீட்டுத் தரித்திரநிலை, காணவும் சொல்லவும் சகிக்க முடியாமல் இருந்தது. அன்றுடம் உணவுக்கு ஒன்றும் இன்றி, குழந்தைகளுடன் எல்லோரும் தூங்கிக் காலங்கழித்தார்கள். இங்ஙனம் இருக்க, வந்த விருந்தினரை, ஆதரவு செய்ய வேண்டுமென்று, கபீர்தாஸர், தமது மனைவிக்குச் சொன்னார். அப்பெண்மணி, 'நல்லது' என்று கூறி, மனம் வருந்திக் கடைவீதிக்குப் போனாள். அப்போது இராக்காலமாகையால் கடைகள் மூடப்பட்



டிருந்தன. ஒரு கடைக்காரன் மாத்திரம் விழித்துக்கொண்டிருக்க, அந்தம்மாள் அவன் அருகிற்சென்று, தைரியத்தோடு, "ஓ பாக்கியவானே! தீர்த்தயாத்திரை செய்வோராகிய பரமசாதுக்கள், எமது வீட்டுக்கு வந்திருக்கின்றார்கள்; அவர்களுக்கு உணவளிக்க எமது வீட்டில் ஒரு பதார்த்தமுங் கிடையாது. நீ தயைசெய்து, அரிசி பருப்பு முதலாகிய உணவுப் பொருள்களைக் கொடுத்து, உதவினால், அவைகளின் விலையை நாளை உதயத்தில் உனக்குக் கொண்டுவந்து கொடுப்பேன்" என்று கூறினாள். அங்ஙனம் கூறின கபீர்தாஸர் மனைவியை வர்த்தகன் பார்த்து, "அகாலத்தில், ஒன்றியாய் வந்து பதார்த்தங்களைக் கேட்கும் நீ யார்?" என்றான். அதற்கு அவ்வுத்தமி, "இவ்வூரில் வசிக்கும் வைஷ்ணவோத்தமரான கபீர்தாஸர் *களத்திரம்" என்று சொன்னாள். வர்த்தகன் காமமிக்கவனாய்த் தன்னை மறந்து அந்தம்மாளைப் பார்த்து, "உன்னைக்கண்டது முதல், நான், கருப்பு வில்லியின் சரபாணத்தால், கலங்குகின்றேன்; எனது எண்ணத்தை நிறைவேற்றினால், நீ கோரின பொருள்கள் அனைத்தையும் தருவேன்; எனக்கு அவைகளின் விலையைத் தரவேண்டியதில்லை" என்றான். அவ்வுத்தமி இவ்வார்த்தைகளைக் கேட்டு, "நான் என் செய்வேன்! சாதுக்களாம் விருந்தினர் பசித்திருக்கின்றார்கள்; இவ்வர்த்தகன் தவிர ஏனையோர், தத்தம் கடைகளை மூடிவிட்டு வீட்டுக்குப் போனார்கள். கணவன் கருத்துணர்ந்து, அதன்படி நடத்தல் உத்தம மனைவிக்கு உகந்த தருமம்; முற்காலத்தில், அதிதிகளை ஆதரிப்பவனாகிய சுதரிசனன் மனைவி, தனது கணவன் கருத்தின்படி, அதிதியாய் வந்த தருமதேவதையினுடைய சரீர சம்பந்தத்துக்கு உடன்பட்டாள் அல்லவா! நான் இவ்வர்த்தகன் விருப்பத்துக்குச் சம்மதித்தாலும், வேண்டிய பொருள்களை வாங்கிக்கொண்டுபோய், கணவன் நியமனப்படியே, பாகவதர்களை ஆராதிப்பேன். சாஸ்திரத்தில், தக்கன இவை; தகாதன இவை என்று விதிக்கப்பட்டிருந்தாலும், சமயோசிதமாய்த், தக்கன சில தகாதனவாகவும், தகாதன சில தக்கனவாகவும் மாறுகின்றன. பொய்பேசப்படாதென்று வேதம் முறையிட்டிருக்கவும், விவாகாதிகளில் பொய்பேசல் பாவம் அன்று என,

"பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்' என்ற,

விசேஷவிதி யேற்பட்டிருக்கிறது.

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று" என்று,

வேதம், ஜீவவதை கூடாதென்று விதித்து, மறுபடியும் யாகத்தில் செய்யும் ஜீவவதை பாவம் அன்றெனச் சிறப்பு விதி கூறுகின்றது.

* களத்திரம் - மனைவி.

"தெய்வர் தொழாள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை" என்றபடியும்,

'கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி' என்றபடியும், உத்தமமனைவி, கணவன் வசப்பட்டு அவன் இஷ்டப்படிச் செய்யுஞ் சகல காரியங்களும் பரம தருமமா யிருக்கின்றன.

'பெண்டிர்க் கழகெதிர் பேசா திருத்தல்' என்று, பெண்டுகள் எக்காலத்தும் தம் மனம்போனபடி நடவாமல், கணவன் வசப்பட்டு வாழவேண்டும். அங்ஙனம் இல்லாத இல்லாள் இருந்தும் இறந்தவளாவாள். இதுபற்றியே நாயனார், தமது தமிழ்வேதத்தில்,

"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை" என்று,

விதித்திருக்கின்றனர். ஆகையால் தனது இச்சையாய் ஒருகாரியத்தைச் செய்கின்ற மனைவி, தீய நரகக்குழியைச் சேர்வாள்; அன்றி, கணவன் மனப்படி நடக்க உடன்பட்ட எனக்கு, கணவன் மகிழச்செய்யுங் காரியங்கள் நரகவேதனை தருவன அல்ல" என்று சிந்தித்துத் தனது கணவன் ஆராதிக்கும் பரமாத்மாவான ஸ்ரீராமசந்திரனைத் தியானித்து, வர்த்தகனைப் பார்த்து, "நான் கேட்ட பொருள்களைத் தா; நான் வீட்டுக்குப்போய், கணவன் நியமனப்படி சாதுக்களை ஆராதித்துத் திரும்பி வந்து, உனது விருப்பத்தைப் பூர்த்திசெய்வேன்" என்று சொல்லக் கேட்ட வர்த்தகன், "உனது வார்த்தைகளை நான் எங்ஙனம் நம்புவேன்? எனது எண்ணத்தை, முந்திப் பூர்த்திசெய்து, உனக்கு வேண்டிய பொருள்களை, வேண்டிய அளவுகொண்டுபோ; அங்ஙனம் செய்யச் சம்மதியாயானால், நீ, உன் வழியைப் பார்த்துக்கொண்டுபோ; நீ கோரின பொருள்களைத் தரமாட்டேன்" என்றான். அதைக்கேட்ட அக்கற்புக்கரசி அவ்வர்த்தகனை நோக்கி, "நீ எனது வார்த்தைகளை நம்பாயானால், நான் இடும் ஆணையையாவது நம்பி, நான் கோரின பொருள்களைக் கொடு; உலகம் சத்தியத்தில் நிலை பெற்றிருக்கின்றது; சத்தியத்தாலேயே உலகந் தாங்கப்பெற்றிருக்கின்றது. ஆகையால், நான் சத்தியத்தையே சாற்றுகின்றேன். நான் மறுபடியும் வரேன் ஆனால், எல்லாவற்றிற்கும் ஆதாரமான சத்தியத்தைப் பிறழ்ந்து நடப்பவர் போங்கதியிற் போவேன்,

"செய்மை அண்மையில் உயிர்க்கொரு தாயெனச் சிறந்த
வாய்மை யாலகந் தூய்மையா மற்றிலம் புயத்தைத்
தூய்மை செய்வது நீரலால் சொல்லின்வேறுளதோ?
நோய்மை செய்யினும் வாய்மையே நோன்பெமக் கறிது" என்ற,

சந்திரமதிவசனம் இப்போது என் வசனமே ஆகும். மாமியை வைதல், கணவனை வெறுத்தல், சிற்றுணவை மற்றெவர்க்கும் வழங்காமல் உண்ணல், ஆக்கின அன்னத்தை * அகமுடையானுக்கு முந்தி உண்ணல்,

* அகமுடையான் - கணவன்.



வேலையிற் சோம்புதல், பொய்சொல்லுதல், பெண்ணை விற்றல், சுற்றத்தார்க்குக் கேடுசூழ்தல் ஆகிய இந்தத் தகாக் கருமங்களைச்செய்தார் அடையும்பலனை நான் அனுபவிக்கக் கடவேன்" என்று * சூள் உரைத்தாள். அக்கற்புக்கரசியின் வார்த்தைகளை வர்த்தகன் நம்பி, அவள் கோரின பொருள்களைக் கொடுத்தான். அவைகளை வாங்கிக்கொண்டு அந்தம்மாள், தனது வீடுசேர்ந்து, நடந்த விருத்தாந்தங்கள் அனைத்தையும் தனது கணவருக்குக் கூறினாள். அவர், அப்பொருள்களைத், தமது வீட்டுக்கு வந்திருந்த சாதுக்களுக்குத் தந்து, அவர்களைக் களிப்பித்தார். அவர்கள் அவைகளைப் பகவானுக்கு ஆராதித்து மிகுந்தவைகளை உண்டு உறங்கின பிறகு, கபீர், தமது மனைவியை நோக்கி "ததீயாராதனத்துக்காக, இச்சமயத்தில் நமக்கு உபகாரம் செய்த மஹா புண்ணிய புருஷனுக்கு என்ன கைம்மாறு செய்தாலும் தகும்; சாதுக்களுக்காக, உனது உடலை அவனுக்குக் கொடுக்கச் சம்மதித்து வந்த நீ புண்ணியவதி; இப்போது அரை இரவாயிற்று; வழியெல்லாம் சேறாய் இருக்கின்றது; சேற்றை மிதித்த காலுடன் அங்குச் சேறல் நன்றன்று; அரையிரவில் பெண்மகள் ஒன்றியாய் வீதியிற் போதல் அநுசிதம். நீ, சேற்றில் வழுக்கி விழுந்தால், பேருபகாரியான வர்த்தகனுக்குச் செய்துவந்த வாக்குத்தத்தம் வீணாகும்" என்று கூறி, மனைவியைத் தமது முதுகிலேற்றி அவ்வர்த்தகன் கடைக்குச் சமீபத்தில் கொண்டுபோய் விட்டு, "நீ, வர்த்தகன் மனப்படி நடந்துகொள்ளக் கடவாய்" என்று கட்டளையிட்டு வீட்டுக்குப் போனார். அப்பெண்மணி, காம மேற்கொண்டவனாய்த் தனது வரவை எதிர்பார்த்திருந்த வர்த்தகன் கடைக்குள் நுழைந்து, "உனது விருப்பைத் தணித்துக்கொள்" என்றாள். அப்போது, சூரியனொளியில் இருள் † இரியுமாறு, அவ்வர்த்தகன், ஸ்ரீராமசந்திரன் தண்ணளியால் தனது அஞ்ஞானம் ஒழிந்து, அக்கற்புக் கரசிக்குப் பயபக்தியுடன் பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து, "ஓ அம்மணி! உனது கணவராம் கபீர்தாஸர், ஸ்ரீராமபக்தி நிலயர்; அப்பேர்ப்பட்ட புண்ணியசீலர்க்கு மனைவியாம் உன்னை, சாக்ஷாத் உலகமாதா எனத் தகும்; அப்படிப்பட்ட உன் விஷயத்தில் தப்பெண்ணங் கொண்டேன்; எனது ஜன்மம் வீணாயிற்று; கணக்கிலாப் பிறவிக ளெடுத்து, இப்படிப்பட்ட விஷய விடாயினால், நரகுக் காளான நான், பகவத் கடாக்ஷத்தால், பெறுதற் கரிய மானிடப் பிறப்பை யடைந்தும், பெரும்பாவியாய், பிதுரர்களுடன் ரௌரவாதி நரகங்களில் விழவேண்டியவனா யிருக்கின்றேன். உனது கடைக்கண் அமுதத்தை என்மேல் பொழிந்து, என்னைப் புத்திரனாக அபிமானித்து, எனக் கபயம் அளித்து, உனது கணவர் சந்நிதியில் என்னை விட்டு, அவர்க்குத் தாஸனாக்கிக் காக்கவேண்டு மென்று பலவாறு வேண்டினான்.

* சூள் - ஆணை, சத்தியம், சபதம். † இரியுமாறு - துவேதுபோல.

கபீர்தாஸர் மனைவி, சந்தோஷித்து, அவ்வர்த்தகனுக்கு அபயம் அளித்து, அவனை அழைத்துக்கொண்டு, தன் வீட்டுக்கு வந்து, கணவரை வணங்கி, நடந்த விருத்தாந்தங்களை விண்ணப்பித்து, "இவ்வாத்மாவைத், தாங்கள் சிஷ்யனாய் ஏற்றுக்கொண்டு, ஸ்ரீராம பத்திரனுக்கு அங்கீகார யோக்கியமாகும்படி, அநுக்கிரகிக்க வேண்டும்" என்று வேண்டிக்கொண்டாள். கபீர்தாஸர், தமது மனைவி வேண்டியபடியே, அவன்மேற் கிருபைகூர்ந்து, தமது பாதங்களை விடாமற் பற்றிப் பூமியின்மேல் வீழ்ந்து கிடக்கும் அவனை எடுத்து, அணைத்து, அவன் கண்ணீர் துடைத்து, "அஞ்சுதல் ஒழிக; அனவரதமும் ஸ்ரீராமசந்திரனைத் தியானம் செய்க. அவன் திருநாமங்களை உச்சரித்து அவன் அடியார்களை ஆராதித்துக்கொண்டிருக்கக் கடவாய்; துர்விஷய இச்சைகளை அடியோடு அறுத்தெறிக; ராஜஸ தாமஸ குணங்களை விடுத்து, சாத்விக நிஷ்டாபரனாய் வாழ்க. * ஈஷணாத்ரயத்தை நீக்குக,

"நல்லினத்தி னூங்குந் துணையில்லைத் தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉ மில்" என்றபடி,

துஷ்ட சகவாசத்தை விட்டுவிடு,

"அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்" என்றபடி,

சாதுக்கள் கூட்டுறவைத் தேடு. இரவும் பகலும், சாஸ்திர சம்பந்தமான தர்மங்களைச் செய்துகொண்டிரு. சரீரம் நீர்க் குமிழி என்று உணர்ந்து, அதன் நிலையாமையை, எப்பொழுதும் மறவாதே.

"மத்தகத்தின் மேலே மறலி யிருப்பென்றுணர்ந்தோர்
பித்தனைப்போல் அன்னத்தைப் பேணார்கள்—சுத்தரவர்
தாழ்வான காரியத்தைத் தாஞ்செய்து பாழ்நரகில்
வீழ்வாரோ நெஞ்சே விளம்பு" என்றபடி,

தங்கள் தலைகளின்மேல் குந்தியிருக்கும் எமனை அறிந்துகொண்டவர்களுக்கு ஆஹாரம் முதலியவைகள் இன்பந் தாராவென்றால், நரக பலனைக் கொடுக்கும்படியான காம முதலிய தாழ்வான காரியங்கள், எங்ஙனம் அவர்கள் மனங்களைக் களிக்கச்செய்யும்?" என்று, இதோபதேசம் செய்தார். அதைக்கேட்ட வர்த்தகன், சென்ற காலத்துக் கிரங்குகின்ற மனமுடையவனாய்,

"அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு" என்றபடி,

ஐம்புலனைச் சுட்டறுத்து,

"ஒளியெல்லாம் ஞான ஒளியாமோ பூமேல்
அளியெல்லாம் ஆத்தனளி யாமோ—களிசேர்

* ஈஷணாத்ரயம் - பொன்னாசை, பெண்ணாசை, மண்ணாசையாகிய மூன்று ஆசைகள்.



நயமெல்லாம் நெஞ்சுறுதி நன்னயமாமோ
வயவேல் விழியாய் வழுத்து" என்றபடியும்,

"ஸம்ஸாரம் ஸாகரம் ஶத்ரு அதினதிக
ஹிம்ஸா நிலயும் இலே" என்றபடியும்,

"ஞானத்துக்கு மிஞ்சின ஒளியும், குருவுக்கு மிஞ்சின கிருபையும், வைராக்கியத்துக்கு மிஞ்சின நயமும், ஸம்ஸாரத்துக்கு மிஞ்சின சத்துருவும் இல்லை" என்று தீர்மானித்து, சன்மார்க்கத்தில் நடப்பவனாய், ஸாதுகோஷ்டியில் இருந்தான். இவ்வதிசயத்தை, நாமதேவரும், ஞானதேவருங் கண்டு ஆச்சரியப்பட்டு, கபீர்தாஸர் அனுமதிபெற்று, புறப்பட்டுப்போய்த் தீர்த்த யாத்திரைசெய்து, மறுபடியும் கபீர்தாஸர் வீட்டுக்கு வந்தார்கள். கபீர்தாஸர், அவர்களை எதிர்கொண்டு சாஷ்டாங்க வந்தனங்கள் செய்து உபசரித்தனர். அப்போது, இவர்கள் மூவரும் ஸந்தோஷங் கொண்டவர்களாய், பகவத் குணானுபவம் செய்துகொண்டு, * ஆனந்தரஸவாரிதியில் † திளைத்திருக்கையில், ஞானதேவர், நாமதேவர்க்கும், கபீர்தாஸருக்கும் பூர்வ விருத்தாந்தத்தையும், இந்தஜன்ம காரணமான பகவான் நியமனத்தையும் உணர்த்த, இவர்கள் இருவரும், சந்தோஷித்து, அவர்க்கு சாஷ்டாங்க வந்தனஞ்செய்தார்கள். அவர், கபீர்தாஸரை நோக்கி "ஓ பக்தர் முதல்வ! ஸ்ரீமந்நாராயணன், பிரமனுக்குத் தரிசனம் கொடுப்பதற்கு, ஸ்ரீபண்டரி க்ஷேத்திரத்திற்கு எழுந்தருளி, இப்போதும் அடுத்தவர்களுக்கு அனுக்கிரகம்செய்துகொண்டு, பீமநதி தீரத்தில் திருக்கோயில் கொண்டிருக்கின்றனன். அந்தத் தெய்வசிகாமணி, இந்நாமதேவர்க்குப் பிராணனிருக்கும் இடமாய், இவர் வசப்பட்டிருக்கின்றனன். அப்புண்டரீக வரதனை, நீ, தரிசனஞ்செய்யவேண்டும்" என்று சொல்ல, கபீர்தாஸர் ஆனந்தமிக்கவராய், ஓ சுவாமி! தேவரீர் கட்டளையைச் சிரஸாவகித்து, கார்த்திகை மாத சுக்லபக்ஷத்தில் உத்தான ஏகாதசிக்கு வந்து சேருவேன்" என்று விண்ணப்பித்தார். ஞானதேவரும், நாமதேவரும், கபீர்தாஸர் அனுமதி பெற்று, தீர்த்தயாத்திரைக்குச் சென்றார்கள்.

அஜ்ஞான திமிர பாஸ்கராயநம:

* ஆனந்தரஸவாரிதி - ஆனந்தரஸமென்கிற சமுத்திரம்.
† திளைத்திருக்கையில் - மூழ்கியிருக்கையில்.

## பன்னிரண்டாம் அத்தியாயம்

## ஞானதேவர், நாமதேவர் இவர்களுடைய தீர்த்தயாத்திரையில், கிணற்றுநீர் தனக்குத்தானே பெருகுதல், நாகநாதர் சந்நிதி இவர்களுக்கு எதிர் முகமாகத் திரும்புதல் ஆகிய இவைகளின் சரித்திரம்

ஞானதேவரும் நாமதேவரும், பிரயாகைக்கு வந்து, திரிவேணி சங்கமத்தில் ஸ்நானஞ்செய்து, அயோத்தி, மதுரை, கோகுலபுரி, துவாரகை முதலான ஸ்தலங்களைத் தரிசித்து, அங்கங்குள்ள புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கி, மார்வாடி தேசத்துக்கு வருகிறபொழுது, இருவரும் தாக மிகுதியால் வருந்தினவர்களாய், எங்குத் தேடினாலும், குடிக்கத் தண்ணீர் கிடையாமல், வழியோரத்தில் இருந்த ஒரு கிணற்றைக் கண்டு, அதனருகில் செல்ல, அதனில் தண்ணீர், பாதாளத்தில் இருந்தது. ஞானதேவர்க்குக் கிணற்றில் * இழியும் வழக்கம் உளது ஆகையால், அவர் அக்கிணற்றிலிறங்கித் தாகம் தணியும்படி, நீர் பருகி மேலேறி வந்தார். நாமதேவர், தாகத்தைச் சகிக்காமல், ஸ்ரீமத் பண்டரிநாதனைத் தியானிக்க, எல்லாம் உணர்ந்தவனும், எல்லாம் வல்லவனுமாகிய ருக்மிணிகாந்தன், நாமதேவருடைய தாகவேதனையை அறிந்து, அக்கிணற்று நீர் சுரந்து, மேலே வந்து பெருகும்படி எண்ணினான். நாமதேவர் அந்நீரை உண்டு தாகந் தணிந்தார். இவ்வற்புதத்தைக் கண்டு ஞானதேவர் அதிசயித்து, நாமதேவரைத் தழுவிக்கொண்டு, "ஓ நாமதேவா, ஸ்ரீபாஞ்சஜன்யதரன், உனக்கு ஸ்வாதீனனாய் இருக்கின்றான்.

"தந்தை தாயர் தனயன் சோதரன்
மனைவி நண்பன் மற்றுளா ரெவரும்
ஒருங்கு சேர்ந்திங் குதவுநற் பலனை
நாரணன் ஒருவனே நல்கும்
ஆதலா லவனடி அடைதிநன் மனனே" என்றபடி,

பகவான் உன் விஷயத்தில் நடத்திக் காட்டினான். ஜகந்நாதன் உனக்கு வசப்பட்டவனா யிருக்க, உன்னால் ஆகாத காரியம் ஒன்றுண்டோ?" எனப் புகழ்ந்து கொண்டாடினார். பிறகு, இருவரும், அந்தத் தலத்தை விட்டுச் சென்றனர். அக்கிணற்று நீர், நாமதேவர் நற்புகழே போல, இன்றளவும் பெருகிக்கொண்டிருக்கின்றது. அதில், மார்கழி மாதத்தில் அநேக சாதுக்கள் வந்து ஸ்நானஞ் செய்வார்கள்.

அம்மஹான்கள் இருவரும், ஹரித்வாரஞ் சென்று, கங்கை நீரில் ஸ்நானஞ்செய்து, ஹிமாசலத்தில் ஏறி, கங்கோத்தரியில் மூழ்கி, கேதாரேசனையும் பதரீ நாராயணனையும் தரிசித்து, ஹிமாசலத்தின் இழிந்து, ஸாலக்ராம நைமிசாரண்யங்களைத் தரிசித்து, கயைக்குச்சென்று

* இழியும் - இறங்கும்.



பற்குனி நதியில் மூழ்கி, விஷ்ணு பாதங்களை வணங்கி, பிதுரர்களை நினைத்துப் பிண்டப்ரதானம்செய்து, வைதேச்வரம், ஸ்ரீஜகந்நாதம், ஸ்ரீகூர்மம், பீமேச்வரம், ராஜமஹேந்த்ரம், ஸிம்ஹாசலம், மங்களகிரி, ஸ்ரீசைலம், த்ராக்ஷாராமம், விரூபாக்ஷம், அஹோபிலம், வேங்கடாசலம், காளஹஸ்தி, கடிகாசலம், காஞ்சீபுரம், வேதகிரி, அருணாசலம், ஸ்ரீமுஷ்ணம், சிதம்பரம், மாயூரம், கும்பகோணம், ஸ்ரீரங்கம், ஜம்புகேச்வரம், வ்ருஷபாத்திரி, ஹாலாஸ்யம், தோதாத்ரி, மஹேந்த்ரகிரி, கன்யாகுமாரி, ராமேச்வரம், தர்ப்பசயனம், அனந்தபத்மநாபம், ஜனார்த்தனம், பாபநாசம், குற்றாலம், கோகர்ணம், த்ரயம்பகம், யாதவாத்ரி முதலான திவ்ய க்ஷேத்ரங்களில் பகவானைத் தரிசித்து, கங்கை, யமுனை, ஸரயு, ப்ரபாஸம், சோணபத்ரை, நாராயணி, க்ருஷ்ணவேணி, கோதாவரி, நர்மதை, ஸிந்து, புஷ்கரம், பாஹுதை, தாம்ரபர்ணி, தனுஷ்கோடி முதலான புண்ய தீர்த்தங்களில் மூழ்கி, அங்கங்கு வாழும் பகவத் பக்தர்களுடன்கூடி, பகவத் குணானுபவம் செய்துகொண்டு, மாசியில் அபரபக்ஷ சதுர்த்தசியில் மஹா சிவராத்ரி தினத்தில் நாகநாதபுரத்துக்கு வந்தார்கள். அங்கே அவர்கள் இருவரும் ஸ்நாநம் செய்து, நித்திய கடன்களை முடித்து, நாகநாதர் ஸந்நிதிக்கு வந்து, ஸாஷ்டாங்க வந்தனம்செய்து, மஹா மண்டபத்தில் பகவந்நாம ஸங்கீர்த்தனம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். இவர்கள் இப்படி ஸ்ரீ பாண்டுரங்கனைத் தியானித்துக்கொண்டு, ஹரி கீர்த்தனம் செய்கிற சமயத்தில், சகல ஜனங்களும் வந்து ஆனந்த பாஷ்பங்களைப் பொழிந்து, சிரவணானந்தமாய்க் கேட்டுக் கொண்டிருந்தார்கள். இங்ஙனம் இருக்க, அந்தத் தேவாலயத் தர்ச்சகர்கள், ஸ்நாந ஸந்த்யாவந்தனங்கள் செய்து, ஸ்வாமியைப் பூசிப்பதற்கு வந்து, இக்கோஷ்டியைப் பார்த்து, உள்ளே போவதற்கு வழிகாணாமல், பொறாமையுற்ற மனமுடையவர்களாய், "நாங்கள் உள்ளே நுழைய வழி விடுங்கள்; எங்களைத் தீண்டாதீர்கள்; இவை என்ன கூச்சல், இவ்வாட்ட பாட்டங்களைப் பண்டரி புரத்துக்குப் போய்ச் செய்யுங்கள்" என்று சொல்லியும், அவர்கள், பகவத்குணானுபவத்தில் மயங்கி, வழிவிடாமல் இருந்தார்கள். அர்ச்சகர் முதலிய பிராமணர்கள் கோபித்துக்கொண்டு நாமதேவர்க்கு அருகில் வந்து, "ஐயா! இது என்ன ஆட்ட பாட்டங்கள்! பகவத் சந்நிதிக்கு வருபவர்களுக்கு வழியில்லாமல் இருக்கிறது; தேவாலயப் பின்புறஞ் சென்று, உங்கள் இஷ்டப்படி ஆடியும் பாடியும் இருங்கள்" என்றனர். நாமதேவர், நல்லதென்று கோஷ்டியோடு சந்நிதிக்குப் பின்புறம்போய், பகவந்நாம ஸங்கீர்த்தனம் பண்ணிக்கொண்டிருந்தார். அவர், பண்டரிநாதனை நினைத்துக்கொண்டு, பசுவினைப் பிரிந்த கன்றுபோல, அவனுடைய பிரிவாற்றாமையைச் சகிக்காமல், பலவிதமாய்த் தோத்திரம்

செய்து கொண்டிருக்க, ஆகாசத்திலிருந்து ஒன்பது நூறுயிரம் பகவத் பக்தர்கள், மின்னற் கொடிகளைபோலப் பிரகாசிக்கும் துவஜங்களைக் கரங்களிற் பிடித்துக்கொண்டு வந்தார்கள். அங்கிருந்தார் அனைவரும் ஆச்சரியமடைந்து, ஸ்ரீ வைகுண்டநாதன் வருகின்றான் எனப் பிரமித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது நாமதேவர், ஆனந்த பரவசராய், பகவானைப் புகழ்ந்துகொண்டிருந்தார். இவ்வொன்பது நூறுயிரங் கொடிகளும், ஒன்பது நூறுயிரம் சூரியர்கள் போல இயற்கை ஒளியோடு உலகமெங்கும் பரவின. இந்திராதியர், ஆகாசத்திலிருந்து பூமாரி பொழிந்தார்கள். அப்போது, கீழ்த்திசை நோக்கியிருந்த நாகநாத ஸ்வாமி, தமது திருக்கோயிலுடன், மேற்றிசை நோக்கித் திரும்பி, நாமதேவரைக் கடாக்ஷித்திருந்தார். யாவரும், ஆனந்தாதிசயத்தால் கைத்தாளம்போட்டு கீர்த்தனம்பாடி, தமது மெய் மறந்து பரவசரானார்கள். நாமதேவர், அவ்விரவெல்லாம், பகவத் கலியாண குணாமிர்த மழையால், பல்லுயிர்ப் பயிர்களும் பிழைத்துத் தழைத்தோங்கச் செய்துகொண்டிருந்தார். காலையில் சூரியன் உதயமானான். அப்போது, அவ்வர்ச்சகர்கள், நான்கு ஜாமங்களிலும் சிவபூசைசெய்து, உதயகாலத்தில் ஸ்நானத்திற்காக வெளியே வந்து, நாமதேவர், கோஷ்டியோடு பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டிருப்பதைப் பார்த்து, தமக்குச் சூரியன், மேற்கில் உதயமானபடி தோன்றினதனால் ஆச்சரியப்பட்டு, "இன்று என் சூரியனியக்கம் விபரீதமாயிற்று! ஒருவேளை இரவெல்லாம் நாம் கண் விழித்துச் சிவபூசை செய்து கொண்டிருந்தபடியால், நமக்குப் பித்தம் அதிகரித்துச் சித்தம் கலங்கியிருக்கலாம்" என்று சிறிது யோசித்து, நிதானித்து, யூகித்து, தீர்த்தங்கள் யாவும் முன்போலவேயிருக்கின்றன; சூரியன் எப்போதும்போலக் கீழ்த்திசையிலேயே. உதித்திருக்கின்றான். ஸ்ரீ நாகநாத ஸ்வாமி மாத்திரம் தமது ஆலயத்தோடு மேற்கு முகமாய்த் திரும்பி நாமதேவர் பக்திக்கு ஆனந்திக்கின்றனர். சந்த்ர மௌளீச்வரர், நாமதேவருடைய கீர்த்தனைகளில் மயங்கி இங்ஙனம் செய்தனர் போலும். இது மிகவும் அற்புதம். நாம், கேவலமான பாமரர்கள் ஆகையால், இப்பாகவதோத்தமர் விஷயத்தில் குற்றவாளிகளானோம்" எனப் பயபக்தி நிறைந்தவர்களாய், நாமதேவர்க்கு வந்தனஞ்செய்து, "ஓ பக்த சிகாமணீ! நீயே, பகவானுக்கு உண்மை அன்பன்; நீயே பாக்யசாலி; உனது தாய் தந்தையர் எத்தவம் செய்தார்களோ!

மகன்தந்தைக் காற்றுமுதவி யிவன்தந்தை
என்னோற்றான் கொல்லென்னுஞ் சொல்

என்றபடி,

நீ, உனது தாய்தந்தையர்க்குப் பெரும் புகழ் வரும்படி அருங்குணம் பூண்டு வாழ்கின்றனை. ஆனந்தத்துடன் உன்னைப் பார்த்துக்கொண்டு, நீ செய்யும் பகவத் கீர்த்தனங்களைக் கேட்டுக் காலங்கழிக்கும் சாதுக்களுடைய பாக்ய விசேஷத்துக்கு அளவில்லை. நீ, உத்தவாம்சத்திற் பிறந்தவன் என்று, இப்போதுதான் தெரியவந்தது. கொடிக்கையர்க



ளாகிய ஸ்ரீமந் நாராயண பரிவாரங்கள், இதோ உனது தரிசனார்த்தம் வந்திருக்கின்றார்கள். உனது சரித்திரம் பரிசுத்தமானது. ஞானதேவர், தம்மை குலங்கெட்டவர் என்ற பிராமணர்களுக்காக; எருமைக்கடாவால் வேதபாராயணம் செய்வித்தபடி, நீயும் பொறுமைமிக்கவர்களாகிய எமக்காக அற்புதங்களைச் செய்துகாட்டினை" என்று துதித்து, தலையிற்கூப்பிய கையராய் நிற்க, கொடிக்கையர்களாகிய பகவத் பக்தர்கள் மறைந்து, தேவதேவன் சந்நிதிக்குச்சென்றார்கள். சகல ஜனங்களும் பேரானந்தமடைந்தார்கள். ஞானதேவர், நாமதேவரைத் தழுவிக்கொண்டு, தமது கரங்களால் அவரைப் பாதாதிகேசமாகத் தடவிக்கொடுத்தார். நாகநாதர் ஸந்நிதி, இப்போதைக்கும் மேற்கு நோக்கியிருந்து, நாமதேவருடைய நற்புகழை நாட்டுகின்றது.

அதிமாநுஷ சேஷ்டிதாயநம:

பதின்மூன்றும் அத்தியாயம்

# பகவான், நாமதேவருடைய தீர்த்த யாத்திரைக்காக, * உத்யாபனச் சடங்கு செய்விக்கும் சரித்திரம்

பிறகு, ஞானதேவரும் நாமதேவரும், நாகநாதருடைய அனுமதி பெற்று புறப்பட்டு, பண்டரீபுரத்துக்கு வந்து, ஆனந்தத்தால் மெய்மறந்து, தூரத்தில் இருக்கிறபொழுதே கோபுரம் தோன்றினமையால் உடனே அதற்கு தெண்டன் சமர்ப்பித்து, பண்டரிநாதனுடைய சேவையின் ஆர்வத்தால் வேகமாய் வந்து, சந்திரபாகையில் ஸ்நானம்பண்ணி, ஹரிகீர்த்தனம் செய்துகொண்டு, கோபுரவாசலில் நமஸ்கரித்து, உள்ளே நுழைந்து, பலிபீடத்தினிடத்தில் வந்தனஞ்செய்து, சுவாமிக்கு எதிரே வந்து, உள்ளன்போடு சேவித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது பகவான், இவர்களை ஆலிங்கனம் செய்துகொண்டு சந்தோஷித்தான். நாமதேவர், சுவாமி திருவடிகளில் தமது சிரத்தைச் சேர்த்து ஆனந்த பாஷ்பத்தால் அவைகளை அலம்பி, "சுவாமி! தேவரீர் கட்டளையைச் சிரசாவகித்து, ஞானதேவருடன் தீர்த்தயாத்திரைபோய் வந்தேன். தேவரீரை நீங்கின தினங்களை யுகங்களாய்க் கழித்தேன். இனி எந்நாளும் இப்படிப்பட்ட நீக்கம் எனக்கு இல்லாமல் இருக்கும்படி கிருபைசெய்க. உன்னைப் பிரிந்ததுமுதல் அனவரதமும் உனது உருவத்தையே தியானித்துக்கொண்டிருந்தேன். உனது பாதாரவிந்தங்களே எனக்கு எல்லாமாயிருக்கின்றன" என்றார். அதற்கு, ருக்மிணீ

* உத்யாபனம் என்பது பூர்த்தி

காந்தன் "ஓ வத்ஸா! நீ செய்த பஜனம் எனக்கு இரவும் பகலும் பரமானந்தத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தது. நீ, என்னை நீங்கின பிறகு, அப்பேர்ப்பட்ட சந்தோஷத்தை எனக்கு உண்டாக்கத்தக்க பக்தர்கள் இங்கு யாரும் இல்லாதபடியால், உணவாதிகள் சுவை தரவில்லை. அதனால் நான் அதைரியம் அடைந்து, உனது வரவை எதிர்பார்த்து அனவரதம் உன்னையே நினைத்துக்கொண்டிருந்தேன். நீ, எனது பிராணனுக் கிருப்பிடமாகிய பக்தசிகாமணி. ஆகையால், உன்னைப்பார்க்கிலும் பிரியமானவர்கள் எனக்கு வேறொருவரும் இலர். நீ, எல்லா இடங்களிலும் எல்லாக் காலங்களிலும் எல்லா நிலைகளிலும் என்னையே தியானித்துக்கொண்டிருந்தனை. என்னைவிட்டு வெகுதூரம் போய் வந்தனை" என்று கூறிப் பக்தர்கள் அனைவரும் பார்க்கும்படி, மறுபடியும் அவரை ஆலிங்கனஞ் செய்துகொண்டு, முகந்துடைத்து, தனது கழுத்திலிருந்த துளசிமாலையை அவர் கழுத்திலணிந்து, கிருபை கூர்ந்து நோக்கினான். அப்போது, அங்கு வந்திருந்த வைஷ்ணவோத்தமர்களான நிவர்த்திதேவர், ஞானதேவர், சோபானதேவர், விசோபாகேசர் முதலியோர் அனேகர், பண்டரிநாதனுக்கு சாஷ்டாங்க வந்தனம் செய்து, நாமதேவரைத் தழுவிக்கொண்டு, கடல் முழங்குவது போல ஜயஜயவென்று கோஷித்தார்கள். அப்போது, ஆகாசத்திலிருந்து, தேவர்களும் இருடிகளும் பகவந்நாம சங்கீர்த்தனம் செய்துகொண்டு சந்நிதிக்கு வந்தார்கள். மாதாவாகிய ருக்மிணிதேவி ஆசீர்வதித்து நாமதேவர் முகத்தைப் பரிபூர்ண கிருபையுடன் நோக்கிக் களித்திருந்தனள்.

அதன் பிறகு, பகவான், நாமதேவரைப்பார்த்து, "நீ, மிகவும் கஷ்டப்பட்டு நம்பிக்கையுடன் தீர்த்த யாத்திரைசெய்து திரும்பிவந்தபடியால் உத்யாபனம் செய்யவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அறுசுவை உண்டியைச் சமைத்து உண்ணாமல் விடுவது எங்ஙனம் வீணாகுமோ, அங்ஙனம் உனது தீர்த்த யாத்திரையும் பலனில்லாமற் போகும் என்று, அவர் கரத்தைப்பற்றி அந்தப்புரத்துக்கு அழைத்துக் கொண்டுபோய், புன்சிரிப்புடன் ருக்மிணி தேவியைப் பார்த்து, "ஓ ருக்மிணீ! எனது உயிர்த்தோழனாகிய நாமதேவன், தீர்த்தயாத்திரை செய்து வந்தான். அதற்கு உத்யாபனம் செய்யவேண்டும்" என்று கூறினான். அவ்வுலகமாதா, "இந்நாமதேவனுக்கு உனது திருவடித் தாமரைகள் தவிர வேறு ஆஸ்தியில்லை. ஆகையால் இவனுடைய காரியங்கள் எல்லாவற்றையும் நீயே ஏற்றுக்கொள்ளவேண்டும். இவன் சரித்திரம் மிகவும் அற்புதமானது. இவன் பிரபாவம் தேவர்களுக்கும் தெரியாது. நீ சீக்கிரமாய் நாமதேவனை அழைத்துக்கொண்டுபோய், இவ்வூரில் இருக்கிற பிராமணர்களை எல்லாம் விருந்துக்கு அழை. ஓ நாதா! உனது எண்ணத்துக்கு அசாத்தியமானது எது! இச்சை அளவிலேயே எல்லாம் நடைபெறுகின்றன" என்று சொன்னாள். அவ்வசனத்துக்கு வைகுண்டநாதன் சந்தோஷித்து, நிவர்த்திதேவர், ஞானதேவர்



சோபானதேவர் முதலியோர், கொடிகளைப் பிடிக்க, இருடியர் இவ்வற் புதத்தை பார்த்துக்கொண்டு பின்தொடர்ந்து வர, நாமதேவரை முன்னே அனுப்பி, தான் பின்னேபோனான்.

నిరపేక్షంమునింశాంతం। నిర్వైరంసమదర్శినం।
అనువ్రజామ్యహంనిత్యం। పూయేయేత్యంఘ్రిరేణుభిః ॥

"உலகிலுள்ள வூனப்பொருள்களுக்
கிச்சையற் றெனது பொச்சமில் அடிகளில்
வைச்ச அன்பின் வைணவனாகி
நடப்பினும் நிற்பினும் கிடப்பினும் துயிலினும்
என்னை மறவா திருந்து மனத்தகத்
தழுக்கார கற்றிபிழுக்காச் சினத்தைப்
பொடிபட நூறிப் பொருந்தும் அன்பன்
காற்றுகள் கதுவிக் கரிச கற்றுவமென
நாடியவனை நான்றொடர் குவனிஃ
தெல்லாமுணர்ந் தீடேறுக
தொல்லைமா நிலத்தில் துன்னுமானிடரே" என்ற,

இந்த கீதா வாக்யத்துக்கு,

"என்னைத்தவிர மற்றெல்லாப் பொருள்களிடத்தும் ஆசையற்ற வனாய், என்னைத் தியானித்துக்கொண்டு, மனத்தகத்து அழுக்கறுத்து, யாரிடத்திலும் துவேஷம் இல்லாமல், இன்ப துன்பங்களிலும், மண் பொன்களிலும், அன்பு வன்புகளிலும், புகழ்ச்சி இகழ்ச்சிகளிலும், பெருமை சிறுமைகளிலும், நட்பு பகைகளிலும் பொதுநோக்க முள்ள புண்ணிய புருஷனுடைய பாததூளிகளால் நான் பரிசுத்த னாகும் வண்ணம், அவனைப் பின்தொடருகின்றேன்" என்பது பொருள். இதன்படி தனது எண்ணம், ஈடேறுவதற்கு நல்ல சமயம் வாய்த்த தென்று ஸ்ரீ பாண்டுரங்கநாதன், நாமதேவரைப் பின் தொடர்ந்தான் என்பதற்குச் சந்தேகமில்லை.

பகவான், நாமதேவ ஸகிதனாகச் சென்று, அவ்வூரிலுள்ள பிராம ணர்களை யெல்லாம் விருந்துக்கு அழைத்துக்கொண்டே, நகர் வலம் வந்தான். அச்சமயத்தில் பகவான் வேதிய வேடதாரியாயிருந்தும், அவனுடைய மேனி அழகைக் கண்டபோது, "இவன் சாதாரண வேதியன் அல்லன்; பகவான் போலிருக்கின்றான்" என்று யாவரும் சந்தேகித்தனர். அவன் முகங்கண்ட மாத்திரத்தில், அனைவருக்கும் பரமானந்தநிறைவும், பரிபவக்குறைவும் உண்டாயின. வேதியரனைவரும் களிகூர்ந்து, "தேவரீர் வாழ்க்கை ஸ்தலம் எது; நாமதேயம் யாது" என்று கேட்க, சக்கரக் கையன், அவர்களைநோக்கி, "ஓ வேதியர்காள்! என்து பூர்வோத்தரங்களை நாமதேவன் அறிவான். எனது உயிர்த்தோழ

னாகிய இவன், தீர்த்தயாத்திரை செய்துவந்து, இன்றைக்கு, பண்டரிநாதனுடைய சந்நிதிக்குள் உத்யாபனம் செய்கின்றான்; அதற்கு நீங்கள் யாவரும் வரவேண்டும்; என் பேர் அனந்தையன். நீங்கள் சீக்கிரம் வரவேண்டும்'' என்று உபசார வார்த்தைகள் கூறி, சந்நிதிக்கு வந்து, ருக்மிணி தேவியைக் கண்டு, வேதியர்க்கு விருந்து சொன்னதையும், அங்கு நடந்த அதிசயத்தையும் கூறினான். அதுகேட்ட ருக்மிணிதேவி, "உன்னைப் பிரமாதியர் காணார் என்றால், தேகாபிமானிகள் எங்ஙனம் காணக்கூடும்? நாமதேவர்க்குக் கண்கண்ட தெய்வமான நீ, இன்றைக்கு ஆனந்த பரவசனாயிருக்கின்றனை'' என்று சொன்னாள். அப்போது, காமதேனு, கற்பக விருக்ஷம் இவைகள் பகவான் நினைவறிந்து, அறுசுவை உண்டியும், பலவித சிற்றுண்டிகளும், அநேக பரிமளநிறைந்த பானீயமும், சந்தன புஷ்ப தாம்பூலாதி மங்களப் பொருள்களும் அளவின்றி நிருமித்தன.

அப்போது, ருக்மிணி சத்தியபாமை இருவரும், நாமதேவர்க்கு அப்பியங்கனாதிகளைச் செய்வித்து, மங்கள வாழ்த்துப்பாடி ஆலத்தி எடுத்தார்கள். அவரை ஆடையணிகளால் அலங்கரித்து உட்கார வைத்து, அனைவரும் கொஞ்சிக்கொண்டிருக்க, பகவானாகிய ஸ்ரீமந் நாராயணன், வந்த வேதியருக்கு ஆஸனாதி உபசாரங்களைச் செய்தான். அந்தரத்தில் உள்ள தேவர்கள், "நமக்கு நாராயணன் அமுதந் தந்தனனே அன்றி, இப்படி அவன் அன்பாகிய அமிர்தத்தை வழங்கவேயில்லை'' யென்று சொல்லி, பக்தர் பெருமையைப் புகழ்ந்து கொண்டாடினார்கள். ருக்மிணிகாந்தன், முன்போல வேதியவேடனாகி வந்து, அங்குவந்துள்ள பிராமணர்களுடைய திருவடிகளை அலம்பி, தனது உத்தரீயத்தால் துடைத்து, அவர்கள் கழுத்துகளில் பூமாலைகள் அணிந்து, கஸ்தூரிப் பொட்டிட்டு, புத்தாடைகள்உதவி, வரிசையாய்எழுந்தருள்வித்து, பலவிதமான அறுசுவை உண்டியைச்சிற்றுணாவோடுபரிமாறி, ஸங்கல்பமந்த்ரம் சொல்லி, நாமதேவர் கையால் தாரைநீர் வார்ப்பித்தார். வேதியர், நீர் தெளிப்பதனால் உணவைப் பரிசுத்தமாக்கும் கிரியையாகிய பரிஷேசனமும், ஒருவிதமான ஜபமந்த்ரத்துடன் உள்ளங்கை நீரை உட்கொண்டு உண்டிக்கு முன்னே செய்யுங் கிரியையாகிய ஆபோசனமும், பஞ்சபிராணன்களுக்கும் கொஞ்சம்கொஞ்சம் அன்னத்தால் சினபலி கொடுக்குங் கிரியையாகிய ஆஹுதிகளும் செய்து, கோவிந்த தியானத்துடன் புசித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது வைகுண்டபதி, அவர்களுக்குப் பிரியமான வஸ்துக்களைக் கேட்டுப் பரிமாறினான். அனைவரும் திருப்தியாய்ப் புசித்து, ஜப மந்த்ரத்துடன் உள்ளங்கை நீரை உட்கொண்டு, உண்டிக்குப் பின்னே செய்யுங் கிரியையாகிய உத்தராபோசனம் செய்து எழுந்து, விதிப்படி வாய், கை, கால்கள் அலம்பி, பகவான் திருநாமங்களில் கேசவ நாராயண மாதவ என்னும் மூன்று திருநாமங்களையும் உச்சரித்து, முறையே உள்ளங்கை நீரை மும்முறை உட்கொண்டு, கோவிந்த திருநாமத்தை உச்சரித்து, அந்த நீரைத் தரை



யில் விடுங் கிரியையாகிய ஆசமனம் செய்து, பரிசுத்தமான இடத்தில் சௌக்கியமாய் உட்கார்ந்து, ஜனார்த்தனனை தியானித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது பண்டரிநாதன், அவர்களுக்குச் சந்தன புஷ்ப தாம்பூலங்கள் கொடுத்து, அவர்கள் தந்த மந்த்ராக்ஷதைகளைத் தனது பொன்னுடையில் வாங்கிக்கொண்டு, அவ்வக்ஷதைகளைத் தனது திருக்கரத்தால் நாமதேவர் தலையில் வைத்து, "உனக்கு பரமபக்தி நாடோறும் வளரக்கடவது'' என்று ஆசீர்வதித்து, அவரை அழைத்துக்கொண்டு வந்து, நிவர்த்திதேவர், ஞானதேவர், சோபானதேவர், வீசோபாகேசர் முதலானவர்களுடன் போஜனத்துக்கு உட்கார்ந்தான். அப்போது ருக்மிணிதேவி அறுசுவை உண்டி பரிமாறினாள். நாமதேவர் மெய்மறந்து பகவத்தியானம் செய்து கொண்டிருந்தார். பிறகு பகவான் எழுந்துவந்து, நாமதேவருக்கு எச்சரிக்கைசெய்து, அவரைத் தன்னோடிருக்க வைத்துக்கொண்டு, அவர் உடம்பைத் துடைத்து, தன் கைக்கவளத்தை ஊட்டி நிதானமாய்ப் புசி'' என்று சொன்னார். நாமதேவர் பகவத்யானபரராய், அந்த கவளங்களைப் பகவான் கொடுப்பது தெரியாமல் இருந்தார். அப்போது பகவான், "ஓ நாமதேவா! உனக்கும் எனக்கும் சிறிதும் பேதம் இல்லை,

యోమాంపశ్యతిసర్వత్ర । సర్వంచమయిపశ్యతి ।
తస్యాహంనప్రణశ్యామి । సచమేనప్రణశ్యతి ॥

"என்னிற் பூதங்களையும் என்னையப் பூதங்களிலும்
பின்னமறக் காணும் பெரியனெவன்—அன்னவற்கு
நானும் அவனெனக்கும் நற்காட்சி தந்துலகில்
ஊனமற நிற்போம் உயர்ந்து'' என்ற,

கீதா வாக்கியத்தின்படி,

'எவன், எல்லாப்பூதங்களில் என்னையும், என்னிடத்தில் எல்லாப் பூதங்களையும் காண்கின்றானோ, அவனுக்கு நானும், எனக்கு அவனும் காட்சிப் பிரமாண சொரூபிகளாய் இருப்போம்' என்பது பொருள். இதன்படி அரூபியாகிய நான், உன்மேலுள்ள அன்பினால், ரூபியாய் உன்னிடத்தில் இருக்கின்றேன். உனது தரிசன விருப்பத்தால் பிரமபக்தர்கள் வந்திருக்கின்றார்கள். அவர்களோடு அளவளாவியிரு. நிவர்த்திதேவன் சிவஸ்வரூபியென்றும், ஞானதேவன் எனது ஸ்வரூபியென்றும், சோபான தேவன் பிரமஸ்வரூபி என்றும் உணரக்கடவாய்'' என்று சொல்லிக் கருணை நிறைந்து கடாக்ஷித்தார். நாமதேவர், பகவானைநோக்கி,

నాస్థాధర్మేనవసునిచయేనైవకామోపభోగే ।
యద్యద్భవ్యంభవతుభగవన్ పూర్వకర్మానురూపం ॥

ఏతత్ప్రార్థ్యం మమ బహుమతం జన్మజన్మాంతరేఽపి ।
త్వత్పాదాంభోరుహయుగగతా నిశ్చలా భక్తిరస్తు ॥

"அறம்பொருளின்பத்தில் ஆசையிலேன் ஊழால்
உறுமவைகள் தாமே உறுக—மறுமையினும்
இம்மையினும் இன்னும் எழுமையினும் வேங்கடவா
அம்மவெனக் கெய்த நின்றாட் கன்பு" என்ற,

தோத்ர வாக்கியத்தின்படி, 'ஓ, பகவானே! எனக்கு அறம் பொருள் இன்பங்களில் ஆசை இல்லை. ஊழ்வினைப் பயனால் உறற்பாலன உறக் கடவன. நான் சிறந்ததாகக் கோரத்தக்கது ஒன்றும் இல்லை. ஜன்ம ஜன்மங்கள்தோறும் உனது பாத கமலங்களில் அழியா அன்பு எனக்கு உண்டாகவேண்டும்' என்று நாமதேவர் வேண்ட, கருணைக்கடலான பகவான், "அங்ஙனமே ஆகுக" என்று வரங்கொடுத்து, அவர் வாயி லிருந்த கவளத்தில் கொஞ்சம் எடுத்துத் தனது வாயில் போட்டுக் கொண்டார். அங்கிருந்த அன்பர் அனைவரும் அதிசயித்து ஆனந்த பரவசர் ஆனார்கள். வேதியர் அனைவரும் ஒருவரோ டொருவர், "இன்று நமது ஆசாரமனைத்தும் மண்ணாய்ப் போய்விட்டது. இதோ வட்டித்துக்கொண்டிருக்கும் பெண்கள்எக்குலத்தினரோ விளங்கவில்லை. நமக்கு அன்னம் பரிமாறினவனைப் பார்த்தால் நான்கு குலங்களிலும் கலந்தவன் என்று தோன்றுகின்றது; நாமதேவனுக்குத் தந்தையா யிருக்கலாம் என்று யூகிக்கக்கூடியதாயிருக்கிறது; முக்கரணங்களாலும் அவனிடத்தில் அன்பு பூண்டிருக்கின்றான்; அவனைக்கொண்டு ஸங்கல்ப ஜலம் விடுவித்தான்; நாம் தந்த அக்ஷதைகளை அவன் தலைமேல் வைத்தான். ஆகையால், அன்னம் பரிமாறினவன் நாமதேவன் தந்தையென்பதற்குச் சந்தேகம் இல்லை" என்று யோசித்து, மன வருத்தம் அடைந்தார்கள்.

பக்தக்ரீதாயநம:

## பதினான்காம் அத்தியாயம்

# ஸ்ரீ புண்டரீகவரதன், பிராமணர்களிடத்தில் பிராயச்சித்தம் செய்துகொண்ட சரித்திரம்

வேதியர்கள் அனைவரும் பண்டரிநாதனைப்பார்த்து,"இவன் மிகவும் அக்கிரமம் செய்கின்றான்; இவன் யாவனோ தெரியவில்லை; இவனது அன்னத்தைப் புசித்தபடியால், நமது அநுஷ்டானங்களெல்லாம் கெட்டன. இனி, அவசியம் பிராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டும்" என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு, கூட்டங் கூட்டமாய்க் கூடிப் போய்க்கொண்டிருக்கையில், பகவான் குறுக்கே வந்து, அவர்



களைப் போகவொட்டாமல் தடுத்து, "ஓ விப்ரர்காள்! தக்ஷிணை வாங்கிக்கொண்டு போகலாம்" எனச் சொல்லி, அழைத்துக்கொண்டுவந்து உட்காரவைத்து பொன்னையும், நவமணியையும், துளஸீதளத்தையும் ஒன்றாய்க் கலந்து, அனைவருக்கும் மரியாதைசெய்து, நாமதேவரைக் கொண்டு, அவ்வேதியர் பாதங்களை வணங்குவித்து, "இவன்மேல் நீங்கள் பூரணமாய்க் கிருபைசெய்யவேண்டுமென்று சொல்லி, "ஓ வேதியர்களே! உங்கள் முகங்களைப் பார்த்தால் மனதில் ஏதோ களங்கம் இருக்கிறபடி தோற்றுகிறது. அதற்குக் காரணம் சொல்லுங்கள்" என்று கேட்டான். அப்போது பிராமணர்கள் "ஓ, புருஷோத்தமா! நாமதேவன் இழிவான குலத்தன் என்று அனைவருக்கும் தெரிந்திருக்கிறது; அப்படிப்பட்டவனைச் சமபந்தியில் இருத்திப் புசித்ததல்லாமல், அவனுடைய எச்சிலைப் பிரியத்துடன் ஏற்றுக்கொண்டனை. ஆகையால், உன்னைப் பார்க்கையில் வேடதாரியாய்த் தோன்றுகின்றது; உனது குலம் இப்படிப்பட்டதென்று தெரியவில்லை;- நிமிஷத்துக்கு ஒருவிதமாய் இருக்கின்றனை; உனக்குப் புகழ்ச்சிகள் யிகழ்ச்சிகள் சமமா யிருக்கின்றன. நீ பிராமணவேடந்தாங்கி வந்தபடியால், நாங்கள் உனது உத்யாபனத்துக்கு வந்து புசித்தோம். பிராமணர்கள் வேதவிதிப்படி நடக்கவேண்டும் அல்லவா? உன்னைப் பார்த்தால் எல்லாம் உணர்ந்தவன் என்று தோன்றுகின்றது; அப்படியிருக்க, நாமதேவர்மேல்வைத்த பிரியத்தால் இப்படிச் செய்தனை" என்று, சொன்னார்கள். அவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டுப் பகவான், 'ஓ விப்ரர்காள்! நான் நாமதேவனுடன் சமபந்தியில் உண்டதும், அவனுடைய எச்சிலை ஏற்றுக்கொண்டதும் தோஷமென்று கூறினீர்கள்; அது தோஷந் தானா? எல்லார்க்கும் உள்ளே மறைந்திருக்கும் பரமாத்மா ஒருவனே அல்லவா? அவனுக்கு, உயர்குலம் என்றும் இழிகுலம் என்றும், புகழ்ச்சி என்றும் இகழ்ச்சி யென்றும் வேறுபாடு இல்லை. ஆத்மாவுக்குக் கர்ம சம்பந்தத்தால் உண்டான சரீரங்கள் வேறு வேறு விதமாய் இருக்கும் அல்லாமல், அதற்கு, உருவத்தில் கொஞ்சமேனும் வேறுபாடில்லை.

"ஆத்மா நித்யன் ஆத்மா பூர்ணன்
ஆத்மா அழிவிலான் ஆத்மா அசலன்
ஆத்மா அநாதி ஆதலால்
ஆத்மா என்றும் அபேதனாமே" என்றபடி,

ஆத்மா நித்யனாகவும், எங்கும் நிறைந்தவனாகவும், என்றும் அழிவிலானாகவும், அசலனாகவும், அநாதியாகவும் இருக்கின்றான். ஆதலால் அவன் வேறுபாடில்லாதவன். இப்படிப்பட்ட நாமதேவனை இழிகுலத்தான் என்று கூறினீர்கள். ஆத்மாக்கள் ஞானானந்த வடிவங்களாய், ஒருருவாய் இருக்கின்றபடியால் ஜாதிபேதம் இல்லை. சரீரங்களும் பஞ்ச பூதங்களான ஒருருவாய் விளங்குகின்றன. அங்ஙனம் இருக்க

உயர்வு தாழ்வு எங்ஙனம் உண்டாகும்? நீவிர், வேத சாஸ்திர நிபுணர்களாயிருந்தும், விரிவான ஞானமில்லாமல் மாயா சம்பந்திகளாயிருக்கின்றீர்கள்.

"வித்தையிற் றேர்ந்த விப்பிர னிடத்தும்
கோவி னிடத்தும் கொல்களி றிடத்தும்
நாயி னிடத்தும் நாய்மா மிசத்தை
உண்பவ னிடத்தும் உத்தம ஞானிகள்
வேறுபா டில்லர் வித்தக
நோக்கம் செலுத்துவர் நுவலுங் காலே" என்றபடி,

வித்யா விநயனான பிராமணனிடத்திலும், பசுவினிடத்திலும், நாயினிடத்திலும், அதன் மாமிசத்தைத் தின்பவனிடத்திலும், உத்தமஞானிகள் சமதரிசனர்களாயிருப்பார்கள்.

"எல்லாப் பொருளிலும் யார்மனம் வேறுபா
டில்லா திருக்குமந் நல்லோர் தம்மால்
இப்பிறப் பதனில் தப்பற மோக்ஷம்
தரப்படு கின்றது பரப்பி ரமந்தான்
எக்கா ரணத்தால் ஏகமாய்த் தோஷம்
அற்றதா யுளதோ அதேகா ரணத்தால்
வேறுபா டில்லா வித்தகப் பார்வையர்
பிரமந் தன்னைப் பிரியா
திருந்து வாழ்வார் இதுதெரி மனனே" என்றபடி,

யார் மனம் எல்லாப் பொருளிலும் வேறுபாடில்லாமல் இருக்கின்றதோ அப்பேர்ப்பட்ட நல்லோரால், இப்பிறப்பிலேயே மோக்ஷம் தரப்படுகின்றது. எந்தக் காரணத்தால், பரப்பிரமமானது, ஏகமாய் தோஷமற்றதாய் இருக்கின்றதோ, அதே காரணத்தால் பொது நோக்குடைய பெரியோர், பிரமத்தினிடத்தில் பிரியாதிருப்பார்கள். இப்படியிருக்க, சாஸ்திர ஞானிகளான நீங்கள், பொது நோக்கின்றி நாமதேவனை இழிகுலத்தான் என்று எங்ஙனம் சொல்லலாம்? வேத சம்பந்தமான குல தர்மங்கள் இன்றியமையாதன. ஆகையால், இழிகுலத்தனான நாமதேவன் சமபந்தி போஜனம் செய்வதற்குத் தகாதவனென்று, நீங்கள் எண்ணக்கூடும். ஆனாலும் அதற்குச் சமாதானம் சொல்லுகின்றேன்.

"பாதியா யழுகியகால் கைய ரேனும்
பழிதொழிலு மிழிகுலமும் படைத்தா ரேனும்
ஆதியாய் அரவணையாய் என்ப ராகில்
அவரன்றோ யாம்வணங்கும் அடிக ளாவார்
சாதியால் ஒழுக்கத்தால் மிக்கோ ரேனும்
சதுர்மறையால் வேள்வியால் தக்கோ ரேனும்
போதினுன் முதன்பணியப் பள்ளிகொள்வான்
பொன்னரங்கம் போற்றுதார் புலையர் தாமே" என்றபடி,



பறையனாயினும் விஷ்ணுபக்தனாயின் பிராமணனைவிட மேலானவனாவான்; விஷ்ணு பக்தியில்லாதவன் பிராமணனானாலும் பறையனினும் தாழ்ந்தவனாவான்.

మద్భక్తజనవాత్సల్యం । పూజాయాం చానుమోదనం ।
స్వయమభ్యర్చనంచైవ । మదర్థేడంభవర్జనం ।
మత్కథాశ్రవణేభక్తిః । స్వరనేత్రాంగవిక్రియా ।
మమానుస్మరణంనిత్యం । యచ్చమాంనోపజీవతి ।
భక్తిరష్టవిధాహ్యేషా । యస్మిన్మ్లేచ్ఛేపివర్తతే ।
సవిప్రేంద్రోమునిశ్శ్రీమాన్ । సయతిస్సచపండితః ।
తస్మైదేయంతతోగ్రాహ్యం । సచపూజ్యోయథాహ్యహం ॥

"எனது பக்தர்க் கிதமுடை யவனாய்
எனது பூசைக் கின்புடை யவனாய்
தானே அதைத் தவறாதுசெய் பவனாய்
என்விஷ யத்தில் இடம்பமற் றவனாய்
எனது கதையை இனிதுகேட் பவனாய்
அக்கதை கேட்கையில் விக்குதல் விம்முதல்
விழிநீர் பெருக்கல் மெய்புள கித்தல்
முதலிய வற்றை முயங்கு பவனாய்
எண்ணம் வேறு நண்ணுத லின்றி
இடைவிடா தென்னை எண்ணுகின் றவனாய்
எனதுசந் நிதியில் இச்சையற் றவனாய்
இன்னணம் பக்தி இருநான் கதனை
மன்னுவோன் மிலேச்சன் மதியிலி எனினும்
அவனே வேதியர்க் கதிபதி யாவான்
அவனே முனிவன் அவனே ஸ்ரீமான்
அவனே யதிகட் கதிபதி பண்டிதன்
அவனுப தேசம் அடையவும் செய்யவும்
தக்கவ னென்றும் மிக்கவ னென்றும்
என்னைப் போல உன்னதன்
பூஜ்ய னென்றும் புகலுமிவ் வுலகே" என்ற

இந்தக் கீதா வாக்கியத்துக்கு,

பக்தர்களிடத்தில் அன்புடையவனும், ஒருவர் செய்யும் பகவத்பூசையைக் கண்டு களிப்பவனும், தானும் பகவத்பூசை செய்பவனும், பகவத் விஷயத்தில் டம்பமில்லாதவனும், பகவத் சரித்திர சிரவணத்தில் பக்தியுடையவனும், பகவத் குணானுபவகாலத்தில், விக்குதலும் விழிநீர் பெருக்குதலும் மெய்புளகித்தலும் ஆகிய அருஞ்செய்கைகளைப் பொருந்தின

வனும், அனவரதமும் வேறு எண்ணமின்றி பகவானையே தியானிப்ப வனும், பகவத்சந்நிதியில் நிஷ்காமியனும் ஆகிய இப்படிப்பட்ட எட்டு வித பக்திகளோடு பொருந்தினவன், மிலேச்சனுயினும் மதியிலியாயினும் அவனே பிராமண சிரேஷ்டன்; அவனே முனிவன்; அவனே ஸ்ரீமான்; அவனே பண்டிதன்; ஆகையால் அவன் பிறரிடத்தில் உபதேசம் பெறவும், தான் பிறர்க்கு உபதேசிக்கவும் தக்கவனென்றும் மிக்கவனென்றும், பகவானைப்போல உன்னதனென்றும், பூஜ்யனென்றும் மெய்ஞ்ஞானிகள் சொல்லுவார்கள் என்பது பொருள். இது பகவத்வாக்கியம் அல்லவா? "ஓ பிராமணர்களே! இவ்விதியை நீவிர் ஏன் எண்ணவில்லை? உமக்கு சம்மதம் இல்லாத பக்ஷத்தில், அப்போதே மறுத்திருக்கவேண்டும்! வெறுத்திருந்த நீவிர் ஏன் பொறுத்திருந்தீர்கள்? நான் நாமதேவனைக்கொண்டு ஸங்கல்பம் செய்வித்த போதும், நீங்கள் கொடுத்த அக்ஷதைகளை நான் அவன் தலையிலிட்ட போதும் ஏன் மௌனமாயிருந்தீர்கள்? உங்களில் எல்லோரினும், தத்வஞான உண்மையால் நாமதேவனே பெரியவன்; உங்களில் எல்லோரினும் அவனே பூஜ்யன். ஆகையால் அவன் எச்சிலை நுகர்ந்தேன். இப்பண்டரிபுரத்தில், எனது தாஸர் இரவும் பகலும் விடாமல் என்னை கீர்த்தனம்பாடிப் பஜிக்கின்றார்கள். நான் அவர்களோடுகூடி ஆனந்த மடைந்து, நாமதேவனைப்போன்ற பரமபக்தர்களுடைய மிச்சிலுக்காக ஏக்கற்று, அது எப்போது கிடைக்குமென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன். அங்ஙனம் ஒருவேளை அஃது எனக்குக் கிடைக்குமேல், அதனை ஓர் அரும் பெறல் அமுதம் கிடைத்தது என்று பூரித்துச் சிந்தாமல் புசிப்பேன். இப்படிப்பட்ட மிச்சிலின் மகிமையினாலேயே, நான் எல்லாராலும் வந்திக்கப்படுகின்றேன்" என்று விளங்க விரைவாய் எடுத்துரைத்தார். அவைகளைப் பிராமணர்கள் கேட்டுக்கொண்டே வந்து, எப்படியோ அவனைப் பகவான் என்று கண்டுகொண்டார்கள். ஆகையால் அவர்கள், அப்பிராமண வேடதாரியைப்பார்த்து, "ஓ, பரமபுருஷா! நீ சகல கல்யாணகுண நிதியான பகவான் என்று இப்பொழுதுதான் எங்களுக்கு நிச்சயமாயிற்று. எங்கள் சந்தேகம் நிவர்த்தியாயிற்று. ஆனாலும்;

యచ్ఛాస్త్రవిధి ముత్సృజ్య । వర్తతే కామకారతః ।
నససిద్ధిమవాప్నోతి । నసుఖంసపరాంగతిం ।
తస్మాచ్ఛాస్త్రంప్రమాణంతే । కార్యాకార్యవ్యవస్థితౌ ।
జ్ఞాత్వాశాస్త్రవిధానోక్తం । కర్మకర్తుమిహార్హసి ॥

"எனது சாத்திரம் இசைக்கும் விதிகளைத்
தப்பி நடந்து தனது மனப்படி
நடப்பவன் அடையான் நற்கதி சித்தி
சுகமிவை யதனால் சுருதிதன்னை
விதியெனக் கொண்டு விதிவிலக் கறிந்து



விதிப்படி யொழுகி விலக்கினை
நீக்கிவாழ் பற்குன நீணிலத் திடையே" என்ற

தோ வாக்கியத்துக்கு,

சாஸ்திர விதியை அநுசரிக்காமல் தன்னிச்சையாய் நடப்பவனுக்கு நல்ல கதியும் சித்தியும் சுகமும் இல்லை ஆகையால், ஓ, அர்ச்சுனு! சாஸ்திரத்தை விதியென நம்பி, காரியா காரியங்களை உணர்ந்து, சாஸ்திர சம்மதமான காரியங்களையே நீ செய்யக்கடவாய்' என்பது பொருள். இதனை நீயே ஸ்ரீ கீதையில் விதித்திருக்கின்றனை அல்லவா? புத்திசாலிகளுக்கு, குலவேறுபாடான நடக்கைகள் ஒப்பாகுமே அன்றி, தப்பாகா.

கருமவசப்படான் அச்சுதன் கண்ணன்
தருமந் தனக்குத் தலை (என்றால்)

ధర్మస్య ప్రభురచ్యుతః ।

இதற்கு, "தர்மத்துக்கு அச்சுதன் தலைவனுயிருக்கின்றான் என்பது பொருள். நீ, எங்களைப்போல கர்மவசப்பட்டவன் அன்று; ஆனாலும் ஆரிய முதல்வனுகையால், சாஸ்திர விதியை உலகத்தார்க்கு அநுஷ்டித்துக் காட்டல் உசிதம். இக்காரணங்களால் நீ எங்களுடைய வேண்டுகோளை ஏற்று, நாமதேவனுடைய எச்சிலைப் புசித்த தோஷ பரிகாரமாக, சந்திரபாகையில் விதிப்படி ஸ்நானம் செய்து; பஞ்சகவ்யத்தை உட்கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள். அம்மொழியைக் கேட்ட பகவான் "ஓ, விப்ரசிகா மணிகாள்!

కరచరణసరోజే కాంతిమన్నేత్రమీనే ।
శ్రమముషి భుజవీచి వ్యాకులేగాధమార్గే ।
హరిసరసి విగాహ్యాపీయ తేజోజలౌఘం
భవమరుపరిఖిన్నః ఖేదమద్యత్యజామి ॥

"குடும்பக் காட்டில் இடும்பையுற் றடியேன்
களைத்தனன் அதனால் கைகா லெனுந்தா
மரைமல ருடையதாய் மனோகரக் கண்களாம்
மீன்களைப் பெற்று விறற்புஜ மெனும்
அலைகள் தம்மால் அலைப்புண்ட கண்ட
அரியெனச் சிறந்தோர் பெரியபொய் கையினில்
இறங்கி யங்குள எதமில் ஞானத்
தண்ணீர் அருந்தி நான் உண்ணீர தாகும்
எனது துன்பத்தை இன்றே
அகற்றுவல் சற்றும் அஞ்சுத லிலனே" (என்றால்)

இதற்கு, 'குடும்பக்காட்டிலே அதிக துன்பப்பட்டு அலைந்த நான், கை கால்களென்னும் கமல மலர்களையுடையதும், அழகிய விழிகளென்னும் மீன்களையுடையதும், தோல்கள் என்னும் அலைகளால் அலைக்கப்படுவதும், அதிக விசாலமானதும் ஆகிய ஹரி என்னும் பெரிய தடாகத்திலே இறங்கி, அங்குநிறைந்துள்ள மெய்ஞ்ஞானமாகிய தண்ணீரைக் குடித்து, என் மனதில் நிறைந்துள்ள துயரத்தை இப்பொழுதே நீக்கக் கடவேன்' என்பது பொருள்.

மேற்குறித்த ஹரியென்னும் பெரிய தடாகத்தில் உள்ள மெய்ஞ்ஞானத் தண்ணீரை உண்ணவும், அதில் ஸ்நானம் பண்ணவும் விரும்புகிறவர்கள் முமுக்ஷுக்களாகிய சாதுக்களே ஆவார். அப்படிப்பட்ட ஸ்நான பானங்களை அனவரதமும் விடாமற் செய்கிற உத்தம பாகவதரான இந்நாமதேவருடைய மிகப் பரிசுத்தமான எச்சிலை உண்ட எனக்கு, சந்திரபாகையில் ஸ்நானமும், பஞ்சகவ்விய பானமும் பிராயச் சித்தங்களென்று விதித்தீர்கள்; பாகவதனுடைய எச்சிலையுண்ட மகத்வத்தால் தாஸிமகன் நாரதனாகி, எல்லா உலகத்தாராலும் வணங்கப்படுவதை நீவிர் அறியீரா? குங்குமம் சுமந்த விலங்கு, அதன் பரிமளத்தை அறியாததுபோல, வேதமூட்டையைச் சுமக்கிற நீங்கள், அதன் ஸாராமிச விசேஷதர்மமாகிய பாகவதசேவையின் ப்ரபாவத்தை உணராமல், வீண்தர்மங்களை அநுஷ்டித்துக் கொண்டிருக்கிறீர்கள்; ஆகையால் எனக்கு இப்படிப்பட்ட போலிப் பிராயச்சித்தத்தை விதித்தீர்கள்; என்றாலும் 'ஒப்புர வொழுகு' என்ற பழமொழிப்படி நடந்து கொள்வது யுக்தம். இல்லாவிட்டால்,

> உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்
> தலகையா வைக்கப் படும்.

என்றபடி,

நீவிர், என்னைப் பயித்தியக்காரனாக்கி விடுவீர்கள். ஆதலால், இவ்வூர் வேதியர்களாகிய நீங்கள் எல்லாரும், ஒருமனதாய் விதித்த பிராயச் சித்தத்தை ஏற்றுக்கொள்ளுகின்றேன்" என்று சொல்லி, நாமதேவரைக் கையிற் பிடித்துக்கொண்டு, அவ்வேதியர்கள் தம்மைப் பின்பற்றிவர, சந்திரபாகைக்குப்போய் ஸ்நானஞ் செய்து, அவர்கள் கொடுத்த பஞ்சகவ்யத்தை உட்கொண்டு, அவர்களுக்குத் தக்ஷிணை கொடுத்தனுப்பி விட்டு, பல பக்தர்களுடன் சந்நிதிக்கு வந்தான். அப்பொழுது, ருக்மிணி சத்தியபாமையர் இருவரும், எதிர்கொண்டு வந்து, அர்க்கிய பாத்யாதி உபசாரங்களைச்செய்து, பகவானுடன் எல்லாரையும் உட்கார வைத்து, அறுசுவை உண்டியைப் பரிமாறினார்கள். அதனை அவர்கள் ஆனந்தமாயுண்கையில், பகவான் தனது எச்சிலைப் பக்தர்களுக்குக் கொடுத்தான்; அவர்களெச்சிலை தான் வாங்கி உண்டான். இப்படி அனைவரும் மன நிறைந்து வயிறார உண்டு, சந்தன புஷ்ப தாம்பூலாதி மங்களப் பொருள்களை ஏற்று, பகவானிடத்தில் விடைபெற்று, தத்தம் இருப்பிடம் சென்றார்கள்.



அப்பொழுது, தேவலோகத்திலிருந்து நாரதமுனிவர் வந்து புண்டரீகவரதனைத் தொழுது தழுவிக்கொண்டு பரமானந்தபரவசராய், தன்விச்சையில் பகவந்நாம சங்கீர்த்தனஞ் செய்தார். அதற்குப் பகவான் சந்தோஷித்துத் தனது கழுத்திலணிந்த துளசிமாலையை, அவர் கழுத்திலணிந்து அநுக்கிரகித் தனுப்பினான். பிறகு, ராதா தேவியும் ருக்மிணி தேவியும், நாமதேவர் விஷயத்தில் பகவான் மிகவும் அன்புடையவனாய் அவர் எச்சிலை உட்கொண்டதற்காக, வேதியர்கள் நியமித்த பிராயச்சித்தத்தை ஏற்றுக்கொண்ட அற்புத சரித்திரத்தையும், அவனுடைய உள்ளன்பு, பரத்வம், நல்லொழுக்கம், நற்பேறு முதலிய குணங்களையும், இவைகள் நாமதேவர் விஷயத்தில் அநுபவ சித்தமாய் வெளிப்பட்டிருக்கிற தன்மையையும் பலவிதமாய்க் கொண்டாடினார்கள். அச்சமயத்தில் நாரதர், சத்தியபாமையின் சந்நிதிக்கு வந்து வந்தனஞ் செய்து, அந்தம்மையால் அங்கு நடந்த விருத்தாந்தங்களைக்கேட்டு, "தாயே! முன்பொருகாலத்தில், பகவான்,

> నాహంవసామివైకుంఠే । నయోగిహృదయేరవౌ ।
> మద్భక్తాయత్రగాయంతే । తత్రతిష్ఠామినారద ॥

> " வைகுந்தந் தன்னிலும் வைகேன்யோ சேர்பால்
> வைகுமனஞ் சற்றுமிலேன் வைகுநான்—வைகுமிடம்
> பக்தர் மனமென்னும் பங்கயமாம் நாரதனே
> சத்யமிது சத்யமிது தான் "

என்று,

என்னிடத்தில் சொல்லியிருந்தான்; அதனை இப்போது நாமதேவர் விஷயத்தில் அநுஷ்டித்துக் காட்டினான்" என்று விண்ணப்பித்து, விடைபெற்றுச் சென்றார். அன்றிரவு, பகவான் ஏகாந்தமாய்ச் சயனித்துக் கொண்டிருக்கையில், ஸ்ரீ ருக்மிணிதேவி, சுவாமி பாதங்களை வருடிக்கொண்டு, "ஓ, பிராணநாதா! மூன்றுலகினும் உனக்கு மிகவும் உள்ளன்புடையார் யாவர்?" என்று கேட்க, பகவான், "சகி! நான், எல்லாப் பூதங்களுக்கும் பொதுவானவன். ஆனாலும்,

> జ్ఞానీత్వాత్మైవమేమతం ।

> "ஞானியே நான் நானே ஞானியாம் என்பதென்றன்
> மானமிகு சுத்த மதம் "

என்றபடி,

ஞானி நானே என்பது எனது எண்ணம். அப்பேர்ப்பட்ட ஞானியரில், நாமதேவன் முதன்மையானவன். மூவுலகினும் அவனை ஒப்பார் இலர். ஆகையால், அனைவரினும் அவனே எனது பிராண நிலயம்; அவனே எனது ஆஸ்தி" என்று திருவாய்மலர்ந்தருளினான். அதற்கு ருக்மிணிதேவி, பரமானந்தமடைந்து, பக்தவத்ஸலனான பகவானைப் பார்த்து பலவாறு துதித்தாள்.

ஸ்ரீ பாகவதப்ரியாயநம:

பதினைந்தாம் அத்தியாயம்

# பகவான், பிராமணர்களுக்கும் பக்தர்களுக்கும் தனது நிஜரூபதரிசநம் கொடுத்த சரித்திரம்

அவ்விரவெல்லாம் நாமதேவரைக்குறித்துப் பகவானும் ஸ்ரீ ருக்மிணீதேவியும் வார்த்தையாடிக் கொண்டிருந்தார்கள். சூரியோதயமானவுடனே பக்தர்கள் எல்லாரும்வந்து, பகவானைப்பணிந்து, ஆனந்தக் கண்ணீருடன் தோத்திரஞ் செய்துகொண்டிருந்தார்கள். அச்சமயத்தில் பகவான், ஸ்ரீ ருக்மிணீ தேவியைப் பார்த்து, "இன்றைக்குப் பிராமணர்களைப் போஜனத்திற்கு அழைக்கவேண்டும்; அவர்கள் தரிசநத்தால், எல்லாத் தீவினைகளும் இறக்கும்" என்றார். அதுகேட்ட ருக்மிணீதேவி, "ஓ, நாதா! அணிமாதி அஷ்ட சித்திகளும் தேவரீர் சந்நிதியில் காத்துக்கொண்டிருக்க, பிராமணபோஜனம் செய்விப்பதற்காகத் தேவரீர் யோசிக்கவும் வேண்டுமோ? நினைத்தது நினைத்தபடி முடிக்கலாம்" என்று சொன்னார்கள். அப்போது பகவான், சந்தோஷத்துடன் நாமதேவரைப்பார்த்து "ஓ, நாமதேவா! முற்பிறப்பில் விட்டகுறையாலேயும், உனது நல்வினை முதிர்ச்சியினாலேயும் நான் உனது வசப்பட்டிருக்கின்றேன். ஆதலால் உன்னிமித்தம் இவ்வேதியர்களுக்கு, எனது நிஜதரிசனம் கொடுக்கின்றேன்" என்று சொல்லி, நாமதேவரைக் கையிற்கொண்டு, பல பக்தரும் தன்னைப்பின் தொடர, விருந்துக்கு அழைக்கப் புறப்பட்டு, குண்டல தீர்த்தக்கரையில் வாசம்பண்ணியிருந்த பிராமணர்களைக் கண்டு, அவர்களுக்கு வந்தனஞ்செய்து, "ஓ, விப்ரர்காள்! நான், பிராமணபோஜனம் செய்விக்க நிச்சயித்திருப்பதால், நீங்கள் அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு வரவேண்டும்" என்று அழைத்தான். அதற்கு, அவர்கள் எல்லாரும், "நல்லது; அப்படியே ஆகட்டும். நாங்கள், தேவரீரைநம்பி இங்குக் காத்துக்கொண்டிருக்கிறோம். ஆகையால், தேவரீர் விருப்பத்தின்படி வருகின்றோம்" என்று கூறினார்கள். அவ்வார்த்தைகளைப் பகவான் கேட்டுக் களித்து, திருக்கோயிலுக்கு எழுந்தருளி, ஸ்ரீ ருக்மிணீதேவியைப் பார்த்து, "இன்று நல்ல நாள்; இவ்வூர் வேதியர்கள் அனைவரும் போஜனத்துக்கு வருகின்றார்கள்" என்று சொன்னார். அதற்கு ருக்மிணீதேவி, "அவ்வேதியர்களுடைய நல்வினை அளவற்றது ஆகையால் தேவரீர் காட்சிகொடுத்தலும், விருந்துக்கு அழைத்தலும், தேவரீர் திருக்கரத்தால் பரிமாறப் புசித்தலும் ஆகிய பெரும் பலன்கள் அவர்களுக்குக் கிடைத்தன. அவர்கள் செய்தவம் என்னவென்றுரைக்கலாம்!" என்று கூறினாள்.

இதற்குள், பிராமணர்கள் தத்தம் அநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு, விருந்துக்கு வந்தார்கள். அவர்களுக்கு, அர்க்யம், பாத்யம்,



ஆசமனம் முதலிய உபசாரங்கள் செய்யப்பட்டன; அவர்களை வரிசையாய் உட்காரவைத்து, இடத்தைச் சுத்தப்படுத்தி, தலைவாழையிலைகளைப் பரப்பி, அறுசுவை உண்டியைப் பகவான் பரிமாறினான். அவர்கள், பரிஷேசனம், ஆபோசனம், ஆஹுதி இம்மூன்றையும் விதிப்படி செய்து, கோவிந்த நாம தியானத்துடன் பரிபூர்ணமாய் உண்டு, உத்தராபோசன முடித்து, விதிப்படி வாய், கை, கால்கள் அலம்பிக் கொண்டு, சுத்தாசமனம் பண்ணி, பரிசுத்த இடத்தில் உட்கார்ந்து, ஜனார்த்தனனை தியானித்தபடியே சந்தன புஷ்ப தாம்பூலங்களை ஏற்றுக் கொண்டார்கள். பிறகு பகவான், அப்பிராமணர்களுக்கு உபசாரங் கூறிக் கொஞ்சநேரம் அங்கேயே உட்கார்ந்திருக்கவேண்டுமென்று அவர்களைப் பிரார்த்தித்தான். அதன்படி அவர்களிருக்க, அவர்கள் முன்னிலையிலேயே நாமதேவர், நிவர்த்திதேவர், ஞானதேவர், சோபானதேவர், சாமந்தர், வீசோபாகேசர், நரஹரிதாஸர், சோகாமேளர், கோராகும்பார் முதலிய அநேக பக்தர்களைத் தம்மோடு சமபந்தியில் வைத்துக்கொண்டு பகவான் அதிக அன்புடன் புசித்துக் கொண்டிருந்தான். அறுகுணச் செல்வம் நிறைந்தவனான பகவான், பக்தர்களுடன் புசித்துக் கொண்டிருக்கையில், பிரமாதி தேவர்கள் ஆகாயத்திலிருந்து புஷ்பமாரி பொழிந்து, இவ்வற்புதங்களைப் பார்த்து, "இந்த பக்தர்கள் பாக்கியமே பாக்கியம்! வேத முடிவாயுள்ள பரமரகஸியப் பொருளாகும் பகவான், இவர்களுக்கு இப்படிப் பிரத்தியக்ஷமாயிருப்பது அதிசயம்" என்று, அவனுடைய கலியாண குணங்களைக் கொண்டாடினார்கள். அனைவரும் உண்டு முடிந்தபிறகு, பகவான், தனது பொன்னாடையில் அவர்கள் எச்சிலை ஒன்று சேர்த்து, அதனைப் பாகவத பிரசாதம் என்று பக்தர்கள் எல்லாருக்கும் விநியோகித்துத் தானும் உட்கொண்டான்.

அப்போது, அதனைப் பார்த்துக்கொண்டிருந்த பிராமணர்களெல்லாம் ஆச்சரியப்பட்டு ஒருவரோடொருவர், "இஃதென்ன விபரீதம்! இவன், பிராமணனென்றெண்ணிப் பிராயச்சித்தம் செய்வித்தோம்; இவனுடைய காரியத்தைப் பார்த்தால் எல்லாவற்றிலுங் கலந்தவனாக இருக்கின்றான். இவன் ஊர், பேர் முதலிய குறிப்பற்றவனாயிருக்கின்றான்; குலதர்மங்கள் இவனிடத்தில் தேடியெடுத்தாலும் கிடையா. இன்னும் பூமி, மலை, மரம் ஆகிய அசரங்களும், மனிதராகிய சரங்களும் ஒரு தன்மையாய் வாழுமாறு, சூரியன் தனது ஒளியால் அவைகள் அனைத்தையும் ஒரேவிதமாய் வளர்க்கிறபடியும், ஸ்ரீமந்நாராயணன் மறைந்திருந்து எல்லாவற்றையும் ஒரு படித்தாய்க் காக்கின்றபடியும்; இவனுக்கு அன்னியமென்றும் அநன்னியமென்றும் வேறுபாடற்றிருக்கின்றது. ஆகையால் இவன், ஸ்ரீமத் பாண்டுரங்கனாயிருக்கவேண்டும். மன வாக்குகளுக்கு எட்டாதவனான இவ்வுத்தம புருஷன், நாமதேவனுடைய பாக்கியவசத்தால் அவனிடத்தில் அதிக

மோகம் பூண்டிருக்கின்றான்" என்று சொல்லிப் பகவானைத் தியானித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது ஹ்ருதீகேசனான பகவான், தனது திவ்யமங்கள உருவத்துடன், பிராமணர்களுக்கும் பக்தர்களுக்கும் காட்சி அளித்தான். அந்த திவ்யமங்களத் திருவுருவத்தை வர்ணிக்க, நான்முகன், ஐம்முகன், அறுமுகன், ஆயிரமுகன் இவர்களாலும் முடியாது; சகல கலாவல்லியாகிய சரஸ்வதிக்கும் சாத்தியமானதல்ல. ஆகையால் அப்பேர்ப்பட்ட அற்புதத் திருவுருவத்தை எடுத்துரைக்கச் சிற்றறிவாலோசனையுடைய சிற்றுயிர்களாகிய மானிடர்களுக்கு எங்ஙனம் சாத்தியப்படும்? ஒளிமிக்க வதனமும், அளிமிக்க தாமரை இதழ்களனைய கண்களும், அழகிய கன்னங்களும், பலகைபோல் அகலமாய் கஸ்தூரியாலாகிய ஊர்த்வ புண்ட்ர திலகம் இட்ட நெற்றியும், சிறந்த மகர குண்டலங்களை அணிந்த செவிகளும், சங்குபோன்ற கழுத்தும், மிகவும் அகன்று அழகான * ஸ்ரீவத்ஸம் அணிந்த மார்பும், மூன்று மடிப்புகளுடையதாய், ஆழ்ந்த நாபியோடுகூடிய வயிறும், முழங்கால் தடவும் தடங்கைகளும், அளவில் வேறுபடாத தொடைகளும், முழங்கால்களும், தாமரைகளுக்குச் சமமான தாட்களும், அழகிய பீதாம்பரமும், முடிமாலை தோளணி கடகம் முதலிய திவ்யாபரணங்களும், சங்கும் சக்கரமும் தண்டமும் கோதண்டமும் வாளும் தாங்கிய தாமரைகளும், துளசி, † வைஜயந்தி வனமாலிகைகளும், வரதாபயக் கைகளும் ஆகிய இவைகளுடன் பகவான், திவ்ய மங்கள விக்ரகசேவை தந்தருளினன். அப்போது, அனந்தன் கருடன் ‡ விஷ்வக்ஸேனாதி நித்திய முக்தர்களும், ஸநகாதி ஜீவன் முக்தர்களும், பிரமாதி தேவர்களும், பிருகு முதலிய மகா முனிவர்களும், நாரதர் முதலிய தேவ முனிவர்களும், வியாசர் முதலிய முனிவர்களும், சித்ரரதன் முதலிய கந்தர்வர்களும், கபிலர் முதலிய சித்தர்களும், பிரகலாதன் முதலிய பக்தர்களும், உருவத்தோடு கூடிய வேதங்களும், புண்ணிய நதிகளும், ஆனந்த மிக்கவர்களாய், பல்லாண்டு கூறிக்கொண்டு பகவானைச் சூழ்ந்திருந்தார்கள். இவ்வற்புதத்தைக் கண்ட பக்தரும் பிராமணரும், கடல் முழக்கம்போலத் துதித்துக்கொண்டு, ஆனந்தக் கண்ணீ ருகுத்த விழிகளை உடையோராய்த் தம்மை மெய்மறந்து, காற்றில்லா இடத்தில் இட்ட விளக்கைப்போல் அசையாதிருந்தனர். ஞானதேவர், தமது தீர்த்தாவளியென்னும் கிரந்தத்தில் சொல்லியிருக்கிறபடி பகவத் சொரூபானுபவ ரூபஞானம், வைராக்ய இன்பம், எழுகோடி மகாமந்திரார்த்தம், பதினெண்புராண சாரம், நாமதேவர் கூட்டுறவு, பகவத்சொரூபக் காட்சி, பிரமானந்த பிரபாவம், பக்தஜன மனோநிலை வைபவம், பரம பக்தஜன பகவதனுபவத்திற் பிறந்த பரமானந்தத்தோடு கூடிய பரமானுஷ்டானம், பரமயோகியரது யோகாமிர்த வைபவம், தியான ரஸம், சச்சிதானந்த விக்ரகானுபவம் ஆகிய இவைகளில் யாதோ

* ஸ்ரீவத்ஸம்-விஷ்ணுமார்பிலுள்ள ஓர் மறு.

† வைஜயந்தி-விஷ்ணு அணிந்துள்ள மலர்மாலை.

‡ விஷ்வக்ஸேனன்-பரமபதத்திலுள்ள நித்தியமுக்தர்களது திரளுக்குத் தலைவன்



வென அப்போதைய அனுபவம் அறியக்கூடாமல் இருந்தது. அக்காலத்தில், மாரீசனுக்கு மரமெல்லாம் ஸ்ரீராமரூபமாய்த் தோன்றினபடி, அவ்வேதியர்களுக்குச் சராசர வஸ்துக்கள் யாவும் கிருஷ்ண ரூபமாய்த் தோன்றின. மேலும், அந்த பிராமணர்கள், பயத்தால் நடுங்கின சரீரமுடையவர்களாய் "இத்தகைய பகவானுக்குப் பிராயச்சித்தம் செய்வித்தோம். பிறவிக்கடலில் மூழ்கினவர்களாகிய நாம் நமது அதிஷ்டவசத்தால், இன்று இந்த பகவானைத் தரிசித்து, அப்பிறவிக் கடலைக் கடந்தோம்" என்று கூறி வியந்தார்கள். அப்போது பகவான் முன்போலவே, வேதிய உருவந்தாங்கி, நாமதேவரைக் கையிற் பிடித்துக்கொண்டு வந்து, அவ்வேதியர் பாதங்களில் விழச்செய்து, அவர்களைநோக்கி, "ஓ, வேதியர்காள்! இவனுக்கு அனுக்கிரகஞ்செய்யுங்கள்; இவன் எனக்குப் பிராண நிலயம்; நான், பக்தர் வசப்பட்டிருப்பவன்; இந்த நிவர்த்திதேவ ஞானதேவ சோபான தேவர்கள், தேகாபிமானத்தைவிட்டு எல்லாம் எனதுருவாகப் பாவித்துத் துதித்து அனவரதமும் என்னையே பஜித்துத் தம்வசப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். இந்த ஜகந்மித்ரநாதன், என்னைத் தனது மனக்குகையில் அடைத்துத் தேகாநுபந்தங்களை எண்ணாமல் இருக்கின்றான். இந்த ஸாமந்தன், எல்லாப் பூதங்களிலும் என்னுருவைத் தவிர வேறொன்றையும் காணாதிருக்கின்றான். இந்த நரசிம்மஞானி பேதஞானமென்னுங் காட்டை, வேரோடு களைந்து, அதனை ஞானத்தீயாற்கொளுத்தி நீறாக்கி, அபேதாமிர்தத்தைப் பானம் பண்ணிக்கொண்டிருக்கின்றான். நரஹரி, கோராகும்பார், சோகாமேளன் முதலியோர் எனது பரமபக்தர்கள். அவர்களுக்கு நானும், எனக்கு அவர்களும் நேச தாசர்களாய் இருப்போம். நான், அவர்களுடைய பாததூளிக்கு ஆசைவைத்திருப்பேன்" என்று கூறினான். இதைக்கேட்ட பிராமணர்கள், பகவானைத் துதித்து, "பாண்டுரங்கநாதா! எமக்கு அரும்பெறலாகும் தேவா! எமது அஞ்ஞானங்களைச் சேதித்து, மெய்ஞ்ஞானங்களைப்போதித்து, எமக்கு உன்மேல் இடையறாத அன்பைப்பிரசாதித்து, நாங்கள் அனவரதமும் உன்னை மறவாமல் தியானிக்குமாறு கிருபை செய்யவேண்டும். நாங்கள் எத்தனைகோடி ஜன்மங்கள் எடுத்தாலும், உனது திவ்ய நாமங்களை மறவாமல் உன்னைத் தியானித்துக்கொண்டிருக்கவேண்டும். உனது பக்தர்களுக்குப் பணிவிடை செய்துகொண்டிருக்கவேண்டும். பல்லாண்டுகளாகப் பலவேறு ஜன்மங்கள் எடுத்தும் வீணாயின. வேதசாஸ்திரங்களை ஓதியும்,

"ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையிற் பேதையார் இல்" என்றபடி,

அவைகளினுடைய ஸாரம்சங்களை உணராமல் எங்களை நாங்களே உயர்வாக மதித்து, எங்களிலும் பெரும் பாகவதர்கள் வேறெவரும் இலர் எனத் தீர்மானித்துக்கொண்டு வீண்காலம் போக்கினோம்.

ஆனாலும், எமது நல்வினைப்பயன் எப்படிப்பட்டதோ தெரியவில்லை, தீனதயாளனாகவும் கிருபாநிதியாகவும் உள்ள நீ, இன்று எம்மை வலிய வந்து ஆட்கொண்டாய். இருவினை வசப்பட்ட எமக்கு, ஞானதீபத்தை அளித்தனை. இனி நாங்கள், உனது விஷயத்தில் அன்புற்றுச் சொந்தம் பாராட்டி, உனது பக்தகோடிகளில் கலந்திருக்கும்படி எங்களுக்கு அனுக்கிரகஞ்செய். இந்த பக்தர்களுடைய பாததூளி, எமது தலையில் தோயும்படி கடைக்கண் பார்" என்று அநேகவிதமாய்ப் பிரார்த்தித்தார்கள். அதற்குப் பகவான் சந்தோஷித்துப் புன்முறுவல் பூத்து, தனது கருணாமிர்த மழையால் அவர்களுடைய தாபத்தைத் தணித்து, 'ஓ, வேதியர்காள்! எனது உயிரேபோன்ற ஞானதேவன் எமது சொரூபவிஷயஞானத்தை உங்களுக்கு உபதேசிப்பான். நீவிர் குலாபிமானத்தைவிட்டுப் பாகவதாபிமானம் பூண்டு, சலனமற்ற மனமுடையவர்களாய் என்னைப் பஜிக்கக்கடவீர்கள்; உமக்கு, இந்நிஷ்டை கைகூடினால் வேறு தபோயாகங்கள் செய்யவேண்டியதில்லை. எனது நாமத்தை தியானம் செய்துகொண்டு சர்வ பூததயாபரனாயிருப்பவன், மறு பிறப்பை ஒழித்து பரமபதத்தில் நித்ய முக்தர்களோடு கூடி ஆனந்திக்கலாம்" என்று, இப்பரம ரகஸியத்தை உபதேசிக்கவே, பிராமணர்கள், "நாங்கள் பரிசுத்தவான்களானோம்" என்று சாஷ்டாங்கமாய் வந்தனஞ்செய்து பகவானைத் துதித்தார்கள். அப்போது ருக்மிணீகாந்தன் ஞானதேவரைப் பார்த்து, "இந்த பிராமணர்களை உன்னிடத்தில் ஒப்புக்கொடுத்தேன்" என்று சொல்ல, அவர் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து, "சுவாமி! தேவரீர் கட்டளையை எனது சிரசாவகித்து, இவர்களுக்குத் தேவரீருடைய உண்மை உருவத்தியான நிபந்தனைகளைத் தெரிவிக்கின்றேன்" என்று விண்ணப்பஞ் செய்தார்.

அனந்த மூர்த்தயேநமஃ

## பதினாறாம் அத்தியாயம்

# கூர்மதாஸர் சரித்திரம்

சூரியனுடைய தேர்ப்பாகனாகிய அருணாம்சத்தில் கூர்மதாஸர் என்பவர், காலில்லாத முடவராய், பிராமணகுலத்தில் அவதரித்தார்; அவர்க்கு, நடக்கும்வயது வந்தபொழுது, ஆமையைப்போலப் பூமிமேல் நகர்ந்துகொண்டிருந்தார். ஆறாம் வயது வந்தவுடனே அவர், எங்கெங்கே ஹரி சங்கீர்த்தனம் நடந்தாலும், அங்கெல்லாம் நிலமேல் ஊர்ந்துசென்று, அதனைச் சிரவணஞ் செய்வாராயினர். கூர்மத்தைப்போல நிலமேல் ஊர்ந்த காரணத்தால் அவர்க்கு, கூர்மதாஸர் என்கிற பெயர் உண்டாயிற்று. இங்ஙனமிருக்க ஒருநாள், ஓரிடத்தில் ஸ்ரீ பண்டரீபுர மகாத்மியத்தை ஒருவர் வாசிக்கக்கேட்டு, அதுமுதல் அவர் ஸ்ரீ பண்டரிநாதனைத் தரிசனம் செய்யவேண்டுமென்று அதிக



ஆசையுடையவராய் கைகூப்பித் தொழுது, அங்கிருந்தவர்களைப் பார்த்து, "நான் பண்டரிபுரம்போக ஆசை கொண்டிருக்கின்றேன். ருக்மிணீரமணன் என்னை வரவழைத்துக்கொண்டு எனக்குத் தரிசனம் தருவானா?" என்றுகேட்க, அவர்கள் நகைத்து, "காலில்லா உனக்கு பண்டரிபுரம்போதல் எங்ஙனம் சாத்தியமாம்? எங்களுக்கு எல்லா அவயவங்களும் சரியாய் அமைந்திருக்கின்றன; வயதும் அதிகமாயிருக்கின்றது. ஆனாலும், எங்களுக்குப் பண்டரிபுரம் போகவேண்டுமென்னும் எண்ணம் மாத்திரம் இருக்கின்றதே யல்லாமல், அங்ஙனம் செய்யச் சாத்தியப்படவில்லை. ஆகையால், நீ நினைத்தமாத்திரத்தில் அங்கு எப்படிப் போகக்கூடும்?" என்று சொன்னார்கள். அதுகேட்ட கூர்மதாஸர் வருந்தி, "எனக்கு மனுஷ சரீரம் கிடைத்திருக்கிறது. பண்டரிபுரம் சென்று புண்டரீக வரதனைத் தரிசித்து, ஜீவன்முக்தர்களான நாமதேவர், ஞானதேவர் முதலிய பக்த கோஷ்டியைச் சேவிக்காமற் போவேனானால், நான் இந்த சரீரம் பெற்றதனால் பலன் என்ன?" என்று கூறி,

"ஒன்றே செய்யவும் வேண்டும் ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும் நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும் இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும் இன்னும்
நாளை நாளை என்பீர் ஆகில்
நமனுடை முறைநாள் ஆவதும் அறியீர்
நம்முடை முறைநாள் ஆவதும் அறியீர்" என்றபடி,

உடனே புறப்பட்டு, அந்நாள் முழுவதும் நிலமேல் ஊர்ந்து, இரண்டு நாழிகைவழித் தூரம் சென்றார். அவ்விடத்தில் ஓர் ஆஞ்சநேயர் ஆலயத்தைக் கண்டு, அதற்குள் நுழைந்து இளைப்பாறி, பசி தாகத்தால் மிக வருந்தினவராய், "பண்டரிநாதா! ருக்மிணிகாந்த! திக்கற்றவனும் உன்னையே நம்பி இருப்பவனும் ஆகிய என்னைக் காத்தருள்வாய். எனக்கு உற்றதுணை நீயே; உன்னைவிட வேறொருவரை நான் அறியேன்" என்று தவித்துக்கொண்டிருந்தார். அந்த க்ஷணத்திலேயே வியாபாரியைப்போல் ஒருவன் அவர்க்குப் பிரத்தியக்ஷமாய், "உனக்குக் கால்களில்லாதிருந்தும் இவ்வாறு வருந்தி எங்குப் போகின்றாய்?" என்று கேட்க, இவர், "என்பேர் கூர்மதாஸன்; பண்டரிநாதனைச் சேவிக்கவேண்டுமென்னும் ஆசையால் போய்க்கொண்டிருக்கிறேன்" என்றார். அதற்கு அவ்வர்த்தகன் சந்தோஷித்து, "ஓ, பிராமணோத்தமா! நானும் பண்டரிபுரம் போகின்றேன்; நீ எனக்கு நல்லதுணை ஆனாய்" என்று சொல்ல, கூர்மதாஸர், "நான் காலில்லா முடவன் ஆகையால், நான் உனக்குத் துணையாவதெப்படி? உன் ஊர் எது, உன் பேர் என்ன?" என்று கேட்டார். அதற்கு வர்த்தகன், "என் பேர் விட்டோபா; நான் பண்டரிபுரத்தில் வாழும் வர்த்தகன்" என்று சொல்ல, கூர்மதாஸர், "உனக்குக் கால்கள்

நன்றாயிருக்கின்றன. ஆகையால் நீ விரைவாய் நடந்து போவாய். நான் முடவன் ஆகையால் உன்னை எப்படிப் பின்பற்றி வருவேன்'' என்றார். அதற்கு வர்த்தகன், "நானும் மெல்ல நடக்கின்றேன்; நீ தங்கு மிடத்தில் நானும் தங்கி, உன்னை என்னுடன் அழைத்துக்கொண்டு போகின்றேன் பயப்படாதே'' என்று சொல்லி, சமையல்செய்து தான் புசித்து, கூர்மதாஸரையும் புசிக்கச்செய்து, அவர்க்கு ஓராடை உதவி, அன்றிரவு அவரோடு உறங்கி, விடியற்காலையி லெழுந்து அவரை நோக்கி, "நீ மெல்ல நடந்து வா; இன்றிரவு நீ தங்கக்கூடிய இடத் துக்கு நான் முந்திப்போய், சமையல் செய்துவைக்கிறேன். வெகு நாளாய் நான், பண்டரிபுர யாத்திரைசெய்யும் ஏழைகளான பரதேசி களுக்கு அன்னபானாதிகள் கொடுத்து ஆதரித்து வருகின்றேன்; இதுவே என் உத்தியோகம்'' என்று, கூர்மதாஸர்க்கு வழிகாட்டி விட்டு; தான் முன்னே போனான். அவர், அன்று மாலைவரையில் நிலமேல் ஊர்ந்து, இரண்டுநாழிகைவழித் தூரம் சென்று, ஓரூர்க்குச் சமீபத்தில் வருகையில், அங்கே அவ்வர்த்தகன், முந்தியே வந்திருந்து அன்னபானாதிகளைச் சித்தஞ் செய்துவைத்து, இவர்க்காகக் காத்துக் கொண்டிருந்தான் ஆகையால்; இவர் வந்தவுடனே இவர்க்கு அன்ன மிட்டு ஆதரித்து, அன்றிரவு இவரோடு உறங்கி, விடியற்காலையில் எழுந்து, தான் முன்னே சென்றான். இப்படித் தினந்தோறும் மாலைக் காலங்களில், அவர் போய்ச் சேரும் ஊர்களுக்கு, அவ்வர்த்தகனாகிய பகவான் தானும் வந்திருந்து, அவர்க்கு அன்னபானாதிகளைத் தந்து ஆதரித்து வந்தான். மாலைக் காலங்களில் அவருடைய பிரயாணம் முடிந்து தங்குகிற இடங்களில் ஊர்களில்லாவிட்டால், அவைகளைப் பகவானே உண்டுபண்ணி அவரைக் காப்பாற்றினான். இப்படிக் கூர்மதாஸர் நாலுமாதகாலம் நிலமேல் ஊர்ந்து, கார்த்திகைமாதத்தில், பண்டரிபுரத்துக்குப் பதினாலுநாழிகைவழித் தூரத்தில் உள்ள வகுளா புரியைச் சேர்ந்தார். அவ்வூரில் உள்ளார் அனைவரும், பண்டரிபுரத் தில் நடக்கும் கார்த்திகைமாதம் சுக்லபக்ஷ ஏகாதசி உற்சவத்தைச் சேவிப்பதற்கு, அதற்கு முந்திய நாளாகிய தசமியிலேயே புறப்பட்டார் கள். அதுகண்ட கூர்மதாஸர், "எனக்குக் கால்களிருந்தால், இவர்க ளோடு கூடப்போய், உற்சவத்தைச் சேவிக்கலாம். முடவனாகிய நான், என்செய்யக்கடவேன்!'' என்று வருந்தி, விரைவாய்ப் போய்க்கொண் டிருக்கும் அவர்களைநோக்கி, "ஓ ஸாது ஜனர்காள்! நீவிர் பண்டரிபுரம் போகின்றீர்கள் அல்லவா? என்மேல் கருணைகூர்ந்து, பண்டரிநாதற்கு, எனக்குப் பதிலாக ஸாஷ்டாங்க நமஸ்காரங்களை நீங்கள் செய்யக் கோருகின்றேன். திக்கற்றவனும் பரதேசியும் முடவனும் ஆகிய எனக்கு, ஏகாதசி தினத்தில் பகவானைத் தரிசிக்க வேண்டுமென்னும் அவா அதிகரித்திருக்கின்றது. இந்த வகுளாபுரிக்கும் பண்டரிபுரத் துக்கும் பதினாலுநாழிகைவழித் தூரம் இருக்கின்றது. ஆகையால் நான் அங்குப் போய்ச்சேர எழுநாள்களாகும். ஏழைக்கிரங்குவோனும் கருணாகரனுமாகிய பண்டரிநாதனது தரிசனத்தை, சாதகபக்ஷி மழை



ஜலத்தை விரும்பி எதிர்பார்க்கிறதுபோல நான் எதிர்நோக்கி யிருக் கின்றேன். பரதுக்கஞ் சகியாமை சாதுக்களுக்கு முக்ய தர்மம். ஆகையால் எனது துக்கத்தை ஸ்ரீ விட்டலநாதனுக்கு அறிவியுங்கள். தாய்ப் பசுவைப் பிரிந்த கன்றுபோல, பாண்டுரங்கனுடைய தரிசனம் கிடைக்காமையால் வாடுகின்றேன். நாளைக்கு அந்த பக்தவத்ஸலன் எனக்குச் சேவை தந்தருளும்படி, உங்களாலான முயற்சி செய்யுங்கள்'' என்று வேண்டினார். அதற்கு அவர்கள், "அப்படியே செய்கின் றோம்'' என்று கூறி, பண்டரிபுரத்துக்கு வந்து, சந்திரபாகையில் ஸ்நா னஞ்செய்து, கோயிற் கோபுரவாசலில் வணங்கி, சந்நிதியிற் பிரவேசித் தார்கள். அங்கே அந்தரங்க பக்தரான நாமதேவர், பகவானைப் புகழ்ந்து கூத்தாடிக்கொண்டு, ஆனந்தமிகுதியால் தம்மை மறந்து,

"கமல நயன கருணா கரசீ
தரணீதர சங்கசக் கரகர
கேசவ மாதவ கிருஷ்ணதா மோதர
வாசு தேவவா மனவிஷ் ணோநமோ
நாராய ணாச்யுத நார சிம்மா'' எனப்

பகவானைக் கூப்பிட்டு, "ஓ ஸ்வாமி! எனது இதயத்தில் நீ மறைந்தி ருந்து உன்னை நீயே புகழ்ந்துகொண்டு, அப்புகழ்களுக்கு ஆனந்த மடைந்து, எனது பிராண நிலயமாயிருக்கின்றனை'' என்று சொல்லிப் பக்தர்களோடு கூடிப் பரமானந்தபரவசராய் விளங்கினார். அப்போது ருக்மிணீ காந்தனான பகவான் காட்சிதந்து, நாமதேவரை எடுத்துத் தழுவிக்கொண்டு முகந்துடைத்து, அங்கிருந்த ஸாதுக்களை நோக்கி, "ஓ பக்தர்காள்! நிவர்த்திதேவன் எனது தாஸன். அவன் ஞான வைராக்யங்களில் நிலைத்த சாதனை உடையவனாய், தனது மனத்தகத்தில் என்னை ஏமாறாமல் தியானித்துக்கொண்டிருக்கின்றான். இந்த ஞான தேவன் அப்படிப்பட்ட அனுபவத்துக்கு அகன்ற கடல்போல் இருக் கின்றான். இந்த ஸோபானதேவன், ரோஹிதாஸன், கோராகும்பார், வீஸோபாகேசன், சோகாபரமானந்தன், சோகாமேளன், ஜகன் மித்ரநாதன், ஸாரங்கதேவன், சரகேசவதாஸன், நரஹரிதாஸன், பாநுதாஸன் இவர்கள், இங்கு எனக்குப் பிரிய பக்தர்களா யிருக்கின் றார்கள். பீஷ்மன், ருக்மாங்கதன், அக்ரூரன், உத்தவன், அர்ச்சுனன், பிரகலாதன், துருவன், நாரதன் முதலானவர்கள் வெகு காலமாய் எனக்குப் பிரியமானவர்கள். இவர்களெல்லாரும் எனது அந்தரங்கத் தைச் சரியாய் உணர்ந்தவர்கள். ஆனாலும், எல்லா விஷயங்களிலும் வெறுப்புற்றவனாகிய இந்நாமதேவன் நடக்கை, மிகவும் அற்புதமாயிருக் கின்றது'' என்று கூறினான். அப்போது யாத்திரை வந்தார் யாவரும், பக்தி மிகுந்தவர்களாய்த் தமது கரங்களில் கொடிகளைப் பிடித்துக் கொண்டு ஜயஜய கோஷங்கள்செய்து தாளங்கள்போட்டு பரமானந்தத் துடன் உள்ளே நுழைந்து, இடுப்பில் ஊன்றின கையோடு செங்கல்லின் மேல், நின்ற திருக்கோலங்கொண் டெழுந்தருளியிருக்கும் பகவானைத்

தரிசித்து, தமது பாதக மலங்கள் அற, அவன் பாத கமலங்களை நேத்திரங்களில் ஒற்றிக்கொண்டு தழுவி, மெய்மறந்து கூத்தாடிப் பலவிதங்களில் ஸ்தோத்திரம்செய்து,பிறகு ஸ்வாமியை நோக்கிக் கூர்ம தாஸநுடைய வேண்டுகோளை விண்ணப்பஞ்செய்து, அவர்க்குச் சேவை தந்தருளவேண்டும் எனப் பிரார்த்தித்தார்கள்.

அதுகேட்ட பகவான் மிகக் களிப்படைந்து, "இன்று எனக்கு நல்ல நாள், என் மனோரதம் இன்றைக்குப் பூர்ணமாகும்" என்று கூறி, ஞானதேவர்க்கும் நாமதேவர்க்கும் அந்தரங்கத்தை அறிவித்து, அவர்களையும் அழைத்துக்கொண்டு, கூர்மதாஸர்க்குத் தரிசனந்தரப் புறப்பட்டான். இவ்வாறு இம்மூவரும் புறப்பட்டுப் போய்க்கொண்டிருக்கையில், பெண்டியென்னும் கிராமத்தை நெருங்கினவுடனே, அங்கு, ஒரு நந்தவனம்வைத்துப் பரிபாலித்துக்கொண்டிருந்த ஸாமந்தன் என்னும் பக்தனைப்பார்க்கவேண்டும்என்கிற பேரவா,பகவானுக்குஉண்டானபடியால், அந்த நந்தவனத்துக் கெதிரில் வந்தபோது, ஞானதேவ நாமதேவர்களை நோக்கிப் பகவான்,"நான் இத்தோட்டத்துக்குள்ளே சென்று,கொஞ்ச நேரம் இருந்து வருகின்றேன்; நீவிர் இங்கே இருங்கள்" என்று கூறி, உள்ளே நுழைந்து ஸாமந்தனைக் கண்டான். அவன், அனவரதமும் பகவத்பக்தி செய்துகொண்டிருப்பவனாகையால், பகவானைப் பார்த்தளவிலேயே இரண்டு திருவடிகளையும் இறுகப்பிடித்துக்கொண்டு, ஆனந்த வாரிதியில் மூழ்கினவனாய், "ஸ்வாமீ! எனது பாக்கியமே பாக்கியம்,

'காலால் வருந்திக் கடுகி வழிநடந்து
மாலால் மெதுநட்பின் மாண்புதனை—மேலாகக்
காட்டினாய் நாபேற்குக் காதலமுதந்தன்னை
ஊட்டினாய் நெஞ்சம் உவந்து' என்றபடி,

கால் கடுக்க நடந்து வந்து, என்னிடத்தில் உனக்குள்ள நேசத்தை வெளிப்படுத்தினாய்" என்று கூறி, ஆனந்த பரவசனாய் தண்டாகாரமாய்க் கீழேவிழுந்து வணங்கி,"பக்தவத்ஸலா! எந்தப் பக்தன்பொருட்டு இத்தனை வருந்தி நடந்துபோகின்றனை?" என்று சொல்லிக்கொண்டே, பகவானைப் பூசிக்கத் தொடங்கினான். அப்போது பகவான், "ஓ, ஸாமந்தா! இந்தச் சமயத்தில் என்ன பூசை பண்ணுகிறாய்? அஃது இருக்கட்டும். என்னைப் பிடித்துக்கொள்ள இரண்டு திருடர்கள் துரத்திக்கொண்டு வருகின்றார்கள்; அவர்கள் கைக்ககப்படாமல் ஒளித்துக் கொள்வதற்காக உன்னிடத்தில் ஓடிவந்தேன் ஆகையால் கொஞ்சம் இடங்கொடு. கிரகண காலத்தில் சூரியனுக்குப் பிராமணர் முதலியோர் செய்யும் நமஸ்காரமாகிய அர்க்யம் உருசி யற்றிருப்பதுபோல, இச்சமயத்தில் நீ எனக்குச் செய்யும் பூசை ருசிக்கவில்லை" என்றான். அதுகேட்ட ஸாமந்தன், "ஓ வாஸுதேவா! நீ எங்கே ஒளித்துக் கொள்வை; நீ ஒளித்துக்கொள்ளும் ஓரிடம் எனக்கு அகப்படவில்லை. நீ யில்லாத இடம் எங்கும் கிடையாதாகையால், எங்குத் தேடினும் நீ ஒளித்துக்கொள்ளக்கூடிய இடம் இல்லவே இல்லை. அநேக



கோடி பிரமாண்டங்கள் உன்னிடத்தில் அடங்கி யிருக்கிறபடியால், உன்னை ஒளித்துவைக்க ஓரிடம் உண்டா?" என்று சொல்ல, பகவான் ஸாமந்தனை நோக்கி, "உனது அகண்ட ஞானத்தை இப்போது பிரஸங்கிக்கவேண்டாம். இன்னும் தாழ்க்காமல் என்னை எங்காவது ஒளித்துவை" என்றான். அப்போது ஸாமந்தன் "ஓ ஸ்வாமி! இத்தோட்டத்தில் அல்லது நான் வசிக்கும் இக்குடிசையில் உனக் கிஷ்டமான இடத்தில் ஒளித்துக்கொள்ளலாம்" என்று சொல்ல,மாதவனாகிய பகவான்,"இந்த இடங்களைக் காட்டிலும் அதிக மறைவான இடம் வேண்டும்" என்றான். அதுகேட்ட ஸாமந்தன் சந்தோஷித்து, "லக்ஷ்மீபதே! உனது திருவுள்ளம் அப்படியானால், உன்னை ஒளித்துவைப்பதற்கு, எனது இதயம் தவிர, வேறு தக்கஇடம் இல்லை. உன்னை எனது இதயத்தில் பத்ரமாய் வைத்துக்கொள்ளவேண்டும் என்று அநேக நாளாய் இச்சை கொண்டிருக்கின்றேன்" எனக் கூற, பகவான், "எனக்குத் தற்சமயம் அதுவே தகுந்த இடம். நான் உனது இதயத்தில் நுழைவதற்கு கொஞ்சம் வழிவிடு" என்றான். உடனே ஸாமந்தன் சந்தோஷித்து, "பகவான் எனது இதயத்தில் பிரவேசிப்பதற்கு, நான், என்ன மாதவம் செய்தேன்!"என்று சொல்லிக்கொண்டு,அங்கிருந்த மண்வெட்டியை எடுத்து, அதனால் தனது மார்பைப் பிளந்து, "ஸ்வாமி! இப்போது எனது இதயத்தினுள் விரைவில் நுழைந்து ஒளித்துக் கொள்" என்றான். ஸ்ரீஹரியும் அங்ஙனமே செய்தான். அப்போது ஸாமந்தன் அதனைப் பிறரறியாமலிருக்கும் வண்ணம், தனது மார்பை ஒரு வஸ்திரத்தால் மூடிவைத்தான். உள்ளே நுழைந்த பகவான், ஸந்தோஷத்துடன், "ஓ ஸாமந்தா! இப்போது நீ செய்த உபகாரத்துக்குப் பதில் உபகாரம் என்னசெய்வேன்! எனக்கொன்றுந் தோன்றவில்லை" என்றான். எங்கும் நிறைந்த பகவானாகிய பண்டரிநாதன், ஸாமந்தனுடைய இதயத்தில் ஒளித்துக்கொண்டிருந்த தன்மை, கிருஷ்ணாவதாரத்தில் ததிபாண்டனுடைய பாண்டத்தில் ஒளித்துக் கொண்டிருந்ததுபோல் இருந்தது. பிறகு பகவான், "ஓ ஸாமந்தா! எனக்கும் உனக்கும் ரூபபேதமே அன்றிக் குணபேதம் இல்லை" என்று கூறினான். அதற்கு ஸாமந்தன், "கணக்கிலாக் கலியாண குணக் கடலே! உன்னைவிட்டு ஒருபொழுதும் வாழமாட்டேன். நான் எத்தனை ஜன்மங்கள் எடுத்தாலும், தேவரீரை நீங்காமலிருக்கும்படி அருள்புரிய வேண்டும்" எனப் பிரார்த்தித்தான். இப்படி ஸாமந்தனும் பகவானும் ஆனந்த பரவசர்களாய், ஸரஸ ஸல்லாப வார்த்தைகளாடிக் கொண்டிருக்கையில், தோட்டத்துக்கு வெளியில் பகவான் வரவை எதிர்நோக்கி இருந்த நாமதேவர்,"என், பகவான் இன்னும் வரவில்லை!" என வருந்தினவராய்,துயரக் கண்ணீர்பெருக, உடல் நடுங்கி ஒன்றுந் தோன்றாமல், மருண்ட முகங்காட்டி, பகவான் அடிகளைப் பற்றிக்கொண்டு "ஓ பிராணநாதா! என்னைவிட்டு எங்கே போயினை! நீ என்னை இப்படிக் கைசோர விடுவை என்று அப்போதே தெரிந்திருந்தால், உன் பீதாம்பரத்தை எனது தோவத்திமுனையில், உறுதியாய் முடிந்து வைத்துக்

கொண்டு ஏமாறுமல் இருப்பேன்; உனது கவடறியாமல் மோசம் போனேன்" என்று கூறித் தோட்டத்துக்குள்ளே நுழைந்து, ஸாமந்தனை நோக்கி, "ஓ, பக்தர் முதல்வ! பெருந்தகாய்! ஜகந்நிவாஸன், இங்கு வந்தனனோ? அவனைக்காணுமல் எனது விழிகள் ஊறுகின்றன; மொழிகள் குளறுகின்றன; பிராணன் துடிக்கின்றது; அந்த மாயன் எங்கே ஒளித்துக் கொண்டிருக்கின்றான்? என்மேற் கருணைகூர்ந்து, அவனைக்காட்டுக" என வேண்டினர். ஸாமந்தன் மெய்மறந்து, பகவானோடு இரண்டறக் கலந்து, தானே அவனாய், அவனே தானாய், ஆனந்த பரவசனாய் இருந்தானாகையால், நாமதேவர்க்கு விடைகூறாமல் மௌனமா யிருந்தான். அவ்வநுபவத்தைக் கண்ட நாமதேவர், தமது பிராணநாதனாகிய ஸ்ரீ ருக்மிணீகாந்தன், ஸாமந்தன் இதயத்தில் ஒளித்திருக்கின்றான் எனத் தீர்மானித்து, ஸாமந்தனை நோக்கி, "நான் திக்கற்றவன்; எனது பிராணனுக்கு இருப்பிடமாகிய தேவனை, உனது இதயத்தில் ஒளித்துவைத்தனை ஆகையால், என்மேல் கிருபை கூர்ந்து, அவனை ஒருமுறை எனக்குக் காட்டு, நான் அவனுடைய திவ்யமங்களத் திருவுருவத்தைச் சேவித்து, எனது துக்கத்தை நிவர்த்தி செய்துகொள்வேன்" என்று கூறினர். அதனைப் பகவான்கேட்டு, "ஓ, ஸாமந்தா! எனது உயிர்த் தோழனுகிய நாமதேவனுக்கு, எனது தரிசனம் செய்விப்பாய்" என்று சொல்லி, நாமதேவரை அழைத்து, "இப்போது நான், ஸாமந்தன் இதய * முழையில் மூடப்பட்டிருக்கின்றேன்; வெளியே வருதல் அசாத்தியமாயிருக்கின்றது. பட்டுப்பூச்சி, தனது வாயால் கூடு கட்டிக்கொண்டு, அதனுள் அகப்பட்டு வெளியில் வரக்கூடாமல் இருப்பதுபோல, நான், ஸாமந்தன் மனமுழையில் அகப்பட்டுக்கொண்டு, வெளியில் வரக்கூடாமல் இருக்கின்றேன்" என்று கூறினன். அதற்கு நாமதேவர், தண்ணீரை விட்டு வெளியேறின மீனைப்போல் துள்ளித் துடித்து வீழ்ந்தார். அப்போது ஸாமந்தன், "ஓ, நாமதேவா! உன்மேல், பகவானுக்குக் கருணை நிரம்பி யிருக்கின்றது; உனது புண்ணிய விசேஷத்தால், கமலக் கண்ணன், உன்னைத் தனது உயிர்த்தோழன் என்று திருவாய் மலர்ந்தருளினன்; உனது பாக்யமே பாக்யம்! உனது பெருமை ஸ்ரீ பண்டரிநாதனே அறிவான்; எம்போலியர் அறிவதெப்படி? † விழியிலார்க்கு விளக்கருமை தெரியுமா?" என்று கூறி, நாமதேவருடைய பாதகமலங்களில் வீழ்ந்து, பேரானந்த பரவசனாய் இருந்தான். அதுகண்ட நாமதேவர், பகவானை நோக்கி, "என துயிர்க் குயிரான நற்குணக் கடலே! இப்போது உன்னை எனக்குக் காட்டி யருளவேண்டும்" என்றுரைத்து மிக வருந்தியிருக்க, அவ்வார்த்தைகளைக் கேட்ட ஸாமந்தன், பகவானுடைய குறிப்பறிந்து, தனது மார்பை மூடியிருந்த ஆடையை அவிழ்த்தான். உடனே, பக்தவத்ஸலனான பகவான் புறம்போந்து, நாமதேவருக்குக் காட்சியளிக்க, அவர் அவ்விட்டல நாதனுடைய திருவடிகளை இறுகப் பிடித்துக்கொண்டு, தேம்பித் தேம்பி அழுதார். பகவான், அது சகிக்காதவராய், அவரைத் தழுவியெடுத்து மார்போடணைத்து,

* முழை — குகை. † விழியிலாதார் — கண்ணில்லாதவர்.



அவருடைய விசனக் கண்ணீரைத் துடைத்து, நல்வார்த்தைகள் சொல்லித் தேற்றி, நகைத்து, அவர் கையைப்பற்றி அழைத்துக்கொண்டு வெளியே வந்து, அங்கே நடந்த அற்புதங்களை ஞானதேவர்க்குக் கூறி, "இனித் தாழ்க்காமல், கூர்மதாஸரைத் தரிசிப்பதற்குப் போவோம் வாருங்கள்" என்று, ஸாமந்தனையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டான். நால்வரும் போய்க்கொண்டிருக்கையில், அங்கே, கூர்மதாஸர்க்கு வலது கண்ணும் வலது புஜமும் துடித்தன. அதனால், அவர், "இன்று நமக்குப் பகவான் நன்மை செய்வான்" என எண்ணி எதிர்பார்த்திருந்தார். அந்நால்வரும், கூர்மதாஸர்க்கு எதிரில் வந்து நின்று, "ஓ ஐயா! இத்தனை வருந்தி எங்கே போகின்றீர்" என்று கேட்க, அவர், "ஏகாதசியாகும் இன்றைக்குப் பாண்டுரங்கனைத் தரிசிக்கவேண்டுமென்று செல்கின்றேன்; ஊழ்வினை வலியால், காலில்லா முடவனாய் இருக்கின்றேன். அதனால் சரியான காலத்தில் அங்குச் சேறல் எனக்கு அசாத்தியமாயிருக்கின்றது. ஏழைக்கிரங்கும் அப்பண்டரிநாதனே இங்கு எழுந்தருளி வந்து தரிசனந் தந்தானானால் பிழைத்திருப்பேன்; இல்லையேல், அதே ஏக்கமாய் உயிர்விடுவது திண்ணம்" என்று கூறினர்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்றுவிடற்கு" என்றபடி,

தன் பற்றே பெரும் பற்றாகப் பற்றின கூர்மதாஸருடைய பெரும்பற்றையும் வைராக்கியத்தையும் உணர்ந்த பகவான், மிகக்களித்து, அவர்க்குத் தனது சேவை சாதித்தருளினன். அப்போது கூர்மதாஸர், புதையலைக் கண்டெடுத்த ஏழையைப்போல, தழுது, மனவருத்தமாறி, பகவானைச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, அவரது பாதங்களைப் பிடித்துக்கொண்டு எழாமற் கிடந்தார். பகவான், அந்த பரமபக்தரைத் தனது திருக்கரத்தா லெடுத்து மார்போடணைத்துக்கொண்டு, ஸந்தோஷமடைந்து, "உனக்கென்ன வரம் வேண்டும்? கேள்" என்று சொல்ல, கூர்மதாஸர்,

'ஸ்ரீ தர வாசுதேவ நாரா
யண ஸ்ரீ ராமபத் மாக்ஷ பத்மநா
பாச்யுத கயிட பாரி* நாரி
கிருஷ்ணதாமோதர கேசவ மாதவ
பக்த சகாய பாஞ்சஜந் யதர
ஹரிமுராரி ஹரிஹரி ஹரிஹரி' எனத் துதித்து,

"பக்தவத்ஸலா! ஆதரவற்றவனும் உன்னைவிட்டு வேறுபடாதவனுமாகிய அடியேன்மேல் கிருபை கூர்ந்து தரிசனந் தந்தனை. பிரமாதியர்களுக்கும் கிடைக்காத இப்பெரும்பேறு எனக்குக் கிடைத்திருக்க, இதைவிட வேறு பெரிய வரம் நான் கேட்கவேண்டியது ஒன்றும் இல்லை.

* கயிட பாரி — கயிடபன் என்னும் இராக்கதனைக் கொன்றவன்.

'வரத ஜகந்நி வாஸஸ்ரீ வல்லப
தயாபர நாத சார்ங்க பாணி
பத்ம நாப பக்தப் ரியஜகந்
நாத மாதவ நாக சயன
ஜகன்மோ ஹனஸ்ரீ ஜானகீ ரமண
என்றுன் னாமம் இடைவிடா தேத்த
வரந்தரு-வாயேல் மற்றது லக்ஷம்
கோடி வரமாக் கொள்ளுவன் எந்தாய்
நின்றன் நாமம் நித்தலும் ஓதுதல்
அன்றிமற் றொன்றும் அறியேன் அதனால்
உன்பால் வேண்டும் ஒருவரம்
இல்லை மற்றொன்றும் இல்லையென் றனக்கே'

இக பரசுகந் தரவல்ல ஓ ஸ்வாமி! வரதன் ஜகந்நிவாஸன் முதலாகிய உனது நாமங்களை எந்நேரமும் இடைவிடாமல் பாராயணம் பண்ணும்படி அனுக்ரகிப்பாயானால், அதுவே எனக்கு, ஒருபதுகோடி வரப்ரஸாதங்களாகும். உனது திருநாமாமிர்தம் தவிர வேறோரனுபவ பதார்த்தத்தை நான் அறியேன். இப்பேர்ப்பட்ட நான், உன்னை இரக்கவேண்டிய வரம் ஒன்றும் இல்லை. ஆனாலும் ஒன்றுக்கும் பற்றாத என்னை, பக்தனென் றபிமானித்து, ஜீவன் முக்தர்களான ஞானதேவர், நாமதேவர், ஸாமந்தர் இம்மூவர் முன்னிலையில், எனக்கொரு வரம் கொடுக்க, நீ இச்சை வைத்திருக்கிறபடியால், வரம் வேண்டாம் என்றல் எனக்குத் தர்மம் அன்று. உனது திருவுளப்படி ஒருவரம் வேண்டுகின்றேன்:

'எக்கா ரியங்களைத்தா மேயியற்று வார்மாந்தர்
அக்காரி யங்களெலாம் அல்லனவாம்—மிக்காய்
பரமபத நாதவுன்றன் பண்பறிந் தன்னார்
சிரமமெவ் வாறொழிப்பார் செப்பு' என்றபடி,

எல்லார்க்கும் மேலோனே! பரமபதத்தில் எழுந்தருளிய எம்பிரானே! மனிதர், தாமே எந்தக் காரியங்களைச் செய்கின்றார்களோ, அவைகளெல்லாம் பாவங்களாகவே இருக்கின்றன. இப்படிப்பட்டவர்கள் உன்னை எப்படி உணர்ந்து உபாஸித்துத் தங்கள் பிறவித் துன்பத்தை ஒழிப்பார்கள்? கருணைக்கடலே! எனக்கு இரங்கிக் காட்டி அருளின இத்திருவுருவத்தை,

'எல்லாரு மின்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் ஜநார்த்தனனே' என்றபடி,

எல்லாருங் காணுமாறு, நீ இங்கே எழுந்தருளி யிருக்க வேண்டுகின்றேன். தமக்குத் தாமே காத்துக்கொள்ளும் வல்லமையற்ற குழந்தைகளுக்காகத் தாயார் மருந்துண்ணுகிறபடி, தமது சொரூபத்தையும், பகவத் சொரூபத்தையும் மறந்து, தமக்குப் பிராப்தமான பகவத் கைங்கரியத்தைக் கைவிட்டு, அதற்காக வருந்தாதவர்களாய் ஸம்ஸார ஸாகரத்தில் வீழ்ந்து கரைகாணாமல் தாபத்ரயத்தால் வருந்துகிற சிற்றுயிர்களுடைய துயரம் நீங்கும்படி நீ இங்கே எழுந்தருளி, உனது திவ்ய சேவையாலும், உனது திருநாமாமிர்தபானம் முதலியவைகளாலும் அவர்களைக் காத்தருள்க. இந்த விரதம் தவிர எனக்கு வேறொன்றும் வேண்டியதில்லை" என்று விண்ணப்பஞ் செய்தார். பகவான், அவர் வேண்டுகோளுக்கிரங்கி அதனை அங்கீகரித்து, அங்கே திருக்கோயில் கொண்டு எழுந்தருளி, தன்னை விரும்பி வந்தடைந்தவர்களைக் குடும்பக் காட்டில் அலையாமல் தடுத்து ஆட்கொள்ளும் தனது பெருங் கருணையையும் கூர்மதாஸருடைய பரமபக்தி வைபவத்தையும் இன்றைக்கும் விளக்குகின்றான்.



இந்த வகுளாபுரி, பண்டரிபுரத்துக்குச் சமானமாய், பக்தர்களால் கொண்டாடப்படுகின்றது. ஆடி, கார்த்திகை மாதங்களில், பண்டரிபுரத்துக்குப் புண்டரீக வரதனைத் தரிசனஞ் செய்ய வரும் ஸாது ஜனங்கள், உற்சவ முடிவில், வகுளாபுரம் சென்று, கூர்மதாஸ வரதனை பகவானைத் தரிசனம் செய்வார்கள். இந்த ஆசாரம் அன்ன பானாதிகளால் சந்திருப்தியடைந்த பின்பு, சந்தன புஷ்ப தாம்பூலங்களை ஸ்வீகரிப்பதுபோல் இருக்கின்றது.

பக்தாபீஷ்ட பலப்ரதாய நம:

## பதினேழாம் அத்தியாயம்

# ராக்கா சரித்திரம்

பண்டரிபுரத்தில் பரமவைராக்ய சீலரான குயவர் ஒருவர் இருந்தனர்; அவர் பெயர் ராக்கா. அவர் மனைவி பெயர் பாக்கா. இவ்விருவருக்கும் பங்கை யென்னும் ஒரு மகள் இருந்தனள். இவர்கள் மட்கலங்கள் * வனைந்து, வியாபாரஞ்செய்து காலங்கழித்து வந்தார்கள். இங்ஙனம் இருக்க, அவர்கள் ஒருகாலத்தில் மட்கலங்கள் செய்து சூளை போடாமல் வீட்டுக்குள்ளே சேர்த்து வைத்திருந்தபோது, அவைகளில் ஒன்றினுள்ளே, ஒரு பூனை, தன் குட்டிகளை வைத்து காப்பாற்றிக்கொண்டிருந்தது. ராக்கா அதை யறியாமல் மட்கலங்களை அடுக்கி சூளைபோட்டான். நெருப்பு எல்லா மட்கலங்களிலும் வியாபித்து எரிந்து கொண்டிருக்கையில், இரைதேடச் சென்ற தாய்ப் பூனை திரும்பி வந்து, தன் குட்டிகளைக் காணாமையால், சூளைக்குச் சமீபத்தில் வந்து கத்திக்கொண்டிருந்தது. அப்போது ராக்கா, அந்தப் பூனை கத்துவதைப் பார்த்து, சிறிது யோசித்து, "இதன் குட்டிகள் சூளையில் அகப்பட்டுக் கொண்டிருக்கலாம். ஆகையால் இந்தப் பூனை, இதனைச் சுற்றிச் சுற்றிக் கூவுகின்றது" எனத் தீர்மானித்துத் தன் தலையி லறைந்து

* வனைந்து - செய்து.

கொண்டு, மனைவியை நோக்கி, "நமக்குப் பெரும்பாதகம் நேரிட்டது; பூனை, தனது குட்டிகளைப் பானையில் வைத்திருக்கிறதென்று நாம் அறியாமல், அந்தப் பானையையும், மற்றப் பானைகளோடு அடுக்கி நெருப்பு வைத்துவிட்டோம். இப்போது இந்தப் பூனை, சூளையைச் சுற்றிச் சுற்றிக் கத்துகின்றது. இத்துக்கத்தைக் காண மனம் சகிக்கவில்லை!" என்று அழுதார். அதற்கு அப்பெண்மணி, தானும் அழத் தொடங்கினாள். இங்ஙனம் கணவன் மனைவியர் இருவரும், அன்னந்தண்ணீர் இன்றி அழுதுகொண்டிருந்தார்கள். அப்போது ராக்கா, ஆபத்பாந்தவனான பண்டரிநாதனை நினைந்து, "ஸ்வாமீ! அரக்குமாளிகையில் அகப்பட்ட பாண்டவர்களைக் காத்ததுபோலவும், இரண்யகசிபனால் நெருப்பில் எறியப்பட்ட பிரகலாதனை ரக்ஷித்ததுபோலவும், இந்த பூனைக்குட்டிகளையும் பரமகிருபையால் காப்பாற்றவேண்டு" மென்று பிரார்த்தித்து, மறுபடியும் பகவானை உத்தேசித்து, "இந்தப்பூனைக்குட்டிகளுக்குத் துன்பம் வருவித்த இந்த வியாபாரத்தை இனிமேல் நான் செய்கிறதில்லை. அறியாமல் நேரிட்ட இவ்விபத்தைத் தொலைத்துக் காக்கவேண்டு" மென்று, பகவானை பிரார்த்தித்துக்கொண்டே மெய்மறந்து, மண்மேல் விழுந்து புரண்டு அழுதுகொண்டிருந்தார். அவர் மனைவியும் தனது வயிற்றில் அறைந்துகொண்டு, "ஓ பக்தவத்ஸலா! ஆபத்பாந்தவா! சீக்கிரம் வந்து எங்களைக் காப்பாய்: ஐயனே!" எனப் பகவானை வேண்டி அழுதுகொண்டிருந்தாள். இங்ஙனம் இருக்க, அந்த சூளையானது இரண்டு இராப்பகல்கள் விடாமல் எரிந்து, மூன்றாம் நாள் தணிந்தது. உடனே, பானையிலிருந்த பூனைக்குட்டிகள், தாய்ப்பூனையின் குரலைக்கேட்டுக் கூவ ஆரம்பித்தன. அவ்வோசையை, ராக்கா கேட்டுப் பரமானந்தமடைந்து, சூளையைப் பிரித்துப் பார்த்தபோது, அப்பூனைக்குட்டிகள் இருந்த பானைமட்டும் வேகாமல், பச்சையாகவே இருந்தது. அப்போது அவர், அப்பானையையெடுத்து, அதிலிருந்த மூன்று பூனைக்குட்டிகளையும் அவைகளின் தாயண்டை விடுத்து, ஸ்ரீமத் பண்டரிநாதன் கிருபைக்குச் சந்தோஷமடைந்தார். மூன்று இராப்பகல்கள் அன்னாகாரம் இன்றி இருந்த கணவன் மனைவியர்க்கு, அந்தப் பூனைக் குட்டிகளைக் கண்ட மாத்திரையில், கொஞ்சங்கூட வாட்டமின்றி முகத்தில் தெளிவுண்டாகியது. கொல்லாவிரதம் பூண்ட அவ்விருவரில், ராக்கா

అద్యమేసఫలంజన్మ | సుప్రభాతాచమేనిశా ॥

'மொழித்தத்தை கொஞ்சுமலை யலங் காரன்முன் னாற்றுவரை
அழித்தத்தை மைந்தர்க் கரசளித் தோனடி நாட்டொடர்ந்தென்
னழித்தத்தைச் செய்தன்றிப் போகா வினையை யொருநொடியிற்
கழித்தத்தை யென்சொல்லு கேன்றனக் காட்பட்ட காலத்திலே' என்ற

படி இப்போதுதான் என்ஜன்மம்ஈடேறிற்று. எனது அஞ்ஞானமானது சூரியனைக்கண்ட இருள்போலப் பறந்தோடிற்று எனக்கூறி, மனைவியைப்பார்த்து, "எனது தீர்மானப்படி, எல்லாவற்றையும் துறந்து,



ஒப்புயர்வில்லா உறவினனாகிய புண்டரீக வரதனுடைய திருவடித் தாமரைகளுக்கு, எனது உடல் பொருள் ஆவி மூன்றனையும் ஒப்பித்து விடுவேன் என்று சொல்லி, ஊரிலுள்ள ஏழைகளை யழைத்து தனது பொருள்கள் எல்லாவற்றையும் அவர்கள் சூறை கொள்ளக் கொடுத்து, மனைவி, மகள் இருவரும் பின்தொடர, வீடுவிட்டுக் காடுசேர்ந்தார்.

"உறிகள் போல்மெய்ந் நரம்பெ ழுந்து ஊன்தளர்ந் துள்ள மெள்கி
நெறியை நோக்கிக் கண்சு ழன்று நின்று நடுங்காமுன்
அறிதி யாகில் நெஞ்ச மன்பா யாயிர நாமஞ்சொல்லி
வெறிகொள் வண்டு பண்கள் பாடும் வதரி வணங்குதுமே" என்றபடியும்
"பீளை சோரக் கண்ணி டுங்கிப் பித்தெழ மூத்திருமி
தாள்கள் நோவத் தம்மில் முட்டித் தள்ளி நடவாமுன்
காளை யாகிக் கன்று மேய்த்துக் குன்றெடுத் தன்றுநின்றான்
வாளை பாயும் தண்ட டஞ்சூழ் வதரி வணங்குதுமே" என்றபடியும்,

வயது முதிர்ந்து புலால் வீடாகிய சரீரத்தைப் போஷித்து, அதற்கும் தமக்குமுள்ள சம்பந்தா சம்பந்தம் உணராமல், மெய்வீடாகிய முக்தி நிலையை யிழந்து, பொய்வீடு "போ, போ" என்று பிடர் பிடித்துந்த, தமதுபுலால் வீடாகிய சரீரத்தை உண்பதற்கு "வா, வா" என்று நல்ல வனமாகிய சுடுகாடு அழைக்கக் கண்டமுறையில் ஒன்றுந் தோன்றாமல் விழிக்கும் இந்த பிரபஞ்சப் பேயரேபோல, ராக்கா, ஏமாந்து விடாமல், சர்வ ஜாக்ரதையாய் இருவினை யொப்பு மல பரிபாகமுடையவராய்த் தமது உடல் பொருள் ஆவிகளில் விச்ராந்தி யடைந்து, விரக்தி மிகுந்து, அந்த காட்டகத்தில் வீழ்ந்து கிடக்கும் விறகுச் சுள்ளிகளைத் தனித்தனியே பொறுக்கி அடுக்கிக் கட்டி விற்றுச் சீவித்து வந்தார். விறகுச் சுள்ளிகள் இரண்டு ஒன்றுசேர்ந்திருந்தாலும் அவைகளைத்தொடாமல், அவைகள் யாரோ எடுத்துக்கொண்டு போவதற்கு வைக்கப்பட்டன என்றெண்ணி, தனித்தனியாய்க் கிடப்பனவற்றையே, அவர் பொறுக்கி எடுத்தடுக்கி வந்தார்.

"உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறர் பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல்" என்றபடி,

பிறர் பொருளிற் பற்றற்று வாழ்ந்தார் ராக்கா. ராக்காவுக்குப் பாலர், உன்மத்தர், குணங்கள் பொருந்தி யிருந்தன. இன்னும் அவர், வீதியில் வீழ்ந்துகிடந்த கந்தைகளை இணைத்துத் தைத்துக் கட்டிக் கொள்வார்.

ஒருநாள் ஒரு கடைக்குப் பக்கத்தில், தெருவில் விழுந்து கிடந்த கந்தையை, ராக்கா எடுத்துக்கொண்டார். அதுகண்ட ஒருவன், ராக்காவைப் பார்த்து, "இக்கந்தை தீவர்த்திக்குப் பயன்படும்; விரக்தரான உமக்குக் கந்தையில் சிந்தையேன்? இது உமக்குத் தகாது" என்றான். அம்மொழியை இன்மொழியெனக் கண்டு மனங்கொண்டு, ராக்கா, அதனை இருந்த இடத்தில் மறுபடியும் இருத்தி, 'ஓ ரெச்சிலையால் தமது அபிமானமாய * அற்றத்தை மூடிக்கொண்டார். விரக்தர் பலர் இருப்

* அற்றம் இரகசிய ஸ்தானம்

பினும், இந்த ராக்காவுக்குச் சமானமானபேர் இலர். ஒருநாள் அவர் மகளான பங்கை, ஸ்நானஞ்செய்து பகவதாராதனை செய்துகொண்டிருக்கையில், நாமதேவர் மகள், வஸ்திரம் தோய்த்துக்கொண்டிருந்தனள். ஆகையால் அவ்வாடைநீர்த் துளி, பங்கைமேல் தெறித்து ஆராதன பங்கமாயிற்று. அதற்குப் பங்கை கோபிக்காமல் சாந்தமாய், "உனது புடைவை நீர்த்துளி என்மேல் தெறிக்கின்றது" என்று சொன்னாள். அதற்கு நாமதேவர் மகள், "ஆம், எடி! போடி; குலத்தில் சூத்திரயாயிருந்தாலும் ஆசாரத்தில் மிஞ்சிப்போய் இருக்கிறையே! உங்கள் குலத் தொழிலை விட்டு, மனம்போனபடியே கண்ட இடங்களில் எல்லாந் திரிகின்றீர்கள் அல்லவா? உனது தந்தை முற்றத் துறந்த முக்தனாக வெளிக்குப் பாவனைகாட்டி, உள்ளுக்குள்ளே குடும்ப வலையிற் பட்டவனாய், மனமாசு அகற்ற வகையறியாமல், உலகை மயக்கி வஞ்சனை செய்து, ஜனவாசமற்ற வனவாசமுற்று, வீண்புரளி செய்து வாழ்கின்றான். அதனால் ஸ்ரீ பண்டரிநாதன் அவன்மேல் வெறுப்புற்றிருக்கின்றனன். நீவிர், வாஸ்தவத்தில் விரக்தர் அல்லீர்; இல்லறத்தாரும் அல்லீர்; இயற்கைத் துறவிகளும் அல்லீர். உமது கள்ள வுள்ளத்தைக் கர்த்தன் அறிவான்; அவனுக்கு என்னவிடை கூறுவீர்கள்? உங்களுக்கு வாயும் உண்டோ!" என்று கூறக்கேட்ட பங்கை, நாமதேவர் மகளைப் பார்த்து, "உண்மையே கூறினை! உனது தந்தையின் தன்மை இன்னதென வுனக்குத் தெரியாதோ! அவன் அழுதழுது பக்தி ஸம்பாதித்த கதையை, யார் தாம் அறியார்? ஊராரனைவரும் உணர்வாரே! அழுகிற ஆண்பிள்ளையை நம்பலாமா? *அர்ச்சாவதார மூர்த்தமாய் அமர்ந்துள்ள பாண்டுரங்கனை வற்புறுத்தி, அதனால் அவன் பேசும்படியும், தன்னோடு உண்ணும்படியும் உனது தந்தை அவனை வருத்துகின்றான். எனது தந்தை இப்படி யொன்றும் செய்யாமல், பூனைக்குட்டிகளின் பொருட்டுக் குடும்ப இச்சையை விட்டுக் காட்டகத்தில் சுள்ளிகளைப் பொறுக்கி விற்று, அதனால் வயிறு வளர்த்து, ஒருவர்க்கும் துன்பந்தராமல் ஆசையற்றவராய் வாழ்கின்றார்" என்றாள். அதுகேட்ட அச்சிறுமி விசனப்பட்டுக்கொண்டே, வீட்டுக்கு வந்து, தனது பிதாவான நாமதேவரிடத்தில், நடந்த விருத்தாந்தத்தை தெரிவித்தாள். அதற்கு, அவர் அதிக ஆச்சரிய மடைந்து, பாண்டுரங்கன் சந்நிதிக்குச் சென்று, "ஸ்வாமீ! ராக்கா என்னும் ரூபவன், ஆசையுற்றவனோ, ஆசையற்றவனோ?" என்று கேட்க, பகவான் புன்னகை செய்து, "ஓ நாமதேவா! ராக்காவைப்போன்ற பற்றற்றவன் பதினான் குலகிலும் இலன்" என்று கூறினான். நாமதேவர் அதுகேட்டு, "அவரது அவாவின்மையை எனக்குச் சோதனை காட்டவேண்டும்" என்று கூறினார். அதற்காக, விட்டல நாதன், ருக்மிணீ ஸமேதனாய், நாமதேவரையும் உடனழைத்துக்கொண்டு, வனத்துக்குச் சென்று, ராக்கா, தன் மனைவியோடும், மகளோடும் காட்டில் சுள்ளிகள் பொறுக்குதலையும், பூமிமேல் நடக்கையில் எறும்பு முதலிய சிறு பிராணி

* அர்ச்சாவதாரம் - விக்ரகரூபம்



களுக்கும் துன்பமில்லாமல், பூமியைப் பார்த்தபடியே மெல்ல நடத்தலையும், இடைவிடாமல் பகவந்நாம தியானம் செய்துகொண்டு, பாலரோடுன்மத்தர் குணம் பொருந்தியிருத்தலையும் ருக்மிணி, நாமதேவர்களுக்குக் காட்டி, "ஓ நாமதேவா! ராக்காவின் *நிஷ்காம்ய பற்றற்ற பஜனத்தைப் பார்" என்று சொல்லிக்கொண்டிருக்கையில், ருக்மிணிதேவி, பகவான் நினைவறிந்து, அதன்படியே, தனது கையிலணிந்த விலையுயர்ந்த மாணிக்க கங்கணத்தை, ராக்கா சுள்ளிகள் பொறுக்கிக் கொண்டிருந்த இடத்தில் இருத்தி, அதனை ஒரு சுள்ளியால் மறைத்து வைத்தாள். பிறகு, பகவான் முதலிய மூவரும் ஒரு புதரில் ஒளித்துக்கொண்டு, ராக்காவை எதிர்நோக்கி யிருந்தார்கள். அப்போது ராக்கா, தமது மனைவி, மகளோடு சுள்ளிகளைப் பொறுக்கிக்கொண்டே வந்து, மாணிக்க கங்கணத்தை மறைத்திருந்த சுள்ளியை எடுத்து, அதன் கீழிருந்த அக்கங்கணத்தைக் கண்டார். அவர், அதனைத் தொடப் பயந்தவராகி, தமது மனைவிக்குக் காட்டி, "இக்காட்டகத்தில் நான், பற்றற்றவனாய் வாழ்கின்றேன்; இதற்கு விரோதமாக இந்த கங்கணம் அகப்பட்டது.

'பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானா மாணாப் பிறப்பு' என்பதனை

உணர்ந்தே, நான் பயந்து நாடு விட்டுக் காடு சேர்ந்தேன். இம்மாணிக்க கங்கணம் நமது விறகுச் சுள்ளிக்குக் கொஞ்சமேனும் சமானமானதல்ல. இவ்விரண்டினும் உட்பொருள் ஒன்றே; இவைகளைப் படைத்தானும் ஒருவனே. ஆனாலும், விறகுச் சுள்ளிக்கு ஆட்கொல்லி யென்ற பெயர் அமையாது. மாணிக்க கங்கணமும் மற்றைய பொன்னும் பொருளும் நகையும் நாணயமும் ஆட்கொல்லி என்பதற்கு ஐயமென்ன?

'நண்பரிருவருக்கு நல்ல புதைய லொன்று
பண்புடனே தெய்வபலத் தாற்பலிக்க—புண்பட்
டிருவரு மாண்டார் இருநிதியை வேண்டி
ஒருவர் ஒருவரையே கொன்று' என்றபடி,

இரண்டு நண்பர், ஒரு புதையலுக்காக, ஒருவர் ஒருவரைக் கொன்று இருவரும் மாண்ட கதை உண்மைதானே? இங்ஙனம் அருளாளனாக்காமல் ஒருவனை மயக்கித் தன் வசப்படுத்தி ஆட்டுவிக்கும் பணப்பேயை அஞ்சியன்றோ, பெரியார் அதனை ஆட்கொல்லி யென்றும், வெறுக்கை யென்றும் காரண இடுகுறிகளான் அழைத்து, அதன் வாசமே துர்வாசமாய், அதனைக் காணவும் தொடவும் சகியாமல், காட்டகத்துக்கு ஓடி ஒளித்து வாழ்கின்றார்கள். அங்ஙனமே நானும், அதனை அறமறந்து, அதற்கடையாளமாகப் பொய் வீட்டைத் துறந்து, மெய் வீட்டை இச்சித்து இங்கே நாய்போல் திரிந்து நரிபோல் அலைகின்றேன். இது பகவானுக்கே வெட்ட வெளிச்சம் பட்டப்பகல்போல் விளக்கமுறும். தாயறியாத சூல் இல்லை என்றபடி அவனறியாத நான் இல்லை.

* நிஷ்காம்யம் - ஒன்றையும் விரும்பாமை.

'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்' என்றபடி,

எனது ஊழ்வினை வலியால் இக்கங்கணம் இங்கெனக்கு அகப்பட்டு என்னை அஞ்சுவித்தது.

'ஐங்காதம் போனாலும் தன்பாவம் தன்னோடே' என்றபடி, என்னை ஊழ்வினை விடாது வாட்டுகின்றது. நான் இந்தக் காட்டிலுள்ள புலி, கரடி, சிங்கங்களுக்கும் பயந்தவனல்லன்; அப்பேர்ப்பட்ட என்னை இப்பணப்பேய் பயங்காட்டி மருளவைத்தது; இனி நாம் அரைக்கணமும் இங்கிருக்க வொண்ணாது" என்று கூறிக்கொண்டே, தமது கையிலிருந்த சுள்ளிகளையும் நிலமேல் எறிந்துவிட்டு, மனைவியையும் மகளையும் அழைத்துக்கொண்டு, அக் காட்டை விட்டு ஓடிப்போனார். அப்போது நாமதேவர் மிகவும் அதிசயித்து, "இப்படிப்பட்ட வைராக்ய நிஷ்டை எனக்குக் கிடையாது; எனது சந்தேகம் தீர்ந்தது. இப்பேர்ப்பட்ட பக்தனுக்கு உனது சேவை அருளவேண்டும்" என, பகவான், சந்தோஷித்து, ஓடிப்போய்க் கொண்டிருக்கிற ராக்காவுக்குத் தனது உண்மை உருவக்காட்சி அளித்தனன். அப்போது, ராக்கா, பரமானந்த பரவசராய் சாஷ்டாங்க வந்தனம்செய்து, மனைவியுடனும் மகளுடனும் நின்று கொண்டிருந்தார். பிறகு, பகவான், ராக்காவைப் பரமகிருபையோடு கடாக்ஷித்துத் தழுவிக்கொண்டு, "நாமதேவன் சந்தேக நிவர்த்திக்காக நான் உன்னைச் சோதித்தேன்; உனது மனக்கலக்கந் தீர்ந்து, எப்போதும்போல நிஷ்காம்ய பஜனஞ் செய்துகொண்டு, எனக்கானந்தம் விளைவித்து வாழக்கடவாய். நான், எப்போதும் உனது இதயத்தில் அமர்ந்து, உனக்குச் சேவை அளிப்பேன்". என்று கூறி மறைந்தான்.

ஆபத்பாந்தவாயநமஃ

## பதினெட்டாம் அத்தியாயம்

# கோராகும்பார் சரித்திரம்

தொரடோக்கி என்னும் கிராமத்தில், கோராகும்பார் என்னும் பெயருடைய ஒரு குயவர் இருந்தார். அவர் பகவத்விஷயத்தில் பரமபக்தியுடையவர். அவர், மனையாளோடு கூடி வீட்டில் வாழ்ந்து,

"பொய்யெல்லா மொன்றாப் பொருந்திவைத்த பொய்யுடலை
மெய்யென்றான் மெய்யாய் விடுமோ ஜனார்த்தனனே" என்றபடி,

தமது மெய்யைப் பொய்யென்றுணர்ந்து,

నైవకించిత్కరోమీతి । యుక్తోమన్యేతతత్త్వవిత్ ।
పశ్యఞ్శృణ్వన్స్పృశఞ్జిఘ్రన్నశ్నన్గచ్ఛన్స్వపఞ్శ్వసన్ ।
ప్రలపన్విసృజన్గృహ్ణన్నున్మిషన్నిమిషన్నపి ।
ఇంద్రియాణీంద్రియార్థేషు । వర్తంతఇతిధారయన్ ॥



"காண்பது போலவும் மாண்பொரு ளென்று
கேட்பது போலவும் கிளப்பது போலவும்
மோப்பது போலவும் காப்பது போலவும்
நடப்பது போலவும் கிடப்பது போலவும்
உண்பது போலவும் உறங்குதல் போலவும்
மலஜல மோசனம் மருவுதல் போலவும்
விஷயா திகளை விரும்புதல் போலவும்
தொடுதல் போலவும் விடுதல் போலவும்
கண்களைத் திறத்தல் கண்களை மூடுதல்
மூச்சு விடுதல் மூச்சுள் வாங்குதல்
முதலிய வற்றில் முயங்குதல் போலவும்
இந்திரியங்கள் இயங்குவ வன்றிச்
சிந்தை யவற்றிற் செலுத்தார் பெரியோர்
படிப்புங் கேள்வியும் பற்றும்
அற்றுவாழ் வார்களிவ் வகிலத் திடையே" என்றபடி,

பொருள்களைக் கண்டும், சத்தங்களைக் கேட்டும், வார்த்தைகளைப் பேசியும், வாசனைகளை மோர்ந்தும், பணத்தைக் காத்தும், இடம்விட்டு இடம் பெயர்ந்தும், படுக்கையிற் கிடந்தும், அன்னபானாதிகளை உண்டும், அயர்ந்து உறங்கியும், மலஜலம் விடுத்தும், காரியா காரியங்களை விரும்பியும், ஒன்றைத் தொட்டு எடுத்தும், மீட்டும் அதனை விடுத்தும், கண்களைத் திறந்தும், அவைகளை மூடியும், மூச்சு வெளியே விட்டும், அதனை உள்ளே வாங்கியும் இங்ஙனம் தமது இந்திரியங்கள் தாமே இந்திரிய விஷயங்களிற் பொருந்தி இருப்பனவாம் அன்றித் தமக்கு எதனிடத்தும் விருப்பு வெறுப்பின்றி, அனவரதமும் பகவத் தியானஞ்செய்து கொண்டு,

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்" என்றபடி,

பகவான் இணையடிகளை மறவாமல், பகவத்கீதையில் சொல்லி யுள்ள ராஜஸம், தாமஸம், ஸாத்விகம் ஆகிய முக்குணங்களையுங் கடந்த இலக்கணமுடையோராய் விளங்கினார்.

ஒருநாள் அவர் மனைவி, தன் குழந்தையை வீட்டில் விட்டு, தண்ணீர் கொண்டுவரப் போனாள். அப்போது, களிமண் மிதித்துக்கொண்டிருந்த கோராகும்பார், சித்தத்தைப் பகவான்மேற்செலுத்தி, உலகந் தோன்றாதவராய் இருந்தபடியால், தம்மிடத்திற்குத் தள்ளாடி நடந்துவந்து களிமண்ணில் விழுந்த குழந்தையையுங்கூடச் சேர்த்து மண்ணோடு மண்ணாய் மிதித்துப் பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டு பகவான் இணையடிகளை மறவாத இன்பக்கடலில் மூழ்கித் தமது தொழிலை இடையறாது ஊக்கமாய் நடத்தினார். தண்ணீர் கொண்டுவரப்போன மனைவி, திரும்பிவந்து, பால் கொடுப்பதற்காக, வீட்டில் குழந்தையைத்

தேடிக் காணாமையால், கணவரிடத்துக்கு வந்து, அக்குழந்தை மண்ணோடு மிதிக்கப்பட்டு, அதனுடைய இரத்தம் மாமிசம் முதலியவை, அதனோடு கலந்திருப்பதைப்பார்த்து, மார்பில் அடித்துக்கொண் டழுது, கணவரைப் பார்த்து,"இஃதென்ன விபரீதம் செய்தீர்கள்! நானும் இப்போதே எனது பிராணனை விட்டு விடுகிறேன்" என்று பிரலாபித்தாள். அதுகேட்டவுடனே, அவர்க்கு நினைவு திரும்பி, மனைவியை நோக்கி, "ஏடி, ராக்ஷஸி! கொஞ்சமேனும் விசாரியாமல், எனது தியானத்தைக் கெடுத்து எனது இதயத்தில் இடைவிடாது எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ருக்மிணீகாந்தனை அகற்றினை" எனக்கூறி, பரமஸாதுவாகிய அவர்,

"எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்" என்றபடி,

கோபவசப்பட்டவராய்ச் சக்கரஞ் சுழற்றுந் தண்டத்தால், அந்த அம்மையை அடிக்கப்போனார். அப்போது அம்மடந்தை பயந்து, "என்னைத் தாங்கள் தொடவேண்டாம்; உங்களுக்குப் பாண்டுரங்கன்மேல் ஆணை இருக்கின்றது" என்றுகூறினாள். அம்மொழியைக் கேட்டவுடனே, அம்மஹான், தண்டத்தைக் கீழே எறிந்துவிட்டு, ஒரு மூலையில் உட்கார்ந்து பகவானை தியானித்துக்கொண்டிருந்தார். அப்போது அவ்வூரார் அனைவரும் திரண்டுவந்தார்கள். அவர்களிற் சிலர், இவரை உன்மத்தரென மதித்தார்கள். வேறு சிலர், "இம்மஹானுபாவர், குணசாந்தர்; பிள்ளைப்பூச்சி, சேற்றில் வசித்தும் அதனைப் பூசிக்கொள்ளாதிருப்பதுபோல, இவர், குடும்பச்சேற்றில் பொருந்தியிருந்தும் அவைகளில் உழைத்துக் கொள்ளாமல் பிழைத்துக்கொள்ளும் வகையறிந்து வாழ்கின்றார்; இப்பிரபஞ்ச வாழ்க்கைக்கு அதீதப்பட்டவர்; பரதன் முதலிய பரமயோகியர்போல ஞானயோக நிஷ்டை கைகூடினவராய், ஜடத்தன்மை பெற்றிருக்கின்றார். ஒப்புயர்வில்லா உறவினனும், பக்தவத்ஸலனும், எல்லாம் செய்யவல்லவனுமாகிய ஸ்ரீ பாண்டுரங்கநாதன், இக்குழவியைப் பிழைப்பித்து, மூடர்களால், இவ்வுத்தம ஞானிக்கு நேரிட்ட நிந்தையை நீக்கி, இவருடைய பிரபாவத்தை எல்லாரும் உணரச்செய்வான். நாம் ஏன் பதறவேண்டும்; பதறாத காரியம் சிதறாதென்கிறார்களே!" என்று கூறினார்கள்.

"சுடச் சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு" என்றபடி,

துன்பங்கள் பல அடுக்கி வரினும் அவைகளை இன்பங்கள் எனக்கொண்டு, தமது முயற்சியிற் பின்வாங்காத இம்மஹான், பொன்னேபோற் பிரகாசித்தார். பலபேர் பலவிதமாகக்கூறித் தத்தம் வீடு போய்ச் சேர்ந்தார்கள்.

கோராகும்பாரும் அவருடைய மனையாளும் இருபத்துநான்கு நாட்கள் ஒருவரோடொருவர் பேசாமல் காலங்கழித்தார்கள். பிறகு,



அந்தம்மாள், "நான் இப்படியிருந்துவிட்டால், குடும்ப நிர்வாகம் கஷ்டமாய்முடியும்" எனத் தீர்மானித்து, செம்பிற் றண்ணீர் கொண்டுவந்து, கணவர் காலை அலம்ப வந்தாள். அப்போது அவர், தமது மனைவியைநோக்கி, "நான் உன்னைத் தீண்டக்கூடாதென்று பண்டரீநாதன்மேல் ஆணையிட்டனை; ஆதலால் நீ என்னைத் தீண்டாதே" என்றார். அம்மொழியைக்கேட்ட அம்மங்கை துன்பக்கடலில் வீழ்ந்தவளாய், பிறந்தகஞ்சென்று, தனது தாய்தந்தையரிடத்தில், நடந்த விருத்தாந்தங்களை அறிவித்து, "சந்ததி விருத்திக்காக, எனது தங்கையை எனது கணவருக்குக் கொடுத்து மணமுடிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தாள். அதற்கு அவர்கள் சம்மதித்து, ஸமஸ்த பதார்த்தங்களையும் சேகரித்து, உற்றார் உறவினர் பிராமணர்கள் முதலியோரை வரவழைத்துத் தமது இளைய மகளைக் கோராகும்பாருக்குப் பாணிக்கிரகணஞ் செய்து, மருமகனாகிய அவரை நோக்கி, எல்லாரும் அறியும்படி, "எமது மக்கள் இருவர் விஷயங்களிலும், நீ, ஸமபாவனையோடு வாழவேண்டும்; அங்ஙனஞ் செய்யாய் ஆனால், பாண்டுரங்கன்மேல் ஆணையிருக்கின்றது" என்று கூறினார்கள். அதுகேட்ட கோராகும்பார், மிகக்களித்து, "பகவான் கிருபையிருந்தால், பந்தங்கள், தமக்குத் தாமே அற்றுப்போகும் என்பதற்கு ஐயமில்லை" எனத் தீர்மானித்து, மாமன் மாமி இருவரையும் நோக்கி, "உங்கள் நியமனப்படி நடந்துகொள்வேன்" என்று கூறி, அன்ன வஸ்திராதிகளை இருவருக்கும் சமமாகத் தந்து காப்பாற்றி, அவர்கள் சரீரங்களைத் தொடாமல் ஜாக்கிரதையாய் வாழ்ந்தார். இங்ஙனம் இருக்க, மூத்தாள், கணவரை நோக்கி, "நான் தான், உமது மனம்போல் நடக்க அறியாத மஹா பாவி ஆனேன். எனது தங்கை உமக்கென்ன குற்றஞ் செய்தாள். அவளைத் தொடாதிருக்குங் காரணமென்னை? எனக் கேட்டாள். அதற்குக் கோராகும்பார், "கலியாண முடிவில், உனது தாய் தந்தையர், தமது புத்ரிகளாகிய உங்கள் இருவரையும், நான், சமபாவனையாய் நடத்தவேண்டும் என்று, பாண்டுரங்கன்மீது ஆணையிட்டிருப்பதை நீ அறியாயா? இப்போது நான், அவ்வாணைக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியவனாயிருக்கின்றேன்; உன்னை நான் தொடுவதற்கு நீ யிட்ட ஆணை எப்படித் தடையாயிருக்கிறதோ, அப்படியே உனது தங்கையை நான் தொடுவதற்கும் உனது பெற்றோர் இட்ட ஆணை தடையாயிருக்கின்றது. அவர்கள் இட்ட ஆணையின்படி நான் உங்கள் இருவரையும் ஒரு வண்ணமாக நடத்தவேண்டும் அல்லவா? உன்னைத் தொடாது காலங்கழிப்பதுபோல உனது தங்கையையும் தொடாமற் காலங் கழிக்கின்றேன். இதனால் நான் குற்றவாளி ஆகமாட்டேன்" என்றார்.

அதுகேட்ட தமக்கை தங்கையர் இருவரும், விசனமுற்று மௌனமாயிருந்து, அன்றிரவில் தமது கணவர் அயர்ந்து தூங்குகையில், அவர்க்கு இருமருங்கினும் படுத்து அவரது கரங்களைத் தமது மார்புகளின்மேல் வைத்துக்கொண்டிருந்தார்கள். அவர் பகவத் தியானபரராய்,

அரைத்தூக்கம் தூங்குபவர் ஆகையால், உடனே விழித்து, "இவர்கள் எனது தவத்தைக் கெடுக்க இங்ஙனம் செய்தார்கள்.

అంగారసదృశీనారీ । ఘృతకుంభసమఃపుమాన్ ।
తస్మాన్నారీంనరోదృష్ట్వా । దూరతఃపరివర్జయేత్ ॥

'பெண்ணே பெருநெருப்பாம் பேருலகில் ஆண்மகனே
வெண்ணெயென நன்ருய் விளம்பலாம்—ஒண்ணுதல்சேர்
பெண்மகளை அஞ்சிப் பிரிந்திருந்து வாழ்வதுவே
உண்மையுள ஞானி ஒழுங்கு' என்றபடி,

பெண்மகள், பெருநெருப்புக்குச் சமானம்; ஆண்மகன் வெண்ணெய் போன்றவன். ஆகையால், பற்றற்றஞானவானுகிய ஆண்மகன், அவளை வெகுதூரத்திற் பிரிந்திருந்து வாழ்வதே ஒழுங்கு. இந்த விதியை எண்ணுமல், நான் இவர்களோடு கூடி வாழ்ந்தபடியால், எனக்கு இந்தக் கேடு நேர்ந்தது" என்றுசொல்லித் தமது இருகரங்களையும் வெட்டிக் கொண்டார். அப்போது, அப்பெண்மக்கள் இருவரும், அழுது, தெய்வத்தை வெறுத்து, தமது நிர்ப்பாக்கிய தசைகளுக்குத் தம்மைத் தாமே நிந்தித்துக் கொண்டார்கள். அதைக் கண்ட உத்தம ஞானவானுகிய கோராகும்பார், "நீவிர் இருவீரும் இங்ஙனம் வருந்தற்க. நாம் எண்ணிய எண்ணியாங்கு இனிது முடிக்க அருள்புரியும் கற்பக விருக்ஷம்போன்ற ருக்மிணீகாந்தன் இருக்கும்போது, நமக்கொன்றினும் குறை நேரிடாது. நீவிர் உமது மன வாக்குக் காயங்களை அவனுக்கு அர்ப்பணஞ் செய்யுங்கள்" என்று இதோபதேசஞ்செய்து பகவானைத் தியானித்துக்கொண்டிருந்தார்.

இங்ஙனம் இருக்க, ஆடிமாதத்தில் சுக்லபட்சத்து ஏகாதசி வந்தது. கோராகும்பார் தமது மனைவியர் இருவரையும் அழைத்துக்கொண்டு பண்டரிபுரம் வந்து, சந்திரபாகையில் ஸ்நானம்செய்து, கோயில் வெளிப் பிரதக்ஷிணஞ்செய்து, கோபுரவாசலில் தொழுது, வணங்கி, ஆலயத்துக்கு உள்ளே நுழைந்து, வேண்டிய வேண்டியாங்கு உதவவல்ல பூலோக சங்கநிதியே அனைய பண்டரிநாதனைத் தழுவிக்கொண்டு, துவஜஸ்தம்பத்தினிடத்திற்கு வந்தார். அங்கே, நாமதேவர், பேரானந்தபரவசராய் நிருத்தஞ் செய்துகொண்டிருந்தார். பண்டரிநாதன், நாமதேவர்க்கு மாத்திரம் காட்சிதந்து, தானும்அவரோடு கூத்தாடிக்கொண்டிருந்தான். நிவர்த்திதேவர், ஞானதேவர், சோபானதேவர் முதலானவர்களும் ஸாமந்தர் முதலிய பக்தர்களும் உட்கார்ந்திருந்து, ஆனந்தத்துடன் பகவத் கீர்த்தனத்தைக் கேட்டுக்கொண்டிருக்கையில், நாமதேவர், தமது கையைஉயர்த்திச் சமிக்கைசெய்து, "அனைவரும் எழுந்து நில்லுங்கள்" என்று கூற, எல்லாரும் அங்ஙனமே செய்தார்கள். அப்போது நாமதேவர், அங்கிருந்தார் ஒவ்வொருவர் கரத்திலும் ஒவ்வொரு தாளங் கொடுத்தார். அவர்கள் அவைகளைத் தட்டிக்கொண்டு ஹரிநாம ஸங்கீர்த்தனம் பாடி, ஆடி, ஆனந்தபரவசரா யிருந்தார்கள். கோராகும்பார்,



தாமும் அவர்களைப்போலத் தாளந்தட்டி ஹரிகீர்த்தனம் செய்யத் தமக்குக் கரங்கள் இல்லாமற்போயினவே என விசனப்பட்டுக்கொண்டிருந்தார். அப்போது, கருணைக்கடலாகிய ஸ்ரீ ருக்மிணீகாந்தன் கடாக்ஷத்தால், அக்கணத்திலேயே அவர்க்கு முன்போல இருகரங்களும் வளர்ந்தன. உடனே அவர், தீனதயாளனுன பாண்டுரங்கனைக் கொண்டாடி மற்றவர்களைப்போலத் தாமும் தாளம் தட்டிப் பகவானைப் புகழ்ந்து துதித்துக்கொண்டிருந்தார். அப்போது அங்குவந்திருந்த பகவத் பக்தஜனங்கள் அனைவரும் ஆச்சரியப்பட்டார்கள். கோராகும்பாருடைய மனைவியர் இருவரும் பகவானை நினைந்து, "ஜகந்நிவாசா! பக்தவத்ஸலா! தீனதயாளா! எம்மீது கிருபைசெய்க" என வேண்டினூர்கள். பகவான், அவர்கள் எண்ணமுணர்ந்து, கோராகும்பாருடைய காலில் மிதிபட்டிருந்த குழந்தையை ருக்மிணீதேவி தனதிடுப்பில் எடுத்துக்கொண்டு தன்னைப் பின்தொடர்ந்துவரக் காட்சிதந்து, அனைவரும் பார்க்கும்படி அக்குழந்தையை, அதன் தாயிடத்திற் சேர்ப்பித்தான். அப்போது ஜகன்மாதாவாகிய ருக்மிணிதேவி பரமஸ்வராக்ய சீலராகிய கோராகும்பாரைநோக்கி, "உனது மனைவியும் மாமனும் பகவான்மேல் வைத்த ஆணைகள் இரண்டும் இனி உன்னை வருத்தா; அவைகளை நான் விடுவித்தேன். இனி நீ சுகமாய் இவர்கள் இருவருடன் கூடி இல்லற தருமத்தை நடத்தி எம்மைத் தியானித்துக் கொண்டிருக்கக்கடவாய்" என அனுக்கிரகிக்க, எல்லாரும் இன்புற்ருர்கள்.

ஸங்கடஹரணாயநம:

பத்தொன்பதாம் அத்தியாயம்

## நாமதேவர் நல்லாசிரியனை நாடின சரித்திரம்

பகவான், ருக்மிணி ஸமேதனுய்க் காட்சிதந்து, தமக் கருள் புரிந்து மறைந்தபிறகு, கோராகும்பார், அங்கிருந்த பக்தர்களுக்கு வந்தனம் செய்து, "பாகவத புண்ணியர்காள்! நீவிர் அனைவரும் எனது வீட்டுக்கு எழுந்தருளவேண்டும்" என, மிகவும் பிரார்த்தித்தார். அவர்கள் அதற்கிணங்கி, அவர் வீட்டுக்கு வந்தார்கள். இப்படி வந்தவர்களைக் கோராகும்பார் உபசரித்துப் பூசித்துப் புசிக்கச்செய்து, பரிசுத்த ஸ்தானத்தில் அமர்த்திச் சந்தன புஷ்ப தாம்பூலாதி மங்களப் பொருள்களை வழங்கினர். அப்போது நிவர்த்திதேவர், ஞானதேவர், சோபானதேவர், முக்தாபாய், ஸாமந்தர், நாமதேவர் முதலான பரம பக்தர்,

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்" என்றபடி,

ஒருவரோடொருவர் அளவளாவி, ஈஸ்வர கலியாண குணகணங்களை ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொண்டு ஆனந்தித்தார்கள். அப்போது, ஞானதேவர், கோராகும்பாரை நோக்கி, "சாதுஜன முதல்வ! இந்தக் கடங்களை வரிசையாய் உட்காரவைத்தனை; நீயோ, பாத்திரங்களைச் செய்பவன். ஆகையால், இப்பாத்திரங்களில், பரிபக்வ பாத்திரங்களையும், அபரிபக்வ பாத்திரங்களையும் சோதித்துச் சொல்லவேண்டும்" என்று கேட்க, அந்தச் சாதுர்ய வசனங்களுக்குக் கோராகும்பார் மிகக் களிப்படைந்து, "ஓ ஸ்வாமீ! குடும்பிகளுக் குபயோகமாகும் அசேதன மட்பாத்திரங்களுடைய உயர்வு, தாழ்வு எனக்குத் தெரியும். சேதன கர்மவசத்தால், பகவான் என்னும் குலாலனால் உண்டாக்கப்பட்ட பஞ்சபூத சம்பந்தமான பாத்திரங்களின் உயர்வு தாழ்வுகளை உணர்ந்தோத, அஞ்ஞானியாகிய அடியேன் வல்லவன் அல்லன். ஆனாலும், தேவரீர் நியமனத்தை அடியேன் சிரஸாவகித்து, உண்மையாய் விண்ணப்பிக்கின்றேன்; பிள்ளை மொழிகளைப், பெற்றோர் மனமுவந்து கொள்வதுபோல, ஒன்றுக்கும் பற்றாதவனாகிய அடியேன் வார்த்தைகளை, ஸ்ரீமத் பாண்டுரங்கனுடைய உயிர்க் கிருப்பிடமாய்ப் புகழ்பெற்றோராகும் பாகவதர்களனைவரும் அங்கீகரித்துக் கொள்ளவேண்டும் என்று பிரார்த்தித்திருக்கின்றனன். உலகத்தில், முதற்கருவி, நிமித்தக்கருவி, துணைக்கருவியென இம்மூன்று கருவிகளால் ஒரு காரியம் உண்டாகவேண்டும். அசேதன பாத்திரங்களுக்கு மண், முதற்கருவி; குலாலன், நிமித்தக்கருவி; தண்டமும் சக்கரமும், துணைக்கருவிகள். உலகத்தார்க்கு, ஈஸ்வரன், தானே இம்முக்கருவிகளாக இருக்கின்றான்: தனது இச்சையால், சித்தென்றும் அசித்தென்றும் ஈஸ்வரன் விளங்கியிருப்பதால் முதற் கருவியாகவும்; அவைகளுக்குத் தக்கபடி ஊட்டியும் உறக்கியும் ஆட்டியும் அடக்கியும் தானே நடத்துவதால், நிமித்தக் கருவியாகவும்; அவைகளுக்கு இருவினை ஒப்பு மல பரிபாகம் நேரிட்ட காலத்தில் ஞானசக்தி முதலிய அளித்துக் காத்தலால் துணைக்கருவியாகவும் இருந்து, இவ்வுலக காரியத்தைத் தோற்றுவித்தான். இப்பேர்ப்பட்ட ஸர்வேஸ்வர தோற்றத்தில் அடங்கிய சேதனப்பொருள்களும், பஞ்சபூத சம்பந்தமுடையவைகளுமான பாத்திரங்களின் உயர்வு தாழ்வுகள், உலககாரணனும் பெரிய குலாலனுமாகிய ஸ்ரீயப்பதிக்கும், எல்லாமுணர்ந்தோராகிய தேவரீரைப் போன்றவர்களுக்கும் தெரியுமே அல்லாமல், மந்தமதியினனாகிய அடியேனுக்கு எங்ஙனந் தெரியும்? ஆயினும், தனுர்வேதத்தில் வல்லான் ஒருவன், தனது மந்திரசக்தியால் துரும்பைத் தூணாக்குவதுபோல, தேவரீருடைய கிருபாகடாக்ஷத்தால், நான், இப்பாத்திரங்களை அஞ்சாமற் சோதிக்கின்றேன்" எனக்கூறி, தான், பாண்டங்களைத் தட்டும் பலகையைக் கையில் எடுத்துக்கொண்டு, அங்கே வரிசையாய்க் உட்கார்ந்திருந்த பரமபாகவதர்களுடைய தலைகளின்மேல் உறைக்க ஒவ்வோரடி கொடுத்துக்கொண்டு வந்தார். அனைவரும், அனவரத பகவத் குணானுபவசீலரும், இவ்வுலகஞானமற்ற பரிசுத்த ஞானானுபவ யோகியர்களுமாய் இருந்தார்களாகையால், இவர்



அடித்த அடியை உணராத அசேதனங்கள்போலப் பகவதனுபவத்திற் சிந்தையை யூன்றி அசைவற்று மௌனமாயிருந்தார்கள். நாமதேவர்மாத்திரம், பகவத்பக்தியிற் சிறந்து யாவருக்கும் முதன்மையாய் விளங்கினார். ஆனாலும், குருமுகஞானம் பெறாமல் அதனிற் குறைவடைந்திருந்தார்; ஆகையால், தன்னைத் தட்டவந்த கோராகும்பாரை நோக்கி, "என்னை என் அடிக்கின்றாய்?" எனப் பின்னுக்கு ஒதுங்கினார். அதைக் கண்ட, கோராகும்பார், "இவ்வரிசையில் இது ஒன்றே நன்றாய் வேகாத பாத்திரம்; மற்றவை யாவும் நன்றாய் வெந்து, கண் விட்டு, நான் தட்டுங்காலையில் கணீர் கணீர் என்று சத்தங்கேட்டன. இது ஒன்றுமாத்திரம் இன்னும் சரியாய்வேகாத பச்சைமண்ணாகவே இருக்கின்றது" என்று ஞானதேவரோடு சொன்னார். அப்போது, "ஈஸ்வர விபூதிகளான ஜீவகோடிகளில் யாரையும் அவமதிக்கப்படாதென்னும் உத்தம ஞானமுடைய பாகவதர்கள் அனைவரும், நாமதேவருடைய நன்மையைக் கோரி, அவர்க்கு அவமானம் உண்டாக வேண்டுமென்றே உரக்க நகைத்தார்கள். முக்தாபாயும் சிரித்துக்கொண்டே எழுந்து, "இது பக்குவப்படாத பச்சைமட்பாத்திரம் என்றுணர்ந்து கூறினீர். ஆகையால் நீர், மட்பாண்ட பரிக்ஷையில் மிகவும் வல்லவரே ஆவீர்" எனக் கோராகும்பாரைப் புகழ்ந்து கொண்டாடினாள்.

அப்போது நாமதேவர், மிகவும் மனமறுகி, பாண்டுரங்கன் சந்நிதானத்துக்கு விரைந்து சென்று, அவற்கு வந்தனஞ் செய்து, கூப்பிய கையராய் நின்று, தாரைதாரையாய் விசனக் கண்ணீர் பெருக்கி, அழுதுகொண்டே, "ஸ்வாமி! இன்று நான், மிகவும் அவமானம் அடைந்தேன்" என்றார். அதற்குப் பகவான் புன்னகைபுரிந்து, நாமதேவரை மார்போடணைத்துக் கொண்டு, "உன்னை, யார் என்ன சொன்னார்கள்? நீ, எனது பிராண நண்பன், ஆகையால் ஒளிக்காமல் உண்மை உரைக்கக்கடவாய்" என்றான். நாமதேவர், கோராகும்பார் வீட்டில் நடந்த விருத்தாந்தங்களை விவரமாய் விண்ணப்பஞ்செய்தார். அதுகேட்ட ஜகந்நாதன், "நாமதேவா! கோராகும்பார் உண்மையே உரைத்தான், அவன் உரை பழுதாகாது. ஞானதேவர் முதலிய பாகவதர்கள் யாவரும் உனது நன்மையைக்கோரியே, உனக்கு விசனம் உண்டாக்க வேண்டுமென்று நகைத்தார்கள். அவர்கள் அங்ஙனம் நகைத்ததனாலேயே உனக்கு உன்னிலை விளங்க வேண்டியிருக்கின்றது. அவர்கள் நகைத்தது உனக்கு அவமானம் வரவேண்டும் என்றல்ல. நீ, ஒரு உத்தம புருஷனை அடுத்து, அவனால் பரிபக்வம் அடையவேண்டும்" என்றான். அதற்கு நாமதேவர், "எனது துக்கத்தை உன்னிடத்தில் ஆற்றிக்கொள்ள வந்தேன். நீயும் அவர்களைப்போலவே என்னைக் கைவிட எண்ணியிருக்கின்றனை! கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதுபோல, உன்னை நம்பி விசனந் தணியவந்த எனக்கு நீயும் வேறானாய். இதுவரையில் நீ, என்விஷயத்தில் இப்படியிருந்ததில்லையே! எல்லாரும் ஒன்றுசேர்ந்து கொண்டால், நான் ஒருவன் திக்கற்

றவன் என்னசெய்வேன்! நீ கூட என்னை வேகாத பாத்திரம் எனக் கூறுகின்றனை அல்லவா! நீயே, என்னை, விட்டுவிட நினைவையேல் நான் தட்டழிவதல்லாமல் வேறு கதியேது? என்குறையை யாரோடு சொல்லி ஆறுவேன்? என்றார். 'பகவான், "மலரும் மணமும் அபேதமாயிருப் பனபோல உனக்கும் எனக்கும் வேறுபாடு கிடையாது. ஆகையால், நீ வருந்தாதை; ஞானனுஷ்டான பரனுன பரமாசாரியனை அடுக்க முயல்வாய். உனக்கு நான் உகந்தவனாய் இருக்கின்றேன். ஆகையால், வேறொரு குரு வேண்டியதில்லை என்று எண்ணுதே. அப்பரமகுரு மூர்த்தத்தைச் சற்று விவகரிக்கின்றேன்; கவனமாய்க் கேள்:

ఆచినోతిహిశాస్త్రార్థాన్ । ఆచారేస్థాపయిష్యతి ।
స్వయమాచరితేయస్తు । ఆచార్యస్సోభిధీయతే ॥

'ஆசிரிய னென்பான் அருங்கலைக ளெல்லாம்
மாசிரிய வோதி மனமடக்கிக்—காசிரியத்
தன்னையடுத் தார்க்கு ஸதாசாரம் போதிப்பான்
அன்னவனை ஈசனென லாம்' என்பதற்கு,

'தான், சாஸ்திரங்களைச் சரியாய் ஓதி உணர்ந்து, தனது ஞானனுஷ் டானங்களால் மனமடக்கித் தன்னை அடுத்த சிஷ்யவர்க்கங்களுக்கு, சதா சாரங்களை உண்டாக்குகிறவன் ஆசிரியன் எனப்படுவான்' என்பது பொருள். அநேககாலமாய், ஈச்வரனை மறந்து, ஆசாபாசத்திற் கட்டுண்டு கிடக்கும் சேதனனை, நித்ய ஸூரிகளோடு சேர்ப்பது, சர்வசக்தியுள்ள ஈச்வரனுக்கே எளிதல்லது, மற்றெவர்க்கும் கூடாதகாரியம். உலகத்தில், ஞானனுஷ்டானம் நிறைந்தவர்களாய், சேதனர்களைப் பிழைப்பிக்கும் பிரியமுடைய பெரியோர், ஈச்வர சம்பந்தத்தால், ஆசிரியத்தன் மையை நிர்வகிக்கின்றார்கள். அக்கினியிற் பிரவேசித்தும், பொன்னு னது, வெங்கார ஸம்பந்தம் இன்றி உருகாததுபோல, நீ என்னை அடுத்திருந்தும், ஆசிரிய ஸம்பந்தமின்றிப் பரிபக்வ மடையமாட்டாய். தர்மத்தை நிலைநிறுத்துவதற்காக, என்னுல் எடுக்கப்பட்ட இராம கிருஷ்ணவதாரங்களில்; வஸிஷ்ட, ஸாந்தீபாநியர்களிடத்தில் நான், சிஷ்யபாவனை காட்டி, அவர்களை உபாஸித்ததை நீ கேட்டறியாயா? குடும்ப ஸம்பந்தமற்ற எனக்கு, குருமுக ஞானம் அநாவசியகம். ஆனு லும்,

'பெரியாரைத் துணைக்கொள்' என்றபடி,

சிட்டர்களுடைய ஆசாரத்தை மற்றையோர் அனுஷ்டிப்பார்கள். ஆகை யால், குருமுகஞானம் அத்தியாவசியகம் என்று, நானே அனுஷ்டித் துக் காட்டினேன். இதை உணர்ந்தபிறகு, இப்போதாவது நீ, எனது உத்தரவின்படி ஒரு சற்குருவை யடுக்கக்கடவாய். அங்ஙனம் செய்யா யேல், ஞானதேவாதியர்களைப்போல உனக்கு அகண்ட ஞானம் சித் திக்காது. அஃது உண்டாயின் அன்றி, நீ மோக்ஷத்துக்கு அருகன்



ஆக மாட்டாய். உனது பாட்டுக்கும் எனது ஆட்டுக்கும் சரி என் னும்படி வீணே நாட்கள் கழிந்துபோகும்; நீ ஈடேற இடமிராது" என்றான். அதுகேட்ட நாமதேவர், ஸ்வாமியை நோக்கி,

అసంతఏవాత్రహిసంభవంతి । హసంతికాయామివహవ్యవాహాః ।
అత్రైవసంతోయదిసంభవంతి । తత్రైవలాభస్సరసీరుహాణాం ॥

"அஞ்ஞா னியரே அவதரிக்கும் வையகத்தில்
மெய்ஞ்ஞான வானொருவன் மேவுவது—சுஞ்ஞான
மேனியனே செந்நெருப்பில் மென்று மரைமலர்தல்
மானுமென லாமே மதித்து" இதற்கு,

'அசத்துக்களே அவதரிக்கும் இவ்வுலகத்தில், ஒரு சத்புருஷன் உண் டாவது, செந்தீயில் தாமரை பூத்தல்போல அசாத்தியமாயிருக்கின்றது' என்பது பொருள். இதுபோலவே, ஞானனுஷ்டான பரனுகவும்,

'ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையிற் பேதையாரில்' என்றபடியின்றி,

தானடங்கித் தனது ஆத்மா உய்யும்வழி தேடிக்கொண்டு, பிறர்க் குபதேசம் செய்ய வல்லவனுகவுமுள்ள குருபரன் ஒருவன் கிடைப்பது மிகவும் அருமை. ஆகையால், ஒ ஸ்வாமி! இப்படிப்பட்ட குருபரனை நீயே நிச்சயித்து எனக்குக் காட்டவேண்டும்" என்றார். பகவான், சந்தோஷித்து, "விஸோபாகேசன், அகண்ட ஞான பரிபூர்ணன். நீ அவனை அடுத்தால்,

'தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்' என்றபடி,

அவன், உன்னைத் தன்னைப்போல் ஆக்கிவிடுவான். ஆகையால் நீ, அவ னிடஞ் சென்று உபதேசம் பெற்று வா" என்று நியமித்தான். நாம தேவர், பகவான் கட்டளையைச் சிரமேல் தாங்கி, விஸோபாகேசர், நாகநாத ஸ்வாமி சந்நிதியில் இருக்கிறார் எனக்கேட்டு, அங்குச் சென் றார். அப்போது அங்கே, விஸோபாகேசர் தமது கால்கள் இரண் டையும் லிங்காகாரமாயுள்ள நாகநாத ஸ்வாமிமேல் நீட்டித் தூங்கிக் கொண்டிருந்தார். அதைக் கண்ட நாமதேவர் மிகவருந்தி, "இவ்வுன் மத்தன் சிவலிங்கத்தின்மேல் கால்களைவைத் துறங்குகின்றான். இப்படிப் பட்ட மதியிலியை ஞானனுஷ்டான மிக்கவனென்று, ஸ்ரீ பாண்டுரங்கன் இவனிடத்திற் கென்னை அனுப்பின தன்மை, கெட்ட பாம்பை நல்ல பாம்பென்றும், சுடுகாட்டை நன்காடென்றும் கூறுவதுபோல் இருக் கின்றது. ஆயினும், ஸர்வஜ்ஞனும் ஸர்வ வியாபகனுமாகிய பகவான் குறிப்பிட்ட இடம் இங்ஙனம் எறுமாறுயிருக்க ஞாயமில்லை.

'எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு' என்றபடி

எதனையும் பொறுமையோடு யோசித்தே நிச்சயிக்கவேண்டும். பதறாத காரியம் சிதறாது. ஆகையால் இவனுடைய நிலை இன்னதெனப் பரிசோதிப்போம்" எனக்கூறிக் கையைத் தட்டி, அவரை விழிப்பித்து, "இஃதென்ன விபரீதம்! சாதுக்களால் பரமஸாதுவெனக் கொண்டாடப்படும் நீ, பகவான் தலைமேல், கால்களை வைத்துக்கொண்டு உறங்குகிற காரணம் தெரிவிக்கவேண்டும்" என்று கேட்டார். அவர், நாமதேவரை நோக்கி, 'உறங்குவதுபோலுஞ் சாக்காடுறங்கி, விழிப்பது போலும் பிறப்பு' என்றபடி தூக்கமயக்கத்தால் செத்தபிணம்போல் ஆன நான், என்னையு மறியாமல் எனது மூடமதி காரணமாகத் தப்பு செய்தேன்.

'தப்பெண்ணு வார்கள் சகத்திரர்கள் இவ்வுலகில்
தப்பினையே எல்லாருஞ் சார்ந்திருப்பார்—தப்பினையே
எண்ணுவார் தந்தப்பை யெண்ணார்கள் என்றமிது
மண்ணிலே நின்ற வழக்கு' என்றபடி,

என் தப்பு எனக்குத் தோன்றாமல் இருக்கின்றது. நான் பருத்த சரீரியாகையால், எனது சரீரம் என் சுவாதீனத்தில் இல்லை. நீ என்மேல் தயைகூர்ந்து, ஸ்வாமிமேல் உள்ள எனது கால்களை எடுத்து, ஸ்வாமி இல்லாத இடத்தில் வை" என்று வேண்டிக்கொண்டார். அதற்கு நாமதேவர், நல்லதென்று சம்மதித்துத் தமது கைகளால் அவருடைய கால்களை யெடுத்துக் கீழே வைக்கப்போனார்; அங்கும் ஒரு சிவலிங்கம் முளைத்தது. அப்பால், எங்கு நோக்கினும் லிங்கங்களாகவே யிருந்தன. 'இஃதென்ன விந்தை' என்று அவ்வாலயம் அடங்கலும் அவர் பார்த்தபோது லிங்கங்கள் இல்லாத இடம் கொஞ்சங்கூட இல்லாமல் இருந்தது, எல்லாப்பொருள்களும் லிங்கங்களாகவே யிருந்தன. தன்னை நோக்கின் போது, தானும் ஒரு லிங்கமாகவே யிருந்தார். ஆகையால் உடனே, நாமதேவர், அக்கால்களை விடுத்து, அவரைநோக்கி, "தேவரீருடைய திருவடி ஊற்றத்தால் எல்லாம் பகவத் சொரூபமாய்த் தோன்றின. இனித் தேவரீருடைய திருவாக் கமிர்தம் எனது செவிகளில் வார்க்கப்பட்டால், அடியேன் அகண்டஞான பரிபூர்ணனாகிக் குடும்பக் கடலைக் கடந்து மோக்ஷக்கரை ஏறுவேன் என்பதற்குச் சந்தேகம் இல்லை. 'பாம்பறியும் பாம்பின்கால்' என்றபடி, தேவரீருடைய பரிபூர்ண ஞான நிலை இத்தன்மையதென ஸ்ரீ பாண்டுரங்கன் உணர்வானே அன்றி, அஞ்ஞானியாகிய நான் என்னறிவேன்" என்று விண்ணப்பம் செய்தார். அதுகேட்ட பரமஞானியாகிய விஸோபாகேசர், நாமதேவரை நோக்கி, "ஏ, வைஷ்ணவ சிகாமணி! ஜீவாத்மா, இயற்கையாகவே ஏதாவதொரு சரீரத்தில் வியாபித்திருக்கிறபடி, ஸர்வேசன் ஆகிய பரமாத்மா ஸமஸ்த சராசரங்களையும் தனக்குச் சரீரங்களாகச் செய்துகொண்டு, தான் சகலத்திலும் நிறைந்து ஒரு பெரிய சரீரியாய் இருக்கின்றான். மனிதர்கள், தாம் பாலரென்றும், விருத்தரென்றும், குருடரென்றும், மெலிந்தவரென்றும் விவகரிக்கின்றார்கள். நான் என்



னும் பதத்துக்குப் பொருளா யிருப்பவன் ஜீவாத்மாவா யிருக்கின்றான். இளமை, முதுமை, குருட்டுத்தன்மை, மென்மை, இவைகள் சரீரத்தைப் பொறுத்தனவே யல்லாமல் ஆத்மாவுக்குச் சம்பந்தப்பட்டவை அல்ல. அங்ஙனம் ஆக, சரீரியாகிய ஆத்மா, சரீரத்தில் சம்பந்தப்பட்டிருப்பதால், சரீர சம்பந்தமான தருமங்களைச் சரீரியாகிய ஆத்மாமேல் ஏற்றி, 'நான் இளையன், நான் மூத்தோன், நான் குருடன், நான் மெலியன்' என இங்ஙனம் பலவாறு உலகம் விவகரிக்கின்றது. இப்படிச் சேதனா சேதனங்கள் எல்லாவற்றையும், பகவான், தனது சரீரமாகக் கொண்டிருப்பதால், அகண்ட ஞானி, எல்லாவற்றிலும் பகவானைத் தரிசித்துக்கொண்டு, 'எல்லாம் பகவான் செயல்' என்றே எண்ணியிருக்க வேண்டும். இத்தகைய நிச்சய ஞானியை, விருப்பு வெறுப்பும், நன்மை தீமை முதலிய இருவினைகளும் முன்செய் ஊழ்வினையும் வருத்தமாட்டா.

ఈశ్వరస్సర్వభూతానాం । హృద్దేశేర్జున తిష్ఠతి ।
భ్రామయన్సర్వభూతాని । యంత్రారూఢానిమాయయా ॥

'பாசங்கைக் கொண்டிருப்போன் பாவைதனை ஆட்டுதல்போல்
ஈசன்பூ தங்களுக்குள் எப்போதும்—வாசமாய்
அந்தப்பூ தங்கள் அனைத்தையுந்தான் ஆட்டுகின்றான்
இந்தப்பூ லோகத்திலே' இதற்கு,

'சூத்ரதாரி பொம்மைகளை ஆட்டுவதுபோல, ஈச்வரன் ஸர்வ பூதங்களுக்குள்ளே எப்போதும் வாசமாயிருந்து அவைகளை ஆட்டுகின்றான்' என்பது பொருள். இது, பிரம வித்தையாகிய பகவத் கீதையில் சொல்லப்பட்டிருக்கின்றது. சூத்ரதாரி செய்கிற காரியங்களை, பொம்மைகள் செய்கின்றனவென்று சொல்லுகிற மூடர்களைப்போல, பகவான் மறைந்திருந்து செய்கிற காரியங்களைப் பிராணிகள், தாமே செய்கின்றனவென்று எண்ணுகிறவர்கள், அஞ்ஞானிகள் ஆவார்கள். கொஞ்சநேரம் வெய்யிலில் நின்று சூரியனை உற்றுநோக்கிக் கொண்டிருந்த ஒருவன் கண்ணுக்கு, மற்ற வஸ்துக்கள் மறைந்திருப்பனபோல, பிரமஞான நிஷ்டை கைகூடின பிரமானுபவம் உடையவனுக்கு, உலகந்தோன்றாது. ஞானதேவர் கடாக்ஷ வீக்ஷண்யத்தால் எனக்கு இத்தகைய அகண்ட ஞானம் கிடைத்தது. நீ, பாண்டுரங்கன் நியமனத்தால் இங்கு வந்தனை ஆகையால், உனது கண்ணுக்கு, எல்லாம் பகவத் சொரூபமாய்த் தோன்றின. இந்த ஞானத்தை உனது இதயத்தில் அமைத்து,

'தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு' என்றபடி,

தவமுயற்சி செய்வாயானால், உனது கண்ணுக்கு ஸர்வமும் பாண்டுரங்கநாத சொரூபமாய்த் தோன்றும்" என்று உபதேசித்தார். நாமதேவர் ஆனந்த பரவசராய்,

"கொடுத்தேனே யென்னைக் கொடுத்தவுடன் இன்பம்
மடுத்தேனே நீடூழி வாழ்ந்தே—அடுத்தேனே
பெற்றேனே பெற்றுப் பிழைத்தேனே ஜன்மவல்லல்
இற்றேனே ஏழையடியேன்" என்று,

விண்ணப்பித்துத் தண்டாகாரமாய் வீழ்ந்து வணங்கினர். விஸோபாகேசர் எழுந்து, தமது கரத்தை நாமதேவர் சிரத்தில் வைத்து, அகண்டபரப்பிரம சொரூபத்தை விசதமாய் உபதேசித்து அநுக்கிரகித்தனுப்பினர்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" என்றபடி,

அதுவரையில், ஸ்ரீ பாண்டுரங்கனுடைய திவ்யமங்கள விக்கிரகத் திருவுருவத்தைப் பெரும்பற்றுப் பற்றி மற்றெவையிலும் பற்றற்று, அவைகளைப்பார்க்கவும் கூசி, பாண்டுரங்கனைக் கணநேரமும் பிரிய ஆற்றாமல் இருந்த நாமதேவர், விசோபாகேசருடைய உபதேசமாகிய விதையைக், காராரும் ஆணவக்காட்டைக் களைந்து, அறக் கண்டு, அகங்காரமென்னும் கல்லைப் பிளந்து, தமது நெஞ்சகமான பூமி வெளிகாணத் திருத்தி, அதனில் நட்டு, பாண்டுரங்க நாதனுடைய தண்ணருள் நீரைப் பாய்ச்சி, ஞானயோக தியான முயற்சியால் விளைந்த போகம் புசித்து, அதனால், ஸமஸ்த சேதன சேதனங்களையும், ஸ்ரீபாண்டுரங்கன் சொரூபமாய்க் கண்டு, எவைகளினும் பற்றற்று விளங்கினர். சுயம்வரகாலத்தில் நளனருகே அவனைப்போலவே உருவெடுத்து உட்கார்ந்திருந்த திக்குப்பாலகரை நோக்கி, அவர்களில் உண்மை நளனை உணரமாட்டாமல் மயங்கின தமயந்திபோல, நல்லாசிரியன் உபதேசமகத்துவத்தால், நாமதேவர்க்கு, சகல சேதன சேதனங்களும் ஸ்ரீ பாண்டுரங்கநாதனுடைய திவ்யமங்கள விக்ரகங்களாகத் தோன்றினபடியால், அவைகளில் உண்மையான பாண்டுரங்க வரதனுடைய திவ்யமங்களத் திருவுருவைத் தேர்ந்தெடுக்கக் கூடாதவராகி, பக்தஜனங்களோடு கூடி, பரிபூர்ணானந்தத்தை அனுபவித்துக்கொண்டிருந்தார். அப்போது, பக்தவத்ஸலனாகிய புண்டரீகாக்ஷன், அக்கோஷ்டிக்கிடையில் வந்து, நாமதேவரை ஆலிங்கனஞ் செய்து, சிரமேற் கை வைத்து, "ஓ வத்ஸலா! குருபதேசம் பெற்ற பிறகு, நீ, என் என்னிடம் வரவில்லை?" என்று கேட்க, நாமதேவர் கூப்பிய கையராய், "முன்பு, உன்னை, பீமநதிக் கரையில் செங்கல்மேல் நிற்பவனாய்க் கண்டேன்; இப்போது, நல்லாசிரியோபதேச மகத்வத்தால், அஞ்ஞான திமிரம் அகல, மெய்ஞ்ஞான வொளி மேலோங்கி நிற்கப்பெற்ற நான், ஸமஸ்த சேதன சேதனங்களையும், உனது திருவுருவங்களாகவே காண்கின்றேன்; ஆகையால், நான் எங்கிருப்பினும், உன் சந்நிதியில் இருப்பவன் ஆகின்றேன்; எதைப் பார்த்தாலும், உனதுருவத்தையே பார்க்கின்றேன்: என்ன எண்ணினாலும், உன்னையே எண்ணுகின்றேன்; என்ன பேசினாலும், உனது நாமத்தையே பேசுகின்றேன்; என்ன செய்தாலும், உனது திருப்பணியே செய்கின்றேன்.



నారాయణైకనిష్ఠస్య । యాయాచేష్టాతదర్చనం ।
యోయోజల్పస్సతుజపః । తత్ధ్యానంయన్నిరీక్షణం ॥

'உன்கோயிலென் கால்சூழவும் உன்பாதமென் கண்காணவும்
நின்பாடலென் வாய்பாடவும் நின்காரியங் கைசெய்யவும்
என்காதுநின் புகழ்கேட்கவும் என்னெஞ்சநின் னினைவுன்னவும்
நன்காகநான் பெற்றேனையா நாராயணா நாராயணா'

என்னுந் திவ்யானுபூதி, விஸோபாகேசருடைய கடாக்ஷ வீக்ஷணியத்தால் எனக்குக் கிடைத்தது. இப்போது எனது ஜன்மம் பலன் பெற்றது. ஓ புருஷோத்தம! இனி எனக்கெதனினுங் குறைவில்லை; இன்பமே எந்நாளும்; துன்பம் இல்லை. ஓ தந்தாய்! நீயே எனக்கு எல்லாந் தந்தாய்.

'துளசிதளத் துளசிதளத் தூய்நீரதே குடிநீரதாம்
உளதாயிரம் பெயரொன்னு நூற்றொருகோடிமந் திரமேலதாம்
வளமார்பின்மர் மணியென்னவே மணியாமெனைப் பிணியென்செயும்
நளகூபரன் பகைவென்றவா நாராயணா நாராயணா' என்றபடி,

எனக்கு எல்லாம் நீயே ஆகி இருக்கின்றனை. நான் பொன் வேண்டேன்; பொருள் வேண்டேன்; மண் வேண்டேன்; மனை வேண்டேன்; மருந்து வேண்டேன்; விருந்து வேண்டேன்; உனது திருத்துழாயின் தளங்களிலே பொருந்திய குளிர்ந்த நீரே எனக்கு மருந்து விருந்து முதலிய எல்லாமும் ஆவன. நிலை பெற்ற நினது ஆயிரந் திருநாமங்களும், நூற்றொருகோடி மந்திரங்களுக்கு மேலான மந்திரமாகும். வேறே, நான், கல்வி வேண்டேன்; கேள்வி வேண்டேன். வளம்பொருந்திய நினது திருமார்பிலுள்ள கௌஸ்துவாபரணமே, எனக்கு எல்லா அணிகளினும் சிறந்தது. ஆகையால், நான், பிறவிப்பேயை அஞ்சேன். ஆனாலும், ஒரு வரம் வேண்டுகின்றேன்: ஐம்புல வெற்றிபெற்ற ஞானியர்களுக்குள் தலைவனான அர்ச்சுனன்,

చంచలంహిమనఃకృష్ణ । ప్రమాథిబలవద్దృఢం ।
తస్యాహంనిగ్రహంమన్యే । వాయోరివసుదుష్కరం ॥

'கமலக்கண்ணா கார்முகில் வண்ணா
மனமெனும் பாவி சினமிகப் பெருக்கி
நிலையற் றவனாய் உலைவிலா தென்றும்
திடமுற் றவனாய்த் தீயனாய்க் காற்றென
அடக்கற் கரியனாய் அலைக்கழிக் கின்றான்
ஆதலால் இவனை அடக்கி
ஆளுத லரிதரி தரிதரி தாமே' என்றபடி,

'ஓ கமலக்கண்ணா! கருமேக வண்ணா! கிருஷ்ணா! மனமானது, கோபத்தை மூட்ட வல்லதாய், நிலையில்லாததாய், அழியாததாய், பலமுள்ளதாய்,

எல்லாவற்றிலுங் கெட்டதாய், காற்றேபோல் அடக்க முடியாததாய், என்னை வருத்துகின்றது. ஆதலால், அதனை அடக்கி ஆள்வது அரிது; முக்காலும் அரிது' என்றான். அர்ச்சுனனே இங்ஙனம் வருந்தினான் என்றால், இந்திரிய வசப்பட்டு, இறப்பதற்கே காரணனாய் நின்ற எனக்கு மனம் அடங்குதல் எங்ஙனம் சாத்தியமாகும்? தொன்று தொட்டு, உன் விஷயத்தில் அடியேன் பராமுகமா யிருந்துவிட்டேன். ஆகையால், இப்போது, எனக்குக் கிடைத்த இந்த நற்பேறு, என்றும் நிலையாய் நிற்கும் என்று நம்பமாட்டேன். ஓ, தீனதயாளா! ஆசாரியர் அருளால் அடியேற்குக் கிடைத்த இந்த ஞான தீப ஒளி, உனது தண்ணளி யென்னும் நெய்யால் என்றும் மழுங்காமல் பிரகாசிக்கும்படி கிருபை செய்யவேண்டும்; இதுவே நான் கோரும் வரம்" என்று விண்ணப்பஞ் செய்தார். பகவான் சந்தோஷித்து, நாமதேவரைக் கையிற் பிடித்துக்கொண்டு, அங்கிருந்த அன்பர் அனைவரையும் நோக்கி, "ஓ ஸாது ஜனர்காள்! இப்போது, எனது நாமதேவனைப் பக்குவப் படாத பாத்திரம் என்று யாராகிலும் சொல்வீர்களா?" என்று கேட்டார். அதற்கு ஞானதேவர் முதலியோர் சிரித்துக்கொண்டே சிரக்கம்பம் செய்தார்கள்.

ஸர்வரூபாயநம:

## இருபதாம் அத்தியாயம்

# பரிசபாகவதர் சரித்திரம்

பண்டரிபுரத்தில், அனவரதமும், பகவத் பஜனம் செய்துகொண்டு, ஒரு பாகவதர் இருந்தார். அவர் மனைவி பெயர் கமலாபாய். இவர்கள் இருவரும் ஸ்ரீ ருக்மிணி தேவியை ஆராதித்துக்கொண்டு வருகிறகாலத்தில், ஒருநாள், அந்த தேவியார் பிரத்தியக்ஷமாய் "உனக்கென்ன வரம் வேண்டும்?" என்று அந்தப் பாகவதரைக் கேட்க, அவர் "ஓ, மாதாவே! நான் குடும்ப நிமித்தமாக, எக்காலத்திலும் கஷ்டப்படாம லிருக்கும்படி கிருபை செய்யவேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்தார். அப்போது ருக்மிணீதேவி, ஒரு * பரிசவேதியை அவருக்குக் கொடுத்து, "இதனால், இரும்பைத் தொட்ட மாத்திரத்தில், அது பொன்னாகும்; அதன் மூலமாய் நீ குடும்பக் கஷ்டம் இன்றி வாழலாம்" என்று கூறி மறைந்தாள். அந்த பாகவதர், பரிச வேதியைக் கொண்டுவந்து அதிக ஆசையோடு தமது மனைவிகையிற் கொடுத்து, அதன் மகிமையைத் தெரிவித்து, "இந்த ரகஸியத்தை ஒருவருக்கும் சொல்லாதே; இதனைப் பத்திரமாய்

* பரிசவேதி என்பது, இரும்பு முதலிய உலோகங்களின்மேல் பட்ட மாத்திரத்தில், அவைகளைப் பொன்னாக மாற்றவல்ல ஒரு கல். இது சித்தர்களிடத்துள்ளது. பரிசம் - தொடுதல், படுதல்; வேதி - பேதி - பேதிப்பது, மாற்றுவது.



வைத்துவை. ஸாதுக்கள் அறிந்தால் என்னை ஏளனஞ் செய்வார்கள்" என்று கூறி, அந்தரங்கத்திலேயே, இரும்பைப் பொன்செய்து, அதன் மூலமாய்த் தமக் கிஷ்டமான பதார்த்தங்களை அநுபவித்து, உலகத்தார்க்கு அதனை மறைத்து, தரித்திரர் போலவும், வைராக்கியசீலர் போலவும் நடித்தார். பரிசவேதியை வைத்திருந்தபடியால் இவர்க்குப் பரிசபாகவதர் என்ற பெயர் விளங்கியது. அங்ஙனம் இருக்க, ஒருநாள் கமலாபாய், சந்திரபாகைக்குப்போய் ஜலங்கொண்டுவரும் பொழுது, நாமதேவர் மனைவியாகிய ராதாபாய், தானும் ஜலந்திரட்டச் சென்றாள். ஆகையால், அவள், கமலாபாயைநோக்கி, "இதோ நானும் தண்ணீர் மொண்டு வந்துவிடுகிறேன்; கொஞ்சநேரம் நில்லு" என்று சொல்லிக்கொண்டே, குடத்தில் நீர் முகந்துகொண்டு, கமலாபாயோடு கலந்து, இருவரும் வழியில் ஒருவர்க்கொருவர், தத் தம் வீட்டு விவகாரங்களைப்பற்றிப் பேசிக்கொண்டார்கள். கமலாபாய், ராதாபாயை நோக்கி, "தோழி! நீங்கள் ஏன், ஊண் உடைக்கு வருந்துகின்றீர்கள்?" என்று கேட்க, ராதாபாய், "எனது கணவர், எந்நாளும் வேறு நினைவில்லாமல், பண்டரிநாதனே கதியென்றிருக்கின்றார். அவரை நம்பின நாங்கள் என்னசெய்யக்கூடும்!" என்று விடை கூறினாள். அது கேட்ட கமலாபாய், "உனது கணவர் எப்போதும் விடாமல், பண்டரிநாதனைத் தியானஞ் செய்கிறாரே, அப் பகவான் உமக்கொன்றுந் தரவில்லையா?

మ్రొక్కినవరమీనివేల్పు గ్రక్కునవిడువంగవలయుగదరా ?

'கும்பிட்ட போது குறைதீராத் தைவத்தை
நம்பி யிராமல் நழுவவிட வேண்டுமால்' என்றபடி,

வணங்கினபோது வரங்கொடாக் கடவுளை நம்பியிராமல் நழுவவிடல் ஞாயம். பல்கொடா மரத்தையும் பால்கொடா எருமையையும் வளர்ப்பது, பயித்தியக்காரத்தன்மை யல்லவா? ஜீவனோபாயத்துக்கு வழிகாட்டாத கடவுளை ஏன் பஜிக்கவேண்டும்? எனது கணவர், ருக்மிணீதேவியை உபாஸித்தார். அந்த உலகமாதா, உடனே திருவுளம் இரங்கிக் காட்சிதந்து ஒரு பரிசவேதி வழங்கினாள். அதை வைத்துக்கொண்டு, நாங்கள், பொன்செய்து விற்றுக் காலக்ஷேபம் செய்கின்றோம்" என்றாள். உடனே ராதாபாய், "அந்தப் பரிசவேதி எப்படியிருக்கும்? அதை எனக்குக் காட்டு" என்றாள். அதற்குக் கமலாபாய் "ஓ ராதாபாய்! எங்கள் வீட்டுக்கு வருவாயானால், அதனை உனக்குக் காட்டுவேன்" என்று சொன்னாள். அப்போது ராதாபாய், தன் வீட்டுக்குப்போய்த் தண்ணீர்க்குடத்தை இறக்கிவைத்துவிட்டுக் கமலாபாய் வீட்டுக்கு வந்தாள். கமலாபாய், பரிசவேதியை, ராதாபாய் கையிற் கொடுத்துச் "சீக்கிரமாய் உங்கள் வீட்டுக்குப்போய், இரகசியமாய், உங்களுக்குத் தேவையானவரையில் பொன்செய்துகொண்டு, இப்பரிசவேதியை எனக்குத்தாமதிக்காமல் கொண்டுவந்து கொடுப்பதுமாத்திரம் அல்லாமல், இவ்விரகசியத்தை உனது கணவருக்கும் சொல்லாமல்

இருக்கவேண்டும்'' என்று கூற, ராதாபாய் அதற்குச் சம்மதித்துத் தன் வீட்டுக்குப்போய், தனக்கு வேண்டியவரையில் பொன் செய்து கொண்டு, எல்லாப் பதார்த்தங்களையும் சேகரித்து, சந்தோஷத்தோடு சமையல் செய்துகொண்டிருந்தாள். அப்போது நாமதேவர், வீட்டுக்கு வந்து, "இப்பதார்த்தங்களை எங்கிருந்து கொண்டுவந்தாய்? உண்மை சொல்; பொய் பேசினையானால், போஜனம் பண்ணமாட்டேன்'' என்றார். அதுகேட்ட ராதாபாய், நடந்த விருத்தாந்தத்தை,ஒளிக்காமல் கூறினாள். அதற்கு நாமதேவர், "அப்பரிசவேதியை, நான் பார்க்க வேண்டும்; கொண்டுவா'' என்று கூறித் தமது கையில் வாங்கிக் கொண்டு, சந்திரபாகைக்குப்போய், அதனைத் தண்ணீரில் வீசி எறிந்து விட்டு, ஸ்ரீ கிருஷ்ணநாம தியானம் செய்துகொண்டு கவலையற்றிருந்தார். "துறவிக்கு வேந்தன் துரும்பு'' என்றபடி, நாமதேவர், பரிசவேதியைத் துரும்பாக எண்ணித் தண்ணீரில் வீழ்த்தியது சரிதானே?

அப்போது ராதாபாய், "கமலாபாய், தனது பரிசவேதியைத் தாவென்று கேட்டால், அவளுக்கு நான் என்ன சமாதானம் சொல்லுவேன்'' என்று அழுதுகொண்டிருந்தாள். பரிசபாகவதர், தமதுவீட்டுக்கு வந்து, பரிசவேதியைத் தேடிப்பார்த்தபோது, அது, வைத்தவிடத்தில் இல்லாமையால், அது எங்கே என்று மனைவியைக் கேட்டு, அவளால், நடந்த விருத்தாந்தங்களை உணர்ந்து, "நீ இப்படி மோஸம் போவாய் என, எனக்கு முன்னேயே தெரிந்திருந்தும், எனது மந்த புத்தி காரணமாக, அதை உன் கையில் கொடுத்தேன் அல்லவா! கடந்ததை நினைந்து வருந்துதல், வெள்ளம்போனபின் கரைகோலுதலுக்குச் சமானம். ஏடி, பிச்சி! நீ விரைந்துசென்று ராதாபாயைக் கேட்டு, பரிசவேதியை வாங்கிக்கொண்டுவா'' என்று சொன்னார். கமலாபாய், உடனே, நாமதேவர் வீட்டுக்கு ஓடி, அங்கே அழுதுகொண்டிருந்த ராதாபாயைப் பார்த்துப் பரிசவேதி எங்கே என்றுகேட்க, அச்சிறுமி, அவளைக் கூட்டிக்கொண்டு தனது கணவரிடம் சென்று,"பரிசவேதியைக் கமலாபாய் கேட்கின்றாள்'' என்றாள். நாமதேவர், சிரித்து, "அதனை இப்போதுதான் சந்திரபாகை ஜலத்தில் வீசியெறிந்துவிட்டு வந்தேன்'' என்று கூறக்கேட்டு, அவ்விருவரும், ஒன்றுந் தோன்றாதவர்களாகி, திக்பிரமை கொண்டு அழ ஆரம்பித்தார்கள். அப்போது, வருவாரும் போவாருமாகிய வழிப்போக்கர்கள் இவ்விருத்தாந்தத்தைக் கேட்டு ஆச்சரியமடைந்தார்கள். அவர்களிற் சிலர், "பிறன்பொருளை வெளவிப் பொய் பேசித் தப்பித்துக்கொள்ளுதல் தகாத காரியம்,

'உள்ளத்தால் உள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வே மெனல்'

என்றிருக்கின்றதல்லவா!'' என்றார்கள். வேறுசிலர், "இவர், பற்றற்ற ஞானி ஆகையால், பரிசவேதியைத் துரும்பாமதித்துத் தூர எறிந்தார்'' என்றார்கள். பரிசபாகவதர் இவ்விருத்தாந்தங்களைக் கேட்டு, ஓடிவந்து "என் குடும்பத்தைத் துக்கஸாகரத்தில் அழுத்தினாய்; விரக்த வேடந்



தாங்கிய நீ, எனது பரிசவேதியை ஒளித்து வைத்துக்கொண்டு, தண்ணீரில் எறிந்து விட்டேன் என்று வம்பளக்கின்றனை. இது உனக்கு முறையா, தருமமா, நீதியா? என் உடைமையை எனக்குக் கொடுத்து விடு; ஏன் பொய்பேசி பாவத்துக் காளாகின்றனை?'' என்றார். நாமதேவர், அவரை நோக்கி,"விரக்தனைப்போல நடிக்கும் உனக்குப் பரிசவேதியாற் பயனென்னை?

అర్థసంతద్విమోహాయ । విమోహోనరకాయచ ।
తస్మాదర్థమనర్థాఖ్యం । శ్రేయోర్థీదూరతస్త్యజేత్ ।
యస్యధర్మార్థమర్థేహా । తస్యానీహైవశోభనా ।
ప్రక్షాళనాద్ధిపంకస్య । దూరాదస్పర్శనంపరం ॥

'பணந்தானே கொலையாகும் பணந்தானே களவாகும் பரிந்து தேடும்
பணந்தானே கள்காமம் பொய்யிவற்றை மிகப்பெருக்கிப் பாரின் மீதில்
பணந்தானே நரககாரணமாகும் எனப்பெரியோர் பயந்து நீத்த
பணந்தானே பிணமாகும் அன்றியது குணமென்ன பண்ணுந் தானே''

'இன்பம் விரும்புவான் இவ்வுலகிலே பணத்தைத்
துன்பமென்று தூரவிடல்' என்றபடி,

'அறமியற்றுவோன் பணத்தை விரும்பலாம் என்றாலோ அவற்கும் வேண்டா, மறமியற்றிப் பொருள்தேடி மற்றதனால் அறமியற்றல் மாண்பே சொல்லாய்,திறமியற்றிச்சேற்றகத்தில் வீழ்ந்ததனைக் கழுவுமுன்பே திண்டா தப்பால் புறமியற்றிப் போவதுவே மேலான புத்தியெனப்புகலலாமே'

இவைகளுக்கு,

'பணம், பஞ்சமா பாதக காரணம்; பஞ்சமா பாதகம் நரககாரணம், ஆகையால், அர்த்தம், அநர்த்தம் என்பர் ஆரியர்; பணம், பிணம் என்பர் தமிழர். ஆகையால்,மோக்ஷசுகத்தை விரும்புகிறவன் பணத்தை விரும்பமாட்டான். இகத்தில் அனுபவிக்கக் கூடிய சிற்றின்பத்துக்கு ஆதாரமான பணம், பேரின்பத்தைத் தருவதுமுண்டாமோ? இந்தப் பணத்தின் தன்மையைப் பன்னப் புகுந்தால், பாரதமாய் முடியும்; இது நல்லாரைத் தீயராக்கும்; அற்பரைப் பெரியோராக்கும்; பண்டிதனைப் பாமரனுக்கும்; பாமரனைப் பண்டிதனுக்கும். இது பற்றியே நாயனார் தமது திருக் குறளில்,

'பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்' என்றருளிச் செய்தார்.

இப்படிப் பொருளல்லாதவர்களாகிய சாதாரண மூடர்களையும் ஒரு பொருளாகச் செய்யவல்லது பொருள். இதுபற்றியே ஔவையும்,

'கல்லானே ஆனாலும் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை

இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல்' என்றருளினார்.

பொருளல்லவரைப் பொருளாகச் செய்யுங் குணமுடைய ஒரு பொருளும் பொருளாமா? அப்பொருளல்லதில்லை பொருள் என்றது, சிற்றின்பப் பொருளை. பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும் போலிப் பொருளையே பொருளென் றுணர்ந்து மயங்குவதால் ஒருவற்குப் பிறவிநோய் அதிகரிக்கும் என்று, நாயனார்,

'பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானா மாணாப் பிறப்பு' என்றருளிச் செய்தார்.

பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும் போலிப் பொருளே பொருள்; இதைவிட மெய்ப் பொருள் வேறில்லை யென வாளா இருந்து வாணாளை வீணாளாக்காமல் மாண்புபெற,

'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு' என்றும்

தமிழ்வேத முறையிடுகிறது. ஆகையால் இந்தப் போலிப்பொருள் எத்தனைதான் இகசுகமாகிய சிற்றின்பத்தைத் தருவதானாலும், இது மெய்ப் பொருள் அல்ல. பேரின்பத்தைத் தரூஉம் மெய்ப் பொருளுணர்ந்து வாழ்பவனே பரமஞானி. இகசுகமாகிய சிற்றின்பத்துக்கு எங்ஙனம் இந்தப் போலிப் பொருள் காரணமா யிருக்கின்றதோ, அங்ஙனமே, பரசுகமாகிய பேரின்பத்துக்கு உண்மை அருள் காரணமாக இருக்கின்றது; இதுபற்றியே நாயனாரும்,

'அருளிலார்க் கவ்வுலக மில்லைப் பொருளிலார்க்
கிவ்வுலக மில்லா கியாங்கு' என்றருளிச் செய்தார்.

இந்தப் போலிப் பொருளை ஒருவன் பெற்றிழந்தானானாலும் மறுபடியும் பெற்றுக்கொள்ளலாம்; இது சுலபம். உண்மை அருளை ஒருவன் இழந்தானானால், மறுபடியும் பெறல் அரிது. இது பற்றியே தமிழ் வேதம்,

'பொருளற்றார் பூப்ப ரொருகால் அருளற்றார்
அற்றார்மற் றாத லரிது' என்று முறையிடுகின்றது.

ஆதலால், பிறவிக் கோடையில், ஊழ்வினைச் சூரிய வெப்பத்தைத் தடுத்துக்கொள்ளவேண்டிய ஒருவன், உண்மை அருட்குடையைப் பெற வேண்டும்.

'அறனீனும் இன்பமு மீனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்' என்றபடி,

'அறஞ் செய்வானுக்குப் பொருள் முக்யமாயிருக்கின்றதே; அஃதின்றி அறமும் இன்பமும் நிலைபெறாதே; அதனாலேயே அல்லவா, அறம் பொருள் இன்பம் என்ற முறையில், பொருளை இடையில் வைத்துச் சொல்லுகிறார்கள்; பொருள் இருந்தால்தானே, முன்னையதாகிய அற



மும், பின்னையதாகிய இன்பமும் நிலைபெறும்?" என்றெண்ணுவோமானால், இது பிசகாய் முடியும்.

'அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்' என்று

நாயனார், அறம் என்பதற்குப் பொதுப்பட இலக்கணம் கூறி யிருக்கின்றனர். அறஞ் செய்வோனுக்கு நான்குவித முக்ய குணங்கள் கூறி, அவைகளில் அவா என்பதையும் சேர்த்து, அதனைக் குற்றமாக நீக்கி வைக்கவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அறஞ் செய்வதற்குப் பொருளே முக்ய காரணமானால், அது செய்வோனுக்கு அவா கூடாது என்று நாயனார் சொல்லி அருளார். அவாவின்றிப் பொருள் எங்ஙனம் சேகரமாகும்? பொருள் சேர்த்தே அறம் செய்யவேண்டும் என்பது சாம்பிரதாயமன்று. அறங்களைப் பொருளின்றியே ஒழுங்குபெறச் செய்யலாம் என்பதனை எண்ணியே,

'ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்' என்று

கூறப்பட்டிருக்கின்றது. அறம், மனதாலும் வாக்காலும் காயத்தாலும் செய்யப்படலாம். பொருள் இருப்பினும், இம்மனவாக்குக் காயங்களின் உதவியின்றி அறம் நிலைபெறாது. ஆகையால் அறம் செய்வோனும் அவாவற்று விளங்குவானானால், சிறப்பென்னும் செம்பொருள் காண்பான். இல்லறம் செய்வோனுக்கும் துறவறஞ் செய்வோனுக்கும் எக்காலத்திலும் அவா கூடாது. துறவற மேற்கொண்டானுக்கு அருளே முக்யம்; இல்லற மேற்கொண்டானுக்குப் பொருளே முக்யம் என்பதனால், இல்லறத்தான் பொருளைத்தேடி நல்வழியில் செலவு செய்யலாகாதோவெனின், ஆகா தாகாது. அருள் என்னும் ஒளியைத் தேடாது, பொருள் என்னும் இருளை நாடிச்செல்பவன், கண்தெரியாது அவா என்னும் சேற்றில் விழுந்து, அதனை உடம்பெல்லாம் பூசிக்கொண்டு, பிறகு, அறம் என்னும் நீரால் அதனை அலம்ப முயல்வதினும், அதனை நாடாமலே விடல் நன்றாகும். பொருள் என்னும் இருட்டில், அவாவென்னும் சேற்றில் வீழ்ந்து அலைகிறகாலத்தில் எத்தனையோ மறங்களைச் செய்ய நேரிடும். அவா என்னுஞ் சேற்றில் அழுக்காறு அதாவது பொறாமை, கோபம், கடுஞ்சொல் என்கிற துர்வாசங்கள் வீசிக்கொண்டே யிருக்கும். இப்படிப் பொருள் என்னும் இருட்டில் அலைபவன் உண்மையாகவே மறஞ்செய்பவன் ஆவானன்றி, அறஞ்செய்பவன் ஆகான். ஒருகால் அவன் அதிசாக்ரதையாய் அப்பொருளாகிய இருளைத்தேடி அதுகொண்டு அறம்செய்தான் ஆனாலும், அவன் செய்த மறமும் அறமும் சரியாய்ப் போய்விடும். ஆகையால் சேற்றில் விழுந்து, அதனை, ஒருவன் தனது உடம்பெல்லரம் பூசிக்கொண்டு, பிறகு கழுவ முயல்வதினும், அதற்குமுன்பே, அதிலிருந்து விலகிப்போவானானால், புத்திசாலி என்னப்படுவான் அல்லவா? என்பது பொருள்.

மேற் கூறியபடி எல்லாவிதத்திலும் இழிந்ததாகிய பொருள் என்னும் இருளைத் தேடுங்கால், மறஞ்செய்து, பிறகு, அது நீங்க, அறஞ்செய்வதினும், சும்மா இருப்பது சுகம். ஏனென்றால், பணந்தேட முயல்பவர்,

'மானங் குலங்கருதார் வண்மைபறி வுங்கொள்ளார்
தானந் தவந்தனையுந் தள்ளுவார்—ஆன
குணம்பெறினும் கொள்ளார் குவலயந் தன்னில்
பணம்பெற்றாற் போதுமென் பார்'

'நித்திரையுங் கொள்ளார் நிதம்பணத்தை யெண்ணியெண்ணி
முத்திரையும் வைக்க முயல்வார்கள்—கொத்தி
ரணம்பெறினும் அஞ்சாரி ராக்கதர்கள் என்றும்
பணம்பெற்றாற் போதுமென் பார்'

'சத்தியத்தைக் கைவிடுவார் சாத்திரத்தி லேசொல்லும்
நித்தியத்தை நித்தியமாய் ஆதரிப்பார்—நத்தி
வணங்கலா தாரை வணங்குவார் என்றும்
பணம்பெற்றாற் போதுமென் பார்'

'மானத்தை எண்ணார்; குலதருமம் பாரார், ஈகையையும் அறிவையும் கைவிடுவார்; தானம் தவம் வேண்டார்; பிறரிடத்திலுள்ள நற்குணம் நாடார்; தூக்கத்தை நீக்குவார்கள்; நாள்தோறும் இராக்காலத்தில் பணத்தை எண்ணி யெண்ணிக் கணக்கிட்டுப் பையில் போட்டு முடிந்து முத்திரை வைப்பார்கள்; திருடர் முதலியோர் கத்தியால் கொத்தி இரணம் உண்டாக்கினாலும் பயப்படமாட்டார்கள்; இராக்கதர்கள் மானிட உருவம் தாங்கி வாழ்வது போல்வார்கள்; சத்தியத்தைத் தூரத்தியடிப்பார்கள்; சாத்திரங்களில் சொல்லிய சரீரம், பொருள் முதலிய அநித்யப் பொருள்களை, நித்யமாய் எண்ணியிருப்பார்கள்; பொருள் வந்தாற் போதுமென்று, வணங்கத்தகாதவர்களையும் வணங்குவார்கள். ஆகையால், பணம் தேடுங்கால் உள்ள தீமைகளை ஓர்ந்து அதன்மேல் வெறுக்கைவைத்து வாழ்ந்து, வெறுக்கையென்னும் அதன் பெயரை விளக்கவேண்டும்,

'பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு' என்றபடி,

உண்மை அருளால் உண்மைப்பொருளை நாடல் உத்தமம். அங்ஙனம் நீ உண்மைப் பொருளை நாடிப் பாண்டுரங்கனே எல்லாமாய் இருப்பதனை உணர்ந்து வாழ்வையேல்,

'கடனாக நான் கொள்வேன் காதலுள அன்பன்
உடல்பொரு ளாவியனைத்தும்' என்றபடி,

பாண்டுரங்கனே, உனது உடல், பொருள், ஆவிக்குத் தலைவனாய் விடுவான் அப்போது,



'இருள்சேரிருவினையுஞ் சேராவிறைவன்
பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு' என்றபடி,

உன்னை இருவினைகளுந் தொடர்ந்து வருத்தமாட்டா. என் வார்த்தைகளை அநாதரவுசெய்யாதே. நீ, வாஸ்தவத்திலேயே ஞானவானாக முயற்சிசெய். ஏன் வேஷதாரியாக நடிக்கின்றாய்? பரிசவேதி ஆசையை அகற்றிவிடு" என்று பிரசங்கித்துப் பரிசபாகவதரைத் தம் வசப்படுத்த முயன்றார். அதுகேட்ட பரிசபாகவதர்,

"எத்தனை விதங்கடான் கற்கினும் கேட்கினும்
என்னிதயமு மொடுங்கவில்லை யானெனும்
அகந்தைதான் எள்ளளவும் மாறவில்லை" என்றபடி,

ஒரேபிடிவாதமாய், "உனது உபதேசம் போதும்; இனி அதனை நிறுத்து. நீ எழுந்து ஆற்றுக்கு வந்து, எனது பரிசவேதியைத் தண்ணீர்க்குள்தேடி யெடுத்துக்கொடு. இல்லாவிட்டால் உன்னைச் சும்மா விடமாட்டேன்" என்று கர்ணகடோரமாய்ப் பேசினார். இப்போது, பரிசபாகவதர் நிலை, இன்னும் பழாநிலை; விஸோபாகேசரை அடுத்து உபதேசம் பெறுமுன் இருந்த நாமதேவர் நிலையோடு ஒப்பிடக்கூடியதாயிருந்தது. ஆதலால், அவர் உண்மை யறியமாட்டாமல் ஒரேபிடிவாதமாய்ப் பேசினார். இதுதான் பொருள் என்னும் இருளிற்பட்டோன் இருப்பு. இதனை நன்குணர்ந்த நாமதேவர், உடனே எழுந்து, பரிசபாகவதருடன் ஆற்றுக்குப்போய், தண்ணீரில் இழிந்து, இரு கரங்களிலும் கற்களை எடுத்து, "இவைகளில் உனது பரிசவேதியை எடுத்துக்கொள்" என்றார். அப்போது அந்தக் கற்கள் யாவும் பரிசவேதிகளாகவே இருந்தன. அதனைக்கண்டார் யாவரும் அதிசயித்து,

(ஓடும் பொன்னும் ஒக்க நோக்குவார்)

என்று ஞானிகளின் தன்மையைக் கூறிய கீதாவாக்கியத்தின் உண்மையை, இன்றைக்கு நாமதேவர் விஷயத்தில் அநுபவ ஸித்தமாய்க் கண்டோம் என்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டார்கள்.

இவ்வதிசயத்தைக் கண்டவுடனே பரிசபாகவதர்க்கு, நாமதேவ சூரிய ஒளியால் ஞானோதயமாயிற்று.

'கன்னிகை ஒருத்தி சிற்றின்பம் வேம்பென்னினுங்
கைக்கொள்வள் பக்குவத்தில்' என்றபடி,

பரிசபாகவதர், தாமே, நாமதேவரைநோக்கி "ஓ ஸ்வாமி! அடியேனுக்கு ஞானோபதேசம் செய்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தார். நாமதேவர், சந்தோஷித்து, தமது கையிலிருந்த கற்களை ஆற்றிற் போட்டுப் பரிசபாகவதர்க்குப் பரமஞானத்தை உபதேசித்தார்.

ஸ்ரீ முகுந்தாயநம:

## இருபத்தொன்றும் அத்தியாயம்

# ஜகந்மித்ர நாகநாதர் சரித்திரம்

வைத்யநாதம் என்னும் பட்டணத்தில் நாகநாதர் என்னும் ஒரு பாகவதர், பிராமண குலத்தில் பிறந்து,

శమోదమస్తపశ్శౌచం । క్షాంతిరార్జవమేవచ ।
జ్ఞానంవిజ్ఞానమాస్తిక్యం । బ్రాహ్మంకర్మస్వభావజం ॥

"கற்றறிவு குலமேன்மை கருணைபெரும் புகழ்தூய்மை கைம்மா றெண்ணு, நற்றுதவுங் கொடைபொறுமை ஒழுக்கமருந் தவநியமம் உறவின் கேண்மை, மற்றெநிரி லாதபர ஞான முண்மை மோகமின்மை வணக்கம் யாவும், பெற்றுதிரு மாலடிகட் கழியாத பக்தியுற்றுப் பிறங்கி னால்" என்றபடி,

கலைஞானம், குலமேன்மை, இரக்கம், புகழ், மனத்தூய்மை, கைம்மாறு வேண்டாத கொடை, பொறுமை, நல்லொழுக்கம், நோன்பு, சுற்றந் தழாஅல், நிகரற்ற ஈச்வர ஞானம், வாய்மை, ஆசையின்மை, அடக்கம் முதலிய எல்லாவற்றையும் பெற்று, அவைகளுக்கு, அலங்காரமாகத் திருமாலடிகளில் அழியாத பக்தி பூண்டு வாழ்ந்தார்.

அவர், குடும்பி ஆதலால், ஊர்க்குள் பிச்சை யேற்றுண்டு, இரவும் பகலும் எந்நேரமும் பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டிருந்தார். அவ்வூர்ப் பிரஜைகள், அவர் பாடும் கீர்த்தனங்களை, மிகவும் அன்போடு கேட்டு, அவரை, ஸாக்ஷாத் பாண்டுரங்காவதாரமென்று, கொண்டாடினார்கள். இவர் தமது நற்குணங்களால், அனைவருக்கும் மித்ராராயிருந்தார். ஆகையால், இவர்க்கு ஜகந்மித்ர நாகநாதர் என்ற பெயர் விளங்கியது.

వసతిహృదిసనాతనేచవిష్ణౌ । భవతిపుమాన్ । జగతోస్యసౌమ్యరూపః ।
క్షితిరసమతిరమ్యమాత్మనోంతః । కథయతిచారుతయైవసాలపోతః ॥.

"தானிருக்கும் நிலவளத்தை மரந்தலையாற் காட்டுகின்ற தன்மை போல, ஊனிருக்கும் மனத்தகத்தில் உலகளந்தோன் இருக்கின்ற உண்மை தன்னைத், தேனிருக்கும் நல்லகுணப் பெருந்தகை யாகிய ஒருவன் தெரிக்கு மாறு, வானிருக்கும் தேவருக்கும் அறிவரிய சாறுவென வயங்கு வானல்" இதற்கு,

மரமானது, தானிருக்கும் நிலவளத்தைத் தனது தலையாலே காட்டுகிறபடி, தனக்கும் பிறர்க்கும் இன்பந்தரும் நல்ல குணத்தையுடைய யோக்கியனாகிய ஒருவன், தனது மனத்தில் ஸநாதனனாகிய விஷ்ணு வாழ்கின்ற விதத்தைப் பிறர்க்குத் தெரிவிக்கு நிமித்தம், தேவர்க்கும் அறிதற்கரிதாகிய பரம ஞானியாய் விளங்குவான் என்பது பொருள். இது ஸ்ரீவிஷ்ணு புராணத்தில், யம கிங்கர ஸம்வாதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. அதிற்கூறிய இலக்கணங்கள் இந்த ஜகந்மித்ர நாகநாத



ரிடத்தில் பொருந்தியிருந்தன. இங்ஙனம் இருக்கும் நாட்களில், அவ்வூரில் வசித்த சில துஷ்டர்கள்,

"வைகலு நீருட் கிடப்பினும் கல்லிற்கு
மெல்லென்றல் சால வரிதாகும்—வைகலும்
நல்லறங் கேட்பினும் கீழ்கட் குருகாது
கல்லினும் வல்லென்னு நெஞ்சு" என்றபடி,

கடினசித்தம் உடையவர்களாய், பொறாமை மிகுந்து, துரியோதனாதி துன்மார்க்க சங்கத்தார்,

"ஐவரும் ஆருயிர் ஆவா ரெனக்கென
மைவணக் கண்ணன் வகுத்தான் மகிழ்ந்தே" என்றபடி,

ஸ்ரீ கிருஷ்ணனுக்குப் பிராண நிலயமாயிருந்த பாண்டவர் ஐவரையும் வெறுத்துத் தூஷித்ததுபோல, நல்லோர் நட்பையே விரும்பிய ஞானியான ஜகந்மித்ர நாகநாதரைத் தூஷித்து வைதார்கள். அவர்களில் ஒருவன், ஒருநாள், அரை இரவில், இவர் வீட்டில் நெருப்பு வைத்தான். அந்நெருப்பு, எங்கும் பரவி, வீடுபற்றி எரிகிறபோது, இந்த பரமபாகவதர் விழித்துக்கொண்டு,

"தன்மைக்குநீ அடியேனுடைச் சலிகைக்குநீ பொலிகைக்குநீ
மென்மைக்குநீ வன்மைக்குநீ மிகுதிக்குநீ தகுதிக்குநீ
புன்மைக்குநீ புலமைக்குநீ பொறுமைக்குநீ மறுமைக்குநீ
நன்மைக்குநீ துன்மைக்குநீ நாராயணா நாராயணா" என்றபடி,

தாம், பகவத்விஷயத்தில் மிகவும் ஈடுபட்டிருக்கிறவர் ஆனபடியால்,

'நல்வினை யாளர் நமனைத் தமனெனக்
கொல்வினை நீங்கக் குறித்துநிற் பாரே' என்றபடி,

தமது நல்வினை முதிர்ச்சியால், நமனைத் தமது பிரியமுள்ள விருந்தாளியாய் மதித்து, "இன்றைக்கு, நமக்குத் தீராத பகையாயுள்ள இக்குடும்ப கோஷத்தைக் குலைத்துப் பகவான், அனுக்கிரகிப்பார்" எனத் தீர்மானித்துப் பகவந்நாம தியானம் பண்ணிக்கொண்டிருந்தார். அப்போது பண்டரிநாதன், பிரத்தியக்ஷமாய், அவரிடத்துக்கு வந்து, அஸ்வத்தாமனுடைய அம்பினால் அழிந்துபோகாமல் பரீக்ஷித்தனைக் காத்ததுபோல இவரைக் குடும்பத்துடன் காத்தருளினன். அவ்வூரார் அனைவரும் விரைந்தோடி வந்து, அநுதாபம் மிக்கவர்களாய், சிந்தை மெலிந்திருக்கையில், அவர்களிற் பரமபாகவதர்களாகிய சிலர், "இந்த நல்லார் வீட்டில், எவனோ நாசகாலன் தீமூட்டினான்; பக்தவத்ஸலனும், ஆபத்பாந்தவனுமாகிய புண்டரீக வரதன், இச்சமயத்தில், எழுந்தருளிவந்து, இம்மஹானை இரக்ஷிக்கவேண்டும்" என்றார்கள். வேறு சில பரமதுஷ்டர், சந்தோஷித்தார்கள். அவ்வீடு இரவெல்லாம் எரிந்துகொண்டிருந்தும், ஒரு துரும்பும் உள்ளே விழாமல், நீறாய், ஆகாசமார்க்கத்திற் பறந்துபோயிற்று. பாகவத சிகாமணியான ஜகந்மித்ர நாகநாதர்க்கு

இந்த நெருப்பால் ஒருபத்ரவமும் நேரிடவில்லை. ஹிரண்யகசிபனால், அக்னியில் எறியப்பட்ட பிரகலாதனுக்கு அந்த அக்னி குளிர்ந்திருந்தபடி, இந்த நெருப்புந் * தண்ணென்றிருந்தது. ஸ்ரீ பண்டரிநாதனுடைய பரம கிருபையால், ஜகந்மித்ர நாகநாதர், குடும்பத்துடன் சுகஜீவியாய் விளங்கினர். இவ்வற்புதத்தைக்கண்ட பக்தர் அனைவரும், ஸ்ரீமத் பாண்டுரங்கனுடைய தன்னருளைப் பலவாறு துதித்துக் கொண்டாடினார்கள். இந்த பரம வைஷ்ணவர் விஷயத்தில், காரணமின்றி † வன்பு பூண்டிருந்த துஷ்டர்களுக்குப் பகவத் கடாக்ஷத்தால், அநுதாபம் உண்டானபடியால், அவர்கள், ஜகன்மித்ர நாகநாதர் ஸந்நிதிக்கு வந்து, அவர் திருவடிகளில் சரணடைந்து, அபராத மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, அவரால் நற்புத்தி கூறப்பெற்றுப், பரம ஸாதுக்களானார்கள். அந்த கிராமவாஸிகள், இவரிடத்திற்கு வந்து, "விப்ரோத்தம! உமது குடும்ப ஸம்ரக்ஷணையின் பொருட்டுக் கொஞ்சம் விளைநிலம் ஏற்பாடு செய்கின்றோம்; தேவரீர் அதனை அங்கீகரிக்கவேண்டும் எனப் பிரார்த்தித்தார்கள். அதற்கு, அவர், பக்ஷிகள் சோலைகளிலுள்ள பழங்களைத் தின்று, குள நீரைக் குடித்துப் பிழைப்பனபோல, நான் ஒருவருக்கும் வருத்தம் தராமல், அக்ஷயபாத்ர விருத்தி பண்ணிக்கொண்டு, அதனாலேயே, யாதொரு குறைவுமின்றி ஸ்ரீமத் பாண்டுரங்கன் பதங்களை நேசித்துப் பூசித்து, அவனுடைய பரமகல்யாண குண கணங்களைத் தியானித்து,

"வீட்டுக்குளே துணையாவதும் வெளியிற்குளே துணையாவதும்
கூட்டுக்குளே துணையாவதும் குன்றுக்குளே துணையாவதும்
காட்டுக்குளே துணையாவதும் கடலுக்குளே துணையாவதும்
நாட்டுக்குளே துணையாவதும் நாராயணா நாராயணா" என்றபடி,

அவனே எனக்குப் பெருந்துணையாக மதித்து,

"மதியா ரிகச்சுகங் காதலி யாரண்டர் வாழ்வினையும்
துதியார் பிறதெய்வ மஞ்சார்வெங் கூற்றுக்குஞ் சொன்மறைதேர்
விதியாரை யீன்ற திருவுந்தி யார்வட வேங்கடமாம்
பதியா ரிருதிருப் பாதாம் புயத்தைப் பணிபக்தரே" என்றபடி,

வாழ்கின்றவர்களும், சாக்ஷாத் பாண்டுரங்கநாத சொரூபிகளுமான பக்தர்களை ஆராதித்து, அவர்கள் ‡ மிச்சிலை § மிசைந்து, வயிற்றுத்திரத்தை அடக்கிக்கொண்டு சுக புருஷனாய் வாழ்வேன்.

"சுருக்காமருந் துடற்கூறியே சுழற்றுமருந் தழற்றீயிலே
உருக்காமருந் துலர்த்துண்டையா வுருட்டாமருந் துழக்கெண்ணெயில்
கருக்காதருந் திகற்கையிலே கசக்காமருந் திருக்கையிலே
நருக்காமருந் திருக்கின்றதே நாராயணா நாராயணா" என்றபடி,

அஷ்டாக்ஷர மருந்தெனக்கு ஆஸ்தியாய் இருக்கின்றது. ஆகையால் எனக்கு ஒரு குறைவும் இல்லை. என்னால் விரும்பப்பட்ட பாத்திரம்

* தண் - குளிர்ச்சி. † வன்பு - விரோதம். ‡ மிச்சில் - எச்சில்.
§ மிசைந்து - சாப்பிட்டு.



அக்ஷயபாத்திரம். அக்ஷயம் என்றால் குறைவற்றது என்பது பொருள். அது என்றென்றும் குறைவற்றதாய் இருக்கையில், எனக்குக் கவலையேது? நீங்கள் என் விஷயத்தில் பிரயாசைப்படவேண்டாம். உங்களுக்குப் பகவான் கிருபைசெய்வான்" என்று கூறினர். அம்மொழிகளைக் கேட்ட ஊரார், அவரிடத்தில் தமக்கிருந்த உள்ளன்பு காரணமாக, அவர் சொற்படி அக்காரியத்தை விட்டுவிடாமல், மிக முயன்று,

"ஒல்லுந் துணையால் அறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்" என்றபடி,

அவர் பெயரால் ஒரு கிராமம் ஏற்படுத்தி, அதன் வரும்படியைத் தருமத்துக்கு விநியோகித்து வந்தார்கள்.

சிலகாலஞ் சென்ற பிறகு, அந்தக் கிராமம், ஒரு துருக்க அரசன் ஆட்சிக்குட்பட்டது. அவ்வரசன், ஜகந்மித்ர நாகநாதர் பேரால் வழங்கிய அக்கிராமத்தை, துரைத்தனத்துக்குச் சொந்தமாக்கிக் கொண்டான். அவ்வூராரனைவரும் அத்துருக்க அரசனிடத்திற்குப்போய், ஜகந்மித்ர நாகநாதருடைய பெருமையை எடுத்துக் கூறி, கிராசையாளராகிய அவர் பேரால் ஏற்படுத்தித் தரும காரியங்களுக் குபயோகித்துக் கொண்டு வந்த கிராம நிலங்களை, எப்போதும்போல, தமது சுவாதீனஞ் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அவ்வதிகாரி, ஜகந்மித்ர நாகநாதரை வரவழைத்து, "உன் பெயர் என்ன?" என்று கேட்டு, "நீ, ஜகந் மித்ரனாதல் உண்மையாகும் பக்ஷத்தில், ஸர்வ பிராணிகளுக்கும் மித்ரனாக இருக்கவேண்டும் அல்லவா? எங்களுக்கு நெடுநாளாக, புலி, குலதெய்வமாயிருக்கின்றது, இப்போது, அதனைப் பூசிக்கும் நாளும் வந்தது. நீ காட்டுக்குப்போய், இன்று சாயங்காலத்திற்குள்ளே, ஒரு பெரிய புலியைப் பிடித்துக்கொண்டு வா. அங்ஙனம் செய்யாயானால், இந்நிலங்கள் உன்பேரால் செய்யப்பட்ட அந்நாள் முதல் இன்றளவும் இவைகளுக்குச் சேரவேண்டிய தீர்வையை, உன்னிடத்தில் வற்புறுத்தி வாங்குவேன். புலியைக் கொண்டுவந்துவிட்டால், நீ, உண்மையில் ஜகந் மித்ரனென நம்புவேன்" என்று கூறினான். அதற்கு அவர் சம்மதித்து, காட்டகத்திற்சென்று, ஸ்ரீ பாண்டுரங்கனை தியானித்துக்கொண்டிருந்தார். பக்தர்க்கு எய்ப்பில் வைப்பாகும் ஸ்ரீ புண்டரீக வரதன் ஒரு பெரிய புலியாய், அவர்க்குக் காட்சி தந்தான்.

"வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும்" என்றபடி,

ஞானயோக நிஷ்டா பரராகிய தவசிரேஷ்டர்க்கு அசாத்திய காரியமும் உண்டோ? அப்புலிவடிவந் தாங்கிய புண்டரீக வரதனைக் கண்டவுடன், ஜகந்மித்ர நாகநாதர், பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து,

"ஒருபொரு ளல்லேன் இருவினை யுடையேன்
உனது தொண் டெனுந்துறை குறித்தன்

பெருகுதன் னவிரியின் பாசந் தொட்டிழிந்து
பெரியதோர் முத்தியான் பெற்றேன்
திருவுமா மணியுஞ் சங்கமு மேந்திச்
செய்யதா மரைபல பூத்துக்.
கருநிற முடைத்தாய் நதியொரு தரங்கம்
கலந்ததோர் கருணை வாரிதியே" எனத்

துதித்து, கிராமாதிகாரி சொன்ன வார்த்தைகளை விண்ணப்பஞ்செய்து, "ஓ ஜகதீசா! நீ, அவன் வீட்டுக்கு, இந்தப்புலி உருவத்துடன் வந்து, அவன் பூஜையை அங்கீகரித்து, என்னைக் காக்கவேண்டும்" எனப் பிரார்த்தித்தார். பண்டரிநாதன் ஸம்மதித்து, "உனது அங்கவஸ்திரத்தை எனது கழுத்திற்கட்டி, என்னைப் பட்டணத்துக்குப் பிடித்துக் கொண்டுபோ" என்று நியமித்தான். அதுபோலவே, ஜகந்மித்ர நாகநாதர் அப்புலியைப் பிடித்துக்கொண்டு, பட்டணத்திற்கு சமீபத்தில்வருகையில், அங்கிருந்த பசுக்களும் மனிதர்களும் பயந்து கோட்டைக்குள் ஓடி ஒளித்துக்கொண்டார்கள். அநேகர், ஜகந்மித்ர நாகநாதர் பிரபாவத்தையும், அத்துருக்க அரசனால் அந்த கிராமத்துக்கு வரப்போகிற கேட்டையும் அநேகமாய் எடுத்துக் கூறினார்கள். அங்ஙனம் இருக்க, கிராமாதிகாரி, இவ்விருத்தாந்தத்தைக் கேட்டு, பயந்து, வீட்டுக்குள் நுழைந்து கதவைச் சாத்திக்கொண்டு ஒளித்திருந்தான். ஜகந்மித்ர நாகநாதர், கோட்டை வாசலுக்கருகில் வருகையில், கதவு மூடியிருந்தபடியால், புலியுருவந்தாங்கிய புண்டரீகவரதன், உரக்கக் கர்ச்சித்து, தனது கைகளால் மோதியடித்து, அந்தக் கதவை உடைத்துப் பொடியாக்கினன். அவர், உள்ளே நுழைந்து, புலியைக்கண்டு பயந்த சாதுக்களைத்தேற்றி, அதிகாரி வீட்டுவாசலில் வந்தபோது, அங்கே மூடியிருந்த கதவைப், புலியுடைத்தெறிந்தது. அவர், அவ்வதிகாரியை அழைத்து, "உங்கள் குலதெய்வம் எழுந்தருளியது; ஏன் அதனைப் பூசிக்காமல் கதவை மூடிக்கொண்டாய்? என்று கூற, அவ்வதிகாரி, அதிகமாய் பயந்து ஒருமூலையிற் பதுங்கிக்கொண்டான். புலி, மிக உக்ரமாய்க் கர்ஜித்துக்கொண்டிருந்தது. அவர், அப்புலியைப் பலவிதமாய் ஆட்டி வேடிக்கைகாட்டி அதனோடு உறவாடிக் கொண்டிருந்தார். அப்போது அவ்வதிகாரி, உள்ளிருந்தபடியே, குடும்பத்துடன், ஜகந்மித்ர நாகநாதரைத்தொழுது, அழுது, "ஏ, மஹாத்மா! என்னைக் காத்தருள்க" எனப் பிரார்த்தித்தான். அதற்கு அங்கிருந்த ஸாதுக்கள் அனைவரும் நகைத்தார்கள். ஜகந்மித்ர நாகநாதர் சிறுநகை புரிந்தார். புலியும் அடங்கியிருந்தது. பிறகு, அவ்வதிகாரி, கொஞ்சம் தைரியமடைந்து, வீடுவிட்டு வெளியேவந்து, ஜகந்மித்ர நாகநாதர்க்கு ஸாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, தூரத்திலே நின்றுகொண்டு, கை கட்டி, "ஓ, பாகவத முதல்வ! எனக்குப் புத்தி வந்தது, ஜகந்நாதன் பக்திவலையிற் படுபவன் என வுணர்ந்தேன், இனி என்றென்றும் இப்படிப்பட்ட அபசாரத்துக்கு ஆளாக மாட்டேன். தேவரீர், ஜகந்மித்ரர் ஆகையால் ஜகத்தைக் காத்தருள்க. நானும் மற்ற ஜனங்களும், மிகவும் பயந்திருக்



கின்றோம். தேவரீர் எம்மேற் கருணைகூர்ந்து, இப்புலியைக் கொண்டுபோய், எப்போதும்போலக் காட்டகத்தில் விடுத்து, ஏழைகளாகிய எங்களையெல்லாம் இரக்ஷிக்கவேண்டும்" என்று,வேண்டி வணங்கிடந்தான். அந்த பிரார்த்தனைக்கு இரங்கி,ஜகந்மித்ர நாகநாதர்,"இனி, நீ, இப்பேர்ப்பட்ட அக்ரமங்களுக்கு மடிகட்டாதே; சாதுக்களைப் பூசித்து நேசித்துப் பகவந்நாமங்களை உச்சரித்து, குடிகளை, உத்தம அரசநீதியால் ஆண்டு, பல்லாண்டு பல்லாண்டு வாழக்கடவாய்" என்று கூறி,புலியைப் பிடித்துக்கொண்டு காட்டுக்குப்போய், அதன் கழுத்திற் கட்டியிருந்த தமது அங்கவஸ்திரத்தை அவிழ்த்துவிட்டார். உடனே, விட்டலநாதன், அவர்க்குக் காட்சிதந்து,அவரைத் தழுவிக்கொண்டு, "நீ பட்டணம்போய், எப்போதும்போல என்னைத் தியானித்துக்கொண்டு, சுகமாய் இரு" என அருள்புரிந்து மறைந்தான். பிறகு அந்த பாகவத முதல்வர், பட்டணத்துக்கு வந்துகொண்டிருக்கையில், அவ்வதிகாரி முதலாகிய அந்த கிராமவாசிகள் அனைவரும்,பயபக்தி விசுவாசத்துடன் தீர்த்த பூரணகலசங்கள் எடுத்து, அவரை எதிர்கொண்டுவந்து, ஸாஷ்டாங்கமாய் வந்தனம்செய்து, உபசரித்து, பகவந்நாமங்களைக் கோஷித்துக்கொண்டு, அவரைத் தலைவராக்கிப் பின்தொடர்ந்து வந்தார்கள்.

பக்தவத்ஸலபாயநமஃ

# இருபத்திரண்டாம் அத்தியாயம்

# சோக்காபரமானந்தர் சரித்திரம்

பாரிவி என்னும் ஊரிலே, அகண்ட வைராக்யசீலரும், அனவரதமும் தம்மைமறந்து பகவந்நாம தியானம் செய்துகொண்டிருப்பவரும் ஆகிய சோக்காபரமானந்தர் என்னும் ஒருபாகவதர் இருந்தார். அவர், தினந்தோறும் வைகறையில் விழித்தெழுந்து, தியான ஸ்நான ஸந்தியாவந்தனங்களை முடித்து, ஸர்வோபசாரங்களுடன், பகவானை ஆராதித்துப் பகவத்கீதையைப் பாராயணம் பண்ணிக்கொண்டிருப்பார்.

భగవతః పరమేశాన । భక్తిరవ్యభిచారిణీ ।
ప్రారబ్ధం భుజ్యమానస్య । కథం భవతి హే ప్రభో ॥

என்றால்

"உலகினை அளந்த ஒருதனி முதல்வ
ஊழ்வினை வசப்பட்டுழலும் ஒருவன்.
உன்னை வணங்கும் உத்தம பக்தி
எங்ஙனம் பெறுவன் இதனை
விளங்க வெனக்கு விளம்புவை நீயே" என்றால்,

'உலகத்தை அளந்த ஒரு தனி முதல்வனாகிய ஓ ஸ்வாமி! ஊழ்வினையை அநுபவிக்கும் ஒருவனுக்குப் பரம பகவத்பக்தி எங்ஙனம் கிடைக்கும்?

இதனை, நீ, எனக்கு விளங்கச் சொல்லுவாயாக' என்று பகவானை நோக்கிப் பூமாதேவி கேட்டாள். அதற்குப் பகவான்,

"ஊழ்வினை வலியால் உழல்பவ னேனும்
பகவத் கீதையிற் பரிந்தன வாதமும்
பக்தியா லதைப்பா ராயணஞ் செய்வோன்
முக்தனாய் வாழ்ந்து மூவா இன்பம்
துய்த்துக் கருமந் தொலைய நிற்பானே" அதா அன்று,

"பகவத் கீதையை மிகவும் விரும்பி
மனப்பா டஞ்செய் மாண்புடை யவரைத்
தாமரை யிலையிற் றண்ணீர் ஒட்டாத்
தன்மை யேபோல் வன்மை யாகிய
ஊழ்வினை ஒட்டா தோடும் அன்றே" அதா அன்று,

"பகவத் கீதையைப் பரிந்து தீட்டிப்
புத்தக மாகப் பொலிவித் ததனை
வைத்த இடத்திலும் மற்றதைப் பாரா
யணஞ்செய் யிடத்திலும் மணஞ்செய் தீர்த்தமாம்
கங்கை முதலிய கணக்கிலா நதிகள்
நெருங்கி யிருந்து நிலவு மன்றே" அதா அன்று,

"பகவத் கீதையைப் பரிந்துவா சிப்போர்
தமக்கநு கூலமாய் ஸமஸ்ததெய் வங்களும்
முனிவரும் யோகரும் மூவா வுரகரும்
கோபா லர்களுடன் கோபியர் அனைவரும்
நாரதர் உத்தவர் நாரணை னடியவர்
யாவரும் வந்திருந் தோவற விளங்குவர்" அதா அன்று,

"எங்கே கீதை சங்கையற் றோதப்
படுமெங் கேயுப தேசம் பண்ணப்
படுமெங் கேசிர வணம்பண் ணப்படும்
எங்கே கீதை உரையியம் பப்படும்
அங்கே நானும் அமர்ந்திருப் பேனே" அதா அன்று,

"நானே கீதையில் நனிமகிழ் கின்றேன்
தேனேர் மொழிப்பூ மானே கேளாய்
அதுவே எனதகம் ஆகுமற் றதனைப்
பாரா யணம்பண் ணுவதால்
பல்லுல குயிர்களைப் பாலிப் பேனே" என்றால்,

'ஊழ்வினையை அநுபவிக்கின்றவனாயினும், பகவத் கீதையை அனவரதமும் அன்புடன் பாராயணஞ் செய்பவன், ஜீவன் முக்தனாய், என்றும் அழியாத பேரின்பம் நுகர்ந்து, கருமக் கட்டற விளங்குவான். பகவத் கீதையை மனப்பாடஞ் செய்பவனைத் தாமரையிலையில் தண்ணீர் ஒட்டாதபடி, மாபாதகங்கள் யாவும் ஒட்டாவாம். பகவத் கீதையை



அன்பாய் எழுதிப் புத்தக ரூபமாக விளக்கிவைத்துள்ள இடத்திலும், பாராயணம் செய்யும் இடத்திலும், கங்கை முதலிய சமஸ்த புண்ய தீர்த்தங்களும் நெருங்கி விளங்கி யிருக்கும். கீதையைப் பாராயணம் பண்ணுபவனுக்கு அநுகூலமாய், ஸமஸ்த தேவர்களும், முனிவரும், யோகரும், நாகரும், கோபாலர்களும், கோபியர்களும், நாரதரும், உத்தவரும், நாரணன் அடியவர் யாவரும் வந்திருந்து இடையறாது விளங்கி யிருப்பார்கள். எங்கே கீதையானது சங்கையறப் படிக்கப்படுகின்றதோ, எங்கே உபதேசிக்கப்படுகின்றதோ, எங்கே கேட்கப்படுகின்றதோ, எங்கே உரை சொல்லப்படுகின்றதோ, அங்கே நான் அமர்ந்திருக்கின்றேன். நானே கீதையில் மகிழ்ந்திருக்கின்றேன்; அதுவே எனக்கு உத்தம கிருகம்; அதனைப் பாராயணம் பண்ணியே உலகங்கள் அனைத்தையும் பரிபாலிக்கின்றேன்; தேன்போல இனிமையாகப் பேசுகிற பூமாதேவியே! இதனை நீ கவனித்துக் கேட்டுத் தெரிந்து கொள்ளக் கடவாய்' என்று விடை கூறி அருளினன் என, வராக புராணத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. இது பற்றியே பகவத் கீதையிலும்,

అధ్యేష్యతేచయఇమం । ధర్మ్యంసంవాదమావయోః ।
జ్ఞానయజ్ఞేనతేనాహ । మిష్టస్యామితిమేమతిః ॥

"மகத்துவ மிகத்தாய் மாண்புடன் நமதுஸம்
வாதந் தனக்கு வழிசெய் வதுவாய்
என்று மழியா திருக்குமிக் கீதையை
நாடொறு நாடொறு நவின்று நவின்று
பாரா யணம்பண் பண்புடை யொருவன்
ஞான வேள்வியால் நனிநயந் தென்னை
ஆரா திப்பவன் ஆவான்
இதனை யறிந்துநீ யின்புறு வாயே" என்றால்

'மிகப்பெருமை பொருந்தியதாய், நாம் இருவரும் சந்தோஷத்தோடு ஸம்வாதஞ் செய்வதற்கு இடங்கொடுப்பதாய், என்றென்றும் நிலை பெற்று விளங்குவதாயுள்ள இந்த கீதையைத் தினந்தோறும் பன்முறை சொல்லிச் சொல்லிப் பாராயணம் பண்ணுகிறவன், என்னை, ஆராதனம் பண்ணுகிறவன் ஆவான். ஓ ஸஞ்ஜயா! இதனை அறிந்து நீ இன்படைவாயாக' என்று ஸ்ரீகிருஷ்ணன், தானே சொல்லியருளினன். ஆகையால், சோக்காபரமானந்தர், இந்த பிரமாணங்களை அநுஸரித்து, நாடோறும் பக்தியுடன் பகவத்கீதா பாராயணத்தைத் தவறாமற் செய்து வருங்காலத்தில், ஒவ்வொரு சுலோகத்துக்கும் ஒவ்வொரு வந்தனமாக (700) எழுநூறு ஸாஷ்டாங்க வந்தனங்கள் செய்வாராயினர்; இங்ஙனம் தமது நியமங்களை நிறைவேற்றி, அதற்குமேல், அக்ஷயபாத்ர விருத்திசெய்து பிழைத்துவந்தார்.

విచిత్రా దేహసంపత్తి । రీశ్వరాయనివేదితుం ॥

"மானிட ஜன்ம மஹத்துவத்தைத் தேராமல்
வனிடர்க்குள் ஆழ்வீர் எமரங்காள்—மானிடராம்
உங்களுக் கிந்த உடலிருப்ப ஈச்சுரனைப்
பங்க மறப்பணிதற் காம்"

"கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
தாளை வணங்காத் தலை" (இதற்கு)

எறியுங் கடலினுகத்துளையில் யாமைக் கழுத்துப் புகுவதுபோல், பொறி வெம்பிறவி அநேகத்தால் புருடன் விவேகியெனப் பிறக்கும் அற்புத மிக்க இம்மானிடப் பிறப்பாகிய ஆஸ்தி நமக்குக் கிடைத்தது பகவத் விஷயத்தில் அதனை விநியோகிப்பதற்கேயாம். ஆகையால் அப்பேர்ப் பட்ட மஹத்வமுள்ள சரீரம் இறப்பதற்கு முந்தியே, அதனை, ஸதா பகவானைப் பணியுங் கைங்கரியங்களிலேயே உபயோகிக்கவேண்டும் என்பது பொருள். இக்கருத்தேபற்றி, சோக்காபாமானந்தரும் தமது சரீரத்தைப் பகவத் கைங்கரியங்களில் விநியோகித்து வந்தார்.

ஒருநாள், ஒருவர்த்தகன், சோக்காபரமானந்தர் அநுஷ்டானம் பண்ணிக்கொண்டிருந்த இடத்திற்கு வந்தான். அப்போது, திடீரென்று மழை பெய்து, பூமிசேறாய் விட்டது. சோக்காபரமானந்தர், அதனைப் பாராட்டாமல், சேற்று நிலத்திற் படிய வீழ்ந்து, நமஸ்காரம் பண்ணுவதை, அந்த வர்த்தகன் கண்டு, அவரைப் பரிசுத்தாத்மா என வுணர்ந்து, தனது கடையிலிருந்த ஒரு பட்டு வஸ்திரத்தைக் கொண்டு வந்து, மனமுவந்து, அவரை வணங்கிப் பிரார்த்தித்துக் கொடுத்தான். அவாவற்றவராகிய அவர், "பிச்சை யெடுத்த ஊணும், நைந்த கந்தையும் தவிர எனக்கு மற்றவை தகாதனவாம்" எனக்கூறி, "இப்பட்டு வஸ்திரத்தை ஸ்ரீ ருக்மிணீ காந்தனுக்கு ஸமர்ப்பித்தால் எனக்கு அதிக ஸந்தோஷம் உண்டாகும்" என நியமித்தார். அவர் வார்த்தையை அங்கீகரியாமல், அவ்வர்த்தகன், பலவந்தமாய் அந்த பட்டுவஸ்திரத்தை, அவருடைய இடையிற் சுற்றிவிட்டு மனமகிழ்ந்து சென்றான்.

சோக்காபரமானந்தர், தாம், வேண்டாமலே வலிய வந்த அவ் வஸ்திரத்தைச் சரியாய் இடையில் சுற்றிக்கொண்டு, அதனில் சேறு படுமே என்று அஞ்சி, ஸாஷ்டாங்க வந்தனம் செய்யாமல், கைகளான் மாத்திரம் பூமியைத் தொட்டு வணங்குவாராயினர். உண்மையிலேயே, பற்றற்ற ஞானியாய், ஸாக்ஷாத் பகவதநுபவபரராய் விளங்கின இவர்க்குப் பட்டு வஸ்திரப் பற்றின் மிகுதியால், மனந் தடுமாறி சஞ்சலம் அதிகரித்தது. இதனாலேயே ஔவையார், "மனந்தடு மாறேல்" என்றருளிய தென்க. உடனே, அவரைப் பசி தாகங்கள் பிடிக்கத் தலைப் பட்டன.

"மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
கசிவருசொன் மக்கண்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப் பறந்து போம்" என்றபடி,



தானம் தவமுயற்சி எல்லாம் பறந்தன; சரீரத்தில் ஆயாஸம் உண்டாயிற்று. அப்போது, அவர், "இன்று ஏன் இப்படிப்பட்ட விபரீதவுணர்ச்சி உண்டாயிற்று! பற்றற்றவனாகிய நான், எனது விரதத்தை விடுத்து இவ்வஸ்திரத்தை விரும்பினபடியால் அல்லவா, இவ்வநர்த்தம் நேரிட்டது! இது பற்றியேயன்றோ ஔவையார், 'காப்பது விரதம்' என்றருளியது! பரிசுத்தான்னம், நாய் வாய் வைப்பதால், அபரிசுத்தமானாற்போல பகவத்கீதா படன விசேஷத்தால் பரிசுத்தனான நான், இந்த வஸ்திர பரிச விசேஷத்தால் சஞ்சலன் ஆனேன். இத்தனை அற்ப ஆசையால் இத்தனை அனர்த்தங்கள் உண்டாவன ஆனால், கொஞ்சமேனும் நியமம் என்பதே இல்லாமல், தம் மனம் போனபடியே ஸதா பேராசை வசப்பட்ட கேவல மாந்தர்க்கு, எத்தனை அநர்த்தங்கள் அடுக்கி வருவனவாமோ! அறியேன். இந்த அற்ப ஆசையென்னுஞ் * சுணங்கனால் கடியுண்ட எனக்கு, என்ன பிராயச்சித்தம் மருந்தாகும்!" என்று எண்ணினவராய், அசைவற்றிருந்தார். அப்போது, ஒருவன், கலப்பையைத் தோளில் மாட்டிக்கொண்டு, எருதுகளை ஓட்டிக்கொண்டு போனான். சோக்காபரமானந்தர், அந்த மனிதனைக் கூப்பிட்டு, "உனக்கு இந்தப் பட்டு வஸ்திரத்தை வெகுமானமாகக் கொடுக்கிறேன்; உனது எருதுகளைச் சிறிதுநேரம் எனது சுவாதீனத்தில் விடு" என்று கேட்டு, அவனை சம்மதிக்கும்படி வேண்டி தன்னிடத்திலிருந்த பட்டு வஸ்திரத்தை அவனுக்குக் கொடுத்துவிட்டு, அவ்வெருதுகளுடைய கழுத்தின்மேல் இருந்த நுகத்தடியில், தமது கால்களைச்சேர்த்துக் கட்டித் தம்மைத் தலைகீழாகத் தொங்கவிடச் செய்து, அந்த எருதுகளை வெருட்டித் துரத்தென்று அக்குடியானவனை வேண்டினார். அவிவேகியான அம் முரடன் அதற்குச் சம்மதித்து அங்ஙனமே செய்தான். எருதுகள் மிக வேகமாய்க் காட்டுவழியே ஓடினபடியால், அவர் உடலில், கற்களும் முட்களும் தைத்து, உதிரம் பெருகிற்று. அவ்வெருதுகள் இவர் சரீரத்திற் செந்நீரைக்கண்டு பயந்து, இன்னும் அதிக வேகமாய் ஓடின. அப்போது சோக்காபரமானந்தர், கொஞ்சமேனும் தமது சரீரத்தில் அபிமானமில்லாதவராய், "நான் செய்த தப்பினுக்கு நல்ல பிராயச்சித்த மருந்து உட்கொண்டேன்!" என்று ஸந்தோஷித்து, பகவந்நாமங்களைத் தியானித்துக்கொண்டிருந்தார்; சரீரத்தில் அதிகமாய்க் காயங்கள்பட்டு, ரத்த மாம்ஸங்கள் சிந்தின. அவ்வளவு கேவலதசையினும் அவர் இதர சிந்தையற்று, பகவதநுபவமுற்று, ஆனந்தபரவசராய் இருந்தார்.

அப்போது, பண்டரிநாதர், இவருடைய சித்த சுத்திக்கு ஸந்தோஷமடைந்து,

"மூலமே என்றகரி முன்வந் திடர்தொலைத்து
நீலமேகம்போல நின்றானை" என்றபடி,

கஜேந்திராழ்வானைக் காக்கு நிமித்தம், விரைந்தோடி வந்தவாறு, சீக்கிரமாய் வந்து, நுகத்தடியிற் கட்டியிருந்த இவருடைய கால்களை

* சுணங்கன் - நாய்.

அவிழ்த்து; அவருடைய தேகத்தை தனது கையால் தொட்டமாத்திரத்தில், அது முன்னிருந்ததைவிட, அதிகாரோக்ய ஸௌந்தர்யத்துடன் விளங்கிற்று. அப்போது பகவான், இவருடைய சிரமேல், தனது கரம் வைத்து, "ஏ, ஸாதுஜன முதல்வ! என் இப்படிப்பட்ட முரட்டுத்தனம் செய்தனை? இப்படிக் கடின பிராயச்சித்தம் பண்ணிக்கொள்ளும்படி நீ என்ன தப்பு செய்தாய்?

'பக்தர்மனப்பது மத்திலிருப்பவன்' என்றும்,
'மலர்மிசை யேகினன்' என்றும்,

என்னை, ஞானிகள் சொல்லிக்கொள்ளுகிறபடி, எனக்கு உனது இதயம் ஆலயமாய் இருக்கின்றது. அப்படிப்பட்ட இதயாலயமாய் உள்ளது உனது சரீரம். ஆகையால் எனது சௌகரியத்தையாவது எண்ணாமல், ஏன் இந்தச் சரீரத்தை இங்ஙனம் வருத்தினை? நீ உண்டனவெல்லாம் நான் உண்டனவாம்; நீ கண்டனவெல்லாம் நான் கண்டனவாம். நீ பேசினவெல்லாம் நான் பேசினவாகும்; நீ எண்ணின அனைத்தும் நான் எண்ணினவாகும்; நீ நண்ணின யாவும் நான் நண்ணினவாகும்; நீ பண்ணின அனைத்தும் நான் பண்ணினவே ஆகின்றன; நீ சூழ்வது நான் சூழ்வதும், நீ ஆழ்வது நான் ஆழ்வதுமாம்; உனது உறக்கம் அஷ்டாங்கயோகங்கள் ஆகின்றன. உலகப் பற்றற்று, எல்லாம் நானே என எண்ணியுள்ள நீ, இங்ஙனம் செய்தல் உசிதமல்ல" என்றான். அதற்கு சோக்காபரமானந்தர், "ஓ ஸ்வாமி, சஞ்சலப்பட்ட எனது மனம், உன்னை மறவாமல் நினைக்கும்படி அருள்புரிய வேண்டும்" என்று வேண்ட, பகவான், "அங்ஙனமே ஆகுக" என்று அநுக்கிரகித்துப் பண்டரிபுரத்துக்குப்போய், அங்கிருந்த பக்தர்களுக்குச் சோக்காபரமானந்தருடைய விருத்தாந்தங்களைச் சொல்ல, அனைவரும் அதிசயமடைந்தார்கள். ஞானதேவர், "ஹ்ருஷீகேசா! தேவரீர் திருவிளையாடலுக்கு முடிவுண்டா? ஒருவரைவிட ஒருவரை மேன்மையாக நிருமிக்கின்றனை. பக்தர் பெருமையை, நீயே அறிவை" என்று பலவிதமாய்த் துதித்தார்.

பீமதார்த்திபஞ்ஜாயநம:

## இருபத்துமூன்றும் அத்தியாயம்

# நரஹரிபக்தர் சரித்திரம்

பண்டரிபுரத்தில், நரஹரி என்னும் பெயருடைய ஒரு *பொற்கொல்லர் இருந்தார். அவர், தினந்தோறும், விடியற்காலையில் எழுந்து பீமநதியில் ஸ்நானஞ்செய்து, நித்ய கருமங்களை நிறைவேற்றி, பக்தியுடன் மல்லிகேச்வரரைப் பூஜை செய்துகொண்டிருப்பார். அவர், பரமசிவனைத் தவிர வேறொரு கடவுளைக் கனவிலும் துதித்தறியார்;

* பொற்கொல்லர் - கம்மாளர்



தாம் பிறந்தது முதல், பண்டரிநாதனை வணங்கினது கிடையாது; விட்டலநாதன் இருக்கும் திசையையுந் திரும்பிப்பாரார். இங்ஙனமிருக்க, அவர் வீட்டுக்கு ஸமீபத்திலிருந்த ஒரு வர்த்தகன், தனக்கு ஸந்தானம் இல்லாதபடியால், ஸ்ரீமத் பாண்டுரங்கன் ஸந்நிதிக்கு வந்து, "எனக்கொரு புத்திரனை அநுக்கிரகித்தால், உனக்கு நவரத்னமயமான ஒரு பொன்னரைஞாண் ஸமர்ப்பிக்கின்றேன்" என்று பிரார்த்தனை பண்ணிக்கொண்டான். பகவத் கடாக்ஷத்தால் அவ்வர்த்தகனுக்கு ஆண் ஸந்தானம் உண்டாயிற்று. ஸூதகம் தீர்ந்தவுடனே, வர்த்தகன், புண்டரீகவரதன் ஸந்நிதிக்கு வந்து வணங்கி, தனது பிரார்த்தனையைச் செலுத்தவேண்டும் என்று எண்ணி, அரைஞாண் செய்யவல்ல வேலைக்காரன் யாவன் என அங்கிருந்தார் அனைவரையும் விசாரிக்க, அவர்கள், நரஹரி, வல்லவர் என நவின்றார்கள். வர்த்தகன், பொன்னையும் நவமணிகளையும் எடுத்துக்கொண்டு, நரஹரி வீட்டுக்கு வந்து, பண்டரிநாதனுக்கு அரைஞாண் செய்து தரவேண்டும் என்று கேட்டான். அப்பொற்கொல்லர், வர்த்தகனை நோக்கி, "நீ கோரினபடி செய்து தருகின்றேன்; நான் பண்டரிநாதனைப் பார்த்தறியேன்; ஆகையால், நீ அளவு பிடித்துக்கொண்டு வந்தால், செய்து கொடுப்பேன்" என்றார். வர்த்தகன், அவ்வார்த்தைகளைக் கேட்டு, சிரித்து,

"தண்டா மரை யினுடன்பிறந்தும்
தண்டே னுகரா மண்டுகம்
வண்டே கானத் திடையிருந்தும்
வந்தே மதுவை உண்டிடும்" என்றபடி,

'தவளை, தாமரைக்கு ஸமீபத்திலிருந்தும், அதனில் உள்ள தேனை உண்டு அறியாததுபோல, நீ இவ்வூரில் பிறந்து வளர்ந்து பெரியவனாகியும், ஸ்ரீ பண்டரிநாதனை ஸேவிக்கக் கொடுத்துவைக்காதவனானாய்' எனக்கூறி, தான் ஸ்வாமி ஸந்நிதிக்குச் சென்று, அளவெடுத்துக்கொண்டு வந்து கொடுத்தான். வேலைதீர்ந்தவுடனே அவ்வரைஞாணை வர்த்தகன் வாங்கிக்கொண்டுபோய், ஸ்வாமிக்கு ஸமர்ப்பித்தான்; அதனை எடுத்து அணிந்து பார்க்கையில் அது நான்கு விரற்கடை குறைவாயிருந்தது; மறுபடியும் நரஹரிகையிற் கொடுத்துச் சரிப்படுத்தி அதனை ஸந்நிதிக்குக்கொண்டுபோய் ஸ்வாமிக்கு அணிந்து பார்க்கையில், அது இரண்டு விரற்கடை அதிகமாயிருந்தது. இப்படி ஐந்தாறு முறை, சரிப்படுத்தியும், அளவு ஏறியுங் குறைந்துமே யிருந்தபடியால், வர்த்தகன் மனவருத்தம் அடைந்து, நரஹரி வீட்டுக்குவந்து, "எத்தனை முறை, சரிப்படுத்தினாலும், அரைஞாண், ஸ்வாமிக்குப் பிடிக்கவில்லை. ஆகையால், நீயே ஸந்நிதிக்குப்போய், உன்கையால் அளவெடுத்துக்கொண்டு வந்து அதனைச் செய்து கொடுக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தான். நரஹரி, சிவனைத்தவிர வேறு கடவுளரைப் பார்க்கப்படாதென்னும் நியமம் பூண்டவர். ஆகையால், வர்த்தகன் வேண்டுகோளுக் கிரங்கி, தமது கண்களைத் துணியால் மூடி, அவன் கையைப் பிடித்துக்கொண்டு

பண்டரிநாதன் ஸந்நிதிக்குச் சென்றார். அங்கிருந்தார் அனைவரும், "நோயாளிக்கு அன்னம் வெறுப்பாயிருக்கிறபடி, இந்த நிர்ப்பாக்யனுக்கு, பண்டரிநாதன் சேவை வேப்பங்காயா யிருக்கின்றது" என்று பரிகாஸம் பண்ணினார்கள். நரஹரி, ஸந்நிதிக்குள் நுழைந்து, பண்டரிநாதன் ஸமீபத்திற்போய், ஸ்வாமியைத் தனது கைகளால் தடவிப் பார்த்தபோது, மான், மழு, சதுர்புஜ, காளகண்ட, திரிநேத்திர, பஞ்சமுக, சந்த்ரசேகர, நாகயஜ்ஞோபவீத, வியாக்ரசர்ம, சூல,டமருகங்கள் அகப்பட்டன. அப்போது அவர் ஆச்சரிய மடைந்து, "இந்த பண்டரிநாதனை, விஷ்ணுவென எண்ணியிருந்தேன்! இப்போது எனது கைக்குச் சிவவுருவம் அகப்படுகின்றது" என்றுகூறிக் கண்ணைக் கட்டியிருந்த துணியை அவிழ்த்து, ஸ்வாமியைப் பார்த்தபோது, அங்ஙனம் இன்றி, அதற்குமுன் தாம் கேட்டிருந்தபடி, வைரமுடியும், மகர குண்டலங்களும், ஸ்ரீவத்ஸ கௌஸ்துபங்களும், வைஜயந்தி வனமாலிகைகளும், பீதாம்பரமும், இடுப்பில் ஊன்றிய இரண்டு கரங்களும், உபயதிருவடிகளும் ப்ரகாசித்துக்கொண்டிருக்க, செங்கல்மேல் சங்கேந்திய கரத்துடன், நின்ற திருக்கோலத்தோடு வீற்றிருக்கக்கண்டு, "எனக்கேன் இப்படி மயக்கம் உண்டாகியது" என்று, மறுபடியும் கண்களைத் துணியால் மூடிக்கொண்டு, ஸ்வாமியைத் தடவிப் பார்த்தபோது, முன் போலவே, சிவ சின்னங்கள் அகப்பட்டன. அப்போது அவர்க்கு ஞானோதயமாய், "ஸர்வேச்வரனுக்கு நாம ரூபங்கள் அநந்தமாய் இருக்க, எனது புத்திமந்தத்தால், இதுவரையில், விஷ்ணு நாம ரூபங்களை வெறுத்துப் பண்டரிநாதனை சேவிக்காமலிருந்து விட்டேன்" என்று வருந்தி, அவர், ஸ்வாமியை ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, வணங்கி, அநேக விதங்களாகப் பரமசிவ, விஷ்ணு நாமங்களால் துதித்து, "ஸ்வாமீ! எனது மூடபுத்தியைத் தொலைத்தருளினை; நிர்ப்பாக்யதசையால், இதுவரையில் நான், உன்னை வெறுத்திருந்தேன்; இனி என்னை உனது அந்தரங்க பக்தர்களுக்குள் ஒருவனாக அங்கீகரிக்கவேண்டும்" எனப் பிரார்த்தித்தார். ருக்மிணீ காந்தன் சந்தோஷித்து, 'ஏ, நரஹரீ! நீ எனது சிவஸ்வரூபத்தை அதிக பக்தியுடன் ஆராதித்தனை. திரிகரணங்களாலும் வேறொன்றையும் விரும்பாத பகவத்பிரியனான உனக்கு, அகண்டஞானம் உண்டாக்குவதற்காக, இங்ஙனம் செய்தேன். அத்திரி மஹாமுனிவர், புத்திரப் பேற்றை விரும்பினவராய், உலககாரண வஸ்துவாகிய ஸர்வேச்வரன், தமக்குப் பிரத்தியக்ஷம் ஆக வேண்டும் என்று, தவம்செய்த காலத்தில், நான், ஹரி ஹர ஹிரண்யகர்ப்ப உருவங்களுடன் அவர்க்குத் தரிசனந் தந்தேன். அதுகண்ட அவர் "நான் ஒருதேவனை வேண்ட,மூன்று தேவர்கள் பிரத்யக்ஷமான காரணம் என்ன"? என்றுகேட்டார். அதற்கு நான், "எங்கள் மூவருக்குள்ளே பேதம் என்பது கிடையாது; எங்களுக்குள் திவ்யாத்ம சொரூபம் ஒற்றுமையாய், வெளியுருவங்கள் வேற்றுமையாய் இருக்கும். ஆகையால் நாங்கள் மூவரும், நீ கோரின ஒரு தேவனே அன்றி மூன்று தேவர்கள் அல்லேம்" என்று அவர்க்குச் சமாதானஞ் சொல்லி, அவரது பனோ



நரஹரி பக்தருக்கு ஸ்ரீ பாண்டுரங்கன், ஹரிஹர ரூபமாய் சேவை சாதித்தல்.
(பக்கம் 180)

ரதத்தை உணர்ந்து, எங்கள் மூவருடைய அமிசத்தால் உனக்கு, மூவர் புத்திரர்கள் பிறப்பார்கள் என்று அநுக்கிரகஞ் செய்தேன். அத்திரி முனிவர்க்கு திரிமூர்த்திகள் அமிசத்தில், தத்தாத்ரேய துர்வாஸ சந்திரர்கள், புத்திரர்கள் ஆனார்கள். இந்த இதிஹாஸத்தை, நீ, கேட்டு அறியாயா?" என்று கூறினான். அதைக் கேட்ட நரஹரி, "நான் பரிசுத்தனானேன்" என்று சொல்லி, தான் செய்த அரைஞாணை ஸ்வாமிக்கு ஸமர்ப்பித்தார்; அளவும் சரியா யிருந்தது. வர்த்தகன் களிப் படைந்து, ஸ்வாமியையும், நரஹரியையும் வாழ்த்தித் தனது வீடு போய்ச் சேர்ந்தான். பகவான், தனது மெய்யன்பர் இஷ்டத்துக்குத் தக்கபடி நடக்கிறவன் ஆகையால், அன்று முதல், நரஹரிபக்தருக்காகத் தனது சிரத்தில், பாணலிங்கம்போன்ற முடியைத் தரித்துக் கொண்டிருக்கின்றான். நரஹரியும், அதுமுதல், ஹரி ஹர ரூபங்களையும், வேறுபாடின்றிப் பகவன் மூர்த்திவிசேஷங்களையும், இடைவிடாமல் ஆராதித்துக்கொண்டு, ஸ்ரீமத் பண்டரிநாதற்கு, அந்தரங்க பக்தராய் வாழ்ந்தார்.

ஹரிஹரரூபாயநம:

## இருபத்துநான்காம் அத்தியாயம்

# நாமதேவரைப் பண்டரிநாதன் சோதித்த சரித்திரம்

ஒரு நாள், பண்டரி நாதன், நாமதேவரை ஏகாந்தமாய் அழைத்து, "நான் ஸர்வபூதங்களிடத்திலும்,

క్షేత్రంచాపిమాంవిద్ధి । సర్వక్షేత్రేషుభారత ॥

'அண்டபிண்டம் யாவும் அரியுருவ மாகுமெனப்
பண்டைமறை கூறும் பரிந்து' என்பதும்,

'வானா ளளித்தி முடியாமனீபின் வருநர்ளிறத்தி மறையாய்
பேணா யுனக்கோர் பொருள்வேண்டுமென்று பெறுவானருத்தி யிடியாய்
ஊனா யுயிர்க்கு முயிராகி நிற்றி யுணர்வாதி பெண்ணி னுருவாய்
ஆனா திமற்றை யலியாதி யாரிவ் வதிரேகமாயை யறிவார்" என்பதும்,

'பல்லுயிரும் அண்டங்களும் அரியுருவமாகும் எனப் பழ மறைகள் பரிவுடன் கூறுவன என்றும், அன்றியும், 'சேதனர்கள் உன்னைப்போல நித்தியராம்படி, அவர்களுக்கு, அப்ராக்ருதமாகிய திவ்ய சரீரத்தையும் வாழ்நாளையும் அளிக்கின்றாய். அங்ஙனம் அளித்தும் உனக்கு அழிவு இன்றி விளங்குகின்றாய். உனது தேக போஷணைக்காகத் தன தானிய முதலிய பொருள்களுள் ஒன்றையும் தேடிவைத்துக் கொள்கின்றா யில்லை. அவைகளுள் எதனிடத்தும் இச்சைவைக்கின்றாயும் இல்லை. இங்ஙனம் இருந்தும், பல்லாயிரகோடி அண்டபிண்ட அகில

சராசரங்களுக்கும் நீயே தாரக போஷகமாகி, அவைகளுக்குள் அந்தர்யாமியாயும் இருக்கின்றாய்.

'சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு' என்றபடியும்,

'ஐபுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்புணர் வில்லா தவர்க்கு' என்றபடியும்,

மெய்யினால் பரிசத்தை உணர்தலும், நாவினாற் சுவையை யுணர்தலும், கண்ணினால் உருவத்தை உணர்தலும், காதினால் ஒலியையுணர்தலும், மூக்கினால் வாசனையை உணர்தலும் ஆகிய ஐம்புல உணர்வும், அவற்றிற் காதியாகிய மன வுணர்ச்சியும், அதற் காதாரமான உயிர் உணர்ச்சியும், அவ்வுயிரின் இலக்கணமுமாகிய இவைகள் எல்லாவற்றிற்கும் காரணமாய், அதீதப்பட்ட பிரம சாக்ஷாத்காரமானது, அகண்ட பரிபூர்ண சச்சிதானந்த ஸ்வரூபமா யிருக்கின்றதெனத் தத்துவ நியமனம் செய்து, சுருதி குரு சுவானுபவமாகிய மும்மை வழியான் ஐயந்திரிபற அறியும் உண்மை அறிவாகியும் விளங்குகின்றாய்.

'அலகில்பகி ரண்டமெலாம் அகன்றவயிற் றடக்குமுனை
இலகுவடச் சிறுதளிரொன் றெந்தவிதந் தாங்கியதே' என்றபடி,

சர்வலோகங்களையும் திருவயிற்றில் அடக்கி வெளியிடுகின்றமையால், நீ, பெண்ணுருவாகியும்,

'நளிகடல்சூழ் சகமகட்கு நாயகனீ மாவலிபால்
எளியவர்போல் மூவடிமண் இரந்த விதம் என்னேயோ' என்றபடி,

பூதேவி நாயகனுய் ஆணுருவாகியும், அவை இரண்டுமல்லாத அலியுருவாகியும் அதிசயிக்கத்தக்க அதிரேக மாயைகொண்டு இங்ஙனம் நடிக்கின்றாய்" என்று, இந்திரஜித்து விடுத்த நாகபாசத்தாற் கட்டுண்ட இளைய பெருமாள் முதலியோரை நோக்கிப் பிரலாபித்த ராகவனும் என்னைக் கருடன் கண்டு கூறினபடி, எங்கும் நிறைந்து மறைந்து விளங்குகின்றேன். இந்த உண்மையை உனது மனத்தகத்தில் நிச்சயமாய் அமைத்திருக்கின்றனை அல்லவா?" எனக் கேட்டான். அதற்கு நாமதேவர், அதிக வணக்கமாய், "ஓ ஸ்வாமீ! விஸோபாகேசர் விளம்பிய ஞானோபதேசத்தாலும், தேவரீர் திருவருள் விசேஷத்தாலும் இப்போது தேவரீர் திருவுளம்பற்றி யருளியபடியே, தேவரீரை ஸமஸ்த சேதனாசேதனங்களுக்குத் தாரகமாகவும் நாயகமாகவும் நன்கு மதித்திருக்கின்றேன்" என்று கூறினர். அதற்குப் பகவான், மிகக் களித்து, வேறொருநாள், நாமதேவருடைய ஞானயோக முதிர்ச்சியைச் சோதிக்கவேண்டும் என எண்ணி, தானொரு சுணங்கன் வேடந்தாங்கி, பண்டரிபுர வீதிகளில் திரிந்து, பாகவதர்கள் கூட்டங்கூடிப் புசிக்கும் இடங்களுக்குப்போக, அவர்கள் அந்த நாயை வெருட்டித் துரத்தினர்கள்.



அங்கிருந்த சிலர், தாம் உண்கின்ற இடத்துக்கு அது வந்ததென அஸூயை கொண்டார்கள். அந்த நாய் அவர்கள் ஏமாந்திருக்கப் பார்த்துப் பாகசாலைக்குள் நுழைந்து, சோறு கறிகள் வைத்திருக்கும் பாத்திரங்களில் ஒன்றையும் விடாமல் வாய் வைத்து எச்சிலாக்கியது. அங்கிருந்தார், அதனைப் பிடிக்கவும் அடிக்கவும் முயன்றார்கள்; அது அவர்களைக்கடிக்கவும், ஓட்டம் பிடிக்கவுமாய், தப்பித்துக்கொண்டது. இங்ஙனம் இந்த நாய், எங்கெங்குப் போனாலும், அங்கங்கும் ஓட்டப்பட்டதன்றிப் பக்ஷம்காட்டப்பட்டதாகாமல், தன் பசிக்கு ஒரு கவளமும்பெறாமல் அலைந்தது. இதனைக் கண்ட நாமதேவர், இரங்கி, தமது கையில் ஓர் அப்பத்தை வைத்துக்கொண்டு அதற்குக் காட்டி, அழைத்தார். அது ஓடோடி வந்து, அந்த அப்பத்தை வாயிற் கௌவிக்கொண்டு ஓட்டம்பிடித்தது. அப்போது அவர்க்கு, விஸோபாகேசர் விளக்கி அருளிய அகண்ட ஞானோபதேச மகத்துவத்தால், பார்த்த இடம் எல்லாம், பகவத்சொரூபமாய் விளங்கியது; அந்தச் சுணங்கனை ஸாக்ஷாத் பண்டரிநாதனாக மதித்து, அதனிடத்திற் பக்திபூண்டு ஒரு கிண்ணத்தில் நெய் வார்த்து எடுத்துக்கொண்டு "ஓ, ஸ்வாமி! வெறும் அப்பத்தை உண்ணவேண்டா; அது, வாய்க்கு முறடாய்ப் பல்லுக்கு அசையாமல் இருக்கும்; இதோ என் கையில் கிண்ணம் நிறைய நல்ல வாசனையுள்ள நெய்; இதனில் நனைத்துத் தருகிறேன், அப்பத்தை இங்கே கொண்டு வருக; என்னிடத்தில் தருக; நான் தின்றுவிடமாட்டேன்; உனக்கே கொடுக்கிறேன் பார்; நெய்யில் நனைத்தால், அது உனது வாய்க்கு எத்தனைமெதுவாய் இருக்கும் தெரியுமா! இங்கேவா! எங்கள் அப்பன் அல்லவா, நீ!" என்று சொல்லிக்கொண்டே அதனைப் பின்பற்றிச் சென்று, தடவிக்கொடுத்து, மடிமேல் தூக்கிவைத்துக்கொண்டு, அதன் வாயிலிருந்த அப்பத்தைப் பக்குவமாய் வாங்கிச் சிறிய துண்டுகளாக்கி, ஒவ்வொரு துண்டாய் நெய்யில் ஊறவைத்து மெதுவாக்கி, அதன் வாயில் அன்போடு ஊட்டினர். அந்த நாயும் அந்தத் துண்டுகளில் ஒன்று தவறாமல், அவர் மடிமேலிருந்தபடியே எல்லாவற்றையும் மென்று மென்று சுவைகண்டு விழுங்கிவிட்டு, அவர் கையை, வாயை, முகங்களை நக்கி வாலாட்டிக்கொண்டிருந்தது. இவர் இங்ஙனம் செய்ததைக் கண்ட பாகவதர்கள், சிரித்தார்கள்; "நாமதேவனுக்குப் பயித்தியம் பிடித்தது ஆகையால், நாய்க்கு, அப்பத்தை ஊட்டினான். நாய்க்கு அப்பத்தைக் காட்டுவதே பாவம் என்றால், ஊட்டுவது மகா பாவம் என்று சொல்லவும் வேண்டுமா! என்று ஒருவரோடொருவர் முணமுணவென்று பேசிக்கொண்டார்கள். வேறு சில நன்மதிவாணர், "இவர் அகண்டபரிபூர்ண ஞானி, ஆகையால், இவர்க்கு அகிலமும் பகவத் சொரூபமாய்த் தோன்றுகின்றன; இச்சுணங்கனைப் பகவானாக எண்ணி ஆராதிக்கின்றார்; இது மிக மேலான காரியமேயன்றோ! ஸர்வவியாபகனாகிய பகவான், இந்தச் சுணங்கனிடத்தில் இல்லாமற்போய் விடுவாரா? இரணியன், பிரகலாதாழ்வானை நோக்கி, 'நீ சொல்லிய ஹரி என்பவன் எவ்விடத்தில் இருப்பான்' என்று கேட்டதற்கு, பிரகலாதன்,

'அந்தப் பரமாத்மன், அகண்டிதன்' ஆகையால், அவனை, இன்ன இடத்தில் இருப்பான், இன்ன இடத்தில் இரான் என்று கண்டிதப்படுத்திச் சொல்லவும், அவனுடைய அணுத்வ விபுத்வ விபவங்களை இன்னபடி என்றறியவும் முடியாது. ஆனாலும், ஒருவாறு சொல்லுகிறேன்: அவன், சாணளவாகிய சின்ன துரும்பிலும் இருப்பான். ஓர் அணுவை நூறு கூறுபோட்டுப் பார்த்தால், அக்கூறுகள் ஒவ்வொன்றிலும் தனித்தனி யிருப்பான். அன்றியும் பெரிய மேரு மலையிலும் இருப்பான். இங்கே நிற்கின்ற தூணிலும் இருப்பான். நீ சொன்ன சொல்லிலும் இருப்பான். அவன் இல்லாத இடம் எதுவும் இல்லை. இவ்வுண்மையை அறிய வேண்டுமானால், தாழ்க்காமல் சோதித்துப்பார்' என்று சொன்னதுபோல, பகவான், நாயிடத்திலும் இருப்பான், நரியிடத்திலும் இருப்பான் என்பதற்குச் சந்தேகமென்ன? இவ்வுண்மையை உணர்ந்த இந்நாமதேவருடைய உத்தம ஞானத்துக்குச் சந்தோஷித்து, இந்த * ஞமலியிடத்தில் மறைந்து வாழும் பகவான், இவர்க்குக் காட்சிதந்து விளங்காமற்போவாரா? உண்மை ஞானமற்ற இவ்வைணவர்கள், தத்வவிசாரணை செய்யாமல், பகவானை அவமதித்தல் அநுசிதமான காரியம்" என்றார்கள். அப்போது ஞமலிவேடந் தாங்கிய ருக்மிணீகாந்தன், நாமதேவரைப் பார்த்து "நீ எவ்வாறென்னை அறிந்தனை?" என்ன, நாமதேவர், "ஸ்வாமீ! விசோபாகேசர் உனது இரகஸியத்தை எனக் கறிவித்தார்" என்றார். பகவான் களிப்படைந்து, எல்லாருங் காண, நாமதேவர்க்கு அநுக்கிரகஞ்செய்து மறைந்தான். அந்த நாயை வெருத்துத் துரத்தின வைஷ்ணவர்கள் எல்லாரும் மிக வருந்தி, "ஐயோ! கொஞ்சங்கூட யோசியாமல், சுணங்கனைத் துரத்தினோமே! அதற்கு அன்னமிடாமற் போனோமே! நாமதேவர் அதனுடைய அருமைதெரிந்து அதனைப் பகவானென் றுணர்ந்து ஆராதித்து நற்பேறு பெற்றாரே! நாம் மந்தபுத்தி யுடையோம் ஆகையால், வலியவந்த பகவானை வணங்கி வழிபட வகையறியாமற் போனோம்" என விசனப்பட்டார்கள்.

சிலநாட்கள் சென்ற பிறகு, கார்த்திகை மாதத்தில் சுக்லபக்ஷத்தேகாதசி வந்தது. அன்று நாமதேவர், பகவத் சந்நிதியில், ஹரிகீர்த்தனம் பண்ணிக்கொண்டிருக்கையில், பகவான், அவரை நோக்கி, "நீ இன்றைக்கு இங்கே புசிக்கவேண்டும்" என்ன, நாமதேவர், "ஏகாதசியாகையால், இன்றைக்கு மாத்திரம் இப்பணம் நியமிக்கவேண்டா, என்னைத் தயவுசெய்து மன்னிக்கவேண்டும். இன்றைக்கு, நான், அன்னத்தை விரும்பி உண்டேனானால், என்றைக்கு உன் பாதம் சேருவேன்! தெய்வங்களுக்குள் ஹ்ருஷிகேசனாகிய நீயும்; மரங்களுக்குள் அரசமரமும், பத்ரங்களுக்குள் துளசியும் விசேஷமானவைபோல, விரதங்களுக்குள், ஏகாதசி சிரேஷ்டமாயிருக்கின்றது அல்லவா?" என்று விண்ணப்பித்தார். அதுகேட்ட பகவான், "நாமதேவா! முற்காலத்தில் அம்பரீஷர், உருக்மாங்கதர் முதலியோர், வைராக்ய சீலர்களாய் இருந்த

* ஞமலி-நாய்



படியால் இந்த விரதத்தை அநுஷ்டித்தார்கள். ஈரமில்லாத வித்தும், பிரியமில்லாத தானமும் பிரயோஜனமில்லாதனபோல, வைராக்யமில்லாத விரதம் வியர்த்தமாகும்" என்றான். அதற்கு நாமதேவர், "தேவேசா! தேவரீர் அநுக்கிரகபலத்தால், எனது கொள்கைக்குக் குறையொன்றும் வராது" என்ன, புண்டரீகவரதன், ஸந்தோஷித்து, "ஏ, வத்ஸா! உனது உத்தமஞான வைராக்யங்கள் குறையாமல் வளரக்கடவன" என்று ஆசிர்வதித்தனன்.

வேறோர் ஏகாதசி தினத்தில், நாமதேவரைச் சோதிப்பதற்காகப் பகவான், ஒரு கிழப்பிராமண வேடந்தாங்கி, நாமதேவர் வீட்டுக்கு வந்து, "நான் மிகவும் பசித்து வருந்துகின்றேன். ஆகையால், எனக்குச் சோறுவேண்டும்" என்றான். நாமதேவர், "இன்று, ஏகாதசி; சோறுண்ணக்கூடாது.

ఏకాదశ్యాంనభుంజీత । కదాచిదపిమానవః ।
యదిభుంజీతమోహేన । నరకేషునిమజ్జతి ॥

(என்றால்)

'ஏகா தசியில் எவன்மகிழ்ந் துண்பானோ
ஆகா அவனை அருநரகில்—வாகாய்
எமகிங் கரர்கள் இழுத்துக் கொடுபோய்
தமதங்கை யாலெறிவர் தாம்' (இதற்கு),

'ஏகாதசி தினத்தில், எவன் விரும்பி ஒருவேளையாவது உண்கிறானோ, அவனை, எமகிங்கரர்கள், தமது கையால் வலிந்து பற்றி இழுத்துக் கொண்டுபோய் அருமையாகிய வேதனைகளோடு கூடிய நரகத்தில் வீசியெறிவார்கள்' என்பது பொருள். இது விஷ்ணு ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கின்றது.

'எந்த மூடன் ஏகா தசியில்
உண்பான் அவனுனும் ஒவ்வொரு கவளமும்
பாவந் தன்னைப் பங்கிட் டளிக்கும்
அதுவே
நாய்மல மென்றும் நவில லாமால்
மதுபா னந்தனை மருவினோற் கந்தப்
பாவந் தீர்பரி காரமுண் டேகா
தசியி லுண்ட சழக்கன் றனக்குப்
பிராயச் சித்தமிப் ரபஞ்சத்
தில்லை யில்லை யில்லை யாமே' (இதற்கு),

'எவன் மூடமதியினனாய், ஏகாதசி நாளில் உண்பானோ, அவன் புசிக்கும் ஒவ்வொரு கவளமும் ஒவ்வொரு விதமான பாவத்தை விலைக்கு வாங்கிப் பங்கிட்டுக் கொடுக்கும். அதுவே, நாய் முதலிய ஜந்துக்களின் மலத்துக்குச் சமானமாகும். தருமசாஸ்திரத்தில், மதுபானஞ் செய்தவர்களுக்குப் பிராயச்சித்தம் விதிக்கப்பட்டிருக்கின்றது; ஏகாதசியில்

உண்ட மூடனுக்குப் பிராயச்சித்தம் விதிக்கப்படவில்லை' என்பது பொருள். இது ஸநத்குமார சம்ஹிதையில் சொல்லப்பட்டிருக்கிறது.

అష్టవర్షాధికోమర్త్యో । హ్యపూర్ణాశీతివత్సరః ।
ఏకాదశ్యాముపవసే । త్పక్షయోరుభయోరపి ॥

(என்றால்)

'எட்டு வயதுக் கேற்றமா னவர்முதல்
என்பது வயதுக் குட்பட் டவரெலாம்
வளர்தேய் பிறைகளில் வருஉ மேகா
தசிகளி லுபவா ஸஞ்செய
வேண்டு மிதுசத்ய வேதசம் மதமே' (இதற்கு)

'எட்டு வயதுக்கு மேற்பட்டு எண்பது வயதுக்கு உட்பட்டவர்களெல்லாம், ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற வளர்பிறை தேய்பிறை ஏகாதசிகளில் உபவாஸஞ் செய்யவேண்டும்'என்பது பொருள். இது, காத்யாயன ஸ்மிருதியில் சொல்லுகின்றது.

సబ్రహ్మహాసగోఘ్నశ్చ । స్త్రీయాచగురుతల్పగః । ఏకాదస్యాంతు
యోభుఙ్క్తే । పక్షయోరుభయోరపి । మాతృహాపితృహాచైవ । భ్రాతృ
హాగురుహాతథా । ఏకాదశ్యాంతుయోభుఙ్క్తే । శక్తిమాన్నిరుపద్రవః ।
సురాపానసమంపాపం । భవేత్తస్యనసంశయః ॥

(என்றால்)

'ஏகா தசியில் இன்பமா யுண்டவன்
குருபத் தினியின் கற்பைக் குலைத்தவன்
பிரம ஹத்திப் பெரும்பா தகன்பசுக்
கொலைசெய் தீயன் கொடுத்த பொருளை
இல்லையென் றபகரித் தெடுத்துக் கொண்டவன்
இவர்களைப் போல இடர்ப்படு வானே
அதா அன்று
உடலிற் பிணியின் றுபத்ரவ மின்றி
இலகும் ஒருவன் ஏகா தசியினில்
உண்ணுமேல் தந்தையை உடன்பிறந் தவனை
எண்ணருந் தவஞ்செய் தீன்ற தாயைக்
குருவை விரும்பிக் கொன்றவ னுவான்
மதுவை விரும்பி மாந்துதல் போலும்
பாவ மவனைப் பற்றி
விடாது தொடரும் மெய்யிதுவாமே' (இதற்கு),

'ஏகாதசியில் சௌக்கியமாய் உண்டவன், குருபத்தினியைக் கற்பழித்தவனும், பிரமஹத்திசெய்தவனும், பசுவைக்கொன்றவனும், அடைக்கலப் பொருளை வௌவினவனும் ஆவான். அன்றியும், கள்ளை விரும்பிக் குடித்ததுபோன்ற பாவம், அவனைப்பற்றித் தொடரும்' என்பது பொருள். இது ஸ்ரீ விஷ்ணுதர்மத்தில் கூறியுள்ளது.



వరంస్వమాతృగమనం । వరంగోమాంసభక్షణం । వరంచాపిసు
రాపానం । హరివాసరభోజనాత్ । యానికానిచపాపాని । బ్రహ్మహ
త్యాదికానిచ । అన్నమాశ్రిత్యతిష్ఠంతి । సంప్రాప్తేహరివాసరే ॥

(என்றால்)

'கள்ளுண்ணல் ஆவின் கறியுண்ண லாதியா
உள்ளன் புடன் செய்தல் உத்தமமாம்—கள்ளமனங்
கொண்டொருவன் சோறுகறி கோதிலே காதசியில்
உண்டு களிப்ப தினும்' (இதற்கு),

'ஏகாதசி நாளில், ஒருவன்,உண்டு களிக்கும் சோறு கறிகளைப் பார்க்கினும், கள்ளுண்ணல், பசுவின் கறியுண்ணல், முதலியவைகளே சால்புடையனவாம்' என்பது பொருள். இது ஸ்ரீ மஹாபாரதத்தில் கூறியுள்ளது.

'ஏகாதசியில் இலகு மன்னந் தன்னையண்மி
ஆகா பிரமஹத்தி ஆதியாம்—போகாத
பாபங்களெல்லாம் பரிவுடனே சூழ்ந்திருக்கும்
சாபங்கள் போலச் சமைந்து' (இதற்கு),

'ஏகாதசியில் ஒருவன் உண்ணும் சோற்றை நெருங்கி, பிரமஹத்தி முதலிய தீராத பெரும்பாவங்கள் எல்லாம், முனிவர் இட்ட சாபங்கள் போல, அவனை விடாமற் பொருந்திச் சுற்றிக்கொண்டிருக்கும்,' என்பது பொருள். இது பாத்மபுராணத்தில் கூறியுள்ளது. ஆகையால், ஏகாதசிநாளில் உண்பதும், உண்பித்தலும் மிகவும் அநுசிதம். "நீ, உண்மையில் தள்ளாதவனானால், திராக்ஷை முதலிய பழங்கள் தருகின்றேன் ; ஏற்றுக்கொள்" என்றார். அவைகளைக் கேட்டு, வந்த வேதியன், "சோறு தவிர எனக்கு வேறு தந்தால் பயனென்ன? சோறு கேட்பவனுக்கு, வேறு கொடுப்பது, சேறுகொடுப்பதுபோல் அல்லவா? எனக்குச் சோறேவேண்டும், அது தவிர வேறே வேண்டாம். எனது இச்சையை நீ, பூர்த்திசெய்யாவிட்டால், இப்போதே எனது பிராணனைப் பூர்த்திசெய்து கொள்வேன். உனக்குப் பிரமஹத்தி தோஷம் உண்டாகும்" என்றான். அதற்கு நாமதேவர், "ஓ ஐய, ஓ ஐய! பிராமணரே! நான் பகவத் பக்தன், பாவபுண்ணிய விரக்தனாய், பாண்டுரங்கனுடைய திருவடித் தாமரைகளில் இடையறாத அன்புடையவனாய் இருக்கின்றேன்" என்றார். அதற்குப்பிராமணன், "உன் மனதில் சத்துவகுண நிஷ்டை ஒரு சிறிதும் கிடையாது. 'வாய், வாழைப் பழம், கை, கருணைக்கிழங்கு' என்பதுபோலப் பேச்சுமாத்திரம் பேரின்பமாயிருக்கின்றது; சோறில்லாமல், களை அதிகமாய் கண் இருண்டு, தலை சுற்றுகின்றது; என் பசியைத் தீர்க்காயானால், உண்மை

யில் என் உயிர் நீங்கும் என நம்பு'' என்றான். நாமதேவர், "ஓ பிராமணா! உன் உயிர்போனால், என் உயிரும் அப்படியே போய்விடும்'' என்று, சொல்லிப் பிராமணனுக் கருகில்வந்து பார்த்தபோது, அவனுக்கு மூச்சு அடங்கிப்போய்விட்டது. அப்போது அங்கிருந்த ஆண் பெண் அடங்கலும் கூட்டம் கூட்டமாய் வந்து, நாமதேவரை நோக்கி, "ஏ, பாவி! ஏன் இந்தப் பிரமஹத்திக் காளாகினை? எங்களையும் பாவிகள் ஆக்கினையே! பசித்தவர்களுக்கு, ஒரு பிடி அன்னங்கொடாமல், பரம ஞானியென்று பெரிய பெயர் மாத்திரம் வைத்துக்கொண்டு, தள்ளாத கிழப்பிராமணனைக் கொன்றாயல்லவா''? என்றார்கள். நாமதேவர், தமது வைராக்யத்தை விடாமல், ஒரேபிடியாய், மனதைத்திடப் படுத்திக்கொண்டு, அந்த கிழப்பிணத்தைத் தோளிற் சுமந்து, சுடுகாடு சேர்ந்து, கட்டை யடுக்கி, அதன்மேற் கிடத்தித் தாமும் அதன் பக்கத் திற்படுத்து, வரட்டிகளைப் புரட்டி, மேலே தள்ளி மூடி, உள்ளிருந்த படியே, நெருப்புவைத்து மூட்டிக்கொண்டார். அவர் மனைவி, அவ் விருத்தாந்தங்களை உணர்ந்து, தானும் விரைந்தோடி வந்து, கட்டை யேறிப் படுத்துக்கொண்டாள். தீயானது நன்றாய்ப் பரவிப் பற்றி எரி கையில், அவ்வூர் வேதியர்களும் மற்றவர்களும், "நாமதேவருடைய உண்மைஞானத் தெளிவும், உறுதிநிலையும் இவ்வளவு உன்னத நிலையில் இருக்கின்றன அல்லவா! இப்பேர்ப்பட்ட உறுதிநிலை, இதுவரையில் கண்டும் அறியோம்; கேட்டும் அறியோம்'' என்று சொல்லிக்கொண்டு, அதிசயமிக்கவர்களாகி நிற்கையில், கிழப்பிராமண வேடந்தாங்கியிருந்த பண்டரிநாதன், உண்மை உருவத்துடன் எழுந்தருளி, எரிகிற கட்டை நெருப்பைக் குளிர்வித்து, தனது கையால், நாமதேவரை எடுத்துத் தழுவிக்கொண்டு, "ஏ, வத்ஸா! உன்போன்ற வைராக்யசீலன், மூவுல கினும் இலன். உனது நிஷ்டை, அம்பரீஷ ருக்மாங்கதாதியர்களுக் கும் கிடையாது. முற்காலத்தில் நான், பக்த பாதந்திரனாகி, அநேக அருமையாகிய காரியங்களைச் செய்தபடி, இக்கலியுகத்தில் உனக்குப் பாதந்திரனாகி, அநேக அற்புதங்களைச் செய்கின்றேன்'' எனக்கூறி, "உனது வைராக்யத்துக்கும், மெய்யன்புக்கும், என்றென்றும் தவறு வராமல் இருக்கக்கடவது'' என்று, ஆசீர்வதித்து மறைந்தான். இவ் வற்புதத்தைப் பார்த்துக்கொண்டிருந்த, பெரியோர், சிறியோர் யாவரும் நாமதேவரைச் சரணடைந்து, ஸ்ரீ ருக்மிணிகாந்தனான பகவானுடைய கல்யாண குணங்களைக் கொண்டாடி ஆனந்த பரவசரானார்கள்.

ஸ்ரீஹரிவாஸர வ்ரதைகசீல ப்ரியாயநம:



## இருபத்தைந்தாம் அத்தியாயம்

# ஜநாபாய் சரித்திரம்

கார்த்திகை மாதத்தில் நடக்கும் உற்சவத்தைச் சேவிக்க, ஒரு காலத்தில், அநேக ஜனங்கள், பண்டரிபுரம் வந்து, பண்டரிநாதனைப் பணிந்து, பாகவதர்களுடைய கோலாகலத்தைக் கண்ணாரக்கண்டு பேரா னந்தமடைந்து, தத்தம் ஊர்களுக்குப் போகும்போது, அவர்களுக்குள் ஒரு சிறுமி, ஸ்வாமி ஸந்நிதியில் நின்று, பாகவதர்களுடைய பக்தி பரவ சத்தைக் கண்ணுற்று, அந்த பரமானந்தத்தில் மனோலயப்பட்டு, அசை வற்றிருந்தனள். தாய் தந்தையர் முதலான சுற்றத்தார், அச்சிறுமியைத் தம்முடன் ஊர்க்கழைத்துக்கொண்டுபோக எத்தனையோ இனிய மொழிகள் கூறி வேண்டியும், அச்சிற்றுருவப் பெருந்தகை அம்மையார், கொஞ்சமேனும் ஸம்மதிக்காமல், "நான், இப்பண்டரி க்ஷேத்திரத்தில் வசித்து, பண்டரிநாதனையும், அவன் அடியவரையும், எனது நேத்திரம் செய்த புண்ணியமாக, ஸதா தரிசனம் செய்து கொண்டிருப்பேன்; நீவிர், எனதிச்சையின்படி விட்டு, நுமது ஊர்க்குப் போமின்கள்'' என்று கூற, அவர்கள், அவ்வம்மையாரைக் கைவிட்டகன்றார்கள். இவர்கள் ஸம்வாதத்தைக் கேட்டுக்கொண்டிருந்த பாகவதர்கள், மிகவும் வியந்து, "இவ்வம்மையார்க்கு, இத்தனை தீவிரமாக, ஞானபக்தி வைராக் யங்கள் பரிபக்வமான காரணம் விளங்கவில்லை. ஸ்ரீமத் பண்டரிநாதன் கடாக்ஷவீக்ஷண்யம் காரணமாயிருக்கலாம்.

అన్యజన్మని సర్వాత్మా । విష్ణురభ్యర్చితో యయా ॥

'வீற்றிருந் தேழுல கும்தனிக் கோல்செல்ல வீவில்சீர்
ஆற்றல்மிக் காளுமம் மானைவெம் மாபிளந் தான்றன்னை
போற்றியென் றேகைக ளாரத்தொ ழுதுசொல் மாலைகள்
ஏற்றநோற் றேற்கினி யென்ன குறையெழு மையுமே' என்ற,

நம்மாழ்வார் அருளிய நான்காம் பத்து, ஐந்தாந் திருவாய்மொழி முதற் பாசுரத்தின்படியும்,

'தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
அஃதிலார் மேற்கொள் வது' என்ற

திருக்குறளின்படியும், இவ்வம்மையார், ஸர்வ சரீரியான விஷ்ணுவைப் பூர்வ ஜன்மத்தில் நன்றாய் ஆராதித்திருப்பாள்'' எனக் கொண்டா டினார்கள். பிறகு, அப்பெண்ணிற் பெருந்தகையாகிய ஜநாபாய், பகவத் ஸந்நிதியில் உட்கார்ந்திருந்து,

"அறிவென்னும் தாள்கொளுவி ஐம்புலனும் தம்மில்
செறிவென்னும் திண்கதவம் செம்மி—மறையென்னும்
நன்கோதி நன்குணர்வார் காண்பரே நாடோறும்
பைங்கோதை வண்ணன் படி'' என்ற,

பேயாழ்வார் அருளிய மூன்றாந் திருவந்தாதி பன்னிரண்டாம் பாசுரத்தின்படி, பகவானைத் தியானித்துக் கொண்டிருப்பதை, நாமதேவர் கண்டு,

'நல்லாற்றா னாடி யருளாள்க பல்லாற்றால்
தேரினு மஃதே துணை'  என்றபடி,

கருணை மிக்கவராய் "நீ, ஏன், தந்தை தாயாரைத் துறந்து, ஒன்றியாய் இருக்கின்றனை? உன்பேர் என்ன?" என்று கேட்க, அவ்வம்மையார், "என்பேர், ஜநாபாய்; எனது தந்தை, பண்டரிநாதன்; தாயார், ருக்மிணீதேவி; சுற்றத்தார், பகவத் பக்தர்கள்" என்று கூறி, மௌனமாயிருந்தார். நாமதேவர்,

"நற்றாமரைக் கயத்தில் நல்லன்னஞ் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்"  என்றபடி,

மிகக்களிப்படைந்து, "ஓ, ஜநாபாய்! நீ, எங்கள் வீட்டுக்கு வந்து, பகவத் பக்தி செய்துகொண்டிரு" என்று கூறி, அவ்வம்மையை அழைத்துக் கொண்டுபோய்த் தமது தாயாராகிய குணாபாயை நோக்கி, "ஓ, அம்மா! இச்சிறுமி, பண்டரிநாதன்மேல் பக்தி மிகுந்து, தாய் தந்தையர் முதலான சுற்றத்தைத் துறந்து, இங்குத் தங்கினள். ஆகையால், நம்மோடு வாழ்ந்து, இவள் தன் மனப்படி பகவந்நாம தியானம் செய்து மகிழ்வாளாக" என்று வேண்டினார். அந்தம்மாளும் அதற்கொப்பி, ஜநாபாயைத் தன்னிடத்தில் வைத்துக்கொண்டு, அன்பு பாராட்டினாள்.

பிறகு, நாமதேவர், "முன்பு, ஸ்ரீ கிருஷ்ணாவதார காலத்தில், கம்ஸனைக் கொல்லும் சூழ்ச்சியால், பரமபாகவதரான அக்ரூரர், தநுர்யாகத்தினிமித்தம், பகவானைப் பலபத்திரரோடு மதுராபுரிக்கு அழைத்துக்கொண்டு வருகையில், இராஜவீதியில், கம்ஸனுக்குச் சந்தனம் வாங்கிக்கொண்டுபோகும் ஏகவக்ரை யென்னும் கூனியைக்கண்டு, பகவான்,

'సుగంధమేతద్రాజార్హం । రుచిరంరుచిరాననే'

'ஓ அழகிய முகத்தையுடைய கூனியே? ராஜாக்களுக்கு உரிமையானதும் அழகு கொடுக்கக் கூடியதுமான அந்த சந்தனத்தைக் கொடு' என்றுகேட்டு, அவளால் பரிமளம் பூசப்பெற்று, அவளுடைய கூனை நிமிர்த்தி, அவள் வேண்டினபடி, தமது சரீரஸம்பந்தத்தைப் பெறச் செய்து, அம்முத்தநகை மொய்குழலாள் கருப்பத்தில் உபச்லோகர் என்னும் பரமபாகவதரை உற்பத்திசெய்தான். அவர் நாரத சிஷ்யராய் லோகோபகாரமாக ஸாத்வததந்திரம் என்னும் கிரந்தத்தை இயற்றியருளினார். அந்த ஏகவக்ரை என்பவள், இப்போது, பாண்டுரங்கன் பரமகிருபையால், ஜநாபாயாக அவதரித்து, அனவரதமும், நிராமய பரமானந்த ஸ்ரீ கிருஷ்ணாமிர்தத்தைப் பானம்பண்ணி,

"ஊனில்வா ழுயிரே நல்லைபோ வுன்னைப்பெற்று
வானுளார் பெருமான் மதுசூத னென்னம்மான்



தானும் யானுமெல்லாம் தன்னுள்ளே கலந்தொழிந்தோம்
தேனும் பாலும்நெய்யும் கன்னலு மமுதுமொத்தே"  என்ற,

நம்மாழ்வார் திருவாய்மலர்ந்த இரண்டாம் பத்து, மூன்றாம் திருவாய்மொழி முதற் றிருப்பாசுரத்தின்படி. அபேதமாய் இரண்டறக்கலந்து, தானே அதுவாய், அது தானாயிருக்கின்றாள். எனது பாக்ய விசேஷத்தால் இந்த ஸுசீலையோடு ஸகவாசம் எனக்குக் கிடைத்தது" என்று, பூர்வ விருத்தாந்தத்தை எண்ணி, ஆனந்த மடைந்திருந்தார். அது முதல், ஜநாபாய், அவர் வீட்டுக்கு நாடோறுந் தொழுத்தை எனச் சென்று, குடும்பக் குற்றேவல்கள் புரிந்து, ஸதா பகவத் தியான பாராயணம் பண்ணிக்கொண்டிருந்தார். யாராவது, "நீ யாவள்?" எனக் கேட்டால், அவ்வம்மையார், நான், "நாமதேவர் வீட்டு வேலைக்காரி; இம்மஹாத்மாவே என் தந்தை; இவர் தவிர எனக்கு வேறெவரும் சுற்றத்தார் இலர்" என்று சொல்வாராயினர்.

ஒரு நாள், நாமதேவர், தமது வீட்டில் படுத்துக் கொண்டிருக்கும் போது, பாதிராத்திரியில், காற்றுமழை வீசி, அதனால், அவர் வீட்டுக் கூரை ஆகாசத்திற் கிளம்பி, அப்பால் வீழ்ந்துவிட்டது. அப்போது, ருக்மிணீ காந்தன், ஸுதரிசனம் என்னும் தனது சக்கரத்தை நோக்கி, "நீ சென்று நாமதேவன் வீட்டுக் கூரையை, எப்போதும்போல வேய்ந்து, அவ்வீட்டில் ஒரு மழைத்துளிகூட உள்ளிறங்காமற் செய்க; நானும் இதோ, உன் பின்னாலேயே வருகின்றேன்" என்று கட்டளையிட்டான். சுதரிசனம், பகவான் கட்டளையிட்டபடி செய்தது. உடனே பகவான், எழுந்தருளி வந்து, விழுந்த சுவர்களைக் கட்டினான்; தன்னை வழிபடுவோர்க்கு, பகவான், ஸர்வ வல்லமையுள்ளவனும், எல்லாம் உணர்ந்தவனும் ஆனாலும், ஐஹிக சுகம் மோக்ஷவிரோதியென்று, அதனை அளவறுத்து வழங்குவான்.

యాచితోఽపిసదాభక్తైః । నాహితంకారయేద్ధరిః ।
బాలమగ్నౌపతంతంతు । మాతాకింననివారయేత్ ॥

(என்றால்)

"தீயில் விழவிரும்பிச் செல்கின்ற தன்மகவைத்
தாயிருந்து காப்பதுபோல் ஸர்வேசன்—தூயபக்தர்
இன்பமென எண்ணி இகசுகத்தை நாடினும்
துன்பமென ஈயான் துணிந்து"  (இதற்கு)

'நெருப்பில் விழ விரும்பிச் செல்கின்ற தன் குழந்தையைத் தாயார் குறுக்கே தடுப்பதுபோல, சர்வேசனாகிய பகவான், தனது மெய்யன்பர்கள், இகசுகத்தை விரும்பினாலும், அது இன்பமல்ல, துன்பந்தருவதென்றெண்ணி, அதனை அவர்களுக்குக் கொடுக்கமாட்டான்' என்பது பொருள். அதுபோல நாமதேவர்க்குப் பண்டரிநாதன், வீடு வாசல் மாடகூடம் முதலிய இகசுகப் பொருள்களை வசதியாக வழங்காமல், அதிக துக்கத்தையே கொடுத்து வந்தான்; இஃதொரு வியப்பன்று. அன்றியும்,

హరిర్దుఃఖాని భక్తేభ్యో । హితబుద్ధ్యా కరోతి వై । శస్త్రక్షారాగ్ని కర్మాణి । స్వపుత్రాయ యథా పితా ॥

(என்றல்)

“சுகப்படுத்த எண்ணிச் சுதன்புண்ணிற் காரம்
மிகப்படுத்துந் தந்தைபோல் மெய்ம்மை—அகப்படுத்த
அன்பர்க் குறுதி அதிகரிக்க மாயவனும்
துன்பந் தருவான் துணிந்து” (இதற்கு),

‘நன்மை செய்ய எண்ணின தந்தை, தனது மகன் புண்ணிற் காரம் வைத்தால் அவன் வருந்துவானேனும் அதனைக் கருதாமல், அவனுடைய பிற்சுகத்தை எண்ணி, அதனை ஆற்ற எண்ணுவதுபோல, மாயவனாகிய பகவானும், தனது மெய்யன்பர்க்கு வைராக்ய சுகத்தை விளைக்கும் பொருட்டு, இகத்தில் துன்பத்தையே தருவான்’ என்பது பொருள். இதுபற்றியே திருக்குறள் நீதி வெண்பாவிலும்,

“அறுக்கும் பிணியையென்றிக் கன்பாலே அன்னை
சுறுக்கென்று தன்மகவைச் சுடும்—பொறுப்பால்
அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கு மஃதே துணை” (இதற்கு),

‘இவ்வுலகில், ஒருவர்க்கொருவர் அன்புடையார்களென்று காட்டுவதற்கு, இன்பமே அல்ல துன்பமும் அடையாளமாயிருக்கின்றது. இன்பஞ்செய்வது ஒன்றே, அன்பிற் கடையாளம் என்பார் மதியிலிகள். நோயானது நீங்க, தாயானவள் தன் குழந்தைக்கு எவ்வாறு சூடுபோடுகிறாளோ, அவ்வாறே, பகவானும் தனது பக்தர்களுக்கு, இகசுகமென்கிற சிற்றின்பநோயை விலக்கிப் பரசுகமாகிய பேரின்ப ஆரோக்யத்தை உண்டாக்குவான்’ என்பது பொருள். பகவான், துரியோதனாதியர்க்குச் செய்தது ஹிதக்கருணையேயாம்; எங்ஙனமெனில், அவர்களுக்குப் பலவித சுகங்கள் கொடுத்து நாடாள வைத்தான்; அங்ஙனமே ஹிரணியனுக்கும் இராவணனுக்கும் என்க. இவர்கள் அனைவரும், தாங்கள் பெற்ற ஹிதக்கருணையின் காரணத்தால் பகவானை மறந்து கெட்டார்கள். பகவான், பஞ்சபாண்டவர்க்குச் செய்தது அஹிதக்கருணையேயாம்; எங்ஙனமெனில், அவர்களுக்குப் பலவித துக்கங்கள் கொடுத்துக் காடாளவைத்தான். அங்ஙனமே பிரகலாதனுக்கும் விபீஷணாழ்வானுக்கும் என்க. இவர்கள் அனைவரும், தாங்கள் பெற்ற அஹிதக்கருணையின் காரணத்தால், பகவானை ஸர்வஜாக்ரதையாய் மறவாமல், இகபரசுக மடைந்து வாழ்ந்தார்கள். ஸ்ரீ ராமாவதாரத்தில், பகவான், தனக்குத் தானே செய்துகொண்டதும் அஹிதக்கருணையேயாம்; எங்ஙனம் எனில், தான் பதினான்கு வருஷம் காடாண்டு அநேக துன்பங்கள் நுகர்ந்து, உலகத்தார்க்கு அறத்தை நிலைநிறுத்திக் காட்டியதனால் என்க. ஆகையால், பகவான், தனது ஹிதக்கருணை, பகவத் பக்தர்களுக்கு விரோதியாய் அநேக துன்பங்களை



உண்டாக்குவனவாம் என எண்ணி, அஹிதக்கருணையையே செய்து மகிழ்வான். மேலும் மெய்யன்பர்களாயுள்ளவர்கள் ஹிதக்கருணையாலுண்டாகும் இகசுகத்தை என்றென்றும் நாடார்; அவர்கள் என்றென்றும்;

“பெற்றதாய் நீயே பிறப்பித்த தந்தைநீ
மற்றையா ராவாரும் நீபேசில்—எற்றேயோ
மாயமா மாயவனை மாயமுலை வாய்வைத்த
நீயம்மா காட்டு நெறி” என்ற,

நம்மாழ்வார் அருளிய பெரிய திருவந்தாதி ஐந்தாந் திருப்பாசுரத்தின்படி, எல்லாம் பகவான் செயலே என எண்ணி இன்புறுவார்கள்.

பகவான், நாமதேவர் வீட்டில், இங்ஙனம் சுவர் புதுக்கி, கூரை வேய்ந்து, தரையில் வீழ்ந்துகிடந்த செத்தைகளை எடுத்துத் தூரத்திற் போட்டுக்கொண்டிருந்தபோது, விடியற்காலமாய்விட்டது. நாமதேவர் வெளியே வந்து பகவானைக்கண்டு, நமஸ்கரித்து, “இது என்ன வேஷம்! இங்கே என்ன செய்கின்றாய்?” என்று கேட்க, வாசுதேவன், அவர்க்கு அநுக்கிரகஞ்செய்து, “ஓ நாமதேவா! காற்றுமழையால் உன் வீட்டுக் கபாயம் நேரிட்டது; நீ ஸம்ஸார காரியங்களைக் கவனமாய் நடத்தாமல், ஸதா என்னைத்தியானித்துக் கொண்டிருக்கிறபடியால், உன் தாயாராகிய குணாபாய் நிஷ்டூரம் பேசுவாள் என்று, நான் அரை இரவில் வந்து, உனது வீட்டை, எப்போதும்போலப் புதுக்கினேன்” என்று கூறினான். அப்போது குணாபாய், விரைவாய் வந்து பகவானை வணங்கினாள். பகவான், நாமதேவரோடு வேடிக்கையாய் வார்த்தைசொல்லிக்கொண்டே வீட்டுக்குள் நுழைந்து, கவலையற்று உட்கார்ந்திருந்தான்.

அப்போது ஜநாபாய், விரைந்தோடிவந்து, நமஸ்கரித்து, பகவானுக்கு மெய் வருந்தி இளைத்ததென்று, அவனுடைய சரீரத்தை மெதுவாய்த் தடவிப் பிடித்துக்கொண்டே, “கருணைக்கடலே! அன்பர்தமக்கு இன்ப வைப்பே! எங்களைக் காத்தருளவேண்டி, உனது உடலை வருத்திக்கொண்டனை” என்று கூறினாள். அப்போது நாமதேவர், “ஸ்வாமி! உனது மெய்வருந்தி அலுத்திருப்பதால், நீ, எழுந்து வெந்நீரிற்குளித்து எங்களோடு புசிக்க வா” என்று வேண்டினார். குணாபாய், பகவான் குளிப்பதற்கு வெந்நீர் தந்து, அவர் அநுஷ்டானம் முடிந்தவுடன், புசிப்பதற்காக இடத்தைச் சுத்திசெய்து, இலைகளைப் பரப்பினாள். அப்போது கோவிந்தன், விட்டலன், நாராயணன், மாதவன் என்னும் பேர்களையுடைய நாமதேவர் மக்கள் நால்வரோடு, பகவான், ஒருவரிசையாய் உட்கார்ந்தான். குணாபாயும் நாமதேவரும் ஒருபக்கம் உட்கார்ந்தார்கள். பகவான் நியமித்தபடியால், அந் நியமனத்தைக் கடக்கக்கூடாதென்று, கணவன் அநுமதி பெற்று, ராதாபாய், தானும் ஒரு மூலையில் உட்கார்ந்தாள். இப்படி எல்லாரும் உட்கார்ந்த பிறகு, ஜநாபாய் வட்டித்துக் கொண்டே, தன் மனதில், தன்னை மாத்திரம் விட்டுவிட்டு

எல்லாரும் உட்கார்ந்து உண்பது அழகல்ல என்றெண்ணினர்: பகவான் கொஞ்சம் புசித்து, "எனக்கு அன்னம் ருசிக்கவில்லை" என்றார். நாமதேவர், "பக்தவத்ஸலா! அது உண்மைதான்; ஜநாபாய், இந்தப் பந்தியில் இல்லாதபடியால், உனக்கு உணவு உருசி தரவில்லை" என்றார். ருக்மிணீகாந்தன், உண்ணாமல், அன்னத்தைக் கையில் வைத்தது வைத்தபடியே, கொஞ்சநேரம் உட்கார்ந்திருந்து, மற்றவர்கள் உண்டுமுடிந்தபின், அவர்களுடன், தானும் எழுந்து, விதிப்படி கையலம்பிக்கொண்டு, ஆசமனம்செய்து, சௌக்கியமான இடத்தில் அமர்ந்திருந்தான். எல்லாரும் பகவானைச் சூழ இருந்தார்கள். பகவானுக்கு ஜநாபாய்மேல் மிருந்துள்ள அன்புக்காக, ராதாபாயும், குணாபாயும் ஆச்சரிய மடைந்தார்கள். குணாபாய், பகவானுடைய பரிகல சேஷத்தை ஜநாபாய்க்குக் கொடுத்து, "இது பிரமாதியர்க்கும் கிடைக்காத; நாமதேவன் சகவாஸத்தால் உனக்கு எளிதில் கிடைத்தது" என்று கூறினாள். அதற்கு ஜநாபாய், "நாம், பிறகு புசிப்போம்" என்றெண்ணிக்கொண்டு, அந்த மஹாப்ரஸாதத்தைப் பத்திரப்படுத்தி வைத்தார். அன்றிரவு நாமதேவரும் பகவானும் ஒரே சயனத்தில் படுத்துக்கொண்டார்கள். நாமதேவர் உறங்கினவுடனே, பகவான் ஓசைபடாமல் எழுந்து, ஜநாபாயிடத்திற்கு வந்து, "ஓ சிறுமீ! எனக்குப் பசியாயிருக்கிறது. நாமதேவனோடு நான் உண்டபோது, நீயும் உடனிருந்துண்ணாதது அழகல்லவென்று எண்ணினாய் ஆகையால், எனக்கு உணவு சுவை தரவில்லை. இப்போது நீ, எனது பசியைத் தணிக்க வேண்டும்" என்றான். அதற்கு அவ்வம்மையார், "ஓ, லக்ஷ்மீநாத! உனது திருவருளுக்கு எக்கற்றிருக்கும் அடியாளாகிய நான், தற்சமயம் உனது பசிப்பிணியை நீக்க வல்லவள் அல்லேன். என்னிடத்தில், பொருளும் இல்லை. எனது உடல் பொருள் ஆவி மூன்றும் உன்னுடையவைகளே. ஆதலால் நான் எனது ஆத்மாவை உனக்கு அர்ப்பணஞ் செய்கின்றேன்; அதனை உண்டு பசியாறு. இப்போதோ, அகாலம், ஆகையால், உண்ணத்தக்க பொருள் ஒன்றுங் கிடையாது. உனது பரிகல சேஷத்தைக் குணாபாய், எனக்குக் கொடுத்தாள்; அதனை உனக்குக் கொடுக்க எனக்குக் கூச்சமாயிருக்கின்றது" என்று விண்ணப்பஞ் செய்தார். ஜநாபாய் கூறிய இதவசனங்களுக்கு, பண்டரிநாதன் ஸந்தோஷித்து, "நீ, கூச்சப்படவேண்டாம்; எனது பரிகல சேஷத்தைக் கொண்டு வா" என்று கூற, ஜநாபாய், "மஹாப்ரஸாதம்" என்று அதனைக் கொண்டுவந்து, பகவானுக்கு எதிரில் வைத்தார். பகவான், ஜநாபாயைத் தன்னுடன் உட்காரவைத்துக்கொண்டு, இருவரும் அதனை உண்டார்கள். அதைக்கண்ட ருக்மிணீதேவி, வேதபுருஷனுக்கும், * அபரிச்சேத்யனை பகவான், இந்த ஜநாபாயோடு, ஒரே பரிகலத்தில் உண்கிறான் என ஆச்சரியமடைந்தாள். இங்ஙனம் இருவரும் புசித்து கையலம்பிக்கொண்டு படுத்தார்கள். குணாபாய், இவைகளை யெல்லாம் பார்த்திருந்து, மெல்ல நடந்து, நாமதேவரிடத்திற்கு வந்து, இவ்வி

* அபரிச்சேத்யன் - பகுதிட்டுச் சொல்லமுடியாதவன்



ருத்தாந்தங்களை அவருடன் சொன்னாள். அவர், "ஓ, அம்மா! இது, ஆச்சரியமன்று; பகவான் பக்தி வலையிற் படுவோன் அல்லவா, ஸ்ரீராமாவதாரகாலத்தில், சவரி எச்சில் நுகரவில்லையா?" என்று கூறக் கேட்ட குணாபாய், தன்னிடத்துக்குச் சென்றாள். ஸ்ரீநிவாஸன், ஜநாபாய் தூங்கினபிறகு, எப்போதும்போல நாமதேவர் பக்கத்தில் படுத்துக்கொண்டான். மறுபடியும், நான்காம் ஜாமத்தில் எழுந்து, பகவான், ஜநாபாயிடத்திற்கு வந்து, கைதட்டினான். அவ்வம்மையார் தூக்க மயக்கத்தால் மௌனமாயிருந்தார். பகவான், தனது கையால் அவ்வம்மையாரைத் தூக்கி உட்காரவைத்துத் தமது பீதாம்பரத்தால் முகந்துடைத்து, "ஓ ஜநாபாய்! நீ மாவரைக்கையில் நானும் உன்னுடன் அரைக்க ஆசைப்படுகின்றேன்; அதற்காகவே இப்போது வந்திருக்கிறேன்" என்றான். உடனே, ஜநாபாய், இயந்திரக் கற்களிடத்தில் தானியத்தைக் கொண்டுவந்து வைக்க, பகவான் "ஓ சிறுமியர்க்கரசி! நீ, இயந்திரப் பிடியைக் கையிற்பற்றிப் பாடிக்கொண்டிரு; நான் உனது பாடலைக்கேட்டுக்கொண்டே, மாவரைக்கின்றேன்" என்று கூறி, அவ்வம்மையார் பாட, தான் மாவரைத்துக் கொண்டிருந்தான். ஜநாபாய், அப்போது, பகவானுக் கெதிரில், பாடின பாடல்களின் கருத்துகள் என்ன வென்றால்:—

தானன தானன தானா—தன
தானன தானன தானன தானா—தானன தானன தானா

பண்டரி நாதரே கேளீர்—என்றன்
பாக்கியத் தாலென்றன் பாடலை வேட்ட பண்டரிநாதரே॥

(1) ஸோபான தேவரென் சுற்றம்—என்ன
சொல்லுவேன் அவரென்மேல் சூட்டிய அன்பை
கோபாதி தீர்த்தநி வர்த்தி—தேவர்
குறைவில்லா நட்பென்பால் கொண்டிருக் கின்றார் பண்டரி॥

(2) சிற்குண சீலர்மெய் யன்பர்—ஞான
தேவர்போ லாரினி யாவரி னியார்
சற்குண சாகர நாம—தேவ
ஸந்தத யோகியர் எந்தையர் ஆவார் பண்டரி॥

(3) சாயாத சார்ங்கவிற் கையன்—ஐயன்
தன்னருள் இவர்களால் நண்ணினன் நானே
தாயா ரெனக்குரா தாபாய்—அவள்
தயவாலே நானிங்குத் தங்கியுள் ளேன் பண்டரி॥

(4) ஸாமந்தர் நற்கபீர் தாஸர்—என்றன்
சங்கடந் தீர்க்கும்ச கோதர ராவார்
நேமந் தவிரா தபக்தர்—இந்த
நின்மல தேவனை நேசிக்கு முக்தர் பண்டரி॥

(5) செய்யற்பு தங்களைச் சொல்ல—என்றன்
செந்நாவா லாகுமோ ஜெகதீசற் கல்லால்
தய்யன்விற் கோதண்டக் கையன்—தன்னைச்
சொந்தம தாக்கித்து லங்கற்பு தங்கள் பண்டரி‖

(6) பற்பல செய்தன ரிப்பால்—அவர்
பரிபூர ணானந்த பாக்கிய ராஞர்
சொற்பல சொல்லியும் ஆகா—வளம்
துன்னும் பயிட்டின மென்னும்ப திக்குள் பண்டரி‖

(7) வாழ்கின்ற வேதிய ராஞேர்—வாயால்
வலதுமொ ழிந்தும கிழ்ந்துவம் பாடிச்
சூழ்கின்ற வாறுதாம் கண்டு—மேதி *
சுருதியு ரைத்துத்து லங்கச்செய் ஞான பண்டரி‖

(8) தேவர்தம் அற்புதந் தன்னைச்—சொல்லத்
தேவரும் மூவரும் யாவருந் தோரார்
கோவந்த விர்கோரா கும்பார்—நந்த
கோபன் மதலையின் கோதில்பூந் தாளை பண்டரி‖

(9) ஓவற நெஞ்சத்தி ருத்தித்—தம்மின்
உத்தம மதலையை உணராமற் காலால்
மாவெனத் தேய்த்துமண் ணேடு—மண்ணாய்
மயங்கவே மிதித்துவ யங்கினின் ருரே பண்டரி‖

(10) யாவரே இதுசெய வல்லார்—அவர்
யார்க்குஞ் செயவரி தானகா ரியமாம்
பூவன தங்கரம் வெட்டிக்—கொண்டார்
புதுமை யிதுமிகப் புதுமைய தாமே பண்டரி‖

(11) வெட்டின கைக ளிரண்டும்—முன்போல்
வெளிப்படக் கீர்த்திவி ளங்கினின் ருரே
மட்டில் புகழ்நாம தேவர்—பாட்டின்
மகத்துவத் தாலே மரித்தகு ழந்தை பண்டரி‖

(12) முன்போ லுயிர்பெற்று வாழ—எங்கள்
மூவாத மாயன்மு குந்தனும் வைத்தான்
அன்பே உருவான பக்தர்—செய்கை
அதிசயம் அதிசயம் அதிசயம் தானே பண்டரி‖

(13) பக்தன்ஸா மந்தன்தன் தோட்டம்—எங்கள்
பண்டரி நாதனும் பார்க்கப்போ யங்கே
முத்தனும் அவனேதன் மார்பைக்—கீறி
முறைசெய்ய அதனுள்ளே மறைந்துகொண் டானே பண்டரி‖

* மேதி - எருமை



(14) கோடாநு கோடியண்டங்கள்—தம்மைக்
குக்ஷியில் வைத்துலம் ரக்ஷிக்குந் தேவன்
வாடாத ஸந்தோஷ மாகி—அவன்
வக்ஷஸ்த லத்தில்ம றைந்திருந் தானே பண்டரி‖

(15) அவ்வா றொளித்தமா யோனைக்—காண
ஆவல்மி குநாம தேவர் அறிந்தே
இவ்வா றிருத்தல் அழகோ—உனக்
கென்று வெளியில் இழுத்துவிட் டாரே பண்டரி‖

(16) காசியில் வாழ்கபீர் தாசர்—ஆடைக்
கையால் வருந்தித்தாம் நெய்கின்ற போது
தாசரா திக்கன்பு பொங்கத்—தம்மைத்
தாமே மறந்து தறியைம றந்தார் பண்டரி‖

(17) அப்போது கோதண்ட பாணி—அந்த
ஆடையை நெய்தானா திசயந் தானே
ஒப்பில் புகழ்நாம தேவர்—என்னும்
உத்தமர் கீர்த்தனப் பற்றினல் நாக பண்டரி‖

(18) நாதர் சிவகிரி தன்னில்—என்றும்
நயந்துவி ளங்கின நன்முகந் தன்னை
ஏதமில் கீழ்த்திசை நின்றும்—இன்பம்
இயையவே மேற்றிசை யிலங்கவைத் தாரே, பண்டரி‖

(19) கோவிலுந் திரும்பிய தாங்கே—இந்தக்
குற்றமில் அற்புதக் கூத்துக ளுக்குக்
கோவியர் தமக்கநு கூலன்—இங்கே
குறைவற மாவரைக் குங்குண சீலன் பண்டரி‖

(20) கோசலை யீன்றருள் பாலன்—என்னைக்
குற்றமில் தன்வசங் கொண்டருள் கோலன்
தாசரை வாழ்விக்கும் காலன்—தானே
தாவிலாக் காரணன் பூவினில் மானே பண்டரி‖

(21) வாழ்கின்ற மார்பன் மகிமை—யாரே
வாழ்த்துவார் வேதமும் வாழ்த்தா தருமை
ஆழ்கின்ற தன்றே பெருமை—அவன்
அதிசய குணமென்னும் அம்புதி தன்னில் பண்டரி‖

என்பவைகளாம்.

(இவைகளுக்கு)

நிவர்த்திதேவர், ஞானதேவர், ஸோபானதேவர் ஆகிய மூவரும் எனது சுற்றத்தார்; நட்பினர்; உற்றுரும் ஆவார்கள். அவர்களுடைய நல்லருட் பிரஸாதத்தால், ஸ்ரீசாரங்கபாணி, என்மேல் கருணை கூர்ந்தான். நாம தேவர் எனது தந்தை; ராதாபாய் எனது தாய். கபீர், ஸாமந்தர் முதலி-

யோர் எனது உடன்பிறந்தார். இவர்கள் அனைவரும் செய்த அற்புதங்களை நான் என்னென்றுரைப்பேன்! அவர்கள் தமது பக்தி யென்னும் வலையை வீசிச் சக்ரபாணி யென்னும் மீனத்தைப் பற்றி, அதனுதவியால் அற்புதக் கடலைக் கலக்கிவிட்டார்கள். அக்கடலின் வெளியேறின மகிமைகளை லோகோபகாரமாக்கியபின், அந்த பக்தர்கள், சுகானந்த பரிபூர்ணர்களாய் வாழ்கின்றார்கள்.

பைட்ணிபுரப் பிராமணர், ஞானதேவரை, அவமதித்துப் பேசின போது, அவர், எருமைக்கடாவின் வாயால், வேதாத்தியயனம் செய்வித்தார். கோராகும்பார், பாண்டுரங்கனைத் தியானித்துக்கொண்டே தமது குழந்தையை, மண்ணோடு சேர்த்து மிதித்தும், "பகவான் ஆணையைக் கடந்தோம்" என எண்ணித் தமதிருகைகளைத் துணித்துக் கொண்டு மனக்குறைவின்றி யிருந்தார். பிறகு, நாமதேவருடைய கீர்த்தன மகத்துவத்தால் அவர் கரங்கள் வளர்ந்தன; இறந்த குழந்தையைப் பகவானே பிழைப்பித்து, ருக்மிணீதேவி மூலமாய்க் கொடுக்கப் பெற்றார். இது என்ன அதிசயம்!

தோட்டக்காரராகிய ஸாமந்தருடைய தோட்டத்தைப் பகவான், பார்க்கப் போயிருந்த காலத்தில், அவர் தமது மார்பைப் பிளந்து, பகவானை அதற்குள் இருத்தி மூடினார். எண்ணில் கோடி பிரமாண்டங்களைத் தமது திருவுதரத்தில் இருத்தி அளிக்கும் பகவான் அதிக ஸந்தோஷத்துடன், ஸாமந்தர் இதயத்தில் ஒளித்துக்கொண்டிருந்தார். அங்ஙனம் ஒளித்திருந்தவனைக் காண ஆவல் கொண்ட நாமதேவர், வெளியில் இழுத்து விடுத்தார். எனக்குற்ற சுற்றமெனவுள்ள கபீர்தாஸர், காசியிலே, புடவை நெய்யும்போது, பகவத்தியானத்தால், மெய்மறந்திருக்க, கோதண்டபாணி வந்து, அப்புடவையை நெய்தான்.

சிவராத்திரியில், கீழ்த்திசை நோக்கியிருந்த நாகநாத ஸ்வாமி, நாமதேவர் கீர்த்தனைகளைக் கேட்பதற்காக, தமது ஆலயத்துடன் மேற்றிசை நோக்கித் திரும்பினார். அங்ஙனம் நாமதேவர், கீர்த்தனைகள் செய்து கொண்டிருந்த காலத்தில், ஒன்பது லக்ஷம் கொடிக்கையர்கள், ஆகாயத்திலிருந்து, பூமியில் இறங்கினார்கள். அருமையாகிய இவ்வற்புதங்களுக்குக் காரணன், இப்போது, இங்கு, என்னுடன் உட்கார்ந்து மாவரைத்துக்கொண்டிருக்கும் மாயவனேயாம். இவனுடைய மஹிமையை வர்ணிக்க, வேத சாஸ்திரங்களாலும் ஆகாது' என்பது பொருள். இப்பாடல்களை ஜநாபாய் பாடிக்கொண்டிருக்கையில், பகவான் சிரவணானந்தமாய்க் கேட்டுக்கொண்டே மாவரைத்தான்.

அப்போது குணபாய், இச்சத்தத்தைக் கேட்டு, படுக்கையில் இருந்தபடியே, "ஓ, ஜநாபாய்! உன்னோடு மாவரைக்கிறது, யார்?" என்று கேட்க, ஜநாபாய், ஒன்றும் பேசவில்லை. அப்போது, குணபாய், "மாவரைக்க ஒராளை வைத்துக்கொண்டாயா என்ன சங்கதி? இந்த இருட்டில், கூலிக்கு வந்த புண்யவதி யாவள்?" என்று கோபமாய்க் கேட்க, பகவான், "மாவரைத்துக்கொண்டிருக்கும் என்பேர்



கிருஷ்ணபாய்; நான், கூலிக்கு வரவில்லை; பாட்டுக்கு வந்து, இந்தப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றேன்" என்று கூறினன். அப்போது நாமதேவர், தமது தாயண்டை விரைவாய் ஓடிவந்து, "அம்மம்மா! இவன், மூவுலகரக்ஷகனாகிய முகுந்தன் என்று உனக்குத் தெரியவில்லையா? இம்மஹாத்மாவை, வெறுத்துரைக்கலாமா? என்று கூற, குணபாய் அஞ்சி, வீட்டுக்குள் நுழைந்து, "ஜநாபாய், மிகப்பாக்கியசாலி; இது அத்யற்புதம்; ஸ்ரீ ருக்மிணீதேவியின் மார்பணியாகிய அழகு மணியை, இந்த ஜநாபாய் இத்தனை இலேசாய்த் தன் கைம்மணியாக்கிக் கண்மணி செய்த பாக்யமெனக்கண்டு, தனது வசப்படுத்தி வைத்துக்கொண்டிருக்கின்றாள் அல்லவா! இதனை உணராத உன்மத்தையான நான், விபரீதஞ் செய்தேன். பிரமாதியர்க்கும் துதித்தற்கரியவனைக் கடுஞ்சொற் கூறினேன்! ஆஹா! இத்தகைய பகவானுக்கு அந்தரங்க அன்புடையாளாகிய ஜநாபாய்க்கும் அபராதம் செய்தவளாகிய என்னை, என் செய்யினும் போதாதே!" என்று விசனப்பட்டுக் கொண்டிருந்தாள். பகவான், மாவெல்லாம் அரைத்தான பிறகும், குற்றிருட்டாய்ப் பொழுதுவிடியாமல் இருந்தபடியால், ஜநாபாயுடன் வார்த்தை சொல்லிக்கொண்டிருந்து, கொஞ்சநேரத்துக்குள் தூங்கி விட்டான். அப்பால், அருணோதயமானபடியால், ஜநாபாய்,

"தினந்தொறுங் காலையிற் செய்யவேண்டுவவாம்
தெய்வக் கடன்களைச் செய்யத் தவறின்
மனிதனும் புலியென மதிக்கப் படுவான்" என்று

கைதட்டி, "ஓ, ஸ்வாமீ! சந்நிதியில் உன்னைப் பரிசிப்பதற்கும் தரிசிப்பதற்கும், அநேக பக்தர்கள் வந்து காத்திருப்பார்கள்" என்றுகூற, பகவான், படுக்கைவிட்டெழுந்து, ஜநாபாயிடத்தில் தனக்குள்ள மெய்யன்பை வெளிப்படுத்த வேண்டுமென்றெண்ணி, பீதாம்பரத்துடன் திவ்யாபரணங்களை அங்கு வைத்துவிட்டு, ஜநாபாயுடைய கிழிந்த புடைவையைப் போர்த்துக்கொண்டு, சந்நிதிக்கு வந்தான். அர்ச்சகர்கள், கதவைத் திறந்து, உள்ளே நுழைந்தபோது, பக்தவத்ஸலன், கந்தற்புடைவையைப் போர்த்துக்கொண்டிருக்கக் கண்டார்கள். தரிசிக்க வந்த பக்தரிற் சிலர், "தேவாதி தேவனுக்கு இந்தக் கந்தற்புடவை தகுமோ?" எனக் கேட்டார்கள். மற்றுஞ் சில உண்மை யுணர்ந்த பக்தர்கள், ஸ்ரீராமாவதாரத்தில், சவரியும், கிருஷ்ணாவதாரத்தில் கூனியும்போல, இப்போது எவளோ ஒரு ஸ்திரி, பகவானுக்கு மிகவும் நெருங்கின அன்புடையவளாயிருக்கவேண்டும்; அவளிடத்தில் தனக்குள்ள காதலை வெளிப்படுத்த எண்ணியே, இங்ஙனம், அவள் அணிந்திருந்த இந்தக் கந்தற் புடவையை நமது ஆத்ம நாதனாகிய பகவான் போர்த்துக்கொண்டு வந்தனன்" என்றார்கள். அர்ச்சகர்கள், அந்தக் கந்தற் புடைவையைக் களைந்து பார்த்தபோது, ஆபரணங்களும் இல்லையாயின. அதைக் கண்டார் அனைவரும், நமது கடவுள், பிரியமுடன் பிடி அவல் கொடுப்போர்க்கும், தனது பாக்கிய முழுமையும் கொடுத்துவிடுவான்.

பக்தியோகம் முதிர்ந்த ஒரு பாக்யவதியின் பக்திவலையிற் சிக்கி, இந்தப் பக்தப்ரியன், தனது பீதாம்பராபரணாதிகளை அந்த அம்மைக்குக் கொடுத்துவிட்டு, அவளுடைய கந்தற்புடைவையைப், பெரும் பேறென எண்ணிப் போர்த்துக்கொண்டு வந்தனன். உலகந் தொழுத்தகும் அப்புண்யவதி, எங்கிருப்பவளோ! அறியேம். நாம், சந்நிதிக் கதவை மூடி முத்திரையிட்டு வைத்த காலத்தில், பகவான், இப்படிச் செய்தால், அதைத் தடுப்பது எப்படி?" எனக்கூறிச் சிறிது யோசித்து, விசாரித்தபோது, சில நாட்களுக்கு முந்தி ஸந்நிதிக்கு வந்த ஜநாபாய் அணிந்திருந்த புடைவையே, அதுவெனச் சந்தேகித்து, அந்தம்மாளிடத்திற் சென்று, "ஓ, ஜநாபாய்! நீ அந்தரங்கபக்தியால், தெய்வசிகாமணியை வசீகரித்தனை. ஆகையால், யாங்கள் செய்யும் உபசாரங்கள், பகவானுக்குச் சுவை தரவில்லை. நேற்றிரவு, பகவான், உன்னிடத்திற்கு வந்து, தனது பீதாம்பராபரணங்களை உனக்குக் கொடுத்து, உனது கந்தற்புடைவையை அணிந்துகொண்டு வந்தனன். இப்போது அவைகளைக் கொடுத்தையானால், பகவானுக்கு ஸமர்ப்பிக்கலாம்" என்றார்கள். ஜநாபாய், அவர்களை நோக்கி, "அந்த வஸ்துக்களை நான் அறியேன்" என்றார். அவர்கள், "ஓ, பெண்மணி! அந்த பதார்த்தங்கள் உன்னிடத்தில் உள்ளன என்பதற்குச் சந்தேகம் இல்லை. ஆகையால், அவைகளைத் தா. தாராயேல், நீ தண்டிக்கப்படுவை" என்றார்கள். அதற்கு அவ்வம்மையார், "இது என்ன விபரீதம்! என்னையேன் நிந்தனைக்கு ஆளாக்குகின்றீர்கள்? அப்பொருள்களை நான் அறியேன். அவைகள் என்னிடத்தில் இருப்பனவாமாயின், எனதிருகண்களும் காணாதொழிவனவாம்" எனச் சூளுரைத்தார். அப்போது, அவர்கள், உள்ளே நுழைந்து, அப்பெண்மணி, துயிலுறும் இடத்தைச் சோதித்தார்கள்; அங்கே அவ்வாபரணங்கள் அனைத்தும் பீதாம்பரத்தில் மறைத்துக் கட்டி, ஒரு மூலையில், வைக்கப்பட்டிருந்தன. அந்த மூட்டையைக் கண்டெடுத்த அவர்கள் அனைவரும், "இப்பெண்பிள்ளை, பகவான் உடைமையை அபகரித்து வைத்துக்கொண்டு, தனக்கு ஒன்றும் தெரியாதென்று பொய்ச் சூள் உரைத்தாள். இத்தகைய துஷ்டையைக் கிராமத்துக்கு வெளியில், இராஜவீதிக்குச் சமீபத்தில் சூலத்தில் குத்திவைக்கவேண்டும்" என்று, கிராமாதிபதிக்குத் தெரிவித்து எல்லாரும் ஒரே மனம் உடையவர்களாய், அவ்வம்மையாரை இழுத்துக்கொண்டுபோய், சந்த்ரபாகைக் கரையில் நட்டிருந்த சூலத்துக் கருகில் நிறுத்தினார்கள். அப்போது,

శత్రుచ్ఛేదైకమంత్రంసకలముపనిషద్వాక్యసంపూజ్యమంత్రం ।
సంసారోత్తరమంత్రంసముపచితతమస్సంఘనిర్యాణమంత్రం ।
సర్వైశ్వర్యైకమంత్రంవ్యసనభుజగసందష్టసంత్రాణమంత్రం
జిహ్వే శ్రీకృష్ణమంత్రం జపజపసతతంజన్మసాఫల్యమంత్రం ॥



"ஒன்னலரை யழிக்கநமக் குதவுகின்ற மந்த்ரம்
உபநிடதம் எல்லாமும் ஓதுகின்ற மந்த்ரம்
பன்னரிய ஸம்ஸாரக் கடல் கடக்கு மந்த்ரம்
பற்பலவஞ் ஞானங்கள் பாற்றுகின்ற மந்த்ரம்
மன்னுபல செல்வங்கள் வழங்குகின்ற மந்த்ரம்
மனவருத்தம் பிறப்பிறப்பை மாற்றுகின்ற மந்த்ரம்
தன்னிகரில் ஸ்ரீ கிருஷ்ண ஸ்வாமி மஹா மந்த்ரம்
தன்னையென்றன் நாவே நீ தவறாமல் ஜபியே" (இதற்கு),

'ஓ, நாவே! பகைவரை அழிக்க நமக்கு உதவிசெய்கின்ற மந்திரமும், உபநிடதங்கள் எல்லாம் ஓதுகின்ற மந்திரமும், ஸம்ஸாரக் கடலைக் கடப்பிக்கும் மந்திரமும், பலவித அஞ்ஞானங்களைத் தீர்க்கும் மந்திரமும், சகல ஐஶ்வரியங்களையும் வழங்குகின்ற மந்திரமும், மனவருத்தத்தையும் பிறப்பையும் இறப்பையும் மாற்றுகின்ற மந்திரமும் ஆகிய ஒப்புயர்வில்லாத ஸ்ரீ கிருஷ்ண மஹா மந்திரத்தைத் தவறாமல் ஜபிக்கக் கடவாய் என்பது பொருள்.' இவ்வாறு, ஸ்ரீ கிருஷ்ண மந்திரத்தை அவ்வம்மையார் இடைவிடாமல் ஓதிக்கொண்டிருந்தார். "யாகங்களுக்குள் ஜபயாகம் நானாவேன்" என்று பகவத்கீதையில், பகவான், தானே சொல்லியிருக்கிறான். ஆகையால், ஜநாபாய் செய்த ஜபத்துக்குச் சந்தோஷப்பட்டு, பக்தரது துன்பமாகிய பாம்பிற்கு காருடமணியாகியும், கோபிகா நேத்ரமாகிய சாதகப்பறவைக்குகந்த மேகமணியாகியும் உள்ள பண்டரிநாதன், அந்த இருப்புச் சூலத்தைப் பஸ்மமாக்கினான். அவ்வற்புதத்தைக் கண்டார் அனைவரும், அதிசயமடைந்து, "இப்பெண்கள் சிரோமணியினுடைய பக்தி, எண்ணினுக்குள் அடங்காது" என்று, அப்பெண்கள் பெருமானைப் புகழ்ந்து, சென்ற காலத்துக் கிரங்கினவர்களாய், வணக்கத்துடன் அவ்வம்மையார்க்கு வந்தனம் செய்து, "ஓ, அம்மணி! உனது பக்தி, மூவுலகினும் கிடைத்தற்கரிதாய் விளங்குகின்றது; அதனை அறியாத நாங்கள் செய்த கொடுமைகளுக்காக, எங்களை மன்னித்தருள்க" எனப் பிரார்த்தித்துப் பண்டரிநாதனுடைய திருவிளையாடல்களைப் பலவாறு துதித்துக்கொண்டு தத்தம் வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

ஒருநாள், ஜநாபாய், நாமதேவர் வீட்டுவாசலில் உட்கார்ந்து, பாண்டுரங்கனைப் பாடிக்கொண்டிருந்தார். பகவான், தனது சந்நிதிக்குள்ளே ஒன்றியாயிருந்து, அம்மதுரமொழிக் கலைவாணியின் திருப்பாடல்களை, ஒரு பனை மடலில் எழுதிக்கொண்டிருந்தார். அப்போது, ஞானதேவர், பகவானைத் தரிசிக்க வந்தார். அவரைக் கண்டவுடன் பகவான், பனைமடலை மறைத்து வைத்தார். ஞானதேவர், பகவானை ஸாஷ்டாங்க வந்தனம் செய்து, "ஒன்றியாயிருந்து எழுதின நீ, என்னைக் கண்டவுடன் ஓலையை மறைத்த காரணம் என்ன?" என்று கேட்க, பகவான், புன்னகைப் பூரணச் சந்திரோதய முகத்துடன், "ஞானேசு-

காருடம் - விஷந்தீரச்செய்யும் கருடக்கல்

வரா! ஜநாபாய், நாமதேவர் வீட்டுவாசலிலிருந்து, பரம பக்தியோடு என்மேல் சுயம் பாடுகின்றாள். அது ஸநகாதியர் துதியைக் காட்டிலும் மேம்பட்டிருப்பதால், நான் அதனை அன்போடு எழுதுகின்றேன்" என்றான். ஞானதேவர், ஆச்சரியமடைந்து, "ஞான வெற்றிநாத! நல்லார் தொழும்போதேய் நளினமலர்ப்பாத! நற்குணப்பாண்டவர் தூத! ருக்மிணீகாந்த! சற்குண சாந்த! உனது கீர்த்தியை வேதங்கள் பாடுகின்றன: உனது கலியாண குணக்கடலில், வான்மீகர், பராசரர், வியாஸர், சுகர் முதலிய மேகங்கள் படிந்து, அதன் நீரைக் குடித்து, ஜீவராசிகளாம் பயிர்கள் தழைத்தோங்கக் கவிமாரி பொழிகின்றன. அநந்தன் முதலிய நித்ய ஸூரிகளும், பிரமன் முதலிய தேவர்களும், ஸநகர் முதலிய யோகியரும், நாரதர் முதலிய தேவ முனிவரும், பிரகலாதன் முதலிய பக்தர்களும் உன்னை, அநவரதம் பக்தி பரவசராய்த் துதித்துக் கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் அனைவரையும், நீ, மறந்து, ஜநாபாய் பாடல்களுக்கு மகிழ்ந்து, அவைகளை எழுதிக்கொண்டிருந்தாய்! இது, எங்ஙனம் இருக்கின்றதென்றால், பசு, புனிற்றிளங்கன்றின்மேல் வைத்த காதலால், தனது பழங்கன்றுகளை முட்டித் தள்ளுவதுபோல் இருக்கின்றது.

'கொஞ்சந் துன்பங் குலவினை ஆயினும்
சீதையை விரும்பித் தேடும்
காரியந் தன்னிற் கவலைவை யேனே' (இதற்கு),

'உனக்கு ஒரு சிறிது துன்பம் நேரிட்டாலும், ஸீதையால் எனக்காக வேண்டிய காரியம் என்ன?' என்பது பொருள். இந்தப்படி, சுக்ரீவ மகாராஜனுக்கு, சிறிது துன்பம் நேரிட்டாலும், 'ஸீதையால், எனக்காக வேண்டிய காரியம் ஒன்றுமில்லை' என்று கூறினை யல்லவா? இது உனக்கு இயற்கைக் குணமாயிருக்கின்றது. கணவன், தனது இரகஸியத்தை, கற்புடையாளாகிய மனைவிக்கு மறைக்காதபடி, உன்னுடைய பரமரஹஸியத்தை, உன்னை நம்பிய உனது பக்தர்களுக்கு, விளம்பரப்படுத்தாமல், மறைக்குங் காரணம் என்ன? நீ, பக்தபராதந்திரன் என்று, மூவுலகும் உணரும். இதற்குக் கூச்சம் என்ன? உனக்கு இத்தனை அன்புக்கிருப்பிடமாயுள்ள ஜநாபாயை, உன்னோடு வந்து தரிசிக்கவேண்டுமென்று விரும்புகின்றேன்" என்று விண்ணப்பஞ் செய்தார். நம்பினவரைக் காக்கும் கருணாநிதியாகிய நந்தகுமாரன், "நல்லது! அப்படியே செய்யலாம்" எனக் களித்த மனத்தனாகி, முற்காலத்தில், உத்தவனோடு கூனி வீட்டுக்குப் போனதுபோல; இப்போது, ஞானதேவரோடு, ஜநாபாய் வீட்டுக்கு வந்தார். இவ்வற்புதத்தைக் கண்ட பாகவதர்கள் அனைவரும், பகவான் அன்பர்க்கெளியவன் எனப்புகழ்ந்து பின்பற்றினார்கள். அங்ஙனம் பகவான், ஞானதேவராகிய மெய்யன்பரோடு வருவதைப் பார்த்து, நாமதேவர் எதிர்கொண்டு, ஸாஷ்டாங்க வந்தனம் செய்து, உடன் அழைத்துக்கொண்டு வந்து, உட்காரவைத்து, பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டிருந்தார். அனைவரும் ஆனந்த



பரவசராய்க் கேட்டுக்கொண்டிருந்தார்கள். பகவான், நாமதேவரை நோக்கி, "இந்த ஸாதுக்கள் அனைவரும், ஜநாபாயைக் காணவேண்டுமென்று விரும்பி வந்திருக்கின்றார்கள்; அந்த பெண்கள் நாயகத்தை வரவழைப்பாய்" என்று நியமித்தபடியே, நாமதேவர், "நல்லது! அப்படியே ஆகுக" என்றெழுந்து சென்று, சாணம் மிதித்துக்கொண்டிருந்த ஜநாபாயை அழைத்துக்கொண்டு வந்தார். ஜநாபாய், பாண்டுரங்கனுக்கும் ஞானதேவர் முதலிய ஸாது ஜனங்களுக்கும் வந்தனந் தந்து, ஒருபுறம் நின்றுகொண்டிருக்கையில், ஞானதேவர், நாமதேவரை நோக்கி, "இன்றோரதிசயங்கண்டேன்: இந்த புண்ய புருஷோத்தமன், ஜநாபாய், தன்னைப் புகழ்ந்து பாடிய பாடல்களை, தன் கரத்தாலேயே, ஒன்றியாயிருந்து எழுதிக்கொண்டிருந்தான்; என்னைக் கண்டவுடன், ஏட்டெழுத்தாணிகளை ஒளித்துவைத்தான்" என்று கூறினர். பக்தப்பிரியரான பகவான், அதைக்கேட்டு, "ஜநாபாயுடைய பக்திரஸமான திருப்பாடல்களை, நான் வரைந்தது பிசகல்ல; இந்தச் சுத்தமனத்து உத்தமியின் வண்ணக்கிளி மொழிகள், எனக்கு, ஆனந்தத்தை உண்டாக்குகின்றன. ஆகையால், அத்திருப்பாடல்களை, எனது மனவேட்டில் வரைந்துகொண்டேன். இந்த ஜநாபாய், என்னைத் துதித்த பாடல்களை ஓதுகிறவர்களுடைய வீட்டுவாசலில், நான், பொருந்தியிருந்து, அவர்களை அதிக ஜாக்ரதையாய்க் காப்பாற்றுவேன்" என்று பகர்ந்தனன். அதுகேட்ட ஞானதேவாதியர், கரகோஷஞ்செய்து, ஜய ஜயவென ஆர்ப்பரித்தார்கள். அப்போது, அங்கே, கபீர், சோகாமேளர், ரோஹிதாஸர், நாமதேவர் முதலாகிய பரம பக்தர்கள் இருந்தார்கள். ஞானதேவரும் நாமதேவரும், கிரகங்களுக்கிடையில் பிரகாசிக்கும் சூரிய சந்திரர்களைப்போல விளங்கினார்கள். ஞானதேவர், ஜநாபாயைநோக்கி, "ஓ, பெண்கள் சிகாமணி! ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திக்கு அத்தியந்த பிரியனான உத்தவன், இப்போது, நாமதேவராய் அவதரித்து, பண்டரிநாதனை ஆராதித்துத் தன் வசமாக்கிக்கொண்டான்; நீ, முற்பிறப்பில், பகவானை, எவ்வுருவத்தோடு பூசித்தாய்?" என்று கேட்டார். அதற்கு ஜநாபாய் மிகவணங்கி, "ஓ, ஸ்வாமீ! நான், ஸ்ரீ கிருஷ்ணாவதார காலத்தில், கூனியாய், சந்தனக்குழம்பு முதலிய பரிமளப் பொருள்களால் அபிஷேகம் செய்வித்து, பகவானை ஆராதித்தேன். வாஸுதேவன், கம்ஸவதை செய்தபிறகு, தனது பிராணஸமானனாகிய உத்தவனோடு எனது கிருகத்திற்கு வந்து, எனக்கு அனுக்கிரகஞ் செய்தான். இப்போது அந்த பகவான், புண்டரீகவரதனாய், உத்தவாமிசரான நாமதேவர்க்குப் பாதந்த்ரனாயிருப்பதனால், நான், பகவானுடைய, மனோபாவனைக்கநுகூலமாய், ஜநாபாயாகி, உத்தவாமிசராகிய நாமதேவருடைய ஆதரவைப் பெற்று, அதனால், இந்தப் பகவானுடைய பரம கிருபைக்குப் பாத்ரமாகும் இலக்கணத்தோடு கூடியிருக்கின்றேன்" என்று கூறக்கேட்டு, ஞானதேவர் ஆச்சரியமடைந்து, அப்படியானால், "நீ, எண்ணிறந்த புண்ணியந் திரண்ட பாக்யவதியாயினை. ஆகையால், பிரமாதியர்க்கும் அரும்பெறல்வைப்பாகிய ஹிருஷீகேசன் உனது வசப்பட்டு

ருக்கின்றான்" என்று வியந்துரைத்தார். பிறகு, பகவான், அங்கிருந்த பக்தர்களை நோக்கி, "ஓ, ஸாதுக்களே! இதுமுதல், என்னைப் பாடுகிறவர் களில், இன்னாரின்னார் பாடல்களை, இன்னார் இன்னார் வரையவேண்டும் என்று ஓர் ஏற்பாடு செய்கின்றேன்: ஞானேச்வரருடைய மாணிக்க வாசகங்களாகிய பாடல்களை ஸச்சிதானந்த பிராமணனும், நிவர்த்தி தேவருடைய நின்மல மொழிகளாகிய திருப்பாசுரங்களை ஸோபான தேவரும், முக்தாபாயினுடைய முத்தமொழிகளாகிய பாடல்களை ஞானேச்வரரும், சோகாபரமானந்தருடைய சுத்த மொழிகளாகிய சுருதி வசனத் திருப்பாடல்களை விஸோபாகேசனும், ஸாமந்தனுடைய ஸாத்விகத் திருவாய்மொழிகளை சிவோபா அர்ச்சகனும், கூர்மதாஸ னுடைய கோதறு சொற்களாகிய பாசுரங்களை ஜயதேவரும், அநந்த பட்டருடைய ஆனந்தானுபவ மொழிகளாகிய பாசுரங்களை சோகாமேளனும் எழுதவேண்டும்; நாமதேவர், ஜநாபாய் இவர்களிரு வருடைய அன்பளிந்து இன்பரஸம் ஊறும் இனிய திருவாய்மொழிக் கனிகளை, நானே வரைவேன்" என்று கூறி, ஞானதேவரை நோக்கி, "இனி, ஜநாபாயின் * கிருதிகளை உமக்குக் காட்டத் தடையில்லை" என்றான். இதைக்கேட்ட ஸாதுக்கள், பகவானை நோக்கி, அன்பர்க் கமிர்தமனைய தேவா! உலகை இயக்குபவனாகிய உன்னைத் தன் வசப்படுத் திக்கொண்டிருக்கும் ஜநாபாயினுடைய பாக்ய மிகுதி, வாசாமகோசர மாய் இருக்கின்றது. சந்திரனுக்குள்ளிருக்கும் † முயற்கறை, அனைவ ரும் வணங்க விளங்குவதுபோல, உனது கூட்டுறவால், ஜநாபாய், உலக வந்தனை பாத்திரமாய்ப் பிரகாசிக்கின்றாள். இந்த பாக்யவதியைத் தொழுத்தையென்ன, இனியெவரேனும் கேவலமாய்ச் சொல்லலாமா!" என்று கொண்டாடினார்கள்.

அப்போது, நாமதேவர், பரிமளமிருந்த சுத்த தீர்த்தங் கொண்டு வந்து, குருபரம்பராநுசந்தானம் பண்ணி, பகவான், பாகவதர்கள் இவர்களுடைய திருவடிகளை அலம்பிய தீர்த்தத்தையும் அதனோடு கூட்டி,

విష్ణుపాదోదకంపీత్వా । కోటిజన్మాఘనాశనం । ఏతత్సమస్తపాపానాం ।
ప్రాయశ్చిత్తంమనీషిభిః । నిర్ణీతంభగవద్భక్త । పాదోదకనిషేవనం ॥

(என்றால்)

"திருமாலுடைய திருவடித் தீர்த்தம்
கருமாலகற்றும் கதியுந்—தருமால்
திருமாலடியார் திருவடிநீர் ஊழாய்
வருமா வினைக்கு மருந்து" (இதற்கு),

'விஷ்ணுபாதநீரை உட்கொண்டால், பிறவிமபக்கத்துக்கு ஆதாரமாகிய பாவங்கள் நீங்கும்; அன்றி, பரமபதமும் கிடைக்கும், திருமாலடி யார்களுடைய பாதநீரை உட்கொண்டால், ஊழ்வினைக்கு மருந்தாகும்'

* கிருதி - பாடல், † முயற்கறை - முசலைப்போலுள்ள களங்கம்.



என்பது பொருள். இப்படி அறிஞர்களால் தீர்மானிக்கப்பட்டிருக் கின்றதென்று அதன் பெருமையை எடுத்துக்கூறி, அவர்,

(పిబేత్ శిరసిధారయేత్) (என்றால்),

'கடிக்கமலக் கண்ணன்றன் காற்கமல நீரைக்
குடிக்கமுடி தாங்கத்தகும்' என்றபடி,

அந்த தீர்த்தத்தை ஸ்வீகரித்து, சிரமேல் தெளித்துக்கொண்டு, பகவா னுக்கும் அவனுடைய பக்தர்களுக்கும் பலவித உபசாரங்கள் செய்தார். பிறகு, பகவான், பக்தர்களுடன் ஸந்நிதிக்குச்சென்று, நடந்த விருத் தாந்தங்களை ஸ்ரீ ருக்மிணிதேவிக்குச் சொன்னான்.

ஸ்தவப்ரியாயநம:

## இருபத்தாறும் அத்தியாயம்

# மச்சேந்திரநாதர் சரித்திரம்

ஒருநாள், திருப்பாற் கடலோரத்தில், கைலாஸபதியாகிய பரம சிவன், பார்வதிதேவியுடன் உலாவியபடியே, ஸ்ரீ தாரகநாம பஜநம் செய்துகொண்டிருந்தான். அப்போது, பார்வதிதேவி, பரமசிவனைப் பணிந்து, "பிராணநாதா! நீ, இப்போது பஜிக்கிற ஸ்ரீ தாரக நாமத் தின் மஹத்வத்தை, எனக்குக் கூறவேண்டும்" என்று பிரார்த்தித்தாள். சங்கரன், மிகக்களித்து, பார்வதியை நோக்கி, "ஏ, கிரிஜாமணீ! இப்போது நீ வினவிய ஸ்ரீ தாரகநாம மான்மியத்தைக் கணக்கிட்டுச் சொல்ல, தேவ ருக்கும், மூவருக்கும், யாவருக்கும் அஸாத்தியமாகும். ஸ்ரீ தாரக பிரமமாகிய இராமாவதாரமானது, துஷ்ட நிக்ரஹ, சிஷ்டபரிபாலன, தர்ம ஸ்த்தாபநங்களுக்காகச் செய்யப்பட்டிருக்கின்றது. இந்த அவ தாரத்தில், சகல நற்குணங்களும் விளங்கியிருக்கும். இந்த பகவான் கடாக்ஷத்தால், இந்நிலவுலகில் சராசரங்கள் அனைத்தும், முக்திபெற் றுய்ந்தன. இம் மஹாத்மாவால், குல தர்மங்கள் காக்கப்பட்டன. இப்புருஷோத்தமனுடைய திருநாம பஜனஞ்செய்வோர்க்கு, இகபர சுகங்கள் கரதலாமலகமாய் இருக்கும். நாரத வால்மீகராதியோர், இந்நாம மான்மியம் உணர்வர். நித்ய விபூதியிலே, அயோத்தியென்னும் திவ்ய நகரத்திலே, பகவான், ஸ்ரீராமசொரூபியாய் வீற்றிருந்து, ஸ்ரீதாரக மந்திரோபாஸகர்களுடைய தியானத்திற் பொருந்தினவனாய் அவர்களுக்கு இகபர சுகங்களைக் கொடுத்தருள்கின்றான். இவ்விராம பத்ரனுடைய பிரபாவங்களும், அவனது திருநாமங்களினுடைய வைப வங்களும், இராமதாபநீயம் என்னும் உபநிஷத்தில் சொல்லப்பட் டிருக்கின்றன. இஃதன்றியும், பகவான், இராம ரூபந்தாங்கி, இந்த ஜம்புத்வீபத்திலுள்ள நவகண்டங்களில் ஒன்றும், ஹிமாசல ஹேம கூட பர்வதங்களுக் கிடையிலுள்ளதுமாகிய கிம்புருட கண்டத்துக்குத்

தலைவனாகி, அக்கண்டத்து மாந்தரால் உபாஸிக்கப் படுகின்றான். பிரமாதி தேவர்களால், தோத்திரிக்கப்படுபவனாகி, இந்த வைவஸ்வத மன்வந்தரத்தில் தசரதகுமாரனாய் அவதரித்துத் தனது சரணாகதியின் விபவத்தை விளக்கியருளினான். இந்த பக்தவத்ஸல வாசகமான ஸ்ரீ தாரகநாமத்தைப் பாராயணஞ் செய்வதனால், ஸஹஸ்ரநாம பாராயணம் பண்ணின பலன் பிராப்தியாகும். இந்த இராமபத்ரனுடைய சரித்ரம் ஸர்வலோகவாசிகளாலும் பக்தி சிரத்தைகளோடு பாராயணஞ் செய்யப்படுகின்றது. விஷ்ணுலோகத்தில் ஸ்ரீ மஹாவிஷ்ணுவுக்கு விஷ்வக்ஸேனரும், ஸத்யலோகத்தில் ஹிரண்யகர்ப்பனுக்கு மார்க்கண்டேய மாமுனிவரும், கைலாஸத்தில் சங்கரனுக்கு நந்திகேச்வரரும், நூறு நூறு நூறாயிரங்களுக்கு மேலும் பரவியுள்ள ஸ்ரீராமாயணத்தை வாசித்துக் கர்ணாம்ருதமாய் புகட்டுகின்றார்கள் என்றும், எழுபது நூறு நூறாயிரம் என்னுள்ள ஸ்ரீ ராமாயணத்தை * துருவனுடைய சந்நிதியில் தேவர்கள் படிக்கின்றார்கள் என்றும், கோவுலகங்களில், பத்து நூறு நூறாயிரங்களுக்கு மேலும் பரவியுள்ள ஸ்ரீராமாயணத்தை கற்பக விருக்ஷ தேவதைகள் முதலியன வாசிக்கின்றன என்றும், இந்திர வுலகத்தில் நூறு நூறாயிரத்துக்கு மேலும் விரிந்துள்ள ஸ்ரீராமாயணத்தை வாலகில்யாதிபர்கள் வாசிக்கின்றார்கள் என்றும், ஸூர்ய லோகத்தில் துருவலோகத்திற் போலவே எழுபது நூறு நூறாயிரக் கணக்குள்ள ஸ்ரீராமாயணத்தை வஸிஷ்டாதியர் வாசிக்கின்றார்கள் என்றும், கந்தர்வலோகம் யக்ஷலோகம் கின்னரலோகம் அக்னிலோகம் முதலியவைகளில் நூறு நூறாயிரக் கணக்குள்ள ஸ்ரீராமாயணத்தை நாரதாதியர் வாசிக்கின்றார்களென்றும் பிரமாண்டாதி புராணங்கள் கூறுகின்றன. நாரதருடைய உபதேசத்தால் பிரமானுக்கிரகத்தைப் பெற்ற வான்மீக மாமுனிவர், இம்மனிதவுலகத்திற்கு வேண்டியபடி ஸ்ரீராமாயணத்தை இருபத்துநாலாயிரம் என்னுள்ள சுலோகங்களால் விரித்துரைத்தார். ஸ்ரீராமபத்திரனுடைய தாரக மந்திரத்தை, உபாஸித்துத் தேவர்கள் யாவரும் தத்தம் பதவிகளைப் பெற்றனர். இப்பேர்ப்பட்ட தாரக மஹா மந்திரத்தை, கலியாண குணாத்மகனாகிய லக்ஷ்மீகாந்தன், முற்காலத்தில் எனக்கு உபதேசித்தான். அதனை, பக்தி சிரத்தை நிறைந்த வுனக்கு, நான், இப்போது உபதேசிக்கின்றேன்" என்று கூறி, சுத்தமனத் துத்தமியாகிய பார்வதிதேவிக்குப் பரமசிவன், ஸ்ரீ தாரக மந்திரோபதேசம் செய்தான். இங்ஙனம், † அத்ரி புத்ரிக்குச் சங்கரன் உபதேசிக்கையில், சமுத்திரத்தில் நீந்திக்கொண்டிருந்த கருவுற்ற பெண்மீன் ஒன்று, பரமசிவனையும் பார்வதிதேவியையும் பக்தியுடன் பார்த்தபடியே அசைவற்றிருந்தது. பூர்வத்தில், பரமபாகவதனான பிரகலாதன், தாயின் கர்ப்பத்திலிருந்துகொண்டே, நாரதோபதேசத்தைக் கிரகித்தபடி, மீன்வயிற்றிலிருந்த சிவாம்சமாகிய ஜீவன், பரமசிவோபதேசத்தைப்பெற்று, ஸதா

* துருவன் - பூமியின் வடாது முனைக்கு நேரேயுள்ள நக்ஷத்திரம்.
† அத்ரி புத்ரி - மலைமகள்.



ஸ்ரீ தாரகநாமத்தை தியானித்துக்கொண்டு, பன்னெடுநாள் மீன்கருப்பையில் வசித்து, இயற்கை ஞானத்துடன் மானிட உருவந்தாங்கிப் பிறந்து கடவுள் நியமனத்தால், உலகத்தார் உய்யுமாறு இந்த பரதகண்டத்தில் சேர்க்கப்பட்டது. * அவ்வாண்தகை, மீன்வயிற்றிற் றோன்றினபடியால், மச்சேந்திரநாதர் என்று அழைக்கப்பட்டார். இவர், "இந்நிலவுலகத்தாயகமோ, நற்குண நாயகமோ, ஸ்ரீ தாரக ப்ரஹ்மமூர்த்தமோ, குணாதீத சுத்தஸ்வரூபமோ!" என, ஸாதுக்கள் தம்மைப் புகழ்ந்து கூறுமாறு பிறவியிலிருந்தே மெய்ஞ்ஞானபரராய் விளங்கினர்.

இந்த மஹாத்மா, தீர்த்தயாத்திரை செய்துகொண்டு, அநேக புண்ய தீர்த்தங்களில் மூழ்கி, திவ்ய திருப்பதிகளில் திருக்கோயில் கொண்டெழுந்தருளிய பகவத் ரூபங்களைத் தரிசித்து, பிச்சை எடுத்துப் பிழைத்து, ஓரிடத்திற் பொருந்தியிராமல், நாட்களைக் கழிப்பாராயினர். ஒருநாள் இவர் ஓரூரில் ஒரு வர்த்தகன் வீட்டுக்குப்போய், "இச்சையற்றவனுக்குப் பிச்சைபோடு" என்றார். அவ்வர்த்தகன் மனைவி, அன்னங்கொண்டுவந்து அவர்க்குக் கொடுத்து, காஷாயதாரராய், நீறுபூசின மேனிப் பொலிவுடன் விளங்கிய அவரைக் கண்டு, "இவர், யாரோ மஹாத்மாவாயிருக்கவேண்டும்" என்றெண்ணி, "ஓ ஸாதுசிகாமணீ! தேவரீர் எங்கிருந்து எங்குச் செல்கின்றீர்? யான் செய்த புண்ணிய விசேடத்தால், தேவரீர் இங்கெழுந்தருளினீர்" என, இனியமொழிகூறி வணங்கினாள். அவளைக்கண்ட மச்சேந்திரநாதர், "அம்மணீ,! நான் பரதேசி; எனக்கென்று ஓரிடம் இல்லை; தீர்த்தயாத்திரை செய்கின்றேன்; ஆசையில்லேன்" என்று கூறக்கேட்ட அவ்வர்த்தகன் மனைவி, "ஓ, மஹாத்மா! எங்களுக்கு ஏராளமான திரவியமிருந்தும், புத்ரபாக்யம் இல்லாதபடியால், எங்கள் வீடு, சந்திரன் இல்லா வானம்போல் பொலிவற்றிருக்கின்றது. ஆகையால், எனக்கு ஸந்தானம் உண்டாகும்படி அநுக்கிரகஞ் செய்யவேண்டும்" என வேண்டினாள். அவர், அவள்மேற் கிருபைகூர்ந்து, ஒரு சிட்டிக்கை விபூதியை அவள் கரத்தில் இட்டு, "இதனை வாயிற் போட்டுக்கொள். உனக்கு விஷ்ணுவைப்போல ஒரு புத்ரன் பிறப்பான்" எனக் கூறித் தம் வழியே சென்றார்.

அவ்வர்த்தகன் மனைவி, மச்சேந்திரநாதர் அநுக்கிரகித்துக்கொடுத்த விபூதியை உடனே வாயிற்போட்டுக்கொள்ளாமல், தனக்கு நேசமான பெண்களுடன், அவ்விபூதி கிடைத்த விதத்தைக்கூறினாள். அவர்கள், பெண்களாகையால், பெருமிதமான குணத்தைவிட்டு, பேதைமைக் குணத்தால், "ஸந்நியாஸிகளை நம்பக்கூடாது; சொக்குப்பொடி போட்டு மனிதரை மயக்கி வசப்படுத்துவார்கள்" என்று சொல்ல, அவ்வார்த்தைகளை உண்மையென நம்பி, அவள், அந்த விபூதியை அடுப்பில் போட்டாள். பன்னிரண்டு வருஷங்களுக்குப் பிறகு, மச்சேந்திரநாதர், அவ்வூர்க்கு வந்து, வர்த்தகன் வீட்டுக்குப்போய், "இச்சையற்ற

* ஆண்டகை - ஆடவரிற் சிறந்தவர்.

னுக்குப் பிச்சையிடுங்கள்" என்று கேட்க? வர்த்தகன் மனைவி அன்னங்கொண்டுவந்து கொடுத்தாள். அப்போது, இந்தப் புண்யபுருஷர், அந்த மாதை நோக்கி, "நான் தந்த விபூதியால் உண்டான புத்திரனைக் காண விரும்புகின்றேன்" என்றார். அப்பெண்மணி, "நிஜம் பேசினால், இவர் சபிப்பார்" என்றெண்ணிப் பயந்து, மறுமொழி கூறாதிருந்தாள். மச்சேந்திரநாதர், "ஓ மாதர்க்கரசி! நீ அஞ்சற்க, விபூதியை என்னசெய்தாய்? உண்மைசொல்" என்றார். அவ்வணிதை, "மதியீனத்தால், நான், அதனை உட்கொள்ளாமல், அடுப்பில் எறிந்தேன்" என்று கூறினாள். அதுகேட்ட மச்சேந்திரநாதர், "கடந்ததைக்குறித்துக் கவலைப்படவேண்டாம். அவ்வடுப்புச் சாம்பலை எங்கே கொட்டிவைத்தாய்?" என்று கேட்க, அவ்வரிவை, தான் நிதம் சாம்பலைக் கொட்டிவைக்கும் குப்பைமேட்டைக் காட்டினாள். அப்போது, அவ்வுத்தமர்; அக்குப்பைமேட்டின்மேல் நின்று, "ஓ, பற்றற்ற பரமயோகி!" என அழைத்தார். உடனே அக்குப்பைக்குள்ளிருந்து, "குருநாதா; வந்தேன்; வந்தேன்" என்று ஒரு திருவாக்குப் பிறந்தது. மச்சேந்திரநாதர், அவ்வூராரை வரவழைத்து, அந்தக் குப்பைமேட்டைக் கிளறினபோது, பன்னீராட்டைப் பருவத்தராய், திவ்யதிருமேனிப் பொலிவுடையவராய், அழகெல்லாந் திரண்டுருண்ட முகமுடையவராய், அகன்ற கண்களை உடையவராய், பகவந்நாம பாராயணபராய், வீற்றிருந்த ஒரு சிறுவர் தோன்றினார். அவரைக் கண்டார் அனைவரும் அதிசயித்தார்கள். மச்சேந்திரநாதர், அப்பரமபுருஷரிடத்திற் சென்று, தமது கரத்தை அவர் சிரசிற்சேர்த்து, "பொறுமையோடு உற்றுணர்க" என்று கூற, அச்சிறுவர் எழுந்து, மச்சேந்திரநாதருக்கு ஸாஷ்டாங்க வந்தனம் செய்தார். மச்சேந்திரநாதர், அச்சிறுவர்க்கருள்புரிந்து, பன்னீராண்டு, பூதேவியின் கர்ப்பத்தில் காக்கப்பட்டிருந்ததனால், கோரக்ஷிதர் என நாமகரணஞ் சூட்டி, அவர் கையைப்பற்றிக்கொண்டு நடந்தார். அப்போது, வர்த்தகன், இவ்வதிசயத்தைக்கண்டு, "நமது தூர் அதிர்ஷ்டவசத்தால்,

"கைக்கெட் டினபழமும் வாய்க்கெட்டா மற்போகும்
இக்கட் டுறுவ தெவரறிவார்—புக்களிக்கும்
ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்" என்ற,

திருவள்ளுவநீதி வெண்பாவின்படி, 'கைக்கெட்டின பழமே அனைய பெரியார் அருள் கிடைத்தும், தப்பிப்போய்விட்டது' என்று, சோகமடைந்து, தனது மனையாளுடன், மச்சேந்திரநாதர்க்கு, வந்தனம் செய்து, "ஓ ஸ்வாமீ! தேவரீருடைய திருவருட்பிரஸாதத்தை நம்பவகையறியாமல், விலையில்லா மாணிக்கத்தை வீணே யிழந்தோம். எங்களைப்போன்ற நிர்ப்பாக்யர்கள் யாவர்? இந்த ஏழைகட் சிரங்கவேண்டும்; ஐயனே!" எனப் பிரார்த்தித்தான். மச்சேந்திரநாதர் கருணைகூர்ந்து, "பயப்படாதீர்கள், பகவத் கடாக்ஷத்தால் உங்களுக்குப் புத்திரன் பிறப்பான்" என்றநுக்ரஹித்து, கோரக்ஷிதரை அழைத்துக்கொண்டு தமது வழியே சென்றார்.



கோரக்ஷிதர், மச்சேந்திரநாதரைநோக்கி, "பிறவி வலையிற் பட்டவனாகிய எனக்கு, ஸ்ரீதாரகமந்திரத்தை உபதேசித்தருள்க" எனப் பிரார்த்தித்தார். அதற்கு அவர், "ஓ வத்ஸா! கொஞ்சகாலம் சென்றபிறகு உனக்குப் பரிபக்குவகாலம் வரும்; அப்போது, நீ, ஸ்ரீ தாரக மந்திரோப தேசத்துக்கு அதிகாரியாவாய்" எனக் கூற, கோரக்ஷிதர் "அப்படியே செய்தருள்க" என்று ஆசாரியனைப் பின்தொடர்ந்து, போய்க்கொண்டிருந்தார். மச்சேந்திரநாதர், ஒரு கிராமத்தருகில் இறங்கி, "ஓ கோரக்ஷிதா! இவ்வூர்க்குள் நுழைந்து, பிச்சை யெடுத்துக் கொண்டுவா" என்று கட்டளையிட, கோரக்ஷிதர், "அப்படியே செய்கின்றேன்" என்று, ஊர்க்குள் நுழைந்து, வீடு வீடாய்ப் பிச்சை கேட்டுக்கொண்டே, ஸமாராதனை நடந்துகொண்டிருந்த ஒரு பிராமணன் வீட்டுக்குவந்து பிச்சைகேட்டார். அவ்வேதியன் மனைவி, பக்ஷணங்களுடன் அன்னங்கொண்டுவந்து கொடுத்தாள். கோரக்ஷிதர் அந்த அன்னத்தைக் கொண்டுவந்து ஆசாரியருக்குக் கொடுக்க, அவர் அதனைப் பகவானுக்கு நிவேதித்து, எஞ்சியதைத் தாமுண்டு, கோரக்ஷிதரைநோக்கி, "இன்று நீ கொண்டுவந்த பிச்சை மிகவும் மேம்பாடுடையது; நாளைக்கும் அப்படியே, கொண்டுவருக" என்று கட்டளையிட்டார். கோரக்ஷிதர், "அப்படியே, தேவர் சித்தம் அடியேன் பாக்கியம்" என விண்ணப்பஞ்செய்து, ஆசாரிய பரிகல சேஷத்தைத் தாம் உண்டு களித்தார். மறுநாட்காலையிலெழுந்து, ஸ்நாநுஷ்டானங்கள் முடித்து, ஆசாரியர் அநுமதிபெற்று, கோரக்ஷிதர், அந்த கிராமத்துள் நுழைந்து, தமக்குப் பக்ஷணங்களுடன் பக்ஷமாய்ச் சோறிட்ட பார்ப்பனப் பத்தினியைக்கண்டு, "ஓ அம்மணீ! நேற்று நீதந்த பிச்சையை எமது குருஸ்வாமிக்கு நிவேதித்தேன்; அவர் அதனை உண்டு, களித்து, மிக நன்றாய் இருக்கின்றதென்றார். இன்றைக்கும் அதுபோலவே வேண்டுமென்று கட்டளையிட்டிருக்கின்றார். அதற்கு நான், ஒப்பிவந்தேன். ஆகையால், இன்றைக்கும் நேற்றைப்போலவே, பக்ஷணங்களுடன் பிக்ஷை தரவேண்டும்" என்றார். அதற்கு அப்பார்ப்பனமாது, "நேற்று, எமதகத்தில், ஸமாராதனம் நடந்தது. ஆகையால், பக்ஷணங்கள் இருந்தன. இன்று பக்ஷணங்கள் இல. ஆகையால், உள்ளதைத் தருகின்றேன்" என்றாள். கோரக்ஷிதர், "அம்மா! நான் ஆசையற்றவன்; ஓடும் பொன்னும் ஒன்றென் மதிப்பவன்; அங்ஙனம் இருந்தும், எனது ஆசாரியருக்காக,

'பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு' என்றபடி,

உன்னை வேண்டுகின்றேன்" என்றார். அம்மாது, "ஓ, சிறுவரே! இல்லாத பதார்த்தம் எங்கிருந்து வரும்! பிச்சைக்காரர், இல்லறத்தாரை வருத்தாமல், கொடுத்ததை மனநிறைவோடு வாங்கிக்கொள்ள வேண்டும். ஆகையால், இப்போது உனக்கிஷ்டமிருந்தால், நான் கொடுப்பதைக் கொள்ளுக; இல்லையேல் தள்ளுக" என்றாள். கோரக்ஷிதர், "எனது

ஆசாரியர் இச்சையை நிறைவேற்றும்பொருட்டு, அவர் கட்டளையைச் சிரசாவகித்து உன்னை நோக்கி வந்தேன். பக்ஷணங்கள் தாராயானால், நான் இவ்விடம் விட்டு அசையமாட்டேன்" என்று கூறி, ஒரேபிடிவாதம் கொண்டிருந்தார். அப்போது, அந்த பார்ப்பினி, "ஓஹோ! பிடிவாதம் பண்ணாதே; தர்மம் பண்ணவந்தால், அது, அதர்மமாயிற்று. நாய்போல, சோற்றுக்குச் சண்டைபோடாதே" என்று கூற, கோரக்ஷிதர், "ஓ மாதாவே! நான் நாய்க்குங் கடைப்பட்டவன்; நாயாவது, நல்ல வேட்டையாடி, வளர்ப்பவனிடத்தில் நன்றியுள்ளதாயிருக்கும். நீ என்ன சொன்னாலும் சரி! உன்னிடத்தில் பக்ஷணத்தோடு அன்னம்பெறாமல் நான் போகமாட்டேன்" என்றார். அந்த பிராமணஸ்திரி, "நீ உனது கண்ணைப்பிடுங்கி யெறிந்தாலும், என்னிடத்தில் பக்ஷணங்கள் கிடையா" என்று ஒரே பிடிவாதமாய்க் கூறினாள். கோரக்ஷிதர், "நீ எண்ணினபடி எனது கண்ணையாவது பிடுங்கிக் கொடுக்கின்றேன்; அப்போதாவது, என்மேல் இரங்கிப் பக்ஷணங்கள் கொடு," என்றார். அப்பார்ப்பினி இவர் மனோநிலையை உணராமல், "கண்ணைக் கொடுத்தால், பக்ஷணந் தருகிறேன்" என்று வேடிக்கையாய்க் கூறினாள். அவர், அதனை உண்மையாய் நம்பி, தமது கண்களில் ஒன்றைப் பிடுங்கி அவள் எதிரேவைத்து இனித் தாமதிக்காமல் பக்ஷணங்களைத் தருக" என்றார். அப்போது, அவ்வுத்தமி, மிகவும் அஞ்சி, "இது என்ன விபரீதம்! இராஜாங்கத்தார் அறிந்தால், எனக்குத் தண்டனை கிடைக்குமே!" எனக்கூறிக் கதவை மூடிவிட்டு, கோரக்ஷிதர் கண்ணினின்றொழுகும் இரத்தத்தைத் தனது புடவை முன்றானையால் துடைத்து, "இந்த பிரமாதத்துக்கு என் செய்க்கடவேன்!" என்று சோகமடைந்திருந்தாள். கோரக்ஷிதர், சாந்தமூர்த்தியாய், "ஓ, பாக்யசாலினி! அஞ்சற்க. எமது ஆசாரியருக்குப் பக்ஷணங்கொடு" என்று கேட்க, அவள், வீட்டுக்குள் நுழைந்து, விரைவில் பக்ஷணங்கள் செய்து, முந்திய நாளினும் மும்மடங்கு அளவுள்ளதாய்க் கொடுத்தாள். கோரக்ஷிதர், தாயே! அஞ்சாதே என, அவளுக்குத் தைரியங்கூறி, மச்சேந்திரநாதரிடம் வந்து, அவர் அறியாதபடி கண்ணை மறைத்துக்கொண்டு, "தேவரீர் கட்டளையிட்டபடியே பக்ஷணங்களோடு பிக்ஷை கொண்டுவந்தேன்" என்று, அதனை அவர் முன்னே வைத்தார். அவர் ஸந்தோஷித்து, "உனது கண்ணுக்கு, என்ன உபாதி உண்டாயிற்று" என்று கேட்டு, நடந்த விருத்தாந்தங்களை உணர்ந்து, "நல்ல காரியஞ் செய்தனை! பக்ஷணங்களுக்காக ஒரு கண்ணைக் கொடுத்தனை அல்லவா! ஏதோ! இன்னொரு கண் இருக்கின்றதே; அதனை எனக்குக் கொடு; பார்க்கலாம்" என்றார். அதுகேட்ட கோரக்ஷிதர், "மஹா பாக்கியம்!" எனக்கூறி, மற்றொரு கண்ணையும் பிடுங்கி ஆசாரியருக்கெதிரில் வைத்தார். மச்சேந்திரநாதர் இவருடைய குருபக்திக்கு வியந்து, இவருடைய இருகண்களையும், தமது கையால் தடவின மாத்திரத்தில் எப்போதும்போல ஆயின. பிறகு, கோரக்ஷிதரை நோக்கிச் சந்தோஷித்த மச்சேந்திர நாதர், "நீயே, நிஜ பக்தன். இப்பேர்ப்பட்ட சிஷ்யன், மூவுலகங்களிலும் கிடைப்பது



அரிது" எனக் கூறி, அவர்க்கு ஸ்ரீதாரக மந்திரத்தை உபதேசித்தார். பூர்வம், இம்மந்திரத்தை, பகவான், சிவனுக்குபதேசித்தான்; மீன் கருப்பையிலிருந்து மச்சேந்திரர் சிவனால் உபதேசிக்கப் பெற்றார். மச்சேந்திரர், கோரக்ஷிதர்க்குபதேசித்தார். அக்கோரக்ஷிதரால் சாம்பவரும்; சாம்பவரால் அத்வைதநாதரும்; அத்வைதநாதரால் பிரபாவ்வாஸரும்; பிரபாவவாஸரால், கைநாதரும், கைநாதரால் நிவர்த்திதேவரும்; நிவர்த்திதேவரால் ஞானதேவர் ஸோபானதேவர் முக்தாபாயாகிய மூவரும் உபதேசிக்கப் பெற்றார்கள். ஞானதேவர், விஸோபாகேசர்க்கும் ஸாரங்கதேவர்க்கும் உபதேசித்து, பண்டரிநாதன் கட்டளைப்படி, பண்டரிக்ஷேத்ர வாஸிகளான பிராமணர்களுக்கும், இன்னும் பல பக்தர்களுக்கும் உபதேசித்தார். புண்டரீகவரதன் கட்டளையால், நாமதேவர், விசோபாகேசரை அடுத்து, உபதேசம் பெற்று, தம்மை அடுத்த ஜநாபாய்க்கும் இன்னும் பல பாகவதர்களுக்கும் உபதேசித்தார். அவர்களை அடுத்து, இன்னும்பலர், உபதேசம் பெற்றனர். இந்தக் குருபரம்பரையின் ஒழுங்கு, ஸ்ரீ பாண்டுரங்கன் கடாக்ஷத்தால், இன்றளவும் நிலைத்து விளங்குகின்றது. இந்தக் குருபரம்பரை என்னும் மேகக்கூட்டம், பண்டரிநாதனென்னும் சமுத்திரத்திற்படிந்து, அவனது கலியாண குணங்களென்னும் ஜலத்தைக்குடித்து, ஆத்மாக்கள் என்னும் பயிர்களுக்குப் பிராணதாரமாக அருள் மழை பொழிந்துகொண்டிருக்கின்றது. கடீபாணியாகிய விட்டல நாதனென்னும் உழவன், அப்பயிர்களுக்குத் தக்கபடி, அந்த மழை நீரை மடைமாறிப் பாய்ச்சிக் காப்பாற்றி, பக்தியென்னும் தானியத்தைப் பழுக்கச்செய்கின்றான்.

ఆచార్యస్య హరిస్సాక్షాత్ । గురుదేవపరం బ్రహ్మ ॥

(என்றால்)

"ஸாக்ஷாத் அரியாசான் சத்வகுரு ப்ரம்மமிதற்
காக்ஷே பனையில்லை யாம்"

இப்படிப்பட்ட, வாக்யங்கள், ஆசார்யனை ஸாக்ஷாத் நாராயணன் என்று கூறுகின்றது; வழையடி வாழையாய் வருகின்ற குருமரபிற் சேர்ந்த ஒவ்வொருவரும் தத்தம் ஆசார்யருக்குச் சிஷ்யராய், சிஷ்யருக்கு ஆசார்யராய் விளங்குகின்றனர். இங்ஙனம் பல்லாசார்யர்கள் இருப்பதனால் அவர்களில் ஒவ்வொருவரும் ஸாக்ஷாத் நாராயண சொரூபரென்று எங்ஙனம் சொல்லலாம்? அங்ஙனம் சொல்வதனால், பன்னாராயணர்களாம் பல்லாசிரியர்கள் பல்லாத்மாக்கள் எனப் பகரவேண்டியதாகும். ஆசார்யர்கள் விஷ்ணு சொரூபர்கள் அல்லர் எனின், அவர்களை ஸாதாரண மனுஷ சொரூபிகளாய்ச் சொல்லவேண்டியதாகும். அங்ஙனம், ஆசார்யர்களை மனிதர்களாக மதித்தால், கீழ்க்கண்ட பிரமாண்ட புராண வாக்கியத்தின்படி, நரகம் சித்திக்கும்.

విష్ణోరర్చావతారేషు । లోహభావం కరోతియః ।
యోగురౌ మానుషంభావం । ఉభౌనరకపాతినౌ ॥

(என்றால்)

“ அர்ச்சாவ தாரத் தருமையறி யாததனைச்
* சர்ச்சையின்றிச் செம்பென்று சாற்றுகின்ற—னர்ச்சனனும்
தன்குருவை மாந்தரெனத் தப்பிதனைக் கின்றோனும்
மன்னுநர கக்குழிசேர் வார் ” (இதற்கு),

‘பகவானுடைய அர்ச்சாவதாரத்தைச் செம்பு முதலிய உலோகங்களென எண்ணிச் சாதாரணமாய்ச் சொல்லுகின்றவனும், தனது ஆசாரியரை மனிதருக்குள் ஒருவரெனத் தப்பாக எண்ணுகின்றவனும், நிலைபெற்ற நரகக்குழியில் வீழ்வார்கள்’ என்பது பொருள். கடைசியாக, யோசிக்குமிடத்து, ஆசார்ய சொரூபம், முழுவதும் பகவத் சொரூபமும் அன்று ; † கேவலம் ஜீவசொரூபமும் அன்று ; இவை இரண்டும் அல்லாத ஒன்றும் அன்று என்று ஏற்படுகின்றது. நரத்தன்மையும், சிங்கத்தன்மையும் கலந்து தோன்றியுள்ள நரசிம்மாவதாரம்போல, ஆசார்ய சொரூபமும் அத்யத்புதமாயிருக்கின்றது ; கேவலம் பகவத் சொரூபம் என்று அதனைச் சொன்னால், குரு பரம்பரைக்கும் ‡சொரூபைக்ய தோஷம் உண்டாகும் ; கேவலம் ஜீவாத்மா என்று அதனைக் கூறினால், அநேக விதிகளுக்கு விரோதமாகும். ஆதிசேஷாவதாரமாகிய பலபத்ரரிடத்தில் பகவதாவேசம்பொருந்தியிருப்பதால், இந்த அவதாரம், பகவானுடைய பத்தவதாரத்தில் ஒன்றென சொல்லப்படுகின்றது. அங்ஙனமே, அக்கினியோடு சம்பந்தப்பட்ட இரும்பைப்போல பகவதாவேசத்தோடு சம்பந்தப்பட்ட விலக்ஷண ஆத்மாவென்று ஆசார்யசொரூபத்தை உயர்வாக மதித்து வணங்க வேண்டும். பலவித இரும்புகளை, நெருப்பிலிட்டுக் காய்ச்சுகையில், அவைகளில் பரவியிருக்கும் தீ, ஒன்றே ஆகியும், இரும்புகள் பலவிதமாய் இருப்பனபோல, அநேக குருமூர்த்தங்களில் வியாபித்திருக்கும் ஈச்வரன் ஒருவனேயாக, ஆத்மாக்கள் பலவாயிருக்கும். இஃதன்றியும் நெருப்போடுகூடின இரும்பு, நெருப்புருவாய்த் தோன்றக் காண்கிறபடியால், பகவதாவேசத்தோடு கூடின இலக்கணத்தையுடைய சுத்தாத்மாவாகும் ஆசார்யனை, பகவத் சொரூபமென்று நிர்மானித்தல் உசிதமெனக் கொள்க.

ஸ்ரீ தாரகப்ரம்மபரமகுருவேநம:

* சர்ச்சை - யோசனை. † கேவலம் - முழுவதும்.

‡ சொரூபைக்யம் - சொரூப - ஐக்யம் - ஒரே உருவம், ஒருருவம்



## இருபத்தேழாம் அத்தியாயம்

# ஸாரங்கதேவ சரித்திரம்

பீமநதிக்கரையில் விட்டோபா என்னும் வேதியனுக்கு, அவன் மனைவியாகிய ருக்மிணிதேவியிடத்தில், இந்திராம்சத்துடன், புத்திரர் ஒருவர், உற்பத்தியானார். அப்புத்திரர் அழகைக் கண்ட பெற்றோர், பரமானந்தங்கொண்டவர்களாய்ப் பெரியோர்கள் நியமனப்படி ஸாரங்கதேவர் என்று நாமகரணம் சூட்டி, வளர்த்து வந்தார்கள். தக்க காலத்தில் உபநயநம் செய்யப்பெற்ற ஸாரங்கதேவர், தமது வாயால் எது சொன்னபோதிலும், அது தப்பாமற் பலித்தது. இவர் வீட்டில் லக்ஷ்மி எந்நேரமும் பொருந்தியிருந்து தாண்டவமாடினாள். சகல வித்தைகளையும், அஷ்டாங்க யோகங்களையும், அணிமாமுதலிய ஸித்துக்களையும், இவர், கற்றுத் தேர்ந்திருந்தார். இவர், ஆயிரத்து நானூறு வருஷங்கள் பிழைத்திருந்து, தாபிந்தி (Tapti) நதிக்கரையில், மடமொன்று கட்டி அதனில் வாழ்ந்து, நாடோறும் பண்டரிபுரத்துக்கு வந்து, பகவானுக்கெதிரில் நிருத்த கீத கீர்த்தனங்கள் செய்துகொண்டிருந்தார். இவர்க்கு ஆயிரத்து நானூறுபேர் சிஷ்யர்கள் உளர். அவர்களுடன் இவர், ஆகாயமார்க்கத்தில் உலாவிக்கொண்டிருப்பார். இப்படிப்பட்ட ஸாமர்த்தியங்களோடு கூடியிருந்தும் ஸாரங்கதேவர், ஒரு நல்லாசார்யனை நாடாமல், தமது சிஷ்யாவளிகளுக்கு, தம்புத்திக் கெட்டினதை உபதேசித்துக்கொண்டு வந்தார். ஒரு நாள், ஸாரங்கதேவர், ஓரிடத்தில் ஒன்றியாய் உட்கார்ந்து, பின்வருமாறு சிந்திக்கலானார்: “எனக்கொரு நல்லாசார்யர் கிடைக்கவில்லை. எனது வல்லமைக்குத் தக்கவர், எங்கும் இலர். நெருப்பின் சம்பந்தமிருந்தும், வெண்காரமில்லாமல், பொன் உருகாதவாறுபோல, ஸற்குரு ஸம்பந்தமில்லாமல் ஒருவனுக்கு எத்தனை வல்லமையிருந்தும் வீணாகும்.

పాపిష్ఠః క్షత్రబంధుశ్చ । పుండరీకశ్చ పుణ్యకృత్ ।
ఆచార్యవత్తయా ముక్తౌ । తస్మాదాచార్యవాన్ భవేత్ ॥

(என்றால்)

‘பாவியாம் க்ஷத்ர பந்துவும் நல்ல
புண்ணிய வானும் புண்ட ரீகனும்
சற்குரு கடாக்ஷம் தாம்பெற் றுயர்ந்து
மோக்ஷந் தன்னை மூவா தடைந்தனர்

(அதனால்)

சற்குரு சம்பந் தத்தைப்
பெற்று வாழ்வது பீடுடைத்தாமே’ (இதற்கு),

‘பெரும் பாவியாகிய க்ஷத்ர பந்துவும், புண்ணியவானாகிய புண்டரீகன் என்பவனும், ஆசார்ய ஸம்பந்தத்தால் மோக்ஷமடைந்தார்கள். ஆகையால், ஆசார்யனை அடுத்திருக்கவேண்டும்,’ என்பது பொருள். இது ஸ்ரீமஹாபாரதத்திற் சொல்லியிருக்கின்றது. இதன்படி, ஆசார்

யனை அடுத்திருப்பவனே, மோக்ஷம் பெறுவான் என்றேற்படுகின்றது. சற்குருவை அடுத்திருக்கும் உத்தம புருஷனே தத்வஞானி யாவான் என உபநிடதங்கள் முறையிடுகின்றன. நான், இத்தனை காலம் பிழைத்திருந்தும், இத்தனை வல்லமைகளைப் பெற்றிருந்தும், சற்குரு ஸம்பந்தமில்லாமல் என் ஜன்மம் வீணாயிற்று. பகவான், தானும், இராமகிருஷ்ணாவதாரங்களில், வஸிஷ்ட, ஸாந்தீப முனீந்திரர்களை அடுத்திருந்தனன் அல்லவா! பெரியோர் ஆசாரத்தைப் பின்பற்றுவது, இன்றியமையாதது" என்பதேயாம். இங்ஙனம் பலவாறு சிந்தித்து, பகவதம்சத்திற் பிறந்தவராகிய ஞானதேவர்க்கு, இந்த விஷயத்தைக் குறித்து ஒரு கடிதம் எழுதுவோம் என, ஸாரங்கதேவர் தமக்குள் தீர்மானித்துக் கொண்டார். அச்சமயத்தில், ஞானதேவர், பண்டரிநாதன் ஸந்நிதிக்கு வந்து, ஸாஷ்டாங்க வந்தனம்செய்து, "ஸ்வாமீ! அளகாபுரிக்கு போய்வருகின்றேன்" என்று விண்ணப்பஞ்செய்து, பகவானுடைய கட்டளையைப் பெற்றுப் புறப்பட்டு அளகாபுரிக்கு வந்து, ஸித்தேச்வரனுக்கு வந்தனம் செய்து, அங்கே வாழ்ந்திருந்தார். இங்ஙனம் இருக்க, ஸாரங்கதேவர், ஞானதேவர்க்குக் கடிதம் எழுதும்படி, எழுத்தாணிகளைக் கையிற் பிடித்துக்கொண்டு, "சிரஞ்சீவி என்று எழுதலாமா! ஒருவேளை, அவரை ஆசார்யராகக் கொள்ளவேண்டியதா யிருந்தால், இங்ஙனம் எழுதுவது பிசகாய் முடியும். தீர்த்தசொரூபி என்று எழுதலாமா! அவர் என்னைவிட இளையவர் ஆகையால், இங்ஙனம் எழுதுதல் மரியாதையல்ல" என்று, சிறிது யோசித்து, ஒன்றுந் தோன்றாமல் வெற்றேட்டைச் சுருட்டி, "இதனை ஞானதேவர் கரத்திற்கொடு" என்று, தமது சீடரில் ஒருவரிடத்திற் கொடுத்தனுப்பினார். அவர் அக்கடிதத்தை வாங்கிக்கொண்டு, அளகாபுரஞ் சென்று, ஞானதேவர்க்கு எதிரில் நின்றார். ஞானதேவர், அவரை நோக்கி, "உன்னை ஸாரங்கதேவர் அனுப்பினார் அல்லவா?" எனக்கேட்டு, அவர் கரத் தோலையை வாங்கிப் பிரித்துப் பார்த்து, "ஓஹோ! இத்தனை நாட்களாகியும், ஸாரங்கதேவன் பிழைப்பு, வெற்றேடாகவே யிருக்கின்றது. கைம்பெண் செய்து கொள்ளும் அலங்காரத்தைப் போலவும், அருளிலான் செய்யும் ஞானோபதேசம் போலவும், ஸாரங்கதேவன் இத்தனை காலம் ஜீவித்திருந்தும், பலவித்தைகளைக் கற்றிருந்தும், பல வல்லமைகளுடன் கூடியிருந்தும், சற்குருவை அடுத்துப் பரிசுத்தனாகாமல், வீணன் ஆனான்" என்று கூறி, ஸாரங்கதேவர்க்குத் தாமொரு கடிதம் எழுத ஆரம்பித்து, ஸர்வ பிராணிகட்கும் அறிவு ஸமமா யிருக்கின்றது. அது பெரியதல்ல; சிறியதல்ல; பெண்ணும் ஆணும் அலியும் அல்ல.

ఆశ్చర్యవత్పశ్యతి కశ్చిదేనం । ఆశ్చర్యవద్వదతి తథైవ చాన్యః ।

ఆశ్చర్యవచ్చైనమన్యశ్శృణోతి । శ్రుత్వాప్యేనం వేద న చైవ కశ్చిత్ ॥

(என்றால்)

'யோக முயற்சியால் ஒருவனிவ் வாத்மா

தன்னையற் புதப்பொரு ளென்னவே காண்பான்



புலியின்மீது ஆரோஹணித்து வந்த ஸாரங்கதேவரை, ஸ்ரீஜ்ஞான தேவர், சோபானதேவ முக்தாபாய் இவர்களோடு மட் சுவரின்மேல் ஆரோஹணித்து, அதையே வாகனமாக நடப்பித்துக்கொண்டு போகுதல்.

(பக்கம் 215)

மற்று மொருவன் மகிழ்ந்திதை யற்புதம்
உற்ற தென்ன உறுதியாய்ச் சொல்லுவான்
பின்னு மொருவன் பிடுற விசனை
அற்புத மெனக்கேட் டகமகிழ் வானேல் (இங்ஙனம்)
கண்டுங் கூறியுங் கருத்துடன் கேட்டும்
இதனின் உண்மை இருப்பை
ஆரு மறியார் அதிசய மாமே' (இதற்கு),

'இவ்வாத்மாவை, யோகமுயற்சியால், ஒருவன் அற்புத வஸ்துவென்று காண்கின்றான்; ஒருவன் அற்புத வஸ்துவென்று சொல்லுகின்றான்; ஒருவன் அற்புத வஸ்துவென்று கேட்கின்றான். இங்ஙனம் அவனவன் கண்டும், சொல்லியும், கேட்டும், இதனின் உண்மையிருப்பை ஒருவனும் உணரான்' என்பது பொருள். இது பகவத்கீதையில் பகவானே சொல்லியருளியது. ஸாரங்கதேவா! நீ இதனை உணர்ந்து கொள்'' என்று எழுதி, அந்தச் சிஷ்யரிடத்திற் கொடுத்து அனுப்பினார். அதனைக் கண்ட ஸாரங்கதேவர், ''விஞ்ஞான தீபமாகிய ஞானேச்வரர் சந்நிதிக்குச் சீக்கிரம் போகவேண்டும்'' எனப் புறப்பட்டு, தமது யோகபலத்தால், ஒருபெரிய புலியை வரவழைத்து, அதன்மேல் ஆரோகணித்து, ஒரு நீண்ட கருநாகத்தைச் சாட்டையாகக் கையிற் பிடித்துக்கொண்டு ஓராயிரத்து நானூற்றுவர் சிஷ்யர்கள் சூழ, வந்துகொண்டிருந்தார். அளகாபுரவாஸிகள் இவ்வற்புதத்தைக் கண்டுவந்து ஞானதேவர்க்கு அறிவித்தார்கள். அப்போது ஞானதேவர் ஊகித்து, அங்ஙனம் வருபவர் ஸாரங்கதேவர் என உணர்ந்து, தாம் அப்போது உட்கார்ந்திருந்த மட்சுவரைநோக்கி, ''ஏ, குட்டிச்சுவரே! என்னைக் காண்பதற்கு ஸாரங்கதேவர், புலியேறி வருகின்றார். நான், அவரை எதிர்கொண்டுபோகவேண்டும். ஆகையால் நீ என்னைச் சுமந்துகொண்டுபோ'' என்றார். உடனே அந்தக் குட்டிச் சுவர் நடக்க ஆரம்பித்தது. இங்ஙனம் ஞானதேவர், குட்டிச்சுவர் வாகனம் ஏறி, அதனை நடத்திக்கொண்டு வருவதைக்கேட்ட ஸாரங்கதேவர், அதிசயமடைந்து, ''நான் சேதனத்தை நடத்துவது அதிசயமல்ல; ஞானதேவர் அசேதனமாகிய மட்சுவரை நடத்திக்கொண்டு வருவதே அத்யற்புதமாயிருக்கின்றது. இப்பேர்ப்பட்ட சற்குருவை அடுத்து, பரிசுத்தனாவேன்'' என்று தீர்மானித்து, வியாக்ரத்தினின்றிழிந்து, அடிக்கொரு நமஸ்காரம் புரிந்துகொண்டு, ஞானதேவரைக் கண்ட மாத்திரையில் பயபக்தி நிறைந்து அடியற்ற நெடும்பனையேபோல வீழ்ந்து, ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, அம்மஹாநுபாவரை, ஸாக்ஷாத் பாண்டுரங்காவதாரம் என்று புகழ்ந்து வாழ்த்தினார். அப்போது ஞானதேவர், ஸாரங்கதேவரைக் கையிற்பற்றிக்கொண்டு, அங்கே அருகில் இருந்த ஓராலமரத்தடியில் உட்கார்ந்திருந்து, அவர்க்கு மந்திரோபதேசம் செய்தருளினார். அம்மரத்தினிடம், ஞானதேவர், ஸாரங்கதேவர்க்கு அநுக்ரஹித்த இடம் என்று இப்போதும் சிஷவர்க்கங்களால் ஸேவிக்கப்படுகின்றது. அவ்விடத்

தைப் பிறவிப் பிணி தீர்க்கும் பிரதேசம் என்று ஸாதுக்கள் புகழ்கின்றார்கள். அங்கே, க்ஷணநேரம் வசிப்பவர்களுக்குப் பிரமானந்தம் உண்டாகின்றது. பிறகு, ஞானதேவர், ஸாரங்கதேவரை கைப்பிடித்தழைத்துக்கொண்டு, தமது ஆச்ரமத்துக்குப் போனபோது, அங்கே நிர்வாணியாய் இருந்த முக்தாபாயைக் கண்ட ஸாரங்கதேவர், பின்தங்கினார். அதைக்கண்ட முக்தாபாய், "அடா! அறிவில்லாதவனே! ஏன், கூச்சப்பட்டுப் பின்னுக்குப் போகின்றாய்? ஸமநோக்குடையவனுக்கு எங்கும் பிரமமயமாகவே இருக்குமன்றி, வேறு தோன்றாது. வியாஸர், ஒரு காலத்தில் தேவ கன்னிகைகளை நோக்கி, "நிர்வாணியாய், வாலிபனாய் உள்ள எனது மகனாகிய சுகனைக் கண்டபோது, நீங்களெல்லாரும் நிர்வாணிகளாயிருந்தும், புடைவைகளைக்கட்டிக் கொள்ளாமல் அவனைப்பார்த்தபடியே சும்மா இருந்தீர்கள்; ஆடைதரித்தவனும், கிழவனுமாகிய என்னைக் கண்டவுடன் விரைந்தோடி, நீராடிக் கொண்டிருந்த நீங்கள், உங்கள் அற்றங்களை மறைத்துக்கொள்ள, புடைவைகளைக் கட்டிக்கொண்டீர்கள். இதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டார். அதற்கு அக்கன்னிகைகள், வேதவியாஸரை நோக்கி, "உமது குமாரராகிய சுகர், ஆண் பெண் என்ற பேதம் அற்ற பொதுநோக்குடையவர்; அவர் நிர்விகற்ப ஸித்தர். ஆகையால், உமக்கும் அவர்க்கும் அதிக வித்யாஸம் இருக்கின்றது" என்று, விடை கூறினார்கள். நீ இதைக் கேட்டறியாயா? பல்லாண்டு வாழ்ந்தும், ஸர்வ வித்வத்தகளையும், ஸர்வ ஸித்திகளையும் ஸாதித்தும் உன் சித்தம் பேதித்து, அதனை உன் வசப்படுத்த முடியவில்லை யல்லவா? ஞானதேவரை அடுத்தும், உனது மனமாசு அகலவில்லையா? இவர், உனக்குச் செய்த ஞானானுக்கிரகம், விழலுக் கிறைத்த நீரும், கமரிற் கவிழ்த்த பாலும், சாம்பரில் ஊற்றிய நெய்யும்போலிருக்கின்றதென்பதற்குச் சந்தேகம் இல்லை,

యదాతేమోహకలిలం బుద్ధిర్వ్యతితరిష్యతి । తదాగంతాసినిర్వేదం ।
శ్రోతవ్యస్యశ్రుతస్యచ । శ్రుతివిప్రతిపన్నాతే । యదాస్థాస్యతినిశ్చలా ।
సమాధావచలాబుద్ధి । స్తదాయోగమవాప్స్యసి ॥

(என்றால்)

"எப்போ துனதறி விழக்கும் மோகம்
எப்போ தந்த இழுக்ககன் றிருக்கும்
அப்போ தேநீ அன்புடன் கேட்டதும்
கேட்கத் தக்கதும் வேட்கத் தக்கதும்
ஆகிய வேதார்த் தங்கள் முற்றுமால்

(அதாஅன்று)

ஆதியி லிருந்தின் கசைவற் றிருக்கும்
உனதறி வடங்கி ஒடுங்கி நின்றினி
எப்போ தசைவற் றிருந்து ஸமாதியில்



தப்பற விளங்கும் அப்போ தொருநீ
தேக நிலைதெரி யோகம்
பெறவல் லவனாய்ப் பீடுறு வாயே" (இதற்கு),

'எப்போது மோகத்தால் உண்டாகிய குற்றத்தை, உனது புத்தியானது, நீக்கி யிருக்குமோ, அப்போதே, நீ கேட்டதும் கேட்கத்தக்கதும் விரும்பத்தக்கதுமாகிய வேதார்த்தங்கள், முடிவான நிலையில் நிற்கும். ஆதியிலிருந்து அசைவுற்றிருந்த உனது அறிவு, எப்போது அசைவற்று ஸமாதியில், அலையில்லாத சாகரம் போலவும், *அநிலம் சேரா விளக்குப் போலவும் சரியான நிலையில் நிற்குமோ, அப்போது, நீ, உனது தேக நிலை இன்னதென்றறிந்து, யோகநிலையில் நிற்க வல்லவனாவாய்' என்பது பொருள். இது பகவத்கீதையில் பகவானே சொல்லி யருளினதல்லவா? உனது உணர்ச்சியைச் சோதிப்பதற்காகவே, நான், உனது கண்ணுக்கு மாத்திரம் அம்மணமாய்த் தோற்றினேன். ஞானதேவருடைய உபதேச மகத்துவத்தால், இனி நீ, அசையாது நிலைத்த அறிஞனாவை யெனப் பகவானைப் பிரார்த்திக்கின்றனன்" என்றார். இந்த நற்புத்திகளைக் கேட்டு மகிழ்ந்த ஸாரங்கதேவர், முக்தாபாய்க்கு வந்தனம்செய்து, "தாயே! நீ, ஸாக்ஷாத் யோகமாயாமிசாவதாரி. ஞானதேவர் அநுக்ரகத்தால் எனக்குக் கிடைத்த ஞானத்தீயானது, உனது இதோபதேசம் என்னும் இளங்காற்றால், வளர்ந்தோங்கியது. அதனால், எனது அஞ்ஞானக்காடு பற்றி யெரிந்து பஸ்மீகரமாய்விட்டது. எனது ஜன்மம் ஈடேறியது; இனி, அது, இவ்வுலகிற் சிறந்தோங்கும்" என்று விண்ணப்பஞ் செய்தார். அப்போது, ஞானதேவர், தமது திருக்கரத்தை ஸாரங்க தேவருடைய சிரமேல்வைக்க, அதனால் அவர், பூரண ஞானோதயத்தைப் பெற்று, ஜீவன் முக்தராய்ப் பேரானந்த வாரிதியிற் றிளைத்தார். ஞானதேவர் வாழப் பெற்றதால், அளகாபுரி, பூலோக வைகுந்தமோ, அன்றிப் பாண்டுரங்கநாத க்ஷேத்திரமோ என்று ஸாதுக்களால் கொண்டாடப்பட்டிருந்தது. ஸாக்ஷாத் பண்டரிநாதனே, உலக உஜ்ஜீவனார்த்தம், ஞானதேவராய் அவதரித்தனன் என்று, இந்திராமிசரான ஸாரங்க தேவர் அனைவருக்கும் அறிக்கைசெய்தார்.

గురుంప్రకాశయేద్ధీమాన్ 'குருவடிவாழ்க' என்றபடி,

ஸார்ங்கதேவர், தமது குருவான ஞானதேவருடைய வைபவங்களைப் பலரறியக் கூறிப் புகழ்ந்து வாழ்த்திக்கொண்டிருந்தார்.

ஸ்ரீகுருவேநம:

* அநிலம் - காற்று.

## இருபத்தெட்டாம் அத்தியாயம்

# சோக்காமேளர் சரித்திரம்

பண்டரிபுரத்தில், சோக்காமேளர் என்னும் பாகவதர் ஒருவர், பஞ்சமகுலத்தில் அவதரித்து, ஸ்ரீ பாண்டுரங்கனிடத்தில் பரமபக்தி உடையவராய் இருந்தார். அவர், நாடோறும் ஸ்வாமி ஸந்நிதியைப் பிரதக்ஷிணம் செய்துகொண்டு, கோபுரவாசலில் பகவானுடைய தரிசனத்தை எதிர்நோக்கிக் குந்திக்கொண்டிருப்பார். இங்ஙனம் இருக்க ஒருநாள், சில பிராமணர்கள், இப்பரம ஸாதுவைநோக்கி,

శ్వపచోఽపిమహీపాల । విష్ణుభక్తోద్విజాధికః ॥

"நீசனேனும் நிருபனேனும்
மனமாசறுத்த மாதவன்
விஷ்ணு பக்தன் விஜாதிமானே" என்றபடி,

'நீசனாயினும் அரசனாயினும், தன் மனது நிர்மலமான மாதவன், விஷ்ணு பக்தனாயின், வேறே ஜாதிமான் ஆவான்' என்னும் இந்த பகவத் வாக்யத்தை, அநாதரவுசெய்து, பொறாமை மிகுந்து, "ஏடா, சோக்காமேளா! நீ ஏன், விட்டலநாதனைத் தரிசிக்கவேண்டும் என்னும் வீண் எண்ணத்தோடு பக்தி புரிகின்றனை? உன்னிடத்தில், பகவானுக்குக் கருணையிருந்தால், உன்னை, அவன் வரவழைத்து, தரிசனம் கொடாமல் இருப்பானா! சமைக்கும் இடத்தில், நாய் நுழையத் தகாததுபோல, நீ பகவத் சந்நிதியில் நுழையத்தகாது. ஆகையால், உனது இச்சை, எங்ஙனம் நிறைவேறும்?" என்று கூற, சோக்காமேளர், இருக்கை விட்டெழுந்து நின்று, கை கட்டிக்கொண்டு, "ஏ, வேதிய சிகாமணிகாள்! "சூரியன் அந்தரத்தில் வெகுதூரத்தில் இருந்தும், தாமரைகளை மலரச்செய்கிறான்" என்பது, நீங்கள் அறியாத விஷயம் அன்று;

'மங்குலைம்பதி னாயிரம் யோசனை மாமயில் நடமாடும்
தங்கு பானுநா றாயிரம் யோசனைதா மரைமுகம்விள்ளும்
திங்கள் ஆதவர்க் கிரட்டி யோசனை யுற சிறந்திடும் அரக்காம்பல்
எங்கணாயினும் அன்பரா யிருப்பவர் இதயம்விட் டகலாரே' என்று

பெரியோர் கூறியபடி, ஐம்பதினாயிர யோஜனை தூரத்தில் உள்ள மேகத்தைக்கண்டு களித்து, மயில் அகவும். ஒரு நூறாயிரயோஜனை தூரத்திலுள்ள சூரியனைக்கண்டு களித்து தாமரை மலரும்: இருநூறாயிரம் யோஜனை தூரத்திலிருக்கும் சந்திரனைக்கண்டு சந்தோஷித்து செவ்வல்லி மலரும்; ஆகையால் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் உண்மை அன்புடையார், மனதை விட்டகலார். பாண்டுரங்கன், ஆலயத்துக்குள்ளேயே அமர்ந்திருக்கின்றான் என்று எண்ணன்மின்.

ఈశ్వరస్సర్వభూతానాం । హృద్దేశేఽర్జునతిష్ఠతి



(என்றால்),

'பூதங்கள் தோறும் பொருந்தி நிறைந்துலக
நாதன் விளங்கும் நயந்து' (இதற்கு),

'சர்வேச்வரன், ஸர்வ பூதங்களிலும் பொருந்தி நிறைந்து விளங்குவான்' என்பது பொருள். இது பகவத்கீதையிற் சொல்லியுள்ளது. இதன்படியே, நான் இழிந்தோனாயினும், எனது இதயத்திலும் பகவான் பொருந்தி நிறைந்திருந்து, என்னைக் காப்பாற்றுகின்றான்.

'எவ்வுயிருங் காக்கவோ ரீசனுண்டோ வில்லையோ
அவ்வுயிரில் நானொருவ னல்லனோ—வவ்வி
அருதுவது கொண்டிங் கலைவதே னன்னாய்
வருதுவது தானே வரும்' என்றபடி,

எவ்வுயிரும் காக்க, அவ்வுயிர்தோறும் நிறைந்துள்ள பகவான், கங்கணங் கட்டிக்கொண்டிருக்கின்றான். எல்லாப் பூதங்களிலும் பகவான் நிறைந்திருக்கின்றான் என்றும், எல்லா வுயிர்களையும் பகவான் காக்கின்றான் என்றும் பொதுப்படக் கூறியிருக்கின்றதேயன்றி பஞ்சமனாகிய என்னைத் தவிர எல்லாப் பூதங்களிலும் பகவான் இருக்கின்றான்; பஞ்சமனாகிய என்னைத் தவிர, எல்லா வுயிர்களையுங் காக்கின்றான் என்று கூறவில்லையே! இப்படிப் பகவான் என்னிடத்திலும் நிறைந்து விளங்குகின்றான்; என்னையுங் காக்கின்றான் என்பதற் கடையாளங்கள் பல வுள:

'மாரிதான் என்னை வரைந்து பெய்யுமோ
காற்றும் என்னை நீக்கி வீசுமோ
மாநிலஞ் சுமக்கமாட்டே னென்னுமோ
கதிரோன் என்னைக் காயேன் என்னுமோ
வாழ்குல வேதியர்க் குணவு நாட்டிலும்
தாழ்குல பஞ்சமர்க் குணவுகாட்டினுமோ
செல்வமும் வறுமையும் செய்தவப் பேறும்
இன்பமும் துன்பமும் இறப்பும் பிறப்பும்
இவ்வுல கினில்வாழ் எல்லா வுயிர்க்கும்
வேறுவே றாக மாறுத லிலையால்
குலமு மொன்றே குடியு மொன்றே
இறப்பு மொன்றே பிறப்பு மொன்றே
இன்பமு மொன்றே துன்பமு மொன்றே
வழிபடு தெய்வமு மொன்றே யாதலால்
முன்னோ ருரைத்த மொழியி னுண்மையைத்
தப்பற வுணர்ந்து சால்புடை யவராய்
இகமும் பரமும் இல்லையென் றமல
பாவ புண்ணியப் பாகுபா டறிந்து
ஜீவகா ருண்யச் சிறப்பினை யுணர்ந்து

ஈச்வர பக்தி யிடைவிடா தோங்கிப்
பிரம ஞானப் பெரும்பொருள் பெற்றுப்
புலையுங் கொலையுங் களவுந் தவிர்ந்து
பிச்சை கொடுக்கும் இச்சை யிறுமல்
எந்நா ளாயினும் இரப்பவர்க் கிட்டு
நிலைபெற அறத்தில் நிற்பதை அறிந்து

(பகவான்)

ஆண்பெண் அலியிவை யல்லதை உணரும்
சிறப்புஞ் சீலமும் அல்லது
பிறப்பால் வரும்பிர யோஜனமில்லையே' என்றபடி,

மழை, என்னை நீக்கிப் பெய்யுமோ? காற்று என்னை நீக்கி வீசுமோ? பூமி என்னைச் சுமக்கமாட்டேன் என்னுமோ? சூரியன் என்னைத் காயமாட்டேன் என்னுமோ? உயர்குலப் பார்ப்பாருக்கு உணவு காட்டிலும், இழிகுலப் பறையர்க்கு உணவு காட்டினுமோ? இல்லை இல்லை. இவ்வுலகத்தில் வாழும் எல்லா வுயிர்களுக்கும், செல்வமும், தரித்திரமும், தவமும், அவமும், இன்பமும், துன்பமும், பிறப்பும், இறப்பும் வேறுவேறாக மாறுதல் இல்லை; குலமும் ஒன்றே, கோத்திரமும் ஒன்றே; இறப்பும் ஒன்றே, பிறப்பும் ஒன்றே; இன்பமும் ஒன்றே, துன்பமும் ஒன்றே, வணங்கும் கடவுளும் ஒன்றே ஆகையால், பெரியோருரைத்த வாக்கியங்களைத் தப்பில்லாமல் ஆராய்ந்தறிந்து சான்றோரினத்திற் சேர்ந்து, இகமேது பரமேது என்று இலேசாய்ச் சொல்லிவிடாமல், புண்ணிய பாவக் கண்ணிய முணர்ந்து, கண்ணோட்டம் என்னும் காரிகை வயிற்றிற் றோன்றும் ஜீவகாருண்யமென்னும் புத்திரபாக்யம் பெற்று, ஈச்வரபக்தி யென்னும் இடையறு முயற்சியால் பிரமஞானம் என்னும் பெருஞ் செல்வத்தை உற்று,

'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்' என்பதற்கிணங்கப் புலால் உண்ணல், கொல்லல், திருடுதல் முதலிய துர்க்காரியங்களை நீக்கி,

'நல்லா றெனினுங் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று' என்பது பற்றி,

ஐயம் இட்டு உண்டு,

'ஐயம் இடுமின் அறநெறியைக் கைப்பிடிமின்
இவ்வளவே னும்இரப்போர்க் கிட்டுண்மின்—தெய்வம்
ஒருவனே யாமென் றுணரவல் லீரேல்
அருவினைக ளோர்ந்து மறும்' என்பதுகொண்டு,

எந்நாளினும் இரப்பவர்க்கிட்டு, நிலையாக,



'இல்லறமல்லது நல்லறமன்று' என்பதனுல், இல்லறத்தில் நின்று, பகவான், ஆணுமல்லன் பெண்ணும் அல்லன் அலியுமல்லன் என்பதை உணரும் சிறந்த அறிவும் ஞானமும் தவமும் அல்லாமல், உயர்குலப் பிறப்பு இழிகுலப்பிறப்பு என்று நீங்களே பார்த்து ஏற்படுத்திக்கொண்ட இந்த வித்யாஸத்தால் வரும் பிரயோஜனம் ஒன்றுங் கிடையாது.

'பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யால்' என்றபடி,

ஜன்மத்தால் எல்லாரும் சமானமானவர்களே; கன்மத்தால், அதாவது, அவரவர் செய்தொழில் வேற்றுமையால் வேறுபட்டார்கள். ஆகையால் பிறப்பால் எல்லாரும் ஒற்றுமைப்பட்டும், தொழிலின் சிறப்பால் வேற்றுமைப்பட்டும் இருக்கின்றார்கள் என்று, அவர்களுக்குத் தமது ஞான வைராக்கியங்களை விரிவாய் விளக்கி அறிவித்து, "ஏ, புண்டரீகவாதா! உனது திவ்ய மங்கள விக்ரக தரிசனம் எனக்குக் கிடைக்கும்படி கிருபைசெய்வாய், ஐயனே!" எனப் பிரார்த்தித்து, தமது கிருஹத்திற்குச் சென்று, ருக்மிணீகாந்தனை இடையறாத பக்தியுடன் தியானம் பண்ணிக்கொண்டிருந்தார்.

இங்ஙனம் இருக்கையில், பகவான், சோக்காமேளருடைய மெய்யன்பிற்கு ஸந்தோஷித்து, அவர்க்குத் தரிசனந் தரவேண்டும் என்று எண்ணி, இரவில் சந்நிதிக் கதவுகள் மூடப்பட்டபிறகு, அவர் வீட்டுக்குப் போய், எதிரே நின்றான். அப்போது சோக்காமேளர், ஸாஷ்டாங்க வந்தனஞ்செய்து, பகவானைத் துதித்து, "ஏ, கருணைக் கடலே! ஆலயத்தில் எனக்கு உனது திரிசனம் தரவேண்டும்" என்று பிரார்த்திக்க, பகவான், "அங்ஙனம் செய்கின்றேன்" எனக்கூறி, அவர் கையைப்பற்றி அழைத்துக்கொண்டுவந்து, தனதருகில் உட்காரவைத்துக்கொண்டு, "ஏ, சோக்காமேளா! நீ உண்மை அன்பன்; உன்னை ஒரு கணமும்மறவேன். நாமதேவனுடன் உண்ணும்பொழுதும், இதர பக்தர்களுடன் கலந்திருக்கும்போதும் உனது ஞாபகம் வந்துகொண்டிருக்கும்" எனக் கூறினான். அதுகேட்ட சோக்காமேளர், பகவானுடைய திருவடியுகளத்தை விடாதுபற்றிக்கொண்டு, "ஓ, ஸ்வாமீ! தீனபந்தோ! அநாதநாதா! ஆதிமூலப்பொருளே! கிருபாநிதே! தேவரீருடைய பரிபூர்ண கடாக்ஷமே தாஸபூதனுக்கு, தாரகபோஷக போக்யங்களாவன" என்று விண்ணப்பஞ் செய்தார். இங்ஙனம் இவர்கள் இருவரும் சம்பாஷிக்கையில், பிராமணர்கள், மூடின கதவுக்கு வெளிப்புறம் இருந்து உற்றுக்கேட்டு, ஆச்சரியமடைந்து, சோக்காமேளன், சந்நிதிக்குள்ளே ஸ்வாமியுடன் பேசுகிற குரல் கேட்கிறது; பண்டரிநாதன் ஸந்நிதிக்குள் பறையன் வரத்தகுமா? இவன் இங்கு வந்தபடியால், நமது ஆசாரங் குலைந்தது. யாகசாலையில், சுணங்கன் நுழைந்தபடி, ஷட்குணைசுவரியவானாகிய பகவானுடைய * மந்திரத்தில் இந்தப் பஞ்சமன் நுழைந்திருக்

* மந்திரம் - கோவில்

கின்றான்" என்று கூறிக்கொண்டு, கதவைத்திறந்து, உள்ளே நுழைந்து பார்த்து, "எடா! சோக்காமேளா! இழிகுலத்தானாகிய நீ, நாங்கள் கவாடபந்தனம் செய்திருக்கும்சமயத்தில், எப்படி உள்ளே நுழைந்தாய்?" என்று கேட்டார்கள். அதற்கு அவர், அதிக அடக்கமாய் அவர்களை நோக்கி, "நான் என் இச்சையால் உள்ளே பிரவேசிக்கவில்லை; பகவான் என் கையைப் பிடித்து, உள்ளே அழைத்துக்கொண்டு வந்தான். இப்போது, நான் இங்கே வந்த தப்பை மன்னியுங்கள்; இனி வரமாட்டேன்" என விடைகூறினார். பிராமணர்கள், "இவனால் தப்பில்லை. 'எய்கிறவன் எய்தால், அம்பென்ன செய்யும்?' என்றபடி, செய்கிறவன் செய்தால் இவன் என்ன செய்வான்? பண்டரிநாதன் இப்படிப்பட்ட திருவிளையாடல்களைச் செய்தால், நாம் இவனைத் தண்டிப்பது சரியல்ல. ஆனாலும், இவன் இன்னும் இங்கு இருந்தால், தேவாதிதேவன், பன்முறை இவனை ஆலயத்துக்குள்ளே அழைத்துக்கொண்டு வருவான். அங்ஙனம் செய்தல், நமது ஆசாரத்துக்குக் குறைவாகும்" என்று எண்ணிச் சோகாமேளரை நோக்கி, "நீ, இப்போதே இவ்விடத்தை விட்டு, சந்திரபாகையைக் கடந்து செல்லக்கடவாய். அங்ஙனம் செய்யாயானால், உனக்குக் கொடுந்தண்டனை விதிப்போம்" என்றார்கள். அதுகேட்ட பகவத்பக்தராகிய சோக்காமேளர், பிராமணர்காள்! உங்கள் நியமனப்படியே செய்கிறேன்; நான் பகவானைத் தரிசிப்பது அநுசிதம் என்று கூறினீர்கள்; கங்கையில் பஞ்சமர்கள் ஸ்நானம் செய்யவில்லையா? அதனால் கங்கைக் கேதாவது தோஷம் உண்டா? பூமிமேல் உயர்குலத்தாரே அன்றி இழிகுலத்தாரும் வாழவில்லையா? அதனால் பூமிக்குத் தோஷம் உண்டா? அதுபோலவே, ஸர்வவியாபகனாகிய ருக்மிணீகாந்தன் ஸர்வசமனாயிருக்கின்றமையால், அத்தகைய பரிபூர்ணனுக்குத் தோஷம் கற்பித்தல் ஞாயமன்று" என்று கூறக்கேட்ட வேதியர், பொறாமை கொண்டவர்களாய், "எடா! சோக்காமேளா! நீ சண்டாளன், எல்லாக் குலங்களினும் இழிந்த குலத்திற் பிறந்தவன். நீயா எங்களுக்கு ஞானோபதேசம் செய்கிறவன்? அநந்தம் கண்ணுடையார்க்குக் குருடனா வழி காட்டுகிறது! வெகு அழகாயிருக்கின்றது! உனது நடவடிக்கை விபரீதமாயிருக்கின்றது; இனி நீ சந்திரபாகைக்கரையில் குடிசைபோட்டுக்கொண்டு குடியிரு. அங்ஙனம் செய்யாயானால், உன்னைத் தண்டித்துத் துரத்திவிடுவோம்" என்றார்கள். அப்போது, அந்த ஸாது, பிராமணர்களுக்கு வந்தனம் செய்து, "நீங்களே தாய் தந்தையரென நம்பியிருந்தேன். உங்கள் பாதாரவிந்தங்களே கதியென்றிருந்த என்னைக் கைவிடலாமா? பகவான், தமது சரண் அடைந்தவர்களைக் காத்து, தர்மத்தை அநுஷ்டித்துக் காட்டும் பொருட்டே அன்றோ இராமாவதாரம் செய்தான்! நீவிர் நிதம் தவறாமல் ஸ்ரீராமாயண பாராயணம் செய்துகொண்டிருந்தும், அதன் ஸாரமாகிய அடைக்கலங் காத்தற் சிறப்பை உமது மனங்களில் சீர்தூக்காமற் போனீர்கள். இப்போதாவது, அப்பெரும் பொருளைச் சீர்தூக்கி, அடைக்கலம் புகுந்தவனாகிய என்னைக் காப்பாற்றுங்கள். விபீஷணும்



வான் அடைக்கலம் புகுந்த காலத்தில் அவனுக் கடைக்கலந் தரத்தகாதெனச் சில அன்பர்கள் பகவானைத் தடுத்தார்கள்;

'இன்னுயிர்க்கும் இன்னுயிரா யிருநிலங்காத் தாரென்று
பொன்னுயிர்க்குங் கழலவரை யாம்போலும் புகழ்கிற்பாம்
மின்னுயிர்க்கும் நெடுவேலா யிவர்குலத்தோன் மேற்பறவை *
மன்னுயிர்க்குத் தன்னுயிரை மாறாக வழங்கினனால்' (இதற்கு),

'சூரியகுலத்தோன்றலாகிய ஸ்ரீராமபிரானுடைய முன்னோர்களில் ஒருவராகிய சிபிச்சக்ரவர்த்தி, வேடனை யஞ்சித் தம்மை அடைக்கலம் புகுந்த ஒரு புறாவைக் காக்கும் நிமித்தம் தமது தொடை மாமிசத்தில் அதன் எடையளவு ஈர்ந்து தந்த பெருமிதமுடையவர்' என, விசுவாமித்ர முனிவர் ஜனகமஹாராஜனுக்குக் கூறினார் என்பது பொருள். இதுபோலவே பகவானும், 'விபீஷணனுக்கு அடைக்கலந் தருவது அவசியம்' என்று, அந்தப் புறாவின் கதையை விரிவாய் எடுத்துக்கூறி, அவனை அங்கீகரித்தனர் அல்லவா? விருப்பு வெறுப்பற்றவர்களாயிருக்கத்தக்க பகவத்பக்தர்களாகிய நும்போலியர்களுக்கு,

'பொருளற்றார் பூப்பரொருகால் அருளற்றார்
அற்றார்மற் றாதலரிது' என்றபடி,

அருளற்றிருப்பது அழகல்ல" என்று விண்ணப்பஞ் செய்தார். இவர் எத்தனை வேண்டினும், அவர்கள், தமது மனங்கள்,

"வைகலு நீருட் கிடப்பினும் கல்லிற்கு
மெல்லென்றல் சால வரிதாகும்—அஃதேபோல்
வைகலும் நல்லறங் கேட்பினும் கீழ்கட்குக்
கல்லினும் வல்லென்னு நெஞ்சு" என்றபடி,

கல்லினும் வன்மையாய், முற்கூறியபடி ஒரேபிடிவாதமாய்ப் பேசினார்கள். சோக்காமேளர், வருந்தினவராய், கண்ணீர்விட்டுக்கொண்டே, பகவானை வணங்கி, வீட்டுக்குப்போய், தமது மனைவியையும் உடனழைத்துக்கொண்டு, சந்திரபாகையைக் கடந்து, அதன்கரையில் ஒருகுடிசை கட்டி, அதனில் வாழ்ந்தார்.

அவர், அங்கே வஸித்துப் பகவானை அநவரதமும் தியானித்துக்கொண்டிருந்தார். ஒருநாள், அவர், போஜனம் பண்ணும்போது, பகவான், அங்கே தோன்றி, "ஓ, சோக்காமேளா நானும் உன்னோடு உண்ண வேண்டும்" என்று கூறினான். அதற்கவர் ஸந்தோஷித்து அந்த குடிசைக்குச் சமீபத்திலிருந்த ஒரு வேப்பமரத்தடியில் பகவானையழைத்துக் கொண்டுபோய், இருவரும் புசித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது சோக்காமேளர், அம்மரத்தின் மேலிருந்த காக்கைகளைப் பார்த்து, "ஓ, காக்கைகளே! எனது அருமருந்தனைய பகவான், இந்த மரத்தின்கீழ்ப் புசிக்கின்றான்; நீங்கள், கொஞ்சநேரம் தூரமாயிருந்து,

* பறவை-புறா

பிறகு, சேரவாருங்கள்'' என்று சொல்லிக்கொண்டிருக்கையில், அவர் மனைவி கொண்டுவந்த தயிர்க் கலயங் கைதவறி நிலமேல் விழுந்து, அதி லிருந்த தயிர், ஸ்வாமி அணிந்திருந்த பீதாம்பரத்திற் பட்டது. அதை கண்ட சோக்காமேளர், "ஒ, எனது காதலீ! என்ன காரியஞ் செய்தனை? ஸாக்ஷாத் பகவான் அல்லவா, என்னோடு புசிக்கின்றான்!

ఆనృశంస్యంపరోధర్మః

(என்றால்)

'வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டு மிடும் பையில' (இதற்கு),

'விருப்பு வெறுப்பற்றவர்களுக்கு, என்றும் துன்பமில்லை' என்பது பொருள். இதனை உணராது, பேரறத்தை விடுத்து மறத்தைத் தொடுத்து நம்மைத் துரத்தி யடித்த பிராமணர்களை அநாதரவு செய்து, இந்த தீன சகாயனான பகவான், நமதகத்துக்கு வந்து அகங்களித் துண்கின்றான். நீ அதனை அறியாமல், தவறு செய்கின்றனையே'' என்று கூறினர். அப்போது அந்த மார்க்கத்திற் போய்க்கொண்டிருந்த துன்மார்க்கனான அர்ச்சகவேதியன் ஒருவன், இவ்வார்த்தைகளைக் கேட்டு, கோபக்கனல் மூண்டவனாய், "அடா! சண்டாளா! என்ன உளறு கிறாய்!'' என்று சொல்லிக்கொண்டே வந்து, அவரைக் கன்னத்திற் புடைத்து, பீமநதியில் ஸ்நானஞ் செய்து, ஸந்நிதிக்குப்போனான். அங்கே, பகவான் அணிந்துள்ள பீதாம்பரமெல்லாம் தயிரால் நனைந் துள்ளதையும், கன்னம் வீங்கியிருப்பதையும் அவன் கண்டு, திக்பிரமை கொண்டு, "ஓஹோ! அங்கு நடந்தன எல்லாம் இங்கு அநுபவஸித்தமா யிருக்கின்றன. நான் பகவானுக்கு, அந்தரங்க பக்தரான சோக்காமேள ருடைய பிரபாவம் உணராமல் அவரை அவமதித்தேன்'' என்று வருந்தி, "பகவானைச் சரணடைந்தால், பகவான், தனக்குச் செய்த தப்பை மன் னிப்பானேயன்றி, பக்தருக்குச் செய்த பிழையை மன்னிக்கமாட்டான். பக்தருக்குச் செய்தபிழையை அந்தப் பக்தரே மன்னிக்கவேண்டும் அன்றிப் பகவானாலாகாது. இது பூர்வம், துர்வாஸர்விஷயத்தில் விளம்பர மாயிருக்கின்றதல்லவா!'' என்று சிந்தித்து, சோக்காமேளரிடத்துக்குத் திரும்பிவந்து, "ஓ, மஹாத்மா! உமது பிரபாவம் உணராத நான், உமக் கவமானஞ்செய்தேன். நான் உம்மைக் கன்னத்திற் புடைத்தபடியால், பகவானுக்குக் கன்னம் வீங்கி யிருக்கின்றது. பகவானுக்கு உண்மை யன்பரான நீர், சந்நிதிக்கு வந்தாலன்றிப் பகவானுடைய கன்ன வீக்கம் வாடாது'' என்று வேண்டி, அவர் கரத்தை அன்போடு பற்றி, அழைத் துக்கொண்டு ஸந்நிதிக்குப்போனான். சோக்காமேளர், பக்த வத்ஸல னைத் தழுவிக்கொண்டு, "ஆதிமூலப் பொருளே! வேதமானது மனிதானந் தம் முதல் பிரமானந்தம் வரையில் வர்ணித்துக்கொண்டேபோய், பரப் பிரம்மானந்தம், மனதுக் கெட்டாததாய் இருக்கின்றதென்று மயங்கிற்று. பிரமாதியர்கள் உன் பிரபாவத்தை எடுத்துரைக்க வகையறியாது



வாடுகின்றனர். அங்ஙனமாக, ஒன்றுக்கும் பற்றாத நாயிற் கடையேனாகிய நானும் உன்னைத் துதிக்கின்றேன்! இது ஆச்சரியமன்று,

మహార్ణవాంతర్మజ్జతోరణుకులాచలయోర్నవిశేషః ॥.

(என்றால்)

'அலைகடலில் மூழ்கும் அணுவுமலை யுந்தந்
நிலையிலொன் றாகிநிற் கும்' (இதற்கு),

'ஸமுத்திரத்தில் முழுகும்போது, அணுவிற்கும் மலைக்கும் பேதம் இல்லை' என்பது பொருள். இதுபோல, நீ என்னிடத்திலும் வீற்றிருந்து, நான் உன்னைத் துதிக்கச் செய்கின்றனை ஆதலால், அற்பரேணுவேயனைய நானும் உன்னைத் துதிக்கின்றேன்'' என்று, விண்ணப்பஞ் செய்து, பகவானுடைய கன்னத்தை, பரிசித்தமாத்திரத்தில், வீக்கம் வாங்கியது; சோக்காமேளருடைய பக்தி ஓங்கியது; வேதியர்களுடைய அஞ்ஞானம் நீங்கியது; பண்டரி நாதனுடைய முகக்களை விஞ்சியது. இந்த அதிசயங் கண்டார் அனைவரும், ஆனந்தமடைந்து, பகவானுடைய பக்த பரதந்தி ரத்தை மெச்சிக்கொண்டாடினார்கள். ஆதியில், சோக்காமேளருடைய பிரபாவம் உணராமல் அவரை அவமதித்த அந்தணர் அனைவரும், துர் வாஸாதியர்பட்ட பாட்டை எண்ணி, பயந்து நடுங்கினவர்களாய், உயர் குலம், இழிகுலம் என்னும் வீண் வேறுபாட்டையும், மூடத்தனத்தையும் விட்டு, சோக்காமேளரை ஸாஷ்டாங்க வந்தனஞ்செய்து வணங்கி, "ஏ, மஹா புண்ய சீல! ஜாதி யபிமானத்தால், நாங்கள், பாகவத முதல்வரா கிய உம்மை நிந்தித்துப் புண்டரீகவரதன் மனத்தைப் புண்படுத்தினோம். பூர்வம் ஒரு பிரம ராக்ஷஸனுக்கு, தாம் பாடின 'கைசிகி' என்னும் கவியின் பலனைக்கொடுத்து, பிரமராக்ஷஸத்தன்மையை மாற்றின பாகவத முதல்வரைப்போல, பிரம ஞானியாரும் உம்மை அவமதித்ததனால் மஹா பாவிகளான எங்கள் குற்றங்களை மன்னித்து, நாங்கள் பகவான் அரு ளுக்குப் பாத்திரவான்களாகும்படி, அநுக்கிரகிக்கவேண்டும்'' என்று, மிகவும் வேண்டிக்கொண்டு, அவருடைய மன்னிப்பையும் திருவருளையும் பெற்று, களங்கரகிதர்களாய்க் கடைத்தேறினார்கள். அதுமுதல், சோக்காமேளர், பகவானுடைய நியமனத்தின்படி, நாள்தோறும் ஸந்நிதிக்குள் வந்து, பகவானைத் தரிசித்துப் பரிசித்துச் சந்தோஷமாய் வாழ்ந்தார்.

"குலந்தாங்கு சாதிகள் நாலினுங் கீழிழிந் தெத்தனை
நலந்தா னிலாத சண்டாளர் சண்டாளர்களாயினும்
வலந்தாங்கு சக்கரத் தண்ணல் மணிவண்ணற் காளென்றுள்
கலந்தா ரடியார் தம்மடி யாரெம் மடிகளே'' என்று,

நம்மாழ்வார் அருளியது, இங்கே கவனிக்கப்பட வேண்டியது.

தீனபந்தவே நம:

## இருபத்தொன்பதாம் அத்தியாயம்

# பண்டரிநாதன், ஜநாபாயுடன் ஊழியம் செய்யும் சரித்திரம்

ஒருநாள் புண்டரீகவரதன், அன்னத்தின் தூவியாலாய சயனத்தில் அமர்ந்து, ருக்மிணீ தேவியை நோக்கி, "இன்று, எனக்கு மிகவும் இளைப்பா யிருக்கின்றது; உனது கைகளால் எனது மெய்யைப்பற்றி வருடக் கடவாய்" என்று நியமிக்க, ருக்மிணீ தேவி, "பிராணநாதா! நீ இத்தனை இளைப்படையக் காரணம் என்ன? அப்படி வருத்தமான வேலை என்னசெய்தாய்? ஸாமந்த பக்தருடைய தோட்டத்தைக் கொத்தினையா! கபீர்தாசருடைய தியானுநுஷ்டான நிஷ்டையைக் கண்டதனால், அவருக்காக, ஆடை நெய்தனையா! நாமதேவருக்காக மட்சுவர் கட்டினையா! கூர்மதாஸருக்காக, வகுளாபுரத்துக்கு வேகமாய் நடந்தனையா! ஞானதேவர் ஆரோகணித்த குட்டிச்சுவரில் ஆவேசமாகி அதனை நடத்தினையா! சோக்காபரமானந்தர்க்காக வனத்தில் ஓடினையா என்றுகேட்க, ஜகந்நிவாஸன், "ஓ, ருக்மிணீ! நான், இன்று, நீ சொன்ன இந்த காரியங்களில் ஒன்றும் செய்யவில்லை; நாமதேவன் வீட்டுக்கு, அநேக பக்தர்கள், போஜனத்துக்கு வந்தார்கள்; அதனால் ஜநாபாய்க்கு வேலை அதிகமாயிற்று. அந்தப் பெண்மணி, என்னை இடையறாமல் தியானித்துக்கொண்டு, வருந்தி வேலைசெய்தாள். நான், அதைக்கண்டு மனம் பொறாமல், பெண்ணுருவந்தாங்கி, அங்குச் சென்று, அப்பெண்ணரசி செய்யவேண்டிய ஊழியங்களைச் செய்ய ஒப்புக்கொண்டு, மாவரைத்தேன்; வீடு மெழுகினேன்; குப்பை கூட்டி வெளியே கொட்டினேன்; துணி துவைத்தேன்; தண்ணீர் மொண்டேன்; இங்ஙனம் ஜநாபாய் கைவேலையைப் பிடுங்கிச்செய்து, அந்த மங்கையர்க்கரசியோடு கலந்து கஷ்டப்பட்டேன்" என்று கூறினான். அதற்கு ருக்மிணீதேவி ஆச்சரியமடைந்து, "காதல! உனக்கு உனது அன்பரிடத்துள்ள பரதந்திரம் பழையதேயாம் அன்றோ? புதியது அல்லவே! நினைத்தமாத்திரையில், ஆக்கல், காக்கல், நீக்கல்களாகிய முத்தொழில்களையும் முடிக்கவல்ல முன்னவனாகிய நீ, அன்பர்கள் விஷயத்தில் துன்பங்கள் நுகர்ந்து, சரீர கஷ்டப்பட வேண்டும் என்று காதலுற்றனைபோலும். 'பாம்பறியும் பாம்பின்கால்' என்றபடி அன்பர் விஷயத்தில் உனக்குள்ள பரமகருணை உனக்கே விளங்கும் அன்றி, ஸதா உன்னோடு கூடிவாழும் எம்போலியர்களுக்கு வாசாமகோசரமா யிருக்கின்றது" என்று புகழ்ந்து, பகவானை ஆலிங்கனஞ்செய்து அவன் சரீரத்தைப் பாதாதி கேசம் வரை பரிவுடன் இதமாய்ப்பற்றி வருடிக்கொண்டிருந்தாள். ஒருநாள், நாமதேவர், ஹரிஹரக்ஷேத்திரத்தில், மஹா பர்வகாலத்தில், கருடஸ்தம்பத்தருகில் இருந்து பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டிருக்கையில், அக்ரூரவரதன், நாமதேவருடைய ஆனந்தத்தைக்கண்டு



ஸந்தோஷித்து, தானொரு மனிதவடிவுடையவனாய், கரங்களில் தாளங்களைப் பிடித்துக்கொண்டு, நாமதேவர்க்குப் பின்னால் நின்று, அவர் மறந்த பதங்களை ஞாபகம்செய்துகொண்டு இருந்தான். அதைக்கண்ட பக்தர்கள் எல்லாரும், ஆச்சரியப்பட்டார்கள். அந்தரத்திலிருந்து தேவர்கள், பூமாரி பொழிந்தார்கள். மற்றொருநாள், நாமதேவர் பகவந்நாம ஸங்கீர்த்தனம் பண்ணிக்கொண்டிருக்கையில், பகவான், ஒரு பக்தனைப்போல வந்து, நாமதேவர்க்கெதிரில் நின்று நிருத்தம் செய்தான். அப்போது, கோபிகாவல்லபனுக்கு, தேகம் பரவசமாய், பீதாம்பரம் நழுவிவிழ, பக்தர்களனைவரும் பார்த்துக்கொண்டு சும்மாவிருந்தார்கள். நாமதேவர், ஸ்வாமி கரத்தைப்பற்றிக்கொண்டு "எல்லாமுணர்ந்த ஹ்ருஷீகேசா! பீதாம்பரம் நழுவிற்று; அதனை யெடுத்துக் கட்டிக்கொள்" என்று கூறினார். அதைக்கேட்ட பக்தவத்ஸலன், புன்னகைபுரிந்து, "எனக்கு மானாவமானங்கள் இல்லை; உயர்வு தாழ்வுப் பாகுபாடுகள் இல. பக்தர்களுக்குச் சித்தத்தை அர்ப்பணஞ்செய்து, அவர்களைச் சந்தோஷப்படுத்தி, அவர்களுடன் கூத்தாடிக்கொண்டிருத்தல் என்னது உத்யோகம். நான், பரமபக்தனான நாமதேவன் கீர்த்தனங்களைக் கேட்டமாத்திரத்தில், எனது சரீரம் பரவசமாகின்றது. நான் என்னசெய்வேன்?" என்று சொல்லிக்கொண்டிருக்கும் சமயத்தில், கபீர்தாஸர், பகவானை ஆலிங்கனம் செய்துகொண்டு, இவ்வானந்த கோலாகலங்களைப் பார்த்துக்கொண்டிருந்தார். பகவந்நாம ஸங்கீர்த்தனம் முடிந்தபிறகு, பகவான், நாமதேவரையும், மற்றுமுள்ள பக்தஜனங்களையும் தன்னுடன் உட்காரவைத்துக்கொண்டு, ஞானதேவரை நோக்கி, "இன்று நாமசங்கீர்த்தனம் மிகவும் ஆனந்த பூர்த்தியாய் இருந்ததல்லவா?" என்று கேட்டார். அதற்கு அவர், "நகைத்து, சூரியனே * தீவர்த்தி பிடித்தால், வெளிச்சத்துக்குக் குறைவா? அதுபோல, நீயே கரங்களில் தாளம் பிடித்துக்கொண்டு நிருத்தமாடினால், அதற்குப்பொருத்தமான பரமானந்தத்துக்குக் குறைவெங்ஙனம் உண்டாகும்?" என்று கூறினார். அம்மதுரமொழிகளுக்குப் பகவான் பேரானந்தமடைந்து, புன்னகைபுரிந்து, "நீ நிஜங்கூறினை" என்று, அவர் கூற்றைக்கொண்டாடி ஆமோதித்து, ஞானதேவ, நிவர்த்திதேவ, ஸோபானதேவ, நாமதேவர்களையும், விசோபாகேச, ஸாமந்தர்களையும், கபீர், கோராகும்பார்களையும், சோக்காமேளரையும், நரஹரி முதலிய அந்தரங்க பக்தர்களையும், ஒரே பந்தியில் உட்காரவைத்துக்கொண்டு, உண்டு களித்து, அவர்களனைவரிடத்திலும் பிரியாவிடைபெற்றுத் தனது திருக்கோயில் சேர்ந்தான்.

அப்போது கபீர்தாஸர், பகவானைப் பின்தொடர்ந்து சென்று, கொஞ்சம் பிரிய வசனங்களாடி விடைபெற்று, ஸேது யாத்திரைக்குப் புறப்பட்டார். இவர், பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டு,

* தீவர்த்தி - தீவட்டி என மருவி வழங்குகிறது.

வழிபற்றிப்போகையில், இருவர் பிராமண ஸகோதரர்கள், இவருடைய மகிமையைக்கேட்டு, இவர்க்குச் சிடர்களாய் உபதேசம்பெற்றார்கள். கபீர் அவர்களுக்குபதேசித்த பிறகு, ஸேதுயாத்திரையை நிறைவேற்றிக் காசிக்குப்போனார். இந்த கபீர்தாஸரால், உபதேசம்பெற்ற பிராமணர்கள், துருக்கோபதேசம் பெற்றுக்கொண்டகாரணத்தால், தமது சுற்றத்தாரால், குலவிலக்குச் செய்யப்பட்டார்கள். இவ்விருவரும், தமக்கு, மக்கள் இருந்தபடியால், பாகவத வைபவத்தை உணராத அஞ்ஞானிகளால் நேரிட்ட பழியை அஞ்சி வருந்தி, அவ்வூர்விட்டு, காசிக்குவந்து, தமது ஆசார்யராகிய கபீர்தாஸருக்கு வந்தனம்செய்து, கைகூப்பி நின்று, நடந்த விருத்தாந்தங்களை விண்ணப்பித்தார்கள். அதுகேட்ட கபீர்தாஸர், அவர்களைநோக்கி, "பகவான் விஷயத்தில் ஆழ்கின்றோமாகி, கரணங்களனைத்தையும் அவனுக்கே விநியோகஞ் செய்து, நம்மது, பிறரது என்னும் பாகுபாடற்று, நாமே அவனாய் அவனே நாமாய்வாழ்கின்ற நமக்கு, உலக நிந்தையால் வருங்கேடேது?

న్యాసవిద్యైకనిష్ఠానాం । వైష్ణవానాంమహాత్మనాం ।
ప్రాకృతాభిస్తుతిర్నిందా । నిందా స్తుతిరితిస్మృతా॥

(என்றால்)

'நிஷ்டைதனை கூடி நிதமதனில் ஈடுபட்ட
விஷ்ணுபக்தன் தன்னை விவேகமில்லாத்—துஷ்டர்கள்
வாழ்த்திடினுந் தாழ்த்தியதே வாய்க்குவந்த வாறுளறித்
தாழ்த்திடினும் வாழ்த்தியதே தான்' (இதற்கு),

'நிஷ்டையில் ஈடுபட்ட மகான்களாகிய விஷ்ணுபக்தர்களை, அவிவேகாபரணமணிந்த துஷ்டர்கள் துதித்தாலும், நிந்தித்ததாகும்; நிந்தித்தாலும், துதித்ததேயாகும்' என்பது பொருள். இது யாங்ஙனம் எனில்: திருமாலடியார்கள், சரீரத்தைப் பொருட்படுத்தாமல், சரீரியாகிய ஆத்மாவை மதித்து வாழ்வார்கள்; பகவானே பலவிதத்திலும் சரியான சுற்றம் என்று எண்ணி, சரீரத்துக்கு மாத்திரம் சுற்றங்களென்று ஏற்பட்டுள்ள கூட்டங்களை,

'தந்தைதாய் தமர்தார மகவென்னும் இவையெல்லாம்
சந்தையிற் கூட்டமிதிலோர் சந்தேகமில்லை' என்றபடி,

கள்ளக் கூட்டங்களாக எண்ணி ஒதுக்குவார்கள்; அநவரத பகவதநுபவமே புருஷார்த்தமெனக்கொண்டு, மற்ற இழிந்த புருஷார்த்தப்போலிகளைத் துச்சமெனத் தள்ளுவார்கள். நரக மார்க்கங்களாகிய சப்தாதி விஷயஸங்கங்களை நீக்கி, மோக்ஷமார்க்கமாகிய பகவத் கைங்கரியத்தில் ஈடுபட்டு மனநிலைத்து நிற்பார்கள். அவிவேக புஞ்சங்கள், ஆத்மநிலையை அற மறந்து, தேகநிலையைப் பொருட்படுத்தி வாழ்வார்கள்;

'மாயா வாமநனேமதுசூதா நீ அருளாய்
தீயாய் நீராய் நிலனாய் விசும்பாய்க் காலாய்
தாயாய்த் தந்தையாய் மக்களாய் மற்றுமாய் முற்றுமாய்
நீயாய் நீநின்ற வாறிவை யென்னநியாயங்களே' என்று



நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழியின்படி, எல்லா விதத்திலும் இனிய சுற்றமாகிய பகவானை பஜிக்காமல், ஆபாஸ பந்துவர்க்கங்களை அநுசரித்துபசரித்துக் காலங்கழிப்பார்கள்; பகவதநுபவத்தை வேம்பென வெறுத்து, இழிந்த புருஷார்த்தங்களை இனிய கரும்பெனக் கைக்கொள்வார்கள்; மோக்ஷவழியாகிய பகவத்பக்தியை நாடாமல், நரகமார்க்கமாகிய சப்தாதி விஷயங்களில் மயங்கி நிற்பார்கள். ஆகையால், அத்தகைய அஞ்ஞானிகளால் நேரிடக்கூடிய அவமானத்தை முன்னிட்டு நீவிர் வருந்தன்மின். எமக்குப் பிள்ளைகள் உளரே! அவர்கள் கதியாதாகுமோ என அஞ்சுகின்றீர்களோ! அவர்களுக்கு நீவிர் மாத்திரமா அருமந்த தந்தைகள்? இதுவரையில், அவர்களுக்கு எத்தனையோ தந்தையர் இருந்திருக்கின்றார்கள். எல்லாவிதத்திலும் இனிய தந்தையாகிய பகவான், எல்லாவுயிர்களையுங் காக்கக் கங்கணங் கட்டிக்கொண்டு ஸர்வ ஜாக்ரதையாயிருக்கின்றான்.

'கருப்பையுள் முட்டைக்குங் கல்லினுட் டேரைக்கும்
விருப்புற் றமுதளிக்கு மெய்யன்—உருப்பெற்றால்
ஊட்டி வளர்க்கானோ ஓமயங்கு மன்னாய்கேள்
வாட்ட முனக்கேன் மகிழ்' என்றபடி,

நீவிர் இந்தச் சிந்தனையைவிட்டுப் பகவத்சிந்தனையைப் பற்றுங்கள். உமக்கு மங்களம் உண்டாகுக" என்று இதோபதேசம் செய்தார். ஆசார்யருடைய இதோபதேச மாரிவெள்ளம், தமது செவிமடையில் நுழைந்து இதயப் புலத்தில் பாய்ந்து, ஞானநன்முளை கிளம்பவே, அஞ்ஞானப்பதர் அழுகிச் சித்தப்பிராந்தி நீங்கின சிஷ்யர் இருவரும், தமது ஊர்க்கு வந்து சேர்ந்தார்கள்.

பிறகு, இவர்கள் இருவரும், தமது மக்கள் மணமுடிக்கவேண்டி, ஸமஸ்த பதார்த்தங்களையும் ஸம்பாதித்துக் கொண்டிருக்கையில், அவ்வூர் வேதியர்கள் வந்து, "உமக்கு ஸம்பந்திகள் யாவர்?" என்று கேட்டார்கள். அதற்குக் கபீர்தாஸதாஸராகிய பிராமண சிஷ்யர்கள் அவர்களைநோக்கி', 'எங்களைக் குலவிலக்குச் செய்தீர்கள் அல்லவா! இனி எமக்குக் குலாசாரத்தாற் பிரயோஜனம் என்ன! அண்ணன் பிள்ளைக்குத் தம்பிபெண்ணையும், தம்பி பிள்ளைக்கு அண்ணன்பெண்ணையும்கொடுத்து, எங்களுக்குள்ளேயே ஸம்பந்தஞ் செய்துகொள்ளுகிறோம்" என்று கூறினார்கள். அதனைக்கேட்ட பிராமணர்கள், கொஞ்சம் பொறுமையோடு, "இவ்விருவரும், கபீர்தாஸர் என்னும் விஷ்ணுபக்தருடைய உபதேசம்பெற்றுக்கொண்டார்களென்று, இவர்களை, ஜாதிபிரஷ்டர்களாக்கி விட்டோம். இவர்கள் அங்ஙனம் உபதேசம் பெற்றுக்கொண்டதனால் நமக்கு ஒருசிறிதும் கெடுதியில்லை. இவர்கள், நம்மீது, பழியைச் சுமத்தி குலாசார விரோதமாய் மணத்தை முடிக்கத் தீர்மானித்திருக்கின்றார்கள். இதனால் நமக்கு அபகீர்த்தி யுண்டாகும். கபீர்தாஸர் மஹாநுபாவர் என்றும், அவரது சரித்திரங்கள் அத்யத்புதங்களென்

றும், அவர்க்கு, பகவான் ஓர் உக்ரவீர சேவகனா யிருக்கின்றா னென்றும் சிறு குழந்தைகள் முதல், பெருங்கிழவர்கள் வரையில் எல்லாரும் சொல்லுகிறார்கள். இப்போது நாம் சும்மா இருந்துவிட்டால், பிறகு என்ன கேடு வருமோ தெரியாது! பகவான் பக்திவலையிற் படுபவனே அன்றி, ஜாதிக்கட்டுக் கடங்கினவன் அல்லன். இதற்கு, பிரமராக்ஷஸன், சண்டாளன் அபிமானத்தால், பரிசுத்தனானது முதலாகிய பிரமாண்ட புராணக் கதைகள் அநேகமாய்ச் சாக்ஷி பகர்கின்றன" எனப் பலவாறு சிந்தித்து, அவ்விருவரையும் எப்போதும்போலத் தம்மோடு கூட்டிக்கொண்டு, அவர்கள் பிள்ளைகளுக்குத் தமது பெண்களைக் கொடுத்துத் தமது பிள்ளைகளுக்கு அவர்கள் பெண்களைக்கொண்டு, விவாஹத்தை விவேகத்தோடு நிறைவேற்றினார்கள். பிறகு இவ்விருவரும், பெண்டு பிள்ளை பண்ட பதார்த்தம் உற்றார் உறவினர் முதலிய புறப்பற்றகற்றி, காசி வாஸியாகிய கபீர்தாஸர் ஸந்நிதிக்குப்போய், ஸதாசார்யராகிய, அவர் பதாம்புய நிழலிற் பிரியாதமர்ந்து பெருமையுடன் வாழ்ந்தார்கள்.

ஸ்ரீபக்தவரதாயநம:

## முப்பதாம் அத்தியாயம்

# கபீர்தாசருடைய சிஷ்யராகிய பத்மநாபதாஸர் சரித்திரம்

காசியில், பிராமணகுலத்தில், பத்மநாபர் என்னும் புண்ணிய புருஷர் ஒருவர் அவதரித்தார். அவர்க்குச் சௌளோப நயனாதிகள், சரியான காலத்தில், விதிப்படி நடத்தப்பட்டன. இவர், ஸாங்கோபாங்கமாய், வேதங்களையும் ஸ்மிருதி இதிஹாஸ புராணங்களையும் ஓதியுணர்ந்து அவைகளில் பூர்ண விற்பத்தி பொருந்தியிருந்தார். இந்த பத்மநாபர், ஒருநாள் ஏகாந்தமாய் அமர்ந்திருந்து, தமது மனத்தகத்தில், பின்வருகிறபடி * விதர்க்கம் செய்யலானார்:—உண்முக வெளிமுகத் திருவுருவ விபவங்களால், எல்லாமாய் அல்லதுமாய் உள்ளவனும், ஸமஸ்த சேதனா சேதனங்களுக்குந் தாயகமாய் நாயகமாய், உள்ளவனும், தனக்கு மேலொரு தலைவனை இல்லாதவனும், தேவர் மனிதர் முதலிய குலப் பிரிவினைகளும்,

'கருமை வெம்மை செம்மையுங்கடந்து நின்ற காரணம்' என்றபடி, கருமை செம்மை வெண்மை முதலாகிய நிறங்களும்,

'களித்தல் சுளித்தலுக்கே காசினியி லின்பம்
அளித்தல் அரந்தை யதற்கே—தளிர்த்து
வளர்தல் சுருங்குதற்கே வாங்கும் விலைகள்
தளர்தல் உயர்தலுக்கே தான்' என்றபடி.,

* விதர்க்கம் - ஆழ்ந்தயோசனை



வளர்தல் சுருங்குதல் முதலிய வேறுபாடுகளும், ஜனன மரணத் துன்பங்களும் இல்லாதவனும், அளவிலா ஞானம், அளவிலா ஆற்றல், அளவிலா வன்மை, அளவிலா ஐஸ்வர்யம், அளவிலா வீரம், அளவிலாப் புகழ் ஆகிய ஷட்குணைஸ்வர்யங்கள் நிறைந்தவனும், ஞானானந்த சொரூபனும், சேதனாசேதனங்களுக் குள்ளும் புறம்பும் நிரம்பி இருப்பவனும், எதினும் ஒட்டாமல் விளங்குபவனும், அஞ்ஞான முதலாகிய இழிகுண ரகிதனும், தனது இச்சையாற்கொண்ட அநந்த நாம ரூபங்களை உடையவனுமாகிய ஸர்வேசன் ஒருவன் உளன். அவனால், அநந்த கோடி பிரமாண்டங்கள் உண்டாக்கப்பட் டிருக்கின்றன. இந்த அண்டங்கள் அனைத்தும், அநேககோடி ஆத்மாக்களால் நிறைந்திருக்கின்றன. இந்த ஆத்மாக்கள் ஊழ்வினையால், பல்வேறு பிறவிகளைப் பெறுகின்றன,

'அரிதரிது மானிட ராதலரிது
அதனினு மரிது கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியும் நயத்த லரிது
ஞானமுங் கல்வியும் நயந்த காலையும்
தானமுந் தவமும் தான்செய லரிது
தானமுந் தவமும் தான் செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே' என்றபடி,

அநேக பிறவிகளில் மானிடப்பிறவி எய்தல் அரிது. அங்ஙனம் மானிடப்பிறவி எய்தினாலும், ஊழ்வினைவலியால் அஞ்ஞானியாய், இந்திரியவசப்பட்டவனாய், பகவத்பக்தி இல்லாதவனாய்ப்போகாமல், ஞானவானாய், இந்திரியங்களைவென்று, பகவத்பக்தியுள்ளவனாய் விளங்குதல் அருமை. இத்தனையும் எய்தினாலும், ஞானாநுஷ்டான பரரான சற்குரு கிடைப்பது,

'அரியவற்று ளெல்லாமரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்' என்றபடி,

அரியவற்று ளெல்லாம் அரியது. இத்தகைய சற்குரு ஸம்பந்தம் செய்யாமல், பகவத்கடாக்ஷம் கிடைக்காது. ஆகையால், ஸதாசார்யரை அடுத்து, அவருடைய உபதேசத்தைப்பெற்று, பகவானிடத்தில் எண்ணெய் ஒழுக்கேபோல இடையறாப் பக்திநிலையுற்று, கரணங்களனைத்தையும் கர்த்தாவுக்கு விநியோகஞ்செய்து, இன்ப துன்பம், விருப்பு வெறுப்பு, புகழ்ச்சி யிகழ்ச்சி, பெருமை சிறுமை, நட்பு பகை, பொன் மண் இவைகளிடத்தில் பொது நோக்குடையவனாய், எல்லாவற்றையும் முற்றத் துறந்த ஞானியாய் விளங்குபவன்,

'யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்' என்றபடி,

பிரம்மத்தோடு இரண்டறக் கலப்பதற்கு ஸமர்த்தனாகின்றான். அநாதி காலமாய், அநந்த ஜன்மங்களெடுத்த நான், இப்பேர்ப்பட்ட உத்தம ஞானமும், அதற்கடையாளமான அநுஷ்டானங்களும் இல்லாமல், இந்திரிய வசப்பட்டவனாய்,

'வம்புலாங் கூந்தல் மனைவியைத் துறந்து
பிறர்பொருள் தாரமென் றிவற்றை
நம்பினா ரிறந்தால் நமன்றமர் பற்றி
எற்றிவைத் தெரியெழு கின்ற
செம்பி னாலியன்ற பாவையைப் பாவீ
தழுவென மொழிவதற் கஞ்சி
நம்பனே வந்துன் திருவடி யடைந்தேன்
நைமிசா ரணியத்துள் எந்தாய்' என்ற

திருமங்கையாழ்வார் அருளிச்செயலின்படி, யமவேதனைக்கு ஆளாகினேன்; இனி பகவான் கிருபா கடாக்ஷத்தால், நான் நல்லாசிரியனை யடுத்து, உபதேசம் பெற்று, அநவரத பகவத்பக்தனாகிப் பரிசுத்தமடைவேன்" என்று, நீள நினைத்து, ஞானானுஷ்டான பூர்ணரும், பகவானுக்கு மிகவும் நெருங்கிய பக்தருமாகிய கபீர்தாஸரை அடுத்து, உபதேசம் பெற்று, அவருடைய பரம கிருபையால், ஈஷணாத்ரயங்களினின்று நீங்கி, பரமசாந்தமூர்த்தியாய், ஸதா பகவத் தியானஞ் செய்துகொண்டிருந்தார்.

"ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு" என்ற,

மூதுரையின்படி, இவர் மெய்யுணர்வெய்தி வாழ்கிறநாளில், அந்த பட்டணத்தில் வர்த்தகனொருவன், பணக்காரனாய், ஈகை பக்தி சுற்றந்தழுவல், பக்தரைப் பாலித்தல் முதலிய நற்குணங்களோடுகூடி விளங்கினான். அவன் மனைவி, சற்குண சாகரமா யிருந்தாள். இந்த தம்பதிகளுக்கு ஐந்து ஆண்மக்கள் பிறந்து, உத்தம குணசாலிகளாய், தாய் தந்தையர்க்குக் கண்கள்போன்று அருமையாய் வளர்ந்து வந்தார்கள். இப்படிப்பட்ட வைபவங்களைப் பெற்று வாழ்ந்த வர்த்தகன் தனது ஊழ்வினை வலியால் தனக்குக் குஷ்டரோகம் என்னும் தொழுநோய் உண்டாகி, சரீரத்தில் புழுக்கூட்டங்களும், துர்நாற்றமும் நாளுக்குநாள் அதிகரித்து, வேதனை யடைந்தான். அனைவரும், அவன் அண்டையில் வர அருவருப்படைந்தார்கள். எத்தனையோ பொருட்செலவால் எவ்வளவோ மருந்துண்டும், அன்னதானம் சொன்னதானம் என்று பெரியோர்கள் சொன்னதானம் என்னதானம் செய்தும், ஜபங்கள் யாகங்கள் உற்சவங்கள் முதலிய என்னென்னவோ நற்கருமங்கள் செய்தும், எள்ளளவும் குணப்படாமல், அந்த வியாதி வளர்ந்துகொண்டே வந்தது. வர்த்தகன் வேதனையைப் பொருதவனாகி மனைவி மக்கள் முதலிய சுற்றத்தாரைநோக்கி, "என்னை மோக்ஷந்தர வல்லதாகிய கங்கையில் வீழ்த்துங்கள்," என்று வேண்டினான், அவர்கள், அவனு



டைய நற்குணப் பொலிவை நயந்து, பிரிவாற்றாதவர்களாகி, அவனுடைய வேண்டுகோளை வெறுத்தனர்களாயினும், பலநாள் இந்தத் துன்பப்படுவதைவிட, தேகவியோகமே மிக நன்று எனத் தீர்மானித்து, அவனுடைய வேண்டுகோளுக்கு உடம்பட்டு, அவனை எடுத்துக்கொண்டு போய், கங்கைக்கரையிற் கிடத்தி, அவனுடைய சரீரம் தண்ணீரில் மிதந்து போகாமல் அமிழ்ந்து கிடப்பதற்கு, கால்களிலும் கரங்களிலும் குடங்களைக் கட்டிக்கொண்டிருந்தார்கள். அப்போது வெகுஜனங்கள் கூட்டங்கூடி அவ்வேடிக்கையைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அந்தச் சமயத்தில் கபீர்தாஸ தாஸராகிய பத்மநாபர், கங்காஸ்நானம் செய்யும்பொருட்டு, அங்கு வந்து, அக்கூட்டத்தைக் கண்ணுற்று, அதற்குக் காரணங்கேட்டுத் தெரிந்து, வர்த்தகனைச் சமீபித்து, "ஏன் இத்தனை துணிவான காரியஞ் செய்தனை?

'அரிதரிது மானிட ராதலரிது' என்றபடி,

மனித சரீரங்கிடைப்பது மிகவும் அருமை. ஜீவாத்மாக்கள், தேவஜன்மம் முதலிய சிறந்த ஜன்மங்களைப் பெற்றிருக்கும்போதும், அவைகளுக்கு முந்திய ஜன்மங்களில் தேடிக்கொண்ட வினைகளை அநுபவிப்பனவா மன்றி, அவ்வினைகளை மேலும் நுகராதபடி, அவைகளைப் பரிகரிக்கும் வழிதேடும் வகையறியமாட்டா. மனித சரீரத்திலோ அங்ஙனம் அன்று; பூர்வ ஜன்மவினைகளை நுகர்ந்தபடியே இனி அடையும் நல்வினைப் பயன்களுக்குவேண்டிய ஸாதனங்களையும் அநுஷ்டிப்பனவாம். ஜீவர்களுக்குப் பலவிதமான உயர்பிறப்பும் இழிபிறப்பும் உண்டாவதற்குக் காரணம், மனித ஜன்மத்திற் செய்த புண்ணிய பாவங்களா யிருக்கின்றன. மேலுலகத்தில் தேவாதி புண்ய சரீரங்களைப் பெற்று, சுவர்க்காதி ஸுகங்களை நுகர்வார்கள்.

'புண்ணிய முடிவில் நண்ணுவ மாந்தர்
கண்ணிய வுலகந் திண்ணிய தாமே' என்றபடி,

புண்ணிய முடிவில், மனிதவுலகத்திற்கு வருவார்கள். மனிதர்கள்; இந்நிலவுலகில் இருந்தே ஸர்வ பலன்களையும் ஸாதிப்பார்கள். ஆகையால் இப்பேர்ப்பட்ட அருமையாகிய மனித சரீரம் பகவத் கடாக்ஷத்தால் கிடைத்திருக்கிறபோது, அதனது அருமை பாராட்டாமல், அதற்குக் கேடு சூழ்தல் அறிஞன் செய்கை யன்று" என்று கூறினார். அது கேட்ட வர்த்தகன், தனது விருத்தாந்தங்களனைத்தையும் ஸாங்கோபாங்கமாய் விண்ணப்பஞ் செய்தான். அதற்குப் பத்மநாபர், "ஓ, பாக்யவந்த! உனது சரீர சுகத்திற்காக, உதவியற்ற பல ஸாதனங்களை அநுஷ்டித்தாயன்றி, உதவியுற்ற ஸுலபமான உபாயத்தைத் தேடிக்கொண்டாயில்லை. * 'மிருத ஸஞ்ஜீவனம் என்னும் ஸ்ரீராம நாமத்தைத் திரிகரண சுத்தியோடு மும்முறை உச்சரிப்பையானால், இந்த கொடியவியாதி இப்போதே தொலையும். தைலமற்ற பதார்த்தங்கள் வலியற்றிருப்பன

* மிருத சஞ்சீவனம் - இறந்தோரைப் பிழைப்பிக்கும் மருந்து.

போல, பகவந்நாமோச்சாரணமற்ற ஸர்வ ஸாதனங்களும், ஸாரமற்றனவாம். இப்போது நீயும், உன்னைச் சூழ்ந்திருக்கும் இந்த ஜனக்கூட்டமும், "ஸ்ரீராம ராம ராம" என்று கோஷியுங்கள் என்று கூற, அனைவரும் அங்ஙனமே செய்தார்கள். உடனே, யாவருங் காண, வர்த்தகன் உடலிற் பிணி தொலைந்தோடியது. அவனுடைய சரீரம் முன்னிலும் அதிக அழகும் பலமும் பெற்று விளங்கியது. கங்கைக் கரையில் கூட்டமாயிருந்த ஸர்வ ஜனங்களும், ஸ்ரீதாரக நாமோச்சாரணம் செய்தவுடனே, தத்தம் உடல்களிற் பிணிகள் அகன்று, சுகம் பெற்றவர்களானார்கள் என்பது ஆச்சரியம் அன்று. ஸ்ரீராமசந்திரன் கடாக்ஷத்தால், அனைவருக்கும் பவரோக நாசகாரணமான பக்தி விரக்திகள் அப்போதே தோன்றின. அவர்கள் விருப்பு வெறுப்பற்ற சுத்த மனத் துத்தமர்களாய், அனைத்துலகும் தொழத்தக்க பேறுபெற்றார்கள். அவ்வர்த்தகன், அப்போதே எழுந்து, பத்மநாபரைப் பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து, அவரால் உபதேசிக்கப்பெற்று, பகவத் பக்தி நிறைந்தவனாய், தனது ஸதாசார்யராகிய பத்மநாபர், அவர்க் காசார்யராகிய கபீர்தாஸர், அனைவருக்கும் உத்தம ஞான குருவாகிய ஸ்ரீதாரக பிரமம் இவர்களுடைய பெரும்புகழை எடுத்துக்கூறித் துதித்து, அது முதல் என்றென்றும் இடையறாமல் ஸ்ரீராமநாமத்தியானம் செய்து கொண்டிருந்தான்.

இவ்வதிசயத்தைக் கபீர்தாஸர் கேள்வியுற்று, தமது சிஷ்யராகிய பத்மநாபரை வரவழைத்து, "ஸ்ரீராம நாமத்தை அத்தனைச் சிறிய பிரயோஜனத்துக்காக மும்முறை உச்சரிக்கவேண்டுமா! நகத்தாற் கிள்ளத் தகுந்த பொருளுக்குக் கோடாரி யென்னத்துக்கு? திரிகரண சுத்தியாய் ஒருமுறை, 'ராம' என்னும் இரண்டெழுத்துக்களை உச்சரித்தால், அநந்தகோடி ஜன்மங்களில் செய்த மஹாபாதகங்கள் நசித்து இகபர சுகங்கள் உண்டாகும். அந்த நாம மகிமையை அளவிடுதற்கு வேதபுருஷனும் வல்லவனல்லன். இத்தகைய மஹா பிரபாவத்தோடு கூடின மஹாமந்திரத்தை, நீ, அதிக சிறிய பலனுக்காக மும்முறை உச்சரிக்கச்செய்தனை!" என்று கூறினார். அதுகேட்ட பத்மநாபர், ஆசார்யரை நோக்கி, "குருபுங்கவ! அவ்வர்த்தகன், ஞானநுஷ்டான பரிபூர்ணரான தேவரீருடைய பாதகமலங்களைக் கோரி அடையாத குறைதீர ஒரு முறையும், அவனுடைய சரீரநோயுடன் பவநோயும் பாறியகன்று, அவன் முத்தியென்னும் வித்தக அணங்கை மணந்து சுகம்பெற ஒரு முறையும், அங்குக் * குழுமியிருந்த ஸர்வஜனங்களும் ஞானவைராக்கியம்பெற்று மோக்ஷமுற்றுவாழ ஒரு முறையுமாக மும்முறை ஸ்ரீ தாரகமந்திரத்தை உச்சரிப்பித்தேன்" என்று, மிக வணங்கி நயமாக விண்ணப்பஞ் செய்தார். கபீர்தாஸர் மிகவும் ஸந்தோஷித்து நீ, சுத்த மனத் துத்தம நற்சிஷ்யன் என்று அவருடைய புத்தி விசாலத்தைக் கொண்டாடினார்.

ஸ்ரீராமஜயம்:

* குழுமியிருந்த - கூடியிருந்த.



முப்பத்தொன்றும் அத்தியாயம்

# கபீர்தாஸர் ஒரு பதினாயிரம் ஸாதுக்களுக்கு ஸதாவர்த்தி வழங்கின சரித்திரம்

கபீர்தாஸர், குடும்பச் சேற்றில் நுழைந்திருந்தபோதிலும், தாமரை யிலையிற் றண்ணீர் போலவும், சேற்றில் பிள்ளைப் பூச்சியைப் போலவும், ஒட்டாமல் ஒட்டி, ஸதா பகவதநுபவானந்தத்தோடுகூடி ஸ்ரீதாரகநாம ஜபஞ் செய்துகொண்டிருந்தார். அங்ஙனம் இருக்க ஒரு நாள், ஒரு பதினாயிரம் ஸாதுக்கள், காசிக்கு வந்து, "இவ்வூரில் எமக்கு ஸதாவர்த்தி வழங்கி ஆதரிக்கத்தக்கவர்கள் யாரேனும் உளரா?" என வினவிக்கொண்டே வந்தார்கள். அங்கிருந்த சில பொறாமைக்குணப் போக்கிலிகள், அவர்களைநோக்கி, "இவ்வூரில், கபீர்தாஸன் என்னும் ஒரு பகவத்பக்தன் இருக்கின்றான். அவன், இவ்வூர்க்கு வரும் பாகவதர்களுக்கெல்லாம் அன்னபானாதிகளுக்குக் குறைவின்றி உபசரிக்கின்றான். அவன் தவிர வேறொருவரும் அங்ஙனம் ஆதரிப்பவர்கள் இலர். ஆகையால், நீங்கள் அங்குச் செல்லுங்கள்" என, அந்த ஸாதுக்கள் அனைவரும் ஸ்ரீராமநாம தியானபரராய்க் கபீர்தாஸர் வீட்டுக்கு வந்தார்கள். அவ்வோசையைக் கேட்டமாத்திரத்தில், கபீர்தாஸர் வேகமாய் வெளிப்போந்து, ஸாதுக்களைக் கண்டு மகிழ்ந்து, ஸாஷ்டாங்க வந்தனம் செய்ய, அவர்கள் ஸந்தோஷித்து, கபீர்தாஸருடைய நல்லொழுக்கத்துக்கு வியந்தார்கள். அவர், அவர்களை உபசரித்து, உட்காரவைத்து, துளசிசெட்டியென்னும் வர்த்தகன் வீட்டுக்குப்போய், அவனை நோக்கி, "இன்று ஒரு பதினாயிரம் ஸாதுக்கள், என் வீட்டுக்கு எழுந்தருளினார்கள். அவர்களுக்கு ஸதாவர்த்தி கொடுப்பதற்காக, நீ, அரிசி பருப்பு முதலிய வஸ்துக்களைக் கொடு" என்று பிரார்த்திக்க, அவ்வர்த்தகன், பேதையும், போக்கிலியும் ஆகையால், கொஞ்சமேனுங் கூச்சமின்றிக் கபீர்தாஸரை நோக்கி, "உனது மனைவியை ஒரு ராத்திரிக்கு என் ஸ்வாதீனத்தில் விட்டையானால், நீ கோரின வஸ்துக்கள் அனைத்தையும் தருகின்றேன்" என்றான். அதைக்கேட்ட கபீர்தாஸர் தமக்குள்ளேயே பின்வருகிறபடி சிந்திக்கலானார்:

"இவ்வர்த்தகன் உலக நிந்தைக்கும், நரகாவஸ்தைக்கும் கொஞ்சமேனும் அஞ்சுதல் இன்றி, இங்ஙனம் விரும்புகின்றான்.

స్త్రీశుద్ధిరర్థశుద్ధిశ్చ । యస్యనాస్త్యపిధర్మిణః ।
సర్వవనరకంయాతి । శిరచ్ఛేదకులోభిషక్ ॥

'எத்தனைதான் தர்மவான் என்றாலும் பெண்ணொடுபொன்
சுத்த மிலானொருவன் துச்சனாம்—வைத்த
தலையறுந்தா லொட்டுதற்குத் தக்கமருந் தொன்றும்
இலையவனும் உய்வ தில்'

என்றபடி,

பெண் சுத்தமும் பொன் சுத்தமும் இல்லாதவன், எத்தனைதான் தர்மவானானாலும், அறுபட்ட தலை ஒட்டுதற்கு மருந்தில்லாதது போல, அவனுக்குப் பிழைக்கும் வழியில்லை. பாவங்களைச் செய்கின்றவனுக்கும், அவனுக்கு ஒத்தாசை செய்கின்றவனுக்கும்,

'திருடனுக் கிடங் கொடுத்தவன் குடி
கெடுத்தவன்—சேருங்கதியிற்
சேர்குவே னம்மா! ஸ்ரீராம துரோகம்
செய்தா லனுபவிக்கிறேன் அம்மா' என்று,

பரதன் சொல்லுகிறபடி யமதண்டனையாகிய பலன் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால், இவன், நரக வழிக்குதவியான சிற்றின்பத்தை விரும்புவதும், நான் அதற்கு உடம்படுவதும் கீழ்மையிற் கீழ்மையாவனவாம். ஆனாலும்,

విచిత్రా దేహసంపత్తి । రీశ్వరాయ నివేదితుం ॥

(என்றால்)

'உடலென்னும் வைப்பொருவற் குண்டா யிருத்தல்
கடவுட் கடன்கொடுக்க வாம்' (இதற்கு),

'சரீரமாகிய புதையல் ஒருவற்குக் கிடைத்திருப்பது, கடவுளுக்குச் செய்யவேண்டிய கடன்களைச் செய்யவேயாம்' என்பது பொருள். அரசனுக்குக் காணிக்கை கொடுப்பதைக் காட்டிலும், அவன் முன்னிலையிலேயே, அவன் குமாரனுக்கு ஒரு * கையுறை கொடுத்தால், அரசன் இருமடங்கு சந்தோஷங் கொள்வதுபோல, பகவத் கைங்கரியத்தைவிட பாகவத கைங்கரியம், பகவானுக்கு மிகவும் களிப்பை உண்டாக்கும்.

ఆరాధనానాం సర్వేషాం । విష్ణోరారాధనం పరం ।
తస్మాత్పరతరం ప్రోక్తం । తదీయారాధనం నృప ॥

(என்றால்)

'ஆரா தனைக ளனைத் தினுக் கும்பகவ
தாரா தனையே அதிகமந்த—ஆரா
தனைக் கதிகம் பக்த ஜனங்களையா ராதித்
தனைத்துலகு மேத்தநிற்ப தாம'' என்றபடி,

'பலரையும் ஆராதிப்பதைவிட, பகவானை ஆராதிப்பது விசேடம். அதைவிட, பாகவதாராதனை அதிக விசேடம்' என்று பிரமாணம் இருக்கின்றதல்லவா? மேலும், தன்னலங் கருதி சாஸ்திர விரோதமான காரியஞ் செய்தல் நரக காரணமாகுமன்றி, பகவத் பாகவத நலங்கருதி அப்பேர்ப்பட்ட காரியஞ் செய்தல் பகவத் பிரீதியாகும். யாகங்களில் ஜீவவதையும், விவாஹாதிகளில் பொய்யும் நிந்தையற்றனவாகுமாறுபோல, மிகவும் ஏழையாகிய நான், அதிதிகளாகிய ஸாதுக்களை ஆராதிக்கு நிமித்தம், இவ்வர்த்தகனுடைய இச்சையைப் பூர்த்தி செய்தல்

* கையுறை - சொக்காய் அல்லது கைச்சட்டை.



தோஷம் அன்று. எனது மனோநிலையை, என்னிடத்தில் மறைந்து நிறைந்துள்ள ஸ்ரீராமபத்திரன் அறிவான்" என்பதேயாம். இங்ஙனம் சிந்தித்துத் தன் மனதை திடப்படுத்திக்கொண்ட கபீர்தாஸர், அவ்வர்த்தகனை நோக்கி, "ஓ, மஹாத்மா! பாகவதாராதனைக்குக் குறைவில்லாமல் வேண்டிய வஸ்துக்களை நீ கொடுத்தையானால், உனது இச்சையை நிறைவேற்ற, நான் என் செய்யினும் தகும். ஆகையால், இன்றிரவு, நீ கோரினபடி, எனது இதயாலய வாஸியாகிய ஸ்ரீராமபத்திரன் ஸாக்ஷியாய் எனது மனைவியை உனது வீட்டுக்கு அனுப்புகின்றேன்" என்று கூறினார். அதைக்கேட்ட வர்த்தகன், "ஸ்திரீ புருஷர்களுடைய இளமை யென்னும் நந்தவனத்தில் உலாப்போதும் காமராஜனுக்கு என்மேல் கருணை உண்டாயிற்று". என்று மிகமகிழ்ந்து, கபீர்தாஸர் கோரின வஸ்துக்களை அபரிமிதமாய்க் கொடுத்தான். அவைகளைக் கபீர்தாஸர் வாங்கிக்கொண்டு வந்து, ஸாதுக்களுக்குக் குறைவற வழங்கி, விடைகொடுத் தனுப்பினர். அன்றிரவு, கபீர்தாஸர், வர்த்தகனுக்கு வாக்குத்தத்தம் செய்த விதத்தைத் தமது மனைவியோடு கூற, அக்கற்புக்கரசி, "உயிர்க்காதல! எனது உயிரும் உடலும் தேவரீருக்கு ஸ்வாதீனமாய் இருக்கிறபடியால், தேவரீர் மனம்போல என்னை, விநியோகிக்கலாம்" என்று விண்ணப்பித்து, கணவன் நியமனப்படி, தனது சரீரத்தை அலங்கரித்துக்கொண்டு புறப்பட்டாள். கபீர்தாஸர் மனைவியை அழைத்துக்கொண்டு வந்து, வர்த்தகன் வீட்டில்விட்டுப் போய்விட்டார். அப்போது, வர்த்தகன் அந்த மாதர்மணியை நோக்கிக் காமக்கனலால் தகிக்கப்பட்டவனாய், விளக்கில் விழும் விட்டில் போல, அம்மாதரசியின் சரீர ஸம்பந்தத்தை மனதில் எண்ணி மகிழ்ந்திருக்க, பக்தவத்ஸலனான ஸ்ரீபாண்டுரங்கன், ஆயுதபாணியாய், அவ்வூர்க் கொத்தவால் வேடந்தரித்து, வர்த்தகன் வீட்டில் நுழைந்து, "அடா, பாவி! துஷ்டா! பரம பாகவதரான கபீர்தாஸன் மனைவியும், பரம சாந்தகுண சீலியுமாகிய இந்த பதிவ்ரதா சிரோமணியை மாதாவாக மதியாமல், இவ்வுத்தமியின் சரீர ஸம்பந்த விருப்பங்கொண்டனையல்லவா! கடவுளுக்கர்ப்பணமாகும் பிரஸாதத்தை, நாய் தின்னவந்தபடி, நீ, இந்த புண்யவதியைத் தீண்டவிரும்பினை.

"பேதாய் பிழைசெய்தனை பேருலகின்
மாதா வனையாளை மனக்கொடுநீ
யாதாக நினைத்தனை யெண்ண மிலாய்
ஆதார நினக்கினி யாருளரோ" என்றபடி,

பெற்றதாய்க்குச் சமானமான இந்த பதிவிரதையை இச்சித்த நீ, என்ன கேடு கெடநினைந்தனை! உனக்கு ஆதாரமாயுள்ளவர்கள் அந்தம்மாளைத் தவிர வேறு யாவர்! இந்த வுத்தமியை தாயாக மதியாமல் தாரமாக எண்ணின உன்னை என்ன செய்யினும் தகும். இதோ, என் கையிலுள்ள இந்த உடைவாளால் வெட்டி விடுகிறேன். உன்னைச் சும்மா விடேன், பார் என்றான். அதைக்கேட்ட வர்த்தகனுக்குக் குடர் நடுங்

கிக் காமக்கனல் கப்பென் றவிந்தது. கொத்தவால் கூறிய பயவசனப் பெருமழை நீரால், வர்த்தகனுடைய காமக்கனல் அவிந்து, அவனுக்கு பயம் புகைந்து, குளிர்ந்து நடுக்க முண்டாகியது. வர்த்தகன் விரைந்தெழுந்து வந்து அக்கொத்தவால் பாதங்களில் வீழ்ந்து, அவைகளை விடாமற் பிடித்துக்கொண்டு, "கருணைக்கடலே! என்னை வெட்டற்க; காமவிருள் கண்களை மூடியபடியால் மருண்ட நான், தப்பு செய்தேன்; மன்னிக்கவேண்டும் என்று வேண்டினன். அதற்குப் பகவானாகிய கொத்தவால்,

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்" என்றபடி,

பொறுத்துக்கொண்டு, "இனி என்றென்றைக்கும் இப்படிப்பட்ட பாவகாரியத்தை, நினைக்கவும் கூடாது" என அவனுக்கு இதோபதேசம்செய்து, "இப்பதிவ்ரதைக்கு ஸாஷ்டாங்க வந்தனம் செய்து, இந்தம்மாளின் ஆசிர்வாதத்தைப் பெற்றுக்கொள்" என்றான். உடனே அவ்வர்த்தகன் அந்த வுத்தமியை மும்முறை வலம்வந்து, நிலத்திற் படிந்து தண்டாகாரமாய் வீழ்ந்து வணங்கினான். பிறகு, கொத்தவால் வேஷதாரியாகிய பகவான் அவ்வுத்தமியை அழைத்துக்கொண்டு வந்து, கபீர்தாஸர் வீட்டில் விட்டு, மறைந்துபோனான். அப்போது, கபீர்தாஸர், நடந்த விருத்தாந்தங்களைத் தமது மனைவியால் உணர்ந்து,

క్రోపమాహారయేత్తీవ్రం ॥

'கோபம் பொறுமைக்குப் பகை' என்றபடி,

கோபமேற் கொண்டவனாய், அதிவேகமாய்க் கொத்தவால் வீட்டுக்குப் போய், அவனைக் கடுஞ்சினமாய் நோக்கி, "பாகவதாராதனைக்காக, வர்த்தகனுக்கு நான் ஸம்மதித்து, எனது மனைவியை அனுப்பியிருக்க, நீ என், அழையாவீட்டுக்கு நுழையா ஸம்பந்தியாக வந்து அவ்வர்த்தகனைப் பயமுறுத்தினை! ஸ்திரீக்குப் புருஷன் யஜமானனாய், அவளை அவன் இஷ்டப்படி நடத்தலாம் எனப் பரமதர்மம் இருக்கின்றதல்லவா? அங்ஙனம் இருக்க, இவ்விஷயத்தில் பிரவேசித்துத் தடுக்க உனக்கென்ன ஸம்பந்தம் இருக்கின்றது? வர்த்தகனுடைய சயன அறையில் நுழைய உனக்கென்ன நியாயம் இருக்கின்றது?" எனக் கடுமொழி பகர்ந்தார். அதைக்கேட்ட கொத்தவால், பயந்து, இவர் பாததாமரைகளைப் பற்றிக்கொண்டு, "ஏ, ஸாதுஜன முதல்வ! நான் ஒன்றும் அறியேன்; நான் அவ்வர்த்தகனையாவது, உமது மனைவியாரையாவது கண்டறியேன்" எனப் பிரமாண பூர்வகமாய்ச் சொன்னான். அதற்குக் கபீர்தாஸர், ஆச்சரியப்பட்டு, "இது பகவானுடைய லீலாவைபவம்" என வுணர்ந்து, வர்த்தகன் வீட்டுக்குச் சென்று, "ஓ; தர்மாத்மா! உன்னை மருட்டினவன் இவ்வூர்க் கொத்தவால் அல்லன், அப்ரமேயனான பகவானே அவ்வுருவந்தாங்கி வந்து உனக்குத் தரிசனந் தந்தனன். உனது பாக்யமே, பாக்யம். கானல் நீரை உண்டு தாகந் தணியச் செல்லும் ஒருவனுக்கு, இடையில் அமுத ஸமுத்ரம் குறுக்கிட்டபடி, ஈனபுருஷார்த்தத்தை விரும்பிய உனக்கு, மஹா தவசிகளுக்கும் கிடைத்தற்கரியவனாகிய பகவான், பரம கிருபையால் காட்சி தந்தனன். உனது பாபங்கள் பறந்தன; அஞ்ஞானங்கள் இறந்தன; மெய்ஞ்ஞானங்கள் சிறந்தன; மோக்ஷ வழிகள் திறந்தன; உனது ஜன்மம் ஸாபல்யமடைந்தது. இனி ஒருகணமுந் தரியாது. பக்தவத்ஸலனை தியானித்துக்கொண்டு, அவனுடைய திருநாமங்களைப் புகழ்ந்துகொண்டு, சுகமடையக்கடவாய்" என்று கூறக்கேட்ட வர்த்தகன், கபீர்தாஸருடைய உபதேஸ ஞான சூரியப் பிரகாசத்தால், தனது அஞ்ஞான இருள் அகல மெய்ஞ்ஞானோதயம் பெற்று, அவரைத் தண்டாகாரமாய் வீழ்ந்து வணங்கி, "தேவரீருடைய ஸஹவாஸத்தால், பகவானுடைய தரிசனப் பிரஸாதம் எனக்குக் கிடைத்தது. ஆகையால், 'சான்றோரினத்திரு' என்றபடி, ஸாதுக்கள் கூட்டுறவு மோக்ஷபலனைக் கூட்டி வைக்கும் என்பதற்குச் சந்தேகம் இல்லை.



మహత్సేవాంద్వారమాహుర్విముక్తేః ॥

(என்றால்)

'பக்த தரிசனம் பண்ணினதுநமக்கு
நித்திய மோக்ஷ நெறி' என்று,

பகவானே சொல்லி யருளினன் அல்லவா! அது இப்போது அநுபவ ஸித்தமாயிருக்கின்றது. மாதாவென மதித்தற்குரிய தேவரீருடைய தர்மபத்னி விஷயத்தில் விபரீத எண்ணங்கொண்ட எனது பெரும்பிழையை மன்னித்து, என்னைச் சிஷ்யனாக அங்கீகரிக்கவேண்டும்" என்று வேண்டிக்கொண்டான். கபீர்தாஸர் அவனுக்கு அபயங்கொடுத்து, உனக்கு அநுதாபம் உண்டானபோதே, உனது பாவங்கள், நெருப்பிற்பட்ட பஞ்சுபோலச் சாம்பராய்ப் போய் விட்டன. இனிப் பகவதனுபவ மிக்கவனாய், இந்திரிய வசப்பட்டு இறப்பதற்கே காரணனாய் இல்லாமல், ஜாக்ரதையுள்ளவனாய், வாழ்வையேல் பாவங்கள் உன்னைச்சேரா" என இதோபதேசம் செய்து, தமதகம் சென்றார். அதுமுதல், அவ்வர்த்தகன், இடம், பொருள், ஏவல், பெண்டு பிள்ளைகள், பண்ட பதார்த்தங்கள், சுற்றம் முதலியவற்றை முற்றத் துறந்து, கபீர்தாஸர், விதித்த விதிப்படி நடந்து காலங்கழித்து வந்தான்.

தர்மஸேதவேநமः

## முப்பத்திரண்டாம் அத்தியாயம்

# ரோஹிதாஸர் சரித்திரம்

கங்கா நதிக்குத் தென்புறத்திலுள்ள ஒரு கிராமத்தில், சக்கிலியர் குலத்தில் ரோஹிதாஸர் என்னும் பாகவதர் ஒருவர் அவதரித்தனர்.

అమానిత్వవదంభిత్వ । మహింసాక్షాంతి రార్జవం ।
ఆచార్యోపాసనంశౌచం । స్థైర్యమాత్మవినిగ్రహః ॥
ఇంద్రియార్థేషువైరాగ్య । మనహంకారఏనచ ।
జన్మమృత్యుజరావ్యాధి । దుఃఖదోషానుదర్శనం ।
అసక్తిరనభిష్వంగః । పుత్రదారగృహాదిషు ।
నిత్యంచసమచిత్తత్వ । మిష్టానిష్టోపపత్తిషు ।
మయిచానన్యయోగేన । భక్తిరవ్యభిచారిణీ ।
వివిక్తదేశసేవిత్వమరతిర్జనసంసది । అధ్యాత్మజ్ఞాననిత్యత్వం ।
తత్వజ్ఞానార్థదర్శనం । ఏతజ్జ్ఞానమితిప్రోక్త ।
మజ్ఞానంయదతోన్యథా ॥

(என்றால்)

"கல்வி கற்று வல்லவன் என்றும்
செல்வ முற்றுத் திகழ்பவ னென்றும்
எண்ணு திருந்ததன் இறுமாப் பகற்றல்
இடம்ப வேடம் இல்லா திருத்தல்
கொல்லா விரதம் கொண்டு குவலயம்
எல்லாம் வாழ இனிது விளங்குதல்
மனமும் காயமும் வாக்கும் ஒருவழி
நிலையாய் நிற்க வுலையா திருத்தல்
ஆசா ரியனுக் கடங்கி நடத்தல்
தன்னிலை தன்னில் சலியா திருத்தல்
தன் மனந் தன்னைத் தானறப் பெறுதல்
ஐம்புல வழிகளின் ஆசை யறுத்தல்
அகங்கா ரத்தை அகழ்ந்தெறிந் தகற்றல்
பிறத்தல் இளமை இறத்தல் மூப்புடன்
இன்பம் துன்பம் இன்னுப் பிணிகள்
இவைகளின் தன்மைகள் இவையெனத் தேர்தல்
இகபர சுகத்துந் திச்சை யறுத்தல்
மனைவி மக்கள் மாடுடன் சுற்றம்
இவைகளா லெய்தும் இன்பதுன் பங்களில்
பொருந்தா திருந்து புகழுடன் வாழ்தல்
எண்ணி யெண்ணு தெய்தும் வினைகளில்
விருப்பு வெறுப்பற விளங்கி யிருத்தல்
வேறு சிந்தனை மேவா தென்வயின்
வாடா அன்பு கூடா நிற்றல்
ஏகாந் தத்தில் இன்பமாய் வாழ்தல்



ஜனங்க ளென்னும் இனங்களை வெறுத்தல்
ஊனமி லான்ம ஞானம் பெறுதல்
நித்திய சுத்த தத்துவ முணர்தல்
எனுமிவை மோக்ஷ மெய்து மார்க்கங்கள்
இவைக ளன்றிமற் றெல்லாம்
அஞ்ஞா னங்களென் றறையப் படுமே' (இதற்கு),

'கல்விச்செல்வம் பொருட் செல்வம் பெற்றதனால் கர்வ மடையாதிருத்தல், எவ்வுயிரையுங் கொல்லாதிருத்தல், மனம் வாக்கு காயம் இவை மூன்றும் ஒருவழிப்பட்டு நடத்தல், ஆசார்யனைப் பூசித்து நேசித்து அடங்கி வாழ்தல், தானிருக்கும் நிஷ்டை தவறாதிருத்தல், தன் மனத்தைத் தன் வசப்படுத்தி நிற்றல், பஞ்சேந்திரிய விஷயங்களில் ஆசையற்றிருத்தல், தான் என்னும் அகங்காரத்தை அகற்றல், பிறப்பு இறப்பு இளமை இன்பம் துன்பம் பிணி மூப்பு முதலியவைகளின் தன்மைகளைத் தேர்ந்து தெளிதல், இகபர சுகங்களில் இச்சையற்றிருத்தல், மனைவி மக்கள் மாடு சுற்றம் முதலியவைகளின் சேர்க்கையாலெய்தும் இன்ப துன்பங்களில் ஈடுபடாதிருத்தல், நினைத்தும் நினையாதும் வருவனவாகிய காரியங்களுக்கு விருப்பு வெறுப்பற்று விளங்குதல், வேறு சிந்தனை அற்று, என்னிடத்தில் (கண்ணனிடத்தில்) வாடாத அன்புகூடி வாழ்தல், ஒன்றியாய் இருந்து காலங்கழித்தல், ஜனக்கூட்டத்தை வெறுத்தல், ஆத்மவிசாரணையால் ஞானமடைதல், தத்வவிசாரணையால் சகலமும் அறிதல் என்னும் இவைகளே ஞானமார்க்கங்களென்றும், மற்றவை அஞ்ஞான மார்க்கங்களென்றும் சொல்லப்படும்' என்பது பொருள். இது, பகவானால் கூறப்பட்டது. இதுபோலவே ரோஹிதாஸர் பலவித ஆத்ம குணங்களோடு கூடி வாழ்ந்தார். இத்தகைய நற்குணச் செல்வ மலிந்த அவ்வுத்தமர், தமது குலத்தொழிலில், பிரவேசித்தவுடனே, தினந்தோறும் ஒரு ஜதை பாதரக்ஷை தைத்து, தர்மத்துக்கென்று பத்திரப்படுத்திவைத்து, தமது கண்ணுக்குத்தோன்றிய பகவத் பக்தர்களிடத்திற்குத் தாமே வலியச்சென்று, அவர்களை வந்தித்து நமஸ்காரம் செய்து, க்ஷேமலாபங்களை விசாரித்தறிந்து, பரமானந்தப்பட்டு, அவர்கள் பாதங்களுக்குப் பாதரக்ஷைகளை ஸமர்ப்பித்து மகிழ்வாராயினர். தீர்த்த யாத்திரைக்காரர்களுக்கும், ஏழைகளுக்கும், கூலியை விரும்பாமல், பழுதான ஜோடுகளைச் சரிப்படுத்திக் கொடுப்பார். ஸதா பகவத் தியான கீர்த்தனங்களைப் பாடிக்கொண்டிருப்பார்.

இந்த பாகவத முதல்வராகிய புண்ய புருஷர், தமது வீட்டுக்கு ஸமீபத்தில், ஒரு நந்தவனம் உண்டாக்கி, அதனில், துளசிமுதலிய பகவதாராதனைக்குகந்த புஷ்பஜாதிச் செடிகளை வைத்துக் காப்பாற்றிப் பிரதி தினமும் ஸ்ரீமந் நாராயணனைப் பூசிக்கவேண்டுமென்று மிகவும் விருப்புற்றிருக்கையில், தீனதயாளனான பகவான், ஸாலக்ராமமூர்த்தியாய் இவர்க்குச் சேவை தந்தார். ரோஹிதாஸர், பரம யோகியர்களுக்கும் வாக்கு மனதுக் கெட்டாதவனாகிய பகவான், தமக்குக் காட்சிதந்த

தற்குப் பரமானந்த மடைந்து, அன்பர்க் கிரங்கியருளும் அவனுடைய கலியாண குண கணங்களைப் பலவிதமாய்ப் புகழ்ந்து, பூசைக்குவேண்டிய கருவிகளாம் பஞ்ச பாத்திரங்கள் முதலியவற்றைத் தோலாலேயே தைத்து அமைத்துக்கொண்டு, நந்தவனத்திற் குந்தியிருந்து பூசிக்கத் தொடங்கினவுடனே, பசி மிகவும் வருத்தியது. அப்போது, அவர், தமது மனத்தகத்தில் பின் வருகிறபடி விதர்க்கஞ் செய்யலானார்.

பகவானை ஆராதிப்பவர்கள் வைகறையில் ஸ்நானம் செய்து, அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, பகவதாராதனை முடிந்த பிறகு, அவர்க்கு நிவேதித்த அன்ன சேஷத்தை உட்கொள்ளவேண்டுமென்று சாஸ்திரவிதி ஏற்பட்டிருக்கின்றது. நான் சிறுபோதுமுதல், விடியற் காலையிலுண்ணும் வழக்கத்தை விடாமல் இருக்கின்றேன். ஆகையால் இப்போது, பசி என்னை வருத்துகின்றது. அப்படிப்பட்ட துன்பத்தோடு பகவானை ஆராதிப்பது, சாம்பரிற் கொட்டிய நெய்போலாகும்; கமரிற் கவிழ்த்த பால்போலாகும். பசிப்பிணியின் வேதனையால், பகவதாராதனையில், பகவானுக்குச் செய்யவேண்டிய உபசாரங்களைச் சுருக்கி அவசரமாய்ச் செய்தாலும் அநுசிதம். பகவான் மனச் சுத்தத்தில் மகிழ்வதுபோலக் காய சுத்தத்தில் மகிழமாட்டான். ஆகையால், விடியற் காலையில் க்ஷுத்பாதைக்குப் பரிகாரந் தேடிக்கொண்டு, பிறகு, மனம் வாக்கு காயங்களென்னும் முக்கரணங்களையும் ஐக்யப்படுத்திக் கொண்டு, அசையாப் பக்தியுடன், ஸாவகாசமாய்ப் பகவானை ஆராதித்தல் யுக்தமென்று தோன்றுகிறது'' என்பதேயாம். இந்தத் தீர்மானத்தின்படியே, அவர் நாள்தோறும் வைகறையில்,

'திருமாலுக் கடிமைசெய்' என்றபடியும்,
ఉత్తిష్ఠ చింతయహరిం ॥

'கண்ண னடியிணை கருத்தி லிருத்தப்
பண்ண வினைகள் பறந்தோ டும்மே' என்றபடியும்,

ஹரித்யானத்துடன் நித்திரைவிட்டெழுந்து, தாம் அந்த ஹரியின் வேறுகாத்தன்மையை நினைந்து, கொஞ்சநேரம் இருந்து, பிறகு, பகவந்நாம தியானத்துடன் ஸ்நானஞ்செய்து, வைஷ்ணவசின்னமாகிய ஊர்த்வ புண்டரந் தரித்து, பகவானுக்கு நிவேதித்த அன்னத்தால் க்ஷுத்பாதை கழித்துக்கொண்டு, மறுபடியும் ஸ்நானஞ் செய்து, ஸாவதானமாய், பகவதாராதனைசெய்ய ஆரம்பித்து, தோற்பீடத்திலமர்ந்து, தோற்பெட்டகத்தி லிருக்கும் ஸாலக்ராம மூர்த்தியாகிய பகவானை தோற்பீடத்தி லெழுந்தருளச்செய்து, தோல்மயமாகிய பூஜா பாத்ரங்களையும், துளசியையும், பலவித பரிமள பத்ர புஷ்பங்களையும் பகவத் ஸந்நிதியில் வைத்து, பலவித சைத்யோபசாரங்கள் செய்து, இடைக்கிடை தியானபராய்த் தம்மை மறந்து அவசமாய், பகவந்நாமங்களை உரத்து உச்சரித்து நிருத்தஞ்செய்து, தொன்று தொட்டுத் தமதாத்மா, பகவானை மறந்து இந்திரிய வசப்பட்டு, பிறரை வருத்துதல்,



பிறன்மனை புகுதல், பிறன்பொருள் வெளவல், தீயவழியிற் றிரவியந் தேடல், தின்னத்தகாததைத் தின்னல், குடிக்கத் தகாததைக் குடித்தல் முதலிய துர்க்கிருத்தியங்களில் முதிர்ந்து, பல கருவுகளில் உருவாகிப் பிறந்ததனால், தாமடைந்த துர்த்தசையை எண்ணி வருந்தி, நிலமேல் வீழ்ந்து, புரண்டு அழுது, "இந்தப் பிறப்பில், பகவான், ஒன்றுக்கும் பற்றாத சிறியேனாகிய எனக்கு, குருத்துக் குழந்தையின் பசியறிந்து பாலூட்டும் அன்னையென, என்னை, ஒருகாரணமின்றி, மார்ஜால ஸம்பந்தமாக வலிபவந்து தடுத்தாட்கொண்ட பரமகிருபையை என்னவெனப் புகழ்வேன்! தீனதயாளனாகிய பகவான், எனக் கருளிய பகவத் பாகவத குணாநுபவ வல்லமையை என்னவென வியப்பேன்!" என எண்ணி, பரமானந்த மிக்கவராய், குதித்துக் களித்துக் கொஞ்ச தூரம் ஓடி ஆடித் திரும்பிவந்திருந்து, எழுந்து கூத்தாடிச் சிரித்து, அழுது தொழுது, இங்ஙனம் ஒரொழுங்கின்றித் தம் மனம் போனவாறு பகவதநுபவத்தில் நுழைந்து விளங்கினார். பக்திவலையிற் படுபவனாகிய பகவான், ரோஹிதாஸருடைய பக்திக்கு உவந்து, அவரைப் பின்பற்றித் திரிவானாயினான்.

இங்ஙனம் சிலகாலம் சென்றபிறகு, ஒருநாள், அவ்வூர்ப் புரோகிதன், தைவவசமாய், ரோஹிதாஸருடைய நந்தவனத்தருகில் வந்து, பகவதாராதனை செய்துகொண்டிருந்த ரோகிதாஸரை அழைக்க, அவர் விரைந்து வந்து, அவனுக்கு நமஸ்காரம் செய்தார். அவன், அவரை நோக்கி, "நீ, துளசிவனப் பிரதிஷ்டைசெய்து போஷிக்கத்தகுமா?" என்று கேட்டான். அதற்கு அவர், "உலகத்தில், நந்தவனம் உண்டாக்கிக் காக்க, ஜாதிநியமம் உண்டா? பஞ்சமர் பயிரிட்ட பதார்த்தங்கள் பிராமணர்களுக்கும் பயன்படவில்லையா? பறையன் எடுத்த கிணற்றில், பிராமணர்களும் தண்ணீர் குடிக்கவில்லையா?" என்றார். அதுகேட்ட வேதியன், "நீ அந்த நந்தவனத்தில் என்ன காரியஞ் செய்கின்றனை?" என்று கேட்டு, அவர் செய்துவரும் பகவதாராதனையின் ஒழுங்கை, அவர் விளம்ப வுணர்ந்து, கைகொட்டிச் சிரித்து, "பளா, பளா! நன்றாயிருக்கின்றது! இப்படியல்லவோ இருக்கவேண்டும் ஆராதனை! பகவதாராதனை யென்றால், இதற்கல்லவோ தகும்! கோவிலில் நடக்கும் ஆராதனை இதற்குமுன் நிற்குமா! ஓடாதா! சக்கிலியாகிய நீ, ஸாலக்ராம மூர்த்தியைத் தீண்டி ஆராதிக்கத் தகுமா! பகவதாராதனைக்கு நேர்விரோதமாகிய தோற்பாத்திரங்கள் உபயோகிக்கலாமா? பொன் பாத்திரம், வெள்ளிப்பாத்திரம், செப்புப்பாத்திரமே விதிப்படி ஆராதனைக்குத் தக்கவையல்லவா? வயிறார உண்டு பசியாறின பிறகா, லோகநாதனை ஆராதிக்கின்றனை? சோற்று மயக்கத்தால் மனமயக்கம் உண்டாகாதா? அங்ஙனம் உண்டானால் தமோகுண சேஷ்டைமிகுந்து நமோ நாராயணா என்பதைக் கெடுக்காதா?" என்று குற்றங் கூறினான். அதற்கு ரோஹிதாஸர், மிகவும் வணக்கமாய்க் கைகட்டி நின்று, "நான், கண்டகி நதிக்குப்போய், ஸாலக்ராமத்தைக் கொண்டுவந்தேன் அல்லன்; பிராமணர்களில் ஒருவரும் அதனை எனக்கு

வழங்கினர் அல்லர். ஸ்ரீபண்டரிநாதன், என்மேல் வைத்த கிருபையால், தானே ஒரு ஸாலக்ராம மூர்த்தியாகி, நான் வசிக்குமிடத்தில் எழுந்தருளிவந்து எனக்குக் காட்சி அளித்து, என்து பூசைக்கு ஆசைவைத்து, அதனைத் தனது மனமார அங்கீகாரஞ் செய்தருள்கின்றான். தாமே தோன்றியும், தேவர்களால் உண்டாக்கப்பட்டும், முனிவர்களால் ஏற்படுத்தப்பட்டும், மனிதர்களால் ஸ்தாபிக்கப்பட்டும் இவ்வுலகிலுள்ள திருக்கோயில்கள் பலவற்றில், எந்தத் திருக்கோயிலிலேனும், பகவானைப் பல குலத்தினரும், தொட்டுத் தழுவிப் பூசிக்கும் வழக்கம் உண்டா? புண்டரீக வரதன் மாத்திரம், தனது இச்சையின்படி, அடியார்க்கெளியனாய், ஸ்ரீபண்டரி புரத்தில், ஸர்வ குலத்தினரும், தன்னைத் தழுவிக் கொள்ளவும், ஆராதிக்கவும் திருவுள மகிழ்ந்திருக்கும் காரணம் என்ன? சண்டாள குலத்தில் உற்பவித்த சோக்காமேளருடைய அன்பில் மயங்கின பண்டரிநாதன், அவர் வீட்டுக்குத் தானே வலியச் சென்று, அவரோடு ஒரே கலத்தில் புசித்து, அவர் கையைத் தொட்டு அழைத்துக் கொண்டு கோவிலுக்குள்ளேபோன விஷயம் யாரும் அறியாததா? அது ஜகத் பிரசித்தம் அல்லவா? பகவான், நாமதேவருடைய எச்சிலை உண்டதும், ஜநாபாயோடு, ஒரே பரிகலத்தில் புசித்ததும், அந்தம்மாள் செய்திருக்கவேண்டிய வீட்டு வேலைகளைத் தானே கஷ்டப்பட்டு செய்ததும் பரம ரகஸியங்களல்லவே? அப்பேர்ப்பட்ட தீனதயாளனாகிய உத்தவநண்பன், பக்தர்களுடைய சித்த சுத்தத்தை நோக்கி மகிழ்வானே அன்றி, ஜாதி சுத்தத்தை மதிக்கமாட்டான் என்பது திண்ணம். அந்த பக்தவத்ஸலனுடைய திருவிளையாடல்களுக்கு ஆனந்தப்படவேண்டுமேயன்றி அருவருப்படைதல் நம்போலியர்க்குத் தருமமன்று. எல்லாப் பொருள்களும் தோல்களால் மூடப்பட்டிருக்கின்றன. எல்லா ஆத்மாக்களுடைய சரீரங்களும் தோற்பைகளாகவே யிருக்கின்றன. மல மூத்ராதி இழிந்த பதார்த்தங்களோடு கூடியுள்ள சரீரத்திலுள்ள தோலைவிட, அப்படிப்பட்ட சரீர சம்பந்தம் அற்று, பரிசுத்தமுற்றிருக்கிற தோல், சிறந்ததல்லவா? சவரி எச்சிலை நுகர்ந்தவனுக்குச் சர்ம பாத்திரம் தாழ்ந்ததாகாது.

భక్త్యైరణ్వప్యుపానీతం । ప్రేమ్ణాభూర్యేవమేభవేత్ ।
భూర్యప్యభక్తోపహృతం । నమేతోషాయకల్పతే ॥

'அன்பன் அளித்தால் அணுவெனக்கு மேருவாம்.
அன்பிலான் மேரு வளித்தாலும்—இன்பமற்று
நானதனை வேண்டி நயவேன் அணுவினுக்கும்
ஈனமென எண்ணிவிடு வேன்' (இதற்கு),

'எனது பக்தன் எனக்கு அணுவைக்கொடுத்தாலும், நான் அதனை மேருவாக மதித்து, ஆனந்தமா யங்கீகரிப்பேன்; அன்பிலான் மேருவைக் கொடுத்தாலும் அதனில் இன்பற்று, அதை ஒரணுவாகவும் மதியாமல் விட்டுவிடுவேன்' என்பது பொருள். இது பகவான் தானே சொல்லியருளியது. இதை நீர் அறியீரா? இத்தகையவிதிகளை நம்போலியர் அறிந்திருந்தும், நீர் என் இங்ஙனம் வாக்களிக்கின்றீர்? உண்டபின், பகவதாராதனை செய்தல் உசிதமல்லவென உரைத்தீர்களன்றோ? பகவானுக்குச் சித்த சுத்தியே முக்யமன்றிச் சரீரசுத்தி முக்யமன்று.



'காலையினு மாலையினுங் காகங் குளித்துவஞ்ச
வேலையிலே தேர்ந்து விளங்குதல்போல்—நீல
மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்' என்று,

'திருவள்ளுவ நீதிவெண்பா' கூறுகிறபடி, காகங்களும் தினம் இருமுறை குளிக்கின்றன. அந்தக் காகங்களுடைய சித்த சுத்தி, நீர் அறியாததல்ல. பெண்களையுங் குழந்தைகளையும் ஏமாற்றுவதில், அது மிகவும் தேர்ந்திருக்கின்றது. அதுபோலவே, மனிதர்களுக்குள்ளும் சிலர் உளர். அவர்கள் தினம் இருமுறையல்ல, மும்முறை, நான்முறை வேண்டுமானாலுங்குளித்துச் சரீரசுத்தஞ் செய்துகொள்வார்கள்; தோய்த்துலர்ந்த மடிவேட்டிக்கட்டி கஷ்டப்பட்டுழைக்க வறியாது தரித்திரமிகுந்து, பாமரர்களையும், பாவையரையும், பாலரையும் ஏமாற்றித் திரிந்து வெளிவேஷதாரிகளாய் வாழ்வார்கள். அவர்களுக்குத் தான், ஆசாரக் கள்ளர்களென்று பெயர். அவர்கள் பட்டை பட்டையாய் ஊர்த்வ புண்டரச் சின்னத்தையேனும், திருநீற்றுக் குழையல் அல்லது உத்தூளன அடையாளங்களையேனும் வெளிக்குக்காட்டி, பூங்காவி ஏறின ஆடையணிந்து, ஹரிஹரி, ஹரஹரவென வாயால் மட்டும் உச்சரித்து, மனம் வேறு, சொல் வேறு, மன்னு தொழில் வேறாய், நண்பர், சுற்றத்தாரில் மிக நெருங்கினவரெவரேனும், தமக்குச் சமீபத்தில் வந்தால் அவர்களைத் தீண்டாமல், விலகி தாங்கள் மிகு பரிசுத்தவான்களாக நடிக்கின்றார்கள்.

'அறுவர் கள்ளர் அவராரென்னில்
வழிமறித் தடிக்குங் கொழுந்தொழிற் கள்ளர்
அழுதிடுங் கள்ளர் தொழுதிடுங் கள்ளர்
கும்பிடுங் கள்ளர் குழைத்திடுங் கள்ளர்
வீணாசாரம் விளங்கிடுங் கள்ளர்
இந்தக் கள்ளர் இயற்கைகள்
அனைவரும் அறிவர் அதிசய மின்றே' என்றபடி,

வெளிவேஷக் கள்ளர்கள் தன்மைகளை அறியாதார் யாவர்? ஆயினும், அவர்களைப்பற்றி இங்கே சிறிது விவகரிக்கின்றேன். வெளிவேஷக் கள்ளர்கள் அறுவகைப் படுவார்கள். அவர்களில் முதன்மையாவார், அனைவரும் அறிந்த வழிமறிக் கள்ளர்களேயாம்; இரண்டாவது வகுப்பினர், வார்த்தை வார்த்தைக்கு அழுதுகொண்டே பேசுங் கள்ளர்; மூன்றாவது வகுப்பினர், வீணாகவே கும்பிடுபோடுங் கள்ளர்; நான்காவது வகுப்பினர், கோயிலுக்குப்போய், ஊர்மெச்சக் கும்பிடுங் கள்ளர், ஐந்தாவது வகுப்பினர், திருமண் அல்லது திருநீற்றைக்

குழைத்திட்டு வெளிவேஷம்போடுங் கள்ளர்; ஆறாவது வகுப்பினர், வீண்மடி ஆசாரக் கள்ளர். முதல் வகுப்பினராகிய வழிமறிக் கள்ளர்கள் உலகெங்கும் பரவியிருக்கின்றார்கள்; இவர்களை அரசன் தண்டித்து வருகின்றான். இரண்டாம் வகுப்பினராகிய அழுங் கள்ளர்கள், 'அழுகிற ஆண்பிள்ளையை நம்பக்கூடாது' என்றபடி பல குடும்பத்திலும் அங்கங்கே தோன்றியிருக்கின்றார்கள். இவர்களுக்குத் தண்டனை அந்தந்தக் குடும்பத்திலேயே ஏற்பட்டிருக்கின்றது. இவர்களுக்குக் கடவுள் தண்டனையும் காத்துக்கொண்டிருக்கின்றது. மூன்றாம் வகுப்பினராகிய தொழுதிடுங் கள்ளர், உலகெங்கும் பல இடங்களிலும் நிரம்பி இருக்கின்றார்கள். இவர்கள், தங்கள் காரியம் நிறைவேற வேண்டி, "காரியம் ஆகுமட்டும் கழுதையையுங் காலைப்பிடி", என்றபடி தங்கள் காரியத்தைப்பற்றி வீண் கும்பிடு போடுவார்கள். மனத்தகத்தில் கொஞ்சமேனும் பசையற்றிருப்பார்கள். தங்கள் காரியம் நிறைவேறின பிறகு, 'காரியமாகுமட்டும் காலைப்பிடி, காரியமான பிறகு குடுமியைப் பிடி' என்றபடி முந்திக் கும்பிட்டவர்கள், பிறகு வம்பிட்டு வாழ்வார்கள்; நன்றியைக் கொன்றுதின்னும் நாசகாலர்கள் இவர்களே ஆவார்கள். நான்காம் வகுப்பினராகிய கும்பிடுங் கள்ளர் அங்கங்கே தேவாலயங்கள்தோறும் விளங்குகின்றார்கள். இவர்கள் ஏதாவதொரு காரியத்தை முன்னிட்டுக்கொண்டு பகவதாராதனை செய்யும் அஞ்ஞானிகளாவார்கள். நிஷ்காமியமாய்க் கடவுளை வணங்க அறியாத அஞ்ஞானிகள் இவர்களே ஆவார்கள். இவர்கள் உலக முழுவதும் நிரம்பியிருக்கின்றார்கள். இவர்களில் அநேகர் மனத்தகத் தழுக்கறுக்க வகையறியாதவர்களாகி, பிறருடைய பெருஞ் சுட்டை விரும்பிப் பலபேர் நடக்கும் வீதிகளில் கடவுட் சந்நிதிக்கெதிரில் நின்று; தோப்பண முதலிய போட்டுக் கூத்தாடிக் குதிப்பார்கள். மனத்தகத்தில் கொஞ்சமேனும் கடவுட்பத்தியும் ஞானமும் இல்லாத இவர்கள், எந்தக் காலத்திலும் ஈடேறமாட்டார்கள். ஆறாம் வகுப்பினராகிய ஆசாரக் கள்ளர்களும் உலகத்திற் பல இடங்களிலும் பல்கி நிறைந்து விளங்குகின்றார்கள். இவர்களைப்பற்றி முந்தியே பிரஸ்தாபித்திருக்கின்றேன். இவர்களுக்கெல்லாம், அகப்பட்டால் அரசதண்டனையும், அகப்படாவிட்டால் கடவுள் தண்டனையும் காத்துக்கொண்டிருக்கின்றன. அங்ஙனம் இருந்தும் அவர்கள் உலகில் நிறைந்து விளங்குகின்றார்கள். அப்படி அவர்களிருந்து வாழ்வது, அவர்களுடைய ஊழ்வினையின் வலியேயாகும். இஃதன்றி இன்னும் அநேகர் பகவதாராதனை செய்கிற காலத்தில் மனம்வேறு சொல்வேறு மன்னுதொழில் வேறாய் விளங்குகிறார்கள். கோயிலுக்குள் பாதரக்ஷையோடு போகப்படாது என்ற ஏற்பாடிருப்பதால், பாதரக்ஷையை வெளியில் விட்டு உள்ளே நுழைந்து, மனமெல்லாம் செருப்புமேலேயும் சொல்லெல்லாம் தோத்திரத்தினுள்ளேயும், உடலெல்லாம் கடவுள் எதிரிலேயுமாய் நின்று பகவதாராதனை செய்பவர்; பல்லாயிரம்பேர் போலிப்பக்தர்கள் உளர்.



அவர்களைப்போல நானும், என் மனமெல்லாம் சோற்றின்மேலே நிற்க, உடலெல்லாம் கடவுள் ஆராதனை செய்வது அபசாரமாகுமன்றி யுபசாரமாகாது. ஆகையால் பசி வசப்பட்டவனாகிய நான், குக்ஷிபாதை கழித்துப் பிறகு மனம் வாக்கு காயங்களாகிய முக்கரணங்களையும் ஐக்யப்படுத்திக்கொண்டு, பகவானை ஆராதிக்கின்றேன். இது மிகவும் உசிதமென்று என் புத்திக்குத் தோற்றுகின்றது" என்றுபலவித ஞாயங்களால் விளங்க வுரைத்தார். அதுகேட்ட பிராமணன், கோபமிகுந்தவனாய்த் தன்னை மறந்து, கண்கள் செவந்து, ரோஹிதாஸரை நோக்கி, "வாயால் வதறிவம்பளக்கு மூர்க்கா! சுத்தமாகிய ஸால்க்ராமத்தைப் பிராமணர் தவிர மற்றவர் தொடவுந் தகுமா! உன்னுசாரங்களெல்லாம், அநாசாரங்களாய் இருக்கின்றன. நீசனாகிய நீ, எல்லாம் உணர்ந்த ஈசனேபோல, எனக்கு ஞானோபதேசஞ் செய்கின்றனை" என்று வெறுத் துரைத்தான்.

"கூடுகட்டி வாழ்ந்த குருவிகூன் மந்திக்கு
வீடுகட்ட புத்தி விளம்பியதாற்—கேடுகெட்ட
தங்கணத்துள் உக்க அமுதற்றால் தங்கணத்த
ரல்லார்முற் கோட்டி கொளல்" என்று,

'திருவள்ளுவ நீதிவெண்பாவிற்' கூறியபடி, ஒருவன் தனது இனமறிந்து ஞானோபதேசம் செய்யாவிட்டால், கூடுகட்டிக்கொண்டு மழைக்குச் சௌக்கியமாய் மரத்தின்மேல் வாழ்ந்திருந்த குருவியானது, அந்த மரத்தடியில் மழையில் நனைந்து குளிரால் அவஸ்தைப்பட்டுப் பல்லிளித்து, விடவிடவென்று உதறி, நடுங்கிக்கொண்டிருந்த கூன்குரங்குக்கு, "வீடு கட்டிக்கொள்ளக் கூடாதா! உன் கால்களும் கைகளும் வாலும் நீளமாயிருக்கின்றனவே? அவைகளிற் குறைவுற்ற அற்ப பிராணியாகிய நானன்றோ ஒரு சிறு குடிசை கட்டிக்கொண்டு மழையில் நனையாமல் சௌக்கியமாயிருக்கின்றேன்" என்று புத்தி கூறினபோது, குரங்கு, "அடே அடே! ஊசி மூஞ்சி மூடா! போடா போ! நீயா எனக்குப் புத்தி சொல்கிறவன்" என்று தன்னைப்போலவே அந்தக் குருவியையும் வீடற்று அலையும்படி அந்த மரத்திலேறிக் குருவிக் கூண்டைக் கோலால் குலைப்பதுபோலத் தனது வாலாலும் காலாலும் குலைத்துப் பிய்த்தெறிந்தபடி, நஷ்டமும் கஷ்டமும் அநுபவிப்பான். இதுபோலவே ரோஹிதாஸரும் பிராமணன்செய்த அவமரியாதைக்கும் அவமானத்துக்கும் உட்பட்டுப் பகவானைத் தியானித்துக்கொண்டு மௌனமாயிருந்தார்.

உடனே, பகவானாகிய புண்டரீக வரதன், கருடவாகனாரூடனாய், அந்த பிராமணன் காண, ரோஹிதாஸர்க்குக் காட்சிதந்து, அவருடைய வந்தன வழிபாடுகளை அங்கீகரித்து, "ஓ வத்ஸா! நான் அனைவரையும் ஸமமாய்ப் பாவிக்கின்றேன். தனது ஐசுவரியத்தை யிழந்து; மறுபடியும் அதைப்பெற இச்சித்து வருந்துபவனும், புதிதாய் ஐச்வரியம் தேட

முயல்பவனும், சுத்தாத்ம ஞானுநுபவத்தை உணர விரும்புபவனும், பகவதநுபவத்தில் இரண்டறக்கலந்த ஞானியும் எனக்குப்பிரியமானவர்களாயிருக்கின்றார்கள். இந்த நால்வருக்குள்,

జ్ఞానీత్వాత్మైవమేమతం ॥

(என்றால்)

'பகவ தனுபவப் பரம ஞானியை
என்னுயிர் எனநான் எண்ணுகின் றேனே' (இதற்கு),

'பகவதநுபவத்தில் இச்சைவைத்த பரம ஞானியை என்னுயிரென நான் எண்ணுகின்றேன்' என்பது பொருள். அப்படிப்பட்ட பரம ஞானிகளில் நீயே முதன்மையானவன். ஆகையால், உனது கட்புலனுக் ககப்படாமலே, ஸதா உன்னைப் பின்பற்றித் திரிந்துகொண்டிருக்கின்றேன்'' எனக்கூறி, ரோஹிதாஸர் முகத்தில் பிரமஞானப் பிரகாசம் வீசச்செய்து மறைந்து போனான். இவைகளை யெல்லாங் கண்கொட்டாமற் பார்த்துக்கொண்டிருந்த புரோகிதனுக்கு,

'அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொல் நான்கும்
இழுக்கா வியன்ற தறம்' என்றபடி,

மறப்புத்தி மாறி, அறப்புத்தி அதிகரித்துப் பயபக்தியுடன் ரோஹிதாஸரை நோக்கி, ''உன்னை ஸாமாந்யனுக மதித்து, நான், எனது அறியாமையால் நிந்தித்துரைத்தேன். அங்ஙனஞ் செய்தது பிசகானுலும், புடத்தில் வைத்த பொன், மாற்றேறி உயர்வடைகிறபடியும், சாணையிற் கடைந்தெடுத்த மணி விலையேறுகிறபடியும், உனது பிரபாவம் உலகப் பிரஸித்திபெற்றது. பூவோடு கூடிய நாரும், மணம் பெறுவதுபோல, உனது ஸஹவாஸத்தால், பிரமாதியர்களுக்கும் காண்பதற்கு அரியனுகிய பாண்டுரங்கனுடைய சேவை, எனக்கு எளிதிற் கிடைத்தது. கஜேந்திர வரதனென்று ஸாதுக்களால் புகழப்படுகிற பகவான், இன்றைக்கு, ரோஹிதாஸ வரதன் எனப் பெயர்பெற்றான். இனி உனது பிரபாவத்தைப் புகழ்ந்து பேசுவோர்கட்கு, ஸ்ரீபண்டரி நாதனுடைய பரமகிருபா கடாக்ஷத்தால், பல வினைகள் மாறி, அஷ்டைஸ்வர்யங்கள் வீறும் என்பதற் கையமில்லை. இதற்கு இப்போது நானே நிதரிசனமாயிருக்கின்றேன். எங்ஙனமெனில், உனது பிரபாவத்தை அறியாது உன்னை நிந்தித்துரைத்த நான்,

'நல்லாரைக் காண்பதுவும் நன்றே' என்றபடி,

உன்னைத் தரிசித்து, உன்னோடு கூடி இருந்தபடியால், பாண்டுரங்க தரிசனம் கிடைத்தது. இப்போது எனது அஞ்ஞானம் நீங்கி மெய்ஞ்ஞானம் ஓங்கிவிளங்குகின்றேன். ஆகையால், உனது பிரபாவத்தை உணர்ந்து துதிப்பவர்களுக்குப் புண்டரிகவரதன் கடாக்ஷத்தால், பல வினைகள் வீடுவது விநோதமன்று. இன்று முதல் என்னை, உன்னுடைய வனுக எண்ணவேண்டும்'' என வேண்டிக்கொண்டு, அவருடைய உத்தரவு



பெற்று, தனது வீடு சேர்ந்து பரம சாந்த சீலனாய், ஈசுவர விபூதியாகிய ஸமஸ்த சேதனு சேதனங்களிடத்திலும் ஸமபாவனை பொருந்தி, பகவத் பக்தர்களுடைய ஜாதியை கவனித்து, அவர்களை அவமதிக்காமல் நன்கு மதித்து, அநவரத பகவத் தியானம் பண்ணிக்கொண்டிருந்தான்.

ஆச்ரிதவாத்ஸல்யைகநிதயேநமஃ

## முப்பத்துமூன்றும் அத்தியாயம்

# பீபாஜிராஜா சரித்திரம்

மங்களகட்டம் என்னும் கிராமத்தில், பீபாஜி என்னும் பெயருள்ள மஹாராஜா ஒருவர் இருந்தார். அவர்,

శౌర్యంతేజోధృతిర్దాక్ష్యం । యుద్ధేచాప్యపలాయనం ।
దానమీశ్వరభావశ్చ । క్షాత్రంకర్మస్వభావజం ॥

(என்றால்)

''வீரம் புகழஞ்சா மேன்மை யுடன்வன்மை
தீரம் செருவிற் சிதையாமை—வாரமுடன்
தானம் வழங்குந் தகையாண்மை மன்னவர்கட்
கான குணங்களிவை யாம்'' என்று,

பகவத்கீதையில் சொல்லி யிருக்கிறபடி, வீரம், புகழ், தைரியம், வல்லமை, சண்டையிற் சிதைந்து ஓடாமை, தானம், ஆள்வினை யுடைமை முதலான எல்லா நற்குணங்களும் பொருந்தி விளங்கினார். இவர், நாடோறும், காளியம்மையைப் பூசித்து, அத்தேவியார் திருவருளால், இம்மை யின்பங்களில் ஒன்றுங் குறைவற நிறைந்து வாழ்ந்தார். இவர் ஒவ்வொருநாளும் விடியற்காலையில் எழுந்து, ஸ்நான ஸந்தியாவந்தனாதி நித்யகர்மங்களை நிறைவேற்றி, சர்வோபசாரங்களுடன் காளிகா தேவியைப் பூசித்து மஹாநைவேத்யம் செய்கையில், அத்தேவியார் காட்சிதந்து, அந்த நைவேத்யத்தை உண்பது வழக்கம். பிறகு இவர், தேவியார்க்குத் தாம்பூலந் தந்து, பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து, தாமும் உண்பார். இங்ஙனம் இருக்க, ஒரு நாள்,

మహాంతస్తేసమచిత్తాః ప్రశాంతాఃవిమన్యవస్సుహృదస్సాధవోయే ॥

''ஈச்வர விபூதியென் றெண்ணப் படுஉம்
சேதனு சேதன பேத மகன்றோர்
சாந்த குணந்திகழ் சால்பின் மிக்கோர்
குரோதந் தன்னை விரோதமென் றொழித்தோர்
சர்வ பூத தயாவிற் சிறந்தோர்
மஹான்க ளென்று மதிக்கத்
தக்கவர் வேத சம்மத மிதுவே'' என்றபடி,

32

ஈச்வர விபூதியாகிய சேதனு சேதனங்களில் பொதுநோக்குடையவர்களும், ‘வேந்தரே குணசாந்தரே’ என்றபடி, சாந்தகுண மேன்மையுடையவர்களும், குரோதகுணத்தை ஒழிந்தவர்களும், ஸர்வ பூதங்களிடத்திலும் தயையுடையவர்களும், ஸாதுக்களுமாகிய சில மஹாத்மாக்கள் தீர்த்தயாத்திரை செய்துகொண்டு, இவ்வரசர்செய்த தவப்பயனென்ன இவருடைய பட்டணத்துக்கு எழுந்தருளினார்கள். இவர் புண்ணிய சிலர் ஆகையால் வந்த ஸாதுக்களுக்கு ஸர்வோபசாரங்கள் செய்து, ஆஹாராதிகளுக்கு வேண்டிய ஸமஸ்த பதார்த்தங்களையும் குறைவற வழங்கி, தமது வழக்கம்போலக் காளிகாதேவியைப் பூசிக்கப் புகுந்தார். மஹா நைவேத்ய காலத்தில், அதற்கு முந்திய நாட்களிற்போல, அத்தேவியார் பிரஸந்நமாகவேண்டியிருக்க, அங்ஙனம் செய்யாமல் தாழ்த்தபடியால், இவர், நனிவருந்தினவராய்,

‘வல்லமா காளியே வாதுமதி ருடியுடன்
வெல்லவே செய்த விமலியே-ஒல்லை
வருவாய் எனது மனக்கவலை நீங்கத்
தருவாய் உனதுதர் சனம்’ என்று,

பிரார்த்தித்தார். உடனே அத்தேவியார் காட்சிதந்து, “ஓ, அரச! உனது பட்டணத்தில் சில பரம ஸாதுக்கள் வந்திருக்கின்றார்கள். அவர்கள் உண்ணுமுன், நான் உண்பது தகாது; அவர்கள், பகவானுக்கு மிகவும் பிரியமானவர்கள்; அப்பேர்ப்பட்ட பரம பாகவதர்களுடைய தரிசனம் கிடைப்பது அருமையினும் அருமை. உனது நல்வினை முதிர்ச்சியாலே, அம்மஹான்கள், உனது பட்டணத்துக்கு வந்தார்கள். அவர்கள் ஆசையற்றவர்கள்; சோற்றாசையால் உன்னை நாடி வந்தவர்களல்லர்; உனது பூர்வ புண்ய விசேஷத்தால் அவர்களுடைய தரிசனாராதனைகள் உனக்குக் கிடைத்தன.

సంసారవిషవృక్షస్య । ద్వేఫలేహ్యమృతోపమే ।
కదాచిత్కేశవేభక్తిః । తద్భక్తైర్వాసమాగమం ॥

ஸம்ஸார நச்சுத் தருவிற் பழுக்கின்ற
ஹிம்ஸா ரஹித இருகனிகள் உள்ளனவாம்
தம்ஸாரங் கொண்டவவை தாமெவையென் றாலரியின்
அம்ஸா தனநளின அம்புயத்தாட் கன்புசெய்தல்
வம்சா வளியான் வரும்பக்தர்க் காட்படுதல்
நம்ஸா கரப்பிறப்பை ஞாலமிசைத் தீர்ப்பனவே’ என்றபடி,

ஓ, அரசனே! நிஸ்ஸாரமான ஸம்ஸார விஷவிருக்ஷத்தில் முளைத்து முற்றிப் பழுக்கக்கூடிய அமிர்தரஸக் கனிகள் இரண்டு உள. நமது பிறவிக்கடலை அடைக்க வல்லனவாகிய அவை, எவை என்னில், நமது மோக்ஷஸாதனமாயுள்ள அரியின் தாமரைப் பூந்தாள்களுக்குப் பக்தி செய்தல் ஒன்று; வாழையடி வாழையாக வரும் ஹரிபக்தர்கட்குத் தாஸனாகுதல் மற்றொன்று. இவ்விருபழங்களிலும் பின்னையது பெரியது.



உனது பாக்ய விசேஷத்தால் இன்று அக்கனி உனக்கு எளிதிற் கிடைத்தது. அது கிடைத்தபோது, மற்றக் கனிகளெல்லாம் உன் கையில் அடக்கம் என்பதிற் சந்தேகமில்லை. எங்ஙனமென்றால், வண்டானது, புழுவைத் தனதுருவாக்கும்வண்ணம், பரமஞானிகளான பாகவதர்கள், தம்மை அடுத்த மனிதனைத் தமது இதோபதேசத்தால், தங்களைப்போல உண்மைஞானியாக்குவார்கள். உண்மை ஞானிக்கு, உலகநாதன், உள்ளடங்கி வசப்பட்டிருப்பான். உலக நாதனே தன் வசப்பட்டிருக்கையில் உண்மை ஞானியாகிய பகவத் பக்தனுக்கு மோக்ஷம் உள்ளங்கையில் உள்ளதென உரைக்கவும் வேண்டுமோ? இதுவரையில், நீ என்னைப் பக்திசிரத்தையோடு ஆராதித்தனை; நானும், இவ்வுலக இன்பங்களை உனக்குப் பரிபூர்ணமாய்க் கொடுத்தேன். இனி, நீ, இவ்வின்பங்களில் ஆசையறுத்து, பரலோக இன்பங்களை அடைய முயற்சிசெய்; சரீரம் நீரிற் குமிழிபோன்றது,

‘குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு’ என்றபடி,

உடம்புக்கும் உயிருக்குமுள்ள சம்பந்தம், முட்டைக்கும், அந்த முட்டையிலுள்ள பக்ஷிக்குமுள்ள சம்பந்தம்போல நிலையற்றதாயிருக்கின்றது.

జాతస్యహిధ్రువోమృత్యుః

‘சாகாத இல்லை பிறந்த வுயிரெல்லாம்’ என்றபடியும்,

‘மலைமிசைத் தோன்றும் மதியம்போல் யானைத்
தலைமிசைத் தோன்றுங் குடையர்—நிலமிசைத்
துஞ்சினா ரென்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால்
எஞ்சினா ரிவ்வுலகி லில்’ என்றபடியும்,

பிறந்தவன் ஒவ்வொருவனும், இறந்தவன் ஆவான் என்பது திண்ணம்.

వాసాంసిజీర్ణానియథావిహాయ । నవానిగృహ్ణాతినరోపరాణి ।
తథాశరీరాణివిహాయజీర్ణా । న్యన్యానిసంయాతినవానిదేహీ ॥

‘தளர்ந்த சரீரத்தைத் தள்ளிவிட்டு நன்றாய்
வளர்ந்த சரீரத்தில் மன்னிக்—கிளர்ந்திருக்க
நத்துமிந்த ஆத்மா நலிந்ததனைத் தள்ளிவிட்டுப்
புத்தாடை பூண்பவனைப்போல்’ என்றபடி,

பழம் புடைவைகளைத்தள்ளிவிட்டுப் புதுப்புடவைகளைக் கட்டிக்கொள்ளுகிற மனிதனைப்போலவே இந்த ஆத்மாவும், மூத்துத் தளர்ந்த சரீரங்களை விட்டு, நன்றாய் வளர்ந்து, கைகால் முதலிய உறுப்புகள் கூடியுள்ள புதிய கருவுருவுகளில் நுழைந்துகொள்ளும். இப்படிப்பட்ட சரீரங்களில்,

దుర్లభో మానుషో దేహః ॥

'அரிதரிது மானிட ராதலரிது' என்றபடி,

மானிட சரீரம் கிடைப்பது அருமை. அங்ஙனம் அது கிடைப்பினும், அதனுள் ஆத்மா, ஞானவானாய் விளங்குவது அதனினும் அருமை. அங்ஙனம் அவன் ஞானவானாய் இருப்பினும்,

'கோடிய மனத்தாற் சினத்தொழில் புரிந்து
திரிந்துநா யினத்தொடுந் திளைத்திட்
டோடியு முழன்று முயிர்களே கொன்றேன்
உணர்விலே னாதலால் நமனார்
பாடியைப் பெரிதும் பரிசழித் திட்டேன்
பரமனே பாற்கடற் கிடந்தாய்
நாடிநான் வந்துன் திருவடி யடைந்தேன்
நைமிசா ரணியத்து ளெந்தாய்'

'முதுஉரு பற்றிக் கைத்தலத்தால் முன்னொரு கோளூன்றி
விதிர்வி திர்த்துக் கண்சு ழன்று மேற்கிளை கொண்டிருமி
இதுவென் னப்பர் மூத்த வாறென் றிளையவ ரேசாமுன்
மதுவுண் வண்டு பண்கள் பாடும் வதரி வணங்குதுமே' என்றபடி,

ஐம்புலத் தஞ்ஞான விஷயா தீதமாகிய பகவத்பக்தி வைராக்ய சீலனாய் வாழ்தல் அதனினும் அருமை. விஷயங்கள், விஷங்களைவிடக் கொடியவைகள்.

విషస్యవిషయాణాంచ । దూరమత్యంతరాంతరం ।
ఉపభుజ్యవిషంహంతి । విషయాస్స్మరణాదపి ॥

(என்றால்)

'விஷயங் களுக்கிந்த மேதினியிற் றீய
விஷங்களொப் பென்பது வீணாம்—விஷங்கள்
மடுத்தாரை யேகொல்லும் மன்னு புலன்கள்
அடுத்தாரைக் கொல்லும் அறிந்து' என்றபடி,

ஓ அரசனே! ஐம்புல விஷயங்களுக்கு விஷங்கள் ஒப்பென்பது பிசகு; விஷங்கள், தம்மை உண்டவரையே கொல்லும்; விஷயங்கள், தம்மைக் கண்டவரையும், காணாது நினைத்தவரையும் கொல்லவல்லன. ஆகையால் புத்திசாலிகள் விஷய விடாயினராய் இருக்கப்படாது.

యథాహిగ్రస్తమండూకో । దంశాన్భక్షితుమిచ్ఛతి ।
తథామృత్యువశోలోకో । భోగాన్భోక్తుమిహేచ్ఛతి ॥

(என்றால்)

'பாம்பின் வாய்த் தேரை தன் வாய்ப் பட்ட கொசு வைப்பற்றி
ஓம்பிப் புசிக்கும் உணர்ச்சி போல்—சாம்பிணங்கள்
ஆன உலகினர்கள் அந்தோ நமன்வசப்பட்
டின சுகமகிழ் வார் இங்கு' (இதற்கு),

பாம்பின் வாய்ப்பட்ட தவளையானது, தன் வாயிற்பட்ட கொசுவைப் பிடித்து விரும்பி உண்கின்ற சுக உணர்ச்சிபோல, இனிச் சாகும் பிணங்களான இவ்வுலகின் மாந்தர்கள், எமன் வசப்பட்டிருப்பதை யுணராமல், இவ்வுலகிலுள்ள ஈன சுகங்களை அநுபவித்து மகிழ்கின்றார்கள்; ஐயோ! அவர்கள் அஞ்ஞானம் இருக்கின்றவாறு இரங்கத் தக்கது' என்பது பொருள். இதன்படி, நீ, இருந்து விடலாமா? புத்திமான் அல்லையா? 'பறக்கிற பறவைக்கெது தூரம்' ? என்றபடி, புத்திமானாகிய உனக்கு எது அரிது?

'செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்' என்றபடி,

நீ, அவஸியம் செய்யவேண்டிய காரியங்களை அறிந்து செய்யவேண்டும்; செய்யத்தகாதவற்றை நீக்க வேண்டும். ஆகையால், எனது இதோபதேசங்களைக் கேட்டு, உனது உளத்தில் அமைத்துக் கொள்க. இக சுகமாகிய இவ்வுலகச் சிற்றின்பங்களை அற ஒழித்துவிடக்கடவை. இந்த சுகங்களைக்கொடுத்தவனும் நானே; இப்போது இவைகளை அனுபவிக்கத் தகாதெனத் தடுத்தவனும் நானே. ஆகையால், பரமபுருஷார்த்தமாகிய மோக்ஷ ஸித்தியின்பொருட்டு பகவத்பக்தி செய்யக்கடவை. ஜீவகோடிகளிடத்தில் மறைந்திருக்கிறவர்களும், அற்பசக்தி உடையவர்களுமாகிய என்னைப்போன்ற தேவதைகள், இக சுகங்களை வழங்கவல்லவர்களாவேயன்றி, மோக்ஷ சுகத்தை வழங்க வல்லவர்களல்லேம்.

ఆబ్రహ్మభువనాల్లోకాః । పునరావర్తినోర్జున ।
మాముపేత్యతుకౌంతేయ । పునర్జన్మనవిద్యతే ॥

''பிரமாண்டத் தின்கீழ்ப் பிரபஞ்ச மெல்லாம்
சரவசர ஜன்மந் தருமால்—வரம்வேண்டி
என்னை யடைந்தவர்கட் கென்றும் பிறவியிலை
மன்னுமிது கூறு மறை' என்று,

பிரமாண்டத்தின் கீழே உள்ள எல்லா உலகங்களும், அசைவன அசையாதனவாகிய வகைகளில் வந்து தோன்றும் பிறவிகளை உண்டாக்கிக் கொண்டே யிருக்கும். என்னை யடைந்தவர்களுக்கு மறு ஜன்மமே கிடையாது. இது வேதசம்மதம் என்று பகவான் பகவத்கீதையில் சொல்லியருளினன். ஆகையால், நீ, மறுஜன்மரஹித மோக்ஷபலங் கருதி, அந்தத் தேவதேவனை ஆராதிக்கக்கடவாய். அதற்குவேண்டிய சாதனங்களைக் கூறுகின்றேன்; ஞானவைராக்ய யுக்தர்களான பாகவதர்களை அடுத்துப் பக்திசெய்வையானால், அவர்கள், தமது இதோபதேசத்தால், உனது அஞ்ஞானத்தைத் தொலைத்து, உனக்கு நல்லாசார்ய ஸம்பந்தத்தை உண்டாக்குவார்கள். ஞாநநுஷ்டானபராகிய

அந்த நல்லாசார்யரை அடுத்துப் பக்தி செய்பவர்களுக்கு, பகவான், தானே மோக்ஷந் தருவான். உனது நன்மையை நாடி உண்மையைச் சொன்னேன். வைராக்யம் முதலிய உண்முக வேடதாரிகளாகிய பாகவதர்களுடைய தரிசனம் கிடைப்பது மிகவும் அருமை.

సుదూరమపిగంతవ్యం । యత్రభాగవతాస్థితాః ॥

'எத்தனை தான் தூரத் திருந்தாலும் பாகவதர்
அத்தனை தூரஞ்சென் றவர்க்கன்பு செயல் நன்றே' என்றபடி,

மெய்யன்பர்களாயுள்ள பாகவதர்கள் எத்தனை தூரத்தில் இருந்தாலும் அவர்களைத் தேடி அத்தனை தூரமும் சென்று, அவர்களை அடுத்துப் பக்தி செய்தல் உத்தமம். உனது அதிஷ்ட வசத்தால், எத்தனையோ பரம பாகவதர்கள், தம் இச்சையாகவே உனது பட்டணத்துக்கு வந்திருக்கின்றார்கள். இனித் தாழ்க்கவேண்டா.

శుభస్యశీఘ్రం ॥ 'தாழாதறஞ்செய்' என்றபடியும்

'நன்மை புரியாது நாளுலப்ப விட்டிருக்கும்
புன்மை பெரிது புறம்' என்றபடியும்,

சிறிதும் தாழ்க்காமல் அவர்களுடைய சந்நிதியிற் செல்லக்கடவாய்" என்று கூறியருளினார். அவைகளையெல்லாம் அசைவறவிருந்து, கருத்தாய்க் கேட்டுவந்த அரசராகிய பீபாஜிராஜா, ஸந்தோஷ சித்தம் உடையவராய்,காளிகாதேவிக்கு வந்தனம் செய்து,"தாயே! இத்தகைய அரிய பெரிய ஞானோபதேசம் பண்ணின நீ, எனக்குப் பிரதம குருவாயினை. இத்தனை நாட்களாக உனது திருவடிக் கமலங்களைப் பூசித்த விசேஷத்தால், எனக்கிந்த மஹாபாக்யோபதேச பலப்ரதானமாயிற்று. நான் மஹா பரிசுத்தனானேன். நீ, நியமித்தபடி செய்கின்றேன்" என்று விண்ணப்பித்து, அத்தேவியின் கட்டளையைப்பெற்று, உடனே புறப்பட்டு, பாகவதர்களுடைய சந்நிதிக்கு வந்து, தண்டாகாரமாய் வீழ்ந்து வணங்கி கைகட்டிப் பயபக்தி விசுவாஸத்தோடு நின்று, "பாகவத சிரோமணிகாள்! பகவானாகிய ஸ்ரீராமபத்ரன், சிருங்கிபேரபுரத்துக்குளெழுந்தருளி,குஹாழ்வானுக்கு ஸேவை தந்தருளியபடி, நான் கோராமலே,எனது புண்யவிசேஷத்தால் தேவரீர்கள் இப்பட்டணத்துக் கெழுந்தருளி அடியேனுக்குக் காட்சி அளித்தீர்கள். மஹான்களுடைய சேவை, பலன் தராமற் போகாது. நான் இதுவரையில், காளிகாதேவியைப் பூசித்து, அதனால் அடைந்த இக சுகப் பலன்களாகிய சிற்றின்பங்களைப் பேரின்பமாகிய மோக்ஷசுகமெனா றெண்ணியிருந்தேன். இன்று அத்தேவியே, தனது பரம கிருபையால், விரத்திமார்க்கத்தை எனக்குபதேசித்து, தேவரீர்களுடைய சந்நிதிக்கு அனுப்ப, அங்ஙனமே நானும் வந்திருக்கின்றேன். ஆகையால், எனக்குப் பகவத் ஸாக்ஷாத்காரம் கிடைக்கும்படி கிருபை செய்யவேண்டும். பெரியோர்களே!"



என்று விநயத்துடன் வேண்டிக்கொண்டார். அதற்கு ஸாதுக்கள் கருணையுடன், "ஓ அரசே! அன்பு, வணக்கம்,இணக்கம். அடக்கம் முதலிய நற்குணராசியனைய உனக்குக் காளிகாதேவியின் உபதேசத்தால் ஈச்வர விஷயத்தில் மனம் திரும்பியது. ஸம்ஸாரக் கட்டறுத்துக் காக்கவல்ல ஸ்ரீமந்நாராயணனை, எல்லாப்படியாலும் எண்ணின மாத்திரையிலேயே எல்லாப் பாவங்களும் இறந்துபட்டு, எல்லாச் சுபங்களும் எய்துவனவாம். ஆகையால், இடையறாமல் அந்த பகவானை நினைந்து நினைந்து மஹாத்மாக்கள் இன்புற்றுய்வார்கள். ஸர்வ பூதங்களுக்குள்ளும் நிறைந்து விளங்கும் நாராயணனிடத்தில், அன்பறாத புத்தியும் பத்தியும் உனக்கு உண்டாகக் கடவன. அந்த ஜகதீசற்கு விளையாட்டுக் கருவிகளாகிய சேதனராசியிடத்தில் உனக்கு சிநேகம் எய்துக. அதனால், மோகாதி ஸகலதுக்கங்களும் இறக்கும்; ஆதியாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிக மென்னும் மும்மைப் பெருந்துயரங்களால் உலகடங்கலும் துன்புறுகின்றபடியால், கருணைக்குரியனவாகிய பிராணிகளிடத்தில் புத்திமான் வெறுப்படையமாட்டான்; அங்ஙனம் அவன் வெறுத்தானேல் கெடுதியே ஸம்பவிக்கும். ஆகையால் பிராணிகள் விஷயத்தில், வெறுப்புறுவது பிசகு. சிலர், வீண் வெறுப்பால் விவேகியை நிந்தித்தார்களானால், அந்த விவேகி, "ஐயோ! இவர்களுடைய அஞ்ஞானங்கள் இருந்தவாறென்னே! இவர்கள் கரைசேர்வது எக்காலம்!" என்று அவர்கள் விஷயத்தில் இரங்கி வருந்தவேண்டும். "ஓ வேந்தே! இனி நீ, ஞானநுஷ்டான ஸம்பன்னரான ஸதாசார்யரை அடுத்தால், அவர், உனக்கு உத்தமஞானத் தலைவனது இலக்கணங்களை உபதேசித்து, உன்னை அன்னவற் கன்பனாக்குவார்.

ఉభాభ్యామేవపక్షాభ్యాం । యథాఖేపక్షిణాంగతిః ।
తథైవజ్ఞానకర్మభ్యాం । ప్రాప్యతేభగవాన్హరిః ॥

(என்றால்)

'ஆகாயத் திற்பறவை யஞ்சிறையி ரண்டாலே
வாகாய்ப் பறக்கின்ற வாறுசான்—யோகாதி
ஞானநுஷ்டானமெனு நற்சிறையி ரண்டாலே
ஆனா ஹரிபதஞ்சேர் வான்' என்றபடி,

ஆகாசத்திற் பறவையானது, இரண்டு சிறைகளால் ஒழுங்காய்ப் பறக்கின்றபடி, ஆசானானவன், யோகாதிகளால் எய்திய ஞானமும் அந்த ஞானத்திற்குகந்த அநுஷ்டானமும் ஆகிய இரண்டு சிறைகளால், நித்தியமாய் விளங்கும் பகவானை அடைவான். இத்தகைய ஸதாசார்யன் கிடைப்பது அருமை. தற்காலம், ஸ்ரீ காசியம்பதியில் ஸ்ரீராமானந்த ஸ்வாமிகள் என்னும் யதீச்வரர், ஆசார்ய லக்ஷணம் நிறைந்து விளங்குகின்றார். பாகவத முதல்வராகிய கபீர்தாஸர் முதலான பிரமரங்கள், அந்த குருமூர்த்தியின் பாதகமலங்களைச்சூழ்ந்து ஸ்ரீராம நாம தாரகமந்த்ர ரீங்காரம்செய்துகொண்டு வாழ்கின்றன. நீயும் அந்த

குருமணியை யடுத்து, அதனுடைய உபதேசப் பிரகாசம் உன்மேல் வீசப்பெறுவையேல், உன்னைப்பற்றியுள்ள அஞ்ஞான இருள் இரிந்து, பகவத் ஸாக்ஷாத்காரம் கிடைக்கும். உனக்கு நன்மை யுண்டாகக் கடவது'' என்று அவரை வாழ்த்தி அநுக்ரகஞ்செய்து அனுப்பிவிட்டுத் தங்கள் வழியே சென்றார்கள்.

உடனே அவ்வரசர், ஸர்வஸங்க பரித்யாகம் செய்துகொண்டு, தமது மனைவியும் தாமுமாகப் புறப்பட்டு, காசிக்குப்போய், ஸ்ரீராமாநந்த ஸ்வாமிகளை அடுத்துப் பக்தி புரிந்தார். அந்த குருமூர்த்தி, இவருடைய தைவ பக்தி வைராக்கியங்களுக்கு ஸந்தோஷித்து, ஸ்ரீ தாரக மந்த்ரோபதேசம் செய்து, "ஓ, அரசனே! காளிகாதேவி உனக்கு பிரதமகுருவாய், ஞானதீபத்தை ஏற்றி வைத்தாள்; பாகவதோபதேசம் என்னும் தூண்டுகோல் அந்த தீபத்தை தூண்டிவிட்டது. தாரக நாமமென்னும் அநுகூலவாயு, அதனைப்பெருந் தீபவொளியோடுகூடிய பெருநெருப்பாக்கி, அநாதிகாலமாய் நீ தேடிவைத்துக்கொண்ட தீவினைக்காட்டைச்சாம்பராம்படி சுட்டெரித்தது. நீமிகவும் பரிசுத்தனாயினை. விஷயப் பேய்கள் என்னும் சத்ருருக்களின் கைகளிற்றப்பி, ஸர்வவித உறவினரனைய பகவத் கடாக்ஷத்துக்கு இலக்கியமாயினை. ஸர்வதேச, ஸர்வாவஸ்தைகளிலும் பகவானைத் தியானிக்கு மனமுடையவனாய், உனது வாக்கால், பகவந்நாமங்களை உச்சரித்து, காயத்தால் பிரதக்ஷிண வந்தநார்ச்சநாதி பகவத் கைங்கரியங்களைச்செய்து, வைராக்ய சீலர்களான பாகவதர்களோடு கூடி ஸல்லாப ஸஹவாஸங்கள் செய்துகொண்டு, புறப்பற்றற்று விளங்குவையாயின், பகவான் உனது மனமென்னும ராஜவீதியில், உலாப்போந்து உன்னைப் பிரியாதிருப்பான். ஞானவான்கள்,

ఆత్మవత్సర్వభూతాని ॥

'மன்னுயிரைத் தன்னுயிர்போல் மதிக்கவேண்டும்' என்றபடி, ஸகல பூதங்களையும், தம்மைப்போலவே அபேதமாய்ப் பாவிக்க வேண்டும். நீ, பேதபாவனையை விடுத்து, பரமானந்த ஸித்திபெறும் பெருமுயற்சி செய்யக்கடவாய். பகவானைத் தவிர மற்றவர்களை உபாஸிப்பாயானால் உனக்கு உத்தம ஞான ஸித்தி எய்தாது. தேவர்கள், அஸுரர்கள், யக்ஷர்கள், ராக்ஷஸர்கள், கின்னரர்கள் உரகர்கள் முதலியவர்களாலும், மனிதர்கள், மிருகங்கள், பக்ஷிகள், மற்றுமுள்ள ஜந்துக்களாலும், அதிசாரம், ஜ்வரம், குன்மம் முதலிய வியாதிகளாலும், ராகத்வேஷ லோபமோஹ மத மத்ஸரங்களாலும் என்றென்றும் அழியாத பரமானந்த ஸித்திபெறும்பொருட்டுக் கேசவனுடைய பாத கமலங்களில் உனது ஹிருதய பிரமரத்தை பொருத்திவைக்கக்கடவாய்; அதனால் சுகம்பெறுவாய். ஆகையால் ஸாரமற்ற ஸம்ஸார மார்க்கத்தில் உண்டாகும் தேவமனுஷ்யாதி சரீரங்களுக்கு இன்பந்தரவல்ல ஸ்வர்க்காதிபோலிச் சுகங்களிற் பிரியம்வைக்கவேண்டாம். உனக்குப் பரம பரிசுத்தமான பரம்பொருளை உபதேசிக்கின்றேன், கேள்: ஸர்வ பூதங்களி



டத்திலும் பொதுநோக்கம் செலுத்து. ஸர்வ பூதப் பொதுநோக்கமே அச்சுதனுக்கு முக்யாராதனமாயிருக்கின்றது. இப்படிப்பட்ட ஸமபாவனையின்றிச்செய்யும் ஆராதனை சாம்பரிற் கொட்டியநெய்போல நிஷ்பிரயோஜனமாகும். ஸமபாவனாராதனத்தால், ஸர்வேஸ்வரன், பிரஸந்நனாவான். பகவான் பிரஸந்நனாகையில் முடியாத காரியம் எது? முன்னவன் முன்னின்றால் முடியாத பொருளும் உண்டோ! அறம்பொருள் இன்பங்களைக் கோரவேண்டாம், அவைகளாற் சுகமில்லை; அவைகள் அல்ப பலப்ரதானங்களாவனவன்றி அவைகளாற் பிரயோஜனம் முக்காலத்துமன்றி எக்காலத்துங் கிடையாது. மோக்ஷத்தையும் நீவிரும்புதல் ஒழிக. நன்றாய்ப் பழுத்த மாமரத்தைச் சேர்ந்தவனுக்குப் பழங்கள் தமக்குத் தாமே கிடைப்பனபோல, பரப்பிரமமென்னும் மஹாதேவதாருவை அடுத்து நிற்பவனுக்கு, மோக்ஷானந்தப்பழம், தனக்குத் தானே கனிந்து ரஸமூறி எளிதிற் கிடைக்கும்; இதற்கு ஸந்தேகமில்லை, முக்காலும் உண்மை. இதனை நம்புக'' என்று இதோபதேசம் செய்தனர். அப்போது, அவ்வரசர், ஸ்ரீராமானந்தஸ்வாமிகளுடைய உபதேசமணியைத் தமது இதயப் பெட்டகத்தில் பத்திரமாய் வைத்து, எல்லாப் பதார்த்தங்களையும் பகவத்சொரூப பாவனைசெய்து, ஆசார்யருடைய அநுமதிபெற்றுத் துவாரகாபுரிக்குச் சென்று, ஸ்ரீவாஸுதேவ பரப்பிரமத்தை தரிசித்துக் கணக்கிலா வந்தனங்கள் செய்து, "புருஷோத்தமா! எத்தனையோ ஜன்மங்களெடுத்தும் நான், இதுவரையில் உன்னையறியாமல், விஷயாந்தரங்களில் அகப்பட்டு, நமனுக் காளானேன். கிடைத்தற்கரிய மானிட ஜன்மம் கிடைத்திருந்தும், உன்னை அடுத்துப் பக்திபுரியாமல், இகசுகமாகிய சிற்றின்பத்தை விரும்பி, காளிகாதேவியைப் பூசித்து வந்தேன். அந்த தேவியே எனக்கு ஞானகுருமணியாய், வைராக்ய ஞானோபதேசம் செய்து, பாகவத சிகாமணிகளுடைய சந்நிதிக்கு என்னை அனுப்பினள். அவர்கள் எனக்கு பகவத் பக்தி ஞானத்தை அதிகரிக்கச் செய்து,

ఆచార్యస్సహరిస్సాక్షా।చ్చరరూపీనసంశయః ॥

'ஆசார்யன் ஸாக்ஷாத் பகவத்ஸ்வரூபி' என்றபடி, ஸாக்ஷாத் பகவத் ஸ்வரூபரும் ஞானநுஷ்டான பருமாகிய ஸ்ரீராமானந்த ஸ்வாமிகளுடைய திருவடித் தாமரைகளில் சேர்ப்பித்தார்கள். அந்த தேசிகோத்தமரும், ஸ்ரீ தாரகமந்த்ரத்தை எனக்கு உபதேசித்து, ஸர்வபூத ஸமபாவனையை உண்டாக்கி என்னை உன்னுடையவனாக்கியருளினார். அநாதிகாலமாய் இந்திரியவசப்பட்ட மூடசிகாமணியாய் நான் செய்த வரம்புகடந்த தீவினைகளை மன்னித்து, இனி ஒரு கணநேரமும் உன்னை மறவாதிருக்க வரந்தருக'' என விண்ணப்பித்தார். அந்த உண்மை யன்பருடைய உள்ளத் தூய்மைக்கு ஸந்தோஷித்து, ஸ்ரீவாஸுதேவன்,

తాసామావిరభూచ్ఛౌరి । స్మయమానముఖాంబుజః ।
పీతాంబరధరస్స్రగ్వీ । సాక్షాన్మన్మథమన్మథః ॥

"வெளிய சங்கொன் றுடையானைப் பீதக வாடை யுடையானை
அளிநன் குடைய திருமாலை யாழி யானைக் கண்டீரே
களிவண் டெங்கும் கலந்தாற்போல் கமழ்பூங் குழல்கள் தடந்தோள்மேல்
மிளிர நின்று விளையாட விருந்தா வனத்தே கண்டோமே" என்றபடி,

கோவியர்களுக்குச் சேவை தந்தருளியதுபோல, பீபாஜி ராஜருக்குக் காட்சிதந்து, "நீ, நாமதேவாதியர்களைப்போல எனது அந்தரங்க பக்தன் ஆனாய். ஸ்ரீராமானந்த குருபதேசத்தின்படி உறுதியுடன் விளங்கக்கடவாய். நான், உன்னை இடையறாமல், உனது மனத்தகத்திற் பொருந்தி யிருப்பேன்" என்று அநுக்ரகித்து மறைந்தருளினன்.

பீபாஜிராஜர், துவாரகாபுரியில் நான்கு மாத காலம் வாழ்ந்து, பகவானுடைய உத்தரவு பெற்று, காசிக்கு வரும் வழியில், நடுக்காட்டில் பெரும்புலி ஒன்று, கர்ச்சித்துக்கொண்டு வருவதைக் கண்டு, அவருடைய மனைவி பயந்து, "ஓ, பிராணநாதா! இதோ, ஒரு பெரும்புலி வருகின்றது; நாம் என்ன செய்யப்போகிறோம்!" என்று கூவினாள். அதற்கு அவர், "பெண்ணே! என் அஞ்சுகின்றனை? ஸாக்ஷாத் பகவான் வருகின்றான்? நீ, என் பெரும்புலியென்று பயப்படுகின்றாய்? பகவான் ஸமஸ்தசேதநா சேதனங்களையும் தனக்குச் சரீரமாகச்செய்து கொண்டு அவைகளிற் பொருந்தி யிருக்கின்றான். ஆகையால், ஸர்வமும் அவன் வடிவங்களாகவே யிருக்கின்றன. அங்ஙனமிருக்க, நீ, அன்ய பாவனை செய்கின்றனையே, இதனால், உனது மனம் பரிபக்வமடையவில்லை யென நன்கு விளங்குகின்றது. ஆடைக்குள் நுழைந்து முகமூடியிருக்கும் மனிதனை, மனிதனாக மதிக்கவேண்டுமன்றி, ஆடையென்றெண்ணுவது அஞ்ஞானம் அல்லவா? நாடகத்தில், அரிச்சந்திர வேடதாரியான ஓராடவனை, அரிச்சந்திரனே என என்னுவது எத்தனை மதியீனம், அங்ஙனமே, எல்லாவற்றிலும் உள்ளீடாய் அமர்ந்து, சேதனா சேதனாகார பிரபஞ்சத்தைக் கவசமெனக்கொண்டு வீற்றிருக்கும் பகவானிடத்தில் ஈச்வர பாவனை செய்யாமல், புத்தி யீனத்தால் புலிப் பாவனை செய்தாய். நமக்கு ஸ்ரீராமானந்த ஸ்வாமிகள் கொடுத்தருளிய விஞ்ஞான தீபவொளி மூலமாய்ப் பார்த்தனையேல், அஞ்ஞானாந்தகாரம் நீங்கும். அப்போது நீ, புலி என்னும் எண்ணத்தை ஒழித்து, பகவத் ஸாக்ஷாத்காரத்தை யடைவாய்" என்று கூறிக்கொண்டிருக்கையில், அவ்வேங்கை, இவர்களை நோக்கினபடியே அசைவற நின்றுவிட்டது. அப்போது வேந்தர், வேங்கையை நோக்கி, "ஓ, புலியே! பகவானுக்குச் சரீரமாயுள்ள நீ, உனது இதயாம்புயவாசியாகிய பகவானை உபாஸிக்காமல், இந்திரிய வசப்பட்டு, ஏன், இங்ஙனம் வீணே காலங்கழிக்கின்றனை? இனியேனும் விலங்கின் தன்மையை ஒழித்து, தனியிடத்தில் வாழ்ந்து, ஈச்வர விபூதியாயுள்ள எந்த வஸ்துவையும் வருத்தாமல், மரங்களின் வீழும் இலைகள் முதலியவைகளை உண்டு பிழைத்து, ஸதா பகவானை தியானித்துக் கொண்டிரு" என்று சொன்னபோதே, அவ்வேங்கைக்கு ஞானோதயமாயிற்று. அதன் கண்களில் நீர் ததும்பியது. அது வேந்தன் பாததாமரைகளில் வீழ்ந்து கிடந்தது. அப்போது, அவர், பரமகிருபையால் புலியை எழச்செய்து, தமது கழுத்திலிருந்த துளசிமாலையை, அதன் கழுத்திலணிந்து, தமது கரத்தை அதன் சிரத்திலிருத்தி, அதன் காதில், பகவந்நாமத்தை உபதேசித்து,



శ్రీమన్నామప్రోచ్య నారాయణాఖ్యం । కేనప్రాపుర్వాంఛితంపాపినోఽపి ।
హా నః పూర్వంవాక్ప్రవృత్తానతస్మిన్ । తేనప్రాప్తం గర్భవాసాదిదుఃఖం ॥

'குலந்தரும் செல்வந் தந்திடும் அடியார்
படுதுய ராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினு மாயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராய ணாவென்னு நாமம்' என்றபடி,

"ஓ புலியே! ஸ்ரீமந் நாராயண நாமத்தை உச்சரித்தால் எப்பேர்ப்பட்ட பாவியும், தனது கோரிக்கையை அடையாமற் போவதுண்டா? அந்தோ! இதுவரையில், அந்த நாமோச்சாரணத்தில், மனவாக்குகள் செல்லாதபடியால், நம்மைக் கர்ப்பவாசாதி துக்கங்கள் ஒழியாமல், வருத்தின.

మాభీర్మందమనో విచింత్య బహుధా యామీశ్చిరం యాతనా ।
నామీ నః ప్రభవంతి పాపరిపవస్స్వామీ నను శ్రీధరః ।
ఆలస్యం వ్యపనీయ భక్తిసులభం ధ్యాయస్వ నారాయణం ।
లోకస్య వ్యసనాపనోదనకరో దాసస్య కిం న క్షమః ॥

(என்றால்)

'மடமை மிகுந்த மனமே உயிர்கொள்
எமவா தனைகளுக் கிறையு மஞ்சேல்
ஸ்ரீதர னேநந் தேவனா யிருக்கையில்
எந்தப் பகைவர் எதுசெய வல்லார்?
பத்தி வலையிற் படுபவ னாகிய
அத்திரு நாரா யணன்றனைத் தாழா
தன்புடன் துதிப்பா யாகில் அகில
சேதன விசனஞ் சிதைக்கும் அவன்தன்
தாஸனா யுள்ள சற்குண னொருநீ

படுந்துயர் தன்னைப் பாற்றி
அருளா தொழிவனோ மருளற மகிழ்ந்தே' என்றபடி,

ஓ மந்த மனமே! எமவாதனைகளுக்குச் சிறிதும் அஞ்சாதே. ஸ்ரீதரனே நமக்கு ஸ்வாமியாயிருக்கையில் எந்தப் பகைவராயினும் நம்மை என்செய்ய வல்லவர்கள்? பக்தியாகிய வலையிலே பிடிக்கப்படும் மச்சாவதார மூர்த்தியாகிய அந்த ஸ்ரீமந் நாராயணனை இடையறாமல் துதிக்கக்கடவாய். அங்ஙனம் செய்வையேல், அகில ஆன்மகோடிகளுடைய விசனங்களையும் ஒழிக்கும் அந்த பகவான், தாஸனாயுள்ள நீ ஒருவன் படுந்துன்பத்தை நீக்கியருளாமல் விடுவானோ?'' என்று அப் புலிக்கு இதோபதேசஞ்செய்து, காசிக்குப்போய் ஸ்ரீராமானந்த ஸ்வாமிகளின் பாத நிழலில் வசித்து, பரதயோகியேபோல அநவரத பகவத்யானபரராய், வீற்றிருந்தார்.

அதுமுதல், அந்தப் புலி, தனக்கு வேந்தர் உபதேசித்தபடியே, தனது குலத்தன்மையாகிய கொலைத்தொழிலையும், தனது சுற்றத்தாரோடுறவாடுதலையும், இந்திரியவிஷய மயக்கத்தையும், முரட்டுத்தனத்தையும் அற நீக்கி, ஏகாந்த ஸ்தானத்தில் வாழ்ந்து, அநவரதமும் பகவத்தியானம் செய்துகொண்டு, எட்டுநாள் வரையில் உயிருடன் இருந்து, புலியுடலை விட்டு நீங்கிப் புராதன கட்டம் என்னும் கிராமத்தில், நரஸிம்மமேதையென்னும் பெயருடைய பாகவத உத்தமராய்ப் பிராமணகுலத்தில் அவதரித்தது. இந்த நரஸிம்மமேதை என்பவர், ஸ்ரீபண்டரிநாதனுக்கு மெய்யன்புடைய பக்தராய் விளங்கியிருந்தார். இவருடைய சரித்திரம் மிகவும் அற்புதமாயிருக்கும். அதனை, இதற்கடுத்த அத்தியாயத்தில் வாசித்தறியலாம்.

పశుర్మనుష్యః పక్షీవా । యేచ వైష్ణవసంశ్రయాః ।
తేనైవ తే ప్రయాస్యంతి । తద్విష్ణోః పరమం పదం ॥

(என்றால்)

''இடையறா தென்றும் ஈச்வர நிறைவைப்
பொருந்தி விளங்கும் பொறுப்பால் வைஷ்ணவன்
என்னப் படூஉம் இசைமலி பரம
பாக வதனைப் பசுவே யாயினும்
மனித னாயினும் வானிற் பறக்கும்
பறவை யாயினும் பக்தி பண்ணுமேல்
அன்னவன் அருளடைந் ததனால்
பரம பதமுறாஉம் பாக்கியம் பெறுமே'' (இதற்கு),

'இடைவிடாத ஈச்வர நிறைவைப் பொருந்தியிருப்பதால் வைஷ்ணவன் என்று இயம்பப்படூஉம் கீர்த்திமிகுந்த பாகவதனை, பசுவானாலும், மனிதனானாலும், ஆகாயத்திற் பறக்கும் இயல்புடைய பக்ஷியானாலும் பக்திசெய்யின், அந்த பாகவதனருளைப்பெற்று, பரமபதமடையும்



பாக்கியத்தைப்பெறும்' என்று பொருள். இதனைப், பீபாஜி மஹாராஜா விடத்திற் கண்கூடாகக் கண்டோம்.

சர்வசரீராயநமஃ

பக்தவிஜயம் முதற்பாகம் முடிந்தது.

ஸ்ரீபாண்டுரங்க பரப்ரஹ்மணேநமஃ

வேதியர் வாழ்க விண்ணோர் விளங்குக
பசுக்குலம் செழிக்க பருவக் கொண்மூ
வழங்குக மன்னவன் வரிசை பெறுக
கருமா லகற்றுந் திருமா லடியார்
அடியவர்க் கடியர் அடியவ ரோங்குக
ஹரிதிரு நாமம் பெரிதும் சிறக்க
அனைவரும் அதனில் ஆழ்வாராகிப்
பரம பதமுறாஉம் பாக்கியம் பெறுக
வாழ்க வன்னவர் மலர்ப்பதம்
ஆழ்க நியன வாழ்கநா யனவே.



ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# பக்தவிஜயம்

# இரண்டாம் பாகம்

## முப்பத்துநான்காம் அத்தியாயம்

## நரஸிம்மமேதை சரித்திரம்

பீபாஜிராஜ துவாரகாபுரியிலிருந்து காசி நகரத்துக்கு போகும் வழியில், அவருடைய உபதேசாநுக்ரஹத்தை அடைந்து, * விரக்தி பிறந்து, †விவிக்த பிரதேசத்தில், பகவத்யானம் செய்துகொண்டிருந்து தேகவியோகம் அடைந்த புலியானது, சிவாம்சத்தால் புராதனகட்டம் என்னும் கிராமத்தில், பிராமணப் பிள்ளையாகப் பிறந்தது. தாய் தந்தையர், இந்த அருமந்த புத்திரருக்கு நரஸிம்மமேதையென நாமகரணம் செய்தார்கள். இவருக்கு ஏழாம் வயதில் அவர்கள் பரலோககதியடைந்தார்கள். சிற்றப்பனும் அண்ணனும் இவரை வளர்த்து வந்தார்கள். இவர், தமக்குச் சரியான வயதுள்ள பாலர்களோடுகூடி விளையாடிக் காலங்கழித்து போஜன வேளைக்கு மாத்திரம் வீட்டுக்கு வருவது வழக்கம். இங்ஙனம் இருக்க, இவருடைய அண்ணியார் முதலியோர் இவரைநோக்கி, "தம்பி! இப்படி ஆட்டத்திலேயே காலத்தைக் கழித்துவிட்டு வேறொன்றும் தெரியாமல் இருந்தால், பிற்காலத்தில் நீ; உனது பெண்டு பிள்ளைகளை எங்ஙனம் காப்பாய்?" என்று வெறுத்துரைத்தார்கள். அதனைப் பொறுத்துக்கொள்ளாத இவர், மனமுறிந்தவராய், உடனே அங்கிருந்து புறம்போந்து, யாருமற்ற அடவிக்குப்போகும்போது, இடைவழியில் தமது மனத்தகத்தில் இப்படி எண்ணிக்கொண்டார். "எனது பூர்வ கர்மம் எப்படிப்பட்டதோ தெரியாது! எனது தாயும் இறந்தாள்: இளமையில் தாயை இழத்தலும், முதுமையில் தாரத்தை இழத்தலும், மூப்பில் மகனை இழத்தலும் ஆகிய இந்த மூன்றும் மூவுலகில் மாந்தர்க்குத் தீராத துக்கந் தருவனவாம். இது பற்றியே திராவிட நீதிமாலையிலும்,

---

* விரக்தி - நிராசை - ஆசையின்மை

† விவிக்த பிரதேசம் - தனியிடம் - ஒதுக்கிடம்

'இளமையிலே தாயார் இறந்தல் முதுமை
வளமையிலே பெண்டிர் மரித்தல்—வளமையிலே!
மூப்பிலே மைந்தன் முடிதல் இவை மூன்றும்
நீப்பிலாத் துன்ப நிறைவு' என்று

கூறப்பட்டிருக்கின்றது. நான் தாயற்றவனாகையால், என்று அண்ணியார் முதலிய சுற்றத்தார், என்னை வெறுத்துரைக்கலானார்கள். துருவர்க்குச் சிற்றன்னை கூறிய வெறுப்புரைகள் விரக்திக்கு வித்தாயிருந்தபடி, தாயற்றவனாகிய எனக்கு,இவ்விளமையில் அண்ணியார் முதலியோர் உரைத்த வெறுப்புரைகள் சுத்த விரக்திக்குக் காரணமாயின. இனி இகசுகவிருப்பைவிட்டுப் பரசுகவாழ்வுக்கு முயல்வேனாக. ஈச்வர பக்தி என்னிடத்தில் * அங்குரித்தபடியால், எனது எண்ணம் புண்ணாகாது" என்பதேயாம். இங்ஙனம் எண்ணியபடியே, அவ்வடவி நடுவில் ஒரு சிவாலயத்தைக் கண்டு, இவர்,அதற்குள் நுழைந்து மகாலிங்க தரிசனம் செய்தார். வன மத்தியில் இருந்தபடியால், அக்கோயில் ஆருமற்ற விவிக்த பிரதேசமாயிருந்தது. அங்ஙனமிருந்தும் இவர், தமது தைரியத்தைவிடாமல் ஸ்வாமிக் கெதிர்முகமாக நின்று,கூப்பிய கையினராய்,

"அருளுடைச் சுடரே அளிந்ததோர் கனியே
பெருந்திற லருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெரு மானே
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே" என்றும்,

"பத்திலனேனும் பணிந்திலனேனு முன்
உயர்ந்த பைங்கழல் காணப்
பித்திலனேனும் பிதற்றிலனேனும்
பிறப்பறுப் பாயெம்பெருமானே
முத்தனை யானே மணியனை யானே
முதல்வனே முறையோவென்
றெத்தனை யானும் யான்றொடர்ந் துன்னை
இனிப்பிரிந் தாற்றேனே" என்றும்,

பலவிதமாய்த் துதித்து ஏழுநாட்கள் ஊண் உறக்கம் நீத்திருக்க, பார்வதி ரமணனாகிய சிவபெருமான், இவருடைய பக்தி வைராக்யத்துக்குச் சந்தோஷப்பட்டுக் காட்சியளித்தார்.

அப்போது நரஸிம்ம மேதை, பரமசிவனுக்கு, ஸாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து, பக்தியுக்தராய்த் துதித்துக் கொண்டிருந்தார். பரமேச்வரன் ஸந்தோஷித்து, "ஓ வத்ஸா! உனது மனோரதத்தைக்கேள்"

* அங்குரித்தல் - முளைத்தல்.



என்று கூற, இவர், ஸ்வாமியைப் பார்த்து, "ஓ, தேவா! நீ * ஸர்வஜ்ஞன். நான், அஞ்ஞானி; இப்படிப்பட்ட மூடனாகிய எனக்கு மூதறிவினனாகிய நீ, உனக்குப் பிரியமானதை அநுக்ரகித்தருளலாம் என வணக்கமாய் விண்ணப்பஞ்செய்தார். அம்மொழியைக் கேட்ட பினாகபாணி, புன்சிரிப்புடன், "நீ மிகவும், வல்லவன்; உனது கோரிக்கை, மிகவும் புகழத்தக்கது; எனக்கு இஷ்டமானதைத் தரவேண்டினாய், ஆகையால் நீ மிகவும் நல்லவனும் ஆவாய்,

'பாசங்கைக் கொண்டொருவன் பாவைதனை ஆட்டுதல்போல்
ஈசன்பூ தங்களுக்குள் எய்தியே—நேசமாய்
மாயையினால் ஆட்டு மகிமை யெவரறிவார்
தாயையன்றிச் சூலுண்டோ சாற்று' (இதற்கு),

'தாயறியாத சூல் இல்லை என்றபடி ஸர்வபூத இதயாலயங்களிலும் ஈசன் இனிது வீற்றிருந்து, அவற்றை மாயையென்னுங் கயிற்றாலே ஆட்டுகின்ற தன்மையை யெவரறிவார்?' என்பது பொருள். இங்ஙனம் மாயாவல்லபனாகிய ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை விட, எனக்குப் பிரியமான பொருள் வேறொன்றும் இல்லை. நான் இடையறாமல் அந்த பகவானைத் தியானித்து, அவனுடைய நாமத்தைத் தோத்திரம் செய்து கொண்டிருப்பேன். இது மிகவும் பரம ரகஸியம். இத்தனையென்றளவிடப்படாத அந்த பரம்பொருளை உனக்குக் காண்பிக்கின்றேன்; வா" என்று, அவருடைய கையைப் பற்றி அழைத்துக்கொண்டு யமுனை நதிக்கரைக்குப் போனான். அப்போது, அம்பிகாபதியின் எண்ணத்தை உணர்ந்த ருக்மிணீகாந்தன், பூர்வம் தன்னால் செய்யப்பட்ட ராஸக்ரீடா தரிசனந் தந்தருளினன். எங்ஙனமெனில், மாரிகாலத்திரவில் ஸ்ரீ கிருஷ்ணன், கோபியர்களுடன் யமுநா நதிக்கரையில் உலாப் போதர, அதனால் அவர்களுக்கு ஆனந்த மேலிட்டது; ஆனந்தம் நல்லதே ஆனாலும், அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் விஷம் என்பது போலக் கெடுதி விளைவிக்கும். மிகு மழையால் பயிர்கள் அழிவதைக் காண்கிறபடி, கோபியர்களுக்கும் ஆனந்த முதிர்ச்சியால் கேடுண்டாம் என வுணர்ந்த ஸ்ரீ கிருஷ்ணன், அந்தர்த்தானமானான். அப்போது கோபியர்கள் எல்லாரும் ஒருங்கு சேர்ந்து,

"இனவேய் மலையேந்தி னேன்யானே யென்னும்
இனவே றுகள் செற்றே னும்யானே யென்னும்
இனவான் கன்றுமேய்த்தே னும்யானே யென்னும்
இனவா நிரைகாத்தே னும்யானே யென்னும்
இனவாயர் தலைவனும் யானே யென்னும்
இனத்தேவர் தலைவன்வந் தேறக் கொலோ
இனவேற்கண் நல்லீர்க் கிவையென் சொல்லுகேன்
இனவேற் கண்ணியென் மகளுற் றனவே"

* ஸர்வஜ்ஞன் - எல்லா முணர்ந்தவன்.

“உரைக்கின்ற முக்கட்பிரான் யானே யென்னும்
உரைக்கின்ற திசைமுகன் யானே யென்னும்
உரைக்கின்ற வமரரும் யானே யென்னும்
உரைக்கின்ற வமரர்கோன் யானே யென்னும்
உரைக்கின்ற முனிவரும் யானே யென்னும்
உரைக்கின்ற முகில்வண்ணன் ஏறக் கொலோ
உரைக்கின்ற வுலகத்தீர்க் கென்சொல் லுகேன்
உரைக்கின்ற வென்கோ மளவொண் கொடிக்கே”

என்று நம்மாழ்வார் அருளிச்செயலின்படி, ஸ்ரீ கிருஷ்ணகுணநுபவ விளையாடல்களை எண்ணி யெண்ணி பிருந்தாவனத்தின் நடுவே ஒருவரோ டொருவர் இங்ஙனம் சொல்லிக்கொண்டார்கள்.

கோபிகைகளில் ஒருத்தி மற்றைப் பாவையரைநோக்கி, “ஓ, தோழியர்காள் கேண்மின்! நானே ஸ்ரீ கிருஷ்ணன், ஆகையால், நான் எத்தனை வேடிக்கையாய் நடக்கின்றேன், பாருங்கள்!” என்றாள். மற்றொரு மாது, “நீ கிருஷ்ணன் அல்லள். நானே கிருஷ்ணன்; எனது பாடலைக் கேள்” என்றாள். வேறொரு மெல்லியல், “ஏடா, துஷ்ட காளியா! ஓடாதே; நில்லடா நான்தானடா கிருஷ்ணன்; இதோ பார்; உன்னைப் பிடிக்கின்றேன்” என்று தோள்தட்டித் தன் கையையே பாம்பெனப் பற்றி அசைவற்று நின்றாள். இன்னமோரேந்திழை, “ஓ, கோபாலச் சிறுமியர்காள்! மழைக்கு வெருவன்மின்! அசையாதிருமின்! நானே கோவர்த்தனத்தை யெடுத்து என் கையிலேந்திக் குடையாய்ப் பிடிக்கின்றேன்” என்றாள். பின்னொரு பேதை “ஓ, கோபி கன்னியர்காள்! நான், * தேனுகனை வதைத்தேன்; நீவிர், † தாலவனத்தில் நுழைந்து உமது மனம்போனவாறெல்லாம் உலாவலாம் என்றாள். அப்பால் ஓர் அணங்கு, ஸ்ரீ கிருஷ்ணனைப்போலவே நின்று பசுக்களை அழைத்துக் காட்டினாள்.

இங்ஙனம் கோபிகைகள், ஸ்ரீ கிருஷ்ணனுடைய திவ்யலீலைகளைத் தாமே செய்துகொண்டு, மெய்மறந்து, தாமே அவன் மயமாய்ப் பிருந்தாவனத்தில் திரிந்துகொண்டிருக்கையில், ஒரு மாது, நிலத்தை நோக்கி, மெய்புளகிக்கத் தன்னைச் சூழ்ந்துள்ள, பெண்களைப் பார்த்து “ஓ, தோழியர்காள்! இதோ பாருங்கள். இங்கே, சங்கு, சக்ரம், கற்பகம், கொடி, தாமரை, அங்குசம், வயிரம் முதலிய அடையாளங்களையுடைய ஸ்ரீ கிருஷ்ணனுடைய அடிச்சுவடுகள் தோன்றுகின்றன. இவைகளைக் காண்பதனால் எனக்கு, ஸ்ரீ கிருஷ்ணனுடைய விநோத நடையின் பாவனை தெற்றென விளங்குகின்றது. மஹாபுண்யவதியாகிய சுந்தரி ஒருத்தி அவனுடன்கூடிப் பைய நடந்திருக்கின்றாள். ஆகையால் அப்பெண்மணியின் அடிச்சுவடுகள் சேர்ந்திருக்கின்றன. இதோ இந்த இடத்தில் ஸ்ரீகிருஷ்ணன் மலர்கொய்திருக்கின்றான். ஆகையால் அம்

* தேனுகன் - ஓர் அரக்கன். † தாலவனம் - பனங்காடு.



மஹாநுபாவனுடைய பாதக்குறிகள்மட்டும் தோய்ந்திருக்கின்றன. இதோ வேறோரிடம்; இந்த இடத்தில், ஸ்ரீகிருஷ்ணன், குந்தியிருந்து, அம் மலர்களால் ஒரு மாதை அலங்கரித்திருக்கின்றான்; அப்பெண்ணரசியின் பாக்கியமே பாக்யம், அவள் முற்பிறப்பில் ஸ்ரீமந் நாராயணனை நன்றாய்ப் பூசித்தவள்! ஓ! கோபிகாமணிகளே! இங்கே பாருங்கள்! அந்தக் கோபால சூடாமணி, தான் அன்பாய் அலங்கரித்த அங்கனையை அகன்று, இவ்வழியேபோயிருக்கின்றான். இங்கே கவனித்து நோக்குவதனால், ஒரு காரிகையின் அடிச்சுவடு, ஸ்ரீகிருஷ்ணனைப் பின்பற்றியிருக்கின்றது. அந்த இந்துமுகி, ஸ்ரீகிருஷ்ணனோடு சேர்ந்துகொள்வதற்கு தனது இடை துவள வருந்தி விரைந்து நடந்ததாகக் காணப்படுகிறது. ஓ, புண்யவதிகாள்! ஒரு ஸ்திரீ அவன் கைம்மேல் கைவைத்துக்கொண்டு, அவனுடன் நடந்திருக்கின்றாள். ஆகையால் அடிச்சுவடுகள் நெருங்கிப் பராதீனமாய் வைக்கப்பட்டிருக்கின்றன. இங்கே பார்! அம்மாயன் அப்பெண்மணியின் கையைப் பரிசித்ததன்றி, வேறு பலன் ஒன்றுந் தாரதபடியால் அவள் அவமானம் அடைந்து, ஆசை அற்று, திரும்பிச் சென்றபடி, அடிகளின் குறி புலப்படுகின்றது. இங்கே, ஸ்ரீகிருஷ்ணனுடைய அடிகள் வேகமாய் வைக்கப்பட்டிருக்கின்றன! இதனால், அவன், இங்கே ஒருத்தியைக் கண்டு, “நீ இங்கேயிரு; நான் விரைந்து சென்று, நாம் இருவரும் சேர்ந்திருப்பதற்கு, தகுந்த இடம் பார்த்துத் தெரிந்து வருகிறேன். அப்பால் இருவரும் கூடிப் போகலாம்” என்று சொல்லிப் போய்விட்டதுபோல் காணப்படுகிறது. “ஓ, கோவியர்காள்! இதற்கு மேல், அவனுடைய அடிச்சுவடுகள் அகப்படவில்லை; அவன் எங்கேயோ, பிறர் காணக்கூடாத மறைவிடத்திற்குப் போயிருக்கின்றான். ஆகையால், நீவிர். திரும்பி வாருங்கள். இனிமேல், நாம் போகுதல் கஷ்டம். இக்காட்டகத்தில், நிலாவும் உலாவ முடியாது. ஆகையால், நீவிர் திரும்பி வாருங்கள்” என்று சொல்லக்கேட்ட கோபிகைகள் யாவரும், ஸ்ரீகிருஷ்ணனைக் கண்டுபிடித்தல் கஷ்டமென்று, சோகமுற்றவர்களாய் திரும்பி யமுநா நதிக்கரைக்கு வந்து குந்தியிருந்து ஸ்ரீகிருஷ்ண குணநுபவலீலைகளைப் பாடிக்கொண்டிருந்தார்கள்.

இங்ஙனம் இருக்க, தாமரைபோல் மலர்ந்து பிரகாசித்துக் கொண்டிருக்கிற திவ்ய முகங்களோடு கூடி, உலகெலாங் காக்கவல்ல சிறப்புற்றோங்கும் ஸ்ரீகிருஷ்ணன் வந்தான். வந்தவனைக் கண்ட கோபிகைகள், பரமானந்த மேற்கொண்டவர்களானார்கள். அவர்களில் ஒருத்தி, தனது கண்கள் என்னும் கருவண்டுகளால், கிருஷ்ணனுடைய முகாரவிந்தத்திலுள்ள சௌந்தரியமாகிய தேனை உண்டு களித்தாள். இன்னொருத்தி, அவனைக் கண்டு, கண்களை மூடிக்கொண்டு, அவனுடைய திருவுருவத்தை தியானித்து, யோக நிஷ்டையோடு கூடியிருந்தாள். இங்ஙனம், தன்னை இச்சித்து, பலவித லீலைகளோடு, சூழ்ந்துள்ள பெண்களில், சிலரைப் பிரிய வசனங்களாலும், சிலரை, குளிர்ந்த கடைக்கண்

பார்வையாலும், சிலரை, பரிசிப்பதனாலும் ஸமாதானம் செய்தனன் ஸ்ரீகிருஷ்ணன்; பிறகு, நிஷ்களங்க முடையவர்களாய் பரிசுத்த இதயத்தோடுகூடிய அக்கோபியர்களோடு, ராஸக்ரீடை செய்ய ஆரம்பித்தான். அந்த ஸ்திரீகள் யாவரும் ஸ்ரீகிருஷ்ணனிடத்திலேயே கூர்ந்து செலுத்தி அவனைக் கிட்டி நிற்கும் மனமுடையவர்களாய் இருந்தபடியால், வட்டமான ராஸமண்டலக்கூட்டம் கூடாமலிருந்தது. ஆகையால், கிருஷ்ணன், ஒருத்தி கையைப் பிடித்துக்கொண்டு, அந்தத் தொடு சுகத்தால், பரவசப்பட்டு கண்களை மூடிக்கொண்டிருந்த அம்மொய்குழல்கரத்தை, மற்றொருத்தி கரத்தோடு சேர்த்து, இங்ஙனம் அவர்கள் அனைவரையும் சங்கிலித்தொடர்போல வளைத்து வட்டமான ராஸமண்டலமாக்கினான். அக்கோபியர்கள் ஆனந்தபரவசராய் ஸ்ரீ கிருஷ்ணன் கரங்களைப்பற்றிக் கொண்டிருக்கிறதுபோல எண்ணிக்கொண்டு திருப்தியடைந்தார்கள். ஸ்ரீகிருஷ்ணன், * லகிமா மகத்வத்தால், வேகமாய் இடம் விட்டிடம் பெயர்ந்து, ஒவ்வொருத்திக்கும் அவ்வவள் பக்கத்தில் இருக்கிறபடி, தோன்றினான். பிறகு கோபியர்கள் † சரத்கால வர்ணனையோடு கூடின வரிப்பாட்டுகளைத் தங்கள் கரங்களைத் தாளங்கள்போட்டுப் பாடினார்கள். அதனால் ராஸக்ரீடை விளக்கமுற்றது. ஸ்ரீகிருஷ்ணன் மாத்திரம் சரத்கால வெண்ணிலவின் ஒளியினால், இதழ்விரிந்தலர்ந்த அல்லிமலர்களோடு கூடிய தடாகங்களை வர்ணித்துப் பாடிக்கொண்டிருந்தான். கோபியர்கள் ஸ்ரீ கிருஷ்ணனுடைய திவ்ய நாமங்களை மாத்திரம் பாடிக்கொண்டிருந்தார்கள். இங்ஙனம் பாடிக்கொண்டே சுற்றி வருகையில் களைத்தயர்ந்த ஒரு கோபிகை, வண்டு முழங்கும் காந்தண்மலர்போலும் தனது கரத்தை, ஸ்ரீகிருஷ்ணனுடைய தோண்மேல் இருத்தினாள். வேறொருத்தி, பாடல்களை வியந்து களிக்கும் பாவனைபோல, யானைத்துதிக்கை யனைய தோள்களையுடைய ஸ்ரீ கிருஷ்ணனை இறுகத்தழுவி முத்தமிட்டாள். மற்றொருத்தி, ஸ்ரீ கிருஷ்ணனுடைய கன்னத்தோடு தனது கன்னத்தைச் சேர்த்து, தனது புளகாங்கிதம் என்னும் பயிர்களை வளர்க்கும் நீர்கொண்ட மேகம்போன்று வேர்வை யரும்பியுள்ள ஸ்ரீ கிருஷ்ணனுடைய தோள்களை ‡ காடாலிங்கனஞ் செய்துகொண்டாள். இங்ஙனம் தத்தம் ஆனந்தங்களை அநுபவித்துக்கொண்டு, ஒலிமிருந்து ஸ்ரீகிருஷ்ணன் பாடின ராஸகானத்துக்கு உடந்தையாக,

‘மண்ணை யுண்டு மிழ்ந்து பின்னி ரந்து கொண்ட ளந்து மண்
கண்ணு ளல்ல தில்லை யென்று சென்ற கால மாயினாய்
பண்ணை வென்ற வின்சொல் மங்கை கொங்கை தங்கு பங்கயக்
கண்ண நின்ன வண்ண மல்ல தில்லை யெண்ணும் வண்ணமே’

என்று திருமழிசைப்பிரான் அருளிச்செயலின்படியும்

* லகிமா - இலேசாய்ப் பளுவின்றி விளங்குஞ் சித்தி. † சரத்காலம் - மழைகாலத்துக்குப் பிந்தியகாலம் அல்லது இலையுதிர்காலம். ‡ காடாலிங்கனம் இறுகத் தழுவுதல்.



‘கண்ண கண்ண நின்ன தன்மை
எண்ண எண்ண இன்பமே
நண்ண நண்ண நின்ன வண்ணம்
விண்ண வண்ண மாயனே’ என்றபடியும்,

இருதுணை நாதகீதம் பாடி, கோபியர் யாவரும், கிருஷ்ணன் சென்றால் தாமும் கூடச்சென்றும், நின்றால் தாமும் கூட நின்றும், திரும்பினால் தாமும் கூடத் திரும்பியும், அவனை இணைபிரியாமல் இருந்தார்கள். இங்ஙனம் தனது கூட்டுறவால் அந்தப் பெண்களைக் களிக்கச்செய்து, அதனால், அவர்கள், தனது நிமிஷப்பிரிவையும், வருஷப்பிரிவாக எண்ணும்படி அவர்களுக்குப் பேரானந்தம் ஊட்டியருளி, ஸ்ரீ கிருஷ்ண பகவான் ராஸக்ரீடை செய்தனன்.

இத்தகைய ராஸக்ரீடா வைபவத்தைச் சிவனுக்குத் தரிசனம் தந்தருளின கிருஷ்ணபகவான், நரஸிம்மமேதையைக் கண்டபோது, சிவனை நோக்கி, “இவனை, நீ, இங்கு அழைத்துவந்த காரணம் என்ன?” என்று கேட்க, பார்வதீரமணன், நரஸிம்மமேதையை, பகவானுடைய பாதகமலங்களில் வீழ்ந்து வணங்கச்செய்து, நடந்த விருத்தாந்தங்களை விண்ணப்பித்தான். அதற்கு, பகவான் ஸந்தோஷித்து, நரஸிம்ம மேதைக்கு அபயம் அளித்து, “ஓ வத்ஸா! எனது அன்பனாகிய சங்கரனுடைய முயற்சியால், நீ, பிரமாதியர்க்கும் கிட்டாத எனது லீலைகளைத் தரிசித்தாய்; இனி, நீ, எனது மெய்யன்பர்களில் ஒருத்தன் ஆயினை. உன்னால் தரிசிக்கப்பட்ட எனது லீலாமிர்தமழையால், உயிர்களென்னும் பயிர்களைக் காப்பாற்றக்கடவாய். ராஸக்ரீடையில் நீ கண்ட பெண்கள், புருஷோத்தமனாகிய என்னிடத்தில், மிகவும் உள்ளன்புடையவர்களாய், எனது க்ஷேமத்தைக் கோரினவர்களாய் பார்வைக்குப் பெண்களைப் போன்றவர்களாயுள்ள எனது உண்மையன்பர்கள் என்றறியக்கடவாய். அவர்கள், பெண்போலிகளாய்க் காணப்பட்டபடியால், பிறர்க்குதவியாயிருத்தலே, உலகினுயிர்களுடைய உருவங்களென்றும், அப்பெண்களுடைய கண்கள், மார்புகள், இடைகள் இவைகள் முறையே ஞான பக்தி வைராக்யங்களென்றும்,

ప్రపన్నాశ్చాతకో యద్వత్ । ప్రపన్నవ్యూహస్తథావత్ ।

(என்றால்)

‘கமலக் கண்ணன் விமலனும் எனக்குக்
கோவிய ரென்னும் ஒவிய வடிவுடைப்
பெண்க ளனைவரும் விண்ணிற் பறக்கும்
சாதகப் பறவைபோற் சால்பின் மிகுந்துளார்
அவர்கட் கொருநான் அஞ்சிறை மடநடைப்
புறவம் போலப் பொருந்திவாழ் வேனே’ என்றபடி,

அவர்கள் என் விஷயத்தில் சாதகப் பறவைகள் போலவும், நான் அவர்கள் விஷயத்தில் புறவைப்போலவும் விளங்கி யிருப்போம் என்றும், எனது மனந்தல் தனத்தல்களை, அவர்கட்கு முறையே

ஸ்வர்க்க நரகங்களென்றும் அறியக்கடவாய். உலகினர்க்கு ஞான மார்க்கத்தை அநுக்ரகித்தருளும் சிவசங்கரரே, உனக்குப் பரமகுருவாய் இருந்தபடியால், நீயும் அவரைப்போலவே உலகத்தாரை ஞானவழிப் படுத்தும் 'உபதேசஞ்செய்து, அதனால் என்னை மகிழ்விக்கக்கடவை. இதுவே, என் விஷயத்தில் நீ செய்யவேண்டிய உத்தம திருப்பணி. இது முதல் நான், உன்னுடன் இடையறாமற் கூடியிருப்பேன்" என்று இதோபதேசஞ்செய்தான். அதற்குப் பரமசிவன் சந்தோஷமடைந்து; பகவானுடைய உத்தரவைப்பெற்று, நரசிம்மமேதையைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு, தனது கோயிலுக்குப் போய், மறைந்தான்.

அதுமுதல், நரஸிம்மமேதை, இரவு பகலென்ற பாகுபாடின்றி, ஸ்ரீ கிருஷ்ண கலியாண குண லீலைகளை,

"குரவை யாய்ச்சிய ரோடு கோத்ததும் குன்றமொன் றேந்தியதும்
உரவு நீர்ப்பொய்கை நாகம் காய்ந்ததும் உட்பட மற்றும்பல
அரவில் பள்ளிப்பி ரான்றன் மாயவி னைகளை யேயலற்றி
இரவு நன்பக லுந்தவிர் கிலனென்ன குறை யெனக்கே'

"நோவ வாய்ச்சி யுரலோ டார்க்க விரங்கிற்றும் வஞ்சப்பெண்ணைச்
சாவப் பாலுண்டதும்ஊர் சகடமிறச்சா டியதும்
தேவக் கோலப்பி ரான்றன் செய்கைநி னைந்தும னங்குழைந்து
மேவக் காலங்கள் கூடினேனெனக் கென்னினி வேண்டுவதே" என்ற,

நம்மாழ்வார் அருளிச்செயல்களின்படி வர்ணித்து வாழ்த்தி அவனடிகளையே மறவாது தியானித்துக்கொண்டு, அந்தச் சிவாலயத்திலேயே வாழ்வாராயினார். புராதனகட்டம் என்னும் கிராமத்தில் இவருடைய அண்ணன் முதலிய சுற்றத்தார் இவரைக் காணாமல், பல இடங்களிலும் தேடிக் கடைசியாகக் காட்டகத்திற் சிவாலயத்திற் கண்டுபிடித்து, வீட்டுக் கழைத்துக்கொண்டு போனார்கள். அங்கே சுற்றுப்புறத்து கிராமவாசிகளில் விருத்த குமார பாலர் பலரும், இவரது பக்தி விரக்திகளுக்கு வியந்து கொண்டாடினார்கள். இவர், தமது நன்னெறியினின்று விலகாது, எந்நேரமும் ஸ்ரீபாண்டுரங்கனை தியானித்துப் புகழ்ந்தபடியே இருந்தார்.

அவ்வூரிலிருந்த ஒரு உத்தமவேதியன், இந்த நரஸிம்மமேதையின் இருவினை யொப்பையும் இதய பரிபாக ஞானத்தையும் தெற்றென வுணர்ந்து, தனது கன்னிகைக்கு இவரே சரியான கணவரெனத் தீர்மானித்து, சுற்றத்தாரையும் அதற்கு உடம்படுத்தி, மருகராகிய இவரை ஸாக்ஷாத் விஷ்ணு ஸ்வரூபராக பாவித்து, இவர்க்குக் கன்னிகாதானஞ் செய்தான். பிறகு, இவர்க்கு, மக்கள் பலர் உண்டாகி, ஸம்ஸாரம் பலத்தது. இந்த மகான், சேற்றில் ஒட்டாத பிள்ளைப்பூச்சியேபோல, ஸம்ஸாரத்தில் அகப்பட்டும் அதில் அகப்பற்றின்றி, நிரந்தர பகவத்தியானபரராய் விளங்கினார்.

ஸ்ரீகோபிகாபதயே நம:



முப்பத்தைந்தாம் அத்தியாயம்

# நரஸிம்மமேதை தமது மகனுக்குக் கலியாணம் பண்ணுவித்த சரித்திரம்

நரஸிம்மமேதை அநவரதமும் பகவத் கலியாண குணங்களை வர்ணித்து, உலகடங்கலும் பகவத் ஸ்வரூபம் எனப் பாவித்து, தாம், பகவான் கிருபையால் *ஸாக்ஷாத்கரித்த ஸ்ரீ கிருஷ்ண லீலாமிர்தத்தை அனுபவித்துக்கொண்டு, பரமசாந்த மூர்த்தியாய், ஞான வைராக்யங்கள் நிறைந்தவராய், ஸம்ஸாரிகளான சேதனர்களுக்கு, தமது ஞானாநுஷ்டானங்களால், பக்திவிரக்திகளை உண்டாக்கிக் காலங்கழிப்பாராயினார்.

இங்ஙனம் இருக்க, புராதன கட்டத்துக்குச் சமீபத்திலிருந்த சாமளாபுரத்தில், திரிபுராந்தகன் என்னும் வேதியன் ஒருவன், வர்த்தகஞ்செய்துகொண்டு, மிகவும் பணக்காரனாக இருந்தான். அவன் தனது மகளுக்குக் கலியாணஞ் செய்யவேண்டுமென்று தீர்மானித்து, தனது புரோகிதனை கிருஷ்ணபட்டனை அழைப்பித்து, தனது மகளுக்குத் தகுந்த கணவனைத் தேடவேண்டும் என்று கூற, நற்குணக் குவியலான அந்த புரோகித வேதியன், கொஞ்சம் யோசித்து, "நரஸிம்மமேதை, மஹாநுபாவராய், உத்தம பாகவதர்க்குள் முதல்வராய், பகவதருட் பிரஸாத ஞானயுக்தராய், வைராக்யசீலராய் வையகத்தார் அனைவரும் தொழத்தக்கவராய் விளங்குகிறார். அவருடைய மகனுக்கு, இந்த வர்த்தகன் மகளைக்கொடுப்பது எவ்வளவோ மேன்மையின் பான்மையாம்" எனத் தீர்மானித்து, நரஸிம்மமேதையை நண்ணி, "சாமளாபுரத்தில் வாழும் திரிபுராந்தகன் என்னும் உத்தமவேதியன், தனது மகளை, உமது மகனுக்குக்கொடுத்து விவாஹஞ்செய்விக்கவேண்டுமென்று நிச்சயித்திருக்கின்றான்; இது சரியான ஸம்பந்தம்" என்று கூறி, அவருடைய சம்மதம் பெற்று, திரிபுராந்தகனிடத்துக்குத் திரும்பிச் சென்று, "உனது மகளுக்கு நரஸிம்மமேதையின் மகனை, மாப்பிள்ளையாக நிச்சயித்து வந்தேன்" என்று கூறினான்.

அதைக்கேட்ட திரிபுராந்தகன், "நரஸிம்மமேதை மிகவும் வறியவராய், குடும்பப் பாதுகாப்பில் சிந்தையற்றவராய், அநவரதமும் பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டிருப்பவராய், இவ்வுலக வுணர்ச்சியற்றவராய் இருக்கின்றார். ஆகையால், அப்பேர்ப்பட்டவருடைய ஸம்பந்தம் சரியல்ல; இதனை எப்படியாவது தடுத்துவிடவேண்டும்" எனத் தனக்குள்ளேயே தீர்மானித்துக்கொண்டு, புரோகிதனை நோக்கி, "நீ நரஸிம்மமேதையினிடத்துக்குப் போய், 'நாளைக்கு முகூர்த்தம் நிச்சயித்திருக்கின்றது; ஆகையால், எங்கள் பெருமைக்குத் தக்கபடி வரிசை எடுத்துக்கொண்டு, நீவிர் சீக்கிரமாய் வரவேண்டும். அங்ஙனம்

* ஸாக்ஷாத்கரித்தல் - கண்கூடாக்கண்டு தரிசித்தல்

வரரதொழிந்தால், கன்னிகை வேறொருவர்க்குக் கொடுக்கப்படுவாள் என்று சொல்லி விட்டுவா" எனக்கூறி அனுப்பினான். அப்போது, ஸ்ரீ. கிருஷ்ணபட்டன், நரஸிம்மமேதை வீட்டுக்கு மறுபடியுஞ் சென்று, அம்மஹானுபாவரிடத்தில், திரிபுராந்தகனுடைய எண்ணத்தை அறிவித்தான். அது கேட்ட நரஸிம்மமேதை, புன்சிரிப்புடையவராய், ஸ்ரீ கிருஷ்ணபட்டனை நோக்கி, "திரிபுராந்தகன் தனது மகளை எனது மகனுக்குக் கொடுக்க ஸம்மத மற்றவனாயிருக்கிறபடியால், இங்ஙனம் சொல்லி அனுப்பினான். நான் செய்யத்தக்கது ஒன்றும் இல்லை. தீனபந்துவும் * ஞானஸிந்துவுமாகிய ஸ்ரீமத் பாண்டுரங்கனுடைய திருவருள் எப்படியோ; நான் அறியேன். ஆயினும் அந்த தேவதேவன் கிருபையால், திரிபுராந்தகன் கோரினபடி நாளைக்கு நான் வருவேன்" என்று கூறினார். கிருஷ்ணபட்டன் பரமானந்தமடைந்து, "ஓ பாகவத முதல்வரே! ஸ்ரீமத் பாண்டுரங்கன், உமது வசப்பட்டிருக்கின்றான். ஆகையால், உமக்கு ஸாத்தியமாகாதது எதுவும் இல்லை. அந்த தேவதேவன், ஒரே புடைவை அணிந்தவளாய், பெரியஸபையின்கண் துர்சாஸனனால் † பரிபவமுற்ற திரௌபதி, தன்னை அழைத்தபோது, அக்கற்புக்கரசியின் மானத்தைக் காக்கவில்லையா! சிறிய தாய் கூறிய நிஷ்டுரமொழிகளால் அவமானம் அடைந்து, தன்னை அடுத்த துருவனுக்குப் பரமபதம் வழங்கவில்லையா! பிரஹ்லாதர்க்காக, கம்பத்திற் பிறந்து, அவர் மொழியைக் காக்கவில்லையா! அத்தகைய மஹானுபாவன்,

'இச்சை யறுத்தவராய் என்னைத் தொழுகின்ற
பொச்சமி லன்பராய்ப் புன்மை தவிர் — ‡ நிச்சலமாம்
நெஞ்சினராய் வாழ்வார்க்கு நித்யஸுக யோகந்தந்
தஞ்சமெனக் காத்தளிப்பேன் யான்'

என்றபடி, 'ஆசையற்றவர்களாய், என்னை மெய்யன்புடன் வணங்குபவர்களாய், குற்றமற்று நிலைத்த மனமுடையவர்களாய் வாழ்வார்க்கு, (நானே முன்னின்று) அழியாத ஸுக க்ஷேம யோகங்களைத் தந்து, பயந்தீர்த்துக் காத்தருள் புரிவேன்' என்று பகவத் கீதையில் பகவானே சொல்லியருளியபடி, உமது யோக க்ஷேமங்களை, தானே § வகித்திருக்க, நீர், எதற்கும் கவலைப்படவேண்டியதில்லை" என்று விண்ணப்பம் செய்து, திரிபுராந்தகனிடத்துக்குத் திரும்பிச்சென்று, "நீ கோரினபடியே, நாளைக்கு ஸர்வஸித்தமாக நரஸிம்மமேதை வருவார்; ஸந்தேகப்படவேண்டாம். விவாக மரியாதை விஷயத்தில் அவர், உனக்குப் பின்னிடையமாட்டார். அன்றியும் அவர், ஒரு பெருங்கூட்டத்துடன் வருவார் என்றெண்ணுகின்றேன். ஆகையால், நீ, அதற்குத் தகுந்த ஸந்நாஹத்தோடிரு" என்று கூறினான்.

* ஸிந்து - சமுத்ரம். † பரிபவம் - அவமானம்.
‡ நிச்சலம் - அசைவற்றது.
§ வகித்தல் - ஏற்றுக்கொள்ளல்.



அதற்குத் திரிபுராந்தகன், சிரித்து, "ஐயோ! வறியவர்க்குள் தலைவராகிய நரஸிம்மமேதை, நமது பெருமைக்குத் தகுந்த வரிசையைச் சித்தஞ்செய்துகொண்டு, நாளைக்குள் வருவதற்கு எங்ஙனம்கூடும்? அவர், லௌகிக ஞானம் இல்லாதவர். ஆகையால், கொஞ்சங்கூட முன் யோசனையின்றி, அங்ஙனம் கூறியிருக்கலாம். அவருடைய இயற்கை உலகறிந்ததன்றோ! அந்தப் பித்தர் வார்த்தையை நீ எங்ஙனம் உண்மையென்று நம்பினை?" என்று எளனங்கூறிப் புரோகிதன் பேச்சை அநாதரவு செய்தான். அதனைக்கேட்ட கிருஷ்ணபட்டன், "ஓ, திரிபுராந்தகா! * திரிபுராந்தகனைப்போல நீயும் பித்தனாயிருக்கின்றனை! நீ, மிகுந்த பணக்காரனென்றும், நரஸிம்மமேதை வறியவர் என்றும், உனது விருப்பத்தின்படி நாளைக்கு அவர் இங்கு வருதல், முடியாதகாரியம் என்றும் கூறினை; எவனுடைய கடாக்ஷ †லேசத்தால், பிரமாதியர், தத்தம் பதவிகளில் நிலைத்திருக்கின்றார்களோ, எவனுடைய திருவிளையாடல்களுக்கு, எல்லாப் பிரமாண்டங்களும் விளையாட்டுக் கருவிகளாயிருக்குமோ, எவனுக்கு பிரமாதிதேவர்கள் தாஸர்களாயிருப்பார்களோ அப்பேர்ப்பட்ட லோகநாதன், நரஸிம்மமேதையின் பக்திவலையிற் சிக்கி, அம்மஹானுக்கு வீரதீர ஊழியனாக இருக்கின்றனன். அந்த வைராக்யசீலர்க்கு, ‡ விரிஞ்சனாதி கடவுளர் § விபூதிகள், துரும்புக்கு ஸமானமாயிருக்கின்றன. அவர் மஹிமையை நீ அறியாய். பரம வைராக்ய சீலராகிய பாகவதோத்தமர்கள், அநவரத பகவத்யான நிஷ்டர்களாய், பாலர், உன்மத்தர், பசாசர்களைப்போல விளங்கியிருப்பார்கள். ஆகையால், அப்பேர்ப்பட்ட மஹான்களுடைய பிரபாவம் பிரமாதியர்க்கும் புகழ்த் தக்கதாயிருக்கும். எனது வார்த்தைகளை அசட்டைசெய்து தள்ளி விடுவையேல், நாளைக்கு அவமானம் அடைவாய்" என விளம்பினான்.

இவ்விடத்திய விருத்தாந்தங்கள் இங்ஙனமிருக்க, நரஸிம்மமேதை, மறுநாள் வைகறையில், வாமனஸ்தோத்திரத்துடன் எழுந்து, ஸ்நான ஸந்தியாவந்தனாதி நித்யகர்மங்களை நிறைவேற்றி, உற்றார் உறவினர்களையும், பாகவதர்களையும் தம்முடன் அழைத்துக்கொண்டு, தாள மத்தளமுதலாகிய வாத்யங்களுடன் பகவந்நாம ஸங்கீர்த்தனம் பண்ணிக்கொண்டு, வீடுவிட்டுப் புறப்பட்டு, சாமளாபுரத்துக்குப் போகையில், புண்டரீகவரதன், ஸ்ரீ ருக்மிணி, ஸத்யபாமை, காளிந்தி, ஜாம்பவதி, நக்நஜித்தி முதலிய பத்னிகளும், கோபிகைகளும்; உத்தவ, அக்ரூர, குசேல, சுருததேவ, பகுளாஸ்வாதி பக்தர்களும், ஸாத்யகி, ஸஞ்ஜயாதி பரமாந்தரங்கர்களும், ப்ரஹ்லாத, நாரத, பராசர, புண்டரீக, சுக,

* திரிபுராந்தகன் - சிவன்.
† லேசம் - அணுவத்தனை.
‡ விரிஞ்சன் - பிரமன்.
§ விபூதிகள் - ஐச்வரியங்கள்.

அம்பரீஷ, சௌனக, பீஷ்ம, தார்ப்ய, ருக்மாங்கத, அர்ச்சுன, வஸிஷ்ட, விபீஷணாதி பரமபாகவதர்களும்; உருவங்களோடு கூடிய சுருதி ஸ்மிருதீதிஹாஸ புராணங்களும்; கங்கை, யமுனை, கோதாவரி, ஸரஸ்வதி, ஸிந்து, காவேரி முதலிய நதிகளும், இந்திராதிதேவர்களும்; குபேராதி யக்ஷர்களும், பாவகாதி வசுக்களும், பிரஹஸ்பதி முதலிய புரோஹிதர்களும், ஸ்கந்தாதி சேனைத்தலைவர்களும்; பிருகு முதலிய மஹா முனிவர்களும், நாரதர் முதலிய தேவமுனிவர்களும்; சித்ரரதன் முதலிய கந்தர்வர்களும், கபிலாதி ஸித்தர்களும், யாதவர் யாவரும், வியாஸாதிமுனிவர்களும், சுக்ராதி கவிகளும், உருவங்களோடு கூடிய மேரு முதலிய பர்வதங்களும் பின்தொடர எழுந்தருளி, நரஸிம்ம மேதையுடன் கலந்து நடந்து வந்துகொண்டிருந்தான். அருந்ததி, அநஸூயை, ஸாவித்ரி முதலிய பதிவிரதா சிரோமணிகள் மங்களப் பொருள்களைக் கொண்டுவந்தார்கள். * ஸாது வாதங்களும் தேவ துந்துபிகளும் முழங்கின. தேவர்கள், பூமாரி பொழிந்தார்கள். அப்போது, பகவந்நியமனத்தால், தேவ, கிந்நர, கிம்புருஷாதியர் கணக்கிலாத வரிசைகள் கொணர்ந்தார்கள். இப்படிப்பட்ட விபவத்தோடு வந்து, நரஸிம்மமேதை, சாமளாபுரத்தை நெருங்கினார். அப்போது விட்டலநாதன், இருவர் தூதர்களை அனுப்பி, தங்கள் வரவைத் திரிபுராந்தகனுக்கு அறிவித்தான். அவன், அவ்வூராருடன் எதிர்கொண்டு வந்து, இந்தகோஷ்டியைக் கண்டு நாணமடைந்து, ஸ்ரீமத் பாண்டுரங்கனுக்கும் நரஸிம்மமேதை முதலிய உத்தம பாகவதர்களுக்கும், வந்தனம் செய்தான். புரோகிதனாகிய கிருஷ்ணபட்டன், பரமாநந்தபரிதனாய், அந்த கோஷ்டிக்கு நடுவிலிருந்த ஸ்ரீருக்மிணிகாந்தனுக்கு வந்தனம்தந்து, "பண்டரிநாதா! உனக்கு அந்தரங்க பக்தரான நரஸிம்ம மேதைக்காக, எங்களுக்கு இரங்கிக் காட்சியளித்தனை. ஆகையால், எமது ஜன்மங்கள் பரிசுத்தமடைந்தன; நாங்கள் புண்யவான்கள் ஆயினோம். இனி நடக்கவேண்டிய காரியங்களை நீயே நிர்வகிக்க வேண்டும்" என்று வேண்டினான். அப்போது பகவான், திரிபுராந்தகனை நோக்கி, "நீ, நேற்றுக் கிருஷ்ணபட்டனிடத்தில் சொல்லியனுப்பினபடி, நரஸிம்மமேதை, விபவத்தோடு வரிசை கொண்டுவந்தார். எங்கள் பெருமைக்குத் தக்கவண்ணம், நீ, என்ன வரிசை சித்தஞ் செய்தனை?" என்று கேட்க, திரிபுராந்தகன் நாணங்கொண்டு, ஒன்றும் பேசாமல் மௌனமாயிருந்தான்.

அதற்குப் பகவான் அவனை நோக்கி, விவாகமானாலும், விவாதமானாலும், தக்கவர்களோடு செய்வது உத்தமம். உனது ஸம்பந்தம் எமது பெருமைக்குத் தகுந்ததல்ல. ஆனாலும், நீ, கூச்சப்படாமல் உன்னால் சேகரிக்கப்பட்ட பதார்த்தங்களை எங்களுக்குக் காட்டி, பிறகு, தக்கபடி விநியோகஞ்செய்" என்றான். அதுகேட்ட திரிபுராந்தகன், வாஸுதேவனை நோக்கி, "நீங்கள் யாவர்? எனக்குத் தெரிய

* ஸாதுவாதம் - ஓர்வித வாச்சியம்



வில்லையே! கொஞ்சம் தயைசெய்து சொல்லவேண்டும்" என்று கேட்க, பகவான், புன்னகை செய்து, "ஓ வேதிய! துவாரகாபுரியில், இந்த நரஸிம்மமேதைக்கு, அநேக வர்த்தக சாலைகள் உள. அவைகளில் ஒரு சாலைக்கு, இம்மஹாநுபாவர், என்னைக் காரியகர்த்தனாக ஏற்படுத்தியிருக்கின்றார்: என் பெயர் சாமளஸா. நான் இவர்க்கு, மிகவும் நெருக்கமானவன். ஆகையால், இத்தனை வேலைகளையும் முகமலர்ச்சியோடு செய்கின்றேன். விவாகவிஷயமாய் என்னை, இவர் வரவழைத்தபடியால், நான் வந்தேன். இவருடைய லௌகிககாரியங்களையெல்லாம், நானே நிர்வகிக்கின்றேன். நீ, உனது உற்றார் உறவினரை உடனழைத்துக்கொண்டு, விரைவில் வருக" என்று கட்டளையிட்டு அனுப்பிவிட்டு, நினைத்த மாத்திரையிலேயே விஸ்வகர்மனை வரவழைத்து, "கல்யாணமண்டபத்தை நிருமிக்க" என்று நியமிக்க, அவனும் அங்ஙனமே செய்தான். காமதேநு, கற்பக விருக்ஷம் ஆகிய இவைகள் இரண்டும், ஸமீபத்தில் வந்திருந்து ஸமஸ்த பதார்த்தங்களையும், குறைவற வழங்கிக்கொண்டிருந்தன. திரிபுராந்தகன், உற்றார் உறவினருடன் வந்து சேர்ந்தனன். இந்திராதியர் மணமகனை அலங்கரித்தனர். இந்திராணி முதலிய் பெண்கள், மணமகளைத் தக்கபடி அலங்காரஞ் செய்தார்கள். சுபமுகூர்த்தத்தில், பகவான் நியமனத்தால், பாணிக்ரஹண மஹோற்சவம் நடத்தப்பட்டது; பகவானும், ஸ்ரீ ருக்மிணீதேவியும் முறையே மணமகன், மணமகள் இவர்கள் இருவர் பக்கங்களிலும் வீற்றிருந்தார்கள். தேவர்களுடைய ஸாதுவாதங்களும் வேதியருடைய ஆசீர்வாதங்களும் தேவ துந்துபியின் நாதங்களும் ஸமுத்ர கோஷத்தைப்போல் முழங்கின. வாஸுதேவனும் வாஸுதேவனுடைய மனைவியரும், தேவமுனிவரும், வதூவரர்களை ஆசீர்வதித்தார்கள். விவாக முழுவதையும், பகவந் நியமனப்படி, இந்திராதி தேவர்களே நிர்வகித்தார்கள். ஸுமங்கலிகள் செய்ய வேண்டிய சுபகாரியங்களை, அருந்ததிமுதலிய முனிவர் மனைவியரும், * சசிதேவி முதலிய தேவமாதர்களும் நிர்வகித்தார்கள். திருமணங் காண வந்தவரனைவர்க்கும், விசேஷமாய் ஆஹார வஸ்த்ராபரணங்கள் வழங்கப்பட்டன. ஸாக்ஷாத் பகவானே விவாக கோஷ்டியிற் கலந்து விவகரித்தபடியால்,

హరిర్యత్ర హి భుఙ్క్తే । తత్ర భుఙ్క్తే జగత్త్రయం ॥

(என்றால்)

'எங்கே திருமால் இருப்பானோ மூவுலகும்
அங்கே யமர்ந்திருக் கும்'

என்றபடி, மூவுலகினரும், திருப்தியடைந்தார்கள் என்று சொல்லவும் வேண்டுமோ? இங்ஙனம் பகவான், அதிவைபவத்தோடு விவாக காரியங்களை நிர்வகித்து, ஸம்பந்திகளுக்குச் செய்யவேண்டிய மரியாதைகளைச் செய்து, அவ்வவர் இடங்களுக்குப் போக்கி, நரஸிம்மமேதையை அவரு

* சசிதேவி - இந்திராணி

டைய உற்றார் உறவினருடன் அழைத்துக்கொண்டுபோய் வீட்டில்விட்டு, "ஓ, பக்தர்கள் முதல்வ! நான் அநவரதமும் உன் மனத்தகத்தை விட்டுப் பிரியாதிருக்கின்றேன். நீ நினைத்தபோதெல்லாம் உனது கண்ணுக்குப் புலப்பட்டு, உனது காரியங்களை முடிக்கின்றேன். * தநலுப்தன் தனத்தைக் காக்கிறபடி, நீ, ஐந்தடக்கும் ஞானைஶ்வரியத்தைக் காப்பாற்றக்கடவை. இதுபற்றியே திருக்குறள் நீதிவெண்பாவிலும்,

'ஐந்தடக்கி யாமை அழியா வகையால்நாம்
† ஐந்தடக்க லன்றோ அறிவுடைமை—நந்தா
உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்புக்கோர் வித்து'

என்று கூறப்பட்டிருக்கின்றது. எனது ‡ விபூதிகளாகிய சேதநா சேதநங்களை நானாக மதிக்கக்கடவாய். உனக்கும் உனது அன்பர்க்கும் எனது ஸாயுஜ்ய பதவி, உள்ளங்கை நெல்லிப்பழமாய் இருக்கும்" என்று அநுக்ரகஞ் செய்து, தனது பரிவாரத்துடன் அந்தர்த்தானமாயினான்.

அர்த்திதார்த்த பரிதான தீக்ஷிதாய நம:

# முப்பத்தாறும் அத்தியாயம்

# நரஸிம்மமேதை ⁑ ஹுண்டித் திருமுகம் தந்த சரித்திரம்

புராதன கட்டத்தில் நரஸிம்மமேதை,

సమదుఃఖసుఖస్స్వస్థ । స్సమలోష్టాశ్మకాంచనః ।
తుల్యప్రియాప్రియోధీర । స్తుల్యనిందాత్మసంస్తుతిః ।
మానావమానయోస్తుల్య । స్తుల్యోమిత్రారిపక్షయోః ।
సర్వారంభపరిత్యాగీ । గుణాతీతస్సఉచ్యతే ॥

"ஸுகமும் துக்கமும் பகலும் இரவும்
ஓடும் பொன்னும் உகப்பும் இகப்பும்
நிந்தையும் புகழும் நேசனும் பகைவனும்
பெருமையும் சிறுமையும் ஒருமையா எண்ணி
ஆத்ம தரிசன ஸூத்ர முணர்ந்து
செயற்கை யற்ற இயற்கையி லமர்ந்து

* தனலுப்தன் - உலோபி. † ஐந்தடக்கல்-ஐம்புல விஷயங்களைத் தடுத்தல்.
‡ விபூதி - ஐச்வரியம்
⁑ ஹுண்டி - ஒருவன் ஓரிடத்தில் பெற்றுக்கொண்ட பணத்தை மற்றோரிடத்தில் செலுத்துவதாகப் பிணைப்பட்ட சீட்டு.



முக்குணங் கடந்த முத்தனை
ஞானி யென்பரிஞ் ஞாலத் திடையே" என்றபடி

ஸுகத்தையும் துக்கத்தையும், பகலையும் இரவையும், ஓட்டையும், பொன்னையும், விருப்பையும் வெறுப்பையும், நிந்தையையும் புகழையும், நேசனையும் பகைவனையும், பெருமையையும் சிறுமையையும், ஒன்றாக மதித்து, ஆத்மதரிசனம் அறிந்து செய்து, இருவினையறப் பேரியற்கையுற்று, ஸாத்விகம், ராஜஸம் தாமஸம் என்கிற முக்குணங்களைக்கடந்து எந்நேரமும் பகவத்யானபரராய் இருக்கிறகாலத்தில், துவாரகைக்கு யாத்திரைசெல்பவராகிய பிராமணர் சிலர், அங்கு வந்து, "இவ்வூரில் துவாரகைக்கு ஹுண்டிகொடுப்பவர்கள் உளரா?" என்று, விசாரித்தார்கள். அப்போது, ஸாது ஜனங்களுடைய வைபவங்களைக்கண்டு, காரணமின்றி அழுக்கறுக்கும் அயோக்யரிற் சிலர், அந்த பிராமணர்களை நோக்கி, "இவ்வூரிலே நரஸிம்மமேதையென்னும் பிராமணர் ஒருவர் இருக்கின்றார்; அவர் மிகவும் பணக்காரர்; ஆகையால் எந்த வூர்க்கானாலும், எத்தனைத் தொகைக்கானாலும், ஹுண்டி கொடுப்பார்" என்று கூற, அவர்கள், நரஸிம்மமேதையின் வீட்டை விசாரித்துக் கொண்டு, அங்குச்சென்று, அவரைநோக்கி, "நாங்கள் துவாரகைக்கு யாத்திரை போகிறவர்கள்; வழியில் திருடர் பயத்தால், பணத்தை எங்களோடுகூடக் கொண்டுபோவதற் கநுகூலப்படவில்லை. ஆகையால் தாங்கள், அறுநூறு வராகன்களுக்கு ஒரு ஹுண்டி தந்து, அவைகளை நாங்கள் துவாரகையிற் பெற்றுக்கொள்ளும்படி கிருபை செய்ய வேண்டும்" என்று கோரினார்கள். அதுகேட்ட நரஸிம்மமேதை, தமது மனத்தகத்தில், பின்வருமாறு விதர்க்கிக்கலானார்:

"நான், மிகவும் வறியன். அன்றாடம் குடும்பப் பாதுகாப்புக்கே போதுமான வரும்படியின்றி வருந்துகின்றேன். இத்தகைய நான், இத்தனை பெரியதொகைக்கு ஹுண்டி உதவுதற்கு, எங்ஙனம் வல்லவனாவேன்! யாரோ பொறாமைக் குணமுடையார், இவர்களை என்னிடம் அனுப்பினார்களென்று தோன்றுகிறது. ஆனாலும் என்ன! வெந்நீரில் வீடுவேகுமா!

సర్వస్యచాహంహృదిసన్నివిష్టో । మత్తస్స్మృతిర్జ్ఞానమపోహనంచ ।
వేదైశ్చసర్వైరహమేవవేద్యో । వేదాంతకృద్వేదవిదేవచాహం ॥

(என்றால்)

'எல்லா வுயிர்களின் இதயங் களினும்
நான்வாழ் கின்றனன் ஞானமும் நினைப்பும்
மறப்பும் என்னால் வருகின் றனவாம்
மறைக ளனைத்தையும் மதிக்கவேண் டியவனும்
மற்றவை தம்மை வகுக்கவேண் டியவனும்
அன்னவை தம்மை அறிந்துவாழ் பவனும்
யானென வுணர்வாய் அர்ச்சுன
ஊனமில் உலகத் துத்தமன் நீயே' என்றபடி,

எல்லாவுயிர்களின் இதய கமலங்களிலும் நான் வீற்றிருக்கின்றேன் என்றும், (அவர்களுக்கு) உணர்ச்சியும், நினைப்பும், மறப்பும் என்னால் உண்டாகின்றன வென்றும், எல்லா வேதங்களையும் அறியத்தக்கவனும், விளக்கத்தக்கவனும், அறிந்தவனும் நானே என்றும், ஸ்ரீ பகவத்கீதையில் பகவான், தானே சொல்லியருளினன் அல்லவா! அங்ஙனம் இருக்க, அழுக்காறுடையவர்களெனச் சிலரை நான் அகற்ற எண்ணுதல் ஞாயமன்று. எல்லாம் ஈசன் செயலே ஆகும். துவாரகை யாத்திரைசெய்யக் கோரின வேதியர்கள் மூலமாய், ஸ்ரீ துவாரகாபதியே, எனக்கு திரவியம் தந்தருள்கின்றனன், இவர்கள் கோரினபடி இவர்கட்கொரு ஹுண்டித்திருமுகம் எழுதித் தந்து, நான் இந்த திரவியத்தைப் பற்றிக்கொண்டு, அதனால், ஈச்வர ஸந்தானங்களாகிய சேதனர்களில் தீனர்களை ஆராதிப்பேன். இவர்கள் மூலமாய், எனக்கு இந்த திரவியத்தைத் தந்தருளும் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா, இவர்கட்குத் துவாரகையில் திரவியத்தைச் செலுத்துக. எல்லாம் உணர்ந்தவனாகவும், எல்லாம் வல்லவனாகவும் உள்ள பகவானுக்கு, இது ஒரு திருவிளையாட்டாக இருக்கும்'' என்பதேயாம். இங்ஙனம் எண்ணிக்கொண்ட அவர், அந்த அறுநூறு வராகன்களையும் பெற்றுக்கொண்டு, அதற்காக ஒரு ஹுண்டி எழுதி, அவர்கள் கரத்திற் கொடுத்தனர். அது பின்வருமாறு காண்க;

புராதன கட்டம்

விபவஸு, கார்த்திகைமீ, கடுவ

ம-ா-ா-ஸ்ரீ,

ப. சாமளஸா அவர்கள்,

வர்த்தகசாலைத் தலைவர்,

ஸ்ரீ துவாரகாபுரி.

அன்புள்ள ஐயா,

தங்களுக்கு நமஸ்காரம். இது கொண்டுவரும் ஸாதுக்கள், ஸ்ரீ துவாரகா யாத்திரை வேதியர்கள். இவர்களிடத்திலிருந்து, அறுநூறு வராகன் பெற்றுக்கொண்டு, நான் கொடுத்த இந்த ஹுண்டித் திருமுகத்துடன் இவர்கள் அங்கு வருகின்றார்கள். ஆகையால், இதன்படி, இவர்களுக்குத் தொகையைச் செலுத்திவிடக் கோருகின்றேன்.

இங்ஙனம்,

அன்பும் வணக்கமுமுள்ள,

நரஸிம்மமேதை.

அவர்கள் இந்த ஹுண்டியைப் பெற்றுக்கொண்டு பரம ஸந்தோஷத்துடன் துவாரகைக்குப் போனார்கள். நரஸிம்மமேதை, அந்தத் திரவியத்தை,



'ஈனருக்கு வித்தத்தை ஈயாமல் ஈஶ்வரஸ்வா
தீனருக் கீதல் சிறப்பு'. என்றபடி,

ஈஶ்வர வழிப்பட்ட தீனர்களுக்கு விநியோகஞ் செய்தார். யாத்திரை சென்ற பிராமணர்கள், துவாரகையைச் சேர்ந்து, ஸ்ரீ துவாரகாபதியைத் தரிசித்து, அவ்வூராரை, "புராதன கட்டத்திலுள்ள நரஸிம்மமேதையின் வர்த்தக சாலாதிகாரியாகிய சாமளஸா என்பவர் யார்?" என்று கேட்க, அவர்கள், "இவ்வூரில், நரஸிம்மமேதைக்கு வர்த்தகசாலையே கிடையாது. அங்ஙனம் இருக்க, அதற்கதிகாரி, எங்ஙனம் இருப்பார்!" என்று பரிஹாஸம் பண்ணினார்கள். அதைக்கேட்ட யாத்திரைக்காரர் திகிலடைந்து வருந்தினார்கள். இங்ஙனம் இருக்க, தேவாதி தேவனான ருக்மிணீ காந்தன் ஒரு வியாபாரி வேடம் பூண்டு, உத்தவரும் அக்ரூரரும் தன்னைப் பின்பற்றிவர, திவ்ய * சகடத்திலேறி வந்து, யாத்திரை வேதியர்களைக் கண்டு, வண்டியினிழிந்து, அவர்கள் ஸமீபத்திற் சென்று, வருந்தியிருந்த அவர்களை நோக்கி, "ஓ, பிராமணோத்தமர்காள்! நான், புராதன கட்டத்தில் வாழும் நரஸிம்மமேதையினுடைய வர்த்தக சாலாதிகாரி, என்பேர் சாமளஸா, அவர், துவாரகா யாத்திரை செய்யும் பிராமணர்களுக்கு, அறுநூறு வராகன்களுக்கு ஹுண்டி எழுதித்தந்ததாகவும், அந்த ஹுண்டியை அவர்களிடத்திருந்து நான் பெற்றுக்கொண்டு, தொகையை விரைவிற் செலுத்திவிட வேண்டியதாகவும் எனக்குக் கடிதம் எழுதியிருக்கின்றார். நான், அந்த ஸாதுஜன முதல்வராகிய எனது யஜமானருடைய கட்டளையைச் சிரஸாவஹித்து, அந்தக் கடிதத்திற் குறித்த வேதியர்களை, இதுவரையிற்றேடித் திரிந்தேன். அவர்கள் நீங்களாயிருக்கலாம் என்று தோன்றுகிறது. எனது எண்ணப்படி நீங்களே அவர்களானால், எனது யஜமானர் எழுதித்தந்த ஹுண்டியைத் தாருங்கள். உங்களுக்குப் பணத்தைச் செலுத்துகின்றேன்" என்றான். அப்போது, அவ்வேதியர்கள், கர்ணாமிர்த மனைய அம்மொழிகளைக் கேட்டு, வாடிய பயிர், மழையில் நனைந்து நீர் பெற்றுயர்ந்தபடி, பரமானந்த மடைந்தவர்களாய், "ஓ, ஐயா, சாமளஸா! நாங்களே அந்த யாத்திரை வேதியர்கள்; இதோ, நரஸிம்மமேதை எங்களுக்கு எழுதித்தந்த ஹுண்டி" யென்று, அதனை எடுத்து அவன் கரத்திற் கொடுத்தார்கள். சாமளஸா மிகமகிழ்ந்து, வணங்கி, அந்த ஹுண்டியைத் தன்திருகரங்களிலும் வாங்கிக் கண்களில் ஒற்றிக்கொண்டு, சிரமேற்றாங்கி, பரமானந்தத்தால் உடல் பூரித்து, அதனை ஒருமுறை இருமுறை மும்முறையாக வாசித்து வியந்து, "ஓ மஹாத்மாக்களே! எனது யஜமானர்க்குப் பல † வர்த்தகசாலாத்யக்ஷர்கள் இருந்தும், நானே ‡ பிராணபதமானவன், நான் அவர் வேலையில்

* சகடம் - வண்டி.

† வர்த்தகசாலா - அத்தியக்ஷர் - வர்த்தகசாலைத்தலைவர்.

‡ பிராணபதம் - உயிர்நிலைத்த இடம்.

* வேதனத்துக்கமர்ந்தவனல்லன். அவரது நற்குண நிதியை விரும்பிய நான், அவர்க்குத் தாஸனானேன். அவரது அன்பே என்னை ஆள்கின்றது. நான், அவர்க்கும், அவர் எனக்கும் உயிர் நிலைகளாக இருக்கின்றோம். அவர், எங்ஙனம் எந்நேரமும் அன்பராய் என்னையே எண்ணியிருக்கின்றாரோ, அங்ஙனமே நானும், ஸதா அவரைத் தவிர வேறு உணராமல் அவரையே நினைந்து நினைந்து மகிழ்ந்து மகிழ்ந்து வாழ்கின்றேன். அவரே எனக்குச் சுற்றமுந் துணையும் எல்லாமுமாயிருக்கின்றார். எனது உடல் மாத்திரம் இங்கிருக்கின்றதே அன்றி, மனம் அவரிடத்திலேயே லயித்திருக்கின்றது. மஹான்களாகிய உமது புண்ய விசேஷத்தால், எனது யஜமானன் கையெழுத்தைக் காணப் பாக்கியம் பெற்றேன். இன்று எனது ஜன்மம், † ஸாபல்யமடைந்தது. இதோ, உமது பணத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்'' எனக் கூறி, வண்டியிற் கொணர்ந்த பணமுடிப்பை அவர்களுக்குக் கொடுத்து மறைந்தான். அப்போது, அந்த வேதியர்கள் அம் முடிப்பை அவிழ்த்துப் பணத்தை எத்தனை எண்ணினாலும் அது எண்ணினுக்குள் அடங்காமல் வளர்ந்துகொண்டே இருந்தது. அவர்கள் இவ்வற்புதத்தைக்கண்டு, இது பகவான் திருவிளையாட்டென்று தீர்மானித்து, அப்பணத்தைத் தீனஜனங்களுக் குபயோகித்து, மறுபடியும் புராதன கட்டத்துக்கு வந்து நரஸிம்மமேதைக்கு ஸாஷ்டாங்க வந்தனம் தந்து, நடந்த விருத்தாந்தங்களை விண்ணப்பித்து, ''ஓ, மஹாத்மா! உமது கிருபையால், எங்களுக்குக் கண்கூடாக, பகவானுடைய தரிசனம் கிடைத்தது. இனி எம்மை, உம்மவர்களாக அபிமானித்தீரானால், எமக்கு மறுஜனனம் ஸித்திக்காது'' என்று விண்ணப்பித்து, அம்மகானுபாவருடைய அநுக்ரஹத்தையும் உத்தரவையும் அடைந்து, தமதூர்க்குப் போனார்கள். நரஸிம்மமேதை, பகவானுடைய கலியாணகுணங்களைப் புகழ்ந்துகொண்டு, ஆனந்த பரவசராய், பிரபஞ்சஞானமற்று, பிரமஞானமுற்று வாழ்ந்தார்.

ஆச்ரிதகல்பத்ருமாயநம:

* வேதனம் - சம்பளம்.

† ஸாபல்யம் - ஸபலம் - பலன்.

## முப்பத்தேழாம் அத்தியாயம்

# நரஸிம்மமேதை தமது மகளுக்கு வரிசை எடுத்த சரித்திரம்

நரஸிம்மமேதை, வைராக்கிய சீலராய் * நிரந்தர பகவத்தியானம் செய்துகொண்டு, ஸம்ஸாரத்தி லிருந்தும்,

'எரியும் மிதிலையில் என்றன் பொருள்கள்
எதுவும் எரிய இலை' என்றபடி,

'நெருப்பில் வெந்துகொண்டிருக்கிற மிதிலாபுரியில்,எனதுபொருள்களில் எதுவும் எரியவில்லை' என்று இயம்பிய பரமயோகியான ஜனகசக்ரவர்த்தியைப்போல,எதிலும் ஒட்டாமல் விளங்கினார். இங்ஙனம்இருக்கும் நாட்களில், அவருடைய மகள், தனது மாமியார் வீட்டில் மங்கைப் பருவம் அடைந்தபடியால், அவருடைய மனைவி அவரைநோக்கி ''எனது காதல! நமது புத்ரிக்குத் தகுந்த வரிசை எடுத்துக்கொண்டு போய், அவளுடைய புக்ககத்தில் வைத்து வருவது நமது கடமையாயிருக்கின்றது'' என்று விண்ணப்பிக்கக்கேட்ட நரஸிம்மமேதை, ''ஓ, மாதே! எனக்குள்ள ஆஸ்தி, ஹரிநாமமே. அதனை வரிசையாக எடுத்துக்கொண்டு போகின்றேன்'' என்று கூறி, கைகளில் தாளத்தையும் தம்புருவையும் பிடித்து, பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டு ஸம்பந்திவீட்டுக்குச் சென்றார். அப்போது, அங்கிருந்த சுற்றத்தார் இவரைக் கண்டு, ''இந்தப் புண்ணிய புருஷர், எத்தனை சாதுர்யமாகக் கார்ய நிர்வாகம் செய்கின்றார் பாருங்கள்! மங்கைப் பருவம் அடைந்த மகளுக்குத் தம்புருவையும் தாளங்களையும் வரிசை கொண்டு வருவதைப் பார்த்தீர்களா!'' எனப் பரிஹாஸம் பண்ணினார்கள். இம்மொழிகளைக் கேட்ட அவருடைய புத்திரி, மிக வருந்தி அழ, அதற்காற்றாத நரஸிம்மமேதை, அச் சுற்றத்தாரை நோக்கி, ''உங்களுக்கு என்ன வரிசைவேண்டும்? நீவிர் விரும்பின பொருள்கள் எத்தனை அரும் பொருள்களாயினும் அவைகளை இப்போது இங்கிருந்தபடியே அழைப்பித்துத் தருகின்றேன். யார் யார்க்கு எந்தெந்தப் பதார்த்தங்களில் பிரியமோ, அந்தந்தப் பதார்த்தங்களை அருமையென்றெண்ணாமல், ஒரு கடிதத்தில் எழுதித்தருக. நான், ஒரு விநாடிக்குள் அப் பதார்த்தங்கள் அனைத்தையும் வரவழைத்து,உமது விருப்பத்தைப் பூர்த்திசெய்கின்றேன்'' என்றுகூறினார். அதுகேட்ட அவர்களில் ஒருவன், ''நான் எழுதுகின்றேன்'' என்று, நரஸிம்மமேதைக் கெதிரில்

* நிரந்தரம் - இடையறாமை.

உட்கார்ந்து, ஒரு பத்திரிகை எழுதத் தொடங்கினன். அப்போது, அங்கிருந்த சுற்றத்தார், அவருடைய மருமகனுக்கும், மகளுக்கும், தமக்கும் அருமையாகிய ஆடையணிகள் வேண்டுமென்று, தத்தம் இச்சையின்படி வேறுவேருக எழுதுவித்தார்கள்.

"வயது முதிர்வதால் மாந்தரெவர்க்கும்
மயிரும் வெளுக்கும் வாயிற் பற்களும்
கழன்று போகும் கண்களும் இருளும்
காது மந்தமாம் நீதுசேர் ஆசை
மாத்திரம் கெடாமல் வளரும்
இந்த மாயம் இறும்பூ துடைத்தே"

என்றபடி,

'மனிதர்க்கு வயது முதிர்வதினல், மயிரும் நரைத்துப்போகும்; வாயிலுள்ள பற்களும் விழுந்து போகும்; கண்களும் பார்வை குறையும்; காதுகளும் செவிடுபடும்; துன்பந்தரும் துராசைமட்டும். ஒரு கெடுதியும் அடையாமல் நாளேற நாளேற வளருமே அன்றிக் குறையாது. அவ்விதமாக, அங்குக் கூடியிருந்த சுற்றத்தார் அனைவரும் பேராசை யுடையவர்களாய், ஒவ்வொருவரும் நூறு நூறுயிரம் விலை பெறத்தக்க பதார்த்தங்களை விரும்பி யெழுதுவித்தார்கள். நரஸிம்ம மேதை அவைகளனைத்துக்கும் ஸம்மதித்து, எழுதினவனை நோக்கி, "உனக்கிஷ்டமான பொருளையும், இப்பத்திரிகையிற் குறித்தெழுதுக" என்ருர். அவன், நரஸிம்மமேதையைப் பித்தரென்றெண்ணியிருந்தனன்; ஆகையால், தனக்கொரு உருட்சியான கருங்கல் வேண்டுமென்று அதனில் எழுதினன். அப்போது நரஸிம்மமேதை, அப்பத்திரிகையை வாங்கிக்கொண்டு, தனது எண்ணமுணர்ந்து, தன் பக்கத்தில் ஒருபரிசாரக வேடந்தாங்கி, வந்து நின்றுகொண்டிருந்த ஸ்ரீமத் பாண்டுரங்கனை நோக்கி, அப் பத்திரிகையை அவர் கரத்திற்கொடுத்து, "ஓ, ஐய, சாமளஸா! நீ விரைவாய் ஒடி, இப்பத்திரிகையில் எழுதியுள்ள பதார்த்தங்களை ஒரு வண்டியில் பத்திரமாய் ஏற்றிக்கொண்டு வருக" என்று கட்டளையிட்டார். பரிசாரக வேஷதாரியாகிய புண்டரீக வரதன், தங்கள் சித்தம் எனது பாக்கியம்" என்று, அப்பத்திரிகையைச் சிரஸாவகித்து ஓடிச்சென்று, அந்த க்ஷணத்திலேயே, பத்திரிகையில் எழுதியிருந்த எல்லாப் பொருள்களையும் வண்டிமேலேற்றிக் கொண்டு வந்தான். நரஸிம்மமேதை, பத்திரிகையில் எழுதியிருந்தபடி அவரவர் விரும்பின பதார்த்தங்களை அவரவர்களுக்குத் தவருமற் கொடுத்து, பத்திரிகை எழுதினவனுக்கு, அவன் விரும்பினபடியே உருட்சியான கருங்கல் ஒன்றைக் கொடுத்தார். இவ்வற்புதத்தைக் கண்டோ ரனைவரும், ஆச்சரியம் அடைந்து, நரஸிம்மமேதையின் மான்மியத்தைக் கொண்டாடி, பத்திரிகை எழுதினவனை நோக்கி,

'கற்பகத்தைச் சேர்ந்தார்க்குக் காஞ்சிரங்கா யீந்ததேல்
முற்பவத்திற் செய்த வினை'

என்றபடி,



கற்பக விருக்ஷத்தைச் சேர்ந்தும், உனது முற்பவ வினையின் மகத்துவத்தால், நீ வேறொன்றும் பெருமல், ஒரு கருங்கல்லைக் கேட்டுப் பெற்றுக்கொண்டாய். உனது துர்அதிர்ஷ்ட தசையே தசை, மற்றெல்லாம் வசை" என்று கூறி, அவனைப் பரிகாஸம் பண்ணினர்கள். அப்போது, அங்குக் கூட்டங்கூடியிருந்த சுற்றத்தார், பரிசாரக வேஷதாரியான கோபாலனை நோக்கி, "நீ, யாவன்? உனது இருப்பிடம் யாது? உனது பேரென்ன?" என்று கேட்டார்கள். பகவான் நகைத்துக்கொண்டே அவர்களை நோக்கி, "இந்த நரஸிம்மமேதைக்கு துவாரகையில் அநேக வர்த்தக சாலைகள் உள. அவைகளில் ஒரு சாலையை நிர்வஹிப்பவன் நான்; இவருடைய காரிய தரிசிகளுக்குள் நானே முதன்மையானவன்; இவர் தமது அந்தரங்கத்தை எனக்கு மாத்திரமே தெரிவித்துக் கொண்டிருப்பார். நான் இவர் எண்ண மறிந்து அதன்படி நடந்துகொள்ளக் கூடியவன்; இவருடைய நன்மைகளையே எந்நேரமும் கோரியிருப்பேன்; இவர் என்னிடத்தில் அதிக நம்பிக்கை உள்ளவராய், கூச்சம் அற்றவராய், விரக்தி யுள்ளவராய் விளங்குவார்; என்பேர் சாமளஸா, இவர் மகளுக்கு வரிசை வைத்துப் போவதற்காக, எனது எஜமானராகிய இவர் எண்ணம் தெரிந்து இங்கு வந்தேன்" என்று கூறி, தனது * ஸங்கல்ப மாத்திரையிலேயே, ஸமஸ்த பதார்த்தங்களையும் வரவழைத்து, சுற்றத்தாரையும் மற்றவர்களையும் உட்காரவைத்து ஸகல † பக்ஷ்ய, ‡ போஜ்ய, $ சோஷ்ய, ¶ லேஹ்ய, + பானீயங்களுடன் வயிருரப் புசிப்பித்து, திவ்ய வாஸனையோடு கூடிய சந்தன புஷ்ப தாம்பூலங்களையும் வழங்கி, நரஸிம்மமேதையின் கழுத்தில் ஒரு துளஸி மாலையைச் சூட்டி, மறைந்தனன். அப்போது அங்குள்ளாரனைவரும், இது ஸ்ரீபாண்டுரங்கன் திருவிளையாட்டெனத் தீர்மானித்து, நரஸிம்ம மேதையின் மான்மியத்தைக் கொண்டாடி, அவரைப் பலவாறு துதித்தார்கள். விட்டல்நாதன், பரம கிருபைகூர்ந்து, நரஸிம்மமேதையின் கழுத்திற் சூட்டிய திருத்துழாய்மாலை, அவர், பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்கிற காலத்திலெல்லாம், அவருடைய திருக்கழுத்தில் ஒளி வீசிக்கொண்டிருந்து, மற்றைக் காலங்களில் மறைந்திருந்தது.

இவ்வற்புதங்களைக்கேட்டு, அத்தேசத்தரசன், நரஸிம்மமேதையின் மான்மியங்களைச் சோதித்துணர வேண்டுமென்று, அவரிடத்திற்கு வந்து, அவர் கழுத்தில் இருந்த துளஸிமாலையை நீக்கி, "ஓ, நரஸிம்மமேதாய்! நீ, உண்மையில் பகவத் பக்தனானல், அனைவரும் காண உனது கழுத்தில்

* ஸங்கல்பம் - நினைப்பு.
† பக்ஷ்யம் - அதிரசம் வடை முதலிய சிற்றுண்டி (உண்பன.) [வன.
‡ போஜ்யம் - சோறு முதலிய பேருண்டி (தின்பன). மெல்லாமல்விழுங்கு
$ சோஷ்யம் - பாயஸ முதலிய மதுர உணவு. (உறிஞ்சுவன.)
¶ லேஹ்யம் - ஹல்வா பச்சடி முதலிய உண்டி. (நக்குவன.)
+ பானீயம் - நீர் மோர் முதலிய நீருண்டி (பருகுவன.)

முன்போல வேறொரு மாலை வரவேண்டும்; அங்ஙனம் வராதேல், உன்னை, வெளிவேட்தாரி எனத் தீர்மானித்து, தண்டிப்பேன்." என்று கூறினன். அப்போது நரஸிம்மமேமதை, பகவானைத் துதித்துக்கொண்டிருந்தார்; எத்தனைதான் துதித்தாலும், அவர் கழுத்தில் வேறொரு மாலை வரவேயில்லை. பகவான், நரஸிம்மமேமதையின் வாக்கால் நிந்தாஸ்துதி பெறவிரும்பி, மாலையை அளிக்காதிருந்தான். அரசன், "இவ்வேஷதாரி, இந்த்ரஜாலஞ்செய்து, உலகை மயக்குகின்றான்," என்று கூறிக் கத்தியால் அவரை வெட்டவந்தான். நரஸிம்மமேமதை பகவானை நினைந்து, "அடா, மாயா! * தளவெறி பல்லிடை மடவார் தயிரிருக்கும் உறியேறி உளவறிந்து திருடியுண்ட ஜாரசோர சிகாமணீ!

"தெள்ளிய வாசிறியா னங்கை காளுறி
மேலைத் தடாநி றைந்த
வெள்ளி மலையிருந் தாலொத்த வெண்ணெயை
வாரி விழுங்கி யிட்டுக்
கள்வ னுறங்கு கின்றான் வந்து
காண்மின்கள் கையெல்லா நெய்வயிறு
பிள்ளை பரமன் றிவ்வேழுலகுங் கொள்ளும்
பேதையே னென்செய்கே னென்செய்கேனோ"

என்ற, திருமங்கை யாழ்வார் அருளிச்செயலின்படி, வெண்ணெய் திருடியுண்ட வாயன், ஆயன், மாயன் அல்லையா நீ! ஒரு துளஸிமாலையைக் கொடுப்பதனால் உனது பாட்டன் ஈட்டிய தேட்டம் வாட்டமாகுமோ! என்னை ஏன், இங்ஙனம் சோதிக்கின்றாய்; மன்னவன் சேதிக்கின்றான்; நான், பேதிக்கின்றேன்; நீயும் சாதிக்கின்றாய். எனது உயிர் போகும்; உடம்பு சாகும்; எனக்கு நோகும் என நான் வருந்தவில்லை; உனது திருநாமப்ரபாவத்துக்குக் கெடுதி வருமே! நீ எல்லாம் வல்லவன், எல்லாம் உணர்பவன், எங்கும் இருப்பவன் என்றபெருமையோடு வாழ்கின்றாயே? இந்தப் பெருமைகளுக்கு இடையூறு வராதபடி காக்கவேண்டுமேமானால், எனக்கு ஜன்மப் பகையாயுள்ள இக் காயத்தை ஒழித்துவிடு என்னுடைமை யென்ன நஷ்டமாகப்போகிறது; இது உன்னுடைமையல்லவா? உனக்கில்லாத நஷ்டம் எனக்கென்ன வந்தது! இதுவும், நான் வேண்டேன்,

దివివాభువివామమాస్తువాసో । నరకేవానరకాంతక ప్రకామం ।
అవధీరితశారదారవిందౌ । చరణౌ తేమరణేపిచింతయామి ॥

(என்றால்)

'விண்ணில் மண்ணில் வியனரகதனில்
எதனி லாயினும் யான்வசித் திடுக
பதுமந் தன்னைப் பழிக்கும் நினது
பாதங் களைநான் றீதற நினைந்து
மரணாந் தத்திலும் மனத்தகத் திருத்த
வரந்தர வேண்டும் மாதவ
நரகாந் தகநா ரணவா மனனே'

மாதவா! நரகாந்தகா! நாரணா! வாமனா! விண்ணிலாயினும், மண்ணிலாயினும், நரகத்திலாயினும் இன்னும் எதனிலாயினும் யான் வசிக்கட்டும். அதைப்பற்றி யெனக்குச் சிந்தையில்லை. பதுமங்களைப் பழிக்கும் உனது திருவடிகளை, எனது மரணாந்தகாலத்தில் நான் மறவாதிருக்க வரம் தரவேண்டும். இதுவே எனது பிரார்த்தனை. ஸமஸ்த சேதனா சேதனங்களும் உனது உடைமைகளே. ஆகையால் அவைகள் உனது இச்சையின்படி உபயோகிக்கப்படக் கூடியவைகளாயிருப்பனவாயின் உத்தமம். எனது நன்மைக்காக நான் விரும்பவேண்டியது எதுவும் இல்லை. ஆனாலும், இந்த ஆத்மாவுக்கு ஸ்வரூபாநுரூபமாகிய அநவரத பகவத்தியானத்தை வேண்டுகின்றேன். இதுவே, எனது முடிவான கோரிக்கை" என்று விண்ணப்பித்தவுடனே, பெருமிதப்பொருள்களுக் குறைவிடமாயுள்ள அவருடைய துதிக்கு மகிழ்ந்து, பாண்டுரங்கன், அவருடைய கண்களுக்கு மாத்திரம், புலப்பட்டுத் தோன்றி, அவருடைய கழுத்தில் ஒரு பரிசுத்தமான திருத்துழாய் மாலையைச் சூட்டி மறைந்தான்.

அரசன் முதலியோர் இவ்வற்புதத்தைக் கண்டு, ஆனந்த பரவசர்களாய், நரஸிம்மமேமதையை ஸாஷ்டாங்க வந்தனம் செய்து, அவருடைய சரணாகதி அடைந்து, அவரால் அநுக்ரகிக்கப்பெற்று உய்ந்தார்கள். நரஸிம்மமேமதை, பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டு தமது இருப்பிடம் சென்றார்.

அகிலாபீஷ்ட பலப்ரத ஸ்வாமினே நமஃ

## முப்பத்தெட்டாம் அத்தியாயம்

# இராமதாஸர் சரித்திரம்

ஸ்ரீ துவாரகாபுரிக்கு நாற்பதின்காத தூரத்திலுள்ள டாக்ரா என்னும் கிராமத்தில், இராமதாஸர் என்னும் பிராமணர், * அக்ஷயபாத்ர விருத்தியால் ஜீவித்துக்கொண்டு, பகவத்பக்தி நிஷ்டராய், அநவரத பகவத்தியானம் செய்து, ஐம்புலவடக்கம், பொறுமை முதலிய நற்குணக் குவியலாய், பரமவைராக்யசீலராய், வாழ்ந்திருந்தார். இவ்வுத்தம வேதியர், வருஷவாரியில் ஆடிமாதச் சுக்லபக்ஷத் தேகாதசியில், ஸ்ரீமத் துவாரகாபுரிக்குச் சென்று, பகவத் தரிசனஞ் செய்து, வருவாராயினர். மரத்தால் ஒரு சின்ன துளஸிமேடை செய்து,

తులసీహరివల్లభా ॥ (என்றால்)

* தளவு எறி - முல்லை யரும்பைத் தோற்கடிக்கும். இடைமடவார் - இடைப் பெண்கள்.

* அக்ஷயபாத்ர விருத்தி - பிக்ஷா ஜீவனோபாயம்.

"சேய்க்கினிது தாய்ப்பால் செயிர்தீர் அரிபக்தர்
வாய்க்கினிது ராமவெனு மந்திரஞ்சீர்—வாய்க்கும்
கரிக்கபய மீந்து கராவைச் செகுத்த
அரிக்குத் துளசியினி தாம்"

"குழந்தைக்குத் தாய்ப்பால் சுகம்தருவதாகும்; அரிபக்தர் வாய்களுக்கு இன்பந்தந்து ருசிக்கவல்லது 'ராம' என்னும் தாரகமந்திரமே ஆகும். அதுபோல சிறப்பு மிகுந்த கஜேந்திராழ்வானுக்கு அபயம் தந்து, அவற்குத் துன்பமளித்த முதலையைக்கொன்ற திருமாலுக்குத் துளஸி இனிதாகும்" என்றபடி, பகவானுக்கு மிகவும் விருப்பமான துளஸிச் செடியை, அம்மேடையிற் பிரதிஷ்டை செய்து, அதனை இடையறாமல், அவர், தமது திருக்கரத்தில் வைத்துக்கொண்டிருந்தார். இப்படிப்பட்ட நிஷ்டையுடன் அவர், இருபத்தைந்து வருஷங்களைக் கழித்து, கொடிய முதுமைப் பருவத்தை அடைந்தார். அப்போது தமக்குச் சரீரமும், இந்திரியங்களும், ஸ்வாதீனமற்றிருந்தும், தமது நியமந்தவறாமல், அந்த வருஷத்தில் ஆடிமாதச் சுக்லபக்ஷத் தேகாதசியில் ஸ்ரீமத் துவாரகைக்குச் சென்று, பகவானைத் தரிசித்து, தேவதேவனாகிய அந்த பகவானெதிரில் நின்று, பரமபக்திமேலீட்டால் பின்வருகிறபடி துதிக்கலானார்.

ஸ்ரீ புண்டரீகாக்ஷா! உனக்கு வந்தனம்; புருஷோத்தமா! நினக்கு வந்தனம்; ஸர்வலோகஸ்வரூபா! உனக்கு வந்தனம்; உக்ர சக்ர தரா நினக்கு வந்தனம்; தவங்களுக்கும், வேதங்களுக்கும் தலைவனாய், பசுக்களுக்கும் பிரமநிஷ்டாபரர்களுக்கும் இதமுடையவனாய், ஸர்வப்ரபஞ்சங்களுக்கும் காவலனாய், ஸ்ரீ கிருஷ்ணனென்றும், கோவிந்தனென்றும், திவ்ய திருநாமங்களோடு கூடியிருக்கும் உனக்கு அநேக வந்தனங்கள். பிரமரூபியாய் உலகங்களை உண்டாக்கியும், தற்சொரூபியாய்க் காப்பாற்றியும், கற்பாந்தத்தில் ருத்ரரூபியாய் அழித்தும் திரிமூர்த்தி ஸ்வரூபியாய்ப் பிரகாசிக்கும் உனக்கு வந்தனம். இதுபற்றியே கம்பநாடரும் தாம் பாடிய ஸ்ரீமத் ராமாயணத்தில்,

"உலக மியாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலு நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே" என்று கூறியருளினார்.

"ஓரா யிரமா யுலகே ழளிக்கும்
பேரா யிரங்கொண் டதோர்பீ டுடையான்
காரா யினகா ளநன்மே னியினன்
நாரா யணனங் கள்பிரா னவனே" என்றும்,

"அவனே யகல்ஞா லம்படைத் திடந்தான்
அவனே யஃதுண் டுமிழ்ந்தா னளந்தான்
அவனே யவனு மவனும் அவனும்
அவனே மற்றெல் லாமுமறிந்தனமே". என்றும்,



நம்மாழ்வா ரருளிச்செயல்களும் இப்பெற்றி நோக்கியே யென்க. ஓ, அச்சுதா! தேவர்களும், அஸுரர்களும், கந்தர்வர்களும், கின்னரர்களும், வித்தர்களும், ஸாத்யர்களும், உரகர்களும், யக்ஷர்களும், ராக்ஷஸர்களும், பிசாசர்களும், மநுஷ்யர்களும், பசுக்களும், பக்ஷிகளும், ஸ்தாவரங்களும், * பிபீலிகாதிகளும், நிலம் நீர் நெருப்பு காற்று விண் முதலியவைகளும், சப்த ஸ்பரிச ரஸ ரூப கந்தங்களும், மனம் புத்தி சித்தம் அஹங்காரங்களும், காலமும், கால குணபேதங்களும், இவைகளுக்குப் † பரமார்த்தமாயுள்ள ஆத்மாவும் ஆகிய இவைகளெல்லாம் நீயே. இதுபற்றியே திருமழிசைப்பிரானும் தமது சாஸ்த்ர ஸாரமான திருவாய்மொழித் திருச்சந்த விருத்தங்களில்,

"ஒன்றி ரண்டு மூர்த்தி யாயு றக்க மோடு ணர்ச்சியாய்
ஒன்றி ரண்டு கால மாகி வேலை ஞால மாயினாய்
ஒன்றி ரண்டு தீயு மாகி யாய னாய மாயனே
ஒன்றி ரண்டு கண்ணி னானு முன்னை யேத்த வல்லனே" என்றும்,

"மூன்று முப்ப தாறி னோடொ ரைந்து மைந்து மைந்துமாய்
மூன்று மூர்த்தி யாகி மூன்று மூன்று மூன்று மூன்றுமாய்
தோன்று சோதி மூன்று மாய்த்து ளக்க மில்வி ளக்கமாய்
ஏன்றெ னாவி யுள்பு குந்த தென்கொ லோவெம் மீசனே" என்றும்,

"ஆறு மாறு மாறு மாயொ ரைந்து மைந்து மைந்துமாய்
ஏறு சீரி ரண்டு மூன்று மேழு மாறு மெட்டுமாய்
வேறு வேறு ஞானமாகி மெய்யி னோடு பொய்யுமாய்
ஊறொ டோசை யாய வைந்து மாய ஆய மாயனே" என்றும்,

"பூநி லாய வைந்து மாய்ப்பு னற்க ணின்ற நான்குமாய்
தீநி லாய மூன்று மாய்ச்சி றந்த கால்இ ரண்டுமாய்
மீநி லாய தொன்று மாகி வேறு வேறு தன்மையாய்
நீநி லாய வண்ணம் நின்னை யார்நி னைக்க வல்லரே" என்றும்,

திருவாய் மலர்ந் தருளியதென்க. வித்தையும் அவித்தையும், ஸத்தியமும் அஸத்தியமும், இயக்கமும் தியக்கமும், வேதயுக்தமான ஸர்வகாரியங்களும் நீயே. இப்பெற்றிநோக்கியே திருமழிசைப்பிரான் அருளிய திருச்சந்த விருத்தங்களில்,

"ஆதி யாதி யாதி நீயொ ரண்ட மாதி யாதலால்
சோதி யாத சோதி நீஅ துண்மை யில்வி ளங்கினாய்
வேத மாகி வேள்வி யாகி விண்ணி னோடு மண்ணுமாய்
ஆதி யாகி யாய னாய மாய மென்ன மாயமே" என்று,

திருவாய்மலர்ந்தருளியது காண்க. ஓ, பகவானே! ஸமஸ்த கர்ம போகங்களையும் அநுபவிக்கின்றவனும், கர்மஸாதனங்களான திரவியங்களாயுள்ளவனும், ஸர்வ கர்ம பலன்களாய் விளங்குபவனும் நீயே. இதுபற்றியே திருமழிசைப் பிரான் தமது திருவாய் மொழியில்,

* பிபீலிகம் - எறும்பு. * பரமார்த்தம் - உண்மை இரகஸியம்.

"ஊனில் மேய வாவி நீ உறக்க மோடு ணர்ச்சிநீ
ஆனில் மேய வைந்தும் நீ அவற்றுள் நின்ற தூய்மைநீ
வானி னோடு மண்ணும் நீவ ளங்க டற்ப யனும்நீ
யானும் நீஅ தன்றி யெம்பி ரானும் நீயி ராமனே"

எனத் திருவாய் மலர்ந்தருளினர். ஓ, மஹாப்ரபூ! என்னிடத்திலும், பிறரிடத்திலும், மற்றைப் பூதங்களாகிய ஸகல வுலகங்களிடத்திலும் நீ நிறைந்திருக்கிற தன்மை, துணைக்கருவி நிமித்தக் கருவி யுருவங்களாகிய ஐச்வர்யங்களையும், எல்லையற்ற ஞான சக்தி முதலிய குணங்களையும் நன்றாய்க் குறிப்பிக்கின்றது. இது நோக்கியே திருமங்கை யாழ்வாரும்,

"மின்னுருவாய் முன்னுருவில் வேத நான்காய்
விளக்கொளியாய் முளைத்தெழுந்த திங்கள் தானாய்
பின்னுருவாய் முன்னுருவில் பிணிமூப் பில்லாப்
பிறப்பிலியாய் இறப்பதற்கே யெண்ணா தெண்ணும்
பொன்னுருவாய் மணியுருவில் பூத மைந்தாய்ப்
புனலுருவா யனலுருவில் திகழுஞ் சோதி
தன்னுருவா யென்னுருவில் நின்ற வெந்தை
தளிர்புரையும் திருவடியென் தலைமே லவ்வே" என்று

திருவாய் மலர்ந்தருளினமை அறிக. பரமயோகியர் நின்னையே தியானிக்கின்றார்கள். இக்கருத்தே பற்றி, பொய்கை யாழ்வாரும் தமது முதல் திருவந்தாதியில்,

"இமையாத கண்ணால் இருளகல நோக்கி
அமையாப் பொறிபுலன்க ளைந்தும்—நமையாமல்
ஆகத்தணைப்பா ரணைவரே ஆயிரவாய்
நாகத் தணையான் நகர்" எனத்

திருவாய் மலர்ந்தமை காண்க. யோகசீலர்கள் உன்னை உத்தேசித்து யோகங்கள் செய்கின்றார்கள். இக்கருத்து நோக்கித் திருமழிசைப் பிரானும் தமது திருச்சந்த விருத்தங்களில்,

"புன்பு லவ ழியடைத்த ரக்கி லச்சி னைசெய்து
நன்பு லவ ழிதி றந்து ஞான நற்சு டர்கொளீஇ
என்பி லெள்கி நெஞ்சு ருகி உள்க னிந்தெ ழுந்ததோர்
அன்பி லன்றி யாழி யானை யாவர் காண வல்லரே" என்று,

நீயே, தென்புலத்தா ருருவங்களையும் தேவ் வுருவங்களையும் பூண்டு, முறையே * கவ்ய † ஹவ்யங்களைப் புசிக்கின்றனை. இதுபற்றியே நம்மாழ்வார் தமது அதர்வணவேதசாரமான பெரிய திருவந்தாதியில்,

* கவ்யம் - இறந்தவர்களுக்குக் கொடுக்கும் பிண்டப்பிரசாதம்.
† ஹவ்யம் - கடவுளர்க்கு நிவேதிக்கும் ப்ரஸாதம்.



'அவனும் இவனும் உவனுமற் றும்பர்
அவனும் அவனென் றிராதே—அவனும்
அவனே யெனத்தெளிந்து கண்ணனுக்கே தீர்ந்தால்
அவனே எவனே லுமாம்' என்று

திருவாய் மலர்ந்தருளினர் என்க. ஓ, புண்டரீகாக்ஷா! மகத்தான அகங்காராதி ஸூக்ஷ்மங்களும், மண்ணாதி பூதங்களும் அவைகளிடத்துள்ள நுட்பமான ஆத்ம தத்வமுமாகி, இந்த ஸூக்ஷ்மப்ரபஞ்சம் அனைத்தும் எவ்விடத்தில் வளர்கின்றனவோ, எவ்விடத்தில் தோன்றுகின்றனவோ, அவ்விடங்கள், ஸ்வரூபரூப குணங்களான் மிகப் பெரிய நினது பேருருவாய் இருக்கின்றன. இது பற்றியே நம்மாழ்வாரும் தமது பெரிய திருவந்தாதியில்,

'தானே தனித்தோன்றல் தன்னளப்பொன் றில்லாதான்
தானே பிறர்கட்கும் தன்தோன்றல்—தானே
இளைக்கில்பார் கீழ்மேலாம் மீண்டமைப்பானானால்
அளக்கிற்பார் பாரின்மே லார்' என்றருளியதென்க.

ஸூக்குமாதி விசேஷ சூன்யமாய், சிந்திக்கக் கூடாததாய் உள்ளது உனது உன்னத பரமாத்ம ரூபம். இத்தகைய புருஷோத்தமனாகிய நினக்கு வந்தனம். இதனை,

'திருவடிவில் கருநெடுமால் சேய னென்றும்
திரேதைக்கண் வளையுருவாய்த் திகழ்ந்தா னென்றும்
பெருவடிவில் கடலமுதம் கொண்ட காலம்
பெருமானைக் கருநீல வண்ணன் றன்னை
ஒருவடிவத் தோருருவென் றுணர லாகா
தூழிதோ றூழிநின் றேத்த லல்லால்
கருவடிவில் செங்கண்ண வண்ணன் றன்னைக்
கட்டுரையே யாரொருவர் காண்கிற்பாரே' என்ற

திருமங்கையாழ்வார் திருவாய்மொழியானும்,

'உணர்வாரார் உன்பெருமை யூழிதோ றூழி
உணர்வாரா ருன்னுருவந் தன்னை—உணர்வாரார்
விண்ணகத்தாய் மண்ணகத்தாய் வேங்கடத்தாய் நால்வேதப்
பண்ணகத்தாய் நீகிடந்த பால்' என்ற,

பொய்கையாழ்வார் திருவாய்மொழியானும் உணர்க. ஸர்வாத்மாக்களிடத்தும் ஸர்வ பூதங்களிடத்தும், ஸாத்விகம் முதலிய குணங்களோடு கூடியிருக்கும் உனது * ப்ராக்ருத சக்தியாகிய ஜீவஸ்வரூபத்துக்கு நமஸ்காரம் பண்ணுகின்றேன். எது, வாக்கு மனதிற் கெட்டாததோ; எது, எந்தப்புகழானும் புகழமுடியாததோ; எது, எந்த ஞானங்களின் ஞானத்தாலும் நிரூபணம் பண்ணமுடியாததோ, அப்பேர்ப்பட்ட திவ்ய முக்தாத்மஸ்வரூபம் உன்னுடையதா யிருக்கின்றது; அதனை நான் வந்திக்கின்றேன். இது பற்றியே,

* ப்ராக்ருதம் - ஆதி அல்லது முதல்.

'உயர்வற வுயர்நல முடையவன் யவனவன்
மயர்வற மதிநல மருளினன் யவனவன்
அயர்வறு மமரர்க ளதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே' என்றும்,

'இல்லது முள்ளதும்
அல்ல தவனுரு
எல்லையி லந்நலம்
புல்குபற் றற்றே' என்றும்,

நம்மாழ்வாரருளிச் செய்தல் காண்க. எவற்குத் தன்னின் வேறு பொருள்கள் இலவோ, எவன் அனைத்தின் வேறாய் உளனோ, அப்பேர்ப் பட்ட பகவானாகிய வாசுதேவனை வணங்குகின்றேன். இதுபற்றியே நம்மாழ்வாரும்,

'உளனெனி லுளனவ னுருவமிவ் வுருவுகள்
உளனல னெனிலவ னருவமிவ் வருவுகள்
உளனென விலனென விவைகுண முடைமையில்
உளனிரு தகைமையொ டொழிவிலன் பரந்தே' என்றும்,

'யாருமோர் நிலைமைய னெனவறி வரியவெம் பெருமான்
யாருமோர் நிலைமைய னெனவறி வெளியவெம் பெருமான்
பேருமோ ராயிரம் பிறபல வுடையவெம் பெருமான்
பேருமோ ருருவமு முளதில்லை யிலதில்லை பிணக்கே' என்றும்,

திருவாய்மலர்ந் தருளினமையும் உய்த்துணர்க. கர்மவசத்தான் வரூஉம் நாமரூபங்கள் இன்றி, சுத்த * விலக்ஷண ஸ்வரூபியாகிய மஹாத்மாவை நமஸ்கரிக்கின்றேன். மறுபடியும் அவனை வணங்குகின்றேன்; முக்காலும் அவனுக்கு அனந்த நமஸ்காரங்கள் செய்கின்றேன். † ஸங்கர்ஷணாதி ‡ வியூக ரூபியானவனுக்கு வந்தனஞ் செய்கின்றேன். இதுபற்றியே திருமங்கை ஆழ்வாரும் தமது தசாவதாரச் சிறப்பில்,

'முன்னுல கங்க ளேழு மிருள்மண்டி யுண்ண
முதலோடு வீடு மறியா
தென்னிது வந்த தென்று இமையோர் திகைப்ப
எழில்வேத மின்றி மறைய
பின்னும் வான வர்க்கும் முனிவர்க்கும்
நல்கியிருள் தீர்ந்திவ்வைய மகிழ
அன்னம தாயி ருந்தங் கற நூலுரைத்த அது
நம்மை யாளு மரசே' எனத்

திருவாய்மலர்ந் தருளினமை காண்க. தேவர்கள், எவனுடைய § பராத்பர வடிவத்தைக் காண முடியாமல் அவனுடைய மச்சம் கூர்மம் முதலாகிய தசாவதார ரூபங்களையே அர்ச்சிக்கின்றார்களோ, அப்பேர்ப்

* விலக்ஷணம் - வேறு, அழகிய. † ஸங்கர்ஷணன் - பலராமன்.
‡ வியூகம் - ஒழுங்கு, வரிசை. § பராத்பரம்-மேலானது.



பட்ட பரமாத்மாவுக்கு வந்தனம் செய்கின்றேன். எவன், ருத்ராதி ஸகல பூதங்களுக்குள்ளும் * அந்தர்யாமியாய், சுபாசுபங்களைப் பார்த்துக் கொண்டிருப்பானோ, அப்படிப்பட்ட ஸர்வஸாக்ஷியும் பரமேஶ்வரனுமாகிய ஸ்ரீ விஷ்ணுதேவனுக்கு நமஸ்காரம் பண்ணுகின்றேன். கட்புலனாகும் இந்த உலக முழுவதும், எவனால் பேதிக்காமல் நிற்கின்றதோ, அப்பேர்ப்பட்ட திருமாலுக்கு வந்தனஞ்செய்கின்றேன். ஸகலத்துக்கும் ஆதியான இந்த ஸ்ரீ ஹரி, எனக்குக் காட்சியளித்தருள்வானாக. † அக்ஷரத்தையும் நாமத்தையும் உடையவனாகிய எவனிடத்தில், பிரபஞ்சமெல்லாம், நூலானது ஆடையிற் கலந்திருக்கிறபடி கலந்தும், நூலில் மணிகள் கோத்தபடி ஒட்டியும் இருக்கின்றனவோ, அந்த ஸ்ரீமந் நாராயணன் எனக்குக் காட்சி யளிக்கவேண்டும். ஸர்வ ஸ்வாமியாய் ஸர்வ‡சேஷியாய் உள்ள அந்த ஸ்ரீமஹாவிஷ்ணுவை வந்திக்கின்றேன். எவனிடத்தில் ஸர்வமும் ஒடுங்குமோ, எவனிடத்திலிருந்து ஸர்வமும் படைப்புக்காலத்தில் உற்பவிக்குமோ, எவன் ஸகல சரீரியாய், ஸகலாதாரமாய் இருக்கின்றானோ, அப்பேர்ப்பட்ட ஸர்வ ஸ்வாமிக்கு அனந்த வந்தனங்கள். ஸ்ரீ ¶ அநந்தன் எல்லாவற்றிலும் ஆத்மாவாய், உள்ளும் புறம்பும் பரந்து, ஞானானந்த மயனாய், நிறைந்து விளங்குகின்றான். ஆகையால், நானும் அவனாகின்றேன்.. ஆகையால், எல்லாம் என்னால் உண்டாயின; நானே எல்லாமாயிருக்கின்றேன். நித்யனான என்னிடத்திலேயே எல்லாம் இருக்கின்றன. நானே வயதில் இளையவனாய், நித்யனாய், வேறோர் ஆதாரமின்றி, தனக்குள் தானேயாயிருக்கும் பரமாத்மன் ஆகின்றேன். நான், ஸ்ருஷ்டிக்கு முந்தின காலத்திலே, பிரமம் என்னும் பெயரோடு கூடியிருந்தேன். பிரளய காலத்தில் ஸர்வமும் எனக்குள்ளேயே ஒடுங்கக்கூடிய பரம புருஷனாய் விளங்குவேன்'' என்று, தம்மை மறந்த தன்மையுடைய தன்மயராய் தியானித்துக்கொண்டிருந்தார்.

இங்ஙனம், ஆநந்த பரவசராய், உலகை மறந்து, ப்ரஹ்லாதனைப் போல பகவத்தியானம் செய்துகொண்டிருந்த இராமதாஸருடைய உறுதிக்கு, பகவான் களிகூர்ந்து, ''ஓ பக்தர் முதல்வ! நான், இப்போது பக்திவலையிற் சிக்கி உனது வசப்பட்டிருக்கின்றேன். உன்போன்ற தவச்செல்வர் திரிலோகங்களிலும் இலர். நீ, எங்ஙனம் எனது பிரிவை ஆற்றாமல் வருந்துகின்றனையோ, அங்ஙனமே நானும் உனது பிரிவை ஆற்றாதவனாய் இருக்கின்றேன். உனக்குக் கிழப்பருவம் முதிர்ந்தபடியால், இனிமேல் துவாரகைக்கு நடந்து வரமாட்டாய். மனக்கவலை யற்று, சரீரம் தளராமல், நரம்பு தசை முதலிய வலிவுடன் இருக்கும்போதே,

'உறிகள் போல்மெய்ந் நரம்பெ ழுந்து ஊன்தளர்ந் துள்ள மெள்கி
நெறியை நோக்கிக் கண்சு ழன்று நின்று நடுங்காமுன்

* அந்தர்யாமி - மறைந்திருப்பவன். ‡ சேஷி - விஷ்ணுவின் திருநாமம்.
† அக்ஷரம் - அழியாமை, நாமம் - புகழ்.
¶ அநந்தன் - விஷ்ணு திருநாமங்களிலொன்று.

அறிதியாகில் நெஞ்சமன்பா யாயிர நாமஞ் சொல்லி
வெறிகொள் வண்டு பண்கள் பாடும் வதரி வணங்குதுமே' என்ற

திருமங்கையாழ்வார் திருவாய்மொழிப்படி, எவன் என்னைத் துதிக்கின்றானோ, அவனுடைய மரணகாலத்தில், அவன் * காஷ்ட பாஷாணத்தைப் போன்றவனாயினும், அப்படிப்பட்ட எனது பக்தனை நான் தியானித்துப் பரமபதம் வழங்குவேன் என்று ஸ்ரீவராக புராணத்தில் பூதேவிக்கு உபதேசிக்கும் வண்ணமாக எனதன்பர் அனைவர்க்கும் விளம்பரப்படுத்தி யிருக்கின்றேன் அல்லவா? அந்த திவ்ய வாக்யத்தை இப்போது உனது விஷயத்தில் அநுஷ்டித்துக் காட்டுகின்றேன்.' நீ சோகந்தவிர்க,

వ్యసనేషుమనుష్యాణాం । భృశంభవతిదుఃఖితః ॥ (என்றால்).

'மாந்தர் விசனத்தின் எனது விசனம் அதிகம்' என்றபடி, உன் விஷயத்தில், நீ வருந்துவதைப்பார்க்கிலும் நான் இருமடங்கு வருந்துகின்றேன். ஆகையால் நீ ஏன் சோகமுறுகின்றனை? நீ எனக்குச் சரீரியாய் இருக்கிறபடியால், எனது சரீரத்துக்கு வேண்டிய இதங்களை நானே செய்துகொள்ளுகின்றேன். உனக்குக் கவலை ஏன்?

జంగమశ్రీవిమానాని । హృదయానిమనీషిణః ॥

(என்றால்)

'ஜங்கமன் மனம் எனக்கு விமானம்' என்றபடி,

உனது இதயம் எனக்கு விமானமாயிருக்கிறது. ஆகையால், நான் உன்னை எப்படிப் பிரிந்திருப்பேன்? அநேக ஜன்மங்களில் இந்திரிய வசப்பட்டவனாய், எனது விஷயத்தில் வெறுப்புள்ளவனாய், எனது வலையில் அகப்படாதிருந்த நீ, இந்த ஜன்மத்தில் உனது இடையறாத அன்பினால் எனது விஸ்வரூபத்யான மென்னும் ஸித்தௌஷத ஸேவை பெற்றுப் பரம்வசித்தனாய், என்னை, உனது பக்திவலையிற் படுத்தினை. இனி பல சொற்கள் ஏன்? நான் உன்னவனாய், உனது ஆஸ்தியாய், உனது போக்கியமாய், உனது தாரகமாய் உனது மனோபாவனை யுணர்ந்து உன்னைக் காப்பவனாய் இருக்கின்றேன்" என்று கூறி, இராமதாஸரை ஆலிங்கனஞ் செய்துகொண்டு, கண்ணீர் துடைத்து, "ஓ, வத்ஸா! இருபத்தைந்து வருஷகாலமாய், நீ எனது தரிசனையை விரும்பி ஸ்ரீமத் துவாரகா யாத்திரை செய்தனை. இப்போது நான் உனது இடையறாத தரிசனத்தைக் கோரி, உன்னைப் பின்பற்றி, உனதூர்க்கு வரவேண்டுமென்று விரும்பினவனாய், உனது அநுமதி ப்ரஸாதத்தை எதிர்நோக்கி யிருக்கின்றேன்" என்று விளம்பினான். இராமதாஸர், ஆனந்தமிக்கவராய், அநேக வந்தனங்கள் செய்து கூத்தாடி, "ஓ ஸ்வாமீ! அர்ச்சாவதார ஸமாதியிலிருக்கும் நீ, என்னை எங்ஙனம் பின்பற்றி வரக்கூடும்?" என்று கேட்க, பகவான்

* காஷ்டம் - கட்டை. பாஷாணம் - கல்.



புன்னகை புரிந்து, "இன்று நடுராத்திரியில் அனைவரும் உறங்கின பிறகு, நீ ஒன்றியாய் வந்தால், எனது ஸங்கற்பத்தால், ஆலயக் கதவு திறக்கப்படும்; அப்போது சிறிதுந் தாழ்க்காமல் நீ, என்னை யெடுத்துத் திருத்தேரில் ஏற்றி, நீயும் எனது பக்கத்தில் உட்கார்ந்துகொண்டால், அவ்விரதத்திற் கட்டியுள்ள மரக்குதிரைகள் கருடாவேசத்தைப் பெற்று, அதனை ஈர்த்துக்கொண்டு உனதூர்க்குப் போகும்" என்று சொல்லி, மௌனமாயிருந்தான். இராமதாஸர், பகவந் * நியமனாநுஸாரமாய், நடு நிசியில், பகவானுடன் தேரேறித் தமதூர் சேர்ந்தார். மறுநாட் காலையில், அர்ச்சகர்கள் பகவத் பூஜை செய்வதற்காக வந்தபோது, கோயிற் கதவங்கள் திறக்கப்பட்டிருப்பதையும், அதனுள் பகவான் இல்லாமையையுங்கண்டு, சோகமுற்றவர்களாய், "இராமதாஸர் என்னும் வேதியர், பகவானுக்கு மிகவும் நெருங்கின பக்தசிகாமணி. அவர், நேற்றையத்தினம், ஸ்வாமிக் கெதிர்முகமாக நின்று கண்ணீர் விட்டழுது, தோத்திரஞ்செய்து, ஆனந்தக் கூத்தாடிக்கொண்டு, தம்மை மறந்து † த்யானாஸக்தரா யிருந்தார்; நமது வாஸுதேவன், பக்தி வலையிற்படும் மச்சாவதார சொரூபி. ஆகையால், அதனிற் பிடிபட்டுப் போனானோ என்னமோ! விளங்கவில்லை" எனச் சிந்தித்துத் திருத்தேர் இருக்கவேண்டிய இடத்தில் அஃதில்லாமையால் ஸந்தேகப்பட்டு, அதனுடைய சக்கரச் சுவடுகளையும், குதிரை அடிச்சுவடுகளையும் பற்றிக்கொண்டே தேடிப்போகையில், அடிச்சுவடுகள் இவர்களை டாக்ரா என்னும் ஊரில் கொண்டுபோய்விட்டது. இவர்கள் வருகிற செய்தியைக்கேட்ட இராமதாஸர், மிகவும் பயந்து, அர்ச்சா ரூபியான ஸ்ரீ வாஸுதேவனைத் தமது வீட்டுக் கருகில் இருந்த ஒரு குளத்தின் தண்ணீர்க்குள்ளே மறைவாகப் பிரதிஷ்டை பண்ணினார். துவாரகாபுரி வாஸிகளான அர்ச்சகவேதியர் முதலியோர், அவ்வூர்க்குள் நுழைந்த பின்னும், தேருருளைகளின் அடையாளங்களையும், குதிரைகளின் அடிச்சுவடுகளையும் விடாமல் பின்பற்றிக்கொண்டு இராமதாஸர் வீட்டைச் சேர்ந்தார்கள். அதன் பின், அந்தச் சுவடுகள் காணாமல் மறைந்தன. அப்போது அவர்கள், "இந்த வீடு, யாருடையது? இவன் நடவடிக்கை எப்படிப்பட்டது?" என்று அவ்வூராரை வினவி அறிந்து, அவ்வீட்டுள் நுழைந்து, இராமதாஸரைக் கண்டு, "நீ, ஏன் பகவானை, இங்குக் கொணர்ந்தனை? இத்தகைய அக்ரமம், யார் தைரியத்தால் செய்தனை? ஆனாலும், போனவெள்ளத்துக்கு அணைகோலுவதுபோல, இப்போது, நாங்கள் உன்னை வெறுத்துப் பயனில்லை; எங்களுக்குப் பகவானைக் காட்டு" என்று கேட்டார்கள். அதற்கு இராமதாஸர் "எனக்கொன்றும் தெரியாது" என்று கூற, அவர்கள் அவரைக் குண்டுருட்டாய்க் கட்டிவிட்டு, அவர் வீடு முழுமையும் தேடி, பகவானைக் காணாமல், அவ்வூரிலிருந்த வீடுகளை யெல்லாம் சோதித்தார்கள். எங்கும் நிறைந்த பகவான், அவர்களுக்கு அங்கு அகப்படவேயில்லை.

* நியமன அநுசாரம் - ஏற்பாட்டைப் பின்பற்றுதல். [செலுத்தினவர்.
† த்யான ஆஸக்தர் - தியானத்திலேயே லயித்தவர் அல்லது மனதைச்

''ஊனக்கண் கொண்டாருலகினுனைத் தேடியுமெய்ஞ்
ஞானக்கண் கொண்டார்போல் நண்ணார் பராபரமே'' என்றபடி,

அவர்களுடைய ஊனக்கண்ணால் பகவானைக் காணாதவராயினார்கள்.
பிறகு அவர் வீட்டுப் புழைக்கடைப்புறத்திலுள்ள குளத்தைச் சோதிப்
போம் என்று, ஓர் ஈட்டியால் அத்தடாக முழுவதும் குத்திப் பார்த்துக்
கொண்டே வந்தார்கள். அந்த ஈட்டி,பகவான் சரீரத்தில் தாக்கி, குருதி
வெள்ளந் தேக்கி, அந்தக் குளத்துநீர் முழுவதையும் செந்நிறமாக்கியது.
சிலர்,நீரிலிழிந்து,பகவானுடைய விக்ரஹத்தைக் கண்டெடுத்து,வெளியிற்
கொணர்ந்தார்கள். ஈட்டியாலுண்டாகிய வடு, யாவருங் காண விளங்
கியது. துவாரகாவாஸிகள், பகவானைப் பார்த்தவுடனே பரமானந்த
பரவசரானார்கள். இராமதாஸர் மாத்திரம், ''என்னிமித்தம், பகவா
னுக்குத் தனது திவ்யமங்களத் திருவுருவாகிய விக்ரஹத்தில் தூர்நிமித்த
மாகிய வடுவுண்டாகியதல்லவா,'' என்று சோகமடைந்தார். அப்போது,
பகவான், இராமதாஸரை நோக்கி, ''எனக்கு உன்போன்ற
உண்மை அன்பர்கள், மூவுலகினும் முக்காலத்தினும் இலர். நீ,
எனது விஸ்வரூபத்தினுடைய ரஹஸ்யத்தைச் சரியாயுணர்ந்தவன்;
என்னை எங்கும் நிறைந்தவனாகக் கண்டவன்; அங்ஙனமிருந்தும்.
எனது திவ்யமங்கள விக்ரஹத் திருவுருவில் வைத்துள்ள அன்பின்
மிகுதியால், எனது பிரிவாற்றாமல் வருந்தினை. உன்னிடத்தில் எனக்
குள்ள அன்பின் மிகுதியை வெளிப்படுத்தவேண்டி, நானும் உன்னைப்
பின்தொடர்ந்து வந்தேன். இனி, உனது சேமநிதி யென்னும்படி நான்
இங்கேயே வாழ்ந்திருக்க விரும்புகின்றேன். நீ இவ்வர்ச்சகர்களுக்கு,
எனது திவ்ய மங்கள விக்ரஹ எடைக்குச் சரி எடையான பொன்னைக்
கொடுத்துவிடு. இவ்வர்ச்சகர்கள்,அந்தப் பொன்னைப் பெற்றுக்கொண்டு
உன்னையும் என்னையும் வற்புறுத்தாமல், தாங்கள் வந்த வழியைப்
பார்த்துக்கொண்டு திரும்பிப்போய்த் துவாரகை சேரக்கடவர்கள்''
என்று நியமித்தான். அம்மொழிகளைக் கேட்ட மாத்திரத்தில் அர்ச்ச
கர்கள் ஆனந்தபரவசராய், வறியவராகிய இராமதாஸர், இவ்வளவு
பொன்னுக்கு எங்கேபோவார்! அவர் பொன்னைக் கொடுக்கப்போகி
றதும் இல்லை; பகவான் இங்கிருக்கப் போகிறதும் இல்லை; மறு
படியும் பகவான் நம்முடன் வருவது திண்ணம். பரம பக்தரான
இராமதாஸர் திருப்தியடையுமாறு,நமது கடவுள், இப்படிப்பட்ட திரு
விளையாடலை விரும்பினார்'' என்று, தமக்குள்ளே தீர்மானித்துக்கொண்
டார்கள். உடனே பகவானுடைய நியமனத்தால் அங்கொரு துலாக்
கோல் கொண்டுவரப்பட்டது. வாஸுதேவனுடைய எண்ணமுணர்ந்த
அவ்வர்ச்சகர்கள், அவனுடைய விக்ரஹத் திருவுருவத்தைத் தராவில்
இருத்தினார்கள். அப்போது பகவான், இராமதாஸரை நோக்கி, ''நீ,
'தரித்திரன் ஆகையால் பொன்கொடுக்க என்னால் முடியாது'என வருந்
தாதை. கற்பகவிருக்ஷத்தைச் சார்ந்தவர்க்கு எந்நாளிலாயினும் வறுமை
உண்டாகுமா? அன்பர்க்கு எய்ப்பில் வைப்பனைய நான், உனது வசப்
பட்டிருக்க உனக்கென்ன குறை?



'தாயிருக்கச் சேய்கள் தளர்ந்து வருந்தலெந்த
ஞாயமதை நீயே நவிலுவாய்—தாயையொரு
நீயிருக்க நின்னன்பர் நெஞ்சிற் றுயருறார்
மாயவா ஸ்ரீ வாமனா'. என்றபடி,

உனக்குத் தாய்போல் அன்புடையானாகிய நானிருக்கின்றேன், அஞ்ச
லொழிக. நானும் எனது விபூதியாகிய எல்லா உலகும், உனது
இச்சையின்படி விநியோகிக்கப்படக் கூடியவர்களாயிருக்க,நீ எங்ஙனம்
வறியவனாகுவை? உனது மனைவி அணிந்துள்ள தங்க மூக்குத்தியைக்
கொண்டுவந்து, மற்றொரு தட்டில் வை'' என்றுநியமிக்க, இராமதாஸர்,
ஸர்வசக்தியுள்ள பகவானுடைய கலியாண குணங்களைப் புகழ்ந்து,
மிகவும் நன்றிபாராட்டி,அவனுடைய நியமனப்படியே தனதுமனைவியின்
மூக்குத்தியைக் கொணர்ந்து தராஸுத் தட்டில் வைத்தார். அப்போது
பகவானுடைய திருவருளால் அந்த மூக்குத்தி வைக்கப்பெற்ற தட்டு
கீழிறங்க, பகவான் வீற்றிருந்த தட்டு மேலேறியது. பக்தவத்ஸல
னாகிய பகவான், பக்தர் பெருமையை விளம்பரப் படுத்துவதற்காக
இயற்றும் விநோத சரித்திரங்கள் மிக அற்புதமுடையவைகளாய்,
ஸநகாதி பரமயோகியர்க்கு நித்ய ஸுவிசேஷமா யிருக்கின்றன. இவ்
வற்புதத்தைக்கண்டு, எல்லா உலகத்தாரும் ஜயகோஷம் செய்தார்கள்.
துவாரகாவாஸிகள் இராமதாஸருடைய பக்தியையும், பகவானுக்கு
அவரிடத்துள்ள அன்பையும், ஆயிரமுகத்தாற் பாயிரங்கூறி மகிழ்ந்து
மஹாப்ரஸாதமென்று அம்மூக்குத்தியை ஏற்றுக்கொண்டு, வாஸு
தேவ ராமதாஸர்களுக்கு வந்தனங்கள் செய்து,இராமதாஸரை நோக்கி,
''ஓ, மஹாநுபாவ! பகவானிடத்து உமக்குள்ள பக்தியையும், உம்மி
டத்தில் பகவானுக்குள்ள அன்பையும் புகழ்வதற்கு, நான்முகன், ஐம்
முகன், அறுமுகன், ஆயிரமுகன் ஆகிய இவர்களாலும் ஆகாதென்றால்
மந்தமதிகளாகிய எங்களால் எங்ஙனம் ஆகும்? நாங்கள், தினந்தோறும்
இந்த பகவானுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தைப் பரிசித்தும்,
ஆராதித்தும், தரிசித்தும் இன்னும் அநேக கைங்கர்யங்கள் செய்தும்,
'சமைக்கப்படுகிற இன்சுவை அடிசிலில் இடையறாமல் நுழைந்து,
அந்தச் சமையலுக்கு இன்றியமையாத கருவியாயுள்ள * மூழை,
அதனுடைய சுவையை அறியாததுபோல்', இந்த பகவானுடைய
கலியாணகுணக் குவியல்களை அளந்தறியும் ஆற்றலற்றவர்கள் ஆயினோம்.
இதோ உம்மைச் சரணாகதி அடைகின்றோம்; எம்மை நும்மவர்களாக
ஏற்றுக்கொள்வீரேல், பூவோடு கூடிய நாரும் மணம்பெற்று, பகவானு
டைய முடியில் அணியப்படுகிறதுபோலவும், புலியுடலைப் பின்பற்றும்
ஜந்துக்கள், அந்தப் புலியுடனே தாமும், ஒரு மலையிலிருந்து மற்றொரு
மலைமேல் தாண்டுகிறபடியும், உமது அநுக்ரஹத்தால், நாங்களும்
உம்மோடு, இந்த பகவானுடைய † ஸாயுஜ்ய பதவியைப் பெறுவோம்''

* மூழை=அகப்பை.
† ஸாயுஜ்யம்=பகவானோடிரண்டறக்கலத்தல்.

என்று வேண்டி, அவரை ஆசார்யராக வரித்து, அவருடைய உபதேசாநுக்ரஹங்களை அடைந்து, பகவானுடைய உத்தரவைப்பெற்று, துவாரகையைச் சேர்ந்து, அங்கே முன்போல வேறொரு விக்ரஹத்தை பிரதிஷ்டைசெய்து, ஆராதித்துக் கொண்டிருந்தார்கள். ஸ்ரீ துவாரகாபதி, இராமதாஸரிடத்திலுள்ள அன்பின் மிகுதியால்செய்த திருவிளையாடல்களை, ஆகாயவாஸிகளாய்ப் பார்த்துக்கொண்டிருந்த தேவர்கள், "நாங்கள் மனிதர்களாயிருந்தால், இம்மஹாபுண்ய புருஷரான இராமதாஸர்க்குத் தாஸர்களாய், உய்ந்துபோவோம்; தேவர்களாய்ப் பிறந்து, இப்பேறுபெறக் கொடுத்து வைக்காதவர்களாய்க் கெட்டோம்" என்று சொல்லிக்கொண்டு, தமதுலகுக்குச் சென்றார்கள். இவ்வற்புதத்தைக் கண்டு கேட்டார் அனைவரும், இராமதாஸ தாஸர்களாய் அவருடைய உபதேசாநுக்ரஹங்களைப் பெற்று வாழ்ந்தார்கள். துவாரகாபதியாகிய பகவான், இராமதாஸருடைய பக்திவைபவத்தையும் அவருடைய அன்பு முதலிய கலியாணகுண வைபவங்களையும் விளம்பரப்படுத்திக் கொண்டு, இன்றளவும், அவ்வூரில் எழுந்தருளியிருக்கின்றான். துவாரகா யாத்திரை செய்யும் ஸாதுக்கள், அவ்வூர்க்குச்சென்று, பகவானைத் தரிசித்து மகிழ்கின்றார்கள்.

ஸ்ரீத்வாரகாபதயேநம:

முப்பத்தொன்பதாம் அத்தியாயம்

## கலியாணதாஸர் சரித்திரம்

ஹரித்வாரத்தில், கலியாணதாஸர் என்னும் வேதியர் ஒருவர், விரக்திமிக்கவராய், இடையறாத பகவத் தியானபரராய், ஸம்ஸாரத்திலிருந்து பகவத் பக்தி செய்துவருவாராயினர். அவர் ஸேதுயாத்ரை செய்யப் புறப்பட்டு, இடைவழியிலுள்ள புண்யதீர்த்தங்களில் ஸ்நானம் செய்துகொண்டும், திவ்யதிருப்பதிகளில் எழுந்தருளியிருக்கிற பகவானை ஸேவித்துக்கொண்டும் ஸேதுவைச் சேர்ந்தார். அங்கே, கௌடபிராமண பிரமசாரி ஒருவர், வைராக்யசீலராய், பகவானுக்கு அந்தரங்கபக்தராய், ஸர்வ புண்யக்ஷேத்ர தீர்த்த யாத்திரைகள் செய்து ஸேதுஸ்நானத்துக்கு வந்திருந்தார். கலியாணதாஸர், இந்த பிரமசாரிக்குள்ள ஞானபக்தி வைராக்யங்களை உணர்ந்து, "லீலாவிபூதியில், இப்படிப்பட்ட அதிகாரி உண்டாயிருத்தல் மிகவும் அருமை" என்று, அதிசயமிக்கவராய், அவரோடு கூடி ஸேதுஸ்நானம் செய்து, அவரிடத்தில் அன்பு பூண்டு, இருவருங்கூடி பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்து கொண்டு தீர்த்தயாத்திரை செய்து, பூர்வம் வாமனாஸ்ரமமாய், பிறகு ஸ்ரீசத்ருக்ன ராஜதானியாய் கடைமுறையில் ஸ்ரீ கிருஷ்ண ஜன்மஸ்தானமாய்ப் பரிசுத்த க்ஷேத்ரமாய் விளங்குகிற ஸ்ரீவடமதுரைக்குப்போய், அந்தப் புண்ய ஸ்தலத்தில் சிலகாலம் வாஸம்செய்து கொண்டிருந்தார்கள். அப்போது,



கலியாணதாஸர்க்கு, சரீரத்தில் நோயுண்டாகி, விடாமல் ஆறுமாத காலம் வருந்தினர். அந்த சமயத்தில், அவருடன் கூடியிருந்த பிரமசாரியாகிய நண்பர், பக்தி சிரத்தையோடு அவர்க்குப் பிரியமான உபசாரங்கள் செய்துகொண்டிருக்க, பகவத் கடாக்ஷத்தால் நோய் நீங்கி, உடம்பு தேறியது. அப்போது அவர், அந்த பிரமசாரியை நோக்கி, "நீர், பரமபுண்ணியர், அன்புடையவர், இப்படிப்பட்ட இடருற்றகாலத்தில், எனக்கு மிகவும் நன்றி செய்தீர். இதற்கு ஈடாக, உமக்கு நான் என்ன கைம்மாறு செய்யவல்லேன்! நான் எத்தனை ஜன்மங்களெடுத்தாலும், இக்கடன் தீர்க்கவல்லவன் அல்லன். ஸாக்ஷாத் பகவான், உமதுருவந் தாங்கி, என்னை ஆதரித்தான் என்று தீர்மானிக்கின்றேன். இதற்குச் சந்தேகமில்லை. ஸர்வபூத ஹ்ருதயாம்புஜவாஸியாய், இருவினைக் கயிற்றால் நம்மை ஆட்டுவிப்பவனாய், எல்லார்க்கும் அவரவர் வினைகளுக்கேற்ற பலன்களளிக்கவல்லவன் அவனே அல்லவா!

పితృమాతృసుతభ్రాతృ । దారమిత్రాదయోపివా ।
ఏకైకఫలలాభాయ । సర్వలాభాయ కేశవః ॥

(என்றால்)

'அப்பனும் அன்னையும் அண்ணனுந் தம்பியும்
ஒப்புடைய மைந்தனும் உற்றானும்—செப்பரிய
தாரமும் எல்லாரும் தந்தளிக்க வல்லபலன்
நாரணனே ஈவான் நயந்து' என்னும்

வாக்யம் நிஜமாகவே, நான் ஒன்றியாய்த் தீர்த்த யாத்திரை வந்த இடத்தில், எனக்கிப்படிப்பட்ட நோயுண்டாகுமென்று, எல்லாமுணர்ந்த ஈசனும், எங்கும் நிறைந்த பகவானும், எனது ஜீவேசனுமாகிய லக்ஷ்மீகாந்தன், உமது உருவந்தாங்கி வந்து, எனக்கு உதவி புரிந்தனன். ஸாக்ஷாத் பகவத் ஸ்வரூபியாகிய உமக்கு எனது மகளைக் கொடுத்துக் கலியாணஞ் செய்யவேண்டுமென்று மிகவும் இச்சிக்கின்றேன். இதற்கு நீர் அவசியம் உடம்படவேண்டும். எனக்கு மிகவும் அன்புள்ள எனது கன்னிகைக்கு, நீரே, தக்க கணவர்" என்று கூறினர். அது கேட்ட பிரமசாரி, "ஓ, மஹாத்மா! நான், பிரமசரிய நிலையில் நின்று, உத்தம கதியை அடையவேண்டுமென்று எண்ணியிருக்க, நீர் ஏன், என்மேற் கொஞ்சமேனும் அருளின்றி, ஸம்ஸாரக்கடலில் என்னைத் தள்ள முயல்கின்றீர்? க்ருஹஸ்தாஸ்ரமம் பலவிதமான துன்பங்களுக்கு இருப்பிடமாயிருக்கின்றது. அது மனதை மாயவனடியிற் சேரவொட்டாமற் செய்யும். ஸம்ஸாரமென்னும் சமுத்திரம், ஆசையென்னும் தண்ணீர் நிறைந்தது; அதனில் காமமென்னும் கடுங்காற்று வீசிக்கொண்டேயிருக்கும். இந்தக் காற்று இடையறாமல் வீசிக்கொண்டிருப்பதால் மோகம் என்னும் அலையும், மனைவியென்னும் நீர்ச்சுழியும், மக்கள் சுற்றங்களென்னும் முதலைகளும், அதனில் ஒன்றுகூடியிருந்து, மிகவும் பயம் தருவதனால், அதனைக்கடந்துசேறல் அரிதாகும். இத்தகைய

கொடிய ஸம்ஸாரக் கருங்கடலில் வீழாமல் தப்பி வாழும் என்னை, நீர் என் கொஞ்சமேனும் இரக்க மென்பதில்லாமல், அதனிற் றள்ளி விடப் பார்க்கின்றீர்? நான் உமக்கென்ன அபசாரம் செய்தேன்" என்று மிகவும் பயந்து நடுங்கினவராய் விண்ணப்பித்தார். அதற்குக் கலியாணதாஸர், அந்த பிரமசாரியை நோக்கி பின்வருமாறு கூறுவாராயினர்.

"ஓ வத்ஸா! வருந்தற்க. ஒருவன், மனைவி மக்களோடுகூடி க்ருஹவாஸம் செய்வதனாலேயே ஸம்ஸாரியாவான் என்றும், அவை யில்லாமையினாலேயே விரக்தனாவான் என்றும் எண்ணற்க. விரக்தர்களாய், ஸம்ஸாரத்தை வெறுத்து, காற்றைப் புசித்து, பர்ணசாலையில் இருந்து, யாருமற்ற காட்டகத்தில் ஒன்றியாய் வாழ்ந்த ஸௌபரி, கண்டு, பரதாதியர்கள் பட்டபாடுகளைப் பகரவும் வேண்டுமோ! நீர், கேட்டறியீரா? ஸம்ஸாரத்தில் இருந்தும், அதில் சிறிதும் பற்றில்லாதவர்களாய் வைராக்யாதி ஸற்குணங்களால் நிறைந்து, அதனால் உலகந்தொழும் உத்தமர்களாய், பரமஸித்தியைப் பெற்ற ஸ்ரீஜநக விதுராதியர்களுடைய புண்ய சரித்திரங்கள், புராண இதிகாஸங்களில் விளக்கமாய்க் கேட்கப்படவில்லையா? நான் அறிந்தமட்டில், உமக்கு இதோபதேசம் செய்கின்றேன், கேட்பீராக:

ஜகத்தானது, சித்து அசித்து ஈஸ்வரன் என்னும் * தத்வத்ரயாத்மகமாயிருக்கின்றது. அவைகளில் சித்து அசித்துக்கள் ஈஸ்வர சேஷமாய், அவன் வசப்பட்டு, அவன் இஷ்டப்படி விநியோகிக்கப் படத்தக்கவைகளாய் இருக்கின்றன. இவைகளில் சித்து என்னப்படும் ஆத்மா, பரமசித்து என்னும் பரமாத்மாவுக்கு, ஸ்ரீ † கௌஸ்துப ஸ்தானமாயிருக்கின்றது. பஞ்சமர்வீதியில் பிராமணன் நுழையலாகாதபடி, ‡ அகங்காரம் மமகாரங்களென்னுஞ் சண்டாளர் உலாவும் வீதியேயனைய ¶ சேதனனுடைய இதயமானது, பகவான் வாஸஞ்செய்யத் தகாததாயிருக்கின்றது. அறிஞனாய் இருப்பவன், இந்தப் பாமசண்டாளர்களாகிய இருவரையும், தனது இதயவீதியினின்றும் துரத்தியடித்துவிட்டு, அதனை பகவானாகிய பரமவேதியன் இடையறாமல் உலாவும் இடமாக்கி, ஐம்புலவொடுக்கம் என்னும் குளிர்ந்த நீரை, அவ்வீதியில், துராசையென்னும் தூசுகிளம்பாதபடி நன்றாய்த் தெளித்து வைத்துப் பகவானை எழுந்தருளச்செய்து,

* தத்வத்ரயாத்மகம் - மூன்று தத்வங்களானாய்து - அவை, சித்து என்னும் ஆத்மா, அசித்து என்னும் ஜகம், பரமசித்து என்னும் பரமாத்மா என மூன்றும்; இவைகளுக்கே ஜீவஜகபரம் எனப்பெயர் வழங்கும்.

† கௌஸ்துபம் - விஷ்ணுவின் மார்பணி; கௌஸ்துப ஸ்தானம் - விஷ்ணுவின் மார்பு அதாவது இதயஸ்தானம்.

‡ யான் எனது என்னும் அகப்புறப்பற்றுக்கள்.

¶ சேதனன் - ஆத்மா.



అహింసాప్రథమంపుష్పం । పుష్పమింద్రియనిగ్రహః ।
సర్వభూతదయాపుష్పం । క్షమాపుష్పంవిశేషతః ।
శాంతిపుష్పంతపఃపుష్పం । ధ్యానపుష్పంతథైవచ ।
సత్యమష్టవిధంపుష్పం । విష్ణోఃప్రీతికరంభవేత్ ॥

(என்றால்)

'கொல்லாமை முதற்பூவைம் புலனடக்க லிரண்டாம்
குற்றமில்பூ மூன்றாம்பூ குறைவிலரு ளுடைமை
பொல்லாத கோபமிலாப் பொறையுடைமை நான்காம்
பூவாகும் சாந்தகுணப் பூவைந்தா வதுவே
எல்லாரும் புகழ்தவமா றுவதுபூ வாகும்
ஈசனடி தியானித்தல் ஏழாம்பூ வாமால்
சொல்லாரும் உண்மையெட்டாம் பூவிவைக ளெல்லாம்
சுருதிபுகழ் அரிவிரும்பும் தூமலர்கள் மாதோ' என்ற

பகவத் பிரீதியாயுள்ள கொல்லாமை முதலிய எட்டுவித மலர்களைக் கொண்டு, இடையறாமல் அவனுடைய எட்டெழுத்துக்களை நாவினால் நவின்று, அர்ச்சனை செய்துகொண்டிருக்கவேண்டும். ஈச்வரன், நமக்குக் கிடைத்தற்கரிய மானிடப் பிறவியைக் கொடுத்திருப்பதற்குப் பிரயோஜனம் இதுவேயாகும். இங்ஙனம் இருக்க, இதனைவிட்டு இந்திரிய வசப்பட்டு இறப்பதற்கே காரணராய், வீண்காலங்கழிக்கு மாந்தர்க்கு, யமவாதனை தப்பாது. இந்த நிஷ்டையுடையவன், எங்ஙனம் வாழ்ந்தாலும் பரிசுத்தனாகவே யிருப்பான். பெண்டு பிள்ளை பண்ட பதார்த்தங்களே மமகாரத்தை அதிகரிக்கச் செய்பவைகள் என்று எண்ணற்க. இவைகளை நீத்து வெளிப்பட்ட ஸந்நியாஸிக்கு காஷாய வஸ்திர கமண்டலங்களும், புலித்தோலாஸனமும் மமகாரத்தை வளர்ப்பன அல்லவா? இவைகளையும் துறந்தார்க்குச் சரீரம், மமகாரகாரணமன்றோ? விஷம், கடுகத்தனையானாலும் கையத்தனையானாலும் உயிரை வாங்க வல்லதாகும். அங்ஙனமே, மமகார காரணப் பொருள்கள் ஒன்றானாலும் பல்வானாலும், சேதனனுடைய கற்பைக் குலைத்து, தலைவனாகிய பகவானை மறக்க வைத்து பவரோகத்தைச் சிறக்க வைக்கும். ஆகையால், வனத்தில் வஸித்து, மனமடக்கக் கல்லாமல், சரீரத்திலும் அதற்கு ஸம்பந்தமான பதார்த்தங்களிடத்திலும் மமகாரஞ்செய்து தாழ்வடையாமல், ஒருவன் கிருஹவாஸம் செய்து, மக்கள் மனைவி ஒக்கல் வீடு முதலியவைகள் ஈச்வர விபூதிகளென்றும், தனக்கு எதனிலும் ஸம்பந்தமில்லையென்றும் நன்குணர்ந்து வாழ்வானாயின், அவனுக்குத் தேக நிர்யாணமான பிறகு, மறுபிறப்பற்ற மோக்ஷபதங் கிடைப்பதில் எள்ளளவும் *ஸம்சயமில்லை.

బ్రహ్మణ్యాధాయకర్మాణి । సంగంత్యక్త్వాకరోతియః ।
లిప్యతేనసపాపేన । పద్మపత్రమివాంభసా ॥

* ஸம்சயம் - ஐயம், ஸந்தேகம்.

(என்றால்)

'தான்செய்கர் மங்களைத் தக்கதுழுஉ வோடிருந்து
வான்செய்தே வற்கு வழங்குவோன்—கான்செய்யும்
புண்டரிகப் பாசடைநீர் போலப்பா வங்களொரம்
விண்டுலகில் வாழ்வான் மிளிர்ந்து'

'எந்தப் புருஷன், தான் செய்யுங்கர்மங்களை, தக்க கூட்டத்தோடிருந்து, ஈச்வரார்ப்பணம்பண்ணி வாழ்கின்றானோ, அவன், விளக்க மிகுந்த தாமரையிலையில் நீர்த்துளியேபோல, பாவங்கள் தன்னை ஒட்டாமல் நீங்கி, இவ்வுலகில் புகழுடன் வாழ்வான்' என்று, பகவத்கீதையில் பகவான் சொல்லியருளினன். ஆகையால், நீர், எனது இதோப தேசத்தை ஏற்றுக்கொண்டு, எனது மகளை மணந்து, பகவத்பக்தியிற் சிறந்து, அஹங்கார மமகாராதிகளுக் குட்படாமல்,

'மனப்பற்றற் றோன்வாழ் மனையே தபோவனமாம்' என்றபடி, கிருகமென்னும் தவ வனத்தில், வைராக்யசாலியாய், அநவரத பகவத்யானபரராய் வாழ்க. உமது ஆத்மபாரத்தை பகவான் வஹித்தருளி, உமது யோகக்ஷேமங்களுக்கு, தானே தலைவனாயிருப்பான். உமக்குள் நிறைந்து மறைந்து உமதுருவில் விளங்குகிற ஸ்ரீமந்நாராயணனை, எனது மகளுக்கு மணவாளனாக வரித்தேன். ஆகையால், ஸ்ரீவாஸுதேவன் ஸாக்ஷியாக எனது மகள் உமக்கே மனைவியானாள். இது இங்ஙனமாக, இனி, நீவிர் இழிந்ததென வெறுத்துரைத்த * கிருகஸ்தாச்ரம தர்மத்தைக் கூறுகின்றேன்; கேட்பீராக!

"புத்திமான், பிரமசரியத்தைக் கடந்தபிறகு, விதிப்படி கன்னிகை ஒருத்தியை மணந்து, தனக்குத் தகுந்த தொழிலால் திரவியந்தேடிக் கிருகஸ்த தர்மத்தை, தனது சக்திக்குத் தக்கவாறு நடத்தவேண்டும். † பர்வகாலங்களில் பிண்டப்ரதானத்தாலும் எள்ளுந் தண்ணீராலும், ‡ பிதுர்களாகிய தென்புலத்தாரையும், யாகாதிகளால் தேவர்களையும், உண்டியால் விருந்தினரையும், வேதமோதுவதால் முனிவர்களையும், ஸந்ததியால் பிரமனையும், பூதபலிகொடுக்கும் கர்மத்தால் ஸகலபூதங்களையும், அன்பினால் அனைத்துலகங்களையும் களிப்பிக்கவேண்டும். இதுபற்றியே திருவள்ளுவர், தமது திருக்குறளில்,

'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
கைம்புலத்தா றோம்பல் தலை' என்று கூறியருளினர்.

இங்ஙனம் செய்யும் இல்லறத்தான், தனது நல்வினைகளால் ஈட்டப்பெற்ற பல புண்யலோகங்களை அடைவான். ஸந்நியாஸிகளும், பிரமசாரிகளும், கிருகஸ்தனை அடுத்துப் பிழைக்கின்றார்கள். ஆகையால் கிருகஸ்த தர்மமாகிய இல்லறம், மிகவும் சிறந்ததாயிருக்கின்றது, இப்பெற்றிநோக்கியே, திருவள்ளுவரும்,

'இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை' என்று

அருளியது காண்க. இஃதன்றியும், வேதங்களை உணர்ந்து கொள்வதற்கும், தீர்த்தயாத்திரை செய்வதற்கும், புண்யக்ஷேத்ரத்தைத் தரிசிப்பதற்கும், பிராமணர்கள் ஸ்வதேசத்தைவிட்டு ஸஞ்சரித்துக்கொண்டிருப்பார்கள். சிலர், ஓரிடத்திலும் நிலையாய் வாழாமல், ஸூர்யன் மறைகிற இடத்தை, தமது ஸொந்த கிருகமாக எண்ணித் திரிவார்கள். இப்படிப்பட்டவர்களை யெல்லாம் இல்லறத்தான் துணையாயிருந்து காக்கின்றான். இப்படிப்பட்ட பரதேசிகள் வரும்போது, இல்வாழ்வான் நல்வரவென்று இன்மொழிகூறி, ஆஸன போஜன சயனங்கள் வழங்கி, அவர்களைக் களிப்பிக்கவேண்டும். இதுபற்றியே,

'இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதி ரீனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்.' என்றும்,

'இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு' என்றும்,

'செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு' என்றும்,

கூறப்பட்டன. * அதிதியினுடைய முகங்கோணாமல், இல்வாழ்வான், மலர்ந்த முகத்தோடு சொல் வழங்கவேண்டும். இல்லையேல், அதிதி மனம் கோண, இல்லறங் கெடும். இதுபற்றியே திருவள்ளுவரும்,

'மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து' என்று,

கூறியது காண்க.

இஃதன்றியும் அரிச்சந்திர வெண்பாவில்!

'மலர்ந்தமுகத் தின்சொல் வழங்கி யெவர்க்குங்
கலந்தவிருந் தேற்றயலான் காந்தை—நலம்வெறுத்துத்
தீங்குபுரிந் தார்க்குநலஞ் செய்துநடு நின்றொழுகார்
ஆங்கி லழுக்கா றறுத்து' எனக்

கூறியதுங் கவனிக்க. எந்த அதிதி, ஒரு கிருகஸ்தனிடத்திற்கு வந்து, தனது எண்ணம் பலிக்காமல் திரும்பிப் போகின்றானோ, அந்த அதிதி, தனது பாவத்தை அந்த கிருகஸ்தனுக்குக் கொடுத்துவிட்டு, அவனு

* இல்லறம்=மனையாளோடு கூடிவாழ்தல்.

† பர்வகாலங்கள் என்பது நல்ல நாள் தீய நாள் எனவும் தெய்வநாள் திருவிழா நாள் எனவும் வழங்கப்படும்.

‡ பிதுர்கள்=இறந்த பாட்டன் பூட்டன்மார்கள்.



* அதிதி=விருந்தாளி, அட்டுண்டு வாழாதான்.

டைய புண்யத்தைக் கைக்கொண்டு போகின்றான். மனையறத்தில் வாழ்பவனுக்கு, அகங்காரம், டம்பம், பிறர்க்கிட்டு வருந்துதல், பிறரை நிந்தித்தல், பிறரை அடித்தல், பிறரை வைதல் முதலியவைகள் எள்ளளவும் உகந்தனவாகா. இதுபற்றியே ஸ்ரீ மஹாபாரதத்திலும்,

‘பிறர்மனை யவரைப் பெற்றதா யெனவும்
பிறர்பொரு ளெட்டியே யெனவும்
பிறர்வசை யுரைத்தல் பெருமையன் றெனவும்
பிறர்துய ரென்றுய ரெனவும்
இறுதியே வரினும் என்மனக் கிடக்கை
யெம்பிரா னிதுவென வுரைத்தான்
மறலியு மடியும் வன்மைகூ ரியற்கை
வடிவுடை வாயுவின் மைந்தன்’ என்று,

பீமசேனன் பழம்பொருந்து சருக்கத்தில், ஸ்ரீ கண்ணபிரானை நோக்கிக் கூறியதும் உய்த்துணர்க. இத்தகைய துர்க்குணமின்றி ஸற்குணவானாய், எந்தக் கிருகஸ்தன் தனது தர்மத்தைச் செவ்வனே செய்து வருகின்றானோ, அவன், எல்லா இடையூறுகளுக்குந் தப்பிப் பிழைத்து, உத்தம லோகத்தை அடைவான். இங்ஙனம் ஒருவன், இல்லறத்தில் இருந்து, தருமங்களைச் செவ்வனே நடைபெறச்செய்து, மூப்பில் பெண்டு பிள்ளைகளைத் துறந்தாலும், அன்றி, மனைவியோடு கூடியானாலும் வனம் போகலாம். ஐயா, பிரமசாரியே! நீர், எனது மகளை மணந்து உத்தமமாகிய இல்வாழ்க்கையிற் பொருந்தி, அஹங்கார மமகாரங்களை விட்டு, எல்லாவற்றையும் இயற்றுபவனும், இயற்றுவிப்பவனும் அவனே என்றும், உலகிற்காணும் எல்லாப்பொருள்களும் அவன் வடிவங்களே யென்றும், பிறர்க்கு நாமியற்றும் நன்மை தீமைகள், அவர்களிற் சரீரியாயுள்ள அவனையே அடைகின்றனவென்றும் தெரிந்து, மேலே நான் கூறியபடி, அநவரத பகவதாராதன சீலராய் நடந்துகொள்ளக்கடவீர். பகவான், அநவரதமும், உம்மைப் பிரியாமல், உம்மிடத்திற் பொருந்தியிருப்பான்” என்பதேயாம். இவைகளையெல்லாம், கருத்து ஒருமித்துக் கேட்டுவந்த பிரமசாரி, கலியாணதாஸரை நோக்கி, “ஓ மஹாநுபாவ! ஸாக்ஷாத் பகவான் உமது உருவந் தாங்கி, எனக்கு ஞான விளக்கம் அருளினான். எனது ஜன்மம் ஸாபல்யமடைந்தது. உமது உபதேசமென்னும் ஸூர்யோதயத்தால், எனது அஞ்ஞானமென்னுங் காரிருள் தொலைந்தது. என்னை அஞ்ஞானக் கிணற்றில் தவறி விழாதபடி காத்தருளிய காருண்ய புருஷரே! உமது அநுக்ரஹத்தால் எனது மடமை தொலைந்து, மதி விஞ்சியது; ஐயங்கள் அகன்று, மெய்யுணர்ந்த மேலோன் ஆயினேன்; இனி உமது கட்டளைப்படி நடந்துகொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்” என்று, விண்ணப்பஞ்செய்து ஞானப்ரகாசராய் விளங்கினார். இங்ஙனம் விளங்கிய இந்த பிரமசாரியை அழைத்துக்கொண்டு, கலியாணதாஸர், அந்த மதுரா நகரத்திலிருக்கும் பகவத் ஸந்நிதிக்குச் சென்று,



ஸ்ரீ மாதவனுடைய எதிர்முகமாய் நின்று, “ஸாக்ஷாத் பகவத் ஸ்வரூபியாகிய உன்னை மருமகனாக வரித்து எனது மகளைக்கொடுத்தேன்” என்று, பிரமசாரி கரத்தில் தாரைநீர் வார்த்து தத்தம் செய்தனர்.

பிறகு, கலியாணதாஸர், அந்த பிரமசாரியுடன், ஹரித்வாரஞ் சென்று, தமது சுற்றத்தாரை வரவழைத்து, “இந்த பிரமசாரிக்கு, எனது மகளைக் கொடுப்பதாக வாக்களித்தேன்” என்றார். அதுகேட்ட அச்சுற்றத்தார் அனைவரும் ஒன்றுகூடி, ஒரே மனதாய் கலியாணதாஸரை நோக்கி, “உனக்கேன் இப்படிப்பட்ட அவஸரபுத்தி! பஞ்சத்ராவிடர்களுக்கும், பஞ்சகௌடர்களுக்கும். இதுவரையில் எங்கேயாவது பரஸ்பர ஸம்பந்தம் நடந்திருக்கின்றதா? அங்ஙனம் இருக்க நமது கன்னிகையை, கௌட பிரமசாரிக்குக் கொடுப்பது ஞாயமன்று” என்று தடுத்தார்கள். அதுகேட்ட கலியாணதாஸர், வியாகுலாந்தக்கரணராய், “ஓ, சுற்றங்காள்; இந்த பிரமசாரியின் ஸற்குண விசேஷத்தைக் கண்டு, நான், மதுராபதியாகிய ஸ்ரீமாதவன் சந்நிதியில், இவர்க்கு என்மகளைக் கொடுப்பதாக வாக்களித்தேன். தனது கன்னிகையை ஒருவனுக்குக் கொடுப்பேன் என்று வாக்களித்து, அதனைத் தப்பி நடப்பவனுக்கு நரகம் தப்பாதல்லவா? இந்தப்படி, ‘வாக்களித்ததைத் தப்பமாட்டோம், பொய் சொல்லமாட்டோம்’ என்று அரிச்சந்திரன் முதலியோர்,

‘பதியிழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த
நிதியிழந்தனம் இனியெமக் குளதென நினைக்கும்
கதியிழக்கினுங் கட்டுரை யிழக்கிலே மென்றார்
மதியிழந்து தன்வாயிழந் தருந்தவன் மறைந்தான்’ என்று,

கூறியதையும் உய்த்துணர்ந்து நோக்குமின். இவர், பிராமணரே அன்றி வேறு குலத்தினரல்லர். இவர் கௌடர் ஆனபடியினால், இவருக்கு பிராமணத்வம் இல்லாமற்போய்விட்டதா! மேலும் குணவானே கன்னிகாதானம் பெறத்தக்கவன்; ‘குலவான் என்னும் ஒன்றே போதாது’ என்பது, ஸாதுக்கள் ஸம்மதமல்லவா? ஆகையால் சுற்றங்களாகிய நீவிர் அனைவரும் என்மேற் கருணைகூர்ந்து, எனது வாக்கை நிறைவேற்றி, எனக்கு நரகபயமில்லாமற் காக்கவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்” என்றார். அவர் எத்தனை விதங்களில் வேண்டினாலும், சுற்றத்தார், “இது, நூதன ஸம்பந்தம்” என்று கூறி, உடம்படாமற் போனார்கள். அப்போது கலியாணதாஸர், அந்தத் தேசாதிபதியினிடத்திற்குப்போய், நடந்த விருத்தாந்தங்களை அவற்கு அறிவித்து, தமக்கு ஞாயம் அளிக்கவேண்டும் என மன்றாடினார். அப்போது அந்த நீதிபதி, உபயபக்ஷத்தார்களுடைய வாக்குமூலங்களையும் உணர்ந்து, கலியாணதாஸரை நோக்கி, “ஸாதுஜனமுதல்வ! உமது சுற்றத்தார் கூறுவது ஞாயமாயிருக்கின்றது; இத்தேசத்தில் அநேகர் உமக்குச் சுற்றங்களா யிருக்கின்றார்கள். இவ்வனைவரையும் தள்ளிவிட்டு, நீர் ஒருவர்மட்டும் ஒன்றியாயிருப்பது ஞாயமன்று.

இன்னும், உமது பக்ஷத்தில் நன்ருய் உய்த்துணர்ந்து நோக்குகையில், கன்னிகாதான விஷயமான வாக்குத்தத்தத்தைத் தவறுதல் நரககாரணம் என்பதற்குத் தடையில்லை. நீர், பிரமசாரிக்கு வாக்களித்தது உண்மையென்றுரைக்க, ஸாக்ஷிகள் உண்டா? ஸ்ரீமாதவனுடைய ஸந்நிதியில் வாக்களித்தேன் என்று சொல்லுகின்றீர். நீர் வைராக்ய சீலர் ஆகையால், பொய் சொல்லமாட்டீர் என்று எனக்கு நன்ருய்த் தெரியும். ஆனாலும், உலகத்தார் ஸம்மதிக்கமாட்டார்கள். நீர், அந்த மதுராவாஸியான ஸ்ரீமாதவனை, இங்கு அழைத்துக்கொண்டு வந்து, ஸாக்ஷி சொல்லுவித்தால், அனைவரும் உமது வழிக்கு வருவார்கள். அங்ஙனம் செய்வீராயின், இக்காரியத்தை நடைபெறச்செய்தல் மிகவும் கஷ்டமாய் முடியும்'' என்றுகூற, கலியாணதாஸர், நீதிபதியை நோக்கி, "நான் தர்மபாச முடையவன்,

ధర్మస్యప్రభురచ్యుతః ॥

(என்ருல்)

'தருமத்தலைவன் ஹரியேயாவன்'

என்றபடி,

தர்மப்ரபு அச்சுதன் அல்லவா? நான், பகவான் விஷயத்தில் நம்பிக்கையுள்ளவனுய் இருப்பதும், அந்த ஜகந்நாதன் எனது யோகக்ஷேமங்களைத் தானே ஏற்றுக்கொண்டு இருப்பதும் உண்மையானுல், எனது பிரார்த்தனையின்படி அந்த பக்தவத்ஸலன், இங்கு வந்து, ஸாக்ஷியம் சொல்லுவன் என்பதற்கு ஸம்சயமில்லை. துருவர் பக்திக்கு மெச்சி, அவருக்கு ஸர்வோத்தம பதவி அநுக்ரஹித்ததும், கஜேந்திரனைக் காத்ததும், ப்ரஹ்லாதற்காகக் கம்பத்தில் அவதரித்ததும், சரணுகதியடைந்த திரௌபதிக்கு மானங்காக்க வஸ்திரப்ரதானம் பண்ணினதும், இன்னும் அநேக பாகவதர்களுக்குத் துன்பந்துடைத்து இன்பமளித்து அவர்களைக் காத்தருளுங் கடமைகளைத் தானே ஏற்றுக்கொண்டதும் நிஜமானுல், அப்பேர்ப்பட்ட ஆபத்பாந்தவன் என்னிமித்தம், இங்கெழுந்தருளி, ஸாக்ஷியம் சொல்லாமற் போவானு? ஓ, நீதிமானே! ஓ, சுற்றங்காள்! கொஞ்சம் பொறுமின்! நான் இப்போதே சென்று, அந்த தீனதயாளனை, இங்கு அழைத்துக்கொண்டு வருகின்றேன்'' என்று கூறி, அப்போதே புறப்பட்டு, ஸ்ரீ மதுராபுரியைச் சேர்ந்து, தேவாலயத்துள் நுழைந்து, பகவானுக்கு அநேக வந்தனங்கள் செய்து, தலைமேற் கூப்பியகையினராய், "தேவாதிதேவ! நான் உனது ஸந்நிதியில் கௌட பிராமண பிரமசாரிக்குச் செய்த கன்னிகாதான வாக்குத்தத்தத்தை எனது பந்து ஜனங்களும் நீதிபதியும் நம்பாமல் உனது ஸாக்ஷியத்தைக் கோருகின்றூர்கள். உனது அன்பனுடைய உண்மையை ஜகத் பிரஸித்தம் செய்வதற்கு நல்ல ஸமயம் நேரிட்டது; துருவ கஜேந்திர பிரகலாதர்களை, அவரவர் இருந்த இடங்களுக்குச் சென்று காத்தளித்தபடி, நீ, தர்மத்தை நிலைநிறுத்துப்பொருட்டு, என்னைப் பின்பற்றி ஹரித்வாரத்துக்கு வந்து, ஸாக்ஷியம் சொல்லவேண்டும்.



యదాయదాహిధర్మస్య । గ్లానిర్భవతిభారత ।
అభ్యుత్థానమధర్మస్య । తదాత్మానంసృజామ్యహం ॥

(என்ருல்)

'தர்மந் தனக்குத் தவறுகள் உலகில்
எவ்வெப் போதினி லேற்படு கின்றவோ
அதர்மந் தனக்கபி விர்த்தியெவ் வெப்போ
தேற்படு கின்றதோ இசைந்தொரு நானும்
அவ்வப் போதினி லவதரித்
துலகைக் காக்க உகந்துள் ளேனே'

'எவ்வெப்போது, தர்மந் தனக்குத் தவறுகள் ஏற்படுகின்றனவோ, அதர்மந் தனக்கு விர்த்தி யேற்படுகின்றதோ, அவ்வப்போது, நான் அவதரித்து உலகத்தைக் காக்க விரும்பியிருக்கின்றேன்' என்று, பகவத்கீதையில், நீ, சொல்லியருளினை அன்ருே? அந்த கீதோபநிஷத்து ஸத்யமாகுமானுல், என்னைப் பின்பற்றிவந்து, தர்மத்தைக் காத்தருள்வாய்'' என்று விண்ணப்பித்தார். அதை கேட்ட பகவான், அவரை நோக்கி, "வத்ஸா! உனது வாய் மொழிகள் வாய்மை மொழிகளாய் இருக்கின்றன. அர்ச்சாரூபத்தைமேற்கொண்டுள்ள நான், நடந்து வருதல் அசாத்யம். ஆனாலும், நானும் எனது விபூதியும், அன்பர் விநியோகார்ஹமாய் இருக்கின்றபடியால் எனக்குள் மறைந்துள்ள உனக்காக, நான் நடந்து வந்து, எனது பக்தனுகிய உனது அன்பின் மிகுதியை, அனைவருக்கும் விளம்பரப்படுத்துவேன்'' எனக்கூறி, கலியாணதாஸர் முன்னே நடக்க, தான் ஸர்வாபரணபூஷிதனுய், வாயுவசத்தால், தனது திவ்யமங்கள விக்ரஹ ஸம்பந்தமான திவ்யகந்தம் அனைத்திலும் வியாபித்துக்கொண்டிருக்க, கால்களில் கஜ்ஜைகள் கலீர் கலீர் என, பின்னே தொடர்ந்து நடந்து போனுன். இங்ஙனம், இவ்விருவரும் இரவு பகல் என்கிற வேறுபாடில்லாமல் நடந்து ஹரித்வாரத்துக்கு அரைநாழிகை தூரவழியில் வரும்பொழுது, கஜ்ஜை ஒலி கேளாமையால், கலியாணதாஸர், திரும்பிப் பார்த்தார். பகவான், அங்கேயே நின்று, கலியாணதாஸரை நோக்கி, "நீ என்னைத் திரும்பிப் பார்க்கக்கூடாது என்று சொல்லிவைத்தேன் அல்லவா! நீ எனது கட்டளையைக் கடவாதிருந்தவரையில் உன்னைப் பின்தொடர்ந்து வந்தேன். நான், இங்கெழுந்தருளியிருப்பதை, நீதிபதிக்கும் உனது சுற்றங்களுக்கும் அறிவித்து, அனைவரையும் இங்கழைத்துக்கொண்டுவா'' என்று நியமித்தான். கலியாணதாஸர் அதிவேகமாய் ஹரித்வாரத்துக்குப்போய், நீதிபதிக்கும் தமது சுற்றங்களுக்கும் பகவந் நியமனத்தைத் தெரிவிக்க, அவர்களனைவரும் ஆச்சரியமடைந்து, கலியாணதாஸரைப் பின்பற்றிவந்து, ஸ்ரீ ருக்மிணீ காந்தனைத் தரிசித்து, பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து, பலவிதங்களிற் றுதித்துக்கொண்டிருக்க, பகவான், நீதிபதியைப் பார்த்து, "இந்தக் கலியாணதாஸன் எனக்கு மிகவும் அந்தரங்கபக்தன். வைராக்ய முதலிய

அந்தரங்க நற்குண வேஷத்தால் நிறைந்தவர்களுக்கு நான் ஸஹாயனா யிருப்பேன். நான் அவர்களுக்கு ஸஹவிபூதியனாய், அவர்கள் சொல்லு கிறபடிசெய்து அடங்கியிருப்பேன். அவர்களுடைய மனம்போனபடி யெல்லாம் நான் அவர்களோடு ஆடுவேன். அவர்களைக் களிக்கச் செய்வதே எனது நோக்கமும் தீர்மானமுமாம். அப்பேர்ப்பட்டவர்க ளுக்காக, ஜன்மரகிதனாகிய நான், அளவிறந்த அவதாரங்கள் எடுத்து வருகின்றேன். உருவற்றவனும், அளவற்றவனுமாகிய நான், எனது அந்தரங்க பக்தர்களுக்காக, நாமரூபங்களைப் பொருந்தியிருக்கின்றேன். எனது இதயத்தை ஸாதுக்களும், அவர்களுடைய இதயங்களை நானும் அறிவோமே அன்றி, எங்கள் இருதிறத்தார்களுடைய இதயபரிபாகம், இவ்வுலகில் எவர்க்கும் அறியத்தக்கதன்று. இந்த கலியாணதாஸன், எனது சந்நிதியில், தனது மகளை இந்த பிரமசாரிக்குக் கொடுப்பேன் என்று வாக்களித்தது உண்மை. அங்ஙனம் செய்தல் எனக்கு மிகவும் விருப்பம். ஆகையால், கௌடபிராமணன் என்ற தடையைச் சிந்திக்கா மல், அவனுடைய மகளை, இந்த பிரமசாரிக்குத் தந்து, கலியாணத்தை விரைவில் முடியுங்கள்" என்று நியமிக்க, அவர்களனைவரும் பரமா னந்தபரர்களாய், "தேவர் சித்தம், அடியேங்கள் பாக்கியம்" என்று, பகவ தாஜ்ஞையைச் சிரஸாவகித்து, "அன்பர்க்குள் ஒடுங்கும் ஆர்கலியே! உனது தாஸர் காரியத்தை நீயே நிர்வகிக்க வேண்டும்" என்று விண்ணப் பஞ் செய்தார்கள்.

பகவான் எண்ணத்தை யுணர்ந்த விஸ்வகர்மன், பூலோகத்துக்கு வந்து, விவாகமண்டபம் நிர்மித்தான். காமதேனு, கற்பகவிருக்ஷங்கள் வந்திருந்து, ஸமஸ்த பதார்த்தங்களையும் அளவுக்குமிஞ்சி வழங்கிக் கொண்டிருந்தன. ஸமஸ்த தேவர்களும் வந்து, விவாக காரியங்களை நிர்வ கித்தார்கள். ஆகாயத்தில் தேவதுந்துபிகள் கோஷித்தன. * கேச ரர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். அனைவரும் சேர்ந்து, கலியாணப் பெண்ணையும் பிள்ளையையும் சிங்காரித்து, மங்களவாத்திய முழக்கத் தோடு, விவாக மகோற்சவத்தை நிறைவேற்றினார்கள். உற்றார் உறவி னர்கள், விலையில்லா ஆடையணிகள் வழங்கப்பெற்று, மன நிறைவுற்று, தத்தம் இருப்பிடஞ் சென்றார்கள். ஸ்ரீருக்மிணீ காந்தன், பக்தர் விஷயத்தில், தனக்குள்ள அன்பை விளம்பரப்படுத்திக்கொண்டு, இன் றளவும் அந்த இடத்தில் எழுந்தருளி விளங்குகின்றனன்.

ஸ்ரீமதுராநாதாயநம:

* கேசரர்—அர்த்த தேவதைகள், பாதிகடவுட்டன்மை பெற்றவர்கள்.



## நாற்பதாம் அத்தியாயம்.

# ஸூர்தாஸர் சரித்திரம்

ஸ்ரீ மதுராபுரியில், அக்ரூராம்சத்தில் ஸூர்தாஸரென்னும், உத்தம பாகவதர் ஒருவர் அவதரித்தார். இவர், பிறவிக்குருடர்; ஆனாலும் ஞானக்கண்ணால், ஸதா பகவானைத் தரிசித்துக்கொண்டு, பகவந்நாம ஸங்கீர்த்தனபரராய், ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா விஷயத்தில், பலவித பக்தி யாராய்ச்சிகள் பண்ணிக்கொண்டு, ஞானபக்தி வைராக்யங்கள் நிறைந்த வராய், புருஷோத்தமக் கல்விஞானப் பயிற்சியுடையவராய், தாமியற்றி யருளும் கீர்த்தனங்களைக் கேட்போர்க்கு பக்தி விரக்திகளை உண்டாக் கிக் காலக்ஷேபஞ் செய்துகொண்டிருந்தனர். இவர், ஒரு நாள், தாம், ஒருவனை உதவியாக அழைத்துக்கொண்டு, அவன் கையைப்பற்றி நடந்து, அவ்வூரிலிருந்த பகவத் ஸந்நிதிக்குள் நுழைந்து, ஸாஷ்டாங்க வந்தனம் செய்து, பகவானுக் கெதிர்முகமாக நின்று, பின்வருமாறு ஸ்தோத்திரஞ் செய்யலானார்:

"ஸந்மாத்ர ரூபியாய், ஸர்வவியாபகனாய், அநேக ரூபியாய், ஏக ரூபியாய், எண்ணுதற்கரிய மஹிமையோடு கூடினவனாய் விளங்கும் பரமாத்மாவுக்கு அநேக வந்தனங்கள் செய்கின்றேன். அள விடுதற்கரிய ஸகல ஸ்வரூபனாய், தேவயாகங்களில் *அவிர்ப்பாகங்கொள் ரூபவனாய் விளங்கும் உன்னை நமஸ்கரிக்கின்றேன். மஹாப்ரபு! விஜ் ஞானத்துக்குக் காணியாட்சியாய், மூலப்ரக்ருதியின் வேறாய முதற் பொருளாய் விளங்கும் உனக்கு வந்தனங்கள் செய்கின்றேன். பஞ்ச பூதாத்மாவாகவும், † ஏகாதசேந்திரியாத்மாவாகவும், ‡ அவ்யக்தாத்மா வாகவும், ஆத்மாவாகவும், பரமாத்மாவாகவும் விளங்குகிறபடியால், நீ ஒருவனே ஐவண்ணனாகின்றனை. ஸகலமாய், ஸகலாத்மாவாய் || க்ஷர மான ஸர்வபூதங்களுக்கும், அக்ஷரமான ஆத்மாவுக்கும் அதிகாரியாய், பிரம, விஷ்ணு, சிவநாமங்களால் கற்பிக்கப் பெற்றவனாய் விளங்கும் பகவானே! நீ காட்சிதந்தருள வேண்டும். அநந்த குணங்களோடு கூடின ஆத்மாவாய் ஆனந்தயுக்தனாய் விளங்குகிற பரமேஸ்வரா, அநந்த நாமங்களோடு கூடியுள்ள உனக்கு நமஸ்காரஞ் செய்கின்றேன்! ஜீவாத் மாக்களைப்போல, ¶ கர்மோபாதிகமான தேவமனுஷ்யாதி நாம ரூப கற்பனைகள் இன்றி, நித்யமாய் உத்தமமாய் விகார ரஹிதமான பரப்ரஹ்மம் நீயே; நாம ரூப கற்பனைகள் இன்றி ஒரு வஸ்துவை யுணர்தல் அரிது; ஆகையால், நீ கிருஷ்ணச்சுதாநந்த விஷ்ணுவாதி நாமங்களால் துதிக்கப்படுகின்றனை. $ அஜனாய், அநந்த

* அவி-நெய். † ஏகாதசம் - பதினொன்று (ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள்).
‡ அவ்யக்தம் - அறியப்படாதது. || க்ஷரம் - அழியக் கூடியது.
¶ கர்மம்+உபாதிகம் - வினை ஸம்பந்தம்
$ அஜன் - அயன், விஷ்ணு திருநாமங்களில் ஒன்று.

னை ஓ தேவனே! இந்த தேவாதி கற்பனைகளோடு கூடின ஸமஸ்த பிரபஞ்சமும் நீயே; விகாரரஹிதமான ஆத்மாவும் நீயே; இங்ஙனம் அனைத்தும் நினது விபூதியாய் இருக்கிறபடியால், நினக் கந்நியமானது எதுவும் இல்லை. ஆகையால், நீயே பிரமாவாய், சிவனாய், ஸூர்யனாய், விதாதாவாய், தாதாவாய், இந்திரனாய், சந்திரனாய், வாயுவாய், அக்நியாய், வருணனாய், குபேரனாய், யமனாய், வேறு வேறு காரியங்களோடு கூடின ஸ்வரூபபேதங்களால் உலகைக் காக்கின்றனை. அன்றியும், ஸூர்யகிரண ரூபியாய் பிரபஞ்சத்தை உண்டாக்குகின்றவனும் நீயே; ஆகையால், இப்பிரபஞ்சமனைத்தும் உனக்குச் * சேஷ பூதமாயிருக்கின்றது. ஸத் என்னும் பதத்தால் சொல்லப்படுகிற விகார சூன்யமான பரஸ்வரூபமாய், சுத்த ஞானஸ்வரூபமாய், சராசரங்களுக்கு இருப்பிடமாய் விளங்கும் உனக்கு அநேக வந்தனங்கள்" என்பதேயாம். "† ப்ரணவ ப்ரதிபாத்யனான ஸ்ரீ வாஸுதேவனுக்கு வந்தனஞ்செய்கின்றேன். ‡ ஸங்கர்ஷணனுக்கு வந்தனம். § ப்ரத்யும்நனுக்கு வணக்கஞ்செய்கின்றேன். அநிருத்தனைத் தொழுகின்றேன். இங்ஙனம் நாற்பாலுருவினனாகிய உன்னை நமஸ்கரிக்கின்றேன்" என்று, அக்ரூரனை அங்ஙனந் துதித்து, மறுபடியும், மாதவனைத் துதிக்கின்றார்: "ஓ, கேசவா! நான், இந்த ஜன்மத்தில், உன் விஷயத்தில் என் மனமறிய ஒரு பிழையுஞ் செய்யவில்லை. அங்ஙனம் இருக்க, நான் பிறவிக் குருடனாய், உனது திவ்ய மங்கள விக்ரஹத்தைத் தரிசிப்பதற்குக் கொடுத்து வைக்காதவனாயிருக்கின்றேன். ஜகதீசா! உனது அநுக்ரஹத்தை, நிக்ரஹமென் றெண்ணுதல், எனக்கு ஸ்வரூப ஹானியாம். எனக்கு இப்படிப்பட்ட அங்கஹீனகாரணமான பூர்வஜன்ம விருத்தாந்தம், உனது திருவருளால் என் ஞாபகத்தில் வருகின்றது. கம்ஸவதை காரணமாக யமுனா தீரத்திலுள்ள கோகுல கிராமத்துக்கு வந்து, பலராமஸஹிதனாயிருந்த உன்னைக் குறித்துக் கோபிகைகள், தாபிகைகளாய் விலவிலத்து, இரங்கி, ஒருவரோடொருவர் பின் வருமாறு பேசிக்கொண்டார்கள், "ஓ, தோழியர்காள்! கோவிந்தன், மதுராபுரிக்குப் போய்விடுவானானால், மறுபடியும் இங்கு எங்ஙனம் வருவான்! நகரத்துப் பெண்களுடைய மதுரமொழிகளாகிய செந்தேனையுண்டு களித்திருந்துவிடுவானல்லவா! அங்ஙனம் நகரத்துப் பெண்களுடைய $ விலாஸ வாக்யங்களில் மயங்கின அவனுடைய மனது, நாட்டுப்பெண்களாகிய நம்மிடத்தில் மயங்காது. நமது கோகுலத்துக்கு ஒரு பெரிய ¶ ரஸஜ்ஞனாயிருந்த இந்தக் கிருஷ்ணனை, இங்கிருந்து கொண்டுபோகும் கொடிய தெய்வம், கோபிகைகளாகிய நம் எல்லாருக்கும் ஒரே காலத்தில் ம்ருத்யுஹேதுவாயிருக்கின்றது. நகரத்துப் பெண்களுடைய மொழிகள், உணர்ச்சி மலிர்தவைகளாய், நகை முகத்

* சேஷ + பூதம் - எஞ்சிய பூதம்.
† பிரணவம் + ப்ரதிபாத்யன் - ப்ரணவப்பொருள்.
‡ ஸங்கர்ஷணன் - பலராமன். § ப்ரத்யும்னன் - மன்மதன்.
$ விலாஸ வாக்யம் - சாதுர்யமாதுர்ய வசனம்.
¶ ரஸஜ்ஞன் - உருசியுள்ளவன்.



தோடுகூடி விளங்குவனவாம். ஆகையால், இதுவரையில், அத்தகைய தையலரை அறியாமல், கோகுலத்தில் வாழ்ந்திருந்த கிருஷ்ணன், மதுரைக்குப் போயின பிறகு அந்நகரத்துப் பெண்களுடைய சாதுர்யம் என்னும் சங்கிலியால் கட்டப்பெற்றிருப்பான். அப்போது, அவன் இங்கு வருவான் என்று எப்படிச் சொல்லலாம்? இதோ, பாருங்கள்! அக்ரூர நாமம்பெற்ற க்ரூரனால், என்னமோ மாயஞ்செய்யப்பட்டு, அதனால் நமது கிருஷ்ணன், தேரேறி மதுரைக்குப் போகின்றான். தயா சூன்யனாகிய இந்த காதகன், நாம் அனைவரும் கிருஷ்ண மோகாக்னியால் உருகுகின்றோம் என்றுணரானோ! அதனை அவன் உணர்ந்திருப்பானாயின், நமக்கு நேத்ரானந்த விஷயமாயுள்ள கிருஷ்ணனை, வேறோரிடத்துக்குக் கொண்டு போகான். ஓ, மதிவதன வனிதையர்காள்! இக் கிருஷ்ணன், நமது இளைப்பையும், இரக்கத்தையும் இறையளவும் எண்ணாமல், பலராமரோடு கூடி, தேரேறிப்போகின்றான்; இவன், மிகவும் தயாசூன்யனாக இருக்கின்றான்; இவனைப் போகவொட்டாமல் தடுப்பதற்கு நீவிர் அனைவரும் முயற்சி செய்மின்கள். ஓ, சுந்தரவுருவத் துடி யிடையீர்! மாமனார் முதலியோர்க் கெதிரே இவ்விஷயத்தைக் குறித்துப் பேசப்படாதென்பீர்களானால், விரகாக்னியால் தகிக்கப்பட்ட பிறகு, பெரியார் என்ன செய்யவல்லார்கள்! நந்தகோபர் முதலியோரும், கிருஷ்ணனைப் பின்பற்றிப்போக முயல்கின்றார்களே அன்றி, ஒருவராகிலும், கோவிந்தனை போகவொட்டாமல் தடுக்க முயல்பவர் இலர். ஓ, மதன்சிலைக் கரும் புருவக் காரிகையீர்! மதுராவாஸிகளான மந்த மதியினர்களுக்கு, இன்று ஞான ஸூர்யோதயமாயிற்று; எங்ஙனம் எனில், அவர்களுடைய நேத்திரங்களென்னும் ப்ரமரங்கள், இன்று நமது கிருஷ்ணனுடைய முகத் தாமரையிற் றீந்தேனை மாந்துவன வல்லவா! இங்கே தடுக்கப்படாமல், கிருஷ்ணனைப் பின்பற்றிப் போகின்றவர்கள், மஹா புண்யவதிகள் ஆவார்கள். ஏனெனில், அங்ஙனம் அவனைப் பின்பற்றிப் போகிற பாக்யவதிகள், அவனுடைய ஸௌந்தரத் திருவுருவைத் தரிசித்துக்கொண்டு, தமது தேகங்களில் * புளகாங்குரங்கள் உண்டாக சந்தோஷிப்பார்கள் அல்லவா? இன்று, மதுராபுரிவாஸிகளுடைய நேத்திரங்கள், இந்த கோபால சூடாமணியினுடைய அழகை விருந்துண்டு மகிழ்வனவாம். மஹா புண்யவதிகளான அந்த நகரத்துப் பெண்கள், எப்படிப்பட்ட நற்கனவுகள் கண்டனரோ அறியோம். அவைகளின் பலனாக அவர்கள் யாதொரு தடையுமின்றி நமது கிருஷ்ணனைக் கண்டு முகக்களை விஞ்சக் களிப்புறுவார்கள். அந்தோ! கருணையற்ற கடவுள், கோபிகைகளாகிய நமக்கு ஒரு மஹா நிதியைக் காட்டி, உடனே மறைத்துக்கொண்டிருக்கின்றது. தாமரை வதனத்தையன்மீர்! காண்மின்கள்: கிருஷ்ணனுக்கு நம்மேலுள்ள ஆசை கழல்வதற் கடையாளமாக, நமது கரவளைகள் கழல்கின்றன. இந்த அக்ரூரன், மிக க்ரூரன் ஆகையால், தேரை விரைவிற் செலுத்துகின்றான். செங்கமலத் திரு

* புளக + அங்குரங்கள் - வேர்வை யரும்புகள்.

வனைய மங்கைமீர்! இங்ஙனம் வருந்தும் நம்மிடத்தில் யாருக்குத்தான் இரக்கமில்லாமற் போகும்! என்ன செய்யக்கடவோம்! மடமைக்குண மடந்தைகாள்! சிறிதுபோது, கண்ணனாகிய கிருஷ்ணன், நமது கண்ணைக்குக் காணப்பட்டான். பிறகு, அவன் ஏறிய தேர்மட்டும் காணப்பட்டது. இப்போது, அது மறைந்து, அதன் சக்கரத்திற் கிளம்பும் * பூபராகங்கள் காணப்படுகின்றன. இன்னும் அரைக்கணத்தில் அதுவும் மறைந்துபோகும். கிருஷ்ணன் நெடுந்தூரம் சென்றனன்" என்பதேயாம். இப்படி, கோபிகைகள் தாபிகைகளாய் வருந்துகையில், நான், கொஞ்சமேனும் அவர்கள் விஷயத்தில் இரக்கமென்பதில்லாமல், உன்னை, அக்கோகுலமெல்லாங் கடந்து கொண்டுவந்து விட்டேன். அற்றைப் பலனை இற்றைக் கநுபவிக்கின்றேன்.

'நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்கம்
என்று மிடும்பை தரும்' என்றபடி,

கோபிகா மனோஹரனாகிய உன்னை, நான், அந்த கோபிகையர் கண்களுக்குத் தெரியாமல் மறைத்தனன்; ஆகையால், இந்த ஜன்மத்தில், உனது திவ்ய மங்கள விக்ரஹத்தை ஸேவிப்பதற்கு ஸாதனங்களான கண்களின்றிப் பிறவிக் குருடனானேன் என்பதாம்.

இங்ஙனம் கூறி, கண்ணீர் ஆறாய்ப் பெருக வருந்தி நிற்கும் ஸூர்தாஸரிடத்தில் மிகப்பரிவுற்ற ஸ்ரீ வாஸுதேவன், தனது நிஜபக்தராகிய அவர்மேற் கருணைகூர்ந்து, இடையறாமல் ஒளிவீசும் முடியும், சதுர்ப்புஜங்களும், மாணிக்க மிழைத்த சுட்டியும், மகர குண்டலங்களும், கழுத்தில் வயிரமிழைத்த பொற்பட்டையும், ஹாரமும், கேயூரமும், கடகமும், ஸ்ரீ வத்ஸமும், கௌஸ்துபமும், முத்து மாலையும், பொன்னரைஞாணும், பீதாம்பரமும், † காஞ்சீகுண ‡ நூபுரங்களும் ஆகிய அளவற்ற திவ்யாபரணாலங்க்ருதனாய், சங்கு, சக்கர, கதா, சார்ங்க, நந்தகாதி திவ்யாயுததரனாய், வைஜயந்தி $ வனமாலா பூஷணனாய் நகைமுகமுடையவனாய், ஸாக்ஷாந் மன்மத மன்மதனாய் ஸேவை அளிக்க, அவர், ¶ உலவாக்கிழி பெற்ற வறியவனைப்போல, நேத்ரானந்தமாய் பகவானைத் தரிசித்து,

త్వమాదిదేవఃపురుషఃపురాణ । స్త్వమస్యవిశ్వస్యపరంనిధానం ।
వేత్తాసివేద్యంచపరంచధామ । త్వయాతతంవిశ్వమనంతరూప ॥
వాయుర్యమోగ్నిర్వరుణశ్శశాంకః । ప్రజాపతి స్త్వంప్రపితామహశ్చ ।
నమోనమ స్తేసహస్రకృత్వః । పునశ్చభూయోపినమోనమ స్తే॥

* பூ+பராகம் - பூமியினின்றும் காற்றினால் மேலெழுகின்ற புழுதி.
† காஞ்சீகுண - முத்துச்சரங்களால் செய்யப்பட்ட அரைப்பட்டிகை
‡ நூபுரம் - காற்சிலம்பு. $ வனமாலா - துளசி மாலை.
¶ உலவாக்கிழி - செலவிடக் குறையாத பணப்பை.



నమఃపురస్తాదథపృష్ఠతస్తే । నమోస్తుతేసర్వతయేవసర్వ ।
అనంతవీర్యామితవిక్రమ స్త్వం । సర్వంసమాప్నోషితతోసిసర్వః ॥

(என்றும்)

"ஆதி பகவன் ஆவாய் நீயே
புராண புருஷ புண்ணியன் நீயே
அனைத்துல குக்கும் ஆதாரன் நீயே
விச்சுவ வேத்த விமலனும் நீயே
முக்தாத் மாக்கள் மூவா தடையும்
மோக்ஷ ஸாதன முன்னவன் நீயே
உலகெலா நிறைந்த வொருவன் நீயே
வாயுவும் யமனும் வருணனும் அருணனும்
இந்திரனும் பிரமனும் சந்திரனும் விஷ்ணுவும்
இவர்கட் கெல்லாம் ஈசனும் உனக்கு
ஆயிர முறையால் அளவிலா வந்தனம்
செய்தன னுன்றன் திருமுக முன்னும்
பின்னும் பக்கமும் இன்னும் மேல்கீழ்
ஸமஸ்த திக்கினும் நமஸ்கரிக் கின்றேன்
எல்லை யில்லா வல்லப னொருநீ
உலகெலா நிறைந்த வுத்தம னாகையால்
ஸர்வ ஸ்வரூபியாய்ச் சாற்றுவர்
மேலோ ருனையிம் மேதினி மிசையே"

"ஓ பகவானே! நீயே ஆதிதேவன்; நீயே, புராண புண்ய புருஷன்; நீயே உலகனைத்துக்கும் ஆதாரவாயுள்ளவன்; நீயே, எல்லாம் உணர்ந்தவன்; நீயே, மலரஹிதன்; நீயே முக்தர்கள் அடையக்கூடிய மோக்ஷ ஸாதனப் பொருளாயுள்ளவன்; நீயே உலகெலா நிறைந்த ஒருவன்; வாயுவும் நீயே; யமனும் நீயே; வருணனும் நீயே; அருணனும் நீயே; இந்திரனும் நீயே; பிரமனும் நீயே; சந்திரனும் நீயே; விஷ்ணுவும் நீயே; இவர்கட்கெல்லாம் தலைவனும் நீயே; இப்பேர்ப்பட்ட உனக்கு ஆயிர முறை அளவிலா வந்தனம் தந்தனன்; உனக்கு எதிரேயும், பின்னேயும், வலப்புறம் இடப்புறங்களிலேயும், மேலேயும் கீழேயும் இன்னும் உள்ள ஸமஸ்த திசைகளிலேயும் நான் நமஸ்காரஞ் செய்கின்றேன். அளவற்ற ஆற்றலுடையவனாகிய நீ, உலகெலா நிறைந்த வுத்தமனாகையால், உன்னை ஸர்வஸ்வரூபியென்று இவ்வுலகிலுள்ள வுத்தமர்கள் கூறுவார்கள்" என்று விண்ணப்பஞ்செய்து, "பக்தர்களுடைய அன்பாறுபாயும் பரம ஸமுத்திரமே! எனக்குக் கண்களைத் தந்தருளி, உனது திவ்ய மங்கள விக்ரஹ சேவையைக் காணச் செய்தனை: உனது கிருபையை, நான் என்னவெனப் புகழ்வேன்! உன்னைத் தரிசித்த கண்களால் பின்னை வேறொன்றையும் காண வெறுக்கின்றேன். ஆகையால், உனக் கந்நியமான விஷயங்களை நான் பாராதிருக்கும்படி, எனது

ஊனக் கண்களை மறுபடியும் ஊறுபடுத்தி, உனது விஸ்வ ரூபத்தை இடையறாமல் தரிசிக்கும்படி ஞான கண்களை வீறுபடுத்தி யருள்வாய். இந்த வரம் தவிர நான் வேறொன்றையும் வேண்டேன்'' என்றார். அங்ஙனங் கூறின ஸூர்தாஸருடைய அகத்தூய்மைக்கு, பகவான் மிகவும் வியந்து, அவர் கோரினபடி வரமளித்தனன். அவர், இடையறாத ஹரிநாம ஸங்கீர்த்தனபரராய், பகவத் தியானம் பண்ணிக்கொண்டு வாழ்ந்திருந்தார்.

இங்ஙனம் இருக்க, அவந்தி தேசத்தரசன், அநேக பாடகர்களைச் சேர்த்துப் போஷித்துக்கொண்டு வருவானாயினன். அவர்களில் ஒரு பாடகப் புலவன், மஹா விநோதமாய்க்,

'கல்லு மிரும்புங் கரைந்துருகப் பட்டமரம்
பல்லவங்கொள் ளப்படிக்கும் பாடகன்கோ பாலனன்றே' என்றபடி,

உறுதியான கல்லும் இரும்பும், கான ரஸத்தால் உருகி திரவப்பொருளாகும்படியும், பட்டுப்போன உள்ளீடு இல்லா மரக்கட்டையும் தளிர்க்கும்படியும் பாட வல்லவனா யிருந்தான். அவனிடத்தில் மிதமிஞ்சி மகிழ்ந்திருந்த அரசன், அவனை நோக்கி, "ஓ, * காயகா! உன்னைப் போல் மனோஹரமாய்ப் பாடவல்லவர்களை, நான், இதுவரையில் கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை.

'செவிக்குண வில்லாதபோது சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்' என்று திருக்குறளினும்,

'காதில்லை யானாலுங் கட்செவிகண் ணாலேஸங்
கீதங்கேட் டுள்ளங் கிளுகிளுக்கும்—ஓதும்
செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்' என்று,

திருக்குறள் நீதிவெண்பாவிலும் கூறியவை உன்போன்ற காயகர் வாய் கான ரஸாம்ருதத்தை உத்தேஸித்தேயாம் என்க'' எனப் புகழ்ந்தனன். அதைக்கேட்ட அந்தப் பாடகன், "ஓ அரசே! மதுராபுரியிலே, ஸூர்தாஸரென்னும் † அந்தகர் ஒருவர், பரமபாகவத முதல்வராய், ஸாக்ஷாத் மாருதி எனத் தக்கவராய், அநவரதமும் பகவானைத் தியானித்த வண்ணமா யிருக்கின்றார். அவருடைய கான ரஸத்தில் ஹதாம்ஹமும் ஆகாத எனது கானம், ‡ அப்ரதானம். அந்த கான ரஸத்தை நான் என்ன எனக் கொண்டாடுவேன்! அவர் கானம் செய்ய ஆரம்பித்தால், கந்தர்வரும் நாணுவார்கள். ஸாக்ஷாத் பகவானே, அருகில் அமர்ந்து, சிரக்கம்பிதஞ் செய்வான்'' என்று கூறக்கேட்ட அரசன், ஆச்சரியம் அடைந்து, தனது அந்தரங்க மந்திரியை அனுப்பி, ஸூர்தாஸரை, வேண்டி யழைத்துவந்து, அவர், தனது கண்ணுக்குத் தோன்றினவுடனே, தனது பரிவாரத்தோடு, எழுந்து நின்று, வந்தந

* காயகன் - பாடகன்.
† அந்தகர் - கண்ணில்லாதவர்.
‡ அப்ரதானம் - பயனற்றது.



மரியாதைகள் செய்து, உன்னத ஆசனத்தில் உட்காருவித்து, "பாகவத முதல்வ! தாங்கள் செய்யும் பகவத் கீர்த்தனையைக் கேட்கவேண்டும் என்று, நானும், இங்குள்ள பிறரும் விரும்புகின்றோம், எங்கள் எண்ணத்தை ஈடேற்றவேண்டும்'' என்று பிரார்த்தித்தான். அதற்கு அவர், "ஆஹா! நல்லகாரியம்'' எனக்கூறி, ஹரிகீர்த்தனம் செய்ய ஆரம்பித்தார். அப்போது, விக்நேஸ்வரரும், ஸரஸ்வதியும் காட்சிதந்து, முறையே தாள வீணைகளைக் கைக்கொண்டு, ஸூர்தாஸர் கீர்த்தனைகட்கநுகூலமாய் வாசித்துக்கொண்டு, அவரது இருபுறங்களிலும் நின்றார்கள். தேவசபையில் வாழும் அரம்பைப் பெண்கள் முதலியோர், அவர்க்கெதிர் முகமாய் நின்று, அக் கீர்த்தனங்களின் நயத்தை அநுஸரித்து, அபிநயம் செய்ய ஆரம்பித்தார்கள். கந்தர்வ கிம்புருஷாதியர் வந்து, ஆச்சரியமுடையவர்களாய், அவரது கீர்த்தனங்களுக்குச் செவிசாய்த்து வந்தார்கள். பரமயோகியர்களுடைய வாக்கு மனங்களுக்கும் எட்டாத பகவான் எழுந்தருளிவந்து நிருத்தஞ் செய்யத்தொடங்கினன். அரசன் முதலிய அனைவரும் மெய்மறந்து, அசைவற்று, மரங்களைப்போலவும், சித்திரங்களைப்போலவும் நின்றார்கள். இங்ஙனம், ஒரு * ஜாமபரியந்தம், ஸூர்தாஸர், ஸ்ரீகிருஷ்ண லீலைகளை வர்ணித்துக்கொண்டிருந்தார். அதனைக் கேட்டவர்கள் அனைவரும், பரமபக்தி யுக்தர்களாய், பகவச் சரணாரவிந்தங்களில் ஒடுங்கிய மனமுடையவர்களாய், ஆனந்தபரவச மேலிட்டு, மௌன முத்திரை வகித்து சித்திரப் பாவைகள்போல் விளங்கினர். அரசன், ஸூர்தாஸருடைய திருவடி நிழலை யடைந்து, "மஹாத்மா! தாங்கள் இங்கு வஸித்து, இந்தக் கீர்த்தனங்களால், இவ்வூராரனைவரையும், பகவத் பக்தர்களாம்படி, கடாக்ஷித்தருளவேண்டும்'' என்று வேண்ட, அதற்கவர் உடம்பட்டு, அங்கேயே சிலகாலம் வாழ்ந்துகொண்டிருந்தார்.

இங்ஙனம் இருக்க, ராஜஸ்திரீகள், இராஜனை நோக்கி, "ப்ராண நாயகா! உமது ஆசார்யராகிய ஸூர்தாஸர், ஒரு நாளைக்கு எங்கள் அந்தப்புரத்துக்கு வந்து கொஞ்சநேரம் பகவானைப் பாடி, எங்களைக் கேட்பித்துக் † கிருதார்த்தைகள் ஆக்கவேண்டும் என்று, எதிர்நோக்கி யிருக்கின்றோம்'' என விண்ணப்பஞ்செய்ய, அரசன் தனது ஸ்திரீகளுடைய வேண்டுகோளை ஸூர்தாஸர்க்கு விண்ணப்பித்து, அதன்படி அவரை அழைத்துக்கொண்டு, அந்தப்புரத்துக்கு வந்து, ஒரு சிறந்த ஆஸனத்தி லமர்த்தினன். அப்போது, அந்த பாகவத முதல்வர், மிகவும் மனமகிழ்ந்து, பகவானைத் தமது இதய கமலத்தில் எழுந்தருளச் செய்து, கீர்த்தனங்களைப் பாட ஆரம்பித்தார். இவர், கண்ணில்லாராகையால், இராஜஸ்திரீகள் யாவரும் கூச்சம் விட்டு, அவர்க்கெதிரே நின்று சிரவணஞ் செய்துகொண்டிருந்தார்கள். இங்ஙனம் பகவத் கீர்த்தனை நடந்துகொண்டிருந்த காலத்தில், ஸ்ரீஸத்யபாமை, அவர்க்கு

* ஜாமம் - மூன்று மணிகாலம்.
† கிருதார்த்தைகள் - புண்யவதிகள்.

எதிர்முகமாகத் தோன்றி, நின்றனள். அப்போது பகவான் திருவருளால், ஸூர்தாஸர்க்கு, கண்கள் தெரிந்து, அந்த தேவியைத் தரிசித்து அவர், "ஓ, அம்மணீ! நீ என், இங்கு வந்து தனித்து நிற்கின்றனை?" என்று கேட்டார். இவ்வற்புதத்தைக் கண்ணுற்ற இராஜஸ்திரீகள், "இம்மஹாத்மாவை நாம் அந்தகர் என்றெண்ணி, நமது கூச்சத்தை விட்டு, இவருடைய ஸந்நிதிக் கெதிரே நின்றோம்; இவர், இப்போது, இங்கே கண்கூடாகக் காட்சி தந்தருளிய இந்த திவ்ய ஜகன்மாதாவைக் கண்டு, வார்த்தை சொல்லுகிறாரே!" என்று கூறி, நாணம் மேலிட்டவர்களாய், திரை மறைவில் ஒதுங்கி யிருந்தார்கள். அப்போது தேவாதி தேவனான ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா, பிரத்தியக்ஷமாய், ஸூர்தாஸர்க்கும் ஸத்யபாமைக்கும் தரிசனந் தந்து, அவர்கள் இருவரையும் தமது திவ்ய மங்கள விக்ரஹத்தில் ஐக்யப்படுத்திக்கொண்டு மறைந்தனன். இதனால் ஞான பக்தி வைராக்யசீலனாய்த் தன்னை தியானிக்கும் ஒவ்வொருவனையும் பகவான், * நித்தியானந்தபாயினியாகிய ஸ்ரீமஹா லக்ஷ்மியோடு, ஸம பாவனைசெய்து அங்கீகரிப்பன் என்றும், விருப்பு வெறுப்பற்று விளங்கும் பரம பாகவதன், பகவானுடைய திவ்ய மஹிஷிகள் பலரோடும் ஒருவனாக மதிக்கப்படுவான் என்றும், அப்பேர்ப்பட்ட உத்தமனை பகவான், தன்னுருவேயென ஒப்புக்கொள்வான் என்றும் ஊகித்தறிக. இந்த ஸூர்தாஸருடைய கீர்த்தனங்களை, பக்தி சிரத்தைகளோடு சிரவணஞ் செய்தவர்கள் அனைவரும், விரக்தி அடைந்து முக்தர்களாய் வாழ்ந்தார்கள்.

அக்ரூரவரதாயநம:

## நாற்பத்தொன்றும் அத்தியாயம்

# ஸேநாநாவி சரித்திரம்

அவந்திபுரத்தில் ஸேநாநாவியென்னும் மயிர்வினைஞர் ஒருவர், பகவத் கடாக்ஷத்தால், ஞானபக்தி வைராக்யங்கள் நிறைந்தவராய், ஸ்ரீபரதயோகியரைப்போல, அநவரத தியானநிஷ்டா பரராய், தமது குலத்தொழிலால் வயிறு வளர்த்து,

వరంహుతవహజ్వాల । పంజరాంతర్వ్యవస్థితః ।
నశౌరిచింతావిముఖ । జనసంవాశవైశసం ॥ (என்றால்)

"† சௌரியைச் சிந்தையில் தரியா தவர்களாய்
மந்தராய் மூடராய் வாழ்வார் தம்முடன்
கூடிவாழ் வதினும் குவலயந் தன்னில்

* நித்ய+ஆனந்த+பாயினி - அழியாத பேரின்பமாகிய இனிய பாலை ஊட்டுபவள். † சௌரி - கிருஷ்ணன்.



நெருப்புக் கூட்டில் நிலைத்து
வாழ்வது மேலென வழுத்த லாமே"

'சௌரியைச் சிந்தையி லிருத்தாத மூடருடன்கூடி வாழ்வதினும் நெருப்புக்கூட்டில் வாழ்வது மேலெனச் சொல்லலாம்' என்றெண்ணி, ஸம்ஸாரிகளுடைய ஸங்கத்திற் சேர்ந்து, அதனாற்பெறும் பேற்றை இச்சித்து மற்றைய மதிஹீனர்களைப்போல வாழ்ந்திராமல், காலம்கழித்து வருவாராயினர்.

శ్రేయాన్ స్వధర్మోవిగుణః । పరధర్మాత్స్వనుష్ఠితాత్ ।
స్వధర్మేనిధనంశ్రేయః । పరధర్మోభయావహః ॥

(என்றால்)

"உயர்வென மதித்துவே றொருகுலத் தொழிலை
இயற்றிவாழ் வதினும் ஈனமாந் தனது
சுயகுலத் தொழில்செயல் * தோமிலாப் புகழ்தரும்
மரணந் தம்வரை மன்னுதன் குலத்தொழில்
மாறா தியற்றுதல் மாண்பா மன்றிப்
† பரகுலத் தொழிலைப் பரிந்து
செய்பவர் நரகிற் சேர்குவர் தாமே"

'உயர்ந்து போகலாம் என்றெண்ணி யொருவன், பிறகுலத் தொழிலைச் செய்து பிழைப்பதைக் காட்டிலும், தனது ஸ்வய குலத்தொழில் தாழ்ந்ததானாலும் அதனையே விடாது செய்தல், குற்றமற்ற கீர்த்தியை உண்டாக்கும். ஒருவன், தான் சாகும் வரையில், நிலையாய்த் தனது ஸ்வய குலத்தொழில் செய்தலே பெருமை யுடைத்தாம். இதனைவிட்டு, பிற குலத்தொழிலை விரும்பிச்செய்தல், அவனை நரகிற்சேர்க்கும்' என்று பகவத் கீதையில், பகவான் சொல்லியிருக்கிறபடியால், மதிவாணராகிய ஸேநாநாவி, ஸ்வயகுலத்தொழில் செய்து, அதனால் வரும் ஊதியத்தால் மன நிறைந்து மகிழ்ந்து காலக்ஷேபஞ் செய்துகொண்டிருந்தனர்.

కిమప్యత్రాభిజాయంతే । యోగినస్సర్వయోనిషు ॥

'எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடிக் கற்றோரை மேல்வரு கென்பர்' என்றபடி,

இந்த மஹான், ஹீனகுலத்தில் அவதரித்திருந்தும்,

శమోదమస్తపశ్శౌచం । క్షాంత్యార్జవవిరక్తతా ।
జ్ఞానవిజ్ఞానసంతోషః । సత్యాస్తిక్యేద్విషడ్గుణాః ॥ (என்றால்),

* தோம்+இல்லா - குற்றம் இல்லாத. † பர+குலம் - வேறு குலம்.

'* அடக்கம், † சாந்தம், அருந்தவம், ‡ சௌசம்
§ பொறுமை, || நேர்மை, புலன்வழி யொடுக்கம்
$ ஞான, ¶ விஞ்ஞான, நன்மன நிறைவு
உண்மை, கருணை உத்தம
குணங்களீ ராறும் கொண்டுவாழ்ந் தனரே' என்றபடி,

இந்த ⁑ துவாதச குணங்களோடு கூடினவராய், பகவானுக்கு மிகவும் அன்புள்ளவராய் விளங்கினார். இவர், காம, க்ரோத, லோப, மோஹ, மத, மாற்சர்யங்களென்னும் ஆறு குற்றங்களையும் வென்று, தொன்று தொட்டு, தமது இதயாலயத்தில் வாழ்ந்திருந்த அஹங்கார மமகாரங்களென்னும் சண்டாளர்களிருவரையும் தூரத்தே துரத்தியடித்து, லக்ஷ்மீ காந்தனைத் தமது இதயாம்புயத்தில் உறுதியாய் எழுந்தருளச்செய்து, உலகை மறந்து, அநவரத + மாநஸிகாராதனத்தால், பகவானைக் களிப்பித்து, தாமும் ஆனந்த பரவசராய் வாழ்ந்தார்.

ஒருநாள், அந்த தேசாதிபதியாகிய துருக்க ப்ரபுவானவர், க்ஷௌரம் செய்து கொள்ளவேண்டுமென்று, ஸேநாநாவியை அழைத்து வரும்படி ஆட்களை ஏவினர். அந்த ஸமயத்தில் இந்த பாகவத முதல்வர், சாந்தமாகிய நீரில் ஸ்நானஞ்செய்து, மன அடக்கம் என்னும் வஸ்திரம் அணிந்து, பரம வைராக்ய மென்னும் வைஷ்ணவாலங்காரம் செய்து கொண்டு, ஒன்பது வழிகளையுடைய சரீர நகரத்தில் விளங்கும் இதயாலயத்தை, ஞானம் என்னும் × கோமயத்தால் இடச்சுத்தி செய்து, விஞ்ஞானமென்னும் கோலமிட்டு, நேர்மை யென்னும் வாழையை நட்டு, பொறுமை யென்னும் விதானத்தைக் கட்டி, ஸத்யம் என்னும் பீடத்தில் லக்ஷ்மீ காந்தனை எழுந்தருளப்பண்ணி, பூததயை யென்னும் தூபத்தையும், தீனஜன போஷணம் என்னும் தீபத்தையும், ஸர்வ பூத ஸமபாவனை யென்னும் விசிறியையும், அன்பென்னும் வெண்சாமரத்தையும், கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டைகளாகிய அர்க்ய பாத்யாசமனங்களையும், ஞானானந்த மயமாய் ஞானப் பெருக்கமாய் பரமாத்ம சேஷமாய்ப் பரிமளிக்கும் பரிசுத்தாத்மா வென்னும் மஹா நைவேத்யத்தையும், பெருந்தகைமை யென்னும் தாம்பூலத்தையும், ஜீவ காருண்யம் என்னும் ஆலத்தியையும் ஸமர்ப்பித்துத் தம்மை மறந்து, தாமாய தந்மயமாய் பகவத்யான பரராய் வீற்றிருந்தார்.

* அடக்கம் - மனவடக்கம். † சாந்தம் - மனத்தூய்மையால் இன்முகங் காட்டல்.

‡ சௌசம் - சரீரசுத்தம் முதலியன. § பொறுமை - கோப முதலியவற்றைத் தடுத்தல்.

|| நேர்மை - கவடின்மை; நெஞ்சை யொளித்த் வஞ்சக மின்மை.

$ ஞானம் - இயற்கை அறிவு. ¶ விஞ்ஞானம் - சாஸ்திர ஆராய்ச்சி முதலியவைகளால் வரும் செயற்கை அறிவு.

⁑ துவாதசம் - பன்னிரண்டு.

+ மாநஸிக + ஆராதனம் - மானத பூசை; த்யான ஸமாதி.

× கோமயம் - சாணம்.



இவர், உலகினை மறந்து, பகவத்யானத்தில் மனம் நிலைத்திருந்தபடியால், ராஜ ஸேவகர்கள், தம்மை அழைப்பதறியாதிருந்தனர். இவருடைய நன்னிலையை யறிந்த இவர் வீட்டார், "ஸேநாநாவி, வீட்டில் இலர்" என்று, அவ்வரச தூதர்களுக்குப் பொய் சொல்லி யனுப்பி விட்டார்கள். மேலும் மேலும் பல தூதர்கள் வந்து அழைத்தும், "ஸேநாநாவி இலர்" என்றே, அவர் வீட்டார் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இங்ஙனம் இருக்க,

జ్ఞాతిశ్చేదనలేనకిం ॥ (என்றால்),

'* ஞாதி நெருப்பிருக்க ஞாலமிசை ஞானபரன்
சோதிநெருப் பேன்படைத்தான் சொல்' என்ற

நீதி வாக்யம் ஸத்ய வாக்யமாகும் வண்ணம், இவருடைய ஞாதி ஒருவன் அரசன் சந்நிதிக்குச் சென்று, "ஓ, அரச! ஸேநாநாவி வீட்டுக்குள்ளேயே யிருக்கின்றான்; தேவரீர் கட்டளைக்கு அஞ்சாமல், தான் வீட்டிலில்லையெனச் சொல்லி அனுப்பினான்" என்று விண்ணப்பஞ் செய்தான். அதைக்கேட்ட அரசன், கடுஞ்சின முடையவனாய், சில தூதர்களை அழைத்து, "அவனை, இப்போதே பிடித்து, அடித்துக் கட்டிக் கடலில் எறியுங்கள்" என்று, கடுந்தண்டனை விதித்தான். அந்த ஸமயத்தில், பக்தவத்ஸலனாய், தீனதயாளனாய், ஆபத்பாந்தவனாயுள்ள ஸ்ரீமத் பண்டரிநாதன், சிறிதும் தாழ்க்காமல், ஸேநாநாவியின் வேடந்தாங்கி, அடைப்பத்தை அக்குளில் இடுக்கி, அதி நாதரனாய், ராஜ ஸந்நிதிக்கு வந்து, முழங்காற்படியிட்டு வந்தனம் (ஸலாம்) தந்தனன். அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகனாய், பரம யோகியர்க்கும் வாசாமகோசரனாய், தேவாதி தேவனாய், ஸர்வலோக சரண்யனாய், ஸர்வ பூத ஹ்ருதயாம்புஜவர்த்தியாய், கர்ம ஸாக்ஷியாய், கர்ம பல ப்ரதானனாய், முக்திநாதனாய், லக்ஷ்மீ நாயகனாகிய ஸ்ரீ புண்டரீக வரதன், தனது பக்தர் நலங் கருதி, தான் படுங்கஷ்டத்தை விளம்பரப் படுத்தும் பொருட்டு, ஸேநாநாவியின் திருவுருவெடுத்து, அடைப்பத்தைச் சுமந்து, துருக்க ப்ரபுவுக்கு க்ஷௌரஞ் செய்யச் சித்தந் திரும்பி எழுந்தருளினான்.

"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்" என்றபடி,

'காதலியின் வாய் நீரூற்றைக் காமுறாஉம்' காதலனே போல, அன்பர்க் கன்பனான பக்தவத்ஸலன், ஸேநாநாவியின் இழிகுலத் தொழிலை, தான் செய்யவேண்டுமென்று இச்சித்து மகிழ்ந்தனன். விட்டலனுக்கு, பல வேஷங்களும் பான்மையாகவே யிருக்கும். இங்ஙனம், தனது, க்ஷௌர வினையை தடையின்றி நிறைவேற்றச் சித்தந் திரும்பி எழுந்தருளின பகவானைக் கண்ட அரசனுக்குக் கோபம் தணிந்தது. சூர்யோதயத்திற்கு முன்னே இருள் தலையெடுக்குமா! அன்றியும், சந்த்ரோ

* ஞாதி - தந்தைவழிப் பங்காளி.

தயத்தில், ஆம்பல் மலர்களுக்கு ஆனந்தம் உண்டாகிறபடி, இம்மஹா புருஷனைக் கண்டவுடனே, அங்கிருந்தார் அனைவருக்கும், * நிர்வ்யாஜமாய் ஆனந்தரஸம் பொங்கிற்று. இந்த க்ஷௌரக வேஷதாரி, அரசன் நியமனத்தை அடைந்து, அவனுக்கு க்ஷௌரஞ்செய்யத் தொடங்கினான். இந்த வேஷதாரி க்ஷௌரஞ்செய்யும் திறமையால், அரசன், ஆனந்த பரவசனானான். இங்ஙனம் க்ஷௌரம் முடிந்தபிறகு, வழக்கப்படி பரிசாரகர்கள், ஸுகந்த தைலத்தை யொரு ஸ்வர்ணபாத்திரத்தில் கொண்டுவந்து வைத்தார்கள். க்ஷௌரக வேஷதாரி, அந்தத் தைலத்தை, அரசன் தலையிற் றடவிக் கொண்டிருந்தனன். அப்போது அந்த க்ஷௌரகனுடைய கரஸ்பரிசத்தால், அரசனுக்கு அதுவரையில் இருந்த † ஹேயகுணங்கள் அகன்று, அடக்கம் சாந்தம் முதலிய அருங்குணங்கள் உண்டாயின. ஸுகந்த தைலத்தில் க்ஷௌரகனுடைய நிழல், சதுர்புஜங்களுடனும், கிரீடம் குண்டலங்கள், ‡ கேயூரங்கள் முதலிய திவ்யாபரணங்களுடனும், ஸ்ரீவத்ஸ கௌஸ்துபங்களுடனும், வைஜயந்திவனமாலிகைகளுடனும், அகில லோகமாதாவாகிய ஸ்ரீ மஹாலக்ஷ்மிக்கு ஆலயமான விசால § வக்ஷஸ்தலத்துடனும், சங்க சக்ர முதலிய திவ்யாயுதங்களுடனும், அருளே குடிகொண்டு காதளவோடி நீண்டகன்றனவாகிய கண்களுடனும், களங்க ரஹிதமான புன்முறுவல் பூத்த நகை முகத்தாமரையுடனும், வரதாபய கரதலங்களுடனும் அரசனுக்குத் தோற்றியது. அப் பிரதிபிம்பத்தை அரசன் தரிசித்தபின்பு பிரமானந்தமடைந்து, ஒடுங்கிய மனமுள்ளவனாய், அசைவற்றிருந்தான். மிகவும் பொழுதேறினபடியால், அரசனுடைய அந்தரங்க பரிஜனங்கள், "ஸ்நானம்செய்ய வாருங்கள்" என்று அரசனுக்குக் குறிப்பித்தார்கள். அரசன் எழுந்து, ஸேநாநாவியை நோக்கி, "உன் போன்ற $ சதுரன் உலகத்திற் கிடையாது. உனது பிரிவு என்னால் ஆற்ற முடியாததாயிருக்கின்றது. நான், ஸ்நானஞ்செய்து, புசித்து வருகின்றேன். இதற்குள் நீயும் உனது வீட்டுக்குப் போய் புசித்து வரக்கடவை" என்று கூறி, தனது இரு கை நிறைய ¶ வராகன்களைக்கொண்டுவந்து, அவனுடைய ஆடையிற்பெய்து அனுப்பினன். பகவான், ஸேநாநாவியின் வீட்டுக்கு வந்து, அரசன் தந்த வராகன்களை, அவருடைய அடைப்பத்தில் பத்திரமாய் அடைத்து வைத்துவிட்டு, மறைந்துபோயினன். அரசன், தைல பாத்திரத்தில், தனக் ககப்பட்ட பகவத் விக்ரஹத்தை, பக்தி யோக நிஷ்டனைப்போல, நிரந்தர தியானம் பண்ணிக்கொண்டு, ஸ்நான போஜன கார்யங்களைச் சுருக்காய் முடித்து, || ஆஸ்தான மண்டபத்துக்கு வந்து, அந்தரங்க பரிசாரகர்களை நோக்கி, "ஸேநாநாவி, எங்கிருக்கின்றனன்?

* நிர்வ்யாஜமாய் - உள்ளபடியே, உண்மையிலேயே.

† ஹேய குணங்கள் - இழிகுணங்கள்.

‡ கேயூரங்கள் - தோளணிகள்.

§ வக்ஷஸ்தலம் - மார்பிடம்.

$ சதுரன் - வல்லவன்.

¶ வராகன்கள் - அக்காலத்தில் வழங்கிய நாணயங்களில் ஒன்று.

|| ஆஸ்தான மண்டபம் - கொலுமண்டபம்.



அப்படிப்பட்ட உத்தம புருஷன் எங்காவதுளனோ? அம் மஹாநுபாவனுடைய உத்தம சரித்திரம் அத்யத்புதமாய், முக்திமார்க்கமா யிருக்கின்றது. அவனுடைய பிரிவு, எனக்கு துஸ்ஸஹமா யிருக்கின்றது. ஆகையால், அந்த பரமஸாதுவை, விரைவாய் அழைத்து வாருங்கள்" என்று நியமித்தனன். ராஜ தூதர்கள், சீக்கிரமாய் ஓடிவந்து, ஸேநாநாவிக்கு, அரசன் கட்டளையை அறிவித்தார்கள். இதற்குள், ஸேநாநாவி, தான் பகவானுக்குச் செய்யும் மாநஸிகாராதனத்தை முடித்து, பூலோக ஞானத்தில் மனதை ஊன்றி, "ராஜ படர்கள் அநேக முறை; தன்னை அழைத்துவிட்டுப் போனார்கள்" எனக் கேள்வியுற்று, தமது மனதில் பின்வருமாறு சிந்திக்கலானார்:—

"நான், இந்நேரம் மாநஸிக ஆராதன நிஷ்டனாய், உலகினை மறந்திருந்தேன்; பன்முறை அழைத்தும் போகாமையால் என்மேல் அரசனுக்குக் கோபம் உண்டாயிருக்கும்! ஆனாலும் என்ன!

అంభోజినీవనవిహారవిలాసమేవ । హంసస్యహంతినితరాంకుపితోవిధాతా।
నత్వస్యదుగ్ధజలభేదవిధౌప్రసిద్ధాం। వైదగ్ధ్యకీర్తిమపహర్తుమసౌసమర్థః ॥

(என்றால்)

'அயன்றன் னுடைய அன்னவா கனத்தைக்
கோபித் தகற்றுமேல் கோக னகவனை
† விஹார மதனை விலக்கலா மன்றிப்
பாலி னீரைப் பகுக்கும் அதன்றன்
உத்தம குணத்தை ஒழிக்க
அவனா லாகா தாகா தன்றே'

'பிரமனுக்குத் தனது வாஹனமாகிய அன்னப்பறவையின்மேல் கோபம் வந்தால், தாமரைக்காட்டில் அதனை உலாவித் திரியாதபடி நீக்கலாம் அன்றி, பாலினின்று நீரைப்பிரிக்கும் அதனுடைய உத்தமகுணத்தை ஒழிக்க அவனால் ஆகாதாகாது, முக்காலும் ஆகாதல்லவா!' அங்ஙனமே இவ்வரசனுக்கு என்மேல் கோபமுண்டானால் இவன், எனது ஜீவனத்துக்குக் கேடுசூழக் கூடுமேயன்றி, வேறென்ன செய்யவல்லான்? எனது இதயத்தில் மறைத்துப் புதைக்கப்பட்டு, விலையில்லாததாய், அளவற்றதாய், அகிலலோக ஜீவனமாய், அகிலலோகோதய காரணவித்தாய், எனது எய்ப்பில் உதவும் வைப்பனைய பரமாத்ம பரம்பொருளை அபகரிப்பதற்கு, இவனால் முடியாது. என்னிடத்திலும், இந்த அரசனிடத்திலும், இன்னும் உள்ள ஸர்வ சராசரப் பொருள்களினிடத்திலும் மறைந்து நிறைந்து விளங்கும் பரமாத்மன் ஒருவனாகியே இருக்க, அரசனுக்கு என்மேல் கோபம் வரும் என்று, நான் ஏன், ஸந்தேகப்பட வேண்டும்! ஸூத்ரதாரிக்குத் தெரியாமல் பொம்மைகள் கூத்தாடுமா? என்னைத் தன்னவனாக ஆண்டு, எனது பூஜையை ஏற்றுக்கொள்ளுகிற

† விஹாரம் - இச்சையின்படி உலாவல்.

பாண்டுரங்கன் என்னும் ஸூத்ரதாரியினுடைய லீலைகளுக்கு, பிரமாதி * பிபீலிகாந்தமான ஸமஸ்த பிராணிகளும் பொம்மைகளாயிருக்க, அரசன் மாத்திரம் அதற்குப் புறம்பானவனோ! இதுவுமல்லாமல், கவசம் பூண்ட புருஷனைப்போல, ஸ்ரீமத் பாண்டுரங்கன், ஸமஸ்த சேதனு சேதனங்களையும் கவசமாய்த் தரித்துக் கொண்டிருக்கிறபடியால், நானும் இந்த அரசனும், அந்த பாண்டுரங்க வுருவமாக இருக்கின்றோம். ஆகையால், நான் ஏன், எனது பிராணேசனாகிய ஸ்ரீமத் பாண்டுரங்க சந்நிதானத்தை, அரச ஸபையென்று மருண்டேன்! விக்ரமார்க்க னுடைய ஸிம்ஹாஸனத்தின்மேல் உட்கார்ந்திருக்கும் ப்ரமலோபியும், வரையாதளிக்கும் வள்ளலாமாறு, கர்மபூமியிற் பிறந்துள்ள எனக்கு, இத்தகைய மனக்கலக்கம் உண்டாகியது" என்று சிறிது சிந்தித்து, பகவத் கடாக்ஷ சித்தியாகிய ஞான விளக்கொளியால், பேத ஞானமென்னும் † திமிரத்தைத் துரத்தியடித்து, அடைப்பத்தைக் கைக்கொண்டு, வீடு விட்டு வெளிப்பட்டு,

అనంతవైకుంఠముకుందకృష్ణ । గోవిందదామోదరమాధవేతి ।
వక్తుంసమర్థోపినవక్తికశ్చిత్ । అహోజనానాంవ్యసనాభిముఖ్యం ॥

(என்றால்)

"கேசவா நந்த கிருஷ்ணதா மோதர
மாதவ முகுந்தவை குந்தகோ விந்த
என்று நாவினால் இயம்பவல் லாரில்
ஒருவ னேனுமிவ் வுத்தமப் பெயர்களுள்
ஒன்றினை யேனும் உரைத்தல் அரிதாம்
அந்தோ இவர்கள் அனைவரும் பாழ்த்த
ஸம்ஸா ரார்ணவந் தன்னில்
வீழ்ந்து வருந்தி வீணாள் கழிப்பரே".

'கேசவா, அநந்தா, கிருஷ்ணா, தாமோதரா, மாதவா, முகுந்தா, வைகுந்தா, கோவிந்தா என்று கூறுவதற்கு நாவுள்ளவர்களில் ஒருவனாயினும் இந்த உத்தம நாமங்களில் ஒன்றையேனும், தனது மனமொடுங்கி அன்பாய் உச்சரிப்பது கிடையாது. ஐயோ! ஊமைகளாய்ப் பிறவாமல், நாவுள்ளவர்களாய்ப் பிறந்தும், இவர்களுக்கு ஸம்ஸார சாகரத்தை நீந்துவதே பெரிய காரியமாய் காலம் கழிகின்றது' என்று, பரோபகார பரோபதேச பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டேபோய், இராஜ மந்திரவாசலில் நுழைந்து, அரசனுக்கெதிரே நின்றனர். அவரைக்கண்ட அரசன், ஸூர்யனைக்கண்ட தாமரை மலரைப்போலவும், சந்திரனைக் கண்ட குமுதமலரைப் போலவும், மேகத்தைக்கண்ட சாதகப்பறவையைப்போலவும், காதலியைக்கண்ட காதலனைப்போலவும் களிப்படைந்து, திடீரென்றெழுந்து மரியாதை செய்து, அவருடைய திருவடித்

* பிபீலிகம் - எறும்பு. † திமிரம் - இருள்.



தாமரைகளில், தனது சிரத்தைப் பொருத்தி, நின்றபடியே, "ஓ, மஹாத்மா! இன்று அடியேனுக்கு ஞான ஸூர்யோதயமாயிற்று. உம்மை நான் இதுவரையில் ஸாமான்ய மனிதர்க்குள் ஒருவரென்று எண்ணியிருந்தேன்; இன்று, நீர் எனக்கு க்ஷௌரஞ்செய்தபோது, நான் தைலத்தில் கண்ட வுமது திருவுருவம், எனது சித்தத்தை இழுத்து, என்னைத் தன்வசமாக்கிக் கொண்டது. இதோ! நான் உம்மை இரந்து கேட்டுக் கொள்ளுகின்றேன்: எனக்கு இன்னொரு முறை அப்பேர்ப்பட்ட தரிசனத்தை வழங்க வேண்டும்; ஐயனே!" எனப் பரிந்து கூறிப் பரிசாரர்களை விளித்து, ஸ்வர்ண பாத்திரத்தில் தைலங் கொண்டுவரச்செய்து, அவர்க்கெதிரே வைத்து, அந்த தைலத்தை உற்று நோக்க, அதனில், முன்னே தோற்றியதுபோல, பகவானது திருவுருவம், தோற்றவில்லை. ஸேநாநாவி இவ்வற்புதத்தைக் கேட்டு, புளகாங்கித சரீரமுடையவராய், பகவானுடைய திவ்ய லீலைகளை எண்ணி, மனமுருகி, "கருணைக்கடலே! ஏழைகட்கு எய்ப்பில் வைப்பே! அளவிலா அன்பார்கலியே! அளவிலா அருட்பெருமலையே! புண்டரீகவரதா! லக்ஷ்மீகாந்தா! நீசரினும் நீசனாகிய அடியேன்பொருட்டு இத்தகைய நீசகாரியத்தைச் செய்தனையல்லவா! அநவரதம் நினைத்த மாத்திரையில் படைத்தல், காக்கல், அழித்தல்களை, அநாயாஸமாய்ச் செய்யவல்ல நீ, உனது பக்தனது அன்பை விளம்பரப்படுத்தும்பொருட்டு, அடைப்பத்தைக் கைக்கொண்டு, க்ஷௌரக்ருத்யத்தைச்செய்ய இச்சித்த தன்மை, விந்தையினும் விந்தையாயிருக்கின்றது. நான் கொடும் பாவியர்க்குள் முதல்வனாகையால், எனக்காக, ஈசனாகிய நீ, நீசனாக வேடம் பூண்டு, நீசகாரியம் செய்ய நேரிட்டது!" என்று சொல்லிக்கொண்டே தம்மை மறந்து பரவசராய் பூமிமேல் வீழ்ந்து அழுது புரண்டார். அரசன், அற்புத நிறைந்த மனமுடையவனாய், விம்மி விம்மி மெய் மறந்து, ஆனந்த பாஷ்பங்களோடு கூடி, "ஓ புண்ய புருஷ! தேவரீரால் எனக்கு, பிரமருத்ரேந்த்ர ஸநகாதியர்களுடைய தியானங்களுக்கும், வெகு தூரமாயுள்ள பகவானுடைய தரிசனம் ஸுலபமாய்க் கிடைத்தது" எனக்கூறி, அவர்க்கு உபசாரஞ் செய்துகொண்டிருந்தனன். ஸேநாநாவி, சிறிது தெளிந்து, "ஓ, அரச! உனது பாக்யமே பாக்யம்; நீ ஊறிய கருவின் யோகமே யோகம்; உனது பிதாமகர் செய்த புண்யமே புண்யம்! ஸ்ரீகிருஷ்ண பரமாத்மை * ஸாக்ஷாத்கரித்த உன்னைத் தரிசிக்க, நான் என்ன தவஞ்செய்தேன்!" என்று கூறி, அடைப்பம் பளுவாய் இருப்பதற்குக் காரணம் தெரியாமையால், அதனைச் சோதித்து, அதனுள் இருந்த வராகன்களைக்கண்டு, "லக்ஷ்மீநாதா! அநாத நாதா! பண்டரிநாதா! உலகநாதா! உம்பர்கள் நாதா! அநந்த ப்ரமாண்ட ஸ்ருஷ்டியை நினைத்தமாத்திரையிலேயே செய்யவல்ல நீ, க்ஷௌரஞ்செய்து, ஸம்பாதித்த கூலியா இது!" எனக்கூறி, அந்தப் பணத்தை ஈச்வரஸந்தானமாகிய தீன ஜனங்களுக்கு வழங்கி மகிழ்ந்தார். அரசன், அன்று முதல், பரமவிரக்தனாய், பரமபாகவதரான ஸேநா

* ஸாக்ஷாத்கரித்த = நிஜரூபமாய்த் தோற்றக்கண்ட.

நாவிக்கு மிகவும் பிரிய சிஷ்யனாய் இருந்தான். ஸேநாநாவியும் அரசனும், உடலும் உயிரும்போல, அநவரதமும் நீங்காமல், பகவத்யானம் பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

விசித்ரசரித்ராயநமஃ

## நாற்பத்திரண்டாம் அத்தியாயம்

# ஸாத்விகராஜர் சரித்திரம்

பரம பரிசுத்த க்ஷேத்ரமாகிய ஸ்ரீஜகந்நாதத்தில், ஸாத்விகராஜர் என்னும் பாகவத முதல்வர், ஸ்ரீஜகந்நாதனுடைய சரணாரவிந்தங்களில், அசையாத பக்தி பூண்டவராய், ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவை, ஸர்வோபசாரங்களுடன் ஆராதித்து, அதிதிகளையும் ஏழைகளையும் அங்கஹீனர்களையும் சிரத்தையுடன் போஷித்து, சராசரங்களாலாய ஸர்வ பிரபஞ்சத்தையும் பகவத்ஸ்வரூப பாவனை செய்து, ஞானபக்தி வைராக்யங்கள் நிறைந்தவராய், தமது இராஜ்யத்தில் வாழும் பிரஜைகள், தமக்குச் *சேஷபூதர்களென்று எண்ணாமல், ஸமஸ்த சேதனர்களும் ஈச்வர ஸந்தானமென்றும், அவர்களுக்கு, செல்வமும் வறுமையும் பூர்வ கர்மாநுகுணமாய், பகவத்பிரஸாதத்தால் வருவனவென்றும் எண்ணி, கல்வி, பணம், சுற்றம் இவைகளிடத்துள்ள துராசையற்று ஸுசீலராய் வாழ்ந்தார்.

ஒருநாள் இவர், பகவத் தரிசனத்தின் பொருட்டு, ஸ்ரீபுருஷோத்தமன் ஸந்நிதிக்கு வந்தார். அப்போது, திருவாராதனம் நடக்கும் ஸமயமாயிருந்தபடியால், ஆலயத்துக்குள் நுழையாமல், கோபுரவாசலில் உட்கார்ந்து, பிரதானி முதலிய அந்தரங்க பரிவாரங்களுடன், பொழுது போக்காகப் பாய்ச்சிகைகளை வரவழைத்து, சூதாடிக்கொண்டிருந்தார். ஸ்ரீபுருஷோத்தமனுக்கு, மஹாநைவேத்ய † நிராஜனங்கள் முடிந்தபிறகு, "பகவத்ஸேவைசெய்ய இதுவே ஸமயம்" என்று, மந்திரி முதலியோர் அரசர்க்கு விண்ணப்பித்தார்கள். சூதாட்டத்தில் வைத்த விருப்பமிகுதியில், அவ்விண்ணப்பம்; அவர் காதிற் புகவில்லை. பிறகு, அர்ச்சகர்கள், பகவத்பிரஸாதமான நைவேத்யான்னத்தை அரசர்க்குக் கொடுக்க வந்தார்கள். அவர், சூதாட்டத்தில் லயித்த மனம் உடையவராய், மஹா ப்ரஸாதத்தை மரியாதையுடன் எழுந்து, இருகரங்களினும் பெற்றுக் கொள்ளாமல், வலது கையிற் பாய்ச்சிகைகளை யுருட்டிக்கொண்டே, இடது கையை நீட்டினார். அர்ச்சகர்கள், பகவத்பிரஸாதத்தை இடது கையில் இடக்கூடாதென்று, அரசர்க்குக் கொடுக்காமற் கொண்டு போனார்கள். அரசர், சூதாட்டம் முடிந்தபிறகு, மந்திரி முதலியோரை நோக்கி, "நல்ல வெய்யிலேறியது; ஸ்ரீபுருஷோத்தமற்கு, இன்னும் மஹா

* சேஷபூதர்கள்=தாழ்ந்தவர்கள். † நிராஜனம்=ஆலத்தி.



நைவேத்யம் ஆகாமைக்குக் காரணம் யாது?" எனக்கேட்டார். அதற்கு, மந்திரி முதலியோர், "மஹாராஜாவே! மஹாநைவேத்யம் முடிந்து நெடுநேரமாய்விட்டது; அப்போது, நாங்கள், 'ஸ்வாமி ஸேவைக்கு இது தருணம்' என்று விண்ணப்பித்தோம். எமது விண்ணப்பம் தேவரீர் திருச்செவியில் நுழையாமற்போயிற்று. அர்ச்சகர்கள் நைவேத்யான்னத்தைக் கொடுக்க வந்தார்கள்; தாங்கள் வேறு நினைவாய், அதனைப்பெறும்படி, தங்கள் இடதுகையை நீட்டினீர்கள். அதுகண்ட அவர்கள், பகவத்பிரஸாதத்தை இடக்கையில் இடக்கூடாதென்று, திரும்பிப்போய்விட்டார்கள். சூதாட்டத்தில் வைத்த மோஹத்தால், இத்தனை விருத்தாந்தங்களையும், தேவரீர் சித்தம் அறியாதிருக்கின்றது" என்றார்கள். அது கேட்ட அரசர், தம்மைத் தாமே வெறுத்துக்கொண்டவராய், "இது என்ன பாபம்! எனது ஊழ்வினையின் சேஷம், எனக்கு இப்படிப்பட்ட விபரீத மதியை உண்டாக்கிவிட்டது. யாகக்ஷேத்ரத்துக்குப்போய், அங்குக் கிடைத்த *ஸோமபானத்தைக் கைவிட்டு, † ஸுராபானம் பண்ண விரும்பும் கோணமதி வாணனைப்போல, நான், ஸ்ரீ புருஷோத்தமனுடைய ஸந்நிதானத்துக்கு வந்து, பரம ‡ பாவனமான பகவத் பிரஸாதத்தைக் கைவிட்டு, நரக காரணமான சூதாட்டத்தைக் காதலித்தேன். எனது பாபங்கள் எல்லாம் ஒன்றாய்த் திரண்டுருண்டு, இந்தப் பாய்ச்சிகைகள் வடிவாய் வந்து, இன்று, என்னை இந்த துன்பத்துக்கு ஆளாக்கின. விஷப்பாம்புடன் பழகும் ஒருவனைப்போல, பாபவிஷத்தோடு கூடிய இந்த § அக்ஷங்களுடன் மருவினேன். நன்மதிவாணர்கள், இந்தச் சூது $ துன்பந்தருவதென்று, இதனைத் தொடவும் அஞ்சுவார்கள் அல்லவா? இதுபற்றியே நளவெண்பாவிலும்,

"அறத்தை வேர் கல்லும் அருநரகிற் சேர்க்கும்
திறத்தையே கொண்டருளைத் தேய்க்கும்—மறத்தையே
பூண்டுவிரோதஞ் செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்கள்
தீண்டுவரோ என்றார் தெரிந்து" என,

நளச்சக்ரவர்த்திக்கு அவருடைய மந்திரிமார் கூறினதாகக் காண்கின்றோம். நளன் தருமர் முதலானவர்கள், சூதாட்டத்தினால், படாத பாடுகள் பட்டு, வருந்தினதை அறியாதார் யாவர்? பகவத் ஸந்நிதியில் இப்படிப்பட்ட மஹா பாபத்தைச்செய்த எனக்கு, ¶ மநுஸ்ம்ருதி முதலியவைகளில் விதித்துள்ள தண்டனையும் போதாது! எனப் பிரலாபித்து, ஆலயத்துள் நுழைந்து, பகவத் தரிசனம்செய்து, தமது வீட்டுக்குப்போய், எல்லையற்ற துக்கத்துடன், யாருமற்ற இடத்தில் உட்கார்ந்துகொண்டு பின்வருகிறபடி சிந்திக்கலானார்:

"பூர்வத்தில், செய்தவச் செல்வர்களான யாஜர், உபயாஜர் என்னும் இருவர்க்குள், யாஜர், தமது தம்பியாகிய உபயாஜருடைய தோட்

* ஸோமபானம்=தேவாமிர்தம். † ஸுராபானம்=கள் குடித்தல்
‡ பாவனம்=பரிசுத்தம். § அக்ஷங்கள் - பாய்ச்சிகைகள்.
$ கேதம் - துக்கம். ¶ ஸ்ம்ருதி - விதிவிலக்குச் சட்டநூல்.

டத்திலுள்ள பழங்களை அவருடைய அநுமதியின்றிப் பறித்து, அதற்குப் பிராயச்சித்தமாக, இராஜ ஸந்நிதிக்குப்போய், பிறன்பொருள் வெளவின தமது கரத்தை வெட்டிக்கொண்டார். நானும், அப்படியே, பகவத் பிரஸாதத்தை அவமதித்துச் சூதாடின எனது கரத்தைத் துண்டித்துக்கொண்டு, பரிசுத்தனுவேன்'' என்று நிச்சயித்து, தமது மந்திரியை அழைப்பித்து, “ஓ, நன்மதிவாண! சில நாட்களாக, இராக் காலங்களில், எங்கிருந்தோ, ஒரு பூதம் வந்து, பலகணி வழியிற் கையை நீட்டி, என்னை வருத்திக்கொண்டிருக்கிறது. அதனால், இரவெல்லாம் எனக்குத் தூக்கம் வருகிறதில்லை. இன்றிரவு நான், எனது படுக்கை அறையிற் படுக்காமல் வேறோரிடத்தில் படுத்துக்கொள்ளுகிறேன். நீ, எனது படுக்கையறையில், கட்டிற்கருகில் ஒளித்து, விழித்துக்கொண்டு, ஜாக்ரதையாயிரு. அந்த பூதத்தின் கை, பலகணிவாசலில் உனக்குத்தோன்றுகிறபொழுது, கொஞ்சமேனும் கூச்சமின்றி, உனது வாளால் அதன் கையைச் சேதிக்கக்கடவை'' என்று கட்டளையிட்டு, அனுப்பிவிட்டார். அன்றிரவு, மந்திரி, அரசனுடைய மஞ்சத்தருகில் மறைந்து, நித்திரையின்றி உருவின கத்தியுடன் அதி ஜாக்ரதையாய், பலகணி வாசலைப் பார்த்தபடியேயிருந்தான். * அலகையுந் துயிலுறாஉம் அரையிரவில், † அரையர், இதுவே நல்ல தருணம் என்று, தமது பள்ளியறைக்கு வெளிப்புறத்திலிருந்து, தமது வலது கையை ஜன்னலின் துவாரவழியாய் உள்ளே நுழைத்து நீட்டினர். மந்திரி, அந்த ஹஸ்தத்தைக் கண்டவுடனே, கொஞ்சமேனும் அஞ்சாமல், “நமது அரசனை வருத்தும் கொடிய ஜந்துவைச் சிக்ஷிக்கப் பாக்கியம் பண்ணினேம் அல்லவா!'' என எண்ணிக் களிகூர்ந்து, தனது உடைவாளால், அதனைத் துணித்தான். அரசர், தாம் செய்த பெரும் பிழைக்குத் தக்க தண்டனை கிடைத்ததென்று, பரமானந்த ஸாகரத்தில் மூழ்கியிருந்தனர். ஆதலால், கை துணிக்கப்பட்டதனுல் தமக்குக் கொஞ்சமேனும் வேதனையின்றி, ஸந்தோஷம் அதிகரித்துக் கூத்தாடிக் கரணம் போட்டுக்கொண்டு, மந்திரியருகில் வந்து, இடது கையால் அவனை ஆலிங்கனஞ் செய்து, “ஓ, மஹாநுபாவ! நீ எனக்குப் பேருபகாரி. நான் நரகப்படுகுழியில் விழாதபடி என்னைக் காத்தனை. ஸ்ரீஜகந்நாதனே உனது உருவந்தாங்கி வந்து, எனக்கிப்படிப்பட்ட தண்டனையைத் தந்து என்னைப் பரிசுத்தனுக்கினுன். நீயே எனக்குப் பரமகுரு'' எனக்கூறினர். அவர், ‡ தனிக்கையராயிருப்பதையும், அவருடைய வலக்கரம் துணிக்கப்பட்டு, அதனில் உதிரம் ஆறுய்ப் பெருகுவதையும் மந்திரி கண்டு, மதி மருண்டு, துக்க ஸமுத்ரஸ்நானஞ் செய்தவனுய், “ஆஹ! நான் எத்தனை பாவியானேன்! எனக்கு எல்லாவிதத்தாலும் ஆதார பூதனுய், விஷ்ணுஸ்வரூபனுய், எனது தந்தையேயனைய பூபதியை ஊறுபடுத்தினேன்! இந்தப் பாவக் கடலை, நான், எப்பிறவியில் நீந்துவேன்'' எனப் பரவசனுய் நிலமேல் வீழ்ந்து அழுது புரண்டான். அரசர், அவனைத் தேற்றி, தமது மன

* அலகை=பேய். † அரையன்=அரசன்.
‡ தனிக்கையர்=ஒரே கரத்தர், ஒற்றைக் கையர்.



பரிபாகத்தை அவருக்கு அறிவித்து, ஸூர்யோதயமானவுடனே, ஸ்நானஞ்செய்து, சேதிக்கப்பட்ட தமது கரத்தை, ஒரு சிவிகையிலிருத்தி, அதனைப் பின்பற்றிப் பரிவார ஸமேதராய், ஸ்ரீஜகந்நாதனுடைய மந்திர துவாரத்தில் நின்று, அங்குக்கூடியிருந்த மஹாஸங்கத்தை நோக்கி, “நான் பெருங்குற்றவாளியாகையால், திரிசங்குவைப்போல, கர்ம சண்டாளனுய், பகவத் ஸந்நிதிக்குள் நுழைவதற்கு அயோக்யனுயிருக்கின்றேன். பெரும்பிழைசெய்த இந்தக் கையை, ஸ்ரீபுருஷோத்தமனுக்கு நிவேதித்து, அவன் சித்தத்தின்படி, இந்நீசனைத் தண்டிப்பிக்க வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்யுங்கள்'' எனப் பிரார்த்தித்து, அந்தக் கையை ஸ்ரீஜகந்நாதனுடைய ஸந்நிதானத்துக்கு அனுப்பினர். அப்போது, அங்குள்ள ஸாதுக்கள், அரசர் வேண்டிக்கொண்டபடியே செய்தார்கள். அர்ச்சகர்களும், அங்குள்ள ஸாதுக்கள் அனைவரும் இவ்வற்புதத்தைக் கண்டு, அரசருடைய குணகணங்களைக் கொண்டாடி, “இப்பேர்ப்பட்ட தேஹாபிமானம் நீத்தவரான வைராக்கிய நிதியை, இதுவரையிற் கண்டு கேட்டறியோம்'' என்று புகழ்ந்தார்கள். அர்ச்சகர்கள், பகவத் பிரஸாதத்தைக் கொண்டுவந்து, அரசர்க்குக் கொடுத்தார்கள். அப்போது, பாலர் முதல், விருத்தர் ஈறுயுள்ள அனைவரும் காண, * ஆகஸ்மிகமாய் எப்போதும்போலத் தமக்குக் கைமுளைத்ததனுல், அரசர், அமைதியாய், “மஹாப்ரஸாதம்'' எனக்கூறி, தமது இருகரங்களாலும் அந்த பிரஸாதத்தை, வரப்ரஸாதமென ஏற்றுக்கொண்டார். பகவத் ஸந்நிதானத்தில் வைக்கப்பட்ட கரம், தவநமருக்கொழுந்தாய் இருந்தது. இவ்வற்புதத்தைக்கண்ட அர்ச்சகர்கள் அதிசயித்து, அந்தத் தவநமருக்கொழுந்தை யெடுத்து, அதனிற் சிறிது ஸ்ரீகிருஷ்ணன், பலராமன், ஸுபத்ரை முதலியோர்களுடைய பாதங்களில் அர்ச்சித்து, மற்றதை நந்தவனத்தில் நட்டு வைத்தார்கள். அரசர், முன்னிருந்ததைக் காட்டிலும், ஸுகுணமிக்கவராய் பரமவிரக்தராய், ஸம்ஸாரம் நிஸ்ஸாரம் என்று எண்ணி † கம்ஸாரியை அநவரதம் பஜனை செய்ததன்றியும்,

“இதய முளரியில் இடையறு திருந்துமெய்
அன்பர் களிக்க அபயம் அளிக்கும்
‡ அவ்யய ஞன அநந்தனை மறவா
நெறியுடன் ஸந்ததம் நினைவோர்
சிறந்த வைஷ்ணவ ஸித்தி பெறுவரே'' என்றபடி,

இடையறுமல் இதய தாமரையில் வஸித்து, அன்பர்க் கபயம் அளிக்கும் நித்யனுகிய ஸ்ரீமதநந்தனை, மறவாமல், தியானித்துக்கொண்டிருந்து பரம வைஷ்ணவ ஸித்தியை யடைந்தார்.

ஸ்ரீநீலாசலநிவாஸாயநமஃ

* ஆகஸ்மிகமாய்=திடீரென்று.
† கம்ஸ+அரி - கம்ஸனுக்குப் பகைவன்; ஸ்ரீகிருஷ்ணன்.
‡ அவ்யயன் - அழியாதவன் என்றுமுள்ளவன்.

நாற்பத்துமூன்றும் அத்தியாயம்

# கர்மாபாய் சரித்திரம்

ஸ்ரீஜகந்நாத க்ஷேத்திரத்தில், கர்மாபாய் என்னும் பெண்மணி கருவுற்றிருக்கையில், தமது கணவர் பரலோகஞ் சேர்ந்தார். இந்தப் பெண்ணரசியார், நாயகர் இறப்புக் கெத்தனையோ இரங்கி, ஆற்றமுடியாத அவ்வருந்துயரத்தைப் பொறுத்து, புத்ரோதயத்தை எதிர் நோக்கியிருக்க, ஸ்ரீஜகந்நாதனது இன்னருளால், அப்பெண்கள் சிகாமணியின் கருவில் ஒரு புத்திரர் பிறந்தார். இந்தக் கற்புக் கரசி, தமது புத்திரர்க்குத் தக்கபருவத்தில், சௌளோப நயன வேதாத்யயநங்களை நிறைவேற்றி, பதினாறும் பிராயத்தில், ஒரு நற்கன்னிகையைப் பாணிக்ரஹணஞ் செய்வித்தார். சில வருஷங்களுக்குப் பிறகு, கர்மாபாயின் மருமகள், கருவுற்று, ஒரு சற்புத்திரனை ஈன்றாள். இந்தக் குழந்தை பிறந்த சின்னாட்களுக்குப் பிறகு, கர்மாபாயின் புத்திரர் தேக வியோக மடைந்தார். கர்மாபாய், பொறுத்தற்கரிய புத்திர சோகத்தைப் பொறுத்துக் கொண்டு, பௌத்ரனைப் பாராட்டி சீராட்டி வளர்த்து, சிறிது விசனமாறியிருந்தார். இங்ஙனம் இருக்க, ஆகஸ்மிகமாய் அந்தப் பௌத்ரனும் மரணமடைந்தனன். அப்போது, கர்மாபாய், "எனது * ப்ராரப்தம் எப்படிப்பட்டதோ, அறியேன்! முதலில் நேரிட்ட காதலர் இழவாலும், இரண்டாமுறை நேரிட்ட புத்திரன் இறப்பாலும், மூன்றாமுறை நேரிட்ட பௌத்திரன் மரிப்பாலும் நான் ஏகாகியானேன்! இந்தத் துன்ப ஸமுத்திரத்தை, எங்ஙனங் கடப்பேன்" என்று துக்கப்பட்டு, மனம் வருந்தினவராய்க் காலங்கழித்து வருகையில், இவ்வம்மையார் செய்த பாக்யவசத்தால், ஜகந்நாத யாத்திரைவந்த யோகபாகவதர் ஒருவர், இவ்வம்மையார்வீட்டில் † விடுதிசெய்தார். இவ்வம்மையார், இங்ஙனம் ‡ அஹோராத்ரம் துக்கப்பட்டுக் கொண்டிருப்பதைக்கண்ட யோகபாகவதர், "உனது துக்க காரணம் யாது?" எனக் கேட்க, கர்மாபாய் தமது சரித்திரத்தை § ஸவிஸ்தாரமாய் அவர்க்கு விண்ணப்பித்தார்.

அதை யுணர்ந்த யோகபாகவதர், "ஓ, மங்கையர்க்கரசி! ஸம்ஸாரத்தில் இறையளவும் ஸுகம் உண்டா? இந்த துக்கச் சிந்தனையைவிடு; உனக்குப் ¶ பரமார்த்தோபதேசம் பண்ணுகிறேன் கேள். எனது வசனங்களைப் பொய்யென்றெண்ணற்க. நான், பொருளாசையாலேனும், வேறு கெட்ட எண்ணத்தினாலேனும் உபதேசிக்க வந்தவன் அல்லன். ஆகையால், எனது நாகரீக மொழிகளை நம்புக. மனிதன், பிறந்தவுடனே, பால்யதசையையும், பிறகு யௌவன தசையையும், அதன் பிறகு, தடுத்தற்கரிய விருத்த தசையையும் பெற்று, பிறகு மரண மடைகின்றான். பிராணிகளுக்கும் இவையெல்லாம் உண்டு என, எனக்கும் உனக்கும் இன்னும் உள்ள எல்லார்க்கும் பிரத்தியக்ஷ பிரமாணமாய் தெரிந்திருக்கின்றதல்லவா? இதுமாத்திரம் அன்று; மரணமடைந்தவனுக்கு மறுபடியும் பிறவி நேரிடுவது நிஜம். இவ்வநர்த்தத்துக்கு ச்ருதி ஸ்ம்ருதி முதலிய சாஸ்திரங்கள் பிரமாணங்களாம். இந்த தேகம் உண்டாவதற்கு, பூர்வ ஜன்மங்களிற் செய்யப்பட்ட பாபபுண்யங்களோடு கூடியுள்ள அழியாத ஆத்மா தவிர வேறு காரணம் விளங்காமையால், சுக்ல சோணிதங்களுக்குப் பிறப்பிடமாயுள்ள அதுவே முக்ய காரணமாகும். ஆகையால் மனிதனுக்குக் கருவாஸம் முதல், கட்டையிலேறும் வரையில் உள்ள ஸர்வாவஸ்தைகளிலும், துக்கமே உண்டாகின்றதன்றி ஸுகங்கிடையாதெனத் தெரிந்துகொள். அன்ன பானாதிகளால் பசி தாகம் தணிதலும், அவ்வவ் வுபாயங்களால் சீதோஷ்ணாதி வேதனைகள் நீங்குதலும், இன்பமென் றெண்ணுதல் பேதைமையாம். எங்ஙனமெனில், அன்ன பானாதிகளைத் தேடிக் கொள்வதற்காகச் செய்யு முயற்சிகளால் நேரிடும் துன்பங்கள் சொல்லுந் தரத்தனவாமோ! இந்த அன்னாதிகளால் அஜீர்ண முதலிய வுண்டானபோது, அவைகள், எத்தனைத் துக்க ஹேதுக்களாகின்றன! இதற்குத் திருஷ்டாந்தங் கூறுகின்றேன் கேள்; வாததோஷத்தால் அசைவற்றுள்ள அங்கங்களை உடையவர்களாய் வருந்தித் தமது தேக ஸௌக்கியத்தைக் கோருகிற மாந்தர்க்குச் சரீரத்தைக் குத்துவதும், பிசைவதும் இன்பங்களா யிருக்கின்றன. காமமோஹாந்தகர்களான மாந்தர்க்கு, ஊடலிற் கோபித்த காதலியினுடைய * பாத தாடனம், இன்பமாய்த் தோற்றுகின்றது. இங்ஙனம் துன்ப காரணங்களில் இன்ப மயக்கம் நேர்ந்திருப்பதை உணர்ந்தனையன்றோ! இந்த ஹேதுவினால், மாம்ஸத்தாலும், கோழையாலும், மலத்தாலும் மூத்ர ஜலத்தாலும் ஆகிய தேகத்தில், அழகும், இளமையும், சாயலும், பளபளப்பும் ஆகிய ஸுகுணங்கள் உள்ளவை என நினைத்தல் கேவல மயக்கமேயன்றி வேறன்று. உதிரம், இறைச்சி, கோழை, மலம், மூத்ரம், † மஜ்ஜை, எலும்பு, நரம்புகளால் ஆக்கப்பட்ட யாக்கையில், வீண் ஆசை வைப்பவன், நரகத்திலும் ஆசை வைக்கலாம். குளிரால் நெருப்பும், தாகத்தால் தண்ணீரும், பசியால் அன்னமும், நோயால் மருந்தும், இன்பங்களெனத் தோன்றுகின்றன. குளிரும், தாகமும், பசியும், நோயும் இல்லாதபோது, நெருப்பு முதலியவைகள் துன்ப காரணங்களா யிருக்கின்றன. ஒருவன் எத்தனைக் கெத்தனை, தன தான்ய நவமணியாதிகளை ஈட்டுகின்றானோ, அத்தனைக் கத்தனைத் துன்பமென்றெண்ணவேண்டும். ஒருவன், தனது மனப்பிரியர்களான புத்ர மித்ர களத்ராதி ஸம்பந்தங்களை, எத்தனைத் தேடிக் கொள்ளுகின்றானோ, அது அத்தனையும் அவன் இதயத்தைக் குத்தி ஊறுபடுத்துகிற ஊசிகளென்றெண்ணுக. ஒருவன் எத்தனைத் தூரத்திலிருப்பினும்,

* ப்ராரப்தம் - அதிஷ்டம். † விடுதி - இறங்கியிருக்கும் இடம்.
‡ அஹோராத்ரம் - இரவும்பகலும். § ஸவிஸ்தாரமாய் - முழுவதும்.
¶ பரம + அர்த்தம் - உண்மையான உயர்ந்த இரகஸியம்.



* பாததாடனம் - காலால் உதைத்தல். † மஜ்ஜை = எலும்பின் உள்ளீடு.

அவனது இதயத்தில் உள்ள தன தான்ய நவமணியாதிகளின் அழிவும், * சோராக்னிகளால் அவைகளின் இழவும் அவனை விடாமல் வருத்திக் கொண்டிருக்கும். அவன் கிருகத்தில் சோராதிபயங்கள் இல்லையானாலும், இதயத்தில், பணவாசை காரணமாக, அவைகள் உண்டாகிக் கொண்டே இருக்கும். அன்றியும், பிறக்கும்போது அநுபவித்த அத்தனைத் துன்பங்களும், ஒருவனுக்கு, இறக்கும்போதும் உண்டாவனவாம். பிறகு, யமவேதனைகளாலும் அதன்பிறகு மறுஜன்ம கர்ப்பவாஸத்தாலும் அளவிலாத் துயரங்களே உண்டாகும். ஆகையால், எதிலும் இன்பம் இல்லை. அங்ஙனம் ஆவதனால், உலகமுழுதும் அல்லல் மயமாய் அமைந்திருக்கின்றதென்றறிக. இங்ஙனம் ஸகல துக்கங்களுக்கும் † ஆகரமாயுள்ள ஸம்ஸார ஸாகரத்தை, நாம் கடக்குமாறு, அருள்புரிய வல்லவன் ஸ்ரீமந் நாராயண னொருவனே. உனக்கு உண்மை உரைத்தேன்; நான் கிழவியாகையால், அந்த ஜகதீசனை ஆராதிக்கும் வல்லமை எனக்கில்லை என்று எண்ணற்க. பால, குமார, விருத்த, மரணாதி அவஸ்தைகள் தேகத்திற்கே அன்றி, ஆத்மாவுக்கு இலவாம். சரீரத்தில் உள்ள ஆத்மா, ஜனன மரணாதி ரஹிதமாய், சாச்வதமாயிருக்கின்றது. உலகத்தில், மனிதன் பால்யத்தைக் கழித்த பிறகு, யௌவனத்தில் அறஞ்செய்து கொள்ளலாம் என்றும், யௌவனத்தை அடைந்துள்ளபோது, ‡ வார்த்தக்யத்தில் அறஞ்செய்யலாம் என்றும் எண்ணி, பிறகு, வார்த்தக்யம் வந்த காலத்தில் இந்திரியங்கள் வலிவற்று, ஒன்றுஞ் செய்ய முடியாமல், "இனி நான், என்ன செய்வேன்! திடகாத்ரனாய் இருந்தபோது, ஆத்மாவுக்கு ஸுகந் தேடிக்கொள்ளாமல் மூடனானேனே!" எனத் தன்னைத் தானே வெறுத்துக் கொள்வான். இங்ஙனஞ் செய்வானே யன்றி, ஒருவனாவது, துராசார ரஹிதனாய், ஒருகாலத்திலும் நன்மார்க்க நேயனாய் வாழமாட்டான்; எங்ஙனமெனில்: பலவித விளையாட்டு விஷயங்களில் பால்யத்தையும், சந்தன புழுகு கஸ்தூரி முதலிய வாசனைகளணிந்து மங்கையர் மோஹாதிகளில் யௌவனத்தையும், வலிவற்றுக் கிடப்பதில் மூப்பையும் வீணிற் கழித்து, அஞ்ஞானிகள், தமது ஆயுளை வீணாக்குகின்றனர். கங்கை வெள்ளத்தின் அருகில் இருந்தும், வண்ணான், தாகம் எடுத்தபோது, தண்ணீர் அருந்தாமல், "இந்த ஆடை வெளுத்தாகட்டும்; இதோ, இந்த ஆடையும் ஆகட்டும்; இதுவும் ஆகட்டும்; பிறகு குடிக்கலாம்" என்று, தாகத்துடன் வருந்திக் காலத்தைக் கழிக்கிறது போலவும், வலைஞன், "இம்மீனைப் பிடித்தாகட்டும்; இதோ இன்னொரு மீனும் ஆகட்டும்; ஆகட்டும்" என்று, அருகிலுள்ள நீரையருந்த ஒழிவில்லாமலே பொழுதுபோக்கித் தாகத்தால் வருந்துவது போலவும், பிற்காலத்தைப் பெரிதாக எண்ணித் தற்காலத்தை வீண்போக்கப்படாது. பால்ய, யௌவன, வார்த்தக்ய மரணாதி அவஸ்தைகள் சரீரத்துக்கே அன்றி

* சோர + அக்னி = திருடர், நெருப்பு. † ஆகரம் = பிறப்பிடம்.
‡ வார்த்தக்யம் = மூப்பு.



ஆத்மாவுக்கு இல்லை என்றெண்ணி, மதிவாணியாகிய நீ உனது ஆத்மா உய்யும் வகையைத் தேடக்கடவை. உனக்கு இத்தகைய விரக்திமார்க்கத்தை, விசதமா யுபதேசித்தேன். இது பொய்யென்றெண்ணற்க. எல்லாவிதத்தாலும், ஸம்ஸார வலையை அறுத்தெறிய வல்லவனாகிய ஸ்ரீமந் நாராயணனை இடையறாமல் தியானிக்கக்கடவாய். அந்த ஜகதீசனை தியானிப்பதற்கு, வருத்தம் என்ன! அவனை நினைத்த மாத்திரையில், ஸகல பாவங்களும் இறந்து, ஸகல புண்யங்களும் பிறப்பனவாம். ஆகையால், அநவரதமும் ஹரியை தியானித்து, மஹாத்மாக்கள் உஜ்ஜீவிப்பார்கள். அந்த ஹரிக்கு லீலா ஸாதனங்களான சேதனர்களிடத்தில், நேசஞ் செய்யக்கடவை. அதனால் மோஹாதி ஸகல க்லேசங்களும் இறக்கும். ஆத்யாத்மிகம் முதலிய தாபத்ரயங்கள் மூன்றாலும் ஜகமெல்லாம் துக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் தான் மிகவும் இரங்கி யருள்புரியத்தக்க பிராணிகளிடத்தில், விவேகியாகிய எவன், வெறுப்புறுவான்! ஒருவேளை ஸகல பிராணிகளும், ஐச்வர்ய வித்யாபலாதிகளால், தன்னைவிட உயர்வடைந்திருக்கின்றார்கள் என்றும், தான் ஒருவனே அங்ஙனம் ஆகாமல், சக்தியற்றவனாய் இருக்கின்றான் என்றும், ஒருவன் எண்ணினானேனும், அப்போதும் துவேஷம் பாராட்டாமல், ஸந்தோஷத்தையே கொள்ளவேண்டும். துவேஷத்தால் கெடுதியே யுண்டாகும். ஆகையால், பிராணிகளிடத்தில் மாத்ஸர்யங் கூடாது. நீ, எனது இதோபதேசத்தைக் * அவலம்பித்து, ஸமஸ்த சேதனா சேதனங்களையும் ஸ்ரீகிருஷ்ண ஸ்வரூபமாய் பாவனை செய்க" என்று கூறி, அந்த அம்மையார்க்கு ஸ்ரீதாரகமந்திரத்தை உபதேசித்து, அவர் கரத்தில் ஒரு கிருஷ்ண விக்ரஹத்தைக் கொடுத்து, "ஓ, அம்மணீ! நீ உனது புத்ர பௌத்ரர்களை எங்ஙனம் சீராட்டிப் பாராட்டுவையோ, அங்ஙனமே இந்த கோபாலமூர்த்தியைச் சீராட்டி வளர்த்து வருவாயாக. உனக்கு பகவதநுக்ரஹத்தால், மறுபிறப்பற்ற மோக்ஷபதவி கிடைக்கும்" என்றநுக்ரஹித்து, தமது இச்சையின்படி அங்கிருந்து புறப்பட்டுப் போய்விட்டார்.

கர்மாபாய், நாடோறும் விடியற்காலையில் எழுந்து, தந்ததாவனம் செய்துகொண்டு, குழந்தை பசி தாளாதென்னும் பயத்தினால் சமையல் செய்து, அந்த இன்சுவை அமுதை, கோபால பாலகனுக்கு நிவேதித்து, அவனை ஏணையிற் கிடத்தி,

"மாணிக்கங் கட்டி வயிர மிடைகட்டி
ஆணிப்பொன் னாற்செய்த வண்ணச் சிறுதொட்டில்
பேணி யுனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக் குறளனே தாலேலோ வைய மளந்தானே தாலேலோ"

"சங்கின் வலம்புரியுஞ் சேவடிக் கிங்கிணியும்
அங்கைச் சரிவளையும் நாணு மரைத்தொடரும்

* அவலம்பித்து = ஏற்றுக்கொண்டு.

அங்கண் விசும்பி லமரர்கள் போத்தந்தார்
செங்கட் கருமுகிலே தாலேலோ தேவகி சிங்கமே தாலேலோ"

என்று, தாலாட்டித் தூங்கவைத்து, பிறகு, தாம் ஸ்நானத்துக்குப்போய் வந்து, தமது வழக்கம்போலக் காரியங்களைச் செய்துகொள்வாராயினர். இங்ஙனம் இருக்க, ஒருநாள், கர்மாபாய் வீட்டுக்கு, பஞ்சகால * பராயணர்களென்னும் சில பிராமணர்கள் வந்து, இவ்வம்மையாரைக்கண்டு, "ஓ, அம்மணீ! நீ, வைகறையில் சமையல் செய்ததாகத் தோற்றுகிறது. இப்போதுதான், ஸ்நானத்துக்குப் போகின்றனையே; என்ன காரணம்?" என்று கேட்டார்கள். அதற்கு இவ் வம்மையார், "நான் வைகறையிலெழுந்து சமையல் செய்து, குழந்தைக்கு அன்னமிட்டு, தாலாட்டித் தூங்கவைத்து, இப்போது ஸ்நானத்துக்குப் போகின்றேன். படுக்கையிலிருந் தெழுந்தவுடனே, எனக்கு, குழந்தை வேலையைக் கவனிப்பதே முக்ய காரியமாயிருக்கிறது" என்று கூறினர். அந்த பிராமணர்கள், "தாயே! உன் வீட்டில் குழந்தை யிருப்பதாகத் தோன்றவில்லையே; நீ சொல்வது உண்மைதானா?" எனக் கேட்டார்கள். அதற்கு இவ் வம்மையார், ஸ்ரீவேணுகோபால மூர்த்தியை எடுத்துக் கொண்டுவந்து அவர்களுக்குக் காட்டி, தமது சரித்திர முழுவதும் விடாமல் விண்ணப்பித்தார். அப்போது அந்த வேதியர்கள், ஸந்தோஷித்து, கர்மாபாய், ஸ்ரீவேணுகோபாலனுக்குச் செய்யும் உபசாரங்களைச் சிரத்தையுடன் கவனித்துப் பார்க்கையில், இவ் வம்மையார் வைத்த அன்னத்தை, பகவான், பிரத்யக்ஷமாய் உட்கொண்டான். அதைக்கண்ட பிராமணர்கள் ஆச்சரியப்பட்டார்கள். கர்மாபாய், அவர்களை நோக்கி, "வேதியர்காள்! இக் குழந்தை, பசி பொறுக்க மாட்டான் ஆகையால் நாடோறும் இவனுக்குச் சோறு சமைத்தூட்டிப் பிறகு நான் ஸ்நானத்துக்குப் போகின்றேன்" என்றனர். பிராமணர்கள், இந்த அம்மையார் பக்திக்கும், இவ் வம்மையாரிடத்தில் பகவானுக்குள்ள அன்புக்கும் ஸந்தோஷித்து, "உனது சரித்திரம் எத்தனைச் சிறந்ததா யிருக்கின்றது! இத்தனை மேன்மையானதா யிருந்தாலும், ஸ்நானம் செய்து பரிசுத்தமடைந்த பிறகு பகவானுக்குப் பாகம் செய்தூட்டலே பான்மையுடைத்தாம்" என்றார்கள். மறுநாள், அவ்வாறே கர்மாபாய் ஸ்நானம்செய்து வந்து, பாகம் செய்து, கோபால தேவனை ஆராதித்தார். அன்றிரவு, கோபால பாலகன், அர்ச்சகன் ஒருவனுடைய கனவிற் காட்சிதந்து, "கர்மாபாய், எனது † ஸௌகரியத்தையும் ‡ ஸௌகுமாரியத்தையும் உணராத சிலருடைய உபதேசத்தால், இத்தனை நாட்களிற்போல என்னை ஆராதிக்காமல், இன்று ஸ்நானம் செய்து வந்து, அதிக நேரஞ்சென்ற பிறகு சமையல் செய்து எனக்கு ஊட்டினாள். ஆகையால் நான், பசியால் மிக வருந்தி அழுது இளைத்தேன்.

* பராயணர் - வைராக்யத்தோடு ஒரு விஷயத்தில் ஈடுபட்டவர்கள்.
† ஸௌகரியம்=ஸுகம், இன்பம்
‡ ஸௌகுமாரியம்=மென்மைத்தன்மை.



అత్యంతభక్తియుక్తానాం । నశాస్త్రంనైవచక్రమః ॥

'பக்தி மிகுந்தோர் பரிவுடனே சாத்திரத்தின்
யுக்திதனை வேண்டார் உகந்து' என்றபடி,

பரம பக்தியுக்தையாகிய கர்மாபாய்க்கு இந்த நிர்ப்பந்தம் ஏன்? ஸ்நானாதி யாசாரங்களைக் கவனிக்காமல், எப்போதும்போல, எனக்கு உபசாரம் பண்ணவேண்டும்" என்று நியமித்து, மறைந்தான். அவ்வர்ச்சகன் ஆச்சரியப்பட்டு, கர்மாபாய் வீட்டுக்கு வந்து, பகவான் நியமனத்தை இவ் வம்மையார்க்கு அறிவித்தான். அதைக்கேட்ட கர்மாபாய், "நான் பஞ்சகால பராயணர்களாகிய பிராமணர்கள் வார்த்தைகளைக் கேட்டதனால் இக் குழந்தை அதிக பசியோடு மிக வருந்தினான்; அந்தோ நான் எண்ணாமற் செய்தகாரியம் எத்தனை பிசகாய் முடிந்தது! குழந்தை பசியை அறியாத மூடப் பாவியானேனே" என்று துக்கித்து, எப்போதும்போல ஸ்நானம் செய்யாமலே, பகவானுக்கு உபசாரம் செய்தார். இவ்வதிசயத்தை, இவ்வம்மையார் வீட்டுக்கு வந்திருந்த அந்த பிராமணர்களும், அர்ச்சகர்களும் கண்டு, பலவாறு பகவானைத் துதித்து, ஆனந்தக் கடலில் குளித்தார்கள். கர்மாபாய், எப்போதும்போலத் தமது ஆயுள் பரியந்தம் பகவானை ஆராதித்து, அவனுடைய கிருபா கடாக்ஷத்தால், மறுபிறப்பற்ற விஷ்ணுலோகத்தை அடைந்தார்.

ஸ்ரீகோபால பாலகாயநமஃ

## நாற்பத்துநான்காம் அத்தியாயம்

# தசாவந்தர் சரித்திரம்

வாரணாஸியில், பூர்வகாலத்தில் ஜாஜிலி யென்னும் பரம தவ முதல்வர்க்குப் பரம தர்மத்தை யுபதேசித்துப் பெருமை பொருந்திய துலாதாரரைப்போல, தசாவந்தரென்னும் வர்த்தகர் ஒருவர், பரமஞான நிக்கவராய், பரமவைராக்கிய சீலராய், அநவரத ப்ரஹ்மாநுபவ நிஷ்டராய், தர்ம சீலராய், தீனர்களை பக்தியுடன் ஆராதித்துக் கொண்டு, ஸகல சேதனர்களையும் ஈச்வர குடும்பமென்று ஸமபாவனை செய்து, இடையறாமல் அன்னதானம் செய்து, ஸர்வமும் ப்ரஹ்மாத்மகம் என்றெண்ணி, ஸம்ஸாரம் நிஸ்ஸார மென்றுணர்ந்து, ஸாதுக்கள் புகழும்படி வாழ்ந்துகொண்டிருந்தார். இவர்க்கு, எழுவர் ஆண்மக்கள் இருந்தார்கள். தந்தைக் கிருந்த நற்குண நன்னடக்கைகள், மைந்தர்க்கில்லாதபடியால் "சேரிடமறிந்துசேர்" என்றபடியும்,

'ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும்' என்றபடியும்,

இவர்கள், ஆராய்ந் தாராய்ந்து நல்லாரைச்சேர்ந் தொழுகாமல்,

'நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு' என்றபடி.,

தீயார் கூட்டுறவால் குணதோஷ முற்று, தமது தந்தை, குடும்பப் பாதுகாப்பில் சிந்தையற்று, தமது பெரியோர் தேடிவைத்த ஆஸ்திமுழுவதையும் வீண்செலவு செய்கின்றாரென்றும், இவர் இங்ஙனம் செய்வதனால், தாங்கள் வறுமையால் வருந்த நேரிடுமென்றும், பொருட்செலவு செய்யாதபடி இவர்க்கு நிர்ப்பந்தம் உண்டாக்க வேண்டுமென்றும், தங்களுக்குள்ளே தீர்மானித்துக்கொண்டு, அத்தேசத்து மன்னவனிடத்துக்குப்போய், தமது எண்ணத்தை விண்ணப்பஞ் செய்து, "எங்கள் குடும்பத்து ஆஸ்தியை எங்கள் ஸ்வாதீனப்படுத்தி, நாங்கள் பார்த்து, எங்கள் தந்தைக்கு அன்னவஸ்திரம் தரும்படி ஏற்பாடு செய்யவேண்டும்" என்று முறையிட்டதும் அன்றி, "ஓ, அரச! எமதகத்தில் எல்லையற்ற ஆஸ்தியிருந்தும், எமது பிதா பித்தராய், ஸம்ஸாரம் நிஸ்ஸாரம் என்றும், சுற்றத்தார் கள்ளர்கள் என்றும், மக்கள் கடன்காரர்கள் என்றும், மனைவி வினைவியென்றும் சொல்லிக்கொண்டு, எமது இச்சையின்படி நாங்கள் இன்பநுகருமாறு எமது கைக்குப் பணம் எட்டவிடாமல், பரதேசிகளான ஏழைகளுக்கு மாறாத அன்னதானஞ் செய்து, ஆடையற்றவர்களுக்கு ஆடை அளித்து, திரவியம் எல்லாவற்றையும் விருதாவில் அழிக்கின்றார். அந்த திரவியம் எங்கள் வசப்பட்டாலன்றி எங்கள் குடும்பம் ஈடேறாது" என்று விளங்கவுரைத்தார்கள். இவைகளைக் கேட்ட அரசன், மிகவும் மூடனும், ஆத்திரக்காரனுமாகையால், உடனே தசாவந்தரை வரவழைத்து, "நீயேன், இறையளவும், குடும்பச் சிந்தையின்றி, உனது ஆஸ்தியை நாஸ்தியாக்குகின்றனை? குடும்பரக்ஷணையில் எண்ணமற்ற நீ, உனது திரவியத்தை மக்களுக் களித்துவிட்டு, அவர்கள் அன்னவஸ்திரம் தரப்பெற்று ஸுகமாயிருக்கலாம். அங்ஙனம் செய்யாயேல், தண்டிக்கப்படுவாய். ஆஸ்தியையும் உன்னிடத்திலிருந்து வற்புறுத்தி வாங்கி, மக்களுக்குக் கொடுத்துவிடுவேன்" என்றான். அம்மொழியைக் கேட்ட தசாவந்தர், அரசனைநோக்கி, "ஓ, பித்தா! உனக்கேன் இப்பேர்ப்பட்ட துஷ்டதி

'பொருளாசைப் பேயையடைப்ப புலமையவர் நல்ல
தெருளார்த லன்றோ சிறப்பு' என்றபடி,

'பொருளாசையாகிய பேயினைத்துரத்தி மனத்தகத்தில் ஞானத்தை நிலைநிறுத்தக்கடவை' என்றும்,

'* அர்த்தம் † அநர்த்தம் அதைவிரும்பித் தேடுதல் ‡ வியர்த்தமெனக் கொள்வா யறிந்து' என்றபடி,

* அர்த்தம்=செல்வப்பொருள். † அநர்த்தம்=உபயோகமற்றது.
‡ வியர்த்தம்=வீண்.



'செல்வப்பொருள் உபயோகமற்றது; ஆகையால், அதை விரும்பித் தேடுதல் வீண் எனத் தெரிந்துகொள்ளக்கடவை' என்றும்,

'பேதா யுனக்குப் பிரியம் பொருளின்மேல்
ஏதாயுண் டாயிற் றியம்புவாய்—ஓதா
உனக்குநற் புத்தியு ரைப்பா ரிலையோ
எனக்குநீ சொல்வாய் இசைந்து' என்றபடியும்,

'மூன் றுலோ கத்தினும் மூதுணர்ந்தோர் நேசமே
ஆன்றஸம் ஸாராம் புதிகடக்க—என்றதொரு
ந்ாவாயா மற்றதனை நானிலத்தில் நீயடையா
தாவா புரிவாய் அவம்' என்றபடியும்,

'ஓ, பித்தா! பொருளாசை உனக்கு எப்படி உண்டாயிற்று? உன்னைக் கேட்பார் இல்லையா? மூன்றுலகினும், ஸாதுக்கள் நேசமே ஸம்ஸாரக் கடலைக் கடப்பதற்குத் தகுந்த கப்பலாம். அதனை அடையாமல், அந்தோ, ஏனோ வீணில் நாளைக் கழிக்கின்றாய்?' என்றும்,

గేయంగీతానామసహస్రం । ధ్యేయంశ్రీపతిరూపమజస్రం ।
నేయంసజ్జనసంగతిమనిశం । దేయందీనజనాయచవిత్తం ॥

'பிரமந் தவிர்க்கும் பிரம வித்தையாம்
கீதை யென்னும் ஏத மிலாத
உபநிட தத்துடன் உலகளந் தோன்றன்
பாயிர மிக்க ஆயிர நாமமும்
ஒருநா ளொழியா தோதுக வென்றும்
தேகமே சேதன சேதன மாக
எங்கு நிறைவுற் றெல்லாந் தானும்
ஸ்ரீயப் பதியின் திவ்விய வுருவை
இடையறு தெண்ணி யேத்துக வென்றும்
எண்ணில் பிறவியி னெய்த லாகா
ஞானந் தன்னை நண்ணி அனைத்தும்
வாசு தேவனு மதித்து வைகும்
உச்சபர் ந[illegible]பை நத்துக வென்றும்
[illegible] படியே
பகவத கடாக்ஷப் பான்மையால் வரூஉம்
திரவியந் தன்னைத் திருமா லடியராம்
சேதனர்க் குள்ளே தீனரா யுள்ளவர்க்
கன்புடன் வழங்கி யகமகிழ் கென்றும்
உலகம் யாவும் உய்யுமா கருதும்
பெரியார் பணித்ததைத் தெரியாய்
என்னிது நின்மதி இருந்த வாறே' என்றபடி,

'பிரம வித்தையாகிய ஸ்ரீகீதோபநிஷதத்தையும், ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமங்களையும் தினந்தோறுந் தவறாமல் பாராயணஞ் செய்துகொண்டி

ருக்கவேண்டு மென்றும், ஸகல சேதநாசேதனங்களையும் தனது சரீரமாகப் பெற்று, எங்கும் நிறைந்து, எல்லாந் தானாய் விளங்கும் ஸ்ரீயப்பதியின் திவ்விய ரூபத்தை இடைவிடாமல் நினைந்து தியானிக்கவேண்டும் என்றும், எண்ணிலாத பல பிறவிகளெடுத்தும் நம்போலியரால் உணர முடியாத ஞானத்தைப் பெற்று, எல்லாம் ஸ்ரீவாஸுதேவனே என எண்ணியிருக்கும் மஹான்களாகிய உத்தமர் நட்பை விரும்பவேண்டு மென்றும், அவரவர் செய்த ஊழ்வினையின்படியே பகவத் கடாக்ஷவிசேஷத்தால் கிடைக்கக்கூடிய திரவியத்தை, திருமாலடியாராகிய சேதனர்க்குள்ளே தீனராயுள்ளவர்க்கு, அன்போடு வழங்கி மகிழவேண்டு மென்றும், உலகெலாம் உய்யும் வண்ணம் நன்னிலைவு பூண்டு வாழும் நுண்ணறிவினராகிய பெரியார் திருவாய்மலர்ந் தருளியுள்ளதை நீ அறியாயோ!' ஆஹா! நினது மதி இருந்தவாறு நன்று! நன்று!! இந்த மனைவி மக்கள் முதலியோர், எனக்கெங்ஙனம் உறவானார்கள்? இதுவரையில் நான், கர்மவசப்பட்டவனாய், எடுத்த பிறவிகளுக்குக் கணக்கும் உண்டாமோ! அவைகளை அளவிட ஆயிரமுகங்களையுடைய ஆதிசேஷனாலும் ஆகாது. அந்தப் பிறவிகளில், எனக்கெத்தனையோ தாய் தந்தையர்களும், மக்களும், மனைவிமார்களும், சுற்றங்களும் இருந்தார்கள். இப்போது, அவர்கள் எங்கிருக்கின்றனர்? அங்ஙனமே, இப்போதுள்ள பெண்டு பிள்ளைகளும், சிலகாலம் இருந்து, வினைக்கட்டறுந்தவுடனே, அவரவர் வந்த வழியைப் பார்த்துக்கொண்டு போகவேண்டியவர்களே யல்லவா? ஆகையால், கடன்காரர்களாய்த் தோன்றியுள்ள இவர்களிடத்தில், நான் ஏன், *அநுராகயுக்தனாய் வாழவேண்டும். நான், பொருட்செலவு செய்வதால், எனது மனைவி மக்கள் முதலியோர் வறுமையாளர்களாய், இடும்பையுறுவார்கள் என்று சொல்லவந்தனை! அவரவர் வினையளவாக, அவரவர்க்கு போகம் அளிக்கும் ஜகந்நாதன், சக்தியற்றவனென்றும், ஞானமில்லாதவனென்றும், வறியவன் என்றும், நீ எண்ணினைபோலும்!

బహూనిమేవ్యతీతాని । జన్మానితవచార్జున । తాన్యహంవేద ।
సర్వాణి । సత్వంవేత్థపరంతప ॥

(என்றால்)

'போற்றும் எனக்கும் புகழ்சேர் உனக்குமிந்நாள்
தோற்றம் பலவாகுஞ் சொல்லுங்கால்—சாற்றும்
அவையனைத்தும் நானறிவேன் அர்ச்சுனா! எண்ணி
அவையனைத்தும் நீயறியா யால்' என்றபடி,

'ஓ, அர்ச்சுனா! எனக்கும் உனக்கும் இதுவரையில் அநேக பிறவிகள் உண்டாயிருக்கின்றன; நான் அவைகளை யெல்லாம் அறிவேன்; நீ அவைகளை அறியாயென்று ஸ்ரீபகவத் கீதையில், பகவான் சொல்லியிருக்கின்றானல்லவா?' பிறவியில்லாதவனாகிய ஜகதீசன், வினைவசப்பட்

* அநுராகயுக்தன் = ஆசையுடையவன்.



டாயினும் சேதனர்களைக் காக்குநிமித்தம் அநேக அவதாரங்கள் எடுக்கின்றான். நாம் தூங்கும்போது, அவன், அதிஜாக்ரதையாய் நம்மைக் காப்பாற்றுகின்றான்; நமது ஊழ்வினைகளை உணர்ந்து, அவைகளுக்கீடான வினைப்பயன்களை அளிக்கின்றான். அங்ஙனம் இருக்க, நான், திரவிய விரயம் செய்வதனால், இவர்களுக்கு வறுமை வரும் என்று எங்ஙனம் கூறுகின்றனை!

ధనమువీధిఁబడినదైవవశంబున । నుండుఁబోవుమూలనున్ననైన ।
నడవిరక్షలేనియబలుండువర్ధిల్లు । రక్షితుండుమందిరమునజచ్చు ॥

(என்றான்)

'தெருவில் விழுந்த திரவியமுந் தெய்வ
அருளிற் கெடாமை மரும்—இருள் சேர்
குகையிற் புதைத்ததுவும் கொள்ளைக் கிலக்காந்
தகையிற் சிதைந்தழியுந் தான்'.
'காவல் வலியில்லான் கானகத்தில் வாழ்ந்தாலும்
சாவலி லன்தெய்வ சகாயத்தால்—மாவல்ல
காவ லுடையான் கடிமனையில் வாழ்ந்தாலும்
சாவ னுளனெனவே சாற்று'

ஆகிய நீதிவாக்யங்களும்!

'பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினும் போகா தம' என்பதூஉம்,
'தேங்காய்க்கு நீர்போற் சிறிதுசிறி தாய்ச்சேரும்
ஆங்கால மாங்கால் அனைவருக்கும்—ஆங்காணும்
வேழம் புசித்த விளங்கனிபோற் போகுமே
தாழுங்காற் செல்வந் தணந்து' என்பதூஉம்,

ஆகிய மூதுரைகளும், உனது காதில் ஏறவில்லையா? ஓ, அரசனே! அரசாளும் உனக்கு, இவ்வளவு அவிவேகம் இருக்குமானால், நீ, எங்ஙனம் பிரஜைகளைக் காத்து ரக்ஷிப்பாய்! உனது ஆத்ம சுகத்துக்கு முயற்சி செய்யாத நீ, குடிகள் பலரையும், எங்ஙனம் காத்தளிக்க வல்லாய்? நீ ஸிம்ஹாஸநாதிபதியாய், பிரஜைகளைப் பரிபாலிப்பவன் எனப் பெயர் வகித்து வாழ்தல், குருடன், தன்னை அநந்தங் கண்களுடையான் என எண்ணித் தன்னைத் தானே மதித்தவனாய், மற்றும் பல குருடர்களை அழைத்துக்கொண்டு, தான் முன்னே வழிகாட்டி ஸமுத்திரத்தை நோக்கிப் போகும் போக்குக்குச் சரியாயிருக்கின்றது. உனக்கு ஹிதஞ் சொல்லுகின்றேன். இனியாகிலும் இந்த அஞ்ஞானத்தை நீக்கிச் சரீரம் நீரிற் குமிழிபோன்றதென்றும், காலம் நிலையற்றதென்றும், காலன் கருணையற்றவனென்றும், இறந்தபின் பாவத்துக்கீடாக, ஒவ்வொருவனும் அநுபவிக்கும் நரகத்துன்பம் தப்பாதென்றும் எண்ணி, இனிப் பிறவியற்று, நித்ய பதவியை யடைவதற்கு நன்மார்க்

த்தைப் போதிக்க வல்ல ஸாதுக்களோடு ஸஹவாஸம் செய்யக்கடவாய். அங்ஙனம் செய்வையானால்,

సత్సంగత్వే నిస్సంగత్వం । నిస్సంగత్వే నిర్మోహత్వం ।
నిర్మోహత్వే నిశ్చలతత్త్వం । నిశ్చలతత్త్వే జీవన్ముక్తిః ॥

(என்றால்)

'ஸாதுஸங்கச் சேர்க்கையால் ஸம்ஸார ஸங்கத்தின்
மீதுவைத்த ஆசை விலகுமே—ஈதொழிய
யானெனதற் றுநிதை வீகமுத லாந்தத்வ
ஞானமுற மோக்ஷமுறு நன்கு'

ஸாது. ஸங்கத்தால் பெண்டுபிள்ளை வீடுவாசல் பண்ட பதார்த்தம் முதலிய ஸங்க * பரித்யாகம் உண்டாகும். அங்ஙனம் ஆவதனால், யான் எனது என்னும் அகங்கார மமகாரங்கள் மாறும். இவைகள் நீங்குவதனால், ஆதி தைவிக முதலிய தத்வத்ரய ஞானமுண்டாகும். இந்த ஞானத்தால் வீடு பேறுகிடைக்கும்" என்று ஞானமார்க்கத்தை விளங்கக் கூறினார். தேனை வடிகட்டுவதற்கு ஸாதனமாகிய † நெய்யரி, ஸத்தான தேனை ஒழுகவிட்டு, அசத்தான மெழுகு முதலிய திப்பியைப் பற்றுகிறபடி, அரசன், மோக்ஷ ஸாதனமான தசாவந்தருடைய இதவசனங்களை ஏற்றுக்கொள்ளாமல், இவர், அரசனுக்கினிமையை அலக்ஷியஞ் செய்து, அரசனை எதிர்த்துப் பேசினாரென்னுங் குற்றங்களைப் பெரிதாகக் கொண்டு, இவரைக் குற்றவாளியாக்கி, மிகவுங் கோபித்து, தனது சேவகர்களை அழைத்து, "கொஞ்சமேனும் அஞ்சாமல் என்னெதிரில் நின்று என்னை அவமதித்துப் பேசிய இந்தக் கயவனைக் கொண்டுபோய், ஒரு கருங்கல்லிற் பிணைத்திறுகக் கட்டிக் கடலில் தள்ளிவிடுங்கள்" என்று கட்டளையிட்டனன். அவர்கள், தமக்கிட்ட கட்டளையைத் தவறாமல் செய்து முடித்தார்கள்.

'குலந்தரும் செல்வந் தந்திடும் அடியார்
படுதுயராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினு மாயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணாவென்னு நாமம்' என்று,

திருமங்கை மன்னன் அருளிச் செயலின்படி தசாவந்தர், நாராயண நாம பாராயணபரராய் அந்தக் கருங்கல்லின்மேல் தம்மை மறந்து வீற்றிருந்தார். அப்போது ‡ அவ்யாஜபந்துவாய், தீனபந்துவாய், ஆபத்பந்துவாய்,

* பரித்யாகம் - நீக்கம். † நெய்யரி — பன்னாடை.

‡ அவ்யாஜபந்து - நிர்ஹேதுக சுற்றம்.



சரணாகதபந்துவாய், பீம நதிக்கரையில் ஸந்நிதிசெய்து எழுந்தருளியிருக்கும் ஸ்ரீபுண்டரீக வரதன் விரைந்து வந்து, அந்நாளில் தேவர்கள் வேண்டுகோளால் * மந்தரோத்தரணத்திற்காக எடுத்து வந்த கூர்ம ரூபந்தாங்கி, தசாவந்தரை ஸமுத்ரத்தில் முழுகவிடாதபடி, தனது முதுகின்மேல் கருங்கல்லுடன் தாங்கிக்கொள்ள, அவர் அந்தக் கல்லின்மேல் மிதந்து கொண்டிருந்தார். இந்த அற்புதத்தைக்கண்ட ராஜசேவகர்கள் அரசனுக் கறிவித்தார்கள். அரசன் வியந்து, உடனே கடற்கரைக்கு ஓடிவந்து, "தசாவந்த! நீ எப்படிக் கருங்கல்லை தெப்பமாகக் கடலில் மிதந்து செல்கின்றனை!" என்று கேட்டான். அதற்கு தசாவந்தர் அரசனை நோக்கி, "ஓ, ராஜனே! அநந்த பிரமாண்டங்கள், எவன் நினைத்த மாத்திரையிலேயே உண்டாக்கப்பட்டு, எவன் வல்லமையால் காக்கப்பட்டு விளங்குகின்றனவோ, மஹா ஸமுத்ரங்கள், எவன் ஆக்கினையால் கரையில்லாதிருந்தும் வெள்ளம் பெருகிவராமல் அருகி நிற்கின்றனவோ, சூர்ய சந்திராதி கிரகங்கள் எவன் ஆக்கினையால் அநவரதமும் கால சக்கரத்துக்குள்ளடங்கி ஸஞ்சரிக்கின்றனவோ, எவனுடைய † அநுப்ரவேசத்தால், பிரமாதியர் தத்தம் காரியங்களை நிர்வகிக்கும் வல்லமையோடு கூடியிருக்கின்றார்களோ, ஸமஸ்த ஜீவராசிகளாகிய பொம்மைகள், எந்த ஸூத்ரதாரியின் ஸூத்ரத்துக்குட்பட்டு, அவ்வவைகளுடைய கர்மாநுஸாரத்தின்படி ஆடுகின்றனவோ, எவனுடைய அநுப்ரவேசம் இல்லாதபோது, பிரமாதியர்கள் ஒன்றுஞ் செய்யவறியாமல், ஜடப்ராயர்களாயிருப்பார்களோ, எவன், ஹம்ஸ ரூபியாய், பிரமனுக்கு, வேதமென்னும் பரம ஞானக்கண்ணைக் கொடுத்தானோ, ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்கள், எவனால் விளையாட்டு மாத்திரையானே செய்யப்படுமோ, அநந்தகோடி பிரமாண்டங்கள் எவனுடைய லீலைக்கு, விளையாட்டுப் பந்துகளாயிருக்கின்றனவோ, பிரமாதியர்கள், எவனுடைய ‡ விபுஸ்வரூபத்துக்குக் கீடகங்களாயிருப்பார்களோ, எவனுடைய ஸூக்ஷ்ம ஸ்வரூபத்துக்கு, பரமாணுக்கள், மேரு ரூபங்களாய் விளங்குமோ, எவன் எல்லாவற்றிற்கும் ஆதாரமாய், தனக்கு வேறோராதாரமுமின்றி இருப்பானோ, நீயும் நானும், ஸமஸ்த பூதத் திரள்களும் எவனுடைய ஸ்வரூபங்களாய் இருக்கின்றோமோ, எவன், அன்பரைக் காத்தளிக்க வல்லவனாய், ஸகல மனித நயன விஷய பூதனாய், பீமநதிக்கரையில் புண்டரீகனுக் கநுக்ரஹித்த ¶ வ்யாஜத்தால் செங்கல்லின்மேல் நின்ற திருக்கோலத்துடன், சேதனர்களுக்குத் தரிசனந் தந்தருளுமாறு, அநவரதமும் காட்சிப்ரமாணமாய் விளங்குகின்றானோ, அந்த ஸ்ரீமத்பண்டரிநாதன், என்னை இந்த முந்நீரில் முழுகாதபடி ஆமை ரூபியாய்த் தனது முதுகிற் சுமந்திருக்கின்றான். இது, என்ன

* மந்தர உத்தரணம் = மந்தரகிரியாகிய மத்தைத் தாங்குதல்.

† அநுப்ரவேசத்தால் - உள்ளமர்ந்திருத்தல்.

‡ விபுஸ்வரூபம் - தலைமைப்பேருருவம்; ஸ்தூல உருவம்.

¶ வ்யாஜம் - குறிப்பு, அடையாளம்.

ஆச்சரியம்! ஸம்ஸாரக் கடலில் முழுகிக் கிடப்பவர்களை எல்லாம், * உத்தரிப்பதற்கு † தீக்ஷிதனாய் உள்ளவனுக்கு, என்போன்ற ஏழைமையாகிய தாஸனைக் காத்தல் அதிசயமன்று. தன்னை நம்பினவர்களுடைய ஆத்மபாரத்தை தானே வகிப்பான் ஹரி என்பதற்கடையாளமாக, என்னை, தனது முதுகிற் சுமந்து, உங்களனைவருக்கும் காட்டுகின்றான். ஓ, நமரங்காள்! இனியாகிலும் நீவிர் அனைவீரும், விவேகசாலிகளாய் சரீரங்கள் நிலையற்றனவென்றும், சரீராநுபந்தங்களாய், மமகாரயோக்யமான பதார்த்தங்கள் மோக்ஷ விரோதங்களென்றும் நிச்சயித்தறிந்து வைராக்யசாலிகளாய், நமது தலைவனாகிய ஸ்ரீ பண்டரிநாதனுடைய சரணாரவிந்தங்களில் உமது ஆத்மபாரங்களை அர்ப்பணஞ்செய்து, அச்சமின்றி, கரண ‡ களேபரங்களை பகவத் விஷயத்தில் விநியோகஞ்செய்து, இடையறாமல் அவனுடைய நாமோச்சாரணஞ் செய்துகொண்டு அன்பர் இதயபத்மவாஸியாகிய அவனை தியானித்து, மற்றவைகளை அறமறந்து, ஒடுங்கிய மனமுடையவர்களாய் வாழ்வீரேல், அந்த பக்தவத்ஸலன், உமது யோகக்ஷேமங்களைத் தானே வகித்து, உமக்குத் தனது ஸாயுஜ்ய பதவியை யருளுவன்" எனக் கூறினார். ஸாராம்ஸமான அவ்வித வசனங்கள் அங்குள்ளாரனைவருடைய செவித்தொளைகளிலும் நுழைந்த மாத்திரையிலேயே, ஸ்பரிசவேதியினுடைய ஸ்பரிசத்தால் இரும்பு பொன்னாவதுபோல, அந்த க்ஷணத்திலேயே, தேவர்களும்மனிதர்களாகிய அவர்கள் அனைவரும், ஞானபக்தி வைராக்யங்கள் நிறைந்தவர்களாய், அவருடைய நன்முயற்சியால், ஸ்ரீமத் பண்டரிநாதனுடைய பாதகமலங்களில் அன்பு மிக்கவர்களாய், தசாவந்தருடைய திருப்புகழைப் பல்லாயிர விதங்களிற் பரவித் துதித்தார்கள். அரசன் தனது சேவகர்களால், தசாவந்தரைக் கரையேற்றிக் கட்டவிழ்ப்பித்து, அவர்க்கு அநேக பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து, தனது சிரத்தால் அவருடைய திருவடித் தாமரைகளை அலங்கரித்து, அபராத மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, பரிசுத்தனானான். மிருகராஜனாகிய சிங்கத்தின் சரீரத்தைப் பொருந்தியுள்ள சிறுபிராணிகளும், நிலத்திலிருந்து மலையுச்சியில் குதித்துப் பாய்கிறபடி, தசாவந்தரை ஆசார்யராகப் பெற்றோர் அனைவரும், அவர் உபதேசித்த நிஷ்டையிலேயே பொருந்தியிருந்து, பரம வைஷ்ணவ ஸாயுஜ்யத்தை அடைந்தார்கள்!

ஸ்ரீகூர்மரூபிணேநம:

* உத்தரித்தல் - கைகொடுத்தெடுத்தல்.
† தீக்ஷிதன் - கங்கணங்கட்டியிருப்பவன். அதேதொழிலாய் உள்ளவன்.
‡ களேபரம் - உடல்.



## நாற்பத்தைந்தாம் அத்தியாயம்

# மநமோஹநஸூரதாஸர் சரித்திரம்

மநமோஹநஸூரதாஸர் என்னும் பாகவத முதல்வர், ஹஸ்தினாபுரத்தில் அக்பர் பாச்சா என்னும் துருக்க அரசனிடத்தில் அதிகாரியாயிருந்தார். இவர், சாந்தராய், மனவடக்கமுடையவராய், பரம வைராக்ய நிதியாய்,

ఆత్మవత్సర్వభూతాని । పరద్రవ్యానిలోష్ఠవత్ ।
మాతృవత్పరదారాంశ్చ । యఃపశ్యతిసపశ్యతి ॥

"ஈச்வர விபூதியாம் எல்லா வுயிர்களும்
தானே யென்றும் தன்னுயிர் போல
மன்னுயி ரென்றும் அன்னியர் பொருளை
மண்ணாங் கட்டியாய் மதித்தும் பிறர்மனை
யவரைப் பெற்றதா யாக
எண்ணியும் வாழ்பவன் புண்ணியனாமே" என்றபடி,

ஈஶ்வர விபூதியாகிய ஸமஸ்த பூதங்களையும் தன்னைப்போலவும், மன்னுயிர்களைத் தன்னுயிர்போலவும், பிறர் பொருளை மண்ணாங்கட்டி போலவும், பிறர் மனைவியரைப் பெற்றதாயர்கள் போலவும் எண்ணி, பரப்ரஹ்மாநுபவ நிஷ்டனாய் வாழ்வாராயினார். இங்ஙனம் இருக்க, அக்பர் பாச்சா, இந்த பாகவத முதல்வர் விஷயத்தில், அத்யந்த ஆசையுள்ளவனாய், இவரை, மதுரை கோகுல பிருந்தாவனங்களுக்கு அதிகாரியாய் நியமித்தனுப்பினான்.

"சநாதனனாய் நீர்சூழ் ஜகந்நாதனாகி
மநாதிகளுக் கெட்டாத மாயோன்—தனூதகத்தில்
வந்துதித்தான் ஆதலினால் வல்வினைநோய் தீர்மதுரை
சந்ததமும் புண்ய தலம்" என்றபடி,

ஸநாதனனாய் ஜகந்நாதனாயுள்ள ஸாக்ஷாத் விஷ்ணு அவதரித்ததனால் பாவங்களைத் தீர்க்கின்ற புண்ய ஸ்தலமாய் விளங்குவது ஸ்ரீ வடமதுரைத் திருப்பதியாம். ஆகையால், ஸாதுக்கள் இடையறாமல், அங்கு அடிக்கடி வந்துகொண்டேயிருப்பார்கள். மநமோஹநஸூரதாஸர், அநவரதமும் பகவத் பக்திசெய்துகொண்டு, ஆங்கே வாழும் ஸாதுக்களுக்கும் தீனர்களுக்கும் அன்ன வஸ்திரங்கள் வழங்கி உபசாரஞ்செய்து வருவாராயினார். ஒருநாள், அந்த பாகவத முதல்வர், தமது மனத்தகத்தில் இவ்வாறு எண்ணிக்கொண்டார்.

இந்த க்ஷேத்திரம் மிகவும் பரிசுத்தமானது. பலிச்சக்கிரவர்த்தியால் தனது திரிலோகாதிபத்யத்தை இழந்த இந்திரனைக் காக்கும்

பொருட்டு பகவான் அதிதி கர்ப்பத்தில் அவதரித்து, இங்கு அநேக காலமாய்த் தவஞ்செய்தபடியால், இது ஸித்தாஸ்ரமமென்று ப்ரஸித்தி பெற்றிருக்கின்றது. பிறகு, ஸ்ரீராம நியமனத்தால், ஸ்ரீஶத்ருக்னன், மதுபுத்ரனான லவணாஸுரனை வதைத்து, அதனால், இவ்விடத்தை மதுராபுரமாக நிருமித்து அநேக ஆண்டுகள் அரசாண்டான். பிறகு,

‘துஷ்ட நிக்ரக சிஷ்ட பாலன
தர்ம தாபனம் தான்செயு மாறு
பாற்கடற் கட்டிலிற் பாப்புப் பாயலில்
யோக வுறக்க மொழித்துநா ராயணன்
ஆதி சேஷனை அண்ண னாக்கிப்
பலபத் திரப்பெயர் பரிவுடன் சூட்டி
இராமா நுஜனாய்த் தராதல முளரிகள்
தாமலர்ந் தொளிரத் தேமொழித் தேவகி
என்னும் * ஸந்தியில் தன்னிக ரில்லா
அச்சுத பாநு வாக
அவதரித் தெமதிருட் பவமிரித் தனனே’

துஷ்டர்களைத் தொலைத்து, நல்லவர்களை நிலைநிறுத்தித் தர்மத்தை வளர்க்குமாறு, பாற்கடலாகிய கட்டிலில் ஆதிசேஷ † பர்யங்கத்தின் மேல் யோகநித்திரை செய்துகொண்டிருக்கும் ஸ்ரீமந் நாராயணன், அதனை நீக்கி, ஆதிசேஷனை, பலபத்திரப்பெயர் சூட்டித் தனக்கு முன்னவனாக்கிக்கொண்டு, தான் ராமாநுஜனாய், உலகத் தொகுதிகளாகிய தாமரைகள் மகிழ்சிறந்து மலர்ந்து விளங்க, தேன்போன்ற மதுர மொழித்தேவகியென்னும் உதய காலத்தில், தன்னேரில்லா ‡ தபனனாக அவதரித்து நமது பவவிருளை ஒழித்தனன். அந்த தேவதேவன் கோபால வேஷதாரியாய், கோக்களையும், $ கோவற்சங்களையும் மேய்த்து, தன்னோடு சமவயதுள்ள கோகுலச் சிறுவர் சிறுமியர்களுடன் விளையாடி,

“பாலைக் கறந்தடுப் பேறவைத்துப் பல்வளை யாளென் மகளிருப்ப, மேலை யகத்தே நெருப்பு வேண்டிச் சென்றிறைப் பொழுதங்கே பேசிநின்றேன், சாளக்கிராம முடைய நம்பி சாய்த்துப் பருகிட்டுப் போந்து நின்றான், ஆலைக் கரும்பின் மொழி யனைய வசோதைநங் காயுன் மகனைக் கூவாய்”

என்று,

பெரியாழ்வார் அருளிச்செயலின்படி பாலக்ரீடைகள் செய்து, ஸாக்ஷாத் மன்மத மன்மதனாகிய தன்னைக் காமுற்ற கோபிகைகட்கு ராஸக்ரீடாதிகளால் ஆனந்தம் விளைத்து, அவர்கள் தமது சித்தங்களில் இடையறாமல் தைல தாரைபோல, § அவிச்சின்ன ஸ்ம்ருதியுடன் தன்னையே மறவா

* ஸந்தி - உதயகாலம். † பர்யங்கம் - மெத்தை.
‡ தபனன் - சூர்யன். $ கோவற்சங்கள் - பசுங்கன்றுகள்.
§ அவிச்சின்னஸ்ம்ருதி - விடாத நினைப்பு.



மல் நினைந்துருகுமாறு, அவர்களுக்கு பக்தியோக நிஷ்டையை உண்டாக்கி, பூதனா சகட யமளார்ஜுந தேநுகாரிஷ்ட காளிய கேசி குவலயாபீட சாணூர கம்ஸாதி துஷ்டர்களை * நிரஸனஞ்செய்து, அக்ரூர மாலாகாரோத்தவ குசேல ஸ்ருததேவ பஹுளாஸ்வாதியர்களுக்குத் தனது திவ்யகுண † சேஷ்டிதங்களைத் தரிசிப்பித்து, அவர்களை பரம பாகவதர்களாக்கி, பார்த்தனுக்கு ஸாரதியாகி அவற்கு ‡ யுத்தப்ரோத்ஸாஹத்தைக் கற்பிக்கு நிமித்தம்,

‘உபநிட தங்களே உத்தம கோக்களா
அர்ச்சுன னவ்வைகளி னருங்கன் றாகச்
செய்துகோ பாலச் செல்வன் தானாய்க்
கீதா மிருதக் கேதமில் பாலைக்
கறந்துசா துக்களாங் கரவிலாப்
போக்தர் நுகரப் புரிந்தன னன்றே’ என்றபடி,

ஸர்வோபநிஷதங்களும் கறவைப் பசுக்களாகவும், அர்ச்சுனன் அவைகளுக்குக் கன்றாகவும் செய்து, தானே இடையனாக இருந்து, கீதாமிர்தமென்னும் இன்சுவைப் பாலைக்கறந்து, களங்க ரஹித மனமுடைய ஸாதுக்களாகிய செல்வர்கள் உண்டு களிக்கச் செய்தனன். நான், அப்படிப்பட்ட காலத்தில், கோகுலா புரியில் ஒரு கன்றுக் குட்டியாயிருப்பினும், அம்மஹாநுபாவனுடைய கரஸ்பரிசத்தைப் பெற்று, முக்தியைக் கொள்ளைகொண்டிருப்பேன்; அப்புருஷோத்தமன் கரத்திலிருந்த மூங்கிற் குழலாய் இருந்தாலும், அவனுடைய திருவாக்கமிர்தத் தீஞ்சுவையை உண்டு களித்திருப்பேன். பிருந்தாவனத்தில், புல்லாய் முளைத்திருந்தாலும், அந்த நந்த நந்தனனுடைய பாதாரவிந்தஸ்பரிசத்தைப்பெற்று முக்தியென்னும் மொய்குழலை முயங்கியிருப்பேன்; கம்ஸனுக்குக் கடுநட்பினரா யிருந்த அரக்கர்களுக்குள் ஒருவனாயிருந்தேனாயினும், கேசவனை நெருங்கி அட்டஹாஸம் செய்து அதனால் பிரணவ ஜபபலத்தையும் ஸ்ரீதரனுடைய § அஸ்த்ராளியிற் குளித்ததனால் கங்காஸ்நான பலத்தையும், நாராயணனுடைய திருமேனியைத் தரிசித்ததனால் வெகுகாலத்திய சிந்தனாபலத்தையும், கட்ககோதண்ட பாணியை வைதுநிந்தித்ததனால் வேதவாக்கியங்களை ஓதின பலனையும், மிகுந்த வைராக்யத்துடன் வாஸுதேவனை எதிர்த்துப் போர்செய்ததனால் உடல் வருந்திச் சாந்த மனத்துடன் தவஞ்செய்த பலத்தையும் பெற்று, இடையறாது நிலைத்த பார்வையால் $ சௌரியின் திருமுகத்தையே தரிசனஞ்செய்து, பெரியோர் முகோற்சவத்தில், விஷ்ணுவின் திருநாமோச்சாரணஞ்செய்துகொண்டு, குவிந்த மனமுடையவனாய் முகுந்தனைப் பரிசித்து, அதிதீவிரமாய், செய்தவத்திற் நேர்ந்த சீரியரைக்காட்டிலும்

* நிரஸனம் - வெறுத்தல். † சேஷ்டிதம் - திருவிளையாடல்.
‡ யுத்தப்ரோற்சாஹம் - சண்டையில் நிர்வாகம்.
§ அஸ்த்ராளி - அஸ்த்ரம்+ஆளி - அஸ்திரவரிசை.
$ சௌரி - ஸ்ரீகிருஷ்ணன் திருநாமங்களில் ஒன்று.

மேம்பட்டு விளங்கி, முக்திபெற்றிருப்பேன்; நான் அதிர்ஷ்டஹீநன்; ஆகையால், அக்காலத்தில் அத்தகைய நோன்பு நோலாதவனுயினன்; அதிர்ஷ்டவசத்தால் இக்காலத்திலாயினும், இங்கே வாழ்ந்து, ஸாதுக்களை ஆராதிக்கப் புண்ணியம் பண்ணினேன்; எனக்கிப்படிப்பட்ட பாக்கியம் அக்பர் பாச்சாவின் தயவால் கிடைத்தது ஆகையால் இந்த வேந்தனை எனதாசார்யனாக மதித்து பக்தி செய்வேன்'' என்பதேயாம். இங்ஙனம் எண்ணிக்கொண்டு, இவர், அங்கே வருகிற ஸாதுக்களுக்கும், தீனர்களுக்கும் ஸாக்ஷாத் பகவத்ஸ்வரூபபாவனு பூஜைசெய்து, பய பக்தி விஸ்வாஸத்துடன் அவர்களை ஆராதித்து, அன்ன வஸ்திராதிகளால் அவர்களை மனங்களிக்கச்செய்து, தமது ஆஸ்தி முழுவதும் வியயஞ்செய்து வறுமையடைந்து சிறிதும் மனவருத்தமின்றி, தமது ஸ்வாதீனத்திலிருந்த அரசிறைப் பணமாகிய எண்பது நூறாயிரம் வராகன்களையும் ததீயாராதனத்தின் பொருட்டுச் செலவழிக்கப் புகுந்தார். 'அரசிறைப் பணம், இங்ஙனம் வியயமாய்ப் போகிறபடியால், கெடுதி நேரிடும்' என்று; தமக்கு நண்பராயுள்ளவர்கள் எத்தனை இதங் கூறினும் அந்த இதவசனங்களை ஏற்றுக் கொள்ளாமல், இவர், அவர்களை நோக்கி, ''ஓ, எனது அரிய பெரிய உரிய உத்தம மித்திர சிகாமணிகாள்! இவ்வரசனுக்குப் பணம் ஏது! நமது ஆத்மாவும் அதற்குரியவைகளான ஆத்மீயப் பொருள்களும் பகவானுடைமைகளாயிருக்க, நம்மதென ஒரு பொருளும் உண்டா! பகவானுடைய சேஷபூதமாயுள்ள ஆத்மாவிடத்தில் * அபிமான மதியும், அவனுக்கு உரிமையான பொருள்களிடத்தில் † மமகாரபுத்தியும், பாவங்களுக்குள் பெரும் பாவங்களாம். ஆகையால், சேதனு சேதன ரூப ப்ரபஞ்சமனைத்தும், பகவானுடைய உடைமைகளா யிருக்கின்றன; நான் செலவழித்த பணமத்தனையும் பாச்சாவினுடையதென நீவிர், கொஞ்சமேனும் எண்ணமின்றி இயம்பினீர்கள் அரசனுடைய பொருள் அவனுடைய மகனுக்கு அநுபவ யோக்யமாய் இருக்கிறபடி, பகவானுடைய பொருள், பாகவதர்களுக்கு அநுபவ யோக்யமாய் இருக்கின்றது. இஃதன்றியும், அரச ஸந்நிதியில், அவனுடைய உற்றாரைப் போற்றுவது அவனுக்கு ஆனந்தமாயிருப்பது போல, நான் செய்கிற பாகவதாராதனம், பகவானுக்கு மிகப்ரீதியாயிருக்கும்'' என்று கூறிக் கூச்சமின்றி, அவ்வரசிறைப்பொருள் முழுவதும் ஸாது தீனஜன ‡ ஸத்காரங்களுக் குபயோகமாம்படி செய்து மகிழ்ந்தார்.

அப்போது, பகவத் பாகவத விஷயத்தில், காரணமின்றி வெறுப்புற்றிருந்த துஷ்ட மனத்தையுடைய அதமன் ஒருவன், ஹஸ்தினாபுரத்துக்குச்சென்று, இந்த விருத்தாந்தத்தை அரசனுக் கறிவித்தான். அக்பர் பாச்சா இதைக் கேட்டவுடனே, கோபங்கொண்டு, ''மநமோஹந

* ஆத்மாபிமானம் - ஸ்வாதந்தர்யம்; நான் என்னும் அகங்காரம்.

† மமகாரமதி - எனது என்னும் பேராசை.

‡ ஸத்காரம் - வரவேற்று உபசரித்தல்.



ஸூரதாஸனைப்பிடித்துக் கட்டிக்கொண்டு வாருங்கள்'' என்று, தனது * பரிகரங்களை ஏவினான். அவர்கள் மதுரைக்கு வந்து, மநமோஹந ஸூரதாஸரை நோக்கி, ''நீ எமது மன்னர்க்கு எண்பது நூறாயிரம் வராகன்கள் செலுத்த வேண்டும்; அத்தொகையைச் செலுத்தினுல், உன்னைச் சும்மாவிடுவோம்; இல்லையேல், உன்னை இறுகப்பிடித்துக் கட்டிக்கொண்டு போய் எமது அரசன் முன்னிலையில் விட்டு வணங்குவோம்; இதோ பார், அரச முத்திரையோடு எம்மிடத்துள்ள கட்டளைப் பத்திரம்! இதற்கு நீ என்ன உத்தரம் சொல்கின்றாய்?'' என்றுகேட்க, இவர், கொஞ்சமேனும் அஞ்சாமல், ''சேவகர்காள்! நான் அரசிறைப் பணத்தை வெளவினேனல்லன். அந்த பொருளுக்கு விலையில்லா மணிகளை வாங்கி பத்திரம்செய்து வைத்திருக்கின்றேன்'' எனக் கூறி, வீட்டுக்குள் நுழைந்து, இரண்டு பேழைகளைக் கற்களால் நிரப்பி, ஒரு பத்திரத்தில், ''நான் அரசிறைப்பொருளை அரிதாஸராகிய ஸாதுக்களுக்கு விநியோகித்தேன்; இதனால், பகவான் மகிழ்வான். இப்பொருள் விஷயத்தில் மமகார புத்தி வகித்துள்ள நீயும், இதனை உசிதமாய் ஸத்விஷயத்தில் வியயஞ்செய்த நானும் பரிசுத்தர்களாயினேம். ஓ, மன்ன! இதற்காக வெகுளற்க; மகிழ்கூருக. இந்த தேஹ நிர்யாணமான பிறகு, பரமபதமடைந்து, அங்கே, இந்த திரவியத்தை, வட்டிக்கு வட்டியுடன் வாங்கி மகிழலாம்'' என்றெழுதி, அந்த பத்ரிகையைக் கற்களோடு அப்பெட்டி ஒன்றில் இருத்தி, சேவகர்களை வீட்டுக்குள்ளே அழைத்துக் கொண்டுபோய், ''இதோ! அரதன மணிகள் நிறைந்த பெட்டகங்களைப் பாருங்கள்'' எனக் காட்டினார். அவர்கள் மகிழ்ந்து, அந்த பரம ஸாதுவை நோக்கி, ''நீ, மஹாமதிவாணன்; ஆகையால், நமது பாச்சாவுக்கு அநுகூலமாகப் பற்பல நன்மணிகளைச் சேகரித்து வைத்தனை. இவைகளைக் கண்டவுடன் அரசர் மிகமகிழ்ந்து, உனக்குப் பெரிய நன்கொடை அளிப்பார்'' எனக் கூறினார்கள். அரையிரவில் மநமோஹந ஸூரதாஸர், யார்க்குந் தெரியாமல், வீடு விட்டுக் காடுமலைகளைக் கடந்து, நெடுந்தூரஞ் சென்று, ஓர் ஆரணிய நடுவில், யோக நிஷ்டையில் அமர்ந்திருந்தார்.

ஸூர்யோதயமான பிறகு, ராஜசேவகர்கள், அந்த பாகவதரை எங்கெங்குந்தேடிக் காணாமையால், அவர் காட்டின பேழைகள் இரண்டையும் கொண்டுபோய், ராஜ ஸந்நிதியில் வைத்து, அங்கு நடந்தவிருத்தாந்தங்களை விண்ணப்பித்தார்கள். பாச்சா, அந்தரங்க சேவகர்களையும் அரதன பரிசோதகர்களையும் தன்னுடன் வைத்துக்கொண்டு, பேழைகளைத் திறந்து பார்க்கையில், அவைகளில் நிறைக்கப்பட்டிருந்த கற்கள், ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் கிருபாகடாக்ஷத்தால் விலையில்லா மாணிக்கங்களாய், நக்ஷத்திரங்களைப்போல ப்ரகாசித்துக் கொண்டிருந்தன. அரசன், அப்பெட்டிகளுக்குள் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த கடிதத்தை வாசித்துப் பார்த்து, ஆச்சரியமடைந்து, ''மநமோஹந ஸூரதாஸர்

* பரிகரங்கள் - சேவகக்கூட்டம்.

நமக்குச் செலுத்தவேண்டியது என்பது நாறுபிர வராகன்கள். அந்தத் தொகை முழுவதும், இந்தப் பெட்டிகளிலுள்ள மணிகளில் ஒன்றுக்கும் பற்றாது. இங்ஙனம் இருக்க, அம்மஹான் எழுதியனுப்பின கடிதத்தின் கருத்து வேறு விதமாயிருக்கின்றதே" எனத் தனக்குள் சிந்தித்து, உண்மை உணர்ந்த அமைச்சர்களை நோக்கி, "ஓ, மந்திரிமார்களே! இவ்வற்புதத்தைக் கண்ணுறுமின்; பாகவத முதல்வராகிய மநமோஹந ஸுரதாஸர், நமக்குச் செலுத்தவேண்டிய தொகை முழுவதும் ததீயாராதன விஷயத்தில் வியயஞ்செய்து விட்டது உண்மையே; ராஜ தண்டனைக்கு பயந்த அவர், இப்பேழைகளுக்குள் கற்களை நிரப்பி, இத்திருமுகத்தை எழுதி வைத்து, நாம் அனுப்பின சேவகர்களுக்கு இவைகளைக்காட்டி, அவர்களை சமாதானப்படுத்தித் தாம் அரண்யம் சேர்ந்தார். பகவான் கிருபையால், கற்கள் மாணிக்கங்களாயின. இப்போது அம்மஹான் எங்கிருப்பினும் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு வாருங்கள்" என்று சதுரர்களாகிய சேவகர்களை அனுப்பினன். அவர்கள் அடவியிற் புகுந்து, மநமோஹநஸுரதாஸரை தேடிக் கண்டு, ஹஸ்தினபுரத்தில் நடந்த விருத்தாந்தங்களை அவர்க்கு விண்ணப்பித்து, அவரை வேண்டியழைத்து வந்து, அரசன் முன்னே விட்டார்கள். அரசன் அவரைக் கண்டமாத்திரையில், ஸிம்மாஸனம் விட்டெழுந்து வந்து எதிர்கொண்டு ஆலிங்கனஞ் செய்து, "நீர் பரம பாகவதர்; உம்போன்ற பரம பாகவதர் எங்கெங்கும் இலர்; நீர், முன் போலவே, தேசாதிபத்யத்தை நிர்வகித்துக் கொண்டிரும்" என்றான். அதைக்கேட்ட மநமோஹந ஸுரதாஸர், இவ்வரசாட்சி எனக்கேன்?

'நாதனும் மூவுலக நாயகனும் அன்பாகப்
போதனும் தன்னைப் புகழ்வார்க்குத்—தீதில்
பரம பதம்வழங்கும் பண்பனும் கண்டாய்
வரதன் புருஷோத்த மன்"

"நாரா யணனவனை நான்விரும்பி நானிலத்தில்
பாரா யணம்பண்ணும் பண்புடனே—சீராக
சேவித்துக் காலம் செலுத்தாமல் உன்னையே
பாவித்துக் கெட்டேன் பதம்"

"அத்மனுய்க் கோத்ராபி தானகுல மாயுள்
சதமிலியாய்த் துன்பந் தருமா—மதமுடைய
உன்னைச்சே வித்தேன் ஒதியனேன் நாரணனும்
பொன்னைச்சே விக்கேன் புகழ்ந்து'

நாதனாகவும், மூவுலக நாயகனாகவும், அன்பர் நெஞ்சக வாஸியான ஞானரூபியாகவும், தன்னை ஆசிரயிப்பவர்களுக்குப் பரமபதம் அளிக்கும் தேவனாகவும் உள்ளவன் ஸ்ரீ புருஷோத்தமன்; நாராயணனாகிய அவனை நான், அன்பாய் இந்தஉலகத்தில் பாராயணம் பண்ணும் குணவானாகி நன்றாய்ச் சேவித்துக் காலம்போக்க அறியாமல், உன்னையே உயர்வாக



மதித்து எனது நிலையின் இழிந்தேன்; அதமனாகவும், அழிந்துபோகக் கூடிய நாமம் குலம் கோத்ரம் ஆயுள் முதலியவற்றைக் கொண்டவனாகவும், எனக்குத் துன்பமே தரக்கூடிய கொள்கையை யுடையவனாகவும் உள்ள உன்னை ஸேவித்தேனே யன்றி, நான், நாராயணனென்னும் அழிவிலாப் புதையற் பொன் போன்றவனை ஸேவிக்காமல் ஒதிபோற் பருத்தேன். இதுவரையில் நான், உன்னை ஸேவித்துக் கண்ட பலன் போதும். இனி புருஷோத்தமனை ஸேவை செய்வேன்" என்று கூறினர். அங்ஙனங் கூறிய ஸாதுஜன முதல்வராகிய இவரை நோக்கி, அரசன், "ஓ, மஹாத்மா! உமது கோரிக்கைபின்படி, நீர், புருஷோத்தமனையே ஸேவிக்கலாம் தடையில்லை; என்னை உம்மவனாக ஏற்றுக் கொண்டருள்க; இதனால் நான் பரிசுத்தனாவேன். இதுவரையில் உமது அதிகாரத்துக் குட்பட்டிருந்த மதுரா கோகுல ப்ருந்தாவனங்களுக்கு நீரே அரசராய், அத்தேசங்களின் வரும்படியை உமது மனம்போன வாறு ஸாதுக்களுக்கு அன்னவஸ்திராதி போஷண விஷயத்தில் விநியோகப்படுத்திக்கொள்க. நீவிர் அனுப்பின விலையில்லா மாணிக்கங்களை நீரே மறுபடியும் பெற்றுக்கொள்க" என வேண்டினன். மநமோஹந ஸுரதாஸர், அரசன் பிரார்த்தனைக் கிரங்கி, அரதன மணிகளுடன் அரசாட்சியையும் ஏற்றுக்கொண்டு, அரசனையும் மற்றவர்களையும் நோக்கி,

'திவ்ய மருந்திம் மருந்து—நலம்
சிறக்குங் கிருட்டின தேவ மருந்து
இறப்பைத் தவிர்க்கு மருந்து—இனி
எய்து பிடும்பைக ளெல்லா மகற்றிப்
பிறப்பை யறுக்கு மருந்து—அருட்
பேரொளி யாகிப் பிறங்கு மருந்து — திவ்ய மருந்திம்,

யாஜ்ஞவல் க்யாதிப ரான—முக்தர்
அன்பா யுரைக்கும் அரிய மருந்து
ஆஜ்ஞையால் நம்வினை தீர—அதை
அடியோ டறுத்தே அழிக்கு மருந்து — திவ்ய மருந்திம்,

மெய்யர்க்கு மெய்யாகி யெங்கும்—*அப்ர
மேயமா யென்று மிளிரு மருந்து
செய்யற் கரிய மருந்து—தின்னத்
தித்தித்து மெய்யிற் சிறக்கு மருந்து — திவ்ய மருந்திம்,

மாந்தரே நீரிதை அன்பாய்—நுந்தம்
மனத்திலும் வாக்கிலும் வைத்து மகிழ்ந்தால்
சாந்தரே யாகிச் செழிப்பீர்—உயர்
சாயுஜ்ய வாழ்வு தவறு துமக்கே' — திவ்ய மருந்திம்,

* அப்ரமேயம் - அளவிடக் கூடாதது.

ஓ, நமரங்காள்! ஜனன மரண வியாதிகளுக்கு ஒரு சிகிச்சை சொல்கின்றேன் கேளுங்கள்: யாஜ்ஞவல்க்யாதி முனிவரர்கள் அன்பாய் எடுத்துரைத்த அரிய மருந்து; அருட்பேரொளிமயமாய்ப் பிரகாசிக்கு மருந்து; அப்ரமேயமாய் என்றும் விளங்கு மருந்து; தின்னத் தின்னத் தித்தித்து உடலின் உள்ளூறி ஸௌக்யத்தைத் தருமருந்து; நன்மையே என்றென்றுந் தரக்கூடிய ஸ்ரீகிருஷ்ண மருந்து. இதனை நீவிர் அன்போடு வாக்கினும் மனத்தினும் வைத்து வாழ்வீரேல், ஹரியின் ஸாயுஜ்ய பதவியைத் தப்பாமற் பெற்றுவாழலாம்" என்றுபதேசித்து, பகவானை ஆயிர முகத்தால் பாயிரங்கூறி, ஸ்ரீமதுராபுரியை யடைந்து, மாட்சிமிக்க ஆட்சியைச் செலுத்தி முன்போலவே பாகவதர்களையும், தீனர்களையும் ஆராதித்துக் கொண்டிருந்தார். இவர், அநவரதமும் பகவத் விஷயத்தில் ஈடுபட்டுக்கொண்டு, "ஸாதுக்களுடைய பாதரக்ஷைகளை வகிக்கும் மநமோஹந ஸுந்தரதாஸன்" என்று பகவத்விஷய ஈடுபாட்டுக்கு முடிவில் தமது நாமத்தைச் சேர்த்து வழங்குவாராயினர். பொறாமைப்பேயர்களிற் சிலர், இதனை ஸஹியாதவர்களாகி, "இவர் தற்புகழ்ச்சி பண்ணிக் கொள்ளுகின்றார்" என்று தூஷித்துக்கொண்டிருந்தார்கள். ஒரு நாள் மநமோஹநஸுந்தரதாஸர், தேவாலயத்துக்குப் போய்க்கொண்டிருக்கையில், ஸாது ஒருவர் வந்து, இவரைநோக்கி, "நான் ஆலயத்துக்குள்ளே நுழைந்து, பகவானை ஸேவித்துவரும் வரையில், எனது பாதரக்ஷைகளைக் காப்பாற்றிக் கொண்டிரு" என்று கூறி ஆலயத்துள் நுழைந்தார். இந்த பாகவதமுதல்வர், ஸாதுக்களுடைய பாதரக்ஷைகளை வகிக்கின்றவரென்று தாம் கொண்ட பட்டத்துக்குத் தக்கபடியே, தமது பல்லக்கைச் சேவகர்களுடன் தமது வீட்டுக்கு அனுப்பிவிட்டு, அந்த பாதரக்ஷைகளைப் பரமானந்தத்துடன் மார்பில் அணைத்துக் கொண்டு கோபுரவாசலில் நின்று, உள்ளே சென்ற ஸாதுவின் வரவை எதிர்நோக்கிக் காத்துக்கொண்டிருந்தார். அந்த ஸாது, ஆலயத்துள் நுழைந்து, பகவானை தரிசித்து நெடுநேரங் கழித்து வெளியே வரப் பார்த்து, மநமோஹநஸுந்தரதாஸர், பாதரக்ஷைகளைக் கொண்டுபோய், அவர் முன்னிலையில் வைத்தார். அப்போது அந்த ஸாது, இந்தகுணநிதியை ஆலிங்கனஞ் செய்துகொண்டு, "மஹாத்மா, நீர் வகித்தபட்டம் உமக்கே தகும். உம்மை ஒப்பார் உலகில் ஒருவரும் இலர். பகவத் பாகவதபக்தி உமது திருவுருவாலேயே விளங்குகின்றது. நீரே, பகவானுக்கு அந்தரங்க பக்தராவீர்" என வியந்து, பலவிதங்களிற் புகழ்ந்து தமது வழியே சென்றார். மநமோஹநஸுந்தரதாஸர், தமது ஆயுள்வரையும் ததீயாராதநபரராய் வாழ்ந்து விளங்கி, ஸ்ரீமத் பாண்டுரங்கநாதனுடைய ஸாயுஜ்ய பதவியடைந்தார்.

ததீயாராதனப்ரியாயநம:



## நாற்பத்தாறும் அத்தியாயம்

# ரஸிகமுராரி சரித்திரம்

ரஸிகமுராரி என்னும் புண்ய புருஷர் ஒருவர், அநவரதம் பகவத் பாகவதாராதனம் செய்து கொண்டு,

'திருமாலடியார் திருவடிநீர் ஏற்கக்
கருமா லகலுங் கயமைப்—பெருமாலும்
போகுமே * சேதனற்குப் புண்ணியங்கள் நண்ணியுண்
டாகுமே ஸாயுச்சியம்'

'பகவத் பக்தர்களுடைய ஸ்ரீபாததீர்த்த † ஸ்வீகாரம், சேதனனால் செய்யப்படுமானால் அவற்குப் பிறவி நோய் தீரும், அஜ்ஞானம் அகன்று புண்ணிய மேலோங்கி ஸாயுஜ்ய பதவி கிடைக்கும்' என்று கூறியுள்ள இவ்வாக்யத்தில் மஹாவிஶ்வாஸமுடையவராய், நாடோறும், பாகவதர்களுடைய ஸ்ரீபாததீர்த்தத்தை ஸ்வீகரித்துக்கொண்டு, இடையறாமல் பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்து, உலகத்தார்க்கு இதோபதேசம் பண்ணி, காலத்தைக் கழித்து வருவாராயினர். இவர்க்கு இந்த நிஷ்டை, பரமானந்தகரமாயிருந்தது. ஒரு நாள், இவர், பாகவதர்களுடைய ஸந்நிதிக்குச் செல்லத் தடையுற்றபடியால், தமக்கு மிகவும் நெருங்கிய சிஷ்யர் ஒருவரை நோக்கி, "நீ, பாகவத ஸ்ரீபாத தீர்த்தம் சேர்த்துக் கொண்டுவா" என நியமித்தபடியே, அவர் கொணர்ந்த தீர்த்தத்தை ஸ்வீகரித்து, "ஓ, வத்ஸ! இன்று நீ கொணர்ந்த தீர்த்தம், இத்தனை தினங்களிற்போல தித்திப்பின்றி விளங்குகின்றது. இதற்குக் காரணம் யாது? தினந்தோறும், நான் ஸ்ரீபாத தீர்த்தத்துக்காக பாகவதர்களிடத்துக்குப் போகும்பொழுது, நீ என்னைப் பின்பற்றி வருகிறவனென்றும், மிகவும் புத்திசாலியென்றும் எண்ணியே, இந்த அசந்தர்ப்ப காலத்தில் ஸ்ரீபாததீர்த்த சேகரத்தின்பொருட்டு உன்னை அனுப்பினேன். உனக்கிதுவரையில், நான் அந்த ஸ்ரீபாத தீர்த்த சேகரக் கிரமத்தை உபதேசித்தேன் அல்லன். நீயும் என்னைக்கேட்டு அதைப்பற்றி ஒன்றுந் தெரிந்துகொள்ளாமற் போயினை. இப்படிப்பட்ட உன்னை, மந்தமதிலாணனாகிய நான், கொஞ்சமேனும் முன் ஆலோசனையின்றி இக்காரியத்துக்கு அனுப்பினபடியால், ஏதோ ப்ரமாதம் ஸம்பவித்தது. அந்தத் தீர்த்தாங்கீகார க்ரமத்தை, இப்பொழுது உனக்குபதேசிக்கின்றேன்; ஜாக்ரதையாய்க் கேட்பாயாக:

'ஆளும் பரமனைக் கண்ணனையாழிப் பிரான்றன்னை
தோளுமோர் நான்குடைத் தூமணி வண்ணனெம் மான்றன்னைத்
தாளும் தடக்கையுங் கூப்பிப் பணியுமவர்கண்டீர்
நாளும் பிறப்பிடை தோறெம்மை யாளுடை நாதரே'

* சேதனன் - ஜீவன். † ஸ்வீகரித்தல் - ஏற்றல்.

'அடியார்ந்த வையமுண் டாலிலை யன்னவ சஞ்செய்யும்
படியாது மில்குழ விப்படி யெந்தை பிரான்றனக்கு
அடியா ரடியார் தம்மடி யாரடி யார்தமக்
கடியா ரடியார்தம் அடியாரடி யோங்களே'

பகவத் பக்தரிடத்தில் அன்புடையவர்களா யிருக்கவேண்டும். பகவத் பக்தர்கள்,

'எவனொருவன் சாத்திரத்தை எண்ணாமல் வாழ்வான்
அவன்சித்தி முத்தி யடையா—தவனாவான்
ஆதலால். சாத்திரத்தை ஆதரவாக் கொண்டொருநீ
போதலால் எய்தும் புகழ்'

'சாத்திரத்தில் ஒப்பென்று சாற்றியதைக் கொண்டொருநீ
சாத்திரத்தில் தப்பென்று சாற்றியதை—மாத்திரமாய்த்
தள்ளி நடப்பையேல் நாவில் சுகம்பெற்று
விள்ளரிய வீடடைவாய் மேல்'

என்றபடி,

பகவ தாஜ்ஞைக்குக் கட்டுப்பட்டு, ஜாக்ரதை யுடையவர்களாய், விழித்திருப்பார்கள். ஆகையால், அப்பேர்ப்பட்ட பாகவதர்களிடத்தில் குற்றம் பொருந்தியிருப்பதற்கு அவகாசம் இல்லை. ஆனாலும் பஞ்ச பூத சரீர ஸம்பந்தத்தால் நேரிடக் கூடிய சிறு பிழை ஏதாவது அவர்களுக்கு உண்டாயிருந்தபோதிலும், புத்திமான் அதைப் பாராட்டாமல், பசு தனது கன்றின் சரீரத்திலுள்ள அழுக்கை இன்பமாய் ஏற்றுக் கொள்ளுகிறபடி, அதனை இன்பமாய் ஏற்றுக்கொள்ளவேண்டும். அங்ஙனம் ஏற்றுக் கொள்ளுதல், முதலாம் பக்தி. பகவத் பாகவத விஷயங்களிற் பிறர் செய்யும் பூசையைக்கண்டு பொறாமை கொள்ளாமல் ஸந்தோஷிக்கவேண்டும். அங்ஙனம் ஸந்தோஷித்தல் இரண்டாம் பக்தி.

'அரிய சரீரம் அடைந்தோர் கடவுட்
குரிய பணி செய்ய உகந்து'

'தேகசம் பத்தைத் திருமால் திருப்பணிகட்
காக நிவே தித் திடுக'

என்றபடி,

பகவத் விஷயத்தில் விநியோகிப்பதற்காக நமக்கு பகவான் அநுக்ரஹித்த கரணகளேபரங்களை இந்திரிய கைங்கர்யத்துக்கு விநியோகிக்காமல் அனவரதமும் அவைகளால் பகவானை ஆராதித்துக்கொண்டிருக்கவேண்டும். அங்ஙனம் ஆராதித்தல், மூன்றாம் பக்தி. பகவத் கைங்கர்யம் செய்பவன், பகவந்முகோல்லாஸமே பிரயோஜனம் என்றும்; தனக்கு ஸ்வரூபோசிதமென்றும் அங்ஙனம் செய்ய வேண்டுமேயன்றி, டம்பாகாரமாய்ச் செய்யக்கூடாது.

'புகழ்விரும்பிச் செய்தருமம் பூதியிலே நெய்யை
மிகவிரும்பி யூற்றுதல்போல் வீண்'

என்றபடி,



தான் தர்ம காரியஞ்செய்து, தானே புகழ்விரும்பி அதனைப் பாராட்டிப் பேசிக்கொண்டால், அந்த நற்கருமம், சாம்பலிற் கொட்டிய நெய்யைப் போல வீணாகும். ஆகையால் புத்திமான், * படாடோபம் நீக்கி வாழவேண்டும். "வலதுகையிற் செய்த தருமகாரியத்தை இடதுகை யறியப்படாது" என்கிறார்களே; தெரியாதா?

'தன்னைப் புகழ்ந்து தருக்க லொருவன்தன்
இன்னு யிரைக் கோறல் இசைந்து'

என்றால்,

ஒருவன், தன்னைத் தானே புகழ்ந்து களித்தல், தன் இனிய உயிரைத் தானே கொல்வது போலாம்.

'தன்னை வியந்து தருக்கலும் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்—முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமையு மிம்மூன்றும்
செல்வ முடைக்கும் படை'

என்றதும்

இப்பெற்றி நோக்கியேயென்க. இங்கு, யயாதி விருத்தாந்தத்தையும் கர்ணனுடைய அடிக்கு ஆற்றாமல் காண்டீபத்தைத் தூஷித்த தர்மபுத்திரரை நிந்தித்து, அதற்குப் பரிகாரமாக, தன்னுயிரை மாய்த்துக் கொள்வதற்கு மாறாக, ஸ்ரீகிருஷ்ணநுமதியால், † ஆத்மப்ரஸம்ஸை செய்துகொண்ட அர்ச்சுனனுடைய விருத்தாந்தத்தையும் கவனிக்க வேண்டும். அங்ஙனம் தற்புகழ்ச்சிசெய்து கொள்ளாமை நான்காம் பக்தி. அநவரத பகவத் கதா ஸ்ரவணபக்தியோடு கூடிவிளங்கவேண்டும். இந்திரிய கிங்கரன் ஒருவன், எத்தனைக் கெத்தனை விஷயாநுபவம் பண்ணினாலும், அத்தனைக் கத்தனை அதனில் வெறுப்பற்று, அதனைப் புதிது புதிதாக எண்ணி மகிழ்வானோ, அங்ஙனமே பகவத் கிங்கரன் பகவத் கதைகளைக் கேட்குந்தோறும் விருப்புற்றுப் புதிது புதிதாக வியந்து மகிழவேண்டும். அங்ஙனம் கேட்கக் கேட்க விஷ்ணு சரிதைகள் புதிது புதிதாக விளங்க நிற்பது ஐந்தாம் பக்தி. பகவானுடைய திவ்ய சரித்திரங்களைக் கேட்டுக்கொண்டே, அவனுடைய கலியாண குணங்களில் ஈடுபட்டவனுக்கு, விம்மல் பொருமல்களோடு கூடிய குரலும், ஆநந்த பாஷ்பங்களும், மயிர்க்குச்செறிவும் மாறி மாறி உண்டாகவேண்டும். நெல்லைக் குற்றுபவனுக்குத் தான் கோராமலே தனது சரீரத்தில் வெயர்வை அரும்புவதுபோல, பகவத் குணாநுபவ நிஷ்டனுக்கு, மேலே கூறிய சரீர மாற்றங்கள் உண்டாகிக் கொண்டே இருக்கவேண்டும். அங்ஙனம் சரீர புளகாங்கிதானந்த வசமாய் விளங்குதல் ஆறாம் பக்தி. இடையறாமல் பகவானை எண்ணிக்கொண்டேயிருக்க வேண்டும். இந்த எண்ணம் எண்ணெய் ஒழுக்கேபோல, ‡ அவிச்சிந்ந

* படாடோபம் - வெளிமயக்கு; வெளிவேஷம்.
† ஆத்மப்ரஸம்ஸை - தன்னைத்தானே புகழ்ந்துகொள்ளுதல்.
‡ அவிச்சின்னம் - இடையறாமை.

மாய் ஆநந்தாநுபவமாய் இருக்கவேண்டும். மனம் ஒரு க்ஷணநேரமும் சும்மா இருக்காது; அப்படிப்பட்ட மனத்தை பகவான் விஷயத்திற் செலுத்தாவிட்டால், அது, கடிவாளமில்லாக் குதிரையேபோல, தன்னரசுநாடாய், இதர விஷயங்களில் நுழையும்.

'ஓ, கிருஷ்ண என்மனந்தான் ஓவாத சஞ்சலத்தை
மோகமுடன் சோகத்தை மூட்டுமால்—வேகம்
அதனை அடக்கல் அநிலம் அடக்கல்
அதனின் அருமையா மால்'

'ஓ, கிருஷ்ணா! மனது சஞ்சலந்தருவதாய், மோகமுடன் சோகங்களை உண்டாக்குவதாய் மஹா பலமுள்ளதாய் இருக்கின்றது; அதனுடைய வேகத்தை அடக்கல் வாயுவேகத்தை அடக்கி ஆளுதல்போல அருமையான காரியம் என்றெண்ணுகின்றேன்' என்று அர்ச்சுனன் சோகமுற்றனன். ஆகையால் மதிவாணன், அதிசஞ்சலமான மனதை துர்விஷயங்களிற்செலுத்தாமல் இடையறாத பகவத்யானபரனாய் வாழவேண்டும். அங்ஙனம் அசையா மனத்தால், அநவரத பகவத்யானஞ் செய்தல், ஏழாம் பக்தி. அசலபக்தியுடன் பகவானை ஆராதிப்பவன் நிஷ்காமியனாய் பகவதாராதநம் பண்ணவேண்டும்; அங்ஙனம் செய்யாமல் தனது பக்திக்கு மாறாக வேறொரு பொருளை வேண்டப்படாது. கணவன் மனைவியைக் காப்பாற்றுதல் தனக்கு தர்மமென்றெண்ணவேண்டும். மனைவியும் அங்ஙனமே அவற்கடங்கி நடத்தல் கற்பென்றெண்ணவேண்டும். அங்ஙனமின்றி, தனது தேகரக்ஷணையின் பொருட்டுக் கணவற்கடங்கித் தனது சரீரத்தை விநியோகிப்பதாக அவள் எண்ணுதல் ஸ்வரூபஹானியாம். இங்ஙனம் எண்ணுகிற மனைவி, தனது கணவன் தன்னை ரக்ஷிக்க அசக்தனானபோது, அவனை விட்டு தன்னை ரக்ஷிக்கத் தகுந்த வேறொருவனை நாடவேண்டியதாகும். கணவனானவன், தனது இஷ்டப்படி, தனது மனைவி, அவளுடைய சரீரத்தைத் தனக்கு விநியோகிக்கின்றாள். ஆகையால் தான், அவளைக் காப்பாற்றவேண்டும் என்று எண்ணுதல் தனக்கு ஸ்வரூபஹானியாம். அந்த மனைவி தீராப்பிணியாளியாய் தனது காமபோகேச்சையைப் பூர்த்திசெய்ய இயலாதவளானபோது, அக்னி ஸாக்ஷியாய் அவளை மணந்த கணவன், அவளைக் காப்பாற்றாமற் கைவிடவேண்டியதாகும். இதனால் அநந்ய ப்ரயோஜனனாய், பகவானை உபாஸித்தல் சேஷபூதனுக்கும், தாஸவர்க்கத்தைப்போல ஒரு சிறிது பலனையும் எதிர்பாராமல் அவனைக் காத்தல் சேஷியாகிய விஷ்ணுவுக்கும் பரமதர்மமாயிருக்கின்றது. இதனால் பகவச் * சேஷபூதனுக்கு, ப்ரயோஜ † னாந்தராபேக்ஷை, மிகவும் ‡ தியாஜ்யமென்று ¶ நிர்ணீதமாகின்றது. அங்ஙனம் தான் செய்யுங் கைங்கர்யத்துக்கு, மாறுகருதாமை எட்டாம் பக்தி. இந்த அஷ்டவித

* சேஷபூதன் - அடியவன். † அந்தர - அபேக்ஷை - உள்ளெண்ணம்.
‡ தியாஜ்யம் - தள்ளுபடி. ¶ நிர்ணீதம் - நிச்சயம்.



பக்திகள், * மிலேச்சனிடத்திருப்பினும், அவன் † விப்ரனாவான். வேதபாடங்களால் விப்ரனாதல் ஒழுங்கே ஆனாலும், ஸகல வேதஸாரமான அஷ்டவித பக்திகளும் ஒருவனுடைய வசப்பட்டிருந்தால் அன்றி அவன் விப்ரனாகான்; அத்தகைய பக்திமானே முனீந்திரனாவான். இந்திரியங்களை வென்று, தனது மனத்தகத்தை பகவானுக்கு ஜங்கம விமானமாகச் செய்து, அதனில் அவனை நல்வரவேற்று எழுந்தருளுவித்து இடையறா மனனம் பண்ணிக்கொண்டிருப்பதால் ஒருவன், முனி புங்கவனாகின்றான். இவனே ஸ்ரீமான். ஒரு புருஷனால் நிருமிக்கப்பட்ட கிருஹத்தில், மூஷிகாதிகள் வளைகளை உண்டாக்கிக்கொண்டு, அவ்வளைகள் தம்மவை என்று அவைகளை அபிமானித்து வாழ்கிறபடி, ஈஸ்வரவிபூதியிற் சில பதார்த்தங்களை ஸ்வாதீனப் படுத்திக்கொண்டு, அவைகள் தம்மவைகளென்றெண்ணிக் களிக்கிற துரபிமான ‡ கிரஸ்தர்களைப்போலாகாமல், ஒருவன்,

'தந்தை ஜநார்த்தனனும் தாயார் கமலையாம்
பந்துக்கள் ஸ்ரீவிஷ்ணு பக்தராம்—சொந்தமாய்
வாழ்மனையுந் தேசமும் வையமொரு மூன்றாகும்
தாழ்விலைநெஞ் சேநந் தமக்கு' என்றபடி,

அகில ஜகந் மாதாவான ஸ்ரீமஹா லக்ஷ்மியே தனக்கு மாதா என்றும், அகில புவன ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கர்த்தாவான ஜகந்நாதனே தனக்குத் தந்தையென்றும், இடையறாமல் ஈஸ்வர ¶ வ்யாப்தியை எண்ணியெண்ணி, த்வேஷமற்றவர்களாயுள்ள விஷ்ணு பக்தர்களே தனக்குச் சுற்றங்களென்றும், அந்த பகவானுடைய ஐசுவரியமான மூவுலகங்களுமே தனக்கு சொந்த மனையும் தேசமும் என்றும் எண்ணுவதனால் || ஸ்ரீமந்தனாகின்றான். இவனே § யதியுமாவான். பகவத் $ கிங்கரனான தனக்கு இந்திரிய கைங்கரியம் ஸ்வரூபஹானியென்றும், நரகஹேதுவென்றும், பகவதநுபவ விரோதியென்றும் அதனை நீக்கி அநவரத பகவந்நிஷ்டனாய் இருப்பதனால், ஒருவன் யதியல்லது சந்யாஸி ஆவான்; இவனே பண்டிதனுமாவான். ஸகல சாஸ்திர ஸாரமான மந்திர, மந்திரார்த்த, மந்திர தேவதைகளும், தத்வத்ரய யதார்த்த ஜ்ஞானமும், இவற்குக் கரதலாமலகமாய் விளங்குவதால், இவன் அங்ஙனம் பண்டிதனாகின்றான். இப்பேர்ப்பட்டவன், தனக்குத் தெரிந்த அர்த்தங்களை, தன்னை அடுத்துக்கேட்கும் பிறன் யாரானாலும் அவனுடைய குலகோத்திர முறைபாராமல் அவனுக் குபதேசிக்க வேண்டும்; அவனிடத்திலுள்ள விசேஷார்த்தங்களை, அவனுக்கடங்கியிருந்து க்ரஹிக்கவேண்டும்; அவனை பகவத் விக்

* மிலேச்சன் - ஆரியன் அல்லாதவன் - தாழ்ந்தவன்; பூரியன்.
† விப்ரன் - பிராமணன். ‡ கிரஸ்தன் - பூண்டவன்.
¶ வ்யாப்தி - உள்நிறைவு.
|| ஸ்ரீமந்தன் - குணைச்வரியன், குணச்செல்வன்.
§ யதி - துறவி, சந்நியாஸி. $ கிங்கரன் - ஊழியன்.

ரஹமென்று பெருமைப்படுத்திப் பூசிக்கவேண்டும். இவ்வஷ்டவித பக்திகள் எவனிடத்திலுள்ளனவோ அவனே மஹான். அப்படிப்பட்ட மஹாத்மாவினுடைய ஸ்ரீபாதங்களைக் கழுவி, அந்த தீர்த்தத்தையே ஸ்வீகரிக்கவேண்டும். இத்தகைய யோக்யதை இல்லாதவனுடைய *பாதோதகத்தை ஸ்வீகரித்தல், ஜ்ஞான லோப காரணமாம். அஷ்டவித பக்தியோடு கூடி உண்மையில் மகான்களாயிருப்பவர், தம்மை மிகத் தாழ்வாக மதித்திருப்பார்; தம்மை நீசரிற் றலைவராக எண்ணியிருப்பார் ஆகையால், அவர் தமது ஸ்ரீ பாததீர்த்தத்தைத் தர ஸம்மதியார். அங்ஙனம் அவர் சம்மதியாராயினும் நாம், அவரைப் பலவாறுவேண்டி மகிழ்வித்து, அவரே பகவத் விக்ரஹம் என்னும் பெருமையுடன் குருபரம்பரைக்குச் செய்யும் ஸ்தோத்ர பூர்வகமாய் அவருடைய பாதங்களை அலம்பி, அந்த ஸ்ரீபாததீர்த்தத்தை ஸ்வீகரிக்கவேண்டும். அப்படிப்பட்ட ஜ்ஞானாதிகாரியினுடைய குல கோத்திரங்களையும், சாஸ்த்ர விசாரணை முதலியவைகளையும், சரீராரோக்யதையையும் குறித்துப் பாராமல், அவர் எவரேனும்,

'பாதியா யழுகியகால் கையரேனும்
பழிதொழிலும் இழிகுலமும் படைத்தாரேனும்
ஆதியாய் அரவணையாய் என்பராகில்
அவரன்றோ யாம்வணங்கும் அடிகளாவார்' என்றபடி,

அவரிடத்து விளங்கியுள்ள அஷ்டவித பக்திகளை எண்ணி, அவருடைய ஸ்ரீ பாததீர்த்தத்தை உட்கொள்ளவேண்டும். நான் இந்தக் கிரமங்களை உனக்கு உபதேசிக்காமலே, அந்தக் காரியத்துக்கு உன்னை அனுப்பினபடியால், நீ என்ன பிரமாதம் பண்ணினையோ எனக்கு விளங்கவில்லை. இத்தனை நாட்களிற்போலல்லாமல் தீர்த்தத்தில் மதுரம் மாறியிருப்பதால், ஏதோ ஒரு பிசகு நேரிட்டிருக்கின்றதென்று தீர்மானிக்கின்றனன்'' எனக் கூறினார். அவருடைய அருமையாகிய உபதேச மொழிகளைக்கேட்டு வந்த சிஷ்யர், ''குருமணீ! தேவரீருடைய பெருமைக்குக் காரணரான பாகவத முதல்வர்களுடைய ஸ்ரீபாத தீர்த்தத்தை, நான் சேர்த்தபோது, அவர்களில் ஒருவர், குஷ்டவியாதியஸ்தராயிருந்தபடியால், அவருடைய சரீரம் மிகவும் அழுகி, துர்க்கந்தமாயிருந்தது. அவருடைய பாதங்களைத் தொடுவதற்கு மனமொவ்வாத நான், அவர் தவிர மற்றைய பாகவதர்களுடைய ஸ்ரீபாத தீர்த்தத்தைச் சேர்த்துக்கொண்டு வந்தேன்'' என்று கூறினார். அது கேட்ட ரஸிகமுராரி, மிகச் சோகித்து, பாகவதர்களுடைய சந்நிதிக்குத் தாமே நேரிற் சென்று, குஷ்டவியாதியஸ்தரான பாகவதரை பகவத் விக்ரஹமென எண்ணிப் பெருமை செய்து, அவருடைய பாதங்களை அலம்பி, முன்னைய தீர்த்தத்தோடு சேர்த்து ஸ்வீகரிக்கையில், அது அதிக மாதுர்யாதிசயத்துடன்

* பாத உதகம் - திருவடி நீர்



விளங்கியிருந்தது. ரஸிகமுராரி ஆனந்த பரவசரானார். இந்த விசித்ரத்தைக்கண்டார் அனைவரும், இவருடைய பாவனா சுத்திக்கு ஆச்சரியமடைந்து, இவர்க்கு ரஸிகமுராரி யென்னும் நாமம் தகும் தகும் என்று பலவிதத்தில் வாழ்த்தினார்கள்.

இந்த ரஸிகமுராரிக்கு ஆசார்யராகிய தயார்ணவ ஸ்வாமி என்னும் மஹான் ஞானவைராக்ய சம்பன்னராய், ஸுசீலராய், அநவரத பகவதாராதன பரராய் விளங்கியிருந்தனர். ஆகையால், அவர்க்கு அந்த தேசாதிபதி, பகவதாராதன உபயோகமாக அன்போடு விடுத்த மான்ய நிலங்களை நூதனமாய் வந்த தேசாதிபதி ஒருவன், தயாரகிதனாய், ஸமஸ்தானத்து நிலங்களுடன் சேர்த்துக்கொண்டான். அப்போது தயார்ணவ ஸ்வாமி, தமது சிஷ்யராகிய ரஸிகமுராரியை வரவழைத்து, ''நீ அந்த நவீனாதிகாரியைக் கண்டு, எப்போதும்போல அந்த நிலங்களை என் ஸ்வாதீனம் செய்யவேண்டுமென்று பேசித் தீர்மானித்து வரக்கடவை'' என்று நியமித்தார். ரஸிகமுராரி தமது ஆசார்யருடைய கட்டளையைச் சிரஸாவகித்து, அவ்வரசன் வாழும் நகருக்குச் சென்று, ஒரு சிஷ்யன் மூலமாய் தமது வருகையை அவ்வரசனுக்குத் தெரிவித்தார். அப்போது அங்கிருந்தார் யாவரும், ரஸிகமுராரியினுடைய வைராக்யாதி குணங்களைப் பலவாறு புகழ்ந்து, அவருடைய தரிசன மாத்திரையானே, பசுபக்ஷ்யாதிகளுக்கும் ஞானோதயமாகின்றதென்று சொன்னார்கள். அதுகேட்ட பரமநாஸ்திகனும், ஸாதுஜனத்வேஷனுமான அந்த அரசன், ரஸிகமுராரியை மறுநாள் வரச்சொல்லிவிட்டு, யானைப்பாகாதிபதியை வரவழைத்து, ''நீ ஒரு யானைக்கு மதமேற்றி, ரஸிகமுராரி வரவை யெதிர்நோக்கியிருந்து, அவர்மேல் அந்த யானையை ஏவுக'' என்று நியமித்தான். இதனை யுணராத ரஸிகமுராரி, சிஷ்யர்களுடன் பகவந்நாம ஸங்கீர்த்தனம் பண்ணிக்கொண்டே கோட்டைக்குள் நுழைந்து வந்து கொண்டிருந்தார். அப்போது யானைப்பாகாதிபதியால் தூண்டப்பட்ட மதயானை, ரஸிகமுராரிக் கெதிர்முகமாய் வந்தது. அவ்வூரார் அனைவரும் பயந்தோடிக் கோட்டை மதிட்சுவர் மேலேறிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ரஸிகமுராரியின் சிஷ்யர்கள், தமது ஆசார்யரை ஒன்றியாய் விட்டு மற்றை ஜனங்களுடன் மதிலேறி வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்போது ரஸிகமுராரி அந்த ஜனங்களை நோக்கி, ''ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவே இந்த மதயானை யுருவாய் வருகையில், அவனை நோக்கிக் களிக்காமல் ஏனோ பயந்தொளிக்கின்றீர்? ஒரு புருஷன் கவசத்தைத் தரித்த மாத்திரையிலேயே, அவனுக்குப் புருஷத்வம் மாறிக் கவசத்வம் ஸித்திக்காதல்லவா? ஸர்வசரீரகனான பகவான், இந்த யானையைத் தனக்குச் சரீரமாகக் கொண்டிருக்கின்றான். நீவிர், சரீரியான பகவானை எண்ணிப்பாராமல், அவனுடைய சரீரமான யானையை என்கண்டு பயப்படுகின்றீர்கள். சரீரியை விட்டு, சரீரமானது, தானே ஸ்வாதந்த்ரியமாய் ஒன்றுஞ் செய்யமாட்டாது. உம்மை அறியாமல் உமது சரீரம், எந்தக்

காரியத்திலாயினும் ப்ரவர்த்திக்குமா? உமக்கேன் இத்தனை விவேகம் இல்லாமற் போயிற்று?" என்றுகூறி, யானையைப் பார்த்து, சென்னியிற் கூப்பிய கரமுடையவராய்,

'செந்தா மரைக்கண்ணா சீக்கிரம்வா வாவென்றன்
அந்தா மரைத்தா ளருள்'

'தாமரைகளுக்கு ஒப்பான திருக்கண்களை யுடைய பகவானே! வா, வா' என்று கூறினார். அப்போது அந்த யானைக்கு பகவானருளால், மதமடங்கி, ஶமம் முதலிய ஆறுகுணங்கள் உதயமாகி, ரஸிகமுராரி பாதங்களிற் பணிந்தது. அப்போது அவர், தமது திருக்கரத்தால் அதனுடைய மத்தகத்தைத் தொட்டுத் தடவி, தமது கழுத்தில் இருந்த துளஸிமாலையை அதன் கழுத்தில் அணிந்து, அதன் காதில் ஸ்ரீதாரக மந்திரத்தை உபதேசித்தார். அந்த யானை, ஆநந்த பாஷ்பங்களைச் சொரிந்துகொண்டு, பகவானை நினைந்து நினைந்து, ரஸிகமுராரியைப் பின்பற்றிப் போய்க்கொண்டிருந்தது. அந்த புதிய அரசன் இவ்வற்புதத்தைக் கேட்டு ரஸிகமுராரியின் சந்நிதிக்கு வந்து, அபராத மன்னிப்பு கேட்டுக்கொண்டு, அவருடைய விருப்பத்தை யறிந்து, தான் தயாரகினாய் அபகரித்த மான்ய நிலங்களை, மறுபடியும் தயார்ணவஸ்வாமியின் ஸ்வாதீனம் செய்து, ரஸிகமுராரியின் உபதேசத்தைப் பெற்ற யானையை அவர்க்குக் காணிக்கையாகக் கொடுத்து மிகவும் பெருமை செய்தனுப்பினான்.

அதுமுதல் அந்த யானை, ரஸிகமுராரியின் பாதச்சாயை என்று சொல்லும்படி, அவரைப் பின்பற்றித் திரிந்து இடையறாமல் பகவத்யானஞ் செய்து, பகவந்நாம ஸ்மரணஞ்செய்யும் ஸாதுக்களிடத்தில் பக்தி செலுத்தி, ரஸிகமுராரி யாத்திரை செய்யும்பொழுது, அவருடையவும் இதர பாகவதர்களுடையவும் ஆகிய பதார்த்தங்களைத் தனது முதுகில் ஏற்றிக்கொண்டுபோய் பாகவதர்களுடைய உச்சிஷ்டத்தை ஸ்வீகரித்து ஆனந்தமாய் வாழ்ந்துகொண்டிருந்தது.

ஒரு நாள் ரஸிகமுராரி, தீர்த்த யாத்திரையை யுத்தேசித்து, அநேக சிஷ்யர்களுடன் புறப்பட்டு, தமக்கு வழிக்கு வேண்டிய பதார்த்தங்களை யானையின்மேலே வைத்துக்கொண்டு, காட்டின் வழியாய் போகையில் சில கள்ளர்கள் வந்து இவர்களைச் சூழ்ந்துகொள்ள, இந்த யானையானது, தனது துதிக்கையால் அடித்தும் கால்களால் மிதித்தும் அவர்கள் அனைவரையும் கொன்றது. இவர்கள் பல க்ஷேத்ரங்களையும் தரிசித்து குருக்ஷேத்ரத்துக்குச் சென்று, அவ்விடத்திய புண்ய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்துகொண்டிருக்கையில், அந்த தேசத்தரசன், இந்த யானை, ஸர்வலக்ஷணத்தோடுங் கூடியிருக்கின்றதென்று கேள்விப்பட்டு, "இதனை எனக்குத் தரவேண்டும்" என்று ரஸிகமுராரியைக் கேட்டான். அதற்கு அவர், "இந்த யானை, என்னையும், பாகவதர்களையும் விட்டு, வேறோரிடத்துக்குப் போகாது" என்று,



மறுமொழி கூறினார். அதுகேட்ட அரசன், தனது சேவகர்களை அழைத்து, "நீவிர், ஸாது வேஷதாரிகளாய், பகவந்நாமங்களை உச்சரித்துக்கொண்டே போய், அந்த யானையைப் பிடித்துக் கொண்டு வாருங்கள்" என்று நியமித்தனுப்பினான். சேவகர்கள் அங்ஙனஞ் செய்த போது, யானை, அவர்கள் வேஷத்தையும் பஜனத்தையுங் கண்டு, கேட்டு, அவர்களை ஒன்றுஞ் செய்யாமல் சும்மாவிருந்தது. சேவகர்கள் இந்த யானையைக் கொண்டுபோய் யானைச்சாலையிற் சேர்த்து அரசனுக்கறிவிக்க, அவன் மிகவுங் களிகூர்ந்தான். அது முதல் இந்த யானை, ஆகார நித்திரைகளை நீக்கி,

"குருபரனடிகள்
ஒருகணமெனினும்
அருகுதலிலதாய்க்
கருதுக மனனே" என்றபடி,

தனது ஆசார்ய பாதபத்ம நினைவுடன் கூடியிருந்தது. அரசனுக்கு சகிக்க முடியாத வயிற்றுவலி உண்டாகி, எத்தனை சிகிச்சைகள் செய்தாலும் நிவர்த்தியாகாமல் வேதனை அதிகரித்துக் கொண்டிருந்தது. அப்போது அரசன் பயந்தவனாய், பாகவதாபசாரத்தால் தனக்கு இப்படிப்பட்ட வேதனை உண்டாயிற்றென்று நிச்சயித்து, ரஸிகமுராரியின் ஸந்நிதிக்கு வந்து, பயபக்தி யுக்தனாய், ப்ரதக்ஷிண நமஸ்காரங்கள்செய்து, அபராத மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, அம்மஹானை அடுத்து அவர்க்குச் சிஷ்யனாய் உபதேசத்தைப்பெற்று, அவரைப் பலவிதத்திலும் பூசித்து நேசித்து, அவரிடத்து விடைபெற்றுத் தனது அரண்மனைக்குச் சென்றனன். இந்த யானையானது தனது ஆசார்யருடைய கட்டளையைப்பெற்று, கங்கைக்குப்போய்,

"கங்கையிற் படிந்தார்
அங்கையிற் பழம்போல்
சங்கையில் முத்தி
மங்கையைச் சேர்வார்" என்றபடி,

முக்தி ஸ்தலமாகிய விஷ்ணு நகரத்தில் தனது சரீரத்தைவிட்டு, ஸ்ரீ வைகுண்ட திவ்யலோகத்தை அடைந்தது. மனிதர்போலவே பசுக்களும் பக்ஷிகளும் வைஷ்ணவ ஸமாஶ்ரயணத்தால் பரமபதஞ்சேரும் என்ற பிரமாணவாக்யம், இந்தப் பரமபாகவதரிடத்தில் கண்கூடாகப் பலித்தது காண்க. ரஸிகமுராரி, தமதுபதேசத்தால் மன்பதைகள் பலரையும் பரமவைராக்ய நிறைந்தவர்களாக்கி, முக்தி மங்கையை மணந்து மகிழ்ந்தனர்.

கஜேந்த்ரவரதாய நமஃ

## நாற்பத்தேழாம் அத்தியாயம்

# மீராபாய் சரித்திரம்

உதயபுரத் தரசன், பரம தர்மவானாய், ஸத்ய சீலனாய், நீதி தவறாமல் அரசாண்டு, சிரத்தையுடன் பகவத் பாகவதாராதனம் செய்து வருவானாயினான். ஸ்ரீபாண்டுரங்கனுடைய கடாக்ஷத்தால், இவனுக்கு ஒரு புத்திரி அவதரித்தனர். அந்தப் புத்திரிக்கு, தாய் தந்தையர், மீராபாய் என்று நாமகரணஞ் செய்து, ஸாக்ஷாத் ஸ்ரீதேவியென்று பாவித்து, மிகவும் ஆசையோடு வளர்த்தார்கள். அந்த மீராபாய், தமக்குப் புத்தி தெரிந்த பிறகு, தமது பிதா, ஸ்ரீகோபால மூர்த்தியைச் சிரத்தையுடன் ஆராதிப்பதையும், அந்த தேவசிகாமணிக்குப் பலவிதங்களில் அலங்காரஞ் செய்வதையும் அவர் அருகிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தார். இந்தக் கன்னிகாமணி, நாடோறும், ஸ்ரீகோபால மூர்த்தியின் திவ்ய மங்கள விக்ரஹத்தை ஸேவித்து, அந்த மூர்த்தியையே அநவரதமும் பாவித்துக் கொண்டிருந்தபடியால், ஸாக்ஷாத் மந்மத மந்மதனாகிய ஸ்ரீருக்மிணீ காந்தனிடத்தில் தமது மனம் குவிந்து, அவனே தமக்கு பர்த்தாவாக வேண்டும் என்று, மனோரதங் கொண்டிருந்தார். இங்ஙனம் இருக்க இவருடைய தந்தை, “நமது புத்திரிக்கு ஸகல காமோபபோகங்களுக்கு * ஆகரமான வயது வந்தது. தகுந்த வரனைத்தேடி, விவாகஞ் செய்வது விவேகம்” என்று, தனது அந்தரங்கர்களுடன் சொல்லிக் கொண்டிருக்கக் கேட்டு, மீராபாய், தமது தந்தையை நோக்கி, “ஓ, பிதாவே! நீர் எனக்கு வரனைத் தேடவேண்டிய அவஸ்யம் இல்லை. எனக்குத் தகுந்த வரனை நானே மாநஸிகமாய் வரித்திருக்கின்றேன். அந்த வரன் யாவனென்றால், ஸமஸ்த பிரபஞ்சத்துக்கும் எவன் மூல காரணனா யிருக்கின்றானோ, எவனுடைய ஸங்கற்பமாத்திரையாலே ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்கள் நடக்கின்றனவோ, எவன் ஜன்ம ரஹிதனாயிருந்தும் பக்தர்களுக்காக நாம ரூபங்களோடுகூடியிருப்பானோ, எவனுடைய திவ்யாத்ம ஸ்வரூபத்தைத் தரிசிக்கும் பொருட்டு தேவாதியர்கள், † ஸவிக்ரஹோபாஸநம் பண்ணுவார்களோ, எவன் ஸர்வ பிரபஞ்சத்துக்கும் தந்தையாய், தாயுமாய், சேஷியாய், பர்த்தாவாய், ஜ்ஞேயனாய், ஸ்வாமியாய், ஆதாரமாய், ஆத்மாவாய், போக்தாவாய் விளங்குகின்றானோ, எவன் ஸமஸ்த பிராணிகளுக்கும் ‡ நிருபாதிக பந்துவாய் ஸர்வ பலன்களையும் உண்டாக்கிக் கொண்டிருப்பானோ, எவன் அன்பர் துக்கஞ் சகியாதவனாகி ஆஸுர ப்ரக்ருதிகளைச் சிக்ஷித்துக் கொண்டிருப்பானோ, எவன் ஜீவர்களுடைய வியஸனத்துக்காக மிகவருந்தி நிற்பானோ, எவன் பக்த

* ஆகரம் - பிறப்பிடம். † ஸவிக்ரஹ + உபாஸனம் - விக்ரஹபாவனை செய்து தொழுதல். ‡ நிருபாதிகம் - துன்பம் இன்மை.



* வத்ஸலனாய், பக்த † சரண்யனாய், பக்த பரதந்த்ரனாய், பக்தாபீஷ்ட பலப்ரதனாய் விளங்குவானோ, எவனுடைய விளக்கம் இல்லாதபோது சேதனங்கள் அசேதனங்களுக் கொப்பாகுமோ, எவன் அர்ச்சா ரூபத்தை வகித்து நமது கிருஹத்தில் வாழ்ந்து பொறுமையுடன் தன்னை ஆராதிக்கும் உமக்குப் பராதீனமான அகிலாத்ம ஸ்திதியை யுடையவனாய் விளங்குகின்றானோ அப்பேர்ப்பட்ட கோபாலமூர்த்தியே எனது ப்ராணநாதனாகிய வரனும். எனது அன்புள்ள தந்தையாகிய நீவிர், என்னை அந்த ஜகதீசற்குத் தத்தஞ் செய்து, முந்தியே அவற்கு மாதுலர்களாய் விளங்கும் பாக்யத்தைப் பெற்றுள்ள ஸமுத்ர ராஜன், ப்ருது, ஜனகன், பீஷ்மகன் முதலியோர்களைப்போல நீரும் கோபால தேவற்கு மாதுலராய், ‡ தன்யராய் வாழ்வீர் எனக் கோருகின்றேன். என்னை மனிதர்க்குக் கொடுக்க முயல்வீரேல் எனதுயிர் தரியாது. தேவார்ஹமாகின்ற ஹவிர்ப்பாகம், நாய்கள் தொடுவதற்குத் தக்கதாகாதபடி, ஸ்ரீபுருஷோத்தமற் கர்ஹமாகின்ற நான், கர்மபரதந்த்ரர்களான மனிதர்களுக்குத் தக்கவளல்லேன்” என்று விளங்க வுரைத்தார். அது கேட்ட தந்தை, தனது புத்திரியாகிய அவ்வம்மையாரை நோக்கி, “இதென்ன விந்தை! அர்ச்சாரூபத்தைப் பொருந்தி விளங்கும் நமது கோபாலதேவன், உனக்கெங்ஙனம் காட்சி கொடுப்பான்? அரசிளங் குமரியாய் இளையாளாய் அதிஸௌந்தர்யவதியாய் விளங்கும் நீ, அரசிளங்குமரனாய், இளையவனாய், அதிஸுந்தரனாய் விளங்கும் ஓர் ராஜபுத்ரனைக் கணவனாக வரித்தலே மாண்பாம். அங்ஙனம் மணமுடிந்து கணவனுடன் வாழ்க்கையில் நீ அநவரதமும் கோபால தேவபூஜை செய்து கொண்டிரு. ‘இளங்கன்று பயமறியாது’ என்றபடி முன் பின் யோசியாமல், உன் மனம்போனபடி யெல்லாம் பேசவேண்டா. இந்தக் கிருஷ்ண விக்ரஹத்தால், உனக்கு இறையளவும் ஸௌக்யமுண்டாகாது. இந்த புத்தியை மாற்றி, எனது மதியே ஸம்மதியாய் நீ அங்கீகரிப்பையானால், ஸுகப்படுவை” எனக் கூற, அதற்கு மீராபாய், தந்தையை நோக்கி, “ஓ பிதாவே! அந்த பக்த வத்ஸலன், ஸத்ய விரதருக்காக, திருமங்கையாழ்வார் அருளிச்செய்தவாறு,

‘நிலையிடமெங் குமின்றி நெடுவெள்ள மும்பர்வள நாடுமூட இமையோர், தலைபிடமற் றெமக்கோர் சரணில்லையென்ன அரணாவனென்னு மருளால், அலைகடல் நீர்குழம்பவகடா டவோடியகல் வானுரிஞ்ச முதுகில், மலைகளை மீதுகொண்டு வருமீனை மாலைமறவா திறைஞ்சென் மனனே’ என்றபடி,

மச்ச உருவுந்தாங்கி, முனிவர்களுடன் அவரைப் $ பிரளயார்ணவத்திற் காத்து, அவர்க்கு முனிவர் பதத்தை அநுக்ரஹிக்க வில்லையா?

* வத்ஸலன் - அன்புள்ளவன். † சரண்யன் - காப்பவன்.
‡ தன்யன் - அதிஷ்டசாலி.
$ பிரளய + அர்ணவம் - பிரளய ஸமுத்திரம்.

‘செருமிகவா னெயிற்றவா வொன்றசுற் றித்திசை மண்ணும் விண்ணு முடனே, வெருவர வெள்ளை வெள்ளமுழுதுங் குழம்பவிமையோர்கணின்று கடையப், பருவரை யொன்றுநின்று முதுகிற் பரந்து சுழலக்கிடந்து துயிலும், அருவரையன்ன தன்மை யடலாமை யான திருமால் நமக்கோ ரரணே’ என்றபடி,

கூர்மமாய் மந்தரமலையை முதுகிற்றாங்கி தேவர்களுக்கமிர்தம் அளித்துக் காக்கவில்லையா ?

‘நீதறுதிங்கள் பொங்கு சுடரும் பரும்பருலகேழி னோடுமுடனே
மாதிரமண் சுமந்துவட குன்றுநின்ற மலையாறு மேழுகடலும்
பாதமர் சூழ்குளம்பி னகமண்டலத் தினொருபா லொடுங்க வளர்சேர்
ஆதிமுனே னமாகிய ரணையமூர்த்திய துநம்மையாளு மரசே’ என்றபடி,

வராகமாய், பிரளயோததியில் மூழ்கிய பூமியை * உத்தரிக்க வில்லையா ?

‘தளையவிழ் கோதைமாலை யிருபால் தயங்கவெரிகான் றிரண்டு தறுகண், அளவெழ வெம்மை மிக்க வரியாகி யன்றுபரியோன் சினங்களவிழ, வளையுகிராளி மொய்ம்பில் மறவோன தாகமதியாது சென்றொருகிரால், பிளவெழ விட்டகுட்ட மதுவைய மூடுபெரு நீரின் மும்மை பெரிதே’ என்றபடி;

பிரகலாதருடைய வார்த்தை உண்மையாக, நரசிம்மாவதாரமூர்த்தியாய், ஸபாஸ்தம்பத்திற் றோன்றித் தான் பக்திவலைபிற்படுவோ னென்பதை எல்லார்க்கும் தெளிவாய் விளக்கிக் காட்ட வில்லையா ?

‘வெந்திறல் வாணன்வேள்வியிட மெய்தியங்கோர் குறளாகி மெய்ம்மை யுணரச், செந்தொழில் வேதநாவின் முனியாகி வையமடி மூன்றிரந்து பெறினும், அந்தரமீதுபோகி மதிநின்றி றைஞ்சமலரோன் வணங்க வளர்சேர், அந்தரமேழினூடு செலவுய்த்த பாதமது நம்மையாளு மரசே’ என்றபடி,

அதிதி கர்ப்பத்தில் வாமனனாய் அவதரித்து, பிரமாதியர்களுக்கு † அகண்டாதி பத்யாதிகளை வழங்கும் வள்ளலாகிய தான், அன்பர்களைக் காக்கு நிமித்தம், ‡ யாசகனாய், மஹாபலிச் சக்ரவர்த்தியை மூவடி மண் இரந்து, திரிவிக்ரமனாய் மூவுலகினும் பரவி வளர்ந்தோங்கி, அவைகளைத் தேவேந்திரனுக்கு வழங்கி, உபேந்திரனெனப் பெயர் பெற வில்லையா?

‘இருநில மன்னர்தம்மை யிருநாலு மெட்டு மொருநாலு மொன்று முடனே, செருநுதலூடு போகி யவராவி மங்கமழுவாளில் வென்ற திறலோன், பெருநில மங்கைமன்னர் மலர்மங்கை நாதர்புல மங்கை கேள்வர் புகழ்சேர், பெருநிலமுண்டுமிழ்ந்த பெருவாய ராகியவர் நம்மையாள்வர் பெரிதே’ என்றபடி,

ஜமதக்னியின் திருக்குமாரனாய், துஷ்ட நிக்ரஹஞ் செய்து பூமியைக் காத்தளிக்க வில்லையா?

* உத்தரித்தல் - தாங்குதல்; காத்தல். † அகண்ட + அதிபத்யம் - அளவுபடாத முதன்மை. ‡ யாசகன் - பிறரை யிரப்பவன்.



‘இலைமலி பள்ளியெய்தி யிதுமாய மென்னவின மாயமானின் எழில்சேர், அலைமலி வேற்கணாளை யகல்விப்பதற்கோ ருருவாய மானை யமையாக், கொலைமலி வெய்திவித்த கொடியோ னிலங்கை பொடியாக வென்றி யமருள், சிலைமலி செஞ்சரங்கள் செலவுய்த்த நங்கள் திருமால் நமக்கோ ரரணே’ என்றபடி,

கோஸலை, ஸுமித்ரை, கைகேயியாகிய இந்த மூவர்களுடைய திருக்குமாரர்களாய் நான்கு திருவுருவங்களோடவதரித்து, இராமரூபத்தால் * ஸாமாந்ய தர்மத்தையும், லக்ஷ்மண ரூபத்தால் பகவச் சேஷத்வமாகிய விசேஷதர்மத்தையும், பரத ரூபத்தினால் ஈஶ்வர பாரதந்த்ரயமாகிய விசேஷ தர்மத்தையும், சத்ருக்ந ரூபத்தால் பாகவத பாரதந்த்ரயமாகிய விசேஷ தர்மத்தையும் விளக்கியருளி, சரணாகதி வைபவத்தை ஸாது ஜனங்களுக் கநுஷ்டித்துக் காட்டி, மாமுனிவர்களுக்கு இடுக்கண் விளைத்துவந்த ராவண ராவணாதியரைத் தொலைத்து, ஸ்ரீவிபீஷண † வ்யாஜத்தால் உலகத்தார்க்கு ‡ அபயப்ரதானம் அளிக்கவில்லையா ?

‘முன்னுலகங்க ளேழு மிருள்மண்டி யுண்ண முதலோடு வீடுமறியா, தென்னிது வந்த தென்று இமையோர் திகைப்ப எழில்வேத மின்றி மறைய, பின்னும் வானவர்க்கும் முனிவர்க்கும் நல்கி யிருள்தீர்ந்திவ்வைய மகிழ, அன்னம தாயிருந்தங் கறநூ லுரைத்த அது நம்மை யாளு மரசே’

‘துணைநிலை மற்றெமக்கோ ருளதென் றிராது தொழுமின்கள் தொண்டர் தலைய, உணமுலை முன்கொடுத்த வுரவாள தாவி யுக வுண்டு வெண்ணெய் மருவிப், பணைமுலை யாயர் மாதர் ருரலோடு கட்ட அதனோடு மோடி அடல்சேர், இணைமரு திற்று வீழ நடைகற்ற தெற்றல் வினைபற் றறுக்கும் விதியே’ என்றபடி,

யதுகுலத்தில், ஸ்ரீபலராம கிருஷ்ண ரூபங்களில் அவதரித்து, பூதன சகட, யமளார்ச்சுன, த்ரணாபர்த்த, காளிய, தேனுக அரிஷ்ட, ப்ரலம்ப, த்விவித, சாணூர முஷ்டிகாதி துஷ்ட வர்க்கங்களைத் தொலைத்து, பாண்டவ தூதனாய், பார்த்த ஸாரதியாய், இறந்தவர்களை எழுப்பியும், சரணாகதி யடைந்தவர்களைக் காத்தும், அர்ச்சுன வ்யாஜத்தால் பிரம்ம வித்தையாகிய கீதோப நிஷத்தை உலகத்தார்க் கநுக்ரஹித்து, தனதன்பர் அன்பை விளம்பரப் படுத்தவில்லையா? கலியுக முடிவில், வர்ணாச்ரம தர்மங்கள் கெட்டு, உத்தம நீதிகுன்றி § பாஷண்ட மயமாயிருக்கையில் ¶ கல்கியுருவங் தாங்கி, துஷ்டர்களைத் தொலைத்து, வர்ணாஶ்ரம தர்மங்களை நிலைநிறுத்தி க்ருதயுக தர்மம் விளங்கி நடைபெறச் செய்யவல்ல மஹாநுபாவன் இவனே யன்றோ?

* ஸாமந்ய தர்மம் - லௌகிகதர்மம். † வ்யாஜம் - காரணம்.
‡ அபயப்ரதானம் - அஞ்சன்மினென்னல்.
§ பாஷண்டம் - போலிமதம், போலிநீதி முதலியது.
¶ கல்கி - விஷ்ணுவின் ஹயக்ரீவ அவதாரம்.

அல்லதூஉம், இந்தக் கலிகாலத்தில் பீம நதிக்கரையில், ஸ்ரீபாண்டுரங்க மூர்த்தியாய் அர்ச்சாரூபியா யிருந்தும் நாமதேவர்க்கு ப்ரஸன்னனாய், அவரோடு ஸஹபந்தி போஜனம் செய்து, ஜனாபாயோடு பணிப்பெண்ணென ஊழியம் புரிந்து, ஸாமந்தருடைய இதய்முழையில் உலாப்போந்து, கூர்மதாஸர்க்கு வகுளாபுரத்தில் ஸேவை சாதித்து, சோக்கா பரமானந்தருடைய சரீர * கார்ஶ்யத்தை மாற்றி, ரோஹிதாஸருடைய பூஜையை அங்கீகரித்து, கோராகும்பாருடைய சிசுவைப் பிழைப்பித்து, அவர் வெட்டிக்கொண்ட கரத்தை முளைக்கச்செய்து, நரஹரிதாஸர்க்கு ஹரிஹராகாரத்தைக் காண்பித்து, சோக்காமேளருடைய வீட்டுக்குப்போய், அவரோடு ஒரே பரிகலத்தில் உண்டு, இன்னும் பல விதத்திலும் பாரதந்த்ரனாய்ப் பல திருவிளையாடல்களைப் புரிந்த தில்லையா? ராமதாஸர்க்காக, துவாரகையை விட்டு டாக்ரா என்னும் ஊர்க்குவந்து, துலாத்தட்டில் வீற்றிருந்து, அவருடைய மனைவியின் மூக்குத்திக்கு ஸரியெடையாய் விளங்கவில்லையா? மதுராபுரியிலிருந்து கலியாணதாஸர்க்கு ஸாக்ஷி சொல்வதற்காக ஹரித்வாரத்திற்கு நடந்து வரவில்லையா? அப்படிப்பட்ட நமது கோபால மூர்த்தி எனது மனோரதத்தை நிறைவேற்றுமற் போவானா? நீர் கொஞ்சமேனும் ஐயமின்றி என்னை யவர்க்குத் தத்தஞ் செய்யக்கடவீர்'' என்று கூறினார். அதற்கு அவ்வம்மையாருடைய தந்தையாகிய அரசன் மிகவும் ஆச்சரியமடைந்து, "இந்தக் குழந்தை, சாஸ்த்ர சிரவணஞ் செய்தறியாள்; ஞான நெறியிற் படர்ந்து முக்தர்களைப் போலப் பேசுகின்றனள். இவளுடைய முற்பிறப்பின் பரிபாகம் எப்படிப்பட்டதோ! இவள் விஷயத்தில் நமது கோபாலதேவன் என்ன நினைந்திருக்கின்றானோ நானறியேன்! ஆயினும் குணவதியாகிய இந்தக் குழந்தையை வற்புறுத்தாமல், இவளுடைய இச்சையின்படி நிறைவேற்ற நான் கடமைப்பட்டிருக்கின்றேன்'' என்று, தனது மனத்தகத்தில் நிச்சயித்து, தான் ஆராதித்துக்கொண்டிருந்த கோபாலமூர்த்தியை மீராபாயின் கரத்திற் கொடுத்து, "தாயே! நீ கோரின வரனை உனது திருக்கரத்திற் கொடுத்துவிட்டேன். நீ இவனுடன் உனதிஷ்டம்போற் கூடியிருந்து இன்பமுறக் கடவை'' என்று கூறினான்.

மீராபாய் ஆனந்த மிக்கவராய், அநவரதமும் கோபால மூர்த்திக்கு விதவிதமான அலங்காரங்களும் உபசாரங்களும் செய்து, நல்ல பக்ஷணங்களுடன் பரமான்னங்களைப் படைத்து, அவரருகி லிருந்து வீணாகானத்துடன் பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்து, பகவானுடைய முகமும் அகமும் களிப்பெய்த, ஸாதுக்களை ஆராதித்துக்கொண்டு, இவ்வாறு தினந்தோறும் இந்தக் காரியங்களில் ஒன்றையும் தவறாமல் நிறைவேற்றிக் கடைமுறையாக, பகவத் பாகவத சேஷத்தை உட்கொண்டு, பிறகு ஸாது கோஷ்டியிலிருந்து ஸ்ரீபாகவத புராண சிரவணஞ்செய்து காலங் கழித்துக்கொண்டிருந்தார். பொறாமைக்

* கார்ச்யம் - சரீரமெலிவு.



குணமுடையாரிற் சிலர், மங்கைப்பருவமுடைய அரசிளங் குமரிக்குப் புருஷர்களுடைய கூட்டுறவு அவமானத்துக்கிடமாம்'' என்றும், "அரசற்குப் பெரும்பழி விளைப்பதாம்'' என்றும், அரசன் செவியில் நுழையும்படி கூறுவாராயினர். அதுகேட்ட அரசன் விசனமுற்றவனாய், தனது மனைவியை நோக்கி, "மீராபாய் நமக்கு மிகுந்த அபகீர்த்தியை உண்டாக்குகின்றனள். துர்மார்க்கர்களுடைய கடின வார்த்தைகளைக் கேட்பதற்கு எனக்கு மிக வருத்தமா யிருக்கின்றது; நான் எத்தனை இதவசனங்களைக் கூறினாலும் அவள் எனது வார்த்தைகளைக் கேட்டு அதன்படி நடவாமல், தன்மனம் போனவாறெல்லாம் போகின்றாள். நீயானாலும் நமது புதல்விக்கு இதோபதேசம் செய்து, கலியாணத்திற் காதலுண்டாக்கக் கடவை'' என்று கூறினான். அவ்வரசி, தனது அரும் புதல்வியை நோக்கி, "தாயே! எனது வார்த்தைகளைக்கேட்டு, அதன் படியே ஓரரசிளங்குமரனை வரிக்கக்கடவை. நீ அங்ஙனம் செய்யாயேல், பாலேபோலப் பரிசுத்தமான நமது குலத்துக்கு உன் மூலமாய் நிந்தையுண்டாகும். பெண்ணாய்ப் பிறந்த ஓராத்மா, தனக்குத் தக்க வரனை மணந்து, குடித்தனம் செய்யவேண்டும். அங்ஙனம் செய்ய மனமில்லையேல் மரணம் அடையவேண்டும். எனது வார்த்தைகளைக் கடவாமல் எனது வேண்டுகோளை அங்கீகரிக்கக் கடவை'' என்று கூறக்கேட்டு, மீராபாய், "தாயே! நான் நமது கோபாலதேவற்குத் தத்தஞ்செய்யப் பட்டு அவனுடைமையா யிருக்கின்றேன். ஈன்றாளாகிய நீ, என்னைப் பரபுருஷ கமனஞ் செய்விப்பதற்கு எங்ஙனம் மனம் ஒப்புவை! இத்தகைய நடத்தை பகையாளிக்கும் தகுந்ததல்ல. தாயாகிய நீ, இறையளவும் கூச்சமின்றித் துர்நீதி கற்பிக்கின்றனை! உனது உபதேசம் போதும். உனது வழியைப் பார்த்துக்கொண்டு நட,'' என்று கூறக் கேட்ட அரசி, தனது புதல்வியின் வார்த்தைகளை அரசனுக்கு விண்ணப் பித்தாள். அரசன் மிகவுந் துக்கித்து, "ஓ பெண்ணே! நமது கட்டளைக் கடங்காத சிறுமியை வீட்டிலிருத்திக்கொண்டு அவமானம் அடைவதைவிட, அவளை தக்க சூழ்ச்சியாற் கொன்று, உலக நிந்தையற்று வாழ்தல் உத்தமம்' எனக்கூறி, அவள் கரத்தில் விஷத்தைக்கொடுத்து, இதனை எவ்விதத்திலாயினும் நீ, உனது மகளுக்குக் கொடுத்து அவளை யமலோகஞ் சேர்ப்பிக்கவேண்டும்'' என்று, நியமித்தனுப்பினன். அந்த அரசன்மனைவி தனது கணவன் நியமனத்தைக் கடக்கக்கூடாதவளாய், தன் மகளிடத்திற்போய் ஒன்றுஞ் செய்யத் தோற்றாதபடியால் அழுது கொண்டிருந்தாள். மீராபாய் தமது இன்னுரைகளால் தாயின் துக்கத்தை மாற்றி, அவள் மூலமாய்த் தமது பிதாவின் கட்டளையை யுணர்ந்து, 'ஓ அன்னாய்! சோகமுறவேண்டா; கற்புடைய உத்தமஸ்திரி கணவன் கட்டுரையைக் கடக்கப்படாது. ஆகையால், எனது தந்தை அளித்த விஷத்தை என் வாயில் ஊற்று. அகிலாத்மகனான எனது ப்ராணநாதன், இந்த விஷத்தில் மாத்திரம் நிறைந்து விளங்காமல் இருக்கின்றானா! அவனது நிறைவோடு கூடின ஸர்வ பதார்த்தங்களும் அவன் வடிவங்க

ளாகவேயிருக்க, நாம் எதற்கும் அஞ்சவேண்டிய அவசியம் இல்லை. கிருஷ்ணாமிர்தத்தை விஷமென மயங்கினை.

'கீல்கள் தளர்ந்து கிலமாஞ் சரீரம்
என்றைக் கிருப்பினும் இறந்து படுமால்
இதற்கிதஞ் செய்புமென் றெண்ணு மருந்தாம்
குளிகை மாத்திரை கோதறு பஸ்மம்
லேகியஞ் சூரணம் ஆகிய வனைத்தினும்
கிருஷ்ண ரஸாயன க்ருதமே ஊழ்வினை
உஷ்ணந் தவிர்க்கு மொப்பிலா
உத்தம மருந்தென உணர்தியென் மனனே'

இந்தச் சரீரம் கீல்களெல்லாம் தளர்ந்து மூத்து இறந்து போவது நிச்சயம். இதனுடைய ஸௌகத்துக்காக குளிகையென்றும், மாத்திரை என்றும், பஸ்மம் என்றும், லேகியம் என்றும் பற்பல மருந்துண்டு பிழைக்கும் வழியறியாமல் சிரமப்படுவதைப் பார்க்கிலும், பவநோய் தீர்க்கும் கிருஷ்ண ரஸாயன க்ருதத்தை உண்டு பிழைத்து, சாசுவத இன்பத்தைக் கண்டு வாழ்தல் சிரேஷ்டமாம்'' என்று கூறித் தாயார் கையிலிருந்த விஷத்தை வாங்கித் தமது கையில் வைத்துக்கொண்டு, ''ஓ அன்னாய்! நான் ஸ்ரீகிருஷ்ண திவ்யௌஷதத்தை உட்கொண்டு, பவவலையின் கட்டற நிற்பன். விஷஹரனாகிய ஜகந்நாதன், எனது இதயாலயத்தில் வாழ்ந்துகொண்டிருக்க, இவ்விஷத்தால் எனக்குக் கெடுதி யுண்டாகாது. அஞ்ஞானிகளாகிய உங்களுக்கு, இது விஷமாகத் தோற்றுகின்றதே யன்றி, ஸ்ரீ கோபால தேவனால் அங்கீகரிக்கப்பட்டவளாய் அவனுடைய திருவருட் பிரஸாதம் கிடைக்கப்பெற்றவளாயுள்ள நான், அந்த பகவானுடைய மகத்வத்தால் இந்த விஷத்தை அமிர்தமாகக் காண்கின்றேன்'' என்று விளங்க வுரைத்து, தனது மனதை நோக்கி,

'காமப் பிணியை கருக்கு மருந்து
முனிவர் மனத்தினி லினிக்கு மருந்து
வெறுக்கு மரக்கரைக் கறுக்கு மருந்து
மூன்றுல குக்கும் முக்ய மருந்து
பக்தருக் கின்பம் பயக்கு மருந்து
குடும்பப் பித்தைக் குலைக்கு மருந்து
பரம பதத்தைப் பயக்கு மருந்து
கிருஷ்ண மருந்து கிடைத்தற் கரிதாம்
உத்தம மருந்திதை உட்கொளென் மனனே'

''காமநோயைப் பஸ்மீகரப்படுத்து மருந்து, முனிவர் மனத்தில் இனிக்கு மருந்து, பகைக்கும் இராக்கதரைக் கோபித்துக் கொல்லும் மருந்து, மூன்றுலகத்தாரும் பிழைத்தற்குரிய அரிய பெரிய கரிய மருந்து, பக்தருக்கு இன்பந்தரும் பாக்ய மருந்து, ஸம்ஸாரப் பித்த நோயைத் தீர்க்கவல்ல பீடுடைய மருந்து, பரமபத நிலையில் உய்க்கும் மருந்து,



கிடைத்தற்கரிய ஸ்ரீகிருஷ்ண திவ்யமருந்து: ஓ நெஞ்சமே! நீ இதை உட்கொள்ளக்கடவாய்'' எனக்கூறி, அந்த விஷாமிர்தத்தைப் பானம் பண்ணினர். அப்போது அவ்விஷாமிர்தம், மீராபாயை ஒன்றுஞ் செய்யாமல், ஸ்ரீவேணுகோபாலதேவ விக்ரஹ மங்களத் திருவுருவில் வியாபித்து, ஸ்வர்ண மயமான அந்த தேவனுடைய தேக முழுவதும் கன்னங்கறேல் எனக் கரிமயமாய்விட்டது. அரசனும் அவன் மனைவியும், அங்கிருந்த ஸாதுக்களனைவரும் இவ்வற்புதத்தைக் கண்டு, மிகவும் அதிசய மடைந்தார்கள். அரசன், தான் செய்த குற்றத்திற்காக, மீராபாயை நோக்கி, ''தாயே! தேவர்களுக்கு அமுதமருளிக் காத்த அமல நாயகனுக்கு, நான் விஷங்கொடுத்துக் கெட்டேனே! அந்தோ! என் செய்வேன்! இவ்வமலனைகிப்பிரான், உனக்குள்ளே நிறைந்து மறைந்து விளங்கியிருந்து, நானனுப்பின விஷத்தைத் தான் நுகர்ந்து உன்னைக் காத்தருளினன்! ஆஹா! அவனது பக்த பாரதந்த்ரியம் இருந்தவாறென்னே! என்னே! இந்த புருஷோத்தமனுடைய புண்யத் திருமேனி முன்போலவே, ஸ்வர்ணமயமாய் ப்ரகாசிக்குமாறு, என்மேற் கருணைகூர்ந்து பிரார்த்திக்கக்கடவாய்; அம்மணீ!'' எனவேண்டினன். தந்தை வார்த்தையைக்கேட்ட தநயை, கோபாலதேவனை வியந்து நயந்து பயந்து நோக்கி, ''ஓ, பிராணநாயகா! விஷதாரிகளான நாகங்களில் முதன்மைத் தன்மையை வகித்த ஆதிசேஷன்மேற் பள்ளிகொண்டுள்ள நினக்கு, விஷம் வேதனை தரவல்லதல்ல. நின்னிடத்திற் காதல் பூண்ட என்னிடத்தில் நினக்குள்ள அன்பின் மிகுதியை இந்த அவனியோர் அனைவர்க்கும் உள்ளங்கைநெல்லிக்கனியேபோல விளக்கிக்காட்டுமாறு, எனக்குள் நிறைந்தகலாமலிருந்து தான் பானம் பண்ணின விஷாமிர்தத்தை நீ ஏற்றுக்கொண்டருளி, நினது காஞ்சனத் திருமேனியைக் கருமேனியாக்கிக்கொண்டு, அரியன் பெரியன் கரியன் என்னும் நினது ஆயிரந் திருநாமங்களிற் கரியன் என்னும் அரியநாமத்தை உனக்கு உரிய நாமமாக்கிக் கொண்டனை! எனக்காக, எனது பிதாவை மன்னித்தருளி இங்குள்ள ஸாது ஜனங்களின் உள்ளம் உவப்பெய்த, எப்போதும் போல நினது திருமேனி தங்கத் திருமேனியாக எமக்குக் காட்சி தந்தருள் வேண்டும்'' என்று வேண்டி வரங்கிடப்ப, காதலியின் சீதமொழியைத் தேமொழியாகக்கொண்ட கோபாலமூர்த்தி முன்போலவே காட்சியளித்து, தனது கழுத்தில் மாத்திரம் கறுப்படையாளங் கொண்டு விளங்கியிருந்தனன். அரசன் உளமகிழ்ந்து, மகளுக்கும் மருகற்கும், விலையில்லாப் பட்டு வஸ்த்ராபரணாதிகளை வழங்கி, அபராத மன்னிப்புக் கேட்டுக்கொண்டு தனது அரண்மனைக்குச் சென்றனன். மீராபாயம்மையார் விஷயத்தில் குற்றங் கூறி நிந்தித்த பேதையர், தாமே நாணி வருந்தி பகவானைச் சரண்புகுந்து * முமுக்ஷுக்களானார்கள். கோபாலதேவன், தனது திவ்யத் திருவுருவக் காட்சியின் மாட்சியால், தனது காதலியாராகிய மீராபாயம்மையாரைக் களிப்பித்து, அந்தப்புரத்தில் அமர்ந்து வாழ்ந்திருந்து, அவ்வம்மையார்க்குத்

* முமுக்ஷுக்கள் - முக்தி விருப்பமுள்ளவர்கள்.

தனதுத்தம ஸாயுஜ்ய பதவியை வழங்கினன். மீராபாய்க்கு ஆத்மநாதனாகிய கோபாலதேவன், இன்றளவும் உதயபுரத்தில் எழுந்தருளி விளங்கி யிருக்கின்றனன்; தீர்த்தயாத்ரை செய்யும் புண்ணியர்கள் அந்த தேவனை தரிசித்து மகிழ்ந்து கண்ணியர்களாய் வாழ்கின்றார்கள்.

ஸ்ரீகோபால சூடாமணயே நம:

## நாற்பத்தெட்டாம் அத்தியாயம்

# காநோபாத்ரி சரித்திரம்

ஸ்ரீமத் பண்டரிபுரத்திற்குத் தெற்கே, மங்கள கட்டம் என்னும் கிராமத்தில் சியாமை என்னும் விலைமாது ஒருத்திக்கு, காநோபாத்ரி என்னும் பெண்மணி மகவாய் உதித்தனர். இந்த காநோபாத்ரி, அழகில் ஊர்வசி, ரம்பை, திலோத்தமை, மேநகை முதலியோரினும் மேம்பட்டு விளங்கினர்; பகவத்பக்தியில் ப்ரஹ்லாதற்கும், வீணாகானத்தில் நாரதற்கும், நாட்டியத்தில் சித்ரரதன் என்னும் கந்தர்வனுக்கும், நற்குணவிளக்கத்தில் ஸாவித்ரிக்கும் ஸமமாய் வாழ்ந்தனர். சியாமை, தனது அருமந்தமகளை அரசற்களித்து அவனது அபிமானத்தை அடையவேண்டுமென்று ஆசையுற்றிருந்தனள். அதை அறிந்த காநோபாத்ரியம்மையார், தமது தாயை நோக்கி, "ஓ, அம்மா! இந்த நிலவுலகில் இன்பமென்பதேது? ஒவ்வொரு பொருளும் துன்பத்தையே விளைக்கின்றது. அவ்வப் பொருளும் அதனதன் உடையானாகிய சேதனனுடைய கர்மாநுகுணத்தின்படி இன்பந் தருவதாகவும் துன்பந்தருவதாகவும் தோற்றுகின்றதன்றித் தத்வ விசாரணைசெய்து பார்த்தால், இன்பமேனுந் துன்பமேனும் அவ்வப் பொருளிற் கிடையாது. எங்ஙனமெனின், ஒருவற்கு இன்பந்தரும்பொருள் அதேகாலத்தில் மற்றொருவற்குத் துன்பந் தருவதாயிருக்கின்றது. ஒருவற்கு ஒரு காலத்தில் இன்பந் தந்த பொருள் மற்றொரு காலத்தில் அவனுக்கே துன்பந் தருவதாயிருக்கின்றது. பசித்தவர்க்குப் பயன்படும் அன்னம், அஜீர்ணமுற்றவற்குத் துன்பந்தருவதா யிருக்கின்றது. ஒருவற்குச் சீதளகாலத்தில இன்பந் தருவதாயுள்ள கம்பளச்சட்டை, அவற்கே, கோடைகாலத்தில் துன்பந்தருவதா யிருக்கின்றது. இது இங்ஙனம் இருக்க, ஆடவர்க்கும் மகளிர்க்கும் ஒருவர்க் கொருவர் உடலின் சேர்க்கை இன்பமாய்த் தோன்றும். ஆடவரால் விரும்பப்பட்டிருந்த மகளிரும், மகளிரால் விரும்பப்பட்டிருந்த ஆடவர்களும், வயதான் மூத்துத் தத்தம் உடல்கள் நரை திரை மூடை நாற்றத்தான் மலிந்திருக்கிற காலத்தில், ஒருவர்க் கொருவர் உடலின் சேர்க்கை, கேவலம் அருவருப்பாயிருக்கும். மாந்தர் சரீரங்கள், மாதாக்கள் கர்ப்பங்களிற் பொருந்தலும், பிறத்தலும், வளர்தலும், பருத்தலும், வாடுதலும், மடிதலுமாகிய ஆறுவித மாறுதல்களோடு கூடியிருப்பன ஆகையால், எப்போதும் ஒரு



விதமாய் இரா. நான் அதிரூபவதி யென்றும், என்னை அரசற் களிப்பதால் உனக்கு அவனுடைய நன்கு மதிப்புக் கிடைக்குமென்றும் எண்ணி யிருக்கின்றனை. எனது வனப்பு எத்தனைநாட்கள் நிலைத்திருக்கும்? உலகத்தில் காமுகர்களால் விரும்பப்பெற்ற வடிவுடை வனிதையர், மூப்பாலும் பிணியாலும் தமது வனப்பின் விளக்கம் குன்றியகாலத்தில், அந்தக் காமுகர்களால் அருவருக்கப்பெற்று, உடுக்க உடை, படுக்கப் பாய் முதலியவைகள் அற்றுக் கலக்கமுற்று நிற்பதை நீ, கண்டும் பிறர்சொல்லக்கேட்டும் அறியாயா? நான், அறியாச் சிறுமியாயினும், எனது இதயாரவிந்த வாஸியாகிய பகவானுடைய கடாக்ஷத்தால், நான் அறிந்தவரையில் எனக்குப் புலப்பட்ட உண்மையை உனக்குச் சொல்லுவன் கேட்பாயாக:

'மலமலி பாண்டம் மானிட தேகம்
புழுக்கள் நிறைந்த புன்புலாற் குரம்பை
கழிமுடை நாற்றக் கடாரம் மிகவும்
அருவருப் புடனே அத்திர மானது
மூத்திரக் குண்டிகை மூடர்
களிப்பது பண்டிதர் சுளிப்பது தானே'

இந்தச் சரீரம் * அமேத்யம் நிறைந்த பாத்திரம்; புழுக்குழுக்கள் நிறைந்த இறைச்சியால் வேய்ந்த சிறுவீடு; மிக்க துர்நாற்றம் அடைத்து வைத்த கடாரம்; சுத்தமற்றதனால் அருவருப்புற்றது, நிலையற்றது, மூத்திரக் குடுக்கை போன்றது. இதனை மூடரே புகழ்ந்து விரும்புவார்கள்; பண்டிதர் இகழ்ந்து வெறுப்பார்கள். ஆயுள், அறிவு, வன்மை, நன்மை முதலிய வுண்டாக்கி, நாவுக்கு ருசி தருவனவாய் இனியவையாய், அறுசுவையோடு கூடினவையாய், நெய்யிலேயே சமைக்கப்பட்டவையாய், கெடாமற் பொருந்தினவையாயுள்ள பதார்த்தங்கள், மனிதர்களால் உண்ணப்பட்டு, இவர்கள் சரீர ஸம்பந்தப்பட்ட ஒரு ஜாம மாத்திரையிலேயே ஜீர்ணமாய், காணவுந் தொடவும் பேசவும் அருவருப்புடையனவாய் மலமாய் மாறுகின்றன. நரர்கள், தமது சரீர துர்நாற்றமாற்றத்துக்காக மிக்கமென்மையான சந்தன புஷ்பதாம்பூலாதிகளைத் தரித்துக் கொண்ட கொஞ்ச நேரத்துக்குள்ளே, இவர்களுடைய உமிழ்நீர் வேர்வை முதலியவைகளின் கூட்டுறவால், அந்தச் சந்தனாதிகள் பிறர்க்குப் பொறுக்க முடியாத இழிவடைகின்றன. ஆகையால் புத்திசாலிகள்,

'கண்டமாத் திரையிற் காதல் விளைக்கும்
காரிகை யார்களின் கதித்தமார் பகமும்
உந்தியே முதலாம் அந்த ரங்க
இடங்களும் எல்லாம் இறைச்சி நிணங்குடர்
முதலிய தாழ்ந்த வுதவியில் பொருள்களே
நிறைந்தன வாகி நினைக்கவு நோக்கவும்

* அமேத்யம் - மலம்.

அருவருப் புடையவாய் அமருந் தன்மையைக்
கண்டவொருவன் கருத்தில் என்றும்
மறவா தமைத்து மதியுடன்
வாழமற் றவைகளில் வீழவேண்டாவே'

கண்டளவிலேயே ஆடவர்க்குக் காதல் விளைக்கக்கூடிய மகளிர்களுடைய மார்பகமும் உந்தி முதலிய மர்மஸ்தானங்களும், ஊன் கொழுப்பு குடர் முதலிய உதவியற்ற பொருள்களே நிரம்பப்பெற்று, நினைக்கவும் நோக்கவும் அருவருப்புடையனவாய்ப் பொருந்தியுள்ள விதத்தை ஒருகால் கண்டவொருவன், அதை மறவாமல் இருந்து மறுபடியும் அவைகளை இச்சித்து அவைகளில் மதிமயங்கி வீழாமல் ஜாக்ரதையாய் மதிவானாய் வாழவேண்டும். ஒருவற்கு இத்தகைய நிலையான புத்தி உண்டாகுமானால், இந்த இழி பொருள்கள் இன்பந்தருபவையாய்த் தோற்றுவாம்.

'சரீரம் புண்ணெனத் தகுந்தகுந் தகுமால்
புருட வுடலிற் புண்ணொன் றிருந்தால்
அதனை அவர்கள் அருவருத் தகத்திற்
சூழ்ச்சி செய்து தாழ்ச்சி யின்றிப்
போக்குந் தொழிலை ஆக்கும் விதம்போல்
ஆத்துமந் தனக்கிங் கருவருப் புளதாய்ப்
புண்ணுரு வான பெண்ணி னுடலைப்
புத்தி மானாய்ப் பொருந்தி யுள்ளவன்
வெறுப்புட னகற்றி விட்டிதன்
இறப்பை யெதிர்பார்த் திருப்ப னன்றே'

ஓ, அன்னாய்! சரீரம் புண்ணெனத் தகும்; இது முக்காலும் உண்மையாகும். புருஷர்கள், தமது சரீரத்திற் புண்ணொன்றிருந்தால் அதனை வெறுத்துத் தமது மனத்தகத்தில் தக்கபடி யோசித்து, கொஞ்சமேனுந் தாழ்க்காமல் ஆற்றுந் தொழிலைத் தேடும் தன்மைபோல, ஆத்மாவுக்கு அருவருப்புள்ளதாய் புண்ணுருவாயுள்ள பெண்களின் ஆண்களின் உடலங்களை மதிவானாயுள்ளவன் வெறுத்து நீக்கிவிட்டு, இதன் அழிவு காலத்தை எதிர்நோக்கி யிருப்பன்,

'இத்தகை யினவாம் இழிந்த குணங்கள்
மிடைந்த வுடலை விலையிலா நகைகளால்
சந்தன புஷ்ப தாம்பூ லங்களால்
அலங்கரித் ததனால் ஆனந்தப் படுவோர்
புண்ணிலங் கரிக்கும் பூரிய ராமால்
பசிக்கு விரும்பிப் புசிக்கு மன்னம்
கட்டிக் கரைத்துக் கட்டுஞ் சோறென
எண்ண வேண்டும்; இத்தகை யன்னம்
புசிக்க இன்பமாய் ருசிக்க வேண்டும்
என்று கருதுத விரணத் தின்மேற்



பூசும் அன்னம் புத்து ருக்குநெய்
சேர்த்துச் சமையல் செய்த தாக
வேண்டு மென்று விரும்பல் போலாம்
தாக நிவர்த்தித் தண்ணீ ரதனைப்
புண்ணைக் கழுவுந் தண்ணீ ரென்ன
எண்ண வேண்டும் இதனை வெட்டிவேர்
முதலிய நறுமண முயங்கி யிருக்க
எண்ணுவார் தமது புண்ணைக் கழுவும்
புனலு நறுமணம் பொருந்தி யிருக்க
வேண்டு மென்ன விரும்பல் போலாம்
மானங் காக்கும் வஸ்திரம் தன்னைப்
புண்ணை மூடப் புனையுந் துணியெனப்
பாவனை செய்தல் பான்மை யாமால்
நிர்வா ணிகளாய் நிலைக்கண் ணாடிகளில்
மாந்தர் தமது வடிவங் களைக்கண்
டருவருப் படைகுவ ரன்றி மகிழ்பவர்
ஆரு மிலையாம் ஆதலா லவர்கள்
உடல்களின் விகாரம் ஒருவருங் காணா
விதஞ்செயு மாறும் மிக்கதுர்க் கந்தப்
புண்களை மூடிப் பொலியு மாறும்
ஆடைக ளாலே மூடியுஞ் சுற்றியும்
வைத்து வாழும் வழக்க முளதால்
இத்தகை இழிந்த வத்திரம் இழிந்த
தாயினும் ஆகமற் றன்றித்தைத்த
தாயினும் ஆகவென் றுமற் சரிகையும்
பட்டு நூலும் பருத்தியு மாக
வேண்டுமென் றெண்ணுதல் மிகவும் அளிந்த
புண்ணை மூடும் புடைவை
சரிகையா விரும்புந் தன்மை யாமே'.

இத்தகைய இழிந்த குணங்கள் பொருந்திய உடலை விலையில்லா நகைகளாலும் சந்தன புஷ்ப தாம்பூலங்களாலும் அலங்கரித்து அதனாற் களிப்புறுவோர்கள், புண்ணைச் சிங்காரிக்கும் மூடர்களே ஆவார்கள். பசியை நீக்கவிரும்பிப் புசிக்கும் அன்னம், கட்டிக்கு அரைத்துக் கட்டுஞ் சோறென்று கருதவேண்டும்; இத்தகை அன்னம் புசிக்க இன்பமாய் ருசியாய் இருக்கவேண்டுமென்று எண்ணுதல், ரணத்தின்மேல் இடவும் அன்னம் புதிதாய் உருக்கிய நெய்சேர்த்து மதுரமாய்ச் சமைக்கப்பட்டிருக்க வேண்டுமென்று விரும்புவதுபோலாம். தாகந் தணியக் குடிக்குந் தண்ணீர், புண்ணைக்கழுவு நீராக மதிக்கப்படவேண்டும்; இதனை, விலாமிச்சவேர் முதலிய நல்லவாசனைப் பொருள்கள் சேர்ந்திருக்க விரும்புவோர், தமது புண்ணைக்கழுவு நீரும்

நல்ல வாசனையுடைய நீராக வேண்டும் என்பதுபோலாம். மானத்தைக் காப்பாற்றும் நறுமண ஆடையைப் புண்ணை மூடும் துணியெனப் பாவிக்கவேண்டும்; நிர்வாணிகளாய் மாந்தர்கள், நிலைக்கண்ணாடிகளில் தங்களுடைய உடலின் உருவத்தைக் கண்டால், அதனை அருவருத்து நோக்குவார்களன்றி மகிழ்பவர்கள் யாரும் இலர். ஆகையால் அவர்களுடைய உடல்களின் விகாரங்களை ஒருவரும் காணாமற் செய்யும்படியும் மிக்கமுடை நாற்றப் புண்களை மூடி வைக்கும்படியும், அவர்கள் அவைகளை ஆடைகளாலே மூடியும் சுற்றியும் வைத்து வாழ்கின்ற வழக்கமுடையவர்களா யிருக்கின்றார்கள். "இத்தகைய இழிவான புடைவை, கிழிந்ததானாலும் ஆகுக; தைத்ததானாலும் ஆகுக; மற்றெதுவானாலும் ஆகுக" என்றெண்ணிப் பொறுமையுறாமல், பட்டுநூலானாலும் பருத்தி நூலானாலும் நெய்த அழகான புடைவைகளே வேண்டுமென்றெண்ணல், அளிந்த புண்ணை மூடும் புடைவை புதுப்பட்டுச் சரிகைப் புடைவையாகவே இருக்கவேண்டும் என்றெண்ணுவதுபோலாம். ஓ, அம்மா! நன்றாய் நிதானித்து நினைத்துப் பார். தமது ஆத்மஸ்வரூபத்தை நன்றாயறியாதவர்களும், அறிந்தாலும் பகவத் விஷயத்தில் சரணாகதி யடைந்தவர்களாய் அவனுடைய தாமரைப்பாதங்களைத் தமதிதயத்திற் பொருந்த வைத்தவர்களாய், ஞான வைராக்யமுடையவர்களாய், மஹான்களாயில்லாமல்,

> 'அந்தகனைத் தன்ன தருவிருந்தாக் காத்திருப்பன்
> நிந்தையற்ற ஞானி நிதம்'

என்றபடி,

யமனை, அரிய விருந்தாளியாக எதிர்நோக்கியிருத்தல், இவ்வாத்மாவுக்கு உகந்ததாயிருக்க அங்ஙனஞ் செய்யாதவர்களாய்,

> 'தாமரைத் தண்ணீர்தத் தளிக்கும் விதம்போலப்
> பூமிசைநாம் வாழ்விற் பொருந்துகின்றோம்—காமுறாஉம்
> எல்லாப் பொருளானும் எள்ளளவும் இன்பமில்லை
> எல்லாப் படியானும் இங்கு'

என்றபடி,

தாமரையிலையிற் றண்ணீர்போல, இவ்வுலக வாழ்க்கை மிகவும் சஞ்சலமுற்றதென்றும் உலகத்தில் மாந்தர் விரும்பும் எல்லாப் பொருளானும் எள்ளளவும் இன்பமில்லை யென்றும் இறையளவும் எண்ணாமல், நீர்க்குமிழிபோன்ற சரீரம் நிலையென மருண்டு,

> 'நானே பரமேசன் நானே சற்புருஷன்
> நானே முதல்வனென நாட்டு'

என்றபடி,

தாமே பரம்பொருள் என்றும், நாமே சற்புருஷர்கள் என்றும், தமக்குமேல் தலைவன் இலன் என்றும் எண்ணிக் கொண்டு, கர்வமுடையவர்களாய், சாஸ்த்ர நிந்தைகூறி, நாஸ்திகப் பேயர்களாய், அரிய காலத்தை உரிய சீலமின்றி நோன்பின்றி வீண்போக்கி, தற்புகழ்ச்சி பிறன்பழி பிறன்தாழ்வு பிறன்வருத்தம் முதலியவைகளிற் களித்து, அவைகளுக்குதவி செய்கின்றவர்களாய், பெற்றதாய் தந்தை அதிதி



குரு முதலியோரை ஈஸ்வர ஸ்வரூபங்களென்றெண்ணாமல் அவர்களை நிந்தித்துத் தாழ்த்தி, யமமஹிஷ கண்டகண்டாமணி நாத சிரவணத்தில் மனங் களிப்புடையவர்களா யுள்ளவர்களும் ஆகிய அற்பமாந்தரைச் சேர்ந்து வாழ்வதற்கு எனக் கிறையளவும் இஷ்டம் இல்லை. ஆனாலும், அம்மணீ! கொஞ்சம் பொறுத்திரு; எனக்குத் தக்க வரனை, நானே தேடிக்கொண்டு அன்பு செய்கின்றேன்" என விளங்க விரித்துரைத்தார். தனது புதல்வியின் அருமந்தசொற்களின் ஆழ்ந்த பொருளாகிய தேனை வாயாற் பருகி மனங் கூம்பிக் களித்த வண்டென விளங்கிய சியாமை, ஒன்றும்பேச நாவெழாமல் மோன முத்திரையிட்டுத் தனது வாய்ப்பெட்டகத்தின் கதவுகளாகிய உதடுகளை அசைக்காது இருந்தனள்.

இங்ஙனம் இருக்க, ஸ்ரீபண்டரீபுரத்தில் ஆடிமாதத்தில் சுக்லபக்ஷத் தேகாதசி மஹோற்சவத்திற்காக, ஸாது ஜனங்கள் ஒன்றுகூடி கொடிக்கையர்களாகி, கரதாளங்கள் போட்டு, ஸ்ரீ பாண்டுரங்கனுடைய கல்யாண குணங்களைப் பாடி ஆனந்தமிக்கவர்களாய், மெய்மறந்து நிருத்தஞ்செய்து, தாம் வாழும் வீதிவழியாய்ப் போய்க்கொண்டிருக்கையில், கர்நோபாத்ரி அம்மையார், அவர்களைப் பார்த்து, அவர்களுடைய கோஷ்டிக்குக் குறுக்கே வந்து வந்தனஞ்செய்து மிக வணங்கி நின்று, சென்னியிற் கூப்பிய கரங்களை உடையவராய் பின்வருமாறு விண்ணப்பம் செய்தனர்:—

"ஓ மஹான்காள்! நீவிர், எங்கிருந்தெதற்காக எங்குச் செல்கின்றீர்கள்?

> 'மரமொன்று தான்வளரும் மண்ணின் நிலைமைச்
> சிரமொன்றிற் காட்டுந் திறம்போல்—வரமொன்றும்
> தன்னகத்தைச் சார்ந்து சநாதனன்வாழ் தன்மைதனைத்
> தன்னுருவிற் காட்டுவான் சாது'

'ஓ, பெரியோர்காள்! தான் வளரும் மண்ணின் வளத்தை தனது தலையாற்காட்டும் மரமேபோல, ஸாதுபுருஷன் ஒருவன் தன்னகத்தில் ஸநாதனன் வாழ் தன்மைதனைத் தனது *ஸௌம்ய வடிவத்தால் விளக்கிக்காட்டுவன்' என்று யமதர்மராஜன் தனது தூதர்களுக்குச் சொல்லிய வைணவ இலக்கணம் உம்மிடத்தில் பூரணமாய் விளங்கி யிருக்கின்றது' என்று, இதமாகவும் மிதமாவும் உரைத்தனர். இந்த மதிவதன மங்கையர்க் கரசியாருடைய மென்மதுர நயவசனங்களாகிய அமுத வெள்ளம் பண்டரியாத்ரைபோகும் ஸாது ஜனங்களுடைய செவி மடையிற் பாய்ந்து, அவர்கள் இதய வயலில் இடையறாமல் வளர்ந்து விளங்கும் பகவத் பக்தியென்னும் பயிர் தழைத்து, பரமானந்தக் கதிரீனச் செய்தது. அப்போது அந்த ஸாதுக்கள், கர்நோபாத்ரி அம்மையாரை நோக்கி, "அம்மே! ஆடிமாதச் சுக்லபக்ஷத் தேகாதசி மஹோற்சவத்துக்காக, ஸ்ரீமத் பண்டரிபுரத்துக்குப் போகின்றோம்; பூலோக வைகுண்டமென்

* ஸௌம்யம் - சாந்தம்.

னும் அந்த க்ஷேத்திரத்திற்கு அந்த மஹோத்ஸவ காலத்தில் பலதேசங்களிலிருந்தும் பல ஸாதுக்கள் வருவார்கள். அப்படிப்பட்ட ஸாதுஜனங்களுடன் பக்தவரதனான ஸ்ரீமத் பண்டரிநாதனைத் தரிசித்தல், பரம பிரயோஜனம் என்று கோரிச் செல்கின்றோம். உனது குணகணங்களைப் பார்த்தால், அந்த புண்டரீக வரதன், பூர்வத்தில் ஜநாபாயை அன்பின் மிக்கவராய் அங்கீகரித்தபடி, தானே வலிய வந்து உன்னை அங்கீகரித்தனனென்று தோன்றுகின்றது'' என்று வியந்துரைத்தார்கள். கானோபாத்ரி, ஆனந்த சாகரத்தில் மூழ்கினவராய், அந்தத் திருக்கூட்டத்துக்கு பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து, ''ஓ ஸாதுஜனங்காள்! உம்மால் புகழப்பட்டு உமது வந்தனைகளை ஏற்றுக்கொள்ளுபவனாய் விளங்கும் ஸ்ரீமத் பண்டரிநாதனுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களை உங்களால் நன்குணரக் கோருகின்றனன். நீவிர் என்மேற் கருணைகூர்ந்து திருவாய் மலர்ந்தருளவேண்டும்'' எனப் பிரார்த்தித்து நிற்க, அதற்கவர்கள் எத்தனையோ மகிழ்சிறந்து, அவ்வம்மையாரை நோக்கிப் பின்வருமாறு சொல்லத் தொடங்கினர்:

''ஓ, பாகவத முதல்வீ! புண்யபாரீ! மங்கையர்க்கரசீ! அந்தப் புருஷோத்தமனுடைய ஸ்வரூப, ரூப, குண விபவங்களை வர்ணிப்பதற்கு ஆயிரம் வாய்களுள்ள ஆதிசேஷனாலும் ஆகாது. அவன், பிரமசிவ ஸநகாதியர்களுடைய தியானங்களுக்கும் அகோசரனாயிருப்பான். வேத புருஷன், அம்மஹாத்மாவினுடைய ஆனந்தாதிசயத்தைக் கண்டுபிடிக்கக் காதல் கொண்டவனாய், முதலில் மனுஷ்யானந்தத்தைத் தீர்மானித்தறிந்து உணர்த்து, வரன்முறையாகச் சதுர்முகானந்தம் வரையில் சொல்லிக்கொண்டேபோய், பரப்ரஹ்மானந்தம் மனதுக்கு அதீதமானதென்று திரும்பினன். அந்த ஜகதீசன் தனது கல்யாண குணங்களை தானே சிந்தித்து, அவைகளின் முடிவைக் கண்டறியாமல் இருக்கின்றனன். அத்தகைய பகவானுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களை நாங்கள் எங்ஙனம் வர்ணிக்கக் கடவோம்! ஆனாலும், அவரவர் அறிவில் அறிந்தளவு அவைகளைப் புகழ்ந்துரைத்தல் குற்றமன்று. எங்ஙனமெனின்; மேருமலையில் ஒரு பிடியளவுப் பொன் உள்ளதென்பதும் ஸமுத்திரத்தில் ஒரு குடங்கைத் தண்ணீர் உள்ளதென்பதும் கள்ள உரைகள் அன்று. மேருமலையிற் பொன் அளவற்றிருப்பினும், அதனிற் பிடியளவு பொன் இருப்பதும் உண்மையேயன்றோ! ஸமுத்திரத்திற் றண்ணீர் அபரிமிதமாய் இருப்பினும், அதனிற் குடங்கையத்தனைத் தண்ணீர் இருப்பதும் உண்மையேயன்றோ? ஆகையால் பகவானுடைய ஸ்வரூப ரூப குண விபவங்களை, ஸர்வஜ்ஞனை அவற்கே அளவிடல் ஆகாமலிருந்தும், அவரவர் அறிவிற் கெட்டியபடி அவனது அருமைக் கல்யாண குணகணங்களைப் புகழ்ந்து துதித்தல் உடன்பாடென்றுணர்க. 'பகவான், தனது கல்யாண குணக்கடலின் முடிவை, தானே காணக்கூடாதவனாயிருக்கின்றனன் என்றால், அவனுடைய முதறிவுடைமைக்கு கெடுதி உண்டாகும் அல்லவா?' என்று



கேட்பையோ? ஊறுண்டாகாது. எங்ஙனமெனின்; உலகத்தில் பரம ஞானியொருவன், 'முயற்கொம்பை நானறியேன்' என்றால் அவனுடைய ஞானம் ஊறுபடாது. முயற்கொம்பு மூதுலகிற் கிடையாத பொருள். ஆகையால், அத்தகைய பொருளை அறியேன் என்னல் அஞ்ஞானம் அன்று; மெய்ஞ்ஞானமேயாகும். அங்ஙனமே அவனது அளவற்ற கல்யாண குணகணங்கள், உண்மையாகவே அளவற்றிருப்பனவாகையால், அவைகளை எடுத்துரைக்க அறியேனென்பது, பகவானுடைய முதறிவுடைமைக்குத் தீது பயப்பதன்று. இனி, நினது நல்லெண்ணம் நிறைவேறுமாறு, அந்த ஜகந்நாதனுடைய வைபவத்தை நாங்களறிந்த வரையிற் கூறுகின்றோம்; அன்புடையாரைக் காக்கவும், வன்புடையாரைப் போக்கவும், தர்மத்தை ஆக்கவுமாகிய மும்மைப் பெருவினைகளை முடிக்குமாறு, தேவர்களுடைய வேண்டுகோளுக்கு இரங்கி அருள்கூர்ந்து, யதுவம்சமாகிய பாற்கடலிற் றோன்றிய பூர்ணசந்திரனைப்போல வாஸுதேவானந்த வர்த்தனனாய், தேவகீ கர்ப்பத்தில் அவதரித்து, நந்த நந்தனன் என்றும், யசோதா நேத்ரமணி யென்றும் பிரஸித்தி பெற்று, ப்ருந்தாவனத்திற் பிரகாசித்து, ஸமவயதுடையவர்களாகிய சிறுமியர்களுடன் கூடி, பசுக்களையும் பசுங்கன்றுகளையும் மேய்த்துக் காப்பாற்றி, கம்ஸாதி துஷ்டர்களைத் தொலைத்து, பாண்டவாதி சிஷ்டர்களைக் காத்து,

'நீபாரதவமரில் யாவரையும் நீறாக்கிப்
பூபாரந் தீர்க்கப் புரிந்தாய் புயல்வண்ணா
கோபாலா போரேறே கோவிந்தா நீயன்றி
மாபாரதமகற்ற மற்றார்கொல் வல்லாரே' என்றபடி,

பூபாரந் தீர்த்த புயல்வண்ணனும், பரமயோகியர் பணியும் பரமேச்வரனுமாகிய ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா, தாய் தந்தையரைப் பூசித்து நேசித்தலே ஸ்வரூபோசிதமான பகவத்கைங்கரியமென்று, அதனைக் கடைப்பிடித்தொழுகி, அது தவிர வேறொன்றையு மறியாதிருந்த பரமபாகவதராகிய ஸ்ரீபுண்டரீகர் என்பவர்க்கு அநுக்ரஹஞ் செய்யும்பொருட்டு, ஸ்ரீமத் பண்டரிபுரத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி, இடுப்பில் ஊன்றிய கையனாய், பீமநதிக்கரையில் செங்கல்லின்மேல், நின்ற திருக்கோலத்துடன் ஸாதுஜனங்கட்கநுக்ரஹஞ் செய்துகொண்டு இருக்கின்றான். அந்த மஹாத்மா,

'அலங்கலிற் றோன்றும் பொய்ம்மை அரவெனப் பூதமைந்தின்
விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபாடுற்ற வீக்கம்
கலங்குவ தெவரைக் கண்டா லவரென்ப கைவி லேந்தி
இலங்கையிற் பொருதா ரன்றே மறைகளுக் கிறுதி யாவார்' என்ற

கம்பநாட்டாழ்வார் கட்டுரையின்படி, விகாரரஹிதனாய், எப்போதும் ஒரேவிதமாயிருப்பவன்; எல்லாம் இயற்ற வல்லவன்;

'இவையு மவையு முவையு மிவரு மவரு முவரு
யவையும் யவருந் தன்னுள்ளே யாகியு மாக்கியுங் காக்கும்
அவையுள் தனிமுத லெம்மான் கண்ணபி ரானென் னமுதம்
சுவையன் திருவின் மணாளன் என்னுடைச் சூழலுளானே'

என்றபடி, தனது நிறைவால், ஸர்வத்தையும் விளங்கச் செய்பவன்.

'எத்தி றத்து மொத்து நின்று யர்ந்து யர்ந்த பெற்றியோய்
முத்தி றத்து மூரிநீர் ராவணைத்து யின்றநின்
பத்து முத்த சிந்தையோடு நின்று பாசம் விட்டவர்க்கு
எத்தி றத்து மின்ப மிங்கு மங்கு மெங்கு மாகுமே' என்றபடி,

நிலைத்த பேரானந்த மயனாயிருந்து அதனை, அன்பர்க்களித்துக் களிப்பவன்.

'சார்ந்த விருவல் வினைகளும் சரித்து மாயப் பற்றறுத்துத்
தீர்ந்து தன்பால் மனம்வைக்கத் திருத்திவீடு திருத்துவான்
ஆர்ந்த ஞானச் சுடராகி யகலம் கீழ்மே லளவிறந்து
நேர்ந்த வுருவா யருவாகு மிவற்றி னுயிராம் நெடுமாலே' என்றபடி,

ஸர்வத்தையும் தனக்கு வசியஞ் செய்து விளங்குபவன்.

'பரத்தி லும்ப ரத்தை யாதி பௌவ நீர ணைக்கிடந்து
உரத்தி லும்மொ ருத்தி தன்னை வைத்து கந்த தன்றியும்
நரத்தி லும்பி றத்தி நாத ஞான மூர்த்தி யாயினாய்
ஒருத்த ரும்நி னாது தன்மை யின்ன தென்ன வல்லரே' என்றபடி,

மஹா மதிவானாய் விளங்கி வாழ்பவன்.

'நிற்ப தும்மொர் வெற்ப கத்தி ருப்பும் விண்கி டப்பதும்
நற்பெ ருந்தி ரைக்க டலுள் நானி லாத முன்னெலாம்
அற்பு தன்ன னந்த சயன னாதி பூதன் மாதவன்
நிற்ப தும்மி ருப்ப தும்கி டப்ப தும்மென் நெஞ்சுளே' என்றபடி,

பக்தர் மனப்பதுமத்தில் வாழும் அசஞ்சலன்.

'நாவினுள் நின்று மலரும் ஞானக் கலைகளுக் கெல்லாம்
ஆவியும் ஆக்கையும் தானே அழிப்போ டளிப்பவன் தானே
பூவியல் நாற்றடந் தோளன் பொருபடை யாழிசங் கேந்தும்
காவிநன் மேனிக் கமலக் கண்ணனென் கண்ணினுள்ளானே'

என்றபடி, சிலாக்ய வாக்யன்.

'கழிமின் தொண்டர்கள் கழித்துத்
தொழுமின் அவனைத் தொழுதால்
வழிநின்ற வல்வினை மாள்வித்
தழிவின்றி யாக்கந் தருமே' என்றபடி,

அழியாத பெரிய ஐஸ்வரியத்தை உடையவன்.



'இலங்கை மன்ன னைந்தொ டைந்து பைந்த லைநி லத்துக்
கலங்க வன்று சென்று கொன்று வென்றி கொண்ட வீரனே
விலங்கு நூலர் வேத நாவர் நீதி யான கேள்வியார்
வலங்கொ ளக்கு டந்தை யுள்கி டந்த மாலு மல்லையே' என்றபடி,

விரோதியை யழிப்பவன்; உன்னதமான புஜங்களுடனும், வட்டமான அங்கைகளுடனும், சங்கு போன்ற கழுத்தினுடனும், சிறிது பணைத்த கன்னங்களுடனும், விசாலமாய் உன்னதமாய் கடினமாயுள்ள வக்ஷஸ்தலத்துடனும், மாமிஸத்தால் மூடப்பட்டு மறைந்துள்ள தொண்டை எலும்புகளுடனும், சத்ருக்களுக்குப் பயமுண்டாக்கக் கூடிய தேகப் பொலிவுடனும், நீண்ட கரங்களுடனும், யானையைப் போலக் கம்பீரமான நடையுடனும், மிகக் குறுகியும் மிக நீண்டும் இல்லாமல், தொண்ணூற்றாறு அங்குலங்கள் உயரமுள்ள தேகத்துடனும், ஏற்றத் தாழ்வின்றி ஸமமாய் அமைந்துள்ள அவயவங்களுடனும், தன்னைக் காண்பவர்களுடைய கண்களையும் மனங்களையும் கவரத்தக்க ஸௌந்தரத் திருவுருவத்துடனும் ஒளிசிறந்த தாமரை இதழ்களைப்போல விசாலமாய் நீண்டு செவ்வரி பரந்து விளங்கும் கண்களுடனும், ஸாமுத்ரிக சாஸ்த்ரோக்த ஸர்வசுபலக்ஷணத்தோடு கூடினவன்; ஸகல தர்மங்களையும் தெரிந்தவன்; அறிவு குன்றாதவன்; பல்லுயிர்களுக்கும் நன்மை செய்பவன்; எல்லாம் உணர்ந்திருப்பவன்; மிகப் பரிசுத்தன்; அன்பர்க்கு ஸ்வாதீனனாயிருப்பவன்; அன்பரைக் காத்தல் முதலிய நற்காரியங்களையே நாடியிருப்பவன்; வேதனாதியர்க்கும் நாதனாய் விளங்குபவன்; திருமகள் விலாஸன்; அனைவரையுங் காக்க வல்லவன்; அன்பர்க்கு விரோதிகளை அழிக்க வல்லவன்; அவரவர் உயர் விழிவாகிய குணங்களை எண்ணாமல் வலிய ஆட்கொள்ளுபவன்; பாவிகளைத் தண்டித்து தர்மத்தை நிலைநிறுத்தபவன்; அன்பரைக் கைவிடாதவன்; வேத சாஸ்த்ர * ப்ரவர்த்தகன்; எல்லார்க்கும் நல்லவன்; பெருமிதமான மனமுள்ளவன்; இன்சொல்லன்; நதிகளை ஐக்யப்படுத்திக்கொள்ளும் ஸமுத்ரராஜனைப்போல, ஸாது ஜனங்களைத் தனக்குள் ஐக்யப்படுத்திக் கொள்பவன்; அனைவரும் தன்னை அடையக்கூடிய உன்னத நிலையிலிருப்பவன்; ஓரவஞ்சனையின்றி ஞாயகாரியங்களை நடத்துபவன்; பெண்மணீ! நாங்கள் என்னவென் றுரைப்போம்! இப்போது எங்களால் கூறப்பட்டவைகளும், கூறப்படாதவைகளும் ஆகிய ஸமஸ்த நற்குணங்களோடு கூடினவன். இன்னும் பூலோக உபமானங்களால், அவனது அருங்குணங்களை விளக்குவோம் கேட்பாயாக: பெருமிதத்தில் ஸமுத்ரத்தையும், தைர்யத்தில் ஹிமாசலத்தையும், ஸர்வத்தையும் ஸாதிக்கும் வல்லமையில் தனது இயற்கையிலேயே காத்தற் றொழிலைச் செய்பவல்ல விஷ்ணுவுக்கும், பார்க்கப் பார்க்கப் பரமானந்தத்தைப் புதிது புதிதாய் உண்டாக்குவதில் பூரண சந்திரனுக்கும், அன்பரைக் காத்தற்காக அரக்கர் கூட்டங்களைக் காயும் கோபத்தில் ப்ரளயாக்

* ப்ரவர்த்தகன் - இயற்றுதற்கருத்தன்.

ளிக்கும், பொறுமையில் பூமிக்கும், கொடையில் குபேரனுக்கும், ஸத்யத்தில் தர்ம தேவதைக்கும் ஸமானனாயிருக்கின்றனன்" என்பவைகளேயாம். அவைகளைக்கேட்ட காநோபாத்ரி யம்மையார், அந்த பகவத் கல்யாண குண சமுத்திரத்தில் மூழ்கி, அந்த குண கணங்களிற் குவிந்த மனமுடையவராய், தமது வீட்டுக்குள்ளே நுழைந்து, தாயாரை நோக்கி, நான் இந்த ஸாது கோஷ்டியிற் கலந்து சென்று, அவன் சந்நிதியை யடைந்து வாழ்ந்து களிப்பேன். எனக்கு விடைதருக" எனத் தாயின் அனுமதி அடைந்து, ஸாதுக்களைப் பின்பற்றித் தொடர்ந்து, சென்று, பண்டரிபுரத்தைச் சேர்ந்து, புண்டரீக வரதற்கு வந்தனஞ் செய்து, * அப்ரமேயா! நினது புகழ்களை ஸாதுக்களாற் கேட்டு, நினது † ஸந்தரிசனாபேக்ஷையோடு வந்தனன்; என்றால் கேட்கப்பட்ட எல்லா இலக்கணங்களும் பொருந்தி நிறைந்து விளங்கும் நினது திவ்ய மங்களத் திருவுருவத்தை ஸேவித்தவுடனே, எனது இதய மென்னும் சாதகப் பறவை, மேகவண்ணமாகிய நினது திவ்யமங்கள விக்ரஹ ஸேவையிற் கூம்பி, மற்றப்பொருள்களை இறையளவும் மதியாமல் இருக்கின்றது. ஏழைகளாய் நின்னையன்றி வேறு காணாதவர்களா யுள்ள ஸாதுக்களுக்கு, நீயொரு கற்பக தருவென விளங்குகின்றனை. ஆகையால், எனது குற்றங்களை நினது திருவுளத்திற் கொள்ளாமல், மன்னிக்கவேண்டும். ஸமுத்ர தீரத்தில் விபீஷணற்கும், இருதிறத்தாருடைய படைகளின் இடையில் அருச்சுனற்கும் அனுக்ரஹித்தருளிய அபயப்ரதானத்தை எண்ணி, அதுபோலவே நினது திருவடிகளை,

'ஊனிடைச் சுவர்வைத் தென்புதூண் நாட்டி உரோமம் வேய்ந்
தொன்பது வாசல், தானுடைக் குரம்பை பிரியும்போ துன்றன் சர
ணமே சரணமென் றிருந்தேன், தேனுடைக் கமலத் திருவினுக் கரசே
திரைகொள்மா நெடுங்கடல் கிடந்தாய், நாயுடைத் தவத்தால் திரு
வடி யடைந்தேன் நைமிசா ரணியத்து ளெந்தாய்'

என்று,

திருமங்கைமன்னன் அருளியபடி, சரணடைந்த என்னைக் கைசோர விட்டுவிட நினைவையேல், ‡ மந்தார § மகரந்த மதுரத்தை மாந்தும் மதுகரம், அது தவிர, பிறபொருளை விரும்பாதபடி, அமுதூறும் நினது கமல மலர்ப் பதயுகளங்களை விட்டுப் பிறவற்றை இச்சியேன். $ அஜாமிளாதியருடைய குற்றங்களைப் பாராட்டாமல் அவர்களைக் காத்தளித்துப் புகழ்பெற்ற நீ, என்னை இப்போது விட்டுவிட நினைந்து, நினது பெரும் புகழ்க்குக் குறைதேடிக் கொள்ளற்க. தெளிந்த மனத் தூத்தமர்க்குத் தோழனாகிய உன்னை, எனது ஈடேற்றத்துக்காக, நான் வேண்டிக்கொள்வது, பாலுண் குழவி தனது பசியைப் போக்கிக்கொண்டு, தான் பிழைப்பதற்காக தாயை நோக்கி அழுதிரங்குவதற்கு ஸமானமாயிருக்கின்றது. அகிலாண்டங்களையும் ஸர்வஜாக்ரதையுடன் காக்கும்

* அப்ரமேயன் - அளந்தறிதற்கரியவன்.
† ஸந்தரிசனம் - காட்சி.
‡ மந்தாரம் - மந்தாரமலர்.
§ மகரந்தம் - தேன்.
$ அஜாமிளன் - ஒரு பக்தன்.



உனக்கு, கேவலம் எனதோர் ஆத்மத்தைக்காத்தளிப்பது அருமையல்ல எனப் பிரார்த்தித்து, தமது ஆத்ம பாரத்தைப் புண்டரீக வரதனுடைய திருவடிகளில் அர்ப்பணம் செய்து, ஸ்ரீமத் பாண்டுரங்கனை இடையறாமற் றொழுது, அவனுடைய பலதிரு நாமங்களையும் வாயாரக் கூறி, பாகவதர்களுடைய பகவந்நாம ஸங்கீர்த்தன ஸமயத்திற் றோன்றும் *கோலாஹலத்திற் குவிந்த மனத்துடன் பரமானந்தக் கடலிற் குளித்து, கோபுர வாசலில் வஸித்து அனவரதமும் பகவத்யானஞ் செய்துகொண்டிருந்தனர்.

அந்த தேசாதிபதி, காநோபாத்ரியினுடைய † வனப்பைக் கர்ண பரம்பரையாகக் கேட்டு, தனது அந்தரங்க சேவகர்களை அழைத்து, "நீவிர், ஸ்ரீமத் பண்டரி புரத்திற்குச் சென்று, விட்டல நாதனுடைய கோபுர வாசலில் வஸிக்கும் காநோபாத்ரியென்னும் ‡கணிகையர் குலமணியை, என்னிடத்திற் காதலுள்ளவளாக்கி, நீவிர் உணர்ந்த தந்த்ர சாதுர்யங்களால் மயக்கி யழைத்துக்கொண்டு வாருங்கள்" என்று கட்டளையிட்டு அனுப்பினன். அவர்கள் வந்து, காநோபாத்ரிக்குத் தமதரசனுடைய விருப்பத்தை அறிவித்தார்கள். அப்போது அந்த ஸௌந்தர வதனத் துடியிடை நங்கை, அவர்களை நோக்கி, "ஓ சேவகமாந்தர்காள்! நுமதரசனாக்கினையால் நீவிர் என்னை அழைத்துக்கொண்டு போக வந்தமைக்கு நான் மிகவுங் களிப்படைகின்றனன். இங்கே இறைப் பொழுது நில்லுங்கள்; ஆலயத்துள்ளே சென்று, ஸ்ரீமத்பண்டரீநாதனைத் தரிசித்து வந்து, உம்முடன் வருவேன்" எனக் கூறி ஸந்நிதியுள் நுழைந்து, ஸ்வாமியின் சந்நிதியில் நின்றுகொண்டு, "ஆபத்பாந்தவா! அடியார்களுடைய பிராணநாதா! நினக்குத் தாஸியாகிய என்னை, ஓரரசன் இச்சித்துவேண்டல் ஞாயமா, தருமந்தானா? யாகத்தின் அவிர்ப்பாகம் நாய்க்கு உரியதாகுமா! இப்படிப்பட்ட இடருற்ற ஸமயத்தில், நீ என்னை விட்டு விடாமல் காத்தளிக்கவேண்டும். ஐயனே! அடியார்க்கு மெய்யனே! துய்யனே! கோதண்டக் கையனே! பகைவர்க்குப் பொய்யனே! பரமபத வாழ்வளிக்குஞ் செய்யனே! என வேண்டுகையில், ஆலயத்துள் இருந்த அர்ச்சகர்களும் பிறரும் பார்க்குமாறு, அப்பெண்மணியின் சரீரத்திலிருந்து, ஒரு திவ்யதேஜஸ் வெளிப்பட்டு ஸ்ரீபண்டரிநாதனுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தில் நுழைந்தது. பிறகு பகவந்நியமனத்தால், அந்த புண்யவதியின் சரீரத்தை ஆலய பிரதக்ஷிண பிராகாரத்தில் புதைத்து வைத்தார்கள். அந்தப் புண்ய சரீரம், பகவத் ஸங்கற்பத்தால் ஒரு மரமாக முளைத்தது. அது இப்போதும் தழைத்துச் செழித்து விளங்கியிருக்கின்றது. அந்த க்ஷேத்திரத்திற்குப் போகும் ஸாதுக்கள், அவ்விருக்ஷத்தைப் பூசித்து காநோபாத்ரி யம்மையாரை தியானித்து, அதன் இலைகளை சிரஸா வகிக்கின்றனர்.

* கோலாஹலம் - ஆனந்தகோஷம்.
† வனப்பு - அழகு.
‡ கணிகை - தாஸி.

ராஜதூதர்கள், சிறிதுநேரம், காநோபாத்ரியம்மையார் வருகையை எதிர்நோக்கியிருந்து, பிறகு உள்ளே நுழைந்து, அங்கு நடந்த விருத்தாந்தத்தைக் கேள்வியுற்று, அதனை நம்பாமல், காநோபாத்ரியம்மையார் விஷயத்தில் இச்சையுள்ளவர்களாய், "காநோபாத்ரியை நீவிர் எங்கேயோ ஒளித்து வைத்துவிட்டுப் பொய் பேசுகின்றீர்கள்" என்று அர்ச்சகர்களைப் பயமுறுத்திப் பழிசுமத்திப் பேச, அர்ச்சகர்கள், "நாங்கள் எந்தப் பாவத்தையும் அறியோம்" என்று பலமுறை உண்மையையே உரைத்தார்கள். அங்ஙனங் கூறியும் அவர்களை நம்பாத சேவகர்கள், அவர்களைப்பிடித்து கட்டிக்கொண்டுபோய், அரசன்முன்னே விட்டு நடந்த விருத்தாந்தங்கள் அனைத்தையும் விண்ணப்பித்தார்கள். அரசனும் அந்த தூதர்கள் வார்த்தைகளை நம்பினவனாய், அர்ச்சர்களை அவமதித்து அவர்கள் தங்கையிற் கொடுத்த பகவத் பிரஸாதத்தைப் பார்க்கையில், அது * கேசயுக்தமாயிருந்தது. அரசன் அந்த அர்ச்சகர்களை நோக்கி, "நமது பண்டரிநாதற்கு, குடுமி உளதா?" என்றுகேட்க, அவர்கள் பயந்து முன்பின் ஆலோசிக்காமல், † சிகை உளதென்றார்கள். அப்போது அரசன் வியப்படைந்தவனாய், "நான் பண்டரிபுரத்திற்கு வந்து பண்டரிநாதனுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தை சோதித்து, அவற்கு சிகை இருக்கும் பக்ஷத்தில், உங்களை ஆதரித்துப் பெருமை செய்வேன். இல்லையேல் உங்களைக் கொடுந் தண்டனைக் குட்படுத்துவேன்" எனக் கூறி, அவர்களுடன் ஸ்ரீபண்டரீபுரத்திற்கு வந்து, பகவான் சிரத்தைச் சோதிக்கையில், ‡ சரணாகத வத்ஸலனான ஜகந்நாதன், தன்னை நாடோறும் பயபக்தி விஸ்வாஸத்துடன் அர்ச்சனைசெய்யும் அர்ச்சகர்களுடைய வார்த்தைகளை மெய்ப்பிக்க எண்ணி, பெரிய குடுமியுள்ளவனாய்க் காட்சி தந்து, தனது அன்பர் அன்பை வெளிப்படுத்தினன். அரசன் பயபக்தியுக்தனாய் ஸ்ரீபாண்டு ரங்கற்கும், அர்ச்சகர்களுக்கும் வந்தனம் தந்து, அபராத மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, காநோபாத்ரியினுடைய சரம சரீரத் திருவுருவத் தோற்றமாகிய விருக்ஷத்தைப் பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து, அதன் இலைகளைச் சிரமேலணிந்து, அங்கிருந்த ஸாதுக்களை ஆராதித்துத் தனதிடம் சேர்ந்தான்.

சரணாகத வத்ஸலாய நம:

## நாற்பத்தொன்பதாம் அத்தியாயம்

# தாமாஜிபண்டிதர் சரித்திரம்

பெதரியென்னும் கிராமத்தில், தாமாஜிபண்டிதர் என்னும் வைஷ்ணவோத்தமர் ஒருவர் இருந்தனர். அவர், பரிசுத்த மனமுடையவராய், ஸமஸ்த ப்ரபஞ்சத்தையும், பகவத் ஸ்வரூபமாகப்

* கேசயுக்தம் - மயிரோடு கூடியிருத்தல். † சிகை - குடுமி.
‡ சரணாகதவத்ஸலன் - திருவடியடைந்தவர்களை ஆதரிப்பவன்.



பாவித்து, பரதுக்கஞ் சகியாதவராய், பரோபகார சீலராய், அநவரத பகவத்யான பரராயிருந்தார். அந்த தேசத்தரசன் இந்த தாமாஜி பண்டிதரை, மங்களபடம் என்னும் நாட்டுக்குஅதிகாரியாக்கி அனுப்பினன். தாமாஜி பண்டிதர், குடும்ப ஸமேதராய் மங்களபடத்துக்கு வந்து, அரச கட்டளையின்படி, தமது அதிகாரத்தைச் செலுத்தி ஸகல காரியங்களையும் சரிவர நடத்திக்கொண்டு,

"எம்பிரா னெந்தை யென்னுடைச் சுற்ற மெனக்கர சென்னுடை வாணாள், அம்பினா லரக்கர் வெருக்கொள நெருக்கி யவருயிர் செகுத்த வெம் மண்ணல், வம்புலாஞ் சோலைமாமதிள் தஞ்சைமாமணிக் கோயிலே வணங்கி, நம்பிகா ளுய்ய நான்கண்டு கொண்டேன் நாராயணா வென்னு நாமம்" என்றபடி,

ஸ்ரீமந் நாராயண நாம பாராயணத்தை ஏமாறுமற் செய்து வாழ்ந்தார்.

அக்காலத்தில், * அநாவ்ருஷ்டியால், பெரும்பஞ்சம் உண்டாகி,

"விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி" என்றபடி,

ஜனங்கள் அன்னமின்றிப் பசியால் வருந்தினார்கள்.

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்' என்றபடி,

தாமாஜிபண்டிதர், தாம் இல்லறத்தை நல்லறமாக நடத்தி மேம்படுவதற்கடையாளமாக அந்தப் பஞ்சநாட்களில் தமக்குள்ள பொருள்கள் அனைத்தையும் தீனர்களுக்கு விநியோகித்து வந்தனர். அந்தச் சிறுவிலைக் காலத்தில், அன்னம் ஸங்கமாய் பிரபல ப்ரஜாக்ஷயம் உண்டாயிற்று. அநேகர் ஸ்வதேசத்தை விட்டு நீங்கி தேசாந்தரிகளானார்கள். பண்டரிபுரத்தில்வஸிக்கும்வேதியன் ஒருவன், தனது வீட்டையும் குடும்பத்தையும் துறந்து, தேசாந்தரம் செல்வோனாகி இடைவழியில் மங்களபடத்துக்கு வந்து, தாமாஜி பண்டிதரைக் கண்டான். இந்த வைஷ்ணவ உத்தமர், வந்த விருந்தினன் ஸாக்ஷாத் பண்டரிநாதனே யெனப் பாவனைசெய்து, அவனுக்கு பக்தியுடன் அர்க்ய பாத்யாதிகளை வழங்கி, நல்வரவேற்று, தமதகத்திற் புசித்துப் போகவேண்டுமென்று அவனை வேண்டி, ஒரு பரிசுத்த ஸ்தானத்தில் ஆஸனம் இட்டு, அதனில் எழுந்தருளச் செய்தனர். பிறகு, தாமாஜிபண்டிதர், ஸ்தல சுத்திசெய்து, நுனியோடு கூடின வாழையிலையை விரித்து, அதனில் மிகவும் வெள்ளியதாய், மெல்லியதாய், உண்ண இனியதாயுள்ள அன்னத்தை வெள்ளி மலைபோல் இட்டு, அதன் உச்சியிற் பொற்சிகரம்போலப் பருப்பிட்டு, அதனிற் பெருகியோடும் ஆறுபோல நெய்விட்டு, பெருமலையைச் சூழ்ந்துள்ள சிறு குன்றுகளைப்போலப் பலவிதப் பொரிக்கறி, கூட்டுக்கறி, புளிக்கறி முதலியவைகளை அவ்வன்னத்தைச் சூழப்படைத்து, விருந்தி

* அநாவ்ருஷ்டி - மழையின்மை.

னனை உபசரித்து, அதனை உண்கவெனப் பிரார்த்தித்து நின்றார். அவன் † பரிஷேசனம் பண்ணி, ‡ ஆபோசனம் செய்யும்போது, கண்ணீர் விட்டான். அதனைக்கண்ட தாமாஜி பண்டிதர், "விப்ரோத்தம! போஜன காலத்தில் கண்ணீர் விடக் காரணமென்ன? சங்கையின்றிக் கூறுக. என்னாற் கூடுமாயின் நினது சோகந்தவிர்த்து, உனக்கானந்தம் உண்டாக்குவேன்; ஜகதீசனே அதிதி வடிவந்தாங்கி சேதனர்களுடைய பூசையை அங்கீகரித்து அவர்களைக் காக்கின்றனன். ஆகையால், ஸ்ரீபாண்டுரங்கநாத வடிவினனாகிய நினக்குக் களிப்புறுவித்தல் எனக்குப் பரம புருஷார்த்தமாகும்" என்றார். இவர் மதுரவசனங்களைச் செவியுற்ற அதிதியாகிய அந்தணன், இவரை நோக்கி, "மஹாத்மா! நினது அருமையாகிய நயமொழி, நினது ஆத்மத் தூய்மையை விளக்குகின்றது. நான், பண்டரிபுரத்தைவிட்டு, நான்கு நாட்களாயின. இந்த நான்கு நாட்களாக நான் பட்டினியால் ப்ரதவிக்கின்றேன். பண்டரிபுரத்தில் எனது குடும்பமும் அன்னமின்றி வருந்துகின்றது இந்த அன்னத்தை இங்கு நான் கண்டவுடனே மிக மகிழ்ந்தேன். ஆயினும் எனக்கு மிக வேண்டியவர்களும் என்னையே முற்றும் நம்பியுள்ளவர்களுமாகிய எனது மனைவி முதலியோர் ஞாபகம் வந்து, என் மனதை உருகச்செய்கிறது; அவர்கள் உபவாஸஞ் செய்துகொண்டிருக்கையில் நான்மாத்திரம் இத்தகைய உயர்தர உண்டியை உண்ணப்பொறாமல், சோக மிக்கவனாய்க் கண்ணீர் விட்டனன்" என்றான்.

அதிதிகூறிய வார்த்தைகளைக் கேட்ட தாமாஜி பண்டிதர், அவனுடைய மனவருத்தத்துக்குத் தாமும் மிகச்சோகித்து, "ஓ வேதியர் முதல்வ! சோகமின்றிப் புசிக்கக் கடவை! நினது குடும்ப போஷணைக்காக, ஒரு வருஷத்துக்கு வேண்டிய தான்யத்தை நான் கொடுக்கிறேன், நீ வருந்தற்க" எனக் கூறினார். அந்த மொழிகள், அமிர்த வெள்ளமாய் அதிதி செவித்தொளையுள் நுழைந்து அவனது இதய தடாகத்தில் நிறைந்து குளிர்ந்து அவனை ஆனந்த பரவசனாக்கித் தேங்கி, அவனது உடல் முழுவதும் புளகாங்கித வேர்வையாகவும் ஆனந்தக் கண்ணீராகவும் வெளிப்பட்டன. பிறகு அந்த அதிதி, இரண்டாமுறை ஆபோசனம்செய்து ஆகுதிகளைப் பெய்து அறுவகைச் சுவையுடன் கூடிய உண்டியைக் கோவிந்த தியானத்துடன் உண்டு உத்தராபோசனம் முடித்து எழுந்து விதிப்படி கைகால்களை அலம்பிக்கொண்டு சுத்தாசமனம்செய்து, சுப்ரதேசத்தில் சௌக்கியமாய் வீற்றிருந்து, தனது இதய கமலவாவியாகிய முகுந்தனை தியானித்துத் துதித்து, தாமாஜிபண்டிதர் மனமுவந்து கொடுத்த சந்தன புஷ்ப தாம்பூலாதிகளை ஏற்றுக் களித்தான்.

* பல + ப்ரஜா + க்ஷயம் - பலஜனங்கள் மடிதல்.

† பரிஷேசனம் - ஜலத்தைச் சூழத்தெளித்து அன்னத்தைப் பரிசுத்தஞ் செய்தல்.

‡ ஆபோசனம் - மந்திரஞ்சொல்லி, உள்ளங்கை ஜலத்தை உதட்டாற் பரிசித்து உண்ணப்புகுதல்.



பிறகு தாமாஜி பண்டிதர், அதிதிக்கு இட்டு மிகுந்த உண்டியைப் பரம பரிசுத்தமானதெனப் புசித்துத் தமது வேலையாட்களை அழைத்து, "நானூறு கல தானியத்தை, ராஜாங்கத்தாருடைய தான்ய ராசியிலிருந்தெடுத்து அளந்து, இந்த பிராமணரைப் பின்பற்றிக்கொண்டு சென்று, இவருடைய வீட்டிற் சேர்த்து வாருங்கள்" என்று கட்டளையிட்டனர். அந்தச் சேவகர்கள் தமது அதிகாரியின் நியமனத்தைத் தமது சிரஸாவகித்து, தான்யத்தை வண்டிகளிலேற்றிக்கொண்டு, அந்த பிராமணனைப் பின்பற்றிப் பண்டரிபுரத்துக்குப் போய்க்கொண்டிருக்கையில், இடைவழியில் பஞ்சத்தால் பரிதபிக்கும் பரதேசிகள் அந்த வண்டிகளின்மேல் வீழ்ந்து தான்யங்களைக் கொள்ளை கொண்டு போனார்கள். அதுகண்ட வேதியன்,

'தரித்திரன் தலைகழுவப் போனான்
ஆலங்கட்டி மழை அப்போதே வந்தது' என்றபடி,

"தாமாஜி பண்டிதருடைய கிருபையால் எனது வறுமை, சிறுமையடைந்ததென்று நான் மகிழ்ந்திருக்கையில் எனது தீவினைக் கூட்டம் பலஜனக்கூட்டமாய் வந்து, தான்யத்தை கொள்ளை கொண்டு போயிற்று. ஸமுத்ரம் அபரிமிதமான ஜலமுடையதானாலும்,

'ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ் கடனீர்
நாழி முகவாது நானாழி—தோழி
நிதியுங் கணவனு நேர் படினுந் தந்தம்
விதியின் பயனே பயன்' என்றபடி,

முகக்கும் பாத்திரத்தினளவாகவே ஜலங்கிடைக்குமன்றி, என்ன தான் அதனை அமுக்கி முகந்தாலும் அதிக ஜலம் கிடைக்குமா? எனக்குத் தாமாஜி பண்டிதருடைய அன்னம் ஒருபோதே ப்ராப்தமாயிருந்தது. எனது பாவம் என்னை விடாமற் பின்பற்றினால் அந்த உத்தமர் என்ன செய்யவல்லார்!

'ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்' என்றதும்

இப்பெற்றி நோக்கியே யென்க. பூர்வ ஜன்மத்தில் பிறர்க்கு அன்னமிடாத பாவியாகிய எனக்கு இப்பிறவியில் அன்னம் எப்படிக் கிடைக்கும்?

'செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம்—வையத்
தறும் பாவ மென்னவறிந் தன்றிடார்க் கின்று
வெறும்பானை பொங்குமோ மேல்' என்றதும்

இப்பெற்றி நோக்கியே யென்க. 'அன்னதானஞ் செய்யாமல், தவபலத்தால் ஸத்யலோகஞ் சேர்ந்தும், சுவேத மஹாராஜன், தீராப்பசியுடையவனாய்,

‘கற்பகத்தைச் சேர்ந்தார்க்குக் காஞ்சிரங்கா யீந்ததேல்
முற்பவத்திற் செய்த வினை’ என்றபடி,

பிரமனுடைய கட்டளையால் மறுபடியும் இம்மண்ணுலகத்துக்கு வந்து, பிறர்க்கிடாமல் ஊட்டிவளர்த்த தனது சரீரமாம்ஸத்தைத் தானே தின்றும், மறுபடியும் ஸத்யலோகஞ் சென்றும், இப்படித் தினந்தோறும் தான் மண்ணுலகிற்கு வந்து தின்றுகொண்டேயிருக்க, வளர்ந்து கொண்டே வந்த தனது சரீரமும் தொலையாமல் தனது பசியுந் தீராமல் வருந்தியிருந்தனன். இங்ஙனம் வெகு தினங்கள் சென்றும், தனது பசிக்கும், சரீர வளர்ச்சிக்கும் இம்மண்ணுலகில் யாதொரு விமோசனமுங் காணாமல், ஸத்ய லோகத்திலேயே ஸதமாய் இருக்கபாடும் இல்லாமல், தினந்தோறும் பூலோகத்திற்கு வருவதும், தனதுடலைத் தானே யுண்பதும், மறுபடியும் ஸத்யலோகஞ் செல்வதும், தனது சரீரம் பழையபடியே பிரமனுடைய நியமனத்தால் பூலோகத்தில் வளர்ந்திருப்பதும், மறுபடியும் தனக்குப் பசியடங்காமற் கிளம்புவதும், அதைத் தவிர்க்க மறுபடியும் பூலோகத்துக்கு வருவதுமாக இருந்த சுவேத மஹாராஜன், பகவத்கடாக்ஷத்தால் தனது கண்ணுக்குப் புலப்பட்ட தபோநிதியாகிய அகஸ்தியமா முனிவரைத் தரிசித்து, ஸ்தோத்ர ப்ரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து, தான் மிகவும் விரும்பிப் பூண்டிருந்த நவமணி மாலையை அவர்க்கு ஸமர்ப்பித்து, அவரது அநுக்ரஹத்தைப் பெற்று பரிசுத்தமடைந்து பசிப்பிணியைத் தவிர்த்து, தன்னால் விட்டுவிடப்பட்ட சட்டகமாகிய பிரேதவடிவச் சரீரம் மறையக் கண்டு, அதிசயித்து, பரமானந்தமிக்கவனாய் ஸத்யலோகத்தில் இனிதமர்ந்து வாழ்ந்தனன்’ என்று ராமாயணத்தில் கேட்கப்படுகின்றதல்லவா! ஆகையால் முன்செய் தீவினைக்கு இப்போது வருந்திப் பிரயோஜனம் என்ன! என்று எண்ணி, பண்டரிபுரத்துக்குப்போய், மனைவி மக்களை அழைத்துக்கொண்டு, மங்களபடத்துக்கு வந்தான். அந்த தேசவாஸிகளான தீனர்களனைவரும், தாமாஜி பண்டிதருடைய * வள்ளன்மையைக் கேள்வியுற்று, அன்னத்தை விரும்பினவர்களாய், ஆயிரக் கணக்காக வந்து, யங்களபடம் சேர்ந்து, தாமாஜி பண்டிதரைத் தரிசித்து, “ஓ, வள்ளால்! சோற்றுக்கின்றி அநேகர் மடிந்தனர். எஞ்சிய யாங்கள், மேகத்தை நாடிய சாதகப் பறவைகள்போல, தங்கள் கடாக்ஷத்தையும் கற்பகத் தருக்கையையுங் காதலுடன் எதிர்நோக்குகின்றோம்” எனக் கூறக்கேட்ட தாமாஜிபண்டிதர், கர்ணனுடைய வள்ளன்மையினும் மிக்க வள்ளன்மையுடனும், ‘ஜீவகாருண்யத்துடனும் பரம பதிவிரதையாகிய தமது மனைவியைநோக்கி, “ஓ, மங்கையர் சிகாமணீ! இப்போது நாம் செய்வதியாது? ஆயிரக் கணக்கான தீனஜனங்கள் நமக்கு அதிதிகளாய் வந்தார்கள்! எண்ணிலாப் புண்ணிய வடிவினனாகிய பண்டரிநாதன், அவ்வெண்ணிலாத் திருவுருவங்களை விளக்கிக் காட்டியருள இந்தபல ஜனரூபியாய் ஸேவையளித்தனன்போலும். எனது முயற்சி

* வள்ளன்மை - ஈகை.



யிற்றேடிய பணமுழுவதையும் அதிதிகட்களித்து வறியவனானேன்; பெண்மணீ! மறந்து வார்த்தை பிறழ்ந்து பேசினேன்; எங்ஙனமெனில், எனது ஆத்மநாதனாகிய பண்டரிநாதன், எல்லாவற்றையும் உடையவனாயிருக்கின்றான். நான் அவற்குப் புத்ரனாயிருக்க ஏழையாவது எங்ஙனம்!

‘குவலய மூன்றங் குடிபுகும் வீடாம்
தவஞான மிக்கோர் தமக்கு’ என்றபடி,

தைவாதீனமாய் ஸர்வ ப்ரபஞ்சமும் எனதாயிருக்க, நான் ஏன் வறியவனென் றெண்ணப்படுவேன்! பகவத் திரவியத்தால், பகவத் ஸ்வரூபர்களான இவர்களை ஆராதிக்கக் கடவேன். ராஜாங்கத்தார்க்குச் சேரவேண்டிய அநேகமாயிரம் கரிசை தானியம் எனது ஸ்வாதீனத்தில் இருக்கின்றது; அதனை ஸ்ரீபாண்டுரங்கற்கு ப்ரீதியாக விநியோகிப்பேன்; என்னிடத்தில் அந்தர்யாமியா யாவேசித்துக் கொடுப்பவனும், இவர்களிடத்து அந்தர்யாமியாய் ஆவேசித்திருந்து ஏற்றுக்கொள்வோனும் ஸ்ரீபாண்டுரங்கனே அல்லவா? ஸர்வ வியாபகனாகிய அந்த பரமாத்மா அரசனிடத்திலும் அந்தர்யாமியாய் ஆவேசித்திருப்பவன் அல்லவா! ஆகையால் நான் இயற்றும் காரியங்களுக்கு, அரசன் மகிழ்வன் என எண்ணுகின்றனன். ஒருவேளை, அரசற்கு என்னிடத்தில் கோபமுண்டாலும், என்னைமாத்திரமே யல்லவா சிக்ஷிப்பான்? அந்த ஜகதீசன் கருணையால் இத்தனை ஜீவர்கள் ஸந்தோஷிப்பார்களல்லவா? அதுவும் எனக்குப் புருஷார்த்தந்தானே?” எனக்கூறி, தான்ய சாலைகளைத் திறந்து, “பகவத் ஸ்வரூபர்களான பக்தர்களே! உங்கட்கு வல்லமை உள்ளவரையில் தானியங்களைக் கொண்டு செல்லுங்கள்!” என்று நியமித்தனர். அந்த ஜனங்கள், தங்கள் இஷ்டம்போல தானியங்களை எடுத்துக் கொண்டு சென்றார்கள். மூன்று மாஸங்களுக்குள், தானிய சாலைகள் பலவும் வெற்றிடங்களாயின. தாமாஜி பண்டிதருடைய வள்ளன்மை ஜகத்பிரசித்திபெற்றது. மாந்தர் பலரும் மகிழ்வெய்தினர்.

தாமாஜிபண்டிதருடைய கார்ய நிர்வாஹகர்களுக்குள்ளே, துஷ்டமனமுடைய ஒருவன், இவ்விருத்தாந்தத்தை அரசனுக்கு அறிவித்தான். அப்போது அவ்வரசன் கடுஞ்சினங்கொண்டவனாய், “தாமாஜி பண்டிதனைப்பற்றிக் கட்டிக்கொண்டு வாருங்கள்” என்று, தனது சேவகர்களை அனுப்பினான். அவர்கள் மங்களபடத்துக்கு வந்து, அரசனுக்கினையை தாமாஜிபண்டிதர்க் கறிவித்து அவரை அழைத்துக்கொண்டுவருகையில், இடைவழியில் பண்டரிபுரத்துள் நுழைந்து அதனைக் கடக்கவேண்டியிருந்தது. அங்கே தாமாஜிபண்டிதர், சேவகர்களைப் பலவிதத்திலும் பிரார்த்தித்து, அவர்கள் அநுமதியைப்பெற்று, பகவன் மந்திரத்துள் நுழைந்து, ஸ்ரீமத் பண்டரிநாதனை ஸேவித்து, பின்வருமாறு துதிக்கலாயினர்.

“முடிவற்றதாகவும், கடத்தற்கரியதாகவும், காமக்ரோத மோஹாதி * திமி † திமிங்கிலாதிகளால் பயங்கரமானதாகவுமுள்ள ஸம்ஸார

* திமி-நூறுயோஜனை நீளமுள்ள ஒரு பெருமீன்.
† திமிங்கிலம் - திமியிற் பெரியதாய் அதனை விழுங்குமீன்.

ஸாகரத்தைக் கடப்பதற்குக் கப்பலாய், அந்த ஸாகரத்தைக் கடந்து சேரும் ஸீமாமூல பூமியாய் இருப்பவனும், உபதேச பரம்பரையால் அறியப்படக்கூடியவனும், அளவிலாத ஆற்றலுள்ளவனும், காலதேச வர்த்தமானங்களால் தேயாதவனும், தனது நாமப்ரபாவங்களால் கர்மயோகாதியர்களுக்குப் பலப்ரதான சக்தியைக் கொடுப்பவனும், பிரமனாதியர்களைப்போல காலவசப்பட்டவனாகாமல் சகல சக்தியுக்தனாய், நித்யமாய் தேஜோமயமாய் ப்ரகாசிக்குந் திவ்யமங்கள விக்ரஹத்தோடு கூடின ஆனந்த ஸ்வரூபனாய் விளங்குபவனும், * ப்ரதானத்திற்கு ஸீமாமூல பூமியாய்,வேதவைதிகங்களைப் பரிபாலிக்கின்றவனும்; ப்ரதானமும் ஜீவனும் பிரளயகாலத்தில் ஒடுங்கும் ஸ்தானமாய், எல்லாவற்றிற்கும் † ஸாங்கர்யம் அற்றுள்ள ‡ ஸேதுவாய், ¶ முக்தாத்மாக்களைவிடச் சிறந்தவனென்று சொல்லக்கூடிய காரணத்வ சேஷித்வ யுக்தனாய், ப்ரபஞ்சத்திற்கு முடிவுற்றகாலத்தில் முடிவான இடமாய், ஆகாசாதி மேலான இடங்களில் நிறைந்தவனாயுள்ள ஸ்ரீ விஷ்ணுதேவா! ஜகத்காரணனான விராட்புருஷனும்,அவனுக்குக் காரணமான அகங்காரமும், அதற்குக் காரணமான மஹத்தத்வமும், அதற்குக் காரணமான ப்ரக்ருதியுமாய், இந்தத் தத்வங்களுடைய முக்ய கார்யங்களாய்,கார்ய காரண ரூபங்களாய்க் காணப்படுகிற ஸ்வாபாவிகங்களும், எண்ணிறந்தனவாகிய ஞானம், பலம், ஐஸ்வர்யம், வீர்யம்,சக்தி,புகழ், $ ஸௌசீல்யம்,அன்பு சௌர்யம், தைர்ய முதலிய ஸகல கல்யாண குணங்களும் விரும்பி அடையும் முதல்வனான நீ,க்ரியாஸ்வரூபங்களாலும், கர்த்த ஸ்வரூபங்களாலும் சேதனாசேதனங்களனைத்தையும் காக்கின்றனை. வேதங்களுக்கு அதிபதியும், வேதவேதாந்த வேத்யனும் வேதவேதாந்த சாஸ்த்ர ஸ்வரூபியும் நீயேயன்றி வேறன்று. கலைஞானமென்றும், இயற்கை ஞானமென்றும் சொல்லப்படுகிற இருவித ஞானங்களும்,வேத|| ப்ரவர்த்தகனான பிரமனும், § ஸ்ம்ருதி ப்ரவர்த்தகரான முனிவர்களும் நீயே. ⁂ அபக்ஷ்யாதிதோஷரஹிதனாய், ஜனனரஹிதனாய்,= அக்ஷரனாய், நித்யனான பரப்ரஹ்மம் நீயே. அப்பேர்ப்பட்ட நீ, பக்தபரிபாலனார்த்தம் பண்டரிக்ஷேத்ரத்தில் ஸ்ரீபாண்டுரங்க நாமத்தோடுகூடின அர்ச்சாரூபியாய் அவதரித்து ப்ரகாசிக்கின்றனை. ஆகையால், உன்னை ஸேவித்துச் சிந்தித்து, சரணடைந்தவனான எனது விஷயத்தில் ஸத்க்ரியா யோகங்களுக்கு இடையூறான ராகத்வேஷ மோஹாதி துர்க்குணங்கள் அற நீங்க வேண்டும்'' என்று வேண்டிக்கொண்டு,மீண்டும், ''ஓ பண்டரிநாதா! இந்த ஐஸ்வர்யத்தைத் தன்னதென்று பாவித்து, துரபிமான க்ரஸ்தனான அரசன் என்னைச் சிக்ஷிப்பதற்காக வரவழைக்கின்றான்; உனதுடைமையாகிய நான் எந்த இடத்தில் என்ன துன்பம் நுகர்ந்தபோதிலும், எனது

* ப்ரதானம்-முக்யம். † ஸாங்கர்யம் - கலப்பு. ‡ ஸேது - பாலம்.
¶ முக்தாத்மாக்கள் - ஜீவன் முக்தர்கள். $ சௌசீல்யம்-நல்லொழுக்கம்.
|| ப்ரவர்த்தகன்-அதிகாரி. § ஸ்ம்ருதி-மநுஸ்ம்ருதிமுதலிய சட்டநூல்.
⁂ அபக்ஷ்யம்-உண்ணத்தகாதது. = அக்ஷரன்-அழிவற்றவன்.



இதயத்தில் உனது த்யானமாத்திரம் தவறாமல் நிலைத்திருக்கவேண்டும். ராஜதண்டனையை யடைந்து, உன் ஸந்நிதிக்கு வந்து, பீமநதியில் மூழ்கி, நின்னை ஸேவிப்பேன். அந்த அரசன், கடுஞ்சினமனத்தனாய் எனது சரீரத்தைச் சேதிக்குமாயினும், * ப்ரக்ருதி விநிர்முக்தனாய், † விரஜா ஸ்நாநம் செய்து, ஸ்ரீ வைகுந்தத்தில் உன்னைத் தரிசிப்பேன்'' என்று விண்ணப்பித்து,ஸ்ரீ பாண்டுரங்கனுடைய திவ்ய ரூபத்தைத் தமது மனப் பெட்டகத்தில் மறைத்துப் பத்திரப்படுத்திக்கொண்டு, ராஜ படர்களைப் பின்பற்றி, பெதரிநகர்க்குச் செல்லாராயினர்.

இது இங்ஙனம் இருக்க, பக்தவத்ஸலனாகிய ஸ்ரீ புண்டரீக வரதன், தலையாரி வேடந்தரித்து, இடையிற் கந்தை உடுத்து, கரத்திற்கோலைப் பிடித்து, கணக்கோலை ஏந்தி, பணப்பையைத் தலையிற் சுமந்து, பதறி யோடி, பெதரி நகர்க்கு வந்து, அரச மந்திரவாசலில் நின்று; ''மங்களபடத்திலிருந்து, தாமாஜிபண்டிதர் அனுப்பின தலையாரி, தான்ய மூலமான திரவியத்தைக் கணக்குடன் கொணர்ந்தனன் என அரச னுக் கறிவியுங்கள்'' என்று துவாரபாலகர்களிடத்திற் சொல்லியனுப்பி, அரசனது அநுமதிபெற்று உள்ளே நுழைந்து, ஆஸ்தானத்தில் அரச னெதிரிற் சென்று வந்தனம்செய்து, கைகட்டி வாய்பொத்தி மிகவணக்க மாய் நின்றனன். அரசன் இவனைக் கண்டு, ''என்ன ஸங்கதி?'' என்று கேட்டான். அதற்குத் தலையாரி, அரசனை நோக்கி, ''ஓ அரச! தாமாஜிபண்டிதர், அரசுரிமைபாகச் செலுத்தவேண்டிய தான்ய முழுவதையும் நல்ல விலைக்கு விற்று, எண்பத்து நான்குலக்ஷம் வராகன்கள், கணக்குடன் என்கையிற் கொடுத்தனுப்பினார். ஆகையால் அதனைத் தேவர் ஸமுகத்திற்குக் கொண்டுவந்தேன்; தயைசெய்து ஏற்றுக் கொள்ளவேண்டும்'' என்று கூறி, தான்கொணர்ந்த கணக்கோலைக் கட்டுகளையும், பணப்பையையும் அரசற்கெதிரில் வைத்தனன். அதனைக்கண்ட அரசன் அதிசயித்து,''ஓ,தலையாரீ! உன்னைப் பார்த்தால் தலையாரியாகத் தோற்றவில்லை; உனது உடலின் ஒளி மிக விளக்கமுற்றிருக்கிறது; உனது முகக்கிளர்ச்சி எமது சித்தங்களைக் கவர்கின்றது; உனது அவயவங்கள் ஸாமுத்ரிக சாஸ்த்ரோக்தமாய் நற்பொலிவு பெற்று விளங்குகின்றன. நீயாவன்? தேவனோ! அன்றி யக்ஷனோ! நரனல்லை! நின்னை, நான் எங்ஙனம் காவலாளெனக் கருதி நம்புவேன். நீ கொணர்ந்த இச்சிறு பையகத்தில் அப்பெருந் தொகையாகிய எண்பத்துநான்குலக்ஷம் வராகன்கள் அடங்கியிருத்தல் அதிசயத்தின் அதிசயமாம்! உனது ஊரெது? பேரெது? தாய்தந்தையர் யாவர்? உன்னை வளர்த்தவர் எவர்? உனக்கென்னென்ன வித்தை தெரியும்? உன்து சுற்றம் எங்குளது? தாமாஜி பண்டிதர் உனக்கென்ன சம்பளம் தருகின்றனர்?'' என்று பல கேள்விகள் கேட்டனன். அதற்கு தலையாரியாகிய பகவான், ''ஓ அரச! எனது விருத்தாந்தத்தை விவர

* ப்ரக்ருதிவிநிர்முக்தன் - ப்ரக்ருதியைக் கடந்தவன்.
† விரஜாஸ்நாநம் - விரஜா நதியில் மூழ்குதல்.

மாய்த் தெரிவிக்கின்றேன்; கேள். நான் ஊரற்றவன், ஆனாலும் உலகடங்கலும் எனதூராகும்; எனக்குப் பேரும் இல்லை, சுற்றத்தார் ஆரும் இல்லை, ஆனாலும் உலகத்தில் உள்ள ஸமஸ்த சேதனா சேதனாத்மாக்களுடைய ஸமஸ்த நாமங்களும் என்னவையா யிருக்கின்றன. எல்லாவற்றிற்கும் நானே பிறப்பிடமா யிருக்கின்றேன். என்னை வளர்த்தவர் இலர், நானே அனைவரையும் வளர்ப்பவனாவேன்; நான் ஒன்றறிந்து ஒன்று அறியாதவனல்லன், எல்லாம் அறிவேன். எனக்கு உற்றார் ஒருவரும் இலர், எல்லாரும் எனக்கு உற்றாரே யாவர்; தாமாஜி பண்டிதர் தரும் * வேதனத்தால் ஜீவிப்பவனல்லன், ஸர்வாத்மாக்களுடைய பரிபாகம் உணர்ந்து அனைவர்க்கும் அவரவர் கர்மாநுகுணமாக வேதனம் தருபவன் நானே யாவேன்; இங்ஙனம் † ஸர்வநிவாஸியாகிய நான், ஸ்ரீமத் பண்டரிபுர க்ஷேத்ரவாஸியாய் விளங்குகின்றனன்; புண்டரீகன் என்னை அங்கு வீற்றிருக்கும்படி கட்டளையிட்டனன். ஆகையால், எனக்கு அது பரமபாவன ஸ்தானமா யிருக்கின்றது. ‡ அநந்த நாமியாகிய நான், விட்டல நாயகன் என்னும் தனிப்பெயரால் விளக்கமுறுகின்றனன். எனது $ துரைமகராகிய தாமாஜிபண்டிதர் முதலிய ஸாதுக்கள், என்னை இப்பேரிட்டு அழைக்கின்றனர். ஆகையால், எனக்கு இது நாமதேயமாய் விளங்குகின்றது. ஸர்வகாரணனான எனக்கு, தாய்தந்தையர் தேவகீ-வஸுதேவர்கள். அவர்கள், என்னை மகனாக வரித்தனராகையால், நான் அவர்களுக்குக் குழந்தையானேன்; ஸர்வரக்ஷகனாகிய என்னை வளர்த்தவர்கள் நந்தயசோதையர்; அவர்கள் அந்யபூணராதவர்களாய், என்னையே கோரியிருப்பார்கள்; ஆகையால், நான் எனது அன்பர்க்காக, எத்தனை இழிந்த தொழிலானாலும் என் மனமுவந்து செய்யக் காத்துக் கொண்டிருக்கின்றனன்; ஸர்வ ஜீவர்களுக்கும் அருஞ் சுற்றமாகிய எனக்கு, எனது திருநாமோச்சாரணஞ் செய்து, வைராக்ய முக்தர்களாய், பரதுக்கஞ் சகியாதவர்களாய், ஜீவ காருண்யத்தோடு கூடினவர்களாய் விளங்கும் பாகவதோத்தமர்கள் அனைவரும் இஷ்ட பந்துவர்க்கங்களாவார்கள். அவர்கள், தமது ஆத்ம பாரத்தை எனது கரகமலத்தில் அர்ப்பணஞ்செய்து, பயமற்றுத் திகழ்வார்கள். ஆகையால், அத்தகைய உத்தமர்களை நான், ஆத்மபந்துக்களாக அபிமானித்திருக்கின்றேன். ஸர்வாத்மாக்களுக்கும் பிழைக்கும் வழியுண்டாக்குகிற எனக்கு, தாமாஜிபண்டிதருடைய சுத்தமனத் துத்தம குணங்களே வேதனமாய் இருக்கின்றன. நான் ஆசையற்றவனாகையால், அவரது ஸற்குணநிதியிலுள்ள ஸுகுண கணங்களை வேதனமா யேற்றுக் கொண்டு, அவர்க்கு ஆபத்திலுதவும் வீர தீர சேவகனாய் இருக்கின்றேன். இன்னும் எனது விருத்தாந்தங்களைக் கேள். ராமயோகியர்களுக்கும் வாசாமகோசரனாகிய நான், பக்தபராதீனனாய், அவர்கள்

* வேதனம் - சம்பளம்.

† ஸர்வநிவாஸி - எல்லாவற்றிலும் பொருந்தி விளங்குபவன்.

‡ அநந்த நாமி - எண்ணிலாப் பெயர்களுள்ளவன்.

$ துரை - தலைவன், யஜமானன்.



வீட்டு வாசற் காவலாளனைப்போல காத்துக்கொண்டிருப்பேன். பிரம னாதியர்களுடைய முடிமுனைகளால் அலங்கரிக்கப்படும் திருவடித் தாமரைகளையுடைய நான், பக்த பாதரேணுவை, எனது முடிமீது தரிப்பேன். எனது பாதோதகமாகிய கங்கையால் த்ரிலோகங்களையும் பரிசுத்தமாக்கவல்ல நான், பரமபக்தர்களுடைய பாதோதகத்தைத் * ஸ்வீகரிப்பேன். வேதபுருஷனுடைய ஸ்தோத்ரங்களுக்கு அகோசரனாகிய நான், பாகவதர்களுடைய கீர்த்தனங்களுக்குச் சிர கர கம்பிதஞ் செய்து மகிழ்வேன். எனது ஸ்வபாவம் இத்தன்மைத்தென வுணர்ந்தோதற்கு நானும் வல்லவனல்லன். எனது துரைமகரான தாமாஜி பண்டிதர்க்கு, நீ துரைமகனாய் இருக்கின்றனை. ஆகையால், உன்னைப் பெருமைசெய்து, உனது கேள்விகளுக்கு ஒருவாறாக விடைகூறினேன்" எனக்கூறி, தனது ஸ்வரூபம், அங்குள்ளவர் அறியாதபடி, தனது மாயையால் அவர்களை மோகிக்கச்செய்து, வராகன்கள் வைத்திருந்த பையை யவிழ்த்து, † பர்வதாகாரமாய் தனத்தை அரையன் எதிரிற் குவித்து, "நான் பணத்தைச் செலுத்திவிட்டதற்கு, பற்றுச்சீட்டுத் தருக" எனக் கேட்டான். அரசன் ஸந்தோஷித்து, எண்பத்துநான்கு லக்ஷவராகன்களுக்கு பற்றுச்சீட்டெழுதி அவனுடைய கரத்திற்கொடுத்து, அவற்கு வஸ்த்ராபரணங்களை நன்கொடை அளித்து, தாமாஜிபண்டிதர்க்கு சிவிகைகளையும், யானை குதிரைகளையும், விலையில்லா வஸ்த்ராபரணங்களையும் வெகுமானமாக வழங்கி அனுப்பினன். விட்டலநாதன் அப்பொருள்களை மங்களபடத்துக்குக் கொணர்ந்து, தாமாஜிபண்டிதர் வீட்டிற்சேர்த்து மறைந்தனன். அன்றைக்கு மறுநாள் அரசதூதர் தாமாஜிபண்டிதரைக் கொணர்ந்து அரசற்கெதிரில் நிறுத்தினார்கள்.

அரசன் இருக்கைவிட்டு எழுந்து, தாமாஜிபண்டிதர்க்கு வந்தனஞ் செய்து, "ஓ, மஹாத்மா! உன்னால் அனுப்பப்பட்ட விட்டல நாயகன் என்னும் தலையாரி, எண்பத்து நான்குலக்ஷம் (84,00,000) வராகன்களைச் செலுத்திவிட்டு, நேற்றைப்பொழுதே என்னிடத்திலிருந்து பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொண்டுபோயினன். நீர் ஒன்றையும் உணராதவரென இச்சேவகரைப் பின் பற்றி வந்தீர்" எனக் கூறக்கேட்ட தாமாஜி பண்டிதர், "இஃது ஸ்ரீ பண்டரி நாதனுடைய திருவிளையாட்டெனத் தீர்மானித்து, "பாண்டுரங்கா! எனக்காக நீ, இந்த நீசவேடந் தரித்து வந்தனையே!" எனச் சோகமுற்று அவசராய் நிலமேல் வீழ்ந்து புரண்டார். அரசன் அவர்க்குச் சைத்யோபசாரங்கள் புரியச் சோகந் தெளிந்தது. அவர் எழுந்து நின்று, "ஓ, வேந்த! நீ மஹா பாக்யசாலி; ஆகையால் நினக்கு பகவான் ஸேவையருளினன்" எனக் கூறினார். அந்த அரசன் ஆனந்தமிக்கவனாய், "எனது பிழைகளை மன்னித்து, முன்போலவே அதிகாரத்தைத் தாங்கள் நிர்வகிக்கவேண்டும்" என்று அவரை வேண்டினான். அதைக்கேட்ட தாமாஜிபண்டிதர், "எனக்கு இனி உனது ஸேவகவிருத்தியால் பயனில்லை. நான் இனி, எனது ஜீவேசனாகிய புண்டரீகவரதனுடைய ஸந்நிதியில் வாழ்ந்து காலத்தைக்

* ஸ்வீகரித்தல் - ஏற்றுக்கொள்ளல்; † பர்வதாகாரம் - மலைவடிவாக.

கழிப்பேன்” எனக்கூறி, மங்கள படத்துக்கு வந்து, அரசன் விட்டல நாயகன் மூலமாய் அனுப்பின வெகுமானங்களனைத்தையும் ஸாது ஜனங்களுக்கு வழங்கிவிட்டு, ஸ்ரீமத் பண்டரிபுரத்தைச் சேர்ந்து, ஸ்ரீ ருக்மிணிகாந்தனை அநவரதமும் தரிசித்துக்கொண்டு, * கரணகளேபரங்களால், பகவந்முகோல்லாஸகரமான கைங்கர்யங்களைச் செய்து, அங்கேயே இடையறாமல் வஸித்து, பரமபதம் பெற்றனர். இம் மஹாநுபாவருடைய நற்சரிதை, இடையறாமற் படிக்கத்தக்கதென்று பெருமைப் படுத்தி, ஸாதுக்கள் அதனைத் துதித்துக்கொண்டிருந்தனர்.

பக்தஜனபாதந்த்ராய நம:

## ஐம்பதாம் அத்தியாயம்

# சாந்தபமணிராஜர் சரித்திரம்

பெதரி என்னும் பட்டணத்தில், சாந்தபமணியென்னும் அரசர், அரசாட்சி செய்துகொண்டு விஷயாநுபவங்களில் மூழ்கினவராய், அநவரதமும் மங்கையர் கோஷ்டிக்கு மத்தியில், அநேக சந்திரர்களுக்கிடையிலுள்ள சூரியனைப்போல அமர்ந்திருந்து காலங்கழித்தனர். ஒரு நாள், இந்த அரசர் திவ்யாபரணாலங்க்ருதராய், தம்மைப்போலவே ஆடையணிகளால் அலங்கரித்து விளங்கும் அரிவையர்களுடன் அந்தப்புரத்தில் உலாப்போந்து, பலகணிக் கருகில் நின்று, இனிய கனிகளைப் புசித்து, அந்தக் கனிகளின் தோல்களை அந்தப் பலகணிவாசல்வழியாய் வெளியே வீசியெறிந்து கொண்டிருந்தனர். அந்த ஸமயத்தில், உன்மத்தர்போன்ற பனகர் என்னும் ஞானி, ராஜபடர்கள் அறியாதபடி அங்கு வந்து, அரசர் வீசியெறியும் பழங்களின் தோல்களைப் பொறுக்கித் தின்றுகொண்டிருந்தனர். அதனைக்கண்ட ராஜமஹிஷிகள், “ஓ, நாயகா! எவனோ * பரபுருஷன் இந்த அந்தப்புரப் பலகணிப் புறத்திலிருந்து, நாம் வீசி எறியும் பழங்களின் தோல்களைப் பொறுக்கித் தின்கிறான்” என்று கூறிக் காட்டினார்கள். அதற்கு அரசர், கோபித்து, படர்களை வரவழைத்து, அவர்களுடைய அஜாக்ரதைக்காக அவர்களைத் தண்டித்து, “பயமற்றவனாய் அந்தப்புரப் பலகணிப்புறத்தில் வந்திருக்கிற இம்மனிதனை அடித்துத் துரத்திவிட்டு வாருங்கள்” என்று கட்டளையிட்டனர். படர்கள், ராஜனது கட்டளையின்படி அந்த பனகரைப் புடைத்தனர். உன்மத்தரான பனகர், தம்மை ராஜபடர்கள் நையப் புடைக்கையில், அவ்வடிகளைப் பொறுத்துச் சிரித்துக் கொண்டிருந்தனர். அதைக்கண்ட அரசர், “அவனை அடியாதேயுங்கள்.” என்று படர்களுக்குக் கட்டளையிட்டு, அப்பனகரைத் தமதருகில் வரவழைத்து, “ஓ, பித்தா! உனக்கு உறைக்க விழுந்த அடிகளுக்குச் சோகிக்காமல், நீ சிரித்த காரணம் என்ன? என்று கேட்டனர். அப்பனகர், மறு

* கரணகளேபரம் - அந்தக் கரணங்களும் சரீரமும்



படியும் நகைத்து! “ஓ, அரச! உதவியற்றனவென வீசியெறியப்பட்ட தோல்களை விழுங்கின எனக்கே இத்தனை பெரிய சிக்ஷை கிடைத்ததென்றால், சுளைகளை விழுங்கின உனக்கெத்தனை பெரிய சிக்ஷையை பகவான் விதிப்பானோ என்றும், அந்தப்புரத்துக்குப் புறத்தி லிருந்த எனக்கு இத்தனை கடுந் தண்டனை கிடைத்ததென்றால், அந்தப்புரத்திற்கு அகத்திலுள்ள உனக்கு எத்தனை கடுந் தண்டனை பகவானால் விதிக்கப்படுமோ என்றும், தனியனான எனக்கிவ்வளவு கடுந் தண்டம் பலித்ததென்றால், மங்கையர் பலரோடுந் தங்கிய உனக்கு எவ்வளவு கொடுந் தண்டம் கிடைக்குமோ என்றும், பிறர்க்கின்னா செய்யாத களங்க ரஹிதனாகிய எனக்கு, இவ்வாறு அடிகளும் குத்துக்களும், உதைகளும் கிடைத்தன என்றால், எனக்கும் என்போன்ற பிறர்க்கும் இன்னா செய்து களங்க ஸஹிதனாகிய உனக்கு எவ்வாறு அடிகள் முதலியன கிடைப்பனவோ என்றும், இந்திரியங்களைத் தடுத்து பகவத் பரனாகிய என்னை இங்ஙனம் நீ சிக்ஷித்தால், இந்திரியங்களை யடுத்து, பாவையர் பரனாகிய உன்னை எங்ஙனம் பகவான் சிக்ஷிப்பானோ என்றும் நகைத்தனன்; இந்த அற்ப காரணங்களைத் தவிர, நான் நகைத்ததற்குக் காரணம் வேறொன்றும் இல்லை” என்று பரமசாந்தத்துடன்,

‘அரச இன்னும் அறைகுவன் கேண்மோ
நின்னினும் என்னினும் நிலைத்தன அனைத்தினும்
விஷ்ணு ஒருவனே வியாபித் துளனால்
அங்ஙன மாக அவலமா வொருநீ
கோவ மென்பாற் கூட்டிப்பெருக்கினை
விஷ்ணு பதவியை விரைவி லடைய
விரும்பினை யாகில் விஷ்ணுவின் விபூதியாஞ்
சேதனா சேதன பேத மின்றிச்
சம்பா வனையுடன் அமர்ந்துன் கோபச்
சழக்கை யறுத்துக் கழித்து வகுத்துவிட்
டொழித்து விளங்கியிவ் வுலகில்
உத்தம னபிரு முத்தி பெறவே’

உன்னிடத்திலும் என்னிடத்திலும் இன்னும் இவ்வுலகிற் “ஓ, அரச! பொருந்திய எல்லாவற்றிலும் விஷ்ணு ஒருவனே வியாபித்திருக்கின்றனன்; அங்ஙனம் இருக்க, அரசனாக அவதரித்து ஒப்பிலாப் பதவியுடன் விளங்கிய நீ, காரணமில்லாமலே என்மேற் கோபத்தைக் கூட்டிப் பெருக்கினை. விஷ்ணுவின் பதவியை விரைவில் அடைய நீ விரும்பினையானால், விஷ்ணுவின் ஐஶ்வர்யங்களாகிய சேதனா சேதன ஜீவர்களிடத்தில் பேதமில்லாமல் சமரஸ பாவனை வகித்து, உனது கோபமென்னுங் குற்றக் குப்பையைக் கிளறிக் கழித்து வகுத்து, அறவே ஒழித்துவிட்டு, இந்த உலகில் வாழ்ந்து, பலர் உன்னை உத்தமன் என்று சொல்லும்படி விளங்குவையாயின் மோக்ஷ பதவியைப் பொருந்துவை” எனக் கூறின வார்த்தைகளைக் கேட்டமாத்திரையில், அரசர்க்கு ஞானோதயமாகி, தாம்

வைராக்ய சீலராய், பந்துக்களையும் மக்களையும் விட்டு, மனையையும் மனைவியரையும் ஒழித்து, தனத்தையும் இனத்தையுந் தணந்து, தாமரைக் கண்ணன்மேல் அன்பைக் கூட்டி, கோபத்தைக் கழித்து, சாந்தத்தைப் பெருக்கி, அவனுடைய செந்தாமரைத் திருவடிகளைத் தமது அந் தாமரை மலரகத்தில் இருத்தினர். இங்ஙனம், பனகர் கூறின வார்த்தைகளைக் கேட்டமாத்திரையில், பகவத் கடாக்ஷத்தால் அரசர்க்கு பக்தி வித்துகள் அங்குரித்து, அவர் நிர்ஜன வனத்தில் நுழைந்து, ஒன்றியாய்க் குந்தியிருந்து, "அந்தோ! மேலான மானவ சரீரத்தைப் பெற்றும் விஷயாநுபவத்தால் நான் காலத்தை வீணிற் கழித்தேனே! பகவான், ஜடப்ராயரான பனகருடைய வடிவந் தாங்கிவந்து, எனக்கு அநுக்ரஹித்தனன். நான் எவ்விதத்தில் பகவானை ஆராதித்து, பரிசுத்தனாவேனோ!" என்று அவர் ஆலோசித்துக் கொண்டிருக்கையில், பண்டரி யாத்ரை செய்யும் ஸாதுஜனங்கள் கூட்டங்கூடி, ஸகல சராசரோத்பத்திக்குக் காரணஸ்தானமாகிய நாபீகமலத்தையுடைய பகவானைப் புகழ்ந்துபாடிக்கொண்டு, ஆனந்த நடனம் ஆடி, வழிபற்றிச் செல்வாராயினர். அரசர் அவர்களைக் கண்டு பரமானந்த மிக்கவராய் எழுந்து வந்து, அவர்களை பிரதக்ஷிண நமஸ்காரங்கள்செய்து, "ஓ ஸாதுஜனங்காள்! இன்று எனக்கு நல்ல நாள்; நானும் உங்களைப் பின்பற்றி வருவேன்" என்று, அவர்களுடன் பண்டரிபுரத்துக்கு வந்து, சந்திரபாகையில் ஸ்நானம்செய்து, இந்திரேசனுடைய மந்திரத்துள் நுழைந்து, அங்குள்ள ஸாது கோஷ்டிகளுக்கு வந்தனஞ் செய்து, இடுப்பில் ஊன்றிய கையனாய், செங்கல்லின்மேல் நின்ற திருக்கோலத்துடன் எழுந்தருளியிருக்கும் புண்டரீக வரதனைத் தரிசித்து, * காடாலிங்கனஞ் செய்து, அந்த புருஷோத்தமனுடைய திருவடித்தாமரைகளைத் தமது சிரத்தால் அலங்கரித்து, "பண்டரிநாதா! அஜ்ஞானக் கிணற்றில் மூழ்கியிருந்த எனக்கு, பனகர் வடிவந்தாங்கி வந்து ஜ்ஞானோபதேசஞ் செய்தனை; நான், இதுவரையில் ஸாது ஸஹவாஸம் செய்தறியேன். உனது உடைமையாகிய இந்த ஆத்மாவை உனது இஷ்டம்போல் நீ கைப்பற்றி ஆளலாம். இதுமுதல் எனது வாழ்வில் எனக்கு † அந்வயமில்லை. நீ எனக்கு ஆத்மாவாய், நான் உனக்குச் சரீரமாய் இருக்கிறபடியால், உனது சரீரத்துள்ள அழுக்கை, நீயே போக்கியருளுக" என்று விண்ணப்பித்து, அன்னபானங்களை நீக்கி, மூன்றிரவும் பகலும் உபவஸித்திருந்தனர். ஸ்ரீருக்மிணீ காந்தன், மூன்றாநாள் இரவில், அவருடைய கனவில் ‡ ஸாக்ஷாத்கரித்து; விவேகஸிந்துவென்னும் கிரந்தத்தை அவர் கரத்திலளித்து "ஓ, வத்ஸா! நீ வருந்தற்க; உனது பிரார்த்தனையை அங்கீகரித்து, உனது வாழ்வின் கவலையை நானே வகித்திருக்கின்றேன். கல்யாணபுரத்தில் ஸஹஜானந்த ஸ்வாமி யென்னும் மஹாத்மா ஒருவர் உளர். நீ, அவர்க்குச் சிஷ்யனாய், அவரால் உபதேசம் பெறக்கடவை" என அநுக்ரஹித்து மறைந்தனன். அரசர்,

* காடாலிங்கனம - இறுகத்தழுவல். † அந்வயம் - ஸம்பந்தம்.
‡ ஸாக்ஷாத்கரித்தல் - கட்புலனுறவக் காட்சியளித்தல்.



உடனே விழித்தெழுந்து ஸ்வப்நத்தில் பகவான் தமக்களித்த புஸ்தகம் ப்ரத்யக்ஷமாய்த் தமது கரத்தில் இருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்து,

"இன்றேயென் ஜன்மமீடேறியநா ளின்றிரவே
நன்று விடிந்தெழுந்தேன் நான்"

'இன்றே எனது ஜன்மம் ஈடேறிய நாள். இற்றையிரவே நல்லபடி கழிந்து எனக்கு நற்பொழுது விடிந்தது. ஆகையால் நான் புண்ணியவானாயினேன்' எனக் கூறி, தமக்கு பகவான் தந்தருளிய விவேகஸிந்துவென்னும் கிரந்தத்தை வாசித்துமனனம் பண்ணிக்கொண்டிருக்கையில், இவருடைய நல்வினை முதிர்ச்சியால், ஸஹஜாநந்தஸ்வாமி புண்டரீக வரதனை ஸேவிக்கு நிமித்தம் பண்டரிபுரத்திற்கு வந்தனர். புதையலைக் கண்டெடுத்த வறியவனைப்போல அரசர் மனங்களித்து, ஸஹஜானந்த ஸ்வாமிக்கு ப்ரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து, தமது ஸ்வப்ந விருத்தாந்தங்களை அறிவிக்க, அந்த மஹான் ஸந்தோஷித்து பரமகிருபையுடன் ஸ்ரீதாரக மந்திரத்தை இவர்க்குபதேசஞ் செய்தருளி, ம்ருத்யுஞ்ஜயரென்னும் தீக்ஷாநாமம் தந்து, ஸ்ரீபாண்டுரங்கனைத் தரிசித்துக் கல்யாணபுரத்துக்குச் சென்றனர். ம்ருத்யுஞ்ஜயர், குருபதிஷ்ட மார்க்கத்தில் ஒழுகி, அநவரத மநநசீலராய் பரமானந்தத்தை அநுபவித்து, நாராயணபுரத்தில் வாஸஞ் செய்துகொண்டிருந்தனர்.

அவ்வூரில் வாழ்ந்த பவராய ஜங்கமன் என்பவன், ம்ருத்யுஞ்ஜயரை அடுத்து, அவரதநுக்ரஹத்தைப் பெற்று, அநவரதமும் பகவத் குணாநுபவத்தில் ஈடுபட்டிருந்தனன். அங்கு வாழ்ந்த ஜங்கமர்களுக்குள்ளே சிரேஷ்டனும், ஹம்ஸன் என்னும் பெயருடையவனும் ஆகிய ஜங்கமன் ஒருவன், இவ்விருத்தாந்தத்தைக்கேட்டு, பவராய ஜங்கமனை அழைப்பித்து, "ஞானவானானாலும் அந்ய ஜாதியானாகிய ம்ருத்யுஞ்ஜயனை நீ எங்ஙனம் ஆசார்யனாக ஏற்றுக்கொண்டனை? எமது அநுமதியின்றி நீ செய்தது பெரும்பிழையாயிற்று; ஆகையால் நீ † ப்ரஷ்டனாயினை. பித்தளை பொன்பூச்சடைந்தாலும் உண்மையிற் பொன்னாகுமா? அங்ஙனமே, ம்ருத்யுஞ்ஜயனுடைய ஞானம் எத்தனை மிகுந்துள்ளதானாலும், அவன் நம்மைப்போல ஜங்கமனாவனோ!" எனக்கூறி, அங்குள்ள ஜங்கமர்களையெல்லாம் ஒன்றுசேர்த்து தன் வசப்படுத்தி, எல்லாரும் ஒரே மனதாய்ப்பேசி, பவராய ஜங்கமனைத் தமது ஜாதியிலிருந்து தள்ளிவிட்டார்கள். அதற்கு, பவராய ஜங்கமன் சோகித்து, தனக்காசார்யனாகிய ம்ருத்யுஞ்ஜயரிடத்திற்கு வந்து அவரை நமஸ்கரித்து, நடந்த விருத்தாந்தத்தை விண்ணப்பித்தான். அதுகேட்ட ம்ருத்யுஞ்ஜயர் பவராய ஜங்கமனை நோக்கி, "நீயேன் சோக முறுகின்றனை! யார் தூஷித்தாலும், யார் பூஷித்தாலும் உனக்கென்ன? தூஷண பூஷணங்கள் சரீரத்திற்கே அன்றி ஆத்மாவுக்கு இல்லை. ஆத்மா ஞானானந்த ஸ்வரூபனாய், ஞான குணமுடையவனாய், நித்யனாய், அவி

* குரு+உபதிஷ்டம் - குருகற்பித்தது. † ப்ரஷ்டன் - இழிந்தவன்.

காரியாய், பகவானுக்கு சேஷபூதனாய் விளங்குவான். ஹம்ஸன் முதலியோர் உனக்கு அவமானம் செய்யவேண்டுமென்று நினைத்து உன் சரீரத்திற்கு அவமானம் செய்தனர். ஒரு புருஷன், ஜன சூன்யமான வனத்திற் போய்க்கொண்டிருக்கையில், தன்னை வருத்த வந்த புலியை வேறொருவன் வந்து கொன்றால், தான் ஸந்தோஷித்து அந்தக் கொடிய ஜந்துவைக் கொன்றவனுக்கு வெகுமானந் தருவானல்லவா? அங்ஙனமே ஸம்ஸாரப் பெருங்காட்டில் அகப்பட்டு வருந்தும் சேதனற்கு, சரீரமாகிய பெரும்புலி, பயந்தரும் பெரும்பகையாயிருக்கின்றது. எங்ஙனமெனில், குடத்தில் வைக்கப்பட்ட தீபவொளியை, அந்தக் குடம் மறைப்பதுபோல ஞானவிளக்கங்குறைவதால் ஆத்மா தனது ஸ்வரூபத்தையும் ஈஸ்வர ஸ்வரூபத்தையும் மறந்து, பாப கர்மங்களில் ஈடுபடுகின்றது. இப்படிப்பட்ட விரோதியாகிய சரீரத்திற்குத் தீங்கு செய்பவர்களிடத்தில், மதிவாணன் நன்றி செலுத்தவேண்டும். நமது பகைவனுக்குப் பகைவனாயுள்ளவன் நமக்கு நண்பனே யாவான், அல்லவா?

“ஈஸ்வர நிலையில் ஈடுபட் டவர்களாய்
ஈஸ்வர விளக்கம் எய்தி யிருத்தலால்
சேதனா சேதன பேத மகற்றி
அவ்வக ளனைத்தும் அரிதிரு வுருவென
மதித்து வாழும் மகான்கள் தம்மை
மூடர்செய் நிந்தை முற்றும்
புகழாம் அவர்புகழ் இகழா மன்றே”

ஈஸ்வர சரணாகதி நிஷ்டர்களாய், ஈஸ்வர விளக்கம் எய்தியிருத்தலால் சேதனா சேதன பேதமகற்றி, அவைகளனைத்தும் அரியின் திருவுருவென்று மதித்து வாழும் பெரியோர்தம்மை, மூடாத்மாக்கள் செய்யும் தூஷணமுழுவதும் பூஷணமாகும்; பூஷணமுழுவதும் தூஷணமாகும். எங்ஙனமெனில், பகவத் பக்தர்கள், சரீரம் நசிக்குமென்றும், ஆத்மா நித்யனென்றும், இவ் வாத்மாவுக்கு விஷயாநுபவம் நரககாரணமாமென்றும் எண்ணி வாழ்வார்கள். மூடர்கள், தேகமே ஆத்மாவென்றும், விஷய சுகமே புருஷார்த்தமென்றும் எண்ணியிருப்பார்கள். இப்படிப்பட்ட மூடர்கள், ஸாதுஜனங்களுடைய குணங்களைக் குற்றங்களாகவும், குற்றங்களை குணங்களாகவும் கூறி மகிழ்வார்கள். அந்த மூடர்கள் செய்த பரிபவத்திற்கு மகிழ்வுறக்கடவை” என இதோபதேசஞ் செய்தனர்.

இங்ஙனம் இருக்க, அந் நாட்டை ஆளும் அரசனாகிய காசிபதியென்னும் மஹாநுபாவன், விவேகசாலியாய், பரமசிவனிடத்தில் மிகவும் பக்திசெய்து வாழ்வானாயினன். அவன், நாடோறும் பதினாயிரம் ஜங்கமர்களுக்கு அன்னமிடுவது வழக்கம். ஒருநாள், ஜங்கமர்களைக் குந்தவைத்து, அவ்வரசன் அவர்கள் அருகில் நின்று, அவர்களுக்குப் பத்துவிதக் கறிகளுடன் அன்னம்படைத்து, “மஹாநைவேத்யம் செய்யுங்கள்” என்றனன். அப்போது பதினாயிரம் ஜங்கமர்



களும் தமது கரங்களில் கட்டிக்கொண்டிருந்த துணிகளைக் கட்டவிழ்த்துப் பார்க்கையில், அவைகளுக் குள்ளிருந்த லிங்கங்கள் மறைந்து போயின. அவர்கள் சோகமுற்றவர்களாய் ஒன்றுந்தோற்றாமல், “நாங்கள் ஆராதிக்கும் சிவலிங்கங்கள் மறைந்ததற்குக் காரணம் தெரியவில்லை. இதற்கு பிராணனைவிடுவது தவிர வேறு பிராயச்சித்தம் இல்லை. பதினாயிரம் ஜங்கமர்களுக்கும் ஒரேகாலத்தில் இப்படிப்பட்ட தீங்கு நேரிட்டமை விந்தையாயிருக்கின்றது. நாம், நமது மனமறிய அம்பிகாபதிக்கு யாதொரு குற்றமும் செய்ததில்லையே! அங்ஙனம் இருக்க, அந்தப் பரமேஸ்வரன் மறைவதற்குக் காரணம் விளங்கவில்லை” என்று வருந்தினார்கள். விவேகியாகிய அரசன் சிறிது யோசித்து, “ஜங்கமர்காள்! நீவிர், ஸாதுஜனங்களுக்கு அவமானம் செய்திருக்கக்கூடும். அதனால், பார்வதீபதிக்கு உங்கள்மீது கோபம் உண்டாயிற்றென்று எண்ணுகின்றேன்” என்று கூறக்கேட்ட ஹம்ஸன் முதலியோர், பவராய ஜங்கமர் விஷயத்தில் தாம் செய்த அபசாரத்தை அரசனிடத்தில் விண்ணப்பித்தார்கள். அதைக் கேட்டவுடனே அரசன் பயந்து நடுங்கினவனாய், “நீவிர் மிகவும் அநர்த்தம் செய்தீர்கள்; ம்ருத்யுஞ்ஜயர் ப்ரமயோகி; அம்மஹானுடைய ப்ரபாவம் உணராத நீவிர் அபசாரப்பட்டீர்கள். நாம் அனைவரும் அம்மஹானைச் சரணடைந்தால், நமது பாவங்கள் இறக்கும்; பரமேஸ்வரானுக்ரஹம் சிறக்கும்” எனக்கூறி, அந்தப் பதினாயிரஞ் ஜங்கமர்களையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு, ம்ருத்யுஞ்ஜயரிடத்திற்குப் போய், அவரைச் சரண்புகுந்து, நடந்த விருத்தாந்தங்களை நவின்று, “எங்கள்மேற் கருணைகூர்ந்து, நாங்கள் பரமேஸ்வரானுக்ரஹத்துக்கு இலக்கியமாகும்படி தாங்கள் சித்தமிரங்கியருளவேண்டும்” எனப் பிரார்த்தித்தான். ம்ருத்யுஞ்ஜயர் திருவுளமிரங்கி, அனைவரையும் உட்கார்ந்திருக்கக் கட்டளையிட்டு, “ஓ, பாக்யவான்களே! கேளீர்: எனது மடத்தில் வேதாந்தியென்றும் சித்தாந்தியென்றும் நாமங்கள் பூண்ட இரண்டு * சுவானங்கள் உள. அந்த சுவானங்கள், நீவிர் ஆராதிக்கின்ற சிவலிங்கங்களை விழுங்கியிருக்கும் என்று எண்ணுகின்றேன்” எனக்கூறி, அந்த சுவானங்களைப் பேர்களிட்டு அழைத்து, அவைகளை நோக்கி, “இந்த ஜங்கமர்களுடைய சிவலிங்கங்களை நீங்கள் ஏன் விழுங்கினீர்கள்! அவைகளை அவர்களுக்குக் கொடுத்து விடுங்கள்” என்று நியமித்தார். அந்த நியமனப்படியே, அவ்வேதாந்த ஸித்தாந்த † ஞமலிகள் தாம் விழுங்கியிருந்த சிவலிங்கங்களை அனைவரும் பார்க்கும்படி கக்கி வெளிப்படுத்தின. இவ்வதிசயத்தைக்கண்டார் அனைவரும் ஆச்சரியப்பட்டார்கள். ஜங்கமர்கள் மிருத்யுஞ்ஜயரைநோக்கி, “ஓ, மஹாத்மா! இந்தப் பதினாயிரஞ் சிவலிங்கங்களுக்குள், எதெது எவ்வெவரால் ஆராதிக்கப்பட்டதோ, எங்களுக்குத் தெரியவில்லை. தாங்கள் எங்கள்மீது கருணைகூர்ந்து, அவரவர் சிவலிங்கத்தை அவரவர்க்குக் கொடுத்தருளவேண்டும்” எனப் பிரார்த்திக்க, ம்ருத்யுஞ்ஜயர் பரமேஸ்வரனை த்யானித்தார். உடனே அவரவர் ஆராதித்துக்கொண்டிருந்த

* சுவானம் - நாய். † ஞமலி - நாய்.

சிவலிங்கங்கள் அவரவர் கரத்திற் சேர்ந்தன. அவர்களனைவரும் ஸந்தோஷித்து முன்போலவே அச் சிவலிங்கங்களை தமது கரங்களிற் கட்டிக்கொண்டு, இடி முழக்கமேபோல பகவானைத் துதித்து, ம்ருத்யுஞ்ஜயர்க்கு ஸ்தோத்ர ப்ரதக்ஷிண வந்தனங்கள் செய்தார்கள். அப்போது, ஹம்ஸன் முதலிய ஜங்கமரனைவரும், "ஸாக்ஷாத் கைலாஸபதியே ம்ருத்யுஞ்ஜய வேஷந்தாங்கி, நாம் நரகக்குழியில் வீழ்ந்தழியாவண்ணம் காத்தருளினன். இவர்க்கு ம்ருத்யுஞ்ஜயரென்று ஸஹஜானந்த ஸ்வாமிகள் நாமகரணஞ் செய்தது தகும் தகும். இந்த மஹானுடைய திருமடத்தில் வேதாந்த ஸித்தாந்தங்களே சுவான ரூபங்களுடன் பொருந்தியிருந்து இவர் சொற்படி கேட்கின்றன. ஆகையால், இவரே வேதாந்த வேத்யராவார்" எனப் புகழ்ந்து, அந்த பரமயோகியருடைய கட்டளையைப் பெற்று, அரசனரண்மனைக்குச் சென்று, பரமேச்வரனுக்கு மஹா நைவேத்யம் செய்து, * நிர்மாலியத்தைத் தாமுண்டு மகிழ்ந்தனர். இந்த ஜங்கமரனைவரும், பவராய ஜங்கமரை நமஸ்கரித்து வணங்கி, அபராத மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, அவரைத் தமது குல தெய்வமாக் பாவனைசெய்து ஆராதித்தார்கள். ஸ்ரீபண்டரிநாதன் தனது பக்தரைத் தூஷித்தவர்களைத் தண்டித்து, அவர்களை அநுதாபயுக்தர்களாக்கிக் காத்தனன். ம்ருத்யுஞ்ஜயர், தமது உபதேசாநுஷ்டானங்களால், அநேகாத்மாக்களுக்கு பக்தி விரக்திகளை உண்டாக்கி, பகவத் ஸாயுஜ்ய பதவி பெற்றனர்.

பாகவதாபசார அஸஹிஷ்ணவே நம:

## ஐம்பத்தொன்றும் அத்தியாயம்

# பாநுதாஸர் சரித்திரம்

பைட்டினி புரத்தில் ஸூர்யோபாஸகனான வேதியன் ஒருவற்கு, பரமசிவாம்ஸத்தால் ஒரு புத்திரர் அவதரித்தனர். அந்தப் புத்திரர்க்குத் தாய் தந்தையர், தக்க காலங்களில் சௌளம், உபநயநம் முதலியன செய்வித்து, அவரை ஒரு உபாத்யாயரிடத்தில் வாசிக்க அனுப்பினார்கள். படிப்பில் சிரத்தையற்ற அந்தப் பிள்ளை பாடசாலையில் ஒரு நாழிகைப் போதானாலும் உடல் பொருந்திக் குந்தியிராமல், வெளியே எங்காவது தமதிஷ்டம்போல் ஓடி ஒளித்துக்கொள்வது வழக்கம். உபாத்தியாயர் எத்தனை தண்டித்தும், தகப்பனார் விழியுருட்டிக்காட்டி எத்தனை கோபித்தும், தாயார் பழம் கற்கண்டு கொடுத்து எத்தனை இதங் கூறியும், அவைகளைக் கொள்ளாத அந்தப் பாலகர், தமது பாடங்களைப் படியாமல் எப்போதும் விளையாட்டிலேயே விருப்ப முற்றிருந்தனர். இங்ஙனம் இருக்க, ஒரு நாள், அவருடைய தந்தை, அவரை மிகவும் கோபித்துப் பயமுறுத்தியதால், அவர் யாரோடும் சொல்லாமல் காட்

* நிர்மாலியம் - கடவுட்குப் படைத்த மிகுதி.



டுக்கு ஓடிப்போய் விட்டார். இங்ஙனம் சென்று வனநடுவில் ஒரு மலையைக் கண்டு அம்மலை முழையில் நுழைந்து, அங்கே அர்ச்சாரூபத்தைப் பெற்று விளங்கியிருந்த ஸூர்ய நாராயண மூர்த்தியை ஸாஷ்டாங்க வந்தனம் செய்து நின்றுகொண்டிருக்கையில், அந்த நாராயண மூர்த்தி இந்தப் பிள்ளைக்கு அநுக்ரஹிக்க விரும்பி மானிடவுருவந்தாங்கி வந்து, ஒரு கிண்ணத்தில் பசும்பாலைக் கொடுத்து, "ஓ, வத்ஸா! இப்பாலையுனது வயிறு நிறையக்குடி; இடையறுமல் நீ ஸ்ரீபாண்டுரங்க நாதனை தியானித்துக்கொண்டிரு; அந்த தேவனை த்யானித்துப் பஜிப்பதனால் நீ அனைவரினும் பெருமையிற் சிறந்தவனாய் விளங்குவை. அந்த தேவ சிகாமணியை உபாஸித்து, துருவர் * ஸர்வோத்க்ருஷ்ட பதவியை அடைந்தனர். அந்த ஜகதீஸன், தனது பக்தராகிய ப்ரஹ்லாதனர்க்காக ஸ்பாஸ்தம்பத்தில் அவதரித்து, அந்த பாகவதோத்தமருடைய வார்த்தையை மெய்ப்பித்தான்; பலிச்சக்ரவர்த்திக்கு முன்னின்று தேவேந்திராதிபத்யத்தை அருளி இன்றளவும் அவருடைய க்ருஹ த்வாரத்தில் வஸித்து, அந்த ஸுசீலரைக் காத்தளிக்கின்றனன். இன்னும் அந்த ஸர்வாத்மகன் உண்மை அன்பர்களுக்காகச் செய்தருளிய அற்புத காரியங்களை எடுத்துரைக்க முடியாது. நீ அந்த விட்டல நாதனை பக்தியுக்தனாய் பஜிக்கக்கடவை. அந்த லக்ஷ்மீகாந்தனை ஆராதிக்கும் விதத்தைச் சொல்லுகின்றேன்; கேள்.

'நாரா யணனை நாக்காற் புகழ்க
மாதவன் தன்னை மனத்தால் நினைக்க
கமலை நாதனைக் கரங்களாற் றொழுக
திருமால் சரிதையைச் செவிகளாற் கேட்க
கண்ணன் றன்னைக் கண்களாற் காண்க
ஸ்ரீதரன் தனது திருக்கோயிலுக்குக்
கால்களால் நடந்து கதிபெற விளங்குக
முகுந்தன் பாத முளரியிற் றுளசியை
மூக்கால் விரும்பி முகர்ந்து மகிழ்க
சிரத்தால் ஹரிபதம் தினமும்
வணங்கி வாழ்க வாழ்க நீயே'

நாக்கால் நாராயணனைப் புகழக்கடவாய்; மனத்தால் மாதவனை நினைக்கக்கடவாய்; கைகளால் லக்ஷ்மீகாந்தனைத் தொழக்கடவாய்; செவிகளால் திருமாலுடைய திவ்ய சரித்ரத்தைக் கேட்கக்கடவை; கண்களால் கண்ணபிரானைக் காணக்கடவாய்; கால்களால் ஸ்ரீதரனுடைய திருக்கோயிலுக்கு நடந்துசென்று பரமபதமடையும்படி விளங்கக்கடவை. மூக்கால் முகுந்தனுடைய திருவடித்தாமரைமேல் விளங்கும் துளசியை அன்போடு முகர்ந்து களிக்கக்கடவாய்; தலையால் ஹரியின் திருவடிகளை நாடோறும் வணங்கி வாழக்கடவை. தொன்று தொட்டுப் பல்வேறு பிறவிகள் அடைந்து இந்திரிய வசப்பட்டவனாய்,

* ஸர்வ + உத்க்ருஷ்டம் - அனைத்தினும் மேலானது.

ஸம்ஸாரக் காட்டகத்தில் வழிதெரியா தலைந்த உனக்கு, பகவான்; தனது பெருந்தண்ணளியால் உத்தமமாகிய மனிதப் பிறவியைத் தந்தனன். இந்த மனித சரீரத்தால் ஸகலத்தையும் ஸாதிக்க லாகும். இந்தச் சரீரம் இருக்கையிலேயே முமுக்ஷுவாய், பகவத் ப்ராப்திக் குப் பாத்ரவானுகாயெனின், மறுபடியும் உனக்கிப்படிப்பட்ட மானிடப் பிறவி கிடைப்பது கஷ்டமாய் முடியும்.

‘பகவத் விஷயமாய்ப் பயன்படச் செலுத்தி
உய்யுந் திறத்துக் குதவியா யுள்ள
கரம்கண் செவிவாய் கால்கள் முதலிய
அவயவங் களைப்பெற் றதிசய மாகும்
தேக மென்னும் திரவியம் பகவான்
தண்ணரு ளாலே நண்ணிய துனக்கே

அதனால்

அவயவங் களையுமிவ் வதிசய வுடலையும்
பகவத் விஷயமாய்ப் பயன்படச்
செலுத்தி வாழ்ந்து சிறப்படைவாயே’

பகவத் விஷயத்தில் பயன்படச்செய்து பிழைக்கும் வழிக்கு உதவியா யுள்ள கரங்களும், கண்களும், காதுகளும், வாயும், கால்களும் இன்னும் உள்ள அவயவங்களும் அமையப்பெற்று, அதிசயமாய் விளங்கியுள்ள தேகமென்னும் சிறந்த ஆஸ்தியானது, பகவானுடைய திருவருளினாலே உனக்குக் கிடைத்தது. ஆகையால், அந்த அவயவங்களையும், அதிசய மான தேகத்தையும் பகவத் விஷயமான காரியங்களிற் பிரயோஜனப் படும்படி செலுத்தி, அதனால் நீ சிறந்து வாழ்ந்து விளங்கக்கடவை. அங்ஙனம் செய்யாமல், அவைகளை துர்விநியோகஞ் செய்தனையாகில் அது வ்யபிசாரமாகும்; யமதண்டனை தவறாது. ஆகையால் நீ ஜாக் ரதை யுள்ளவனாய், விஷயங்களென்னும் கொடிய மிருகங்களுடைய தீமைகளுக்குத் தப்பி, ஸ்ரீவாஸுதேவ தருவின் நிழலை அடைந்து பிழைக்கக்கடவை. நான் கொடுத்த பாலால் நீ கலாநிபுணனாவாய்'' என்று அநுக்ரஹம்செய்து சூர்யநாராயணன் மறைந்தான். சூர்ய னுடைய அநுக்ரஹத்தைப் பெற்றதனால் இவர், பாநுதாஸர் என்கிற பேரால் சிறந்து விளங்கினார்.

பைட்ணி புரத்தில், இவருடைய தாய் தந்தையர், தமது புத்ராகிய இவரைக்காணமல் ஏழுநாட்கள் எங்கெங்குந் தேடியும், தேடச்செய்தும் வீணாய், இவர் அகப்படாமல் இருந்தபடியால் விசனமுற்றவர்களா னார்கள். இங்ஙனம் இருக்க, வேதியன் ஒருவன், வனநடுவில் உள்ள மலைக்கருகில் இந்த பாலகரைக் கண்டு, ‘‘தம்பீ! உன் வீட்டுக்குவா; நான் அழைத்துக்கொண்டு போகிறேன்'' என வேண்டியழைத்தும், இவர், ‘‘வரமாட்டேன்'' என்று சொல்லி வனத்துள் நுழைந்தார். பாநு தாஸருடைய தாய் தந்தையர், இவ்விருத்தாந்தத்தை அவ்வேதியனாற்



கேள்வியுற்று ஸந்தோஷித்து, வனத்துக்குச் சென்று மகனைத் தேடித் தேடி, அகப்படாமையால், முடிவில், மலைமுழைபில் இவர் இருக் கக் கூடும் என்றெண்ணி அதனுள் நுழைந்து பார்க்கையில், தமது புத்திரர் அங்கு அர்ச்சாரூபியாய் அமர்ந்திருந்த ஸௌர்ய நாராயண மூர் த்தியின் பாதங்களில் தமது தலையைவைத்துக்கொண்டு பயமற்றவராய்த் தூங்கிக்கொண்டிருக்கக் கண்டார்கள். அவர்கள் எல்லையில்லா ஆனந்த மடைந்து, தமது கரங்களால் அந்த பாலகரை அணைத்தெடுத்து உச்சி மோந்து மார்போடு இறுகத்தழுவி, ‘‘குழந்தாய்! நீயேன் இந்த யாரு மற்ற வனத்தில் வாழ்கின்றனை? பாலகனாகிய நீ எங்ஙனம் இம்மலை முழைபில் பயமற்றிருக்கின்றனை? நீ வீட்டைவிட்டு இன்றைக்கு ஏழு நாட்கள் ஆயின; எதனை ஆகாரமாகக்கொண்டு இளைக்காமல் இங்குப் பிழைத்திருக்கின்றனை?'' என்று கேட்டார்கள். அதற்கு பாநுதாஸர், தாய் தந்தையரை வணங்கி, ‘‘எனது தெய்வங்காள்! நான் படிக்கவில்லை யென்று நீங்கள் என்னை பயமுறுத்தினபடியால் என்மனம் வெறுத் துக் காட்டுக்கு வந்தேன். நான் இம் முழைபில் நுழைந்து, இந்த ஸௌர்ய நாராயண மூர்த்தியைத் தரிசித்து வணங்கி நிற்கையில், உன்னத சரீர விளக்கத்தோடுகூடிய ஒரு விலக்ஷண புருஷன் எனக்குக் காட்சி தந்து, ஒரு கலயத்தில் பசும்பாலைக் குடிக்கக் கொடுத்து இதோப தேசஞ்செய்து மறைந்தனன். நான் அந்தப் பாலை அருந்தி அவ்வுப தேசத்தைப் பொருந்தினதுமுதல்; பகவதநுக்ரஹத்தால், பசி தாகங்கள் என்னை வருத்தவில்லை. உலகடங்கலும் எனக்கு, ஈஶ்வரஸ்வரூபமாய் தோற்றுகின்றது. நானும் என்னைப் பெற்றுவளர்த்த நீங்களும் எனக் குத் தத்வோபதேசம் செய்த ஸௌர்ய நாராயண மூர்த்தியும், நான்வாழும் மலைமுழைஞ்ம் ஆகிய எல்லாம் பகவத் ஸ்வரூபமாகவே தோன்றுகின் றீர்கள். ஓ, அன்னாய்! ஓ, அப்பா! நான் என்னவெனக் கூறுவேன்! அந்த லக்ஷ்மீ காந்தன் இல்லாத இடம் இல்லை. அவனே எனக்கு ஜீவாதாரமாய், போஷகமாய், போக்யமாய் இருக்கின்றான். நீங்கள் என்னிடத்தில் இச்சையற்று, அந்த ஜகதீசனை வணங்கித் துதித்துத் தொழுது பஜிப்பீர்களானால் புண்ணியர்கள் ஆவீர்கள். எனக்குக் கல்வி கற்பிக்கவேண்டும் என்று நீங்கள் மிக முயன்று வருந்தி னீர்கள்; உங்கள் முயற்சி ஈடேறாமற்போயிற்று. இப்போது, ஸ்ரீமந் நாராயணநுக்ரஹத்தால் நான், ஸகல கலா நிபுணனாய் விளங்குகின்றேன். அவன் நினைத்தால் அணுவும் * அசலமாம். எறும்பும் † எறும்பியாம். எல்லாவற்றையும் படைத்தளிக்கும் புருஷோத்தமனாகிய அவனே, அனைவர்க்கும் அப்பனாகின்றான். ஆகையால், நாமனைவரும் அந்த லோக‡ஜநகனாகிய ஸ்ரீமந்நாராயணனை பஜித்தால், §ப்ரக்ருதி விநிர்முக்தர் களாவோம்'' எனக் கூறினார். புத்திரர் வார்த்தைகளைக்கேட்ட தாய் தந்தையர், ‘‘நாம் ஸௌர்யோபாஸகர்கள் ஆகையால், ஸௌர்ய நாரா யணன் ப்ரஸந்நமாய் நமது குழந்தையைக் காத்தளித்தான். அந்த

* அசலம் - மலை.
† எறும்பி - யானை.
‡ ஜநகன் - பிதா.
§ ப்ரக்ருதிவிநிர்முக்தர் - உலகப்பற்றற்றவர்.

நாராயணனுக்ரஹத்தால் ப்ரஹ்லாதர்க்குப்போல இவற்கும் இளமையிலேயே பகவத்பக்தி பரிபக்குவமா யிருக்கின்றது" எனப் புகன்று, நமஸ்கார விருப்பினனாகும் ஸூர்யநாராயண மூர்த்திக்கு பல வந்தன நமஸ்காரங்கள் செய்து, பாநுதாஸரை உடனழைத்துக்கொண்டு வீட்டுக்குவந்து, அவரைக் குலதெய்வமாக மதித்து வாழ்ந்திருந்தனர்.

பாநுதாஸர்க்கு யௌவனதசை திரும்பினவுடனே, தாய் தந்தையர், சீலமிகுந்த பக்திநெறியும், தக்க வயதும், ஒத்த குலமும், மெத்த அழகும் பொருந்திய ஒரு கன்னிகையைத் தேடி மண முடித்தனர். அம்மங்கையினிடத்தில் பாநுதாஸர்க்கு மக்கட்பேறுண்டாகி விளங்கியது. இப்படிப்பட்ட ஸமயத்தில், பாநுதாஸருடைய தாய் தந்தையர் பரலோக ப்ராப்தியுற்றார்கள். இவர் ஸம்ஸார சிந்தையற்று அநவரதமும் பாண்டுரங்கத்யானம் பண்ணிக்கொண்டு விளங்கியிருந்தார். இவருடைய மனைவி மக்கள், ஊண் உடைக்கு வருந்தி வாழ்ந்தனர். இங்ஙனம் இருக்க, அவ்வூரில் வியாபாரஞ் செய்துகொண்டிருந்த வர்த்தகர்களிற் சிலர் பாநுதாஸரை நோக்கி, "நீர் இடையறாமல் பாண்டுரங்கத்யானம் பண்ணிக்கொண்டு லோக சிந்தையற்று வாழ்கின்றீர்; உமது தாய் தந்தையர் உயிரோடிருந்த வரையில், குடும்ப ஸம்ரக்ஷணைபாரம் அவர்களுடையதாயிருந்தது. இப்போது நீர் குடும்பஸம்ரக்ஷணையை ஏற்றுக்கொள்ளாமல் முன்போலவே இருந்துவிட்டால், உமது குடும்பத்தை வேறு யார் காப்பாற்றுவார்? நாங்கள் உமக்கு நானூறு வராகன்கள் கடனாகக்கொடுப்போம்; அந்தத் தொகையை நீர் மூலதனமாக வைத்துக்கொண்டு ஜவுளி வ்யாபாரம்செய்து, அதன் மூலமாய் வரும் ஊதியத்தால் குடும்ப ஸம்ரக்ஷணை செய்துகொண்டே, எடுத்த கடனையும் சிறுகச் சிறுகத் தீர்த்துவிடலாம்" என்று கூறி, அவரை சம்மதிக்கச் செய்து, நானூறு வராகன்களுக்கும் பலவித ஆடைகள் வாங்கிக் கொடுத்து, அவர்க்கு ஒரு புடைவைக் கடை அமர்த்தி வ்யாபாரஞ் செய்யும் வகையையும் கற்பித்தார்கள். அவர் புடைவை வர்த்தகஞ் செய்து கொண்டிருந்தும், சேற்றில் வாழ்ந்தும் அதனில் ஒட்டாத பிள்ளைப் பூச்சியைப்போல், தமது மனத்தகத்தில் யாதொரு பற்றும் இன்றி எதிலும் ஒட்டாமல் வாழ்ந்து விளங்கினார். அல்லதூஉம், இவர் ஸத்யவ்ரதராய் தாம் விற்கும் ஆடைகளை வாங்கின விலைப்படி உண்மை சொல்லி சிறிது லாபத்திற்குக் கொடுப்பதனால், அனைவரும் இவருடைய வர்த்தகசாலைக்கே வருவாராயினார். சில தினங்களுக்குள் இவர்க்கு அதிக லாபம் கிடைத்ததனால் கடன் கொடுத்தவர்களுக்கு வட்டியுடன் தொகையைச் செலுத்தி விட்டார். ஆடைகளைக் கொள்வோர்களுக்கு, சிறிது லாபத்திற்கே அவைகளை விற்று, இதோபதேசம் செய்துகொண்டிருந்தனர். எங்ஙனமெனில், "ஓ மாந்தர்காள்! புண்ணின்மேல் சுற்றுவதற்கு, * கனகாம்பரத்தைத் தேடுகிறவர்களைப்போல, இழிந்த இந்தச் சரீரத்திற்கு நல்லாடைகளை என்

* கனக + அம்பரம் - பொன்னுடை.



வாங்குகின்றீர்கள்? உமது இஷ்டப்படி வாங்கிக்கொண்டு செல்லுங்கள். ஆனாலும், தத்துவத்தைச் சிறிது விசாரித்துணருங்கள். நீவிர், எத்தனை நல்லாடைகளான் உமது சரீரங்களை அலங்கரிப்பினும் உள்ளே இருக்கிற மல, மூத்ர, ரக்தாதிகள் தமது இயற்கைகளின் மாறாமலிருக்கின்றன. நிலத்துக்குள், எலும்புகள் மயிர்கள் முதலிய இழிந்த பொருள்கள் இருக்கையில், மேலே மண்ணைப் பூசி மெழுகி அழகு படுத்தின மாத்திரத்தில் உள்ளே யிருக்கும் இழிவு அகலுமா! அங்ஙனமே, சரீர தத்வத்தை அறியாமல், * சவாலங்காரம் செய்கின்றவனைப்போல, இழிந்த உமது சரீரங்களை அழகு படுத்தி ஆனந்திக்கின்றீர்கள். இவ்வாடைகளைக் கொள்ளும் பணங்களால், ஈச்வர ஸம்பந்திகளாகிய தீனர்களை ஆராதிப்பீராயின், பகவான் களிப்புறுவன். ஒரு தந்தைக்கு நால்வர் மக்கள் பிறந்து, அவர்களில் இருவர் ஊண் உடைக்கு வருந்தி, ஏனைய இருவர் பணக்காரர்களாய் அவைகளைப் பொருந்தி வாழ்ந்து, தமதுடன் பிறந்தாருடைய வறுமையைக் கவனித்து அவர்களுக்குதவி புரியாமலிருந்தால், தாய் தந்தையர்க்கு இவர்களிடத்தில் வெறுப்புண்டாகும் அல்லவா? அங்ஙனமே உலகத்தில், சேதனர்களனைவரும் ஜகதீசற்கு மக்களாய், நமக்கு உடன் பிறந்தவர்களா யிருக்கின்றார்கள். நமது உடன்பிறந்தார்களுக்குள்ளே, அநேகர் ஊண் உடைக்கு வருவாயின்றி வறுமை யடைந்திருக்கின்றனர்; அவர்கள் அனைவரையும் காப்பதற்கு நாம் வல்லவர்களல்லேம்; ஆனாலும் நம்மாற் கூடியவரையில் சிலரையேனுங் காப்பாற்றுவது உத்தமம். அப்பேர்ப்பட்டவர்களுடைய சரீர ஸம்ரக்ஷணைக்கு இல்லாமல் நாம் விலையுயர்ந்த ஆடை அணிகளுக்குப் பொருளைச்செலவழித்தல் மேன்மையன்று. இனியாகிலும் உமது ஊண் உடைக்கு அளவாய்ப் பொருட் செலவுசெய்து, மிகுந்த பொருளை வறியோர்க்கு வழங்குக. உடலைக் காத்தலே காப்பன்று. ஆத்மக் காப்பைச் சிந்திக்கவேண்டும். நாம், தீனர்களுடைய சரீரங்களைக் காப்பாற்றுவோமாயின், நமது ஆத்மக் காப்பை அச்சுதன் ஏற்றுக்கொள்வன். உமக்குப் பணம் பெருத்திருந்தால் நல்லாடைகளால் நாராயணனைப் புனைந்து, கண்கள் களிக்கக் கண்டு மகிழுங்கள். மக்கள் பசித்திருக்க, மாதா பிதாக்களுக்கு அன்னபானாதிகள் ருசிக்காதபடி, தீன ஜனங்கள் கட்டக் கந்தைகளின்றி வருந்துகையில், பகவானை யலங்கரிப்பதும் அவற்கு உடன்பாடாயிராது. ஆகையால், எல்லா விதங்களினும் உம்மாற் கூடியவரையில் தீனர்களுடைய வறுமையைத் தீருங்கள். ஸர்வ ப்ரபஞ்சத்தையும் பகவத் ஸ்வரூபமாய்க் காணுங்கள்; நாடோறும் வேற்றுமை அடைதலையே தனக்கிலக்கணமாகக்கொண்டு, என்றைக்கிருப்பினும் அழிவுக்கே இலக்கியமாகிய தேகாபிமானத்தை விட்டு, ஆத்மவிசாரஞ்செய்து, உமது பிழைப்பின் பொறுப்பை பகவான்மேற் சுமத்தி, ஊழ்வினையின்படி உமக்குக் கிடைத்தபொருள்களிடத்தில் மமகார புத்திவைத்து வாழாமல், உமது

* சவ + அலங்காரம் - பிணத்தைச் சிங்காரித்தல்.

குடும்பப் பாதுகாப்புக்கு அத்யாவஶ்யகமான பொருளைமட்டும் எடுத்துக்கொண்டு, எஞ்சியதை ஈஶ்வர ஸம்பந்திகளான ஜீவர்களுடைய ஸம்ரக்ஷணார்த்தம் செலவழிக்கக்கடவீர். நாம், தாய்வயிற்றிற் பிறந்தபோது கொண்டுவந்த தொன்றுமில்லை; இந்த சரீரத்தை விட்டுப் போகும்போது ஒரு காசளவும் கொண்டுபோவது கிடையாது. பணந்தேடும் பொருட்டு நம்மாற் செய்யப்பட்ட பாபகோடிகள் மாத்திரம், நம்மை விடாமல் பின்பற்றி வந்து கொண்டேயிருக்கும்'' என்று சொல்லுவார். ஆடைகள் வாங்கவரும் அனைவர்க்கும், பாநுதாஸர், இதோபதேசம் பண்ணுகின்றனர் என்றும், அநவரதமும் பகவானைத் துதித்துக்கொண்டு தீனர்களைக் காப்பாற்றுகின்றனர் என்றும், இவரிடத்தில் யாவரும் உள்ளன்புடையவர்களாய், இவருடைய கடைக்கே வருவாராயினர். மற்றைக் கடைகளுக்கு ஒருவரும் போவது கிடையாது. ஆதலால் மற்ற வர்த்தகர்களுக்கு வியாபாரம் நடைபெறாமற் போயிற்று. அவர்களனைவரும் இவரைக்கண்டு பொறாமை மேற்கொள்வாராயினர்.

ஒருநாள், பாநுதாஸரும் இன்னுஞ் சில வர்த்தகர்களும், ஸந்தைக்குச் சென்று, சரக்குகள் வாங்கிக்கொண்டு வருகையில், இடைவழியிலுள்ள ஒரு தேவாலயத்தில் அனைவரும் விடுதி செய்தார்கள். அன்றிரவு, அவ்வூரில் ஹரிதாஸர் என்னும் பாகவதர், ஹரிகீர்த்தனம் பண்ணுகின்றார் என்று கேள்விப்பட்டு, பாநுதாஸர், தமது மூட்டைகளை தம்முடன் வந்திருந்த வர்த்தகர்களிடத்தில் ஒப்புவித்து, தாம் மாத்திரம் ஹரிகீர்த்தனம் நடக்கும் இடத்திற்குப்போய், ஹரிதாஸரோடு கலந்து பகவானைத் துதித்துக்கொண்டு ச்ரவணானந்தமாய் ஹரிதாஸருடைய கீர்த்தனங்களைக் கேட்டுப் பேரானந்தமுற்று இருந்தனர். இவருடன் வந்திருந்த வர்த்தகர்கள் பொறாமை மிக்கவர்களாய், இவருடைய குதிரையைக் கட்டவிழ்த்து ஓட்டிவிட்டு மூட்டைகளையெல்லாம் ஒரு பாழ்ங்கிணற்றில் எறிந்து, ஒன்று மறியாதவர்களைப்போலக் கண்ணுறங்கினார்கள். அப்போது, பக்தவத்ஸலனாகிய ஜகந்நாதன், ஒரு வேதிய வுருவந் தாங்கிவந்து, பாநுதாஸருடைய குதிரையைப் பிடித்துக்கொண்டு ஆலயத்தருகில் உட்கார்ந்திருந்தான். கொஞ்சநேரத்துக்குள் சோரர்கள் வந்து அந்த வர்த்தகர்களை நையப் புடைத்து, அவர்களுடைய உடைமைகள் முழுவதையும் கொள்ளைகொண்டு சென்றார்கள். வர்த்தகர்கள் அனைவரும் தங்களுக்குள் பின்வருகிறபடி சிந்திக்கலானார்கள்.

“நாம், பாநுதாஸர் விஷயத்தில், பொறாமை மிக்கவர்களாய், அவர்க்குக் கேடு சூழ்ந்தோம்; அவரது ஆத்மபாரத்தை வகித்திருக்கும் பாண்டுரங்கன், நமக்குள் ஆவேசித்து அவருடைய பொருள்களை மாத்திரம் பாழ்ங்கிணற்றில் வீழ்த்தி பாதுகாத்தனன். நாம் செய்த தீவினைகள் சோரவுருவங்களாக வந்து, நமது பொருள்களைக் கொள்ளை கொண்டன.

'பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்'

என்னும்



வசனம் இங்கே காட்சி ப்ரமாணமாயிற்று'' என்பதேயாம். இங்ஙனம் இவர்கள் எண்ணி இடருற்றிருக்கையில் ஹரிகீர்த்தனம் முடிந்து பாநுதாஸர் வந்தனர். வேதிய வேடந்தாங்கிக் குதிரையைக் காப்பாற்றி வைத்துக்கொண்டிருந்த பண்டரிநாதன் மறைந்தனன். பாநுதாஸர், தமது குதிரையை முன்போலவே கட்டிவைத்துவிட்டு, ஆலயத்துள் நுழைந்து நடந்த விருத்தாந்தங்களை அங்கிருந்தவர்களால் கேள்வியுற்று, அவர்களை நோக்கி,

'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்'

“எப்படிப்பட்டவர்களுக்கும், ஊழ்வினைப்பயன் அநுபவிக்காமல் தீராது. என்னிடத்தில் பொறாமை கொண்ட நீங்களே, எனது மூட்டைகளைப் பாழ்ங்கிணற்றில் வீசியெறிந்து பத்திரப்படுத்தி வைத்தீர்கள். ஸர்வ ஜாக்கிரதையாய்க் காத்துக்கொண்டிருந்த உமது பொருள்களை திருடர்கள் கொண்டுபோனார்கள்.

'கடந்ததை நெஞ்சிற் கருதிவருந் தாமல்
கடந்ததற்கு வாயாற் கதறி—நடங்காமல்
நெஞ்சம் வெறுக்காமல் நித்தனும் ஈசனே
தஞ்ச மெனவிருத்தல் சால்பு'

நடந்துபோன விஷயத்தை எண்ணி வருந்தாமலும், நடந்துபோன விஷயத்துக்கு வாய் விட்டலறிக் கதறி வாடிப்போகாமலும், அதற்காக மனம் வெறுக்காமலும், என்றும் அழிவிலாப் பொருளாகிய பகவானே கதியென்று தாழ்தல் தக்கதாம். இனியேனும், கர்ம வசப்பட்டவர்களாகாமல் நீவிர் முக்தர்களாம் வண்ணம் சாலவும் முயலுங்கள்: அதற்கு இத்தனை வருத்தம் இல்லை. நமது ஆத்ம பாரத்தை, ஸ்ரீ பண்டரிநாதனிடத்தில் ஒப்புவித்து அந்யத்தை நோக்காமல், அந்த ஜகதீசனை வாழ்த்துங்கள்; நமக்கு முக்தி கரதலாமலகமாகும் எனக்கூறி, பாழ்ங்கிணற்றிலிருந்த தமது மூட்டைகளை எடுத்து, அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து அவர்களைத்தேற்றி, அவர்களோடு வெளியே வந்து, குதிரையைக் காப்பாற்றினவன் ஸ்ரீ பாண்டுரங்கனே யெனத் தீர்மானித்து, “புண்டரீகவரதா! சோரபயமின்றி எனது குதிரையைக் காத்தபடி, காம க்ரோத லோப மோஹ மத மாற்சரியங்களென்னும் சோரர் கரங்களில் அகப்படாதிருக்க எனக்கு நீ தந்தருளிய ஞானமணியைக் காப்பாற்றி, என்னைக் கடைத்தேற்றுவை, ஐயனே!'' என விண்ணப்பித்து, பைட்ணிபுரத்துக்குவந்து, வர்த்தக சாலையைச் சிறிது திரவ்யத்துடன் தமது மக்கள் வசப்படுத்தி விட்டு, மிகுந்த ஆஸ்தியை தீனர்களுக்குச் செலவாக்கி, பண்டரிபுரத்தில் வாழ்ந்து, நிரந்தர பகவத்யானபரராய், தமது வாணாள் முழுவதையுங் கழித்து, பரம வைஷ்ணவ ஸாயுஜ்ய பதவியை அடைந்து விளங்கினர்.

ஆபத்ரக்ஷகாய நம:

## ஐம்பத்திரண்டாம் அத்தியாயம்

## ராமராஜர் சரித்திரம்

வித்யா நகரத்தில் ராமராஜர் என்பவர், தர்மந் தவறுமல் ராஜ்ய பரிபாலனம் பண்ணிக்கொண்டிருந்தனர். இவர், துர்க்கா தேவியைத் தமதிஷ்ட தைவமாக ஆராதித்து, அந்த தேவிக்குச் சிறந்ததோர் ஆலயங்கட்டி,ஸ்வர்ண விமான மண்டபங்களும் நவமணிகள் இழைத்த * அரியாஸனங்களும் விலையில்லாத் திருவாபரணங்களும் நிர்மித்து, ஷோடசோபசாரங்களுடன் பூஜித்துக்கொண்டிருந்தனர். இங்ஙனம் இருக்கையில், பண்டரி க்ஷேத்ரவாஸியாகிய வேதியன் ஒருவன், தான் யாகம்செய்ய விரும்பி, அதற்காகப் பொருள் பெறுமாறு, ராமராஜரைக் காண வந்தனன். இவர், அவ்வேதியனை நல்வரவேற்று மரியாதைசெய்து, உன்னத ஆதனத்தில் உட்காரவைத்து க்ஷேமலாபங்கள் விசாரித்து, அவனது வருகையின் காரண முணர்ந்து, "விப்ரோத்தமா! நினது மனோரதத்தை நான் நிறைவேற்றுவேன்; எனது குலதெய்வமாகிய துர்க்காதேவிக்கு, நான் ஆராதனஞ் செய்கிற காலத்தில், நீ அந்த தேவியின் ஸந்நிதிக்குவந்து, அவளைத் தரிசிக்க வேண்டும் என்று கோருகின்றனன்" எனக்கூறி, ஸ்நானம்செய்து மடியுடுத்தி, திலகமிட்டு, ஜபாதி நியமங்களை முடித்து, துர்க்காதேவி யாலயத்துள் நுழைந்து, பண்டரி க்ஷேத்ர வாஸியாகிய வேதியனை அங்கு வரவழைத்து, தேவி பூசையை ஷோடசோபசாரங்களுடன் முடித்து, மஹா நைவேத்யஞ்செய்து,பிறகு அந்த வேதியனைநோக்கி, "ஓ,வேதிய! அம்பிகைக்கு ஸமமான தைவம் மூவுலகினும் இலது. இந்தேவிக்குள்ள அளவற்ற ஐஶ்வர்யம் ஆச்சரியப்படக் கூடியதாயிருக்கும். இவளுடைய ஸௌந்தர்யம் அதி யற்புதமாய் இருக்கின்றது. பண்டரிநாதற்கு இப்படிப்பட்ட ப்ரபாவம் உண்டா யிருப்ப தருமை. அங்கு இத்தனை சிரத்தையோடு யார் ஆராதிப்பவர்கள்? நீங்கள் வறியவர்கள் ஆகையால், உமது பண்டரி நாதற்கு ஆடையணிகளாதி விபவங்கள் கேவலம் அளவாகவே இருப்பனவென எனக்குத் தோற்றுகின்றது" எனக் கூறக் கேட்டான் வேதியன். அரசன் கூறிய மொழிகள் அவற்குக் கர்ணகடூரமாயிருந்தன. ஆகையால் கொஞ்ச மேனும் அவன் அவைகளைப் பொறுதவனாகி, "ஓ,வேந்த! ஒருபோதாயினும் நீவிர் பண்டரிபுரத்தைப் பார்த்திருப்பீராயின், இப்படி யெல்லாம் நுமது மனம்போனபடி பேசமாட்டீர். அவ்விடத்திய விபவத்தைச் சிறிது விவகரிக்கின்றேன், கேட்பீராக: பண்டரிபுரம் விஶ்வகர்ம நிர்மிதமானது; பகவானுடைய ஆலயம் ஸ்வர்ணமயமாய் மணிகளழுத்தி யமைத்துள்ளது. தேவாலயத்தின் நாற்புறங்களும் கற்பக விருக்ஷ சாலையால் மூடப்பட்டிருக்கின்றன.

* அரியாஸனம் - ஸிம்மாஸனம்.



அவ்விடத்திய கற்களெல்லாம் பரிசவேதிகளாயிருக்கின்றன. அளவற்ற கோடி திவ்ய * பதாகைகள், ஆகாசத்தை மறைத்து விளங்கிக்கொண்டிருக்கும். அந்த ஆலயத்தில், காமதேநு நாடோறும் வந்திருந்து ஸ்ரீபண்டரிநாதனுடைய பக்தகோஷ்டிகளுக்கு வேண்டிய பொருள்களை அபரிமிதமாகக் கொடுத்துக் கொண்டிருக்கும். நவமணிகளிழைத்த துளசிமேடைகள் எங்கெங்கும் நிறைந்து விளங்குவனவாம். நந்தன வனங்களிலுள்ள கால்வாய்களும் மணிகள் இழைத்தனவாம்; ஸாது ஜனங்கள் தேகாபிமானத்தை நீத்தவர்களாய், அநவரதமும் பாண்டுரங்கனைப் புகழ்ந்து பஜிக்கும் † கோஷத்தைச் செவியேற்று ‡ அந்தரத்துள்ளார் ஆனந்த முறுவார்கள். சந்திரபாகையில் அமுதம் இடையறுமல் வெள்ளமாக ஓடிக்கொண்டேயிருக்கும். மூவுலகினும் உள்ள தீர்த்தங்கள் இந்த சந்திரபாகையில் பொருந்தியிருந்து பாகவதமுயக்கத்தால் தமது தோஷங்களைப் போக்கிப் பரிசுத்தப்படுவனவாம். தேவகன்னிகைகள் ஸ்ரீபாண்டுரங்கன் ஸந்நிதியில் நாட்டியமாடிக் கொண்டிருப்பார்கள். கந்தர்வர் பாடிக்கொண்டிருப்பார்கள். தும்புரு நாரதாதியர் ஆனந்த பரவசராய் பகவத்கல்யாண குணங்களைப்புகழ்ந்துகொண்டிருப்பார்கள். ஸ்ரீபண்டரிநாதனுடைய திவ்யமங்கள விக்ரஹம்,கோடி ஸூர்ய ப்ரகாசமான கிரீட காந்தியுடனும், மகரகுண்டலங்களோடு கூடின காதுகள் வரையினும் நீண்டனவாய் பாகவதர்களாகிய பயிர்களை அருள் மழையால் வளர்க்கும் கண்களுடனும், திவ்ய பீதாம்பரத்துடனும், இடுப்பில் ஊன்றின கரங்களுடனும், ஸமமான பாதயுகளத்துடனும், சந்திரனிற் குளிர்ந்த ஸூர்ய ப்ரகாசத்துடனும் விளங்கியிருக்கும். அந்த திவ்ய மங்கள விக்ரஹத்தை, தரிசித்த மாத்திரத்தில் ஸம்ஸாரவிடாய் அகலும். பிரமானந்தம் உண்டாகும். அன்றியும், அந்த திவ்ய மூர்த்தியை ஸேவித்தால், அருட்பெருந் தகைமை ஷட்குணைஶ்வர்ய ஞானசக்திகள் மூர்த்தீகரித்து விளங்குவதுபோலிருக்கும். ¶ துவாதசாதித்யர்களும், $ ஏகாதச ருத்ரர்களும், அஷ்ட வசுக்களும், அஶ்விநி தேவர்களும் அந்த பகவானுடைய மந்திரத்தில் ஊழியர்களாய் காத்துக்கொண்டிருப்பார்கள். முனிவர்க ளனைவரும் ஸ்ரீ பாண்டுரங்கனை அநவரதமும் உபநிடதங்களால் துதித்துக்கொண்டிருப்பார்கள். பிரமனும், சிவனும் திக்குப்பாலகரும் அங்குப் பொருந்தியிருந்து, பக்தர்கள் செய்யும் பகவந்நாம ஸங்கீர்த்தனங்களை சிரவணானந்தமாய்க்கேட்டு, ஸ்ரீபாண்டுரங்கனை தரிசித்து நீங்க மனம்பொறுமல் நிறைந்து விளங்குவார்கள். உனது குலதெய்வமான துர்க்கையும், அநேக தேவகன்னிகைகளும் அவ்வாலய மஹாவாசலில் § ஸமார்ஜன அநுலேபாதி கைங்கர்யங்களைச் செய்துகொண்டிருப்பார்கள். திவ்ய நதிகளும், மஹா பர்வதங்களும்

* பதாகைகள் - கொடிகள். † கோஷம் - முழக்கம்.

‡ அந்தரத்துள்ளார் - ஸ்வர்க்கலோகவாசிகள், தேவர்கள்.

¶ துவாதசாதித்யர்கள் - பன்னிருசூரியர்கள்.

$ ஏகாதசருத்ரர்கள் - பதினொருருத்திரர்கள்.

§ ஸமார்ஜனம் + அநுலேபம் - திருவலகிடுதல்; திருமெழுக்கிடுதல்.

உருவங்களோடு விளங்கியிருந்து மாதவனை ஸேவித்துக்கொண்டிருப்பன
வாம். ஓ அரச! நான் என்னவென்று அந்த விட்டலன் பெருமைகளை
விளம்பவல்லேன். அந்த தேவதேவனை வர்ணிப்பதற்கு, ஆதிசேஷன்
ஆயிரமுகனாயிருந்தும் முடியாமல், அவனுடைய கல்யாண குணங்
களுக்கு அளவில்லாதபடியால் வெட்கி, அவற்கு வாழ்மனையாய்,
படுக்கையாய், பீடமாய், பாதுகையாய், ஆடையாய், தலைக்கணையாய்,
மழை வெய்யில்களைத் தடுக்கக்கூடிய சரீரபேதங்களைப் பொருந்தி, முழு
வதும் சேஷ விர்த்தியில் ஈடுபட்டிருந்தும் பொறுமையடையாமல்,
சேஷன் என்னும் பெயரால் விளங்கி மகிழ்கின்றனன்.

'சென்றால் குடையாம் இருந்தால்சிங் காசனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள்—என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம் திருமாற் கரவு'

என்ற

ஆழ்வாரருளிச் செயலினை இதனுடன் உய்த்துணர்க. நித்ய விபூதியில்
நிலைத்திருப்பவர்கள், பகவானுடைய பரமரூபத்தைப் பொருந்தியிருப்
பவர்கள் ஆகையால், அங்கு அந்த பரமேஸ்வரனுடைய தண்ணரு
ளுடைமை, பெருந்தகைமை முதலிய உத்தம குணங்கள், வெயிலைக்
கண்டு ஒளிமழுங்கின சந்திரனைப்போல் விளக்கமற்றிருக்கின்றன;
அனந்த கருட விஷ்வக்ஸேனாதி நித்ய ஸூரிகள், ஸ்ரீமத் பண்டரிபுரத்தை
விரும்பி வந்தடைந்து, புண்டரீகவரதனுடைய கல்யாணகுணங்களை அநு
பவிக்கின்றனர். ஆற்றை அறியாதவன் கிணற்றையும், முழுநிலவை
அறியாதவன் பிறைநிலவையும், விளக்கை அறியாதவன் மின்மினிப் பூச்சி
யையும் புகழ்ந்துரைப்பதுபோல, எந்நாளினும் ஸ்ரீபாண்டுரங்கனைப்
பார்த்தறியாத பார்த்திபராகிய நீர், துர்க்காதேவியைத் துதித்தீர்" எனக்
கூறக்கேட்ட அரசர், கோபமிக்கவராய், கண்கள் சிவப்பேற இதழ்கள்
துடிக்க, "ஓ, வேதிய! நீ பாண்டுரங்கற்கு இல்லாத இலக்கணங்களைப்
புனைந்துரைத்தும் திருப்தி அடையாமல், எனது குலதெய்வமாகிய
துர்க்காதேவி, பாண்டுரங்கனுடைய கோபுரத் துவாரப் பணிப்பெண்
ணாயிருந்து, திருவலகிடல் முதலிய இழிதொழில்கள் புரிகின்றனளென்
றும் கூறினை. இப்படிப்பட்ட நீ, எனது கடுந்தண்டனை யடையக்கூடி
யவனாயிருக்கின்றனை. ஆனாலும் நான், உன்னுடன் பண்டரிபுரத்துக்கு
வந்து, நீ புனைந்துரைத்த இலக்கணங்கள் அங்கு இலவாயின் உன்னைத்தண்
டிப்பேன்" எனக் கூறி, அவ்வேதியனை உடனழைத்துக்கொண்டு பண்டரி
புரத்துக்கு வந்துகொண்டிருந்தனர். வேதியன், பண்டரிநாதனை உத்தே
சித்து, "ஸ்ரீ ருக்மிணீகாந்த! இவ்வரசர் உன்னை அவமதித்து, துர்க்கா
தேவியைத் துதித்ததைக்கேட்ட நான், பொறுமல், ஸ்ரீமத்பண்டரிபுரப்
பெருமைகளையும், உன்னுடைய அரும் பெரும் புகழ்களையும் என்
மனம்போனபடியெல்லாம் இந்த அரசர் முன்னிலையில் எடுத்தோதி
னேன். இவர், சோதிக்கும் நிமித்தம் என்னுடன் வருகின்றனர். இதனை
நீ, அறியாயா! எனது மொழிகள் பொய் மொழிகளாயின், என்னை



இவர் தண்டிப்பார். அதற்காக நான் பயப்படவில்லை. எத்தனைகாலம்
உயிருடன் இருந்தாலும் இவ்வுடல் நெருப்புக்கு இரையாவது உண்மை.
உனது வைபவத்துக்குக் குறைவு நேரிடுதலை மாத்திரம் நான் பொறுக்க
மாட்டேன். ப்ரஹ்லாதனுடைய வார்த்தையை மெய்ப்பிக்கவேண்டி,
ஸ்பாஸ்தம்பத்தில் நீ அவதரித்தது உண்மையாயின், எனது வார்த்தை
களை உண்மையாக்கி யருளுக.

'ஹரியை வணங்கியழை ஆபத்திலன்னான்
உரியதுணை ஆவா னுனக்கு'

என்னும் விஷிஷ்டோபதேசத்தை நம்பி, ஆபத்காலத்தில் 'கோவிந்தா'
என்று உன்னைவிரும்பி வணங்கி யழைத்த திரௌபதிக்குக் குறையாத
ஆடைகளை அளித்து மானங்காத்த உனது பரமகருணை நிஜமானால்,
எனது வார்த்தைகளை மெய்ப்பிக்கவேண்டும். இளமையிலேயே விரக்தி
யடைந்து, மஹர்ஷி வாக்யத்தால் நினது ஸ்வரூபத்தை யுணர்ந்து
உன்னை உபாஸித்த துருவற்கு, ஸர்வோத்க்ருஷ்ட பதவி வழங்கின
நின்றன் தண்ணருள் உண்மையாயின் எனது சொற்களை மெய்ப்பித்
தருளுக. 'மூலமே' என்று முறையிட்டழைத்த கஜேந்த்ரனை அன்று
காத்தளித்தது உண்மையாயின், இன்று எனது வாயுரைகளைக் காத்
தருள்க. ஓ, புருஷோத்தமா! இப்போது எனது வார்த்தை பொய்யா
மாயின், உனது சரித்ரங்களத்தனையும் பொய்களேயாகும். ஆகையால்
எனது வார்த்தைகளை உண்மையாக்கி, நினது நற்சரிதைகளை மெய்ப்பித்
துக் கொள்க என்று தன் மனத்தகத்தில் பிரார்த்தித்துக்கொண்டனன்.
ஸர்வசக்தியுக்தனாய், பக்தவத்ஸலனான ஸ்ரீ பாண்டுரங்கனுடைய
திவ்ய ஸங்கற்பத்தால் வேதியன் கூறியபடி ஸர்வமும் பொருந்தி
விளங்கின. அரசர் பண்டரிபுரத்தை யடைந்து, வேதியன் கூறிய
வைக்குமேல் அதிகமாக விளங்கியிருக்கும் பாண்டு அரங்கன் வைப
வத்தை அமைவுறக் கண்டு, ஆனந்த பரவசனாய், அங்கே * ஸாந்
நித்யம் செய்துள்ள நித்ய ஸூரிகள், தேவதைகள், மாமுனிவர்கள்
முதலியோருடைய கோஷ்டிகளுக்கு வந்தனம் தந்து, சந்திர பாகையில்
ஸ்நானம் செய்து, கோபுர த்வாரத்திற்குவந்து ஸாஷ்டாங்க வந்தனம்
தந்து, அங்கே அளவற்ற † தேவாங்கனைகளோடு கூடி ‡ அநுலேப
னாதி கைங்கர்யங்களைச் செய்துகொண்டிருக்கும் தமது குலதெய்வ
மாகிய துர்க்காதேவியைக் கண்டு, அவளுக்கு வந்தனஞ் செய்த
போது, அவள், அவரை நோக்கி, "ஓ, வேந்த! நினது பிறவி இன்று
பலனடைந்தது; இவ்வேதியன் மூலமாய் ஸ்ரீமத் பாண்டுரங்கநாதன்
நின்னிடத்தில் திருவருள் சுரந்தனன். இந்த தேவதேவன் மகிமை,
¶ விதிக்கும், சிவனுக்கும், ஸநகாதியர்க்கும், வேத புருஷனுக்குமே
வாசாமகோசரமாயிருக்கின்றது. நீ உள்ளே நுழைந்து புண்டரீக
வரதனை தரிசிக்கக்கடவை. முன் கைக் கடகத்துக்குக் கண்ணாடி ஏன்?

* ஸாந்நித்யம் - அருகே எழுந்தருளி விளங்குதல். † தேவ + அங்கனைகள் - தேவகன்னிகைகள். ‡ அநுலேபனம் - திருமெழுக்கிடுதல். ¶ விதி-பிரமன்.

ஸமஸ்த கல்யாண குண கணங்களும் மூர்த்திகரித்து விளங்கும் ஸ்ரீருக்மிணீ காந்தனை தரிசித்த மாத்திரத்தில் அவனுடைய மஹிமை விளங்கும். நினக்கு மங்களம் உண்டாகுக" என அநுக்ரஹித்தனுப்பினன். தூர்க்கையின் நியமனப்படி அரசர் உள்ளே நுழைந்து, வேதியனால் தாம் கேட்டவைகளும் கேளாதவைகளுமான அவ்விடத்திய வைபவங்களைக் கண்டு அதிசயமடைந்து, ஸ்ரீ புண்டரிகவரதனை தரிசித்து, துதிக்க நாவெழாமல், சென்னியிற் கூப்பிய கரங்களுடையவராய் நின்றுகொண்டு,

"எவன்பெருமைக்கி நிலமோ ரணுவாம்
முந்நீர் முதலாம் நன்னீ ரெல்லாம்
ஒருதுளி யாகும் பெருநெருப் பெல்லாம்
சிறுபொறி யாகும் உறுவளி யாவும்
சிறுமூச் சாகும் சேணுயர் ககன
வட்ட மொருபுழை வடிவின தாகும்
புரந்தர னயன்சிவன் புழுக்களா குவர்கள்
அவனே நீயென அடியே னின்று
காண்கின் றனனால் கருதரு
நின்புக ழென்றும் நிலவுக தானே"

'எவனது பெருமைக்கு, இந் நிலமெல்லாம் ஒருசின்ன அணுவாகுமோ; பெரும்புறக்கடல் முதலாகிய ஜலமெல்லாம் ஒரு சிறுதுளியாகுமோ; வடவாமுகாக்கினி முதலிய பெருநெருப்பெல்லாம் ஒரு சிறுபொறியாகுமோ; சண்டமாருதம் முதலிய பெருங்காற்றெல்லாம் ஒரு சிறு மூச்சாகுமோ; நெடுந்தூரம் உயர்ந்து பரந்து விளங்கும் ஆகாயவட்டம் எல்லாம் ஒரு சிறு துளையாகுமோ; தேவேந்திரன், பிரமன், சிவன் முதலிய தேவர்களனைவரும் சிறிய புழுக்களாவார்களோ; அப்பேர்ப்பட்ட மஹாத்மா நீயே என்று, இன்று நான், இங்கு நன்று காண்கின்றனன். ஆஹா! யாராலும் அளவிடுதற்கரிய நினது பெரும்புகழ் என்றென்றும் பொருந்தி விளங்கக்கடவது' என்று விண்ணப்பித்து, "ஓ, தேவாதி தேவா! நினது மஹிமையை நானறியாதவனாகி, இதுவரையில் எனது வாணாளை வீணாளாக்கிக் கொண்டனன். இப்போது இவ்வேதியன் புண்ணியத்தால் என்மேற் கருணைகூர்ந்து நினது ஸேவை அளித்தனை! உன்னை எனது நகரத்தில் ப்ரதிஷ்டைசெய்து ஆராதிக்க வேண்டுமென்று ஆசைப்படுகின்றனன். பக்தர் மனப்பதுமத்திலிருந்து அவர்கள் வேண்டிய வேண்டியபடியே அருள் கூர்ந்து அளிப்பவனெனப் புகழ்பெற்றோங்கும் நீ, எனது இச்சையை நிறைவேற்றுவாயின் நினது கல்யாண குணங்கள் கமரிற் கவிழ்த்த பாலாம்" என்றனர். அதற்குப் பண்டரி நாதன், "அரச! நினது எண்ணத்தை நிறைவேற்றுவேன்; கவலைப்படாதே" இன்றிரவு, என்னை நினதூர்க்குக் கொண்டு செல்லுக. நீ யாதானும் பிழைசெய்யின் நான் மறுபடியும் பண்டரிபுரத்துக்கு வந்துவிடுவேன்". என்று அநுக்ரஹித்தனன். அதைக்கேட்ட அரசன் அகமகிழ்ந்து, தனது அதிஷ்டத்தைப் புகழ்ந்துகொண்டு, அன்றிரவு அந்த தேவதேவனை யாரும் அறியாமல் பயபக்தி விஸ்வாசத்துடன் தமதூர்க்குக் கொணர்ந்தனர். மறுநாள் ஸூர்யோதயகாலத்தில் அர்ச்சகர்களும், அநேக பாகவதர்களும் ஆலயத்துள் நுழைந்து பார்க்கையில் அங்கே, பகவான் இல்லாமையால், எல்லாரும் சோகமிக்கவர்களாய் ஒன்றுந் தோன்றாமல் பூமிமேல் வீழ்ந்து அழுதுகொண்டிருந்தார்கள்.



அப்போது அவர்கள் பட்டவேதனை பகைவர்க்கும் பார்க்கப் பொறுததாயிருந்தது. அப்போது பண்டரிபுரம் சந்திரனில்லாத இரவெனவும், புருஷனில்லாத ஸ்த்ரியெனவும் பொலிவற்றிருந்தது. அதைக் கண்ட ஸாதுக்கள், பின்வருமாறு சிந்தித்தனர். "நமது விட்டலநாதன், எப்பொழுதும் இவ்விடம் விட்டுப்பெயரேன் என்று புண்டரீகற்குக் கட்டுரைத்த உறுதி மொழியை மறந்து, தாயில்லாப் பிள்ளைகளைப்போல நம்மைக் கைசோர விட்டு, ராம ராஜரைக் களிப்பிக்கவேண்டி வித்யா நகரத்துக்கு விரும்பிச் சென்றனனெனத் தோன்றுகின்றது. முற்காலத்தில் கோகுலத்தில் கோபிகைகளைக் கைவிட்டு மதுராபுரிக்கு எழுந்தருளியபடி, இப்போது, நீரை விட்டு அப்புறப்பட்டு வருந்தும் மீன்களைப்போல, தனது பிரிவினை ஆற்றமாட்டாத நம்மைக் கைசோரவிட்டு, பண்டரிநாதன் வித்யா நகரத்தை விரும்பி அடைந்தனன். ராமராஜர் தமது தலை நகரத்தில் தாம் ஆராதிக்கும் ருக்மிணீகாந்தனை மறுபடியும் பண்டரிபுரத்துக்குக் கொண்டுவர, யாரால்முடியும்!" என்பதாம். இங்ஙனம் இவர்கள் சோகித்துக் கொண்டிருக்கையில், பாகவத முதல்வராகிய பாநுதாஸர், அவர்களை நோக்கி, "ஓ, ஸாது ஜனங்காள்! நான் போய், பண்டரிநாதனைக் கொண்டுவருவேன்; அங்ஙனம் இல்லையாயில், எனது உயிரை அங்கேயே விட்டுவிடுவேன்" எனக்கூறி, அப்போதே அங்கிருந்து, புறப்பட்டு வித்யா நகரத்துக்கு வந்து, ஒரு வைணவன் வீட்டில் விடுதிசெய்து வாழ்ந்திருந்து, அரசனது அரண்மனையில் பண்டரிநாதன் எழுந்தருளியுள்ள இடத்தையும், அரசன் அந்த புருஷோத்தமனை ஆராதிக்கும் முறைமைகளையும் விசாரித்துணர்ந்து, ஓர் அதிதியென வேடந்தரித்து, மத்தியான காலத்தில் அரசனரண்மனையுள் நுழைந்து, தம்மைப் பிறரறியாதபடி ஒருமூலையிற் பதிவிருந்து, அரையிரவில் பாண்டுரங்கனுடைய ஸந்நிதிக்குச் சென்றனர். அப்போது புண்டரிக வரதன் எழுந்தருளியுள்ள மந்திரக் கதவுகள், அவனது திருவருளால் திறக்கப்பட்டன. பாநுதாஸர் உள்ளே நுழைந்து கோபால தேவனை ஆலிங்கனஞ் செய்துகொண்டு, தமது கண்ணீரால் அவனை அபிஷேகஞ் செய்து, "ருக்மிணீ காந்தா! எம்மீது கருணையற்று எம்மைக் கைவிட்டு வந்தனை! நாங்கள் * ப்ரக்ருதி வசப்பட்டவர்கள் ஆகையால், அறிந்தும் அறியாமலும் உனது விஷயத்திலும் உன் தாஸர்விஷயங்களிலும் பிழைசெய்யக் காரணமுண்டு. ருக்மிணீ ஸத்யபாமையர் உனக்கென்ன அபசாரம் புரிந்தனர்? புண்டரீக வரதனெனப் பெயர் பூண்டு, அம் மஹாத்மாவின்பொருட்டு பண்டரிபுரத்தில் நிலைத்துள்ள உன் விஷயத்தில் புண்டரிகர் என்ன குற்றஞ்செய்தனர்? எமது பிழைகளின் பொருட்டு அவர்களனைவரையும் கைவிட

* ப்ரக்ருதி - பூத ஸம்பந்த சரீரிகள்.

லாமா? இப்போது, ஸாமந்த ரிருப்பாராயின் நின்னைத் தமது இதய
முழையில் நுழைத்து ஒடுக்கிப் பத்திரப்படுத்தி ராமராஜர்க்குக் காட்
டாமல் மறைத்து வைத்துவிடுவார். நாமதேவரும், ஜநாபாயும் இப்போ
திருப்பார்களாயின், அவர்களுடைய கீர்த்தனங்களைக் கேட்பதை விட்டு
நீ வித்யா நகரத்தை விரும்பி வருவையா? எல்லாவற்றிற்கும் இருக்க
வேண்டியவர்கள் இருக்கவேண்டும்; அப்போது இப்படியெல்லாம்
நடக்குமா! நாங்களெல்லாம் அறியாதவர்களென்று நீ எங்களை
ஏமாற்றுகிறாய்; எங்களையெல்லாம் அநாதைகளாக்கித் தவிக்கவைத்து
விட்டு, நீ இங்கே வந்து விட்டனை! பண்டரி புரத்தில் அநேக ஸாதுக்கள்
நினது திவ்ய மங்கள விக்ரஹத் தழகில் மயங்கி அதே நினைவாய், உன்
னையே தாரக, போஷக போக்யங்களாய் உட்கொண்டு வாழ்ந்திருக்க,
அவர்களை யெல்லாம் தாழ்ந்திருக்கச்செய்து, நீ இங்கு வந்து விடுதல்
நினது பெருந்தன்மைக்கு அழகா? இது தர்மந்தானா? ஒருவன், நின
தடைக்கலம் புகுந்து தன்னை உன்னவன் என்று உண்மையில்
உன்னையே நம்பி வாழ்வானாயின் நீ அவனுக்கு அபயமளித்து, எல்லா
விதத்தாலும் அவனைக் கைவிடாமல் காத்தளிப்பதாக நீ செய்துள்ள
அபயப்ரதானத்துக்கு விரோதமாக இப்போது எங்களை மாத்திரம்
கைவிட்டகற்றல் உனக்கே நியாயமாயிருக்கின்றது.

'இராமன் இருசொல் இயம்பான் ஒருசொல்
தராதரங் கண்டசத்யன்'

என்னும்
ப்ரமாணம் என்நிமித்தம் பொய்த்தது: *சேஷபூதன் பிழைசெய்வானாயின்
யஜமானன் சிக்ஷிப்பான். யஜமானனே பிழைசெய்தால் இது தகாது
என்று சொல்லுபவர்யார்'' எனக் கூறக்கேட்டு பாண்டுரங்கன், புன்னகை
புரிந்து, தனது பீதாம்பரத்தால் பாநுதாஸருடைய கண்ணீர் துடைத்து,
''ஓ வத்ஸா! நீ வருந்தற்க; நான், இவ்வரசனை மகிழ்விக்க இங்குவந்த
னன்; உமது பக்திவலையிற் சிக்கியிருக்கின்றனன்; எனது சரீரம்
இங்கிருப்பினும் மனம் உம்மிடத்திலேயே ஒடுங்கி யிருக்கின்றது. இங்ங
னம் உள்ள என்னை மறந்து, நீங்கள் மறுபடியும் அங்குக்கொண்டுபோக
மாட்டாமல் காலஹரணம் செய்கின்றீர்கள்'' எனக் கண்ணீர் ஆறாய்ப்
பெருக்கி, பாநுதாஸரை ஆலிங்கனஞ் செய்துகொண்டு, ராமராஜர்
தனக்கு ஸமர்ப்பித்த நவமணிமாலையை அவர் கழுத்தி லணிந்து, ''ஓ,
பாநுதாஸா! விடியற்காலம் நெருங்கியது; இனி அரசன் வருவான்; நீ
ஏதாவதொரு உபாயஞ்செய்துகொண்டு இவ்வரண்மனையைவிட்டு வெளி
தாண்டிப் போய்விடு; நாளைக்கு நான் உனக்கு தரிசனம் தருவேன்''
என்க் கூறினன். பாநுதாஸர், அரண்மனை வேலைக்காரர்களுடன் கலந்
திருந்து, அவர்களறியாமல் உபாயமாய் அபாயமின்றி வெளியேறி ஸ்வ
ஸ்த்தானம்போய்ச் சேர்ந்துவிட்டார். ராமராஜர் வைகறையிற் றுயி
லெழுந்து, ஸ்நான ஸந்த்யாவந்தனாநுஷ்டானங்கள் முடித்துக்கொண்டு,
பகவத் ஸந்நிதியில் நுழைந்து, ஸ்ரீருக்மிணீ காந்தனை ஸேவிக்கையில்
அந்த பகவான் கண்டத்தில் நவமணிமாலையைக் காணாமல் மருண்டார்.

* சேஷபூதன் - அடியான், தாஸன்.



அவர், காவலாளரைச் சினந்து, ''கொஞ்சமேனும் அச்சமின்றி அரண்
மனைக்குள் நுழைந்து, பகவான் திருக்கழுத்திலிருந்த நவமணி மாலையை
திருடின சோரனை நீங்கள் தேடிக் கண்டுபிடித்தீராயின் பிழைத்தீர்கள்,
இல்லையேல், உம்மைக் கடுந்தண்டனை செய்வேன்'' என்றனர்.
அவர்கள் எங்கெங்குந் தேடிக்கொண்டேபோய், ஆற்றில் ஸ்நானஞ்
செய்துகொண்டிருந்த பாநுதாஸர் கழுத்தில் மாலையைக் கண்டு,
இவனே திருடன் என அவரைக் கட்டிப்பிடித்துக்கொண்டுவந்து அரசர்
முன்னே விட்டார்கள். அரசர், மாலையை வாங்கிக்கொண்டு, கொஞ்ச
மேனும் முன்பின் விசாரித்துணர்ந்து யோசியாமல், ''இக்கள்வனை
ஈர்த்துக்கொண்டுபோய், ராஜவீதியின் புறத்தில் நட்டிருக்கும் சூலத்திற்
குத்திவிடுங்கள்'' என்று கட்டளையிட்டனர். அவர்கள், ''அங்ங
னமே ஆகுக'' என அவரை இழுத்துக்கொண்டுபோகையில், அவர்,
அந்த ராஜபடர்களை நோக்கி, ''ஓ, பாக்யவான்காள்! நான் உயிர்க்கு
பயந்தவன் அல்லன்; இச்சரீரத்தை இழப்பதற்கு முந்தி, இன்னும்
ஒருமுறை ஸ்ரீ பாண்டுரங்கனை எனது இருகண்களும் களிக்க
தரிசிக்கவேண்டும் என்னும் அபேக்ஷமாத்திரம் என்னை விட்டு அகல
வில்லை. ஆகையால் என்னைச் சிறிதுபோது அங்குச்செல்ல விடுங்கள்''
என வேண்டினர். அவர்களில் ஒருவன், ராஜ ஸந்நிதிக்குச்சென்று,
பாநுதாஸர் வேண்டுகோளை அவர்க்கு அறிவிக்க, அவர், அங்ஙனமே
செய்யுங்கள்'' எனக் கட்டளையிட்டனர். படர்கள், பாநுதாஸரை
பாண்டுரங்கன் ஸந்நிதிக்குக் கொணர்ந்தனர். பாநுதாஸர், பண்டரிநா
தற்கு ஸாஷ்டாங்க வந்தனம் செய்து, ''ஓ, ஜகதீசா! உனது ஸந்நிதிக்கு
ஒன்றியாய் வந்திருந்த எனது கழுத்தில் நவமணிமாலையை அணிந்து,
என்னை வெளியிலிழுத்து ராஜதண்டனைக்கு ஆளாக்கினை! உன்னைக்
கொண்டுசெல்லவந்த எனக்கு மரணாந்த தண்டனை வருவித்தாய்! உன
துடைமையாகிய நான், உனது இஷ்டப்படி உபயோகப்படுத்தப்பட
வேண்டியது ஒழுங்கே. ஆகையால், இனி, என்னைப்போலவே உன்னைக்
கொண்டுபோகவரும் ஒவ்வொருவனையும் இங்ஙனமே மரணதண்ட
னைக்கு உட்படுத்திவிட்டு, நீ மாத்திரம் அரசனரண்மனையில் ஸுகமாய்
வாழ்ந்திரு. நான் எத்தனை ஜன்மங்கள் எடுத்தாலும், நினது சரணா
விந்தங்களை விடேன்;'' என விண்ணப்பித்துக்கொண்டிருக்கையில்,
ராஜபடர் அவரை நோக்கி ''நீ, பகவானை இத்தனைநேரம் தரிசித்தது
போதும்'' எனக்கூறி அவரை ஈர்த்துச்சென்று, சூலத்தருகில் நிறுத்தி
னார்கள். அப்போது பாநுதாஸர், ''லக்ஷ்மீகாந்தா! ஆகாயம் பிளந்
தாலும், பூமி புரண்டாலும், குலபர்வதங்கள் பெயர்ந்தாலும், ஸமுத்ரம்
கவிழ்ந்தாலும், ஸூர்ய சந்திரர்கள் தமது கதிகள் பிறழ்ந்து இருண்டா
லும் நான் நினது பஜனத்தை மறவேன். எனக்கு உனது பாதகமலங்கள்
தவிர, வேறு * விஶ்ரமஸ்த்தானம் இலது'' எனக்கூறின மாத்திரையில்,
பகவத்ஸங்கற்பத்தால் அந்தச் சூலம் பல நிறங்களோடு கூடின புஷ்ப
பழக் கிளைகளைக்கொண்ட ஒரு பெருமரமாய் ஓங்கி வளர்ந்தது. இந்த

* விச்ரமம் - சிரமந் தவிர்ப்பது.

அற்புதத்தைக்கண்ட படர்கள், அரசனுக்கு அறிவித்தனர். அப்போது அரையர், ஆச்சரியமேற்கொண்டவராய் அங்கே வந்து, அவ்வற்புதத்தைக்கண்டு அநுதாபமிக்கவராய் பாநுதாஸர்க்கு ஸாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணி, தமது உத்தமாங்கத்தால் அவரது திருவடித்தாமரைகளை அலங்கரிப்பித்து, "ஓ மஹாத்மா! நான் அவிவேகத்தால் பிழைசெய்தேன். ஈஸ்வரனுக்கு நிக்ரஹாநுக்ரஹங்களிரண்டும் உள. அவனது பக்தர்களுக்கு அநுக்ரஹமாத்திரம் உளது. அத்தகைய பக்தர்களுக்குள் முதல்வராகிய நீர், என்னிடத்தில் நிக்ரஹ புத்திகொள்வதற்குக் காரணம் இல்லை; உம்மைப்போன்ற சத்குணவானை எனது பிழையைப் பொறுத்தருள்கவென நான் வேண்டிக்கொள்வது பரிகாஸத்துக்கிடமாயிருக்கின்றது. ஸூர்யனிடத்தில் † குளிர்ச்சியும், சந்திரனிடத்தில் உஷ்ணமும்தேடினும்கிடையாததுபோல, பாகவதர்களிடத்தில் க்ரோதகுணம் தேடினும் கிடையாதாகும். ஆனாலும், பாகவதாபசாரத்தைப் பொறுத்துக்கொள்ளாதவனாகிய பண்டரிநாதற்கு, என்னிடத்தில் நிக்ரஹம் நேரிடும் என்று பயப்படுகின்றனன். எனக்காக நீர், அந்த புருஷோத்தமனை வேண்டி, உமது நன்முயற்சியால் அவனுடைய சினத்தைக் குளிர்விப்பீராக" எனப் பிரார்த்தித்து, அவருடைய கரத்தைப் பிடித்துக்கொண்டு, ஜகதீசன் ஸந்நிதிக்குச் சென்றனர். ருக்மிணீபதி, பாநுதாஸரை ஆலிங்கனஞ் செய்துகொண்டு, "நீ, எனக்கு அந்தரங்க பக்தனாகுவை; எனது பிரிவாற்றாமல் நீ அதிகமாய்வருந்தினை; புண்டரீகற்கு நான் உரைத்த உறுதிமொழி தவறாமல் பண்டரி புரத்துக்கு வருவேன். என்னைத் தேரேற்றிக் கொண்டுசெல்க" என்று பகவான் சொல்லக்கேட்டு, ராமராஜர், "ஓ ஸ்வாமீ! என்னைவிட்டுப் போகின்றனையா!" என அழுதனர். பகவான் அவரை நோக்கி, "ஓ அரச! நினது உண்மை அன்புக்கு உகந்து, நினது அரண்மனையிற் சிலகாலம் வாழ்ந்தேன்; நீதகாத காரியம் செய்தால் இங்கு இரேன் என முன்னதாகவே நான் உன்னுடன் சொல்லியிருந்தேன் அல்லவா? எனக்கு அந்தரங்கனான பாநுதாஸன் விஷயத்தில் நீ மிகவும் பிழைசெய்தனை! இனி நான் இங்கு இருக்கமாட்டேன். நீ என்னை இடையறாமல் த்யானித்துக்கொண்டிரு; எனது நாமங்களை ஜபித்துக்கொண்டிரு; நான் உன்னை மறவேன்; போய்வருகின்றேன்" எனக்கூறி, பாநுதாஸர்க்குச் சுமக்கச் சுளுவானவனாய், ஸூக்ஷ்ம ரூபியாயினன். அப்போது பாநுதாஸர், பக்த ஸுலபனைத் தமது பூஜைப் பெட்டகத்தில் இருத்தி மூடிக்கொண்டு பண்டரி புரத்துக்கு வருவாராயினர்.

பகவான் பாநுதாஸரை நோக்கி, "அக்காலத்தில், யசோதையால் * உலூகலத்தில் கட்டப்பட்டு, தாமோதரன் எனப் பெயர் பெற்றேன்; ததிபாண்டனுடைய பாண்டத்தில் ஒளித்திருந்தேன்; ஸாமந்தனுடைய மனமுழையில் வஸித்தேன்; இக்காலத்தில் இப்போது நினது பூஜா † ஸம்புடத்தில் அடங்கி ஒடுங்கி யிருக்கின்றேன்; நான் எனது

* உலூகலம் - உரல்.

† ஸம்புடம் - சிறுபெட்டி.



* ஆத்மாத்மீயங்களை, பாகவதர்களுக்கு, அவர்கள் விரும்பியபடி விநியோகித்திருக்கின்றனன்" என்று, ஸல்லாப வார்த்தைகளாடிக் கொண்டே, பத்மாலயம் என்னும் ஊர்க்கு வந்தபோது, பாநுதாஸர், நதிக்கரையில்பரிசுத்தஸ்தலத்தில் ஸம்புடத்தை இருத்தி, நதியிற்குளித்து, நித்ய கருமங்களை நிறைவேற்றி, திரும்பிவந்து பார்க்கையில், நந்தநந்தனன், சம்புடம் மேல்மூடியே முடியாகவும், அடிப்பாகமே பாதுகைகளாகவும் மாறச்செய்துகொண்டு, ஸ்தூலரூபியாய் ஸேவையளித்தனன். பாநுதாஸர், பகவானை நோக்கி, "தேவதேவா! ஸ்தூலரூபியாகிய உன்னை, நான் எங்ஙனம் வகிப்பேன்" என, பகவான், அவரைநோக்கி, "நீ விரைவாய்ப் பண்டரிபுரத்துக்குப்போய், அங்குள்ள ஸாதுக்களனைவரையும், இங்கழைத்துக்கொண்டு வருக" எனக் கட்டளையிட்டனன். பாநுதாஸர், பண்டரிபுரத்துக்கு ஓடோடிச்சென்று, அர்ச்சகர்களுக்கும் மற்ற ஸாதுக்களுக்கும், பகவந் நியமனத்தை அறிவிக்க, அவர்கள் ஆனந்த ஸாகரத்தில் மூழ்கினவர்களாய், அனைவரும் ஒன்று கூடி மங்களவாத்யங்களோடு பத்மாலயத்துக்கு வந்து, பகவானை ஸேவித்து, மெய்மறந்து துதிக்கின்றவர்களும், கூத்தாடுகின்றவர்களும், பகவானை ஆலிங்கனஞ்செய்து கொள்ளுகின்றவர்களுமாய், ஸ்ரீருக்மிணீ காந்தனை ரதாரூடனாக்கிக் கொண்டுவந்து, முன்போலவே ஆலயத்தில் பிரதிஷ்டைசெய்து, ஷோடசோபசாரங்களுடன்,

'ஜயஜய தேவ தேவகீ நந்தன
ஜயஜய கிருஷ்ண வ்ருஷ்ணிவம்ஸ ப்ரதீப
ஜயஜய மேகஸ்யாமளகோமளாங்க
ஜயஜய பூபாரநாஸ முகுந்த'

என † மங்களாசாசநம் செய்து, பாநுதாஸரை நோக்கி, "ஓ, மஹாத்மா! உம்மாலல்லவா நாங்கள் இந்த ஜகதீசனை மறுபடியும் காணப்பெற்றனம்!" எனப் புகன்று, அவர் விஷயத்தில் நன்றி பாராட்டினார்கள். இப்போதும் ஸ்ரீமத் பண்டரிபுரத்தில், கார்த்திகை மாதத்தில், ரதோற்சவ நாளில், இந்த ஐதிகம் ‡ அநுகரிக்கப்படுகின்றது. அவ்வானந்தம் அவஸ்யம் அநுபவிக்கவேண்டியதாய், வாசாமகோசரமாயிருக்கின்றது.

## ஐம்பத்துமூன்றும் அத்தியாயம்

# பயாமபட்டர் சரித்திரம்

ப்ரதிஷ்டி யென்னும் பட்டணத்தில் பயாமபட்டர் என்னும் வேதியர், ஜோதிஷத்திலும் வேதாந்தத்திலும் மஹா நிபுணராயிருந்தனர். அநேகர் ¶ வித்யார்த்திகளாய் அவரை அடுப்பாராயினர்: இவருடைய உபதேசத்தால், அநேகர் பிரபல வித்வாம்ஸர்களானார்கள். இவர்

* ஆத்மா - ஜீவன். ஆத்மியம் - ஜீவனுக்கு ஸாதநமானது.

† மங்கள + ஆஸாஸனம் - மங்களவாழ்த்து.

‡ அநுகரித்தல் - அதுபோலவே செய்யப்படுதல்.

¶ வித்யார்த்திகள் - மாணக்கர்.

பஞ்சகால * பாராயணராய், நாடோறும் கங்கா ஸ்நானம் செய்து
கொண்டு நித்ய நைமித்திக கர்மங்களைத் தக்கபடி அநுஷ்டித்து,போஜன
முடிந்ததும், ஸ்ரீ பாகவத பாராயணம் செய்வாராயினர், ஒரு நாள்
பயரமபட்டர் புசித்துக்கொண்டிருக்கையில், கறியில் உப்பில்லை யென்று
மனைவியிடத்தில் சொன்னார். அப்பெண்மணி நகைத்துக் கொண்டே
கணவரை நோக்கி, "உமக்கு வயது அறுபதாகின்றது! இன்னும்
உமது நாக்கு, சுவைகளைக் கோருகின்றது. இத்தனை சுவை பகவான்
விஷயத்தில் உண்டாயிருந்தால், யமதண்டனைக்கு தப்பி முக்தியென்னும்
மொய்குழலாளை முயங்கப்பெறுவீர்" எனக் கூறினவுடனே, அவர்க்கு
முற்பிறப்பின் விட்டகுறை தொட்டகுறையாலேயோ, அன்றி காரண
மற்ற பகவத் கடாக்ஷத்தாலேயோ ஞானோதயமாய், வைராக்யயுக்த
ராய், உண்பதை விட்டு,விதிப்படி கைகால்கள் அலம்பிக்கொண்டு,தமது
மனைவியை தம்மை ஆட்கொளவந்த ஆசார்ய ஸ்வரூபியாகிய பகவானாக
மதித்து, அவ்வம்மையார்க்கு ப்ரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து,
"ஜகத்குருவாகிய ஸ்ரீவாஸுதேவ மூர்த்தியே உனது திருவுருவந்தாங்கி
வந்து, எனக்கு ஞானோபதேசம் செய்தபடியால், நீ எனக்கு ப்ரதமகுரு
மணி ஆயினை. காமம்,காமபோக நுகர்ச்சியான் ஒருபோதும் தணியாது.
† ஆகுதிகள் செய்யச் செய்ய நெருப்பு விருத்தியாய்க் கொண்டிருக்
கிறபடி, காமம், போகம் நுகர நுகர விருத்தியாய்க்கொண்டே
யிருக்கும்; இந் நிலவுலகிலுள்ள ஸகல தான்யங்களும், ஸ்வர்ண முதலிய
சிலாக்யப் பொருள்களும், யானை குதிரை முதலிய பசுவர்க்கங்களும்,
ஸுந்தரவதிகளாகிய ஸ்த்ரீகளும் ஒருவன் ஆசையை அடக்கப்போது
மானவைகளல்ல. ஆகையால், அப்படிப்பட்ட ஆசையை தணிக்க
முயலுதல் வீணாகும்; ஆதலினால், காமத்தையே தலையெடுக்க
வொட்டாமல் தடுத்துக்கொள்ளுதல் மேலாகும். ஸகல பூதங்களிடத்
தும், ராகத்வேஷ ரூபமாகிய பாவனை செலுத்தாமல், ஸமபாவனை
யுள்ளவனாகிய புருஷனுக்கு, எவ்விடத்திலும் சுகமே ப்ராப்தியாகும்.
அவிக்கக்கூடாததாய், சரீரம் அழிந்தாலும் தான் அழியாததாய்
வளர்ந்து வரும் ஆசையை ஒழிக்காத மதியினற்குத் துக்கமே உண்டா
கும். மனிதன் மூப்பால் நலிவடையும்போது அவனது மயிரும்,
பற்களும் வீழ்ந்து போகின்றன. உயிரிச்சையும் பணவாசையும் ஆகிய
இரண்டுமாத்திரம் ஒருபோதும் நலிந்து போகாவாம். இதற்கு உபமான
மாக, அறுபது வருஷங்கள் போகாநுபவம் செய்த எனக்கு, ஆசை
கொஞ்சமேனும் அறாமல், விருத்தியடைந்து கொண்டே வந்தது. நான்
இனிமேல், ஆசையென்னும் பேயை யோட்டி, மனதைப் பரப்ரஹ்மத்தில்
செலுத்தி, * த்வந்த்வ துக்கங்களையும் மமதையையும் நிக்ரஹித்து,
விலங்குகளுடன் ஸஞ்சரித்து விளங்குவேன்" எனப்புகன்று, அப்போதே
வீடுவிட்டுப் புறப்பட்டு காடு சேர்ந்தார்.

* பாராயணம் - வைராக்யத்துடன் ஒரு விஷயத்தில் முயலுதல்.

† ஆகுதிகள் - நெய்விடுதல். த்வந்த்வதுக்கம் - தான் என்னும் அகங்
காரம்.



அப்போது இவருடைய உற்றார் உறவினர்கள், இவரைத் தேடிக்
கண்டுபிடித்து, பலவிதங்களிலும் வற்புறுத்தி வீட்டுக் கழைத்துக்
கொண்டு வருகையில், இவர், பின்வருமாறு சிந்திக்கலாயினர்.
"இவ்வுற்றா ருறவினர், நான் எங்குச் சென்றாலும் என்னை வற்புறுத்து
வார்கள் எனத் தோன்றுகின்றது. இவர்களனைவரும் எனது விஷயத்
தில் அருவருப்புற்று தாங்களே என்னை அகற்றக் கூடிய கார்யத்தைச்
செய்தால்தான் நான்,இவர்களிடத் தகப்படாமல் வாஸுதேவதருநிழலை
அடுத்துப் பிழைப்பேன்" என்பதேயாம். இங்ஙனம் யோசித்த இவர்,
"ஒரு துருக்கனிடத்திற்குப்போய் நான் உங்கள் மதத்தைச்சேருவேன்;
அதற்கு எனக்குச் செய்யவேண்டிய ஸம்ஸ்காரங்கள்செய்து, உங்க
ளோடு என்னையும் சேர்த்துக்கொள்ளவேண்டும்" என்று வேண்டிக்
கொண்டார். அந்த துருக்கன் ஸந்தோஷித்து, தனது மதாநுஸாரப்படி
அவர்க்கு * ஸுந்நதி முதலாகிய ஸம்ஸ்காரங்கள் செய்தனன்.
இதனைக் கண்டமாத்திரத்தில், ஸமஸ்த உற்றாருறவினர்களும் விசனமிக்க
வர்களாய், இவரைப் பலவிதங்களிலும் தூஷித்து, இவர் இறந்தனர் என்
றெண்ணித் திலதர்ப்பணஞ் செய்துவிட்டார்கள். பயரமபட்டர், சில
காலம் துருக்கராய் வாழ்ந்து, † பகீர்களை நோக்கி, நான் இப்பொழுது
துருக்கனானேனோ? எனக்கேட்க, அவர்கள் கர்மகாண்ட சாஸ்த்ர
விதியை அநுசரித்து உன்னைத் துருக்கனாக்கினோம்" என்றனர். பயரம
பட்டர் நகைத்துக்கொண்டே அவர்களை நோக்கி, என்னை, நீவிர்
துருக்கனாக்கினது உண்மையானால், எனது காதுகளிற் குத்தப்
பட்டுள்ள துளைகள் மாறியிருக்கவேண்டும். அங்ஙனம் ஆகாமல்
அவைகள் எப்போதும்போல் இருக்கின்றன. ஆதலால்,நீவிர் எனக்கியற்
றிய மகம்மதீய ஸம்ஸ்காரங்கள் நிஷ்ப்ரயோஜனங்களாயின. கண்ணுள்
ளானைக் குருடனெனவும், நன்றாய் நடப்பவனை நொண்டியெனவும்
சொல்லுகிறபடி, இந்துக்களுடைய ஸம்ஸ்காரமாகிய கர்ணத்வாரங்
களோடு கூடியுள்ள என்னை துருக்கனெனக் கூறுகின்றீர்கள்" என்று
உரைத்தனர். அதனைக்கேட்ட மகம்மதியர்கள் வெட்கி,மறுமொழி பகரா
மல் மௌனமாயிருந்தனர். பிறகு பயரமபட்டர் அங்கிருந்து புறப்பட்டு,
கங்கை நதிக்கரையிலுள்ள பிராமண கோஷ்டிக்கு ஸாஷ்டாங்க நமஸ்
காரம் செய்து, நடந்த விருத்தாந்தங்களை அறிவித்து, "ஓ வேதியர்காள்,
எனக்குச் சாஸ்த்ரோக்தமான ப்ராயச்சித்தம் செய்து, இவ்வாத்மா
வுக்குப் பிழைக்கும் வழி உண்டாக்கவேண்டும்" என்று வேண்டிக்
கொண்டார். அவ்வேதியரனைவரும் நன்றாயாலோசித்து, தர்மசாஸ்த்ர
விதியை அநுஸரித்து, அவர்க்குப் பிராயச்சித்தம் பண்ணினார்கள்.
பிறகு பயரமபட்டர் அவ்வேதியர்களை நோக்கி, "ஓ விப்ரசிகாமணிகாள்!
எனக்கொரு ஸம்ஶயம் உண்டாயிருக்கின்றது; அஃதென்னெனில்,
இதற்கு முந்தி, நான் துருக்கனாய் ஸுந்நதி முதலாகிய ஸம்ஸ்காரங்
களைச் செய்யப் பெற்றிருந்தேன். இப்போது நீவிர், பிராயச் சித்த
மூலமாய் என்னை, வேதியனாக்கி விட்டதாக எண்ணி யிருக்கின்றீர்கள்.

* ஸுந்நதி - சர்மவிலக்கம். † பகீர் - மகம்மதியமதபோதகர்.

முந்தி செய்யப்பட்ட ஸம்ஸ்காரங்கள் மாறுமல் எப்போதும்போலவே யிருக்கின்றது. அது மாறின பிறகல்லவா என்னை நீவிர் வேதியனாக எண்ணுதல் ஞாயமாகும்! ஆகையால், நான் துருக்கனுமல்லன்; நீவிர் எண்ணுகிறபடி வேதியனும் அல்லன்'' எனக் கூறக்கேட்ட அவ்வேதியர்கள், ''இவற்கு ஈஸ்வரனே வந்து ஸமாதானம் சொல்ல வேண்டும்'' என்று கூறி மௌனமாயிருந்தனர்.

பயரமபட்டர், தமது விஷயத்தில் உலகத்தார் செய்யும் நிந்தைக்கு தம் மனத்தகத்தில் சலியாதவராய், பலதேசங்களிற் றிரிந்து வடபா நலம் என்னும் ஊர்க்கு வந்தனர். அங்கு, நாகநாதர் என்னும் மஹான் ஒருவர், * பகவன் மந்திர நிர்மாணத்துக்காக, சடையால் வண்டிகள் செய்து, அவைகளிற் பர்வதாகாரங்களாகிய பெரிய பெரிய கருங்கற் களை ஏற்றிக் குரங்குகளைப் பூட்டி ஓட்டி வருவாராயினர். இவ்வற்புதத் தைக் கண்ட பயரமபட்டர், ''இந்த நாகநாதர் பரம ஸித்தரா யிருக்கின் றனர். இவரால் எனது ஸம்சயம் நிவர்த்தியாகக்கூடும் என்று தமக் குள்ளே எண்ணிக்கொண்டு, ஆலயத்துக்குள் நுழைந்து, நாகநாதர்க் கெதிரில் நின்று, ''நான் யாவனெனக் கூறுக. உமது ஸாமர்த்தியத்தைப் பார்க்கலாம்'' என்று தைரியத்துடன் கேட்டனர். அதைக்கேட்ட மஹானுபாவராகிய நாகநாதர், கோபங்கொண்டவர்போல நடித்து, தமது கரத்திலிருந்த பிரம்பால் அவருடைய தலைமேலடித்து, ''நீ இமே சாய்க; சாக'' எனக்கூறினர். உடனே பயரமபட்டர் நிலமேல் வீழ்ந்து மரித்தனர். அப்போது, நாகநாதர் தமது சிஷ்யர்களை அழைத்து, ''இந்தப் பிணத்தை உரலிலிட்டு, மொத்தையாய் இடித்துக்கொண்டு வாருங்கள்'' என்றனர். அவர்கள், அங்ஙனமே செய்து, † பிண்டாக் ருதியான பிரேதத்தை ஆசார்யர்க்கு எதிரிலிருத்தி, இவர் இந்த மாமிஸ பிண்டத்தை என்ன செய்யப்போகிறார்!'' எனப் பார்த்துக் கொண்டி ருக்கையில், நாகநாதர் வறட்டிகளைத் தருவித்து அடுக்கி அப் பிண்டா காரப் பிணத்தை அதனில் இருத்தி, மேலே வறட்டிகளான் மூடி, தீமூட்டி, அதனைச் சாம்பராக்கிக் குவித்து, தமது கடாக்ஷவீக்ஷண்யத்தை அதன்மேற் செலுத்தி, ஜலத்தை ‡ ப்ரோக்ஷித்த மாத்திரையில், பயரம பட்டர் உயிர்பெற்று, முன்னிருந்ததைவிட அதிகமான தேகவொளி யுடன் எழுந்து வந்து, நாகநாதரை வணங்கி, அஞ்சலி ஹஸ்தராய் அவர்க்கெதிரில் நின்றனர். நாகநாதர், பயரமபட்டரைப் பார்த்து, ''அடா, மூடா! இப்போது நீ யாவன்? சொல், பார்க்கலாம்'' என்றனர். முதலில் வேதியரால் செய்யப்பட்ட ஸம்ஸ்காரங்களையாவது, பிறகு துருக்கர்களா லியற்றப்பட்ட ஸம்ஸ்காரங்களையாவது தம்மிடத்திற் காணுதவராகி, பயரமபட்டர் மருண்டு மறுமொழி கூறமாட்டாமல் மௌனமாயிருந்தனர். அப்போது நாகநாதர் தமது திருக்கரத்தால் அவரது சிரத்தை அலங்கரித்து, ஸ்ரீதாரக மந்திரத்தை யுபதேசித்து, ''எட! உன்னை இன்னுனென, நானறிந்து சொல்லுமாறு நீ என்னைக்

* பகவன் மந்திர நிர்மாணம் - திருக்கோயில் கட்டுவதற்காக.
† பிண்ட + ஆக்ருதி - உருண்டைவடிவு. ‡ ப்ரோக்ஷித்தல் - தெளித்தல்



கேட்டனையே, இப்போது அதற்கு விடை கூறுவேன்; கேள். நீ, தேவர்,
விலங்கு, மக்கள், தாவரம் முதலியவைகளிலும், க்ஷத்ரிய வைஸ்ய சூத்ரர்
களிலும், பிரமசாரி, க்ருஹஸ்தன், வானப்ரஸ்தன், ஸந்யாஸி முதலியவர்
களிலும் ஒருவனும் அல்லை. இந்தக் குறிகளனைத்தும் உடற்கேயன்றி
ஆத்மாவுக்கன்று. ஆத்மா நித்யமாய், * அவிகாரமாய், ஞானனந்த
ஸ்வரூபமாய், ஞான குணகமாய், பரமாத்மாவுக்குச் சேஷமாய் இருக்
கின்றது. முன்னே பிராமணர்களும், பின்னே துருக்கர்களும் பண்
ணின ஸம்ஸ்காரங்கள், உனது சரீரத்திற்கே அன்றி, ஆத்மாவுக்கு அன்று.
ஆதலால், உனது ஸம்ஸ்காரங்களால் உனது † ஸ்வரூபம் மாறவில்லை.
அஹம்சப்தவாச்யம் ஆத்மாவே யன்றிச் சரீரம் அன்று. அங்ஙன
மிருந்தும் ‡ ப்ராஹ்மணோஹம் ஸூத்ரோஹம், க்ருஸோஹம், வ்ருத்
தோஹம் முதலிய சரீரத்தன்மைகளை ஆத்மாவிடத்தி லாரோபித்
துரைத்தல் உலகவழக்கா யிருக்கின்றது. ஆனாலும், வியவகார
தசையில் எந்தப் பேச்சுப் பேசினாலும், புத்திமான், அநவரதமும்
ஏமாறுமல் ஆத்ம ஸ்வரூபத்தை ¶ அநுஸந்திக்க வேண்டும்.
இவ்வாத்மாவுக்குக் கர்மாநுகுணமாக அநேக ஜன்மானுபவங்கள்
உண்டாய்க்கொண்டே யிருக்கும். விவேகியானவன், ஸத்குருவை
உபாஸித்து, அவருடைய கடாக்ஷத்தால் ஞானதீப ஒளியைப்பெற்று,
அஜ்ஞான திமிரத்தைத் துரத்தி அடித்து, தன்னைத் தான் உணர்ந்து,
தனது ஆத்ம பாரத்தை பகவானுடைய பாதகமலங்களில் அர்ப்பணஞ்
செய்து, அவனுடைய கடாக்ஷத்தால், $ ப்ரக்ருதிபந்த § விநிர்முக்தனாய்,
|| புநராவ்ருத்தி ரஹிதமோக்ஷத்தை அடைவன். நீ பகவதாஜ்ஞைகளான
ஸ்ருதி, ஸ்ம்ருதிகளை அவமதிக்காமல், சாஸ்த்ரோக்த மார்க்கத்தில்
நடந்து, அநவரதமும் பகவந்நாம பஜனம் பண்ணிக்கொண்டு, நிரந்தர
பகவத்யானபரனாய், நினது கரணகளேபரங்களை பகவத் கைங்கரியத்தில்
விநியோகித்துக் கொண்டிருக்கக்கடவை. ஆத்மா வென்னும் ‡ பதிகன்
சரீரம் என்னும் தேர்மேல் ஏறியிருக்கின்றனன். இந்த தேரிற் பூட்டிய
குதிரைகள் இந்திரியங்கள்; மனம் அவைகளை நடத்தும் கயிறு; புத்தியே
பாகன்; புத்திமான், இந்திரியங்கள் என்னும் குதிரைகளை ஜாக்ரதை
யாய்ச் சாஸ்த்ரோக்த மார்க்கங்களிலேயே நடத்தினால், கஷ்டமின்றி
மோக்ஷத்தை அடைவான். பாகனாகிய அறிவு, ஜாக்ரதையின்றி மன
மென்னுங் கயிற்றைத் தளர்த்திவிட்டால், இந்திரியங்களென்னும் அடங்
காத முரட்டுக் குதிரைகள், சரீரத் தேரை ராஜ வீதியாகிய வேதாந்த
மார்க்கத்தைவிட்டு விலக்கி, இடுக்கச் சந்துகளாகிய விஷயமார்க்கங்களில்
ஈர்த்துக் கொண்டுபோய் விடும். அந்த மார்க்கம் தேரூரும் பதிகனாகிய

* அவிகாரம் - மாறுதது. † ஸ்வரூபம் - ஆத்மஸ்வரூபம்.
‡ ப்ராஹ்மணோஹம் - நான் பிராம்மணன். ஸூத்ரோஹம் - நான் சூத்தி ரன், க்ருஸோஹம் - நான் மெலிந்திருக்கிறேன் வ்ருத்தோஹம் - நான் மூத்திருக் கிறேன். ¶ அநுசந்தித்தல் - ஸம்பந்தப்படுத்தல், சேர்த்தல்.
$ ப்ரக்ருதிபந்தம் - உலக ஆசை. § விநிர்முக்தன் - விட்டவன்.
|| புநராவ்ருத்தி - மறுபிறப்பு. பதிகன் - பிரயாணி.

ஆத்மாவை, யம நகரத்திற் சேர்க்கும். ஆகையால், பகவான் என்னிடத்தில் ஆவேசித்து உனக்குச்செய்த இதோபதேசத்தை மறவாமல், ஜாக்ரதையாய், ஸாதுஜன ஸஹவாஸம் செய்துகொண்டு, இன்னும் மிகுந்துள்ள உனது ஆயுளைக்கழித்து பிரமானந்தத்தை அடைந்து, சுகமடையக் கடவை'' என ஹிதோபதேசம் பண்ணினார். அந்த குருமொழிகளைக் கூர்ந்து கேட்டு வந்த பயர்மபட்டர், நிர்மல சித்தராய், அவர்க்கு ஸாஷ்டாங்க வந்தனம் செய்து, ''ஓ குருநாதா! பரிசுத்தனானேன்; உத்தமர்க்குள் உத்தமனானேன்; இப்போது நான், * அந்தகனை எனது ஸொந்த சுற்றமெனப் பாராட்டி யெதிர் நோக்குகின்றேன். பவரோக வைத்யனான பகவான், உமது திருவுருவம் பெற்று வந்து, எனக்கு விஷ்தெளஷதமளித்தனன்; அதனை உட்கொண்டதனால் எனது பவரோகம் நீங்கி, உமது திருவருள் என்னும் பத்ய பரிகாரத்தால் முக்தனாய் விட்டேன். ஸ்ரீபாண்டுரங்க மூர்த்தியை பல பக்தர்கள் உபாஸிக்கின்றனர். ஆனாலும், அர்ச்சாரூபியாகிய பகவானை, ஸமபந்தியிற் குந்த வைத்துக்கொண்டு புசித்த நாமதேவர்க்கும், பாகவதாராதனத்திற்காக மகன் தலையைக் கொய்த கபீர்தாஸர்க்கும், எருமைக்கடாவின் வாயினால் நான்கு வேதங்களையும் பாராயணம் பண்ணுவித்த ஞானதேவர்க்கும், தமது இதய முழையில் பண்டரி நாதனை ஒளித்துவைத்த ஸாமந்தர்க்கும், இன்னும் இத்தகைய விசித்ர சரித்ர வித்தகர்களான மற்ற பாகவதர்களுக்கும் ஸமமானவர் உலகில் எவர் உளர்! இக்காலத்தில் பரிசவேதியால் இரும்பை பொன்னாக்குவதுபோல, எனது சரீரத்தைப் புடம்போட்டு, என்னை பரிசுத்தவானாக்கிய உம்மை யொப்பார் யார் எனச் சொல்லுவேன்! "அளவிடற்கரியவனான ஸ்ரீமத் பண்டரிநாதன், தன்னை யொப்பான் தானேயாய் விளங்குகிறபடி, உம்மை யொப்பார் வேறு பிறரின்றி விளங்குகின்றீர்!'' எனத் துதித்து, அவரது பதயுகள நீழலிற் சிறிது காலம் வாழ்ந்து, அவரது அநுமதிபெற்று பண்டரி புரத்துக்கு வந்து, ஸ்ரீ பாண்டுரங்கனை தரிசித்து, ஸாதுகோஷ்டியிற் கலந்து, பிரமானந்தத்தை அநுபவித்துக்கொண்டிருந்து, ஸ்ரீ பாகவதத்தில் பன்னிரண்டு † ஸ்கந்தங்களையும் மஹாராஷ்ட்ர பாஷையில் ‡ யக்ஷகாநமாயியற்றியருளி, ஆசார்யர் விதித்த விதிமுறை பிறழாமல் தமது வாணாள் முழுமையுங் கழித்து, பகவத் ஸாயுஜ்யத்தை அடைந்தனர்.

பவபயஹராய நம:

---

* அந்தகன் - யமன். † ஸ்கந்தம் - அதிகாரம்.

‡ யக்ஷகாநம் - செவிக்கினிய ஒருவித இன்பரஸச் செய்யுள்



## ஐம்பத்துநான்காம் அத்தியாயம்

# ஏகநாதஸ்வாமி சரித்திரம்

வித்யா நகரத்திலிருந்து, தேவாதிதேவனாகிய ஸ்ரீருக்மிணீ காந்தனை
பண்டரி புரத்துக்குப் பழையபடியே கொண்டுவந்து ப்ரதிஷ்டை
பண்ணுவித்து, உலகமடங்கலும் உய்யும்வகை தேடியதனால் ஸாது
ஜனங்களை மகிழ்வித்த மஹாநுபாவராகிய பாநுதாஸர்க்கு, சக்ரபாணி
யென்னும் குமாரர் ஒருவர் உண்டானார். அவர், கல்யாணகுண கணக்
குவியலாய், அநவரதமும் ஸ்ரீஹரி பஜனம் பண்ணிக்கொண்டிருந்த
னர். அவருடைய குமாரர்க்கு ஸூர்ய நாராயணரென நாமகரணஞ்
செய்யப்பட்டது. இப் புத்ரர்க்குத் தக்ககாலத்தில் சௌளோப நயன
வேதாத்யயன சாஸ்த்ராப்யாஸங்கள் கிரமமாய் நடத்தப்பட்டன.
பிறகு, ருக்மிணீ யென்னும் ஒரு கன்னிகையை இவர்க்குப் பாணிக்ரஹ
ணம் பண்ணுவித்தார்கள். இவர்கள் இருவர்க்கும் மஹாநுபாவராகிய
ஏகநாதர் புத்ரராய் அவதரித்தனர். இந்த ஏகநாதர்க்குத் தாய் தந்தை
யர், உரிய காலத்தில் உபநயன விவாஹாதிகளைச் செய்வித்தார்கள்.
இவர், பூர்வஜந்ம வாஸனையால் அதிபால்ய தசையிலேயே ஸாது ஜனங்
களிடத்தில் விஶ்வாஸம் உள்ளவராய், ஸாது கோஷ்டியிற்கலந்து வாழ்ந்
திருந்து, ஸ்ரீஹரி பஜனத்தில் மிக விருப்ப முற்றவராய் விளங்கி இருந்
தார். அப்போது அங்குப் பரமஞானியாய், * தத்தாத்ரேயோபாஸக
ராகிய ஜநார்த்தநபண்டிதர் என்னும் மஹான் ஒருவர் இருந்தனர். ஏக
நாதர் அவரிடத்திற் சென்று, சாஷ்டாங்க வந்தனம் செய்து, பயபக்தி
களோடு கைகட்டி வாய்பொத்தி நிற்கையில், ஜநார்த்தநபண்டிதர்
இவரை நோக்கி, "தம்பீ! நீ யாவன்? பாலகனாகிய நீ, விளையாட்டுப்
புத்தியைவிட்டு, தாய் தந்தையரைப் பிரிந்து, இங்கு என்ன காரியமாய்
வந்தனை?'' எனக் கேட்டார். அதற்கு ஏகநாதர், "ஓ ஸ்வாமி! இதுவரை
யில் நானெடுத்த ஜன்மங்களுக்கு அளவில்லை; அந்த ஜன்மங்களில்
எனக்கு எண்ணிறந்தோர் தாய் தந்தையரானார்கள். இந்தச் சரீரத்தைப்
பெற்று வளர்த்த தாய்தந்தையர்களும், இதுவரையிலிருந்த எண்ணிறந்த
தாய் தந்தையர்க்குள் சேரத்தக்கவர்களே அன்றி, இவர்களிடத்தில்
விசேஷம் ஒன்றுங்காணப்படவில்லை. ஒப்புயர்வில்லா உத்தமபிதாவாகிய
ஸ்ரீமந்நாராயணன், எனக்கும் உனக்கும், இன்னும் உள்ள எல்லார்க்கும்
பொதுத் தந்தையாய் இருக்கின்றனன்.

'அடர்பொன் முடியானை ஆயிரம்பேரானை
சுடர் கொள் சுடராழி யானை—இடர்கடியும்
மாதா பிதுவாக வைத்தேனெனதுள்ளே
யாதாகில் யாதே யினி'

---

* தத்தாத்ரேயர் - அத்திரி முனிவர்க்கு அநசூயையிடத்திற் றோன்றினவர்.

என்ற ஆழ்வாரருளிச்செயலும் இங்கே கவனிக்கப்படவேண்டும். அவனுடைய காரணரஹிதக்கிருபையால், எனக்கு இந்த அருமையாகிய மானிடப் பிறவி கிடைத்தது. இந்த ஜன்மத்திலும், அந்த ஜகந்நாதனை உபாஸியாமல், ஆஹார நித்ரா பய மைதுனங்களுக்கு வசப்பட்டு, காலத்தை வீணிற் கழித்தேனானால், நான் விலங்கின் தன்மையனாவேன். ஸாதுகோஷ்டியிற் கலந்து சாந்த ஸுகத்தை அநுபவிப்பதன்றோ மனுஷ்ய ஜன்மத்திற் குகந்ததாகும்? அத்தகைய ஸுகத்தை அநுபவியாமல், காம, க்ரோத, லோப, மோஹ, மத, மாற்சர்யங்களென்னும் அறுவகைக் குற்றங்கள் என்னை வேதனை செய்கின்றன. இந்த அச்சம் தருகின்ற சத்ருக்களை ஜயித்தவனன்றோ ஜனன மரண வடிவங்களாகிய வலைகளை அறுத்தெறிந்து விட்டு, பிரமானந்த ஸுகம் பெறுவான்! அப்பேர்ப்பட்ட பரமானந்தத்தை விரும்பி,

'உற்றநோய் நீக்கி யுறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்' என்றபடி,

பிறவிக் கடலைக் கடப்பதற்கு ஸஜ்ஜன ஸஹவாஸம் தவிர, வேறு மரக்கலம் கிடையாதென நிச்சயித்து, ஸஜ்ஜனத் தலைவராகிய தேவரீருடைய ஸ்ரீபாத கமலங்களை விரும்பி, அநவரதமும் ஸத்கைங்கர்யம் பண்ணிக்கொண்டு எனது எண்ணத்தை ஈடேற்றிக் கொள்ளலாம் என்று எண்ணி வந்தனன். சரணாகத ரக்ஷணம் ஸர்வேஸ்வரனுக்கும், ஸாதுக்களுக்கும் ஸ்வபாவ குணம் அல்லவா? என்று விண்ணப்பித்தனர். இந்த பாலகருடைய பால்மணம்அறாத மதுரவாய்மொழிகளைக்கேட்ட ஜநார்த்தந பண்டிதர், மிகவும் அதிசயமடைந்து, "நீ * கேவலம் பாலகனாயிருக்கின்றனை! நினது விவேகம் † அத்விதீயமாய், நினது மதுரமொழிகள் செவிக்கமுதமாயிருக்கின்றன. இது, ‡ அஸம்பாவ்யத்தை ஸம்பாவ்யமாக்கவல்ல பகவானுடைய செயலென்றெண்ணுகின்றனன்; உலகத்தார் யாவரும் பகவத் ஜ்ஞாந மற்றவர்களாய், காம க்ரோதாதி அறுவிதக் குற்றங்களை வளர்ப்பவர்களாய் வாழ்ந்திருக்க, நீ இந்த பால்யத்திலேயே அந்த அறுவிதக் குற்றங்களை அறுத்து, இந்திரிய ஸுகங்களை வெறுத்து, பிரமானந்த ஸுகத்தில் இச்சைவைத்தனை. பஞ்சேந்த்ரியங்கள் உன்னை வருத்தாது அஞ்சற்க; நீ கோரினபடியே, என்னிடத்தில் வாழ்ந்திரு" என அநுக்ரஹித்தார். அப்போது, நாரதர் வாய்மொழியால் ஸ்ரீ வேதவியாஸர்க்கும், மஹர்ஷி வாய்மொழியால் துருவர்க்கும் எத்தகைய ஆனந்தங்கள் உண்டாயினவோ, அத்தகைய ஆனந்தத்தை ஏகநாதர் அடைந்து, உடல் பூரித்தனர். அது முதல் அவர்,

"யானே யென்னை யறிய கிலாதே
யானே யென்றன தேயென் றிருந்தேன்
யானே நீயென் னுடைமையும் நீயே
வானே யேத்துமெம் வானவ ரேறே" என்றபடி,

* கேவலம் - முழுவதும்
† அத்விதீயம் - இணையற்றது.
‡ அஸம்பாவ்யம் - அஸாத்யம்.



ஆத்மாத்மீயங்களை அக் * குருபரன் அதீனமாக்கிக் † குருகுலவாஸம் செய்துகொண்டிருந்தனர். அவர்,

'குருபாத பத்மங் குறிப்பதுவே நந்தம்
பெருவாழ்வாம் அல்ல பிற' என்றபடி,

குருபாத பத்மத்யானஞ் செய்து கொண்டு, பரம‡பாவனமாகிய அவரது ¶ உச்சிஷ்டத்தை உண்டு, அவரது திருவடி நிழலை அகலாது வாழ்ந்திருந்தார். ஜநார்த்தந பண்டிதர், ஏகநாதருடைய தீரசக்தி முதலிய நற்குண கணங்களைக் கண்டு, மகிழ்ச்சி கொண்டு, "ஓ வத்ஸா! நீ, அநவரதமும் எனக்குப் பணிவிடை புரிந்துகொண்டு என்னை யகலாமல் வாழ்கின்றனை! நினது மாதா பிதா முதலியோர் அன்ன வஸ்த்ரங்களுக்கு வருந்தி வாடுவார்கள். தாய் தந்தையர் வாடி நிற்கையில், நீ அவர்களைக் கவனியாதகன்று இங்கு வாழ்தல் ஞாயமன்று. நான் நினக்குச் சிறிது பொருள் உதவுகின்றேன்; அப் பொருளை உனது வர்த்தமானத் திருமுகத்துடன் அவர்களுக்கு அனுப்பி, நீ எனது வீட்டு வரவு செலவுக் கணக்கப்பிள்ளையாய் ஜாக்ரதையாயிருந்து வாழ்க" என நியமித்தனர். ஏகநாதர், "தங்கள் சித்தம் அடியேன் பாக்யம் எனக்கூறி அங்ஙனமே செய்து மகிழ்ந்திருந்தார்.

ஒருநாள், ஜநார்த்தந பண்டிதர், ஏகநாதருடைய திறமையைப் பரிசோதிக்கவேண்டுமென்று எண்ணி, அவரை நோக்கி, "நீ இதுவரையில் எழுதின கணக்குகளை மொத்தம் செய்து எனக்குக் கொணர்ந்து காட்டுக" என நியமித்தனர். ஏகநாதர் ஜாக்ரதையுடன் இருந்து, இரவில் ஆசார்யர் சயனித்த பிறகு, தீபமேற்றிக்கொண்டு கணக்குகளை மொத்தந்தைக்கிறபோது, அரை, கால், அரைக்கால், வீசம் இவைகள் பேதப்படுவதனால் ஆகார நித்திரையின்றி, அவ்விரவெல்லாம் அதே வேலையாய்க் கணக்குகளைப் பரீக்ஷித்துக்கொண்டிருந்தனர். ஜநார்த்தந பண்டிதர், இரவு மூன்றாம் ஜாமத்தில் விழித்தெழுந்து, ஏகநாதர் வழக்கமாகப் படுக்குமிடத்தில் இல்லாமையால் அவரைத் தேடினார். அப்போது, ஏகநாதர், "ஓர் ஒதுக்கிடத்தில் உட்கார்ந்திருந்து, விளக்கு வைத்துக்கொண்டு, அதே நினைவாய்க் கணக்குகளைச் சோதித்துக்கொண்டிருப்பதை ஆசார்யர் கண்டு, அவர்க்குத் தெரியாமல் பின்புறத்தில் எட்ட நின்று பார்க்கையில், கொஞ்சநேரமான பிறகு, ஏகநாதருடைய கணக்கு சரிப்பட்டுவிட்டதனால் ஸந்தோஷமடைந்து, தமது ஆசார்யர் பின்புறத்தில் நிற்பதை உணராமல், கைகொட்டிக் கக்கடகக்கடச் சிரித்துக்கொண்டு, பளா பளா என்று பகர்ந்தனர். அதைக் கண்டு கேட்ட ஜநார்த்தநபண்டிதர், அவர்க்கெதிரில் வந்து, நீ என்ன ஆச்சரியத்தைக் கண்டனை! பளா பளா எனக்கூறி நகைத்துக்கொண்டு கைகொட்டுங் காரணமென்னை?" எனக் கேட்டனர். ஏகநாதர், தலை

* குருபரன் + அதீனம் - குருபரனுக்கு ஸ்வாதீனம்.
† குருகுலவாஸம் - குருவின்மடத்தில் வஸித்தல்.
‡ பாவனம் - பரிசுத்தம்.
¶ உச்சிஷ்டம் - எச்சில்.

தூக்கி நோக்கி விரைந்தெழுந்து, ஆசார்யர் திருவடிகளை வணங்கி, தமது நகைப்புக்குக் காரணத்தை விண்ணப்பித்தார். அதைக் கேட்டு, ஜநார்த்தநபண்டிதர் நகைத்து, "ஏடா, ஏகநாதா! ஒரு ஜாம காலமாக நான், உன் அருகில் வந்து நின்றுகொண்டிருந்ததை அறியாமல் அரைக்காலுக்கும் இருமாவுக்கும் ஒருமாவுக்கும் காணிக்கும் அதே நோக்கமாய், நினது மனதைக் கணக்கில் ஒடுக்கிவைத்தனை! இப்படிப்பட்ட அசைவற்ற நிஷ்டை, பகவான் விஷயத்தில் உனக்கு உண்டாமாயின், நீ பகவத் ஸாயுஜ்ய பதவியை அடைவதற்குத் தடையில்லை. இதுவே ஆதியில் நீ கோரின பரமார்த்தநிலை" என இதோபதேசம் செய்தனர். ஏகநாதர்க்கு உடனே வைராக்யம் உதயமாய், "ஸ்வாமீ! தேவரீர் திருவருளால், எனது கோரிக்கை கைகூடி எனது ஜன்மம் *ஸபலமாயிற்று. தேவரீருடைய இதோபதேசமென்னும் ஞானவொளி, அநாதிகாலமாய், பல்வேறு பிறவிகளிலும் என்னைவிட்டகலாமலிருந்த அஜ்ஞான திமிரத்தைத் துரத்தியடித்தது" எனப் புகன்று, ஏட்டெழுத்தாணிகளைத் தரைமேற் கிடத்தி, "குருபுங்கவ! கணக்கிட்டுமுடியாத எனது ஸஞ்சித ப்ராரப்தங்கள், தேவரீருடைய கடாக்ஷ வீக்ஷண்யத்தால் உருமாறி, இருந்த இடந் தெரியாமல் இரிந்தோடின. இதுவரையில், நரசரீரத்தை வகித்த நான், விலங்கொப்பாய் வாழ்ந்தேன்! தேவரீருடைய உபதேசத்தால் இப்போது நான், மனிதனெனப் பெயர்பெற்றேன். ஆனாலும் என்னைநம்பவேண்டாம்; இச்சரீரத்தேரிற் கட்டப்பட்டிருக்கும் இந்திரியங்களென்னும் முரட்டுக் குதிரைகள், எனது ஸ்வாதீனத்திலில்லா. இவை வேதாந்த வீதியைத் தப்பவிட்டு, விஷயங்களென்னும் இடுக்குத்தெருக்களில் நுழைந்தோடி, என்னை யமலோகத்திற்சேர்க்கும் என அஞ்சுகின்றனன்; எனக்கு அசைவற்ற அறிவு என்கிற அறுதகயிறு உதவி, அம் முரட்டுக் குதிரைகளுடைய இயற்கை வேகத்தை அடக்கி, என்னை வேதாந்த ஞானமாகிய ராஜவீதியிற்செலுத்தி, ஸ்ரீவைகுந்த திவ்ய நகரத்திற் சேர்க்கவேண்டிய கடமை தேவரீருடையதாய் இருக்கின்றது. நான் தேவரீருடைய ஸந்நிதியிற் சரணாகதியடைந்த அன்றே, இவ் வாத்மபாரம் தேவரீரால் வகிக்கப்பட்டதாயிற்று. இப்போது நான் மறுபடியும் பிரார்த்தித்தல் அநாவசியகம். ஆனாலும், தேவரீருடன் கூடிவாழ்ந்திருந்தல் எனக்கு தாரக, போஷக, போக்ய ரூபங்களாயிருக்கின்றபடியால், ஆதியில் விண்ணப்பித்தபடியே, மறுபடியும் விண்ணப்பிக்கின்றேன்" எனக் கூறினார். இவைகளைக் கேட்டுவந்த ஜநார்த்தந பண்டிதர் மிகக் களித்து, அவரை ஆலிங்கனஞ் செய்துகொண்டு, அவருடைய செவியில் ஸ்ரீதாரக மந்திரத்தை உபதேசித்தருளினர். ஏகநாதர் "க்ருதார்த்தனானேன்" என்று ஆனந்தித்து, ஏமாறாமல், ஆசார்யாது திருப்பணிசெய்து மகிழ்வாராயினர்.

இங்ஙனம் இருக்க, ஸ்ரீ ஜநார்த்தநபண்டிதர், ஏகநாதருடைய நிச்சய ஞானத்தையும், பயபக்தி விஸ்வாஸங்களையும் கண்டு, "இவனுடைய

* ஸபலம் - நற்பேறு.



ஸ்வபாவம் உபமானரஹிதமாய் இருக்கின்றது; இவன் பகவானுடைய அவதாரமாயிருக்கலாம் எனத் தோன்றுகின்றது; இப்படிப்பட்டவனுக்கு ஸ்ரீ தத்தாத்ரேய ஸ்வாமி தரிசனஞ் செய்வித்தல் உசிதம்" என்று எண்ணி, ஏகநாதரை நோக்கி, "உனக்கு, புகழ்பெற்ற ஜகதாசார்யனும், ஜகத்குருவுமாகிய ஸ்ரீ தத்தாத்ரேயஸ்வாமி தரிசனம் செய்விக்கிறேன்; அந்த மஹான், இழிந்தவேடம் பூண்டுவருவர்; அதனை நோக்கி நினது மனதில் ஐயப்படவேண்டாம். நான் அவருடன் கலந்து வார்த்தை சொல்லிக்கொண்டிருக்கையில், நீ அவருடைய பாதங்களை இறுகப்பற்றி, அவரை த்யானிக்கக்கடவை. அவர்க்கு உன்னிடத்தில் அருள் பெருகி, தமது மிச்சிலைத் தருவரேல், உடனே அதனை *மிசையக்கடவை" எனக் கூறினார். ஏகநாதர் தமது குருவை நோக்கி, "ஓ ஸ்வாமீ! தேவரீருடைய பாத கமலங்களைக் காட்டிலும் சிறந்த பொருள் வேறொன்றையும் நான் அறியேன்" எனப் புகன்றனர். அதைக்கேட்ட ஜநார்த்தந பண்டிதர், "ஓ, ஏகநாதா! எனது உபாஸநா மூர்த்தியாகிய தத்தாத்ரேயருக்கு எனது நியமனத்தால் பக்தி செய்யக்கடவை; நீ அவருடைய கிருபைக்குப் பாத்ரவானானால் நான் மிகவும் மகிழ்வேன்" எனக்கூறி, ஏகநாதரை அழைத்துக்கொண்டு காட்டகத்துக்குச் சென்று, தமது ஆசார்யரை த்யானித்துக்கொண்டிருக்கையில், அநஸூயையின் † கான்முளையாகிய தத்தாத்ரேய பகவான், துருக்க வேடதாரியாய் பிரத்தியக்ஷமானார். ஜநார்த்தநபண்டிதர், தமது குரு நாதராகிய தத்தாத்ரேயரைச் சுட்டிக்காட்டி, "இதோபார்! நமது குருமணி துருக்கவேடதாரியாய் குதிரையேறி வந்துகொண்டிருக்கின்றனர்" என்று சொல்லிக்கொண்டிருக்கையில், தத்தாத்ரேய ஸ்வாமிகள் ஜநார்த்தந பண்டிதர்க்கு எதிரில் வந்து, குதிரையினின்றும் இறங்கினர்; அப்போது ஜநார்த்தந பண்டிதர், குருவுக்கு ஸாஷ்டாங்க வந்தனம்செய்து, அவருடன் ஏகாந்தமாய்க் குந்தியிருந்து வார்த்தை சொல்லிக்கொண்டிருந்தனர். ஏகநாதர், "இவர் யாரோ!" என ஐயுற்று, தூரத்திலேயே நின்றுகொண்டிருந்தார். இங்ஙனம் இருக்கையில் தத்தாத்ரேய ஸ்வாமி, "என்னைப் பசி வருத்துகின்றது" என்று, தமது சிஷ்யரிடத்தில் சொன்னார். ஜநார்த்தநபண்டிதர் தமது யோகபலத்தால் அறுசுவைக் கறிகளோடு கூடிய அன்னத்தை அப்போதே வரவழைத்து, ஸ்வர்ணபாத்ரத்தில் ஆசார்யருக்கு எதிரில் வைத்தனர். பிறகு குரு சிஷ்யர் இருவரும் ஸஹபந்தி போஜனம் செய்துகொண்டிருக்கையில், தத்தாத்ரேய ஸ்வாமி ஜநார்த்தந பண்டிதரை நோக்கி, "உன்னைப் பின்பற்றி வந்த உனது சிஷ்யன், நமது ஸஹபந்திக்குத் தகுந்தவன் என்றெண்ணினையாயின், அவனை அழைக்கக்கடவை" என நியமித்தார். இம்மொழியைக் கேட்ட ஏகநாதர், "இஃதென்ன விந்தை! கண்ணாரக்கண்டு நன்றாய்த் தெரிந்தும், துருக்கனுடன் நான் எங்ஙனம் புசிப்பேன்!" என்று சொல்லிக்கொண்டு, தூரமாயகன்று போனார். தத்தாத்ரேயரும் மறைந்து போனார்.

* மிசைதல் - உண்ணல். † கான்முளை - பிள்ளை.

அப்போது ஏகநாதர் வந்து, ஜநார்த்தநபண்டிதர்க்கு ஸாஷ்டாங்க வந்தனம் செய்து, "ஓ ஸ்வாமீ! இப்போது இங்கு வந்திருந்து சென்ற துருக்கர் யாவர்? தேவரீர் அவர்க்கு ஸாஷ்டாங்க வந்தனம் செய்து, அவருடன் உண்டதற்குக் காரணம் என்ன?" எனக் கேட்க, ஜனார்த்தந பண்டிதர், தமது சிஷ்யரான ஏகநாதரை நோக்கி, "இவர், அத்ரிமஹர்ஷியின் புத்ரராகிய தத்தாத்ரேய ஸ்வாமி; முந்தியே உனக்கு நான் அறிவித்திருந்தும், நீ எனது மொழியில் நம்பிக்கை வைக்காமற் போயினை! இவருடைய ஸேவை, பரமயோகியர்க்கும் கிடைத்தற்கு அரிதாகும். நமது பாக்யவசத்தால், இந்த மஹாத்மாவின் தரிசனம் உனக்குக் கிடைத்தும், நீ களங்க மனத்தனாய் அவருடைய கடாக்ஷத்துக்கு பாத்ரனாகாமற் போயினை. கற்பக விருக்ஷத்தை ஸாமான்ய விருக்ஷமாகவும், காமதேநுவை ஸாமான்ய பசுவாகவும் எண்ணுகிறவர்களைப்போல, அந்த மஹானை மனுஷ்ய ஸாமான்யராக எண்ணிக்கொண்டனை. அஷ்டாங்க யோகங்களையும், அணிமா முதலிய அஷ்ட ஸித்திகளையும் பெற்றாலும் பெறலாம்; இந்த மஹானது தரிசனம் கிடைப்பது அரிது ஆகும்; அப்பேர்ப்பட்ட திவ்ய மூர்த்தியின் * மாஹாத்ம்யத்தை உணராமல், அவரது வேடத்தை நோக்கி, அவரைத் துருக்கரென வெறுத்தனை. அந்தரங்க வேஷமாகிய வைராக்யமே ஆத்மாவுக்கு முக்ய ஸ்வரூபமாகும் அன்றி, † பாஹ்யவேஷம் எப்படிப்பட்டதாயினும் அது ப்ரயோஜன காரியல்ல என்கிற பரம தர்மத்தை தத்தாத்ரேயாதி பரம யோகியர், உலகினர்க்கு அநுஷ்டித்துக் காட்டுவது இயற்கை. நீ இந்த உண்மையை அறியாமல் மோஸம் போயினை. ஆனாலுங் குற்றமில்லை. இனியாவது ‡ ஸாவதானத்துடன் கூடியிருக்கக் கடவை" என்று சொல்லக்கேட்டு, ஏகநாதர் ஆசார்யரை நோக்கி, "குருபுங்கவா! தேவரீருடைய பாதபத்மங்களை அடுத்த எனக்கு, வேறொருவருடன் வேலை என்ன? த்ரிகரண சுத்தியுடன் தேவரீரை அடுத்திருத்தல் உண்மையாயின் எல்லாமுணர்ந்தவராகிய தத்தாத்ரேய ஸ்வாமி என்மேற் கருணை கூர்வாராக. மரத்தின்வேரில் தண்ணீர் விட்டால் கிளைகள் பலன் கொடுப்பதுபோல, தேவரீரை வழிபடும் என்னிடத்தில் தத்தாத்ரேய ஸ்வாமிக்கு ஸந்தோஷம் உண்டாகும் என்பதற்கு ஸந்தேஹம் இல்லை" என விண்ணப்பித்து நின்றனர். ஜநார்த்தநபண்டிதர், அவர் வார்த்தைகளுக்கு மகிழ்ந்து, அவர் தம்மைப் பின்தொடர்ந்து வர, தமது மடத்துக்குச் சென்றனர்.

வேறொரு நாள்; ஜநார்த்தந பண்டிதர், ஏகநாதரை உடனழைத்துக்கொண்டு வனத்துக்கு வந்து, ¶ விஜநஸ்தலத்திலிருந்து, தத்தாத்ரேய ஸ்வாமியை தியானித்தவுடனே, அந்த மஹான் ஒரு மகமதிய மதபோதகர் வேடந்தாங்கி வந்தனர். காமதேநு $ ஶ்வானவடிவந் தரித்து

* மாஹாத்ம்யம் - வைபவம், புகழ். † பாஹ்யம் - வெளி.
‡ ஸாவதானம் - ஶ்ரத்தை.
¶ விஜநஸ்தலம் - ஜனரஹிதமான இடம். $ சுவாநம் - நாய்.



அந்த மஹானைப் பின்பற்றி வந்தது. ஜநார்த்தநபண்டிதர், அத்திருவுருவத்தை நோக்கி, சித்தத்திற் களங்கமின்றி ஸாஷ்டாங்க வந்தனம் செய்து, அவருடன் உட்கார்ந்திருந்து ஸம்பாஷணம் செய்துகொண்டிருந்தனர். அப்போது, தத்தாத்ரேய ஸ்வாமி தமது * சிக்கத்திலிருந்த அப்பத்தை எடுத்து, தம்மோடு வந்த ஶ்வானத்தின் பாலை, தமது கமண்டலத்திற் கறந்து, அதனில் அவ்வப்பத்தைத் துண்டுகளாக்கிப் போட்டு ஊறவைத்து புசித்துக்கொண்டிருந்தனர். அப்போதும், ஏகநாதர்க்கு சித்தமயக்கம் மாறாதிருந்தபடியால் அவர், தூரத்தில் நின்றே இதை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்தனர். தத்தாத்ரேய ஸ்வாமி ஜநார்த்தந பண்டிதரை நோக்கி, "உன்னைப் பின்பற்றி வந்தவன் உனது அந்தரங்க சிஷ்யன் ஆகையால், அவனை இங்கு அழைக்கக் கடவாய்" என நியமித்தனர். அப்போது ஜநார்த்தந பண்டிதர், தமது கையாற் ஸைகைசெய்து, ஏகநாதரை வரவழைத்து, தத்தாத்ரேய ஸ்வாமியினுடைய மிச்சிலாகிய மஹா ப்ரஸாதத்தைக் கொடுத்து, அவரை தமதாசார்யருடைய திருவடிக்கமலங்களில் வீழ்த்தி, "இந்த ஆத்மாவை நன்றாய்க் கடாக்ஷிக்கவேண்டுமென்று வேண்டி, அவருடைய சரித்திர முழுவதையும் விண்ணப்பித்தனர். அதைக்கேட்ட தத்தாத்ரேய ஸ்வாமி, ஸந்தோஷித்து, ஜநார்த்தந பண்டிதரை நோக்கி, இந்த ஏகநாதன், வேதவ்யாஸ மஹர்ஷியால் வரையப்பட்டு ஸகல வேத ஸாரமாய், ஸ்ரீசுக மஹர்ஷியால் பரீக்ஷிந் மஹாராஜற்கு உபதேசிக்கப்பட்ட ஸ்ரீமத் பாகவதபுராணத்தை மஹாராஷ்ட்ர பாஷையில் மொழிபெயர்ப்பன். அந்த க்ரந்தம் உலகத்தில் மிகவும் பெயர்பெற்று விளங்கும். இன்னும் இவன், பரமபக்தி யுக்தனாய், அநேக ஹரிகீர்த்தனைகளைப் பாடி, பகவத் பக்தியிற் பயிலாத சேதனர்களுக்கு அதனை விளக்கக் கூடியவனாய்ப் புகழ்பெறுவன்" என்று அநுக்ரஹித்தனர். அதற்கு ஜநார்த்தந பண்டிதர் ஸந்தோஷித்து, ஏகநாதரை நோக்கி, "இப்போதாயினும் நான் சொன்னது நிஜமென்று தோன்றுகின்றதா? எமது குருஸ்வாமியின் மிச்சில் பரம பரிசுத்தமென்றெண்ணி அதனை உட்கொண்டனையா, அன்றி, அவர் வேஷத்தைப் பார்த்து ஐயுற்று, அந்த பரம ப்ரஸாதத்தை வீசியெறிந்து விட்டனையா? எனக்கேட்க, ஏகநாதர், தமது குருமணியை நோக்கி, "மஹாத்மா! நான் பாக்யஹீனன் ஆதலால், தேவரீருடைய பரமாசார்ய ப்ரபாவத்தை அறியாமல், இவருடைய வேடத்தை நோக்கி, சித்தத்தில் அருவருப்புற்று, எனது கைக்கெட்டின மஹா ப்ரஸாதத்தை உட்கொள்ளாமல் வீசியெறிந்துவிட்டேனென்று விசனமும் பயமுங் கொண்டவராய் விளம்பினர். ஜநார்த்தந பண்டிதர், சிறிது சிந்தித்து, தமது கரத்திலிருந்த தாம்பூலத்தை தத்தாத்ரேய ஸ்வாமிக்குக் கொடுத்தனர். அவர் அதனைத் தரித்துக்கொண்டிருக்கையில், அவர் வாயிலிருந்து கொஞ்சம் தம்பலத்தையெடுத்து ஏகநாதர் வாயிற் பெய்தனர். பரம பரிசுத்தமான பரமாசார்யருடைய மிச்சில், இவர் வாயில் விழுந்த மாத்தி

* சிக்கம் - உறிபோன்ற பை.

ரையில், இவர்க்கு மனத்தகத்தில் அருவருப்பு அகன்று, ஸர்வ ப்ரபஞ்சமும் பகவத் ஸ்வரூபமாய்த் தோன்றிற்று. உடனே, தத்தாத்ரேய ஸ்வாமி மறைந்தனர். ஏகநாதரும் ஜநார்த்தந பண்டிதருடன் தமது மடத்தைச்சேர்ந்தனர். ஏகநாதர் அகண்ட ஞானவானாய், சேதநாசேதனங்களாகிய ஸர்வ பதார்த்தங்களும் பகவத் ஸ்வரூபங்களென்றும், சித்து அசித்து ரூபங்களாகிய ஸர்வ ப்ரபஞ்சமும் அந்த பகவானுடைய சரீரமென்றும், அவனே ஸர்வத்திலும் சரீரியாய் விளங்கி யிருக்கின்றனனென்றும் பாவனை செய்துகொண்டு, அந்யம் தோன்றாமல், ஆசார்யருக்குப் பாதகமல நீழலென வாழ்வாராயினர்.

ஒருநாள், ஜநார்த்தந பண்டிதர், ஏகநாதருடைய ஒழுக்கத்தைக் கண்டு, இப்பேர்ப்பட்ட மஹான் எனக்குப் பரிசாரகனா யிருத்தல் தகுதியல்லவென்று எண்ணி, இவரை நோக்கி, "ஓ, ஏகநாதா! நீ, பைட்னி புரத்துக்குப் போய், உனது தாய் தந்தையர்களுக்கு வந்தனஞ் செய்து, உனது க்ருஹத்தில் வாழ்ந்து,

'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
கைம்புலத்தா றோம்பல் தலை'

என்றபடி,

தேவர் அதிதி பித்ரு பூஜைகளைச் சிரத்தையோடுசெய்து, பஞ்சகால பராயணனாய், அநவரதமும் பகவானை பஜித்து, உலகத்தார்க்கு பகவத் பக்தியை உண்டாக்கிக் கொண்டிரு; நீ இங்ஙனம் செய்தல் எனக்குப் பரம ஸந்தோஷம். உத்தம சிஷ்யன் ஆசார்யனுடைய வார்த்தைகளை * உல்லங்கனஞ் செய்யான் அல்லவா? என நியமித்தார். ஏகநாதர் ஆசார்யருக்கு வந்தனம் தந்து, "குருநாதா! தேவரீருடைய பிரிவை யெங்ஙனம் ஆற்றுவேன்! ஆனாலும், தேவரீருடைய கட்டளையைச் சிரஸாவஹித்து, தேவரீர் நியமித்தபடி செய்வேன்" என விண்ணப்பஞ் செய்து, ஆசார்யருடைய அநுமதி பெற்று, பைட்னி புரத்துக்கு வந்து தாய் தந்தையரை வணங்கி, க்ஷேமலாபங்களை வினவி எல்லாரையும் ஸந்தோஷப்படுத்தி, தமது ஆசார்யர் கட்டளையின்படி க்ருஹத்தில் வாழ்ந்து, தமதகத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ பாண்டுரங்க மூர்த்தியை பக்தியுடன் ஆராதித்து, இடையறாமல் ஹரிகீர்த்தனம் செய்துகொண்டு அதிதிகளைப் பூசித்து, அவர்களுடைய மிச்சிலை உண்டு போஜன முடிந்த பிறகு புராணசிரவணம் செய்து காலங் கழிப்பாரானார். இவருடைய ஞானநுஷ்டானங்களை நோக்கி, ஸாதுக்கள் ஆனந்தங்கொண்டார்கள்.

ஒரு நாள், ஏகநாத ஸ்வாமிகளின் கனவில் ஸ்ரீ பாண்டுரங்கன் காட்சி கொடுத்து, "ஏகநாதா! வால்மீகி வாக்காகிய ராமாயணத்தை மஹாராஷ்ட்ர பாஷையில் மொழிபெயர்க்கக்கடவை; அதனைப் படித்து மந்தமதியினர் உய்வார்கள்" எனக்கட்டளையிட்டு மறைந்தனன். உடனே ஏகநாத ஸ்வாமி விழித்தெழுந்து, கனவை வியந்து மகிழ்ந்து, நல்வேளையில் இஷ்டதேவதை வணக்கஞ்செய்து, பாவார்த்த ராமாயணம் என்னும்

* உல்லங்கனஞ்செய்தல் - கடந்து நடத்தல்.



பெயரிட்டு, க்ரந்தம் எழுத ஆரம்பித்தனர். அண்டை வீட்டுவேதியன் பொறாமை கொண்டவனாய், "இவர் ஸம்ஸ்க்ருத க்ரந்தத்தை மஹாராஷ்ட்ரத்தில் மொழிபெயர்க்க எங்ஙனம் வல்லவர் ஆவார்! ஒருவேளை வல்லமையிருந்து வரையினும், உலகில் இதை யெவர் மதிப்பார்கள்!" எனச் சொல்லிக் கொண்டிருந்தனன். ஏகநாத ஸ்வாமி ஸ்வப்நத்தில் ஜாநகீரமணன் ப்ரஸந்நனாய், "ஏகநாதா! உறங்குவதனாற் காரியமில்லை; உனது வாக்கால், ஸ்ரீ ராமாயண ஸாரமாகிய ஆனந்தரஸத்தை அநுபவிக்க வந்தனன்" என்று இயம்பி, இவரிடத்தில் ஏடெழுத்தாணிகளை இருத்தி மறைந்தனன். ஏகநாத ஸ்வாமி விழித்தெழுந்து ஸ்ரீராமசந்திரன் கிருபா மஹிமைக்கு வியந்து, ஸ்ரீ ராமாயணத்தை எழுதிக் கொண்டிருந்தனர். இங்ஙனம் எழுதிக்கொண்டே ஸுந்தர காண்டத்தில் ஆஞ்ஜநேயர், * ஸீதாந்வேஷணத்துக்காக, மஹேந்திர பர்வதத்திலிருந்து லங்கைக்கு எழும்பிக் குதித்தார் என்று எழுதும்போது, ஸ்ரீராம சந்த்ர சரணாரவிந்த ஸேவையிற் றிளைத்துக் களித்து வாழ்பவராகிய ஆஞ்ஜநேயர், அப்போது பரிபூர்ணமாய் ஏகநாதரிடத்தில் ஆவேசித்து விளங்கி இருந்தமையால், இவர் சரீரம் பரவசமாய் ஆகாசத்திற் கிளம்பிக் குதித்து, அடுத்த வீட்டு முற்றத்தில் விழுந்து கிடந்தார். அந்த அரவத்தை அவ்வீட்டு வேதியன் கேட்டுப் பயந்து, முற்றத்தில் வந்து பார்க்கையில், ஏகநாதஸ்வாமி மூர்ச்சையுடன் வீழ்ந்து கிடந்ததைக் கண்டான். அவன், இவருடைய சரீரத்தைப் பரிசோதிக்கையில், இவர் கைகளில் ஏடுகளும் † இலேகினியும் இருந்தன. அந்த ஏடுகளை அவன் எடுத்துப் பார்க்கையில், "ஆஞ்ஜநேயர் மகேந்த்ர பர்வதத்திலிருந்து லங்கைக்கு எழும்பிக் குதித்தனர்" என்று எழுதப்பட்டிருந்தது. அந்த வேதியன் அதனைப் பார்த்து ஆச்சரிய மடைந்து, "நான் இந்த மஹானுடைய ப்ரபாவத்தை உணராமல், இவரை இழித்துப் பழித்துரைத்தேன். இவர்பகவந் மூர்த்தம் என்பதற்கு ஸம்ஶயமில்லை" எனத் தீர்மானித்து, சைத்யோபசாரங்களால், ஏகநாதருடைய மூர்ச்சையைத் தீர்த்து, அவருடைய க்ருஹத்திற்கு அவரை யழைத்துக் கொண்டுபோய் உட்காரவைத்து அவருடைய பாதபத்மங்களுக்கு வந்தனஞ் செய்து, தனது வீடு சேர்ந்தான்.

வேறொரு நாள், இந்த வேதியன், ஏகநாதஸ்வாமியினிடத்தில் உபதேசம் பெறவேண்டும் என்று எண்ணி, அவருடைய ஸந்நிதிக்கு வந்து, தனது எண்ணத்தை அவர்க்கு அறிவித்து, "மஹாநுபாவ! உமது உபதேசத்தால் நான் பரிசுத்தன் ஆவேன்" என விண்ணப்பித்தனன். அப்போது ஏகநாதஸ்வாமி,

"ஆண்டொன் றெனினும் ஆறுமா தங்கள்
எனினும் மும்மதி யெனினுஞ் சிஷ்யனைப்
பல்வித சூழ்ச்சியிற் பரிசோ தித்து
மனங்களித் தாசான் மாறாக் கருணையான்

* ஸீதா + அந்வேஷம் - ஸீதையைத்தேடுதல். † இலேகினி - எழுத்தாணி.

அவற்குபதேசம் அன்பாய்ச் செய்கவென்
றான்றோர் வாக்யத் தருமையை நன்றாய்
எண்ணித் துணிக கருமந்
துணிந்தபின் எண்ணுவ திழுக்கா கும்மே'' என்றால்,

'ஒரு வருஷகாலமாயினும், ஆறுமாத காலமாயினும், அல்லது மூன்று மாதகாலமாயினும், புதிதாய் வந்தடுத்த சிஷ்யனைப் பலவித உபாயங்களால் நன்றாய்ப் பரிசோதித்து, மனங்களித்துப் பிறகு அவற்குபதேசம் செய்யவேண்டியது குருவின் கடமையாம். அங்ஙனம் முன் ஆலோசனையின்றி உபதேசஞ்செய்துவிட்டுப் பிறகு யோசித்தல் துன்பந்தருவதாம்' என்ற ஆன்றோர் மொழியைத் தமது மனத்தகத்தி லமைத்து, "இவனைப் பரிசோதித்து இன்னானென் றுணருமுன்னமே, இவற்கு நான் எங்ஙனம் உபதேசிக்கலாம்! பெருமைக்கும், பணத்துக்கும், முகஸ்துதிக்கும் ஆசைப்பட்டு, ஒருவனைப் பரிக்ஷிக்காமலே அவற்குபதேசித்துச் சிஷ்யனாக்கிக் கொள்ளும் ஆசார்யனுக்குப் பலவித இடுக்கண்கள் விளைவனவாம்.

'சிஷ்ய னியற்றுகின்ற தீங்கனைத்தும் ஒன்றாகி
ஆசா ரியனை யடையும்' என்றபடி

சிஷ்யன் செய்யும் பாவங்களனைத்தும் ஆசார்யனைச் சேர்வனவாம். ஆகையால் ஆசாரியன், தன்னை வந்தடுத்த சிஷ்யனைப் பலவிதங்களிற் பரிக்ஷித்து,

"நன்மதி வாணனாய் நல்லோர் நேசனாய்
நன்னடக் கையனாய் நல்லா சிரியன்
பணிவிடை செயற்குப் பரிவுள் ளவனாய்
தத்துவ முணருந் தகுதியுள் ளவனாய்
வணக்கமுள் ளவனாய் இணக்கமுள் ளவனாய்
ஆசார் யானுக் ரஹகா லந்தனை
எதிர்பார்ப் பவனாய் இசைமிகுஞ் சாந்தனாய்
பொறுமையுள் ளவனாய்ப் பொய்மையில் லவனாய்
ஆசா ரியனடிக் கன்புசெய் தென்றும்
தாசா நுதாஸனாய்த் தானுள் ளவனாய்ச்
சாஸ்த்ரவிஸ் வாஸ மாஸ்த்ர முள்ளவனாய்
விளங்கு மொருவனே களங்கமில் சிஷ்யனாய்
அங்கீகரித்தற் கர்ஹனா குவனால்
அதனால்
சிஷ்யர் பொருளைத் தெவிட்டா துண்ணும்
ஆசா ரியர்களும் அருங்குண மில்லாச்
சிஷ்ய வீர்க்கத் தீயரும்
* பரஸ்பரா நர்த்த பண்பினர் தாமே' என்றபடி,

* பரஸ்பர + அநர்த்த + பண்பினர் - ஒருவர்க்கொருவர் தீங்கு விளைவித்துக் கொள்ளக்கூடிய குணமுடையோர்.



நல்ல புத்திமானாய், நல்லோர் நண்பனாய், நல்ல நடக்கையுள்ளவனாய் நல்லாசிரியனுடைய பணிவிடை செய்வதற்குப் பிரிய முள்ளவனாய், உண்மை யுணருந் தகுதியுள்ளவனாய், வணக்கமுள்ளவனாய், இணக்க முள்ளவனாய், ஆசார்யன் தனக்கநுக்ரஹிக்குங் காலத்தை ஆவலுடன் எதிர்நோக்குபவனாய், புகழ் மிகுஞ் சாந்தகுண முள்ளவனாய், பொறுமை யுள்ளவனாய், உண்மையுள்ளவனாய், ஆசாரியனடிகட்கு அன்புபூண்டு இடையறாமல் தாஸதாஸனாய் விளங்குபவனாய், சாஸ்த்ரத்தில் சொல்லிய நியமனப்படி நடக்கும் ஸ்திரமுள்ளவனாய்ப் பொருந்திய ஒருவனே, குற்றமற்ற சிஷ்யனாய் அங்கீகரிக்கத் தகுதியுள்ளவனாவன். ஆகையால், சிஷ்யர்களிடத்திற் பொருள்பறித்துண்டு பிழைக்கும் ஆசார்யர்களும், மேற்குறித்த நற்குணங்களில்லாப் பொல்லாச் சிஷ்ய வகுப்பினரும், ஒருவர்க்கொருவர் தீங்குவிளைவித்துக் கொள்ளக்கூடிய குணமுடையோராவார்கள். இதற்கு ஸந்தேகமில்லை" எனத் தமக்குள் சிந்தித்து, அவ்வேதியனை நோக்கி, "நாளைக்கு நான், ஸ்ரீபாண்டுரங்கனைப் பூசிக்குங் காலத்தில், நீ வருக" எனக்கூறி அனுப்பிவிட்டு, உடனே தமது வீட்டிலிருப்பவர்களை அழைத்து, "நாளைக்கு, பகவதாராதன காலத்தில், எதற்காயினும் நான், உங்களில் யாரையாவது அழைத்தால், நீங்கள் அதைக் கேளாதவர்கள்போலப் பாசாங்குபண்ணித் தூரத்திலேயே இருந்து விடுங்கள்" என நியமித்து, அங்ஙனமே மறுநாள் இவர் பகவதாராதனத்துக்கு ஆரம்பித்தவுடனே, அடுத்த வீட்டு அந்தணன் வந்து, இவர்க்கருகில் அசைவற்றுக் குந்தியிருந்தான். அப்போது, ஏகநாதஸ்வாமி, யாரங்கே! யாரங்கே! என்று குரலெடுத்துக் கூவி அழைத்துக் கோபித்து, "இதுவென்ன விபரீதமாயிருக்கிறதே! வீட்டிலிருக்கிற எல்லாரும் தத்தம் வேலையிற் கருத்தா யிருக்கின்றார்கள்! என்னைக் கவனித்து வருவார் ஒருவருங்காணோமே! நாடோறும் தப்பாமல் பகவானுக்கு அபிஷேக தீர்த்தம் கொண்டுவருபவர்கள் இன்றைக்கேன் கொண்டுவராமற் போனார்கள்! யாராவது சீக்கிரமாகப்போய் தீர்த்தங் கொண்டுவாருங்கள்" என்று பன்முறை அழைத்தும், * ஸங்கேதப்படி ஒருவரும் வாராராயினர். ஏகநாதர், "ஒருவரும், ஸமயத்தில் அக்கறைக்கு உதவுவாரில்லை; நானாவதுபோய் அபிஷேக தீர்த்தங்கொண்டுவருவேன்" எனச் சொல்லிக்கொண்டே அங்கிருந்த பாத்திரத்தை யெடுத்துக்கொண்டுபோய், தீர்த்தங்கொண்டுவந்து, பகவானுக்கு அபிஷேகஞ்செய்து, ஆராதனை முடிந்தபிறகு, அதிதிபூசை முடித்து, மிச்சிலைத் தாம் நுகர்ந்து, பரிசுத்த ஸ்தானத்திற் குந்தியிருந்து, தமது மனத்தகத்திற் பின்வருகிறபடி † விதர்க்கஞ்செய்தனர். "இந்த அடுத்த வீட்டு வேதியனை சிஷ்யனாக அங்கீகரித்து, நான் எங்ஙனம் அவற்குபதேசிக்கக்கூடும்? அபிஷேக நிமித்தம், ஜலம் யாரானாலும் கொண்டுவாருங்கள் எனப் பன்முறை நான் கூவி அழைத்துக்கூறியும், எனது பக்கத்தில் உட்கார்ந்திருந்து கேட்டுக்கொண்டிருந்த இவன், "நான் கொணர்ந்து கொடுப்பேன்" எனக் கூறாமல், ஊமையென மௌனஞ்

* ஸங்கேதம் - குறிப்பு. † விதர்க்கஞ்செய்தனர் - எண்ணினர்.

சாதித்திருந்து விட்டனன்! என்னை ஆசார்யனாக வரிக்கவந்து, நானியற்றும் தேவ பூஜாநிமித்தம் எனக்கொரு செம்புஜலம் கொணர்ந்து தருதற்குப் பக்தி சிரத்தையில்லாத இவன், தனது ஆத்மார்த்தியங்களை எங்ஙனம் பகவானுக்கு அர்ப்பணம் பண்ணுவான்! இவன், உபதேசத்துக் கர்ஹனல்லன்" என்பதேயாம். ஆதலால், இவர் அவனை நோக்கி, "இப்போது உபதேசத்துக்குக் காலம் உசிதமானதன்று; இன்னொரு வேளையிற் பார்த்துக்கொள்வோம்" என அவற்கு விடைகூறி அனுப்பிவிட்டார். ஏகநாதஸ்வாமி, ஸ்ரீபாண்டுரங்கநாதனுடைய நியமனப்படி, ராமாயணத்தை வரைந்து முடித்து, ஸ்ரீதத்தாத்ரேய ஸ்வாமியின் அநுக்ரஹத்தினால் ஸ்ரீமஹா பாகவதத்தை மஹாராஷ்ட்ர பாஷையில் மொழிபெயர்த்து, அநவரத பகவத் குணாநுபவத்தால், பரமானந்த மிக்கவராய்க் காலக்ஷேபஞ்செய்து மகிழ்ந்து வாழ்ந்திருந்தனர்.

ஸ்ரீமத் தத்தாத்ரேய மஹாகுரவே நம:

ஐம்பத்தைந்தாம் அத்தியாயம்

# ஏகநாதஸ்வாமி வீட்டில் பண்டரிநாதன் பரிசாரகனாயிருந்த சரித்திரம்.

ஏகநாதஸ்வாமி, ஜகந்நிவாஸனை ஸர்வோபசாரங்களுடன் பூசித்து, அதிதிகளை பகவத் ஸ்வரூபர்களாக பாவனைசெய்து, பக்தியுடன் ஆராதித்துக்கொண்டிருக்குங் காலத்தில், ஸ்ரீருக்மிணீகாந்தன் ஏகநாதஸ்வாமியினுடைய பக்திவலைபிற்பட்டு, வேதியனென வேடந்தாங்கி வந்து பைட்ணி புரத்துள் நுழைந்து, "ஏகநாதஸ்வாமியின் வீடெது" என அந்த நகரத்தாரைக் கேட்டுக்கொண்டே அவர் வீட்டிற் பிரவேசித்து, ஏகநாதஸ்வாமிக்கு ஸாஷ்டாங்க வந்தனஞ்செய்து, "ஓ மஹாநுபாவ! நான் வேதியன், தனியன், திக்கற்றவன்; தாங்கள் பக்தியோடு செய்யும் அதிதி பூஜாவைபவத்தைக் கேள்வியுற்று, தாங்களே கதியென வந்தேன். தாங்கள் என்னை ஏற்றுக்கொள்ளும்பக்ஷத்தில், தமது வீட்டில் பரிசாரகனாயிருப்பேன்; நான் வேதனத்தை விரும்பினவனல்லேன்; அன்னவஸ்த்ரந்தந்து, என்னைத் தங்களுடைய உறவினன்போல் தாங்கள் அபிமானித்தால் அதுவே எனக்குப் போதும்" என்றனன். அதைச் செவியுற்ற ஏகநாதஸ்வாமி, அவ்வேதியனை நோக்கி, "உனது பேரென்ன? ஊரென்ன?" எனக்கேட்க, தேவகீநந்தனன், "ஓ, ஐய! ஸாதுஜன முதல்வரே! தனியன் ஆகிய எனக்கு என்னதென்று உரைக்கத் தகுந்த இடம் கிடையாது; நான், எங்கெங்குந் திரிந்துகொண்டிருப்பேன்; எனக்கு உற்றார் இலர், ஸாதுக்களே எனக்கு உற்றார்; மற்றுயார் எனக்குற்றாராயுள்ளவர். என்பேர், ஸ்ரீகண்டியா கிருஷ்ணன்; நான் பல இடங்களிலுந் திரிந்துபார்த்து வந்திருக்கின்றேன்; இந்த



இடம் எனக்கின்பமாயிருக்கின்றது" எனக்கேட்டு, ஏகநாத ஸ்வாமி, நல்லது "உனக்கெத்தனை காலம் இங்கு வஸிக்க இஷ்டமோ அத்தனைகாலமும் ஸுகமாய் இருந்து காலங்கழிக்கலாம்; ஸமஸ்த ப்ரபஞ்சமும் ஸ்ரீயப்பதியின் உடைமையாயிருக்கின்றது. ஆகையால், இந்த வீடும் இந்த வீட்டின் பதார்த்தங்களும், ஈஸ்வர ஸந்தானங்களாகிய எனக்கும் உனக்கும் அநுபவ யோக்யங்களாயிருக்கின்றன. ஆகையால், எனது அநுமதியை அடைந்து எனது வீட்டில் நீ வாழவேண்டும் என்னும் பாவனையைவிட்டு, உனதிஷ்டம்போல இவ்வீட்டில் வாழ்க. அதிதி பூஜா விஷயத்தில், நீ, எனக்கு ஒத்தாசை செய்யவேண்டும்" எனக் கூறினர். இந்தப் பெருந்தகைமையான வார்த்தைகளைக்கேட்ட வேதியபகவான், எத்தனையோ ஸந்தோஷித்து, மற்றவர்களுக் கிடங்கொடாமல், இவர் வீட்டுக் காரியங்கள் அனைத்தையும் தானே நிர்வகித்துக்கொண்டு வந்தனன். அப்போது, இந்திராதி தேவர்களும், ஸநகாதியோகியர்களும், இந்த அற்புதத்தைக் கண்டு, "ஆ, ஹா! இவ்வதிசயத்தை என்ன எனக் கொண்டாடலாம்! பிரமாதியர்கள் ஆராதிக்கத்தக்கவனாய், ஸர்வபூதங்களின் அகத் தாமரைகளில் வாழ்பவனாகிய பகவான் ஏகநாதர் வீட்டில் பரிசாரகனாயிருக்கின்றனன். எவனது ஆனந்தம் வேதபுருஷர்க்கும் அகோசரமாயிருக்கின்றதோ, அவன் ஏகநாதர் செய்துவரும் அதிதி பூசைக்கு ஆனந்தித்துக்கொண்டு அவர்க்குதவியாயிருக்கின்றனன். ஸ்ரீ மஹாலக்ஷ்மியினுடைய கோமள கரஸ்பரிசத்துக்குப் பொறாத திவ்யமங்கள விக்ரஹ விசிஷ்டன், இப்போது ஏகநாதர் வீட்டில், சந்தனம் அரைத்தல் முதலிய கார்யங்களைச் செய்கின்றனன். அஷ்டாங்கயோகங்களால் ஸாதிக்கப்படாத ஸர்வேசன், ஏகநாதர் வீட்டில், * அநுலேபநாதி க்ருத்யங்களைச் செய்துகொண்டிருக்கின்றான். ஸமஸ்த தேவர்களையும் பரிசாரகர்களாக்கி ஆளும் தேவாதிதேவன், ஏகநாதர்வீட்டில் பாத்திரப்பற்றுத் தேய்த்து அலம்புகின்றனன். முக்தியருளும் முழுமுதலீசனாகிய முகுந்தன், ஏகநாதர்வீட்டில் அதிதிகளுக்கு அன்னம் படைக்கின்றனன். பரம † பவித்ரனாகிய லோகேசன், ஏகநாதர் வீட்டில், அதிதிகள் உண்டுவிட்ட எச்சில் இலைகளை எடுத்தெறிந்து இடச்சுத்தி செய்கின்றனன்; பாற்கடலைக் கடைந்து தேவர்களுக்கு அமுதம் உதவின இந்திரேசன், ஏகநாதர் வீட்டில் சமையல் செய்கின்றனன், ஸங்கற்ப மாத்திரையானே பிரமாண்ட சிருஷ்டிசெய்த ஸ்ரீகிருஷ்ணன் ஏகநாதர் வீட்டில் ஆடைகளை மழுக்குகின்றனன். ஸூர்ய சந்த்ரர்களைக் கண்ணிணையாகக்கொண்ட காகுத்தன், ஏகநாதர்வீட்டில் தீபங்களை ஏற்றுகின்றனன்; என்ன ஆச்சர்யம்! எத்தனை பாக்யம்! இந்த ஏகநாதருடைய ப்ரபாவம் பரமயோகியர்களுக்கும் வாசாமகோசரமாயிருக்கின்றது" என்று பலவிதத்திற் புகழ்ந்துரைப்பாராயினர். ஸ்ரீகண்டியா கிருஷ்ணன், ஜாக்ரதையுடையவனாய்,

* அநுலேபநம் - மெழுகுதல்.   † பவித்ரன் - பரிசுத்தன்.

"எல்லாம் இயற்ற
வல்லான் யானே" என்றபடி,

ஏகநாதஸ்வாமி வீட்டுக்காரியங்களெல்லாமும், தானொருவனே நிர்வகித்துக்கொண்டிருந்தனன். இங்ஙனம் இருக்க, ஏகநாதஸ்வாமியின் தந்தைக்குச் * சிராத்ததினம் வந்தது. அப்போது, ஏகநாதஸ்வாமி, சிராத்தத்திற்காக வேதியர்களை ஏற்பாடுசெய்து, ஸ்ரீ கண்டியா கிருஷ்ணனைநோக்கி, "இன்று, சிராத்ததின மாகையால்,

'சிராத்தத்தை யென்றும் சிரத்தை யுடன்காத்துச்
செய்து முடித்தல் சிறப்பு' என்று,

சாஸ்திரம் சொல்லுகிறவிதம், நாம் அதனைச் சிரத்தையுடன் பரிபாலிக்கவேண்டும்; அதற்கு வேண்டிய பதார்த்தங்களனைத்தையும் ஸேகரித்து, பலவித † பக்ஷ்யங்களோடு சமையல் செய்துவை" எனக்கூறி ஸ்நாநஞ் செய்துவந்து, மெத்தையின்மேல் வஸ்திரத்தை உலர்த்திக் கொண்டிருக்கையில், தமது தோட்ட வேலைக்காரனாகிய பறையனை நோக்கி அவனது மனைவி, "இன்று நமது ஆண்டை ஐயன்மார் வீட்டில் திவஸம். ஆதலால், அநேக பிராமணர் புசிக்கவருவார்கள். பாகசாலையில் சமைக்கப்படும் பக்ஷ்யங்களின் திவ்யமணம், ‡ வாயுவசத்தால் வெளிப்பட்டு நமது மனங்களைத் தன்வசமாக்கி யிர்க்கின்றது. பிராமணபோஜனமுடிவில் எச்சிலிலைகளிலுள்ள பக்ஷ்யங்கள், நமக்கு விசேஷமாய்க் கிடைக்கும்" என்று ஸந்தோஷத்துடன் சொல்லக்கேட்ட பறையன், தனது மனைவியை நோக்கி, "அடீ! பிச்சி! நீ யேன் வீண் எண்ணங் கொள்ளுகின்றாய்! இன்று சிராத்த நாளாகையால் எச்சிலிலைகளை அவர்கள் நமது கண்களுக்குத் தெரியாதபடி பூமியிற் புதைத்துவிடுவார்கள்! என்னத்துக்கு எட்டாத பழத்துக்குக் கொட்டாவி விடுகின்றாய்?" எனக் கூறினான். வஸ்திரத்தை உலர்த்திக்கொண்டிருந்த ஏகநாதஸ்வாமி இவ்வார்த்தைகளைக்கேட்டு, தமது எண்ணமறிந்து அதன்படி ஒழுகும் இயல்புடைய தமது மனைவியாரை அழைத்து "ஓ, நங்காய்! நமது தோட்டவேலைசெய்யும் பறையர்கள், நமது சமையல் வீட்டில் சமைக்கப்படும் பக்ஷ்யங்களின் வாஸனைகளை க்ரஹித்து, ஆசைப்படுகின்றார்கள். ஈஸ்வர விபூதியை திருப்திசெய்தல் நமக்குப் பரமதர்மம் அல்லவா? ஸர்வஸ்வரூபியாகிய பகவானை, நாம் பித்ரு வடிவமாக ஆராதிக்கவேண்டுமென்று விரும்பியிருக்கையில், அவனே சண்டாளவடிவந் தாங்கி வந்து, நமது பூசையை ஏற்றுக் கொள்ள இச்சித்தனன். அவனது ¶ ஸங்கற்பாநுஸாரம் நாம் நடந்து கொள்வதைவிட்டு, நமக்கு வேறுஸங்கற்பமேன்? பகவானை ஸந்தோஷிப்பித்தல் நமக்கு முக்ய தர்மமாயிருக்கின்றது. அவன் எவ்வுருவந்

* சிராத்ததினம்-வருஷக்கருமஞ் செய்யும் நாள்.
† பக்ஷ்யங்கள் - மென்றுதின்பன : அதிரஸம் வடை முறுக்கு முதலியன.
‡ வாயுவசத்தால் - காற்றுவாட்டத்தால். ¶ ஸங்கற்பம் - திருவுளம்.



தரித்து விளங்கினும், நாம் அதனை விசாரித்தற்கு அர்ஹரல்லேம்" எனப் புகன்றனர். புருஷர் புரைதீர் மொழிகளைக்கேட்ட மனைவியார், "எனதுயிர்நாத! உமது மொழிகள் உத்தமமொழிகளா யிருக்கின்றன; உமதிஷ்டம் எனது இஷ்டம்; உமது சித்தம் எனது பாக்யம்; பாகசாலையிற் பாகம்செய்யப்பட்ட பதார்த்தங்கள் விசேஷமாயிருக்கின்றன; ஆகையால் நாம், நமது தோட்டத்துப் பறையர்களை, அவர்கள் உற்றார் உறவினருடன் சித்தங் களிக்கச்செய்தல் சிறந்ததாம்; இப்போது பாகம்செய்துள்ள வஸ்துக்களை அவர்களுக்கிட்டு, பிறகு, வீட்டைச் சுத்திசெய்து, சிராத்தத்துக்கு வேண்டிய கார்யங்களைச் செய்வோம்" என்று கூறினர். மனைவியார் கூறிய மாண்புரைகளைக்கேட்டு மகிழ்ந்த ஏகநாதஸ்வாமி, பஞ்சமர் சேரியிலுள்ள பறையரனைவரையும் வரவழைத்து, வீதியில் ஒழுங்காய் உட்காருவித்து, சிராத்தத்தின் பொருட்டுச் சமைத்த ஸமஸ்த பதார்த்தங்களையும் இலைகளில் படைத்து, "பகவத் ஸ்வரூபர்களாகிய சேதனர்காள்! ஸ்ரீ கோவிந்தநாமஸ்மரணையுடன் புசியுங்கள்" என்று அன்புடன் கூறினர். அப்போது அவர்கள் அகங்களித்து உண்டு த்ருப்தியடைந்து, ஏகநாதஸ்வாமியைப் பலவிதங்களிற் றுதித்துக்கொண்டு, தமது வீடுகளுக்குச் சென்றார்கள்.

அவ்வூர் வேதியர்கள் ஒன்றுசேர்ந்து, "இது, என்ன விபரீதம்! இவ்வேகநாதர், தமது பிதாவின் சிராத்தம் என்று வேதியர்களை வரவழைத்து, சிராத்தநிமித்தம் பாகம்செய்யப்பட்ட பதார்த்தங்களை, சண்டாளர்க்கு இட்டனர். ஆகையால், இன்றுமுதல் இவர் வீட்டில், வேதியரில் ஒருவரும் உண்பது கூடாது" எனத் தமக்குள் தீர்மானித்துக்கொண்டு, ஏகநாதஸ்வாமி வீட்டுக்கு வந்து, அந்த ஸுசீலரை நோக்கி, "ஓ, ஏகநாதரே! நீர், பித்ருதினத்தில் பிராமண பூஜையை * உபேக்ஷித்து, சண்டாள பூஜையை அபேக்ஷித்துச்செய்தீர்! வைதிக மார்க்கத்தை மீறி, அதனால் குற்றவாளியாயினீர்" எனக் கடுமொழி பகரக்கேட்ட ஏகநாதஸ்வாமி, † அஞ்ஜலியஸ்தராய், "ஓ, வேதிய சிகாமணிகாள்! எனது விண்ணப்பத்தைக் கேட்டருண்மின்! பல்வேறு பிறப்புகளிற்றேடிய புண்யவாரிதிக்கு, ‡ அகஸ்தியர் எனத் தகுந்த க்ரோதம் என்னும் இழிபொருளை, ஸாதுக்கள் தேடிக்கொள்வது தர்மம் அல்ல; என்னிடத்திற் பிழை இல்லை. சிராத்தத்தின் பொருட்டுச் செய்த பதார்த்தங்களின் மணம் பிடித்த இந்தப் பஞ்சமர்கள், அவைகளின்மேல் ஆசைப்பட்டார்கள்; அவர்கள் விரும்பிய வஸ்துக்களை, அவர்களுக்கே விநியோகித்து, மறுபடியும் இடச்சுத்திசெய்து, சிரார்த்தத்திற்குச் சமையல்செய்ய ஏற்பாடுசெய்தேன். சமையலும் ஆகின்றது. நீவிர் என்னிடத்தில் கிருபை கூர்ந்து, சிரார்த்தத்தை நிறைவேறறவேண்டுமென்று வணங்கிக் கேட்டுக்கொண்டார். அதுகேட்ட வேதியர்,

* உபேக்ஷித்து - தள்ளி. † அஞ்ஜலிஹஸ்தம் - கூப்பியகரம் ‡ வாரிதிக்குப் பகைவர் அகஸ்தியமுனிவர், புண்யத்துக்குப் பகை க்ரோதம்.

நெருப்பில் நெய்விட்டதுபோல இன்னும் அதிக உக்ராவேசங் கொண்டவர்களாய், *யாகாஹுதியை நாய்க்கு அளித்தபடி, †சிராத்தார்ஹமான அன்னத்தைப் பஞ்சமர்களுக்கிட்ட உம்மை, குலஹீனராக்கி ஒதுக்கி விட்டோம்" எனக் கூறிக்கொண்டே தமதகங்களுக்குச் சென்றார்கள்.

ஏகநாதஸ்வாமி, சிராத்தத்தை எங்ஙனம் நிறைவேற்றலாம் எனச் சிந்தித்துக்கொண்டிருக்கையில், ஸ்ரீ கண்டியாகிருஷ்ணன், இவரை நோக்கி, "ஓ, தேவா! நீர் ஏன் வருந்துகின்றீர்! சாந்தசித்தம் பெற்றிராத இந்த பிராமணர்களை நீர் ஏன் வேண்டுகின்றீர்? இவர்கள் வாராராயின் சிராத்தம் தடைப்படும் என வருந்துகின்றீர். உமது ஆராதனமூர்த்தியாகிய கோபாலதேவன், உமது தென்புலத்தாராகிய மூதாதையர்களை வரவழைத்து, சிராத்தத்தை முடிவுசெய்வான். நீர் வருத்தம் தவிர்ந்து, கைகால்களை அலம்பிக்கொண்டு ஆசமநஞ்செய்து, இன்னும் ஆகவேண்டிய கார்யங்களுக்கு ஆரம்பஞ்செய்க" என்றனன். அம்மொழிகளைக் கேட்டுவந்த ஏகநாதஸ்வாமி, சிராத்தம்செய்ய ஆரம்பித்தனர்.

பகவந்நியமனத்தால், ஏகநாதஸ்வாமியின் மூதாதையராகிய தென்புலத்தார், தத்தம் உண்மை உருவங்களுடன் வந்து தோன்றி நின்றார்கள். ஏகநாதஸ்வாமி, அவர்களுக்கு ப்ரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து, வஸ்த்ர புஷ்ப சந்தன தாம்பூல தூப தீபாதிகளால் அவர்களைப் பூசித்தனர். அவர்கள் உட்கார்ந்திருந்து புசித்து, தாம்பூலாதிகளை ஏற்றுக்கொண்டார்கள். ஏகநாதஸ்வாமி, அவர்களை ஸாஷ்டாங்கமாய் வணங்கித் தோத்திரஞ் செய்தார். அவ்வூர் வேதியர்கள் இவ்வற்புதத்தைக்கேட்டு, ஏகநாதஸ்வாமியின் வீட்டுக்கு வந்து, ஸாக்ஷாத்கரித்து விளங்கியிருந்த தென்புலத்தாரைக் கண்டு, ஆச்சரியமடைந்தார்கள். உடனே அவர்களும் மறைந்தார்கள். அப்போது, அவ்வேதியர்கள் தமக்குள் பின்வருகிறபடி சிந்திக்கலானார்கள். ஏகநாதர் மஹாநுபாவர் ஆகையால், இவருடைய பிதுர்களாகிய தென்புலத்தார் ஸாக்ஷாத்கரித்துப் புசித்துச்சென்றார்கள். இப்பேர்ப்பட்டவரை நீக்குதல், நமக்கு அவமானமாயிருக்கின்றது. நாம், இவர்க்குப் பிராயச்சித்தத்தை விதித்து, இவரை எப்போதும்போலக் குலத்திற் சேர்த்துக் கொள்ளுதல் உத்தமம்" என்பதேயாம். இங்ஙனம் தீர்மானித்து, இவர்கள், மறுநாளுதயத்தில் கூட்டமாய் ஏகநாதர் வீட்டுக்கு வந்து, வாசலில் நின்றுகொண்டு ஏகநாதரை அழைத்தார்கள். ஏகநாதஸ்வாமி புறம்போந்து, வேதியகோஷ்டிக்கு வந்தனம் தந்து, "என்னை ஏன் குலஹீனனாக்கினீர்கள்?" என்று கேட்டனர். வேதியர்கள் அவரை நோக்கி, இந்தக் குற்றம் எண்ணிச் செய்ததன்று. நீர், பிராயச்சித்தத்தால் பரிசுத்தர் ஆகவேண்டும்" என்றனர். அதற்கு, ஏகநாதஸ்வாமி, அவர்களைநோக்கி, "எனக்குத் தாய்தந்தையரும் மற்றச் சுற்றத்தாரும் இன்னுமுள்ள எல்லாமும் ஸ்ரீ கிருஷ்ணனேயிருக்கின்றனன். நான்

* யாக + ஆஹுதி - யாகத்தில் தேவர்க்கிடும் அவிர்பாகம்.
† சிராத்த + அர்ஹம் - சிராத்தத்திற் குகந்தது.



என்ன பிராயச்சித்தத்தை அநுஷ்டிக்கவேண்டும்! உமக்கிஷ்டமானால் நீவிர் நியமித்தபடி செய்கின்றேன்" என்றனர். வேதியர்கள், ஏகநாதஸ்வாமியை, கங்கைக் கரைக்குக் கொண்டுபோய், ஸங்கற்பஞ்செய்வித்து, மந்திரபூர்வகமாக ஸ்நானம் செய்வித்து, பிராயச்சித்த கருமங்களை நடத்திக்கொண்டிருக்கையில், த்ரியம்பக க்ஷேத்ரத்திலிருந்து வேதியன் ஒருவன் வந்து, "ஓ வேதியர்காள்! ஏகநாதஸ்வாமி யாவர்? எனக் கேட்டனன். வேதியர்கள், அவனை நோக்கி, "ஏகநாதரால் உனக்காகவேண்டிய காரியம் என்ன? என்றார்கள். அதற்கு அவ்வேதியன், "வேதியர்காள்! இதோ பாருங்கள்! நான் குஷ்டரோகத்தால் படாதபாடுபட்டும் பரமசிவனைப் பூசித்து, இந்த நோய் நீங்கவேண்டி வரங்கிடந்தேன்; அந்த தேவன் என்மேற் கருணைகூர்ந்து, 'பைட்னிபுரத்தில், ஏகநாதனென்னும் விஷ்ணுபக்த வேதிய முதல்வனொருவன் இருக்கின்றனன். அவ்வைஷ்ணவ உத்தமன், தனது பித்ரு சிராத்த தினத்தில் அநேக புலையர்களை உண்பித்து மகிழச்செய்தனன்; அவன் அவர்களைப் புலையரென எண்ணி இகழ்ந்து விடாமல், பகவத் ஸ்வரூபர்களாக மதித்து ஆராதித்தனன். ஆகையால் அவ் வாராதனம் பகவானுக்கு மிகவும் த்ருப்திகரமாயிற்று. முற்காலத்தில் பக்தவிலோசனம் என்னும் இடத்திலிருந்து, முனிவர் மனைவியருடைய அன்னத்தை ஏற்றுக்கொண்ட கோபாலசூடாமணி, அப் புலையர்களிடத்தில் ஆவேசித்து, ஏகநாதர் பூஜையை அங்கீகரித்தனன். ஆகையால், அந்தத் ததீயாராதனம் ஒப்புயர்வில்லாததாய் எம்போலியர்கள் புகழத்தக்கதாய் இருக்கின்றது. அந்த ததீயாராதனத்தில், ஒரு பெண் குழந்தை உண்ட புண்யத்தில் ஏகாமிசத்தை, ஏகநாதனாற் கொடுக்கப் பெற்றனையாயின், உனது பிணி நிவர்த்தியாவதுமன்றி, நீயும் மறுபிறப்பற்ற பகவத் ஸாயுஜ்யத்தைப் பெறுவை' என நியமித்தபடியால், நான் ஏகநாதஸ்வாமியைத் தேடி வந்தேன்" எனக்கூறி, அந்த பாகவத முதல்வராகிய ஏகநாதர்க்கு, ஸாஷ்டாங்க வந்தனம்செய்து, தனது விருத்தாந்தத்தை விண்ணப்பித்தான். அதற்கு ஏகநாதஸ்வாமி ஸந்தோஷித்து, அவ் வேதியனை நோக்கி, "நான் நிராசையாளன்; ததீயாராதனமே ஸாக்ஷாத் பலமென்று பாகவதர்களை ஆராதிக்கின்றனன்; இவ் வாராதனத்துக்கு வேறொரு பலனை நான் விரும்பவில்லை; நீ, சிவாஜ்ஞையால் வந்தனையாகையால், நீ கோரினதைத் தருவேன்; உனக்கு பகவான் நன்மை செய்தருளுவானாக" எனக்கூறி, தான் செய்த ததீயாராதனத்தில் ஒரு பெண் சிசுவுண்ட புண்யத்தில் ஏகாமிசத்தை அவற்கு தாரைவார்த்து தத்தஞ்செய்தனர். உடனே அவன் பிணி நிவர்த்தியாய், திவ்ய சரீரத்தோடு கூடி விளங்கினான். இவ் வதிசயத்தைக் கண்டு, பிராமணர்கள் நாணமுடையவர்களாய், ஏகநாத ஸ்வாமிக்கு வந்தனம் செய்து, "மஹாத்மா! நீர், ஸாக்ஷாத் பகவதவதாரமென்று

தெரிந்து கொண்டோம். நாங்கள் * துராபிமானத்தால் உம்முடைய விஷயத்தில் † அபசாரப்பட்டோம். ஜகத்பரிசுத்தராகிய உமக்கு, எமது மதியீனத்தால் பிராயச்சித்தம் விதித்தோம். எமது பிழையைப் பொறுத்து, எம்மை மன்னித்தருளவேண்டும்" என வேண்டிக் கொண்டனர். அவ் வேதியரனைவரையும் ஏகநாதஸ்வாமி தமது வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய்; அவர்களுக்கு அறுசுவை உண்டியளித்து, சந்தன புஷ்ப தாம்பூலங்கள் தந்து மரியாதைசெய்து, அவர்களை அவரவர் வீடுகளுக்கு அனுப்பி மகிழ்ந்தனர்.

இங்ஙனம் இருக்க, துவாரகாபுரியில், வேதியனொருவன், ஸ்ரீ ருக்மிணீ காந்தனுடைய தரிசனத்தை விரும்பி, வைராக்ய சீலனாய்த் தவஞ்செய்துகொண்டிருந்தனன். அப்போது, ஸ்ரீ ராதாருக்மிணியர், அவன் கனவில் ஸாக்ஷாத்கரித்து, "ஓ, வேதிய! நீ, ஸ்ரீ கிருஷ்ண தரிசன விருப்பத்தால், இங்கு வந்திருந்து தவஞ்செய்கின்றனை. அவர் இப்போது இங்கு இல்லை; பைட்னிபுரத்தில் வாழும் ஏகநாதனென்னும் பரம பக்தனுடைய பக்தி வலையிலகப்பட்டுக்கொண்டு, ஸ்ரீகண்டியா கிருஷ்ணனென்னும் பெயரோடு வேதிய வேடந்தாங்கி, பன்னிரண்டாண்டுகளாக அவர் வீட்டில் பரிசாரக வேலைசெய்துகொண்டிருக்கின்றனர். நீ, அங்குச்சென்று, அந்த தேவதேவனை தரிசித்து, ஏகநாதருக்காக பன்னிரண்டாண்டுகளாக எம்மைப் பிரிந்திருத்தல் ஞாயமன்றென விண்ணப்பித்து, எமது இதயேசனை இங்கழைத்துக்கொண்டு வருக" எனக்கூறி மறைந்தனர். வேதியன் விழித்தெழுந்து, கனவை நனவாக்கியோசித்து, ஏகநாதஸ்வாமி பக்திக்கும், பக்தவத்ஸலனுக்கு அவரிடத்தில் நேர்ந்திருக்கும் அன்புக்கும் ஆச்சரியம் அடைந்து, உடனே புறப்பட்டு, பைட்னிபுரம்சேர்ந்து, ஏகநாதஸ்வாமி வீட்டில் நுழைந்தார். ஏகநாதஸ்வாமி, வந்த பிராமணனுக்கு வந்தனம்தந்து, அர்க்ய பாத்யங்களை வழங்கி, ஆஸனம்கொடுத்து, "ஓ, தவச்சிரேஷ்ட, எங்கிருந்து எழுந்தருளினீர்? இன்னும் எங்கெங்குச்செல்ல நினைந்திருக்கின்றீர்? இன்று இங்கு வீற்றிருந்து, எனது பூஜையை அங்கீகரித்தருளவேண்டும்" என வேண்டினர். பகவான், அதிதிரூபியாய், க்ருஹஸ்தர்களுடைய பூஜைகளை அங்கீகரித்து அவர்களைக் காத்தருளுகின்றனன். ஸாக்ஷாத் பகவத் ஸ்வரூபியாகிய உன்னை நான் ஆராதித்து பரிசுத்தவானுவேன்" என்றனர். அதைக் கேட்ட வேதியன் அவரை நோக்கி, "ஓ ஸாது ஜனமுதல்வ! நினது வீட்டில் பரிசாரகனாயிருக்கும் ஸ்ரீ கண்டியா கிருஷ்ணனைக் காணவேண்டுமெனக் கோரி, நான், துவாரகா புரத்திலிருந்து வந்தனன். அவர் எங்கிருக்கின்றனர்?" எனக் கேட்க, ஏகநாதஸ்வாமி, "ஓ, விப்ரோத்தம! ஸ்ரீ கண்டியா கிருஷ்ணன், தீர்த்தம் கொண்டு வருவதற்காக கங்கைக்குப் போயினன்; இப்போது வந்து விடுவன்" எனக்கூறினர். இதற்குள் ஸ்ரீ கண்டியா கிருஷ்ணன் தீர்த்தக்காவடியைத் தனது தோள்களிற் சுமந்துகொண்டு வர, ஏகநாதஸ்வாமி, "இவனே ஸ்ரீ கண்டியா கிருஷ்ணன்" என்று துவாரகையிலிருந்து வந்த வேதியற்குக் காட்டினன்

* துராபிமானம் - தறபுகழ்ச்சி. † அபசாரப்பட்டோம் - குற்றவாளிகளாயினோம்.



அவ் வேதியன், உடனே ஆனந்த பாஷ்பம் நிறைந்து ததும்பிய கண்களுடையவனாய், ஸ்ரீகண்டியா கிருஷ்ணற்கு ஸாஷ்டாங்க வந்தனம் செய்து, தனது உத்தமாங்கத்தால் அவனுடைய பாதபத்மங்களை அலங்கரித்து எழுந்து நின்று, சென்னியிற் கூப்பிய கரங்களுடையவனாய்,

"நாமம் பலசொல்லி நாரா யணாவென்று
நாமங்கை யால்தொழுதும் நன்னெஞ்சே—வாமருவி
மண்ணுலக முண்டுமிழ்ந்த வண்டறையுந் தண்டுழாய்க்
கண்ணனையே காண்கநங் கண்" என்ற

ஆழ்வார் அருளிச்செயலின்படி, தனது லோசனங்களால் அவனுடைய திவ்ய மூர்த்தியைக் கண்குளிரக் கண்டு, பின் வருகிறபடி விண்ணப்பித்தான். "அகிலலோக சரண்யா! ருக்மிணீ மனோஹரா! ஸத்யபாமா ஹ்ருதயேஸ்வரா! ராதாபதே! நான் உனது தரிசனத்தை இச்சித்து த்வாரகையில் தவஞ்செய்கையில், நீ இந்த ஏகநாதருடைய பக்தி வலையிற் சிக்கி, ஸ்ரீ ராதா ருக்மிணிகளை உபேக்ஷித்து, இங்குப் பரிசாரகனாய் இருக்கின்றனை எனக்கேட்டு வந்தேன். இஃதென்ன வேஷம்! சங்கு சக்கரங்களை எங்கு மறைத்து வைத்தனை! ஸ்ரீ வத்ஸ கௌஸ்துபங்களை என் ஒளித்து வைத்தனை! ஏகநாதர் வீட்டுப் பரிசாரகத்திற்கு இந்திராதி தேவர்களை நியமித்தால் ஆகாதா! காதலியின் எச்சிலை விரும்பும் காதலனைப்போல, இப் பரிசாரக் வேலையை நீயே செய்ய வேண்டுமென்று விரும்பினைபோலும்! நினைத்தமாத்திரையில் அளவிலா அண்டங்களை உண்டாக்கவல்ல நீ; எண்ணின மாத்திரையில் கங்கை ஸாந்நித்யம் செய்யாதா! இதற்காக, காவடி ஒன்றைச் சுமந்து சென்று, நீ தீர்த்தங் கொண்டுவரவேண்டுமா! அகில ஜக துதய ரக்ஷாப்ரளயங்கள் நினது ஸங்கற்ப ஸ்வாதீனங்களாயிருக்க, ஏகநாதர் வீட்டுப் பரிசாரக வேலைகளை நீ, மெய்வருந்தி யுழைத்துச் செய்தல் விநோதமாயிருக்கின்றது. உன்னை வந்தடுத்த பரமயோகியர்களுக்கு, எண்ணிறந்த சரீரங்கள் எடுப்பதும் விடுப்பதும் திருவிளையாடல்களாயிருக்க, நீ, ஏகநாதர்க்காக ஸ்ரீராதா ருக்மிணியரைப் பிரிந்து வந்துவிட்டனை! அங்கிருந்தபடியே வேறொரு சரீரம் எடுத்து, இங்கு விளங்கியிருத்தல் உனக்காகாத காரியமா? உனது அன்பர் அன்பை இப்படியெல்லாம் விளம்பரப்படுத்துகின்றனை! புனிற்றிளங்கன்றின்மேல் வைத்த ஆசையின் மிகுதியால், பழங்கன்றுகளையும் தனக்கிரையளிக்கும் போஷகர்களையும் கொம்புகளாற் குத்தவரும் பசுவைப்போல, புத்தன்பரிடத்தில் வைத்த அன்பின் மிகுதியால், * நித்யாநபாயினியாகிய ஸ்ரீ மஹா லக்ஷ்மியை உபேக்ஷிக்கும் நினது கல்யாண குணத்தை, ஏகநாதருடைய கூட்டுறவால் விளக்கியருளினை. நினது அநுமதியின்றி ராவணன்மேற் குதித்துப் பாய்ந்து, அவனைப் பரிபவப்படுத்திவிட்டு வந்த ஸுக்ரீவ மஹாராஜனை நோக்கி,

* நித்ய+அநபாயினி - என்றும் அழியாதவள்.

'நினக்குச் சிறிது கெடுதி வருமேல்
எனக் கென் கவைசிதை யால்'

உனக்குக் கொஞ்சங் கெடுதி வருமாயின், எனக்கு ஸீதையால் என்ன காரியம் ஆகவேண்டியிருக்கின்றது?' எனக் கூறினையன்றோ? அவ் வாக்யம் அநுபவஸித்தமாம்படி நினது அந்தரங்க பக்தரான ஏகநாதர் விஷயத்தில், ஸ்ரீராதாருக்மிணியரை உபேக்ஷித்து இங்கு வந்தனை" என்று விண்ணப்பித்தனன்; இவைகளைக்கேட்ட ஸ்ரீருக்மிணீகாந்தன் மறுமொழி பகராமல், புன்னகை பூத்த முகாரவிந்தனாய், தயையுடன் பெருமிதமான நோக்கமுடையவனாய், சிரக்கம்பம் செய்துகொண்டு, தனது தோளிற் சுமந்திருந்த தீர்த்தக் காவடியை கீழே இறக்கிவிட்டு, தேவபூஜாக்ருஹத்துள் நுழைந்து மறைந்தனன். இவ் வேதியன், வேதியபகவானைப் பின்பற்றி தேவ க்ருஹத்துள் காணாமல், தலைமேல் அறைந்துகொண்டு, பூமிமேல் வீழ்ந்துபுரண்டு, பெருங்குரலெடுத்து அழுது, "ராதாபதே! என்னைக்கண்ட மாத்திரையில் ஏன் மறைந்தனை! நான் என்ன பிழை செய்தேன்? பகவத்பக்தியற்ற பாவியாகிய என்னை, பலபிறவிகளிலும் பின்பற்றின நீ, என்னிடத்தில் ஒரு தினைத்துணை பகவத் பக்தியையேனுங் காணாமையால் * வேசற்றனை. இப்போது, திக்கற்றவனாய், † அநந்யகதித்வத்தோடுகூடி உன்னைத் தேடிவந்த என்னை உபேக்ஷித்து மறைந்தனை. ஏகநாதர் மாத்திரம் உனக்கென்ன வெகுமதி தந்தனர்? பன்னிரண்டாண்டுகளாக, அவர் வீட்டில் பரிசாரகனாய் இருந்த நீ, ஒரு முகூர்த்தகாலமானாலும் எனக்கு ஸேவை தரக்கூடாதா! உனது நீதி மிகவும் அநீதியா யிருக்கின்றது" என்று பிரலாபித்துக் கொண்டிருக்கையில், ஏகநாதஸ்வாமி ஒன்றுந் தோன்றாதவராகி, "இஃதென்ன விந்தை! ஓ, விப்ரோத்தமா! சோகத்தை விடுக. இந்த ஜகதீசன் பன்னிரண்டாண்டுகளாக என் வீட்டில் வாழ்ந்துகொண்டிருந்தும், நான் இவனை உணராமலிருந்தேன். தவசிரேஷ்டராகிய நீவிர், இந்த லோகேசனை யுணர்ந்து வந்து, தரிசித்துப் பரிசுத்தராயினீர்" எனக்கூறி, அவருக்கு ‡ துக்கோபசமனம்செய்து வணங்கி, "ஓ, வேதிய முதல்வ! நான் சிறிதும் தெளிவின்றி இவ் வேதியனிடத்தில் வேலை வாங்கினேன்! எனது அதிர்ஷ்டஹீனத்தை என்னவென்றுரைப்பேன்!" எனக் கூறிக்கொண்டே அவசராய் பூமிமேல் வீழ்ந்து, "பக்தவத்ஸலா! லக்ஷ்மீகாந்தனாகிய நீ, எனது வீட்டில் கிங்கரனாய் இருந்தனை! நான் உன்னை அறியாமல் மோசம்போனேன்" என்று அழுகையில், ஏகநாதஸ்வாமியின் மனைவியார், அவ் விருத்தாந்தங்களைக்கேட்டு துக்கமேற்கொண்டவராய், "த்வாரகாபதே! அநேக நாட்களாக பரிசாரகவேடந் தரித்து, எமது வீட்டு வேலைகளனைத்தையும் செய்துகொண்டிருந்தனை! நினது மென்மைத் தன்மையை உணராமல், உன்னை வருத்த வேலைகளிற் செலுத்தினேன். லோகமாதாவாகிய ஸ்ரீமஹா லக்ஷ்மிதேவியின் பரிசாரகத்துக்கு ஸந்தோஷப்படும் நீ, எமது வீட்டுக்குவந்து அதிதிகளுக்குப்

* வேசறுதல் - வெறுப்புற்றிளைத்தல்.
† அநந்யகதித்வம்-வேறு திக்கில்லாமை.
‡ துக்க+உபசமனம் - துக்கசாந்தி.



பரிசாரகஞ்செய்து, நாங்கள் உண்ட பிறகு, எல்லாரும் உண்ட சேஷத்தை, உனக்கு நீயே பரிமாறிக்கொண்டு புசித்து வந்தனை! எனது நாதர் கட்டி அவிழ்த்துவிட்ட வஸ்திரங்களை மஹா ப்ரஸாதமென அணிந்து கொண்டனை! எனது கணவர் மிச்சிலை பரம * பாவநம் என்று புசித்தனை! எனது காதலருடைய பாத நீரை மஹா தீர்த்தமென்று உட்கொண்டனை! நினது அன்பர் அன்பை, இங்ஙனம் பலவாறு விளம்பரப்படுத்தினை! நாங்கள் உன்னை எங்ஙனம் மறப்போம்! கட்புலனாயுள்ள ஸமஸ்த பதார்த்தங்களும் நினது திருவுருவமாக எண்ணிக்கொள்ளுகின்றோம்! நீ எமது குற்றங்களனைத்தையும் மன்னித்து எம்மைக் காத்தருள்க" எனச் சோகமுற்றனர். இங்ஙனம் சோகமுறுகின்ற தம்பதிகளை வேதியன் தேற்றி, ஏகநாதரை நோக்கி, "நினது பாக்யத்தை நான் என்னவெனப் புகழ்ந்துரைப்பேன். பிரமாதியர்க்கும் † அகோசரனாகிய லக்ஷ்மீகாந்தன், உனக்குக் கோசரனாய்க் கிங்கரனா யிருந்தனன். ஆதலால் நீ, இவ்வுலகெலாம் போற்றத்தகுந்த உத்தமனாயினை! நினது இதயாலய வாஸியாகிய மாதவன், உன்னை எங்ஙனம் பிரிவான்? எனக்கு அநுக்ரஹஞ் செய்க. நினது கூட்டுறவால் நான், ‡ அவ்யக்தனாகிய பகவானைக் கண்ணாரக் கண்டேன்; போய்வருகின்றேன்" எனக் கூறி, அவரது அநுமதி பெற்று, துவாரகாபுரிக்குச் சென்றனன். பகவான் தமதகத்தில் பரிசாரகனாயிருந்து செய்துவந்த அருஞ் செயல்களை எண்ணி யெண்ணி ஏகநாதஸ்வாமி நிரந்தர பகவத்யான பரராய் விளங்கினார்.

ஒருநாள், ஞானதேவர், ஏகநாதஸ்வாமியின் கனவில் எழுந்தருளி, "ஓ, பாகவதமுதல்வ! நீ அளகாபுரிக்கு வந்து, எனது ஸமாதியைத் திறந்து என்னை தரிசிக்கக்கடவை. ஓர் அரசமரத்தின் வேர், எனது ஸமாதிக்கு ஸமீபமாய், வளர்ந்து வருகின்றது. அதனால் எனக்குத் துன்பம் உளது. நீ அம் மரத்தை வேருடன் பக்குவமாய்ப் பிடுங்கி, தூரமாய்ப் பிரதிஷ்டிக்கக்கடவை" என நியமித்து, மறைந்தனர். ஏகநாதர் விழித்தெழுந்து, "ஸாக்ஷாத் பகவதவதாரமாகிய ஞானதேவர், பொருளல்லேனாகிய என்னையும் ஒருபொருளாக மதித்து, தமது கைங்கர்யத்துக்கு என்னை நியமித்தனர். ஆதலால் பரிசுத்தனானேன்" என்று ஸந்தோஷித்து, அளகாபுரிக்கு வந்து ஸித்தேஸ்வர மூர்த்தியை தரிசித்து, ஞானதேவர் ஸமாதிக்கருகில் வந்து, அதற்குப் பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து, சிற்பர்களை வரவழைத்து யோகாஸனத்திற் பொருந்தி யிருப்பவராகிய ஞானதேவரை தரிசித்து, ஸாஷ்டாங்க வந்தனம்செய்து, ஆனந்தமேற்கொண்டவராய் தோத்திரஞ்செய்து, ஸமாதிக்குத் துன்பந்தருவதாயிருந்த அரசமரவேரைப் பார்வையிட்டு, அம் மரத்தைப் பக்குவமாய் வேரறுமற் பெயர்த்தெடுத்து வேறொரு பரிசுத்த ஸ்தானத்தில் ஸ்தாபித்து, முன்னிருந்ததுபோலவே ஸமாதியைக் கட்டி-

* பாவநம் - பரிசுத்தம். † அ+கோசரன் - கண்ணுக்குத் தோன்றாதவன்.
‡ அவ்யக்தன் - கண்ணுக்குத் தோற்றாதவன்.

முடிப்பதற்கு வேண்டிய கற்களைத் தருவித்து, வேலைக்கு ஆரம்பித்தனர். வேலைக்காரர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் அவ் வளகாபுரியிற் கிடையாவாயின. அப்போது, அன்பர்க்கு எய்ப்பில் வைப்பாகிய ஸ்ரீபண்டரிநாதன் வர்த்தகவேடந்தாங்கி, அரிசி பருப்பு நெய் முதலிய ஸமஸ்த பதார்த்தங்களையும் ஏராளமாய்க் கொண்டுவந்து, ஸமாதிக் கருகில் கடை வைத்துக்கொண்டு, ஸமாதிக் கட்டிட வேலைக்காரர்களை நோக்கி, "உமக்கு வேண்டிய வஸ்துக்களை உங்கள் இஷ்டப்படி வாங்கிக்கொள்ளுங்கள்; ஸமாதிக் கட்டிட வேலை நிறைவேறினபிறகு, நீங்கள் உங்கள் ஊர்களுக்குப் போம்பொழுது, எனக்குச் சேரவேண்டிய தொகையைச் செலுத்தலாம்; நானும் ஏகநாதஸ்வாமியுடன் யாத்திரை செய்வதற்கு விரும்பி யிருக்கின்றனன்" எனக் கூறி, அவர்கள் கோரின பொருள்களை * ஸம்ருத்தியாய் வழங்கிக்கொண்டிருந்தனன். ஏகநாத ஸ்வாமி, "ஸ்ரீபண்டரிநாதனே இவ் வுருவந்தாங்கிவந்து நம்மைக் காத்தளிக்கின்றனன்" என்றெண்ணி ஆனந்தித்து ஸமாதிக்கெதிரில் ஹரி பஜனம்செய்துகொண்டிருந்தனர். ஸமாதிக் கட்டிட வேலையை முடித்து அனைவரும் பைட்ணிபுரத்திற்குப் புறப்படும்பொழுது, இவ் வர்த்தகன் நானும் உங்களைப் பின்பற்றி வருவேன்" என்று, தனது சரக்குகளையெல்லாம் ஒரு வண்டியிற் போட்டுக்கொண்டு, இவர்களுடன் வந்துகொண்டே இடைவழியில் மறைந்தனன். இவ் வதிசயத்தை ஏகநாத ஸ்வாமி முதலியோர் கண்டு, "போஜன பதார்த்தங்கள் கிடைத்தற்கரிய அளகாபுரிக்கு வந்து, இத்தனை நாட்கள் நம்முடன் கூடியிருந்து, நமக்கு வேண்டிய பொருள்களை † அவாரியாகக்கொடுத்து, அவைகட்கான விலைகளை நம்மிடத்திற் பெற்றுக்கொள்ளாமல் மறைந்தவன் ஸ்ரீமத் பண்டரி நாதனே" எனத் தீர்மானித்து, ஆனந்த மேலிட்டவர்களாய்த் துதித்துக்கொண்டு, பைட்ணிபுரம் சேர்ந்தார்கள். ஏகநாத ஸ்வாமி, அநவரதமும் தமக்கு ஆசார்யராகிய ஜநார்த்தந பண்டிதர் எண்ணினபடியே ஜகதாத்யந்தம் ஸ்ரீ ஜநார்த்தநனுடைய ரூபமாக மதித்து ஸ்ரீ ஜநார்த்தனனுடைய பக்தர்களை ஆராதித்துக்கொண்டு, உலகத்தாரனைவர்க்கும் ஸ்ரீ ஜநார்த்தந பக்தி உண்டாக்கி, ஸ்ரீ ஜநார்த்தந ஸாயுஜ்ய பதவியைப் பெற்று வாழ்ந்தனர்.

பக்தஜனவிதேயாய நமஃ

## ஐம்பத்தாறும் அத்தியாயம்

# ஸமர்த்த ராமதாஸர் சரித்திரம்

கங்கைக் கரையிலுள்ள ஜாம்பூநகரத்தில், ஸ்ரீ ராமோபாஸகராகிய வேதிய ரொருவர், பரமபாகவதராய், மஹாசதுரராய், ஸுஜ்ஞானியாய் விளங்கியிருந்தனர். இவருடைய மனைவியார் பரம பதிவ்ரதாசிரோமணி யாகையால், தம்பதிகளிருவரும் ஒரே மனதாய் ஊசியுஞ் சரடும்போல * அகோராத்ரம் ஸ்ரீராம பஜனம் செய்துகொண்டு, காலம் கழித்துக்கொண்டிருந்தனர். இவர்கள் பூததயை பச்சாத்தாபம் முதலிய நற்குணங்கள் பொருந்தி,

"ஸர்வபூ தங்களும் ஸாது ஜனங்களின்
இன்னுயிர்க ளாகு மிசைந்து" என்றபடி

ஸர்வாத்மாக்களையும், தமது ஆத்மங்கள்போலப் பாவனைசெய்து, பக்தியுடன் அதிதிகளை ஆராதித்து, சித்திரைமாதச் சுக்லபக்ஷ நவமி முதல் பன்னிரண்டு தினங்கள் வரையில், ஸ்ரீ ராமோற்சவத்தை அதிவிபவத்துடன் நடத்தி, அவ் வுற்சவகாலத்தில், தூரதேச வாஸிகளாகிய பரமஸாதுக்கள் பலரையும் வரவழைத்துப் பூசித்து, காலத்தைக் கழித்துக் கொண்டிருக்க, ஒருநாள் இரவில், இவர்கள் கனவுகளில், ஸ்ரீராம சந்த்ரன் ஸாக்ஷாத்கரித்து, "எனக்கு அந்தரங்க பக்தனாகிய ஆஞ்ஜநேயன், நுமக்குப் புத்ரனாயவதரித்து, மஹா ஜ்ஞானவானாய், அநவரதமும் எனது பஜனத்திலேயே, † ஆஸக்தியுடையவனாய் இருப்பன்" என அநுக்ரஹித்து மறைந்தனன். உடனே, இந்த தம்பதிகள் இருவரும் விழித்தெழுந்து, தம்து கனவுகளின் விருத்தாந்தங்களை ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொண்டு ஆனந்தித்தார்கள். அதுமுதல், அவ் வேதியர் மனைவியாகிய கற்புக்கரசி கருவுண்டாயிருந்து, பத்தாமாதத்தில், ஸ்ரீராம சந்த்ர கடாக்ஷத்தால், ஆஞ்ஜநேயாம்சராகிய நற்புத்ரரைப் பெற்றனர். ஸ்ரீ ஜாநகீபதியின் அநுக்ரஹத்தால், இங்ஙனம் பிறந்த சிசுவிற்கு, பன்னிரண்டா நாளில் ராமதாஸர் என நாமகரணஞ் செய்யப்பட்டது. பிறகு, தக்க காலங்களில் அவர்க்குச் சௌளோபநயநவேதாத்யயனங்களைச் செய்வித்து, ஒன்பதாம் ஆண்டில் விவாஹம் செய்விக்கும் உத்தேசமுடையவர்களாகிய தாய் தந்தையர், தேவாதிதி வேதியர்களை நன்றாய்ப் பூசித்து, விவாஹ மண்டபத்தைச் சிங்காரித்து, தம்பதிகளை அலங்கரித்து, ஸுமுஹூர்த்தத்தில் பாணிக்ரஹண மஹோற்சவஞ் செய்ய ஆரம்பித்தனர். இந்த ராமதாஸர், லோக சிந்தை யொழிந்து, ஸர்வ ப்ரபஞ்சத்தையும் ஸ்ரீராம சந்த்ர ஸ்வரூபமாக மதித்து, அநவரதமும் ஸ்ரீராம த்யானபரவசராய் இருந்ததனால், விவாஹ விஷயமாய்ச் செய்யப்பட்ட முயற்சிகளனைத்தும் தாமுணராமல், ஜடத்தன்மை பெற்றுவிளங்கினார். தம்மை யலங்கரித்து, விவாஹ மண்டபத்திற் கழைத்துக்கொண்டு வந்து, பெற்றோர் சுற்றத்தார் முதலிய அனைவரும் ஒன்று கூடி, விவாஹ க்ருத்யங்களை நடத்திக்கொண்டிருந்ததை, இவர் கொஞ்சமேனும் மனத்தில் வையாமல் ஸ்ரீராம சந்த்ர த்யானபரராயிருந்தனர். இந்த நிஷ்டை எப்படி யிருந்ததென்றால், முன்னொருகாலத்தில் ஸௌவீர மஹாராஜன், காளிதேவியைக் குறித்து சிலகாலந் தவஞ்செய்து, தனது ‡ ஸங்கல்ப ஸித்திக்காக அந்த தேவிக்கு நரபலி கொடுக்கக் கோரி, அதற்காக யாரையாவது கொண்டுவரச்

* ஸம்ருத்தி - நிரம்ப.
† அவாரியாய் - அதிகமாய்.
‡ அத்ருச்யன் - மறைந்தவன்.

* அகோராத்ரம் - இரவும் பகலும்.
† ஆஸக்தி - ஆசை.
‡ ஸங்கற்பஸித்திக்காக - எண்ணங் கை கூடுவதற்காக.

சொல்லி தனது ஸாரதியை அனுப்ப, அவன் எங்கெங்குந் தேடி பலிக்குத் தகுந்த நரனைக்காணாமல், காட்டில் பரப்ரஹ்மாநுபவ நிஷ்டராய், உன்மத்தராய் ஸஞ்சரித்துக்கொண்டிருந்த ஜடபரதரைப் பிடித்துக் கொண்டுபோய் அலங்கரித்துக் காளிதேவிக்கெதிரில் நிறுத்தினபோது, அந்த ஜடபரதர், ஒன்றும் உணராதவராய், பரப்ரஹ்ம த்யானநிஷ்டராய் இருந்த நிஷ்டையைப் போலிருந்தது. விவாஹ மண்டபத்தில், வழக்கப்படி நடத்தவேண்டிய கார்யங்களனைத்தையும் நடத்தி, மாங்கல்ய தாரண ஸமயத்தில் சிறிதுகாலந் தாழ்த்தது. அப்போது ராமதாஸர், இஃது என்னவென யோசித்து, அவ்விடத்திய விருத்தாந்த முணர்ந்து தாய்தந்தையர் முதலிய சுற்றத்தாரை நோக்கி, "ஆஹா! எத்தனைவிபரீதம் செய்தீர்கள்! ஸம்ஸார ஸமுத்ரத்தைக் கடப்பதற்கு, யாருக்கும் ஸாத்யமல்ல. ஸமுத்ரத்தைக் கைகளால் நீந்தினாலும் நீந்தலாம் அன்றி, மஹா ஸமுத்ரமாகிய ஸம்ஸாரத்தை நீந்துதல் எங்ஙனம் ஸாத்யமாகும்! பூமியைச் சூழ்ந்திருப்பது ஸமுத்ரம்; நம்மைச் சூழ்ந்திருப்பதாகிய ஸம்ஸாரம் மஹா ஸமுத்ரம். அந்த ஸமுத்ரம் * அகாதமான ஜலத்தையும், காற்றான் மோதியடிக்கப்பட்ட அலைகளையும், சுழிகளையும், முதலைகளையும் பொருந்தி, பார்க்க அச்சந்தருவதாயிருக்கும்; இந்த ஸமுத்ரம், ஆசையென்னும் ஜலத்தாலும், மன்மதன் என்னும் காற்றால் மோதியடிக்கப்படும் மோஹங்கள் என்னும் அலைகளினாலும், மனைவியென்னும் நீர்ச்சுழியாலும், மக்கள் சுற்றம் என்னும் முதலைகளின் கூட்டத்தாலும் நிறைவுற்று மஹா பயங்கரமாய் இருக்கும். இடருற்றபோதிருந்து உதவி செய்பவரன்றோ சுற்றத்தாரெனப்படுவர்! ஸ்ரீராமசந்த்ர த்யானம் செய்து, ப்ரஹ்மானந்த ஸுகத்தை அநுபவித்துக்கொண்டிருக்கும் என்னை, கொஞ்சமேனுங் கருணையற்றவர்களாகிய நீவிர், † பீமகரமான ஸம்ஸார ஸாகரத்தில் தள்ளிவிட முயலுகின்றீர்கள்; ‡ நிரபராதியாகிய எனக்கு, இப்படிப்பட்ட கடுந்தண்டனை செய்ய ஏன் விரும்பினீர்கள்? உங்களை, எனது ஞானமணியைக் கொள்ளை கொள்ள வந்த பகல் திருடரென மதிக்கின்றனன். உங்களது கூட்டுறவு இம்மட்டும் போதும், என்னை விட்டு விடுங்கள்; நான் போய் வருகின்றேன்; எனதுயிர்நாதனாகிய ஸ்ரீராமபத்ரன் உங்களுக்கு நன்மை செய்க" என ஆசீர்வதித்து, ராம பாணமேபோல மஹாவேகமாய் வனத்துக்கு ஓடிப்போய்விட்டார். தாய் தந்தையர், அவரைப் பின்பற்றி எத்தனையோ வேண்டிவேண்டி யழைத்தும், அவர்களுடைய வேண்டுகோள்களுக்கு உடன்படாமல் அவர் தமது இஷ்டம்போற் போய்விட்டார். இவருடைய தாய் தந்தையர், இவர் ஓட்டத்தைப்பிடிக்கவும், இவர்க்கு ஸமாதானஞ் சொல்லி இவரை வீட்டுக் கழைத்துக் கொண்டு வரவும் சக்தியற்றவர்களாய், தமது கனவுகளில் பகவான் திருவாய்மலர்ந்தருளிய திவ்யமொழிகளை த்யானித்து, "நாம் இனி இப்பிள்ளையை வற்புறுத்துதல் ஞாயமன்று. ஆஞ்ஜநேயர், நமக்குப் புத்ர-

* அகாதமான - ஆழமான, பயங்கரமான.

† பீமம் - பயம். ‡ நிர்+அபராதி - குற்றம் அற்றவன்.



ராவாரென பகவான் அநுக்ரஹித்தனர் அல்லவா! அந்த உறுதிமொழி எங்ஙனம் பிசகும்? ஸுக்ரீவன், அங்கதன், நளன், நீலன், ஸுசேனன், ஜாம்பவன் முதலியோர் இருக்க, அவர்களனைவரையும் விட்டு அந்தப்புர வேலைகளுக்கு, ஐம்புலன் அறுத்தவர்களுக்குள் முதல்வராகிய அஞ்ஜனைச் சிறுவரே தக்கவரென்றும், வேறுணராமல் ஸ்ரீராம த்யானத்தையே தாரக போஷக போக்யங்களாகப் பெற்றிருக்கும் வாயுபுத்ரர் ஒருவரே ஸ்ரீராம பக்திஸஹாயராய் ஸ்வாமிகார்யத்தை நிர்வஹிக்கக் கூடியவரென்றும், தனக்குள் நிச்சயித்திருந்ததனால் அல்லவா ஸ்ரீராமபத்ரன், பத்ரமுத்ராழியை, இம் மாருதி கையிற் கொடுத்துப் போக்கினன்! இன்னும் இந்த ஸ்ரீராமதூதர் ராவணனது அந்தப்புரத்திற்போனபோது, கள்ளுண்டவெறி தம்மையுண்டு அதன் வசப்பட்டவர்களாய் ஒருவரையொருவர் அணைத்துக்கொண்டு, தத்தம் வயிறுகளும், தொடைகளும், கொப்பூழ்மூலங்களும், அக்குள்மூலங்களும், மார்புகளும் வெளியே தோன்ற, சரீரங்களை மறந்து தூங்கிக்கொண்டிருந்த பெண்களைக் கண்டு, பரதாரமர்மக் காட்சிகளுக் கஞ்சினவராய், 'அந்தோ, அந்தோ! பிரமசாரியாகிய நான், பிறர் மனைவியருடைய சரீர மர்மஸ்தானங்களைக் கண்டதனால், தர்மந் தவறினவன் ஆனேன்!' எனத் துயருழந்து, 'பெண்ணைத் தேடிவந்த ஒருவன், அப் பெண்ணைப் பெண்களுக்குள் தேடாமல் விலங்குகளுக்குள் தேடுவானோ! தேடமாட்டான்; மேலும் நான், இம் மங்கையர்களை மதனலீலைகளிற் றிளைத்த மனமுடையவனாய் நோக்கினவன் அல்லன்; அல்லதூஉம், புண்ய * சுலோகனாகிய ஸ்ரீராமசந்த்ரன், அனுப்பிக்கவந்தவனாகிய எனக்கெதினும் நன்மையே உண்டாகும்' எனத் தனக்குள்ளே சொல்லிக்கொண்டனர். அப்படிப்பட்ட புண்யசுலோகர், ஸ்ரீராமாநுக்ரஹத்தால் நமக்குப் புத்ரராயினர். இவரை நாம், பரம விரக்தர் என வுணர்ந்திருந்தும், வற்புறுத்துதல் ஞாயமன்று" என்று தங்களுக்குள் தீர்மானித்துத் தமது வீடுசேர்ந்து, ஸ்ரீராமசந்த்ர த்யானம் செய்துகொண்டு, காலங்கழித்து வந்தனர். ராமதாஸர், வனநடுவில் உட்கார்ந்திருந்து தமக்குள் பின்வருமாறு சிந்திக்கலாயினர்:

"நான் இனி, ஸம்ஸார வலையில் அகப்படாமல், ஜாக்ரதை யுடையவனாய், நிரந்தர ராமத்யானபரனாய்ப் பரிசுத்த முறுவேன்; மிதிலா நகரத்தில் வாழ்ந்துகொண்டிருந்த பிங்கலை யென்னும் † கணிகாமணி, பணத்தாசையால் தனது கணவனை விட்டு, அதிகமாய்ப் பணம் தரூஉம் ‡ விடன் ஒருவனை நம்பித் தனது மந்திரத்தில் வரவழைத்து; ஒருநாள் இராமுழுவதும் உறக்கமின்றிப் பலவிதங்களிலும் அவனைக் களிப்பித்து, அவன் பின்னே திரிந்து திரிந்து அலைந்து இளைத்து, கடைசியாக ஆத்ம ஸுகத்தை உண்டாக்க வல்லவனே கணவன் என்று நிச்சயித்து, 'அந்தோ! பணவாசையால் இன்றிரவு முழுவதூஉம், கற்பில்லாக்

* சுலோகன் - கீர்த்திமான்.

† கணிகாமணி - கணிகையர்மணி; கணிகையர்க்குள் மணிபோல்வாள்.

‡ விடன் - வியபிசார புருஷன்.

காமுகனாகிய ஒருவனைப் பல விதங்களிலும் உபசரித்துப் பின்பற்றித் திரிந்து, அவனை நன்கு மதித்திருந்து விட்டேன்; இங்ஙனம், ஸ்ரீமந் நாராயணனைச் சிந்தித்தால் பரமபதம் சேரலாம்' என மனம் வருந்தி, கட்டில் மெத்தை முதலிய போக்யப் பொருள்களை நீக்கி, விரைவாய் வாஸுதேவ சரணாரவிந்த வந்தனத்தில் இச்சை கொண்டவளாய், தேகம், மின்னலைப்போல அஸ்திரம் எனச்சிந்தித்து, பரம தத்வ விசாரணையில் சித்தத்தை நிறுத்தி, முக்தி யடைந்தனள் என்று ஸ்ரீ கிருஷ்ணன், உத்தவற்கு உபதேசித்தனன் அல்லவா? ஆகையால், நான் * ஸங்க பரித்யாகியாகி, எண்ணெய் ஒழுக்கேபோல் † அவிச்சின்னமாகிய ராமபக்தியோடு கூடி பரிசுத்தனாவேன்" என்பதேயாம். இங்ஙனம் சிந்தித்த இவர், பரமவைராக்ய சீலராய், ஆஹாராதிகளை அகற்றி, ‡ பத்மாஸனாஸீனராய், ஸ்ரீராம சந்த்ர த்யானம் செய்துகொண்டு, "ஸ்ரீராம சந்த்ரா! கோஸலேந்த்ரா! கருணாஸாகரா! ராக்ஷஸபீகரா! கஞ்ஜநேத்ரா! ¶ கமநீயகாத்ரா! நான், இவ்வன நடுவில், தனியனாய் நினது தரிசனத்தை விரும்புகின்றனன். சிருங்கிபேர புரத்தில் குஹற்கு ஸேவை யளித்து அநுக்ரஹித்தபடி, எனக்குப் ப்ரத்யக்ஷமாய் என்னைக் காத்தருள்க" எனப் பிரார்த்தித்துக் கொண்டிருக்க, § ராக்ஷஸாந்தகராகிய அஞ்ஜனைச்சிறுவர், கோரரூபத்துடன், தமக்கெதிர் முகமாக வருவதைக் கண்டு, எழுந்து வந்தனஞ் செய்து, "ஸ்ரீராமபக்த முதல்வ! நினது கோரரூபத்தைக் கண்டு நான் அஞ்சுவேனல்லன்; காமக்ரோதாதி அறுவகைக் குற்றங்களாகிய பகைவர்க்கு அஞ்சும் என்னைக் கிருபைக்கண் பார்த்தருள்க. எனது சுற்றத்தார் அனைவரும் என்னை ஸம்ஸார ஸமுத்ரத்தில் வீழ்த்த முயற்சி செய்கையில், நான் அத்திருடர் கைகளுக் ககப்படாமல் தப்பி, இவ் விஜன ஸ்தானத்திற்கு ஓடிவந்தனன். உடன்பிறந்தே வருத்துபவர்களாகிய காமாதி ‖ பீகரஶத்ருக்கள், எனது ஞானமணியைத் திருடிக்கொள்வதற்காக, பதுங்கி ஒதுங்கி மறைந்து, நல்ல ஸமயத்தை எதிர்நோக்கி யிருக்கின்றார்கள். அக்காலத்தில் ராவண, கும்பகர்ண, விபீஷணர்களோடு கூடி, கடலிடையிலிருக்கும் லங்கையில் வஸித்த ஸீதாபிராட்டியைப்போல, நானும் இப்போது ராஜஸ, தாமஸ, ஸாத்வீக குணங்களோடு கூடி, அஹங்கார மமகார கோர ஸமுத்ரத்திடையிலிருக்கும் சரீரமாகிய லங்கா நகரத்தில் வாழ்கின்றனன். ஸீதாபிராட்டிக்கு பத்ரமுத்ரை மோதிரத்தை அளித்தபடி, எனது அஜ்ஞானத்தை அகற்றுக; அங்கே லங்கையை எரித்தபடி, இங்கே எனதுடற்பற்றுகளை எரித்தருள்க. ஜானகி சோகத்தை ராமனுக்கு அறிவித்தபடி, என்து சோகத்தை ஸ்ரீராம சந்த்ரற்கு அறிவிக்க. லங்கைக்கு ஸ்ரீராமரை அழைத்துக்கொண்டு வந்த

* ஸங்கபரித்யாகி - ஸம்ஸாரக்கூட்டத்தை விட்டவன்.

† அவிச்சின்னம் - இடையறாமை.

‡ பத்மாஸன + ஆஸீனர் - பத்மாஸனத்தில் இருப்பவர்.

¶ கமநீயகாத்ரா - யாவரையும் களிக்கச்செய்யும் சரீரத்தை உடையவனே!

§ ராக்ஷஸ + அந்தகர் - அரக்கர்க்கு இயமனேபோல்பவர்.

‖ பீகர - பயங்கர.



படி, இங்கேயும் அவரை அழைத்துக்கொண்டு வருக. ராவண கும்பகர்ணர்களை, ராமனாற் கொல்வித்தொழித்தபடி, என்னிடத்தில் உள்ள ராஜஸ தாமஸ குணங்களை, அப் பிரானைக்கொண்டே அறுத்தெறிக. தாசரதியால் விபீஷணரை லங்கையில் நிலை நிறுத்தினபடி அந்த தேவனுடைய அநுக்ரஹத்தால், என்னிடத்தில் ஸாத்விக குணத்தை நிலைநிறுத்தவேண்டும். ராவணனை வதைத்தபிறகு, ஸீதையைச் சிவிகையிலேற்றிக்கொண்டு வந்ததுபோல, இந்த ப்ராக்ருத சரீர வியோகமான பிறகு, என்னை * ப்ரணவத் தேரேற்றிக்கொண்டு செல்க. † மைதிலி, நெருப்பிற் குளித்து உலகநிந்தையை ஒழித்தபடி, நான், நிராசையிற் குளித்து, ஸூக்ஷ்ம சரீரவாஸநாரேணுக்களை ஒழித்துக் கொள்ளவேண்டும். அக்னி, தனது கரத்தால் ஸீதாபிராட்டியை ஸ்ரீராமபிரான் ஸந்நிதியில்விட்டபடி, நான், அமாநவ கரஸ்பரிசத்தால், பஞ்சோப நிஷண்மய திவ்ய சரீரத்தைப்பெற்று ஸ்ரீ வைகுந்தத்தைச் சேரவேண்டும். ஸ்ரீ ஜானகிபிராட்டி, ராமபிரானுடன் ‡ புஷ்பகாரோஹணம் செய்தபடி, நான், பகவானுடன் சேஷ சயநத்தில் ஆரோஹணிக்க வேண்டும்.

'பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சில சொல்லல் தேற்றா தவர்' என்றபடி,

பல பேச்சென்னத்துக்கு! ஓ மாருதீ! நினது கடாக்ஷத்தினாலேயே எனக்கு இத்தனையும் உண்டாகவேண்டும்" என்று விரும்புகின்றனன். பக்தி வலையிற் படுபவனாகிய ஸ்ரீராமசந்த்ரன், நினக்கு மிகவும் நெருக்கமானவன். ஆகையால், எனது விருப்பத்தை நிறைவேற்றுதல் உனக்கு ஸுலபமாயிருக்கும்" என்று பிரார்த்தித்தனர். ஸ்ரீராமபக்திக்கு இருப்பிடமாகிய ஆஞ்ஜநேயர் புன்னகைபுரிந்து, ராமதாஸரை நோக்கி, "நீ, வருந்தற்க; என்னைப்போலவே நீயும் ராமதாஸனாயினை; பகவான், அகச்சுத்தமற்ற வெளிவேடதாரிகளுக்கு தூரமாய் மறைந்திருப்பானன்றி, உன்னைப் போன்ற வைராக்ய சீலர்க்கு ஸமீபமாய்வெளிப்பட்டு விளங்குவன்; எனக்கு அந்த ஜானகீபதி செய்தருளிய அநுக்ரஹத்தை நினக்குந் தடையின்றிச் செய்து மகிழ்வன், நீ கோரினபடி அந்த ஸீதாமனோகரன் ஸேவை அளிப்பன்" எனப் புகன்று மறைந்தனர்.

ராமதாஸர், அவ்வன நடுவில், ஸ்ரீராமபஜனம் செய்துகொண்டு கொஞ்சமேனும் அஞ்சாமல் தைரியநெஞ்சமுடையவராய், பகற்காலங்களில் ஸமீப கிராமங்களுக்குச்சென்று, பிச்சை யேற்றுக்கொண்டு வந்து புசித்து,

"மனந்தானே அழியாத பற்றினையும் வீட்டினையும் வழங்க லாகும்
மனந்தானே விஷயவழிப் படரின்றாப் பற்றினையே வளர்ப்ப தாகும்

* ப்ரணவம் - இரகஸிய பரிசுத்த எழுத்துக்களாகிய அகார உகார மகாரங்களாலாகிய (ஓம்) என்னும் ஒலியுருவம்.

† மைதிலி - ஸீதாபிராட்டி. ‡ புஷ்பகம் + ஆரோஹணம் - புஷ்பகம் என்னும் ஆகாயரதம் ஏறிச்செல்லுதல்.

மனந்தானே விஷயவழி விலகினுப்பில் வீட்டினையே வகுப்பதாகும்
மனந்தானே நன்றினுக்கும் தீதினுக்கும் நாயகமாய் வயங்குந் தானே''

'மனிதர்க்கு, மனமே பந்தமோக்ஷ காரணமாயிருக்கின்றது: மனம் விஷயவழியிற் சென்றால் பந்தங்களுக்குக் காரணமாகும்; மனம், விஷய வழியைவிட்டுச் சென்றால், வீட்டுக்குக் காரணமாகும்; ஆதலால், மனமே நல்லது செய்யவும் கெட்டது செய்யவும் வல்ல முதன்மைத் தன்மை பெற்று விளங்குகின்றது' எனத் தீர்மானித்து, மனமறுக்கும் விஷயமாக இருநூறு சுலோகங்கள் இயற்றியருளினர். அந்த சுலோகங்களின் பொருளுணர்ந்து, பாராயணம் பண்ணுகிறவர்கள், வைராக்ய சீலராவார்கள். ராமதாஸர், வன மிருகங்களுடன் வாழ்ந்து,

'ஸம்ஸார மென்னுந் தருவினறு வேரை
விரக்தி யெனும் வாளதனால் வெட்டு'

என்றபடி, அறுவேர்களோடு கூடிய ஸம்ஸார விருக்ஷத்தை, விரக்தியென்னும் வாளாயுதத்தால் வெட்டியெறிந்து; ஸ்ரீராமநாமாமிர்த பானம் பண்ணிக் கொண்டு, பரமானந்த பரிதராய் விளங்கினர்.

இங்ஙனம் இருக்க, ராமதாஸர் இடத்திற்கு, ஆஞ்ஜநேயர் வந்து, "ஓ, ராமதாஸா! ஸ்ரீமத் பண்டரிபுரத்தில் ஆடிமாதத்துச் சுக்லபக்ஷத்து ஏகாதசி மஹோற்சவம் நெருங்கி யிருக்கின்றது. நீ அங்குச் சென்றனையாயின், ஸ்ரீராமசந்திரனுடைய தரிசனங் கிடைக்கும்'' எனக்கூறிப் பண்டரிபுரத்துக்குப் போகும் வழியைக்காட்டி மறைந்தனர். ராமதாஸர் பண்டரிபுரம் சேர்ந்து, ஸாதுஜனங்கள் செய்யும் பகவந்நாம ஸங்கீர்த்தன கோலாஹலத்திற்கு ஆனந்தமடைந்து, சந்த்ர பாகையிற் குளித்து, கோபுர மஹாத்வாரத்தில் வந்தனஞ்செய்து, ஆஞ்ஜநேயரை நமஸ்கரித்து, உள்ளே நுழைந்து புண்டரீக வரதனை ஸேவிக்கையில், அவன், இடுப்பில் ஊன்றிய கரங்களை உடையவனாய், ஸமசரணனாய், செங்கல்லின்மேல், நின்ற திருக்கோலத்துடன் விளங்கி யிருந்தனன். அப்போது, ராமதாஸர், சிறிது மனம் வருந்தி, பகவானை நோக்கி, "ஓ ஸ்வாமி! என் வில்லம்புகளை விட்டு விட்டனை? கரங்களை என் இடுப்பில் ஊன்றி யிருக்கின்றனை? ஸாயூநதி இங்கில்லையே! வானர வீரர்கள் எங்கே போனார்கள்? ஆஞ்ஜநேயர் மாத்திரமே கோபுர மஹா த்வாரத்தருகில் இருக்கின்றனர். ஏகபத்னீ வ்ரதனாகிய நீ, ஸீதையைவிட்டு, பல மனைவியரை என் விரும்பினை? நினது நீக்கத்தைப் பொறாமல் வனத்துக்கு நின்னைப் பின்பற்றி வந்த லக்ஷ்மணர், இப்போது, நின்னை எங்ஙனம் நீங்கி யிருக்கின்றனர். ராவணனால் அபகரிக்கப்பட்டு, லங்கையில் ஏகாக்ஷி முதலிய ராக்ஷஸ ஸ்திரீகளின் காவலுக்குட்பட்டிருந்த காலத்தில்,

'என்னுயிர் நாதனைநான் எய்தேனேல் மாதமொன்றில்
என்னுயிர் போகும் இறந்து'

என்றபடி, ஒரு மாதத்துக்குள் எனதுயிர்நாதனை நான் அடையேனேல், என்னுயிர் இறந்துபோகும் என்று ஆஞ்ஜநேயரோடு சொல்லி யனுப்பின ஸீதாதேவி, விரோதிகள் இல்லாத இக்காலத்தில் உன்னை விட்டு எங்குச் சென்றனள்? நீயேன் இந்த வேஷம் பூண்டாய்! துரதிர்ஷ்டம் பிடித்தவனாகிய எனக்கு ஸேவை யளிக்க மனமில்லாமல் நீ, இம்மாறு வேஷம் பூண்டனைபோலும்! கோதண்ட தீக்ஷாகுரு! அகில ஜகத்குரு! எனது இஷ்டகுரு! நீ இத்தனை வெறுத்துத்தள்ளி என்னை விட்டுவிட நினைவையேல், எனக்கு வேறு கதியேது? என் முறையை விரும்பிக் கேட்பவர் எவர்? நீ ஸ்ரீராம ரூபத்தோடு வீற்றிருக்கின், சரணாகதனாகிய என்னைக் காத்தளிக்கும் பொறுப்பு உன்னதாகும் என்றெண்ணி, ஜாரசோர சிகாமணியாகிய ஸ்ரீ கிருஷ்ணரூபந் தாங்கினையோ! நீ இங்கெழுந்தருளி விளங்குவதை ஆஞ்ஜநேயராற் கேள்வியுற்று, விரைந்தோடி வந்தனன்; இதற்குள்ளேயே, எந்த பக்தன் உன்னை இந்த உருவமாகத் துதித்து, உனது உருவத்தை மாற்றிவிட்டனன்! எனக்கு அத்தகைய உறுதியான பக்தி நிலைத்திருப்பது உண்மையாயின், எனது வேண்டுகோளின்படி இந்தக் கிருஷ்ண உருவம், தானாகவே ஸ்ரீராம ரூபமாகவேண்டும்; அத்தகைய பரமபக்தி நிஷ்டை என்னிடத்தில் இல்லாமற்போனபோதிலும், உனது குணபூர்த்தியைக் கொண்டேனும் எனக்கு அநுக்ரஹித்தருள்க. குழந்தைக்குப் பசி குறைந்திருப்பினும், தாய்க்கு * க்ஷீராசயங்கள் அப்போதைக் கப்போது சுரந்துகொண்டிருப்பனபோல, எனது பக்தி குறைந்திருப்பினும் என்மீது நின்னருள் ஊறிக்கொண்டே பெருகவேண்டியிருக்க, வற்றிப்போன காரணம் என்ன! பக்தவத்ஸலா! கடைக்கண் பார்; என்னைப் பெற்றுவளர்த்த தாய் தந்தையரையும், சுற்றத்தவர்களையும் துறந்து,

'தந்தையுநீ தாயுநீ தாரமுநீ சுற்றமுநீ
மைந்தருமா சான்றானு மற்றெவரும்—சந்ததநீ
வித்தையுநீ வித்தமுநீ மேதினியி லெல்லாமும்
நித்தனீ யாவாய் நிசம்'

என்றபடி, உன்னையே எல்லாமாய் நம்பி வந்து அடைந்தனன்;

'நீயே யுலகெல்லாம் நின்னருளே நிற்பனவும்
நீயே தவத்தேவ தேவனும்—நீயே
எரிசுடரும் மால்வரையு மெண்டிசையும் அண்டத்
திருசுடரு மாய விவை'

'தவம்செய்து நான்முகனால் பெற்ற வரத்தை
அவம்செய்த வாழியா யன்றே—உவந்தெம்மைக்
காப்பாய்நீ காப்பதனை யாவாய்நீ வைகுந்த
மீப்பாயு மெவ்வுயிர்க்கும் நீ'

என்ற திருமழிசை யாழ்வாரருளிச் செயலின்படி, நின்னை நம்பிவந்தடைந்த என்னை, நட்டாற்றில் விடுதல் ஞாயமன்று. வசிஷ்ட சிஷ்யனாகிய உனக்கு, இந்த குணம் தகாது; இக்ஷ்வாகு வம்சத்திற் றோன்றினவர்கள்,

* க்ஷீரம் + ஆசயங்கள் - பாலிருக்கும் இடங்கள்.

எல்லாவற்றையும் வெறுத்து தமது ஸ்வகுணங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் வகையைத் தேடுவார்கள். நினது தந்தையாகிய தசரதர், அஸத்யத்தைப்பொறுமலன்றே! நின்னை வனம் போக்கி, நினது பிரிவாற்றாத துக்கத்தால் மரித்தனர்? அப்பேர்ப்பட்டவர்க்குப் புத்திரனாய் அவதரித்த நீ, இப்போது மாத்திரம் ஏனோ நிந்தைக்கு மடிகட்டி நிற்கின்றனை! நீ விபீஷணர்க்கு, லங்காதிபத்யத்தை அளித்த காலத்தில் நினது ஆப்த மந்திரத்தலைவர் நின்னை நோக்கி, ‘ராவணன் உயிருடன் இருக்க, விபீஷணரை லங்கை யரசராக நியமித்தல் ஞாயமன்று; இப்போது ராவணனும் சரணாகதனானால் என் செய்வீர்!’ என விண்ணப்பித்தபோது, ‘அத்தனை நல்லகாலம் வந்து, அதனால் ராவணன் என்னைச் சரணடைந்தானாயின், அவற்கு எனது அயோத்திநகரத்தின் அரசாட்சியை அளிப்பேன்’ என நீ கூறினையல்லவா! அத்தகைய நீ, சரணாகதனாகிய என்னை, வெறுத்துவிடுதல் ஞாயமா? இப்போது இங்கு வஸிஷ்டர் இருப்பரேல், நினக்கு இந்த அதர்மம் தகாதென்று சொல்லுவித்து, நின்னைச் சிக்ஷைக்குட்படுத்துவேன்! அயோத்தியிலிருந்தாயானால், நினக்கிப்படிப்பட்ட நிர்ப்பந்தங்கள் உண்டாவன என்னும் அச்சத்தால், நீ பண்டரிபுரத்திற்கு வந்துவிட்டனை என்றெண்ணுகின்றனன். அங்ஙனம் நீ எண்ணி இங்கு வாராயேல், என்னை என் அந்த அயோத்திக்கு வரவழையாமல், இங்கு வரவழைத்தனை? நான் எத்தனை கெஞ்சினாலும் நினது மனம் உருகவில்லை. மௌனம் ஸர்வார்த்த ஸாதகம் என்றிருக்கின்றனை! நான் எங்கெங்குந் திரிந்து, நினது அநியாயத்தை விளம்பரப்படுத்திவிடுவேன்!” என விண்ணப்பித்தனர். இவைகளைக் கேட்டு உவந்த பகவான், ஸந்தோஷமிக்கவனாய், கிரீட குண்டலாதி திவ்யாபரண பூஷிதனாய், * தநுஷ்பாணியாய், † யுகளதூணீதரனாய் ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண பரத சத்ருக்ந ஹநூமத்ஸமேதனாய், ஸுக்ரீவாதி வானரவீரர் சூழப்பெற்றவனாய் ஸேவை யளித்தனன். அப்போது ராமதாஸர், ஆநந்த பரவசராய்,

‘ஆபதா மபஹர்த்தாரம்
தாதாரம் ஸர்வ ஸம்பதாம்
லோகாபி ராமம் ஸ்ரீராமம்
பூயோ பூயோ நமாம்யஹம்’

‘துன்ப மலையைத் தொலைக்கலாம் சொல்லரிய
இன்ப மலையி லிருக்கலாம்—பொன்புரையும்
சீராம மந்திரத்தைத் தேர்ந்து பலமுறையிற்
பாரா யணம் பண்ணி னால்’

‘குலந்தரும் செல்வந் தந்திடும் அடியார் படுதுய ராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும் அருளொடு பெருநில மளிக்கும்

* தநுஷ்பாணி - வில்லேந்திய கரத்தன்.

† யுகளதூணீதரன் - இரட்டை அம்பறாத்தூணிகளைத் தாங்கினவன்.



வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற தாயினு மாயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன் நாராயணாவென்னுநாமம்’

‘ராமாய ராமபத் ராய
ராமசந் த்ராய வேதஸே
ரகுநா தாய நாதாய
ஸீதாயாः பதயே நமः’

‘கல்லா தவரிலங்கை கட்டழித்த காகுத்தன்
அல்லா லொருதெய்வம் யானிலேன்—பொல்லாத
தேவரைத் தேவரல் லாரைத் திருவில்லாத்
தேவரைத் தேரேன்மின் தேவு’

‘நம: கோதண்ட ஹஸ்தாய
ஸந்தீக்ருத சராயச
தண்டிதா கிலதைத்யாய
ராமாயாபந் நிவாரிணே’

‘ஆர்த்தானா மார்த்திஹந்தாரம்
பீதாநாம் பீதிநாஶநம்
த்விஷதாம் காலதண்டம் ஸ்ரீ
ராமசந்த்ரம் நமாம்யஹம்’ எனத் துதித்து,

கணக்கிலா வந்தனங்கள் செய்து, “எனதுயிர் நாத! இத்தனை நாட்களாக நினது திருவுருவைக் காணாமல் வாடிப்பசித்திருந்த எனது கண்களுக்கு, நிறைந்த உணவை அளித்தனை”, என்றனர். அதனைக்கேட்ட பகவான், புன்னகை புரிந்து, “ராமதாஸ! நான், நாமரூபரஹிதன்; எனதுண்மை உருவைக் காணமுடியாமல், தேவர்கள் முதலியோர் என்னை, * திவ்யரூபவிசிஷ்டனாக வணங்குகின்றனர். நீ இப்போது என்னை தரிசித்தபடி, இந்த ராம வுருவத்தோடு அநவரதமும் த்யானிக்கக்கடவை” எனக்கூறி, அவரது சிரத்தைத் தனது திருக்கரத்தால் பரிசித்து, எப்போதும்போல ஸ்ரீ பாண்டுரங்கத் திருவுருவத்தைப் பொருந்தி விளங்கினன். ராமதாஸர், பாண்டுரங்கனைப் பலவிதங்களிற் றுதித்து, ஆனந்த பரவசராய், நிருத்த கீர்த்தனங்கள் செய்து, உத்ஸவ முடிவில் பகவந் நியமனத்தைப் பெற்று, தமதிருப்பிடத்திற்குச் செல்வாராயினர்.

அவர், பண்டரிபுரத்தை விட்டுப் புறப்பட்டு, தமதிருப்பிடத்திற்கு வந்துகொண்டிருந்தபோது, வழி நடுவில் உள்ள ஜெநூரி யென்னும் பட்டணத்தைச் சேர்ந்தனர். அந்த நகரத்தில் திருக்கோயில்கொண்டு விளங்கும் பார்வதீ ரமணன், ராமதாஸருடைய † ஸாங்கத்யத்தை விரும்பி, “இவர், ஸ்ரீராமரூபந் தவிர வேறொரு ரூபங்களை ஆதரிக்கமாட்டார்; ஸ்ரீ பாண்டுரங்கமூர்த்தி, இவருக்காக ஸ்ரீராம ரூபந்தாங்கி ஸேவை

* திவ்யரூபவிசிஷ்டன் - ஒளியுருவமுடையவன். † ஸாங்கத்யம் - நட்பு.

யளித்தனன். இப்பேர்ப்பட்டவர், எனது கோயிலுக்கு எங்ஙனம் வருவார்?

‘எங்கேமெய் யன்பருளர் என்றாலும் தாழ்க்காமல்
அங்கே நீ செல்க அமர்ந்து’ என்னும்

உண்மையைக்கொண்டு, நானே, இந்தஅன்பரிடத்திற்குப் போவேன்" எனத் தீர்மானித்து, அந்த நாட்டை ஆளும் சிவாஜி மஹாராஜனைப் போல வேஷந்தரித்து, குதிரையேறி வந்து, ராமதாஸரைக் கண்ட மாத்திரையிற் குதிரையி னிழிந்து, நடந்து வந்து, இவர்க்கு வந்தனம் செய்து, "ஒ, பாகவத சிகாமணீ! இன்றே நன்னாள்; நினது தரிசனம் * ஆகஸ்மிகமாய்க் கிடைத்தது எனக்கூறி, இவரைத் தழுவிக்கொண்டு, "ஒ, மஹாத்மா! இனி, நீ பண்டரி புரத்திற்குப் போகும் போதும் வரும்போதும் இங்கெழுந்தருளி, எனக்கு ஸேவை யளிக்க வேண்டும்" என்றுவேண்டிக்கொண்டு, "ஸ்ரீராமபக்திநிஷ்டர்கள், எனக்கு ப்ராணநேசரானவர்கள்; என்னை மறவற்க; நான் போய்வருகின்றேன்" எனப்புகன்று மறைந்து சென்றனன். ராமதாஸர், ஆச்சரிய மடைந்தவராய், "இப்போது வந்தவன், தாரகமந்த்ரோபாஸகனாகிய சங்கர மூர்த்தி" யெனத் தீர்மானித்து, ஸந்தோஷித்து, அங்குள்ள மலைமேல் † ஸாந்நித்யம் செய்து விளங்கும் கங்காதரனை ஸேவித்து, திருமுகமண்டபத்தில் நின்று, ஸ்ரீராம சந்த்ர பஜனை பண்ணி, சந்த்ரசேகரர் அநுமதி பெற்று, மலையினிழிந்துபோய்க் கொண்டிருக்கையில், சிவாஜி மன்னவன் இவ் விருத்தாந்தங்களைக் கேள்வியுற்று, வேகமா யோடிவந்து, ராமதாஸருடைய திருவடிகளிற் சரண்புகுந்து, இவருடைய தண்ணளிக்குப் பாத்ரவானாய், ஸ்ரீதாரகமந்த்ரோபதேசத்தை இவரிடத்திற் பெற்றுக்கொண்டு, ‡ தந்யனானான். ராமதாஸர், இப்படி, அநேகாத்மாக்களுக்கு அநுக்ரஹித்து, தமது ஆசிரமத்தில் வாழ்ந்திருந்து, ஈஶ்வர விபூதியாகிய சேதநா சேதனர்களிடத்தில் ஸமபாவனை செலுத்தி, ஆனந்தித்துக்கொண்டு, ‘ஸ்வபோதம்’ என்னும் க்ரந்தத்தை இயற்றியருளினர். அந்த கிரந்தத்தைச் சிரத்தையோடு வாசிக்கின்றவர்களுக்கு ஞானவைராக்யங்கள் மிகுந்து, பேதஞான திமிரம் அகலும். இன்னும், அந்த கிரந்தத்தைப் பொருளுணர்ந்து அதன்படி நடக்கிறவர்கள், ஜீவன்முக்தராவார்கள். ராமதாஸர், பிரமாதியர்களுடைய செல்வங்களையும் துரும்பென மதித்தவராய், ஸர்வத்தையும் பகவத் ஸ்வரூப பாவனை பண்ணி, அநவரதமும் ராம நாமத்யானபரராய் வீற்றிருந்து, ஒவ்வொரு வருஷத்திலும் ஆடிமாதத்துச் சுக்ல பக்ஷத்தேகாதசி நாளில் ஸ்ரீ பாண்டுரங்கனை தரிசித்துக்கொண்டு, தமது உபதேசாநுஷ்டானங்களால், அநேகரைத் தம்மைப்போலாக்கித் தமது வாழ்நாளைக் கழித்து, சரீர நிரியாண காலத்தில், ஸ்ரீராம சந்த்ர ஸாயுஜ்ய பதவியைப் பெற்றனர்.

ஆஞ்ஜநேயவரதாய நம:

* ஆகஸ்மிகமாய் - திடீரென்று.
† ஸாந்நித்யம்செய்தல் - எழுந்தருளியிருத்தல். ‡ தந்யன் - பாக்யசாலி



## ஐம்பத்தேழாம் அத்தியாயம்

# துக்காராம் ஸ்வாமி சரித்திரம்

அளகாபுரிக்குத் தெற்கிலுள்ள தேவ நகரத்தில் துக்காராம் ஸ்வாமி வர்த்தகம் செய்து வாழ்ந்துகொண்டிருந்தனர். இவர்க்கு, மனைவியர் இருவர். மூத்த மனைவிக்கு இருவர் புத்ரர்கள் உண்டானார்கள். துக்காராம் ஸ்வாமி வர்த்தகம் செய்து கொண்டிருந்தும்,

‘சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி’ என்றபடி,

துலாக்கோல்போல நிர்மல சித்த முடையவராய், பிள்ளைப் பூச்சியைப் போல, ஸம்ஸாரச் சேற்றில் நுழைந்தும் ஒட்டாமல், அநவரதமும் ஸ்ரீ பாண்டுரங்கநாதனை உள்ளன்புடன் ஆராதிப்பாராயினர். இங்ஙனம் இருக்க, பெரும் பஞ்சம் நேரிட்டபடியால், உணவுப் பொருள் கிடைப்பது மிகவும் அருமையாய், ஜனங்கள் * சாகபக்ஷகர்களாய்க் காலங் கழித்துக்கொண்டிருந்தனர். இப்படிப்பட்ட காலத்தில், இவருடைய மூத்த மனைவியார் சரீர வியோகத்தை யடைந்தனர்; அவ் வம்மையாருடைய புத்திரர்களிருவர், தந்தையை நிந்தித்து வீடுவிட்டுத் தமதிஷ்டம்போல் வெளியே போய்விட்டார்கள். துக்காராம் ஸ்வாமி, எதற்கும் மனஞ்சலியாதவராய், பகவத் தியானபரராய், பகவத் ஸந்நிதியில் † நிருத்த கீர்த்தனங்களைச் செய்துகொண்டு, பேரானந்த பரவசராய் வாழ்வாராயினர்.

‘அன்புமிகுந் தேறி ‡ அதோக்ஷ ஜற்கே ஆளானோர்
வன்பு மிகுந்துயரால் வாடார்போல்—மின்னுமழை
மிக்குப் பொழிந்தாலும் விண்ணோங்கு வெற்பனைத்தும்
நெக்குச் சலியா நெகிழ்ந்து’ இதற்கு,

‘அதோக்ஷஜனிடத்திற் கூம்பியமனமுடையவீர்கள், துயரமிகுதியால் எங்ஙனம் சலியாமலிருப்பார்களோ; அங்ஙனம், மலைகள் மாரிமிகுதியால் அசைவற்றிருக்கின்றன’ என்பது பொருள்; இது, துக்காராம் ஸ்வாமி விஷயத்திற் காட்சிப்ரமாண மாயிற்று.

முற்காலத்தில், நாமதேவர், பண்டரிநாதனை ஸேவித்து ஆனந்த மிக்கவராய், "தேவாதி தேவா! நினது எண்ணிறந்த கல்யாணகுண கணங்களை எத்தனை விதங்களிற் புனைந்துரைத்தாலும் எனக்கு மன நிறைவுண்டாகாமலிருக்கின்றது. நினது குணாநுபவங்கள், பழகப் பழக, புதியன புதியனவா யிருக்கின்றன. ஸத்யலோகத்தில் உள்ள ஸ்ரீராமாயண பாராயணாநுஸாரம், நூறு நூறு நூறாயிர விருத்தங்களான் நின்னைத்

* சாக பக்ஷகர்கள் - இலை, காய், கனி, கிழங்குகளை உண்பவர்கள்.
† நிருத்த கீர்த்தனங்கள் - ஆட்டப்பாட்டங்கள்.
‡ அதோக்ஷஜன் - விஷ்ணுவின் திருநாமங்களிலொன்று.

துதிக்கவேண்டுமென்று விரும்புகின்றனன். இவ் விச்சையை, நீ நிறைவேற்றவேண்டு"மென்று, பன்முறை வேண்டிக்கொண்டனர். அதற்கு ஸ்ரீபாண்டுரங்க மூர்த்தி புன்னகை புரிந்து, "ஓ, நாமதேவா! மனித சரீரம் மிகவும் அஸ்திரமானதென்று நீ உணருவையன்றோ? அங்ஙனம் இருக்க, நூறு நூறு நூறாயிர விருத்தங்களான், என்னைத் துதிக்கவேண்டும் என்று உனக்குண்டாகிய இச்சை எங்ஙனம் நிறைவேறும்? மனிதற்கு வயது நூறாண்டுகளுக்குமேல் இல்லை; அதிலும் ஐம்பது வருஷம் தூக்கத்தில் நீங்கும்; இளமையால் ஐந்து வருஷம் செலவாகும்; குமாரப்பருவத்திற் பதினைந்து வருஷம் பறந்துபோகும்; எழுபதுபோக மீதியாய் இருப்பது முப்பது வருஷங்களே ஆகும்; அவற்றுள், இன்பம் அனுபவிக்கும் நாட்கள் சில; துன்பந் துய்க்கும் நாட்கள் சில. ஆதலால் இந்த மிச்ச நாட்கள், நம்பத்தகாதனவாயிருக்கின்றன. இளமையிலோ, அன்றி முதுமை வளமையிலோ, மூப்பிலோ, நாட்டிலோ, காட்டிலோ, வீட்டிலோ, வீட்டுப்புறந் திண்ணையிலோ, மலைமேலோ, அலைமேலோ மரணம் நேரிடும்! இத்தகைய நிலையிலாச் சரீரத்தை நம்பி, 'நூறுநூறாயிர விருத்தங்களைப் பாடுகின்றன'னென்று எங்ஙனம் நினைக்கவல்லாய்!" எனக் கேட்டனன்.

'மனிதற்கு வயது நூறல்ல தில்லை
ஐம்ப திரவி லகலுந் துயிலினால்
ஒட்டிய இளமையால் ஓரைந்து நீங்கும்
ஆக்கை யிளமையில் ஐம்மூன்று நீங்கும்
எழுபது போகநீக் கிருப்பன முப்பதே
அவற்றுள்
இன்புறு நாளுஞ் சிலவே யதாஅன்று
துன்புறு நாளுஞ் சிலவே யாதலால்' என்றதும்,

இப்பெற்றி நோக்கியே என்க.

ஸ்ரீருக்மிணீகாந்தன் கேட்டதற்கு நாமதேவர், அவற்கு வந்தனம் செய்து, "எனது தேகத்தையும், அத்தேகத்தில் வாழும் எனது வல்லமையையும் நம்பி, நான் இத்தகைய எண்ணங்கொண்டவன் அல்லன்; அன்பர் எண்ணத்தை ஈடேற்றுவதற்கு நீ கங்கணங்கட்டி யிருக்கின்றனை யல்லவா! மஹா பாரதப் போரில், ஒரு காலத்தில் நீ, 'நான் ஆயுதத்தைத் தொடேன்' எனச் சூளுரைத்திருந்தும், பரம்பாகவதராகிய ஸ்ரீ பீஷ்மாசாரியருடைய சூளுரையை நிறைவேற்றும் வண்ணம் நினதுசூளை மதியாமல், ஆயுதத்தைத்தொட்ட தன்மை, யாவரும் அறிந்த விஷயமேயன்றோ? அல்லதும், 'நான் எனது பக்தர் மனத் தாமரைகளிற் பொருந்தி, அவரவர் எண்ணங்களை யெல்லாம் நிறைவேற்றுகின்றனன்' என்னும் கீர்த்திமானாய் நீ விளங்கி யிருப்பதனால், நினது பக்தனாகிய நான், நினது உதவியை நம்பி, இத்தகைய எண்ணங் கொண்டவனாயினன். 'நீ ஸர்வ சக்தியுக்தனாகையால், நினக்குப் பரதந்த்ரனாகிய எனக்கு என் நினைத்தது முடியாது!" என விண்ணப்



பித்தனர். அதற்கு ஸ்ரீபாண்டுரங்கநாதன் ஸந்தோஷமடைந்து, "நாமதேவா! நினது மனோரதத்தை நிறைவேற்றுவல்" எனப் புகன்று, ஸரஸ்வதீ தேவியை நினைத்தனன்; அந்த தேவியார், பகவான் எண்ணத்தை யுணர்ந்து வந்து, அவற்கு வந்தனம் தந்து, "தேவாதிதேவ! என்னை நினைத்தகாரணம் என்ன?" எனக் கேட்டனர். ருக்மிணீகாந்தன், ஸரஸ்வதியை நோக்கி, "நீ, நாமதேவனுடைய வாக்கில் விளங்கி யிருந்து, அவன் விரும்பியுள்ளபடி நூறு நூறு நூறாயிரம் விருத்தங்களை ஓதச் செய்க" என நியமித்தனன். சாரதாதேவி, "ஸ்வாமீ! நினது வைபவத்தைத் துதிப்பதற்கு, பிரம சிவ ஸநகாதியர்களுக்கும் முடியாததா யிருக்கின்றது. வேதபுருஷன் நினது ஆனந்தத்தை நிச்சயிக்க எண்ணி, மனிதானந்தத்தை நிச்சயித்து, ப்ரஹ்மானந்தம் வரையிற் சொல்லிக்கொண்டே போய், 'பரப்ரஹ்மானந்தம் எனது மனதுக்கு எட்டாததாயிருக்கின்றது' எனக்கூறித் தியங்கினன். அத்தகைய நினது ப்ரபாவத்தைப் புகழ்வதற்கு, எனக்கு எங்ஙனம் ஸாத்யமாகும்! ஆனாலும், நான், நினது கட்டளையைச் சிரஸாவகித்து, நாமதேவன் வாக்கில் விளங்கியிருந்து, நூறு நூறு நூறாயிர விருத்தங்களை ஓதுவித்து நின்னைப் புகழ்வேன், அங்ஙனம் சொல்லப்படூஉம் விருத்தங்களை, வல்விரைந் தெழுதக் கூடிய * இலேகினியும், நன்றாய் எழுத வல்லவனாகிய உத்தம புருஷனும் இன்றி, இந்தக் காரியம் எங்ஙனம் நிறைவேறும்?" என்று விண்ணப்பிக்க, தேவாதிதேவனாகிய பண்டரிநாதன், எழுத்தாணிகளைத் தனது திருக்கரத்திற்றாங்கி, தானே அத்தொழிற்குகந்தவன் என்றெண்ணி, எழுத உடன்பட்டு நின்றனன். இங்ஙனம் பகவான் எழுதிக்கொண்டே வருகையில், நாமதேவர், தொண்ணூற்றுநான்கு நூற்றுநாற்பத்து நூறாயிரம் விருத்தங்களைக் கூறினார். இதற்குள், அவர்க்கு, பஞ்சபூத சரீர ஸம்பந்தம் அருவருப்பாய்த் தோன்றினமையால், நித்ய விபூதியை அடையவேண்டும் என்னும் அவஸரம் உண்டாயிற்று. அஃதுணர்ந்த பகவான், அவரை ஆலிங்கனம் செய்துகொண்டு, "ஓ, வத்ஸா! சோகமுறற்க. உனக்கு இந்த விபூதியிற் பொருந்தி வாழ்ந்திருத்தல் அருவருப்புற்றமையால், நீ கோரினபடியே நித்ய விபூதியை அடையக்கடவை. சில காலத்திற்குப் பிறகு, நீ மறுபடியும் மனித உலகுக்கு வந்து, துக்காராம் என்னும் நாமத்தைப் பெற்று, என்னிடத்தில் மிகுந்த பக்தி விளங்கினவனாய், இப்போது குறைந்துள்ள ஐந்நூற்றறுபது நூறாயிரம் விருத்தங்களையும் பாடி, நினது ஸங்கற்பத்தை முடித்து எனக்கானந்தம் விளைக்கக்கடவை' என நியமித்தனன். அதனைக்கேட்ட நாமதேவர் ஸந்தோஷித்து, நித்ய விபூதிக்குச் சென்றனர். இப்போது, நாமதேவருடைய ஸங்கற்பத்திற் குறைவடைந்த விருத்தங்களை முடிக்கக்கருதி, ஸ்ரீபாண்டுரங்கன், நாமதேவருடன் துக்காராம் ஸ்வாமியின் கனவில் ஸாக்ஷாத்கரித்து, பூர்வ விருத்தாந்தங்களை அவர்க்கறிவித்து, "ஓ, துக்காராம்! நீ, இதரவ்யாபாரங்களைவிட்டு, எனது கட்டளையைச் சிரஸாவகித்து, நாமதேவனுடைய ஸங்கற்பத்தைப் பூர்த்திசெய்யக்கடவை; நான் உனக்கு உதவியாயிருக்

* இலேகினி - எழுத்தாணி.

கின்றனன்'' என நியமித்து மறைந்தனன். துக்காராம் ஸ்வாமி விழித்தெழுந்து, கனவின் நிலையைக் கருத்திலிருத்தி, ஆனந்தமேலிட்டு, இதர வ்யாபாரங்களனைத்தையும் ஒழித்து, அநவரதமும் ஸ்ரீபாண்டுரங்கனை இவ்வுலகினர்க்கரிய பெரிய விருத்தங்களாற் பாடிக்கொண்டிருந்தனர். இவ்விருத்தாந்தங்களைக் கேள்வியுற்ற ஸாது ஜனங்கள், பரமானந்தம் அடைந்தனர். பொறாமைக் குணமுடைய சில துஷ்டர்கள், இவரைப் பரிஹாஸம்பண்ணிக்கொண்டிருந்தனர். மஹாநுபாவராகிய துக்காராம் ஸ்வாமி, தம்மைக்குறித்து ஸாது ஜனங்கள் செய்யுந் துதியைக்கேட்டு, "இவர்கள் ஏனோ பகவானைத் துதிக்கவேண்டிய வாய்களால், உதவியற்றவனாகிய என்னைத் துதிக்கின்றார்கள்!'' என அருவருப்புற்றும், துஷ்டர்கள், தம்மைக் குறித்துச் செய்யும் நிந்தையைக்கேட்டு, அவர்களை நோக்கி, "ஓ, பாக்யவான்காள்! ஸமுத்ரத்தைக் கைகளால் நீந்தப் புகுந்தபடி, எனது குற்றக் குவியலை வர்ணிக்கப் புகுந்தீர்கள்! ஸர்வஜ்ஞனும், ஸர்வ சக்தியுள்ளவனுமாகிய ஸர்வேஶ்வரனுக்கே கணக்கிட முடியாத எனது குற்றக் குப்பை, நுமக்கெங்ஙனங் கணக்கிடமுடியும்? ஆனாலும், என்னைப் பரிசுத்தனாக்கவேண்டும் என்னும் அன்பினால், நீவிர், இத்தகைய அருங்காரியத்தைச் செய்யப் புகுந்தீர்கள். இதற்காக, நான் நன்றியுள்ளவனாய் நுமக்குக் கணக்கிலா வந்தனங்கள் செலுத்துகின்றனன்'' என்று சொல்லிக் கொண்டிருந்தனர்.

ஆண்டுகள் தோறும், ஆடிமாதங்களில், பண்டரிபுரத்துக்குப்போய் ஸ்ரீபாண்டுரங்கனுடைய உற்சவங்களை ஸேவித்துக்கொண்டு, ஆசையற்றவராய், அருந்தவராய், பரமசாந்தராய், எல்லார்க்கும் நல்லவராய், பொதுநோக்குடையவராய், அளவான ஊண் உறக்கங் கொள்பவராய், அநவரதமும் ஸ்ரீபாண்டுரங்கனுடைய கல்யாண குணங்களை, திவ்யத் திருவிருத்தங்களாற் பாடுவாராயினர். மலர்ந்த புஷ்பங்களிடத்திலுள்ள நாற்றம், காற்றின் உதவியால் உலகிற் பரவுகிறபடி, பரமபாகவதர்கள் ப்ரஸங்கஞ் செய்வதால், துக்காராம் ஸ்வாமியின் கல்யாண குணங்கள் உலகெங்கும் பரவின. அந்த நாட்டையாளும் சிவாஜிமன்னவன், துக்காராம் ஸ்வாமியின் வைபவத்தைக் கேள்வியுற்று, இவரைக்கண்டு வணங்கி இவருடைய ஆசீர்வசனத்தைப் பெற்றுச் செல்லவேண்டும் என்று விரும்பினவனாய், தான், ராஜதானியை விட்டு வருதல் பகைவர் அறியாத வண்ணம் மாறுவேடம் பூண்டு, ஒருவனாய்ப் புறப்பட்டு, ஒரு தாம்பாளத்திற் பூவராகன்களைப் பெய்துகொண்டுவந்து, துக்காராம் ஸ்வாமியின் மந்திரத்தில் நுழைந்து, அவர்க்கெதிரில் அவ்வராகன் நிறைந்த தாம்பாளத்தைவைத்துவந்தனம்செய்தனன். அவ் வராகன்களைக் கண்டவுடன் துக்காராம் ஸ்வாமிக்குச் சரீரத்தில் நடுக்கமுண்டானபடியால், இவர், உடனே அரசனை நோக்கி, "இதனை ஏன், இங்குக் கொணர்ந்தனை? நிராசையாளனாகிய எனக்கு ஸ்ரீமத் பண்டரீநாதனுடைய சரணாரவிந்த யுகளந்தவிர வேறொரு பதார்த்தத்தில் இச்சை இல்லை. மனிதனுடைய தேக யாத்திரை கர்மாதீனமாய் இருக்கின்றது. கர்மஸாக்ஷியாகிய பகவான்; அவனுடைய இதய கமலத்தில் விளங்கியிருந்து, சேதனனாகிய



அவனுடைய கர்மாநுஸாரமாய், பலப்ரதானம் செய்கின்றனன். அந்த பகவானுக்கு, இப்போது என்ன குறை நேரிட்டதென்று எண்ணி, நீ இந்தப் பணத்தை எனக்குக் கொடுக்கவந்தனை! கண்ணுழையாக் காட்டிற் றேனீக்கள் ஈட்டின தேன்,

'ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்' என்றபடி,

பலபேர் உடைமையா யிருப்பதுபோல, உலோபிகள், பிறர்க்கிடாமலும் தாமும் உண்ணாமலும் உலகத்தாருடைய கண்களைக் கட்டித் தேடின செல்வம், ஏறுங்கடைசியில், தமக்கும் இன்றித் தம்மவர்க்கும் இல்லாமல், பிறர் வசப்படுகின்றது. பருத்த சரீரியாகி, அதனால் நகர்ந்தோட முடியாமல், இருந்த இடத்திலேயே அசைவற்றிருக்கும் * மாசுணம், தானிருந்த இடத்திலேயே அசனம் வரப்பெற்று அதனை உண்டு பிழைக்கின்றது.

'உண்ணா னொளிநிறாஅன் ஓங்குபுகழ் செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் ஆஅ
இழந்தானென் றெண்ணப் படும்'

'செந்தேன் தினம்வருந்திச் சேர்த்துண்ணாத் தேனீக்கள்
அந்தோ விழக்குமது வத்தனையும்—சந்ததமும்
ஈத்துவக்கு மின்ப மறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்'

இவ்விரண்டு செய்யுட்களும் இப்பெற்றி நோக்கியே கூறப்பட்டனவாம் என்க.

இங்ஙனம் இருக்க, நீகொடுக்கும் பணத்தைக்கொள்வதனால் எனது கர்மந் தொலையுமென் றெண்ணினையா? பணக்காரர்கள், நோயாளிகளாய்ச் சோறிறக்க மின்றி வருந்துவதையும், வறுமையின் முதிர்ந்தவர்கள், பிறருடைய வள்ளன்மையால் பக்ஷ்யபரமான்ன பலஹாரங்களுடன் புசித்து வாழ்வதையும் பார்த்தறியோமா? என்னைக் காக்கக் கங்கணங் கட்டிக்கொண்டிருப்பவனாகிய ஸ்ரீ வாஸுதேவற்கு, வறுமை வந்தபொழுது, நான் நினது பணத்தைக் குணம் என்றெண்ணிப் பெற்றுக்கொள்வேன்; அந்ததேவதேவன் அசக்தனாம்பொழுது, நான் நினது காப்புக்கு உட்படுவேன். இன்னும் ஒரு விசேஷம் சொல்லுகிறேன்; கேள். "அருந் தவசி ஒருவர், பரமஸாதுவாய், தவஞ்செய்துகொண்டிருக்கையில், அவர் தவத்தைத் தடைசெய்ய எண்ணி; இந்திரன் ஒரு மனித வுருவந்தாங்கி வழிப்போக்கனென வந்து, அத் தவ முதல்வனை நோக்கி, 'ஓ, முனிவ! நான், ஒரு கார்யதுரந்தரனாய், ஓரிடத்திற்குப் போய்வருவேன், அதுவரையில் இக் † கட்கத்தை நினது ஸந்நிதியில் வைத்து, மறுபடியும் எடுத்துக்கொள்வேன்' எனப்புகன்று, அவர் அநுமதியைப்பெற்று, தனது கட்கத்தை அங்கே வைத்துவிட்டுப் போயினன்.

* மாசுணம் - மலைப்பாம்பு. † கட்கம் - வாள்.

அந்த தவசி, அவ் வாயுதத்தை, வைத்தவிடத்தில் விட்டிருந்தால் அதற்கென்ன கெடுதி யுண்டாகுமோ என்றெண்ணி, அநவரதமும் தமது கரத்தில் வைத்துத் திரிந்துகொண்டிருந்தனர். இங்ஙனம் இருக்க, அவர், தவச் சிந்தையைவிட்டு, அவ்வாயுத ஸஹவாஸ விசேஷத்தால் அவச்சிந்தைபெற்று இரக்கமற்று, உயிர்க்கொலைசெய்து காலங்கழித்து நரகம் புக்கனர்" என்று ஸீதை, ராமற்குக் கூறியபடி, ஸ்ரீராமாயணத்தில் வரையப்பட்டிருக்கின்றது. இந்தப் பணத்தை நான் ஏற்றுக் கொண்டேனானால், எனது என்னும் மமகாரம், "இதோ, நான் இருக்கிறேன்" என்று தலைகாட்டிக்கொண்டு முதலில் வந்து நிற்கும்; வீடு நிலைத்திருப்பதற்குக் கடைக்கால் ஆதாரமாய் இருப்பதுபோல, எனது என்னும் மமகாரம் நிலைத்திருப்பதற்கு நான் என்னும் அகங்காரம் ஆதாரமாய் இருக்கின்றது. நான் என்னும் பாவனை உண்டான பிறகே யன்றோ எனது என்னும் பாவனை உண்டாவது இயல்பு? இவ் வகங்கார மமகாரங்களென்னும் சண்டாளர்களுடைய ஸஹவாஸத்தால், எனது இதயாலயம் புலையர் வாழ் இடமாய், பகவான் ஸாந்நித்யஞ் செய்வதற்குத் தகாத தாய்விடும். நான் எங்கு வாழ்ந்தாலும் எனது மனதுமட்டும் வீட்டில் வைத்துள்ள பணத்தினிடத்திலேயே பொருந்தியிருக்கும். இந்தப் பணம் சப்தாதி விஷயங்களுக்கு தாரகமாய், நரகத்தை வளர்க்கும் விஷயவிடாயினற்கு க்ருத்யா க்ருத்ய விவேகம் குறைவாய், சாஸ்த்ர நிர்ணயம் தப்பிப்போகும்; பகவதாஜ்ஞையாகிய சாஸ்த்ரத்தை அவமதிக்கிறதனால், நரகம் ஸித்திக்கும். 'இந்தப் பணத்தை ஸத்விஷயத்தில் விநியோகித்தால் இப்படிப்பட்ட அநர்த்தம் என் உண்டாகும்' என்பையோ! சேற்றை மிதிப்பானேன்; தண்ணீர் விட்டு அலம்புவானேன்? அநர்த்தந் தருவதாகிய அர்த்தத்தைத் தேடிச் சேர்த்து ஒருவன் ஜாக்ரதையுடையவனாய், துர்மார்க்கத்தின் விலகி, ஸத்பாத்ரத்திற் பணத்தை விநியோகிக்கலாம் என்றெண்ணுவதும் பிசகாய் முடியும்; பெருமதிவாணரும், பேசா மௌனிகளாய், ஸர்வாநர்த்த ஆதாரமாகிய அர்த்தத்தை நெடுந்தூரத்தில் நீக்கிவிட்டு, வைராக்யத்தையே பெருஞ்செல்வமாக எண்ணிவாழ்வார்கள். நினது பணத்தை நீயே எடுத்துக்கொண்டு செல்க; இதுவே, எனக்கு நீ செய்யும் பேருபகாரம்; என்னைக் களிக்கச்செய்யவேண்டுமென்று உனக்கு எண்ணமிருப்பின், இப் பணத்தை, தீனர்களுக்கு வழங்கிவிட்டு, என்னோடு கூடி பகவானை பஜிக்கக்கடவை. நீ அந்த தேவதேவனைத் துதிப்பையேல், அத் துதி, எனது செவித்துளை மதகுகளில் நுழைந்து எனது மனமென்னும் தடாகத்தைப் பரிபூர்ணானந்த வெள்ளத்தால் நிரம்பச் செய்யும். இவ் விஷயத்தைக் கொடுத்து, அதனால் என்னை மயக்கி நரகக்குழியில் வீழ்த்தற்க" எனப்புகன்று அப் பணத்தை உபேக்ஷித்து, பகவானை பஜித்துக்கொண்டிருந்தனர். அன்று, * ஹரிவாஸரம் ஆதலால், சிவாஜிமன்னவன், துக்காராம் ஸ்வாமி செய்த ஹரி கீர்த்தனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தனன்; இங்ஙனம் கேட்டு

* ஹரிவாஸரம் - ஏகாதசி.



மன நிறைவுறாமல், தேசபரிபாலன க்ருத்யத்தை மறந்து, இரண்டுமாஸ காலம் இவரிடத்திலேயே இருந்துவிட்டான். இந்தச் சிவாஜிமன்னவற்கு விரோதியாகிய ஔரங்கிபாச்சா, இவனைப் பிடிக்கவேண்டுமென்று காத்துக்கொண்டிருந்தபடியால், தனது ஒற்றர்களால் சிவாஜிமன்னவனுடைய விருத்தாந்தத்தை உணர்ந்து, இவனைப் பிடித்துக்கொண்டு வருகவென இரண்டாயிரம் குதிரைவீரர்களை அனுப்பினன். அவர்கள் வந்து, துக்காராம் ஸ்வாமியின் வீட்டைச் சூழ்ந்துகொண்டனர். அவர்களில் நால்வர், உள்ளே நுழைந்து, 'சிவாஜிமன்னவன் எங்கே?' எனக் கேட்டனர். அப்போது சிவாஜிமன்னவன், ஒன்றுஞ் செய்யமுடியாமல் விசன மிக்கவனா யிருந்தனன். அங்கிருந்த ஸாதுக்களால், துக்காராம் ஸ்வாமி, நடந்த விருத்தாந்தங்களை உணர்ந்து, "நீவிர் யாவரும் அஞ்சாமல், பகவானைத் துதித்துக்கொண்டு, பகவத் கீர்த்தனங்களைக்கேண்மின்கள்; ஸ்ரீ பண்டரிநாதன் நமக்குக் காவலனாயிருக்க, எங்ஙனம் தீங்கு நேரிடும்? 'ஒருவேளை இந்தத் துருக்கர்கள், நம்மைக் கொன்று போடுவார்களோ என்னமோ!' எனச் சோகமுறற்க. அவர்கள் அங்ஙனஞ் செய்தால், நாம் இந்தக் கர்மசரீரங்களாகிய சிறைச்சாலையிலிருந்து நீங்கி, ப்ரஹ்மானந்த ஸுகத்தை அநுபவிக்கலாம்; எத்தனை நாட்கள் பிழைத்திருந்தாலும், நாம் ஒரு நாளையில் இறப்பது நிச்சயம்; ஆகையால் அத்தகைய சாவுக்கு அஞ்சி, நீங்கள் ஏன் வருந்துகின்றீர்கள்? இத் துருக்கர்கள் இன்றைக்கே நமது சரீரங்களை யெல்லாம் ஒருங்கேவெட்டினாலும், நமது பாக்யத்துக்கு முடிவில்லை" எனப் புகன்றனர். அங்கிருந்த ஸாதுக்கள், "சிவாஜிமன்னன் இங்கு இலன்" என்று சேனாவீரர்களுக்குச் சொன்னார்கள். அவர்கள் அதனை நம்பாமல் உருவின கத்தியுடன், துக்காராம் ஸ்வாமியின் வீட்டுக்குள் நுழைந்தார்கள். துக்காராம் ஸ்வாமி, பண்டரிநாதனை த்யானித்து, "தேவாதி தேவா! நினது கீர்த்தனானந்தத்திற்கு விரோதமாக, இது வென்ன திருவிளையாட்டென்று நீ செய்து மகிழ்கின்றனை?" என விண்ணப்பித்தனர். ஸ்ரீமத் பாண்டுரங்கமூர்த்தி, "நீவிர் எப்போதும்போல ஸங்கீர்த்தநானந்தத்தை அநுபவித்துக்கொண்டிருங்கள். மற்றக் காரியங்களை நான் நிர்வஹிக்கின்றேன்" என்று துக்காராம் ஸ்வாமியிடத்திற் கூறி, தான் சிவாஜிமன்னனைப்போல் வேடந்தாங்கி வெளியே வந்து ஒரு குதிரைமீதேறி, கையில் ஈட்டியைப்பிடித்துக்கொண்டு ரணரங்க சூரனைப்போற் போய்க்கொண்டிருந்தனன். துக்காராம் ஸ்வாமியைச் சூழவிருந்த ஸாதுக்களுக்கும், சிவாஜி மன்னவற்கும் வெளியே நடந்த விருத்தாந்தம் தெரியாமல் இருந்தது; வீட்டை முற்றுகைபோட்டுக் கொண்டிருந்த இரண்டாயிரம் குதிரைச்சேனாவீரர்களும், "இவனே சிவாஜிமன்னன்; நாம் சுலுவிற் பிடித்துக்கொள்ளலாம்; நம்மைக் கண்டு பயந்து ஓடுகின்றனன்" எனத் தீர்மானித்து, அவனைப் பின்பற்றிப் பெருங்கூச்சலிட்டுக்கொண்டு ஓடினார்கள். மன்னன் வேஷம் பூண்ட பகவான் கொஞ்சதூரம் வேகமாய்ச்சென்றும், கொஞ்சதூரம் மையச்சென்றும், ஒவ்வோரிடத்தில் தான், அவர்களுக்கு அஞ்சினான்

போல்நின்றும், இவ்வாறு அவர்களை அலைக்கழித்து, வன நடுவிற்சேர்த்து மறைந்தனன். இங்ஙனம் இருக்க, வந்த குதிரைவீரர்கள், "இஃதென்ன ஜகஜ்ஜாலமாயிருக்கின்றது! இத்தனை தூரம் துரத்திக்கொண்டு வந்தும், சிவாஜிராஜன் நம் வசப்படானாயினான். நமது ப்ரயாஸம் அத்தனையும் வீணாயின" என மனமிடிழுகித் திரும்பி வருவாராயினர். அன்றிரவு மூன்றாம் ஜாமத்தில், சந்த்ரன் மறைந்து காரிருள் மைக்குழம்பேபோல் மூடிக்கொண்டிருந்தபடியால் வழிதெரியாமலும், அதனால் குதிரைகள் நடவாமலும், சேனாவீரர்கள் சித்தங்கலங்கித் திகைத்து நிற்கையில், குதிரைகள் வனத்திற் பழுமரங்களைக் கண்டு வெருண்டு, தம்மேலிருக்கும் குதிரை வீரர்களைக் குழிகளில் வீழ்த்தித் தமதிஷ்டம்போல் ஓடிப்போய்விட்டன. வீரர்களிற் சிலர் மரமென்றும், மண்ணென்றும், செடியென்றும், கொடியென்றும், வழியென்றும், குழியென்றும் வேறுபாடு தெரியாமல், மயங்கி முட்புதர்களில் வீழ்ந்தார்கள்; சிலர், குரங்குகளுக் கிடையில் அகப்பட்டு மாண்டார்கள்; உணவில்லாதபடியால் சிலர் நடக்கமாட்டாமல் திகைத்தார்கள்; தூக்கத்தில் மயங்கி அதனால் சிலர் வழிதப்பி உன்மத்தர்களைப்போலத் திரிந்துகொண்டிருந்தார்கள். இங்ஙனம் அந்தக் குதிரைப் படைவீரர் அனைவரும், ஒருவர் போனவழி யொருவர் போகாமல் அவ்வனத்திலேயே மாண்டனர். பண்டரிநாதன், துக்காராம் ஸ்வாமியிடத்திற்கு வந்து, "உங்களுக்கு நேரிட்ட துன்பத்தை, தூரத்திற் றுரத்திவிட்டனன். நீங்கள் பகவத்கீர்த்தனங்கள் செய்துகொண்டு ஆனந்திக்கக் கடவீர்கள்" எனக்கூறி மறைந்தனன். அப்போது அனைவரும், "ஜய ஜய" முழக்கம் செய்தனர். ஸூர்யோதயம் ஆனவுடனே. பஜனையை நிறுத்தி, ஒருவரையொருவர் ஆலிங்கனஞ் செய்துகொண்டு, ஸாதுக்களனைவரும் ஸந்தோஷசித்தர் ஆனார்கள். அவ்வூரார், சிவாஜிராஜனைக்கண்டு, "இவர் எங்ஙனம், துருக்கர் கரங்களுக்கு அகப்படாமல் தப்பினர்!" என்று ஆச்சரியமடைந்து, "துக்காராம் ஸ்வாமிக்காக ஸ்ரீ பாண்டுரங்கநாதன் நம்மைக் காப்பாற்றினான்" என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு தத்தம் வீடு போய்ச் சேர்ந்தார்கள்.

முதலில், சிவாஜிமன்னன் கொடுக்கவந்த பணத்தை, துக்காராம் ஸ்வாமி ஏற்றுக்கொள்ளாதபடியால், வேறொருநாள் கொஞ்சம் தானியத்தையாகிலும், அவர்க்கு விநியோகிக்கவேண்டும் என்றெண்ணினவனாய், ஒரு வறிய வர்த்தகவேடந்தரித்து, ஓர் எருதின்மேல் அரிசி மூட்டையை ஏற்றிக்கொண்டு, துக்காராம் ஸ்வாமியின் வீட்டுக்குவந்து, அம்மஹானுக்கு வந்தனம் செய்து, "ஓ, பாகவத முதல்வ! நான், அரிசி வியாபாரம் செய்து கொண்டிருப்பவன்; இதுவரையில், நான் செய்து வந்த வியாபாரத்தில் இந்த அரிசி, கடவுளருளால் எனக்குப் பலனாகக் கிடைத்தது. ஆகையால், என்மேற் கிருபை செய்து இதனைத் தாங்கள் ஏற்றுக்கொண்டு, என்னை தன்யனாக்க வேண்டுமென்று பலவிதங்களில் வேண்டிக்கொண்டனன். ஸர்வஜ்ஞராகிய துக்காராம் ஸ்வாமி, உண்மையை உணர்ந்து, அரசன் வேண்டுகோளை அநாதரவு செய்யக் கூடா



மையால் மௌனமாயிருந்தனர். அரசன், அம்மஹானுடைய நியமனத்தை யடைந்து, தனதிருப்பிடம் சென்றனன். துக்காராம் ஸ்வாமி தமது மனைவியை யழைத்து, "நேற்றிரவு சிவாஜி ராஜன்வந்து, ஒரு மூட்டை அரிசி கொடுத்துச் சென்றனன். அதனில் நமக்கொருநாளைய உணவுக்கு மாத்திரம் வேண்டிய அளவு அரிசி எடுத்துக்கொண்டு, மிகுந்த அரிசியை, தீன ஜனங்களுக்குக் கொடுத்துவிடு" என்று நியமித்தனர். அவ்வம்மையார்க்கு அந்த விஷயம் சம்மதியில்லாதபடியால், தாம் அரிசி முழுவதனையும் எடுத்துக்கொள்ள முயன்றனர். துக்காராம் ஸ்வாமி தமது மனைவியின் எண்ணமுணர்ந்து, எழுந்து வந்து, தமது வீட்டுக்கு ஒருநாளைக்கு வேண்டிய அளவு அரிசியை அள்ளி, அந்த அம்மையார் கரத்திலிட்டு, மிகுந்த அரிசியை தீன ஜனங்களுக்கு அளித்தனர். அப்போது, ராஜ படர்கள் அதனைப் பார்த்துக் கொண்டிருந்து, அரசர்க் கறிவித்தனர். அரசன், துக்காராம் ஸ்வாமியின் வைராக்யத்துக்கு, மிகவும் ஆச்சரிய மடைந்தனன்.

வேறொரு தினத்தில், துக்காராம் ஸ்வாமி, பகவத் ஸந்நிதிக்குச் சென்று, ஆனந்த பரவசராய், பஜனை பண்ணிக்கொண்டிருந்தனர். அவ்வூரில் வளையல் வியாபாரம் பண்ணிக்கொண்டிருப்பவன் ஒருவன், பக்தியுடன், நாடோறும் துக்காராம் ஸ்வாமி பஜனை பண்ணிக்கொண்டிருக்கிற இடத்துக்கு வந்து, நாமஸங்கீர்த்தனம் கேட்டு மகிழ்வானாயினன். இங்ஙனம் அவன், கேட்டுவருகையில், ஒருநாள், தனது குழந்தை மாந்தத்தால், மிகவும் வேதனையுற்றிருந்தது. அவன் அதனையும் எண்ணாமல், எப்போதும்போல, பகவந்நாம ஸங்கீர்த்தன ஸ்ரவண ஆஸக்தியால், தனது வீடுவிட்டுப் புறப்பட்டனன். அப்போது, அவன் மனைவி, தனது கணவற்கு குறுக்கிட்டு, "நமது குழந்தை மாந்த நோயால் வருந்துகையில், இதனை எண்ணாமல் நீர் பஜனைக்குச் செல்லுதல் ஞாயமன்று. அங்குள்ள ஸாதுக்களுக்குள் யாரையாவது நமக்கு உதவியாக அழைத்துக்கொண்டுவந்து, சிசுவுக்கு ஆரோக்ய முண்டாகத் தகுந்த முயற்சியைச்செய்க" என்று வேண்டிக்கொண்டனள். அவன் அம்மொழிகளைக் காதுகளிற் போட்டுக்கொள்ளாமல், துக்காராம் ஸ்வாமி பஜனை செய்யும் இடத்திற்கு வந்தனன்; உடனே, அந்த சிசுவும் மரித்தது. அப்போது அச் சிசுவின் தாய், துக்க மிக்கவளாய், அந்த பிணச் சிசுவைத் தோளிற் சுமந்துகொண்டு, பகவத் கீர்த்தனை நடந்துகொண்டிருக்கும் இடத்திற்கு வந்து, துக்காராம் ஸ்வாமியை நோக்கி, "ஓ ஐய, பாகவதரே! நீர், எமது குடும்பத்தை நாசம் செய்துகொண்டிருக்கின்றீர்! எனது கணவர்க்கு என்னென்னமோ போதித்து, அவர் மனதைப் பேதித்து விட்டீர்! அதனால் அவர் உமது வலையிற் சிக்கி இப்படிப்பட்ட ஆபத் தசையிலும் இறையளவும் இரக்கம் இன்றி, இச் சிசுவை உபேக்ஷித்து உம்மிடத்திற்கு வந்தனர்; எனது கணவர் என் வீட்டிலிருந்திருப்பின், இச் சிசுவிற்கு மரணம் நேரிட்டிராது" எனப்புகன்று, அச் சிசுப் பிணத்தை, துக்காராம் ஸ்வாமிக்கெதிரில் கிடத்தி அழுது

கொண்டிருந்தனள். கீர்த்தனத்தைக் கேட்டுக்கொண்டிருந்த ஜனங்கள் "ஏ, பிச்சி! சவத்தை ஏன் இங்குக் கொணர்ந்தனை? இக் குழந்தையை உயிர்ப்பிக்க துக்காராம் ஸ்வாமியிடத்தில் அமிர்தமிருக்கின்றதா?" எனக் கேட்க, அவர், அவர்களை நோக்கி, "ஓ பாகவதர்கள்! ஸ்ரீஹரி நாமாமிர்தத்தைவிட, மனதுக்குகந்த அமிர்தம் வேறொன்றுளதா? இதனது பெருமையை உணராமல், நீர் உமது மனம்போனபடி பேசுகின்றீர்கள்: நீவிர், யாவரும் ஒரேகாலத்தில், ஸ்ரீவிட்டல நாதனுடைய திருநாமத்தை ஒரு க்ஷணநேரம் *நொடியுங்கள்" என்றனர். அவர்கள் அங்ஙனமே, ஸந்தோஷித்து, அனைவரும் ஒரே காலத்தில் ஸமுத்ர கோஷம்போல பகவந்நாமங்களை உச்சரித்துப் பாடினார்கள். அப்போது அச்சிசுவிற்கு உயிர்வந்து,எழுந்து குந்திற்று. அவ் வற்புதத்தைக் கண்டு, எல்லாரும் ஆனந்தப்ரவச மடைந்தார்கள். குழந்தையின் தாய், அதனை எடுத்துக்கொண்டுவந்து, துக்காராம் ஸ்வாமியின் பாதகமலங்களிற் கிடத்தி, "மஹாத்மா! நினது மஹிமையை உணராத நான், என் மனம் போனவாறு பேசிவிட்டேன்! என்னை மன்னித்தருளவேண்டும்" என வேண்டி, அபராத மன்னிப்புக் கேட்டுக்கொண்டாள். அங்கிருந்தார் அனைவரும் "இம்மஹாநுபாவருடைய ப்ரபாவத்தை ஸர்வஜ்ஞனாகிய ஸ்ரீபாண்டுரங்கனே உணர்வானன்றி, அஜ்ஞானிகளாகிய நாம் உணர வல்லவர்கள் அல்லேம்" எனக் கூறினார்கள். தேவர்கள் மலர்மாரி பொழிந்தார்கள். கந்தர்வர்கள் கானம் செய்தார்கள். இவ் வற்புதத்தைக் கண்டார் அனைவரும் பரமானந்த மடைந்தார்கள்.

பாலப்ராணப்ரதாகாய நம:

ஐம்பத்தெட்டாம் அத்தியாயம்

# துக்காராம் ஸ்வாமியின் மனைவியார் தமது ஆஸ்தி முழுவதையும் தானம் செய்த சரித்திரம்

துக்காராம் ஸ்வாமி, பரமவைராக்ய நிதியாய், ஸம்ஸாரத்தை விட்டு வனத்திலும், ஸ்ரீபாண்டுரங்கன் ஸந்நிதானத்திலும் வாழ்ந்து, ப்ரஹ்மநிஷ்டராய், ப்ரஹ்மாநந்தத்தை அநுபவித்துக்கொண்டு, இடையறாமல் பகவானைப் புகழ்ந்து விளங்கியிருந்தமையால், அவருடைய மனைவியார் விசனமுற்றவராய், ஒரு நாள் ஜலந்திரட்டச் செல்கையில், ஸ்ரீபாண்டுரங்கன் ஸந்நிதிக்கு எதிர்முகமாய் வந்துகொண்டிருந்த தமது உயிர்க்காதலரைக் கண்ணுற்று, அவர்க்குக் குறுக்கேவந்து, "ஆஹா! எனதுயிர்க்காதல! நீர், ஏறக்குறைய இரண்டுமாதகாலமாய் என்னை

* நொடித்தல் - சொல்லுதல்.



விட்டுப்பிரிந்து, வனத்தில் வாழ்ந்திருந்தால், நான் எங்ஙனம் உயிர் வாழ்வேன்! என்னைக் காக்கவல்லார் யாவர்! உமக்கு இறையளவும் என்மேல் ஞாபகம் இன்றி, இரவும் பகலும் நிருத்த கீர்த்தனங்களால் ஸ்ரீபுருஷோத்தமனைக் களிக்கச்செய்கின்றீர்! நீர் இங்ஙனம் இருப்பின், உமது குடும்பத்தைக் காப்பாற்றுவார் யாவர்?" என வருந்தி நிற்கையில், அவர் அவ் வம்மையாரைப் பலவிதங்களிற் றேற்றி, "எனது தாய்தந்தையர் உன்னைக் காப்பாற்றுவார்கள்" என்றனர். அக் கற்புக் கரசியார் "ஓ, நாதா! பரலோகத்தில் வாழ்கின்ற உமது தாய்தந்தையர் என்னை எங்ஙனம் காப்பாற்றுவார்கள்?" என்று கேட்டனர். அதற்குத் துக்காராம் ஸ்வாமி, "ஓ, பெண்ணினல்லாய்! எனது தாய்தந்தையர், ஜனன மரணங்கள் அற்றவர்கள். பரலோகத்தில் வாழ்கின்றவர்கள் எனது சரீரத்திற்குத் தாய்தந்தையர்களே அன்றி, ஞானானந்த ஸ்வரூபியாய், ஞான குணவானாய், ஈஸ்வரற்குச் சேஷபூதனாய் உள்ள எனக்குத் தாய்தந்தையர் அல்லர். நான் உன்னால் பார்க்கப்படுகிற சரீரம் அல்லன். அச் சரீரவீட்டுக்குள் வாழும் ஜீவாத்மனாய் இருக்கின்றேன்.

'சரீரம் இறக்கும் சரீரத்துள் வாழும்
*சரீரி இறவாது தான்' என்றபடி.

இந்தச் சரீரம் இறப்பது நிச்சயம்; சரீரத்துக்குள்ளே மறைந்து வாழும் ஜீவாத்மாவாகிய நான், என்றும் இறவாத நித்யனாயிருக்கின்றனன்.

'ஜீவாத் மாவெனத் திகழுநான் என்றும்
பிறப்பவ னல்லன், இறப்பவ னல்லன்
அழியா திருப்பவன் அநாதியா யுள்ளவன்
இந்தச் சரீரம் இதற்கும்
எனக்கெப் போதும் இறப்பில்லை யாமே' என்றபடி,

ஜீவாத்மாவென விளங்கும் நான், என்றும் பிறப்பவனும் அல்லன், இறப்பவனும் அல்லன்; அழிபவனும் அல்லன், அநாதியாயுள்ளவன்; இந்தச் சரீரம் இறக்குமேயன்றி, எனக்கெப்போதும் இறப்பே கிடையாது; இப்பேர்ப்பட்ட எனக்குக் கர்மாநுகுணமாய் நேரிட்ட பிறப்புகளுக்குக் கணக்கில்லை; அப் பிறப்புகளில் நான் எடுத்த சரீரங்களுக்குத் தாய்தந்தையர் எண்ணிறந்தோர்; அப்படி இந்தச் சரீரத்தைப்பெற்று வளர்த்த தாய் தந்தையர்,பூர்வ ஜன்மங்களிலிருந்த தாய் தந்தையர் கூட்டத்திற் சேர்ந்தவர்களாகவே யிருக்கின்றனர். இனி எனது உண்மையாகிய தாய்தந்தையர் உருவங்களைக் கூறுகின்றேன், கேள்; ஞானம், புகழ், வீரம்,சக்தி,பலம்,ஐஸ்வர்யம் முதலிய ஷட்குணைஸ்வர்யங்களோடு கூடினவனாய், ஸர்வாத்மாக்களுக்கும் ஈஸ்வரனாய், அகிலஜகதஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரகர்த்தாவாய், சேதனர்களைப்போல பரதந்த்ரனாயில்லாமல ஸ்வதந்த்ரனாய்,அகிலாதாரனாய்,தனக்கு வேறோர் ஆதாரமற்றவனாய்,

* சரீரி - சரீரத்துள்வாழ்கிற ஆத்மாவாகிய நான்.

பரமயோகியர்களுடைய வாக்கு மனங்களுக்கு அகோசரனாய், அவ்யக்தனாய், நாமரூப ரஹிதனாய், தன்னுருவை உணர்ந்து உபாஸித்தல் அஸாத்யம் ஆகையால் தன்னை உபாஸிக்கும் உண்மை அன்பர்களுக்காக நாமரூபங்களைத் தாங்குபவனாய், ஸகல சேதனர்களுடைய ஹ்ருதய கமலங்களில் வாழ்பவனாய், கர்ம ஸாக்ஷியாய், கர்ம பலப்ரதானனாய், முக்தி தாயகனாய், அகிலலோகசரண்யனாய் விளங்கும் ஸர்வேஸ்வரன் எனக்குப் பிதாவாயிருக்கின்றனன்; * நித்யாநபாயிநியாய், அகிலாத்மர்க்களுக்கும் †. புருஷகார பூதையாய், காருண்ய வடிவினளாய், ஜகஜ்ஜநநியாய் ஸ்ரீ பத்மநாபனுடைய வக்ஷஸ்தலத்தில் வாழ்ந்து விளங்கும் ‡ இந்திரையே எனது தாயாய் இருக்கின்றனள். எனக்குமாத்திரமே அன்று. இந்த திவ்ய தம்பதிகள், ஸர்வாத்மாக்களுக்கும் ஒப்புயர்வில்லாத் தாய் தந்தையர்களாக இருக்கின்றார்கள். நான் அவர்களை அறிந்து அடுத்து அன்புசெய்திருக்கின்றனன்; நீ, அவர்களை அறியாதிருக்கின்றனை; ஆகையால், நமது தாய் தந்தையரென்று சொல்லாமல், எனது தாய்தந்தையரென்று சொன்னேன்; நீயும் என்னைப்போலவே அவர்களை அறிந்து உபாஸித்தால், உனக்கெதனாலுங் குறைவில்லை" எனப் புகன்றனர். அதைக்கேட்ட அப் பேதை, "எனது அன்புள்ள தலைவ! நீர், என்னுடன் க்ருஹத்தில் வாழ்ந்து, பகவானை த்யானித்துக் கொண்டிருக்கக் கோருகிறேன். நீர் இல்லர்தபடியால், வீடு சூன்யமாயிருக்கின்றது; உமது உபதேசத்தால், ஸ்ரீமத் பாண்டுரங்க நாதனே நமக்குத் தந்தையென்றும், ஸ்ரீ ருக்மிணிதேவியே தாயாரென்றும் தெரிந்துகொண்டேன். இன்றுமுதல் நானும், உம்முடன் பஜனை பண்ணுவேன்" என்று விண்ணப்பிக்க, துக்காராம் ஸ்வாமி ஸந்தோஷித்து, "ஓ, பெண்மணீ! நினது வார்த்தைகள் நன்றாயிருக்கின்றன. நீ என்னுடன் அநவ்ரதமும் ஸ்ரீபாண்டுரங்கனை பஜித்துக்கொண்டு, கர்மாதீனமாகிய தேகயாத்ரைக்காக வருந்தாதிருப்பையாயின், நான் வீட்டுக்கு வந்து உன்னுடன் வாழ்வேன். எனது அபிப்ராயம் அங்கீகாரமானால், நான் உபதேசிக்கும் ஒழுங்கின்படி நீ நடந்துகொள்வது உண்மையென்று சூளுரைத்துத் தருக எனக்கேட்டனர். அதற்கு அந்தப் பெண்மணி மனமகிழ்ந்து, அவர் விரும்பியபடியே சூளுரைத்து, அவரை வீட்டுக் கழைத்துக்கொண்டு வந்து, அவரோடுகூடி ஹரிபஜனம் செய்துகொண்டிருந்தனர்.

ஓர் ஏகாதசி நாளில் துக்காராம் ஸ்வாமி, ஹரிகீர்த்தனம் செய்துகொண்டிருக்கையில், தமது மனைவிக்கு ஒன்பது சுலோகங்கள் உபதேசித்தனர்; அவைகளின் பொருள்கள் என்னவென்றால்: எண்பத்து நான்கு நூறாயிரம் ஜீவராஸிகளுக்குள்ளே, மானிடதேகம் மிகவும் சிறந்ததாயிருக்கின்றது. அதனில் ஹரிஸ்மரணை செய்கிறவர்களுடைய பாக்யமே பாக்யம்! || பாரமார்த்திக சிந்தையற்றவர்கள், குடும்ப

* நித்ய - அநபாயிநி - என்றென்றும் அழிவில்லாதவள்.
† புருஷகார பூதை - மத்யஸ்த்தை. ‡ இந்திரை - லக்ஷ்மி.
|| பாரமார்த்திகம் - தெய்வபக்தி.



பாரத்தை வகித்து, ஜனன மரண வெள்ளத்தில் வீழ்ந்து, யமனுக்கு உட்பட்டவர்களாய் வருந்துவார்கள். ஆகையால், ஞானிகள் மானாபிமானங்களை விட்டு, புறக்கரண வ்யாபாரங்களை ஒழித்து, சுபாசுப வாத்யங்களை ஒரு படித்தாக மதித்து, ஓட்டையும் பொன்னையும் ஒன்றாக எண்ணி, கைப்பையும் தித்திப்பையும் ஸமமாகப் புசித்து, நறுநாற்ற முடைநாற்றங்களை ஒரேவிதமாக மோந்து, சஞ்சல மனதை ஒரேநிலையில் நிறுத்தி, ஆத்மேஸ்வரனாகிய ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவினிடத்தில் அன்பு மிகுந்து விளங்குவார்கள். நானும் அப்படிப்பட்டவனாக இருக்கின்றனன். "ஓ, மங்கையர்க்கரசீ! எனது பிதாவாகிய ஸ்ரீபாண்டுரங்கன், பெருங்கள்ளனாயிருக்கின்றனன்; அக் கள்ளனுக் ககப்படாமல் தப்பித்துக் கொள்வோமென்றால், அவன் இல்லாத இடம் இல்லை; எங்குத் தேடினாலும் அவன் தவிர நமக்கு வேறுகதி இல்லை. அப்பேர்ப்பட்ட திருடற்கு விருப்பமாக ஒரு காரியத்தை நீ செய்தையானால் அஃது எனக்கும் விருப்பமாயிருக்கும். அதனால் நாம், பரம ஸுகத்தைப் பெற்று, இந்த தேக நிரியாண காலத்தில் ப்ரணவ ரதாரூடர்களாய், ஸ்ரீவைகுந்த திவ்யலோகத்தை யடைந்து, வாஸுதேவ மூர்த்தியினுடைய ஸாமீப்ய பதவியில் இருந்து, ஈஸ்வரானந்தத்திற் கொப்பான நித்யானந்தத்தை நுகர்வோம்; ஜநந மரணத் துயரங்க ளகன்று, ஸநகாதியர்களைப் போல ஆனந்தமடைவோம். அதற்கு உபாய மெதுவென்றால், சொல்கிறேன் கேள்: நமது வீட்டிலுள்ள மமகாராஸ்பதமாகிய ஸர்வ பதார்த்தங்களையும் தீன ஜனங்களுக்கு வழங்கிவிட்டு, 'ஸம்ஸாரத்தை எங்ஙனம் நிர்வஹிப்போம்' என்னும் சிந்தையை விட்டு, 'ஸர்வத்தையும் ஸ்ரீமத் பாண்டுரங்கனே நிர்வஹிக்கின்றனன்' என்று தீர்மானித்து, அந்தச் சோரனுடைய சோதனைக்குக் கொஞ்சமேனும் சலிக்காமல் உறுதியாய் நின்று, குழந்தைகளுக்காக வருந்தாமல், 'இவர்கள் நமது குழந்தைகள் அல்லர்' என்றெண்ணி, கந்த மூலாதிகளால் பசியையும், ஆற்றுத் தண்ணீரால் தாகத்தையும், தீர்த்துக்கொண்டு, குப்பையிற் கிடக்கும் கந்தையைக்கட்டி மகிழ்ந்திருப்போமாயின், அப்பொழுது, பகவானுக்கு நம்மிடத்தில் ஸந்தோஷமுண்டாகும். நாம் இருவரும், யோகீஸ்வரர்களுக்கும் கிடைத்தற் கரிய பதவியிலிருந்து ஸுகம் பெறலாம். ஆகையால், "நீ மனவுறுதியோடு, நமது ஆஸ்தி முழுவதையும் தீனர்களுக்குச் சூறை கொடுத்து, ஸ்ரீபாண்டுரங்க த்யானம் பண்ணிக்கொண்டிருக்கக் கடவை" என்பதேயாம். இவ் வுபதேசத்தைக் கேட்டவுடனே, அவ்வரிவையர்க்கரசியார், கணவர் நியமனுஸாரமாய்த் தனது வீட்டிலிருந்த * ஸர்வஸ்வத்தையும் தீன ஜனங்களுக்குச் சூறை கொடுத்து, அன்று முழுவதும் ஸந்தோஷ சித்த முடையவராய் விளங்கியிருந்தனர். ஒரு புடைவை மாத்திரமே எஞ்சி நின்றது; மறுநாள் த்வாதசி † பாரணைக்கு, வீட்டில் ஒரு பொருளும் இல்லாமையால், அந்த மாதரசியார், "நான் என்செய்

* ஸர்வஸ்வத்தையும் - ஆஸ்தி முழுவதும்.
† பாரணை - விரதத்திற் பசித்திருந்து, அது முடிந்தபின் புசித்தல்.

வேன்!" என்று சிந்தை நொந்திருக்கையில், ஸ்ரீ ருக்மிணீதேவி, ஒரு புலைச்சியென வேடந்தாங்கி, துக்காராம் ஸ்வாமியினிடத்திற்கு வந்து, "ஓ மஹாத்மா! நினது வீட்டிலிருந்த ஸர்வஸ்வத்தையும் தீன ஜனங்களுக்கு நிரம்பக் கொடுத்தனை; ஆகையால், எனக் கெதுவேனும் ஒரு பொருளைத் தருக" என்று கேட்க, துக்காராம் ஸ்வாமி, வீடுமுழுமையும் சோதித்து, ஒன்றையுங்காணாமல், புழைக்கடைத் தோட்டத்தில் ஆறவிட்டிருந்த புடைவையை யவிழ்த்து, அந்த நீச ஸ்த்ரீக்குக் கொடுத்தார். அதனைக் கண்டார் யாவரும், "துக்காராம் ஸ்வாமி, ஸம்ஸாரத்தை ஸமூலமாய்ச் சேதித்தனர்" எனப் புகன்று, ஆச்சரியப்பட்டார்கள்.

அவர்களை நோக்கி, துக்காராம் ஸ்வாமியின் மனைவியார், "ஓ, எனது ஸோதரர்காள்! கேண்மின்கள்: "எனது கணவர், வீடுவிட்டு இரண்டு மாதங்களாக வனத்தில் வாஸம் பண்ணிக்கொண்டிருந்தனர். நான், வீட்டிற் குழந்தைகளை வைத்துக்கொண்டு வருந்தி, இவரைத் தேடி வாடினேன்; இவர், நேற்றைக்கு முந்திய நாள், தேவாலயத்துக்கு வந்துகொண்டிருந்தபோது, நான் இவரைக் கண்டு நல்ல பேச்சுகள் பேசி, "நானும், தங்களுடன் ஹரி கீர்த்தனம் செய்கின்றேன்" என்று ஸமாதானங்கூறி, "தாங்கள் வீட்டிலிருந்தாற் போதும்" என வேண்டி அழைத்துக்கொண்டு வந்தேன். நேற்று, ஏகாதசி யாகையால் உபவாஸமிருந்து, ஹரிகீர்த்தனம் பண்ணி, இவர் என்னை அழைத்து, எனக்குப்பலவித இதோபதேசங்கள் செய்தனர்; உடனே, எனக்கு வைராக்யம் உண்டாகி, இவர் வார்த்தைகளை நம்பி, வீட்டிலிருந்த ஆஸ்தி முழுவதையும் தீனர்களுக்கு வழங்கிவிட்டு, "ஸ்ரீபாண்டுரங்கனை த்யானித்துக் கொண்டிருந்தேன். எனக்கொரு புடைவைமாத்திரமே மிகுந்திருந்தது. அதனையும் எனது கணவர், இன்றுதயத்தில் ஒரு புலைச்சிக்கு கொடுத்துவிட்டு தேவாலயத்துக்குப் போய்விட்டனர். இங்கு, பசியால் பரிதபிக்கும் குழந்தைகளைக் கண்டு நான் எங்ஙனம் சகிப்பேன்; என்ன செய்வேன்! எனது கதி இங்ஙனம் ஆயிற்று! இரண்டு மூன்று முறைகளில் த்யானித்தவுடனே, எல்லாவற்றையும் துறக்கும்படியான உறுதியை எனக்குண்டாக்கின ஸ்ரீபாண்டுரங்கனுடைய பாதகமல யுகளம் மிகவும் வஞ்சகமுற்று விளங்குகின்றன. யோகியர்கள், மஹாத்மாக்கள், தேவர்கள் முதலிய யாவர்களும், அவனுடைய பதுமமலர்ச் சேவடிகளைக் கண்ட மாத்திரையில், மெய் மறந்து உருகுகின்றார்கள். எனது கணவர், * அஹோராத்ரம் தம்மை மறந்து உருகியிருக்கின்றார். நான் இரண்டே முறைகள் நினைத்தமாத்திரையில், என் மதிமயங்கித் தியங்கி ஏமாந்துவிட்டேன்; ஒரு குண்டுக் கல்லால் இப்படிபட்ட பாதங்களை நசுக்கிப் போட்டுவிட்டாலும், எல்லாரும் ஸுகம் பெறுவார்கள்! ஸாது ஜனங்கள், தமது பெண்டு பிள்ளைகளைத் துறக்க எண்ணிக் கூச்சம் விட்டு, உன்மத்தர்களைப்போல வெளியிற் றிரிந்துகொண்டிரார்கள்" எனக்கூறி, ஒரு பெரிய குண்டுக்கல்லை எடுத்துக்கொண்டு, தேவாலயத்தில் நுழைந்தனர். மச்ச ரூபியாய் ப்ரளயோததியில் ஸஞ்சரித்த

* அஹோராத்ரம் - இரவும் பகலும்.



பொழுதும், கூர்ம ரூபியாய் மந்தரகிரியைத் தாங்கின பொழுதும், வராக ரூபியாய் ப்ரளய ஸமுத்ரத்தில் மூழ்கிக்கிடந்த பூமியைக் கிளப்பினபொழுதும், நரஸிம்ஹ ரூபியாய் ஹிரண்யகசிபனோடு போராடின பொழுதும், வாமந ரூபியாய் பலிச் சக்ரவர்த்தியை யாசிக்கச் சென்ற பொழுதும், பரசுராம மூர்த்தியாய் பிதாவைக் கொன்றவர்களாகிய க்ஷத்ரியர்களை எதிர்த்த பொழுதும், ஸ்ரீராம ரூபியாய் ராவணனோடு பொருத பொழுதும், பலராமரூபியாய் ப்ரலம்பனால் ஆகாசவீதியிற் கொண்டுபோகப்பட்ட பொழுதும், ஸ்ரீகிருஷ்ண ரூபியாய் காளியனாற் கட்டப்பட்டபொழுதும் கலங்காமலிருந்த கம்பீர ஸ்வபாவமுள்ள பகவான், பெரிய *பாஷாணத்தைத் தனது இரண்டு கரங்களினும் தாங்கிக்கொண்டு, 'விட்டலாதீசனுடைய திருவடிகளை நசுக்கவேண்டும்' என்னும் எண்ணத்துடன் வந்துகொண்டிருந்த அப் பெண்ணரசியைக் கண்ணுற்ற மாத்திரத்திற் கலங்கி, நடுநடுங்கி அஞ்சவாரம்பினன். அதனைக்கண்ட ருக்மிணீதேவி, "ஓ, ப்ராணநாதா! நினது சரீரநடுக்கத்துக்குக் காரணம் என்ன? துக்காராம் மனைவிக்கு அஞ்சினையாயின், ஆலயத்தை விட்டு கொஞ்சநேரம் வெளியிற் றிரிந்து திரும்பி வருக எனக் கூற, ருக்மிணீ காந்தன், "ஓ, தத்தைமொழித் தையல் நல்லாய்! நான் ஆலயத்தை விட்டு வெளியே போய்விட்டேனானால் நமக்கு அந்தரங்கனான துக்காராம் ஸ்வாமி உயிரைவிட்டுவிடுவான்; மதுவை மாந்துமாறு, † வாரிஜ மலர்க்குள் நுழைந்து, ஸூர்யாஸ்தமய ஸமயத்தில் ‡ முகுளித்த மலர்க்குள் அகப்பட்டு வெளியே வரமுடியாத § ப்ரமரத்தைப்போல, நான் எனது பக்தனுடைய இதய பதும மலரிற் சிக்கி, வெளியே வரமுடியாமல் பக்தபராதீனனாய் இருக்கின்றேன். அதோ! பார்; துக்காராம் தனது மனைவிக்கு நல்ல வார்த்தைகளைச் சொல்லிக் கோபத்தை ஆற்றுகின்றனன்; தனது வேண்டுகோளைத் தனது மனைவி ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவள் கொண்டுவரும் கல்லை தனது காலின்மேற் போடுவித்துக்கொண்டு, எனக்கு அபாயமின்றித் தொலைக்கவேண்டுமென்று தனது மனத்தகத்தில் நிச்சயித்து, தனது மனைவிக்குப் பலவித ஹித வசனங்கள் சொல்லிக்கொண்டிருக்கின்றனன்; ஒருவேளை அம்மடந்தை ஒரே பிடிவாதமாய் தான் கொணர்ந்த கல்லை, துக்காராம் பாதங்களின்மேற் போட்டுவிட்டால், "கோமள நடனம்புரியும் அவனுடைய திருவடிகளுக்கு அபாயம் நேரிடும் அல்லவா! எனச் சோகிக்கின்றேன்" என்று கூறினன். அங்ஙனம் கூறின லோகநாதன் வார்த்தைகளைக் கேட்டு, ஸ்ரீ ருக்மிணீதேவி, கர்ப்ப க்ருஹத்தை ஸமீபித்து வந்துகொண்டிருக்கும் துக்காராம் மனைவியாரை, விரைந்து வந்து உள்ளே அழைத்துக்கொண்டு, துக்காராம் உள்ளே நுழையுமுன்னமே கதவை மூடிவிட்டனள். துக்காராம் ஸ்வாமி வெளியே நின்று, "ராவணன் பக்தியால் ஸாதிப்பதைவிட, விரோதத்தால் ஸாதிப்பது

* பாஷாணம் - கல். † வாரிஜம் - தாமரை.
‡ முகுளித்த - மூடிக்கொண்ட. § ப்ரமரம் - வண்டு.

ஸங்கல்பமென்று ஸநத்குமாரரால் உபதேசிக்கப்பெற்று, அதுமுதல் பகவானை த்வேஷித்து, அவனால் மரணமடைந்து பரிசுத்தனானன்" என்று ஸ்ரீராமாயண உத்தரகாண்டத்தில் கேட்கப்படுகின்றது அல்லவா, அந்த அர்த்தம், இன்று எனது இல்லாள் விஷயத்தில் ப்ரத்யக்ஷவித்த மாயிற்று. இப் பெண்ணினல்லாளுக்குக் கிடைத்த பாக்யம், எனக்கு ஸித்திக்காமற் போயிற்றல்லவா! எனச் சோகமுற்றிருந்தனர். *கர்ப்ப க்ருஹத்தில் ப்ரவேசித்தபிறகு, பகவான் பாதங்களை நசுக்க முயன்ற துக்காராம் ஸ்வாமியின் மனைவியினுடைய கரங்களை, ஸ்ரீ ருக்மிணீதேவி இறுகப்பிடித்துக்கொண்டு, "ஓ மடந்தாய்! தேவாதிதேவனாகிய பாண்டு ரங்கன், யாது அபராதம் செய்தனன்?" எனக்கேட்க, அம் மாதர்க் கரசியார், ருக்மிணீதேவியை நோக்கி, "ஓ ஜநநீ! ஜார சோரஶிகாமணி யாகிய இந்த கோபிகாசித்த சோரனை, நான் இரண்டேமுறைகள் த்யா னித்தவுடனே, ஸர்வஸ்வத்தையும் தீனர்களுக்குச் சூறைகொடுக்க வேண்டும் என்னும் புத்தி எனக்குண்டாகியது; ஆகையால், இப்படிப் பட்டவன் பாதங்களை, இக் கல்லால் நசுக்கிவிட்டு, உலகத்துக்கு மேன்மை உண்டாக்கக் கடவேன்"; எனக்கூறினர். அதற்கு ருக்மிணீதேவி, அந்த மதிவதன வாணுதலை, ஆற்றித் தேற்றி, "நினக்கு வேண்டிய வேண்டியபடி வழங்குகின்றேன் கொண்டுபோ; நீ எதற்கும் அஞ்சற்க" எனப் புகன்று, ஒரு † திவ்யாம்பரத்தை உடுப்பித்து, விலையேறப்பெற்ற கல் நகைகளால் அலங்கரிப்பித்து, அவ் வம்மையாருடைய மடிநிறைய வராகன்களைப் பெய்து ஸந்தோஷமூட்டினாள். அந்த அரிவையார், பரமா னந்தமிக்கவராய், ஸ்ரீ ருக்மிணீதேவிக்கும், ஸ்ரீமத் பாண்டுரங்கற்கும் வந்தனங்கள் தந்து, அவர்களநுமதிபெற்று, தமது வீடுசேர்ந்து மகிழ்ந்து வாழ்ந்தனர்.

அகிலார்த்தப்ரதாய நம:

## ஐம்பத்தொன்பதாம் அத்தியாயம்

# துக்காராம் ஸ்வாமி பண்டரிநாதற்கு விண்ணப்பப் பத்திரிகை அனுப்பின சரித்திரம்

துக்காராம் ஸ்வாமி, தமது மனைவியை நோக்கி மிகவும் ‡ கேத முற்று, "ஓ, பேதாய்! என்ன காரியம் செய்தனை! நீ, கொஞ்சமேனும் விஶ்வாஸம் என்பதில்லாமல், பகவத் விஷயத்தில் அபசாரப்பட்டனை. ஆகையால், நமக்குக் கிடைக்கக்கூடிய முழுப்பலன் குறைந்தது. பழுக்கு முன்னமே பயிரை அறுத்துவிட்டால், ஸம்ஸாரிக்கு எங்ஙனம் தான்யம் கிடைக்கும்? கறந்தவுடனே பாலைக் குடித்துவிட்டால்

* கர்ப்பக்ருஹம் - மூலஸ்தானம்.

† திவ்ய+அம்பரம் - உயர்ந்த புடைவை. ‡ கேதம் - துன்பம்.



வெண்ணெய் எங்ஙனம் பெறலாம்? ஸூர்ய ப்ரகாசத்தைவிட்டு, மின்மினி ஒளியை விரும்பினவாறு, பரமவைணவ ஸாயுஜ்யத்தை உபேக்ஷித்து, ஒதுக்கிவிடத்தக்கதும், * அநர்த்தம் விளைக்கக் கூடியதுமாகிய † அர்த் தத்தை அபேக்ஷித்தனை! நினது மதியீனத்தை நான், என்னவெனக் கொண்டாடுவேன்!" எனப் புகன்றனர். அம்மொழிகளைக் கேட்ட வுடனே, அவ் வணங்கனையார், மமகாரத்தைவிட்டு வைராக்ய மிகுந்து, ஸ்ரீருக்மிணீதேவி தனக்களித்த பொருள்களனைத்தையும் தீனஜனங்க ளுக்கு வழங்கி, நிர்மலமாகிய மனத்தோடு ஸ்ரீபாண்டுரங்கனை தியா னித்துக்கொண்டிருந்தனர்.

இங்ஙனம் இருக்க, துக்காராம் ஸ்வாமியின் மஹிமை எல்லையற்ற தாய், இவருடைய நிர்மல கீர்த்தி உலகெங்கும் பரவிற்று. சில வேதி யர்கள், "துக்காராம் ஸ்வாமியுடன், ருக்மிணீகாந்தன் ஸஹபங்தி போஜனம் செய்கின்றனன் என்று உலகத்தார் கூறுகின்றார்கள். அஃதெங்ஙனம் நம்பக்கூடும்"! என்று தமக்குள் சொல்லிக்கொண்டிருந் தனர். இவ் வார்த்தையை வஞ்சவடியென்னும் கிராமத்திலிருந்த ‡ கணபத்யுபாஸகனாகிய வேதியனொருவன் கேட்டு, அருவருப்புற்ற மன முடையவனாய், "நான் கணபத்யுபாஸகனாகிய ப்ராஹ்மணன்; வேதாதி காரமுள்ள ப்ராஹ்மணன்; ஸகல ஶாஸ்த்ர நிபுணன்; பலமந்த்ரங்கள் எனக்கு ஸ்வாதீனங்களா யிருக்கின்றன; கணபதியைப் பலவிதோப சாரங்களால் ஆராதிக்கின்றனன்; இங்ஙனம் இருந்தும், இதுவரையிற் கணநாதன் எனக்கு ப்ரஸந்நனாகாமல் இருக்கின்றனன். இந்தத் துக்கா ராம் ஶூத்ரன்; வேதத்திற் கதிகாரியல்லன்; இவன், சக்ரபாணியை ஸாந்நித்யம் செய்துகொண்டு, அந்த தேவாதி தேவனுடன் ஸஹபங்தி போஜனம் செய்கின்றனன் என்றால், எங்ஙனம் நம்பலாகும்! ஆனாலும் அவனை இங்கு வரவழைத்துப் பரீக்ஷித்துப் பார்ப்பேன்" என்று எண்ணிக்கொண்டிருக்கையில், ஸர்வஜ்ஞராகிய துக்காராம் ஸ்வாமி, இவ் வேதியன் எண்ண முணர்ந்து, தாமே வஞ்சவடிக்கு வந்து, இவ் வேதியன் வீட்டுக்குள் நுழைந்து, அவற்கு வந்தனம் தந்தனர். அவ் விப்ரன், மிகக்களித்து, "ஓ, துக்காராம்! நான், உன்னைக் காண வேண்டும் என எண்ணிக்கொண்டிருக்கையில், பகவான், உன்னை இங்கு அழைத்துக்கொண்டு வந்ததற்கு மிகவும் மகிழ்கின்றனன்" எனப் புகன்று, க்ஷேமலாப வார்த்தைகளாடினான். மத்யானமான வுடனே, அவ்வேதியன், தான் உண்ணுமிடத்தில் துக்காராம் ஸ்வாமிக்கு ஓர் இலை போட்டனன். அப்போது, துக்காராம் ஸ்வாமி, "ஓ விப்ரோத்தமா! எனது இலைக்குப் பக்கத்தில் இன்னும் ஓர் இலை போடவேண்டும். நான் உண்ணுங்கால் ஸ்ரீபாண்டுரங்கனும் போஜனத்துக்கு வருவன்; உனது இலைக்குப் பக்கத்தில் வேறோரிலைபோட்டு, உன்னால் உபாஸிக்கப் படும் கணபதியை வரவழைத்துப் புசிப்பிக்கக் கடவை" எனக்

* அநர்த்தம் - கெடுதி. அர்த்தம் - பொருட்செல்வம்.

‡ கணபதி + உபாஸகன் - விநாயகரை வணங்குபவன்.

கூறினர். அதற்குப் பிராமணன் ஆச்சரியமடைந்து, தேவக்ருஹத்துள் நுழைந்து கணபதியை,

"விநாயகோ விக்நராஜோ
கணநாதோ கஜாநன
மஹோதரோ மஹாதேவோ
ஸ்கிக்தாஞ்சன ஸமத்யுதிஹி"

ஓம் கணபதியாய நம:
,, உமாபுத்ராய நம:
,, அகநாஶாய நம:
,, விநாயகாய நம:
,, ஈஶ்வரபுத்ராய நம:
,, விக்நராஜாய நம:
,, ஏகதந்தாய நம:
,, இபவக்த்ராய நம:
,, ஆகுவாகனாய நம:
,, குமாரகுரவே நம:
,, சுமுகாய நம:
,, சூர்ப்பகர்ணாய நம:
,, ஸ்தூலகண்டாய நம:
,, குகாக்ரஜாய நம:
,, லம்போதராய நம:
,, பின்ன தந்தாய நம:
,, விசாலாக்ஷினே நம:
,, காமரூபியே நம:
,, பாலசந்த்ராய நம:
,, வக்ரதுண்டாய நம:
'சர்வஸித்திப்ரதாயகாய நம:
தூர்வாயுக்மம் சமர்ப்பயாமி' எனப்

பலவிதங்களால் துதித்துப் புசிக்க வருகவென வேண்டியும், கணபதி ப்ரஸந்நனாகவில்லை. அப்போது, அவ்வேதியன் வெட்கி, "நான், சாஸ்த்ரோக்தமாக கணபதியை உபாஸிக்கின்றனன். அங்ஙனம் செய்தும் அந்தக் கடவுள் ப்ரஸந்நனாகாம லிருக்கின்றான்; கஜேந்த்ராழ்வார், எந்தச் சாஸ்த்ரமார்க்கத்தை * அவலம்பித்து, பகவானைப் ப்ரஸந்நனாக்கிக்கொண்டனர்! வலது கைக்கும் இடது கைக்கும்உள்ள பேதமுணராத பேதையராகிய இடைமடவார், ஸ்ரீகிருஷ்ணனை எங்ஙனம் ஸாந்நித்யம் செய்துகொண்டனர்? பிரமனுதியரும் உணரமாட்டாத ஸ்ரீகிருஷ்ணபரமாத்ம தரிசனம், இடைச்சேரி யிடையர்களுக்கு எங்ஙனம் எளிதாயிற்று! பகவான், பக்திவலையிற் படுகிறபடி, யாகம், தானம், தவம் முதலிய † படாடோபங்களுக் ககப்படமாட்டான்"

* அவலம்பித்தல் - மேற்கொள்ளல். † படாடோபம் - வீண்பெருமை.



எனத் தனக்குள்ளே சிந்தித்துக்கொண்டு, துக்காராம் ஸ்வாமி இருக்கும் இடத்திற்கு வந்து, "ஓ, பாகவத முதல்வ! அர்ச்சாரூபியாகிய பகவான், நம்முடன் எங்ஙனம் உண்பான்? நாம் நைவேத்யம் செய்யும் அன்னத்தை, பகவான் கடைக்கண்ணால் நோக்கி, 'தாஸர்கள் நாக்குகளிலிருந்தூறும் ரஸத்தை க்ரஹிப்பான் என்று சாஸ்த்ரம் கூறுகின்றது" எனப் புகன்றனன். அதற்குத் துக்காராம் ஸ்வாமி, "ஓ, பிராமணஉத்தமா * உனது உபாஸகனாகிய கணபதி, ஸமுத்ரத்தில் வீழ்ந்த ஒரு பக்தனைக் காக்கப் போயினன். இன்னும் ஒரு க்ஷணநேரத்தில் வருவன். ஆகையால் நீ இப்போது மறுபடியும் சென்று, அந்த தேவனை அழைத்துக்கொண்டு வருக" வெனக் கூறினர். அவ்வேதியன் அதிசயங் கொண்டவனாய், தேவக்ருஹத்தில் நுழைந்து பார்க்கையில், † ஸசேல ஸ்நாநம் செய்தவனைப்போல, கணபதியின் சரீரமும் வஸ்த்ரமும் நீரில் நனைந்திருந்தது. அவன் அவ்வஸ்த்ரத்தை எடுத்துப் பிழிந்து நீரைச் சோதித்துப் பார்க்கையில், அது ஸமுத்ரஜலமா யிருந்தது. கணபதிக்கு வேறொரு வஸ்த்ரம் ஸமர்ப்பித்து, அவ்வேதியன், துக்காராம் ஸ்வாமியிடத்திற்கு வந்து, "நீர் கூறின அனைத்தும் உண்மையாயிருந்தன; நெடுந்தூரத்தில் நடந்த விருத்தாந்தத்தை, நீர் எங்ஙனம் உணர்ந்தீர்?" எனக் கேட்டனன். துக்காராம் ஸ்வாமி, மிக்க வணக்கமுடையவராய், "தேவரீரைப் போன்ற ஸாதுஜந ஆஶீர்வாத பலத்தால், எனது மனது நினைத்தபடி விண்ணப்பித்தனன்" எனக் கூறினர். அங்கிருந்த வேதியரனைவரும், ‡ விஸ்மய மடைந்தவர்களாய், "ஸ்ரீபாண்டுரங்கன், இவருக்கு ப்ரஸந்நனாய் இருக்கிறபடியால், ஸகல தேவர்களும் இவருக்கு ப்ரஸந்நராயிருப்பார்கள்; கற்பகத்தருவைச் சேர்ந்தவர்களுக்கு எல்லாப் பொருள்களும், எண்ணின மாத்திரையிலேயே எளிதிற் கிடைக்கிறபடி, அன்பர்க்கு உகந்த அருங்கற்பக விருக்ஷமாகும் ஸ்ரீமத் பாண்டுரங்க மூர்த்திக்கு அன்புசெய்து வாழும் இம் மஹானுக்கு அஸாத்யம் ஏதுவும் இலது" எனச் சொல்லிக்கொண்டிருந்தனர். அப்போது, துக்காராம் ஸ்வாமி, கணபத்யுபாஸகனை நோக்கி, "தாழ்க்காமல், கணபதியை வருவிக்கக்கடவை; ஸ்ரீமத் பாண்டுரங்கன் இதோ வருவன்; நாம் அனைவரும் உட்கார்ந்திருந்து, ஒன்றாய்ப் புசிக்கலாம்" எனப்புகன்றனர். அதனைக்கேட்ட அங்குள்ள அந்தணர்கள், துக்காராம் ஸ்வாமியை நோக்கி, "நீர், பாண்டுரங்கனை வரவழைக்கிறபடி, கணபதியையும் வரவழைக்க வேண்டுகின்றனம்" என்றார்கள். துக்காராம் ஸ்வாமி எண்ணின மாத்திரத்தில், ஸ்ரீமத் பாண்டுரங்கன் ப்ரத்யக்ஷமாயினன். பிறகு, துக்காராம் ஸ்வாமி, தேவக்ருஹத்துள் நுழைந்து, கணபதிக் கெதிர்முகமாக நின்று, அஞ்ஜலிஹஸ்தராய், "கஜாநநா! ஸ்ரீபண்டரிநாதன் எழுந்தருளி யிருக்கின்றனன்; நீயும் வந்து எங்க

* உனது + உபாஸ்யன் - உன்னால் தொழப்படுபவன்.
† ஸசேலஸ்நாநம் - கட்டின ஆடையுடன் குளித்தல்.
‡ விஸ்மயம் - அதிசயம்.

ளோடு கூடியிருந்து, புசித்துப் போகவேண்டும்" என்று வேண்டிக் கொண்டனர். அதனைக்கேட்ட மூஷகவாகனக் கடவுள், ஸாக்ஷாத் கரித்து, பண்டரிநாதற்கு வந்தனம் தந்து, இருவரும் உட்கார்ந்தனர். துக்காராம் ஸ்வாமியின் கண்களுக்குத் தவிர, மற்றவர் கண்களுக்கு கணேச வாஸுதேவர்கள் தோற்றாமலிருந்தார்கள். இலைகளில் பரிமாறி யிருந்த பதார்த்தங்கள் மறைந்தன. மேலும் மேலும் பரிமாறிக் கொண்டே யிருந்தும், அந்த பதார்த்தங்கள் அனைத்தும் மறைந்து கொண்டே வந்தன. துக்காராம் ஸ்வாமியுடன் வேதியர்களனைவரும் புசித்தனர். போஜன முடிவில் அனைவரும் கைகால்கள் அலம்பிக் கொண்டு சுத்தாசமனம் பண்ணினார்கள். வாஸுதேவ விக்நேஸ்வரர்கள், துக்காராம் ஸ்வாமியால், சந்தன புஷ்ப தாம்பூலாதிகள் கொடுக்கப் பெற்று * அந்தர்த்தானமானார்கள். துக்காராம் ஸ்வாமி, அன்றிரவு, அவ்விடத்தில் ஹரிகீர்த்தனம் செய்துகொண்டிருந்து, விடியற்காலையில் வேதிய ரிடத்தில் விடைபெற்று, விக்நேஸ்வரனைத் துதித்து, வந்தனம் தந்து, தேவ நகரத்துக்கு வருவாராயினார்.

வழிநடுவில், தோட்டக்காரனொருவன், துக்காராம் ஸ்வாமிக்கு ஸாஷ்டாங்க வந்தனம் செய்து, கருப்பஞ்சாறு கொடுத்து, உபசரித்து சில கருப்பங்கோல்களை யொரு கட்டாகக் கட்டி, "ஓ ஸ்வாமீ! இக் கட்டைத் தங்கள் வீட்டுக்குக் கொண்டுபோய்க் குழந்தைகளுக்குக் கொடுத்து, எனது இக்கட்டைத் தீர்க்கவேண்டும்" என வேண்டிக் கொண்டனன். துக்காராம் ஸ்வாமி அந்த கருப்பங்கோற்கட்டை ஏற்று பகவத் கீர்த்தனை செய்துகொண்டு, ஆனந்தமிக்கவராய், வீதிவழியே வருவாராயினார். அப்போது அவ்வூர்க் குழந்தைகள், இவரையும் இவர் கைக் கருப்பங்கோற் கட்டையும் கண்டு, "எங்களுக்குக் கரும்பு வேண்டும்" என்று அழுதன. துக்காராம் ஸ்வாமி, அக்குழந்தைகளை ஸ்ரீ வாஸுதேவமூர்த்திகளாக மதித்து இந்தா "கரும்பு, தாமோதரா! இந்தா கரும்பு, கேசவா! இந்தா கரும்பு, கோவிந்தா! இந்தா கரும்பு, கம்ஸாரீ! இந்தா கரும்பு; மாதவா! இந்தா கரும்பு, நாராயணா! இந்தா கரும்பு, அச்சுதா! இந்தா கரும்பு நரஸிம்ஹா!" எனச் சொல்லிக் கொண்டே கரும்புகளெல்லாவற்றையும் அக் குழந்தைகளுக்குக் கொடுத்துவிட்டு வீட்டுக்கு வருகையில், தமது கரத்தில் ஒரே கருப் பங்கழி மிகுந்திருந்தது. அதனை, இவர் தமது மனைவி கையிற் கொடுத்தனர். அவ் வம்மையார், வீதியில் நின்றபடியே, தமது கணவர், ஊரார் குழந்தைகளுக்குக் கருப்பங் கழிகளைக் கொடுத்து விட்டு வந்ததைப் பார்த்துக்கொண்டிருந்து, இவரை நோக்கி, "பாக்ய வானாகிய தோட்டக்காரன் தந்த கரும்புகளத்தனையும் நீர் வீட்டுக்குக் கொண்டுவராமல், ஊரிலிருக்கும் உமது அப்பன்மார்களுக்கெல்லாம் அவைகளைப் பங்கிட்டுக்கொண்டே வந்துவிட்டீர்! இந்த ஒருகோலை, என்னவென்று என்கையில் கொடுக்க வந்தீர்!" எனக் கூறிக்

* அந்தர்த்தானம் - மறைதல்.



கொண்டே, அக் கருப்பங்கழியால் அவரது தலையின்மேல் அடித் தனர். அப்போது அந்தக் கருப்பங்கழி இரண்டு துண்டுகளாய், ஒன்று அவ்வம்மையார் கரத்தில் இருந்தது; மற்றொன்று தரையில் விழுந்தது. அதனைக்கண்ட பரம சாந்தநிதியாகிய துக்காராம் ஸ்வாமி சிரித்துக்கொண்டே, "ஓ, மாதே! இக் கரும்பை ஓரவஞ்சனையின்றிப் பங்கிட்டனை. உனது கரத்திலுள்ள கரும்பை, நீயே எடுத்துக்கொள்; கீழே வீழ்ந்த எனது பாகத்தைக் குழந்தைகளுக்குக் கொடுப்பேன்" எனக் கூறினர். அதனைக்கேட்ட அவ்வரிவை, இவருடைய பரமசாந்த நிலைக்கு மகிழ்ந்து, "இவர், * ப்ரபஞ்சாதீதர்; பரமசாந்த மூர்த்தி; அகங்கார மமகாரங்கள் இவரிடத்தில் மருந்துக்கும் கிடையா; க்ருஹாதி காரிக்கும், சோரனுக்கும், விளக்கு, ஒரே படித்தாய்ப் பிரகாசிக் கிறபடி, இந்த மஹான், இன்ப துன்பங்களிலும், ஓடு பொன்களிலும், உறவு பகைகளிலும், புகழ்ச்சி யிகழ்ச்சிகளிலும், மானாவமானங்களிலும், விருப்பு வெறுப்புகளிலும் ஸமபாவனை உடையவராயிருக்கின்றனர். இப்பேர்ப்பட்ட மஹானை, நான், வீணாய் வருத்துதல் ஞாயமல்ல" எனப் புகன்று, சாந்த சித்தமுடையவராய், மௌனமுற்றிருந்தனர். துக்காராம் ஸ்வாமியினுடைய கல்யாண குணகணங்கள், மிகவும் அற்புத மானவைகளாய், வாசாமகோசரங்களாய், உவமானமற்றவைகளாய் விளங்கின.

துக்காராம் ஸ்வாமி, வருஷவரியில், ஆடிமாதச் சுக்லபக்ஷத்து ஏகாதசியில் பண்டரிபுரத்துக்குப் போய்வருவாராயினார். இடையில் ஒருவருஷத்தில் வந்த ஏகாதசியில், இவருடைய சரீரத்தில் ஜ்வரநோய் உண்டாயிருந்ததனால், இவர், மிகவும் வேதனையடைந்து, பலஹீனராய் நடக்கச் சக்தியற்றிருந்தனர். அதனால் இவர், "இந்த வருஷம் ஸ்ரீ பண்டரிபுர யாத்திரைக்குத் தடை நேரிட்டது" என்று மிகவும் சோக முற்று, பத்ரிகை ஒன்றில்,

* ப்ரபஞ்ச - அதீதர் : உலகுக்கு அப்புறப்பட்டவர்; கடந்தவர்.

"சுபமஸ்து"

ஸ்ரீமத் அகிலாண்டகோடி ப்ரஹ்மாண்ட நாயகனாய், அநந்த கல்யாணகுண பரிபூர்ணனாய், பண்டரிபுரத்தில் பக்தஜன * பரித்ராணார்த்தம் எழுந்தருளி விளங்கும் விட்டல நாதனுடைய பாதபத்மங்களுக்கு அநந்த நமஸ்காரங்கள் செய்து, எழுதும் விண்ணப்பம் என்னவென்றால்: தேவாதிதேவ! ருக்மிணீபதே! பண்டரிநாத! நான், உனக் கந்யமான வேறு கடவுளையாவது, நினது ஸங்கீர்த்தனையை விட்டு வேறுவார்த்தைகளையாவது அறிவேன் அல்லேன்; வேறுகதி யில்லேன்; அன்பரை அளிக்கும் ஆரிய! யாவரினும் சீரிய! நிகழ்வுறாஉம் இந்த வருஷத் தேகாதசியில், தேவரீருடைய மகோற்சவ தரிசனம் செய்யக் கோரின எனக்குத் தடையாக எனது சரீரத்தில் நோய் ஒன்றுண்டாகி, அதனால் அடியேன் வேதனை யடைந்து, அத்தனை தூரம் நடந்துவரச் சக்தியற்றவனாய் இருக்கின்றேன்;

ஆதலால், இவ்விண்ணப்பத்தை வரைந்து கொள்ளலாயினேன்.

நினது ப்ரபாவம்; வேத சாஸ்த்ரங்களுக்கு அகோசரமா யிருக்கின்றது. நானோ பாமரன். அநவரதமும், நினது ஸேவை செய்து மகிழ்வுறாஉம் நித்யாநபாயிநியாகிய ஸ்ரீ ருக்மிணீதேவிக்கும் நினது மஹிமை விளங்காதிருக்கின்றது! ப்ரஹ்மருத்ராதியர்களுக்கும், மஹாமுனிவர்களுக்கும், பரமயோகியர்க்கும், கிடைத்தற்கு அரிதான நினதருமைச் † சரணவாரிஜங்கள் நினது அந்தரங்க பக்தர்களுக்கு எளியவைகளா யிருக்கின்றன. ஸர்வவ்யாபகனாய், ஸர்வஜ்ஞமூர்த்தியாய் விளங்கும் நினக்கு, தாஸபூதனாகிய எனது குறைகள் தெரியாமலிருப்பது, யாது பற்றியோ! ஓ, கோவிந்த! ஓ, முகுந்த! ஓ, அநந்த! எந்த பக்தனைக் காத்து, அதனால் என்னை மறந்தனை! நான், எதையாவது இச்சிப்பேன் என்று நீ அஞ்சுகின்றனையோ! 'ஓ, ஹ்ருஷீகேச! ஓ, ஜகதீச! எனது ப்ராணேச! எனக்கு நீ, நின்துண்மையாகிய பதவியைச் சீக்கிரத்திற் கொடுத்தருள்க. பெற்ற தாயார் வெறுத்தால், பிள்ளைகள் தமது கோரிக்கைகளை யாரிடத்திற் சொல்லிக்கொள்வார்கள்? எனது குறையை நீயன்றி வேறுயாவர் அறிய வல்லார்? ஓ பாண்டுரங்க! ஹ்ருதயேச! புஜங்கசயந! ஏனோ கருணையின்றி என்னை நிராகரித்து விட்டனை! 'ஓ கேசவ! ஓ, வாஸுதேவ! தேவாதிதேவ! நான், நினக்கொரு வருத்தத்தையும் உண்டாக்கவில்லையே! நினது நாமத்யானமே எனக்கொரு பெரிய நிக்ஷேபமாயிருக்கின்றதே! இதுவே எனக்குப் போதும் என்னும் நிச்சயத்தோடு கூடியிருந்தும், புத்ரனாகிய நான், பிதாவாகிய உன்னைக்காண விரும்புகின்

* பரித்ராண + அர்த்தம் - காக்கு நிமித்தம்.
† சரண + வாரிஜங்கள் - திருவடித்தாமரைகள்.



றேன். கோபிகா ரமணா! கோவர்த்தனோத்தாரணா! கோபால பாலா! நினக்கு அன்பர் பலரிருக்கின்றனர் என்று எண்ணி, என்னை மறந்தனையா? லக்ஷ்மீ நாதா! தீனநாதா! ப்ராணநாத! நினது தாஸன் ஒருவனை அனுப்பி, எனது யோக க்ஷேமங்களை விசாரிப்பது உனக்கு அரியதெனத் தோன்றினால், ஒரு பத்ரிகையேனும் எழுதியனுப்பப்படாதா? அதனால் உனக்கு வரக்கூடிய நஷ்டந்தான் என்னையோ? நாராயணா! சாந்தமூர்த்தி! பல பிள்ளைகளைப் பெற்றுப் பெருவாழ்வுடன் விளங்கும் நீ, நினது ஆஸ்தியை நினதுபிள்ளைகளுக்கு கொடுக்காமல் வேறுயாவர்க்கு அளிக்கப்போகின்றனை? நினது குழந்தையாகிய நான், பசியால் அழுது கொண்டிருக்கையில், என்னை ஆற்றாயேல், உண்மையாய் உனது பெருமைக்குக் குறைவுண்டாகும் என்றறிந்து கொள்ளக்கடவை. நான் உன்னை நினைத்துக்கொண்டழுகிற ஓசை நினது காதுகளுக்கு † நாராசமாய் இருக்கின்றதா? பக்தவத்ஸலா! பக்தபராதீநா! பக்தஜன பாரிஜாதா! நீ, இன்னும் ‡ பராங்முகனா யிருப்பையேல், ஸாதுக்களிடத்திற் சொல்லி, அவர்களிடத்தில் நீ பெறாஉம் பக்தியையும், § வேதனத்தையும் இன்றுமுதல் நிறுத்தி விடுவேன். ஜகத்கர்த்தனாய், ஸர்வசக்தனாய், அநந்த கல்யாண குணநிதியாய், விளங்கும் நினது கருவிலுருவாகிப் பிறந்த நான், இங்ஙனம் இடருறல், நினக்கு இகழ்ச்சியாய் நின்னை நாணித் தலைகுனியச் செய்ய வில்லையா? ருக்மிணீகாந்தா! ஏனோ, என் வாக்கில் நிஷ்டுர மொழிகளைப் பிறப்பிக்கின்றனை! சீக்கிரத்திற் கிருபைசெய்க. இனியொரு கணநேரமும் பொறுக்கமாட்டேன். ஸர்வலோக சரண்யா! சரணாகதர்களை வெறுத்திருக்கும் தன்மையில் உன்னையொப்பாரைநான் கண்டும் அறியேன், கேட்டும் அறியேன். 'தீவினைக்காற்று மோதியதனால், பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து வருந்துகின்றனன்'' என்று என்னை நானே ஸமாதானப்படுத்திக் கொள்வதற்கும் அவகாசம் இல்லை. சார்ங்கதரா! நினது திவ்ய நாமங்களில் ஒன்றே, பவஸாகரத்தைக் கடப்பிக்கும் என்று வேத சாஸ்த்ரங்கள் முறையிட்டுக் கொண்டிருப்பது பொய்யா? நான் நினது திவ்யத் திருநாமங்களை, இரவும் பகலும் இடையருமற் றுதிக்கவில்லையா? நீ எனக்கு $ ப்ரத்யுத்தரம் அனுப்புமளவும், நான் நினக் ¶ கபிமுகனாயிருந்து, தண்டாகாரமாய் வீழ்ந்து வணங்கின படியே, அவ் வணங்கின இடத்தை விட்டெழாமற் கிடப்பேன்'' என்கிற இந்த விஷயங்களை,

அகிலாண்ட கோடிகட்கு பிரமாண்ட நாயகனாய் அநந்த னாகி
முகிலாண்ட மேனியனாய்க் கலியாண குணநிறைந்த மூர்த்தி யாகித்
துகிலாண்ட கொடிமாட நிரந்தொளிர்பண் டரிபுரத்தில் துகடீர் பக்தர்
நகிலாண்ட பெண்ணாசை முதலியமூ வாசையற்று நவைதீர்ந் தோங்க ()

* நிக்ஷேபம் - புதையல். † நாராசம் - கூரிய அம்பு.
‡ பராங்முகன் - திருப்பிக்கொண்டமுகன். § வேதனம் - கூலி.
$ ப்ரத்யுத்தரம் - மறுமொழி அல்லது விடை.
¶ அபிமுகன் - நேராய்த்திரும்பின முகமுடையவன்.

அன்னவரைக் காக்குமா றமர்ந்தருள்விட் டலநாதன் அடிகட் கன்பாய்
சொன்னவரை யேட்டின்மேல் வரைந்தவரை தேர்துக்கா ராம னுந்தும்
என்னுடைய மனநிறைந்த நமஸ்காரம் பலபுரிந்தின் றெழுது மோலை
என்னவெனில் மாதேவ ருக்மிணிக்கு மணவாள இயம்பக் கேண்மோ ()

பண்டரிநா தாவடியேன் நின்னைவிட்டு வேறுதெய்வம் பரவ மாட்டேன்
பண்டரிநா தாநினது புகழன்றி வேறுமொழி பகர மாட்டேன்
பண்டரிநா தாநினது கதியன்றி வேறுகதி பார்க்க மாட்டேன்
பண்டரிநா தாவைவர் பாண்டவர்தூ தாவின்னும் பகரக் கேண்மோ ()

அன்பரைக்காத் தளிக்கின்ற ஆரியனே சீரியனே ஆதி மூர்த்தி
அன்பனு கியவடியேன் துன்பமா னதுதீர்ந்திவ் வாண்டு தன்னில்
நின்னதே காதசிநா ளுற்சவத்தைக் கண்டுய்ய நினைவு கொண்டேன்
என்னுடைய தேகத்திற் பிணியொன்றுண் டாயதனால் இடருற் றேனே()

இந்தநோ யேதடையாய் அன்னமின்றி மெலிவுற்றேன் எழுந்து நின்று
மந்தகதி யாகவுநான் நடப்பதற்கு வலியில்லேன் நகரு கின்றேன்
எந்தநாள் நீகடைக்கண் பார்க்குநாள் எனநினைந்தே இந்த ஓலை
பந்தமுடன் எழுதுகின்றேன் பார்த்திதற்கு விடைவிரைவில் பகருவாயே

நினதுபுகழ் நான்மறைக்கும் அறிவரிதாய் மகத்துவமாய் நிலவி யோங்கும், எனதுமதி யணுத்துவமாய் அறிவரிதாய்ச் சூனியமாய் இருக்கு மாலோ, நினதுபுகழ் நித்யாநு பாயினியாய் நினதருகில் வீற்றிருக்கும், எனது தாயாகிய ஸ்ரீ ருக்மிணிக்கும் அகோசரமா யிருக்குந் தானே. (௬)

(வேறு)

தேவருக்கு முனிவருக்குஞ் சித்தருக்கும் யோகியர்க்கும்
மூவருக்குங் குறித்துணர முடியாநின் றிருவடிகள்
யாவருக்கு மேலாநின் னன்பருக்கே எளிதாகும்
மாவருக்கை நறவுபொழி வளமலிபண் டரிநாத (௭)

எங்குநிறை பொருளாகி யாவுமுணர் தெருளாகி
எங்குமமர் நீயென்றன் இடுக்கணுண ராததென்னே
எங்குமுறை யுனக்கடியேன் என்னமுறை யிட்டாலும்
எங்குமுறை யாரிட்டா ரெனக்கேளா தென்னேயோ (௮)

எவ்வன்பன் தனைக்காக்க எங்குற்றாய் நீயதனால்
இவ்வன்பன் தனைமறந்தாய் எனக்கியம்ப வேண்டுமால்
அவ்வன்ப ரவரையாள் ஆதிமூ லப்பொருளே
இவ்வன்ப னழைக்கின்றே னிங்குவர வேண்டுமென்றே (௯)

கோவிந்தா கேசவா கோபால போரேறே
வாவிந்தா வெனவெனைநீ வருந்தியழைத் தாலுன்றன்
நாவின்சீர் குன்றுமோ நானென்று முனைக்கேளேன்
கோவின்சீர் உணர்ந்தளித்த கோமானே நீவெருவேல் (௧0)



(வேறு)

அருமையா கியநின்றன் பதவிதனை யடியேற்கு வல்விரைவில் அளிக்க வேண்டும், பெருமையா கியவுலகுக் குரிமையா கியநாத நான் விரும்பும் ப்ராணநாத, ஒருமையா கியமனத்தாற் பெற்றவளே வெறுத்து விடின் மக்களெவ்வா றுய்வர் சொல்லாய், கருமையா கியமேனித் திரு நெடுமால் நீயன்றி வேறென்னைக் காப்பா ரியாரே (௧௧)

(வேறு)

என்னைநீ நிராகரித்த தென்னகா ரணமோநான்
உன்னையே நம்பினேன் உரகமிசைத் துயில்வானே
அன்னையே அரங்கேச அடியேன்ற னிதயேச
பொன்னைவளர் மார்புடைய புண்ணியனே பாண்டுரங்க (௧௨)

நின்றனக்கு வருத்தமொன்று நேடினா னியற்றவில்லை
நின்றனது திருநாம நினைவெனக்கு நீங்கவில்லை
நின்றனது திருநாம நினைவெனக்குப் பெரியவைப்பாம்
நின்றனது திருநாம நினைவெனக்கு ஸர்வமுமாம் (௧௩)

என்றிருந்து நின்மகனும் என்மனதுன் நினைவுகொண்டிங்
கின்றிருந்து வருந்துகின்ற தென்செய்வேன் தந்தையின்மேல்
முன்றிருந்து மனங்கொண்டு மூவாத மதன்வருந்தல்
பொன்றிருந்து மார்புடையாய் புதுமையல புவியிடத்தே (௧௪)

மாதவா கேசவா மதுசூதா கோகுல
யாதவா மாயவா எனவிரங்கிப் பாண்டவர்தந்
தூதவா என்றுன்னைத் துதித்தழைத்து வாடுமென்றன்
மீதவா வைத்துருகி விரைந்தோடி வாராயே (௧௫)

நினக்கன்பர் பலிருக்கு நிச்சயத்தால் நீயென்னை
எனக்கன்ப னிவனுள்னென் றெண்ணுமல் மறந்தனையோ
புனத்துளவ மணிமார்பா புண்டரிக மலர்க்கண்ணா
மனத்துயர மறவென்பால் வல்விரைந்து வாராயே (௧௬)

நினதுபல தாசருக்குள் நீ யொருவன் தனையனுப்பி
எனதுடலின் க்ஷேமநிலை இன்னபடி யென்றறிதல்
நினதுமனத் தரியதென நினைந்தனையே யாயிடினும்
நினதுகரத் தெழுத்திலொரு நிருபமெழு தாவிதமென் (௧௭)

மூட்டிவிட்ட முனைமுகத்தில் ஓட்டிவிட்ட தேரேறி
மாட்டிவிட்ட மாற்றலரை வாட்டிவிட்ட வாள்விஜயன்
நீட்டிவிட்ட அம்பாலே வீட்டிவிட்ட நினதுகரந்
தீட்டிவிட்ட திருமுகத்தைக் காட்டிவிட்டால் தேறுவனே (௧௮)

பொன்முடியும் நெற்றியுங்கட் புதுமலருஞ் செவ்வாயும்
மின்மகர குண்டலங்கள் மிளிர்ந்தொழுகு செவிகளுடன்
நின்னுடைய * திருமுகத்தை நீவிடுத்த வாறெழுதி
உன்னுடைய் † திருமுகத்தை உவந்தெனக்குப் போக்குகவே (௧௯)

(வேறு)

திருமுகமொன் றெழுதியெனக் கனுப்புவதால் நினக்குத்
தீங்குவரு மென்றெருநீ சிறிதுமஞ்சேல் பத்துக்
கருமுகமொன் றரக்கனுயிர் வீட்டியநா ரணனே
கம்ஸாரி ஸம்ஸாரக் கடற்குளிக்கு மென்னை
குருமுகமொன் றனதருளாங் கரையேற்றி விட்ட
கோவர்த்த னோத்தாரா கோபால பாலா
மருமுகமொன் றருந்துளவ மாலையணி மார்பா
மாயவனே யாதவனே மாதவமா மணியே (௨0)

பதினாறும் பெற்றொருநீ பெருவாழ்வும் வாழ்ந்து
பலமக்கட் கப்பனெனும் பாக்கியவா னாய்
கதிநாறும் நினதுசெல்வந் தன்னையந்த மக்கள்
களித்தடைய ஈயாமல் கருதியெவர்க் களிப்பாய்
துதிநாறும் வாயுடைய நினதுமக னொருநான்
சுடுபசியான் மெலிந்து நின்பேர் சொல்லியழைக் கின்றேன்
ததிநாறும் உறியின்மிசைத் தாவியநீ என்னைத்
தணிக்காயேல் நின்புகழ்க்குத் தவறுண்டாம் நிசமே (௨௧)

உனைநினைந்து நான்புலம்பும் ஓசையுன்றன் செவியில்
உறைக்கிலையோ நாரசம்போல் உறுத்துகின்ற தோநீ
எனைநினைந்து வாராம லிருப்பதுனக் கழகோ
இதுமுறையோ இதுதகுமோ இதுதருமந் தானோ
நினைநினைந்து மகிழ்கின்ற ஸாதுக்க ளிடத்தில்
நீயடையும் * வேதனத்தை நிறுத்திவிடச் சொல்வேன்
தனைநினைந்து கத்துகின்ற கன்றிடத்தி லோடும்
தாய்ப்பசுப்போல் வந்தென்னைத் தாங்குவதுன் கடனே (௨௨)

பக்தபரா தீனபக்த ஜனபரி ஜாத
பக்தவத்ஸ லாவுனக்குப் பராமுகந்தா னேனோ
முக்தபரா பரமுதல்வ முகுந்தஸர்வ சக்த
மூவாத நின்கலின் முதிர்ந்துருவா கியநான்
சக்தியிலா தழிகின்ற தன்மையுனை நாணித்
தலைகுனிய வைத்தொருநீ தவிக்கவிலை யோநான்
முக்திநிலை யற்றவர்போல் நிட்டூரங்கள் பேச
முயன்றனனே விரைவினிலென் முன்வருவாய் நீயே (௨௩)

* திருமுகம் - அழகிய முகம். † திருமுகம் - கடிதம்.
‡ வேதனம் - அன்பாகிய கூலி.



ஒருகணமும் நான்பொறுக்க முடியாது கண்டாய்
உனதுசர ணடைந்தவரை ஒதுக்கிவிட லழகோ
திருமருவு மார்பழகா நினது திருநாமம்
செப்புமவர் தீவினைகள் தீயுமெனும் வேதம்
உருமருவு முன்னுடைய திருநாமம் பலவும்
ஒழியாது கூறுகின்றேன் உவந்தொருநீ என்பால்
வருமளவு நீயிருக்குந் திசைநோக்கி வீழ்ந்து
வணங்கியிருப் பேனகலேன் வாடியிருப் பேனே என்று

இவ்விருபத்து நான்கு விருத்தங்களா னெழுதி, யாத்ரைசெய்து பண்டரிபுரத்திற்குச் செல்லும் ஸாதுஜனங்களிடத்திற் கொடுத்து, "எனது அன்பிற்குகந்த அருஞ்செல்வர்களே! இவ் விண்ணப்பப் பத்திரிகையை எனது வந்தனங்களுடன், தேவாதி தேவனுடைய திருக்கரத்திற் கொடுத்து, அவனை நோக்கி, நீவிர் சிறிதும் அஞ்சாமல், 'துக்காராம் என்ன அக்ரமம் செய்தான்! அவனிடத்தில் உனக்கேன் கிருபையில்லாமற் போயிற்று? அவனிடத்தில் என்ன பொல்லாங்கைக் கண்டு அவனை உபேக்ஷித்தனை? ஹ்ருஷீகேசா! நீ, பிள்ளைகளைப் பெற்றவனல்லவா? உன் மனம் என்ன கல்லா? உனதிஷ்டப்படி செய். துக்காராம் மனம்நொந்து உன்னைச் சபித்தால், அவனது சாபம் பலிக்கும். நீ ஸுகமாய் வாழ்க' எனது நாமமாத்ரமே அவனுக்குப்போதும் என்று விண்ணப்பஞ் செய்யுங்கள்" என வேண்டிக்கொண்டனர். அவர்கள், "அங்ஙனமே செய்கின்றோம்" என்றிசைந்து பண்டரி புரத்துக்குப் போனார்கள்.

ஸ்துதிப்ரியாயநம:

## அறுபதாம் அத்தியாயம்

# ஸ்ரீ பண்டரிநாதன் கருடாரூடனாய் துக்காராம் ஸ்வாமிக்கு ஸேவை சாதித்த சரித்திரம்

உற்சவத்தின் பொருட்டுப் பண்டரிபுரத்துக்கு வந்த பாகவதர்கள் சந்த்ர பாகையிற் குளித்து, புண்டரீகனை ஸேவித்து, கோபுரத்வாரத்தில் நமஸ்காரஞ்செய்து, த்வஜஸ்தம்பத்தருகில் ஸ்ரீவிட்டல நாதற் கபிமுகர்களாய் நின்று, துக்காராம் எழுதித் தமதிடத்திற் றந்த விண்ணப்பப் பத்திரிகையை, விட்டலராயனுடைய அநுமதியால் அவிழ்த்து, அதனில் எழுதப்பட்டிருந்த இருபத்து நான்கு விருத்தங்களையும் வாசித்தார்கள். அதனைக் கேட்ட ஸ்ரீவிட்டலநாதன் மிகவும் வருந்தி, ஸ்ரீருக்மிணீ

தேவியை நோக்கி, "ஓ, காதலீ! என தருஞ் செல்வனாகிய துக்காராம் எழுதியனுப்பின விண்ணப்பப் பத்திரிகையின் விருத்தாந்தங்களைக் கேட்டதுமுதல் என் மனம் என் வசப்படாமல் இருக்கின்றது. என தருஞ் செல்வமகனாகிய துக்காராம் எனது பிரிவை ஆற்றாதவனாய் அங்கே அவதியுற்றிருக்கையில், இங்கே நடக்கிற உற்சவ வைபவங்கள் எனக் கெங்ஙனம் ருசிக்கும்? நான், தேவநகரத்துக்குச் சென்று, எனது ப்ராண நிலையாகிய துக்காராமனைக் கண்டு, அவனைத் தேற்றுமளவும் எனக்கு ஊணுறக்கங்கள் ருசிக்கா. துக்காராம் எழுதின விருத்தங்களெல்லாம் என் மனதைக் கவர்ந்தன. என் உயிரையே கொள்ளைகொண்டுபோய், தேவநகரத்தில் விட்டன. என் உடல்மாத்திரம் இங்கு இருக்கின்றது. எனதிந்திரியங்கள் தத்தம் நிலை தவறியிருக்கின்றன. இவ்விடத்திய வைபவங்கள் யாவும் எனது கண்களுக்குப் புலப்படா. இவ்விடத்திய பாகவதர்களுடைய கோலாஹலத்வனி, எனது செவிகளில் நுழையாது. இங்கெனக்குச் செய்யப்படுகிற நைவேத்யான்னச் சுவையை எனது நாவுணராது. நினது கரஸ்பர்சத்தை எனது சரீரம் உணரவில்லை. பரம பக்தர்கள் என்னை அர்ச்சிக்கும் திவ்யத் திருத்துழாய் நாற்றம் எனது மூக்கில் ஏறவில்லை. ஓ, நங்காய்! நான் என்ன செய்வேன்! இங்கே, உற்சவத்தை முன்னிட்டுக் கணக்கிலா ஸாது ஜனங்கள் வந்திருக்கின்றார்கள்; இவர்களை உபேக்ஷித்துவிட்டு, நான் போவதும் யுக்தமல்ல" என்று பித்தனைப்போலப் பேசினன். அங்ஙனம் பேசின ப்ராணநாதனை ஸ்ரீ ருக்மிணீதேவி நோக்கி, "ஓ நாதா! தேவாதி தேவா! இதற்காக இத்தனை சிந்தனையா. கருடனை அனுப்பி, துக்காராமனை வரவழையுங்கள்" எனக் கூறினள். அதற்குப் பண்டரிநாதன் மிகமகிழ்ந்து, பக்ஷிராஜனாகிய கருடனை அழைத்து, "ஓ, * வைநதேயா! நீ, இப்போதே தேவநகரத்துக்குச் சென்று, துக்காராமனைக் கண்டு க்ஷேமலாபங்களை விசாரித்து, எனது ஆசீர்வசனங்களைச் சொல்லி, யாத்ரை செய்பவர்கள் மூலமாய் 'நீ, அனுப்பின கடிதத்தால், உனது சரீர நிலையைப் பண்டரிநாதன் உணர்ந்து மிகக் கேதமுற்று, உன்னைக் காணவேண்டும் என்னும் அவாவோடிருக்கின்றனன்' எனக்கூறி, அவனை உனது முதுகின்மேலேற்றிக்கொண்டு விரைந்தோடிவருக". என்று நியமித்து, ஒரு பத்திரிகையில்,

ஸ்ரீ

பண்டரிபுர தேவஸ்தானம்,
பார்த்திபஹு ஆடிமீ எஉ
சுக்லபக்ஷத் தேகாதசி.

எனதன்பிற் குகந்த துக்காராமனுக்கு, ஆயுளின் நீட்சியும், ஞான பக்தி வைராக்ய மாட்சியும், சுத்தமனத் துத்தம பாகவதர்களுடைய காட்சியும், அவர்களிடத்திடையறாத உண்மை அன்பின் ஆட்சியும் தினந்தினமும் † ப்ரவர்த்தமானமாம்படி ‡ மங்களாசாஸநம் செய்து வரைவது என்னவென்றால்:

* வைநதேயன் - கருடன். † ப்ரவர்த்தமானம் - குறையாது வளர்தல்.
‡ மங்களாசாஸநம் - வாழ்த்து.



உத்தம பக்த!

நீ எழுதியனுப்பின இருபத்துநான்கு விருத்தங்களையும் கேட்டவுடனே நான் மிகவுங் கேதமுற்றனன். இங்கே, உற்சவத்தின் பொருட்டுப் பல்லாயிரம் ஸாது ஜனங்கள் வந்திருப்பதனால், நான், இப்போதே உன்னிடத்திற்கு வரக்கூடாதவனா யிருக்கின்றனன்; (ந ஜீவேயம் க்ஷணமபி) என்றபடி, உன்னைக் காணாமல் ஒருபொழுதும் வாழ அறியேன். ஆகையால், எனது நியமனப்படி, நீ, கருடன் முதுகில் ஏறிக்கொண்டு, சீக்கிரமாய்ப் பண்டரிபுரத்துக்குவந்து, நினது தரிசனத்தால் எனது கண்களுக்குக் களிப்பூட்டுக; நினது மென் மதுர மொழிகளான் எனது காதுகளுக்கு விருந்தூட்டுக; நினது ஆலிங்கன விசேஷத்தால், எனது சரீரத்திற்கு இன்பத்தைப் பெருக்குக; உன்னுடன் பேசுவதனால் எனது நாவுக்கு அமுதந்தருக; நினதுச்சியை மோந்துகொள்வதனால் எனது மூக்குக்கு ஆனந்தம் அளிக்க.

துக்காராம் நீவரைந்த தூயகடி தங்கண்டு
* துக்கார் ணவத்தாழ்ந்து சோர்கின்றேன்—எக்காலம்
காண்பதுனை யென்று கலங்குகின்றேன் சீக்கிரம்வா
சேண்கருடன் மீதேறித் தேர்ந்து

இங்ஙனம்,
உனதன்புக்கு ஏக்கமுற்ற
விட்டலன்

என்றெழுதி, அதனைக் கருடன் கையிற் கொடுத்தனன். வேத ஸ்வரூபி யாகிய † விஹகேச்வரன், அத்திருமுகத்தைத் தனது தலையால் மதித்துத் தாங்கி, விண்ணோங்கிப் பறந்து விரைந்தோடி, தேவநகரத்தைச் சேர்ந்து, துக்காராம் ஸ்வாமிக் கெதிரில் நின்றனன். வாடின பயிரானது மழை நீரைக் கண்டவுடன் தலையெடுத் தோங்குகிறபடி, துக்காராம் ஸ்வாமி, ஸ்ரீ வைநதேயனைக் கண்டமாத்திரையில் மனத்தகத்தில் உற்சாகத் தையும், சரீரத்தில் வலிவையும் பெற்று எழுந்து ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, அஞ்ஜலி ஹஸ்தராய் நின்றுகொண்டு, "ஓ, ஸ்வாமி! எனது உயிர் நாதனாகிய ஸ்ரீருக்மிணீகாந்தன் க்ஷேமமாயிருக்கின்றானா? அவற்கு உகந்தவர்களாகிய ஸாது ஜனங்கள், அப் புண்டரீக வரதனை அநவரதமும் ஸேவித்து ஆனந்திக்கிறார்களா? நான் அந்த லோக நாதனுடைய பிரிவாற்றாமல் இரவும் பகலும் துயருறுகின்றேன்; என்றைக்கு எனது ப்ராணநாதனுடைய தரிசனம் எனக்குக் கிடைக்குமோ!" என்றனர்; அதனைக் கேட்ட கருடன், "ஓ, பாகவத முதல்வ! நீ ருக்மிணீபதியின் தரிசன விருப்பமிக்கவனாய், அவனுடைய பிரிவை ஆற்றாமல் இங்கு வருந்தி வாடுகின்றனை;

* துக்க + அர்ணவம் - விசனக்கடல்.
† விஹக + ஈச்வரன் - பக்ஷிராஜன் - கருடன்.

'மாந்தர் தமக்கு மனத்துயர மெஞ்ஞான்றும்
தாங்கரிய துக்கந் தரும்' என்றபடி,

நினது தரிசனத்தைக் கோரி, அதனால் நினது பிரிவை ஆற்றாதவனாய், எமதுயிர் நாதனாகிய பண்டரிநாதன், நினது துக்கத்திலும் பதின்மடங்கதிகமான துக்கத்தை, அங்கு அநுபவித்துக்கொண்டிருக்கின்றனன். அவன் படும் வருத்தம், என்போன்றவர்களால் அளவிடுதற் கரிதாய் வாசாமகோசரமாய் இருக்கின்றது. உன்னை இப்போதே என் முதுகில் சுமந்து வரும்படி, எனதுயிர்நாதன் நியமித்தனன். அவன் உனக்குக் கொடுத்த திருமுகம் இதோ இருக்கின்றது'' என்று அதனை அவர் கரத்திலிட்டனன். துக்காராம் ஸ்வாமி, வந்தனம் செய்து அந்தத் திருமுகத்தை ஏற்று, அதனைத் தமது திருமுகத்தில் உள்ள கண்களிரண்டினும் ஒற்றிக்கொண்டு, தலைமேற் சுமந்து கூத்தாடி அமர்ந்து, பிரித்து வாசித்து, ஆனந்தக் கண்ணீர் பெருக்கி, *கமல நண்பனைக் கண்ட கடிக் கமலமலரே போலவும், முழுநிலாவைக் கண்ட முந்நீரே போலவும், ஆஞ்ஜநேயரளித்த ஸ்ரீ ராமநாம முத்ராமோதிரத்தைக் கண்ட ஸீதையே போலவும் பரமானந்த பரிதராய், கருடன் மூலமாய், ஸ்ரீவாஸுதேவனுடைய க்ஷேமலாபங்களைக் கேட்டு மகிழ்ந்து, ''ஓ, † விஹங்கபூபதி! உன்னைக் கண்ட மாத்திரையில், எனது மனக்கலக்க முற்றும் மாறிற்று. துக்கச் சுடுநெருப்பு ஆறிற்று. வேத வடிவினனாகிய உன்னைப் புகழ்தல் யார்க்கு ‡ தரம் ஆகும்? புராண புருஷனாகிய புருஷோத்தமனை, நினது முதுகின்மேற் சுமந்துகொண்டு, பரமயோகியர்களுடைய இதய வீதியில் உலாப் போதுவை! ஸ்ரீநிவாஸனுடைய பாதபத்மங்கள், நினது கரங்களுக்கு ஆபரணங்களாய் விளங்கும். இத்தகைய நினது பெரும் புகழை நான் என்னவென எடுத்துரைப்பேன்! நீ, அந்த பகவானுக்கெதிர் முகத்தில் § மணி முகுரம்போல, பாகவதர்களுக்குப் ¶ புருஷகாரபூதனாய் விளங்கி யிருக்கின்றனை. பிறரால் ‖ வேறற்கரிய தேவேந்திரனை ஜயித்து, அவன் ஸ்வாதீனத்திலிருந்த அமிர்தத்தைப் பாம்பினங்களுக் களித்து, நினது தாயாகிய விநதையின் அடிமைத் தன்மையை நீக்கின மஹாநுபாவன் நீ யல்லவா! நீ, பகவானுக்குப் பிரிய தாஸன்; தோழன்; வாகனமாய் ஓங்குபவன்; ஆஸனமாய்த் தாங்குபவன்; கொடியாய் ஆடுபவன்; விதானமாய் மூடுபவன்; விசிறியாய் விளங்குபவன்;

'பண்டரி நாதற்குப் பறவையர சாங்கருடன்
தொண்டனும் ஊர்தியாந் தோழனும்—விண்டடவும்
திண்கொடியாம் ஆசனமாம் சீரார் விதானமாம்
தண்விசிறி யாய்விளங்குந் தான்' என்று

* கமல நண்பன் - சூரியன். † விஹங்கம்+பூபதி - பறவை அரசன்.
‡ தரம் - எளிது. § மணி முகுரம் - அழகிய கண்ணாடி.
¶ புருஷகார + பூதன் - ஜீவச்செயற் காதாரமானவன்.
‖ வேறற்கு + அரிய - வெல்தல் + கு + அரிய - வெல்லுதற் கருமையாகிய.



உனது புகழை, ஞானிகள் ஆயிரமுகத்தாற் கூறுகின்றனர்; மந்தமதியினனாகிய நான், உன்னை எங்ஙனம் ஏறி நடத்துவேன்! எனது உள்ளன்பை நினது தலைவற்கு விண்ணப்பித்து, அவனை இங்கு அழைத்துக் கொண்டுவந்து, எனது இச்சையை நிறைவேற்றியருள்க'' எனப் பிரார்த்தித்தனர். அதனைக்கேட்ட கருடன், ஸந்தோஷித்து, ''ஓ, ஸாது ஜன முதல்வ! சோகமுறற்க. அன்பரைக் காத்தருளும் புண்யசீலனாகிய பண்டரிநாதனை, இதோ அழைத்துக்கொண்டு வருவேன்'' என்று, அவரைத் தேற்றி, பண்டரிபுரத்திற்குச் சென்று, புண்டரிகவரதற்கு வந்தனம் செய்து, துக்காராம் ஸ்வாமியின் வேண்டுகோளை விண்ணப்பித்து, ''எனது தலைவ! நீரைவிட் டப்புறப்பட்ட மீனைபோல, நினது கூட்டுற வென்னும் தண்ணீரினீங்கி, துக்காராமர் துள்ளித் தவிக்கின்றனர். விரைவில் அவர்க்கு, நினது ஸேவை யருளாயேல், அவருடலில் உயிர் நிலைத்திராது'' எனப் புகன்றனர். இவ் விருத்தாந்தத்தை ஸ்ரீ ருக்மிணீதேவி கேட்டு, ''ஓ, நாதா! இங்கே உற்சவ நிமித்தம், எண்ணிறந்த பாகவதர்கள் வந்திருக்கின்றனர். நீ, இப்போது புறப்பட்டுப் போனால், சந்திரனில்லாத * பௌர்ணமாஸியைப்போல, இவ்வூர் அமங்களமாய் இருக்கும். ஆகையால், உற்சவம் முடிந்தவுடனே, நீ போகலாம்'' எனக் கூறினள். அப்போது, பகவத் தரிசனத்திற்காக, சேக்கு மம்மது, கணேசநாதர், நிம்பராஜர் முதலிய பாகவதர் அநேகர் வந்து, த்வஜஸ்தம்பத்தருகில் ஸாஷ்டாங்க வந்தனம் செய்து, ஆனந்த மிக்கவர்களாய், நிருத்த கீர்த்தனங்கள் செய்துகொண்டிருந்தனர்.

அப்போது, பண்டரிநாதன், ஸ்ரீ ருக்மிணீ தேவியை நோக்கி, ''இந்த நிம்பராஜனுக்கு, நீ ப்ரத்யக்ஷமாய், அநுக்ரஹித்தருள்க'' என நியமித்தனன்; இந்த நிம்பராஜருடைய விருத்தாந்தம் என்னவென்றால், உத்தரதேசத்தில் தேவந்த பட்டணத்தில் இவர், ஒருயர்ந்த வுத்யோகஞ் செய்துகொண்டு பெருங்குடும்பியாய் வாழ்ந்து, வைராக்ய சீலராய், ஸேது முதல் ஹிமாசலம் வரையிலுள்ள பூமியெல்லாம் யாத்திரை செய்து, பகவந் நாமத்யானபரராய் விளங்கி யிருந்தனர். பகவத் பக்தியற்ற யாகம், தவம், தானம் முதலியவைகள் நிஷ்பலம் எனத் தீர்மானித்த இந்த நிம்பராஜர், பகவானை த்யானித்தபடியே காலங்கழிக்கையில், ஸ்ரீ பாண்டுரங்கன், இவர் விஷயத்தில் பரமக்ருபை நிறைந்தவனாய், தான் நினைத்த மாத்திரையிலேயே, கஜாநநனை வரவழைத்து, ''ஓ, கணநாதா! நீ, எனது அநுமதியின்படி, நிம்பராஜனுக்கு ஸ்ரீதாரக மந்திரத்தை யுபதேசித்து, ஸுஜ்ஞானத்தை உணர்த்தியருள்வை'' என நியமித்தனன். மூஷகவாஹனன், ஸ்ரீவாஸுதேவாஜ்ஞையை சிரஸா வஹித்து, நிம்பராஜர் கனவில் ஸாக்ஷாத்கரித்து, தனது வாயிலிருந்த தாம்பூலத்தை இவர் வாயிற் கொடுத்து, ஸ்ரீதாரக மந்திரத்தை யுபதேசித்து, மறைந்தனன். உடனே நிம்பராஜர், விழித்தெழுந்து, கனவை

* பௌர்ணமாஸி - பர்வம்.

னவாக நினைந்து மகிழ்ந்து, தமது வாயிலிருந்த தாம்பூலத்தை மஹா ப்ரஸாதமென்றுட்கொண்டு, ஸ்ரீ தாரக * மந்த்ரோபதேஷ்டையாகிய விக்நேசனுக்கு வந்தனம் செய்து, அவனிடத்தில் ஆசார்ய மரியாதை பாராட்டி, தனக்கு அவன் உபதேசித்த ஸ்ரீராம மந்த்ரத்தை த்யானம் செய்துகொண்டிருந்தனர். கணபதியின் உச்சிஷ்ட மஹத்வத்தால், நிம்பராஜர்க்கு ஞான பக்தி வைராக்யங்கள் அதிகரித்தபடியால், இவர் அந்யத்தை மறந்து, அநவரதமும் பகவந்நாம ஸ்மரணையும், த்யானமும் செய்துகொண்டிருந்தனர். இவர், இப்போது பண்டரிபுரத்திற்கு வந்தபடியால், இவர்க்குப் ப்ரத்யக்ஷமாய் அநுக்ரஹிக்கும்படி, ஸ்ரீபண்டரிநாதன், ஸ்ரீ ருக்மிணீ தேவிக்கு நியமித்தனன். உடனே, ஜகந்மாதாவாகிய ருக்மிணீதேவி, ஒரு தோட்டக்காரியென வேஷந்தரித்து, ஒரு கூடையில், வள்ளிக்கிழங்கைக் கொண்டுவந்து, ஸந்நிதிவாசலிற் குந்தியிருந்து கிழங்கு விற்பவளைப்போல அபிநயித்துக் கொண்டிருந்தனள். அப்போது ஸ்வாமியை ஸேவித்து நிம்பராஜர் வெளியே வந்தனர். ஸ்ரீ ருக்மிணீ தேவியாகிய தோட்டக்காரி, இவரை நோக்கி, தம்பீ! நான், வீட்டிற் குழந்தையை ஒன்றியாய் விட்டு வந்தனன். நீ, கொஞ்சநேரம் எனது கூடையைக் காத்துக்கொண்டிருந்தால், நான் வேகமாய் எனது வீட்டுக்குச் சென்று, குழந்தையைக் கொண்டுவந்து விடுவேன்" என்று வேண்டிக்கொண்டனள். நிம்பராஜர், அம் மங்கையை நோக்கி, அம்மா! அப்படியே நான் இங்குனது கூடையைக்காத்துக்கொண்டிருக்கின்றேன், நீ விரைவாய்ப் போய்வருக" எனப் புகன்றனர். அவ்வணங்கு சிறிது தூரம் கண்ணுக்குத் தெரியும்படி நடந்துசென்று மறைந்தனள். நிம்பராஜர் நெடுநேரம் காத்திருந்தும், அப் பெண் வரவில்லை. "நான் என்ன செய்வேன்!" என்றெண்ணிக்கொண்டே அவர் அக்கூடையை மூடியிருந்த தட்டை எடுத்துவிட்டு உள்ளே பார்க்கையில், அது பொற்கலசங்களால் நிரம்பி யிருந்தது. அதைக் கண்டு அவர் ஆச்சரியமடைந்தவராய், "எமது தாயாகிய ஸ்ரீருக்மிணீதேவி, என்னை ப்ரபஞ்ச மாயையில் அகப்படுத்தும்பொருட்டு, இங்ஙனம் செய்தனள்" என்று சொல்லிக்கொண்டே, வைராக்ய சீலராய், பாம்பைக்கண்ட † மண்டூகத்தைப்போல அஞ்சி ஓடி, கோபுரவாசலில் ஸாஷ்டாங்க வந்தனம்செய்து "பண்டரிநாதா! ருக்மிணீநாதா! தேவாதி தேவா! ஸர்வலோக சரண்யா! நினது பாத பத்மங்கள் தவிர, வேறொன்றினிடத்திலும் எனக்கு விருப்பங் கிடையாது. பிரமனாதியர்களுடைய பதவிகள் எனக்குத் துரும்பளவுகளாய்த் தோன்றுகின்றன. நீ, என்மேல் உனது பரிபூர்ண கடாக்ஷ வீக்ஷண்யத்தைச் செலுத்தியருளின பிறகும், என்னை ஏனோ சோதிக்கின்றனை! உன்னைப்போல நான், ஸர்வ ஶக்தனாய் இருப்பேனாயின், நினது சோதனைக்குச் சோர்வின்றித் தாங்கிநிற்பேன். சக்தியற்றவனாகிய என்னை என் அலைக்கழிக்கின்றனை!" எனக் கண்ணீர் பெருக்கி விண்ணப்பித்தனர். ஸ்ரீ ருக்மிணிதேவி விட்டல நாதனை

* மந்த்ர + உபதேஷ்டை - மந்திரத்தை உபதேசித்தவர்.

† மண்டூகம் - தவளை.



நோக்கி, "எனதுயிர்க்காதல! நினது நியமனப்படியே, இந்நிம்பராஜர்க்கு அளவிறந்த பொருட் செல்வமளித்தேன்; இவன் அதனை அலக்ஷ்யஞ் செய்தான்" என விண்ணப்பித்தனள். வாஸுதேவன், புன்னகை புரிந்து, "காதலீ! எனது பக்தன் ஆசையிலான்; எனது பாதபத்மங்களைத் தவிர வேறொன்றையும் விரும்பான்" எனக் கூற, ஸ்ரீ ருக்மிணீ தேவி ஸந்தோஷித்தனள்.

மறுநாள் விடியற்காலையில், நிம்பராஜரும், அநேக ஸாது ஜனங்களும் சந்த்ரபாகைக்கு வந்து, ஸ்நான ஸந்தியா வந்தனங்கள் முடித்து, நிருத்த கீர்த்தனங்கள் செய்துகொண்டிருக்கையில், நிம்பராஜர்க்கு ஆடை யணிகளை வழங்கவேண்டுமென்னும் எண்ணத்துடன் பண்டரிநாதன், ஒரு வேதிய வுருவந்தாங்கி, கழுத்தில் திருத்துழாய் மாலையையும், சிரத்தில் குல்லாயையும், சரீரத்திற் காஷாய வஸ்திர * கஞ்சுகங்களையும் அணிந்துகொண்டு, சந்த்ரபாகைக்கரைக்கு வந்து, தான் பூண்டிருந்த துளசி மாலையையும், குல்லாயையும், காஷாய வஸ்திரத்தையும், காஷாய கஞ்சுகத்தையும் நிம்பராஜர்க் கருகில்வைத்து, அவரை நோக்கி "ஓ மஹாத்மா! நான் ஸ்நானம்செய்து வருமளவும், சிறிதுநேரம் இவைகளைக் காத்துக்கொண்டிரு; இங்கே பல ஜனங்கள் கூட்டமாய் இருக்கிறபடியால், நான் திரும்பி வரும் வரையில், நீ மிகவும் ஜாக்ரதையாய், இப் பொருள்களைக் காப்பாற்றவேண்டும்" எனப் புகன்று, ஸ்நானம் செய்யப் போகிறவனைப்போல தண்ணீரிலிறங்கி மறைந்தனன். நிம்பராஜர் நெடுநேரம் காத்திருந்தும், ஸ்நானத்துக்குச் சென்ற வேதியன் திரும்பிவரவில்லை. அவர், "நான் என் செய்வேன்!" என்று சிந்தித்துக்கொண்டு, அங்கிருந்த ஸாது ஜனங்களுக் கதனைத் தெரிவிக்க, அவர்கள் ஆச்சரியப்பட்டு, "ஓ, நிம்பராஜ! வந்தவன் வேதியனல்லன், ஸ்ரீருக்மிணீகாந்தன்; அவனே வேதியவுருவந் தாங்கிவந்து உனக்கு இப்பொருள்களை அளித்துவிட்டு மறைந்தனன். ஆகையால், அவைகளை நீ அணிந்துகொள்ளக்கடவை" எனப் புகன்றனர். நிம்பராஜர் ஸந்தோஷித்து, ஸாதுகோஷ்டிக்கு வந்தனம் தந்து, அக் காஷாய வுடைகளை யணிந்தனர். அப்போது அங்கிருந்த ஸாதுக்களனைவரும் அந்த பாகவதமுதல்வரை நோக்கி, "நிம்பராஜ! நாங்களனைவரும் அதிக தாகத்தால் வருந்தி வாடுகின்றோம்;

'செவிக்குண வில்லாத போது சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்' என்றபடி,

எந்நேரமும் உனது கீர்த்தனாமிர்த பானம்பண்ணி, எங்கள் தாகந்தணிய வேண்டுகின்றோம். ஆகையால் நீ, இம்மணல்மேட்டில் நின்றுகொண்டு பகவானைப் பாடினையேல், அவ்வமுத வெள்ளம் எமது செவிவாயில் நுழைந்து, பகவதநுபவ † தாபத்தைக் குளிர்வித்து, எமக்கு அளவிறந்த

* கஞ்சுகம் - சட்டை.

† தாபம் - வெப்பம்; பகவத் + தாபம் - பகவான் விஷயத்தில் பக்தி செலுத்தவேண்டும் என்னும் ஆசையாகிய வெப்பம்.

இன்பத்தை யூட்டும்" எனக் கூறினர். நிம்பராஜர் ஸ்ரீ ருக்மிணீபதியைத் தியானித்து, மணன்மேட்டில் நின்று, ஆனந்த பரவசராய் மெய்மறந்து, பகவானைப் பாடிக்கொண்டிருந்தனர். இக் கீர்த்தனாமிர்தத்தை நாகர நிச்சயித்தவர்களாய், முப்பத்துமுக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்களும், யக்ஷ கின்னராதியர்களும், ஆகாச மார்க்கத்திலிருந்து ஆனந்த ப்ரவசர்களாய்க் கேட்டுக்கொண்டிருந்தார்கள். இக் கீர்த்தனங்களைக் கேட்பதனால், பூலோக ஸ்வர்க்கலோகங்களில் இருப்பவர்களெல்லாரும் மெய்மறந்து பரவசரானார்கள். புருஷோத்தமனும் புராண புருஷனுமாகிய புண்டரீகவரதற்கு, இப்பரம பக்தருடைய கீர்த்தனத்தால் ஸந்தோஷம் பொங்கி வழிந்ததனால், தான், ஒரு சிறு குழந்தை வடிவமாய்க் கரத்தில் ஒரு *தாளவ்ருந்தகத்தைப் பிடித்து நிம்பராஜருடைய தோண்மேற்குந்தியிருந்து, அவருடைய திருமுகத்தில் வேர்வை யரும்பாதபடி, பைய விசிறுவானாயினன். பக்தவத்ஸலனாய், † பதிதபாவனனாய், பரமதயாகரனாய், பரமயோகி ஜன ஹ்ருதய பத்ம வாஸியாய், பிரமனாதி ஸகலாத்மாக்களுக்கும் அந்தர்யாமியாகிய ஸ்ரீ ருக்மிணீகாந்தன், நிம்பராஜருடைய தோண்மேற் குந்தியிருந்து, அவர்க்குச் சிரம பரிகாரமாய் விசிறிக்கொண்டிருந்த விநோதத்தை என்னவென்றியம்பலாம்! அப்போது அனைவரும் சிரவணானந்தம் அடைந்து ஆனந்த வாரிதியில் மூழ்கினவர்களாய் விளங்கினார்கள். இரவு நான்கு ஜாமங்களும் கடந்து ஸூர்யோதயமாகியும் அனைவரும் தமதுடல்களைத் தாம் உணராமல், சொக்கி யிருந்தார்கள். வர்த்தகனொருவன், ஸ்நானம் செய்யு நிமித்தம், சந்த்ரபாகைக்கு வந்து, நிம்பராஜருடைய தோண்மேல் அத்யத்புதமான பேரழகுடன் திவ்யமங்கள விக்ரஹ விசிஷ்டனாய், அவர்க்கு விசிறிக்கொண்டிருந்த குழந்தையைத் தரிசித்து ஆச்சரியமடைந்து, அருகில் வந்து நிம்பராஜரைத் தழுவிக்கொண்டு, அவர் தோளை நோக்குகையில், அதன்மேலிருந்த குழந்தை மறைந்தது. அப்போது அவ்வர்த்தகன் அழுதுகொண்டு, விம்மிதமடைந்து, தேம்பி யழுத குரலுடையவனாய், "தேவாதிதேவா! ருக்மிணீதேவியின் பணிவிடைக்கு மகிழ்வுறும் நீ, உனது பக்தற்குச் சிரம பரிகாரமாக விசிறிக்கொண்டிருந்து, நான் அருகில் வந்தவுடனே ஏனோ மறைந்தனை!" எனக் கூறிக் கொண்டிருக்கையில், அங்கிருந்தா ரனைவரும் அதிசயித்து, அவ்வர்த்தகனுடைய வாய் மொழிகளுக் கேற்றவண்ணம், நிம்பராஜருடைய தோளிற் சில நிதரிசனங்களைக் கண்டு, பேரானந்த பரவசர்களாய், வந்தன வணக்க வழிபாடுகளைச் செய்து மகிழ்ந்தார்கள். கீர்த்தனம் நிறுத்தப்பட்டது, அனைவரும் குளிக்கப்போனார்கள்; உற்சவம் நிறைவேறினவுடனே, பாகவதர்களனைவரும், பகவந்நியமனத்தைப் பெற்று, தத்தம் இருப்பிடங்களுக்குச் சென்றார்கள்; பண்டரிநாதன், ஸ்ரீ ருக்மிணீதேவியை நோக்கி, பாகவதர்களனைவரும் தத்தம் இருப்பிடங்களுக்குப் போய்விட்டபடியால், பண்டரிபுரமானது, கலைகளற்ற சந்தி

* தாளவ்ருந்தகம் - பனையோலையாற் செய்த விசிறி.

† பதித பாவனன் - பாவ பரிகாரி.



ரனைப்போல விளக்கமற்றிருக்கின்றது. எனக்கிப்போது இவ்விடத்திலிருக்க ருசிக்கவில்லை. தேவ நகரத்துக்குப்போய், துக்காராமற்குக் காட்சிதந்து வருவோம் வா" எனப் புகன்று, அந்த ஸ்ரீதேவியுடன் கருடாரூடனாய், அந்நகரை நோக்கிச் செல்வானாயினன். வைஷ்ணவ சிகாமணியாகிய துக்காராம் ஸ்வாமி, மேகத்தை எதிர்நோக்கும் சாதகப் பறவையேபோல, பண்டரிநாதனுடைய வருகையை எதிர் நோக்கியிருந்து, அப்போது தனக்கு நேரிட்ட நன்னிமித்தங்களைக் கண்டு, "என்று தாய் தந்தையர்களாகிய ஸ்ரீருக்மிணீ வாஸுதேவர்களை, நான் எப்போது தரிசிப்பேன்!" என்று சிந்தித்துக்கொண்டிருந்தனர். அப்போது, பண்டரிநாதன் ஸ்ரீருக்மிணீ ஸமேதனாய் கருடவாகனத்தின்மேல் அவர்க் கெதிரிற் றோன்றிக் காட்சி கொடுத்தனன். துக்காராம் ஸ்வாமி ஆனந்த பரவசராய், பௌர்ணமாசியிற் சந்திரனைக்கண்ட ஸாகரமே போல *"ஜயவிஜயீபவ" என்று கோஷித்துக்கொண்டு, சரீரம் பூரித்து, எதிர்கொண்டு சென்று, ஸாஷ்டாங்க வந்தனம் செய்து, அஞ்ஜலி ஹஸ்தராய் நின்று,

"ஓம்நம: பரமார்த்தார்த்த | ஸ்தூல ஸூக்ஷ்ம க்ஷராக்ஷர |
வ்யக்தா வ்யக்த கலாதீத | ஸகலேச நிரஞ்ஜந || (௧)

குணாஞ்ஜந குணாதார | நிர்குணாத்மந் குணஸ்த்தித |
மூர்த்தா மூர்த்த மஹா மூர்த்தே | ஸூக்ஷ்ம மூர்த்தேஸ்ப்புடாஸ்ப்புட ||

கராளரூப ஸௌம்யாத்மந் | வித்யா வித்யாம யாச்யுத
ஸதஸத் ரூபஸத்பாவ | ஸதஸத்பாவ பாவந (௩)

நித்யா நித்ய ப்ரபஞ்சாத்ம | நிஷ்ப்ரபஞ்சாமலாஸ்ரித
ஏகாநேக நமஸ்துப்யம் | வாஸுதேவாதி காரண || (௪)

யஸ்த்தூல ஸூக்ஷ்ம ப்ரகட ப்ரகாசோ | யஸ்ஸர்வ பூதோ ந ச ஸர்வபூத:
விச்வம் யதச்சைததவிச்வஹேதோ | நமோஸ்து தஸ்மை புருஷோத்தமாய (௫)

ஓங்கார மந்தணத்தி னுட்பொருளாய் ஸ்தூலமாய்
நீங்காத ஸூக்ஷ்மமாய் நீண்ட வுருவருவாய்
ஓங்கும் க்ஷராக்ஷரமாய் ஒப்பில் நிராமயமாய்த்
தேங்குஸகலேச சிறந்தகலா தீத (௧)

பூநிலாய வைந்துமாய்ப் புனற்கணின்ற நான்குமாய்
தீநிலாய மூன்றுமாய்ச் சிறந்த காலிரண்டுமாய்
மீநிலாய தொன்றுமாகி வேறுவேறு தன்மையாய்
நீநிலாய வண்ணம் நின்னை யார்நினைக்க வல்லரே (௨)

ஏக மூர்த்தி மூன்று மூர்த்திநாலு மூர்த்தி நன்மைசேர்
போக மூர்த்தி புண்ணியத்தின் மூர்த்தி யெண்ணில் மூர்த்தியாய்

* ஜயவிஜயீபவ - வெற்றிபெற்று விளங்குபவனே.

நாக மூர்த்தி சயன மாய்நல ங்கடல்கி டந்துமேல்
ஆக மூர்த்தி யாய வண்ண மென்கொ லாதி தேவனே (௩)
காலநேமி காலனே கணக்கி லாதகீர்த்தியாய்
ஞாலமேழு முண்டு பண்டோர் பாலனாய பண்பனே
வேலை வேவ வில்வ ளைத்த வெல்சி னத்த வீரநின்
பாலராய பத்தர் சித்தம் முத்தி செய்யு மூர்த்தியே (௪)
ஊனில் மேய வாவி நீஉ றக்க மோடு ணர்ச்சிநீ
ஆனில் மேய வைந்தும் நீஅ வற்றுள் நின்ற தூய்மைநீ
வானி னோடு மண்ணும் நீவ ளங்க டற்ப யனும்நீ
யானும் நீஅ தன்றி யெம்பி ரானும் நீயி ராமனே (௫)
மண்ணு ளாய்கொல் விண்ணு ளாய்கொல் மண்ணுளேம யங்கிநின்று
எண்ணு மெண்ண கப்ப டாய்கொ லென்ன மாயை நின்தமர்
கண்ணு ளாய்கொல் சேயை கொல்ல னந்தன் மேல்கிடந்தவெம்
புண்ணி யாபு னத்து ழாய லங்க லம்பு னிதனே (௬)
எட்டு மெட்டு மாயொ ரேழு மேழு மேழு மேழுமாய்
எட்டு மூன்று மொன்று மாகி நின்ற வாதி தேவனே
எட்டி னாய பேத மோடி றைஞ்சி நின்ற வன்பெயர்
எட்டெ ழுத்து மோது வார்கள் வல்லர் வான மாளவே (௭)

எனத்துதித்து, மீட்டும் வந்தனம் செய்து, ஸ்ரீ ருக்மிணீகாந்தனுடைய பாதங்களை விடாதுபற்றி, அவைகளே கதியென் றிருந்தனர்.

ஸ்ரீ கருடாருடாயநம:

## அறுபத்தொன்றும் அத்தியாயம்

# துக்காராம்ஸ்வாமி நிஜசரீரத்தோடு பரமபதம்சென்ற சரித்திரம்

ஸ்ரீபாண்டுரங்கன் ஸந்தோஷித்து, துக்காராம்ஸ்வாமியைநோக்கி "உனக்கு வேண்டிய வர்த்தைக்கேள்; கொடுக்கிறேன்" என்றனன். அவ்வைராக்யசீலர், பகவானை நோக்கி, "புருஷோத்தம! நினது பாத கமலங்களில் இடையறாத பக்தி யுண்டாயிருக்கும்படி எனக்கு அருள் புரிந்தனை. ஆதலால் நான், ஞானவெற்றிபெற்றேன். ஸகல ஜகத்காரண பூதனாகிய உன்னிடத்தில் எவனுக்கு அசைவற்ற பக்தி உண்டாகுமோ, அவனுக்கு, ஸர்வோத்தமமாகிய மோக்ஷம் * கரதலாமலகமாகும். அப்படிப்பட்டவனுக்கு, அறம் பொருள் இன்பங்களாற் பயன் என்னை! நினது அளவிறந்த கல்யாண குண கணங்களை அனவரதமும் புகழ்ந்து கொண்டு, நினது தாஸ ஜனங்களோடு கூடியிருக்க எனக்கு அதிக ஆசையாயிருக்கின்றது. நான் போலியாசார சீலனாகையால், வைராக்ய

* கரதல+ஆமலகம் - உள்ளங்கையிலேந்தின நெல்லிக்கனி.



முதலாகிய உண்முக வேடத்தோடு, உனக்கும் உனது மெய்யன்பர்க்கும் உகந்தவனாம்படி அருள்புரிக. சித்தென்றும் அசித்தென்றும் வியாபித்துள்ள ஸர்வப்ரபஞ்சமும், நினது ஸ்வரூபமென்றெண்ணிக் கொண்டு, நினது விபூதியாகிய சேதனாசேதனங்களில், * ராகத்வேஷங்களின்றி, பிறருடைய நயநஷ்டங்களையும், இன்பதுன்பங்களையும் என்னுடையவைகளாயெண்ணிக்கொண்டு, இழிதகையார்க்குள் நானே முதல்வன் என மதித்து வாழக்கூடிய உறுதிநிலையில் என்னை நிறுத்தியருள்க. பக்தவத்ஸல! பிறர் குற்றங்களும், எனது குணங்களும் எனக்குத் தோன்றாமல் இருக்கும்படி கிருபைசெய்க" என விண்ணப்பித்தனர். பகவான் ஸந்தோஷித்துப் புன்சிரிப்புடன் அவரைநோக்கி, "நீ கேட்ட வரத்தைக் கொடுத்தேன்" எனப்புகன்று, கருடனை நோக்கி, "வைநதேயா! இந்த துக்காராமனுடைய நல்நடக்கையும், வைராக்யமும் இணையற்றவைகளாயிருக்கின்றன" எனக்கூற, கருடன் மிகவும் வணக்கமுடையவனாய், "சக்ரபாணீ! இவர், உத்தவாமிசராகிய நாமதேவருடைய † அபராவதாரமாகையால், இவருடைய திருவுருவம் நினது ஸ்வரூபமாயிருக்கின்றது. இதற்குமேல், நான் ஒன்றுஞ் சொல்ல அறியேன்" என்று விண்ணப்பஞ்செய்தனன்.

அப்போது பண்டரிநாதன், துக்காராமரைநோக்கி, "ஓ வத்ஸா! எனக்கு மிகவும் பசியாயிருக்கின்றது; உனது க்ருஹத்தில் ஏதேனும் பழையதிருந்தால் எனக்குக் கொண்டுவந்திடுக" எனக் கேட்டனன். துக்காராம்ஸ்வாமி, நறுநீர் கொண்டுவந்து, அதனால் ஸ்ரீ. ருக்மிணீ வாஸுதேவர்களுடைய கால்களை அலம்பி, அவர்களுக்கு ஆஸனமளித்து அதனில் எழுந்தருளச்செய்து, தமது வீட்டிலிருந்த பழைய அப்பத்தைக் கொண்டுவந்து, பகவானுக்கெதிரில் இடச்சுத்திசெய்து, ஓர் இலையில் அதனை இட்டுப் ‡ பானீயத்தையும் ஒரு பாத்திரத்தில் வைத்தனர். அவ்வப்பம் இரண்டு மூன்று நாட்களுக்கு முந்திச் சுடப்பட்டதனால், உலர்ந்து, பசையற்று, மெல்லமுடியாமல் உறுதியாயிருந்தது. § ஸ்ரீ பூ நீளைகளும், பிரமனாதிதேவர்களும், வேண்டிப் படைக்கும் திவ்யாமிர்தத்தை ஏற்றுக்கொள்ளாத பகவான், இந்த அன்பருடைய பரம பக்திக்கு மகிழ்ந்து, இவர் இட்ட இரண்டு அப்பங்களையும் மிக விரும்பிப் புசித்தனன்.

'பத்திர மாயினும் பனிமல ராயினும்
பழமே யாயினும் பனிநீ ராயினும்
பக்தி யுடனே பரமனும் எனக்குப்
பரிந்து தரப்படின் பரிசுத்த மான
பதார்த்தமா மதனைப் பக்ஷமாம்
பண்புட னேற்றுநான் பயனளிப் பேனே'

* ராகத்வேஷங்கள் - விருப்பு வெறுப்புகள். † அபர அவதாரம் - பிந்தின அவதாரம். ‡ பானீயம் - பருகும் நீர். § ஸ்ரீ பூ நீளைகள் - விஷ்ணுவின் மனைவியர்.

'எவன் எனக்கு மெய்யன்புடன் பத்ரத்தையாவது, புஷ்பத்தையாவது, பழத்தையாவது, தண்ணீரையாவது ஸமர்ப்பிக்கிறானோ, அப்படிப் பட்டவனால் பக்தி பூர்வகமாய் ஸமர்ப்பிக்கப்பட்ட அப் பதார்த்தத்தை, நான் அதிக விருப்பமாய் ஏற்று, அதற்குத் தகுந்த பலனைத் தருகி றேன்' என்று பகவத் கீதையில் சொல்லப்பட்டுள்ள அர்த்த விசே ஷத்தை, துக்காராம் ஸ்வாமி விஷயத்தில் பகவான் அநுஷ்டித்துக் காட்டினன். த்ரௌபதி, ப்ராஹ்மண ஸமாராதனை முடிந்தவுடனே, பற்ற லம்பி வைத்திருந்த பாத்திரத்தில் ஒட்டியிருந்த சோற்றுப் பொருக்கால் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு த்ருப்தி யுண்டாக்கினள். வேங்கடாசலத்தில் இருந்த பரம பாகவதனான குயவன் ஒருவன், மண்மலர்களாலர்ச்சித்து ஸ்ரீநிவாஸனை மகிழ்வித்தனன். குரு பக்தி விஸ்வாஸமுள்ள சபரி, தனது எச்சிற் பழங்களால் ஸ்ரீராமருக்கு ஆனந்த முண்டாக்கினள், விருந்தி னர்க்கு உபசரிக்கும் இயல்பினையுடைய ரந்திதேவர், சண்டாளனாகிய விருந்தினனொருவனை, பகவத் ஸ்வரூபனாக மதித்து, தமது பாத்திர தீர்த்தத்தை யளித்து, ஸர்வசரீரியாகிய பகவானுக்குப் பேரானந்தத்தை உண்டாக்கினர். இப்போது, துக்காராம் ஸ்வாமி, உலர்ந்த அப்பத் தைப் படைத்து, பகவானுக்கு இஷ்ட ஸித்தியை உண்டாக்கினர். த்ரௌபதி, துர்வாஸ பயத்தாற் சோகமுற்றதனால், ஸ்ரீ கிருஷ்ணன், சோற்றுப் பொருக்கை ஏற்றுக்கொண்டு, பாண்டவர் வருத்தத்தை மாற்றி யருளினன். வேங்கடாத்திரியில் வாழ்ந்த பக்தனான குயவன், தனது அன்பின் பெருக்கால் அர்ச்சித்த புஷ்பத்தை ஸ்ரீநிவாஸன் அங்கீகரித் தனன். சபரி, தனது ஆசார்ய நியமனத்தைச் சிரமேல் தாங்கி, தனது முனிகோல்லாஸத்திற்காகச் செய்த எச்சிற்பழ நிவேதனத்தை ஸ்ரீராமர் ஏற்றுக்கொண்டனர். ரந்திதேவர், தாகம் அதிகரித்துத் தண்ணீரை இச்சித்த சண்டாளனை, பகவத் ஸ்வரூபனாக மதித்து, த்ருப்தியடையச் செய்தனர். துக்காராம்ஸ்வாமி வீட்டுக்கு, பகவான், தானேவந்து, "உனது வீட்டிலுள்ள பழைய உணவு ஏதுவேனும் எனக் கிடுக" எனக் கேட்டு, அந்த பாகவத முதல்வர் அன்புடன் இட்ட பழைய அப்பத்தை உட்கொண்டு, பரமானந்த மடைந்தனன். ஆகையால், த்ரௌபதி முதலிய நால்வருடைய ஆராதனங்களைக் காட்டிலும், துக்காராம் ஸ்வாமி செய்த ஆராதனம் மிகவும் சிலாக்யமா யிருக்கின்றது. ஸ்ரீபாண்டு ரங்கன் இங்ஙனம் புசித்துத் தாம்பூலத்தை ஏற்றுக்கொண்டு, துக்காராம் ஸ்வாமியை நோக்கி, "நீ தந்த அப்பத்தைப் புசித்து நான் மிகவும் த்ருப்தியடைந்தேன். விதுரனுடைய அன்னத்தை உண்ட நாளில், எனக்கெத்தனை மன நிறைவுண்டாகியதோ, அத்தனை மன நிறைவு இப் போது உண்டாகியது. நான் எனது* ஆத்மாத்மீயங்களை உனக்கு ஸ்வா தீனஞ் செய்திருக்கின்றனன். நீ, என்னை நினைக்கும்போதெல்லாம் விரைந்து வருவேன். இப்போது, போய் வருகிறேன்," எனச் சொல்லி, அவருடைய வந்தனங்களை ஏற்று, ஸ்ரீருக்மிணீ தேவியுடன், கருடன்மேலேறிக்கொண்டு, பண்டரி புரத்துக்குப் போயினன்.

* எனது + ஆத்ம + ஆத்மீயங்களை - என்னுடைய உடல் பொருள் ஆவிகளை



பிறகு, ஆளந்தியென்னும் கிராமத்தில் வஸித்த வேதியன் ஒருவன், தான் ஒரு பெரிய வித்வாம்ஸனாக வேண்டும் எனக் கோரி, அளகாபுரத் துக்குப்போய், ஞானதேவரை உபாஸித்துக் கொண்டிருந்தனன். ஞானதேவர், அவ்வேதியனுடைய கனவில் ஸாக்ஷாத்கரித்து; "நீ துக்காராம் இடத்திற்குப் போ, அவருடைய அநுக்ரஹத்தால் நினது கோரிக்கை நிறைவேறும்" எனக் கூறி மறைந்தனர். அவ் வேதி யன், அப்படியே தேவநகரத்துக்கு வந்து, துக்காராம் ஸ்வாமியை தரிசித்து, தனது கனவின் நிகழ்ச்சியை விண்ணப்பித்தனன். இதனைக் கேட்ட துக்காராம் ஸ்வாமி, ஆச்சரியமடைந்து, "ஞான ஸாகரமாகிய ஞானதேவர், மஹிஷத்தால் ஸகல வேதங்களையும் ஓதுவித்தனர். புலி யின்மேலேறிவந்த ஸாரங்கதேவரை எதிர்கொண்டு செல்ல வெண்ணி தாம் ஆரோஹித்திருந்த குட்டிச் சுவரை நடப்பித்தனர். உலகந் தொழப்பெறும் அத்தகைய உத்தமர், இவ் வேதியனை என்னிடத்திற் கனுப்பியது மிகவும் ஆர்சரியமா யிருக்கின்றது. மந்திர சக்தியால் துரும்பும் பிரமாஸ்திரம் ஆகிறபடி, நான், அம்மஹானுபாவருடைய திருவருட் பிரஸாத பலத்தால், இவ் வேதியனுடைய கோரிக்கையை ஈடேற்றக் கடவேன்" எனப்புகன்று, பதினொரு திருவிருத்தங்களை யொரு பத்திரத்தில் எழுதி, அதனை ஒரு தேங்காயுடன் வேதியன் கரத்திலிட்டு, "வேதிய சிகாமணீ! இவ் விருத்தங்களை வாசித்து, இந்த நாரிகேளத்தை வேறொருவர்க்குக் கொடாமல் நீயே புசிக்கக்கடவாய். உனக்கிஷ்ட ஸித்தி யுண்டாகும்" எனக் கூறினர். அவ் வேதியன் அதிஷ்ட ஹீனன் ஆகையால், துக்காராம் ஸ்வாமியின் வார்த்தைகளை நம்பாமல், "இந்த நாரிகேளத்தை உண்பதனாலேயும், மஹாராஷ்ட்ர பாஷையில் எழுதியுள்ள இவ் விருத்தங்களை வாசிப்பதனாலேயும் எனக் கெங்ஙனம் பாண்டித்யம் உண்டாகும்"! என ஐயுற்று, அவர் கடாக்ஷித் துக் கொடுத்தருளிய அவைகளை, அவர்க்கெதிரிலேயே வைத்துவிட்டுத் தனதூர்க்குப் போயினன். "இவன் மதிஹீனன்; ஆதலால் அதிஷ்ட ஹீனன்" என்றெண்ணிக்கொண்டு, துக்காராம் ஸ்வாமி சும்மா இருந்து விட்டார். இங்ஙனம் இருக்க, சிவாஜிமன்னனுடைய ஆஸ்தானத்தி லிருந்த பௌராணிக வேதியன் மகன் ஒருவன், நிரக்ஷர குக்ஷியாய்,

"தவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம்" என்றபடி,

ஸபையில் தலைகாட்ட யோக்யதையற்றிருந்தான். இப்பேர்ப்பட்ட முழுமூட சிரோமணி, துக்காராம் ஸ்வாமியின் வைபவத்தைக் கேள்வி யுற்று, அவரிடத்துக்கு வந்து, அவர்க்கெதிரிற் கைகட்டி வாய்பொத்தி வணங்கி நின்றுகொண்டிருந்தனன். ஸர்வஜ்ஞராகிய துக்காராம்ஸ்வாமி இவனுடைய எண்ணத்தை யுணர்ந்து, ஆளந்திவேதியன், தனக்கு

வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டுப்போன வஸ்துக்களை இவனுக்குக் கொடுத்தருளினர். இவன், அவைகளை மஹாப்ரஸாதங்களென மதித்து, தனது இருகரங்களிலும் ஏந்திப்பெற்றுக்கொண்டு, துக்காராம் ஸ்வாமியின் முன்னிலையிலேயே, அந்த நாரிகேளத்தைப் புசித்து, அவர் இயற்றிய பதினொரு திருவிருத்தங்களையும் வாசித்து, மனப்பாடம் பண்ணிக்கொண்டு, அவருடைய விடைபெற்றுத் தன்னூர்க்குச் சென்றனன். ஒருநாள், ராஜ ஸபையில் புராணபடனம் நடந்துகொண்டிருக்கையில், இவ் வேதியன் அங்குச்சென்று, ச்ரவணஞ்செய்துகொண்டிருந்து, அங்கிருந்த வித்வாம்ஸர்கள் அனைவர்க்கும் அருமையாய் விளங்காமலிருந்த பெரும் பொருளொன்றை மிகவும் விசதமாய் உபந்யாஸஞ் செய்தனன். இதனைக் கண்டு கேட்டார் அனைவரும் ஆச்சரிய மடைந்து, "நிரக்ஷர குக்ஷியாகிய இவற்கு, இவ் வொப்பற்ற பாண்டித்ய ப்ரபாவம், எங்ஙனம் உண்டாகியது!" எனத் தமக்குள் வியந்து சிந்தித்து, இதற்குக்காரணம் கேட்டபோது, அவ்வேதியன், "துக்காராம் ஸ்வாமியின் கடாக்ஷ வீக்ஷண்யத்தால் எனக்கு இந்த புலமை கிடைத்தது" எனக் கூறினன். புராணஞ் சொல்லிக்கொண்டிருந்த வித்வாம்ஸர், இவ் வேதியனை அழைத்து, தமது கையில் இருந்த புஸ்தகத்தை, இவன் கையிற்கொடுத்து "இதனை, நீ வாசித்து உரை கூறுக" என்றவுடனே, இவன், அங்ஙனமே அத்யத்புதமாக உரை விரித்துரைத்தனன். அப்போது அந்த ஸபையகத்திருந்த வித்வாம்ஸ ரனைவரும், "இப்படிப்பட்ட உபந்யாஸம் இதுவரையில் எப்பொழுதும் கேட்டறியோம்" என்றும் "இவனுடைய வித்யா ஸாமர்த்யம் இணையற்றதாயிருக்கின்றது" என்றும் கூறி, இதற்கு மூலகாரணரான துக்காராம் ஸ்வாமியின் வைபவத்தை, ஆயிரமுகத்தாற் புகழ்ந்தனர். அப்போது, ஷிஞ்சவடியிலிருந்து ராஜஸபைக்கு வந்திருந்த சாஸ்த்ரிகளிற் சிலர், துக்காராம் ஸ்வாமியைக் காணவிரும்பி, அவரை அழைத்துக்கொண்டுவரும்படி, ஓராளை ஏவினர்கள். அவன், தேவநகரத்துக்குப்போய், துக்காராம் ஸ்வாமிக்கு வந்தனம் செய்து, அவர் அநேக ஸாதுஜனங்களோடுகூடிச் செய்துகொண்டிருந்த ஹரிகீர்த்தனத்தைக்கேட்டு, அங்குள்ளவர்களைப்போலவே, தானும் மெய்மறந்து, ஆனந்தபரவசனாய், கீர்த்தனையிற் சொக்கி, தான் வந்த காரியத்தை துக்காராம் ஸ்வாமிக்கு விண்ணப்பிக்காமலிருந்தனன். அங்கிருந்த ஜனங்களிற் குழந்தைகள் முதல், கிழவர் ஈறாயுள்ளா ரனைவரும், பகவந்நாம ஸங்கீர்த்தனாம்ருதத்தை யுட்கொண்டு, லோகசிந்தையற்றவர்களாய், சித்திரப் பதுமைகளைபோல இருந்தனர். தீவர்த்தி பிடிப்பவன்கூட, இப்படிப்பட்ட பரமானந்தாவஸ்தையை அடைந்து, தனது கையிலிருந்த தீவர்த்தியை உயர்த்திப் பிடித்தபோது, பந்தலில் நெருப்புப்பற்றி, அது எரிந்துகொண்டிருந்தது. கீர்த்தனத்தைக் கேட்டுக்கொண்டு, ஆனந்த பரவசர்களாய் அங்கிருந்தார் அனைவரும்; இதனை அறியாமல் இருந்தனர். இங்ஙனம் இருக்க, கோதாவரிக்கரை ப்ரதேசவாஸியும், ஞானவைராக்யபூஷணரும் ஆகிய சேக்குமம்மது என்னும் சக்கிலியர், தாம், ஹரிகீர்த்தனம் செய்துகொண்டிருக்கையில், தேவ-



பட்டணத்தில் துக்காராம் ஸ்வாமி ஹரிபஜனம் செய்துகொண்டிருக்கிற இடத்தில், பந்தலில் தீப்பிடித்து, அது எரிந்துகொண்டிருக்கிறதென்றுணர்ந்து, தமது கைகளில் ஒன்றோடொன்றைத் தேய்த்துக்கொண்டிருந்தனர். அப்போது அங்கிருந்த ஸாது ஜனங்கள், "நீர், இருந்தாற்போலிருந்து, உமது கைகளைத் தேய்த்துக்கொள்ளுங் காரணம் யாது?" எனக் கேட்டார்கள். அதற்குஅவர் "ஓ, ஸாதுஜனர்காள்! தேவநகரத்தில் துக்காராம் ஸ்வாமி, ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்கிற இடத்தில், சிறியாரும் பெரியாரும் கூட்டங்கூடிக் கேட்டுக் கேட்டுச் சொக்கி, மெய்மறந்து பரவசர்களாயிருக்கையில், தீவர்த்தி நெருப்புப்பிடித்து பந்தல் எரிந்துகொண்டிருக்க, அதனை எனது கரங்களால், தேய்த்துத் தேய்த்துக் குளிர்வித்தேன்" எனப்புகன்றனர். அதைக் கேட்டாரனைவரும் ஆச்சரியமடைந்து, உடனே, தேவநகரத்துக்கு ஓர் ஆளையனுப்பி, அங்கே பந்தலிற் பிடித்த நெருப்புக் குளிர்ந்திருப்பதை அவனால் உணர்ந்து, அதிசயமிகுந்து, சேக்குமம்மதுவை நோக்கி, "தேவநகரத்தில் நேரிட்ட நெருப்பு விபத்தை நீர் எங்ஙனம் உணர்ந்தீர். அந் நெருப்பை, நீர், குளிர்விக்கவேண்டிய காரியம் என்ன? ஸர்வஜ்ஞனாகவும், ஸர்வசக்தி யுள்ளவனாகவும் விளங்குகிற ஸ்ரீ பண்டரிநாதன், துக்காராம் ஸ்வாமிக்கு நேரிட்டவிபத்தை உணர்ந்து, அவரைக் காத்தருளமாட்டானா!" எனக் கேட்டார்கள். அதற்குச் சேக்குமம்மது, அந்த ஸாதுஜனங்களை நோக்கி, "உமது க்ருபாவிசேஷத்தால் நான், தேவநகரத்தில் நடந்த விருத்தாந்தத்தை யுணர்ந்தேன். ஸ்ரீ பாண்டுரங்கநாதன், துக்காராம் ஸ்வாமியின் கீர்த்தனத்தைக் கேட்டுக்கொண்டே, தன்னைத் தான் மறந்து, சித்தமயங்கியிருப்பதனால், அவனுடைய ஸர்வஜ்ஞத்தன்மையும், ஸர்வசக்தித் தன்மையும் இப்போது பயனற்றவையாயின" என விடைகூறினர். அதற்கு அங்கிருந்தாரனைவரும் பிரமானந்த மடைந்து, "ஸாது ஜனங்களுடைய பிரபாவத்தை ஸாதுஜனங்களே உணர்வார்கள்" என்று வியந்துரைத்துச் சேக்குமம்மதுவுக்கு ஸாஷ்டாங்கவந்தனம் செய்து, அவருடைய மஹிமையை ஆயிரமுகத்தாற் பாயிரங்கூறி மகிழ்ந்தனர்.

இங்ஙனம் இருக்க, சிவாஜிராஜனுடைய ஆஸ்தானத்திலிருந்த ஷிஞ்சவடி வாஸிகளாகிய வேதியர்கள், துக்காராம் ஸ்வாமியை அழைக்கச்சென்ற ஆள் திரும்பிவரவில்லை என்று, வேறொராளை ஏவினர்கள். அவனும் தேவநகரத்துக்குச்சென்று, முதலிற்போன ஆளைப்போலவே, தன்னை மறந்தவனாய் அங்கேயே தங்கித்திரும்பிவராமலிருந்துவிட்டனன். இவன் நிலையும் அந்த வேதியர்கள், மறுபடியும் ஒருவனை ஏவினர்கள்; முன்னிருவர் நிலைகளே ஆயிற்று. துக்காராம் ஸ்வாமியின் கோஷ்டி, இரும்புண்ட நீரேபோல மறுபிறப்பற்ற நித்ய விபூதிக்கு நிகராய் இருக்கின்றது. நித்ய விபூதிக்குப் போகிறவர்கள், பகவானுடைய பரம ஸாம்யத்தை* அடைகிறபடி, துக்காராம் ஸ்வாமியின் கோஷ்டிக்கு

* ஸாம்யம் - ஸமநிலை - நேர்நிலை.

வந்த ஸ்ரீபாண்டுரங்கன், அங்கிருந்த பாகவதர்களுடைய பரமஸாம்யத்தை அடைந்தனன். லிஞ்சவடி வேதியர்களால் அனுப்பப்பட்ட ஆட்கள் அனைவரும், மறுபடியும் திரும்பிவாராமைக்குக் காரணம் உணரமாட்டாத அவர்கள், தங்களுக்குள் இவ்வாறு சொல்லிக்கொண்டார்கள். "நாம் அனுப்பின ஆட்கள், துக்காராம் ஸ்வாமியின் கீர்த்தனத்திற் சொக்கி,

'நீரிருக்கமட மங்கை நீர்கிளிகள் தாமிருக்கமது கரமெலாம்
நிறைந்திருக்கமட வன்ன முன்னநிரை யாயிருக்கவுரை யாமனன்
ஆரிருக்கினுமென் னெஞ்ச மல்லதொரு வஞ்ச மற்றதுணை யில்லையென்று
ஆதரத்தினொடு தூது விட்டபிழை ஆரிடத்துரைசெய் தாறுவேன்
சீரிருக்குமறை முடிவு தேடரிய திருவரங்கரை வணங்கியே
திருத்துழாய்தரில் விரும்பியேகொடுதிரும்பியே வருதலின்றியே
வாரிருக்குமுலை மலர்மடந்தையுறை மார்பிலேபெரிய தோளிலே
மயங்கியின்புறமுயங்கியென்னையுமறந்து தன்னையுமறந்ததே'

என்றபடி தாம்சென்ற காரியத்தை மறந்திருந்துவிட்டார்கள் என்று தோன்றுகின்றது. இன்னும் எத்தனை பேர்களை அனுப்பினாலும், அவர்களும் முன்போனவர்களைப்போல ஆவார்கள் என்பதற்கு எள்ளளவும் ஐயம் இல்லை. ஆகையால், நாமே நேரிற் சென்று, ஸந்தேக நிவர்த்தி செய்துகொள்வோம்" என்பதேயாம். இங்ஙனம் தீர்மானித்துக் கொண்ட அவ்வேதியர்கள் தேவநகரத்துக்குப் போகப் புறப்பட்டார்கள். ஸர்வஜ்ஞராகிய துக்காராம் ஸ்வாமி இதனை உணர்ந்து, தமது கோஷ்டியுடன் புறப்பட்டு வந்து, லிஞ்சவடி வேதியர்களை இடைவழியில் எதிர்கொண்டு,

தைவாதீநம் ஜகத்ஸர்வம்। மந்த்ராதீநந்துதைவதம்
தந்மந்த்ரம் ப்ராஹ்மணாதீநம்। ப்ராஹ்மணோமமதேவதா ॥.

'உலகம் கடவுட் கொடுக்கம், கடவுள்
மந்திரத் தொடுக்கம்; மந்திரம் தன்னை
மனனம் செய்யும் மகானும் பிரம
நிஷ்டனுக் கொடுக்கமிந் நிஷ்டன்
எனது கடவுளெனப்படு மன்றே'

'உலகடங்கலும் தெய்வத்துக்கடங்கியிருக்கின்றது; தெய்வம், மந்திரத்துக் கடங்கியிருக்கின்றது; மந்திரம், தன்னை த்யானிக்கும் மஹானாகிய பிரம நிஷ்டாபரனுக் கடங்கியிருக்கின்றது; இந்த பிரம நிஷ்டாபரனே எனது தெய்வமெனப் படுவன்' என்பதனால், பிரம நிஷ்டாபரர்களாகிய நீவிர், எனது கடவுளராகின்றீர்கள்; இப்படிப்பட்ட நீங்கள், என்மேற் கருணை கூர்ந்து, ஒன்றுக்கும் பற்றாதவனாகிய என்னை ஒரு பொருளாக மதித்து ஸேவை அளித்தீர்கள். ஆகையால் யான், எல்லாப்படியாலும் நும தநுக்ரஹத்தால், * க்ருதார்த்தனானேன்.

* க்ருதார்த்தன் - தனதெண்ண முற்றியவன்.



என விண்ணப்பித்தனர். லிஞ்சவடி வேதியர்கள், அவருடைய வணக்கமான வார்த்தைகளுக்கு மிகவும் சந்தோஷமடைந்து, அவரை ஆலிங்கனஞ் செய்துகொண்டு, "ஓ, மஹாத்மா! உமது தரிசனத்தைக் கோரி நாங்கள் வந்துகொண்டிருக்கையில், ஸ்ரீபாண்டுரங்கன், உம்மை, இங்குக் கொணர்ந்து, எமது இச்சையை நிறைவேற்றியருளினன்: எமக்கு நேரிட்ட ஸந்தேஹத்தை, நீர் நிவர்த்தி செய்யவேண்டும் என்றும்மைக் கேட்டுக்கொள்ளுகின்றோம். மிகவும் கொடிய இக்கலிகாலத்தில், நீர் அநேக அற்புதங்களைக் காட்டுகின்றீர். நாங்கள் உமது வைபவத்தைக் கேட்டு, அதிசயமடைந்து, நீர் யாரோவென ஐயுறுகின்றோம். ஸாமான்ய மனிதனுக்கு, இத்தனை அற்புத குணம் உண்டாயிராதென எண்ணுகின்றனம். நீர், எமது ஐயத்தை நீக்கவேண்டும்" என மன்றாடினார்கள். துக்காராம் ஸ்வாமி, ஒரு கத்தியை எடுத்து, தமது துடையைக் கீறிக் காட்டினர். அதனில் உதிர மாம்ஸங்களின்றி, மிகவும் வெண்மையாகிய பஞ்சுபோன்ற வஸ்து, * சர்மாங்ருதமாயிருக்கிறபடி அவர்கள் கண்ணுக்குப் புலப்பட்டது. அப்போது அவ்வேதியர் ஆச்சரியமடைந்து, பஞ்சபூத ஸம்பந்தத்தாலான மனித சரீரம், உதிரமாம்ஸங்களோடு கூடி † ஹேயமாயிருக்கும். நமது சரீரம், ‡ பஞ்சோபநிஷண்மயமெனத் தோற்றுகின்றது. ஆகையால், உதிர மாம்ஸாதிகளின்றி நமது $ சரீராந்தர்க்கத பதார்த்தம் அதிக வெண்மையாய், மிகவும் பரிசுத்தமாய், நிரம்ப மனோஹரமாயிருக்கின்றது. இங்ஙனம் இருக்க, எமது அவிவேகத்தால் நும்மை ஒரு மனிதஸாமான்யனாக எண்ணினோம்" எனக் கூறி, துக்காராம் ஸ்வாமிக்கு ஸாஷ்டாங்க வந்தனம் செய்தனர். துக்காராம் ஸ்வாமி, அவ்வேதியர்களுக்கு வந்தன வழிபாடுகள் செய்து, எனது ப்ராணநாதனாகிய ஸ்ரீ ருக்மிணீகாந்தற்கு, ¶ வந்தனீயர்களாகிய நீவிர், என்னை வணங்குதல் தகாது. என்னிடத்துள்ள காமக்ரோதாதி ஹேய குணங்கள் நசித்து, நான் பரம வைஷ்ணவ லக்ஷணங்களாகிய வைராக்யாதி ஆத்ம லக்ஷணங்களோடு கூடி விளங்கும்படி அநுக்ரஹியுங்கள்" என்று ப்ரார்த்திக்க, அவ்வேதியர்கள் அவரை நோக்கி, "ஓ விஷ்ணுபக்த முதல்வ! விஷ்ணுபக்தன் வேதியனைக் காட்டினும் சிறந்தவனாவான். விஷ்ணுபக்தியில்லாதவன், துறவியாயினும் புலையனாவான்.

'உத்தமாசாரம் உடையவனாய் ஈச்சுரன்றன்
நித்ய நிறைவின் நிலைதன்னைத் தேர்ந்தவனைச்
சுத்தமனங் கொண்டு துதித்துப் பணிபவனாய்
பத்தி நிறைந்தோனே பாரிடத்தில் வைணவனாம்
அத்தகையோன் எக்குலத்தோனாயிடினும் அன்னவனை
நத்திப் பணிந்திடுக நன்கு'

* சர்ம + ஆங்ருதம் - தோலால் சூழப்பட்டது. † ஹேயமாய் - அருவருப்புள்ளதாய். ‡ பஞ்சோபநிஷண்மயம் - ஐந்து உபநிஷத் ரூபம்.
$ சரீர + அந்தர்க்கம் - உடலுக்குள்ளிருப்பது.
¶ வந்தனீயர்கள் - வணங்கத்தக்கவர்கள்.

ஆசாரத்தில் உயர்ந்தவனாய், ஈஸ்வர நிறைவை உணர்ந்து, அவனைப் பரிசுத்தமனத்திற் தியானித்து, நாவிற் றுதித்து, தலையிற் பணிபவனாய் நிஜபக்தி நிறைந்து விளங்குபவனே வைஷ்ணவன் என்று சொல்லப்படுவான்; அப்பேர்ப்பட்டவன் எந்த ஜாதியானாலும், அவனை மனம் ஒப்பி வணங்கவேண்டும்'' என்று பகவான் கட்டளை யிட்டிருக்கின்றனன் அல்லவா? பக்தி பூர்வகமாய் நாங்கள், உம்மை வணங்கவில்லையாயினும், சாஸ்த்ர * பரிசயம் செய்திருக்கின்றவர்கள் ஆகையால், அந்த விதிபின்படி உமக்கு வந்தனம் தந்தனம். இன்னும், எமது வேண்டுகோளை நீர், அவசியம் ஏற்றுக்கொண்டு, எமது இருப்பிடமாகிய லிஞ்சவடிக்கு வந்து, அங்குச் சிலகாலம் வாழ்ந்து, ஹரிகீர்த்தனம் செய்திருந்து, எம்மை க்ருதார்த்தர்களாக்கவேண்டும்'' எனப் பிரார்த்தித்தார்கள். அப்போது, துக்காராம் ஸ்வாமி, நீங்கள் கோரினபடி செய்கின்றேன்,'' என்று ஸம்மதித்து, அவர்களைப் பின்பற்றிப் போய்க்கொண்டிருக்கையில் நடுவழியில் உலோஹநகரவாஸிகள் வந்து, துக்காராம் ஸ்வாமிக்கு வந்தனம் செய்து, தங்கள் ஊரில் சிலகாலம் தங்கி வாழ்ந்திருந்து போகவேண்டுமென்று, அவரை வேண்டி அழைத்துக்கொண்டு போனார்கள். அவர், அவ்வூரில் வாழ்ந்திருந்து ஹரிகீர்த்தனம் செய்துகொண்டிருந்தனர். அவ்வூரார், அவர் விஷயத்தில் மிகவும் பக்தி செய்துகொண்டிருந்தனர். இங்ஙனம் இருக்க, வித்வாம்ஸன் ஒருவன், தனது மாணாக்கர்களுடன், அந்த ஊருக்கு வந்தனன். அப்போது, அவ் வூரார், ஸூர்யோதயமான பிறகும் விழித்தெழாமல் உறங்கிக் கிடந்தார்கள். "இதற்குக் காரணம் என்ன?'' என்று அந்த வித்துவான் விசாரிக்கையில், அவ்வூராரில் விழித்திருந்தார் சிலர், அவனை நோக்கி, "துக்காராம் ஸ்வாமியென்னும் மஹான், சுமார் ஒருமாதகாலமாய் இவ்வூரில் வாழ்ந்து, ஸ்ரீஹரிகீர்த்தனம் செய்து கொண்டிருக்கின்றனர். நாங்கள், இரவெல்லாம் அக்கீர்த்தனாம்ருதத்தை அநுபவித்துக்கொண்டிருந்து, இப்படி ஸூர்யோதயமானபிறகும் தூங்குகிறது வழக்கமாய் விட்டது'' எனப் புகன்றனர். அதனைக்கேட்ட வித்வாம்ஸன், பரம வைராக்ய நிதியாகிய துக்காராம் ஸ்வாமியினுடைய கீர்த்தனாம்ருதத்தை அநுபவிக்கும் இவர்களுக்கு, என் விஷயத்தில் விருப்பம் உண்டாவது குதிரைக் கொம்பாகும்; ஆகையால், இவ்வூரில் எனக்கொரு பலனுங் கிடைக்காது. நான் வேறோரூர்க்குப் போய்விடுதலே உத்தமம்'' எனத் தனக்குள்ளே தீர்மானித்துப் புறப்பட்டுப் போய்க்கொண்டிருந்தனன். இவ் விருத்தாந்தத்தைக் கேட்டு, துக்காராம் ஸ்வாமி வந்து, அவ்வித்வாம்ஸனை மிகவும் பெருமைபாராட்டி, இவ்வூர்க்கு வந்த நீ இங்குச் சிலகாலம் தங்காமல், புறப்பட்டுப் போய்விடுங்காரணம் என்ன? நீ, எங்கிருந்து, எதினிமித்தம் இங்கு வந்தனை?'' எனக்கேட்க, அவன், "நான், பண்டரிபுரவாஸி. எனது குமாரனுக்கு விவாஹம் செய்ய எண்ணி, பொருள் சேகரிக்க வந்தேன்; ஞான வைராக்கிய நிதியாகிய உமது கீர்த்தனாம்ருதபானம் பண்ணுகிறவர்களுக்கு,

* பரிசயம் - பயிற்சி.



கேவலம் தேகபோஷணஞ் செய்து திரிபவனாகிய என்னிடத்தில் விருப்பம் உண்டாகாதென எண்ணி, வேறோரூர்க்குப் போகின்றேன்'' என்றனன். அதனைக்கேட்ட துக்காராம் ஸ்வாமி, அவனை அழைத்துக் கொண்டு வந்து, அவனாற் கொஞ்சம் பகவத் கீர்த்தனம் செய்வித்து, அவ் வூராரை நோக்கி, "இவ்வித்வாம்ஸன் மஹானுபாவன்; பண்டரி க்ஷேத்ரவாஸியாகிய இவனை, ஸாக்ஷாத் பண்டரிநாதனாக மதித்து அன்புசெய்யுங்கள்; இவன் தனது மகனுக்கு மணமுடிக்க நினைத்துப் பொருள்சேகரிக்க உம்மை நோக்கி வந்தனன்;

'ஒல்லுந் துணைபு மறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்' என்றபடி,

நீவிர் அறஞ்செய்ய இதுவே நல்ல தருணம். இப்படிப்பட்ட மஹானுக்கு உதவிசெய்தால், நீவிர், ஸ்ரீ பாண்டுரங்கநாதனுடைய திருவருளுக்குத் தக்கவர்களாவீர்கள். நீவிர் யாவரும், உமது சக்தியநுஸாரம் மூன்று வகுப்பினர்களாகி, முதல் வகுப்பினர்க்குள் ஒவ்வொருவரும், மும்மூன்று * பணங்களும், இரண்டாம் வகுப்பினர்க்குள் ஒவ்வொருவரும் இவ்விரண்டு பணங்களும், மூன்றாம் வகுப்பினர்க்குள் ஒவ்வொருவரும் ஒவ்வொருபணமும், இம்மூன்று வகுப்பிலும் சேராத ஏழைகள் ஒவ்வொருவரும், தத்தம் சக்தியநுஸாரம் அரைப்பணம், காற்பணம், அரைக்காற்பண முதலிய சிறுபொருளும் வீதம்போட்டு, அவைகளை ஒரு மொத்தமாக்கி, இவ்வித்வாம்ஸனுக்குக் கொடுங்கள்; இதனால், ஸ்ரீ பாண்டுரங்கன் மிகக் களிப்புறுவன்'' எனக் கூறக்கேட்ட அவர்கள், துக்காராம் ஸ்வாமியின் நியமனத்தைச் சிரஸாவஹித்து, அந்த ஸாதுஜன முதல்வரை நோக்கி "ஓ, ஸ்வாமீ! தேவரீரை அந்த வித்வாம்ஸருடைய விருப்பத்தை, நாங்களே நிறைவேற்றுகின்றோம்; இவர், யாசகத்தின் பொருட்டு, வேறோரிடத்திற்குப் போவானேன்?'' எனப் புகன்று, அங்கிருந் தகன்று, அனைவரும் ஓரிடத்திற் கூட்டங்கூடி, தத்தஞ் சக்தியநுசாரம் மூன்று வகுப்பினர்களாகப் பிரிந்து, முதற்பிரிவினர், மும்மூன்று ரூபாய்களும், இரண்டாம் பிரிவினர், இவ்விரண்டு ரூபாய்களும், மூன்றாம்பிரிவினர் ஒவ்வொரு ரூபாயும், இந்த வகுப்புகளில் எதனிலும் சேராத ஏழைகள், தத்தம் சக்தியநுசாரம் அரைப்பணம், காற்பணம், அரைக்காற்பணம், வீசம் பணம் முதலியவும், வீதம் போட்டுக்கொண்டு, அவைகளைச் செலுத்திவிடுவதாகத் தமக்குள் தீர்மானித்து ஒரு பத்திரிகையிற் கணக்கெழுதிப் பொருளைச் சேகரித்துச் சேர்த்துக் கொண்டுவந்து, துக்காராம் ஸ்வாமியின் எதிரில் நின்று, "ஓ, ஸ்வாமி! இப்பொருளைத் தேவரீருடைய திருக்கரத்தால், இவ்வித்வாம்ஸனுக்குத் தருக'' என வேண்டினார்கள். அவர்களிற் சில துஷ்டர்கள், "பொருள்

* பணம் - முற்காலத்தில் வழங்கிய நாணயம். இதில் சின்ன தென்றும் பெரியதென்றும் இருவித பணங்களுண்டு; ஐந்து காலணகொண்டது சின்ன பணம். பத்துக்காலணு கொண்டது பெரிய பணம்.

கொடுத்தவர்கள், நாமாயிருக்க, துக்காராம் ஸ்வாமி தமது கரங்களால் இந்தப் பொருளை வித்வாம்ஸனுக்குத் தந்து, பெருமை பெறுவது ஞாயமன்றென்று தமக்குள் சொல்லிக்கொண்டார்கள். ஸர்வஜ்ஞராகிய துக்காராம்ஸ்வாமி, இக் கோணமனக் குறும்பர்களுடைய எண்ணத்தை யுணர்ந்து, அவர்களை நோக்கி, "இவ்வூராரனைவரும், தத்தமது சக்தியநுஸாரம் பொருளுதவிசெய்தனரா?" எனக்கேட்டனர். அதற்கு அவர்கள் "ஓ, மஹானுபாவ! அனைவரும் பொருளுதவி செய்தனர்; ஒருவன் மாத்திரம் செய்யவில்லை; அவன், புடைவை வ்யாபாரத்தால் வயிறு வளர்த்து ஜீவிக்கின்றவன், மிகவும் பொல்லாதவன்; அவற்கு எள்ளத்தனையும் பகவத்பக்தி கிடையாது; எந்நேரமும் பாகவதர்களைப் பழிப்பதே அவற்குக் காலக்ஷேபமாயிருக்கின்றது. அவன் ஒருவன் தவிர மற்றவர் அனைவரும், தத்தம் சக்தியநுஸாரம், பொருள் உதவிசெய்தனர்" எனச் சொல்லக்கேட்ட துக்காராம் ஸ்வாமி, "உங்களுக்குள் சிலர், அக் *குடிலனிடத்திற்குச் சென்று, நான் வேண்டி, உங்களை அனுப்பிவைத்ததாகச் சொல்லி, அவனுடைய சக்தியநுஸாரம் சிறிதுதவி செய்கவென அவனைக்கேட்டு, அவன் தரும் பொருளைக் கொண்டுவருக" என நியமித்தனுப்பினர். இவர்கள் அதற்கு ஒப்புக்கொண்டு, அவன் வீட்டுக்குச்சென்று, அவனுக்கு எதிரில் நின்றனர். அவன் இவர்களோடு பேசாமல், இவர்களைக் கண்டும் காணாதவன்போல நடித்து, தனது கார்யத்திலேயே கண்ணாயிருந்தனன். அப்போது, இவர்கள் அவமான மடைந்து, "இக் கோணமனக் குறும்பனிடத்திற்கு நாம் வரத்தகாது; ஆனாலும் துக்காராம் ஸ்வாமியின் நியமனத்தை இவனுக்கு அறிவிப்போம்" எனத் தமக்குள்ளே சொல்லிக்கொண்டு, அவனைநோக்கி, "மஹானாகிய துக்காராம் ஸ்வாமி, எங்களை உன்னிடத்திற் கனுப்பியபடியால், நாங்கள் உன்னை வேண்டி, நீதரும் பொருள் உதவியைப் பெற்றுக் கொண்டு செல்லுமாறு வந்தோம்" என்று அறிவித்தார்கள். அதனைக் கேட்டவுடனே அவன் கடுஞ்சினங்கொண்டவனாய், "அந்த துக்காராமன் இரவும் பகலும் வேறு வேலையற்றவனாய், தவளையேபோலக் கத்துகிறதைக்கேட்டு, நீவிர் மயங்கினவர்களாய், உமது ஸ்வய காரியங்களை மறந்து, அதனால் வரும் நஷ்டத்தையும் உணராமல், அவன் பின்னே திரிந்துகொண்டிருக்கின்றீர்கள். நான், உங்களைப்போலப் பித்தன் அல்லன். நான் கஷ்டப்பட்டுத் தேடின பொருளில் ஒரு காசானாலும் பிறனுக்குக் கொடேன்; நீங்கள் வந்தவழியைப் பார்த்துக்கொண்டு போங்கள்" என்று கூறினான். அப்போது, புத்திசாலியாகிய அவனுடைய மனைவி, தனது கணவனை நோக்கி, "தர்மவிஷயமாக வந்தவர்களைக் கோபிக்கவேண்டா; இல்லையென்கிற ஓசையைக் கேட்பியாமல், ஏதாவது உம்மால் இயன்ற அளவு ஈதலே நன்று. அங்ஙனம ஏதாவது கொடுத்தனுப்ப உமக்கு விருப்பம் இல்லையேல், கடுமொழி பகராமல், கனிமொழி கூறுதல் நன்று.

* குடிலன் - கோணமனத்தன்.



'இலனென்னும் எவ்வம் உரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள'

'இணங்கிப் பனைநிமிர்ந்திங் கீதலே யன்றி
வணங்கித் தான் கொள்ளா வழக்கால்—உணங்கிடையாய்
நல்லா றெனினுங் கொளறீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று'

'ஈத லரிதெனினும் இன்சொலினு நல்கூர்தல்
ஓகோ கொடிது கொடிதம்மா—நாகொன்று
தீவினைக் கம்மியனால் வாய்பூட் டிடப்படின்மற்
றுவா விவரென்செய் வார்' என்று

பெரியோர்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

'பொருளைப் பங்கு போட்டுக் கொள்ள
நால்வர் பெரிய ஞாதிக ளுளரவர்
யாவ ரென்னில் அறைகுதுங் கேண்மதி
தர்ம மென்பவன் தகைமிகு மூத்தவன்
அரசனி ரண்டா வனக்னிமூன் றுவன்
கள்ளநான் காவன் கழறுமிந் நால்வரும்
மனிதன் ஈட்டும் மாண்பொருள் தன்னைத்
தமக்குட் பகிர்ந்து தாங்கொள் வாரே

இவர்களில்

மூத்தவ னாக மொழியப் படூஉம்
தர்மந் தன்னைத் தள்ளி வெறுத்தால்
மூத்தவற் கெய்திய மூவா விழிவை
ஏனைய மூவரும் எள்ளள வும்பொறார்
மனத்தின் மாறாச் சினத்தின் மிகுந்தவர்
ஆகி அப்பொரு ளனைத்தையும்
அழித்து விடுவர் ஆயுங் காலே' என்றபடி

பொருளைப் பங்கிட்டுக்கொள்வதற்கு நால்வர் தாயத்தார்களாயிருக்கின்றார்கள். அவர்களில் மூத்தவன் தர்மம்; இரண்டாவன் அரசன்; மூன்றாவன் அக்னி; நான்காவன் சோரன்; இந்நால்வரும் ஒருவன் தேடும் பொருளைப் பங்கிட்டுக் கொள்பவர்களாயிருக்கின்றார்கள்; இவர்களில் மூத்தவனாகிய தர்மம் என்பவனை ஒருவன் வெறுத்தால், மூத்தவற்கு வந்த அவமானத்தை மற்ற மூவரும் பொறாதவர்களாகித் தமது மனத்திற் கோபங்கொண்டு, அந்தப்பொருள் முழுவதையும் கொள்ளைகொண்டு அழித்துவிடுவார்கள். ஆகையால், புத்திசாலிகள் தர்மத்துக்கு அதிக பாகத்தை வழங்குவார்கள்; இதனால், மற்ற தாயத்தார் மூவரும் ஸந்தோஷமடைந்து, தமது பாகங்களைக் கோரா

மல் இருப்பார்கள். உலோபியானவன் தர்மஞ் செய்யாமலும், தான் அநுபவியாமலும் புதைத்துவைக்கும் பொருள் பிறர் வசப்படும்.

‘சிதலிழைத்த வன்மீகம் சேடற் கிடமாய்
உதவுகின்ற வாறிவ் வுலகில்—மதியிலிகள்
சேர்த்துவைத்த பொற்குவையைத் தேசத்து மன்னவர்கள்
பார்த்தெடுத்துக் கொள்வார் பரிந்து’

கறையான்கள் கட்டிவைத்த புற்றானது, பாம்புக்கு வீடாக உதவுவதுபோல், அறிவீனர்கள் சேர்த்துப் புதைத்துவைத்த பொருளை, அரசர்கள் பார்த்தெடுத்துக்கொள்வார்கள். இப்படிப் பிறர்க்குதவாமல் சேர்த்துவைத்த பொருளைத் தேடினகாலத்தில், ஒருவன் செய்த பாவமாத்திரம், அவனை விடாது பின்பற்றி, அவன் எந்த லோகத்துப் போனாலும் அவனோடு கூடவே போகும். நரகத்துன்பம் நுகர்கையில், அவன் தேடிப்புதைத்துவைத்த பொருளாவது, அதனைப் பார்த்தெடுத்துக்கொண்டு அநுபவிக்கிறவர்களாவது இவனைக் காக்கமாட்டார்கள். ஆகையால் புத்திமான்கள், அநர்த்தம் விளைவிக்கக்கூடிய அர்த்தத்தை மதியார்கள்.

‘சாவாத இல்லை பிறந்த வுயிரெல்லாம்’. என்றபடி,

பிறந்தவனெவனும் இறந்தவனாவான் என்பது திண்ணம்;

‘மலைமிசைத் தோன்று மதியம்போல் யானைத்
தலைமிசைத் தோன்றுங் குடையர்—நிலமிசைத்
துஞ்சினா ரென்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால்
எஞ்சினா ரிவ்வுலகத் தில்’

என்பதும் கவனிக்கப்படவேண்டும். இப்போதோ, இன்னும் ஒரு கணத்திலோ, அல்லது எப்போதோ, மரணம் தலைமேற் காத்திருக்கின்றது; தோலைக் கடிக்கும் நாய்க்கு நெய் அரோசகமாயிருப்பது போல, பாவிகளுக்கு தர்மம் அருவருப்பாயிருக்கின்றது. மனிதன் மரணமடைந்து, அவனுடைய சரீரம் சுடலைக்குக் கொண்டுபோகப் படும்பொழுது, அவன் தேடிவைத்த பொருளில் இரண்டொரு காசுகளையாவது, அவனுடைய பிணச்சரீரத்தோடு பாடையில் வையார்கள், உற்றாரனைவரும் சுடலைவரையிற் பின்பற்றிச் சவத்தைச் சுட்டுவிட்டுத் திரும்புவார்கள். இவைகளையெல்லாம் அறிந்திருந்தும், நீர் உமது தீவினையின் வலியால், தர்மத்தை உபேக்ஷிக்கிறீர்கள். துக்காராம் ஸ்வாமி, மஹாநுபாவர்; அவரை ஒருமுறை நினைத்தமாத்திரையிற் பன்னெடு நாள் நாமியற்றிய பாவக்குப்பை முழுவதும் பஸ்மீகாமாய் விடும். அத்தகைய மஹான், உமது பூர்வஜன்ம புண்ணிய விசேஷத்தால் உம்மை ஒரு பொருளாக எண்ணி, உம்மிடத்திற்கு இவர்களைப்போக்கினர். உமக்கு, அநிர்சம் எட்டிக்காயா யிருக்கின்றது, நான் என் செய்வேன்” என்று கண்ணீர் உகுத்துச் சோகமுற்றனள். இவைகளையெல்லாங் கேட்டுக்கொண்டேவந்த கணவன், “என்னடீ! என்னென்னமோ,



உளறுகின்றனை! இவர்களைப்பிடித்த பித்து, உன்னையும் பிடித்திருக்கிறதோ! யார் என்னசொன்னாலும், நான் ஒரு துரும்பையும் என் மனம் ஒப்பித் தரமாட்டேன். இல்லறத்தான், தனது மனைவியோடு மனவிகற்பமின்றி வாழவேண்டுமென்று சாஸ்த்ரமிருக்கின்றது.

‘மருவிய காதன் மனையாளுந் தானும்
இருவரும் பூண்டுய்ப்பி னல்லான்—ஒருவரால்
இல்வாழ்க்கை யென்னும் இயல்புடைய வான்சகடம்
செல்லாது தெற்றிற்று நின்று’

ஆதலால், உன்னோடு நான் போராடுவதற்குக் கூசுகின்றேன். உனக்கு அத்தனை இச்சையுளதேல், உன்னிடத்தில் ஓட்டைச்செம்பு ஏதாவதிருந்தால், அதை இவர்களிடத்திற் கொடுத்தனுப்பு” என்று கூறினன்.

‘கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி கொண்டவை
செய்வகை செய்வான் தவசி—கொடிதொரீஇ
நல்லவை செய்வான் அரச னிவர் மூவர்
பெய்யெனப் பெய்யு மழை’

‘தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்’

ஆதலால், அப்பெண்மணி, தனது கணவன் கூறிய கடைசி வாக்கியத்திற் களிகூர்ந்து, “இதற்காவது உடன்பட்டீரல்லவா! நாம் அனைவரும் இன்றே ஈடேறி உய்ந்தனம்” எனக் கூறிக்கொண்டே, ஓர் ஓட்டைச் செம்பைக் கொணர்ந்து, “ஓ, பாக்யவான்காள்! தயாநிதியாகிய துக்காராம் ஸ்வாமி, இவ்வோட்டைச் செம்பைப் பொற்பாத்ரமாக ஏற்றுக் கொள்ளவேண்டும்” என்று, அதனை அவர்களிடத்திற் கொடுத்து, துக்காராம் ஸ்வாமி எழுந்தருளி யிருக்கும் திக்குநோக்கி, தீர்க்க தண்டம் ஸமர்ப்பித்தனள். அவர்கள், அச்செம்பை,

‘கரண்டியளவேபோதும் காராவின் தீம்பால்
இரண்டுகல மானாலும் ஏனோ—கரந்தருபால்
உள்ளன்பா லூட்டுகின்ற ஒருபிடியன் னம்போதும்
கொள்ளுவதோ அன்பில்லாக் கூழ்’ என்றபடி,

அதை மிகவும் உயர் பொருளாக மதித்துக் கொணர்ந்து, துக்காராம் ஸ்வாமியின் கரத்திற் கொடுத்தனர். அவர் கரத்திற் பட்டமாத்திரத்தில், மேருவைச்சேர்ந்த காகமும் பொன்னிறமடையும் என்றபடி, அச்செம்பு பத்தரைமாற்றுத் தங்கச் செம்பாக விளங்கியிருந்தது. துக்காராம் ஸ்வாமி அவர்களை நோக்கி, “நீவிர், அவ் வர்த்தகன் பரமலோபி என்றீர்கள்; அப்படிப்பட்டவன், எப்படி ஸ்வர்ண பாத்ரம் வழங்கினன்?” எனக் கேட்டனர். அப் பாத்திரத்தைக் கண்டு, அவர்கள் அதிசயித்து, அதனைச் சோதித்துப் பார்க்கையில், அது உண்மையாகவே பத்தரைமாற்றுத்

தங்கமாயிருந்தது. அப்போது அவர்களனைவரும், துக்காராம் ஸ்வாமியை நோக்கி, "ஓ ஸ்வாமி! 'அவ் வர்த்தகன் பரமலுப்தன்' என்பது நிஜமே. 'ஒரு சிறு துரும்பையுங் கொடேன்' எனக் கூறினன். பரம பதிவ்ரதையாகிய அவனுடைய மனைவி, அவனைப் பலவித ஹிதவசனங்களால் வேண்டினள்; அவன், பெண்ணின் மயங்கினவன்; ஆகையால் தனது மனைவியின் மனத்தைக் கலக்கக் கூடாதென்றெண்ணி, 'எனது கரத்தால் நானொன்றும் கொடுக்கமாட்டேன்; உனக்கதனை இச்சையுளதேல், உன்னிடத்தில் ஓட்டைச் செம்பேதாவதிருந்தால், இவர்களிடத்திற் கொடுத்தனுப்புக' என்று நியமித்தனன். அதனைக்கேட்ட அந்த மாதரசி, தனது கணவற்கு அப்போதிருந்த நல்லெண்ணத்துக்கு வியந்து,

'காலையிலொன்றுவர், கடும்பகலிலொன்றுவர்
மாலையிலே ஒன்றுவர் மாந்தரெலாம்'

என்றபடி, இன்னும் தாழ்த்தால் தனது கணவன் குணம் மாறிவிடுமெனப் பயந்து, விரைந்தோடிக் கொண்டுவந்து, அந்தச் செம்பை எங்களிடத்திற் கொடுத்து, "இதனை க்ருபாநிதியாகிய துக்காராம் ஸ்வாமி, ஸ்வர்ண பாத்ரமாக ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்றுகூறி, தேவரீர் எழுந்தருளியிருக்குந் திக்குநோக்கி, தீர்க்கதண்டம் ஸமர்ப்பித்தனள். அக் கற்புக்கரசியின் வேண்டுகோளைத் தாங்களுணர்ந்து, அவள் கோரினபடியே, இச் செப்புச் செம்பைத் தங்கச் செம்பாக்கி ஏற்றுக்கொண்டீர்கள். ஸாக்ஷாத் பண்டரிநாதன், தேவரீருடைய திருவுருவந்தாங்கி வந்திருக்கிறபடியால், * அஸம்பாவ்யங்களனைத்தும் ஸம்பாவ்யங்களாவது அதிசயமன்று; என்று விண்ணப்பஞ்செய்தார்கள். துக்காராம் ஸ்வாமி, அவ் வேதிய வித்வாம்ஸனுக்கு சந்தன, புஷ்ப, தாம்பூல, வஸ்த்ராதிகள் வழங்கி, ஸ்வர்ணபாத்ரத்தில், அவ்வூரார் சேர்த்துக்கொடுத்த பொருளையிட்டு, அதனை அவன் கரத்திற்கொடுத்து, உபசாரஞ்செய்து, "ஓ வித்வசிரோமணீ! பண்டரிபுரத்திலிருந்து வந்த நீ, எங்களுக்கு ஸாக்ஷாத் பண்டரிநாதனாகவே யிருக்கின்றனை" எனக் கூறி, அவற்கு ஆனந்தமூட்டி, அவனைப் பண்டரிபுரத்துக்கு அனுப்பிவிட்டனர். பிறகு, அவர், அவ்வூரார் உத்தரவு பெற்று, லிஞ்சவடிக்குச் சென்று, பகவத்கீர்த்தனம் செய்துகொண்டு, அங்குச் சிலகாலம் வாழ்ந்து, அவ்விடத்திய வேதியரை மகிழ்வித்து, அங்கிருந்து புறப்பட்டு, தேவநகரத்துக்கு வந்தனர்.

ஒருநாள் இரவில் துக்காராம் ஸ்வாமி, கனவொன்று கண்டனர்; அதன் விபவம் பின்வருமாறு:—

இவர், இந்த்ராணி நதிக்கு ஸ்நானஞ் செய்யப் போனபோது, பண்டரிநாதன், ஒரு வேதிய வுருவந்தாங்கி வந்து, இவர்க்கெதிரில் நின்றனன். உடனே, இவர் ஸ்நான முடித்து, பரிசுத்த வஸ்த்ரம் உடுத்து, அவ் வேதியற்கு வந்தனம் செய்து, "ஓ ஸ்வாமி! எனது பூர்வ ஜன்ம புண்ய பரிபாகத்தால், ஸ்ரீபண்டரிநாதன், தேவரீருடைய திருவுருவந்தாங்கி

* அ+ஸம்பாவ்யங்கள் - அருமையானவைகள்.



வந்து, இன்று எனக்கு விருந்தாளி யாயினன். ஆகையால், தாங்கள் என்மேற் கருணை கூர்ந்து, எனது வீட்டுக் கெழுந்தருளிப் புசித்து, என்னை மகிழ்விக்கக் கோருகின்றனன்" என்று வேண்டினர். அதைக் கேட்ட அவ்வேதியன், "அய்யா! நான், நன்றாய்ப் புசிக்கக் கூடியவன். ஆகையால், எனக்கு, ஒருவேளைக்கு இரண்டு பலம் நெய்க்குக் குறையாமல் விட உன்னாற் கூடுமானால், நினது வீட்டில் உண்பேன்" எனக் கூறினன். அதற்கு துக்காராம் ஸ்வாமி, ஸந்தோஷித்து, அவ்வேதியனைத் தமது வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்து, தமது மனைவியை நோக்கி, "ஓ, மாதே! ஸ்ரீபண்டரிநாதனே, இவ்வேதிய வுருவந்தாங்கி வந்து, நமது வீட்டுக்கு விருந்தாளியாக எழுந்தருளினன்; இவற்கு நமது வீட்டில் உள்ள அன்னத்தையிட்டு, இரண்டு பலம் நெய்க்குக் குறையாமல் விடுக" என்று நியமித்தனர். அப்போது, அப்பெண்மணி "இவ்வேதியர் எங்கிருந்து வந்தனர்? இரண்டு பலம் நெய் ஒரேவேளையில் விடுவதற்கு நான் எங்குப்போய்க் கொண்டுவருவேன்!" எனக்கூறினள். அதைக்கேட்டு அவ் வேதியன் மறைந்தனன். இந்தகைய கனவைக்கண்டு துக்காராம் ஸ்வாமி விழித்தெழுந்து, அதன் நிலையை நனவிற் சிந்தித்து, "எனதுயிர் நாதனாகிய பண்டரிநாதன் விரும்பிய பொருளைக் கொடாத பாவியானேன்" என்று சோகமுற்று, பகவானைப் புகழ்ந்து, அந்த பகவான், தமக்குக் கனவில் ஸாக்ஷாத்கரித்து விளங்கின மாசிமாதச் சுக்லபக்ஷ தசமியோடு கூடின குருவாரத்தைப் பன்முறை நினைந்து நினைந்து வியந்து கொண்டாடி குதூஹலித்துக் கொண்டிருந்தனர்.

பொறாமைக் குணமுள்ளவர்களாகிய வேதியரிற் சிலர், "இந்த துக்காராம் ஸ்வாமி இயற்றும் நூல்கள், பக்தி மார்க்கத்துக்கு அநுகூலமாய், கர்மமார்க்கத்தை நாசம் செய்கின்றன. ஆகையால், இவருடைய நூல்களைக் கட்டிச் சுருட்டிக்கொண்டுபோய், தண்ணீரில் எறிவோம்" என்றெண்ணி, அந்நூல்களனைத்தையும் ஒரே கட்டாகக் கட்டிச் சுருட்டிக்கொண்டுபோய், தண்ணீரில் எறிந்துவிட்டு வந்து, துக்காராம் ஸ்வாமியை நோக்கி, "நீ இயற்றிய நூல்களைத் தண்ணீரிற் போட்டுவிட்டோம்; அந்நூல்களின் கட்டு, பதின்மூன்று நாட்கள் வரையில் தண்ணீரில் நனையாமல் மிதந் திருக்குமாயின், நீ எழுதினவை பகவத் ஸம்மதமென்று நாங்கள் ஒப்புக்கொள்வோம்" என்று சொல்லிப் போய்விட்டனர். அதனைக்கேட்ட துக்காராம் ஸ்வாமி, கேத முற்றவராய், பண்டரிநாதா! நினது நியமனத்தைச் சிரஸாவகித்து, நாமதேவருடைய ஸங்கற்பத்திற் குறைவடைந்த விருத்தங்களை, நான் மிகவும் அன்பாய் வரைந்தேன்; அவ் விருத்தங்கள் வரையப்பட்ட நூல்களையெல்லாம் ஒரே கட்டாய்க் கட்டி, இவ் வேதியர்கள் தண்ணீரிற் றள்ளி விட்டனர்; என்னிடத்தில் ஆவேசித்து, நின்னை நீயே புகழ்ந்து கொண்டனை! நீ கூறியருளிய விருத்தங்களை, நீயே காப்பாற்றிக் கொள்ளக் கடவை" எனக் கூறி, பகவந்நாம ஸ்மரணை செய்துகொண்டிருந்தனர். அப்போது, பண்டரிநாதன், ஒரு சிறுவனாகத் தோன்றி, துக்காராம் ஸ்வாமியை

நோக்கி, "நீ வருந்தற்க" எனக் கூறி மறைந்து, தண்ணீரிற் போடப்பட்ட நூல்களை, நனையாமற் காப்பாற்றிக் கொண்டிருந்தனன். பதின்மூன்று தினங்கள் கழிந்த பிறகு, அவ்வைதிகர்கள் போய்ப் பார்க்கையில் தாங்கள் தண்ணீரில் தள்ளிய நூல்களின் கட்டு, யாதோரிக்கட்டுமின்றி நனையாமல், நீர்மேல் மிதந்துகொண்டிருந்தது. அதனைக் கண்ட அவர்கள், ஆச்சர்யமடைந்து, "விஷ்ணுபக்தன் விஷயத்தில் அபசாரப்பட்டோம்" என்று அநுதாபம் மிக்கவர்களாய், அந்த நூல்களைக் கொணர்ந்து, துக்காராம் ஸ்வாமிக் கெதிரில் வைத்து, * அபராதக்ஷாபணம்செய்துகொண்டனர். அப்போது, துக்காராம்ஸ்வாமி ஆனந்த மிக்கவராய் ஸ்தோத்திரஞ் செய்துகொண்டே, ஸ்ரீபாண்டுரங்கன் ஸந்நிதிக்குச் சென்று, ஸ்ரீ ருக்மிணீகாந்தனை ஆலிங்கனஞ்செய்துகொண்டு, தமது மனதை பகவானிடத்திற் பொருந்தவைத்து, புண்டரீக வரதனுடைய திருவருளால், தமது நிஜசரீரத்தோடு ஸ்ரீவைகுந்தஞ் சென்றனர். இந்த மஹாநுபாவருடைய மகிமையை எடுத்துரைப்பதற்கு, ஸ்ரீபாண்டுரங்கனே வல்லவனன்றி, மற்றெவராலும் முடியாது! துக்காராம் ஸ்வாமி ஸ்ரீ வைகுந்தம் சென்றபிறகும், அநேக பக்தர்களுக்கு கனவில் ஸாக்ஷாத்கரித்து உபதேசித்து, அவர்களை வாழ்விப்பாராயினர்.

மோக்ஷப்ரதாய நம:

## அறுபத்திரண்டாம் அத்தியாயம்

# போஸலபாவா சரித்திரம்.

ஸ்ரீ பண்டரிபுரத்துக்குச் சமீபத்தில் பால்காட்டிப் பட்டணத்தில், குடியானவர் ஒருவர், மிகுந்த ஸாதுவாய், பகவத்பக்தி மிகுந்திருந்தனர். அவருக்கு, மாணுகோசி போஸலே என்று பட்டப்பெயர். அவருடைய மனைவியார் பெயர் மமதாபாய். இந்த அம்மையார் மஹா பதிவ்ரதா சிரோமணி ஆகையால், கணவர் பணிவிடைவிஷயத்தில் மிகவும் கவனம் செலுத்தி, ஏமாராமல் ஸம்ஸாரம் செய்துவருவாராயினர். இவர்களுக்கு ஏமாஜி என்றொரு குமாரர் பிறந்தனர். இவரும் சிறுபோதிலிருந்தே மஹா விரக்தியுடையவராய், எதனையும் கவனியாமல் வாழ்ந்தனர். இவருடைய மனைவியார் பெயர் பாகீரதிபாய். இந்த நால்வரும், ஸம்ஸாரத்தி லிருந்தும், பரம வைராக்யசீலர்களாய், பரம பக்தியுக்தர்களாய், ஸ்ரீ பண்டரிநாதனை அநவரதமும் த்யானித்துக்கொண்டு, தீனர்களை ஊண் உடைகளாற் காப்பாற்றி, யாசகர்களுடைய இச்சையின்படி, அவர்கள் விரும்பிய பொருள்களை, இல்லை என்னாமல் வழங்கி அவர்களை மகிழ்வித்து, பக்ஷந்தோறும் ஏகாதசியிற் பண்டரிபுரத்துக்குச் சென்று, புண்டரீகவரதனை தரிசித்து, அன்றெல்லாம் உபவாஸமிருந்து, மறுநாள் த்வாதசியில் ஏராளமாய்ச் சமைத்து, நல்லூண் பரிமாறி, விருந்தி

* அபராதக்ஷாபணம் - குற்றமன்னிப்பு.



ஸ்ரீ துக்காராம் ஸ்வாமி நிஜரூபத்தோடு, பஜனை பண்ணிக் கொண்டே விமான ரூடராய் வைகுந்தம் செல்லுதல்.
(பக்கம் 498)

னரையும், தீனர்களையும் மகிழ்வித்து, விட்டலநாதற்குப் பரமானந்த
மூட்டி விளங்குவாராயினர். அநேக நாள் இங்ஙனம் நடைபெற்று
வருகையில், அத்தேயத்தில், * அநாவ்ருஷ்டியால் பஞ்சம் நேரிட்டது.
அதனால் ஜனங்களனைவரும் உண்ண உணவின்றி வருந்துவாராயினர்.

'விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி' என்றபடி

ஜனங்கள் படும் வேதனையைக்கண்டு, போஸலபாவா அநுதாபமிக்க
வராய், தமது மனைவியைநோக்கி, "ஓ ஸகி! நான் நவில்வதைக் கேள்.
இப் பஞ்சம் தொலைந்து நாட்டுக்கு நல்லகாலம் வரும்வரையில், பசி
யென்று வந்தவர்களுக்கு, இரவு பகல் என்ற பாகுபாடின்றி, மனமுகந்த
இரக்கத்துடன்,

'இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே யுள' என்றபடி,

இல்லையென்கிற சொல் உனது வாக்கில் உண்டாகாமல், அன்னம் இட்டுக்
கொண்டிருக்கக்கடவை. உலர்ந்த செடிக்குத் தண்ணீர் ஊற்றுதலும்,
பசித்தாரைப் புசிப்பித்தலும், ஆடையின்றி வாடையின் மெலிகின்றவர்
களுக்கு ஆடை அளித்தலும், நோயாளிகளை பரிசித்தலும், வறி
யோர்க்கு வீடுகட்டித் தருதலும், அவர்களுக்கு கல்யாணஞ் செய்வித்
தலும், ஏழைப் பிள்ளைகளைப் படிப்பித்தலும், அஹங்கார மமகார வசப்
பட்டவர்களுக்கு வைராக்யஞானத்தை உபதேசித்தலும், சறுகண் மனப்
பாவிகளைச் சாந்தமனத் தூயராக்கத் தூண்டுதலும், பொய்யரை மெய்ய
ராக்குதலும், கடவுட் பக்தியற்றவர்களுக்கு அதனை உண்டாக்கு
தலும் ஆகிய இவைகள், பகவதாராதனைகளில் முக்யமானவைகள்.
இவைகளின்றிச் செய்யும் ஜபம், தபம், யாகம், ஆலயப்ரதிஷ்டை,
தடாக வந ப்ரதிஷ்டைகள், சத்திர சாலடிகள் உற்பத்திசெய்தல் முதலிய
வைகள் மோக்ஷ ஸாதநங்களாகாவாம். சுவைகளிலே உப்பும், அவய
வங்களிலே சிரமும், இந்திரியங்களிலே கண்களும் எங்ஙனம் ஏற்ற
மானவைகளோ, அங்ஙனம், ஆத்மகுணங்களிலே ஜீவகாருண்யம் சிறந்
திருக்கின்றது.

'ஆந்ரு சம்ஸ்யம் பரோ தர்மம்'

'அன்பிலா ரெல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு'

'இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு' என்று

சாஸ்த்ரம் கூறுகின்றது. ஆதலால் இந்தப் பஞ்சநாளில், பசித்தார்
பலரையும் உனது மக்களெனப் பாவித்து, நீ ஆதரிக்கக்கடவை"
எனக் கூறினார். அவ்வம்மையார், தமது கணவர் கட்டுரையைத் தலை
மேற்றாங்கி, மிக்க ஜாக்ரதையுடன் தீன ஜனங்களை அன்ன பானாதி

* அநாவ்ருஷ்டி - மழையின்மை.

களால் மகிழ்விப்பாராயினர். இவ் விருத்தாந்தத்தைக் கேள்வியுற்றுப் பல தேசத்து வறியவர்களும் போஸலபாவாவின் வீட்டுக்கு வருவாராயினர். எத்தனைபேர் வந்தாலும், மமதாபாய், இறையளவும் முகச் சுளிப்பும் அகச் சலிப்புமின்றி, அவர்களை அன்புடன் ஆதரித்துக்கொண்டிருந்தனர். இங்ஙனம் இருந்தும், கணவன் மனைவியர் இருவரும், ஏகாதசிநாட்களில் பண்டரிபுரத்திற்குப் போவதையும், த்வாதசி நாட்களில் ததீயாராதனங்கள் செய்வதையும் தவறாராயினர். ஆதலால், சில நாட்களுக்குள், அவர்கள் ஆஸ்தி முழுவதும் செலவாய்விட்டது. பிறகு, நகைகள் முதலியவைகள் விற்று அதனால், ஏழைகளுக்கு அன்னமிடப் பட்டது. இங்ஙனம், தமது ஆஸ்திமுழுவதையும், தீன ஜனங்களுக்கு விநியோகித்துவிட்டுச் சில தினங்களுக்குள், போஸலபாவா வறியவர் ஆயினர்.

'வறியோர்க் கழகு வறுமையிற் செம்மை' என்றபடி,

இப்படிப்பட்ட காலத்தில், போஸலபாவா மனஞ் சலியாமல், தைரியமும் உற்சாகமும் கொண்டவராய்க் கூலிவேலை செய்து, அதனாற் கிடைத்த பணத்தை தீனர்களுக்கும், தமது குடும்பத்துக்கும் உபயோகப்படுத்தி, அனவரதமும் ஸ்ரீ பாண்டுரங்கனை த்யானித்துக்கொண்டு, ஆநந்த பரவசராயிருந்தார்.

ஓர் ஏகாதசிநாளில், போஸலபாவா, பண்டரிபுரத்திற்குப் போகச் சித்தமாய்த் தமது கையிற் பணமில்லாதபடியால்,

'நல்குர வென்னும் இடும்பையுட் பல்குறைத்
துன்பங்கள் சென்று படும்' என்றபடியும்,

'நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பா டரிது' என்றபடியும்,

நல்குரவால் நலிந்து, காட்டுக்குச் சென்று, சுள்ளி பொறுக்கிக் கொண்டு வந்து, அதனை மூன்று துட்டுகளுக்கு விற்று, பண்டரிபுரத்துக்குப் போய்ச் சந்த்ரபாகையில் ஸ்நானம் செய்து, ஸங்கற்பங்கூறின வேதியனுக்கு ஒரு துட்டு வழங்கி, ஒரு துட்டுக்கு வாழைப்பழமும், * கர்ச்சூர பழமும், சுகந்தபொடியும் வாங்கிக்கொண்டு, பகவத் சந்நிதிக்குள் நுழைந்து, ருக்மிணீ காந்தனை தரிசித்து, தாம் கொண்டுவந்த வஸ்துக்களை, பகவானுக்கு ஸமர்ப்பித்து, உபவாஸம் இருந்து, த்வஜஸ்தம்பத்தருகில் குந்தியிருந்து, இராத்ரி நான்கு ஜாமங்களிலும் ஹரி கீர்த்தனம் செய்துகொண்டு, தூங்கா நோன்பு நோற்று, மறுநாள் விடியற்காலையில் ஸ்நாநாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, தமது கையிலிருந்த ஒரு துட்டுக்கு, அரைப்படி மா வாங்கி, சந்த்ரபாகைக் கரையிற் குந்தியிருந்து தமக்குள்ளே, பின்வருமாறு சிந்திக்கலானார்:—

நான், இந்த மாவை, எந்த அதிதிக்கு வழங்குவேன்! எந்த அதிதி இதனை ஏற்றுக்கொள்ளுவான்! இவ்வூரிலே பணக்காரர் பலபேர் ப்ராஹ்

* கர்ச்சூரபழம் - பேரீச்சம் பழம்.



மண போஜனம் மிகுதியாய்ச் செய்கின்றார்கள்; அநேகர், அறுசுவைகளோடு கூடிய உயர்தர உண்டியை ஏழைகளுக்கிட்டு மகிழ்கின்றார்கள். இங்ஙனம் இருப்பதனால், அவைகளையெல்லாம் விட்டு, இவ்வெறுமாவை உண்பதற்கு எவன் வருவான்! ஓர் அதிதிக்காயினும் உண்டியளித்துப் பசியைத் தணிக்காமல், நான் எங்ஙனம் புசிப்பேன்! நான் உண்பது முக்யமன்று. அதிதியுருவந்தாங்கி வருகிற பகவானை ஆராதிக்காத நாள் துன்னாளன்றி நன்னாளன்று; அதிதிக்கிடாமல் தான் மாத்திரம் உண்பவனுடைய கை, தளர் கையேயன்றி வளர் கையன்று" என்பதேயாம். இங்ஙனம் சிந்தித்துக்கொண்டிருக்கையில் தேவாதி தேவனாகிய லக்ஷ்மீ காந்தன், ஓர் ஏழை வேதியவுருவந்தாங்கி, கிழிந்த பழங்கந்தை உடுத்து, குளிரால் விட விட வென்றுதறி நடுங்கி, போஸலபாவாவினிடத்திற்கு வந்தனன். உடனே, போஸலபாவா எழுந்து நின்று, அவ்வேதியனை வணங்கி நல்வரவேற்றனர்; வேதியன் அவருடைய வந்தனங்களை ஏற்று, அவரை ஆசீர்வதித்து, "ஓ ஸஜ்ஜன முதல்வ! நீ அநேகநாளாய், ஒவ்வோர் ஏகாதசி நாளிலும் இவ்வூர்க்கு வந்து, துவாதசி நாளில் தீனர்கள் பலர்க்கு அன்னமிட்டு மகிழ்விக்கின்றனை; நானும், ஒவ்வொரு த்வாதசி நாளிலும் நினது அன்னத்தை உண்டு களிப்பது வழக்கம். இவ் வூரிலே, பணக்காரர் பல்லோர், ஆயிரக்கணக்கான அந்தணர்களுக்கு ஸமாராதனம் செய்கின்றார்கள்; தேகபலமுள்ளவர்கள் அங்குச் செல்கின்றார்கள். நான், உடலில் வலிவில்லாதவன்; கிழவன் ஆகையால், அங்கெங்குஞ் செல்ல வலியின்றி, உன்னை நாடி வந்தனன். எனது பசிக்கு ஏதேனும் கொடு" என்று கேட்க, அதற்கு, போஸலபாவா மிகக்களித்து, "எனது ப்ராணேசனாகிய ஸ்ரீ பண்டரிநாதனே, எனது குறைகளையொழிக்க இவ்வுருவந் தாங்கி எழுந்தருளினன்" எனப் பேரானந்தங்கொண்டு, அவ்வேதியனை நோக்கி, "ஓ, அந்தணர் முதல்வ! என்னிடத்திற் கொஞ்சம் மாவிருக்கின்றது. அதிற் கூட்டிப் பிசைவதற்கு உப்புமில்லை; சர்க்கரையுங் கிடையாது. நான் என் செய்வேன்!" எனக் கூறக்கேட்ட அவ் வேதியனாகிய வைகுண்டாதிபதி, "உனது கையிலுள்ள பொருளை வஞ்சனையின்றி வழங்கி எனது இளைப்பை யகற்றுக; தாழ்க்கவேண்டாம், 'பசி ருசி யறியாது,

'பசித்தான் பதார்த்தத்தின் பக்குவத்தை யோரான்
ருசித்தான் உணர்ந்து புசியான்' என்னும்,

வாக்யத்தை நீ கேட்டறியாயா!" எனப் புகன்றனன். அதனைக் கேட்ட போஸலபாவா, "இந்த மாவை எவர் உண்பார்"! என நான் சிந்தித்துக் கொண்டிருக்கையில், பசித்தானாகிய இவ் வேதியன் என்து நற்றவப் பயனால் எனக்கு அதிதியாக வந்தனன். இங்ஙனம் கூட்டிவைத்த ஸ்ரீ பாண்டுரங்க நாதனுடைய தண்ணளியை, நான் என்னவெனக் கொண்டாடுவேன்!" என்று சொல்லிக் கொண்டே தம்மிடத்திலிருந்த மாவை, அவ்வேதியன் முன்தானையிற் பெய்தனர். அம் மறையவன் அதனைத் தனது கந்தையில் முடிந்துகொண்டு, போஸலபாவாவை நோக்கி, "ஓ, பக்தஜன முதல்வ! நான் மிகவும் வறியவன்; எனக்கென் ஓரிடம்

கிடையாது; இந்த ஆலயத்தொரு மூலையில் இந்த மாவை அடையாகச் சுட்டுக் கொள்ளலாம் என்றால், கோயில் அதிகாரிகள், என்னை அங்குச் சேரவொட்டாமல் துரத்தி யடிப்பார்கள். ஆகையால் நான் இவ்விடத்திலேயே, அடை சுட்டுத் தின்பேன்; நீ காட்டெரு முட்டைகள் பொறுக்கிக்கொண்டுவந்து கொடு" என்றனன். போஸலபாவா நனி மகிழ்ந்து, சல்விரைந்து காட்டுக்குச் சென்று, உலர்ந்த எரு முட்டைகளைப் பொறுக்கிக்கொண்டு வந்து, அம்மறையவன் கரத்திற் கொடுத்தனர். இதற்குள் இவ்வேதியன், புத்தம் புதிய ஓடொன்று தேடிவைத்து, ஸ்நான முடித்து, ஈரவஸ்திரத்தைப் பிழிந்து கட்டிக்கொண்டு, நெருப்பு மூட்டி அடைசுட ஆரம்பித்தனன். * யாகபோக்தனாகிய தேவாதிதேவன், போஸல பாவா கொடுத்த மாவைச் சமைக்க ஆரம்பிக்கையில், ஸ்ரீ ருக்மிணீதேவி, ஒரு விருத்த வேதிய ஸுமங்கலியென வேடந்தரித்துக் கையிலொரு கோலைப்பற்றி யூன்றிநடந்து தள்ளாடிக்கொண்டு, மணல்மேட்டின்மேல் அடை சுட்டுக்கொண்டிருந்த தனது உண்மை நாதனிடத்திற்கு வந்து, அவனை நோக்கி, "நீர், இங்கு ஒன்றியாய் வந்திருந்து, அடை சுட்டு வருந்துவானேன்? மாவை எனது கையிற் கொடுத்தால், நான் அடை சுட்டுத் தருகின்றேன்" என்று, ஸ்நானஞ்செய்து வந்து, அடை சுடக் குந்தினாள். போஸலபாவா, அதனைக் கண்டு, "மா, கொஞ்சமாயிருக்கிறது, இவர்களிருவர் பசியை இது எங்ஙனம் மாற்றும்!" என்று தமக்குள்ளே சிந்திக்கலாயினார். ஜகஜ்ஜநனியாகிய ஸ்ரீ ருக்மிணீதேவி, அம்மாவைத் தொட்ட மாத்திரையிலேயே, அது ஒன்று பத்தாய் அதிகரித்தது. அவ் விந்திராதேவி, ஏராளமாய் அடைகளைச் சுட்டு அடுக்கிவைத்து, தனதுண்மை நாதனை நோக்கி, "ஓ எனதுயிர்க்காதல! நாம் இருவரும் இவ்வடைகளை, போஸலபாவாவுடன் புசிக்கலாம்" எனப் புகன்றனள். போஸல பாவா, அவர்களை நோக்கி, "எனது தெய்வங்காள்! நீர் உண்டு மிகுந்த பரிகல சேஷத்தை எனக்குக் கொடுத்தாற்போதும்" என வேண்டிக் கொண்டனர். அவருடைய வேண்டுகோளை ஒப்புக்கொண்டு, அந்த உத்தம கணவன் மனைவியர் இருவரும் உண்பாராயினார். அப்போது, அந்த அற்புதத்தை, தேவர்கள் யாவரும் ஆகாயத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தனர். ஸ்ரீருக்மிணீ வாஸுதேவர்கள், தமது வயிறார உண்டு, மிகுந்தவற்றை போஸலபாவாவுக்கு வழங்கிவிட்டு மறைந்தனர். பகவத் பரிகல சேஷமாகிய ப்ரஸாதம் அளவற்றதாயிருந்தது. போஸலபாவா அதிசயமடைந்து, "ஸாக்ஷாத் பண்டரிநாதன், ஸ்ரீருக்மிணீ ஸமேதனாய் வந்து, இங்ஙனம் செய்தனன்" எனத் தீர்மானித்து, அந்த ப்ரஸாதத்தைத் தாம் உட்கொண்டு, பகவத் ஸந்நிதிக்குள் நுழைந்து, சக்ரபாணியை ஸேவித்து, "ஓ, பக்தவத்ஸலா! இன்று, நெய் சர்க்கரையின்றி, வெற்றடைகளைத் தின்று மகிழ்ந்தனையா! இந்த க்ஷேத்திரத்தில் அநேகர், அறுசுவைகளோடு கூடிய திவ்யான்ன ஸமாராதனம் செய்துகொண்டிருக்க, அதனை உபேக்ஷித்து, இந்த

* யாகபோக்தன் - யாகத்தில் ஹவிர்ப்பாகம் உண்பவன்.



ஏழையை அபேக்ஷித்து வந்தனையல்லவா? உன்னை அடுத்தவர்களிடத்தில் நீ வைத்த அன்பின் பெருக்கை, நான் என்னவெனக் கொண்டாடுவேன்!" என விண்ணப்பித்தனர். நந்த நந்தனன் அதற்கு நனி மகிழ்ந்து, "ஓ, வைணவச் சிரேஷ்ட! அநேகர், ஸமாராதனம் செய்துகொண்டிருப்பது உண்மையாயினும், நான் அங்குச் செல்லின், அவர்கள் எனக்கு அன்னம் இடார்கள். அவர்கட்கு என்னிடத்தில் உள்ளன்பு இல்லை. டம்பத்துக் கென்றே பாடுபடுகின்றார்கள். நாளைக்கு அந்த உண்மையை உனக்கு விசதமாக்குகின்றேன்" என விளம்பினன்.

மறுநாள், வர்த்தகன் ஒருவன், ஆயிரம்பேர்க்கு ஸமாராதனம் செய்ய எண்ணி, சந்த்ரபாகைக்கரையில் மணல் மேட்டின்மேல், பந்தலிட்டு, திரைகள் கட்டி, வேதியர்களைக் குந்தவைத்தனன். அப்போது பண்டரிநாதன், ஒரு விருத்த வேதியவேடந்தாங்கி, கந்தை உடுத்து, கரத்தில் ஒரு கோல்பற்றி யூன்றித் தத்தடியிட்டுத் தள்ளாடி நடந்து நடுநடுங்கி போஸலபாவாவை நோக்கி, "நீ தூரமாய் நின்றுகொண்டிரு" என நியமித்து, பந்தலுக்குள்ளே நுழைந்து, "எனக்கு மெத்தப் பசியாயிருக்கின்றது; அன்னம் வேண்டும்" எனக்கேட்க, அவ்விடத்திய காரியாதிகாரிகள், இம் மறையவனை நோக்கி "உனக்கு இங்கு அன்னம் ஸன்னந்தான்; நாங்கள் குறித்துக்கொண்டபடி கணக்குக்குச் சரியாய் வேதியர்கள், முன்பே வந்திருக்கின்றனர்" எனக் கூறினார்கள். அதற்கு லக்ஷ்மீகாந்தனாகிய விருத்தவேதியன், அவர்களை நோக்கி, ஆயிரம்பேர் அந்தணர்கள் உண்ணும் இடத்தில், என்போன்ற கிழவன் ஒருவனுக்குச் சோறிடல் கஷ்டமா! நான் இளைப்பால் நடக்கமுடியாமல் நடுங்குகின்றேன்; எனக்குக் களைவந்து மூடிக்கொள்ளுகிறதென்று சொல்லிக் கொண்டு, அசையாமற் குந்தியிருந்தான். அப்போது, முதலாளியாகிய வர்த்தகன் அதிக சினங்கொண்டு, "இம் மறையவன், வீண் ஆரவாரஞ் செய்கின்றனன்; இவனுக்கு இடங்கொடுத்தால், இவனைப்போலவே இன்னும் பலர் வந்து, நம்மை வருத்துவார்கள்; ஆகையால், இவனைத் தூக்கியெடுத்துக்கொண்டுபோய், பந்தலுக்கு வெளியே விட்டுவாருங்கள்" எனக் கூறினவுடனே, காவலாளிகள் வந்து, அவ் வேதியனைத் தூக்கிக் கொண்டுபோய், தூரத்தில் விட்டு விட்டார்கள். அப் பந்தலுக்குள் உட்கார்ந்திருந்த வேதியர்கள் ஆபோசனம் செய்யும் ஸமயத்தில், திடீரென ஒரு சுழற்காற்று மும்மரமாய் வீசியதனால், பந்தர் ஆகாயத்திற் பறந்து போயிற்று. சோறுகறிகள் முழுவதும் மணல்மயமாய் விட்டன. அங்கிருந்தார் யாவரும் தங்களுடைய கைகளை நெரித்துக்கொண்டு, தமதுயிர்கள் தப்பினாற்போதுமென்று விரைந்தோடிப்போனார்கள்; இவைகளனைத்தையும் பகவான், போஸலபாவாவுக்குக் காட்டி "இவர்கள் எண்ணம் நல்லதல்ல ஆகையால், நான் அங்குச்செல்லாமல், நல்லெண்ணங்கொண்ட உன்னிடத்திற்கு வந்தேன். துர்யோதனனுடைய சோற்றை வெறுத்து.

'விதுரன் குணவிசிட்ட வித்தகன் அன்னான்
மதுரமுள்ள அன்னம் மகிழ்ந்துநான் உண்பேனே'

என விதுரன் இட்ட மதுரமுள்ள சோற்றைப் புகழ்ந்து புசித்தேன் என்பதை, நீ கேட்டறியாயா! முனிவர் மனைவியர் பக்தியுடனிட்ட அன்னத்தை நான் உண்ட சிறப்பையும், சபரியின் நல்லெண்ணத்திற்கு மகிழ்ந்து, அவ்வுத்தமியளித்த எச்சிற் பழங்களை நான் நுகர்ந்த விசேஷத்தையும் உணராதார் யாவர்? நான் வறியவன் அல்லன்; உனது உள்ளன்புக் குவந்து, ஸ்ரீ ருக்மிணீ ஸமேதனாய் வந்து, உனது மாவை அடையாக்கி, உண்டு மகிழ்ந்தேன்.

'ஹரியுண்டா னானால் அகிலாண்ட மெல்லாம்
ஸரியுண்ட வாறுருக் தாம்' என்றபடி,

நான், ஸந்தோஷத்துடன் நினது அன்னத்தை உண்டதனால், ஸர்வ லோகங்களும் உண்டு மகிழ்ந்தபடியாம். திரௌபதி தந்த * சாகங்களை உண்டு, பதினாயிரம் சிஷ்யர்களுடன் வந்த துர்வாஸனை நான் மகிழ்வித்தேன் என்பதை நீ கேட்டிருப்பையல்லவா? ஆகையால், நீ இத்தனை நாட்களிற்போல, பலர்க்கு அன்னமிடாததற்காகச் சோகிக்கவேண்டாம்;

'கெட்ட சாறு தவிடு கஞ்சி யிருமி யுண்ட மாவரைக்
கீரை வேர்தெ ளிந்த மோர்மு றிந்த பாகு கிண்டிமா
இட்ட சோறு கொழிய லுப்பிடாத புற்கை யாயினும்
எங்கு மன்ப தாக நுங்க இன்ப மாயி ருக்குமே
பட்ட பாகு பசுவி னெய்ப ருப்பு முக்க னிக்குழாம்
பாளி தங்கள் தாளி தங்கள் பண்ணி யார வகையுடன்
அட்ட பாற்கு ழம்பு கன்ன லமுத மோடு முதலினும்
அன்பி னோடை ளித்திடாத அன்ன மென்ன வன்னமே'

அன்புடன் நீ எனக் களித்த மாவால், நான் மகிழ்ந்ததன்றி, ஸர்வலோக வாஸிகளும் பரிபூர்ண ஸந்தோஷ மடைந்தார்கள் என்று மும்முறை ஸத்யஞ் செய்து சொல்லுகின்றேன்" எனக் கட்டுரைத்தனன். அதனைக் கேட்டு மனமகிழ்ந்த போஸலபாவா, பன்முறையிற் பகவானை வந்தன வழிபாடுகள் செய்து துதித்து, அவனது விடை பெற்றுத் தமதூர்க்குச் செல்வாராயினர்.

இங்ஙனம், போஸலபாவா, தமதூர்க்குப் போய்க்கொண்டிருக்கையில், வழிநடுவில் அவர் பசியால் நனிவருந்துவதை அறிந்த பண்டரிநாதன், அங்கே, கனிதரு மரங்கள் நிறைந்த ஒரு தோட்டமும் தூரவும் உண்டாக்கி, அதில் தானொரு தோட்டக்காரனாக, ஸ்ரீருக்மிணீதேவியாகிய தோட்டக்காரியுடன் எழுந்தருளியிருந்தனன். போஸலபாவா பேரானந்தத்துடன் பகவானைப் புகழ்ந்து, பசியைப் பொறுத்துக் கொண்டு, அந்தத் தோட்டத்துக்குள் நுழையாமல், வழியே நடந்து செல்வாராயினர். அப்போது ஸ்ரீ ருக்மிணீதேவி, தனது மடிநிறையப் பழங்களைக் கட்டிக்கொண்டு, ஒரு கூடையில் அப்பங்களை வைத்துக் கொண்டுவந்து, போஸலபாவாவை நோக்கி, "நீ பண்டரிபுரத்துக்குப்

* சாகங்கள் - காய்கனி கிழங்குகள்.



போய், வருகின்றனை! உனது பசியைத் தீர்த்து, உன்னை ஆதரிப்பதற்காக நானும் எனது கணவரும், பழங்களையும் அப்பங்களையும் சித்தஞ் செய்து, உன்னை எதிர்நோக்கியிருக்கின்றோம். நீ இத் தோட்டத்துக்குள் வந்து, பசி தாகங்களைச் * சமனம் செய்துகொண்டு போகவேண்டும்" என்று உபசாரத்துடன் அழைக்க, போஸலபாவா ஸந்தோஷித்துத் தோட்டத்துக்குள் நுழைந்து, மரநிழலிற் குந்தியிருந்து, மந்தமாருதத்தால் மார்க்காயாஸத்தைப் போக்கிக்கொண்டு, தமக்கு அந்த தம்பதிகளிருவரும் தந்த பழங்களையும், அப்பங்களையும், நறுநீரையும் உட்கொண்டனர். உடனே அந்த தம்பதிகள் மறைந்தனர். கனி மரங்களோடு கூடிய தோட்டமும், தூரவும் மறைந்து வெட்டவெளியாயின. போஸலபாவா அதிசயமடைந்து, "இது எனது தாய் தந்தையர்களாகிய ஸ்ரீ ருக்மிணீ வாஸுதேவர்களுடைய திருவிளையாட்டு" எனத் தீர்மானித்து அவர்களுடைய கல்யாண குண கணங்களைப் புகழ்ந்துகொண்டே தமதூர்க்குச் சென்றனர்.

இங்ஙனம் இருக்க, ஒருநாள் போஸலபாவா, சோளக் கொல்லைக்குக் காவலிருந்தபோது, பகவானைப் புகழ்ந்து தியானித்துக்கொண்டு, தமது ஞாபகத்தை அவன் திருவடிகளிலேயே செலுத்திச் சோளக் கொல்லையை மறந்திருந்தனர். பறவைகள் வந்து, கொல்லையில் தானியங்களைத் தமதிச்சையின்படி தின்றுகொண்டிருந்தன. தீனர்களாகிய வழிப்போக்கர்களுக்கு, போஸலபாவா, கதிர்களை அறுத்துக் கொடுத்துக்கொண்டிருந்தனர். இப்படிப்பட்ட ஸமயத்தில் அவருடைய மனைவியாகிய மமதாபாய், அவர்க்கு அன்னங்கொண்டுவந்து அவரை உண்பித்து, "ஓ, காதல! நீர், இங்ஙனம் சோளக்கதிர்களை அறுத்து, வழிப்போக்கர்களுக்கு வழங்கிக் கொண்டிருப்பின், துரைத்தனத்தாருக்குச் செலுத்தவேண்டிய பணத்திற்கு என்செய்வோம்! இனிமேலாவது அங்ஙனம் செய்யாமல், கொல்லையை ஜாக்ரதையாய்க் காத்துக் கொண்டிருக்கக் கோருகின்றனன். இனி, கதிர்களை நீர் அறுத்து வழிப்போக்கர்களுக்கு வழங்கினால், ஸ்ரீ விட்டலநாதன்மேல் உமக்கு ஆணை இருக்கின்றது" எனப் புகன்று வீட்டுக்குச் சென்றனர். போஸலபாவா பரமானந்த பரராய், பகவானைப் புகழ்ந்துகொண்டிருந்தனர். அப்போது பண்டரியாத்ரை செய்பவர்களாகிய வழிப்போக்கர்கள், போஸலபாவாவை நோக்கி, "எம்மைப் பசி மிக வருத்துகின்றது; நாலைந்து கதிர்கள் தந்தீராயின், எமது பசிதீரப் புசித்துச் செல்வோம்" என்றனர். அதற்கு அவர், தமது மனைவியார், புண்டரிநாதன்மேலிட்ட ஆணையை எண்ணினவராய், கதிர்களைத் தமது கரங்களிற்றொடாமல், "ஓ, பாக்யவான்காள்! உமக்கு வேண்டிய அத்தனை கதிர்களை அறுத்துக்கொண்டு, தின்று பசியாறுங்கள்" எனக் கூறினர். இதனைக்கேட்ட வழிப்போக்கர் யாவரும், தத்தம் இச்சையின்படி கதிர்களை முறித்துக் கொண்டுபோனார்கள். ஒரு கணநேரத்தில் சோளக்கொல்லை முழுவதும்

* சமனம் செய்தல் - தணித்துக்கொள்ளல்.

சூன்யமாய் விட்டது. இவ்விருத்தாந்தத்தை அவ்வூரார் கேள்வியுற்று, "இவர் *பரமோதாரர்; வைராக்யசீலர்; இப்பேர்ப்பட்டவருடைய ஸம்ஸாரத்தைப் பண்டரிநாதன் நன்றாய்க் காக்கவேண்டும்; துரைத்தனத்தார்க்கு இவரென்ன ஸமாதானம் கூறுவாரோ! விளங்கவில்லை" எனத் தமக்குள் பேசிக்கொண்டிருந்தனர். இவைகளனைத்தையும் கேட்டு, இவருடைய மைந்தராகிய ஏமாஜி வந்து, ஒன்றும் பேசாமல் வருந்தி உட்கார்ந்துகொண்டிருந்தனர். அதனைப் பார்த்த போஸலபாவா, "ஓ வத்ஸா! நீ வருந்தற்க; மனிதன் உலோபனாய்ப் பிறர்க்கிடாமல், தானும் அநுபவிக்காமல், தனது பொருளை மண்ணுக்குள் புதைத்து வைப்பான்; கடைமுறையாக அந்தப் பணம்,

'உண்ணானொளிநிறாஅன் ஓங்குபுகழ் செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருந்தானேல் ஆஅ
இழந்தானென் றெண்ணப் படும்' என்றபடியும்,

'கருங்குளவி சூரைத்தூ றீஞ்சங் கனிபோல்
வருந்தினர்க்கொன் றீயார்தான் வாழ்க்கை—அரும்பகலே
இச்சித் திருந்தபொருள் தாயத்தார் கொள்வரே
யெற்றேமற் றெற்றேமற் றெற்று' என்றபடியும்,

'வைத்தீட்டி னாரிழப்பர் வான்றோய் மலைநாட
வுய்த்தீட்டுந் தேனீக் கரி' என்றபடியும்,

காட்டகத்தில் தேனீக்கள் சேர்த்துவைத்த தேனைபோல பிறர்பாற் சேர்வதாகும். மனிதன், தான் ஜீவித்திருக்கையிலேயே, பகவத்சரீரபூதர்களாகிய தீனஜனங்களை ஆராதித்தல், பகவானுக்கு அதிக ஸந்தோஷகரமான காரியம் என்பதை நீ அறியாயா!' எனத் தேற்றிக் கூறினர். இதனைக்கேட்டவுடன் மைந்தர், தமது மனக்கலக்கம் அகன்று, மகிழ்சிறந்து, தந்தையை வீட்டுக்கு அழைத்துக்கொண்டுவந்து, அங்கே நடந்த விருத்தாந்தங்களனைத்தையும் தமது தாய்க்கு அறிவித்தனர். மமதாபாய், தமது மைந்தர் வார்த்தைகளைக்கேட்டு மகிழ்ந்து மௌனமாயிருந்தனர்.

பிறகு துரைத்தனத்தார், தமது அரசிறைப் பணத்தைப் பெற்றுக்கொள்ள வந்தனர். அவ்வூரிலிருந்த துஷ்டரிற் சிலர், ராஜதூதர்களை நோக்கி, "போஸலபாவா கொடுக்கவேண்டிய கடமையை முன்னதாக வாங்கிக்கொண்டு வந்தீராயின், நாங்கள் தரவேண்டிய கடமைகளைப் பின்னாற் செலுத்துகின்றோம்" எனக் கூறி, அவர்களை ஏவினார்கள். அவர்கள் அங்ஙனமே வந்து, போஸலபாவாவின் வீட்டு வாசலிற் குந்தியிருந்து, "இவ்வாண்டு, நீ, ராஜாங்கத்தார்க்குக் கொடுக்கவேண்டிய ஏழுவராகன்களையும், இப்போதே கொடுத்துத் தீரவேண்டும்" என்று வற்புறுத்தினார்கள். அப்போது போஸலபாவா, தம்மிடத்தில்

* பரம+உதாரர் - கொடையாளிகளிற் சிறந்தவர்.



மூன்றுவராகன்கள் இருந்தமையால், மற்றைய நான்குவராகன்களையும் கடனாகவாங்கி,

'கடன்கொண்டும் செய்வன செய்த லினிதே' என்றபடி,

கொடுக்கவேண்டுமெனத் தீர்மானித்து, அவ்வூரில் மிகவும் பணக்காரியாய், *க்ருபணசிரோமணியாயிருந்த நாகாபாய் என்னும் கைம்பெண்ணிடத்திற்குப்போய், ராஜபடர்களுடைய நிர்ப்பந்தத்தைக் கூறி, "எனக்கு நான்குவராகன்கள் கடனாய்த் தந்தனையாயின், நான் அந்தத் தொகையை வட்டியோடு திருப்பிக் கொடுத்துவிடுவேன்" எனக் கேட்டனர். அம்மாது, "நாளை விடியற்காலையில் நீவிர் வருவீராயின், தருவேன்" எனக் கூறி, அவரை வீட்டுக்கனுப்பிவிட்டு, தான் மண்ணுக்குள் மறைத்துப் புதைத்துவைத்துள்ள பொருளிலிருந்து, நான்கு வராகன்களை எடுத்து, வெளியில் வைத்திருந்தனள். அப்போது, துஷ்டரிற் சிலர், அவளிடத்திற் போந்து, "ஓ அன்னாய்! எமது வார்த்தைகளை அநாதரவுசெய்யாமற் கேள்: நீ, வருந்தித்தேடிச் சேர்த்துவைத்தபொருளை, இழக்கும்படி இருக்கின்றது! மறுபடியுந் திருப்பிக் கொடுத்துவிடக்கூடிய தகுமான ஸம்ஸாரிகளுக்கே கடன்கொடுக்கவேண்டும் அல்லாமல், வறியவரிற் றலைமைப்பூண்டொழுகும் ஒருவற்குக் கொடுக்கலாமா! நீ, போஸலைக்கு ஏதோ கடன்கொடுக்க எண்ணியிருப்பதாக, நாங்கள் கேள்வியுற்றோம்; அது மிகவும் நல்லதுதான்; ஆனாலும் அவன் வறியவன்; வாங்கின கடனை மறுபடியும் வழங்க வலியில்லான்; அவற்குப் பற்று நீக்கம் தெரியா; அகப்பட்டுக்கொண்டு விழிக்கவேண்டா; அப்பால் உனதிஷ்டம்; நாங்கள் என்னமோ, உனக்குமுன் ஜாக்ரதை கூறினோம். இதை அவனிடத்திற் சொல்லி, எம்மை வெளிப்படுத்திவிடவேண்டா; போய் வருகின்றோம். அவனுக்குக் கடன்கொடுத்துவிட்டு, நீ ஏமாறப்போகும் விஷயத்தை எண்ண எண்ண எங்கள் மனம் பகீர் என்கிறது. உன்னிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு போய்விடலாம் என்று நாங்கள் நடந்தாலும், எங்கள் மனம் அங்ஙனம் இசையவில்லை; இன்னுஞ் சொல்லுகிறோம். போஸலை, ஸம்ஸாரத்தில் ஒட்டாமல், விரக்தனாய்த் திரிகிறான்; ஆகையால், அவற்குக் கொடுக்கும் கடன், மறுபடியும் உனது கைக்கெட்டுவது அஸாத்யம்" எனக் கற்பித்தனர். மறுநாளுதயத்தில், போஸலபாவா வந்து கேட்டபோது, நாகாபாய், "எனக்குத்தரவேண்டிய கடன்காரர்கள் தமதுவாக்குத் தப்பிப்போனமையால், என் கையிற் பணமில்லை; இன்று தரவேண்டிய இரண்டொரு கடன்காரர்கள், ஊரிலேயே இல்லாமல் வெளியே சென்றிருக்கிறார்கள். நான் என்செய்வேன்! என்னை மன்னிக்கவேண்டும்; உனக்குக் கடன் தர என்னால் முடியாது" எனப் பொய்யுரைத்தனள்.

'உலக வர்த்தக வுன்னத வண்டி
அலகில் பொய்யும் அரும்புனை சுருட்டும்.

* க்ருபணத்வம் - லோபகுணம்; க்ருபணசிரோமணி - ஈயாதலோபியர்க்குள் சிறந்தவள்.

ஆமீ ருருளைகள் அழகுறப் பூண்டு
சூதெனுங் குதிரையுந் தோமுறு மழுக்கா
றென்னும் இவுளியும் ஈர்க்கத் தன்னலங்
கருதல் தானே பெருகல் பிறனைக்
கெடுத்தல் முதலிய கீழ்மை யாகிய
தெருக்களி லோடிச் சிறிதும் அறிவிலாத்
தனது தலைவன் தன்மே லேற்றிய
போலிப் பொருளே புரைதீர் பொருளெனச்
சுமந்து விளங்கும்; சுத்த ஞான
மெய்ப் பொருட் சரக்கதன் மீமிசை
ஏற்றிச் செலுத்த இயலா தன்றே'

'பொய்ப்பொருள் தேடும் உலக வியாபாரமே ஒரு வண்டியா யிருக்கின்றது. அது பொய்யும், புனைசுருட்டுமாகிய இரண்டு சக்கரங்களின்மேல் நிற்கின்றது. அதனை இழுத்தோடச் சூதென்னும் ஒரு குதிரையும், பொறாமையென்னும் மற்றொரு குதிரையும் அதனிற் கட்டப்பட்டிருக்கின்றன. அவைகள், அந்த வண்டியை இழுத்துக்கொண்டு, தன்னலங் கருதல், தானே பொருளிற் பெருகல், பிறனைக்கெடுத்தல் முதலிய வீதிகளின்வழியே ஓடி, மந்தமதிவாணன் என்னும் தனது தலைவன், தன்மேலேற்றிய பொருட்போலியே குற்றமற்ற சரக்கெனச் சுமந்து விளங்கும். சுத்தஞான மெய்ப்பொருளாகிய சரக்கை அதன்மேலேற்றிச் செலுத்த முடியாது' என்றபடி, நாகபாய் உலக வர்த்தக உன்னத வண்டியைச் செலுத்துபவளாகையால், பொய்யும் புனைசுருட்டும் அவளிடத்திற் குடிகொண்டிருக்கக் கேட்பானேன்! அவள் புனைந்து சுருட்டிக் கூறிய பொய்ம்மொழியை மெய்ம்மொழியாகக்கொண்ட சுத்தமனத்துத்தமராகியபோஸலபாவா,ஒன்றுஞ்செய்யத் தோற்றாதவராகி,கொஞ்சநேரஞ் சிந்தித்து,வீராளா க்ராமத்திலிருந்த வர்த்தகன் ஒருவனைக்கேட்டுக் கடன் வாங்கிக்கொண்டுவர எண்ணி, அதனைத் தமது மனைவி மைந்தர்க்கு அறிவித்து,பகவானைப் புகழ்ந்துகொண்டு அவ்வூர்க்குச் செல்வாராயினர். இங்கே துஷ்டர்கள், "போஸலை ஓடிப்போய்விட்டான்" என்று வீண் புரளி செய்தார்கள். ராஜபடர்கள், தமது கடமை செலுத்தப்படும் வரையில், வீட்டிலுள்ளார் வெளியே செல்லப்படாதென நிர்ப்பந்தம் பண்ணினார்கள். அப்போது, பண்டரிநாதன், அவ்வூர் வெட்டியான் போல வேடந்தாங்கி, அதிகார ஸ்தானத்துக்குப்போய், போஸலபாவா செலுத்தவேண்டிய ஏழுவராகன்களையும் செலுத்திவிட்டுப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொண்டுவந்து, அவருடைய வீட்டுவாசலிற் குந்தியிருந்த ராஜபடர்களிடத்திற் கொடுத்தனன். அவர்கள், அந்தப் பற்றுச்சீட்டைப் படித்துப் பார்த்துக்கொண்டு, ஸந்தோஷத்துடன் போய்விட்டார்கள். அப்போது, அவ்வூரார் போஸலைக்கு வராகன் எங்ஙனம் கிடைத்ததென அதிசயமடைந்தார்கள். வீராளா க்ராமத்துக்குச் சென்ற போஸலபாவா, அவ்விடத்திய வர்த்தகனைக்கேட்டு நான்குவராகன்கள் கடன் வாங்கிக்கொண்டு, மறுநாள், தமதூர்க்கு வந்தபோது, ராஜ



படர்கள், அவரைநோக்கி,"நீ அனுப்பின ஏழுவராகன்களையும், வெட்டியான், அதிகாரஸ்தானத்திற் செலுத்திவிட்டு, எமக்குப் பற்றுச்சீட்டுக் கொணர்ந்து கொடுத்தனன்" எனப் புகன்றனர். அதனைக் கேட்ட போஸலபாவா அதிசயங்கொண்டவராய், தமது வீட்டுக்குவந்து, மனைவி மைந்தர்களை நோக்கி, "நீவிர், வராகன்களை எங்குச் சேகரித்து, அதிகார ஸ்தானத்திற் கனுப்பினீர்கள்?" எனக் கேட்டனர். அவர்கள் அவரை நோக்கி, "நீர் வீராளா க்ராமத்திற்குச் சென்றபிறகு, அரசிறைமையைக் கொடாமல், வீட்டுக்குள்ளே யிருப்பவர்கள் வெளியே செல்லப்படாதென ராஜபடர்கள் வற்புறுத்தினார்கள். ஆகையால் நாங்கள் தண்ணீர் முதலானவைகளைக் கொண்டுவருதற்கும் கூடாமல், கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தோம். இதற்குள் வெட்டியான் பற்றுச் சீட்டுக் கொணர்ந்து கொடுத்தபடியால், ராஜபடர்கள் புறப்பட்டுப் போய்விட்டார்கள். வராகன்களை நீரே அனுப்பியிருப்பீரென்று எண்ணிக்கொண்டனம்" என்றார்கள். உடனே போஸலபாவா, வெட்டியானை வரவழைத்து, "நீ, அதிகாரஸ்தானத்திற் செலுத்தின வராகன்கள் உனக்கெங்ஙனங் கிடைத்தன?" எனக் கேட்டனர். அதற்கு வெட்டியான், "ஐயா! நரி யெங்கே, நாகலோக மெங்கே! ஒருவேளைக் கஞ்சிக்கு வழியில்லாத நான், ஏழு வராகன்களைச் செலுத்தினேன் என்றால் யார் நம்புவார்கள்? எனக்கு ஒன்றுந்தெரியாது" என்று சொன்னான். அப்போது போஸலபாவா, "இது பண்டரிநாதனுடைய லீலை" என நிச்சயித்து, "பக்தவத்ஸலா! தீனதயாளா! ஆபத்ஸகாயா! ஆதிமூலப்பொருளே! என்னிமித்தம் நீ யேன் வருந்துகின்றனை! அகிலலோக நாயகனாகிய நீ, இந்தநீசவேடந் தரிக்கத் தகுமா! ப்ரஹ்ம ருத்ராதிதேவர்கள் உனக்கு தாஸபூதர்களாயிருக்க, நீ யேன் தாஸ வேடந் தாங்கினை!" எனக்கூறிக் கண்ணீர் ஆறாகப்பெருக்கிக்கொண்டிருக்கையில், பண்டரிநாதன் காட்சிகொடுத்து நின்றனன். போஸலபாவா, பகவானுக்கு ஸாஷ்டாங்க வந்தனம் செய்து,

'ஒருபேருந்தி யிருமலர்த் தவிசில்
ஒருமுறை வளைய வீன்றனை ஒருமுறை
இருசுடர் மீதினி லியங்கா மும்மதில்
இலங்கை யிருகால் வளைய ஒருசிலை
யொன்றிய வீரெயிற் றழல்வாய் வாளியின்
அட்டனை மூவடி நானிலம் வேண்டி
முப்புரி நூலொடு மானுரி யிலங்கு
மார்வினின் இருபிறப் பொருமா ணாகி
ஒருமுறை யீரடி மூவுல களந்தனை
நாற்றிசை நடுங்க வஞ்சிறைப் பறவை
யேறி நால்வாய் மும்மதத் திருசெவி
ஒருதனி வேழத் தரந்தையை ஒருநாள்
இருநீர் மடுவுள் தீர்த்தனை முத்தீ
நான்மறை ஐவகை வேள்வி அறுதொழில்

அந்தணர் வணங்கும் தன்மையை ஐம்புலன்
அகத்தினுள் செறுத்து நான்குட னடக்கி
முக்குணத் திரண்டவை யகற்றி ஒன்றினில்
ஒன்றி நின்ருங் கிருபிறப் பறுப்போர்
அறியுந் தன்மையை முக்கண் நாற்றோள்
ஐவா யரவோ டொருபொறி சடையோன்
அறிவருந் தன்மைப் பெருமையுள் நின்றனை
ஏழுல கெயிற்றினிற் கொண்டனை கூறிய
அறுசுவைப் பயனு மாயினை சுடர்விடும்
ஐம்படை யங்கையு ளமர்ந்தனை சுந்தர
நாற்றோள் முந்நீர் வண்ணநின் னீரடி
யொன்றிய மனத்தால் ஒருமதி முகத்து
மங்கைய ரிருவரு மலரென அங்கையின்
முப்பொழுதும் வருட அறிதுயி லமர்ந்தனை
நெறிமுறை நால்வகை வருணமு மாயினை
மேதகு மைம்பெரும் பூதமும் நீயே
அறுபத முரலும் கூந்தல் காரணம்
ஏழ்விடை யடங்கச் செற்றனை அறுவகைச்
சமயமு மறிவரு நிலையினை ஐம்பால்
ஓதியை ஆகத் திருத்தினை அறமுதல்
நான்க வையாய் மூர்த்தி மூன்றாய்
இருவகைப் பயனாய் ஒன்றாய் விரிந்து
நின்றனை குன்ற மதுமலர்ச் சோலை
வண்கொடிப் படப்பை வருபுனல் பொன்னி
மாமணி யலைக்கும் செந்நெலொண் கழனித்
திகழ்வன முடுத்த கற்போர் புரிசை
கனக மாளிகை நிமிர்கொடி விசும்பில்
இளம்பிறை துவக்கும் செல்வம் மல்குதென்
திருக்குடந்தை அந்தணர் மந்திர மொழியுடன்
வணங்க ஆடர வமளியி லறிதுயில்
அமர்ந்த பரமநின் னடியிணை பணிவன்
வருமிட ரகல மாற்றோ வினையே' எனச்

சதுஷ்கவி சிகாமணியாகிய திருமங்கைமன்னன் திருவாய் மலர்ந்தருளிய திருவெழு கூற்றிருக்கையிற்போலத் திருவிண்ணப்பஞ் செய்து, "பண்டரிநாதா! வெட்டியானென வேடந்தாங்கிய உனக்கு,வராகன்கள் வந்தவிதம் எந்தவிதம்!" எனக் கேட்டனர்.

அதற்குப் பண்டரிநாதன், புன்சிரிப்புக்கொண்டு, என் அப்பனே, நீ, வீராளா க்ராமத்துக்குப் போனபோது சிலதுஷ்டர்கள், நீ எங்கேயோ ஓடிப்போய்விட்டனை என்று வீண்புரளி செய்தார்கள். ராஜபடர்கள், உனது பெண்டுபிள்ளைகளை மிகவும் நிர்ப்பந்தம் செய்தார்கள்.



நான், அப்போது, நாகாபாயின் புதையலிலிருந்து நான்கு வராகன்கள் எடுத்து உன் வீட்டிலிருந்த மூன்று வராகன்களோடு சேர்த்து, அதிகாரஸ்தானத்திற் செலுத்தினேன்" என்று விடைகூறினன். அதைக்கேட்ட போஸலபாவா, "ஏதுக்கு நீ, ஈயாரிற் றலைமை பூண்டொழுகும் நாகாபாயினுடைய வராகன்களைக் கொண்டுவந்தனை! இதனை அவர் அறியின், அவளுக்கு உயிரே போய்விடும்! வீராளா க்ராமத்திலுள்ள வர்த்தகனைக் கேட்டு நான்,நான்கு வராகன்கள் வாங்கிக்கொண்டு வந்தேன்; இவ்வராகன்களை அவளுக்குக் கொடுத்துவிடுகிறேன்" என்றனர். அதற்கு ஜகந்நிவாஸன், "நீ அங்ஙனம் செய்யற்க; என தருமதியை மீறி நாகாபாய்க்கு, வராகன்களைக் கொடுத்தனையாயின், அவள் புதைத்து வைத்துள்ள பொருளத்தனையும் மாயமாய்ப் போய்விடும்படி செய்துவிடுவேன். எனது பக்தனாகிய உனக்குக் கடன் தருவேன் எனக்கூறி அவள் தப்பிப்போய்விட்டமைக்கு இது அபராதமாகும்" என மறுத்துரைத்து மறைந்தனன். அப்போது போஸலபாவாவின் வீடெங்கும் தனதான்யங்கள் நிரம்பி, இவருடைய கொல்லையிற் சோளக்கதிர்கள் முற்றிப் பழுத்துத் தலைகளைச் சாய்த்து, இவர்க்கும் பண்டரிநாதற்கும் வந்தனங்கள் செய்வனபோலக் காற்றுக் கரைந்து விளங்கின. இதனைக் கண்டார் யாவரும், போஸலபாவாவின் விஷயத்தில் பகவானுக்குள்ள உள்ளன்புக்கு வியந்து மகிழ்சிறந்தனர். போஸலபாவா, பகவானுடைய கடைக்கண்ணோக்கத்தால், தாம் பெற்ற தன தான்யாதிகளை, எப்போதும்போல தீனர்களுக்கு வழங்கி வாழ்வாராயினர்.

ஸர்வஸம்பத்ப்ரதாத்ரேநமஃ

### அறுபத்துமூன்றும் அத்தியாயம்

## போஸலபாவா ஹரிகீர்த்தனம் செய்கிறபோது, பாம்புகடித்து இறந்தவனை ஸ்ரீ பண்டரிநாதன் பிழைப்பித்த சரித்திரம்

போஸலபாவா, தமக்கு ஈச்வர கடாக்ஷத்தாற் கிடைத்த பொருளை மறுபடியும் தீனர்களுக்கே விநியோகித்தனர்; கொல்லையில் முற்றிப் பழுத்து நிறைந்திருந்த சோளக் கதிர்களை அறுத்து ஸாதுக்களுக்கு வழங்கினர். அந்த சோளப்பயிர் மறுபடியும் * அங்குரித்து அளவுக்கு மிஞ்சிய பலன் தந்தது. இதனைக்கண்டார் அதிசயித்து, "ஸாது ஜனங்

* அங்குரித்தல் - முளைத்தல்.

களுடைய ப்ரபாவம், அத்யத்புதமாய் இருக்கின்றது; ஜகந்நிவாஸன்,
ஆசையறுத்தவர்களாகிய ஸாதுக்களுக்கு ப்ரஸந்நனாய் அவர்களுடைய
யோகக்ஷேமங்களைத் தான் ஏற்றுக்கொள்ளுகின்றனன்'' என்று பாக
வத வைபவத்தைப் புகழ்வாராயினர்.

ராதாமணம் என்னும் பட்டணத்துக் கருகில் உள்ள ஒரு கிராமத்
தில், மொதகமகரன் என்னும் குடியானவன் ஒருவன், போஸலபாவா
வுக்கு நெருங்கின சுற்றத்தானா யிருந்தனன். அவனுடைய தம்பிய
ரிருவர், * அஹங்கார க்ரஸ்தர்களாய், துராசார ஸீலர்களாய் விளங்கி
யிருந்தனர். அந்த மொதகமகரனுடைய விளைநிலம், போஸல பாவாவி
னுடைய விளை நிலத்துக்குப் பக்கத்தில் இருந்தது. அவ்விளை நிலத்தை,
ஆசியென்னும் மாதொருத்தி காவல் காத்திருந்தனள். அப்பெண்மணி,
போஸல பாவாவின் ப்ரபாவத்தைக்கேட்டு, பேரானந்த மடைந்து,
பூர்வஜன்ம புண்ய விசேஷத்தால், அவரிடத்தில் பக்தியுண்டாகி, அவ
ரைச் சரண்புகுந்து, ''ஓ, ஸ்வாமி! நான், அநாதிகாலமாய்ப் பிறவி
நோயாற் பீடிக்கப்பட்டிருக்கிறேன்; எனக்குத் தக்க மருந்துதவி,
பத்யபரிஹாரங்களைக் கூறி,எனது வியாதியைப்போக்கி,எனக்கு மோக்ஷ
ஸுகத்தை உண்டாக்கி யருளவேண்டும்'' என மன்றாடினள். அதற்கு
போஸலபாவா, ''பெண்கள் சிகாமணீ! உனக்கு இத்தகைய அநுதாபம்
உண்டாயினமைக்கு மகிழ்கின்றனன்; உனது யஜமானனுடைய
அநுமதிபெற்று, ஒவ்வோரேகாதசியிலும் பண்டரிபுரத்திற்குச் சென்று
ஸ்ரீ புண்டரீகவரதனைத் தொழக்கடவை; நாடோறும், நீ,உனது யஜமா
னன் நியமித்த கிருத்யங்களைச் செய்து முடித்து, இராக்காலங்களில்
வந்து, நான் செய்யும் பகவத் பஜனத்தைச் ஸிரவணஞ் செய்க; எந்த
காரியம் புரிந்திருப்பினும்,

'வாழ்த்துகவாய் காண்ககண்கேட்க செவிமகுடம்
தாழ்த்து வணங்குமின்கள் தண்மலரால்—சூழ்த்த
துழாய்மன்னு நீண்முடியென் தொல்லைமால் தன்னை
வழாவண்கை கூப்பு மகிழ்ந்து' என்ற,

திருமழிசையாழ்வார் அருளிச்செயலின் பகவந்நாமத்தை உச்சரித்து,
மனத்தகத்தில் அவனைத் தியானித்துக்கொண்டிருக்கக்கடவை'' என்று
உபதேசித்தனர். அந்த மங்கை, போஸல பாவாவின் நியமனப்படி
செய்துவருவாளாயினள். போஸல பாவாவின் பக்தி பாவசத்தை,
ராளோ ராஸக க்ராமவாஸிகள் கேட்டுவந்து, அவரை தரிசித்து, அது
முதல் நாடோறும் தவறுமல், அவர் செய்யும்பஜனத்தைக்கேட்டு மகிழ்
வாராயினர். ஒருநாள், அவ்வூராரிற் பதின்மர் ஒன்றுசேர்ந்து,போஸல
பாவாவின் கீர்த்தனத்தைச் சிரவணஞ் செய்வதற்காக வந்துகொண்
டிருக்கையில் வழிநடுவில் அவர்களில் ஒருவன், பாம்புகடித்து இறந்த
னன். மற்றவர்கள்,கீர்த்தனங்கேட்கும் பேரவாவால், அந்தப்பிணத்தை
ஓர் ஆடையால் மூடிக்கொண்டுபோய் பஜனம் நடக்கும் இடத்தில்,

* அஹங்கார க்ரஸ்தர்கள் - அகங்கார நிறைந்தவர்கள்,



அதனை ஒருபுறத்தில் வைத்துவிட்டு, தாங்களும் உட்கார்ந்து சிரவணஞ்
செய்துகொண்டிருந்தார்கள். இது யார்க்குந் தெரியாமலிருந்தது.
போஸலபாவா, ஹரிகீர்த்தனம் செய்துகொண்டேயிருந்து, அங்கு
வந்திருந்தாரை நோக்கி, ''ஓ, நமரங்காள்! தூங்காமல் பகவத் கீர்த்த
னத்தைக் கேண்மின்,

'உறங்குவதுபோலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு' என்றபடி,

தூங்கினர் இறந்தவரே யாவார் ஆதலால், அனைவரும், அதிக காதலாய்
பகவந்நாமோச்சாரணஞ் செய்து, கைத்தாளம்போட்டுக் கூத்தாடுங்கள்''
என, அடிக்கடி உற்சாகப்படுத்துவாராயினர். அவர் உற்சாகப்படுத்திக்
கூறும்போதெல்லாம், அனைவரும் அங்ஙனம் செய்து மகிழ்ந்தனர்.
இந்தப் பிணம் மாத்திரம் சும்மா உட்கார்ந்திருந்தது. அதனைக்கண்ட
போஸலபாவா,தூக்கத்திற் றன்னை மறந்து அவசமானவன் என எண்ணி
அதனருகில்வந்து, ''ஓ புண்ய சீல! இந்த கோஷ்டியில் அனைவரும் நான்
கூறினபடி, ஸ்ரீராம நாம சிரவணம்செய்து நிருத்தமாடிக்கொண்டிருக்
கையில், நீ மாத்திரம் ஏனோ, சும்மா படுத்து உறங்குகின்றனை!
நாம், பகவத் விஷயத்தில், கரண களேபரங்களை விநியோகித்து, பரி
சுத்தவான்களாகு நிமித்தம், ஈஶ்வரன் நமக்குக் கிடைத்தற்கரிய இந்த
மநுஷ்ய சரீரங்களைத் தந்தருளினன்.

'காக மோடுகழு கலகை நாய்நரிகள்
சுற்று சோறிடுது ருத்தியைக்
காலி ரண்டுநவ வாசல் பெற்றுவளர்
காம வேணடன சாலையை
மோக வாசைமுறி யிட்ட பெட்டியைமு
மலமி குந்தொழுகு கேணியை
மொய்த்து வெங்கிரு மிதத்து கும்பியைமு
டங்க லார்கிடைச ரக்கினை
மாக விந்திர தனு மின்னை யொத்திலக
வேத மோதியகு லாலனார்
வனைய வெய்யதடி கார னையமன்
வந்த டிக்குமொரு மட்கலத்
தேக மானபொய்யை மெய்யெனக் கருதி
ஐய வையமிசை வாடவோ
தெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதயவி லாசமே' என்றபடி,

நீர்மேல் எழுத்துக்கு நேராகிய இச்சரீரங்களை நிலையென மருண்டு,காலம்
போக்குதல் ஞாயமன்று. மற்றவர்களைப்போலவே நீயும் எழுந்து,

கூத்தாடிப் பாடுக. உனது வாக்கால் பகவந்நாமத்தை உச்சரிக்கக்கடவை" எனக் கூறிக்கொண்டிருக்கும்போதே, இறந்து பிணமாய்க்கிடந்த அந்த மனிதன், பண்டரிநாதனுடைய பரம கிருபா கடாக்ஷத்தால் பிணத் தன்மை நீங்கி எழுந்து, ஸ்ரீராமநாம பாராயணம் பண்ணிக்கொண்டு, கூத்தாடத் தொடங்கினான். பாம்புகடித்திறந்த சரீரத்தை மறைத்துக் கொணர்ந்தவர்கள் ஆச்சரியமடைந்து, போஸலபாவாவுக்கு வந்தனம் செய்து, உண்மையை விண்ணப்பித்தனர். அதைக்கேட்டவுடனே அவர், ஆனந்தபரவசராய், "இது, ஸ்ரீபண்டரி நாதனுடைய திருவிளையாட்டு" எனக் கூறி, பகவானுடைய கல்யாண குணங்களைப் புகழ்ந்து கொண்டு இருந்தனர்.

இங்ஙனம் நிகழு நாட்களில் ஆசியென்னும் காவற்காரியினுடைய யஜமானன், பரலோக ப்ராப்தியாயினன்; அவன் மனைவி, பிறந்தகம் சேர்ந்தனள். அவனுடைய தம்பியர், தமது ஆஸ்தியைப் பங்குபோட்டுக் கொள்ளுகையில், அடிமையாகிய ஆசியை விற்றுவிடத் தீர்மானித்திருந்தனர். இதனை உணர்ந்த ஆசி, மிகவருந்தி, போஸலபாவாவினிடத்திற்கு வந்து, "ஓ, ஸ்வாமீ! தேவரீருடைய தரிசனத்திற்கும், கீர்த்தன சிரவணத்திற்கும் விரோதமாய், எனது யஜமானர்கள், என்னை வேறொருவர்க்கு விற்றுவிட நிச்சயித்திருக்கின்றார்கள். தூரதேசத்து வியாபாரிகள், எனக்காக, எனது யஜமானர்கள் கோரினவிலையைக் கொடுத்து, என்னை வாங்கிச் செல்வதற்குச் சித்தமாயிருக்கின்றார்கள்" எனக்கூறி அழுதுகொண்டிருந்தனள். அந்த மொழிகளைக் கேட்ட போஸலபாவா, அநுதாபம் மிக்கவராய், "வருந்துதல் ஒழிக, நீ, எங்கிருப்பினும், பரமாத்மாவுக்குச் சேஷமாயிருப்பவளாகின்றனை. ஸர்வகதனாகிய பரமாத்மாவை விட்டு, நீ, வேறெங்கே போகவல்லாய்! ஓ நல்லாய்! உனது துயரத்தை விட்டு, அந்தப் பரமாத்மாவை தியானித்துக்கொண்டிரு" எனக்கேட்ட ஆசி, "தேவரீருடைய திருவாய்மொழி, தூய்மை நிறைந்த வாய்மை என்பதில் ஐயமில்லை. நான், வேறெதற்கும் வருந்தவில்லை; தேவரீருடைய பிரிவைப் பொறுக்கமாட்டாதவளாகிச் சோகிக்கின்றனன்" எனப் புகன்று, அவருடைய மனைவியாராகிய மமதாபாயிடத்திற்குச் சென்று, "ஓ, அன்னாய்! எனது யஜமானர்கள், என்னை விற்றுவிட எண்ணியிருக்கின்றார்கள்; உனது கணவரைவிட்டுப் பிரிவது, எனக்குப் பொறுத்தற்கரியதா யிருக்கின்றது; எனது யஜமானர்கள், எனக்காகக் கோரின விலையைத் தந்து, என்னை வாங்கிக்கொள்ளும்படி உனது கணவர்க்குக் கூறி, அவர்க்கு என்மேல் இரக்கம்வரச் செய்யவேண்டும்" என மன்றாடி மதிமயங்கிச் சோகமுற்றிருந்தனள். மமதாபாய், கருணைநிரம்பி, ஆசியை ஆற்றித்தேற்றி அனுப்பிவிட்டு, தமது கணவரைநோக்கி, "உயிர்க்காதல! சரணாகதரக்ஷணம், தர்மங்களுக்குள் முதன்மையானது. ஆகையால், நமது கொல்லையையேனும் விற்று, ஆசிக்காக அவளுடைய யஜமானர்கள்கோரும் விலையைக்கொடுத்து அப்பெண்மணியின் அடிமைத்தனத்தை மாற்றவேண்டும்" எனக் கூறினர். அதைக்கேட்ட போஸலபாவா, அதற்குடன்பட்டு, ஆசியின்



யஜமானர்களிடத்திற்குச் சென்று, "இந்த ஆசிக்காக நீங்கள் கோரின விலையை, நான் தருகின்றேன்; இவளை உமது அடிமைத்தன்மையினின்றும் நீக்குக" எனக் கூறினர். அந்த கல்மனமுடையவர்கள், சினங்கொண்டவர்களாய், "நீ அதிக விலை தருவதாயிருப்பினும், நாங்கள் ஒப்புக்கொள்ள மாட்டோம்; குறைந்த விலைக்காயினும் அவளை வேறொருவற்கே விற்போம்" எனப் புகன்றனர். போஸலபாவா, அதற்கொன்றும் பேசாமல், தமது வீட்டுக்கு வரும்வழியில், ஆசி அழுது கொண்டிருப்பதைக் கண்டு, "நீ, சோகிக்கவேண்டா. எனது ப்ராணேசனாகிய பண்டரிநாதனைவேண்டி, உன்னை மீட்டுக்கொள்வேன்" எனப் புகன்று, தமதூர்க்குப்போய், இந்த விருத்தாந்தத்தைத் தமது மனைவிக்குத் தெரிவித்தனர்.

பிறகு, ஆசியின் யஜமானர்கள், அவளை, அவள் மகளோடு இருபத்தைந்து வராகன்களுக்கு, தூரதேசத்திலிருந்து வந்த வர்த்தகர்களுக்கு விற்று, அவர்களுக்கு விக்ரயச் சீட்டெழுதிக் கொடுத்து, வராகன்களைப் பெற்றுக்கொண்டனர். அப்போது பண்டரிநாதன், ஒரு வேதியவுருவந் தாங்கிவந்து, ஆசியை நோக்கி, "போஸலபாவா, உன்னை அழைத்துக்கொண்டுவரும்படி, என்னை அனுப்பினார்" எனக் கூறினன். அப்போது, ஆசியின் மகள் தனது சரீரத்தை விட்டுப் பரமபதம் சென்றனள். வேதிய வேஷதாரியாகிய பண்டரிநாதனும், ஆசியும் அகஸ்மாத்தாய் மறைந்துபோயினர். அப்போது வர்த்தகர்கள், விசனமிகுந்தவர்களாய், ஆசியின் யஜமானர்களை நோக்கி, "நீவிர், எங்களுக்கு விக்ரயச் சீட்டெழுதித் தந்து, எம்மிடத்திலிருந்து வராகன்களைப் பற்றிக் கொண்டீர்கள். ஆகையால், எமக்கு ஆசியை நீங்களே ஒப்புவிக்கவேண்டும்; அங்ஙனம் செய்யீரேல், எமது, வராகன்களை எமக்குத் திருப்பிக்கொடுத்து விடுமின்கள்" என வாதித்துப் பேசிச் சண்டையிட்டார்கள். அதற்கு, ஆசியின் யஜமானர்கள், வர்த்தகர்களை நோக்கி, "நாங்கள் விக்ரயச் சீட்டெழுதித் தந்து, உங்களிடத்திலிருந்து வராகன்களைப் பற்றிக்கொண்டபொழுதே, ஆசி, உம்முடையவளாய் விட்டனள்; இனி, அவளால் நேரிடும் லாப லோபங்களைக் குறித்து, எங்களுக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை. இப்போது, ஆசியை மோசஞ்செய்து கொண்டுபோயின வேதியன், தான், போஸலை அனுப்ப வந்தவன் என்று கூறினன். ஆதலால், நீவிர் அங்குச் சென்று, போஸலையோடு போராடுங்கள்" என்று கூறினர். மத்யஸ்தர்களாகிய க்ராமஸ்தர்கள், இதைக்கேட்டு, "இது ஞாயமாயிருக்கின்றது; போஸலை, ஆசியை நோக்கி, "நீ சோகிக்கவேண்டா; பண்டரிநாதனிடத்திற் கூறி, நின்னை மீட்டுக்கொள்வேன்" எனக் கூறிச் சென்றனன். ஆகையால் நீங்கள், போஸலையிடத்திற்குப் போதல் உசிதமெனப் புகன்றனர். அதைக்கேட்ட வர்த்தகர்கள், "போஸலைக்கும் எமக்கும்

என்ன ஸம்பந்தம்! பத்திரம் எழுதித்தந்து, எம்மிடத்திலிருந்து வராகன்களைப் பற்றிக்கொண்ட இவர்களே எமக்கு ஸமாதானம் கூறவேண்டியவர்கள்'' எனப் * பூசல் விளைத்தனர்.

இது இங்ஙனமாக, பாலக்காட்டுப் பட்டணத்திலிருந்த் பஞ்சமன் ஒருவன், போஸலபாவாவினிடத்திற்கு வந்து, "எனக்கு உபதேசம் செய்து அருள்புரியவேண்டும்'' எனப் பலநாட்களாய் மன்றாடிக் கொண்டிருந்தனன். போஸலபாவா, அவன் விஷயத்தில் ஐயுற்றவராய், ஸ்ரீ பண்டரிநாதனை த்யானித்து, ஸாக்ஷாத்கரித்த பகவானுக்கு வந்தனம்செய்து, "ஓ ஸ்வாமி! பஞ்சமனொருவன், தனக்குபதேசம் செய்யுமாறு, என்னை மிகவும் வேண்டிக்கொள்ளுகின்றனன்; இவன் உபதேசம் பெறுவதற்கு அதிகாரியல்லன் என நான் ஐயுறுகின்றேன்; எனக்கு இந்த சந்தேகத்தை நீக்கி, உனதிஷ்டப்படி நியமித்தருள வேண்டும்''என விண்ணப்பஞ்செய்தனர். பகவான், போஸலபாவாவை நோக்கி,

'தவநிஷ்டை யில்லான் தகுந்த பக்தி யில்லான்
அவநிஷ்டை கொண்டதனுல் ஆசான்—தவமகிழப்
பூண்டுபணி செய்யான் புலையனெனும் நால்வர்க்கும்
† வேண்டியுப தேசியன் மின்'

'தபோநிஷ்டை இல்லாதவற்கும், தக்கபடி பக்திசெய்யாதவற்கும், தகாத காரியங்களைச் செய்பவர்களுக்கும், ஆசிரியன் அக மகிழுமாறு அவற்கு அன்புபூண்டு பணிவிடை செய்யாதவற்கும், நீசற்கும் உபதேசிக்கக்கூடாது'என்று பகவத்கீதையில் நான் கூறியிருக்கின்றேன் அல்லவா! ஆதலால் இவன், உபதேசம் பெறத்தகாதவனே யாவான்; ஆனாலும் நீ, இப்போது நான், கட்டளையிடுகிறபடி செய்; அதனால் இந்த பஞ்சமனுடைய உள்ளம் வெளிப்படும். நீ அப் புலையனை வரவழைத்து, உனது கொல்லையிலுள்ள ஒரு சிறு தெய்வத்துக்குப் பூசை செய்யவேண்டுமென நடித்துக் கூறி,ஓர் எருதை இவனிடத்திற்கொடுத்து 'இதனைக் கொன்று,இதன் இறைச்சியைக் கொண்டுவந்துகொடு. இதனை, யார்க்கும் வெளியிடாதே; இது மறைபொருளாகவே யிருக்கட்டும்'' என்று நியமித்தனுப்பி. அவன் கொணர்ந்து தரும் கறியை வாங்கிக் கொண்டு சமைத்து, கொல்லையிலுள்ள சிறு தெய்வத்தைப் பூசித்துப் புலால் புசிப்போராகிய சிலரை வரவழைத்து உண்பிக்கக்கடவை.நினது சாஸனத்திற்கு அஞ்சி, இந்த ரகஸியத்தை வெளியிடாமல் இருந்தானுபின் அவற்கு உபதேசஞ்செய்க. 'ஜீவவதை செய்கிறேன்' என்றும், 'சிறு தெய்வத்தைப் பூசிக்கிறேன்' என்றும் நீ வருந்தற்க.எனது மனங் களிக்க எனது நியமனுநுஸாரமாய்ச் செய்யப்படும் காரியங்களெல்லாம் எனது ஆராதனைகளாகவே இருக்கும்; நானே அச்சிறு தெய்வவுருவந் தாங்கியிருந்து, நினது ஆராதனத்தை ஏற்றுக்கொள்ளு

* பூசல் - சண்டை,
† வேண்டி உபதேசி அன்மின் - விரும்பி உபதேசம் பண்ணாதேயுங்கள்.



வேன். எனது நாமரூபங்களுக்கு முடிவில்லை. ஆதலால், நீ, எந்த நாம ரூபங்களாலாலும் என்னை ஆராதிக்கலாம். எனது அநுமதியால் நீ செய்யும் கொலை, கொலையல்ல; ஜீவஹிம்ஸை செய்யப்படாதென விதித் துள்ள சாஸ்த்ரம், யாகங்களின் பொருட்டுப் பசுக்களை ஹிம்ஸிக்கலாம் எனக் கூறுகின்றதல்லவா! ஆதலால், சிறப்புவிதி, பொதுவிதிக்கு மறை விதியாகாது. ஹிம்ஸை செய்வதற் கிடங்களாகிய யாகங்கள் முதலிய வைகள், கலியுகத்தில் அவமதிக்கப்பட்டிருக்கின்றன என்று, நீ எண்ண வேண்டா; சாஸ்த்ரம் எனது சாஸனமாயிருக்கிறது; எனது கட்டளை யின்படி நடப்பதனால், சாஸ்த்ரவிதிகளை மீறும்தோஷம் உண்டாகாது. இத்தனை உபந்யாஸம் என்னத்திற்கு? சரீரபோஷண பாரம், சரீரியாகிய ஆத்மாவுக்கு ஏற்பட்டிருக்கிறபடி,எனக்குச் சரீரமாகிய உன்னைக்காக்கும் பொறுப்பு என்னுடையதாயிருக்கின்றது. கத்தியால் விறகைவெட்டி னாலும், பசுவைக்கொன்றாலும் குண குற்றங்கள், அவைகளை இயற்றும் கர்த்தாவைச் சேருவனவேயன்றிக் கத்தியைச் சேரா வாம். அதுபோல எல்லாப்படியாலும் எனக்குப் பாதந்த்ரனாயுள்ள நீ, எனது கட்டளை யின்படி செய்கிற காரியங்களால், நீ யமவசம் ஆகமாட்டாய். எனது அநுக்ரஹத்தால் பசுவுக்கு ப்ராணபயமும், உனக்குச் சாஸ்த்ர வரம்பு கடந்த தோஷமும் உண்டாகாது'' எனக்கூறி மறைந்துபோயினன். போஸலபாவா, அந்தப் பஞ்சமனை வரவழைத்து, "எட! எனது கொல்லையில், ஒரு தேவதைக்கு பூசை செய்யவேண்டியிருக்கின்றது. * கோச்சாலையிலுள்ள செவிலியெருதைப் பிடித்துக்கொண்டுபோய் அறுத்து, அதன் இறைச்சியை எனக்கு கொணர்ந்துகொடுத்துச் செல்லக்கடவாய்; இவ்விரகஸியத்தை வெளிப்படுத்த வேண்டா எனக் கட்டளை யிட்டனர். அப் புலையன், எருதைப்பிடித்துக்கொண்டு போய் அறுத்து, அதன் தலை கால்களை மறைத்துவைத்து,மற்ற இறைச்சியைக் கொணர்ந்து போஸலபாவாவுக்குக் கொடுத்தனன். அவர், அதனைத் தக்கவர்களைக்கொண்டு சமைப்பித்து, அன்னம் அப்பம் முதலியவைக ளோடு இறைச்சியைச் சேர்த்துக் கொல்லையிலுள்ள தேவதைக்கு நைவேத்யம்செய்து, புலாலுண்போர்களாகிய சிலரை வரவழைத்து உண்பித்தனர். அவர்கள், அதனைப் பரிபூர்ணமாயுண்டு, தமக்குள் இவ்வாறு சொல்லிக்கொண்டனர்.

"இந்த போஸலபாவா, தமது கொல்லையிலுள்ள தெய்வத்துக்கு ஆட்டைவெட்டி, பலிகொடுத்தது ஆச்சரியமா யிருக்கின்றது! இதனால் இவர், வைராக்ய சீலர் அல்லர் என்பதும் வெளிவேஷதாரி யென்பதும் நன்றாய் விளங்குகின்றன'' என்பதேயாம். இங்ஙனங் கூறிக்கொண்டே இவர்கள் தத்தம் வீடுகளுக்குச் சென்றார்கள். போஸலபாவா, மிகுந்த கறியைப் புலையனுக்கிட்டு, இந்த ரகஸியத்தை வெளியிட வேண்டா

* கோச்சாலை - மாடு கட்டும் தோழம்.

மென்று பன்முறை யுரைத்து, பண்டரிநாதனுடைய திருவடி மலர்களை தியானித்துக்கொண்டிருந்தனர்.

மறுநாளுதயத்தில், அந்த புலையன், ஒரு குடியானவன் வீட்டுக்குச் சென்று, வழக்கப்படி வீதியில் நில்லாமல், பயமற்று உள்ளே நுழைந்தனன். அவ்வகமுடையான் கோபித்துக்கொண்டு, "ஏட, சண்டாளா! நீ ஏன், பயமற்று வீட்டுக்குள் நுழைந்தனை?" என்றனன். அப் புலையன் அவனைநோக்கி, "உங்களுக்கும் எங்களுக்கும் வேறுபாடு கிடையாது; நீங்களும் எங்களைப்போலவே மாட்டிறைச்சியை யுண்பவர்களல்லவா! எனக் கேட்டான். அதன்பிறகு அகமுடையான், இன்னும் அதிகமாகக் கோபித்து, "நீ, என் வீட்டுக்குள்ளே நுழைந்ததன்றியும், வாய்க்குவந்தபடி வம்பளக்கின்றனை! வெளியே போ!" எனக் கூறினன். அதற்கு அந்த நீசன், "ஐயே! நிஜம் கூறுகின்றேன் கேளும்; நேற்றைப்போதில் நீவிர் யாவரும், போஸலபாவாவின் கொல்லையிலுண்டது மாட்டிறைச்சி; அவர், ஓரெருதை என்கையிற் கொடுத்து, அதனைக்கொன்று அதன் இறைச்சியைத் தம்மிடத்திற் சேர்க்கும்படி எனக்குக் கட்டளையிட்டனர்; நான் அங்ஙனமே செய்தனன். அந்த இறைச்சியை உமக்குச் சமைத்துப் பரிமாறினர். அதன் தலை கால்களை ஒளித்துவைத்திருக்கின்றேன்; உமக்கு வேண்டுமானாற் காட்டுகின்றேன்" எனக்கூறிவிட்டு, வீடுகள்தோறும் சென்று, இங்ஙனமே சொல்லிக் கலகம் பண்ணிவிட்டு வந்தனன்.' அனைவரும் ஓரிடத்திற் கூட்டங்கூடி, "நாம் அனைவரும் இழிந்தவர்களாயினோம்; போஸலை, ஹரிபக்தனெனப் பெயர்வகித்து, இத்தனை ப்ரமாதம் செய்தனன். நன்றாய்ச்சோதித்து, பறையன் வார்த்தை உண்மையாமாயின் போஸலையை அக்கொல்லையிலேயேகொலை செய்து, நாம் பிராயச்சித்தம் செய்துகொள்ளக்கடவோம்." என்று, தங்களுக்குள் தீர்மானித்துக்கொண்டு, பறையனைநோக்கி, "உனது வார்த்தை என்று கேட்டார்கள். சண் உண்மையாமாயின், அடையாளங் காட்டு" டாளன், அவர்களைநோக்கி, "ஐயன்மீர்! உமக்கு என்மேல் ஸந்தேஹம் என்னத்துக்கு! போஸலபாவாவின் மாடுகளுக்குள் செவிலி எருது, கொட்டகையில் இல்லாமையைப் பார்த்துக்கொள்ளுங்கள். அந்த எருது என்னால் கொல்லப்பட்டது. அதன் இறைச்சியை நீவிர் எல்லீரும் நேற்று நன்றாய்ப் புசித்தீர்கள்; அதன் தலை கால்களை ஒளித்து வைத்திருக்கின்றேன்" எனக் கூறினன். அதற்கு, அவர்கள் கடுஞ்சினங்கொண்டவர்களாய், போஸலபாவாவினிடத்திற்குச் சென்று, அவரைப் பலவாறு நிந்தித்து, "ஏடா, நீசா! நீ, ப்ரமதுஷ்டன்; ஹரிபக்தனென வேஷம் போட்டுக்கொண்டு, ஊரைக் கெடுத்தனை! நிஜத்தைச் சொல்லிவிடு; தியானம் பண்ணினது போதும்.

'படிக்கிறது திருவாய்மொழி
இடிக்கிறது விஷ்ணுவாலயம்' என்றபடி,

உன்போன்ற புலையனுக்கு, பண்டரிநாதன் எங்ஙனம் காட்சிகொடுப்பன். மாட்டுக்கறியைச் சமைத்துப் பரிமாறி, எங்களையெல்லாம் உன்னைப்



போலப் புலையராக்கிவிட்டனை. ஆகையால் புலையிற் பெரும் புலையனும் மஹாபாபியுமாகிய உன்னைக் கொன்றுவிட்டு, நாங்கள் பிராயச்சித்தம் செய்துகொள்ளச் சித்தமாயிருக்கின்றோம்" எனக் கூறிக்கொண்டிருக்கையில், போஸலபாவா, ஒன்றும் பேசாமல், ஸ்ரீ பண்டரிநாதனை த்யானித்துக்கொண்டிருந்தனர். சிலர், பறையனை அழைத்துக்கொண்டு, அவன், எருதின் தலையையும் கால்களையும் ஒளித்துவைத்திருந்த இடத்திற்குப்போய்ப் பார்க்கையில், பண்டரிநாதனுடைய ஸங்கற்பத்தால் அவைகள், ஆட்டுத் தலையும் கால்களுமாகி யிருந்தன. பறையன் ஒன்றுந் தோன்றாதவனாய், திக்பிரமம் அடைந்தனன். அவனோடுகூடப்போய்ப் பார்த்துவந்தவர்கள், "ஏடா, நீசா! இல்லாததைக் கற்பித்துக்கூறி எத்தனை ப்ரமாதம் பண்ணினை!" எனக்கூறி அந்தத் தலையையும் கால்களையும் கொணர்ந்து, எல்லார்க்கும் எதிரில் வைத்தனர். அப்போது அனைவரும் நன்றாய்த்தெளிந்து, ஐயந் தீர்ந்து, மெய்யை உணரவேண்டுமென்று, மாட்டுக்கொட்டகைக்குள் நுழைந்து பார்க்கையில், செவிலி எருது, அவ்விடத்திற் கட்டப்பட்டிருந்தது. அப்போது அவர்கள் யாவரும், அநுதாப மிக்கவர்களாய், போஸலபாவாவுக்கு வந்தனம் செய்து "ஓ மஹாத்மா! * அநுபூர்வமாய், விஷயத்தை விசாரியாமல் உம்மை அவமதித்தோம்! அக்னிக்கு உஷ்ணமும், நீர்க்குக் குளிர்ச்சியும் இயற்கையாயுள்ளபடி உம்மைப்போன்ற பாகவத முதல்வர்களுக்குச் சாந்தம் இயற்கைக் குணமாயிருக்கின்றது. ஆகையால் நீவிர்,

'மிகுதியால் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியால் வென்று விடல்' என்றபடி,

உமது சாந்தகலியாண குண கணங்களால் எம்மை அடக்கி ஆண்டுவிட்டீர்! ஆனாலும், பாகவதாவமானத்தைப் பொறுக்காத ஸ்ரீ பாண்டுரங்கற்கு எம்மிடத்தில் † நிக்ரஹம் உண்டாகும் என்றஞ்சுகின்றோம். உமது திருவருட் ப்ரஸாதபலத்தால் அந்த பகவான், எமக் கநுக்ரஹம் செய்க" என விண்ணப்பித்து வணங்கி, இத்தனை ப்ரமாதத்திற்குக் காரண பூதனாகிய புலையனைக் கொன்றுவிடவேண்டும் என்று கூறினார்கள். அதற்கு போஸலபாவா, அவர்களை நோக்கி, "இஃது, ஸ்ரீ பாண்டுரங்கனுடைய திருவிளையாட்டாயிருக்கின்றது! எனக்காக அந்தப் புலையனைக் காப்பாற்றுங்கள்" என வேண்டிக்கொண்டனர். அப்போது, அனைவரும் இவருடைய பரமசாந்தநிலைக்கு அதிசயமடைந்து, பலவிதங்களிற் றுதித்துக்கொண்டு தத்தம் இருப்பிடங்கட்குச் சென்றார்கள். பறையன், மதிமருண்டு நாணித் தலைகுனிந்து, அதுமுதல், போஸலபாவாவுக்கெதிரில் வராமலிருந்துவிட்டனன். ஒரு வருஷத்தில் காலமழையின்றி, மாந்தர் மிகவருந்தினர்.

* அநுபூர்வமாய் - முறையாய்; ஒன்றின்பின் ஒன்றாய்.

† நிக்ரஹம் - வெறுப்பு.

'துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை' என்றபடி,

மழையில்லையாயின் மாந்தர்க்கு, அன்னபானாதிகள் இல்லையாதலால் எதுவும் தடையாகும்.

'சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு' என்றபடி,

தேர் திருவிழா முதலிய தேவபூஜா வைபவங்களும் குறையும். அங்ஙனம் அவ்வருஷம் முழுவதும் வறட்சியாகவே யிருந்துவிடாமல், கார்த்திகை மாதத்தில் ஒரு சுமை மழை பொழிந்தது. அப்போது, போஸலபாவா, கொஞ்சம் தான்யங் கடன்கொண்டு தமது கொல்லையில் விதைத்தனர். அன்று, பண்டரி யாத்ரைக்காரர்கள் போஸலபாவாவை நோக்கி "இன்று, எமக்கு உணவுக்கு வழியில்லை; எமது பசியைப் போக்க வேண்டும்" என்றார்கள். போஸலபாவா, தமது வீடுமுழுவதும் சோதித்துப்பார்க்கையில், கொஞ்சம் புழுத்த சோளம் இருந்தது. அதைக் கண்டவுடன், அவர், "இதனை எங்ஙனம் ஸாதுக்களுக்கு வழங்குவேன்!" எனச் சிந்தித்துத் தமது குமாரனாகிய ஏமாஜியை அழைத்து, "தம்பீ! மஹாத்மாக்களாகிய ஸாதுக்களுக்குப் புழுத்த சோளங் கொடுக்கக் கூடாது. இன்று, கொல்லையில் விதைத்த தான்யத்தைக் கூட்டிக் குவித்து ஜல்லடையால் அரிப்பரித்துக் கொணர்ந்து, அதனிற் கல்மண் நீக்கி நல்லதாக்கி, ஸாதுக்களுக்கிட்டு, இந்தப் புழுத்த தான்யத்தைப் புலத்திற் றெளிக்கக்கடவை" என்று நியமித்தனர். ஏமாஜி, தந்தை சொற்படி செய்தனர். அந்தப் புழுத்த தான்யம், பண்டரிநாதனுடைய கிருபாகடாக்ஷத்தால் முளைத்து, நன்றாய் வளர்ந்தோங்கியது. அவ்வூர் பிரஜைகள் ஆச்சர்யமடைந்து, புலத்தில் வந்து பார்க்கையில், அபரிமிதமாய்ச் சுரைக்காய்கள் காய்த்திருந்தன; அவைகளில் ஒரு காயை, உடைத்துப் பார்த்தபோது, அதனிற் கோதுமைமணிகள் நிறைந்திருந்தன. அவர்கள் அதிசயமடைந்து, அவ்வூரை ஆளும் துருக்கஅரசனுக்கு அதனை அறிவித்தார்கள். அவன், போஸல பாவாவை வரவழைத்து, "புழுத்தசோளங்கள் முளைத்துவளர்ந்து சுரைக்காய்கள் காய்ப்பதற்கும் அச்சுரைக்காய்களில் கோதுமைமணிகள் நிறைந்திருப்பதற்கும் காரணம் என்ன!" எனக் கேட்டனன். அதற்கு அரசனைநோக்கி, போஸலபாவா, "எனக்கொன்றுந் தெரியாது? இது, பண்டரிநாதனுடைய திருவிளையாட்டு," எனப் புகன்றனர். அப்போது, அந்தத் துருக்கமன்னன், "இந்த போஸலை, இந்த்ரஜாலம் வல்லவன்! இவனை ப்ரஷ்டனாக்கிவிட வேண்டும்" என எண்ணித் தனது ஜாதிக்குசிதமாகிய உணவாதிகளை வரவழைத்து, அவர்க்கெதிரில் வைத்து, "இவைகளைப் புசி" என்று வற்புறுத்தினன். அப்போது, அந்த வஸ்துக்கள் அனைத்தும் பண்டரிநாதனுடைய கிருபையால், துளசியாய் மாறிவிட்டன. இதனைக் கண்ட மன்னன் ஆச்சரியமடைந்தவனாய், போஸல பாவாவுக்கு வந்தனம் செய்து, "உமக்குவேண்டிய வஸ்துவைக் கேளும், கொடுக்கிறேன்"



என்றனன். போஸலபாவா, அவனைநோக்கி, "காமதேநுவை விரும்பி அடைந்தவற்குக் குறைவில்லாதபடி, ஸ்ரீராமநாம த்யான சீலனாகிய எனக்கு எதனாலுங் குறைவில்லை" எனக்கூறித், தமது வீடுசேர்ந்து, ஸ்ரீ பாண்டுரங்கனைப் புகழ்ந்துகொண்டு, ஆனந்த பரவசராய் வாழ்ந்தனர். அந்த ஊர், போஸல நிவாஸ ஸம்பந்தத்தால், பண்டரிபுரமேபோல விளங்கியிருக்கின்றது.

ஸதாங்கதயே நமஃ

## அறுபத்துநான்காம் அத்தியாயம்

# கணேசநாதர் சரித்திரம்

பாலக்காட்டுவாய்க் கருகில், உஜ்ஜயினி நகரத்தில் கணேச நாதர் என்னும் வைஷ்ணவத்தலைவர், அநவரதமும் ஹரிகீர்த்தனம் செய்துகொண்டு, ஆனந்தத்தால் மெய்மறந்து, நிருத்தமாடி, நிராசையாளராய், வைராக்ய சீலராய்,

'காற்றிலா விடத்தில் ஏற்றிய தீபம்
அசைவிலா திருக்கு மதுபோல் மனத்தகத்
தழுக்ககன் றசைவிலா வொழுக்கம் பூண்டு
யோகஞ் செய்யும் யூகம் பொருந்தி
வனத்தில் வாழ்ந்து வாயு நுகர்ந்து
கோவணந் தரித்துத் தீவனைப் பசிக்குக்
காயுங் கிழங்குங் கனியுந் தின்று.
வீடு வாசல் இன்றி
விளங்குவோன் ஞானியிம் மேதினி மிசையே' என்றபடி,

காற்றில்லா இடத்தில் ஏற்றிய தீபம் அசையாதிருப்பதுபோல மனத்தூய்மைபொருந்தி, அதனை அசையவிடாது ஒரே நிலையில் நிறுத்தி, யோகயுக்தராய், காட்டில் வாழ்ந்து, காற்றையும் காய்கனி கிழங்குகளையும் உணவாகத் தின்று பிழைத்து, கோவணமாத்திரம் தரித்துத் தமக்கென ஓர் இடம் இன்றிக் காலங்கழித்து வருவாராயினர். இம் மஹான், பண்டரிபுரத்திற்கு வந்து, பகவானைப்புகழ்ந்து பாடிக்கொண்டிருக்கையில், அத்தேசத்தை ஆண்ட சிவாஜிமன்னவன், இவருடைய ப்ரபாவத்தைக் கேள்வியுற்று, ஆனந்தபரவசனாய், பண்டரிபுரத்திற்கு வந்து, இவரை தரிசித்து, இவரியற்றும் ஹரி கீர்த்தனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தனன்.

அந்த அரசன், தான் சயனிப்பதற்காக, மிகச்சிறந்ததொரு கட்டில் செய்வித்தனன்; அம் மஞ்சத்தைத் தான் உபயோகிக்காமல், பாகவத முதல்வராகிய கணேசநாதர்க்கு, முதலில் உபயோகப்படுத்தவேண்டும் என்று எண்ணி, அவர்க்கு ஸாஷ்டாங்க வந்தனம்செய்து, தனது அரண்

மனைக்கு வரவேண்டும் என்று அவரை அழைத்தனன். கணேசநாதர், பரம ஸாதுவாகிய சிவாஜி மன்னவனுடைய வேண்டுகோளை மறுக்கக் கூடாமையால், அவனைப் பின்பற்றி அவனது அரண்மனைக்குத் தம்முடன் ஒரு கூடை நிறையக் கூழாங் கற்களையுங் கொண்டுசென்றனர். அரசன் அதைக் கண்டு, "இவை என்னத்திற்கு" என்று கேட்க, "ஸ்ரீராம நாமங்களை எண்ணுவதற்கு" என்று கணேசநாதர் அவற்கு ஸமாதானங் கூறினர். சிவாஜிமன்னன், கணேசநாதரை, ஒரு சிவிகையி லேற்றிக் கொண்டு, தன தரண்மனைக்குக் கொண்டுசென்று, அவருடைய திருவடிகளை அலம்பி அந்நீரை உட்கொண்டு, தனது சென்னியிற் றெளித்துப் பரிமள மலராதிகளால் அவைகளை அர்ச்சித்து, அவரை உண்பித்து, பகலெல்லாம் அவர் செய்த ஸங்கீர்த்தனங்களைக் கேட்டு மகிழ்ந்து, இரவு வந்தவுடன், தான் புதுவதாகச் செய்வித்த கட்டிலின்மேற் கண்வளர வேண்டுமென்று அவரை மன்றாடினன். கணேசநாதர் அதற்கும் ஒப்புக் கொண்டு, அரசனை அனுப்பிவிட்டு, தாம் கொணர்ந்திருந்த கூழாங்கற்களை, அம் மஞ்சத்தின்மேற் பரப்பி, அவைகளின்மேல் உட்கார்ந்திருந்து, பகவானைப் பின் வருமாறு துதிக்கலாயினர்:—

"ஓ, புண்டரீகாக்ஷா! சங்க சக்ர கதாதி திவ்யாயுததரா! நினக்கு, தண்டம் ஸமர்ப்பிக்கின்றேன். பூர்வத்தில், கரண களேபரங்களின்றி மூல ப்ரக்ருதியில் ஒடுங்கிக்கிடந்த என்மேற் கருணைகூர்ந்து, எனக்குக் கரண களேபரங்களை வழங்கினை! அத்தகைய நீ, என்னை இப்போது காத்தளிக்கவேண்டும். ஓ ஜநார்த்தநா! நினது கடாக்ஷ வீக்ஷண்யத்தால் காக்கப்படும் நான், நினக்குச் சரீரியா யிருக்கின்றனன். நான் மாத்திரமா இங்ஙனம் இருக்கின்றேன்! ப்ருத்வி அப்பு தேயு வாயு ஆகாசங்களும், மஹதஹங்கார தன்மாத்ரைகளும், மூலப்ரக்ருதியும், ஆத்மாவும் நினது சரீரங்களா யிருக்கின்றன; ஆத்ம ஸ்வரூபியாய், பரமாத்மாவாய், ஸமஸ்த ஜகத் வ்யாபகனாயுள்ள நின்னை நமஸ்கரிக்கின்றேன். * அகோசரமாயுள்ள ஸூக்ஷ்ம ப்ரக்ருதியும் † கோசரமாயுள்ள ‡ ஸ்தூல ப்ரக்ருதியும், காலமும் ஆகிய இவைகளை ஸ்வரூபமாகப் பொருந்தியுள்ள நின்னைப் பணிகின்றேன். பிரமன், விஷ்ணு, ருத்ரன் முதலியோருடைய ஸ்வரூபனாய், ஸர்வ பூதங்களுக்கும் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கர்த்தாவாய், கற்பாந்த காலத்தில் ஸகல பூதங்களையும் உனக்குள்ளே ஒடுக்கிக்கொண்டு, மூன்றுலோகங்களையும் ப்ரளயார்ணவத் தழுந்தச் செய்து, சேஷ $ பர்யங்கத்திற் சயனித்து, பரமயோகியர்கள் தியானத்தால் அறியக்கூடியவனாய் விளங்கும் கோவிந்தன் நீயேயன்றோ?

'கையிலங் காழிசங்கன் கருமுகில் திருநிறத்தன்
பொய்யிலன் மெய்யன் தன்தா ளடைவரே லடிமை யாக்கும்
செய்யலர் கமல மோங்கு செறிபொழில் தென்தி ருப்பேர்
பையர வணையான் நாமம் பரவிநா னுய்ந்த வாறே'

* அகோசரம்-பார்வைக்கெட்டாதது. † கோசரம்-பார்வைக்கு எட்டுவது.
‡ ஸ்தூலப்ரக்ருதி - ப்ரபஞ்சம். $ பர்யங்கம் - பாயல்.



'புவியு மிருவிசும்பும் நின்னகத்த நீயென்
செவியின் வழிபுகுந் தென்னுள்ளாய்—அவிவின்றி
யான்பெரியன் நீபெரியை யென்பதனை யாரறிவார்
ஊன்பருகு நேமியா யுள்ளு'

'மாலே படிச்சோதி மாற்றே லினியுனது
பாலேபோல் சீரில் பழுத்தொழிந்தேன்—மேலால்
பிறப்பின்மை பெற்றடிக்கீழ்க் குற்றேவ லன்று
மறப்பின்மை யான்வேண்டு மாடு'

'இவையன்றே நல்ல இவையன்றே தீய
இவையென் றிவையறிவ னேலும்—இவையெல்லாம்
என்னா லடைப்புநீக் கொண்ணா திறையவனே
என்னால் செயற்பால தென்' என்பதுபோல

பராபரனாய், உத்தமனாய் விளங்கும் நினது நிஜஸ்வரூபத்தை யாரே அறிய கிற்பார்!

'விண்கடந்த சோதி யாய்வி ளங்கு ஞான மூர்த்தியாய்
பண்கடந்த தேசமேவு பாவநாச நாதனே
எண்கடந்த யோகிநோடி ரந்து சென்று மாணியாய்
மண்கடந்த வண்ண நின்னை யார்ம திக்க வல்லரே'

'பரத்திலும்ப ரத்தை யாதி பௌவ நீர ணைக்கிடந்து
உரத்திலும்மொ ருத்தி தன்னை வைத்து கந்த தன்றியும்
நரத்திலும்பி றத்தி நாத ஞான மூர்த்தி யாயினாய்
ஒருத்தரும்நி னாது தன்மை யின்ன தென்ன வல்லரே' என்று,

நீ உலகரக்ஷணார்த்தம், விளையாட்டாக எடுத்தருளிய மச்ச, கூர்ம, வராகாதி ரூபங்களையேயன்றோ தேவர்கள் ஆராதிக்கின்றனர்!

'ஏனமீனா மையோடரி யும்சிறு குறளுமாய்த்
தானுமாய தரணித்தலை வன்னிட மென்பரால்
வானும் மண்ணும் நிறையப்புகுந் தீண்டி வணங்குநல்
தேனும் பாலுங் கலந்தன்னவர் சேர்தென்னரங்கமே' என்று,

மோக்ஷத்தை விரும்பும் மாமுனிவர்கள், பரப்ரஹ்மமாகிய உன்னை ஆராதித்து, முக்தர்களாகி, பரமானந்தத்தை அடைகிறார்கள்.

'எத்திறத்து மொத்து நின்று யர்ந்து யர்ந்த பெற்றியோய்
முத்திறத்து மூரி நீர ராவணைத்து யின்றனர்
பத்துறுத்த சிந்தை யோடு நின்று பாசம் விட்டவர்க்
கெத்திறத்து மின்ப மிங்கு மங்கு மெங்கு மாகுமே'. என்றபடி,

எல்லாவற்றிற்கும் ஆதாரமாய், * ஆதேயமாய், † தாரகமாய், ‡ ப்ரகாசகனாய் விளங்கும் காரணத்தால், ஸ்ரீ வாஸுதேவன் என்னும் திவ்யத் திருநாமம் பூண்ட உன்னை ஆராதிக்காமல், முக்தியெய்த வல்லவன் எவன்!

* ஆதேயம் - தாங்கப்படுவது. † தாரகம் - காப்பாற்றுவது.
‡ ப்ரகாசகன் - வெளிப்படையானவன்.

'தளர்வின்றி யேயென்று மெங்கும் பரந்த தனிமுதல் ஞானமொன்ருய்
அளவுடை யைம்புலன்க ளறியா வகையா லருவாகி நிற்கும்
வளரொளி யீசனை மூர்த்தியைப் பூதங்க ளைந்தை யிருசுடரை
கிளரொளி மாயனைக் கண்ணனைத் தாள்பற்றி யானென்றும் கேடிலனே'

'அமரர் தொழப்படு வானை யனைத்துல குக்கும் பிராணனை
அமர மனத்தினுள் யோகு புணர்ந்து அவன்றன்னோ டொன்ருக
அமரத் துணியவல் லார்க ளொழிய அல்லாதவ ரெல்லாம்
அமர நினைந் தெழுந்தாடி யலற்றுவ தேக ருமமே' என்று,

நம்மாழ்வார் அருண்மொழிகள் இங்கே நயந்து பொருத்தப்படுவனவாம். மனதால் நுகரக்கூடிய இன்ப முதலியவைகளும், கண்ணுதி இந்திரியங்களால் அநுபவிக்கக்கூடிய உருவமுதலியவைகளும், புத்தியால் துணியக்கூடிய விதிவிலக்குகளும், இவை யாவும் நினது வடிவங்களாய் விளங்குகின்றன. தேவதேவா! நின்னிடத்திற் றேன்றி, நின்னை அடுத்தன்புபூண்டு, நினக்குச் சரீரபூதனுய், நின்னுற் காக்கப்பெற்று, நினது ஸர்வபரிபூர்ணத்தன்மையை ஆய்ந்தறிவதனுல் நான், வைணவன் எனப்படுகின்றேன். ஸகலஞான ஸ்வரூபமாய் விளங்குபவனே! நினக்கு ஜயமுண்டாகுக. எல்லாவற்றிலும் மறைந்திருப்பவனே! நினக்கு மங்களமுண்டாகுக. ஸ்தூல ப்ரபஞ்சவடிவாய் விளங்குந்தூயனே! நீ ஜயம் பெறுக; எல்லாம்வல்லவனே! நினக்கு மங்கள முண்டாகுக; அநந்தா! ஜயஜய; மஹாப்ரபாவா! உயர்பொருள்களுக்கும் இழிபொருள்களுக்கும் ஆத்மாவாய் விளங்குபவனே! ஜய ஜய; விஶ்வாத்மகா! ஜய ஜய; யஜ்ஞபதே! ஜய ஜய; யாகங்களும் அஷ்ட காலங்களும் நீயே; வேதாந்தங்களும் நீயே; யாககர்த்தாவும், போக்தாவும், யாகமந்த்ர ப்ரதாதாவும் நீயே; ஓ; புருஷோத்தம! ஸூர்ய சந்த்ராதி க்ரஹங்களும், அஶ்விந்யாதி நக்ஷத்ரங்களும், மற்ற விண் மீன்களும், உயர்பொருள்களும், அவ்வுயர்வுகளின் தோற்றமும் மறைவும்; இன்னும் என்னுல் சொல்லப்பட்டவைகளும், சொல்லப்படாதவைகளும் ஆகிய எல்லாம் நீயே; பரமேஶ்வரா! இங்ஙனம் எல்லாவற்றிற்கும் ஆத்மபூதனுயுள்ள உனக்கு வந்தனம் செய்கின்றேன்; மேலும் மேலும், பன்முறை வந்தனம் செய்கின்றேன்" என்பதேயாம். இவ்வாறு அவர் அந்த இரவெல்லாம் பகவானைத் தோத்திரஞ் செய்துகொண்டு, ஆனந்த பரவசராய் விளங்கியிருந்தனர். விடியற் காலையில் அரசன் வந்து, ஸாஷ்டாங்க வந்தனம்செய்து, "ஓ ஸ்வாமி! கட்டிலின்மேற் கூழாங் கற்களைப் பரப்பி அவைகளின்மேல் தாங்கள் உட்காருவதற்குக் காரணம் என்ன?" எனக் கேட்டனன். அப்போது அந்த பாகவதமுதல்வர், அரசனை நோக்கி, "சரீரத்துக்கு இன்பத்தை உண்டாக்கினுல், இந்திரியங்கள் தமது விஷய ஸுகங்களை விரும்புவனவாம். விஷயங்கள் விஷங்களைவிடத் தீயவைகள். விஷத்தை உண்பதனுல், சரீரத்திற்கு மாத்திரம் கெடுதியுண்டாகும்; விஷயங்களை நினைத்தமாத்திரையிலேயே, ஆத்மாவுக்கு நரக ப்ராப்தியாகும். ஆகையால், விவேகிகள், சரீர ஸுகத்தை வெறுப்பார்கள்; அல்லதும்



மனிதன், இன்பத்தை நுகரும்போது, பகவானை மறந்து, விஷய ஸுகத்தில் வெறுப்பில்லாமற் காலத்தைக் கழிப்பான்.

'பெண்டிராற் சுகங்க ளுய்ப்பான் பெரியதோ ரிடும்பை பூண்
டுண்டிராக் கிடக்கும் போதுமுட லுக்கே கரைந்து நைந்து
தண்டுழாய் மாலை மார்பன் தமர்களாய்ப் பாடி யாடி
தொண்டுபூண் டமுத முண்ணுத் தொழும்பர்சோ றுகக்கு மாறே'

'மறஞ்சுவர் மதிளெ டுத்து மறுமைக்கே வெறுமை பூண்டு
புறஞ்சுவ ரோட்டை மாடம் புரளும்போ தறிய மாட்டீர்
அறஞ்சுவ ராகி நின்ற வரங்கனார்க் காட்செய் யாதே
புறஞ்சுவர் கோலஞ் செய்து புட்கௌவக் கிடக்கின் றீரே'

'மனத்திலோர் தூய்மை யில்லை வாயிலோ ரின்சொ லில்லை
சினத்தினுல் செற்றம் நோக்கித் தீவிளி விளிவன் வாளா
புனத்துழாய் மாலை யானே பொன்னிசூழ் திருவ ரங்கா
எனக்கினிக் கதியென் சொல்லா யென்னையா ளுடைய கோவே' என்றபடி

அப்படிப்பட்டவனுடைய ஆயுள் நாட்களாகிய தானியத்தை, சூரியன் என்னுங் கொள்ளைக்காரன் உதயாஸ்தமனங்களென்னும் பைகளிற் பொதிந்து கட்டிக் கொள்ளைகொண்டு போவான். கொள்ளை கொடுப்பவனுகிய இவன், இதனை உணராமல், தன்னைப் பல்லாண்டு வாழ்பவனுக மதித்து, பெண்டு பிள்ளை பண்ட பதார்த்தாதி ஸம்ஸார ஸுகத்தை அநுபவித்து மகிழ்வான். காலக்குறி பார்த்து, * தண்டதர கிங்கரர்கள் வந்து, இவனைக் காலபாசத்தாற் கட்டிக்கொண்டு போகும்போது, "அந்தோ! பகவானை மறந்திருந்தேனே! விஷயசுகத்திற் சிறந்திருந்து வீண்காலம் போக்கிவிட்டேனே! மஹாபாவியானேனே" என இவன் பலவாறு நைந்துருகுவான்.

'வம்புலாங் கூந்தல் மனைவியைத் துறந்து பிறர்பொருள் தாரமென்றிவற்றை-, நம்பினு ரிறந்தால் நமன்றமர் பற்றி யெற்றிவைத் தெரியெழுகின்ற-, செம்பினு லியன்ற பாவையைப் பாவீ தழுவென மொழிவதற்கஞ்சி-, நம்பனே வந்துன் திருவடி யடைந்தேன் நைமிசா ரணியத்துளெந்தாய்'

'கோடிய மனத்தாற் சினத்தொழில் புரிந்து திரிந்துநா யினத்தொடுந் திளைத்திட்டு-, ஓடியு முழன்று முயிர்களே கொன்றேன் உணர்விலே னுதலால் நமனர்-, பாடியைப் பெரிதும் பரிசழித் திட்டேன் பரமனே பாற்கடல் கிடந்தாய்-, நாடிநான் வந்துன் திருவடி யடைந்தேன் நைமிசா ரணியத்துளெந்தாய்" என்று

திருமங்கையாழ்வார் திருவாய்மலர்ந்தபடி இங்ஙனம் நைந்துருகும் இவன், யமபுரம் சேர்ந்தபிறகு, இவனது தீவினைக்கீடாக, பலவித நரகங்களை அநுபவிப்பான். ஓ, அரச! பாவிகளை வருத்தும் நரகஸ்தானங்கள் பலவுள. அவைகளைக் கூறுகின்றேன் கேள்; ரௌரவம், ஸூகரம்,

* தண்டதர கிங்கரர்கள் - யமதூதர்கள்

ரோதம், தாலம், விஶஸநம், மஹாஜ்வாலம், தப்தகும்பம், லவணம், விலோஹிதம், ருதிராம்பம், வைதரணி, க்ரிமிஶம், க்ரிமிபோஜனம், அஸி பத்ரவநம், க்ருஷ்ணம், லாலாபக்ஷம், பூயவஹம், வஹ்நிஜ்வாலை அதிஶ் ஶிரம், ஸந்தம், ஶம்க்ருஷஸூத்ரம், தமஸ்ஸு, அவீசி, ஶ்வபோஜனம், அப்ரதிஷ்டம் முதலான பல தீய நரகங்கள், நமனது அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கின்றன. * ருரு என்னும் விலங்குகள் நிறைந்திருந்து, ஒருவனை வாதனை செய்யும் நரகஸ்தானத்திற்கு, ரௌரவம் என்று பெயர்; பன்றிகள் நிறைந்திருந்து வாதிக்கும் நரகம், ஸூகரம் என்னப்படும். அசைவின்றி நிறுத்தி வாதிக்கும் நரகம், ரோதனம் என்னப்படும். பனையுச்சியுலிருந்து வீழ்த்தி, அதன் மட்டைகளால் அறுக்கும் நரகம், தாலம் எனப்படும். வாளால் அறுக்கும் நரகம், விஶஸநம் என்னப்படும். எரி நெருப்பில் வீழ்த்தும் நரகம், மஹாஜ்வாலை என்னப்படும். காய்ச்சின எண்ணெய்க்குடத்தில் வீழ்த்தும் நரகம், தப்தகும்பம் என்னப்படும். உடலெங்கும் வெற்றிடமின்றி அறுத்து, அந்த அறுவாய்களில் உப்பை வைத்துச்சுட்டு வாதிக்கும் நரகம், லவணம் எனப்படும். † செந்நீர் குடிக்கச்செய்யும் நரகம், விலோஹிதம் என்னப்படும். காய்ச்சின உதிரத்தில் வீழ்த்தும் நரகம், ருதிராம்பம் என்னப்படும். தாண்டற்கரிய செந்நீராற்று வெள்ளத்தில் வீழ்த்தும் நரகம், வைதரணி என்னப்படும். புழுக்களைத் தின்னச்செய்யும் நரகம், க்ரிமிபோஜனம் என்னப்படும். நெருங்கின முட்களின்மேல் நடப்பிக்கும் நரகம், க்ருஷ்ணமென்றும், கார்ஷ்ணுயஸமென்றும் சொல்லப்படும். பொறுத்தற்கரிய குளிரால் வருத்தும் நரகம், தாருணம் என்னப்படும். ஸந்தம்ஶம் என்னும் ஆயுதத்தால் நரம்புகளைப் பிடுங்கி யெறியச்செய்யும் நரகம், ஸந்தம்ஶம் என்னப்படும். கத்திகளையே இலைகளாகவுடைய மரச்சோலைகளில் இருத்தி வருத்தும் நரகம், அஸிபத்ரவந மென்னப்படும். மிகவும் முடைநாற்றமாய், அருவருக்கச்செய்யும் நரகம், பூயவஹம் என்னப்படும். கால் விரல்களிற் கயிற்றை நுழைத்து மாட்டி, உடலைக் குண்டுருட்டாய்ச் சேர்த்துக்கட்டி ஆயுதங்களால் வருத்தும் நரகம், க்ருஷ்ண ஸூத்ரம் என்னப்படும். இந்த நரகவேதனைகளை நுகரும் பாவிகளைக் கூறுகின்றேன், கேள்; பொய் சாக்ஷி சொல்பவனும், ஓரஞ்சொல்பவனும், பொய் சொல்பவனும் ஆகிய மூவரும் ரௌரவ நரகத்தைச் சேர்வார்கள். சிசு வதை செய்பவனும், பட்டணத்தை அழிப்பவனும், கோவதை செய்பவனும், பிராணிகளுடைய சுவாஸபந்தனம் செய்பவனும் ஆகிய இவர்கள், ரோத நரகத்தைச் சேர்வார்கள். மதுபானம் பண்ணுபவனும், ப்ரஹ்மஹத்தி செய்பவனும், ஸ்வர்ணத்தை அபகரிப்பவனும், இவர்களோடு கூடினவனும் ஸூகரத்தைச் சேர்வார்கள். அரசனைக் கொன்றவனும், வணிகனைக்கொன்றவனும், குருவின் மனைவியைக் கைப்பற்றினவனும், உடன் பிறந்தாளைப் பெண்டாண்டவனும், ராஜ படர்களைக்கொன்றவனும், தப்த கும்பத்தைச் சேர்வார்கள். மனைவியை விற்கின்றவனும், ஸாதுக்களைக் காவலில் வைக்கின்றவனும், வைதிகத்திற்கு உகந்த குதிரைகளை

* ருரு - ஒருவித மான். † செந்நீர் - இரத்தம்.



விற்கின்றவனும், தன்னை நம்பிக் காத்திருப்பவர்களை வெறுக்கின்ற
வனும், சரணடைந்தவர்களை அடித்துத் துரத்துகின்றவனும், தப்த
லோஹத்தைச் சேர்வார்கள். மகள், மருமகள் இவர்களைப் பெண்
டாண்டவனும், குருவை அவமதித்தவனும், கோபத்துடன் பிறரை
வைதவனும், மஹாஜ்வாலத்தைச் சேர்வார்கள். வேதநிந்தை செய்ப
வனும், வேதவிற்பனை செய்பவனும், பிறன்மனை புகுபவனும் லவண
நரகத்தைச் சேர்வார்கள்.

‘உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல்’ என்றபடி,

களவு புரிபவனும், உலக மரியாதையைக் கெடுப்பவனும், விலோம
நரகத்தைச் சேர்வார்கள். தெய்வநிந்தை செய்பவனும், அந்தணரைப்
பழிப்பவனும், உத்தமப் பொருள்களை இகழ்பவனும்,

‘பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்’ என்றபடி,

பிறர்கேடு சூழ்பவனும், சூன்யம் வைப்பவனும், க்ரிமிசத்தையும் க்ரிமி
பக்ஷணத்தையும் சேர்வார்கள். தென்புலத்தாரையும், விருந்தினரையும்
விட்டு,

‘மருந்தே யாயினும் விருந்தோ டுண்’ என்பதனை மறந்து,

முந்தி யுண்பவனும், வேடர் முதலியோர்க்கு ஆயுதங்களைச் செய்து
கொடுப்பவனும், லாலாபக்ஷ நரகத்தைச் சேர்வார்கள். கொடிய பாணங்
களையும், கத்திகளையும் செய்து துஷ்டர்களுக்குக்கொடுப்பவன் விஶஸன
நரகத்தைச் சேர்வான். அயோக்யர்களிடத்தில் தானம் வாங்குபவனும்,
வைதிககர்மங்களை அவைகட்கு அருகர் அல்லாதார்க்குச் செய்விப்ப
வனும், ஜ்யோதிஷ சாஸ்த்ரம் சரியாயுணராமல் பலன் கூறுபவனும்,
அதோமுக நரகத்தைச் சேர்வார்கள். மானபங்கம் செய்பவனும், நல்ல
பதார்த்தத்தைப் பிறர் பார்த்துக்கொண்டிருக்கையில் அவர்களுக்
கிடாமல் தானொருவனே உண்பவனும், பூனை, கோழி, ஆடு, நாய்,
பன்றி, பக்ஷிகள் முதலியவைகளை எப்பொழுதும் மிகவும் விரும்பி
வளர்த்துப் பிழைப்பவனும், பூயவஹம் என்னும் நரகத்தைச் சேர்
வார்கள். கூத்தாடிப்பிழைக்கும் வேதியனும், மல்யுத்தம் செய்து
பிழைப்பவனும், தூண்டில், முள் முதலியவைகளால், மீன்களைப் பிடிப்ப
வனும், * குண்டகன் † கோளகன் முதலியவர்களுடைய சோற்றை உண்
பவனும், விஷம்வைத்துக் கொல்பவனும், கோள் சொல்பவனும்,
மனைவியைப் பிறர்க்குக் கூட்டிக்கொடுத்து அதனாற் பிழைப்பவனும்,
அபர்வ காலங்களில், பொருளாசையால், பர்வகாலங்களைச் செய்விப்ப
வனும், வீட்டைக் கொளுத்துபவனும், நண்பனுக்குக் கேடுசூழ்பவனும்,
பறவைகளைக் கொன்று தின்பவர்களுக்கு விற்பவனும், ஊருக்கு யாகம்

* குண்டகன் - கற்பிலாதாளின் மகன்.
† கோளகன் - கைம்பெண்ணின் நாயகன்.

செய்கிறவனும்,யாகத்தில் ஸோமரஸத்தை விற்பவனும், ருதிராம்பத்தை சேர்வார்கள். யாகத்தை அழிப்பவன், ஊரைக்கெடுப்பவன் முதலியோர் வைதரணியைச் சேர்வார்கள். பொருளாலும், இளமையாலும் செருக்குற்று, ஊரின் எல்லையை மாற்றுபவனும், சுத்தியில்லாதவனும், மோஸம்செய்து பிழைப்பவனும், கிருஷ்ணத்தைச் சேர்வார்கள். வைதிகோபயோகமன்றி, வீணாக, * பலாசாதி மரங்களைச் சேதிப்பவன், ஆடுகளைவிற்பவன், விலங்குகளைக் கொல்பவன் முதலியோர் அக்னிஜ்வாலையென்னும் அருநரகில் வீழ்வார்கள். கொளுத்தத் தகாத பாண்டங்கள் முதலியவைகளில் நெருப்பையிட்டுவைத்தவர்கள் இந்த அக்னிஜ்வாலை யென்னும் நரகத்திலேயே வீழ்ந்து வருந்துவார்கள். விரதத்தைத் தவிர்ப்பவன்,ஆஶ்ரம தர்மத்தைக் கைவிடுபவன் முதலியோர் ஸந்தமிசத்தில் வீழ்ந்து நைவார்கள். ப்ரஹ்மசாரியாயிருந்தும் சுக்லவிஸர்ஜனம் செய்பவனும், மைந்தர்களாற் படிப்பிக்கப்படுபவனும் சுகபோஜனத்தைச் சேர்வார்கள். மதுபானம் பண்ணல், மாமிஸம் உண்ணல் முதலிய சாஸ்த்ர விரோதகாரியங்களைச் செய்பவர்கள், மல, மூத்ர, க்ரிமிபோஜனத்தைச் சேர்வார்கள். ஏகாதசிநாளில் உண்பவர்கள், பஞ்சமாபாதக பலனை நுகர்வார்கள். தத்தம் வர்ணாஶ்ரமங்களுக்கு விரோதமாக நடப்பவர்களும், மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் தீயகருமங்களைச் செய்பவர்களும், அவரவர் பாவங்களுக்குத் தக்கபடி நரகத்தை அடைவார்கள். இங்ஙனம் பலவித பாவங்களைச் செய்பவர்களும் வாதனை அடையக்கூடிய நரகங்கள் பலகோடி நூறாயிரங்கள் உள. நரகர்கள், தலைகீழாகத் தூங்கியிருந்து,† ஸ்வர்க்கர்களை நோக்கி நைந்துருகுவார்கள். தேவர்கள், தலைகீழாக வருந்தித் தூங்கும் நரகர்களைக்கண்டு, அஞ்சி நடுங்குவார்கள். பாவிகள், நரகானுபவம் செய்தபிறகு, முறையே தாவரங்களாகவும், புழுக்களாகவும், நீர்வாழ்வனவாகவும்,பறப்பனவாகவும், நடப்பனவாகவும், மக்களாகவும், மக்களுக்குள் அறமியற்றும் பெருமக்களாகவும், தேவர்களாகவும், ‡ முமுக்ஷுக்களாகவும் பிறப்பார்கள். இவர்களுக்குள், முந்தியவர்களுக்குப் பிந்தியவர்கள் ஆயிரத்திலொரு பாகமாய், முந்தின ஜன்மங்களிலிருந்து முறையே உத்தம ஜன்மங்களை அடைவார்கள். மோக்ஷமடையும் வரையில், ஸம்ஸாரசக்கரத்திற் சுழன்று மயங்கிக் கிடப்பார்கள். ஓ, அரச! நான்கூறிய நரகங்கள் அனைத்தும், இந்திரிய வசப்பட்டவர்களாலேயே போற்றப்படுகின்றன ; § ஜிதேந்திரியற்கு நரகபயம் கிடையாது. சரீரத்திற்கு இன்பமூட்டினால், இந்திரியங்கள் தேறி, விஷயவீதியில் ஏறி உலாவுவனவாம்.

‘ஆர்த்துவண் டலம்புஞ் சோலை அணிதிரு வரங்கந் தன்னுள்
கார்த்திர ளனைய மேனிக் கண்ணனே உன்னைக் காணும்
மார்க்கமொன் றறிய மாட்டா மனிசரில் துரிசனாய
மூர்க்கனேன் வந்து நின்றேன் மூர்க்கனேன் மூர்க்க னேனே’

* பலாசம் - முருக்கமரம். † ஸ்வர்க்கர்கள் - தேவர்கள்.

‡ முமுக்ஷுக்கள் - கடவுட்சிந்தையுடன் மோக்ஷவிருப்ப முடையவர்கள்.

§ ஜித + இந்திரியன் - இந்திரியங்களைவென்றவன்.



‘மெய்யெலாம் போக விட்டு விரிகுழ லாரிற் பட்டு
பொய்யெலாம் பொதிந்து கொண்ட போக்கனேன் வந்து நின்றேன்
ஐயனே அரங்க னேயுன் னருளென்னு மாசை தன்னால்
பொய்யனேன் வந்து நின்றேன் பொய்யனேன் பொய்ய னேனே’ என்ற

தொண்டரடிப் பொடியாழ்வாரருளிச்செயல்களின்படி இந்திரிய நிக்ரஹத்தைக் கோருகின்றவன், சரீர சுகத்தை உபேக்ஷித்து, அளவான ஊணுறக்கங்களைக் கொண்டு,

‘சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்’ என்றபடி,

பயனில சொல்லாமல்,

‘சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொலச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து’ என்றபடி,

சொல்வன்மைகொண்டு, மிதமான இதவசனங் கூறி, நிர்மானுஷ்யமான இடத்தில் வாழ்ந்து, ஸாதுஜன * ஸங்கதியை விரும்பி, † நிரந்தர பகவத்குணாநுபவ கீர்த்தனங்கள் செய்துகொண்டு காலத்தைக் கழிக்க வேண்டும்.

‘புன்பு லவ ழிய டைத்த ரக்கி லச்சி னைசெய்து
நன்பு லவ ழிதி றந்து ஞான நற்சு டர்கொளீஇ
என்பி லெள்கி நெஞ்ச ருகி உள்க னிந்தெ ழுந்ததோர்
அன்பி லன்றி ஆழியானை யாவர் காண வல்லரே’ என்ற

திருமழிசைப்பிரான் திருச்சந்த விருத்தம் இங்கே பொருத்தம் உடைத்து. எனது அநுஷ்டான க்ரமத்தைக் கூறுவன்கேள். நான் விருப்பற்ற ‡ திகம்பரனைப் பேய்க் கோட்பட்டான் போன்று, ஏகாந்த பாவனையை விஷ்ணுவிடத்திருத்தி, சேதனா சேதனங்களை ஈஶ்வரன் திருமேனியாக எண்ணி, விரக்திபூண்டு விஜந ஸ்தானத்தில் விளங்குவேன் ;

‘அறிந்த றிந்து வாமனன் அடியிணை வணங்கினால்
செறிந்தெ ழுந்த ஞானமோடு செல்வமும் சிறந்திடும்
மறிந்தெ ழுந்த தெண்டி ரையுள் மன்னு மாலைவாழ்த்தினால்
பறிந்தெ ழுந்து தீவினைகள் பற்றறுதல் பான்மையே’

‘ஒன்றி நின்று நல்த வம்செய் தூழி யூழி தோறெலாம்
நின்று நின்ற வன்கு ணங்க ளுள்ளி உள்ளம் தூயராய்
சென்று சென்று தேவ தேவ ரும்ப ரும்ப ரும்பராய்
அன்றி யெங்கள் செங்கண் மாலை யாவர் காண வல்லரே’

மேற்படி விருத்தங்கள் இங்கே அமைவுடையன காண்க. நீ, பகவத்பக்தனாகையால், பரமகலியாண தருமத்தை உனக்குபதேசித்தேன். நீ,

* ஸங்கதி - கூட்டுறவு. † நிரந்தரம் - இடையறாமை. ‡ திகம்பரன் ஆடையில்லாதவன் ; நிர்வாணி,

67

மதிவாணனாய், சன்மார்க்கத்தில் ஒழுகுவையாயின், பகவதநுக்ரஹத்தால், மறுபிறப்பற்ற மோக்ஷத்தை அடைவாய்; உனக்கு நன்மை உண்டாகுக. நான் போய் வருகிறேன்'' எனக்கூறி வனம் புகுந்து வாழ்வாராயினர்.

அப்போது, அடுத்த க்ராமவாஸிகளாகிய ஜனங்கள் அநேகர் வந்து, அவரை அடுத்து, அவரால் உபதேசிக்கப்பெற்று, தமது சிரங்களில் அவருடைய கரஸ்பரிசம்பட்ட மாத்திரையில், பரம வைராக்ய சீலர்களாய், க்ருஹாதிகளைத் துறந்து, வனத்தில் வாழ்ந்து, ஆசார்யரை விட்டகலாமல், அவருடைய பாத நிழல் என்னும்படி * குருகுலவாஸம் செய்து, அநவரதமும் பகவந்நாம த்யானபரர்களாய் விளங்கினார்கள். இங்ஙனம், பரம வைராக்யசீலர்களாகிய முந்நூற்றறுபது குரு சிஷ்யர்கள் ஓராண்டுக்குள் கணேசநாதரை அடுத்து வாழ்ந்தார்கள். இதனைக் கண்ட மாந்தர்கள், அதிசயமடைந்தவர்களாய், கணேசநாதருடைய வைபவத்தைப் பலவிதங்களிற் புகழ்வாராயினர். துஷ்டர்கள் சிலர், கணேசநாதரிடத்திற் சென்று, "நீ இந்த்ரஜாலம் வல்லவன். அநேகர், ஸர்வஸங்க பரித்யாகிகளாய், எப்போதும் உன்னைவிடாமற் பின்பற்றித் திரியும்படி செய்துகொண்டனை? இதனால், நீ யோக்கியன் என்று எங்களுக்கு நம்பிக்கை உண்டாகாது; நீ † ஜங்கமங்களை வசீகரித்து உபதேசிக்கிறபடி, தாவரங்களை வசீகரித்து உபதேசிப்பையாயின், நினது வல்லமையை நாங்கள் நம்புவோம். இதோ! உனக்கு எதிரேயுள்ள இந்த அரச மரத்திற்கு, உபதேசம்செய், பார்க்கலாம்!'' எனப் புகன்றனர். அப்போது கணேசநாதர், தமது கரங்களால் அந்த மரத்தைத்தொட்டு, அதற்குத் தாரகமந்திரத்தை உபதேசித்து, அந்தப் போக்கிலிகள் கொணர்ந்திருந்த உணவுப்பொருள்களை அதன்மேல் வைத்த மாத்திரையில், அது, அவைகளை உட்கொண்டு, தனதுடலிற் றோற்றிய மேடுபள்ளங்கள் மறைவாகும் வண்ணம் பருத்து மழமழவென ஒரே மட்டமாய் விளங்கிற்று. இவ்வதிசயத்தைக்கண்ட அப்போக்கிலிகள், ஆனந்த பரவசர்களாய், தமது துஷ்டகுணத்தைவிட்டு, ஸத்குணர்களாய், கணேசநாதரைப் பலவிதங்களிற் றுதித்து வாழ்த்தினார்கள்.

வேறொரு நாளில், கணேசநாதர், வனத்தில் பகவத்கீர்த்தனம் செய்துகொண்டிருக்கையில், பல ஜனங்கள் வந்து, கீர்த்தனத்தைக்கேட்டு மகிழ்ந்தார்கள். வேதியரிற் சிலர், கணேசநாதரை நோக்கி, "நாங்கள் முதற் குலத்தார், ஆகையால், தொழுகுலத்தோர். மற்றவர் எங்களை வணங்கினால், நாங்கள், அவர்களுடைய வந்தனங்களை ஏற்றுக்கொண்டு ஆசீர்வதித்து, அவர்களுக் குபதேசிக்கத் தக்கவர்களாயிருக்கின்றோம். பிறரை நாங்கள் வணங்குவதும், பிறர் உபதேசத்தை நாங்கள் கேட்பதும் எங்களுக்குத் தகாது. ஆகையால், நாங்கள் உன்னைப் பெருமைப்

* குருகுலவாஸம் - சிஷ்யனாய் ஆசார்யரிடத்தில் ஒருவன் வாழ்தல்.

† ஜங்கமங்கள் - இடம் விட்டிடம் தாமே செல்லக்கூடியன. (தாமே அசையும்பொருள்) ‡ தாவரங்கள் - அசையாப்பொருள்கள்.



படுத்துவதும், உனது கீர்த்தனத்தைக் கேட்பதும் கூடாதகாரியம் எனப் புகன்றனர். அதைக்கேட்ட கணேசநாதர், அவர்களை நோக்கி, "நீவிர் இங்ஙனம் இயம்புதல் ஞாயமன்று; ஆண்மகன், ப்ரஹ்ம ஜ்ஞானத் தால் ப்ராஹ்மணனாகின்றான்.

'அமரவோ ரங்க மாறும் வேதமோர் நான்கு மோதி
தமர்களில் தலைவ ராய சாதியந் தணர்க ளேனும்
நுமர்களைப் பழிப்பராகில் நொடிப்பதோ ரளவில் ஆங்கே
அவர்கள்தாம் புலையர் போலு மரங்கமா நகரு ளானே' என்றபடி.

"விஷ்ணுபக்தியில்லாதவன் யதீஸ்வரனாயினும் புலையனாவான். வேதிய குலத்திற் பிறந்து, பகவத் பக்தியற்றிருப்பவர்களைப்பார்க்கிலும், பகவத் கதாசிரவண குதூகலர்களாகிய ஸாதுஜனங்களுடைய பாத ஸ்பரிசத் தைப்பெற்ற கற்கள் சிறந்தவைகளாம்'' எனக் கூறினர். கணேசநாதர் அங்ஙனங் கூறினவுடனே, கற்கள் ஒன்றோடொன்று ஒத்திக்கொண்டு விண்ணிற் பாய்ந்து குதித்தன.

'அடிமையில் குடிமை யில்லா அயல்சதுப் பேதிமாரில்
குடிமையில் கடைமைப் பட்ட குக்கரில் பிறப்ப ரேனும்
முடியினில் துளபம் வைத்தாய் மொய்கழற் கன்பு செய்யும்
அடியரை யுகத்தி போலு மரங்கமா நகரு ளானே' என்ற

தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலை இங்கே உய்த்துணரற் பாலது. இவ் வற்புதத்தைக்கண்ட வேதியர்கள், ஆச்சரியமடைந்து இவர், ஸாக்ஷாத்பகவதம்ச * ஸம்பூதரெனத் தமக்குள் தீர்மானித்து, அவர்க்கு வந்தன வழிபாடுகள் செய்து, குற்ற மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, அவரால், ஸ்ரீ தாரகமந்திரோபதேசஞ் செய்யப்பெற்று, பாக்யவான்களானார்கள். இங்ஙனம், உஜ்ஜயினி பட்டணத்தருகில் உள்ள பாரஸம் என்னும் ஊரில் நடந்த இவ்வற்புத சரித்திரம், ஸ்ரீமத் பண்டரிநாதனுடைய நியமனத்தால், வருஷவாரியில் அநுசரிக்கப்பட்டு வருகின்றது. இப்போதும் ஸாதுஜனங்கள் அங்குச்சென்று, அவ்வற்புதத்தைக் கண்ணாரக் கண்டு களிக்கின்றார்கள்.

'எவ்வெதனைப் பாகவதன் தன்கையாற் றீண்டுமோ
எவ்வெதனைத் தன்கண்ணால் நோக்குமோ—அவ்வதுவும்
தாவரமே யாயிடினும் ஜங்கமமா யொன்றென்றும்
பூவுலகி லெய்தும் புகழ்'

"பரமபாகவதன் எதெதைத் தனது கரத்தாற் றொடுவானோ, எதெதைத் தனது கண்ணால் நோக்குவானோ, அதுவும், தாவரமாயினும், ஜங்கமமாய் உஜ்ஜீவிக்கும். இந்தப் பரமார்த்தத்தை, கணேசநாதரிடத்திற் கண்கூடாகக் கண்டனம்.

ஜ்ஞாநகம்யாயநம:

* ஸம்பூதர்-தோன்றினவர்; பிறந்தவர்.

## அறுபத்துஐந்தாம் அத்தியாயம்

# கேசவஸ்வாமி சரித்திரம்.

ஸோஜீவிபயகரதமீ யென்னும் ஊரில் கேசவஸ்வாமி யென்னும் பரமபாகவதர், அநவரதமும் பகவானைப் புகழ்ந்து, த்யானித்து, ஆனந்தத்தால் மெய்மறந்து கூத்தாடிக்கொண்டு, தீர்த்த யாத்ராபரராய் விளங்கினார். இவர், ஓர் ஏகாதசிநாளில், விஜயபுரத்தில் ஹரிகீர்த்தனம் செய்துகொண்டிருக்கையில், அநேகர் வந்து, அக்கீர்த்தனத்தைச் சிரவணானந்தமாய்க் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது கேசவஸ்வாமி, தமது சிஷ்யர்களுக்குள் ஒரு வேதியனை நோக்கி, "இன்று ஹரிவாஸரம் ஆகையால், ஸாதுக்கள் யாவரும் உபவாஸமாயிருக்கின்றார்கள். நீ கடைக்குப் போய், விசேஷமாய்ச் சுக்கும் வெல்லமும் வாங்கிக்கொண்டுவந்து, அவ்விரண்டையும் ஒன்றுசேர்த்து இடித்துக்கொண்டுவா; அதனை, பகவானுக்கு நிவேதித்து, ஸ்ரீ ஹரிநாமஸங்கீர்த்தன சிரவணஞ் செய்துகொண்டிருக்கும் ஸாதுக்களுக்கு விநியோகித்தால், அவர்கள் அதனை உட்கொண்டு, தங்களுக்குள்ள நாவறட்சியைப் போக்கிக்கொள்வார்கள்" என்று கட்டளையிட்டனர். அதன்படி அவ்வேதியன் கடைக்குச்சென்றனன். அப்போது, இரவு பன்னிரண்டுநாழிகையா யிருந்தபடியால், கடைகளனைத்தும் மூடப்பட்டிருந்தன. ஒரு வர்த்தகன் மாத்திரம், கேசவஸ்வாமி பஜனைபண்ணும் இடத்திற்கு வரவேண்டு மென்றெண்ணி உபவாஸ ஆயாஸத்தால் மெய்மறந்து, உட்கார்ந்தபடியே தூங்கிக்கொண்டிருந்தனன். இவ்வேதியன் அவ்வர்த்தகனைக் கைதட்டி எழுப்பி, கேசவஸ்வாமியின் கட்டளையைத் தெரிவித்தமாத்திரையில், அவன், தனது கடைக்குள் நுழைந்து, விளக்கில்லாததனால், சுக்குப்பையென்று எண்ணி வஸநாபிப் பையிற் கையையிட்டுத் தனதிஷ்டப்படி அவ்விஷத்தை யள்ளி வெல்லத்தோடு கலந்துகொடுத்து, "எனது மகன், சந்தைப்பேட்டைக்குப் போயிருக்கின்றான். ஆகையால் நான் வந்து, கேசவஸ்வாமியின் ஹரிகீர்த்தனத்தைக் கேட்கக்கூடாமல் தடையாயிற்று" என இரங்கி யுரைத்தனன். அவ்வேதியன், வர்த்தகன் தந்த வஸ்துக்களை உரலிலிட்டு மர்த்தித்துப் பிசைந்து உருண்டையாக்கி, கேசவஸ்வாமிக்கெதிரிற் கொண்டுவந்து வைத்தனன். அப்போது பக்தவத்ஸலனாகிய பண்டரிநாதன், அவ் விஷத்தை அமுதமாக்கி யருள்புரிந்தனன். கீர்த்தனம் முடிந்தபிறகு, கேசவஸ்வாமி, அந்தச் சுக்குவெல்லத்தைத் தமக்கு * ஆராத்யனாகிய விட்டலநாதற்கு நிவேதித்து; அங்கிருந்த ஸாதுக்களனைவருக்கும், ஒவ்வொரு தான்றிக்கா யளவாய் விநியோகித்தனர். அனைவரும் அதனை அங்கீகரித்து, மஹாப்ரஸாதமென்று உட்கொண்டு, தத்தம் வீடுகளுக்குச் சென்றார்கள். வர்த்தகன், வஸநாபியைக் கொடுத்

* ஆராத்யன் - வழிபடுகடவுள்.



ததும், அதனைக் கேசவஸ்வாமி, பகவானுக்கு நிவேதித்து, பாகவதர்க்கு விநியோகித்தது யார்க்குந் தெரியாது. மறுநாளுதயத்தில் அவ்வர்த்தகன், கடைக்குட் பிரவேசித்து, வசநாபிப்பை அவிழ்ந்திருப்பதைக் கண்டு, "ஓஹோ! நேற்றிராத்திரி நான், எத்தனை ப்ரமாதம் பண்ணிவிட்டேன்! தூக்கத்தின் மயங்கின நான், மதியிலியாய்ச் சுக்கென்று விஷத்தை ஸாதுக்களுக்குக் கொடுத்தேன். இதனால் ஸாதுக்களிற் பலர் இறந்திருக்கவேண்டும்! நான் என்செய்யக்கடவேன்! என்ன பிராயச்சித்தம் பண்ணிக்கொண்டு அதனால் நான் பரிசுத்தனாகப்போகின்றேன்! பக்தவத்ஸலனாகிய ஸ்ரீமத் பண்டரிநாதன், ஆபத்ரக்ஷகனென்னும் விருது வகித்து, இப்படிப்பட்ட காலத்திற் பராங்முகனாயிருப்பானா! கேசவஸ்வாமியின் ப்ரபாவத்தால் எனது விஷம் அமுதமாயிருக்கவேண்டும்!" என்று பலவாறு சிந்தித்து, இராத்திரி ஹரிகீர்த்தனம் கேட்டுக்கொண்டிருந்த சில பாகவதர்கள் வீடுகளுக்குப் போய்ப் பார்க்கையில், அவர்கள் அனைவரும், தமது சரீரங்களில், வஸநாபியோடு கலந்து கொடுத்த சுக்கை அரையிரவில் அயின்றதனால் உண்டாயிருக்கவேண்டிய மாற்றம் கொஞ்சமேனும் இல்லாமல், எப்போதும்போல் இன்புற்றிருந்தார்கள். அதனைக்கண்ட அவ் வர்த்தகன், அதிசயித்து, கேசவஸ்வாமி ஸந்நிதிக்கு வருவானாயினன். அங்கே, கேசவஸ்வாமி, ஸ்நானாத்யநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, தமக்கு ஆராத்யனாகிய ஸ்ரீ பண்டரிநாதனை ஆராதிக்க ஆரம்பித்து, தேவக்ருஹத்தில் நுழைந்து, புண்டரீகவரதனை ஸேவித்து, தங்கமயமாயிருந்த அந்த பகவானுடைய திவ்ய மங்கள விக்ரஹம் இருப்புமயமாய்க் கன்னங்கறேல் எனக் கறுத்திருப்பதைக்கண்டு, "இதற்குக் காரணம் என்ன!" எனத் தமக்கு அருகிலிருந்த பாகவதர்களோடு ஆலோசித்துக்கொண்டிருக்கையில், வர்த்தகன் வந்து, கேசவஸ்வாமிக்கு ஸாஷ்டாங்கவந்தனம் செய்து, "ஸ்வாமீ! நேற்றிரவு, அடியேன், தூக்கத்தின் மயங்கினவனாய், பெரும்பிழை புரிந்தேன்" என விண்ணப்பஞ்செய்து, "என்னைக் காத்தருள்புரிக" என வேண்டிக்கொண்டனன். அதைக்கேட்ட கேசவஸ்வாமி, ஸ்ரீ விட்டலநாதர்க்கு வந்தனம் செய்து, சென்னியிற் கூப்பிய கையராய், பகவானைப் பின்வருமாறு துதிக்கலாயினர்.

'மாயா வாமனனே மதுசூ தாநீ யருளாய்
தீயாய் நீராய் நிலனாய் விசும்பாய்க் காலாய்
தாயாய்த் தந்தையாய் மக்களாய் மற்றுமாய் முற்றுமாய்
நீயாய் நீநின்ற வாறிவை யென்னநி யாயங்களே'
'என்னவி யற்கைகளால் எங்ஙனே நின்றிட்டா யென்கண்ணா
துன்னு கரசரணம் முதலா கவெல்லா வுறுப்பும்
உன்னு சுவையொளியூ றொலிநாற்ற முற்றும் நீயே
உன்னை யுணரவுறி லுலப்பில்லை நுணுக் கங்களே' என்றபடி

"ப்ருதிவ்யப்தேஜோவாய் வாகாசங்களும், தன்மாத்ரைகளும், மனமும் மற்ற இந்திரியங்களும், மஹதஹங்காரங்களும், மூலப்ரக்ருதியும்

எவன் வடிவங்களா யிருக்கின்றனவோ, அப்பேர்ப்பட்ட ஸர்வேஸ்வரனுக்கு தண்டம் ஸமர்ப்பிக்கின்றேன்.

'உயர்வற வுயர்நல முடையவன் யவனவன்
மயர்வற மதிநல மருளினன் யவனவன்
அயர்வறு மமரர்க ளதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே'

'இலனது வுடையனி தெனநினை வரியவன்
நிலனுடை விசும்பிடை யுருவின னருவினன்
புலனொடு புலனல னொழிவிலன் பரந்தஅந்
நலனுடை யொருவனை நணுகினம் நாமே'

'மாயனென் னெஞ்சி னுள்ளான் மற்றும் யவர்க்கு மஃதே
காயமும் சீவனும் தானே காலு மெரியு மவனே
சேய னணியன் யவர்க்கும் சிந்தைக்கும் கோசர மல்லன்
தூயன் றுயக்கன் மயக்க னென்னுடைத் தோளிணை யானே' என்றபடி,

சுத்தஸ்வபாவனாய், ஸூக்ஷ்மவடிவினனாய், ஞானத்தால் எதிலும் வியாபித்து ப்ரக்ருதியின் வேறுபட்டவனாகிய பரமபுருஷன், எவனுடைய வடிவினனாயிருப்பானோ, அப்பேர்ப்பட்ட ஸத்குணாகரனாகிய புருஷோத்தமற்கு வந்தனம் செய்கின்றேன்.

ப்ருதிவ்யாதி பூதங்களும், கந்தாதி குணங்களும், புத்யாதிகளும், ப்ரக்ருதியும், ஸம்ஸாரியென்னும் ஜீவனும் ஆகிய இவர்களின் வேறாகிய முக்தபுருஷன், எவன் வடிவினனாய் விளங்குவானோ, அப்பேர்ப்பட்ட லோகநாதற்கு நமஸ்காரம் புரிகின்றேன்.

'முடியானே மூவுலகும் தொழுதேத் தும்சீ
ரடியானே ஆழ்கடலைக் கடைந்தாய் புள்ளூர்
கொடியானே கொண்டல்வண் ணா அண்டத் தும்பரில்
நெடியானே என்றுகிடக்கும் என் நெஞ்சமே என்றபடி,

பரமேஸ்வரா! ப்ரஹ்மலக்ஷணயுக்தனாய், அகிலலோக நாயகனாய், பரிசுத்தனாகிய நினது ஸ்வரூபத்திற்கு வந்தனம் செய்கின்றேன்.

'சுருக்குவாரை யின்றியே சுருங்கினாய் சுருங்கியும்
பெருக்குவாரை யின்றியேபெருக்கமெய்து பெற்றியோய்
செருக்குவார்கள் தீக்குணங்கள் தீர்த்ததேவ தேவனென்று
இருக்கு வாய்முனிக்க ணங்கள் ஏத்தயானு மேத்தினேன்'
சொல்லி னால்தொ டர்ச்சி நீசொ லப்படும்பொ ருளுநீ
சொல்லி னால்சொ லப்படாது தோன்று கின்ற சோதிநீ
சொல்லி னால் படைக்க நீபடைக்க வந்து தோன்றினார்
சொல்லினால் சுருங்க நின்கு ணங்கள் சொல்ல வல்லரே' என்றபடி,

ஸர்வாத்மகா! ஸமஸ்த சக்தியுக்தமாகிய பெருந் தத்வத்தாலும், ஜகத் வடிவத்தாலும் மஹா ப்ரஹ்மணமாய் விளங்குகிறபடியால், ப்ரஹ்ம



மென்னும் நாமதேயம் பூண்டு, வேறுபாடின்றி, யோகியர்க்கும் உணர்வரிதாய் ஓங்கும் நினது ஸ்வரூபத்திற்கு வந்தனம் செய்கின்றேன்.

'யாருமோர் நிலைமைய னெனவறி வரியவெம் பெருமான்
யாருமோர் நிலைமைய னெனவறி வெளியவெம் பெருமான்
பேருமோ ராயிரம் பிறபல வுடையவெம் பெருமான்
பேருமோ ருருவமு முளதில்லை யிலதில்லை பிணக்கே' என்றபடி.

நீ, ஓராயிரஞ் சிரங்களையும், ஓராயிரம் பாதங்களையும், ஓராயிரம் கண்களையும் உடையவனாய், புருஷனாய், ஸர்வத்திலும் வ்யாபித்து, பூமி, யென்று சொல்லப்படுஞ் சராசரமயமாகிய ப்ரபஞ்சத்திற் பதின்மடக்கு மிகச் சிறந்து விளங்குகின்றனை.

இறந்தனவும் இனி எய்துவனவுமாகிய பொருள்வகைகள் நீயேயாவை. புருஷோத்தம! * விராட்டென்று சொல்லப்படுகிற † அவ்யக்த சரீரமுடையோனாகிய அநிருத்தனும், ‡ ஸ்வராட்டென்று சொல்லப்படுகிற கேவலாத்மாநுபவஞான விருப்பினனும், ஆதிபுருஷனென்று சொல்லப்படூஉம் பிரமதேவனும் உன்னிடத்திற் றோன்றினார்கள். ¶ ஸமஷ்டி சரீரியாகிய $ ஹிரண்ய கர்ப்பனென்னும் புருஷன், ப்ருதிவிக்கு § அதோபாகத்திலும், பாரிச ப்ரதேசங்களிலும், ‖ ஊர்த்வ ப்ரதேசத்திலும் வ்யாபித்திருக்கின்றனன். உன்னிடத்தில் உலகமுழுவதும் உண்டாயிற்று; உண்டாகும்; இங்ஙனம் உன்னால் உண்டாக்கப்பட்ட உனது ரூபமாகிய ஹிரண்ய கர்ப்ப னுதரத்தில் உலகடங்கலும் அடங்கியிருக்கிறபடியால், எல்லாம் உன்னிடத்தில் ஒடுங்கியிருக்கின்றனவென வேறு கூறவும் வேண்டுமோ! ஸர்வ பரிசுத்தமாகிய யாகமும், அதனிற் பொழியும் நெய்யும், ஹவிர்பாகமும், ‡ க்ராம்யங்களென்றும், ஆரண்யங்களென்றும் இருவகையாகிய பசுக்களும், ருக்யஜுஸ்ஸாமங்களும், + சந்தங்களும், × அச்வங்களும், = அஜாதிகளும், ஒண்டி சண்டியாய் வாழும் ஜந்துவர்க்கங்களும், விலங்குகளும் உன்னிடத்தில் உண்டாயின.

'ஐந்து மைந்து மைந்து மாகி யல்லவற்று ளாயுமாய்
ஐந்து மூன்று மொன்று மாகி நின்றவாதி தேவனே
ஐந்து மைந்து மைந்து மாகியந்த ரத்தணைந்துநின்று
ஐந்து மைந்துமாய நின்னை யாவர் காண வல்லரே'
'மூன்றுமுப்ப தாறி னோடொ ரைந்து மைந்து மைந்துமாய்
மூன்று மூர்த்தியாகி மூன்று மூன்று மூன்று மூன்றுமாய்

* விராட் - பரம்பொருள்; கடவுள். † அவ்யக்தம் - மறைந்துள்ளது.
‡ ஸ்வராட் - பிரமனுக்கும் இந்திரற்கும் அடைமொழி.
¶ ஸமஷ்டி - எல்லாம். $ ஹிரண்யகர்ப்பன் - பிரமற்கு அடைமொழி.
§ அதோர்பாகம் - அடிப்பக்கம். ‖ ஊர்த்வப்ரதேசம் - மேலிடம்.
பாரிசப்ரதேசங்கள் - வலப்புறத்திடப் புறத்திடங்கள்.
‡ க்ராம்யங்கள் - கிராமங்களிலுள்ளன. ஆரண்யங்கள் - வனத்திலுள்ளன.
+ சந்தங்கள் - கீர்த்தனை முதலியன. × அச்வங்களும் அஜாதிகளும் - குதிரைகளும் ஆடு முதலானவைகளும்.

தோன்று சோதி மூன்றுமாய்த் துளக்க மில்லி ளக்கமாய்
என்றெ னாவியுள்பு குந்த தென்கொ லோவெம் மீசனே'

'நின்றியங்கு மொன்ற லாவு ருக்க டோறும் ஆவியாய்
ஒன்றியுள்க லந்துநின்ற நின்ன தன்மை யின்ன தென்று
என்றும் யார்க்கு மெண்ணி றந்தஆதி யாய்நின் னுந்திவாய்
அன்று நான்மு கற்பயந்த வாதி தேவ னல்லையே' என்ற

பக்திஸாரர் திருச்சந்த விருத்தங்கள் இங்கே சிறந்துள்ளன காண்க. உனது வதனத்தில் வேதியரும், புஜங்களில் க்ஷத்ரியரும், தொடைகளில் வைசியரும், பாதங்களில் சூத்திரரும், நேத்திரங்களில் ஸூரியனும், மனதிற் சந்திரனும், ப்ராணத்தில் வாயுவும், முகத்தில் நெருப்பும், நாபியில் * அந்தரிக்ஷமும், சிரத்தில் ஸ்வர்க்கமும், காதுகளில் திசைகளும், பாதங்களில் பூமியும் உண்டாயின. மிகவும் தழைத்துப் பரந்த ஆலமரம், மிகச் சிறிய விதையில் அடங்கியிருக்கிறபடி, மஹத்தாகிய இந்த ப்ரபஞ்சமனைத்தும், ப்ரளயகாலத்தில் ஆதிகாரண பூதனாகிய உன்னிடத்தில் அடங்கியிருக்கும்.

'ஏழுலகுந் தாழ்வரையு மெங்கு மூடி
எண்டிசையு மண்டலமும் மண்டி அண்ட
மோழையெழுந் தாருயிரு மூழி வெள்ளம்
முன்னகட்டி லொடுக்கியவெம் மூர்த்தி கண்டீர்
ஊழிதொறு மூழிதொறு முயர்ந்த செல்வத்
தோங்கியநான் மறையனைத்தும் தாங்கு நாவர்
சேழுயர்ந்த மணிமாடந் திகழு நாங்கூர்த்
திருத்தெற்றி யம்பலத்தென் செங்கண் மாலே' என்ற

திருமங்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய திருப்பாசுரம் இங்குச் சிறப்புடைமை காண்க.

'தெள்ளிய வாலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே' என்றபடி,

ஆலமரம், மிகவும் சிறிய விதையிலிருந்துண்டாகிச் † சாகோபசாகைகளாக விஸ்தரித்து வளருகிறபடி, ஸ்ருஷ்டிகாலத்தில் ப்ரபஞ்சமனைத்தும் உன்னிடத்திலிருந்து தோன்றி, வளர்ந்தது. ஜகந்நாயக! புரைகள் ஒன்றின்மேலொன்று மூடிக்கொண்டு, ஒரே வடிவாய்த் தோன்றுகின்ற வாழைக்கன்று, பெரியதான பிறகும் அங்ஙனமே புரைபுரையா யிருக்கிறபடி, ஸூக்ஷ்ம ‡ சித்து அசித்துக்களோடு கூடிக் காரணரூபமாகும்

* அந்தரிக்ஷம் - ஆகாயம். † சாக + உபாகை - சகோபாகை - கிளையும், கிளையிற்கிளையும். ‡ சித்து + அசித்து - சித்தசித்து - அறிவுடையது, ஜடப்பொருள்.



உன்னிடமிருந்து நீங்கி, ஸ்தூல சித்து அசித்து உருவமாகி இந்த ப்ரபஞ்சம் வேறுகாமல் இருக்கின்றது. சுத்த ஸந்தோஷகரமாய், நித்யமாய், அநவரதமும் ஒரேவடிவாய் உள்ள ஞான விசேஷம் உன்னிடத்திலேயே யுள்ளது. சுகதுக்கங்களை உண்டாக்குவதும், * கேவலம் துக்கத்தைத் தருவதும் ஆகிய ஞானங்கள் உன்னிடத்திற் கிடையா; ஏனெனில்: நீ, † ப்ராக்ருதங்களான ஸத்வாதி குணங்களோடு கலவாமல், ‡ அப்ராக்ருத சுத்தஸத்வமயனாய் இருக்கின்றனையன்றோ? பிரபஞ்சத்தின் வேறாய், ஏகாத்மாவாய், ஸர்வபூதசரீரனாய் விளங்கும் உனக்கு வந்தனம் செய்கின்றேன்.

பிரபஞ்சத்திற் சிரேஷ்டர்களாகிய பிரமாதியர்களுடைய சொரூபனும், சர்வ பூதாந்தரியாமியுமாகிய உன்னை நமஸ்கரிக்கின்றேன். சூக்ஷ்ம பிரகிருதியும், ஸ்தூல பிரகிருதியும், புருஷனும், விராட்டு, சுவராட்டு, சம்ராட்டென்பவர்களும், இன்னுமுள்ள அனைத்தும் நீயே ஆகின்றனை அன்றோ? அன்றியும், எல்லாருடைய அந்தக்கரணங்களிலும், $ அக்ஷய ஞானமயனாய்ப் பிரகாசிக்கின்றனை. நீ, ஆகாசத்தில் சப்தமாய், புருஷனிடத்தில் ¶ பௌருஷமாய், சூரியனிடத்தில் ஒளியாய், இங்ஙனம் அவ்வப்பொருள்களிலும் அதனதன் சாராம்சமாய் விளங்குகின்றனை. உன்னிடத்தில் எல்லாம் ஒடுங்கியிருக்கின்றன. ஆதலால், சர்வாத்மனாகிய உனக்கு வந்தனஞ் செய்கின்றேன். இங்ஙனம் நீ எல்லாவற்றிற்குங் காரணனாய், எல்லாவற்றிலும் வியாபித்து, எல்லாவற்றுள்ளும் விளங்கி யிருக்கின்றனை. ஆதலால், நீயே, எனது மனோரதமனைத்தும் உணர்வை ஆகையால், நான் விண்ணப்பஞ் செய்யத்தக்கது ஒன்றுமின்று" என்பதேயாம். இங்ஙனம் துதித்த கேசவஸ்வாமியை ஸ்ரீமத் பண்டரிநாதன் கருணைகூர்ந்து நோக்கி, "நீ இப்போது விண்ணப்பித்து வந்தன யாவும் உண்மையேயாம்; நினது மனோரதத்தை நினது வார்த்தைகளாலேயே கேட்க விரும்புகின்றனன். லங்கணம் இருந்த சிசுவுக்கு 'வியாதி நீங்கிற்று, அன்னங்கொடுக்கலாம்' என வைத்தியன் கூறினும், தாய் தந்தையர் மகிழார்கள். அந்த சிசு, தானே 'அம்மா! எனக்குப் பசியாயிருக்கின்றது; சோறுவேண்டும்' எனக் கேட்குமேல், அவர்கள் பரமானந்தமடைந்து, அதற்கு உடனே அன்ன மிடுவார்கள். அங்ஙனமே, நான் சர்வஜ்ஞனாயினும், நினது மதுரமொழிகளால் நினது மனோரதத்தைக்கேட்டு ஆனந்திக்க வேண்டுமென்று விரும்பினேன்" என்று அநுக்கிரகித்தருளினன். மறுபடியும் பகவானுக்கு வந்தனம் தந்து, கேசவஸ்வாமி, இவ்வாறு விண்ணப்பிக்கலாயினார்:—"ஓ ஜகதீசா! நான் நிந்தாஸ்துதிகளைச் சமமாகப் பாவித்திருக்கின்றனன். ஆகையால் எனக்கு விருப்பமானபொருள் ஒன்றுமில்லை. இராத்திரி வசநாதியை உட்கொண்ட அனேக ஸாதுஜனங்கள், சரீரவியோக மெய்தியிருந்தார்களாயின், நினது திவ்ய நாம வைபவத்துக்கும், பிரசாத பிரபாவத்துக்கும்

* கேவலம் - முழுமையும். † ப்ராக்ருதம் - பிராகிருதம் - தாழ்ந்தது ‡ அப்ராக்ருதம் - உயர்ந்தது. $ அக்ஷயம் - அழியாதது. ¶ பௌருஷம் - புருஷத்தன்மை.

மிகவும் அபகீர்த்தி உண்டாயிருக்கும். துஷ்டர்களுடைய துர்வசனங்களைக் கேட்டு, நாளும், நினது அந்தரங்கபக்தர்களும் எங்ஙனம் பொறுப்போம்! வசநாபிவிஷத்தை நீ உட்கொண்டு, அத்தகையகுறை நேராதபடி எங்களனைவரையும் காத்தருளினை. இக் காப்பு, காப்பன்று; நாங்கள் தெரிந்தும் தெரியாமலும், அகிருத்யகரண, கிருத்யாகரண, பகவதபசார, பாகவதாபசாராதி அருவருப்பான காரியங்களை அநாதிகாலமாய்ச் செய்திருக்கின்றோம்; எமது பிழைகள், சர்வஜ்ஞனாகிய உனக்கும் எண்ணிக்கணக்கிடல் அரியனவாம். இத்தகையவாம் அவைகளைக் குணங்களாகக்கொண்டு, எமது காப்பின்கடமையை நீயே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பிரார்த்திக்கின்றனம். நெருப்பு, தன்னிடத்தில் வைக்கப்படும் சமஸ்த பொருள்களையும் சுத்தஞ் செய்யுமேயன்றி, அப்பொருள்களிடத்துள்ள அசுத்தங்களால், தான் அசுத்தமடையாது. அங்ஙனம் ஆக, பக்தரக்ஷணார்த்தம் வசநாபியினிடத்திருந்த தோஷத்தைப் போக்கிய நினது சரீரத்தில், அந்த தோஷம் பரவி விரவியிருத்தல் ஞாயமன்று. கைக்குழந்தைகளுக்காக மருந்துண்டு மகிழும் தாயேபோல உன்னையே சிந்தித்துக்கொண்டு, தமது ஆத்மபாரங்களை உன்னிடத் தர்ப்பணஞ்செய்து * நிர்ப்பரர்களாய் விளங்கும் பரமபாகவதர்களுடைய யோகக்ஷேமங்களை நீயே வகித்து, அவர்களுடைய ஆத்மயாத்திரையையும், தேகயாத்திரையையும் நீயே நிர்வகித்திருப்பதை உலகத்தார்க்குக் காண்பிக்குமாறு, வசநாபி தோஷத்தை ஏற்று நினது பக்தர்களைக் காப்பாற்றின அற்புதத்தை நினது சரீர வெளி நிறத்தால் விளம்பரப்படுத்தினைபோலும்! இனி எம்மேல் இரங்கி அருள்சுரந்து, இவ் † விக்ருதவேஷத்தைவிட்டு, முன்போலவே ஸேவை அளிக்கவேண்டுமென்று நாங்கள் அனைவரும் பிரார்த்திக்கின்றோம்" என்றார். இதற்கு பகவான் மிகவும் மகிழ்ந்து, தனது சரீர வெளி நிறத்தைமாற்றி முன்போலவே காட்சியளித்தான். அதனைக்கண்டாரனைவரும் ஆச்சரியமடைந்து, ஜயஜய கோஷஞ்செய்து, புண்டரீகவரதனைப் பலவாறு துதித்துக் குதித்து, கேசவஸ்வாமியின் வைபவத்தை ஆயிரமுகத்தாற் பாயிரங் கூறினார்கள். அவ்வர்த்தகன் பரமவைராக்யசீலனாய்க் கேசவஸ்வாமிக்கு அணுக்கத்தொண்டனாய் வாழ்ந்தனன்.

விஷ்ணவே நம:

## அறுபத்தாறாம் அத்தியாயம்

# கோமாபாய் சரித்திரம்

கோமாபாய் என்னும் ஒரு விதவை யம்மையார், ‡ சமதமாதி சற்குண நிதியாய், நிரந்தர பகவத் தியானம் செய்துகொண்டிருப்பாராயினர். இவ் வம்மையார் மிகவும் வறியவர். ஆகையால் பழங் கந்தை

* நிர்ப்பரர்கள் - பாரமற்றவர்கள். † விக்ருதவேஷம் - மாறுவேஷம்.
‡ சமதமம் - ஆசையின்மை.



உடுத்து, பிச்சை யெடுத்துண்டு காலங் கழித்துக்கொண்டிருந்தார். இம் மாதரசியார், ஸ்ரீமத் பண்டரிபுரத்தில் உற்சவத்தை ஸேவிப்பதற்காக வந்து, பீமநதியில் ப்ரவாகம் அதிகமாய் இருந்தபடியால், தம்மை அக்கரையிற் சேர்ப்பிக்கவேண்டுமென்று ஓடக்காரனை மிகவும் வேண்டிக்கொண்டார். "காசு கொடாமல், ஓடத்தில் உன்னை ஏற்றிக்கொள்ளமாட்டேன்" என்று, ஓடக்காரன் உறுதியாய்க் கூறினான். அதற்கு அந்த அம்மையார் அவனை நோக்கி, "தம்பி! நான், பண்டரிநாதன் ஸேவையை விரும்பி, நெடுந்தூரத்திலிருந்து வந்தேன்; வீசங் காசுக்கும் வழியற்றவள். ஆகையால், என்னிடத்திலுள்ள மாவில் உனக்குக் கொஞ்சம் தருகிறேன் என்றாள்.

'தொலையிலிருந் தேனை திரௌபதிகோ விந்தா
நிலையுணர்ந் தென்னைக்கா வென்றே - உலையா
தழைத்தது ப்ரவ்ருத்தருண மாகியென்றன் நெஞ்சில்
தழைத்து வளர்ந்துளதுதான்' என்றபடி

'தூரவாஸியாகிய என்னைக் கோவிந்தா வென்று த்ரௌபதி அழைத்தது ப்ரவ்ருத்த ருணமாய் எனது மனத்தகத்தில்நிலைத்து வளர்ந்திருக்கின்றது' என்று அக்காலத்தில் வாஸுதேவன் கூறினன் அல்லவா? அவனே, இப்போது பக்தர்களுக்காக, பண்டரிபுரத்தில் ஸாந்நித்யம் செய்திருக்கின்றனன். நான் எத்தனை வேண்டிக்கொண்டாலும், இவ் வூரிலுள்ள உனக்கு இரக்கம் இல்லாமல் இருப்பது அதிசயமாயிருக்கின்றது! பூர்வ ஜன்மத்தில், நான் கன்னெஞ்ச முடையவளாய், பரோபகாரம் செய்யாம லிருந்திருப்பேன். ஆகையால், எனது வேண்டுகோளுக்கு உனது மனம், உருகாதிருக்கின்றது" எனக் கூறினர். அதற்கு ஓடக்காரன், "தாயே! வெறும் பேச்சால் உபயோகமில்லை. மாவெனக்கென்னத்திற்கு? மற்றவர்களைப்போலக் காசு தந்தால், உன்னையும் ஓடத்தில் ஏற்றிக்கொண்டு அக்கரையிற் சேர்க்கும் அக்கறை எனக்குண்டாகும்; இல்லாவிட்டால் நீ இக்கரையில் இருக்கவேண்டியவள்தான்" எனக் கூறிவிட்டு, ஓடத்தைத் தள்ளிக்கொண்டு போயினன். இராத்திரியானபொழுது, கோமாபாய், இருட்டில் ஒன்றியாய் அக்கரையிலேயே நின்றுகொண்டு, பண்டரிநாதனை த்யானித்துப் பின் வருகிறபடி துதிக்கலாயினர். "ஸகல சத்தவகைகள் எவனிடத்திற் பொருந்தி யிருப்பனவோ, அப்பேர்ப்பட்ட அகிலலோக ஸ்ருஷ்டி ஸம்ஹார கர்த்தாவாகிய பரம புருஷனுக்கு வந்தனம் செய்கின்றேன். சூரிய சந்திர ஜோதிவகைகளைப் பிரகாசிக்கச்செய்து, என்றும் அழிவில்லாத தேஜோமயனாய் விளங்குபவனும், உபமான ரகிதனும், சூக்கும வடிவினனும், காலதேச * பரிச்சேத மில்லாதவனும், † சராசராத்மகமாகிய ஜகத்துக்குக் காரணபூதனுமாகிய ஸ்ரீ விஷ்ணுதேவனுக்கு வந்தனஞ் செய்கின்றேன். எவனுக்குப் பகல் முதல்ரூபமாய், இரவு இரண்டாவது ரூபமாய், சந்தி மூன்றாவது ரூபமாய் இருக்குமோ, அப்பேர்ப்பட்ட

* பரிச்சேதம் - வரையறை; எல்லை; அளவு.
† சரம் + அசரம் + ஆத்மகம் - சராசரங்களுக்குப் பிறப்பு.

காலரூபியாகிய பரமேஸ்வரனுக்கு வந்தனம் செய்கின்றேன். எவன் அமிர்தமாய்த் தினந்தோறும் தேவர்களாலும் தென்புலத்தாராலும் உண்ணப்படுகின்றனனோ, * ஒஷதிகள் மூலமாய் ஸமஸ்த பிராணிகளுக்கும் ஜீவனமாய் இருக்கின்றனனோ, அப்பேர்ப்பட்ட சந்திரரூபப் பகவானுக்குப் ப்ரணாமங்கள் செய்கின்றேன். எவன், உஷ்ணமாகிய தனது கிரணங்களால், அந்தகாரத்தைப் போக்கடித்து, ஆகாசத்தை ஒளிமயமாக்கி, வெம்மைக்கும் தண்மைக்கும் நீர்க்கும் காரணமாயிருப்பானோ, அப்பேர்ப்பட்ட சூர்யாத்மகனாகிய பகவானுக்கு நமஸ்காரம் பண்ணுகின்றேன். எவன் கடினரூபியாய் இந்த உலகனைத்தையும் தாங்கிக்கொண்டு, சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தங்களுக்கு இருப்பிடமாயிருப்பானோ, அப்பேர்ப்பட்ட பூமியாத்மகனாகிய பகவானுக்கு வந்தனம் செய்கின்றேன். எவன் சுக்ல சோணிதங்களாய், உலக காரணமான ஜலரூபமாய் இருக்கின்றனனோ, அப்பேர்ப்பட்ட பக்தரக்ஷகனுடைய ஸ்வரூபத்துக்கு வந்தனம் செய்கின்றேன். எவன், ஸகல தேவதைகளுக்கும் முகமாய் விளங்கி, † அவியையும், பிதிர்தேவதைகளுக்கு முகமாய் விளங்கி ‡ கௌவியத்தையும் புசிக்கின்றனனோ, அப்பேர்ப்பட்ட அக்கினி ஸ்வரூபனாகிய பரமாத்மாவுக்கு நமஸ்காரஞ் செய்கின்றேன். எவன், § பிராணாபானாதி ரூபங்களாய், சரீரங்களிலிருந்து அநவரதமும் சுவாஸம் விடுதல் முதலிய காரியங்களைச் செய்விக்கின்றனனோ, அப்பேர்ப்பட்ட வாயுவாத்மகனாகிய பரந்தாமனுக்கு வந்தனம் செய்கின்றேன்! எவன், சகல பூதங்களுக்கும் இடமாய், அனந்த மூர்த்தியாய், சுத்தமயமாயுள்ள ஆகாச ரூபியாய் விளங்குகின்றானோ, அப்பேர்ப்பட்ட ஸ்வாமிக்கு ப்ரணாமங்கள் செய்கின்றேன். எவன், ஸகலேந்திரியங்களுக்கும் ¶ ஆசிரியனாய், சப்தாதி விஷயாத்மகனாய் இருக்கின்றனனோ, அப்படிப்பட்ட ஜகத்கர்த்தன் ஆகிய ஸ்ரீ கிருஷ்ணனுக்கு நமஸ்காரம் செய்கின்றேன். எவன், ‡ க்ஷராக்ஷரேந்திரிய ரூபியாய், சப்தாதி விஷயங்களைக் கிரஹித்துக்கொண்டு, ஞானதாரனாய் இருக்கின்றனனோ, அப்பேர்ப்பட்ட பிரணதார்த்தி ஹரனுக்குத் தண்டன் சமர்ப்பிக்கின்றேன். இந்திரியங்களால் கிரஹிக்கப்படும் சப்தாதி விஷயங்களை, ஆத்மா அறிவதற்கு ஸாதனமாயுள்ள மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்று சொல்லப்படும் அந்தக்கரண ஸ்வரூபனாகிய ஸர்வேஸ்வரனுக்கு வந்தனம் செய்கின்றேன். அநந்தனும் எவனிடத்தில் ஸகலபிரபஞ்சமும் இருக்கின்றதோ, எவனிடத்திலிருந்து தோன்றினவோ, எவனிடத்தில் ஒடுங்கினவோ, அப்பேர்ப்பட்ட

* ஓஷதி - புல் பூண்டு, மருத்துப்பூடு, மூலிகை முதலியன; இவைகளுக்குத் தலைவனாய் வளரச்செய்பவன், சந்திரன் என்பது சான்றோர் துணிபு.

† அவி - தேவர்க்கு யாகாதிகளில் தரும் உணவு; நெய்.

‡ கௌவியம் - தென்புலத்தார்க்குப் படைக்கும் உணவு.

§ பிராணன் + அபானன் + மூர்த்தி - உருவம், பிராணவாயு, அபானவாயு.

¶ ஆசிரயன் - தற்காப்போன். ‡ க்ஷரம் + அக்ஷரம் - அழிவுள்ளதும் அழிவில்லாததும்.



ப்ரக்ருதி ஸ்வரூபனுக்கு நமஸ்காரம் செய்கின்றேன். எவன் *ப்ராக்ருதமாகிய ஸத்வாதி குண ரஹிதனாய், சுத்தனாகி இருந்தும், ப்ரக்ருதி ஸம்பந்தமாகிய ஸத்வாதிகுண ஸஹிதனைப்போல் நமது பிராந்தியாற் காணப்படுகின்றானோ, அப்பேர்ப்பட்ட ஜீவாத்மரூபியாகிய புருஷோத்தமனுக்கு வந்தனம் செய்கின்றேன். ஞான † ஸங்கோச விகாஸங்களென்னும் விகாரரஹிதனும், ஜன்மரஹிதனும், சுத்தனும், ப்ரக்ருதி குணசம்பந்தம் அற்றவனும், ப்ரக்ருதி புருஷர்களைப் பார்க்கிலும் மிகவும் சௌரவம் உள்ளவனும் ஆகிய முக்தாத்ம ஸ்வரூப ஸ்ரீ கிருஷ்ண தேவனுக்கு நமஸ்காரம் பண்ணுகின்றேன். நீட்சி, குறுக்கங்களென்னும் அளவுகளும், ஸ்தூல ஸூக்ஷ்மங்களென்னும் வடிவங்களும், ஸ்நேஹமும், சாயையும், தேஹமும், அவயவங்களும், மத்யாவகாசமும், சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தங்களும், நேத்ரசுரோத்ரங்களும், வாக்கு பாணி பாதங்களும், அந்தக்கரணங்களும், நாமகோத்ரங்களும், அன்னபானாதிகளால் உண்டாகும் சுகமும், தனக்கு அந்நியமாகிய வேறொரு தேஜஸும், தனக்குமேலொரு காரணமும், பயம், பிரமை, நித்ரை, மூப்பு, மரணங்களும், ஸஞ்சாரமும் அற்றதாய் எதனாலும் மயங்காததாய், அமிர்தமயமாய், ஆதியந்த ரஹிதமாய், பரமேஸ்வராதி ஸகல கல்யாணகுண யுக்தமாய், ஸகலாஸ்ரயமாய், தனக்கு ஓர் ஆஸ்ரயம் அற்றதாய், வாசாம கோசரமாய், ஊனக்கண்ணுக்கு அகப்படாததாய் இங்ஙனம் பலவித விலக்ஷணங்களோடு ‡ பரமபிராப்யமாய் விளங்கும் ஸ்ரீவிஷ்ணுபகவானுடைய ஸ்வரூபத்திற்குத் தண்டன் ஸமர்ப்பிக்கின்றேன்" என்று இங்ஙனம் துதித்த அவ்வம்மையார்; மறுபடியும், பகவானைக் குறித்து,

'போரானை பொய்கைவாய்க் கோட்பட்டு நின்றலற
நீரார் மலர்க்கமலம் கொண்டோர் நெடுங்கையால்
நாராயணா ஓ மணிவண்ணா நாகணையாய்
வாராயென் னாரிடரை நீக்காய் எனவெகுண்டு
தீராத சீற்றத்தால் சென்றிரண்டு கூறாக
ஈரா அதனை இடர்கடிந்தான் எம்பெருமான்' என்றபடி,

"§ கிராஹக்ரஸ்தனாகிய கஜேந்திரனைக் காத்தனை;

'மன்னவன் வானமும் வானவர்தம் பொன்னுலகும்
தன்னுடைய தோள்வலியால் கைக்கொண்ட தானவனை
பின்னோரரியுருவ மாகியெரி விழித்து
கொன்னவிலும் வெஞ்சமத்துக் கொல்லாதே—வல்லாளன்

* ப்ராகிருதம் - ஆதிமூலம்; இயற்கையாயுள்ளது.

† சங்கோசம்+விகாஸம் - சுருக்கம், பெருக்கம் அல்லது விரிவு.

‡ பரமபிராப்யம் - அரும்பெறல்வைப்பு.

§ கிராஹக்ரஸ்தன் - ஞானசொரூபி. ¶ ஷட்பிரபந்தகவி - திருமங்கையாழ்வார்.

மன்னு மணிக்குஞ்சி பற்றி வரவீர்த்து
தன்னுடைய தாள்மேல் கிடத்தி அவனுடைய
பொன்னகலம் வள்ளுகிரால் போழ்ந்து புகழ்படைத்த
மின்னிலங்கும் ஆழிப் படைத்தடக்கை வீரனை' என்றபடி.

ஸ்ரீ ருக்மிணீபதே! ஸ்தம்பத்தில் அவதரித்துப் பிரஹ்லாதனை ரக்ஷித்தனை.

'ஆறாகி யிருதடங்கண் அஞ்சனவெம் புனல்சோர அளகஞ் சோர
வேறான துகில்தகைந்த கைசோர மெய்சோர வேறோர் சொல்லும்.
கூறாமற் கோவிந்தா கோவிந்தா வெனவரற்றிக் குளிர்ந்து நாவில்
ஊறாத வமிழ்தூற உடல்புளகித் துள்ளமெலாம் உருகினாளே' என்று,

திரௌபதி அன்று துரியோதனன் சபையில் தன்னை மானபங்கம் செய்தபோது பிரலாபிக்க,

'அருமறைசொல் லியநாமம் ஆயிரமு முரைத்தழைக்க அமரர் போற்றும்-, திருமலர்ச்செஞ் சேவடியோன் திருச்செவியில் இவள் மொழிசென் றிசைத்தகாலே-, மருமலர்மென் குழல்மாதின் மனநடுங்கா வகைமனத்தே வந்துதோன்றிக் கரியமுகி லனையானும் பிறரெவர்க்குந் தெரியாமற் கருணை செய்தான்'

'உடுத்ததுகில் உணர்வில்லான் உரிந்திடவும் மாளாமல் ஒன்றுக் கொன்றாங்-, கடுத்தநிறம் பற்பலபெற் றுயிரமா யிரங்கோடி யாடையாகக்-, கொடுத்தருள வுரிந்தனபட் டிருந்தபெருந் தனிக்கூடங் கொள்ளாதோடி-, எடுத்தனர் பற்பலவீரர் உரிந்தோனுஞ் சலித்திருகை யிளைத்து நின்றான்' என்றபடி

திரௌபதியைக் காத்து ரக்ஷிக்கவில்லையா. அம்பரீஷனைக் காப்பதற்குச் சக்கரத்தை ஏவினை; அர்ஜுனற்காக ஆயுதந்தொட்டனை; இப்பேர்ப் பட்ட நீ, என்னை ஏனோ உபேக்ஷித்தனை! என்னை இந்த பீம நதியைக் கடப்பித்து, எனக்கு உனதுஸேவை அருளாயேல், பிறவிக் கடலைக் கடப்பித்து உனது பக்தர்க்கு நித்ய ஸேவையருள்வை என்று, அவர்கள் உன்னை எங்ஙனம் விசுவசிப்பார்கள்?'' என்று பலவிதமான வார்த்தைகளாடிக்கொண்டிருந்தனர்.

அப்போது, பண்டரிநாதன், ஓர் ஓடக்காரன் என வேடந்தாங்கி, ஓடத்தைக் கொண்டுவந்து, கோமாபாயைக் கண்டு, "ஓ, அம்மணீ! நீ ஏன் இங்குத் தனியேயிருந்து சோகம் உறுகின்றனை? அக்கரைக்குப் போகவேண்டும் என்னும் அக்கரை உனக்கு இருக்குமேல், இவ்வோடத்தில் ஏறி என்னுடன் வரலாம்'' என்றனன். அதுகேட்ட கோமாபாய், அவ் வோடக்காரனை நோக்கி, "ஏ, தயாநிதி! நான் மிகவும் ஏழை; உனக்குக்கொடுக்க எனக்குப் பணம் இல்லை; என்னிடத்துள்ள மாவிற் கொஞ்சம் உனக்குத் தருகிறேன்; என்னை அக்கரையிற் சேர்த்துவிடு'' என்றனர். அதற்கு லக்ஷ்மீகாந்தன், புன்னகைபுரிந்து, "என்னைப் பெற்ற தாயே! நான் நிராசையாளன்; ஒருவர் தரும் பணத்தைப்



* பரிக்ரஹிப்பவன் அல்லன்; பண்டரிபுரத்தில் வாழ்ந்து, விட்டல
நாத ஸேவையை விரும்பிவரும் ஏழைகளை, அக்கரையுடன் அக்கரைக்
குக் கொண்டுபோய்விடுவது எனது வேலை; எனது ஓடத்தில் ஏறி,
எனது மனோரதத்தை நிறைவேற்றுகிறவர்கள் எனக்குப் பேருபகாரிகள்
ஆவார்கள்'' எனக் கூறினன். அதனைக்கேட்ட கோமாபாய், சந்தோஷ
மடைந்து, "ஓ, புண்ணியபுருஷ! இப்போது இரவு ஒரு ஜாமம் ஆயிற்று.
வெள்ளம் அதிகரித்திருக்கின்றது. நான் கட்டிக்கொண்டிருக்கும் இந்த
ஒரு புடைவையும் நனைந்துபோய்விட்டால் கிழவியாகிய நான், குளிர்
வேதனையை எங்ஙனம் சகிப்பேன்!'' என்று கூறக்கேட்ட அவ் வோடக்
காரனாகிய பகவான், "ஓ, அம்மணீ! நீ அஞ்சாதே; எனது தோள்மேல்
ஏறிக்கொள்; உனது காலில் ஒரு துளித் தண்ணீரும் படாமல் உன்னைச்
சுமந்துகொண்டுபோய், அக்கரையிற் சேர்ப்பேன்; என்னை உனது
மகனாக அபிமானித்துக் கொஞ்சமேனும் கூச்சப்படாமல், நீ, எனது
தோளில் உட்கார்ந்துகொள்'' எனக்கூறி, கோமாபாயைத் தனது
தோளில்சுமந்து, ஓடத்தைத் தள்ளிக்கொண்டு போய், அக்கரையில் ஈர
மில்லா மேட்டு நிலத்தில் விட்டு, "தாயே! உனது வஸ்திரம் நனையவில்லை
யல்லவா? நீசந்தோஷமாய் பண்டரிநாதனை ஸேவிக்கக்கடவாய்; என்னை
மட்டும் மறவாதே'' எனக் கூறினன். கோமாபாய் மிக மகிழ்ந்து, "தம்பீ!
ஸ்ரீமத் பண்டரிநாதனே உன் உருவந் தாங்கிவந்து, அநாதையாகிய
என்னை இக்கரையிற் சேர்த்தனன்; நீ நிராசையாளன் ஆயினும், எனது
வேண்டுகோளை முன்னிட்டு நான் தரும் இந்த மாவை ஏற்றுக்கொள்;
மஹாத்மாக்கள், தம்மை அடைக்கலம் புகுந்தோருடைய வேண்டுகோளை
† உல்லங்கனம் செய்யமாட்டார்கள்'' என்று விண்ணப்பித்தனர். அதற்கு
அப் புருஷோத்தமன், "தாயே! நாளைக்குத் துவாதசி ஆகையால், உன்
னிடத்துள்ள மாவை, ஓர் அதிதிக்குக் கொடு; அதனால் நான் மிகவும்
திருப்தியடைவேன்; இப்போது, உன்னை நதியைக்கடப்பித்தபடி, நான்,
என்னை நம்பினவர்களைப் பிறவிப் பெருங்கடலை நீந்தச்செய்வேன்.
பாகவத பாத தூளியை விரும்பியுள்ள எனக்கு, பாகவதமுதல்வியாகிய
நினது பாதஸ்பரிசம் கிடைத்தது. நான் மிகவும் ‡ தந்யனானேன்; நீ
என்னை மறவாதிருக்கிறபடி, நான் உன்னை மறவாதிருப்பேன்; என்னை
நீ எந்நேரமும் தியானிக்கிறபடி, நானும் உன்னை இடையறாமல் தியா
னித்துக்கொண்டிருப்பேன்'' எனக்கூறி, ஓடத்தோடு மறைந்தான்.

கோமாபாய், புண்டரீகவரதனுடைய § ஆஸ்ரித வாத்ஸல்யத்தைக் கொண்டாடி, கோபுரவாசலில் வந்தனம் செய்து, அன்றிரவு பகவத் தியானம் செய்துகொண்டு, ¶ ஜாகர விரதத்தை அநுஷ்டித்து, ‖ வைகறையில் சந்திரபாகையில் நீராடி, ஈரம் புலர்த்தி ஆடை உடுத்து, பொட்டிட்டு, பகவந்மந்திரத்தை ஜபித்து, ஸந்நிதிக்குள் நுழைந்து,

† உல்லங்கனம் - அசட்டை.
* பரிக்கிரஹித்தல் - ஏற்றுக்கொள்ளல்.
§ ஆச்ரிதவாத்ஸல்யம் - ஆசிரிதன் + வாத்
‡ தந்யன் - அதிஷ்டசாலி.
ஸல்யம் - அடியார் அல்லது தாஸரிடத்தில் உருக்கம்.
¶ ஜாகரவிரதம் -
தூங்கா விரதம்.
‖ வைகறை - விடியற்காலம்

புண்டரிகவரதனைத் தரிசித்து, சந்திரபாகைக் கரைக்கு வந்து, அதிதியை எதிர்நோக்கி யிருந்தனர். அவ்வூரில் பாகவதர் அநேகர், வேதியர்களுக்கும், * தீனர்களுக்கும் அவரவர் விரும்பியபடி அன்னமிட்டு மகிழ்வித்திருந்ததனால், கோமாபாயின் மாவை விரும்பி ஏற்க, ஒருவரும் வந்திலர். அப்போது கோமாபாய், "பண்டரிநாத! அவ்யக்தனாகிய நீ, அதிதியுருவந்தாங்கி, சேதனர் செய்யும் பூஜைகளை ஏற்றுக்கொண்டு அவர்களைக் காத்தருள்கின்றனை. இப்பேர்ப்பட்ட நீ, என்னை உபேக்ஷித்துவிட்டால், நான் என்செய்வேன்!" என்று வருந்தி யிருக்கையில், பண்டரிநாதன், ஒரு விருத்த வேதிய வேடந் தாங்கி, கோமாபாய் இடத்திற்கு வந்து, "தாயே! நான் மிகவும் வறியவன்; என்னை ஆதரிப்பார் இலர்; பசியால் மிகவும் வருந்துகின்றேன்; எனக்கோர் அப்பம் சுட்டுக்கொடுப்பையானால், பேரானந்தப்படுவேன்; பக்திபூர்வமாய் பலிசக்ரவர்த்தி கொடுத்த தானத்திற்கு ஸ்ரீ வாமனமூர்த்தி ஸந்தோஷித்தபடி, நான், நீ தரும் அப்பத்தைப் புசித்து, எத்தனையோ ஆனந்தம் அடைவேன்" எனக் கேட்டு, கோமாபாய் மகிழ்ந்து, காட்டெருமுட்டைகளைப் பொறுக்கிக் கொண்டுவந்து, சீக்கிரத்தில் ஓர் அப்பஞ்சுட்டுத் தந்தனர். பகவான், கோமாபாயைநோக்கி "தாயே! என்னை யார் இப்படி ஆதரிப்பார்கள்" எனக் கூறி, அந்த அப்பத்தை விரும்பி ஏற்று, குந்தியிருந்து உண்ணப்புகும்போது, ஸ்ரீ ருக்மிணிதேவி, ஒரு கிழவிச் சுமங்கலியாய் வந்து, "பிராணநாதா! நீர் என்னை ஒன்றியாய் விட்டுவந்து, இங்கே அப்பங்களைத் தின்றுகொண்டிருக்கின்றீர்! நான் இன்றி நீர்மாத்திரம் உண்பதற்கு உமக்கு அப்பங்கள் எப்படிருசித்தன" எனக் கூறினள். அதைக்கேட்ட பகவான், புன்னகை புரிந்து, கோமாபாயைநோக்கி, "அம்மணீ! இந்தச்சுமங்கலிக்கும் ஓர் அப்பம்சுட்டுக்கொடு; உனதுபாக்கியத்துக்கு அளவில்லை" என்றனன். அதற்குக் கோமாபாய் சந்தோஷித்து, தன்னுடைய கையில் மிகுந்திருந்த மாவை, ஓர் அப்பமாகச் சுட்டு ஸ்ரீ ருக்மிணிதேவிக்குத் தந்தனர். அவ்வுத்தம தம்பதிகள் இருவரும் அப்பங்களைப் புசித்துத் திருப்தி அடைந்து, கோமாபாயை நோக்கி, "உனது ஆராதனையால், நாங்கள் மிகவும் திருப்தி யடைந்தோம்" எனக்கூறி, அவ்வம்மையார் கொடுத்த துளசி ‡ தளங்களை § ஸ்வீகரித்து, பூர்வம், சபரிக்கு அநுக்ரஹித்தபடி கோமாபாய்க்கு அநுக்ரஹஞ் செய்து மறைந்தார்கள்.

ப்ரணதார்த்திஹராய நம:.

---

* தீனர்கள் - ஏழைகள். † அவ்யக்தன் - கண்ணுக்குத் தோன்றாதவன்.
‡ தளங்கள் - இதழ்கள். § ஸ்வீகரித்தல் - ஏற்றுக்கொள்ளல்.



## அறுபத்து ஏழாம் அத்தியாயம்

# லத்தீப் ஸாஹேப் சரித்திரம்

லத்தீப் ஸாஹேப் என்னும் துருக்கர், பரம பாகவதராய், பரம வைராக்ய சீலராய், * சமதமாதி நற்குண மிக்கவராய், அநவரதமும் ஸ்ரீ ஹரிநாம ஸ்மரணை செய்துகொண்டிருந்தனர். அவர், நாள்தோறும் வைகறையில் எழுந்து, ஸ்நானம் செய்து, பகவானை ஆராதித்து, அதிதிகளை பகவத் ஸ்வரூபர்களாகப் பாவித்து பக்திசெய்து, போஜனாதிகளால் அவர்களை மகிழ்வித்து, பிறகு பகவத் பாகவத சேஷமாகிய அன்னத்தை உண்டு, தமது சக்தியநுசாரம் தர்மகாரியங்களைச் செய்வாராயினர். இப்படிப்பட்ட நியமத்துடன் லத்தீப் ஸாஹேப் பகவத் கீர்த்தனம் செய்துகொண்டிருந்த இடத்திற்கு அநேகர் வந்திருந்து; ஶ்ரவணானந்தமாய்க் கேட்டுக்கொண்டிருந்தார்கள். துருக்கன் ஒருவன், அவருடைய அநுஷ்டானங்களைக் கண்டு, "இவன், குலத்தில் இழிந்தவனாய், அன்ய மதத்தை † அவலம்பித்தனன்" என்று அருவருப்படைந்து, அந்த தேசத்தை ஆண்டுகொண்டிருந்த ‡ பாச்சாவினிடத்திற்குப் போய், இந்த விருத்தாந்தத்தைக் கூறினான். அதைக் கேட்டவுடன், அம் மன்னன், கோபமடைந்து, தனது சேவகர்களில் சிலரை அழைத்து, "நீங்கள், லத்தீப் ஸாஹேப் வீட்டிற் பிரவேசித்து, அவனது உடைமை முழுமையும் கொள்ளை கொண்டு, அக்குல ஹீனனை என்னிடத்திற் பிடித்துவாருங்கள்" என்று கட்டளை யிட்டனன். அக் காவலாளர் தமது மன்னன் கட்டளையைச் சிரஸாவகித்து, லத்தீப் ஸாஹேப் ஸ்ரீராம பஜனம் செய்துகொண்டிருந்த இடத்திற்குச் சென்று, அவருடைய முகத்தைக் கண்டமாத்திரையில், பக்தி விரக்தர்களாய், அந்தக் கீர்த்தனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தனர். சென்ற § படர்கள் திரும்பி வாராமையினால், பாச்சா, மறுபடியும் சிலரை ஏவினான்; அவர்களும் அங்ஙனம் ஆனார்கள்; இப்படி எத்தனை தூதர்களை அனுப்பியும், அத்தனை தூதர்களும் அவரவர்க்கு முன் சென்றவர்களைப்போலவே, திரும்பி வாராராயினர். அதனால், பாச்சாவுக்குக் கோபம் அதிகரித்து, தானே புறப்பட்டு லத்தீப் ஸாஹேப் கிருகத்திற்கு வந்தான். அந்த பாகவத முதல்வர் பிருந்தாவனத்தருகில் உட்கார்ந்திருந்து பாகவதம் படித்துக்கொண்டு இருந்தனர்; அநேகர் அவரைச் சூழ இருந்து கேட்டுக்கொண்டிருந்தார்கள். அந்த வீடு முழுவதும் ¶ கோமயத்தால்சுத்தஞ்செய்யப்பட்டு கோலம்இடப்பட்டிருந்தது. சுவர்களில், ஸ்ரீ கிருஷ்ணலீலை நேத்ரானந்தமாக வரையப்பட்டிருந்தது. இவைகள் அந்த ஸ்தலம் பூலோக வைகுந்தம் என விளங்கியது.

---

* சமம்-சாந்தம்; தமம்-ஆசையின்மை. † அவலம்பித்தனன்-தழுவினன்.
‡ பாச்சா - துருக்கமன்னன். § படர்கள் - சேவகர்கள்.
¶ கோமயம் - பசுஞ்சாணம்.

அனைத்தையும் கண்டவுடனே, பாச்சாவுக்கு, நெருப்பில் நெய் விட்டதுபோல கோபம் அதிகரித்து, "இந்தத் துஷ்டன், எங்களுக்கு அவமானம் உண்டாக்கும்படி, எங்கள் குலத்திற் பிறந்தனன்; இந்தக் குலஹீனனுக்குக் கொடுந் தண்டனை விதிக்கவேண்டும்" என்று தனக் குள்ளே நிச்சயித்து, அங்கிருந்த சித்திர விசித்திரங்களைப் பார்த்துக் கொண்டே வருகையில், ஸ்ரீ ராதாதேவி தாம்பூல மடித்து ஸ்ரீ கிருஷ்ண னுக்குக் கொடுக்கிறபடி ஓரிடத்தில் எழுதியிருக்கக் கண்டான். அவன், அதன் விவரம் என்னவென லத்தீப் ஸாஹேப்பைக் கேட்ட பொழுது, அவர், "ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவுக்கு ஸ்ரீ ராதாதேவி தாம்பூலம் மடித்துக் கொடுக்கின்றனர்" என்றனர். அதைக் கேட்ட பாச்சா, "அப்படியானால், ஸ்ரீ கிருஷ்ணன், அந்தத் தாம்பூலத்தை ஏன் * அங்கீகரிக்கவில்லை" என்று கேட்டனன். "ஸ்வாமிக்கு இஷ்ட மானபோது, அதனை அங்கீகரிப்பார்" எனக் கூறி, லத்தீப் ஸாஹேப், அச் சித்திரவடிவப் பகவானுக்கு வந்தனம் தந்து, பின் வருகிறபடி துதிப்பாராயினர்;—"ஸ்வாமீ! வேதங்களுக்கு அகோசரமானவனே! ப்ரஹ்ம விஷயமாகிய விவேகத்தால் உண்டாகும் ஞானமும், சப்த ப்ரஹ்ம விஷயமாகிய ஆகமத்தால் உண்டாகும் ஞானமும் முறையே கூடிய பரமதி யென்றும், அபரமதி யென்றும் சொல்லப்படுகின்ற † இரண்டு வித்தைகளும் நீயே.

'பரஞ்சோதி நீபரமாய் நின்னிகழ்ந்து பின்மற்றோர்
பரஞ்சோதி யின்மையில் படியோவி நிகழ்கின்ற
பரஞ்சோதி நின்னுள்ளே படருலகம் படைத்தஎம்
பரஞ்சோதி கோவிந்தா பண்புரைக்க மாட்டேனே'

'வருந்தாத வருந்தலத்த மலர்கதிரின் சுடருடம்பாய்
வருந்தாத ஞானமாய் வரம்பின்றி முழுதியன்றாய்
வருங்காலம் நிகழ்காலம் கழிகால மாயுலகை
ஒருங்காக அளிப்பாய்சீ ரெங்குலக்க ஒருவனே'

'ஒருவா ரோத்தெல்லாம் எவ்வுலகத் தெவ்வெவையும்
சாருவாய் நின்புகழின் தகையல்லால் பிறிதில்லை
போதுவாழ் புனந்துழாய் முடியினாய் பூவின்மேல்
மாதுவாழ் மார்பினா யென்சொலியான் வாழ்த்துவனே' என்றபடி

உபநிஷத்துக்களிற் சொல்லப்பட்டவைகளாய், முறையே ரூப ஸஹித மும், ரூப ரஹிதமுமாகிய ப்ரஹ்ம த்வயங்களென்னும் ‡ ப்ரகிருதி புருஷர்கள் நின்று வடிவங்களா யிருக்கின்றனர்.

'ஆதி யாதி யாதி நீயோ ரண்ட மாதி யாதலால்
சோதி யாத சோதி நீஅ துண்மை யில்லி யாகினாய்
வேத மாகி வேள்வி யாகி விண்ணி னோடு மண்ணுமாய்
ஆதி யாகி யாய னாய மாய மென்ன மாயமே'

* அங்கீகரித்தல் - வாங்கி வாயிலிட்டு மென்று விழுங்குதல்.
† பரஞானம் - பிரஹ்ம ஞானம். அபரஞானம் - உலக ஞானம் - கலைஞானம். ‡ பிரகிருதி புருஷர்கள் - பிரகிருதி வசப்பட்ட புருஷர்கள்.



'விண்கடந்த சோதியாய் விளங்கு ஞான மூர்த்தியாய்
பண்கடந்த தேசமேவு பாவ நாச நாதனே
எண்கடந்த யோகினோடி ரந்து சென்று மாணியாய்
மண்கடந்த வண்ண நின்னை யார்ம திக்க வல்லரே' என்றபடியும்

'மண்ணுளாய்கொல் விண்ணுளாய்கொல் மண்ணுளே மயங்கிநின்று
எண்ணுமெண்ண கப்ப டாய்கொல் என்ன மாயை நின்தமர்
கண்ணுளாய்கொல் சேயைகொல் அனந்தன்மேல்கி டந்தவெம்
புண்ணியா புனத்துழாய லங்க லம்பு னிதனே' என்றபடியும்

ஸர்வ ஸூக்ஷ்மங்களுக்கும் ஸ்தூலங்களுக்கும் ஆத்மாவா யுள்ளவனே! ஸர்வ ஸ்வரூபமானவனே! ஸர்வஜ்ஞனே! ருக் யஜுஸ் ஸாமாதர்வணங்களும், சிக்ஷை கற்பம் நிருத்தம் சந்தம் ஜோதிஷம் வ்யாகரணம் என்னப்படும் வேதாங்கங்களும், இதிஹாஸ புராணங்களும், மீமாம்ஸை தர்க்கம் தர்ம சாஸ்திரங்களும் நீயே. அதோக்ஷஜா! ஆதிமூலப்பொருளே! ஜீவாத்ம பரமாத்மாக்களும், ஸ்தூல ஸூக்ஷ்ம சரீரங்களும், * அவ்யக்தமும் ஆகிய இவைகளைக் குறித்து விசாரிக்கின்ற வேதாந்தவாக்யம் உன்னிற் † பின்னமானதல்ல. இந்திரிய ‡ கோசரம் ஆகாததும், உபமான ரஹிதமானதும், எண்ணுக்கடங்காததும், தேவாதி நாமங்களும் $ சுக்லாதி வர்ணங்களும் கரசரணாதி அவயவங்களும் இல்லாததும், கிலேச கருமாதிகள் அற்றதும் ஆகிய முக்த ஸ்வரூபம் நீயே.

ஓ ஸ்வாமீ! நீ, காதின்றிக் கேட்கின்றனை; கண்ணின்றிக் காண் கின்றனை; கால்களின்றிக் கடுகி நடக்கின்றனை; கைகளின்றிப் பற்று கின்றனை; உருவமின்றிப் பல்லுருவங்களையும் நினது இஷ்டப்படி தரிக்கின்றனை; யாராலும் அளவிடுதற் கரியனாயிருந்தும் அனைத்தை யும் அறிகின்றனை; ஓ, பரமாத்மா! அணுவுக்கு அணுவாய், காண்பதற்கு அஸாத்தியமான ஸர்வ ரூபமுடைய நின்னைக் கண்டவற்கு, அஜ்ஞானம் நிவர்த்தியாகின்றது. இப்படிப்பட்ட உபாஸகனுடைய புத்தி, நினது உத்க்ருஷ்ட ரூபந்தவிர வேறொன்றையும் பற்றாது. நீயே, அனைத்துக் கும் ஆதாரபூதன்; நீயே ஸர்வலோக ரக்ஷகன்; சர்வ பூதங்களும் நின்னிடத்து அடங்கி யிருக்கின்றன. உண்டா யிருப்பனவும் உண் டாக இருப்பனவும் எவையோ, அணுவுக்கு அணுவாய் இருப்பது எதுவோ, ப்ரகிருதியைக்காட்டிலும் சிறந்த புருஷன் எவனோ, இவைகள் பலவும் நீ யொருவனே அன்றி வேறல்ல.

'நின்றி யங்கு மொன்றலாவு ருக்க டோறும் ஆவியாய்
ஒன்றி யுள்க லந்து நின்ற நின்ன தன்மை யின்னதென்று
என்றும் யார்க்கும் எண்ணி றந்த ஆதியாய்நின் உந்திவாய்
அன்று நான்மு கற்ப யந்த ஆதி தேவன் அல்லையே' என்று

ஒருவனா யிருந்தும் நான்கு விதங்களாய் உலகத்திற்குக் கீர்த்தியையும் ஐஸ்வர்யத்தையும் கொடுக்கின்றனனோ, அப்பேர்ப்பட்ட எவன் அக்னி பகவான் நீயே;

* அவ்யக்தம் - பரம்பொருள். † பின்னம் - வேறானது. ‡ கோசரம் - புலப்படுதல். $ சுக்லம் - வெண்மை.

'ஒருகுறளா யிருநிலமூ வடிமண்வேண்டி யுலகனைத்து மீரடியால் ஒடுக்கி ஒன்றுந்-,தருகவென மாவலியைச் சிறையில் வைத்த தாடாளன் தாளணைவீர் தக்க கீர்த்தி-, அருமறையின் திரள்நான்கும் வேள்வியைந் தும் அங்கங்க ளவையாறும் இசைகளேழும்-, தெருவில்மலி விழாவளமும் சிறக்குங்காழிச் சீராம விண்ணகரே சேர்மினீரே' என்று

ஸர்வ திக்குகளிலும் க்ஷேத்திரங்கள் பொருந்தி முடிவிலா வடிவுடைய பகவானே! நீ, திரிவிக்ரமாவதாரம் செய்து, மூன்று லோகங்களிலும் நினது திவ்ய சரணங்களை ஊன்றினை. அக்னி ஒன்றாயிருந்தும், தனது உருவம் மாறாமல் அநேக வஸ்துக்களில் நுழைந்து, அநேக உருவங்களாய்ப் பிரகாசிப்பதுபோல, நீ ஸர்வவியாபகமான ஒரே வடிவினனாயிருந்தும், பல வடிவங்களிற் பொருந்தியிருந்து, அவைகளை அன்புடன் வளர்க்கின்றனை. ப்ரக்ருதி ஸம்பந்தம் அற்று, உபமானரஹிதமாய், ஒன்றாய், ஞான விளக்கமாயுள்ள நினது உத்க்ருஷ்ட ஸ்வரூபத்தை ஞானிகளே காண்கிறார்கள். ஓ, பரமாத்மா! முக்காலத்திலும் உண்டாகும் பதார்த்தங்களில் நினக்கு அந்நியமானது எதுவும் இல்லை. காரண கார்ய ரூபங்களாய் ஸமஷ்டி என்று சொல்லப்படுகிற * அவ்யக்தமும், வ்யக்தமுமாகிய ஸ்வரூபமும் உடையவன் நீயே. ஸகல வியூகாதிகளுக்கும் காரணமாய், † ஸமஷ்டியென்று சொல்லப்படும் ஸ்ரீ வாசுதேவமூர்த்தியாய், காரியமாய், வியஷ்டிசென்று சொல்லப்படும் ஸங்கர்ஷணாநிருத்த ப்ரத்யும்ந மூர்த்தியாயிருக்கின்றனை. நீ அனைத்தும் உணர்ந்தவன்; ஒருவர்க்கும் அடங்காத ஸ்வதந்திரன்; அத்யந்த சூன்யனாய், ஸகலத்தையும் உன் வசப்படுத்திக்கொண்டிருக்கின்றனை. இன்னும் நீ, கோபம், ஆலஸ்யம், பயம், குரோதம், காமம் முதலிய துர்க்குணங்கள் இன்றி விளங்குகின்றனை. ஓ ஸ்வாமீ! நீ தோஷரஹிதனாய், உனது கிருபை தவிர மற்றொன்றால் பெறப்படாதவனாய், நித்யனாய், ‡ நிரங்குசமாகிய உற்சாகத்துடன் கூடியவனாய் இருக்கின்றனை. இன்னும், ஸகலேஸ்வரனாய், முக்யாதாரனாய், ஒளிகட் கொளியாய் இருக்கின்றனை.

'சூழ்ந்த கன்றாழ்ந் துயர்ந்த முடிவில் பெரும்பாழேயோ
சூழ்ந்த தனில் பெரிய பரநன் மலர்ச்சோதியோ
சூழ்ந்த தனில் பெரிய சுடர்ஞான வின்பமேயோ
சூழ்ந்த தனில்பெரியஎன் னவாவறச்சூழ்ந் தாயே' என்று,

பிரகிருதி முதலிய $ ஆவரணங்களாலும், கர்மங்களாலும் மூடப்பட்டவனே! வேறோர் உபாயம் இல்லாதவர்களால் பாவிக்கப்படத் தக்கவனே! த்ரிபாத் விபூதியில் எழுந்தருளியிருப்பவனே! ஸ்ரீ புருஷோத்தமனே! நினக்குத் தண்டன் சமர்ப்பிக்கின்றேன். ஸ்ரீயஃபதே! நீ அநேகவிதங்களிற் ¶ செய்யும் அவதாரங்கள் அனைத்தும், தர்ம

* அவ்யக்தம் - மறைபொருள்.
† ஸமஷ்டி - எல்லாம். வியஷ்டி - வேறுபாடு.
‡ நிரங்குசம் - நிர் + அங்குசம் - அடங்கப்படாதது ; தடுக்கப்படாதது.
$ ஆவரணம் - மூடி. ¶ செய்யும் - செய்த, செய்கிற, செய்யும்.



ஸம்ஸ்தாபனார்த்தம் உன்னிச்சையில் உண்டானவைகளேயன்றி, நரகானுபவம் செய்கிறவர்களுக்குப்போல துக்கானுபவத்திற்கல்ல; ஸ்வர்க்கத்திலிருப்பவர்களுக்குப்போல ஸுகானுபவத்திற்கும் அல்ல; பூமியிலிருப்பவர்களுக்குப்போல, ஸுகதுக்கானுபவங்களுக்கும் அல்ல; தர்மார்த்தங்களால் உண்டானவைகளும் அல்ல" என்பவைகளேயாம். மறுபடியும், அவர், பகவானை உத்தேசித்து, "நினது அவதாரங்கள், ஸாது * பரித்ராண, துஷ்க்ருத்ய விநாச, தர்ம ஸம்ஸ்தாபனங்களுக்காகச் செய்யப்பட்டன" என்று, நீயே, பகவத்கீதையில் சொல்லியிருக்கின்றனை அல்லவா? அப்படிப்பட்ட லீலைகளை, இந்தப் பாச்சா, பரிகாஸம் பண்ணுகின்றான். இவன், நினது பக்தனும் என்னையும், என்னால் செய்யப்படும் நினது விஷயமாகிய கீர்த்தனங்களைக் கேட்டு மகிழும் ஸாதுக்களையும் † பரிபவப்படுத்தத் தீர்மானித்திருக்கின்றான். எனக்காக நான் வருந்தவில்லை; ஸாதுக்களுக்காக வருந்துகின்றேன். இந்தச் சமயத்தில் நினது அதிமானுஷ ‡ சேஷ்டிதங்களைக் விளக்கியருளுக. கஜேந்திரனைக் காத்ததும், துருவற்கு ஸர்வோத்க்ருஷ்ட பதவியைத் தந்ததும், திரௌபதிக்கு வஸ்த்ர ப்ரதானம் பண்ணினதும், பிரஹலாதற்காக ஸபாஸ்தம்பத்தில் அவதரித்ததும் நிஜமானால், இப்போது, உனது அதிமானுஷ சேஷ்டிதத்தைக் காட்டியருளவேண்டும்; அங்ஙனம் செய்யாயேல், நினது திவ்ய சரித்திரங்கள் பொய்யென்று உலகத்தார் எல்லாரும் நாஸ்திகர் ஆவார்கள். நினது விஷயமாகிய நிந்தையைக் கேட்டு, நான் எங்ஙனம் சகிப்பேன்!" என்று விண்ணப்பித்தார். சித்ரரூபமாயிருந்த பண்டரிநாதன், பாச்சா முதலான அனைவரும் பார்த்துக்கொண்டு இருக்கையிலேயே, தனது வாயைத் திறந்து, ராதாதேவி மடித்துக் கொடுத்துக்கொண்டிருந்த தாம்பூலத்தை $ ஸ்வீகரித்தனன். ராதையின் கையிலிருந்த தாம்பூலம் மறைந்தது. அப்போது, அங்கிருந்த பாகவதர் அனைவரும் மெய்மறந்து, நிருத்தமாடிக்கொண்டு, ஸ்ரீ பண்டரிநாதனைப் புகழ்ந்து, "மஹானுபாவராகிய இந்த லத்தீப் ஸாஹேப், ஸ்ரீ பாண்டுரங்காவதாரம்" என்று கொண்டாடினார்கள். பாச்சா, மிகவும் ஆச்சரியமடைந்து, பாகவத முதல்வராகிய லத்தீப் ஸாஹேபுக்கு ஸாஷ்டாங்கவந்தனம் தந்து, "மஹாத்மா! நினது பிரபாவம் உணராமல் நான் அபசாரப்பட்டேன்; ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா உனக்கு அதிக ¶ விதேயனாயிருக்கின்றனன்; பாகவத சிரேஷ்டர்களாகிய கபீர்தாஸர் முதலியோருடைய பிரபாவங்களையும், அவரவர்களுக்கு பகவான் வசவர்த்தியாயிருந்த வைபவத்தையும், பகவான் அவதாரங்கள் செய்தனன் என்னும் கதைகளையும், கற்பனைகள் என்று பரிகாஸம் பண்ணிக்கொண்டிருந்தேன்; இப்போது உன் அநுக்ரஹத்தால், எல்லாம் உண்மைகள் என்று உணர்ந்தேன்; ஸ்ரீமத் பண்டரிநாதன் உனக்கு விதேயனாயிருக்கிறபடியால், அஸாத்யமானது

* பரித்ராணம் - காத்தல். † பரிபவப்படுத்தல் - அவமதித்தல்.
‡ சேஷ்டிதம் - செய்கை. $ ஸ்வீகரித்தனன் - ஏற்றுக்கொண்டனன்.
¶ விதேயன் - அடக்கமானவன்.

எதுவும் இல்லை. சித்ரரூபியாகிய ஸ்ரீ கிருஷ்ணன், ராதை தந்த தாம்பூலத்தை ஸ்வீகரித்தது விந்தையல்ல. நீ விரும்பினையானால், இங்கே எழுதப்பட்டுள்ள பகவத்பாகவத சித்ரரூபங்கள் எல்லாமும், மூர்த்தீகரிப்பன என்பதற்குச் சந்தேகம் இல்லை; பகவான் அவதாரத்தைப் போலவே, நினது அவதாரமும் * லோகோஜ்ஜீவனார்த்தம் செய்யப்பட்டதென்று தெரிந்துகொண்டேன். பிறவிக்கடலில் முழுகினவனாகிய எனக்கு, நினது † அபிமானம் என்னும் மரக்கலம் தந்து கரையேற்றுக. பாகவதாபிமானத்தால் மனிதர், பசுக்கள், பக்ஷிகள் முதலியவைகள் பரமபதம் அடைவன என்னும் ப்ரமாணம், என் விஷயத்தில் அநுபவஸித்தம் ஆகும்படி கிருபை செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்தான். அதற்கு லத்தீப் ஸாஹேப், "ஓ, அரச! உலகில், அரசர் பலர், அஜ்ஞானத்தால் அந்தகர்களாய்,

'ஊனமேயான ஊனிடை யிருக்கு முயிரினைத் துறந்து மொண்பூணும்
மானமே புரப்பதவனிமேலவர்க்கும் வரிசையுந் தோற்றமும் மரபும்
ஞானமே யான திருவடி யுடையாய் ஞாலமுள்ளளவு நிற்றலினால்
ஈனமே யுயிருக் கியற்கையாதலினால் என்றனன் வீமனுக் கிளையோன்'

என்று அர்ச்சுனன் பாரதத்திற் கூறியபடி ‡ ஹேயமாய், § தியாஜ்யமாயுள்ள சரீரத்தில் விசேஷாபிமானம் பூண்டவர்கள், அவர்கள், 'இந்த பூமி எமக்கெப்படி வசப்படும்; எமது புத்திரர்களுக்கு எப்படி வசப்படும்; எமது குலத்தார்க்கு எப்படி வசமாகும்! இதற்குத் தகுந்த உபாயம் செய்யவேண்டும்' என்னும் சிந்தனையோடு காலங் கழித்து மாண்டார்கள். இப்போதுள்ளவர்களும் அப்படியே இருக்கிறார்கள்; இதற்கு முந்தி யிருந்தவர்களும், அதற்கு முந்தி யிருந்தவர்களும் அப்படியே இருந்தார்கள்; இனி வருகிறவர்களும், அதற்கப்பால் வரப்போகின்றவர்களும் அப்படியே இருப்பார்கள். ஆகையால், பூதேவி, இவர்களைப் பார்த்து, 'புத்திமான்களாகிய இவர்களுக்கு ஏனோ, இப்படிப்பட்ட அஜ்ஞானம் உண்டாயிருக்கின்றது! நீர்க் குமிழிக்குச் சமமான சரீர ஸ்திதியை அவர்கள் சாஸ்வதமென்று நினைக்கின்றார்கள்; முதலில் தம்மை ஜயித்து, பிறகு கிரமமாய் மந்திரங்களையும், ஸேவகர்களையும், உலகத்தாரையும் ஜயித்து அதற்குப் பிறகு சத்துருக்களை ஜயிக்கவேண்டுமென்று நினைக்கிறார்கள். இங்ஙனம் சத்துருக்களை ஜயிப்பதனால் ஸமுத்ர ¶ பரிவேஷ்டிதமாகிய பூமி முழுவதையும் ஸ்வாதீனம் செய்துகொள்ளலாம் என்னும் பேராசையால், அங்ஙனம் முயல்கின்றார்களே அன்றி, மரணம் ஸமீபித்திருக்கின்றது என்று தெரியாமல் இருக்கின்றார்கள். சரி; அவர்கள் நினைக்கிறபடி ஸமுத்ர பரிவேஷ்டித பூமண்டலம் அவர்களுக்கு ஸ்வாதீனம் ஆனாலும், இதற்கு முதற்காரணமாகிய ஆத்ம ஜயத்திற்கு இது ஒரு பிரயோ

* லோக + உஜ்ஜீவன + அர்த்தம் - உலகத்தார் பிழைக்கும்படி.

† அபிமானம் - கிருபை, அருள். ‡ ஹேயம் - தாழ்ந்தது.

§ தியாஜ்யம் - அருவருத்துவிடத்தக்கது. ¶ பரிவேஷ்டிதம் - சூழ்ந்திருத்தல்.



ஜனம் ஆகுமா? ஆகாது. மோக்ஷமல்லவா, ஆத்ம ஜயத்திற்கு
பிரயோஜனமாகும். ஓஹோ! இங்ஙனம் எண்ணி முயன்ற பாட்டன்,
தகப்பன் முதலியோர் அனைவரும் தம்மோடு கொண்டுபோக முடியா
மல் விட்டுப்போன என்னை, அவர்களுடைய பிள்ளைகள் ஸ்வாதீனம்
செய்துகொள்ளவேண்டுமென்று எண்ணுகின்றார்கள் அல்லவா! இது
என்ன மூடஸ்வபாவம்! அகங்கார யுக்தர்களாகிய இவர்களுக்குள்
தந்தை மைந்தர்களுக்கும், அண்ணன் தம்பியர்களுக்கும், என்மே
லுள்ள மோஹத்தால் யுத்தம் நேரிடுகின்றதல்லவா! 'இந்தப் பூமி முழு
வதும் எம்முடையது; எமது வமிசத்தார்க்கு இது சாஸ்வதம்' என்
னும் ஈனமதி எல்லார்க்கும் தோன்றியே யிருக்கின்றது. இது ஆச்சரியம்.
இப்படிப்பட்ட மமதையை அடைந்து, என்னைத் தம்முடன் கொண்டு
போக முடியாமல் மரணமடைந்த ஒருவனைப் பார்த்தும், பிறகு
வருபவர்களுடைய சித்தத்தில் இப்படிப்பட்ட மமதை எங்ஙனம் உண்
டாகின்றது! இதைப் பார்க்கையில் எனக்கு மிகவும் நகை வருகின்றது.
மஹா பலவான்களும், மஹா வீரர்களும், அபரிமித ஐஸ்வர்யவான்களு
மாயிருந்த இக்ஷ்வாகு, ஜன்ஹு, மாந்தாதா, சகரன், ரகு, யயாதி,
நகுஷன் முதலியோர் தமது காலபலத்தால் ஒன்றும் இல்லாமல்
மரணமடைந்து, கதைகளிற் சொல்லப்படுபவர்களா யிருப்பதைக் கண்
டும், விவேகிகளில் எவன், தனது வீடு வாசல், மனைவி மக்கள், நில நீர்
களில் மமதை செலுத்துவான்? மஹா புஜ பலங்களோடு கூடி
அனேகம் ஆண்டுகள் அருந்தவம் புரிந்து, பெரும் பலன்களை அடைந்து,
யாகாதிகளைச் செய்து, மிகவும் கீர்த்திமான்களா யிருந்தவர்களும்,
தமது காலபலத்தால், * காலதர்மத்தை அடைந்து, கதைகளிலேயே
சொல்லப்படுபவர்கள் ஆனார்கள். பிருது சக்ரவர்த்தி, ஸமஸ்த சத்துருக்
களையும் ஜயித்து, ஸகல லோகங்களுக்கும் வருத்துப்போக்கா யிருந்
தவன் அல்லவா? அப்பேர்ப்பட்டவனும் நெருப்பிற்பட்ட பஞ்சு
போல கால சக்கரத்துக் குட்பட்டு, ஒரு நிமிஷத்தில் இறந்துபோனான்.
எவன் ஸமஸ்த சத்துருக்களையும் நாசமாக்கி ஸமஸ்த தீவுகளையும்
ஸ்வாதீனம் செய்து கொண்டு, கௌரவத்துடன் பூமியை ஆண்டானோ,
அப்படிப்பட்ட கார்த்தவீர்யார்ஜுனன், கதைகளிற் சொல்லப்படுகை
யில், 'இப்பேர்ப்பட்டவன், ஒருவன் இருந்தனனா?' என்னும் ஸந்தே
கத்துக்கல்லவா ஆஸ்பதமாகின்றது? ஸமஸ்த திக்குகளிலும் சிலாகிக்
கப்படும் ஐஸ்வரியமும், திக்கஜங்களையும் தோற்கடித்த கீர்த்தி ப்ரதா
பங்களும் பொருந்தி யிருந்த ராவணாதியர்களுடைய சரீரங்கள்
கொளுத்தப்பட்டுச் சேஷமான சாம்பலும், இல்லாமற் போயிற்
றல்லவா? சீ சீ! என்ன ஐஸ்வர்யம்! மாந்தாதா எனப் பெயர்
பெற்ற சக்ரவர்த்தியும், கதைக்கே இலக்கியமாய் இருப்பதைப் பார்த்து,
எந்த மதியிலியும் மமதை யடையான். இதனை அறிந்து, புத்திமானாகிய
மனிதன், தன்னிடத்துள்ள மமதையை விடவேண்டும். இங்ஙனம்
இருக்க, மக்கள், மனைவி, வீடு, வாசலாதிகளில் மமதை கூடாதென்று,

* காலதர்மம் - மரணம்.

வேறு கூறவேண்டியதில்லை. ஓ, அரச! நீ, நான் செய்த ஹிதோப தேசத்தை நினது மனதில் ஊன்றி, நினது ஆத்மபாரத்தைப் * பகவத தீனம் செய்து, † நிர்ப்பரனாய் இருந்தையானால், உனக்கு மோக்ஷம் ‡ கரதலாமலகமாக இருக்கும்" எனக் கூறினார். இங்ஙனம் லத்தீப் ஸாஹேப் செய்த ஹிதோபதேசத்தைக்கேட்டு, வைராக்ய சீலனாகிய பார்சா, அவருடைய அநுக்ரஹத்தைப் பெற்று, தனது அரண்மனைக் குச் சென்றான்.

ஸ்ரீ ராதாபதயே நம:.

## அறுபத்து எட்டாம் அத்தியாயம்

# ஸந்தோபா சரித்திரம்

ஸந்தோபா என்னும் பாகவதர் மிகவும் பணக்காரராய் இருந் தார். அரசன், அவர்க்கு கொஞ்சம் பூமி கொடுத்திருந்தான். அவர், பகவத் பக்தி உடையவராய் இருந்தார். ஒரு நாள், ஹரிபஜனம் நடந்த இடத்தில், துக்காராம் ஸ்வாமி பாடின கீர்த்தனங்களைக் கேட்ட அளவில் அவர்க்கு வைராக்யம் ஜனித்ததனால், தமக்குள் இங்ஙனம் சிந்திப்பா ராயினார்.

"எத்தனை நாள் உயிருடன் இருப்பினும்,
நெருந லுளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு' என்றபடி

மரணம் தப்பாது. போகங்கள், சாஸ்வதமானவைகள் அல்ல.

'நல்லாவை அளித்திடுவான் குன்றெடுத்துக் குடைபிடித்தோன் நளிநத்தாளே-, எல்லாவை போகமுஞ்சொல் இடம்பொருளே வனும் வைகா இருநீர் வைப்பில்-, கில்லாவை குந்தவிழி யார்வாழ்வு வைகுந்த நிலையென் றோர்ந்தோர்-, ஒல்லாவை யகத்தாசை யெனவெறுத்து மாய னடி உகப்பர் தாமே'

என்றதூஉம் இப்பெற்றி நோக்கியே என்க.

'எறியுங் கடலில் நுகத்துளையில் யாமைக் கழுத்துப் புகுவதுபோல்
பொறிவெம் பிறவி யநேகத்தால் புருடன் விவேகியெனப்பிறந்து'
என்றபடியும்,

'அரியது கேட்கின் திருநெடு மாலே
அரிதரிது மானிட ராத லரிது
அதனினு மரிது கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது

* பகவத் + அதீனம் - பகவானுக்கு அடக்கம். † நிர்ப்பரன் - மஹான்.
‡ கரதல + ஆமலகம் - உள்ளங்கை நெல்லிப்பழம்.



பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியும் நயத்த லரிது
ஞானமுங் கல்வியு நயந்த காலையும்
தானமுந் தவமும் தாஞ்செய லரிது
தானமுந் தவமும் தாஞ்செய்வா ராயின்
வானவர் நாடு வழிதிறந்திடுமே' என்றபடியும்

மனுஷ்ய சரீரம் மிகவும் * துர்லபமானது. இப்படிப்பட்ட சரீரத்தை அடைந்து காலத்தை வீணாய்க்கழித்தல் ஞாயம் அன்று.

சூரியன் உதித்தால் தொகையாய்ப் பணத்தைத் தேடலாம் என் றும், சூரியன் அஸ்தமித்தால் விஷயாநுபவம் மகிழ்ந்து செய்யலாம் என்றும் மனிதர்கள் சந்தோஷிப்பார்களே அன்றி, அந்த உதயாஸ்த மனத்தாலே, தமது வாணாள் கழியும் தன்மையை ஒருவரும் கொஞ்ச மேனும் எண்ணுவதில்லை. இதுபற்றியே,

'நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்' என்றும்
'தோற்றஞ்சால் ஞாயிறு நாழியா வைகலும்
கூற்ற மளந்துநுந் நாளுண்ணும்' என்றும்,

பெரியார் பணித்திருக்கின்றனர். மஹாநுபாவராகிய துக்காராம்ஸ்வாமி பாடின கீர்த்தனங்கள், எனது விரக்திக்கு வித்தாயின.

'நன்றாய் ஞானங் கடந்துபோய் நல்லிந் திரியமெல்லா மீர்த்து
ஒன்றாய்க் கிடந்த வரும்பெரும்பா ழுலப்பி லதனையுணர்ந் துணர்ந்து
சென்றாங் கின்பத் துன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்றால்
அன்றே யப்போ தேவீ டதுவேவீடு வீடாமே' என்றபடி,

இனி, நான், எனது பெண்டு பிள்ளை பண்ட பதார்த்தாதி † ஸர்வ ஸங்க பரித்யாகம் செய்து, ‡ விஜநஸ்தலத்தில் வசித்து, கந்தமூலா ஹாராதிகளை உட்கொண்டு, பகவத் தியானம் செய்துகொண்டு, ஸ்ரீ பாண்டுரங்கனுடைய பாத பத்மங்களிற் செலுத்திய மனமுடைய வனாய்க் காலத்தைக்கழிப்பேன்" என்பதேயாம். இங்ஙனம் நிச்சயித்த அவர், தம்மைச் சூழ்ந்திருந்த தாஸ ஜநங்களை நோக்கி, "நான் இதுவரை யில் யஜமானனென்றும், நீவிர் தாஸர்களென்றும் எண்ணியிருந்தனன். துக்காராம் ஸ்வாமியின் உபதேசத்தால் ஸர்வாத்மாக்களும் பகவத் தாஸர்களென்று தெரிந்துகொண்டேன். நான், இதுவரையில் உம் மிடத்தில் வேலைவாங்கிக்கொண்ட பிழையை க்ஷமித்து, நீவிர் உமதிஷ் டம்போற் போமின்", எனக்கூறி, தமது ஆஸ்தி முழுவதையும் $ தீன ஜனங்களுக்குத் தானஞ் செய்து, ஒரு கந்தை உடுத்துக் கூச்சத்தை

* துர்லபம் - அருமை.
† ஸர்வஸங்கபரித்யாகம் - முற்றத்துறத்தல். ‡ வி + ஜன + ஸ்தலம் - நிர்மானுஷ்ய ப்ரதேசம். தனியிடம்.
$ தீனஜனங்கள் - ஏழைகள்.

விட்டு, ஸ்ரீராமநாம ஸ்மரணம் செய்து கூத்தாடி, பீமாநதியோடு
வேறொரு நதி ஸங்கமஞ் செய்யும் ஸ்தலத்திற்குச் சென்று, அவ்விரு
நதிகட் கிடையிலுள்ள இடத்தில் வாசஞ்செய்து; ஆனந்த பரவசராய்
ஸ்ரீ புண்டரீகவரதனைத் தியானித்துக்கொண்டிருந்தனர்.

இதனைக் கண்டார், அனைவரும், ஸந்தோபாவின் வைராக்யாதி
களுக்கு மிகவும் ஆச்சரியமடைந்தார்கள். ஸந்தோபா, வீடு விட்டுக்
காடு நோக்கிச் செல்கையில், அவருடைய தாயார் குறுக்கேவந்து,
"நீ, காட்டுக்குப்போகவேண்டாம்" என்று எத்தனையோ வேண்டியும்
அவர் கேளாமற் போய்விட்டார். ஆகையால், அவ்வம்மையார், மிக
வருந்தி, எவ்விதத்திலாயினும் தமது மகனை வீட்டுக்கு வரவழைக்க
வேண்டும் என்று தீர்மானித்து, தமது மருமகளை அழைத்து, "நீ,
உனது புருஷனிடத்திற்குச் சென்று, அவனை எவ்விதத்திலாயினும்
வேண்டி, வீட்டுக்கு அழைத்துக்கொண்டுவா" என்று கூறி, ஒரு பல்லக்
கில் ஏற்றி அனுப்பினர். அம் மங்கை, தனது புருஷனிடத்திற்கு
வந்து, பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து நின்றுகொண்டிருக்கையில்,
ஸந்தோபா, தமது மனைவியாரைப் பார்த்து, "அடீ! நீ யேன் இங்கு
வந்தனை? வீட்டுக்குப்போ" எனக்கூறி மௌனமாய்ப் பகவத் தியானம்
செய்துகொண்டிருந்தனர். அம் மங்கையர்க்கரசியார், புத்திசாலி ஆகை
யால், கொஞ்சநேரம் சும்மா இருந்து,

'கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி' என்றபடி,
ஸமயம் அறிந்து, தமது கணவர்க்கு வந்தனம் செய்து, "ஏ, பிராண
நாதா!

'பெண்கள் தமது பிரியம்போல் வாழ
அருகரெங் நாளுமா கார்' என்னும்

வாக்யத்தைத் தேவரீர் உணராதவர் அல்லீர். பூவை விட்டு மணமும்,
சூரியனைவிட்டு ஒளியும் வேறாகாதவிதம்போல, நான் தேவரீர்க்கு
அநந்யையா யிருக்கின்றனன். இப்படிப்பட்ட என்னை வீட்டுக்குப்போ
என்று கூறல், தேவரீர்க்குத் தர்மம் அன்று. * முத்தம், ஜலத்தை
விட்டு ஜீவிக்காவாறுபோல, தேவரீரை விட்டு நான் பிழைத்திருக்க
மாட்டேன். கணவரைவிட்டு, அவருடைய நிழல் வேற்றிடத்தில் எங்
ஙனம் நிற்கும்?" என்று விண்ணப்பித்தார், அதைக்கேட்ட ஸந்தோபா
புன்னகைபுரிந்து, "ஓ, மாதே! துக்காராம் ஸ்வாமியின் உபதேசத்
தால், எனக்கு வைராக்யம் சித்தித்தது. உலகத்தார், தாபத்ரய துக்
கத்தை அனுபவித்துக்கொண்டிருந்தும், துக்கங்களிற் சுகப்ராந்திகொள்
கின்றார்கள். அந்தத் தாபத்ரயஸ்வபாவத்தைச் சொல்கின்றேன் கேள்:
ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் எனத் தாபம் மூன்று
விதங்களாம். அவைகளில் ஆத்யாத்மிகம் என்றால், ஒருவனுக்கு அவ
னுடைய ஆத்மாவையும் தேகத்தையும் அநுசரித்து நேரிடும் துக்கம்.
அது சரீரம் என்றும், மாநஸம் என்றும் இருவிதங்களாம். சரீர

* முத்தம் - இப்பி முத்துச்சிப்பி.



சம்பந்தமாகிய தாபம் பலவிதங்களா யிருக்கும். அவைகளில் சிலவற்
றைச் சொல்லுகிறேன்கேள். அவைகள் தலைநோய், பீனஸம், ஜ்வரம்,
குன்மம், இரத்தபேதி, சோபை, சுவாஸம், வாந்தி, கண்ணோய், அதி
ஸாரம், குஷ்டம், வாயுரோகம் இப்படிப் பலவிதங்களாயிருப்பனவாம்.
இனி மாநஸத்தைச் சொல்கின்றேன் கேள். அது காமம், குரோதம்
பயம், துவேஷம், உலோபம், மோகம், துக்கம், அஸூயை, அவமா
னம் முதலிய பல விதங்களாயிருக்கின்றது. ஆதிபௌதிகம் என்றால்,
ஜந்துக்களால் நேரிடுவதாம். அது * விலங்கு, பறவை, மனுஷர்,
பிசாசம், பாம்பு, அரக்கர் முதலியோர்களால் உண்டாவது. ஆகையால்
அதுவும் பலவிதங்களா யிருப்பதுவாம். ஆதி தைவிகமென்றால்,
தைவத்தால் உண்டாவதாம். அது குளிர், காற்று, புழுக்கம், மழை,
மின்னல், இடி முதலியவைகளால் நேரிடுவது. ஆகையால் அதுவும்,
பலவிதங்களாயிருக்கும். இந்தத் தாபங்கள் மூன்றும் கர்ப்பத்தாலும்,
ஜன்மத்தாலும், மரணத்தாலும், விருத்தாப்பியத்தாலும், நரகத்தாலும்,
உண்டாக்கப்பட்டு பல்லாயிர விதங்களா யிருக்கும். அவைகளை விவரிக்
கின்றேன் கேள். பிராணி, மிகவும் ஸூக்ஷ்ம சரீரம் உடையதாய், ஜல
மலப் பைகளோடு கூடின கர்ப்பத்தில், ஒருவிதமான தோலால் மூடப்
பட்டு, மிகவும் வளைந்த முதுகெலும்புங் கண்டத்தெலும்பும் பெற்று,
தாய் புசிக்கின்ற புளிப்பு, கசப்பு, காரம், உப்புமுதலிய சுவைகளின்
ஸாரம்தனது சரீரத்தின்மேல் ஊறுவதால் மிகவும் வேதனை அடைந்து,
அதனை அசைக்கச் சக்தியில்லாமல், மல மூத்ரங்களென்னும் சேற்றில்
வீழ்ந்துகிடந்து, துக்கத்தையே அநுபவித்துக்கொண்டு, சுவாஸம் விட
முடியாமல் ஞானத்தை மாத்திரம் அடைந்து, கடந்தபலஜன்மங்களையும்
எண்ணி, மஹா விசனமுற்றுக் கர்மத்திற் கட்டுப்பட்டிருக்கும். பிறகு
அது பிறக்கும்பொழுது, பிரஹ்மதேவனால் தூண்டப்பட்ட ஒருவித
வாயுவினால், எலும்புகள் முறிந்துபோவனபோல் பிடிக்கப்பட்டு, மல
மூத்ராதிகளும் சுக்லசோணிதங்களும் தோய்ந்த முகத்தோடு, மிகவும்
கடுமையும் வலிமையும் ஆகிய பிரஸூத வாயுவினால் தலைகீழாகத்
திருப்பப்பட்டு, அதிக வருத்தத்துடன், தாய்கர்ப்பத்திலிருந்துவெளியே
வரும். பிறந்த பிறகு, அதன் தேகத்தின்மேல் வெளிக்காற்று தாக்கின
மாத்திரத்தில், அது ஒரு பெரு மூர்ச்சையடைந்து, முந்தி யிருந்த
ஞானத்தை இழந்து, கர்ப்பத்திலிருந்து விழும்பொழுது முட்களால்
குத்தப்பெறுவதுபோலும், வாட்களால் அறுக்கப்பெறுவதுபோலும்
வாதனைகளை அடைந்து, புழுவைப்போல் பூமியில் விழும். பிறகு அது,
தானே சொறிந்துகொள்ளவும், புரளவும் சக்தி யின்றி, † ஸ்நாநாஹா
ராதிகளைப் பிறருடைய இச்சானுகுணமாய்ப் பெற்றுக்கொள்ளும்;
இன்னும் அது, தனது மல மூத்ராதிகளால் அசுத்தமான படுக்கையிற்
கிடந்து எறும்பு, கொசு, மூட்டை முதலிய ஜந்துக்கள் தன்னைக் கடிக்கும்
பொழுது, அவைகளை ஓட்டிக்கொள்ளச் சக்தியின்றி, அழுதுக்கொண்டி

* விலங்கு - மிருகம்.
† ஸ்நாநம் + ஆஹாரம் + ஆதிகள் - குளித்தல் புசித்தல் முதலியன.

ருக்கும். இங்ஙனம் அது, பிறவித்துன்பங்களையும், பிறகு நேரிடும் துன்பங்களையும், ஆதிபௌதிகத் துன்பங்களையும் * அத்யந்த சைசவாவஸ்தையில் அநுபவிக்கின்றது. பிறகு, அது வளர்ந்து யௌவனத்தை அடையும். அப்பொழுது, மனிதப்பிராணி, அஜ்ஞாநாந்தகாரத்தால் மூடப்பட்டிருக்கும். ஆகையால், மூடனாகிய அவன், "நான் யார்? எங்கிருந்து வந்தேன்? எங்கேபோகக்கூடியவன்? எனக்கென்ன பிரயோஜனம்? நான் எந்த பந்தத்தால் கட்டப்பட்டிருக்கின்றேன்? காரணம் என்ன? காரணம் ஆகாதது என்ன? செய்யத் தக்கது எது? தகாதது எது? சொல்லக்கூடியது எது? கூடாதது எது? எது தர்மம்? எது அதர்மம்? எங்கிருக்கின்றேன்? எப்படி யிருக்கின்றேன்? எது. குணத்தோடு கூடியது? எது குற்றத்தோடு கூடியது?" என்னும் இவைகளில் ஒன்றையேனும் உணராதவனா யிருக்கின்றான்; இங்ஙனம் அவன் விலங்குகளைப்போல மூடனாய், ஆஹார நித்ராதிகளையே முக்யமாகக் கொண்டு, அஜ்ஞானத்தால் உண்டாகக்கூடிய பல துக்கங்களையும் அநுபவிக்கின்றான். அஜ்ஞானம் தமோகுண விகாரமாய் இருக்கின்றது. அதனால் மனிதன் தீய காரியங்களைச் செய்யத் தூண்டப்படுகிறான்; அதனால் வைதிககர்மங்கள் தடையாகின்றன; கர்மலோபத்தால் நரகம் சித்திக்கின்றது. ஆகையால் அஜ்ஞானிக்கு இகபரங்களில் துக்கம் அதிகரிக்கின்றது. இப்படி யௌவனத்தைக் கடந்து மனிதன், மூப்புப் பருவத்தை அடையும்பொழுது சரீரம் இளைத்து, மூட்டு தளர்ந்து, பற்கள் ஆடி, மயிர் நரைத்து, நரம்புகள் வெளியே தோன்றி, கொஞ்சந்தூரத்திலுள்ளதையும் உணரமாட்டாமல் கருவிழி உள்ளுக்கிறங்கி, மூக்குத் துளையிலிருந்து அயிர்கள் விழுந்துகொண்டிருக்க, உடல் நடுங்கி, எலும்புகள் புறப்பட்டு, முதுகெலும்பு வளைந்து, † தீபனம் மந்தமாய்; ஆஹாரம் குறைந்து, ‡ வியாபாரம் கொஞ்சமாய், நடக்கவும் கிடக்கவும் விழவும் உண்ணவும் உறங்கவும் கஷ்டஸாத்யமாய், காதுகள் கேளாமல், கண்கள் தெரியாமல், வாயிலிருந்து நீர் ஒழுகத் தவித்துக் கொண்டிருப்பான்.

'உறிகள் போல் மெய்ந்ந ரம்பெ ழுந்து ஊன் தளர்ந் துள்ளமெள்கி
நெறியை நோக்கிக் கண்சு ழன்று நின்று நடுங்காமுன்
அறிதி யாகில் நெஞ்ச மன்பா யாயிர நாமஞ் சொல்லி
வெறிகொள் வண்டு பண்கள் பாடும் வதரிவ ணங்குதுமே'

'பீளை சோரக் கண்ணி டுங்கிப் பித்தெழ மூத்திருமி
தாள்கள் நோவத் தம்மில் முட்டித் தள்ளி நடவாமுன்
காளை யாகிக் கன்று மேய்த்துக் குன்றெடுத் தன்று நின்றான்
வாளை பாயும் தண்ட டஞ்சூழ் வதரி வணங்குதுமே' என்றபடி,

* அத்தியந்த + சைசவம் + அவஸ்த்தை - மிகவும் குருத்துக் குழந்தைப் பருவம்; சிசுவின் சம்பந்தம் சைசவம்.

† தீபனம் - பசி. ‡ வியாபாரம் - செய்தொழில்.



இங்ஙனம் ஸகலேந்திரியங்களும் தமது ஸ்வாதீனங்களாய் மரணம்சமீபித்திருக்கையில், மனிதன், தான் முன்பு அனுபவித்தவைகளை நினைத்துக் கொண்டு, மனஞ் சிதைந்து, ஒரு மொழி கூறவும் மிக வருந்தி, நெடுமூச்சுண்டாவதால் ஆயாஸமும் நித்ராபங்கமு முற்று, எழுந்திருக்கவும் இருக்கவும் பிறர் சகாயம் வேண்டி யிருப்பதால், வேலையாட்கள் மக்கள் மனைவி முதலியோரால் அவமான மடைந்து, சுத்தஞ் சிறிதுமின்றிப் புசிக்கவும் நடக்கவும் தனது மனத்தகத்தில் எப்போதும் அதி ஆசையுடையவனாய், பிறர் தன்னைப் பரிகாசஞ் செய்யவும் அருவருக்கவும் ஏசவும் ஆளாகி, அதனால் தனது யௌவனானுபவத்தைப் பூர்வ ஜன்மாநுபவம் போலச் சிந்தித்து, மனஸ்தாபத்துடன் பெருமூச்செறிந்து கிடப்பான். இங்ஙனம் மூப்பின் துயரங்களை அனுபவித்துக் கடைசியில் அவன் மரணமடைவான். அந்த மரணதசையில் அவனுக்கு நேரிடும் துக்கங்களைக் கேள்; கரசரண கண்டங்களின் மூட்டுகள் நெகிழ்ந்து மிகவும் நடுங்கி அவன் தனது ஸ்வாதீனம் தப்பிச் சிறிதுநேரம் அறிவையும் சிறிது நேரம் மயக்கத்தையும் பெற்று, 'இந்தப் பதார்த்தங்கள் எப்படி யாகுமோ?' என்று, மக்கள் மனைவி வீடு மாடு தனம் தான்யம் முதலியவைகளின்மேல் வைத்த * மமதையால் மிகவும் நைந்துருகுவான். பிறகு, வாள்களைப்போல மிகக் கடுமையாய் யமனைப்போலுள்ள மஹாவியாதிகளால் அவனுடைய பிராணம் வெளிப்படும்போது கண்கள் சுழன்று, கால்கள் சோர்ந்து, நாக்கும் உதடும் உலர்ந்து, மேல்சுவாசம் கிளம்பி வாதனை செய்ய, கண்ட ஸ்வரம் அடங்கி கொறு கொறு சத்தம் உண்டாகி, அது, அதிக தாபத்தையும் பசியையும் தாகத்தையும் பெற்று, யமகிங்கரர்களால் பிடிக்கப்பட்டு வெகு பிரயாசையோடு தேகத்தை விட்டு நீங்கும். உடனே அது, யாதனா சரீரத்தை அடையும். இப்போது கூறப்பட்ட துக்கங்களும் இன்னும் பலவிதத் துன்பங்களும் மரணகாலத்திற் சம்பவிக்கும். இறந்தபிறகு மாந்தர், நரகத்தில் அனுபவிக்கும் அவஸ்தையைக் கேள். யம கிங்கரர்கள், அவர்களை, முதலிற் பாசத்தால் இறுகப் பிணித்துப் பிடிப்பதும், பிறகு தண்டத்தாற் புடைப்பதும், உக்ரனாகிய யமன் பார்ப்பதும், கஷ்டமான மார்க்கத்தில் அவர்களை நடப்பிப்பதும், துக்கங்களை அனுபவிப்பதும், அதன் பிறகு சுடுமணல், அக்னிப்பொறி, கட்காதி ஆயுதம் இவைகளால் துயரப்படுத்துவதும் ஆகிய அந்த நரகவேதனைகள் மிகவும் குரூரமாய் இருக்கும். வாளால் அறுக்கப்பட்டும், † மூசையிற் போட்டுக் காய்ச்சப்பட்டும், கோடரியாற் பிளக்கப்பட்டும், பூமியிற் புதைக்கப்பட்டும், சூலத்திற் குத்தப்பட்டும், புலிவாயில் எறியப்பட்டும், கழுகுகளாற் பிடுங்கப்பட்டும், குரூர மிருகங்களாற் கடிக்கப்பட்டும், எண்ணெய்க் கொப்பரையிலிட்டுக் காய்ச்சப்பட்டும், லவணச் சேற்றிற் புரட்டப்பட்டும், ‡ உன்னத ப்ரதேசத்திலிருந்து தள்ளப்பட்டும், யந்திரங்களில் ஏற்றி வீசி யெறியப்பட்டும் இப்படி மாந்தர் நரகத்தில்

* மமதை - தனது என்னும் ஆசை. † மூசை - களிமட் குடுக்கை.

‡ உன்னதப்ரதேசம் - செங்குத்தான மலையிடம்.

அனுபவிக்கும் துக்கங்கள் எண்ணமுடியாது. துக்க * பரம்பரை, நரகத்தில் மாத்திரம் அல்ல; ஸ்வர்க்கத்திலும் உண்டு. எங்ஙனம் எனில்: மனிதன், ஸ்வர்க்கானுபவம் செய்கிற காலத்தில், † 'புண்ய க்ஷயமாகி இனி நாம் 'தள்ளப்படப் போகிறோம்' என்னும் எண்ணத்தால் பயம் உண்டாகித் துக்கப்படுகிறான். இங்ஙனம் அவன் நரகாதிகளை அனுபவித்து, மறுபடியும் கர்ப்பத்தில் பிரவேசித்துப் பிறக்கிறான். இப்படி அவன் மாறிமாறிப் பிறந்தும் இறந்தும், ஊசல் வடம்போல் ஊர் சகடம்போல் உழல்கின்றான். மறுபடியும் அவன், பிறந்தவுடனே ஆனாலும், வாலிபத்தில் ஆயினும், யௌவனத்திலாயினும், நடுவயதில் ஆயினும், கிழ வயதிலாயினும் மரணம் அடையச் சித்தமாயிருக்கின்றான். அவன், ஜீவிதத் துக்கங்களாற் ‡ பரிவேஷ்டிக்கப்பட்டு, பஞ்சு மூடிய $ பீஜங்களைப்போல் இருக்கின்றான். இன்னும் அவன், ¶ திரவியார்ஜனத்திலும், அதனைக் காப்பதிலும், அதனை அழிப்பதிலும், தனது இஷ்டர்களுக்குக் கஷ்டங்கள் வரும்போதும், அநேக துன்பங்களை அனுபவிக்கின்றான். எவ்வெப்பதார்த்தம் ஆன்மாக்களுக்குச் சுகரூபமாயிருக்கின்றதோ, அதுவே துக்கமென்னும் விருக்ஷத்திற்கு வித்தாயிருக்கின்றது. § களத்ர, புத்ர, மித்ர, தன, கிருக ஹேத்ராதிகளால் ஓர் ஆடவர்க்கு எத்தனை துக்கம் உண்டாகின்றதோ அத்தனை சுகம் உண்டாகாது. ஆகையால், கர்ப்ப ஜன்ம விருத்தாப்யாதிகளில் மாந்தர்களுக்கு உண்டாகும் தாபத்ரயத்திற்கு ஔஷதம் எதுவெனில், மற்றொரு சுகத்தில் அதிசயம் தோன்றாதிருக்கும் அத்தனை மஹா சுகரூபமாய், துக்க ஸம்பந்தஞ் சிறிதும் இல்லாததாய், நித்யமாய் விளங்கும் பகவத் பிராப்தியே ஆகும் என்பது எனது அபிப்ராயம். ஆகையால் புத்திமானாகிய மனிதனொருவன், ஹேயகுண ரஹிதனாய், ஸகல ஸத்குணவானாய், பகவானை அடைவதற்கு முயலவேண்டும். ஓ மாதே! துக்காராம் ஸ்வாமி கீர்த்தனைகளைக் கேட்டதனால், எனக்கிப்படிப்பட்ட || அத்யவஸாயம் உண்டாகியது. வஸ்த்ராபரணாதி செல்வங்களில் இச்சை வைத்த உனக்கும், காட்டில் வாழ்ந்து மாந்தர் கூட்டுறவை நீக்கி, கந்தை உடுத்து, கந்தமூலங்களாலும், அக்ஷய 'பாத்திரத்தாலும் பசியைப் போக்கி, பகவத்தியானம் செய்துகொண்டு காலங் கழிக்கும் எனக்கும் சகவாசம் எங்ஙனம் பொருந்தும்? ஆகையால், நீ, சீக்கிரமாக வீட்டுக்குச் சென்று, எனது தாயார்க்குப் பணிவிடை செய்துகொண்டிரு. என்னுடன் வாழவேண்டும் என்று கோருவையாயின், நீயும் வைராக்யசீலியாய் இருக்கவேண்டும்'' என்று கூறினார்.

இங்ஙனம் சந்தோபா கூறிய வார்த்தைகளைக் கேட்டமாத்திரையில் அவருடைய மனைவியார்க்கு பரம வைராக்யம் அங்குரித்தது. தம்மைப் பின்பற்றிவந்த மனிதர்களைப் பல்லக்குடன் வீட்டுக் கனுப்பிவிட்டு,

* பரம்பரை - ஒழுங்கு அல்லது வரிசை. † புண்ய + க்ஷயம் - புண்ய முடிவு. ‡ பரிவேஷ்டித்தல் - சூழ்தல். $ பீஜம் - வித்து. ¶ திரவியார்ஜனம் - பணந்தேடுதல். § களத்ரம் - மனைவி. || அத்யவஸாயம் - உறுதி அல்லது வைராக்யம்.



தாம் அணிந்திருந்த விலையில்லா நவமணிகளிழைத்த ஆபரணாதி
களைக் கழற்றி காட்டில் வீசியெறிந்து; ஒரு கந்தை உடுத்துத் தமது
கணவர்க்குப் பணிவிடை செய்து, அவரோடு ஸ்ரீராம பஜனம்
பண்ணிக்கொண்டிருந்தார். ஸந்தோபா பசிப்பிணியுற்று, தமது பத்தி
னியை நோக்கி, "என்னைப் பசிப்பிணி வருத்துகின்றது; ஸாவோ
மால்லி என்னும் சமீபக் கிராமத்தில் நமது சரீர பந்துக்கள் வாழ்கின்
றார்கள்; நீ கூச்சம் விட்டு அங்குச் சென்று, பிச்சை யெடுத்துக்
கொண்டுவா; அரை அப்பத்திற் கதிகமாக யாரேனும் தந்தால், பரிக்ர
ஹிக்கவேண்டா; நமது சுற்றத்தார், * எள்ள வார்த்தைகள் சொன்ன
லும் நீ மௌனமாயிருந்துவிடு'' என்று சொல்லி அனுப்பினார். அக்
கற்புக்கரசியார், தமது கணவர் நியமனத்தைச் சிரஸாவகித்து, அவ்
வூர்க்குச் சென்று ஒரு வீட்டுவாசலில் நின்று, "ஸ்ரீஹரி! கிருஷ்ணா!''
என்று கூவினார்; அதற்குள் அவ்வீட்டுக்குடையார் பிச்சையிட, அதனைப்
பெற்றுக்கொண்டார்; உடனே பிச்சை யிடாத வீட்டில் தாமதித்து
நிற்கவில்லை; வேறொரு வீட்டுக்குச் சென்றார். இங்ஙனம், நாள்
தோறும் செய்து வருகையில், இவ் வம்மையாருடைய கற்பு நிலைமைக்
கும் வைராக்யத்துக்கும் அவ் வூரார் மிக வியந்து, இவரைப் பின்
தொடர்ந்து செல்வாராயினர். இவ் வம்மையார், "ஸ்ரீ ஹரீ! கிருஷ்ணா!
கோவிந்தா! மாதவா! முகுந்தா! முராரீ! கைடபாரீ! ஜகந்நிவாஸா!
புருஷோத்தமா! நாராயணா! அச்சுதா! அனந்தா! புண்டரீகாக்ஷா!
புராணபுருஷா! எனப் பகவந் நாமங்களை உச்சரித்துக்கொண்டு வீதி
வழியாய்ப் போகையில், தமது மகள் வீட்டு வாசலில் நின்று, "ஸ்ரீஹரீ!
கிருஷ்ணா!'' எனக் கூவினார். ஸந்தோபாவின் மூத்த சகோதரி வீதிக்கு
வந்து, தனது தம்பியின் மனைவியைத் தழுவிக்கொண்டு கண்ணீர்விடுத்து,
"இது என்ன விந்தை! உனது போக பாக்கியங்களை விட்டு நீ இப்படிப்
பட்ட வைராக்யத்தைப் பெற்றது ஈஸ்வரனுக்குப் பொறுக்குமா! ஒரு
நாளாயினும் நடந்தறியாத நீ, கற்கள் செறிந்து கடினமாயுள்ள பூமியின்
மேல் எங்ஙனம் நடக்கக் கற்றனை? பர புருஷர்களைக் கண்டறியாத நீ,
கூச்சம்விட்டுக் கிராம வீதிகளில் எங்ஙனம் ஸஞ்சரிக்கின்றனை?'' என்று
அழுகையில், ஸந்தோபாவின் மனைவியார் மௌனமாயிருந்தார். அப்
போது, ஸந்தோபாவின் சகோதரி, தனது வீட்டுக்குட் சென்று, நெய்
சர்க்கரையோடு அப்பங்களைக் கொண்டு வந்து, இவ் வம்மையாருடைய
முன்றானையிற் † பெய்ய வந்தனள்; அப்போது இவ்வம்மையார், எனது
கணவர் கோபிப்பார்; இந்த பதார்த்தங்களை நான் அங்கீகரியேன்''
எனப் புகன்றனர். இவ் வம்மையார் எத்தனை சொல்லியுங் கேளாமல்
ஸந்தோபாவின் சகோதரி, தான் கொணர்ந்த பதார்த்தங்களைப் பலவந்த
மாக இவ்வம்மையாருடைய முன்றானையில் முடிந்துவிட்டுச் சென்றனள்.
இக் கற்புக்கரசியார், தமது கணவரிடத்திற்கு வந்து, தாம் கொணர்ந்த
பதார்த்தங்களை அவர் முன்னிலையில் வைத்து; நடந்த விருத்தாந்தங்களை
விண்ணப்பித்தார். ஸந்தோபா, தமது மனைவியார் கொணர்ந்த பிச்

* எள்ளனம் - பரிகாசம். † பெய்தல் - இடுதல்.

சையை அங்கீகரித்து, தமது சகோதரி அனுப்பின நெய் சர்க்கரையோடு கூடின அப்பங்களை மறுபடியும் அவளுக்கே திருப்பிக்கொடுத்துவிட்டு வரும்படித் தமது மனைவியார்க்கு நியமித்தனர். அதற்கு அம்மங்கையர்க்கரசியார் உடன்பட்டு, அங்ஙனமே செய்து திரும்பிவந்துகொண்டிருக்கையில், திடீரென மழை பொழிந்து நதியில் நிறை வெள்ளம் வந்தது. அப்போது இவ்வுத்தமி, "ஸ்ரீமத் பண்டரிநாதா! புண்டரீக வரதா! ஸ்ரீ ருக்மிணீபதே!" எனத் தியானித்து, "நான் எங்ஙனம் எனது நாயகர் ஸந்நிதியிற் செல்லுவேன்!" எனச் சிந்தித்திருக்கையில், பக்தவத்ஸலனாகிய பண்டரிநாதன், ஜலத்தில் நீந்துவோன் என வேடந்தாங்கி, இவ்வம்மையார்க்கெதிரில் நின்று, "ஓ, அம்மணீ! வருந்தாதே; நான் உனது சகோதரன்; உன்னை இப்போதே உனது கணவரிடத்திற் சேர்க்கின்றேன்; எனது தோள்மேல் உட்காரு" எனக்கூறி, அப்படியே அக்கற்புக்கரசியாரைச் சுமந்துகொண்டு நதியைக் கடந்து, அக்கரையில் விடுத்து, "தாயே! அதோ உனது கணவர் இருக்கின்றார்; அவரிடத்திற்குப் போ" எனப் புகன்று மறைந்தனன். அந்த மாதர்க்கரசியார் தமது கணவரிடத்திற்கு வந்து, நடந்த விருத்தாந்தங்களை விண்ணப்பித்தனர். அதனைக் கேட்ட ஸந்தோபா, பேரானந்தமடைந்து, "ஓ, * நங்காய்! நினது பாக்கியமே பாக்கியம்! பண்டரிநாதன் நினக்குத் தரிசனந் தந்தனன் அல்லவா!" எனக்கூறி, "ஸ்ரீ ருக்மிணீபதே! என்மீது உனக்கேனோ கிருபை இல்லை! என்னை ஏன் இங்ஙனம் சோதிக்கின்றனை! நீ எனக்குத் தரிசனம் தந்தருளுமளவும் நான் புசியேன்" எனக்கூறி, † பத்மாஸனமிட்டுக் குந்தியிருந்து பகவத்தியானம் பண்ணுவாராயினர். மறுநாள் ஒரு வர்த்தகனுடைய கனவில், பண்டரிநாதன் எழுந்தருளி, "ஏடா! நினது புண்யவசத்தால் நான் உனக்கு எனது தரிசனம் தந்தருளினேன்; நீ இப்போதே, திவ்ய பக்ஷணங்களுடன் அறுசுவையோடுகூடிய அன்னத்தைக் கொண்டு சென்று, எனது அந்தரங்க பக்தனாகிய ஸந்தோபாவுக்கு இடக்கடவாய்" என்று மறைந்தான். வர்த்தகன் விழித்தெழுந்து, கனவை நனவாக்கிச் சிந்தித்து, பரமானந்தபரிதனாய்ப் பகவந்நியமனானுஸாரம், திவ்யான்னத்தைக் கொண்டுசென்று, ஸந்தோபாவுக்கு வந்தனம் செய்து, பகவந்நியமனத்தைத் தெரிவித்து, அதனைப் புசிக்கவேண்டும் என வேண்டினன். ஸந்தோபா, அவ்வர்த்தகனை நோக்கி, "நினக்குத் தரிசனந்தந்த பண்டரிநாதன், எனக்கும் தரிசனம் தந்தானாகில் புசிப்பேன். இல்லையேல் நான் புசியேன்" எனக் கூறினார். அவ் வர்த்தகன், தான் கொணர்ந்த பதார்த்தங்களைத் திரும்பவும் தானே கொண்டுபோயினன். ஸந்தோபாவின் வைராக்யத்தைக் கண்ட பண்டரிநாதற்குக் கிருபை பிறந்து, ஸ்ரீ ருக்மிணீ ஸமேதராய், அவர்க்குத் தரிசனம் தந்தனன்! அப்போது, ஸந்தோபா, பகவானுக்குப் பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து, பின் வருகிறபடி துதிக்கலாயினர். "ஓ ஸ்வாமீ! நினது நிஜஸ்வரூபம்

* நங்கை - பெண்மணிகளிற் சிறந்தவள். † பத்மாஸனம் - தாமரைப் புஷ்பத்தைப்போன்ற வட்டவடிவாகக் கால்களை மடித்திருக்கை.



வாசாமகோசரமா யிருக்கின்றது. பூமியும், ஜலமும், நெருப்பும், வாயுவும், ஆகாசமும் நீயே; புத்தி முதலிய சதுர்விதாந்தக் கரணங்களும், ப்ரக்ருதியும், ப்ரக்ருதியைவிடச் சிரேஷ்டனாகிய புருஷனும் ஆகி விளங்குகின்றனை. அது எங்ஙனம் எனில், பிரஹ்மாதி முதல் துரும்பு வரையிலுமுள்ள உருவங்களும், அருவங்களும் நீயே; காலதேச பேதங்களோடு கூடியுள்ள இந்த பிரபஞ்சம் அடங்கிலும் நினது சரீரமாயிருக்கின்றது.

'ஊழிதோ றூழியோ வாது - வாழிய
வென்று யான் தொழவிசை யுங்கொல் -
யாவகை யுலகமும் யாவரு மில்லா
மேல்வரும் பெரும்பாழ் காலத்து - இரும்பொருட்
கெல்லா மரும்பெறல் தனிவித்து - ஒருதா
னாகித் தெய்வ நான்முகக் கொழுமுளை
யீன்று - முக்க ணீசனொடு தேவுபல நுதலி -
மூவுலகம் விளைத்த உந்தி
மாயக் கடவுள் மாமுதலடியே' என்று

நம்மாழ்வார் அருளியபடி ஆதியில் உனது நாபீகமலத்திலிருந்து, ஸ்ருஷ்டி நிமித்தம் உண்டாகிய உனது ப்ரஹ்ம ஸ்வரூபத்திற்கு தண்டம் சமர்ப்பிக்கின்றேன். இந்திரன், சூரியன், ருத்திரன், வசுக்கள், அஸ்வினிகள், * மருத்துக்கள், சந்திரன் என்னும் பேதங்களோடு கூடியிருக்கிற நினது தேவஸ்வரூபத்திற்குத் தண்டம் சமர்ப்பிக்கின்றேன்.

'ஆமையாய்க் கங்கையாய் ஆழ்கடலாய் அவனியாய் அருவரைகளாய், நான்முகனாய் நான்மறையாய் வேள்வியாய்த் தக்கணையாய்த் தானுமானான், சேமமுடை நாரதனார் சென்றுசென்று துதித்திறைஞ்சக் கிடந்தான் கோயில், பூமருவிப் புள்ளினங்கள் புள்ளரையன் புகழ்குழறும் புனல ரங்கமே' என்று,

பெரியாழ்வார் அருளியதும் இப்பெற்றி நோக்கியே என்ப. டம்பம் அதிகரித்து விவேகம் குறைந்து, பொறுமையும், மனோ நிக்ரகமும் இல்லாத நினது † அசுர ஸ்வரூபத்திற்கு வந்தனம் செய்கின்றேன். மிகவும் குரூரமாய், பயங்கரமாய், மாயாமயமாய், கருமையாய் விளங்கும் நினது ராக்ஷஸ ஸ்வரூபத்திற்கு வந்தனம் செய்கின்றேன். ஸ்வர்க்கத்தைச் சேரத்தகுந்த புண்யாத்மனுக்குப் புண்ய பலத்தை உண்டாக்கும் உனது தர்ம ஸ்வரூபத்திற்குத் தண்டம் சமர்ப்பிக்கின்றேன். சந்தோஷம் அதிகமாய், ‡ ஸங்க சூன்யமாய், எதினும் ஸஞ்சரிக்கும் சக்தியுடையதாய், விஸ்தாரத்தமாயுள்ள நினது ஸித்தஸ்வரூபத்திற்கு வந்தனம் செய்கின்றேன். அஸஹ்யாப்ரஸவ பூமியாய், குரூரமாய், உபபோக ஸமர்த்தமாய், இரண்டு நாக்குகளோடு கூடியுள்ள நினது நாகஸ்வரூபத்திற்கு வந்தனம் தருகின்றேன். பெரிய ஞானம் உள்ளதாய், சாந்தமாய், ராகத்

* மருத்துகள் - காற்றுகள். † அசுரர் - அரக்கர். ‡ ஸங்கம் - கூட்டம்.

வேஷாதி த்வேஷ ரஹிதமாகிய ருஷி ரூபமாயுள்ள நினது வ்யாபக ஸ்வரூபத்தை நமஸ்கரிக்கின்றேன். கற்பாந்தத்தில் எந்த ஸ்வரூபம் நிரங்குசமாய் ஸகல பூதங்களையும் உட்கொள்ளுகின்றதோ, அப்பேர்ப்பட்ட நினது கால ஸ்வரூபத்திற்கு வந்தனம் செய்கின்றேன். எந்த ஸ்வரூபம் கடைமுறையாய்த் தேவாதி ஸகல ஸ்வரூபத்தையும் உட்கொண்டு, சந்தோஷத்துடன் ஆனந்த நிருத்தம் செய்யுமோ அப்படிப்பட்ட உனது ருத்ர ஸ்வரூபத்திற்குப் பலமுறை வந்தனம் செய்கின்றேன். ரஜோகுணப் ப்ரவ்ருத்தியால் கர்மங்களைச்செய்யும் ஸ்வபாவமுடைய நினது நரஸ்வரூபத்தை மிகுந்த பக்தியுடன் நமஸ்க்ரிக்கின்றேன். இரட்டைக் குளம்புள்ளவை ஒன்பதும், ஒற்றைக் குளம்புள்ளவை ஆறும், பஞ்ச நகங்களுள்ளவை பதின்மூன்றும் ஆக இருபத்தெட்டு விதங்களாய், சாஸ்திரமார்க்கத்தை அதிக்ரமித்து நடக்கும் ஸ்வபாவத்தோடு கூடியிருக்கும் பசு ரூபமுடைய நினது தர்ம ஸ்வரூபத்தை பயபக்திகளோடு நமஸ்கரிக்கின்றேன். யாகங்கள் எல்லாவற்றிற்கும் அங்கமாய், லோகப்பிரயோஜனத்துக்கு ஸாதகமாய், * தரு, கொடி, மரம், செடி, புல், மலை என்னும் ஆறுவிதங்களாகிய நினது முக்ய ஸ்வரூபத்திற்கு நமஸ்காரம் பண்ணுகின்றேன். † தேவதிர்யங்மனுஷ்யாதிகளுக்கும், ஆகாச சப்தாதி ஸமஸ்தங்களுக்கும் பிரதம காரணமான நினது ஸர்வ ஸ்வரூபத்தை ஸேவிக்கின்றேன். பிரதானம், புத்தி. முதலாகிய ரூபங்களோடு கூடின எல்லாவற்றிற்கும் வேறாய், சிலாக்யமாய், ‡ அத்விதீயமாய், காரணமாகிய பிரதானத்திற்கும் காரணமாயுள்ள நினது புருஷ ஸ்வரூபத்தை நமஸ்கரிக்கின்றேன். வெண்மை முதலியவைகளும் § நெடுமை முதலியவைகளும், பருமை முதலியவைகளும் இன்றி, ¶ விசேஷண ரஹிதமாய், சுத்தமாகிய § பத்த ஸ்வரூபத்தைவிடச் சுத்தமாய், மஹா யோகியர்களுடைய ஞானத்திற்கு விஷயமாயுள்ள நினது முக்தபுருஷ ஸ்வரூபத்திற்கு வந்தனம் செய்கின்றேன். எது எனது சரீரத்திலும், பிற சரீரத்திலும் மற்றெல்லாவற்றிலும் நாசரஹிதமாய், யோக ரூபமாய் இருக்குமோ, எதைவிட வேறே பதார்த்தம் இன்னொன்று கிடையாதோ, அப்பேர்ப்பட்ட நினது பரப்ரஹ்ம ஸ்வரூபத்திற்கு ‖ பிரணமம் செய்கின்றேன். சேதனா சேதனாத்மகமாகிய இந்த ஸகல பிரபஞ்சமும் பரமபதத்தில் உள்ள ஸகலாத்மாக்களும் அவிகாரியாய், நித்யனாயுள்ள எவனுடைய ஸ்வரூபமாய் இருக்கின்றனவோ, அப்பேர்ப்பட்ட ஸகல நித்ய காரணனாய், ஸர்வ ஸ்வாமியாய், ஸர்வ சக்தனாயுள்ள ஸ்ரீவாஸுதேவனுடைய சரணடைகின்றேன்" என்பவைகளேயாம். இங்ஙனம் அவர் துதிக்

* தரு - தேவதாரம் முதலிய பெருமரங்கள். † தேவர் + திர்யக்கு + மனுஷ்யர் - தேவப்பிறப்பு முதலிய மூன்று. திர்யக்கு - குறுக்கு; மநுஷ்யனைப்போல நெடுக இன்றி குறுக்காகப் பூமியை நோக்கி நடப்பது - விலங்கு - மிருகம்.

‡ அ + த்விதீயம் - வேறாகாதது.

§ நெடுமை - உயரம், நீளம். ¶ விசேஷணம் - குணம்.

§ பத்தம் - கட்டுப்பட்டது. ‖ பிரணமம் - ப்ரணமம் - வணக்கம்.



கையில், பகவான் ஆனந்தமடைந்து, அவரைக் கிருபா திருஷ்டியாற் கடாக்ஷித்து, "நான், அனவரதமும் உன்னிடத்தில் வசிப்பேன்" என்று அநுக்ரஹம்செய்து மறைந்தனன். பிறகு, ஸந்தோபா, தமது மனைவியாருடன் வனத்தில் வசித்து, ஸ்ரீராம பஜனம் பண்ணினபடியே பிச்சையெடுத்துண்டு பிழைத்துச் சுகமாய்க் காலங் கழிப்பாராயினர்.

இப்படி யிருக்கையில், வேதியன் ஒருவன், தனது மனைவியுடன், நாடோறும் சச்சரவுசெய்து வாழ்வானாயினன். அங்ஙனம் சச்சரவு நேரிடும்போதெல்லாம் அவன், தனது மனைவியை நோக்கி, "அடீ! நீ எனது இஷ்டம்போல் நடவாயானால் சந்தோபாவைப்போல வைராக்கிய சீலனாய், ஸம்ஸாரத்தை விட்டு நீங்கி, காட்டுக்குப் போய்விடுவேன்" என்று சொல்வது வழக்கம். அம் மங்கை, தனது கணவன் வார்த்தைக்கு மிகவும் பயந்து, அவன் என்ன சொன்னாலும் அதற்கெல்லாம் உடன்பட்டிருந்தாள். அம் மாது விசன மிக்கவளாய் ஒரு நாள் தனது வீட்டு வாசலிற் பிச்சைக்காக வந்திருந்த ஸந்தோபாவை நோக்கி, அம் மஹானை வணங்கி, "ஓ ஸ்வாமீ! எனது கணவர் மிகவும் மூர்க்கராய், ஞாயம் இன்றி அற்ப விஷயங்களுக்கெல்லாம் நாடோறும் என்னோடு கலகமிட்டுக்கொண்டு, "நீ, எனது மனப்படி நடவாயானால் ஸந்தோபாவைப்போல நானும் வைராக்யசீலனாய் ஸம்ஸாரத்தை விட்டு வனஞ் செல்வேன்" என்று பயமுறுத்துகிறார். "தேவரீர், அவருக்கு ஹிதோபதேசஞ் செய்து, எனது குடும்பத்தைக் காத்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தனள். அதைக் கேட்ட சந்தோபா, சிரித்துக்கொண்டே அம் மாதை நோக்கி, "நீ சோகிக்கவேண்டா; இனிமேல், உனது கணவன் அங்ஙனம் சொன்னால், உனது பிரியம் போற் செய்யலாம் என்று சொல்" என்று போதித்துத் தமதிச்சைபின்படி சென்றார். அடுத்த நாள், அவளுடைய கணவன் எப்போதும் போலக் கலகமிட்டு, "பெண்ணே! நீ எனதிஷ்டம்போல் நடவாயானால், நான் வைராக்யசீலனாய் ஸந்தோபாவைப்போல வனஞ் செல்வேன்" என்று கூறினான். அப்போது அம் மாது, "ஓ எனதுயிர்க்காதல! நீர், ஞாயமின்றிக் கலகஞ் செய்கின்றீர். உமது இஷ்டம்போல் நடந்துகொள்ள என்னால் ஆகாது. ஆகையால், நீவிர் ஸந்தோபாவைப்போல வைராக்யசீலராய் வனம் போகவேண்டும் என்று தீர்மானித்திருப்பீராயின், அங்ஙனம் செய்யலாம்" எனக் கூறினாள். அதற்கு அவ் வேதியன், தனது மனத்தகத்தில் இவ்வாறு சிந்திக்கலாயினான். "நான் இத்தனை தினங்களாக, எனது மனைவியோடு ஞாயமில்லாக் கலகம் பண்ணிக்கொண்டு வாயாற் பயமுறுத்தி வந்தேன். இப்போது இவள், 'உனது இஷ்டம்போல் செய்' என்கிறாள். எனது வாயாலேயே நான் கெட்டேன். இனி நான் என் செய்யக்கடவேன்! காட்டுக்குச் சென்று ஒரு வேளைக்கானாலும் நான் எங்ஙனம் நிர்வகிப்பேன்! நான் இதுவரையிற் சொல்லிவந்தபடி. இப்போது செய்யேனாயின், எனது உற்றார் உறவினர் என்னைப்

பரிகாசஞ் செய்வார்கள்; இனி யாரும் என்னை மதியார்கள். மானங்கெட்ட பிழைப்பைவிட மரணம் மேலல்லவா! நான் இப்போது வனம் போவேன்; அப்பால் எனது தலையெழுத்தின்படி என்ன நேரிட்டாலும் அதை அநுபவிக்கக்கடவேன்" என்பதேயாம். இங்ஙனம் அவன் தனக்குள்ளே தீர்மானித்துக்கொண்டு, செம்பு ஒன்றையும் வஸ்திரங்களையுமாத்திரம் எடுத்துக்கொண்டு, ஸந்தோபாவிடத்திற்குச் சென்று, அவர்க்கு நமஸ்காரம் செய்து, "ஸ்வாமீ! நான், * நிஸ்ஸாரமாகிய ஸம்ஸாரத்தை நிக்ரஹித்து, தேவரீருடைய சகாயத்தைக்கோரி வந்தனன், என்னை அநுக்ரஹித்து ஆதரிக்கவேண்டும்" என வேண்டினான். அதற்கு ஸந்தோபா, புன்னகை புரிந்து, "ஓ ஐயா! உமது வைராக்யத்திற்கு ஸந்தோஷப்படுகிறேன். நீர் விரும்பியபடி என்னோடு வாழலாம்" எனக் கூறி, அவன் கையில் ஒரு சுரைக் குடுக்கைப் பாத்திரத்தைத் தந்து, "நீ நதிக்குச்சென்று ஸ்நாநம் செய்துவா; அங்கே சோரபயம் உண்டு ஆகையால், உனது செம்பையும் வஸ்திரங்களையும் இங்கேயே வைத்துவிட்டுப்போ" என்று கட்டளையிட்டார். அது கேட்ட வேதியன், தனது செம்பையும் வஸ்திரங்களையும் அங்கே வைத்துவிட்டு, நதிக்கரைக்குச் சென்று ஸ்நானஞ் செய்து, நித்யகர்மத்தை அநுஷ்டித்துக்கொண்டிருக்கையில், பசி அதிகமாயிற்று. ஆகையால் அவன், அதனைப் பொறுமல் வருந்திக்கொண்டிருந்தான். அப்போது ஸந்தோபா, அவனுடைய செம்பையும் வஸ்திரங்களையும் எடுத்துப் புதலில் வீசி எறிந்தார். வேதியன் திரும்பிவந்து, பசி குளிர் முதலியவைகளைப் பொறுனாகி, ஸந்தோபாவை நோக்கி, "என்னைப் பசி மிக வருத்துகின்றது" எனக்கூற, அவர், ஒரு † பேய் வெள்ளரிக்காயைக் கொடுத்து, "நீ இதனைத் தின்" என்றார். அவ் வேதியன், அதனை வாங்கிக்கொண்டு வாயில் வைக்கையில், அது எட்டிக்கசப்பாய் இருந்தது. அப்போது அவன் சோகமுற்று, "ஐயோ, நான் வீட்டிலேயே இருந்து, ஒன்றும் ஸம்பாதிக்காவிட்டாலும் எனது மனைவியைப் பயமுறுத்தி நாடோறும் மூன்றுவேளை அறுசுவையோடும் திருப்தியாய்ப் புசிப்பேன். இப்படிப்பட்ட சுகஜீவியாகிய எனக்கு, இன்று இப்பேர்ப்பட்ட கஷ்டம் எனது ‡ துர் அக்ங்காரத்தால் நேரிட்டது. இப்படிப்பட்ட கசப்பான பேய்வெள்ளரிக்காயை நான் எப்படித் தின்பேன்!" எனச் சிந்தித்து, ஸந்தோபாவை நோக்கி, "ஓ ஸ்வாமீ! இப் பேய் வெள்ளரி மிகவும் கசக்கின்றது. இதனை நான் எப்படித் தின்பேன்! இனி ஒரு கணநேரம் ஆகாரம் இல்லாமல் இருந்தால் எனது சரீரத்தில் பிராணம் நில்லாது; நான் என்ன செய்வேன்!" என்று கூறினான். அதற்கு ஸந்தோபா, புன்னகை புரிந்து, அவனை நோக்கி, "ஓ வேதிய! வைராக்யசீலனுக்கு, சுவை இன்னதென்று தெரியாது; உனக்கு அப்படிப்பட்ட வைராக்கியம் உண்டாகாதபோது, நீ ஏன்

* நி + ஸாரம் - ஸாரம் இல்லாதது.

† பேய் வெள்ளரிக்காய் - பேய்க்கரும்பு என்பதுபோலக் கசப்பு வெள்ளரிக்காய், ‡ துர் + அகங்காரம் - கர்வம்.



ஸம்ஸாரத்தைவிட்டு வனத்துக்கு வந்தனை?" என்று கேட்டார். அப்போது அவ்வேதியன், தனது சரித்திரம் முழுவதையும் ஆதியோடந்தமாய் அறிவித்துக் கண்ணீர் விடுத்து வருந்தினான். அதற்கு சந்தோபா நகைத்து, "நீ, வருந்தாதை! எப்போதும்போல வீடு சென்று, நினது மனைவியோடு சச்சரவு செய்யாமல் சுகமாய்க் குடித்தனம் செய்; இனி "ஸந்தோபாவைப்போல வைராக்யசீலனாய்க் காட்டுக்குப் போவேன்" என்று உனது மனைவியைப் பயமுறுத்தாமல், அம் மங்கையோடு கலகமின்றி ஒற்றுமையாய் வாழ்வது உண்மையானால், எனக்குச் சத்தியஞ் செய்துகொடு; நான் உன்னை என்னுடன் அழைத்துச்சென்று, உனக்கும் உனது மனைவிக்கும் சமாதானம் உண்டுபண்ணி, உன்னை உனது வீட்டில் விட்டு வருவேன்" என்று கூறினார். அதற்கு அவ்வேதியன் சம்மதித்து, "இனி நான் அங்ஙனம் கலகம் செய்யேன்" என்று ஸந்தோபாவின் பாதங்களைத்தொட்டுச் சத்தியஞ் செய்தான். சந்தோபா, அவ்வேதியனை அவன் வீட்டுக்குத் தம்முடன் அழைத்துக்கொண்டுபோய், அவனுடைய மனைவியிடத்தில் விட்டு, இருவர்க்கும் ஹிதோபதேசம் செய்து, தமதிருப்பிடம் சேர்ந்தார். அதுமுதல் அந்த தம்பதிகள் * அந்யோந்யாநுராக யுக்தர்களாய்ச் சுகமாய் வாழ்ந்தார்கள்.

பண்டரிபுரத்தில் ஆடிமாதச் சுக்லபக்ஷத் தேகாதசி உற்சவத்திற்காக பல்லாயிரம் பக்தர்கள் பகவத் கீர்த்தனமும் ஆனந்தத் தாண்டவமும் செய்துகொண்டே வந்தார்கள். அப்போது, பீம நதியும் வேறொரு நதியும் ஸந்தோபா வசித்த இடத்திற்குச் சமீபத்தில் ஒன்றோடொன்று கலந்திருந்தன. ஆகையால், அதற்கடுத்த கிராமமாகிய நரசிம்மபுரத் தருகில் பிரவாகம் அதிகமாயிருந்தது. † யாத்ரார்த்தம் வந்த பாகவதர்கள், "நாளைக்கு, ஆடிமாதச் சுக்லபக்ஷத் தேகாதசி. நதி வெள்ளம் அதிகரித்திருக்கின்றது; நதியைக் கடந்து நாம் பண்டரிபுரம் போக முடியாது; நாம் என் செய்யக்கடவோம்!" எனச் சோகமுற்றனர். ஸந்தோபா, அந்த பாகவதர்களை நோக்கி, "நீவிர், வருந்தன்மின், ஸ்ரீ பண்டரிநாதன் கிருபாகடாக்ஷத்தால், உம்மையெல்லாம் நான் அக்கரையிற் சேர்க்கின்றேன்; உமது மனோரதம் வீணாகாமல் நாளைக்குப் பண்டரிநாதனைத் தரிசிக்கலாம்; ‡ சங்கையின்றி என்னைப் பின்பற்றி வாருங்கள். உண்மை யன்பர்களை § பவார்ணவத்திலிருந்து கரையேற்றவல்ல ஸர்வேஶ்வரன், நம்மை இந்த நதியைக் கடக்கச் செய்யானா? ஸ்ரீ கிருஷ்ணாவதாரகாலத்தில் பகவான் ஜராஸந்தாதி துஷ்டர்களுடைய பயமின்றி நிஜபந்துக்களைக் காக்கு நிமித்தம், ஸ்ரீ துவாரகா நகரத்தை நிருமிக்க விஶ்வகர்மாவை ¶ நியோகித்து, "எனக்கு இடம் வேண்டும்; தொலையிற்போ" என ஸமுத்ரராஜற்குக் கட்டளையிட்டமாத்திரையில், அவன் அத்தேவாதிதேவனுடைய கட்டளையைச் சிரஸாவஹித்துத் தொலையிற் செல்லவில்லையா? வசுதேவர், ஸ்ரீ கிருஷ்ணனை

* அந்யோந்யம் + அநுராகம் - ஒற்றுமையும் ஆசையும்.

† யாத்ரா + அர்த்தம் - யாத்திரையைவிரும்பி. ‡ சங்கை - சந்தேகம்; பயம்.

§ பவ + அர்ணவம் - பிறவிக்கடல். ¶ நியோகித்து - ஏற்படுத்தி.

எடுத்துக்கொண்டு கோகுலாபுரிக்குப் போனபோது, பூர்ண பிரவாஹங்கொண்டிருந்த யமுனா நதி, அவ் வசுதேவர்க்குத் * தெரு வழங்கி, முழங்காலாழத்தில் இருக்கவில்லையா? அந்தப் பிரணதார்த்திஹரனே யல்லவா † ஆஸ்ரித சம்ரக்ஷணார்த்தம் பண்டரிபுரத்தில் எழுந்தருளி யிருக்கின்றனன்? நம்மை ரக்ஷிக்கும்பொருட்டு த்ரிபாத் விபூதியை விட்டு, இந்தக் கர்ம பூமிக்கு வந்தவனாகிய பகவான், தன்னிடத்தில் பொருந்திய ‡ ஆபிமுக்யத்துடன் தன்னைச் சேவிக்க வரும் நிஜபக்தர்களுக்கு ஸேவை யருளாமல் இருப்பானா? குழந்தை, மாந்தத்தால் அன்னங்கேட்கவில்லை என்று சோகிக்கும் தாய் தந்தையர், பசியால் வருந்தும் குழந்தைக்குச் சோறு கொடாமல் உபேக்ஷிப்பார்களா? நமது $ அத்யவஸாயம் களங்க ரஹிதமாய் இருக்குமானால், நந்த நந்தனன் நமது காரியத்தில் விருப்புள்ளவனா யிருப்பான்" என்று கூறி, ஆற்றில் இறங்கினார். பாகவதர்கள் அனைவரும் ஸந்தோபா வசனங்களை விஸ்வஸித்து, அவரைப் பின்பற்றிப் பீமநதியில் இறங்கினார்கள். அப்போது ஓடத்தாற் கடக்கவும் அஸாத்யமாய்ப் பூர்ணப் பிரவாஹமா யிருந்த பீமநதி, அவர்களுக்கு வழிவிட்டு முழங்காலாழமா யிருந்தது. பூர்வம் ஸ்ரீ ராமபத்திரனைப் பின்பற்றி ஸரயுநதியில் இறங்கின கோஸல வாஸிகளாகிய ஜனங்களைப்போல, பாகவதர்கள் அனைவரும் புண்டரீக வரதனைப் புகழ்ந்துகொண்டு, நதியிலிறங்கி நடந்த ஸந்தோபாவைப் பின்பற்றிக் ¶ கோலாஹலத்துடன் அக்கரைசேர்ந்து, அவர்க்குப் பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து, "ஓ மஹாத்மா! நீ ஸாக்ஷாத் பண்டரிநாதனுடைய அவதாரம்" என்று துதித்துச் சுகமாய் விட்டல நாதனுடைய ஸந்நிதிக்குப்போய்ச் சேர்ந்தார்கள். பிறகு வந்தவர்களுக்குப் பீமநதி பூர்ணப்பிரவாஹம் உடையதாய் இருந்தது. அவர்கள், தமக்கு முந்தி வந்த பாகவத + கோஷ்டியை ஸந்தோபா அழைத்துக்கொண்டுபோய் அக்கரை சேர்த்த விருத்தாந்தத்தை அங்கிருந்தவர்களாற் கேள்விபுற்று, பரம பாகவதகுல அலங்காரராகிய ஸந்தோபாவை ஸ்மரித்துப் புண்டரீகவரதனைத் துதித்துக்கொண்டே ஜலத்தில் இறங்கி, முன்னைய கோஷ்டியாளரைப்போலவே க்ஷேமமாய் அக்கரை சேர்ந்தார்கள். பிறகு வந்தவர்கள் அனைவரும் இம்முறையை × அவலம்பித்துப் பீமநதியைச் சுகமாய்க் கடந்து பண்டரிபுரம் சேர்ந்துகொண்டிருந்தார்கள். ஸ்ரீ விட்டலநாதன், ஸந்தோபாவுக்காகக் கூர்ம ரூபந்தாங்கிப் பீம நதியில் முழங்கால் ஆழத்துக்குள்ளே | ஸாந்நித்யம் செய்திருந்தனன். ஸந்தோபா இந்த இரகஸியம் தெரிந்து, ஸ்ரீ கூர்ம ரூபியாகிய பண்டரிநாதனைப் பலவிதங்களில் துதித்துக்கொண்டு தமது வாஸஸ்தானத்திற்குச் சென்றனர்.

ஸ்ரீ கூர்ம ரூபாய நம:

* தெரு - தெருவு - வழி. † ஆச்ரிதர் + ஸம்ரக்ஷணம் - அடியாரைக் காத்தல். ‡ ஆபிமுக்யம் - தரிசிக்கும் விருப்பம். $ அத்யவஸாயம் - உறுதி ¶ கோலாஹலம் - ஆரவாரம். + கோஷ்டி - கூட்டம்.
× அவலம்பித்தல் - அநுஸரித்தல். | ஸாந்நித்யம் செய்தல் - எழுந்தருளுதல்.



## அறுபத்து ஒன்பதாம் அத்தியாயம்

# நீளோபா சரித்திரம்

நீளோபா என்னும் பாகவத முதல்வர், சமதமாதி குணமுடையவ ராய், பரம வைராக்யசீலராய் விளங்கினார். ஒரு நாள் அவருடைய கனவில் துக்காராம் ஸ்வாமி பிரத்யக்ஷமாய், ஹிதோபதேசம் செய்து ஸ்ரீ தாரக மந்திரத்தை அநுக்ரஹித்து மறைந்தனர். அதுமுதல் நீளோபா அநவரதமும் ஸ்ரீ ஹரிகீர்த்தனம் செய்துகொண்டு அஹங்கார மமகாரங்களை,

'யானென தென்னுஞ் செருக் கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்' என்றபடி,

* ஸமூலமாய்க் களைந்தெறிந்து, ஸாதுக்களை ஆராதித்து, † தீனர்களைப் போஷித்து, ஸர்வத்தையும் பகவத் ஸ்வரூபமாகப் பாவித்து, ஸம்ஸாரத் தில் இருந்தும் எதிலும் அகப்படாமல் ஜனக சக்ரவர்த்தியைப்போலப் பரிசுத்த ஹ்ருதய முடையவராய்க் காலங் கழிப்பாராயினார். அவர், தமது மகளுக்கு விவாஹம் செய்யவேண்டும் என்று தீர்மானித்து முகூர்த்தம் நிச்சயஞ் செய்து பந்துக்கள் அனைவரையும் அழைத்தனர். அவர்களும் வந்து சேர்ந்தார்கள். அவர், தாம் மிகவும் தரித்திரர் ஆகை யால், விவாகத்திற்கு வேண்டிய பதார்த்தங்களைக் கொஞ்சமாய்ச் சேகரித்தனர். அவருடைய மனைவியார், அவரை நோக்கி, "பந்துக்கள் அநேகர் வந்திருக்கின்றனர்; இன்னும், விவாகத்தை முன்னிட்டு பலர் வருவார்கள்; நாங்கள் ஸேகரித்த பொருள்கள் மிகவும் கொஞ்சமாயிருக் கின்றன; அதனால் வந்தவர்களனைவரையும் எங்ஙனம் ஆதரிக்கக்கூடும். நமது பந்து ஜனங்கள் முதலியோர், 'விவாஹத்திற்காக அனைவரையும் வரவழைத்தார்களே ஒழிய அன்னம் இடவில்லை' எனப் பலவிதங்களில் நம்மைப் பழிப்பார்கள். இதற்கென்ன செய்யக்கடவோம்?" என்று கூறி வருந்துகையில், நீளோபா, அவ்வம்மையாரை நோக்கி, "ஓ, ‡ நங்காய்! நீ ஏன் வருந்துகின்றனை? ஸர்வாத்மாக்களும் ஈஸ்வர குடும்பமா யிருக்கின்றன. பெருங்குடும்பியாகிய பண்டரிநாதன், ஸர்வஜ்ஞனும், ஸர்வ சக்தியுடையவனுமாய் இருக்கின்றான். நமது ஆத்மபாரத்தை வஹித்திருக்கும் ஸ்ரீ பண்டரிநாதனே, ஸர்வத்தையும் நிர்வஹிக்கின்றான். சேதனன், $ அசித்வியாவிருத்தி வேஷமாகிய ஸ்வப்ரயத்னத்தோடு கூடியிருக்கின்றானே அன்றி, இவனுடைய யத்னம் கொஞ்சமேனும் காரியகரம் ஆகாது? த்ரவ்யாபேக்ஷையால், மிகவும் ப்ரயாசைப்பட்டுப் பல முயற்சி செய்கின்றவர்கள் நஷ்டம் அடைவ தையும், ஒரு முயற்சியும் செய்யாதவர்களுக்கு அவர்கள் எதிர்பாராத புதையல் கிடைப்பதையும், வைத்தியனை உபாஸித்து ஔஷதம்

* ஸமூலம் - வேரோடு; அடியோடு. † தீனர்கள் - ஏழைகள்.
‡ நங்கை - பெண்களிற் சிறந்தவள்.
$ அசித்வ்யாவிருத்திவேஷம் - அசித்தினின்றும் பிரிந்திருக்கிற வேஷம்.

பெற்றுக்கொள்பவனுக்கு வியாதி வளர்வதையும், சரீரத்தை வெறுத்து அபத்தியம் செய்பவனுக்கு ஆரோக்யம் உண்டாவதையும், இன்னும் இப்படிப்பட்ட பலவித விசித்திரங்களைக் கண்டும் கேட்டும் இருக்கின்றோம் அல்லவா? புருஷனுடைய தேகயாத்திரை கர்மாதீனமாயிருக்கின்றது. என்றால், கர்ம ஸாக்ஷியாகிய ஈஸ்வரன், சேதன கர்மானுகுணமாகப் பலன் அளிக்கின்றனன். ஆத்மயாத்திரை ஈஸ்வராதீனமாயிருக்கின்றது; கர்மாதீனமாகிய தேகயாத்திரையில், தனக்கு* அன்வயம் உண்டென்று நினைக்கிறவன் நாஸ்திகன் ஆவான். ஈஸ்வராதீனமாகிய ஆத்மயாத்திரையில் தனக்கு அன்வயம் உண்டென்று எண்ணுகிறவன், பகவத் திரவியமாகிய ஆத்மாவை அபகரித்தவனாகின்றான்.

‘ஆத்மாப ஹாரம் ஆற்றுந் திருடன்
பலபல பாபம் செய்தவனாமே’

என்றபடி ஆத்மாபஹாரம் செய்யும் திருடன், ஸமஸ்த பாபங்களையும் செய்தவனாகின்றான்? இந்த தர்ம சூக்ஷ்மமுணர்ந்து, ஆத்மாத்மீயங்களை பகவானுக்கு அர்ப்பணம் செய்து, நிர்ப்பரனாய், கரண † களேபரங்களை பகவத்விஷயத்தில் விநியோகித்துக்கொண்டு, ஜாக்கிரதை உடையவனாய் வாழ்பவனுக்கு, மோக்ஷம் கரதலாமலகமாய் இருக்கும். நமது காரியத்தில் நமக்கு அன்வயம் உண்டாயிருக்கும்வரையில், நம்மை, ஈஸ்வரன் உபேக்ஷிப்பான். நமது யத்னத்தை அடியோடு விட்டுச் ‡ சாதக நிஷ்டையை அடைந்தோமானால், அப்படிப்பட்ட நமது விஷயத்தில் ஸ்ரீ. பண்டரிநாதன் $ கபோத நிஷ்டையை அடைவான். சாதகப் பறவை, மேகஜலத்தையே தாரகமாய்ப் பெற்றிருப்பதுபோல, நாம் பகவத் கடாக்ஷமே தாரகம் என்று எண்ணியிருக்கவேண்டும். ¶ புறா, தன்னிடத்திற்கு வந்த வேடனைக் காப்பாற்றி, அவனுக்குத் தனது சரீரத்தைக் கொடுத்தபடி, பகவான் தன்னை || ஆச்ரயித்தவர்களைக்காப்பாற்றி, ஆஸ்ரித பரதந்த்ரனாயிருப்பான். பிரபந்ந நிஷ்டையிற் சாதகப் பறவை போலவும், பிரபத்தி நிஷ்டையிற் புறாவைப்போலவும் இருக்கக் கடவர்கள் என்பது நூல்களின் துணிபு. திரௌபதி, தன்னைப் பகவான் ரக்ஷிக்கவேண்டும் என்னும் அத்யவஸாயத்துடன் கோவிந்தனாகிய அந்த பகவானுடைய சரணடைந்தும், மஹாஸபையில் மானக்கேடு வருமென்று சந்தேகப்பட்டு, தனது கையால் வஸ்திரத்தைப் பற்றிக்கொண்டிருந்தவரையில் பகவான் அநுக்ரஹத்தைப் பெறவில்லை; அவள், கூச்சம் விட்டு வஸ்திரத்தைப்பற்றின கரத்தையும் விட்டபிறகு, பகவதநுக்ரஹத்தால் அக்ஷய வஸ்திரங்கள் உண்டாயின. ராவணன் முதல்நாள் சண்டையில், ராமரால்

* அன்வயம் - அதிகாரம். † களேபரம் - சரீரம். ‡ சாதகம் - மேகத்தைக் கண்டு களித்து மழைதாரைக்கெதிர்நோக்கியிருந்து அதனை அப்படியே ஆகாயத்தில் உண்ணும் பறவை. $ கபோதம் - புறா.

¶ புறாவொன்று, தனது கணவனைக் கொன்ற வேடனுக்குக் குளிர் நீங்கச் சுள்ளி பொறுக்கித் தந்து நெருப்புண்டாக்கி, அதில் தானும் வீழ்ந்து இறந்து அவ்வேடனுடைய பசியைத் தணித்து அவனைக் காத்தது.

|| ஆச்ரயித்தவர்கள் - தாஸர்கள்.



னன்றாய் * மர்த்திக்கப்பட்டு, தனது ஸைந்யத்தையும் தநுர்ப்பாண
ஸாதனங்களையும் இழந்தும், ஒடிந்த வில்லைத் துரபிமானத்தால்
தனது கரத்திற் பிடித்துக்கொண்டிருந்தவரையில், ராமர், அவன்மேல்
பாணப் பிரயோகம் செய்துகொண்டிருந்தனர். ஸ்ரீராமபாணத்திற்குச்
சலித்து ராவணன் தனது வில்லை விட்டபிறகு, ரணதர்மவேதியாகிய
ராமர், ‘ராவணா! நீ, எனது பாணங்கள் பாய்ந்தமையால் மிகவும்
இளைத்தனை; நிராயுதனாகிய உன்னை நான் ஒன்றுஞ் செய்யேன். நீ வீடு
சென்று உனது இளைப்பாறி, உடலில் வலியேறினபிறகு சண்டை
செய்ய நாளைக்கு வா என்று சொல்லி அனுப்பினார். ஆகையால்,
புருஷன், † லஜ்ஜா ப்ரயத்னங்களை விட்டுத் தனது ஆத்மபாரத்தை
பகவானுக்கு ‡ அர்ப்பணஞ் செய்கிறவரையில், இவனுடைய ரக்ஷ
ணத்தை பகவான் உபேக்ஷித்திருப்பான்; பகவதுபேக்ஷையால்
அப்படிப்பட்ட புருஷன் ஸ்வக்ருத; புண்ய பாப கர்மானுகுணமாக
ஸ்வர்க்க நரகங்களுக்குப் போவதும் மறுபடியும் கர்ப்பத்தில் பிரவேசித்
துப் பிறப்பதுமாக மாறிமாறி உழல்வான். காற்றின் வசப்பட்டு
ஆகாசத்தில் பறந்துகொண்டிருக்கும் ஒரு வஸ்துவின்மேல் ஒரு கல்
லெடுத்து வைத்தால், அது பறவாமல் நிற்கிறபடி, சேதனன் தனது
ஆத்மபாரத்தை பகவானுக்கு சமர்ப்பணம் பண்ணிப் பரதந்திரனாய்
இருப்பானானால், அந்த பகவத் பாரதந்த்ரியம் $ பாஷாணம், கர்ம
மென்னும் காற்றின் வசப்பட்டு, நிலையின்றி ஸஞ்சரித்துக்கொண்டிருக்
கிற ஆத்மாவுக்கு பகவச் சரணாரவிந்தங்களில் அசஞ்சல ஸ்திதியை
உண்டாக்கும்.

‘பரம புருஷனிடத்திற் ¶ பார
தந்திரிய முற்றவன் நிந்தையில் பகவத்
கடாக்ஷத் தாலே பந்த + விமுக்தனாய்ப்
பரம பதத்தை யடைந் தத்விதீயமாம்
ஸ்வாதந்த் ரியமுடன் சாற்றரும் பகவத்
ஆனந்த ஸாம்யம் அடைகுவனன்றே’

‘பரம புருஷனாகிய பகவானிடத்தில் பாரதந்த்ரியத்தைப் பொருந்தி
னவன், பகவத் கடாக்ஷத்தாலே பந்தம் நீங்கப்பெற்றவனாய், பரம
பதத்தை யடைந்து, × அத்விதீயமாகிய ஸ்வாதந்த்ரியத்துடன் பகவா
னுடைய ஆனந்த | ஸாம்யத்தை அடைவான். இப்படிப்பட்ட பாரதந்
திரியத்தோடு கூடியிருக்கிற சரணாகத நிஷ்டனுடைய தேகயாத்ரா
பாரத்தையும், ஆத்மயாத்ரா பாரத்தையும், பகவான் தானே வகித்
திருக்கின்றான் என்பதற்குச் சந்தேகம் இல்லை. உத்தவாமிசத்தால்
தேவுநகரத்தில் அவதரித்த துக்காராம் ஸ்வாமி எனது கனவில்

* மர்த்தித்தல் - அடித்தல். † லஜ்ஜை - கூச்சம்.
‡ அர்ப்பணம் செய்தல் - நிவேதித்தல்.
$ பாஷாணம் - கல். ¶ பாரதந்த்ரியம் - பராதீனம்.
\+ விமுக்தியம் - நீங்கினவன். × அத்விதீயம் - இரண்டற்றது.
| ஸாம்யம் - ஒப்புமை.

ஸாக்ஷாத்கரித்து, எனக்கு இந்தப் பரமார்த்தத்தை உபதேசித்தருளினர். ஓ, பெண்மணீ! நீ சோகந் தவிர்ந்து, பண்டரீ நாதனுடைய லீலைகளைப் பார்த்துக்கொண்டிரு;

'* கோபுரதாரியே குடும்பதாரி' என்றபடி,

கோபுரந்தாங்கியாகிய பொம்மைக்கு, கோபுரபாரந் தாங்குதலில் எத்தனை அதிகாரம் பொருந்தியிருக்கின்றதோ, அத்தனை அதிகாரமே தன்னைக் குடும்பந் தாங்கியென்று எண்ணியிருக்கின்றவனுக்கும், குடும்ப பாரந் தாங்குதலிற் பொருந்தி யிருக்கின்றது. கோபுரந் தாங்கியாகிய பொம்மை உடைந்து தரையில் விழுந்துவிட்டால், கோபுரத்திற்கு அபாயம் உண்டா? இல்லை; இல்லை. அதுபோல, 'நான் குடும்ப நிர்வாகி' யென்று அபிமானித்திருக்கிற ஒருவன் இறந்தானாயினும், அந்தக் குடும்பத்திற்குக் குறைச்சல் இல்லை. ஆகையால், பகவத் குடும்பமாகிய நாம் பெருங் குடும்பியாகிய ஈஶ்வரனுக்குப் பரதந்த்ரிகளாய், அவனை விடாமல் தியானித்துக்கொண்டிருத்தல் நமக்கு ஸ்வரூபமாய் இருக்கின்றது. இதற்கு வேறான நடக்கை, † வ்யபிசாரமாகும். அப்படிப்பட்ட வ்யபிசாரிகள் யமவசப்படுவார்கள். பெண்மணீ! நீயும் என்னைப்போல, துக்காராம் ஸ்வாமியிடத்தில் ஆசார்ய மர்யாதைசெய்து பகவானை நம்பியிருப்பையாயின், என்னைப் பின்பற்றி மறுபிறப்பற்ற மோக்ஷத்தை அடைவாய்" என்று கூறினர். கணவர் கூறிய இந்த உறுதி மொழிகளுக்கு ஆனந்தமடைந்த அவ் வம்மையார், புண்டரீக வரதனைத் தியானித்துக்கொண்டிருந்தனர்.

இங்ஙனம் இருக்க, ஸ்ரீபண்டரிநாதன், ஒரு வேதியவுருவந் தாங்கி, தனது வஸ்திரத்தின் முன்றானையில், அரிசி பருப்பு முதலிய பதார்த்தங்களிற் கொஞ்சம் கட்டிக் கொணர்ந்து, நீளோபாவைக் கண்டு, "நான், தரித்திரன், பசியால் வருந்துகின்றேன். எனது முன்றானையில் முடிந்து வந்த பதார்த்தங்களை நீர் வாங்கிக்கொண்டு, எனக்கு அன்னம் இடும்" என்றனன். அதற்கு நீளோபா, சிரித்து, "ஐயா, பிராமண முதல்வரே! கல்யாண வீட்டில் உமக்கு ஒருவர்க்கு அன்னம் இல்லாமற் போயிற்றா? நீர், ‡ யதேஷ்டமாய்ப் புசித்துச் செல்லலாம்; நீர் கொணர்ந்த பதார்த்தங்கள் எனக்குவேண்டா" என்று கூறினர். அதுகேட்ட வேதியன், "ஓ, ஸாதுஜன முதல்வ! நான், சோற்றுப் பிச்சைக்காரன். நீ எனது பசியைப் போக்குவாயானால் நான் திருப்தியடைவேன். எனது முன்றானையில் முடிந்துள்ள பொருள்களால் எனக்கென்ன பலன்? நீ இப்பொருள்களை அங்கீகரியாயானால் நான் உனது வீட்டிற் புசியேன்" என்றனன். அதற்கு நீளோபா, தமது மனைவியை அழைத்து, "இவ்வேதியர் கொணர்ந்த பொருள்களைப் பெற்றுக்கொண்டு, இவர்க்கு அறுசுவையோடுகூடிய அன்னம்படை" என்று கட்டளையிட்டனர். அதற்கு அவ்

* கோபுரதாரீ-கோபுரந்தாங்கி. கோபுரந்தாங்கியும் குடும்பந்தாங்கியும் சமம். கோபுரந்தாங்கும் பொம்மையும் குடும்பந்தாங்கும் மனிதனும் சமம்.

வியபிசாரம் - நல்வழியினின்று விலகுதல்.

‡ யதேஷ்டமாய் - (உமது) இஷ்டம்போல, மனங்கொண்டவரையில்



வேதியன் மகிழ்ந்து, தனது முன்றானையில் வைத்திருந்த வஸ்துக்களை நீளோபா மனைவியார் கையிற்கொடுத்து, "ஓ, அம்மணீ! விவாகத்திற்காக உனது கணவர் சேகரித்த பதார்த்தங்களோடு இப் பொருள்களைக் கலந்துவை" என்று கூறினன். அப்பெண்மணி அங்ஙனம் செய்து, அவ் வேதியற்கு அறுசுவையுண்டி பரிமாறி அவனுடைய பசியை ஆற்றித் திருப்தி செய்தாள். அவ் வேதியன், அன்றிரவு அங்கு வஸித்து, மறுநாள் உதயத்தில் நீளோபாவைக் கண்டு, "உனது வீட்டு விவாஹத்திற்கு என்னை ஸ்வயம்பாகியாக வைத்துக்கொள்; நான் எத்தனை பேர்க்கானாலும், அதி தீவிரமாய் அநேக * பக்ஷ்யங்களுடன் பாகம்பண்ணி வட்டிக்க வல்லேன். வேறொருவனுடைய ஸஹாயம் இல்லாமலே, கருத்துடன் ஸமஸ்த காரியங்களையும் நான் ஒருவனே நிர்வகிப்பேன். உங்களுக்கு ஒரு சிந்தையும் இல்லாமல் இருக்கும்படி, விவாஹபாரம் அனைத்தையும் நானே வஹிப்பேன்" எனக்கூற, அதைக்கேட்ட நீளோபா மகிழ்ந்து, அங்ஙனமே செய்யும்" என்று சம்மதித்தார். அவ் வேதியன், பல பக்ஷணங்களுடன் அறுசுவைகளோடு கூடிய அன்னத்தைச் சமைத்து, விவாஹத்திற்கு வந்தவர்களுக் கெல்லாம் வட்டித்துக்கொண்டும், மற்ற விவாஹ காரியங்களை தானே நிர்வஹித்துக்கொண்டும் இருந்தான். அவ் வீட்டிலிருந்த பதார்த்தங்கள் எத்தனை செலவுசெய்தபோதிலும் கொஞ்சமேனும் குறையாமல் முன்போலவே யிருந்தன. விவாஹம் முடியுமட்டும் நீளோபாவுக்கு எந்தக் காரியத்திற்கும் வேறொருவருடைய சகாயம் வேண்டாமலிருந்தது. இவ் வற்புதத்தைக் கண்டு, அவ்வேதியனை நோக்கி, நீளோபா, "நீயாவன்?" எனக் கேட்டார். அதற்கு அந்த வேதியன், "நான் தனியன், எனக்கென ஓர் இடம் இல்லை; என்னிடத்தில் அன்பு வைப்பவர்களுக்கு நான் அன்புள்ளவனாய் இருப்பேன்; அவர்களுக்கு ஊழியனாகவும் இருப்பேன்; என் பேர் ஸ்ரீகிருஷ்ண சாஸ்திரி. நீ என்னிடத்தில் அன்புவைத்தனை ஆகையால், நான் உன்னிடத்தில் அன்பு மிகுந்தவனாய், இவ்விடத்திற் காரியங்கள் அனைத்தையும் ஒருவனாகவே நிர்வஹித்தேன். என்னிடத்தில் † பத்தாநுராகனாயுள்ள உனது காரியங்களை, எனது காரியங்களாக பாவித்தேன்" எனக் கூறி, நீளோபாவை முன்னிட்டுக்கொண்டு விலையில்லா வஸ்த்ராதிகளால், கல்யாணத்திற்கு வந்திருந்த பந்துக்களை மகிழ்வித்து, சிறிது தூரம் அவர்களைப் பின்பற்றிச்சென்று, வழிவிட்டுத் திரும்பிவந்து நீளோபாவுடன் அவர் வீட்டில் நுழைந்தான். அப்போது நீளோபா, "இவ் வேதியன், கேவலம் மனுஷ்யனென்று நான் நம்பவில்லை; இவனுடைய முன்றானையில் முடிந்திருந்த வஸ்துக்களை வீட்டிலிருந்த வஸ்துக்களோடு சேர்த்தமாத்திரையில்; அவைகள் எத்தனைக்கெத்தனை செலவழிக்கப்பட்டிருந்தும், அத்தனைக் கத்தனை குறையாமல்

* பக்ஷ்யங்கள் - பண்ட பலகாரங்கள்.

† பத்தம் + அநுராகன் - அன்பு மிகுந்தவன்.

வளர்ந்துகொண்டே வந்தன. இவன், * அஹோராத்ரம் † விராமம் இன்றிக் கஷ்டப்பட்டதும், விவாஹகாரியங்கள் அனைத்தையும் தான் ஒருவனே நிர்வகித்ததும், இவனுடையசரீரத்திற் கொஞ்சமேனும் ஆயாஸம் இன்றி இருந்ததும், பந்துக்களுக்கு விலையில்லா வஸ்த்ராபரணங்களை வழங்கினதும் முதலாகிய இவனுடைய அருஞ் செயல்கள் ‡ அதிமானுஷங்களாய் இருக்கின்றன'' எனத் தமக்குள்ளே சிந்தித்து, "விவாஹ முடிவில் இம் மஹாநுபாவனுக்குப் புதுவேஷ்டி கொடுத்து மரியாதை செய்யவேண்டும்'' எனத் தீர்மானித்திருக்கையில், அவ் வேதிய வேட்தாரி மறைந்தனன். நீளோபா, எங்குத் தேடியும் அவனைக் காணுமல், இவை யனைத்தும் ஸ்ரீபண்டரி நாதனுடைய லீலையென நிச்சயித்து, பரமானந்தபரராய்,

"கேசவாய நமஸ்தேஸ்து நமோ நாராயணாயச
மாதவாய நமஸ்துப்யம் கோவிந்தாய நமோநம:
ஓம்நமோ விஷ்ணுவேதேவ மதுஸூதனதே நம:
த்ரிவிக்ரம நமஸ்துப்யம் நமஸ்தே வாமனாயச
ஸ்ரீதராய நமஸ்துப்யம் ஹ்ருஷீகேஶ நமோஸ்துதே
நமஸ்தே பத்மநாபாய நமௌ தாமோதராயச
மச்சகூர்ம வராஹாஹி $ ஹம்ஸாஶ்வ ஶிரஸேநம:
நமோஸ்து ஜாமதக்ன்யாய தத்தாய கபிலாயச
வேதவ்யாஸாய புத்தாய நரஸிம்ஹாய தேநம:
ராமலக்ஷ்மண ஶத்ருக்ந பரதாந்மந் நமோஸ்துதே
க்ருஷ்ணாய பலபத்ராய நமஸ்ஸாம்பாய ¶ கல்கிநே'' என்று

பலவிதங்களிற் பகவானைத் துதித்து, "ஸ்ரீ பண்டரிநாதா! எனக்காக நீ ஏன் பரிசாரக வேடம் பூண்டனை? நீ எனது ஸம்ஸாரபாரத்தை வகித்ததைக்காட்டிலும், என்னை ஸம்ஸார விமுக்தன் ஆக்கியிருந்தனையாயின், உனக்கு ஆத்மலாபமும் எனக்கு ஈஶ்வரலாபமும் சித்திக்கும்'' என்று விண்ணப்பித்து, ஆஹாராதிகள் ருசிக்காமல், அன்றிரவு நித்திரை செய்தார். அவருடைய கனவில், விட்டலநாதர் ஸாக்ஷாத்கரித்து, "ஓ, வத்ஸா! நீ சோகிக்கவேண்டா; அனவரதமும் நான் உன்னிடத்தில் வசிப்பேன்; ஸூர்யஸந்நிதியில் இருள் தலையெடுக்காதபடி, எனது ஸந்நிதியில் ஸம்ஸார § திமிரம் தலை யெடுக்காது, பயப்படாதே'' எனப் புகன்று மறைந்தனன். இப்போதும், பீமநகரத்தில், சுக்லபக்ஷத்தில், இவ் வற்புத + சரித்ரம், மஹோத்சவமாகக் கொண்டாடப்படுகின்றது.

ஸதாங்கதயே நம:

* அஹோராத்ரம் - இரவு பகல். † விராமம் - ஒழிவு. ‡ அதிமானுஷம் - தெய்வீகம். $ ஹம்ஸம், அச்வம் - அன்னமும் குதிரையும், ஹயக்ரீவன். ¶ கல்கி - குதிரை. § திமிரம் - இருள். + சரித்ரம் - கதை.



## எழுபதாம் அத்தியாயம்

# உத்தவ சித்குணர் சரித்திரம்

உத்தவசித்குணர் என்பவர் பரமபாகவதராய், பரமபக்தியுக்தராய், அநவரதானந்தபரராய்ப் பகவத்கீர்த்தனம் பண்ணிக்கொண்டு, தீர்த்தயாத்ராபரராய் * தேசாடனம் செய்வாராயினர்.

இவர், ஒருநாள், ஓர் ஊர்க்குப் போனபோது, அவ்வூரார், இவருடைய ஞான பக்தி வைராக்யாதிகளுக்கு வியந்து, இவர் செய்த பகவத் கீர்த்தனங்களைக் கர்ணாம்ருதமாய் அநுபவித்து, அவ்வூரிலேயே சிலகாலம் தங்கி யிருக்கும்படி, இவரை மிகவும் வேண்டிக்கொண்டார்கள். அப்போது அம் மஹான், அவர்களை நோக்கி, "ஓ, ஸாது ஜனங்காள்! இன்றைக்கு மூன்றும்நாள், ஸ்ரீராமஜயந்தி வருகின்றது; நான் அவ் வுற்சவத்திற்காக, துவாரகைக்குச் செல்ல விரும்பி யிருக்கின்றேன்'' என்று கூறினர். அதைக்கேட்ட அவர்கள் அனைவரும் அவரை வணங்கி, "ஓ, பாகவத முதல்வ! † ஸர்வகதனாகிய ஸர்வேஶ்வரனைக் குருடர் காணமாட்டார்கள். தேவரீரைப் போன்ற ஞான பரிபூர்ணர்களுக்கு, பகவான் எப்போதும் ஸாக்ஷாத்காரமாய் இருப்பான் அல்லவா! அதனால், குருடர்களாகிய எம்போலியர்கள் உஜ்ஜீவிப்பதற்காக, தாங்கள் இங்கே சிலகாலம் எழுந்தருளி இருந்து, எங்களுக்கு ஞானோபதேசம் செய்யவேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம். ஸ்ரீராமநவமி யுற்சவத்தை இங்கே விசேஷமாய்க் கொண்டாடலாம்'' என்று விண்ணப்பித்தார்கள். அவர்களுடைய பிரார்த்தனையை அங்கீகரித்து, அவர் அந்த ஊரில் தங்கினர். அவ் வூரில் வசித்த ஸாதுக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, ஒரு வசதியான இடத்தில், விசாலமான பந்தல் போட்டு, வாழைமரங்கள், தோரணங்கள், ‡ விதானங்கள், கொடிகள், கரும்புகள், பலவித புஷ்பங்கள் முதலியவைகளால் அலங்கரித்து, ஸ்தலசுத்தி செய்து, மாக்கோலங்களாலும், பஞ்சவர்ணங்களாலும் சிங்காரித்தார்கள். அப்போது உத்தவசித்குணர் சந்தோஷ சித்தராய், அந்தப் பந்தலின் நடுவில் ஸ்ரீராமபத்திரனைப் பிரதிஷ்டை செய்து, பலவிதங்களில் அலங்காரம் பண்ணி, உற்சவத்தை ஆரம்பித்தார். ஸ்ரீராமோற்சவ முடிவுவரையில், நாடோறும் வாத்தியகோஷங்களும், பக்தர்கள் பகவானைப் புகழும் கோஷங்களும், ஸமுத்ர கோஷத்தை மிஞ்சிஇருந்தன. ப்ராஹ்மணர்களும் தீனர்களும் யதேஷ்டமாய் அன்னபானாதிகளால் ஆராதிக்கப்பட்டு வந்தார்கள். அப்போது, அந்த தேசத்திற்குத் துருக்கன் ஒருவன் அதிகாரியா யிருந்தான்; ஆகையால், அவ்வூரில் துருக்கர்கள் அதிகமாய் வாஸஞ் செய்தார்கள். அவர்கள் அவ்விபவத்தைக் கண்டு, ¶ அஸூயை யடைந்து ஸகிக்காதவர்களாகி, இரண்டாயிரம்பேர் ஒன்றுகூடிவந்து உற்சவபண்ட

* தேசாடனம் - தேசசஞ்சாரம். † ஸர்வகதன் - எங்கும் உள்ளவன். ‡ விதானங்கள் - மேற்கட்டிகள். ¶ அஸூயை - அருவருப்பு.

பத்தின்மேல் கற்களையும், * சல்யம் முதலிய அசுத்த பதார்த்தங்களையும் பிரயோகித்து, அதோடு விடாமல் உள்ளேயும் நுழைந்து, அங்கிருந்த மங்களப்பொருள்க ளனைத்தையும் தரையின்பாற்படுத்தி, பந்தரைப் பிடுங்கியெறிந்து, ஸாதுக்களை வெருட்டித் தூரத்தியடித்தார்கள். அப்போது, உத்தவசித்குணர் விசனமிக்கவராய், † ஸாதுஜன ஸம்ரக்ஷண பிருதாங்கனாகிய பகவானைப் பின்வருகிறபடி துதித்தார்.—

"ஓ ஸ்வாமீ! ஸ்வபாவமாய், உத்க்ருஷ்டமாய், உபமான ரஹிதமாய் உள்ள அணிமாத்யஷ்ட குணங்களோடு கூடின ஐஸ்வர்யங்களையுடைய நின்னை, நான் எங்ஙனம் துதிப்பேன்! நீ, பிரகிருதியைவிட அதிகனான ஆத்ம ஸ்வரூபியாய், ஆத்மாக்களில் மேம்பட்டவனான முக்த ஸ்வரூபனாய் இருக்கின்றனை! இந்திரியாதிகளைக்காட்டிலும் அதிகமாகிய பிரதானம் நின்னிடத்திலிருந்து உண்டாகியது. இப்படிப்பட்ட பத்த முக்த பிரதானங்களைக் காட்டிலும் அதிகனென்று சொல்லப் படுபவன் நீயே ஆகையால், நின்னை நான் எங்ஙனம் துதிக்க வல்லவன் ஆவேன். எவனிடத்திலிருந்து ப்ரஹ்மா, ருத்ரன், இந்திரன், சந்திரன், ‡ மருத்துகள் அஸ்வினிகள், வசுக்கள், ஆதித்தர்கள் முதலியோர் உற்பத்தியானார்களோ, அப்படிப்பட்ட உன்னை, நான் எங்ஙனம் துதிப்பேன்! ஸ்வயேச்சையால் திவ்யசரீரத்தைப் பரிக்ரஹித்த எவனுடைய ஏகதேசாவயவத்தில் ஸூக்ஷ்மாம்சமாய் இந்த ஸகல லோகங்கள் இருக்கின்றனவோ, அப்பேர்ப்பட்ட உன்னை நான் எங்ஙனம் துதிப்பேன்! $ மூர்த்தமாய், அமூர்த்தமாயுள்ள ரூபத்தையுடைய எவனது பரமாத்ம ஸ்வரூபத்தைப் ப்ரஹ்மாதி தேவர்கள் அறியாமல் இருக்கின்றனரோ, அப்பேர்ப்பட்டவனை நான் எங்ஙனம் துதிப்பேன்! எவனைப் பத்மகர்ப்பாதி தேவதைகள், நந்தன வனம் முதலியவைகளில் உள்ள திவ்ய புஷ்பங்களினால் ஆராதிப்பார்களோ, அப்பேர்ப்பட்டவனை நான் எங்ஙனம் ஆராதிப்பேன்! யோகியர் அனைவரும் ஸகலேந்திரியங்களையும் விஷய ¶ விமுகங்களாக்கி, த்யான யோகங்களால் எவனை அர்ச்சிக்கின்றார்களோ அப்பேர்ப்பட்டவனை நான் எங்ஙனம் அர்ச்சிப்பேன்! ஸநகாதி பரமயோகியர், எவனுடைய ஸ்வரூபத்தைத் தியானித்தால், தமது ஹ்ருதயங்களில் நிருத்தி, அஹிம்ஸை முதலிய புஷ்பங்களால் அர்ச்சிக்கின்றார்களோ அப்படிப்பட்டவனை நான் எங்ஙனம் அர்ச்சிப்பேன்! ஓ தேவேஸ்வரா! அத்யல்பனாகிய நான், + ஸர்வோத்க்ருஷ்டனாகிய உன்னை அர்ச்சிப்பதற்கும், ஸேவிப்பதற்கும், ஸாமர்த்தியம் இல்லாதவனாய் இருக்கின்றனன். ஆயினும், நீ பூர்ண கிருபையால் என்னை அநுக்ரஹிக்கவேண்டும்" என்பதேயாம். இங்ஙனம் அவர் துதித்துக்கொண்டிருக்கையில்,

* சல்யம் - எலும்பு இரும்பு முதலியன. † ஸாது + ஜன் + பிருது + அங்கம் + ன் - ஸாதுக்களைக் காப்பதே நோக்கமாக வுடையவன்.

‡ மருத்துகள் - காற்றுகள். $ மூர்த்தம் - உருவம். ¶ விமுகம் - வெறுத்தல். + ஸர்வ உத்க்ருஷ்டன் - எல்லாவற்றினும் சிறந்தவன்.



ஸ்ரீராமபக்தமுதல்வராகிய ஆஞ்சனேயர் பாகவதாவமானத்தைச் சகி
யாமல், அந்தத் துருக்கர்களுடைய பள்ளிவாசல் அருகில் வந்து, தமது
வாலை வளர்த்தி நீட்டி, அந்த பள்ளிவாசற் கட்டடத்தைச் சுற்றி அதைக்
கீழே தள்ள முயன்றார். அப்போது, அவ்வூர்த் துருக்கர்கள் ஆயிரக்
கணக்காய்வந்து, அதிக விசாலமான அந்தப் பள்ளிவாசலிலே உட்கார்ந்
திருந்தார்கள்; அவர்களிற் பெருந்தலையாயிருந்தவன் அதிக புத்திசாலி.
ஆகையால், அவன் மாருதியின் ஊக்கம் உணர்ந்து, அவர்க்கு வந்தனம்
புரிந்து, "ஓ ஸ்வாமி! தேவரீர் இங்ஙனம் செய்யக் காரணம் யாது?"
எனக் கேட்டான். அதற்கு வாயுகுமாரர், "நிரபராதிகளாகிய
ஸ்ரீராமதாஸர்கள் விஷயத்தில், புத்தி பூர்வகமாய் அபராதம்செய்தவர்
களைச் சிக்ஷிக்கத் தீர்மானித்தேன்" என்று கூறினார். அது கேட்டு,
அந்தத் துருக்கன் பயந்து, உடனே பள்ளிவாசலுக்குள் பிரவேசித்து,
மாருதியின் தீர்மானத்தை அங்கிருந்தவர்கட்கு அறிவித்து நீவிர்
யாவரும் எங்காயினும் ஓடிப்போங்கள்" என்றனன். அதற்கு அவர்கள்,
"இவனுக்குப் பயித்தியம் பிடித்தது' என்று பரிகாஸம்பண்ணிச் சிரித்
துக்கொண்டிருந்தார்கள். இதற்குள், ஆஞ்சனேயர், தமது வாலாற்
சுற்றி, அப் பள்ளிவாசலை இழுத்து தரைமட்டம் ஆக்கினார்; அந்த பள்ளி
வாசல் அவர்கள்மேல் விழுந்தபடியால், அனைவரும் மடிந்தார்கள்.
இவ் விருத்தாந்தங்களைச் * சாரர்கள் வந்து தெரிவிக்கக்கேட்ட தேசாதி
பதியாகிய பாச்சா மிகவும் பயந்து, உத்தவசித்குணரிடத்திற்கு வந்து,
ஸாஷ்டாங்க வந்தனம் செய்து, "ஓ பாகவதோத்தமா! குற்றம்
அற்றவராகிய தேவரீர்க்கு அபராதம் செய்த துருக்கர் மடிந்தார்கள்.
அவர்கள், தேவரீர் விஷயத்தில் அபராதஞ் செய்ய எண்ணினதை அடி
யேன் அறியேன். அறிந்திருந்தேனாயின், இதங்கூறி அவர்களைத் தடுத்
திருப்பேன். ஆகையால், அடியேனை † அனுக்ரஹித்தருளவேண்டும்"
எனப் பிரார்த்தித்தான். அப்போது, உத்தவசித்குணர், அந்தத் துருக்
கப் பிரபுவை நோக்கி, "ஓ, வேந்த! பிரஜைகள் இயற்றும் பாவத்தில்
அரசனுக்குப் பங்கு உண்டு. ஆகையால், அரசன் அதி ஜாக்கிரதை
உடையவனாய், துஷ்டர்களைச் சிக்ஷித்தும், ஸாதுக்களை ரக்ஷித்தும்
வாழவேண்டும். 'ஸாதுக்களை ரக்ஷிக்கவும், துஷ்டர்களைச் சிக்ஷிக்கவும்,
தர்மத்தை ஸ்தாபிக்கவும், நான் யுகந்தோறும் அவதாரஞ் செய்கின்
றேன்' என்று பகவான் கூறினன் அல்லவா. ராஜ்யாதிபதி
விஷ்ணுவின் அம்சத்தை யுற்றவன். ஆகையால், நீ உனது ராஜ்
யத்தில் உள்ள துஷ்டர்களைச் சிக்ஷிக்காமல் உபேக்ஷை செய்திருப்
பையானால், அந்த தோஷம் உன்னை அடையும். மனிதன்,
தான்செய்த புண்ணிய பாவங்களை சுவர்க்க நரகங்களில் அனுபவித்து,
கர்மசேஷத்தால் பூமியிற் பிறந்து, பூர்வ கர்மாநுகுணமாய்ப் பலனை
அநுபவிக்கின்றான். அந்தக் கர்ம ‡ பரிபாகத்தைப் பின் வருகிறபடி
விவரிக்கின்றேன் கேள்: "ஸ்வாமி திரவியத்தை அபகரித்தவன், எலி

* சாரர் - தூதர், வேவுகாரர், ஒற்றர். † அநுக்ரஹித்தல் - இரங்குதல்.

‡ பரிபாகம் - அநுபவம்.

யாய், பன்றியாய், பிறகு நாயாய்ப் பிறப்பான். பரதார கமனம் செய்த
வன் * சவ்முண்ணும் நரியாய், பருந்து முதலியபக்ஷிகளாய்ப் பிறந்து,
பிறகு புழுவாய்ப் பிறப்பான். தனது மகளை ஒருவற்குத் தருகின்றேன்
என வாக்களித்து அங்ஙனஞ் செய்யாமல் மற்றொருவனுக்குக் கொடுத்
தவன் † கிருமியாய்ப் பிறப்பான். பிதுர் காரியத்தைச் செய்யாமல்
புசித்தவன் காகமாய்ப் பிறப்பான். அண்ணனை வைதவன் கிரௌஞ்ச
பக்ஷியாய்ப் பிறப்பான். வேதியர் மாதை விரும்பி அடைந்த சூத்திரன்,
நரகக்குழியில் புழுவாய் இருப்பான். பணத்தாசையால் நிராயுதனைக்
கொன்றவன், கழுதை முதலிய பல விலங்குகளின் பிறவிகளை அடைந்து
அப்போதைக் கப்போது ‡ சஸ்திரங்களால் மரணதசையை அடை
வான். அன்னம், தயிர், பால், நெய், தின்பண்டங்கள் முதலிய பதார்த்
தங்களைத் திருடிக்கொண்டவன் ஈயாய்ப் பிறப்பான். இரும்பைத் திரு
டினவன் $ வாயஸமாய்ப் பிறப்பான். வெள்ளியைத் திருடினவன்
குருவியாய்ப் பிறப்பான். பொன்னைத் திருடினவன் அற்பகிருமியாய்ப்
பிறப்பான். ஆடையை அபகரித்தவன் முசலாய்ப் பிறப்பான். ஒரு
வன் தன்னை நம்பித் தனதுவசப்படுத்தின பொருளை அபகரித்தவன்,
மீன் முதலிய நீச ஜந்துக்களாய்ப் பிறப்பான். பரிமளப் பொருள்
களைத் திருடினவன் மூஞ்சூறாய்ப் பிறப்பான். இங்ஙனம் பல பதார்த்
தங்களைத் திருடினவர்களுக்குப் பலவித ஜன்மங்கள் உண்டாகும். முன்
பிறப்பில், பிறருடைய ¶ நிர்ப்பந்தனைக்காகப் பரோபகாரம் செய்த
வர்கள், இந்த ஜன்மத்தில் தனவான்களாய்ப் பிறந்தும் + நல்லூண்
உடைகளை அனுபவிக்காமல் இருப்பார்கள். பூர்வஜன்மத்தில் சற்பாத்
திர ஜனங்களைத் தாமே வலிய அழைத்து, ஆடை அணி உண்டி முதலிய
வைகளால் ஆதரித்தவர்கள், இப்பிறப்பில் சிரமப்படாமல் திரவியத்
தைப் பெறுவார்கள். பூர்வ ஜன்மத்தில், | ஏற்றவர்களுக்கு ஒளியாமல்
கொடுத்தவர்கள், வருந்தி முயன்று தனத்தைப் பெறுவார்கள்.
முற்பிறப்பில், யாசகர்களை % நலிவித்து ஒன்றும் உதவாத லோபிகள்,
திரவிய லாபத்திற்காக முயன்றும் அதனை இழப்பார்கள். யௌவனத்
தில் தானம் செய்யாமல் விருத்தாப்பியத்தில் தானம் செய்தவர்கள்,
மறுபிறப்பில் தனவான்களாய்ப் பிறந்தும், போகிகள் ஆகாமல்
ரோகிகள் ஆவார்கள். மாம்ஸபோஜனத்தை விட்டவர்கள், மறுபிறப்பில்
அதிக ஸௌந்தர்யவான்களா யிருப்பார்கள். அங்கஹீனர்களைப் பரி
காஸஞ் செய்தவர்கள், மறுபிறப்பில் ரூபஹீனர்களா யிருப்பார்கள்.
உள்ளன்புடைய மனைவிக்கு உகந்து நடப்பவர்கள், மறுபிறப்பில்
|| ஸௌபாக்யவான்களா யிருப்பார்கள். மனைவியைக் காப்பாற்றாத

* சவம் - பிணம்.
† கிருமி - புழு. ‡ சஸ்திரம் - போராயுதம். $ வாயஸம்-காகம்.
¶ நிர்ப்பந்தனை - வலுகட்டாயம், தொந்தரை.
+ நல் + ஊண் - நல்ல ஆகாரம்.
| ஏற்றவர்கள் - பிச்சை கேட்டவர்கள். % நலிவித்து - அலைத்து, வருத்தி. || ஸௌபாக்யவான்கள் - அதிஷ்டசாலிகள்.



வர்கள், மறுபிறப்பில் ஸௌபாக்யஹீனர்களா யிருப்பார்கள். * கேள்வி
யிருந்தும் தானம் செய்யாதவர்கள், மறுபிறப்பில் ஞானவிஜ்ஞான
வான்களாய்ப் பிறந்தும் ஏழைகளாய் இருப்பார்கள். ஞானசூன்யர்களா
யிருந்தும் தீனர்களை ரக்ஷித்தவர்கள், மறுபிறப்பில் மதியீனர்களாய்
இருந்தும் ஸ்ரீமான்களாய் இருப்பார்கள். ஆசார்ய பக்தி யுடைய
வர்கள் மறுபிறப்பில், வித்யாவான்களாய், † சுரோத்ரியர்களாய் மேதா
விகளாய் இருப்பார்கள். முற்பிறப்பில் வித்யாகர்வத்தால் ஸபைகளில்
சிஷ்டர்களை அவமானஞ் செய்தவர்கள் இப்போது தமது கல்வித் திறத்
தைப் பிறர்க்கு விளக்கவேண்டும் என்னும் பேராவாவால் கல்வி பயின்
றும் அதனை அடையமாட்டார்கள். பரிசுத்த மனமுடையவர்களாய்
ஸத்பாத்திரத்தில் தானம் செய்துகொண்டு ஸத்யவான்களாய் கிருபை
யுடையவர்களாய் இருந்தவர்கள், இப்பிறப்பில் பெண்டு பிள்ளைகளுடன்
தனவான்களாய்ப் பலபோகங்களை அனுபவித்துக்கொண்டு, ஆரோக்ய
வான்களாய் இருப்பார்கள். முற்பிறப்பில் நாஸ்திகர்களாய், குரோத
லோப யுக்தர்களாய் பிறரை வருத்தினவர்கள், பெண்டு பிள்ளைகளுடன்
தரித்திரம் அனுபவித்துக்கொண்டு நோயால் வருந்துவார்கள். யௌவன
கர்வத்தால் ‡ காமாந்தகர்களாய் பிறன்மனை புகுந்து ஸஞ்சரித்தவர்கள்
மறுபிறப்பில் குருடராவார்கள். சிஷ்டர்களைக் கடுஞ்சொற்களால்
மனம் நோவ வுரைத்தவர்கள் மறுபிறப்பில் காதுநோவால் வருந்து
வார்கள். முற்பிறப்பில் விஷமூட்டினவர்கள் இப்போது வயிற்று
வலியால் வருந்துவார்கள். அந்நிய ஸ்திரீயை, கன்னிகையை, பெண்
மிருகங்களைக் காமத்தாற் சேர்பவர்கள் மறுபிறப்பில் மர்மஸ்தானத்தில்
நோவுற்று வருந்துவார்கள். முற்பிறப்பில், $ நிரபராதிகளைக் கட்டி
வருத்தினவர்கள், சரீரத்தில் சூடுபோடப்பெற்று வருந்துவார்கள்.
ஸாதுக்களுடைய கால் கைகளை முறித்து வருத்தினவர்கள், மறுபிறப்
பில் நொண்டிகளாவார்கள். முற்பிறப்பில் அசுசியான பாதங்களோடு
தேவாலயத்திற் பிரவேசித்தவர்களும், தப்பில்லாமற் பிறரை உதைத்த
வர்களும், பாதரோகமுற்று பாதைப்படுவார்கள். முற்பிறப்பில் தயையில்
லாதவர்களாய், ¶ விநோதத்திற்காக ஜந்துக்களை வதைத்துக் கொன்ற
வர்கள் ஜ்வரம், குன்மம், அதிஸாரம், ராஜகட்டி, மஹோதரம், வாத
பித்த கபரோகங்கள் முதலியவைகளால் வருத்தப்படுவார்கள். வர்த்த
கத்தில் நல்ல பதார்த்தங்களுடன் கெட்ட வஸ்துக்களைக் கலந்தும்,
+ நிறையில் மோஸம் செய்தும் தனத்தை ஸம்பாதித்தவர்கள், மறு
ஜன்மத்தில் கூனர்களாகவும் குள்ளர்களாகவும் பிறப்பார்கள். முற்
பிறப்பில் ஸாதுக்களை மோஸம் செய்து அவர்களுடைய திரவியத்தை
அபகரித்தவர்கள், இப்போது பயித்தியக்காரராவார்கள். முற்
பிறப்பில் பிதுர்காரியங்களைத் தூஷித்தவர்களும், சிசுக்களைக் கொன்ற

* கேள்வி இருந்தும் - 'ஐயமிட்டுண்' என்னும் கேள்வி கேட்டிருந்தும்.
† சுரோத்ரியர்கள் - வேதமுணர்ந்தவர்கள்.
‡ காம + அந்தகர் - காமக்குருடர். $ நிர், + அபராதி - குற்றமற்றவன்.
¶ விநோதம் - வேடிக்கை. + நிறை - நிறுத்தல்.

வர்களும் இப்போது பிள்ளையில்லாதவர்கள் ஆவார்கள். முற்பிறப்பில் சேங்கன்றின் பீஜத்தை நசுக்கினவர்களும், பிறருடைய சிற்றின்ப ஸுகத்தைக் கெடுத்தவர்களும், கணவர்களை வஞ்சித்துப் பணஞ் சேர்த்த மனைவிகளும், மதத்தால் மற்றொரு பெண்ணினுடைய புருஷனைத் தன் வசமாக்கிக்கொண்ட ஸ்திரீயும் இந்த ஜன்மத்தில் பேடிகளாவார்கள். கர்வத்தால் சிஷ்டர்களைப் * பரிபவப் படுத்தினவர்கள் இந்த ஜன்மத்தில் பிறர்க்கு தாஸர்களாய், அற்பர்களால் வையப்பட்டும் அடிக்கப்பட்டும் வருந்துவார்கள். முற்பிறப்பில், பெரியோர்களுடைய † அவஸரத்துக்கு உதவாதவர்கள், தனவான்களுடைய கிருக த்வாரங்களில், த்வாரபாலகர்கள் தம்மைப் பிடித்துத்தள்ள வருந்தித் துக்கப்படுவார்கள். நிரபராதிக்குக் கொடுந்தண்டனை விதித்தவர்கள் மறு ஜன்மத்தில் ராஜ தண்டனையை அடைவார்கள். கருணையின்றிப் பல ஜீவர்களையும் கொன்றவர்கள், மறுபிறப்பில் பந்துஜன ஸஹிதமாய் ஒரேகாலத்தில் அழிந்து போவார்கள். ஓ அரச! பாவிகளுடைய அநுபவத்தை ஸங்க்ரகமாகச் சொன்னேன். தேசமாள்பவன் ஜாக்கிரதையாகத் தனது ராஜ்யவாஸிகளான ஜனங்களை ஸன்மார்க்கப் ‡ பிரவர்த்திகளாக்கவேண்டும். அங்ஙனம் செய்யாமல் உபேக்ஷிக்கும் அரசன், பிரஜைகளுடைய பாவத்தைப் பங்கிட்டுக்கொண்டு நரகஞ் சேர்வான். பூர்வத்தில் ராஜ்யம் ஆண்டவர்கள், தமது குமாரர்களேனும் அதர்மஞ் செய்வார்களாயின், அவர்களைச் சிக்ஷைசெய்து வந்தார்கள். ஆகையால், உனது ஆட்சிக்குட்பட்ட பிரஜைகள் செய்த மஹாபராதத்தால் நீ, நரகம் அடையப் பாத்திரனாய் இருக்கின்றனை. ஆனாலும் நீ அநுதாபயுக்தனாய் இங்கு வந்தபடியால், உன்னைக் காத்தருளவேண்டுமென்று எனது ஜீவிதேசனாகிய ஸ்ரீராமபிரானைப் பிரார்த்திக்கின்றேன். நீ இதுமுதல், நினது $ ராஷ்டிரத்தில் உள்ள பிரஜைகளை துர்மார்க்கத்தில் செல்லவொட்டாமல் சிக்ஷை செய்து, சாஸ்திர விச்வாஸம் இல்லாமல் நாஸ்திகர்களாயுள்ளவர்களை ராஜ்யத்திற்கு வெளியே துரத்தியடித்து மற்றவர்களைக் காப்பாற்றிக்கொண்டு ஜாக்ரதையாய் இருக்கக்கடவாய்'' என்று நன்மதிகள் போதித்தார். அவைகளைக் கேட்ட பாச்சா, உத்தவசித்குணர்க்குப் பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து, ''தேவரீருடைய நியமனப்படி செய்கின்றேன்'' என விண்ணப்பித்து, அவருடைய அநுக்ரஹத்தைப் பெற்று, துருக்கர்களுடைய பயத்தால் ஓடிப்போன பாகவதர்களை வரவழைத்து சமாதானப்படுத்தி, எப்போதும்போல ஸ்ரீராமஜயந்தி உற்சவத்தை நடத்தவேண்டுமென்று வேண்டிக்கொண்டு, தேவையான வஸ்துக்களையெல்லாம் அபரிமிதமாய் வரவழைத்துக் கொடுத்தான். அப்போது, உத்தவசித்குணர் பிரார்த்தித்தபடி ஆஞ்ஜநேயர் பிரஸன்னராய், ''ஓ, பாகவதோத்தமா! உனக்காக இந்தத் துருக்கப் பிரபுவுக்கும், இவனுடைய ராஜ்யத்துக்கும் கெடுதி

* பரிபவம் - அவமானம்.
† அவஸரத்துக்கு - தேவையானபோது. ‡ ப்ரவர்த்தகம் - நடத்தல்.
$ ராஷ்டிரம் - ராஜ்யம்.



செய்யாமல் மன்னித்தேன்'' என்று கூறி மறைந்தார். உத்தவசித்குணர் உற்சவத்தைப் பூர்த்திசெய்து, அவ்வூரிற் சிலகாலம் வாழ்ந்து, அவ்விடத்திய ஜனங்களுக்கு பகவத் பக்தியை உண்டுபண்ணி *யதேச்சையாய் யாத்திரை செய்துகொண்டிருந்தார்.

ஸ்ரீராமபத்ராயநமஃ

## எழுபத்து ஒன்றும் அத்தியாயம்

# வீஸோபா வர்த்தகன் சரித்திரம்

பண்டரி க்ஷேத்திரத்தில் வாஸஞ் செய்துகொண்டிருந்த வீஸோபா வர்த்தகர், பகவானுக்குப் பிரிய பக்தராயிருந்தார். இவருடைய மனைவியார், கணவர்சொற் கடவாத கற்புடையாராய்,

'பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை யுண் டாகப் பெறின்' என்றபடி,

''† அருந்ததியோ, அநஸூயையோ, நளாயனியோ, ஸாவித்ரியோ'' என்று உலகத்தார் தம்மைக் கொண்டாடும்படி வாழ்ந்தார். இந்த தம்பதிகளுக்கு நால்வர் சற்புத்திரர்கள் பிறந்திருந்தார்கள். இவர்கள் புண்டரீகனைப்போல, தாய்தந்தையரை முறையே லக்ஷ்மீ மாதவர்களென மதித்து பக்திபுரிந்து வந்தார்கள். வீஸோபா வர்த்தகர், ரந்திதேவ ஸுதரிசனர்களைப்போல, அதிதிகளை விஷ்ணு ரூபங்களாக எண்ணி, பக்தியுடன் ஆராதித்துக் கொண்டிருப்பாராயினர். இவர், கர்மானுஷ்டானத்தில் ஜனக சக்ரவர்த்திக்கும், ஞான நிஷ்டையில் பரத யோகிக்கும், பக்தியில் ப்ரஹலாதற்கும் ‡ பிரவர்த்தி யோகத்தில் வஸிஷ்ட, யாஜ்ஞவல்க்ய, சக்தி, ஹரீத, சுக, பராசர, கார்க்ய, வியாஸ, சௌநகாதியர்களுக்கும், பகவந்நாம ஸங்கீர்த்தனையில் தும்புரு நாரதாதியர்களுக்கும் சமானமானவராயிருந்தார். இவர், ஸம்ஸாரத்தில் இருந்தும், 'மிதிலைமா நகரும் பற்றி யெரிகின்றது; எனது பொருள்களில் ஒரு சிறிதும் பற்றி யெரியவில்லை' என்ற ஜநக சக்ரவர்த்தியைப் போலவும், வாரணாஸியிலிருந்த துலாதாரனைப் போலவும் எதிலும் ஒட்டாமல் பற்றற்று விளங்கினர். இந்த பரமவைராக்யசீலர் ஜகத்தைத் துரும்பாக மதித்திருந்தார். அன்றியும்,

'மன்னுயிரைத் தன்னுயிர்போல் மற்றவர்தம் செல்வத்தை
இந்நிலத்தில் மண்ணைப்போல் இன்னொருவன் - தன்னுடைய
தாரத்தைத் தாய்போலத் தாம் நினைப்பார் மெய்ஞ்ஞான
வாரத்தை வைத்தமேலோர்' என்றபடி

இவர், ஸமஸ்த பூதங்களையும் தன்னைப்போலவும், பிறர்பொருளை மண்ணாங்கட்டியைப்போலவும், பிறன் மனைவியை தன்தாய் போலவும்

* யதேச்சையாய் - தமதிஷ்டம்போல். † அருந்ததி - வசிஷ்டர்மனைவி.
‡ பிரவர்த்தியோகம் - அடைக்கலயோகம்.

பாவித்து, * சேதனு சேதன ரூபமாகிய யாவற்றையும் பகவத் ஸ்வரூபமாகப் பார்த்துக்கொண்டிருந்தார்.

ஸர்வ பூத தயை, சாந்தம், பொறுமை, † சௌசம், அநாயாஸம், மங்களம், ‡ அகார்ப்பண்யம், ஆசையின்மை என்னும் இவைகள், பகவத் பக்தனுக்கு முக்ய லக்ஷணங்களாம்.

'உறவினர் உறவினர் அல்லார் நண்பர்
பகைவர் இவர்களை ஸமபாவனையாய்
ஒருவன்
மதித்து மற்றவர்க் கிடுக்கண் வருங்கால்
காத்தல் தயையெனக் கழறப் படுமே'

"சுற்றத்தார், சுற்றத்தாரல்லாதவர், மித்திரர், பகைவர் என்னும் பாகுபாடற்று, ஒருவன் ஸமபாவனைசெய்து அவர்களுக்கு ஆபத்து வருங்காலத்தில் அவர்களைக் காத்தலே தயை என்னப்படும்."

'தனது சரீரந் தனக்கானாலும்
தனது மனது தனக்கானாலும்
பிறராற் றுன்பம் பெற்ற காலையில்
ஒருவன்
அவர்களை வெகுளா திருத்தல் வருத்தா
திருத்தல் சாந்தம் என்னப் படுமே'

"தனது சரீரத்திற்காயினும், மனத்திற்காயினும், பிறரால் துன்பத்தை அடைந்தபோது, ஒருவன் அவர்களைக் கோபியாமலும், வருத்தப்படுதாமலும் இருத்தலே சாந்தம் என்னப்படும்."

'பண்புடை யவர்தம் எண்ணருங் குணங்களை
மித்தையென்று விளம்பா திருத்தலும்
அற்ப ராயினும் அவர்களைப் புகழ்தலும்
பிறர்குற் றங்களைப் பிரீதியாய்க் கேட்டு
மகிழா திருத்தலும் மாநில மதனிற்
பொறுமை யென்று புகலப் படுமே'

"குணவான்களுடைய குணங்களைப் பொய்யென்று கூறுதிருத்தலும், அற்பர்களானாலும் அவர்களைப் புகழ்தலும், பிறருடைய குற்றங்களை விரும்பிக் கேட்டு மகிழாதிருத்தலும் பொறுமை என்று சொல்லப்படும்."

'சாஸ்திர விலக்குக ளாமது மாமிஸம்
முதலிய ¶ அபக்ஷ்ய பதார்த்த வகைகளை

* சேதன+அசேதனம் - அறிவுள்ளது அறிவில்லாதது.
† சௌசம் - சுத்தம். ‡ அ+கார்ப்பண்யம் - மனத்தளர்வின்மை.
$ அந்+ஆயாஸம் - விருதாவிற் கஷ்டப்படுதல்.
¶ அ+பக்ஷ்யம் - உண்ணத்தகாதது.



'உண்ணு தொழித்தலும் உத்தம ரோடு
நட்புக் கொள்ளலும் நயந்து தத்தம்
வர்ணு சிரம வழக்கில் இழுக்கா
தொழுகலும் சௌசமென் றுரைக்கப் படுமே' என்றபடி,

"சாஸ்திர விலக்குகளாகிய மது மாமிஸ முதலிய உண்ணத் தகாத பதார்த்தங்களை உண்ணுமல் நீக்குதலும், உத்தமரோடு நட்புக்கொள்ளலும், தத்தம் வர்ணுஸ்ரம தர்மங்களை விரும்பி, அதன்படி தவறுது நடத்தலும் சௌசம் என்று செல்லப்படும்." ஒழிக்கக் கூடாதவைகளாகிய நித்ய * நைமித்திகங்கள் தவிர, மற்றக் காரியங்கள் மிகவும் நல்லவைகளாயினும் அவைகளால் உடலுக்கு அலைச்சல் உண்டாகுமாறல், அவைகளை அவஸியம் நீக்கிவிடுதலையே † அநாயாசம் என்று அறிவுடையோர் சொல்லுவார்கள். சாஸ்திர ‡ விஹிதங்களை நிர்ப்பந்தமாய் அநுஷ்டித்தலும், அவைகளில் விலக்கியவைகளை நீக்கலும் மங்களம் என்று முனிவர்களால் கூறப்படும். ஒருவன், தான் ஏழையேயாயினும் மனத்தளர்வின்றித் தனது சக்த்யாநுஸாரம் ஒவ்வொருநாளும் தவறுமல் ஏழைகளுக்கு இரங்கிக் கிஞ்சித்தேனும் தானம் செய்து வாழ்தலே $ அகார்ப்பண்யம் என்று சொல்லப்படும். ஒருவன் கர்மாநுகுணமாய்த் தனக்குக் கிடைத்தவரையில் சந்தோஷப்படுதலும், பிறர்பொருளை விரும்பாத மேன்மைக் குணமும் ஆசையின்மை யென்று சொல்லப்படும். இந்த எண்வகைச் சற்குணங்களும் வீஸோபா வர்த்தகரிடத்தில் ஸாந்நித்யம் செய்துகொண்டிருந்தன. ஒரு காலத்தில், அந்த தேசத்தில் மஹா க்ஷாமம் உண்டாகி, அதனால் அன்னமின்றிப் பிரஜைகள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்கள். வீஸோபா வர்த்தகர், ஈஸ்வர ஸ்வபாவத்தைப்போல, பரதுக்கம் சகியாத பரமாத்மாவாய், தீன ஜனங்கள் விஷயத்தில் தாம் மிக வருந்தி, அவர்களை அழைத்து, "ஸ்ரீ பாண்டுரங்கனுடைய ¶ மூர்த்திவிசேஷங்களாகும் உங்களை நான் ஆராதிக்கின்றேன். நீவிர் + வருந்தன்மின்" எனக் கூறி, தம்மிடத்தில் இருந்த திரவியத்தை அவர்களுக்கு உபயோகிப்பாராயினர். இவ் விருத்தாந்தங்களைக் கேட்டு வெகு தூரத்தில் இருந்த தீன ஜனங்கள், அபரிமிதமாய் வந்துகொண்டிருந்தனர். தரித்திரனுக்கு எத்தனை பிள்ளைகள் இருந்தாலும், அவைகளில் ஒரு சிசுவையும் உபேக்ஷிக்காமல் தான் பசியைப் பொறுத்துக்கொண்டானாலும் அவைகள் அனைத்தையும் விடாமல் காக்கிறபடி, வீஸோபா வர்த்தகர், கொஞ்சமேனும் மனம் சலியாமல் தம்மிடத்திற்கு வருபவர் அனைவரையும் ஆதரித்துக்கொண்டு வந்தார். இங்ஙனம் செய்துகொண்டிருக்கையில்

* நித்யம்-தினம்செய்யவேண்டிய விசேஷ ஆராதனைகள். நைமித்திகங்கள்-நித்யாராதனத்தில் நேரிடும் குறைகளை போக்கிக்கொள்வதற்கு வருஷவாரியில் செய்யப்படுவதாகிய பிரம்மோற்சவம். † அந்+ஆயாஸம் - வீணுக்கு உழைக்காமை. ‡ விஹிதங்கள் - ஏற்படுத்தப்பட்டவைகள். $ அகார்ப்பண்யம் - மனத்தளர்வின்மை, உறுதி. ¶ மூர்த்தி விசேஷம் - உருவ விசேஷம்.
+ வருந்தன்மின் - வருந்தவேண்டா.

சில காலத்துக்குள், தம்மிடத்தில் இருந்த திரவியமெல்லாம் வ்ரயமாய்ப் போய்விட்டமையால் அவர், தமது ஆபரணங்களையும் வீட்டிலிருந்த தட்டு முட்டுப் பித்தளைப்பாத்திரங்களையும் விற்று, தீனர்களை ஆராதித்துக்கொண்டு வந்தார். இந்த ஸஜ்ஜன முதல்வருடைய நடக்கையைப் பார்த்து, அவ்வூரி லிருந்த வர்த்தகர்கள் பச்சாத்தாபப்பட்டு, "நீர் திரவியத்தை இங்ஙனம் விரயஞ் செய்தல் நியாயம் அல்ல" என்று அவருக்குக் கூறினார்கள். யார் என்ன சொன்னாலும் கேளாமல், வீஸோபா, எப்போதும்போல தீன ஜன போஷணையில் ஏமாறுமல் இருந்தார். அப்போது அனைவரும், "இந்த வீஸோபா மூர்க்கரா யிருக்கின்றார்" என்று, மௌனமா யிருந்தார்கள். சில புத்திமான்கள், "பண்டரி நாதனிடத்தில் * ந்யஸ்தபரராகிய வீஸோபாவுக்கு ப்ரபஞ்சதர்மம் எங்ஙனம் ருசிக்கும்?" எனக்கூறினார்கள். வேறு சில தத்வஞானிகள், "ஸூத்ரதாரி பொம்மைகளை ஆட்டுகிறபடி, ஸ்ரீமத்பண்டரீநாதன் இம்மஹானுபாவரை இங்ஙனம் ஆட்டுகின்றனன்" என்று கூறினார்கள். சில நாட்களில் எல்லாவற்றையும் செலவழித்துவிட்டு, வீஸோபா, அன்ன வஸ்திரங்களுக்கில்லாமல் மிகவும் தரித்திரர் ஆனார். இவர்க்குக் கடன் கொடுத்திருந்த காசிவாஸியாகிய ஒரு துருக்கன், இவரது தரித்திர நிலைமையைக் கேள்வியுற்று, உடனே புறப்பட்டுவந்து, தனது திரவியத்தை வட்டியோடு செலுத்தவேண்டுமென்று வருத்தினான். அதற்கு வீஸோபா, அந்த துருக்கனை நோக்கி, "ஐயா! என் கையிற் பணம் இல்லை; † கர்மாநுகுணமாய் எனக்குக் கிடைத்திருந்த திரவியம் அனைத்தையும் ‡ அதிதிரூபியாகிய பகவானுக்கு விநியோகஞ் செய்தேன். ஆனாலும், நினது கடனை நான் தீர்க்கவேண்டுவது அவஸ்ய கர்த்தவ்யமா யிருக்கின்றது. $ ருணத்தைத் தீர்க்காமல் இச்சரீரத்தை விட்டவன் எத்தனை புண்யராசியே யாயினும், பரம முமுக்ஷுவே யாயினும் அவனுக்கு ¶ லோகாந்தரத்தில் கதியில்லை. ருணத்தைத் தீர்த்த பிறகே, தனது புண்ணியத்தால் ஸாதிக்கப்பட்ட உத்தமலோகத்தை ஒருவன் அடைவான். கடன் மோக்ஷவாசலை அடைக்கும் § கவாடமா யிருக்கின்றது. எப்பேர்ப்பட்டவர்களாயினும் கடன் அடைப்பதற்காக மறுஜன்மம் எடுத்து, + ருணவிமுக்தர்களாய்ப் பரிசுத்தப்படவேண்டும். ஈஶ்வரன், பரம வைராக்யசீலனா யுள்ளவனுடைய யோகக்ஷேமங்களை தானே வகித்திருப்பான். ஆகையால், அப்படிப்பட்ட புருஷன், கடன்பட்டவனா யிருப்பானாயின், அவனுடைய ரக்ஷணபாரத்தை வஹித்துள்ள ஈஶ்வரனே அவனுடைய கடனைத் தீர்ப்பான் என்பது அநுபவஸித்தமாய்ச் சாஸ்திர ஸம்மதமா யிருக்கின்றது. "வேதியன் ஒருவன், பாதரக்ஷை செய்வித்துக்கொண்ட

* ந்யஸ்தபரர் - செலுத்தின மனமுடையவர்.
† கர்மாநுகுணமாக - முன் செய்த நல்வினை தீவினைக்கீடாக.
‡ அதிதிரூபி - விருந்தினர் வடிவன்.
$ ருணம் - கடன்.
¶ லோக + அந்தரம் - மறுலோகம்.
§ கவாடம் - கதவு.
+ ருணவிமுக்தர்கள் - கடன் தீர்ந்தவர்கள்.



கூலியைச் சக்கிலிக்குக் கொடாமல் லோகாந்தரத்துக்குப் போனபொழுது, அந்தச் சக்கிலியும் மரணமடைந்து அங்கே சென்று, தனது ருணத்துக்காக அவ் வேதியன் தொடையில் பாதரக்ஷை யளவுள்ள சர்மத்தை அறுத்துக் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தினான். காவேரி தீரத்தில் அவ்வேதியன் பிரதிஷ்டை செய்து ஆராதித்துவிட்டுப்போன அரச மரம், பிரமசாரி வேடம் பூண்டு அங்குச் சென்று, தனது தொடையிலிருந்து அந்தப் பாதரக்ஷை அளவான தோலை அறுத்துச் சக்கிலிக்குத் தந்து, வேதியனை ருணவிமுக்தன் ஆக்கியது" என்று துலாகாவேரி மஹாத்மியத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. * நரஸிம்மோபாஸகனாகிய பக்தன் ஒருவனுக்காக, ஸ்ரீ † நரஸிம்ம மூர்த்தி, தனக்கு திரவியம் செலுத்துவதாகப் பிரார்த்தனை செய்துகொண்டவர்களுடைய ‡ ஸ்வப்நத்தில் ஸாக்ஷாத்கரித்து, 'நீவிர் எனக்குச் செலுத்தவேண்டிய திரவியத்தை எனது உபாஸகனுடைய கடன்காரர்களுக்குச் செலுத்துங்கள்' என்று கூறிய சரித்திரம் $ ஸுப்ரஸித்தமா யிருக்கின்றது. இன்னும் இப்படிப்பட்ட விசித்ர சரித்திரங்கள் அநேகம், புராணங்களில் கேட்கப்படுகின்றன. நான், ஸ்ரீ பண்டரிநாதனுடைய சரணாரவிந்தங்களில் ந்யஸ்தபாரனா யிருக்கின்றனன். ஆகையால் எனது வார்த்தையை நம்பி, உனது ஊர்க்குப் போ. ஸ்ரீ விட்டல நாதனுடைய கிருபையால், எட்டு தினங்களுக்குள் உனது கடனை வட்டியுடன் உன்னிடம் அனுப்புவேன்" என்று கூறினார். அதற்கு அந்தத் துருக்கன், "நீ ஸத்ய விரதன் என்று எனக்குத் தெரியும். ஆனாலும், மிகுந்த தரித்திர தசையை அடைந்திருக்கும் இந்த நிலைமையில் உனது வார்த்தைகளை நம்புதற்கு எனக்கு தைர்யம் இல்லை; இங்குள்ள தனவான்களாகிய வர்த்தகர்கள் சொன்னால், நான் எனதூருக்குப் போவேன்" என்றான். அதைக் கேட்ட வீஸோபா, தனவான்களாகிய வர்த்தகர்களை, "துருக்கனுக்கு தைர்யம் சொல்லுங்கள்" என்று பிரார்த்தித்தார். ஸ்ரீமந்தர்களாகிய வர்த்தகர்கள், துருக்கனை நோக்கி, "ஐயா! ஸூர்ய சந்திரர்களுடைய ‡ கதி மாறினாலும், வீஸோபா வர்த்தகருடைய வார்த்தை மாறாது; இவர், பகவத்தியானத்தால் தம்மை மறந்திருக்கின்றார். ஆனாலும், இவருடைய இச்சையை, % ஆஶ்ரித வத்ஸலனாகிய ஸ்ரீ பண்டரிநாதன் நிறைவேற்றுவான் என்பது எமக்குப் பிரத்தியக்ஷ ஸித்தம்" என்றார்கள். அதனைக் கேட்ட துருக்கன் தைரியமடைந்து தனதூருக்குச் சென்றான்.

அந்த ராமபுரத்தில் வாழ்ந்துகொண்டிருந்த பாபா என்னும் ஸித்த புருஷர் ஒருவர், ஸ்ரீமத் பண்டரிபுரத்திற்கு வந்தார். அவர், வீஸோபா சரித்திரத்தைக்கேட்டு, அவருடைய அத்யவஸாயத்தை

* நரஸிம்ம + உபாஸகன் - நரஸிங்க ஸ்வாமியை உபாஸிப்பவன்.
† நரஸிம்ம மூர்த்தி - நரசிங்க ஸ்வாமி.
‡ ஸ்வப்நம் - கனவு.
$ ஸுப்ரஸித்தம் - விளக்கம், விளம்பரம்.
‡ கதி - இயக்கம்.
% ஆச்ரிதவத்ஸலன் - பக்தவத்ஸலன், பக்தரிடத்தில் அன்புள்ளவன்.

அறியவேண்டுமென்று, கிழிந்தும் மிகவும் அழுக்கடைந்த வஸ்திரத்தை தரித்து, சரீரத்தில் சேற்றைப்பூசிக் கையில் ஓர் ஓட்டை ஏந்திக்கொண்டு வீஸோபா வீட்டுவாசலில் வந்து நின்று, "எனது பசிக்குச் சோறு வேண்டும்" என்று கேட்டார். அந்தச் சப்தத்தைக் கேட்டவுடன், வீஸோபா வெளியே வந்து, அவர்க்கு ஸாஷ்டாங்க வந்தனம் செய்து உள்ளே அழைத்துக்கொண்டுபோய், ஆஸனத்திற் குந்தவைத்து, வெந் நீரால் ஸ்நானம் செய்வித்து, அவருடைய வஸ்திரத்தைத் துவைத்து உலர்த்திக்கொடுத்து, தமது வீட்டிலுள்ள அன்னமிட்டு அவரைத் திருப்தி செய்து, மறுபடியும் வந்தனம் செய்து, "ஸ்ரீ புண்டரீகவர்தன் இவ்வுருவந்தாங்கி வந்து என்னை அநுக்ரஹித்தனன்" என்று சந்தோஷ மடைந்தார். அந்த ஸித்த புருஷர், வீஸோபாவுடைய * அத்யவஸாயத்திற்கு மிகவும் வியந்து, ஸாதுஜன முதல்வராகிய அவரைத் தமக்கருகில் உட்காரவைத்துக் கொண்டு, "ஓ, மஹாத்மா! ஸம்ஸார விஷவிருக்ஷத்தில் அமிர்த மயமாகிய இரண்டு பழங்கள் உண்டு; அவை, கூடிய வரையில் கேசவற்கு பக்தி செய்தல் ஒன்று. அவனுடைய பக்தர்களோடு அளவளாவி யிருத்தல் மற்றொன்று. அவைகளில் இரண்டாவது மிகவும் அருமையானது. எனது பாக்ய விசேஷத்தால், இன்று அப்படிப் பட்ட பழம் கிடைத்தது. வைஷ்ணவ உத்தமராகிய உமது விஷயத்தில் † யதாசக்தி ‡ கிஞ்சித்கரிக்கவேண்டுமென்று விரும்புகின்றேன். நீர் ஆசையற்றவரென்று நான் அறிவேன். இப்படிப்பட்ட உமக்கு இந்தலோக ஐஸ்வர்யங்கள் சந்தோஷம் உண்டாக்கமாட்டா. ஸாமான்ய தனத்தைக் காட்டிலும் ஞானதனம் சிறந்தது. அதில், ஆத்மஞானத்தை விட ஈஸ்வரஞானம் சிரேஷ்டமானது. அதனிலும், ஈச்வரப் பிரபாவம் தெரிந்துகொள்வதைவிட ததீயர்கள் பிரபாவம் உணர்தல் உத்தமோத்தமமாயிருக்கும். ஸர்வோத்கிருஷ்டமான ஸ்ரீவைஷ்ணவ பிரபாவத்தை நான் அறிந்தவரையில் உனக்கு அறிவித்து, பூர்வம் இக்ஷ்வாகுவுக்கு ஜபபலன்களைத் தந்து கௌசிகனும், கௌசிகனுக்கு யோக பலத்தை அர்ப்பணம் செய்து இக்ஷ்வாகுவும் சந்தோஷப்பட்டபடி பரமானந்த மடைவேன், கனிந்துக் கேட்பீராக.

சப்த தீவுகளும், பாதாளாதி அதோலோகங்களும், § ஊர்த்வ லோகங்களும் சேர்ந்த இந்த ப்ரஹ்மாண்டத்தில், ஸூக்ஷ்மங்களும், ஸூக்ஷ்மத்தில் ஸூக்ஷ்மங்களும், ஸ்தூலங்களும், ஸ்தூலத்தில் ஸ்தூலங்களும், அநேக பிராணிகளும் வாஸஞ்செய்கின்றன. அதி விஸ்தாரமான பிரமாண்ட அண்டத்தின் இடத்தில், அங்குலத்தில் அரைக் கால் பங்களவுள்ள இடமும் பிராணிகளால் நிரப்பப்பட்டிருக்கின்றது. இந்தப் பிராணிகள் யாவும் கர்ம வசத்தால் இங்கே பிறந்து, ‖ தேகாந்தத்தில் யமவசப்பட்டு, அவனால் நியமிக்கப்படும் வேதனை

* அத்யவஸாயம் - உறுதி.

† யதாசக்தி - எனது வல்லமைக்குத் தகுந்தபடி. ‡ கிஞ்சித்கரித்தல் - அற்ப சகாயம் செய்தல். § ஊர்த்வலோகம் - மேல் உலகம்.

‖ தேக + அந்தம் - தேக முடிவு.



களை % நுகர்ந்து, அவ்வநுபவாந்தத்தில் தேவாதி ஜன்மங்களைப் பெறுகின்றன. இங்ஙனம் ஆத்மாக்கள், ஸம்ஸார சக்கரத்தில் அகப்பட்டுச் சுற்றுகின்றார்கள் என்பது சாஸ்திர ஸித்தமான விஷயம். இப்படிப்பட்ட ஸம்ஸாரத்தில், வைஷ்ணவர்கள் மாத்திரம் யம வசப் படாமல் பரமவைஷ்ணவ ஸாயுஜ்யத்தைப் பெறுவார்கள். ஒரு காலத் தில், பாசமேந்திய கையனாய்ப் பிராணிகளைப் பிடித்துவரப் புறப்பட்ட தனது தூதனை நோக்கி, யமதர்மராஜன், இரகஸியமாய் அவனுடைய காதில், 'ஓ, தூத! ஸ்ரீமதுஸூதனப் * ப்ரபன்னர்களை, நீ பிடிக்காமல் விட்டுவிடு; நான் மற்றவர்களுக்குப் பிரபுவே யல்லாமல் வைஷ்ணவர் களுக்குப் பிரபு அல்லன். ஸகல தேவர்களால் ஆராதிக்கப்படும் ஸர்வேஸ்வரனால் நான் யமநாமம் பெற்று, ஸகல பிராணிகளுடைய பாவ புண்ணியங்களைப் † பரிசீலிக்கும்படி நியமிக்கப்பட்டிருக்கின்றேன். அங்ஙனம் இருப்பதனால், நான் அந்த ஸ்ரீஹரியின் வசப்பட்டவனே அன்றி ஸ்வதந்திரன் அன்று. எனது அதிகாரத்தில் நான் தப்பினே னானால் என்னை அந்த விஷ்ணு தண்டிப்பான். கடக, மகுட, குண்ட லாதி பல ஆபரணங்களிலும் அவைகளுக்குக் காரணமான ஸ்வர்ணம் ஒன்றேயாய் வியாபித்திருப்பதுபோல, ஸுர நர பசுவாதி ஸகல கார்ய வர்க்கங்களிலும் அந்த ஸ்ரீஹரி ஒருவனே வியாபித்திருக்கின்றான். ஆகையால் அவனே ஸர்வேஸ்வரனாகின்றான். காற்றால் பறக்கடிக்கப் படுகிற ‡ பூரேணுக்கள், அந்தக் காற்று அடங்கினபொழுது மறுபடி யும் பூமியிலேயே அடங்குகிறபடி, பகவத் ஸங்கல்பத்தால் உண்டான குண $ வைஷம்யத்தால் தோன்றுகிற ஸுர நராதியர், அந்த குண வைஷம்யம் அடங்கினபொழுது, பகவானிடத்திலேயே ஒடுங்குவார்கள். ஓ, தூத! நன்றாய்க் கேள். ஸகல தேவர்களாலும் அர்ச்சிக்கப்படும் பாதபத்மங்களுடைய ஸ்ரீஹரியை எந்தமனிதன் ¶ நிருபாதிகமாய் ஸேவித்துக் கொண்டிருப்பானோ, ஸகல பாவ பந்த விமுக்தனாகிய அந்த மனிதனை நீ காணும்பொழுது, நெய்விட்டெரிக்கப்பட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் அக்னியைப் பார்த்தபடி, தூரத்தில் விட்டு ஓடிப்போ" என்று கூறினான். அதற்கு அந்தக் கிங்கரன் தனது பிரபுவை நோக்கி, "ஸ்வாமி! அந்த ஸ்ரீ விஷ்ணுபக்தன் இப்படிப்பட்டவன் என்று நான் அறிந்து நடந்துகொள்வதற்கு அந்த மஹா புருஷனுடைய லக்ஷணங் களைத் தெரிவிக்கக் கோருகின்றேன்" என்றான். யமதர்மராஜன், அவனை நோக்கி, 'ஓ, கிங்கர! சொல்லுகின்றேன்; கேள். எவன், தனது வர்ணாஸ்ரம தர்மங்களை, பகவதாஜ்ஞா கைங்கர்யம் என்று அத்யவஸித் துத் தந்நிஷ்டனா யிருப்பானோ, தனது மித்திரனிடத்திலும் சத்துருவி னிடத்திலும் பக்ஷபாதம் இல்லாமல் ஸமபுத்தியுடையவனாய் § பர

% நுகர்ந்து - அநுபவித்து. † பரிசீலித்தல் - ஆராய்ந்தறிதல்.
* ப்ரபன்னர் - தாஸர். $ வைஷம்யம் - வேறுபாடு.
‡ பூரேணு - மண்ணிற்கிளம்பும் தூளி.
¶ நிருபாதிகம் - உயர்வு வொப்பில்லாமை.
§ பர + திரவிய + அபஹாரம் - பிறர்பொருளை வெளவல்.

திரவியாபஹாரம் பண்ணாமலும் ஜீவஹிம்ஸை செய்யாமலும் இருப்பானோ மிகவும் பரிசுத்த ஹிருதயமுடைய அந்தப்புருஷனை விஷ்ணுபக்தனென்று தெரிந்துகொள். பரிசுத்த ஞானமுடைய எவனுடைய சித்தம் * கலிஸம்பந்தமான ராகத்வேஷாதி மலங்களால் மலினப்படாமல், ஸதா ஸ்ரீமந் நாராயணனுக்கு வாசஸ்தானமாய்ப் பிரகாசிக்குமோ அந்த மனிதனை ஸ்ரீஜநார்த்தனனுடைய பரம பக்தனென்று தெரிந்துகொள்ளக்கடவாய். பக்தர்களுடைய இதய கமலத்தில், படிகமயமான பர்வதத்தைப்போல நிர்மலனாய் எழுந்தருளியுள்ள ஸ்ரீவிஷ்ணுவெங்கே! மாற்சர்யாதி தோஷங்கள் எங்கே? குளிர்ந்த சந்திரகிரணம் வியாபித்திருக்கும் இடத்தில் அக்னியின் உஷ்ணம் காட்டாதல்லவா? எவனுடைய இதயத்தில் ஸ்ரீவாஸுதேவன் ஸந்நிதி செய்திருப்பானோ, அந்தப் புருஷன் நிர்மலபுத்தி யுடையவனாய், மாற்சர்யாதி தோஷ ரகிதனாய், பரம சாந்தனாய் † ஸதாசார சீலனாய், ஸகல பிராணிகளுக்கும் மித்திரனாய், மதுரமாகவும் மிதமாகவும் ஹிதமாகவும் பேசுபவனாய், கர்வத்தையும் வஞ்சனையையும் நீக்கினவனாய் விளங்குவான். அந்த அநாதியாகிய பகவான், எவனுடைய இதயத்தில் வஸிப்பானோ அந்தப் புருஷன் உலகத்தார் அனைவரினும் சாந்தனாய், ‡பிரசன்ன முகத்தோடு கூடினவனாய்க் காணப்படுவான். அது எங்ஙனம் எனில், இளமராமரம் தான் வஸிக்கும் பூமியின் ஸாரத்தை தலையாற் காட்டுதல் போல, அவ்யயனாய் அநாதியான பகவான், சங்கசக்ராதி ஆயுத ஸமேதனாய், ஒருவனுடைய இதயத்தில் வாழ்வானாயின், அந்தப் புருஷனுடைய பாவம் எல்லாம் பாவ விநாசனாகிய அந்த பகவானால் நாசஞ் செய்யப்படும். ஸூர்யன் இருக்கும் இடத்தில் இருள் தலையெடுக்காதல்லவா? யம நியமாதிகளால் பாவங்களைப் பரிகொடுத்தவர்களாய் ஸ்ரீ அச்சுதனிடத்தில் கூம்பிய சித்தம் உடையவர்களாய், மத மாற்சர்யாதி தோஷரகிதராய் விளங்கும் புருஷர்களை நீ பார்ப்பையானால் மிகுந்த தூரத்தில் விலகிப் போ. எந்தப் புருஷன் யாருமற்ற இடத்தில் பர திரவியமாகிய ஸ்வர்ணராசி பிரகாசித்துக்கொண்டிருப்பதைக் காணும்பொழுது, ஒரு துரும்பென மதித்துப் பரிசிக்காமலிருப்பானோ, இன்னும், ஸர்வேஸ்வரன் ஒருவன் தவிர வேறொரு பொருளையும் மனதால் ஸ்மரிக்காமல் இருப்பானோ அப்பேர்ப்பட்டவனை ஸ்ரீ விஷ்ணுபக்தனாகத் தெரிந்துகொள். மேலும் ஸ்ரீ விஷ்ணுபக்த $ விஹீனனாகிய பாவியினுடைய லக்ஷணங்களை இயம்புகின்றேன் கேள்: எவன், எவ்விதத்திலாகிலும் பர திரவியத்தை அபஹரித்துக்கொண்டு, ஜீவஹிம்ஸை செய்துகொண்டு, வியர்த்தமாகிய மதத்தை அநுசரித்துச் சித்த ¶ காலுஷ்யத்தோடு கூடியிருப்பானோ அப்படிப்பட்டவனுடைய இதயத்தில் அனந்தன் வாஸம் பண்ணமாட்டான். எவன் நன்மதி ஹீனனாய்ப் பிறர் சொல்வதைக்கண்டு பொறாமையுற்று சற்புருஷர்களை தூஷித்துக்கொண்டு பகவானை ஆராதிக்காமல்

* கலி - பாவம்.
† ஸத் + ஆசாரம் - நன்னடக்கை.
‡ பிரஸந்நம் - கிருபை நிறைந்த.
$ விஹீனன் - அற்றவன்.
¶ காலுஷ்யம் - மாசு, குற்றம்.



பாகவத விஷயத்தில் திரவிய * விநியோகம் செய்யாமல் இருப்பானோ, அப்பேர்ப்பட்ட அதமனுடைய மனத்தில், ஸ்ரீ ஜநார்த்தனன் வாஸம் பண்ணமாட்டான். எவன் பந்து, மித்ர, † களத்ர, புத்ர, ‡ ஜநநீ ஜநகாதியர்களிடத்தில் வஞ்சனையோடு கூடினவனாய், திரவியத்தையே மேலாக மதித்து பேராசையோடு விளங்குவானோ, அந்த அதமன் ஸ்ரீ விஷ்ணுபக்தன் அல்லன் என அறியக்கடவை. எவன் அயோக்ய நினைப்பையும், அயோக்ய காரியங்களில் ஆஸக்தியையும், அயோக்ய ஸஹவாஸத்தால் உண்டான அத்விதீய மதத்தையும் அனுசரித்து, ஸதா பாவ கர்மங்களைச் செய்துகொண்டு காலங் கழிப்பானோ, அந்த மனுஷ்ய மிருகத்தை ஸ்ரீ விஷ்ணுபக்தன் அல்லன் என்று அறிந்துகொள்ளக்கடவாய். பரம புருஷனும், பரமேஸ்வரனும் ஆகிய ஸ்ரீ வாஸுதேவன் ஒருவனே, தமக்கும் ஸகல பிரபஞ்சத்திற்கும் சரீரமுடையவனா யிருக்கின்றான் என்று, ஸ்ரீ அனந்தனிடத்தில் யார்க்கு ஸர்வ வியாபகத்வ புத்தி ஸ்திரமா யிருக்குமோ, அப்பேர்ப்பட்ட மஹா புருடர்களைக் கண்டனையாயின் தூரத்தில் நீங்கிப்போகக்கடவாய். "கமல நயனா! வாஸுதேவா! விஷ்ணோ! தரணீதரா! அச்சுதா! சங்கசக்ரபாணீ! நீ தாஸபூதர்களாகிய எமக்குச் $ சரணம் ஆக வேண்டும்" என்று யார் சொல்லிக்கொண்டிருப்பார்களோ அப்படிப்பட்ட மஹா பரிசுத்த புருஷர்களை, நீ கண்ணெடுத்துப் பாராமல் தூரமாய் ஓடிப்போகக் கடவாய். விகார நாசாதி ரகிதனாய், ஸத்ய ஞானானந்தமயனாய்ப் பிரகாசிக்கும் பகவான், எவனுடைய இதய கமலத்தில் வாஸம் செய்துகொண்டிருப்பானோ, அந்த மஹா புருஷனுடைய கடாக்ஷம் ¶ பிரஸரிக்கின்ற இடங்களிலெல்லாம், நீ போகக்கூடாது; நானும் போகக்கூடாது. மீறிப் போவோமானால், அந்த பகவானுடைய சக்ர ஒளியின் விசேஷத்தால் கண் தெரியாமல் மயங்குவோம். அம் மஹாபுருஷன், ஸ்ரீ வைகுந்த திவ்ய லோகத்திற்குப் போகத்தக்கவன் என்று உணரக்கடவாய்? என்று விளங்க உரைத்தான். இந்த ஸம்ஸார மஹா ஸமுத்ரத்தில் மூழ்கிக் கிடக்கும் பிராணிகளுக்கு ஸ்ரீமந் நாராயணன் தவிர, வேறோர் உஜ்ஜீவனோபாயம் கிடையாது. எவன், பகவானிடத்தில் ஆத்ம + ஸமர்ப்பணம் செய்திருக்கின்றானோ, அவன் விஷயத்தில் யமகிங்கரர்களாயினும் காலபாசமாயினும் % யாதனாஸ்தானங்களாயினும் ஒன்றுஞ் செய்யமாட்டா. பரம ரஹஸ்யமாகிய பாகவத தர்மத்தை × ஆசார்யோபதிஷ்ட மார்க்கமாய் உமக்கு விண்ணப்பித்தேன். இதனால் உமக்கு, நான், || அஜ்ஞாதஜ்ஞாபனம் செய்தவன் அல்லேன். உமது விஷயத்தில் கிஞ்சித்கரிக்க வேண்டுமென்று விரும்பினேன் ஆகையால், எனக்கு ஆசார்ய

* விநியோகம் - செலவு.
† களத்ரம் - மனைவி.
‡ ஜநநீஜநகர் - தாய்தந்தையர்.
$ சரணம் - ஆதரவு, உதவி, புகலிடம்.
¶ பிரஸரித்தல் - பரவுதல்.
+ ஸமர்ப்பணம் - நிவேதனம்.
% யாதனம் - வேதனை - சித்ரவதை.
× ஆசார்ய+உபதிஷ்டம்-ஆசார்யர் அறிவித்தது.
|| அஜ்ஞாதஜ்ஞாபனம் - மயர்வறுத்தல்.

* கிருபாலப்தமாகிய ஞான தனத்தில் அதி விலக்ஷணமாகிய பாகத்தை உமக்கே ஸமர்ப்பித்தேன்; என்னை மறவாதிருக்கவேண்டும். போய் வருகிறேன்" எனக்கூறி வீஸோபாவின் நியமனத்தைப் பெற்று, யதேச்சையாய்ச் சென்றார். பிறகு வீஸோபா, தாம் வர்த்தகனுக்குத் தவணை சொன்ன தினங்களுக்குள், "இன்றைக்கு ஆறு தினங்கள் சென்றன" என்று, தமது மனத்திற் சிறிது கிலேசமுற்றார். அப்போது, பரம கிருபாநிதியாகிய ஸ்ரீ பண்டரிநாதன், "தந்தையின் கடனை மைந்தன் வருந்தித் தீர்க்கிறபடி, என்னைப் பெற்ற தந்தையாகிய எனது பக்தனுடைய கடனை நான் தீர்ப்பேன். எனது ஸ்வரூபத்தையாகிலும் கெடுத்துக்கொண்டு, எனது பக்தர்களுடைய வார்த்தைகளைக் காப்பாற்றுதல் எனக்கு முக்ய விரதமாய் இருக்கின்றது. ஆயுதத்தைத் தொடேன் என்று † சூளுரைத்த நான், என்து பக்தனாகிய பீஷ்மனுடைய சூளுரையைக் காப்பாற்று நிமித்தம், பாரத ரணகளத்தில் சக்கரத்தைத் தொட்டேன்" என்று தனக்குள்ளே எண்ணிக்கொண்டு, வீஸோபா, துருக்கனுக்குச் செலுத்தவேண்டிய எழுநூறு வராகன்களையும் வட்டியுடன் ஒரு பையிற் கட்டித் தலைமேல் தாங்கிக்கொண்டு, வீஸோபாவினுடைய பரிசாரக வேஷந் தரித்துத் துருக்கனிடத்திற்குச் சென்று, "ஐயா! நான், வீஸோபாவுடைய பரிசாரகன். எனது எஜமானன் உமக்குச் செலுத்தவேண்டிய எழுநூறு வராகன்களையும் என்னிடத்திற் கொடுத்தனுப்பினார். நீர் கணக்கைப் பரிஷ்காரஞ் செய்து இந்தத் தொகையை அங்கீகரித்து, எனது எஜமானர் உமக்கு எழுதித் தந்த கடன் பத்திரத்தை எனது கையிற் கொடும்" என்று கூறினான். அதைக் கேட்ட துருக்கன் சந்தோஷமடைந்து, வீசோபாவின் சத்தியத்தைப் புகழ்ந்து, நாலுபேர் வர்த்தகர்களைக் கூட்டிக்கொண்டு வட்டியுடன் கணக்கைப் பரிஷ்காரஞ் செய்து அந்தத் தொகையை அங்கீகரித்து, வீஸோபா தனக்கு எழுதித்தந்த கடன் பத்திரத்தில் "எனக்குச் சேரவேண்டிய எழுநூறு வராகன்களும் வட்டியுடன் செலுத்தப்பட்டன" என்று எழுதிக் கையெழுத்துப்போட்டு, அதைப் பரிசாரகன் கையிற் கொடுத்தான். பண்டரீநாதனாகிய பரிசாரகன், அந்தப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்டுவந்து, வீஸோபா நாள்தோறும் பாராயணம் பண்ணுகிற ‡ கீதா கிரந்தத்தில்வைத்து மறைந்தான். மறுநாள், வீஸோபா ஸ்நானானுஷ்டானங்களை முடித்து, பாராயணத்திற்காக பகவத்கீதா புஸ்தகத்தை விரிக்கையில், அதில் தாம் துருக்கனுக்கு எழுதித் தந்த கடன் பத்திரம் இருந்தது. அந்தப் பத்திரத்தைப் பார்க்கையில் அதில், "எனக்குச் சேரவேண்டிய திரவியத்தை வட்டியுடன் உனது பரிசாரகன் செலுத்தினான்" என்று துருக்கனுடைய கையெழுத்தோடு எழுதப்பட்டிருந்தது. அதனைக் கண்ட வீஸோபா ஆச்சரியமடைந்து, ஸ்ரீ பண்டரிநாதனுடைய சந்நிதிக்குவந்து; அவனுடைய எதிர்முகத்தில் நின்று ஆனந்த பாஷ்பங்களைப் பொழிந்துகொண்டு பின் வருகின்றபடி துதிப்பாராயினர்:

* கிருபாலப்தம் - கிருபையால் கிடைத்தது. † சூள் உரைத்தல்-பிரதிஜ்ஞை செய்தல். ‡ கீதா கிரந்தம் - பகவத்கீதை.



"ஸ்ரீபுண்டரீகாக்ஷா! தாஸர்களுக்கு அபயம் தருபவனே! நித்யமாகிய திவ்ய சரீரங்களை உடையவனே! ஸர்வத்திற்கும் அந்தரியாமியாயிருப்பவனே! ஸகல பூதங்களையும் சரீரமாய்ப் பெற்றிருப்பவனே! ஸகல பூதங்களுக்கும் கர்த்தாவாயிருப்பவனே! நினக்கு தண்டம் சமர்ப்பிக்கின்றேன். மனம், புத்தி, இந்திரியங்கள் என்னும் இவைகளுக்குக் கர்த்தாவாய் விளங்குபவனே! ஸமஸ்த கலியாணகுணங்களால் பரிபூர்ணனாய்த் த்ரிகுணாதீதனாயுள்ளவனே! ஷடூர்மி பாதைகளற்றவனே! சுத்த ஸத்வமயமானவனே! வெண்மை முதலிய நிறங்களும், நெடுமை முதலிய பரிமாணங்களும் ஆகிய பலவித கற்பனைகளைக் கடந்தவனே! உற்பத்தி முதலிய விகாரங்களால் ஸ்பரிசிக்கப்படாதவனே! ஸ்வப்நம்முதலிய அவஸ்தைகள் அற்றவனே! நினக்கு வந்தனம்செலுத்துகின்றேன். அச்சுதனே! ஸந்தி, ராத்திரி, பகல், பூமி, ஆகாசம், காற்று, ஜலம், அக்னி, மனம், புத்தி, பூதாதிகள் ஆகிய இவை யனைத்தும் நினது ஸ்வரூபங்களா யிருக்கின்றன. ஓ ஸ்வாமி! உலக கர்த்தர்களாகிய சதுர்முகாதிகளுக்கு அதிபதியாகிய நீயே ப்ரஹ்மாதி நாமங்களையுடைய நினது திவ்ய சரீரத்தைக்கொண்டு, ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்கின்றனை.

"மூவராகிய வொருவனை மூவுல குண்டுமிழ்ந் தளந்தானை
தேவர் தானவர் சென்றுசென் றிறைஞ்சத்தண் திருவயிந் திரபுரத்து
மேவு சோதியை வேல்வல வன்கலி கன்றிவிரித் துரைத்த
பாவு தண்டமிழ் பத்திவை பாடிடப் பாவங்கள் பயிலாவே" என்ற

திருமங்கையாழ்வார் திருவாய்மொழி இங்கே சிறப்புடைமை காண்க. இதுமட்டும் அல்ல; தேவர்கள், அஸுரர்கள், யக்ஷர்கள், இராக்ஷஸர்கள், ஸித்தர்கள், பன்னகர்கள், கூஷ்மாண்டர்கள், பிசாசங்கள் கந்தர்வர்கள், மானிடர்கள், மிருகங்கள், பக்ஷிகள், பாம்புகள், விருக்ஷங்கள், செடிகள், கொடிகள், புல் பூண்டுகள் முதலியவைகளும், ஸ்தூலங்களாய், மத்யமங்களாய், ஸூக்ஷ்மங்களாய், ஸூக்ஷ்மங்களின் ஸூக்ஷ்மங்களாயுள்ள பலவித ரூபங்களும் ஆகிய இவைகளனைத்தும் நினது சரீரங்களா யிருக்கின்றன. பரமார்த்தத்தை உணரவொட்டாமல்மோஹத்தை வளர்க்கும் மாயை உனது அதீனத்தில் இருக்கின்றது. இதனால், மூடன் ஒருவன், அநாத்மாவை ஆத்மா என்றெண்ணி பந்திக்கப்படுகிறான். ஓ ஸ்வாமீ! * அபதார்த்தத்தில் பதார்த்தஞானமும், 'யான், எனது' என்னும் அஹங்கார மமகாரங்களும், ஸம்ஸாரத்திற்குத் தாயாகும் இந்த மாயையின் காரியங்களாய் இருக்கின்றன. யார் ஸ்வதர்மத்தில் பற்றுள்ளவர்களாய் உன்னை ஆராதிக்கின்றார்களோ, அப்படிப்பட்டவர்கள் மாத்திரம் மோக்ஷப்ராப்திக்காக அந்த மாயையைக் கடப்பதற்கு வல்லவர்களா யிருக்கின்றார்கள். பிரமாதி தேவர்க

* அ + பதார்த்தம்-பதார்த்தம்அல்லாதது.

னும், மனிதர்களும் இந்த மாயை யென்னும் பெருஞ்சுழியால் நேரிட்ட * மஹாந்தகாரத்தால் மூடப்பட்டிருக்கின்றார்கள். உலகினர், நின்னை ஆராதித்து, பலவிதமான கோரிக்கைகளைக் கோருகின்றார்களேயொழிய, தமக்கு நேரிட்டிருக்கும் ஸம்ஸார நாசத்தைக் கோராதிருத்தல் இந்த மாயையின் மஹிமையா யிருக்கின்றது. இதற்கு, † ருண நிவிருத்தியை மாத்திரம் தேடி, ஸம்ஸார விருத்தியைத் தேடின நானே திருஷ்டாந்தமாயிருக்கின்றேன். மாயாவிலாஸ மஹிமையால், இங்ஙனம் நான் செய்தது எனது பிழையேயன்றி உனதல்ல; ஒருவன், கற்பக விருக்ஷத்தைச் சேர்ந்து கௌபீனத்தை ஏற்பானானால், அது ஏற்பவனுடைய தோஷமே யன்றிக் கற்பகவிருக்ஷத்தினுடைய தோஷமன்று. ஸகலலோகங்களையும் மாயையால் மோஹிக்கச்செய்பவனே! ‡ அவ்யயா! ஸர்வேஸ்வரா! ஞானம்போல் தோன்றுகிற இந்த அஜ்ஞானத்தை நீ நாசஞ்செய்யவேண்டும். ஓ, பகவானே, ஸ்ரீ பாஞ்சஜந்ய ஸுதரிசன கௌமோதகீ சாரங்க நந்தக ஹஸ்தனாகிய உனக்கு தண்டம் ஸமர்ப்பிக்கின்றேன். ஸர்வோத்தம! ஸ்தூல சின்னங்களோடு கூடிய உனது ஸ்தூல ரூபத்தை பார்க்கின்றேனே தவிர, ஸூக்ஷ்ம ரூபத்தைக் காணக் கல்லாதவனாயினேன். ஆதலால் எனது விஷயத்தில் அநுக்ரஹித்தருள்வாய்" என்பவைகளேயாம். அவர், இங்ஙனந் துதித்து, "தேவாதிதேவா! எனது ருணத்தைத் தீர்ப்பதற்காக, நீ ஏன் வருந்தினை?" எனக் கேட்க, ஸ்ரீ பண்டரிநாதன் பிரஸந்நனாய், "ஓ, வத்ஸா! எனது பக்தர்களுடைய ஸங்கட நிவாரணஞ் செய்தலே எனக்குத் தொழிலா யிருக்கின்றது. எனக்கு எந்நேரமும் இதுவன்றி வேறு கிருத்தியம் கிடையாது. இதற்காகவே யல்லவா புண்டரீகாநுக்ரஹ $ வியாஜ்யத்தால் நான், இந்தப் பண்டரிபுரத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கின்றேன்? துருக்கனுக்குப் பணத்தைச் செலுத்திவிட்ட பிறகு நீ ருணவிமுக்தனாகினை. உன்னையும், உனக்கு வேண்டியவர்களையும், ¶ விரஜையைக் கடப்பிக்கும் வரையில், நான் கடனாளியா யிருக்கின்றேன். நான் பக்திக்ரீதனென்பதைக் கேட்டறியாயா! உனது பக்தியை அங்கீகரித்த நான், உன் விஷயத்திற்பட்ட கடனைத் தீர்க்கமுடியாதவனா யிருக்கின்றேன். உன்னையும், உனக்கு வேண்டியவர்களையும் விரஜையைக் கடப்பித்த பிறகும் எனது கடன் தீராது. நான் யாவதாத்மபாவி, எனது தாஸர்களுக்குத் தாஸனாய் இருப்பேன்" என்று சொல்லி யருளினான். அதைக் கேட்டு வீஸோபா, ஆனந்த பரவசரானார். ஸகல ஸாதுக்களும் இவ்விருத்தாந்தங்களைக் கேட்டு, ஸ்ரீ பண்டரிநாதனைப் பல விதங்களில் துதித்து, வீஸோபாவுக்கு நெருங்கிய சிஷ்யர்களாய் விளங்கியிருந்து, அவருடைய அபிமானத்தால் பரம வைஷ்ணவ ஸாயுஜ்ய பதவியைப் பெற்றார்கள்.

ஸங்கடஹராயநம:

* மஹா + அந்தகாரம் - பொருள். † ருண + நி + விருத்தி - கடனை ஒழித்தல். ‡ அவ்யயன் - அழிவில்லாதவன். $ வியாஜம் - நோக்கத்தால். ¶ விரஜை - பரமபதத்துக் கருகிலுள்ள நதி.



## எழுபத்து இரண்டாம் அத்தியாயம்

# புண்டரீகன் சரித்திரம்

ஸ்ரீகைலாஸத்தில், பார்வதிதேவி பரமேஸ்வரனை நோக்கி, "ஸ்வாமீ பரதகண்டத்தில், மஹா பிரக்யாதி பெற்ற பண்டரிபுரத்தில், ஸ்ரீ லக்ஷ்மீ நாயகனாகிய மஹாவிஷ்ணு வாஸஞ்செய்வதற்குக் காரணம் என்ன?" என்று கேட்க, அதற்கு அவர் இங்ஙனங் கூறினார்:

பார்வதீ! கேள்; வநமாலாதரனாகிய பகவான், ஸ்ரீவைகுண்டத்தில் வசித்திருந்த காலத்தில் ஒருநாள், சகலரும் அற்புதம் அடையத் தகுந்த உருவத்தோடு கூடின இந்திராணி அவ்விடத்திற்கேகி, மஹாவிஷ்ணுவின் திவ்யதேஜோ ரூபத்தைத் தரிசித்து,

'திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்க னணிநிறமும் கண்டேன்—செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கு அங் கைக்கண்டேன்
என்னாழி வண்ணனபா லின்று'

'இன்றே கழல்கண்டேன் ஏழ்பிறப்பும் யானறுத்தேன்
பொன்றோய் வரைமார்பில் பூந்துழாய்—அன்று
திருக்கண்டு கொண்ட திருமாலே உன்னை
மருக்கண்டு கொண்டேன் மனம்'

'அடிவண்ணம் தாமரை அன்றுலகம் தாயோன்
படிவண்ணம் பாற்கடல்நீர் வண்ணம்— முடிவண்ணம்
ஓராழி வெய்யோன் ஒளியும் அஃதன்றே
ஆராழி கொண்டாற் கழகு' என்று,

பலவாறு துதித்து, அஞ்சலியஸ்தையாய் நின்று, "ஸ்வாமீ! சர்வரக்ஷகனாகிய நினது பக்கலில் வசிக்கவேண்டுமென்று கோரிவந்திருக்கின்றனன்; எனது அபீஷ்டத்தை வரதனாகிய நீ நிறைவேற்றியருளவேண்டுமென்று விண்ணப்பித்தனள்.

அதனால், பரமதயாகரனாகிய பகவான், சசீதேவியை நோக்கி, "நீ வேண்டியவரம் மிகவும் சிலாக்யமானது. நினது கோரிக்கையை நிறைவேற்றுகின்றேன். அதற்காக நீ, பூலோகத்திற்குச் சென்று, அறுபதினாயிர வருஷம் அகோர தவம் செய்தனையாயின், நான் துவாரகாபுரியில் ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் எடுத்து, நினது அபீஷ்டப்படி உன்னை எனது பக்கலில் இருத்திக்கொள்கின்றேன்" என்று அநுக்ரஹித்தனன்.

இதனைக் கேட்டவுடனே இந்திராணி, ஸ்வாமியின் சரண கமலங்களிற் பணிந்து, "தேவரீருடைய ஆஜ்ஞையின்படியே நோற்கின்றேன்" என்று கூறி, அநுமதிபெற்றுப் பிரிந்து பூலோகத்திற்குச் சென்று, ஒரு

பரிசுத்த ஸ்தலத்தில் நின்று, அறுபதினாயிரம் வருஷம் மஹாகோர தவம் புரிந்தனள். அந்தத் தவத்தின் மகிமையால் சசிதேவி, ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி வாசஞ் செய்துகொண்டிருந்த கோகுலத்தில் ராதா தேவியாய் அவதரித்தனள்.

இங்ஙனம் அவதரித்த இந்திராணி, குழந்தைப்பருவந் தொடங்கி ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியோடுகூடி விளையாடிக்கொண்டிருந்தனள். வாஸுதேவன் கோகுலத்தைவிட்டு துவாரகைக்குச் சென்றபிறகு, ராதா தேவி ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியினுடைய பிரிவுக்கு இரங்கி, எதுவும் ஏற்றுக்கொள்ளாமல் நாளாவட்டத்தில் மெலிந்தாள். இங்ஙனம் பலநாட்கள் சென்றபிறகு ராதாதேவி, ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியை நினைந்து, பூர்வத்தில் பகவான் தனக்கு அருளிய வரம் பலிக்கும் காலம் நெருங்கியதனால் துவாரகாபுரிக்குச்சென்று, வேற்றுருவம் பூண்டு, மேகஶ்யாமன் மந்திரத்தில் தங்கினாள். பகவான், அக்கணத்திலேயே ராதாவைக் கடாக்ஷித்து, தனது தொடைமேற் குந்தவைத்துக் கொண்டனன்.

ஸ்ரீருக்மிணிதேவி இதனைக்கண்டு, தனக்குள்ளே மிகவும் வருந்தி, ஸ்ரீகிருஷ்ணமூர்த்திமேற் கோபித்துக்கொண்டு நிஷ்டூரவார்த்தைகளாடினாள். பகவான், பலவிதத்தில் சமாதானம் கூறினான். கூறியும் அவ்வம்மை அதனைக்கேளாமையால், ராதாதேவி, தனக்குள்ளே, "என்னால் ருக்மிணீதேவி வருந்தினாள். ஆகையால், நான் இவ்விடத்தில் இருப்பதற்குத் தகாது" என நிச்சயித்து உடனே புறப்பட்டு, லோஹதண்டம் என்கிற டிண்டீரவனத்துக்குச்சென்று, ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியை மனத்தகத்தில் நிறுத்தி சகல துக்கங்களும் நிவர்த்தியாகும்படி, உக்ர தவஞ் செய்துகொண்டிருந்தனள்.

இங்ஙனம் இருக்கையில், ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி ராதாதேவியினுடைய பிரிவை ஆற்றாதவனாகி, ருக்மிணீதேவியைவிட்டு நீங்கி, ராதை எங்கிருக்கின்றனளோவென்று பரிதாபப்பட்டுக்கொண்டு, செடி செட்டு வனம் வனாந்தரம், மலை முழை, முதலாகிய இடங்களிலெல்லாம் தேடி இளைத்து, எங்குங் காணாமல் கோகுலத்துக்கு எழுந்தருளி, பசுக்களைக் காக்கும் கோலே தண்டமாகவும், சங்கமே கமண்டலமாகவும், ஏற்படுத்திக்கொண்டு, மாதவவேடம் பூண்டு, அங்கங்குத் திரிந்து ராதாவைத் தேடினபடியே, டிண்டீரவனம் சேர்ந்தான்.

அவ் வனம், ஸகஹாரம், சந்தனம், மாஹுரம், ஜம்பீரம், நிம்பம், அசோகம், புன்னாகம், வகுளம், சண்பகம், பூதரீ, பனஸம், வடம், குந்தம், குருவம் முதலிய விருக்ஷங்களையும், பரிமள குஸுமங்களையும், மதுர கனிவர்க்கங்களையும், மயில் குயில் பூவை முதலிய பக்ஷிவகைகளின் சளசளத்த குரல் ஓசைகளையும், விலங்குக் கூட்டங்கள் திரிகின்ற விநோதத்தையும், கமலம் கல்லாரம் நீலம் முதலிய நிறைந்துள்ள திவ்ய ஜல தடாகங்களையும், அன்னம் கொக்கு முதலிய ஜலப் பறவைகளின் விளையாட்டு விசேஷங்களையும்கொண்டு விளங்கி மனதிற்கு எத்தனையோ



உற்சாகத்தை உண்டாக்கியதால் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அதிசயம் அடைந்து, "ஒருவேளை ராதாதேவி, இங்கிருந்தாலும் இருக்கலாம்" என்று எண்ணி, அவ்வனத்தில் திரியத்தொடங்கினன்.

இப்படி ஸஞ்சரித்துக்கொண்டு ராதாவைத் தேடிவருகையில், ஓர் இடத்தில் ஸ்ரீராதாதேவி தவஞ்செய்துகொண்டிருக்கக்கண்ட பகவான், அவ்வம்மைக்கெதிரில் நின்று "மோஹநாங்கீ! நீ இங்ஙனம் நிர்ஜனாரண்யத்தில் ஒன்றியாய்த் தவம்செய்து வருந்துங் காரணம் என்ன? துஷ்ட விலங்குகள் வாழும் வனத்தில் எங்ஙனம் வசிக்கின்றனை? இப்படிப்பட்ட தைரியம் உனக்கெப்படி உண்டாகியது?" என்று கேட்டனன். அதற்கு ராதாதேவி, கண்களைத் திறந்து நோக்கி, "நீ யாவன்? வேஷம் பூண்டு இங்கு வரவேண்டிய காரணம் யாது? மரியாதையோடு போய்விடு" என்று கூறினள். பகவான், "மீனாக்ஷீ! நான் உன்னைத் தேடிக்கொண்டு இங்குவந்தேன். வேறு வேலை எனக்கொன்றும் கிடையாது; என்னை நீ, யாரென்று கேட்டனை ஆதலால், நான் உனது காதலன் என்றறிந்துகொள்ளக்கடவை?" என்றனன். இம் மொழிகளை ராதாதேவிகேட்டு, "ஐயா! எனது காதலற்கு அநேக பத்தினிகள் இருக்கின்றார்கள். அவர்களை விட்டு, அவர் என்னிடத்திற்கு வரமாட்டார் என்றெண்ணின எனக்கு நீர் ஒன்றியாய்வந்து எனது காதலன் என்று கூறுகின்றீர்! மாறுவேடந்தாங்கி இருக்கிறீர்! வஞ்சகராய்க் காணப்படுகின்றீர்! இன்னும் ஒரு விசேடம். ஸ்திரீகள் இருப்பிடத்திற்குப் புருஷாள் நிர்ப்பயமாய் வரத் தகாது. ஆதலால் நீர், இன்னும் இவ்விடத்தில் தாமதித்து நில்லாமல் உமது இருப்பிடம் செல்லக்கடவீர்" எனக் கூறினள். அதுகேட்ட ஶ்யாமளமேனியன், தனது கரத்திலிருந்த தண்டத்தை முழங்கால்களுக் கிடையிலும், கரங்களிரண்டையும் இடுப்பிலும் ஊன்றிக்கொண்டு, நாசிநுனியை நோக்கினபடியே, * ராதாநுராகனாய், இன்றளவும் நின்ற திருக்கோலத்துடன் எழுந்தருளி யிருக்கின்றனன் என்பதேயாம். இங்ஙனங் கூறின பரமேஶ்வரனைப் பார்வதீதேவி நோக்கி, "பகவான் எத்தனை காலமாய் அப்படி நின்றுகொண்டிருக்கின்றனன்?" என்று கேட்கப் பரமசிவன், பகவான் "இருபத்தெட்டு சதுர் யுகங்களாக நின்றுகொண்டிருக்கின்றான்" என்று விடை கூறினான்.

அதன்மேல், பார்வதீதேவி, "பிறகு நடந்த விருத்தாந்தம் என்ன?" என்று கேட்கப் பரமசிவன், இங்ஙனம் கூறுகின்றான்.

பார்வதீ! ஸாவதான சித்தத்தோடு கேள். டிண்டீரன் என்னும் பேருள்ள ராக்ஷதன் ஒருவன், மஹா கொடுமையுள்ளவனாய், இருளையகற்றும் சூரியன் தனது தேர்மேல் ஏறிச் செல்லாதபடி அவனைப் பிடித்து இறுக்கிக் கட்டி, ஸகல பிராணிகட்கும் சங்கடம் உண்டாக்கிக்கொண்டிருந்தனன். இங்ஙனம் இருக்கையில், தவசிரேஷ்டர்கள் யாவரும் ஒன்றுகூடி திருப்பாற்கடலிற்சென்று, ஸ்வாமியின் திருமுன்னே நின்று

* ராதா+அநுராகன் - ராதாவிடத்திற் செலுத்தின ஆசையை உடையவன்.

“பக்த ரக்ஷகா! பாபநாசா! துரிததூரா! காப்பாற்றியருள்வை” என வேண்டினார்கள். அதைக்கேட்ட பகவான், அந்த தேவர்களையும் முனிவர்களையும் நோக்கி, உங்களுக்கு அபயம் அளித்தேன்; உமது கோரிக்கை யாது? என்று கேட்டனன். அதற்கு அவர்கள், டிண்டீரனுடைய விருத்தாந்தத்தைத் தெரிவித்தார்கள். பகவான் அவர்களைக் கடாக்ஷித்து “நான் மல்லிகார்ச்சுனன் என்னும் பெயரோடு அவதரித்து உமது துயரங்களைப் பெயரச்செய்வேன்” என வரம் அருளினன். இதுவே, ஆதியில் நடந்த விருத்தாந்தம் என்றறியக்கடவை. இங்ஙனம் இருக்கையில், ஸ்ரீ சந்திரன் என்னும் பேருள்ள ஓரரசன், என்னை நோக்கி அருந்தவம் புரிந்தனன். நான் அவனுக்கு பிரத்தியக்ஷமாய், “உனது அபீஷ்டம் என்ன?” என்று கேட்டேன். அவன், “விஷ்ணுசமானனாகிய புத்திரன் ஒருவனை எனக்குக் கிருபை செய்யவேண்டும்” என்று வேண்டிக் கொண்டான். அவனுக்கு நான், “உனக்கு ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியே புத்திரனாக அவதரிப்பார்” என்று வரமளித்தேன்.

அப்படியே ஸ்ரீமஹா விஷ்ணு, ஸ்ரீ சந்திரராஜனுக்குக் குமாரனாய் அவதரித்தார். அவ்வரசன் புத்திரோற்சவங் கொண்டாடி, பூசுரர்க்கு தானம் அளித்து, தீனர்களுக்கு ஸந்திருப்தி செய்து, பந்து ஜனங்களுக்கு விருந்தளித்து, ஸகல ஜனங்களையும் ஸம்மானித்து, அப் புத்திரனுக்கு மல்லிகார்ச்சுனன் எனத் திருநாமஞ் சூட்டினான். அந்தப் பாலகன், பிரவர்த்தமானனாய், சில தினங்களுக்குள் அஸமான பாண்டித்யம் உடையவனாயினான்.

இங்ஙனம் இருக்க, ஒருநாள் மல்லிகார்ச்சுனன் வேட்டையாட விரும்பினவனாய், டிண்டீரவனத்திற்குச் சென்றனன். அவ்வனவாஸியும் மஹா கொடியனுமாகிய டிண்டீரனென்னும் ராக்ஷஸன், குரோத குணமுடையவனாய் மல்லிகார்ச்சுனனை நோக்கி, “ஏடா! நீ இவ்வனத்திற்கு வரத் தகுமா? இது எனது வசத்தில் இருப்பதை அறியாயா? துஷ்டனாகிய உன்னை, சிக்ஷை செய்யாமல் விடமாட்டேன்” எனக்கூறி, அவனைப்பற்றி அடிப்பதற்கு ஆரம்பித்தான். அப்போது மல்லிகார்ச்சுனனும் அந்த இராக்ஷதனை எதிர்க்க ஸந்நத்தனாயிருந்தான். இப்படி ஒருவனை ஒருவன் கொல்லவெண்ணி, இவர்கள் அகோர யுத்தம் புரிந்தார்கள். இவர்களில் எவனும் அபஜயம் அடையவில்லை. மல்லிகார்ச்சுனன் தனக்குள்ளே, “இந்த துஷ்டதானவனைக் கொல்லும் உபாயம் ஏதுவும் தோன்றாமல் இருக்கின்றதே” என்று சிறிதுயோசித்து, லோஹ தண்டம் என்னும் கதாயுதத்தைக் கரத்திற்றாங்கி டிண்டீரனைப் புடைத்த மாத்திரையில், அவன் ‘ஸ்ரீஹரி’ என்று நிலமேல் விழுந்தான். அக்கணம் மல்லிகார்ச்சுனன், திவ்ய தேஜஸோடு கூடின சரீரத்தோடு அந்த அரக்கனுக்கு எதிரில் நின்று, “உனக்கென்னவரம் வேண்டும்? கேள்” என்றனன். அதற்கு டிண்டீரன், “உனது கதாயுதத்தால், என் உயிர் போகின்றது. ஆகையால், உனது கதாயுதத்தின் நாமமாகிய லோஹதண்டம் என்பது இந்த வனநாமமாய் வழங்கும்படி கிருபை செய்யவேண்டும். இங்கே அழகான நகரமொன்று நிருமித்து, அதற்கு



லோஹதண்டம் என்ற நாமமிட்டு, அவ்விடத்தில் நீ நித்ய வாஸஞ்செய்ய வேண்டும். இங்குள்ள ஸர்வ பாபஹரமாகிய பாநு தீர்த்தத்திற் கருகில் என்பேரால் தீர்த்தமொன்று ஸ்தாபித்து அங்கு இந்தக் கதாதண்டத்தைப் பிரதிஷ்டை செய்யவேண்டும். அந்தத் தீர்த்தத்தில் மூழ்கி கதாதண்டத்தை ஆலிங்கனம் செய்பவர்களுடைய ஸர்வதோஷங்களையும் பரிகரிக்கும்படி, கிருபை செய்யவேண்டும். இதுவே எனது வரம்” என்று வேண்டினான். அதற்கு, மஹா விஷ்ணுவினுடைய * அபராவதாரனாகிய மல்லிகார்ச்சுனன், “நீ கோரினவரம் கொடுத்தேன்” என்று கூறி, அவனை வைகுந்த லோகத்திற் செலுத்தினன். அன்று முதல், அவ்வனம், ஸகல வனங்களிலும் சிறப்புற்று விளங்குகின்றது.

அந்த லோஹதண்ட நகரத்தில், தயாதி சற்குண பூர்ணரும், பாபரஹிதரும், ஜந்மநாசகராகிய ஸ்ரீமந் நாராயண நாம பாராயணரும், ஸத்கர்ம நிரதரும், ஸத்யவந்தருமாகிய ஜன்னு என்னும் பேருடைய வேதியர் ஒருவர், வாசஞ்செய்து கொண்டிருந்தார். அவ்வேதியபுங்கவர், குலத்தில் உயர்ந்து குணத்திற் சிறந்த பதிவிரதா சிரோமணியாகிய ஸாத்யகி என்னும் தர்மபத்னியோடுகூடி கிருகஸ்த தர்மம் தவறாமல் நடத்திக் காலங்கழிப்பாராயினர். இங்ஙனம் பல தினங்கள் சென்றபிறகும், ஸந்தானம் இல்லாதபடியால், தம்பதிகள் இருவரும் அந்தக் குறைதீரத் தவஞ்செய்து கொண்டிருந்தார்கள். அந்தத் தவமகிமையால், அவர்களுக்கு ஒருபுத்திரன் பிறந்தான். அந்தப் பாலகனுடைய திவ்ய வடிவத்தை வியந்து, தாய் தந்தையர் அவனுக்குப் புண்டரீகன் என்று நாமகரணம் செய்து மிகவும் அருமையாய் வளர்த்துவந்தார்கள்.

அந்தப் பாலகன், நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, வித்யாப்யாஸம் முதலிய செய்யப்பெற்று, வேதாத்யயன சம்பன்னனாய் விளங்கினான். பிறகு தாய்தந்தையர், அவனுக்குத் திருமணமுடித்து மன மகிழ்ந்திருந்தனர். ஆயினும் பூர்வ ஜன்ம வாசனையால், புண்டரீகன், துஷ்டர்களோடு கூடி, வேசையர் வசப்பட்டவனாய், நீசகார்யங்களைச் செய்துகொண்டிருந்தனன். அவனுடைய தாய் தந்தையர் அதற்காக மிகவருந்தி, அவனைநோக்கி, “தம்பீ! நீ, நமது குலாசார தர்மத்தை மீறி நடக்கின்றனை. வேசையர் நட்பு நரக காரணம்; ஸகல ஜன்ம புண்ய நாசம்; எல்லையில்லாத் தொல்லைக்கு இருப்பிடம்;

‘விளக்கொளியும் வேசையர் நட்பும் நெய்யும்
கையும் அற்றபோதே அறும்’

என்றபடி, அது, பொருளுள்ள வரையில் தான் இருக்கும்.

‘மைவிழியார் மனையகல்’

என்றபடி, நீதிமான்கள் அதை அருவருத்து ஒதுக்கியிருக்கின்றார்கள். இழிகுணத்தோரே அதனை, இனியது என்று ஏற்றுக்கொள்வார்கள்; அது துரபிமானத்திற்குத் துணையாய் நிற்பது; வேசையர், கூனன் முடவன் குருடனே ஆனாலும், “ஈனம் நமக்குண்டோ பொன்னீந்தக்கால்” என்

றெண்ணினவர்களாய், ஒருவனுடைய பொருளைப் பறிக்கு நிமித்தம் அவன் மேற் பொய்யாசை செலுத்தி, அதை மெய்யாசையாக மெய்ப்பிக்குமாறு, பலபல பொய் ஆணை இடுவார்கள். உனது முகத்தைக் காணாத தினம், சந்திரனில்லா இரவுபோன்றதென்றும், அன்னபானாதிகள் ஏற்றுக்கொள்ளவில்லையென்றும் கூறுவார்கள். உனது எச்சிற்றம்பலமாயினும், தயை செய்யாமற் போனால், எனது உடல் எனது ஸ்வாதீனத்தில் இராதென்று சொல்லுவார்கள். மோகத்தினாலும், போலிவணக்கத்தினாலும், டக்கு டமாகத்தாலும் மிகுந்த பொய்யன்பு காட்டுவார்கள். வேசையர்களின் தாய்மார்கள், மருகரிடத்தில் மிகுந்த அன்புடையவர்களாகி நடித்து, ஏதேதோ நோன்பு நோற்கவேண்டுமென்றும், ஐப்பசித்திருநாள் என்றும், ஆடிப்பண்டிகை என்றும், தைப்பொங்கல் என்றும், மாசிமகம் என்றும் சாக்குப் போக்குகள் சொல்லிப் புதுக்கூறையும் பொன்னும் வேண்டுமெனக் கூறுவார்கள்; அவைகளைத் தந்தபிறகும், அவர்கள், இரண்டொரு தினங்களுக்குள், கட்டின ஆடைக்குக் கழற்றுடை கிடையாது; வேறு வாங்கித் தரவேண்டும் என்பார்கள். இன்னும் சில தினங்கள் சென்ற பிறகு, காப்புக் குகந்த கொலுசும், கண்டசரத்துக் குகந்த கனகத் தொங்கலும், அரை பொட்டியாணத்துக்கு உகந்த முகப்பும், கால்விரற் பீலிகளுக் குகந்த சதங்கைகளும், கைவிரல்களுக்கு வெவ்வேறு விதங்களில் மோதிரங்களும் வேண்டுமெனப் பெருமையோடு பேசுவார்கள். 'ஆகட்டும்' எனக் கூறாத அருமை மருமகனைக் கடைக்கண்ணாலும் பாரார்கள்; மற்றுமொரு மூன்று தினங்களுக்குப் பிறகு, வீட்டுத் தெருத்திண்ணையிலும் வீற்றிருக்க விடமாட்டார்கள்; ஆகட்டும் எனக் கூறினபிறகு அதன்படி நடவாமல் ஏமாற்றித்திரியும் மருமகனோடு, காசத்தனை ஸரஸ வார்த்தையாகிலும் தமது மகளைப் பேசவிட மாட்டார்கள்; அவன் தமக்குத் தருவேன் என்று சொன்ன உடைமைகளிற் பாதியேனும் அவனிடத்திற் பெற்றுக்கொண்ட பிறகே, அவனைத் தமது மருமகனாயொப்புவார்கள்; ஸம்பூர்ணமாகக் கொடுத்தவனைச் சந்தன புஷ்பாதிகளால் அலங்கரித்து, 'பூலோக மன்மதன் என்றால் உனக்கே தகும்' என்றும், ஸங்கீதத்தில் "ஸ, என்னும் எழுத்தை உணராதவனாயினும், 'காயகர்களில் நீயே 'வல்லவன்' என்றும், குபேரன், அம்மா பேருக்கேயன்றி, யாருக்கு என்ன கொடுத்தான்? ஒன்றுங் கிடையாது" என்று சொல்லும்படி தமது மகளுக்குக் கற்றுக்கொடுப்பார்கள்.

மோகமிக்கவனை மோசஞ்செய்யும் வேசையர் கிருகங்களுக்கு ஏகுதல் சரியன்று. குமார! நாங்கள் எத்தனையெத்தனை நோன்பு நோற்று உன்னையீன்றனம்! அங்ஙனம் இருந்தும் நீ இங்ஙனமாதலால், எங்கள் மனங்கள் மிகவுந் தத்தளிக்கின்றன" எனக் கூறினர். புண்டரீகன், அவர்கள் வார்த்தைகளை அலக்ஷியஞ்செய்து கோபம் மிகுந்தவனாய், "உங்களுக்கு இன்னும் சாவு வரவில்லையா? நீங்களிருந்து யாரைக் காப்பாற்றப் போகிறீர்கள்" என்று இங்ஙனம் பலவாறு அவர்



களைத் தூஷித்து, அவர்கள் உடல்களினின்றும் இரத்தம் வடிய அவர்களை அடித்து, தனது மனைவியைமட்டும் அழைத்துக்கொண்டு வேறோர் இடத்திற் போய்ச்சேர்ந்தான்.

இங்ஙனம் இருக்குங்காலத்தில், புண்டரீகனுடைய தாய்தந்தையர், தமது குமாரனுடைய கொடுஞ் செய்கைகளுக்கு மனமொப்பாதவர்களாய், எங்கேனும் சென்று சாகலாம் என்றிருந்தார்கள். அங்ஙனம் இருக்கையில், காசி யாத்திரைக் கேகும் ஜனங்களிற் சிலர், அங்கு வந்து விடுதி தங்கினார்கள். அவர்களோடுகூடி, ஜந்நுவும், ஸாவித்திரியும் காசியாத்திரைக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். சில தினங்கள் சென்றபிறகு, புண்டரீகனும் காசிக்குச் செல்ல எண்ணங்கொண்டு, வேசையர்களுக்குப் பணங்கொடுத்துச் சமாதானப்படுத்தி, அவர்களுடைய அனுமதிபெற்று, தனது வீட்டுக்கு வந்து மனைவியை நோக்கி, "நாமும் காசிக்குச்சென்று, அவ்விடத்திய விநோதங்களைப் பார்த்து வருவோம், வா" என்றனன். அவனுடைய மனைவி, "அங்ஙனமே போவோம்" என்றனள். உடனே புண்டரீகன், இரண்டு குதிரைகளை வரவழைத்து, ஒன்றின்மேல் தன் மனைவியை ஏற்றிக்கொண்டு; மற்றொன்றின்மேல் தான் ஏறிக்கொண்டனன். அங்ஙனம் அவன், தனது மனைவியோடு கூடி, குதிரைகளேறிப் போய்க்கொண்டிருக்கையில், தனக்கு முன்னே போன தன் தாய் தந்தையாகிய ஜந்நுவும் ஸாவித்திரியும் விருத்தாப்பியத்தால் நடக்க முடியாமல் வெய்யிலில் வருந்தி, பரிதபித்துக்கொண்டு, கால்கள் இளைத்துத் தடுமாறிச்செல்வதைக் கண்டான்.

அவர்களைப் பார்த்தும் அவர்களை ஆதரிக்காமல் அதிவேகமாய் ஸவாரிசெய்துகொண்டுபோய்க் காசி க்ஷேத்ரத்தருகேயுள்ள வனநடுவில் குக்குடமுனி ஆசிரமத்தில் விடுதி இறங்கினார்கள்.

அந்தக் குக்குட முனிவருடைய மஹிமையைச் சொல்வதற்கு ஈராயிரம் நாவுகளையுடைய ஆதிசேஷனுக்கும் தரமல்ல. இன்னும், பிரமாதி தேவர்கள் யாவரும் அவரை ஸ்மரித்துத் தத்தம் பாவங்களினின்று விமுக்தர்களாகின்றார்கள். அவருடைய தவவிசேஷம் உணராதார் எவருமிலர். அந்தக் குக்குடயோகீஸ்வரர் தம்மைப் பெற்ற தாய் தந்தையருடைய பணிவிடைசெய்துகொண்டு, அவர்கள் எதிரிற் குந்தியிருந்து, ஜனனமரண நிவாரணார்த்தம் புராணபடனம் செய்துகொண்டிருப்பார். இதுவுமன்றி, தாய் தந்தையரை ஒரு கணநேரமாயினும் அவர் பிரிந்திருக்கச் சகியார்; சகல தேவர்களைக் காட்டிலும் மாதா பிதாக்களே கண்கண்ட தெய்வங்களென்று எண்ணி, அவர்களை வணங்குவதால் ஜன்மஸாபல்யமாகும் என்றும், கங்கா யமுனாதி புண்ய தீர்த்த ஸ்நான பலத்தைவிட, மாதா பிதாக்களுடைய பாத தீர்த்தம் பரம பாவனமானதென்றும் தீர்மானித்து நாள்தோறும் அவர்களைச் சேவித்துக்கொண்டு, அவர்களுடைய பாதோதகத்தை ஸ்வீகரித்துக்கொண்டிருந்தார். ஆதலால், உலகினர் தம்மிடத்தில் முழுகுவதால் நேரிட்ட மஹாபாதகங்களைப் போக்கடித்துக்கொள்ள கங்கா

யமுனா ஸரஸ்வதீ நதிகள் பெண்ணுருவந்தாங்கி வந்து, அரையிரவில் அம்முனிவருடைய பாதசேவைசெய்து செல்வாராயினர். இப்படிப்பட்ட மஹாமஹிமையுடைய குக்குடயோகீந்திரருடைய திவ்ய சரித்திரத்தைக் கூறுவதற்கு என்னால் ஆகாதென்று, பின்னும் கூறுகின்றான்.

காத்யாயனீ! அந்தக் குக்குடமுனிவர் ஆஸ்ரமத்திற் கெதிரிலுள்ள தர்மசாலையில் விடுதி தங்கியிருந்த புண்டரீகன், மனைவியோடு சென்று, அம்முனிவரை நோக்கி, "அய்யா! மஹிமாதிசயமான காசி க்ஷேத்திரம் இன்னும் எத்தனை தூரத்தில் இருக்கின்றது" என்று கேட்டனன். அந்த யோகீஸ்வரர், "காசி என்பதும், அஃது இத்தனை தூரத்தில் இருக்கின்றதென்பதும் எனக்குத் தெரியாது"? என்றனர்.. அதற்குப் புண்டரீகன், "அய்யா! இத்தனை ஸமீபத்திலுள்ள காசீ க்ஷேத்ர தரிசனம் செய்யாத உமது ஜன்மம் ஒரு ஜன்மமா! உமது பிழைப்பும் ஒரு பிழைப்பா! உலகில் எத்தனை உயிர்கள் பிழைத்திருக்கவில்லை! வயிற்றுத்திரத்தைக் கழிக்கலாம் என்றெண்ணியே நீர் இங்ஙனம் யோகிவேஷம் பூண்டு, ஊர்க்கு வெளியே வாழ்கின்றீர் போலும்! இப்பேர்ப்பட்ட நீச ஜன்மம் எடுக்கலாமா!" என்று அவமானமாய்ப் பேசி, பரிகாசஞ்செய்து, நகைத்துக்கொண்டு தனது விடுதி சேர்ந்தான். அன்றிரவு பதினைந்து நாழிகைக்கு, முற்கூறிய கங்கா யமுனா ஸரஸ்வதீ நதிதேவதைகள் மூவரும், மஹா கோரமலின ரூபங்களுடன், குக்குடயோகியார் ஆஸ்ரமத்திற் பிரவேசித்தார்கள். அப்போது விழித்துக்கொண்டிருந்த புண்டரீகன் அந்த கோராகார ஸ்திரீகளைப் பார்த்து பிசாசங்கள் என்று பிரமித்து பயமடைந்தனன்.

இங்ஙனம் இருக்கையில், அந்த மூன்று ஸ்திரீகளும், அவ்வாஸ்ரமத்திற் குப்பைகளைப் பெருக்கி, மெழுகி, கோலமிட்டு, திவ்ய தேஜோரூபத்தோடு வெளிப்பட்டு வந்துகொண்டிருந்தார்கள். அப்போது புண்டரீகன் அதிசயம் அடைந்து, அவர்களை எதிர்கொண்டு சென்று, "நீங்கள் முன்பு கோரமான மலினரூபங்களோடு இருந்தீர்கள். இப்போது சுந்தர ரூபங்களோடு விளங்குகின்றீர்கள். இப்படிப்பட்ட நீவிர் யார்"? எனக் கேட்டனன். இங்ஙனம் கேட்டதற்கு, அம்மூவருக்குள் கங்காதேவியானவள், அவனை நோக்கி, "ஏ, பல்லூழிகாலம் சென்றாலும் ஒருசிறிதும் தேயாத மஹா பாதக! நீ எங்கள் முன்னே வந்து நிற்கவும் தகுமா. சீ இவ்விடம் விட்டு அப்பாலே போ" என்றனள். அதுகேட்ட புண்டரீகன், அந்த தேவியின் பாதமலர்களிற் பணிந்து, "தாயே! எனது பாவங்களை நீயே போக்கியருளவேண்டும்; வேறு யாவரும் அது செய்யார். என்னுடைய பாவங்களைத் தெரிந்து கொண்ட நீயே, என் பாவங்களைப் போக்கவல்லாய்" எனவேண்டிக்கொண்டான். அதற்குக் கங்காதேவி, "பாதகா! தாய் தந்தையர்க்கு துரோகி! நீ இந்த ஜன்மத்திற் செய்த பாதகங்களுக்குக் கணக்கில்லை; ஆனாலும் பூர்வ ஜன்மத்தில் நீ செய்தபுண்ணியத்தால் குக்குடமுனி ஆச்ரமத்திற் பிரவேசிக்கநேர்ந்தது. அவருடைய தரிசனபலத்தால், நாங்கள் உனக்குக் காணக்கிடைத்தோம். இனி, நீ, ஸர்வபாபரஹிதனாய் விளங்குவை" எனக்கூறி, தனக்குப்



பக்கத்திலிருந்தவர்களைக் காட்டி, இவள் யமுனாதேவி, இவள் ஸரஸ்வதீ தேவி; நாங்கள் மூவரும் நதி ரூபங்களைப் பூண்டிருக்கின்றனம். எங்களிடத்தில் ஸ்நானம் செய்கிற ஸகல ஜனங்களுடைய பாபங்களையும் பரிகரிக்கின்றோம். ஆனாலும் அவர்களுடைய பாவங்கள் எங்களிடத்திலேயே இருக்கின்றன. அந்தப் பாவபலத்தால், எங்களுக்கு கோரமான மலினரூபம் ஸம்பிராப்தமாகின்றது. எங்களுடைய மலினரூபம் இம்மஹாதவசியாகிய குக்குடமுனிவர்க்கு நாங்கள் செய்துவரும் கைங்கரியத்தால் அப்பாவம் மாறி எங்களுக்கு திவ்யரூபம் கிடைக்கின்றது. இங்ஙனம் பிரதி நித்தியமும் எமது பாவங்களைப் பரிகரித்துக்கொண்டு திவ்யரூபம் பெற்றுச் செல்கின்றோம். தரிசன மாத்திரையால் சர்வ தோஷங்களையும் தூரமாக்கவல்ல மஹிமையோடு விளங்கும் குக்குடமுனீந்திரருடைய பிரபாவத்தை என்னென்றுரைப்பேன்! எழுந்திரு" என்று சொன்னவுடனே, புண்டரீகன் எழுந்து, கைகளைக் கட்டிக்கொண்டு நின்று, "ஸகல ஜன பாவங்களையும் பரிகரிக்கவல்ல உமது பாவங்களை நீக்குஞ் சக்தி இந்த மஹானுக்கு எங்ஙனம் உண்டாகியது?" எனக்கேட்டான். அதற்குக் கங்கை, "இப் புண்ணிய புருஷர், 'அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்', 'தந்தை தாய்பேண்,' 'தந்தைசொன்மிக்க மந்திரமில்லை,' 'தாய்சொற் றுறந்தால் வாசகமில்லை" 'ஈன்றாளின் என்னகடவுளு நில்' என்னும் வாக்யங்களின்படி, மாதா பிதாக்களுக்குப் பணிவிடை செய்கின்றார். இது தவிர வேறு தவம் செய்வதுமில்லை; தீர்த்தங்களில் முழுகுவதும் இல்லை; ஸ்தல யாத்திரை செய்வதும் இல்லை; மோனமென்பது ஞானவரம்பு என்றபடி யோகாப்யாசமும் செய்வதில்லை. எதுவானாலும் தாய் தந்தையர் வணக்கத்துக்குச் சரியாகாது; தோ யாகங்கள் செய்ததனாலும், ஸர்வ தீர்த்தஸ்நானம் செய்ததனாலும், பூவலம் வந்ததனாலும், காசிக்ஷேத்திரத்தை இரண்டு லக்ஷமுறை பிரதக்ஷிணஞ் செய்ததனாலும் அடையக் கூடிய பலனை ஒரு முறை தாய்க்கு நமஸ்காரஞ் செய்ததனால் அடையலாம். தந்தையை ஒரு முறை வணங்குவதனால், உத்தம ஞான சித்தியாகும்.

'மக்களுக்குத் தாய்மார் மகிழ்ந்துபா லூட்டுகின்ற
மிக்கவுத விக்குண்டோ மேலுதவி—அக்குணத்தால்
செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது' என்றபடி,

பூமியைவிட விசாலமான ஸ்தானம் தாய் என்றும், ஆகாயத்தைவிட உன்னத ஸ்தானம் தந்தை யென்றும் சாஸ்திர விற்பன்னர்கள் விளம்புகின்றனர். மேலும், தாய் தந்தையர்களுடைய பணிவிடையால், ஸ்ரீமந் நாராயணன் பிரத்யக்ஷனாய், வேண்டும் வரங்களை அளிக்கின்றனன்; இந்த உண்மைகளை உணர்ந்த குக்குடமுனிவர், நிரந்தரம் தாய் தந்தையரைச் சேவைசெய்கின்றனர். எவன், பிரதிதினமும் தாய் தந்தையரை நிந்திக்கின்றனனோ, அவன் துஷ்கிருத்யங்களை ஆசரிக்கின்ற சண்டாளன் ஆவான்; கற்பாந்தத்திலும் கடைத்தேறாத மஹா நரகத்தில் வீழ்ந்து எழாமற் கிடப்பான்; எத்தனை ஜன்மங்கள் எடுத்தாலும், கொடிய

வியாதிகளால் பீடிக்கப்படுவான். அப்படிப்பட்டவனைப் பார்த்தவர்களும் பாவிகளாவார்கள்'' எனக் கூறினவுடனே, புண்டரீகன் பயமடைந்து, "இதற்கென்ன உபாயம் செய்வேன்" என்று வருந்தி, விசனப்பட்டுக்கொண்டு, மிகவும் பரபரப்புடன், "ஐயோ! ஸகல புண்ணியங்களையும் செய்வதற்கு ஸாதகமான மானவ ஜன்மங் கிடைத்தும் வீணாக்கிக்கொண்டேன்; தாய்தந்தையரை வெறுத்தவனாயினேன்; அதுமட்டும் அன்றி, அவர்களை அடித்தேன்; வைதேன்; அவமானம் செய்தேன்; எனது மஹா பாதகம் எங்ஙனம் நிவர்த்தியாகுமென்று கூறி, அவர்களை அங்கிருந்தபடியே திக்குநோக்கி நமஸ்கரித்துக் கீழே விழுந்து புலம்புவா னாயினான். இங்ஙனம் வருந்துகின்ற புண்டரீகனை, கங்காதேவி நோக்கி, "பாவீ! இனியாகிலும் நீ, உனது மாதா பிதாக்களுடைய பணிவிடை செய்வையாயின், உனது ஸகல பாவங்களும் விலகிப்போகும். மூன்றுலகிலிருப்பவர்களும் உன்னை ஆஸ்ரயிப்பார்கள்; மஹா கீர்த்திவானாய், சக்ரபாணியாகிய ஸ்ரீமந் நாராயண மூர்த்தியினுடைய கிருபை உண்டாகும்'' எனக் கூறி, யமுனா ஸரஸ்வதீ தேவிகளுடன் தனதிருப்பிடஞ் சென்றனள்.

அப்போதே புண்டரீகன், கங்காதேவி கூறின ஹிதோபதேசத்தால் ஞானம் பெற்றவனாய், குக்குடமுனிவரிடத்திற்குச் சென்று, அவர் பாதங்களிற் பணிந்து, பத்தினியோடு குதிரைகளையும் கூட்டிக்கொண்டு, தாய் தந்தையரைத் தேடிச் சென்று அவர்களைக் கண்டு, மிகவும் வேண்டி, குதிரைகளில் ஏற்றி அழைத்துக்கொண்டு காசிக்குச் சென்று, கங்கை, கயை, பிரயாகை முதலாகிய நதிகளில் ஸ்நானஞ் செய்வித்து, அவர்கள் ஆராதிக்கவேண்டிய கருமங்கள் அனைத்தையும் கிரமமாய் நிறைவேற்றுவித்து, தானும் தனது பத்தினியும் அவர்களுக்கு பணிவிடை செய்துகொண்டு தனதிருப்பிடத்திற்கு அவர்களை அழைத்துக்கொண்டு வந்தான். பிரதி நித்தியமும் அவன், தனது தாய்தந்தையர்க்கு என்னென்ன வஸ்துக்கள் தேவையோ அவைகளைத் தருவித்துக் கொடுத்து, அவர்களைத் திருப்தி யடைவித்து குக்குடமுனீந்திரரைப்போலப் பணிவிடை செய்துகொண்டிருந்தான்.

இங்ஙனம் இருக்கையில், முன்னொரு காலத்தில், விருத்திரன் என்னும் அரக்கன், தேவேந்திரனோடு விரோதப்பட்டு, அவனைக் கொல்லத் தீர்மானித்து, பாதாள லோகத்திற்குச் சென்று ஓரிடத்தில் பெருந் தவம் செய்துகொண்டிருந்தனன். இவ் விருத்தாந்தத்தைத் தேவேந்திரன் உணர்ந்து, பாதாளலோகத்திற்கேகி, அவனுடைய சிரத்தை வஜ்ராயுதத்தால் துண்டித்தனன். அப்போது அந்த விருத்திராஸுரன், இந்திரனை நோக்கி, "நான் தவஞ் செய்யுங் காலத்தில் நீ என் தலையைக் கொய்த காரணத்தால், நீ செங்கல்லாய்ப் பூமியில் விழக்கடவை'' என்று சாபமிட்டனன். அந்தச் சாபத்தால் தேவேந்திரன் செங்கல்லாய்ப் பூமியில் விழுமுன்பே மஹாவிஷ்ணுவைப் பல விதங்களிற் றுதித்தனன். பக்தவத்ஸலனாகிய பகவான், பிரத்யக்ஷனாய் "ஓ தேவராஜா! நீ புண்டரீகாச்ரமத்தில் செங்கல்லாயிருப்பை; அதன்



நான் நின்றபொழுது நினது சாபம் தீரும்படி செய்கின்றேன். பயப்படவேண்டா'' எனக் கூறி, மறைந்தனன். அந்த நாள் முதல் திரன், செங்கல் உருவத்தோடு டிண்டீரவனத்தில் விழுந்து கிடந்தான். அந்தக்கல் விழுந்த இடத்தில் டிண்டீரவ நகரம் ஏற்பட்டது; அவ்விடத்திலேயே புண்டரீகனுடைய கிருகம் இருந்தது. அதனில் புண்டரீகன் வாழ்ந்துகொண்டு, தாய் தந்தையர்களுக்குப் பணிவிடை செய்து வந்தான். அந்தக்காலத்தில் ஒருநாள், இந்திரனுடைய சாபமும், இந்திரனுடைய தவமும் பலிக்குங்காலம் பிராப்தி யாயிற்று. பகவான், புண்டரிகனுடைய மந்திரத்தில் தரிசனம்தர நினைந்து, தான் அவனுக்குக் காட்சிதருவதுபோல லக்ஷ்மீதேவிக்கும் காட்சி தர எண்ணி, திருவடிகளில் நூபுரங்கள் கலீர் கலீர் என்று ஒலிக்கவும், அரைநாணிற் கிங்கிணிகள் சப்திக்கவும், கரங்களில் ரத்தின கங்கணங்கள் பிரகாசிக்கவும், வக்ஷஸ்தலத்தில் நவரத்ன ஹாரங்கள் ஒளிவீசவும், காதுகளில் குண்டலங்கள் தளதள வென்று மின்னவும், சிகையில் ரத்தினாபரணங்கள் பிரகாசிக்கவும், மத்தகஜம்போன்ற மந்தகதியுடனே நீல ரத்னகிரி பெயர்ந்து வருவதுபோல வந்து, லக்ஷ்மீதேவிக்கு தரிசனம் தந்து, "இங்ஙனமே புண்டரீகனுக்கு சேவை அளிப்பேன்'' என்று சொல்லி, அங்கிருந்து புறப்பட்டு, புண்டரீகன் தனது தாய் தந்தையர்க்குப் பணிவிடைசெய்யும் சமயத்தில், அவன் காணும்படியாக அவனுக்குப் பின்னால் நின்றுகொண்டிருந்தான். இங்ஙனம் பகவான் நின்றதனால், புண்டரீகன், தந்தை பாதங்களில் நமஸ்கரிக்கும்போது, அவனுடைய கண்களுக்கு முன்னே, மஹா நீலரத்னபிரபை காணப்பட்டது. அந்தக் காந்தியின் வரலாறு என்னவென்று அவன் தலையெடுத்துத் திரும்பிப் பார்க்கையில், திவ்ய தேஜோமூர்த்தியின் தரிசனங் கிடைத்தது.

அப்போது புண்டரீகன் தனக்குள்ளே, "கங்காதேவி தந்த வரம் இன்று பலித்தது'' என்றெண்ணினான். ஆனாலும் அவன், "பெற்றோர் பணிவிடைக்கு பங்கம் வரப்படாது'' எனத் தீர்மானித்து, அங்கே விழுந்து கிடந்த செங்கல்லை எடுத்து வீசி யெறிந்து, "இதன்மேல் சிறிது நேரம் நின்றிரு; எனது பெற்றோர் கைங்கர்யத்தைச் செய்துமுடித்துக் கொண்டு, வருகின்றேன்'' எனக்கூறி, தாய் தந்தையர்க்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தான். அப்போது பகவான், சாபவசத்தால் செங்கல்லாயிருந்த இந்திரன்மேல் நின்று, தனது இடையிற்கரங்களை ஊன்றி புண்டரீகன் தாய்தந்தையர்களுக்குச் செய்யும் கைங்கர்யங்களை பார்த்துக்கொண்டிருந்தான். இந்திரன் சாபவிமுக்தனாய் ஸ்வாமியை நமஸ்கரித்து தோத்திரம் செய்து, அவரது அநுமதி பெற்று ஸ்வர்க்கலோகம்சென்றனன். புண்டரீகன் மாதா பிதாக்களின் பணிவிடையை முடித்து, பீதாம்பரதாரியும் பசுபாலன தண்டதாரியும் ஆகிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியை அணுகி, ஸாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து ாகரத்தில் மூழ்கினவனாய்அநேக விதமாய் துதித்தான்.

இங்ஙனம் துதித்த புண்டரீகன்மேல், பகவான், டைக்கண் "புண்டரீகா! தாய் தந்தையர்க்குப் பணிவிடை செய்வதிற் சிற உன்னைப்போல் எவரும் இலர். நீசெய்கிற கைங்கர்யம், மிகவும் பு தக்கது. இப்படிப்பட்ட உத்தம கைங்கர்யம் செய்பவர்களே உத்தமராவார்கள். அப்பேர்ப்பட்டவர்களுக்கு எதனாலும் குறைவில்லை.

'ஈன்றாளின் ஏன்ன கடவுளுமில்' என்றபடி, தாய் தந்தையரைக்காட்டிலும் பிரத்தியக்ஷ தெய்வம் வேறு எங்கும் இல்லை. நினது பக்திக்கு மெச்சுகின்றேன். வேண்டும் வரத்தைக் கேள்; தருகின்றேன்" என்றனன்.

அதற்குப் புண்டரீகன், ஸ்வாமியைநோக்கி, "பகவானே! நீ திரிமூர்த்தி ஸ்வரூபன். யாவரையும் ரக்ஷிக்க வல்லவன். விட்டல் என்னும் பேருள்ள இந்தக் கல்லின்மேல், நின்ற திருக்கோலத்துடன், விட்டல மூர்த்தி யென்னும் திருநாமத்தோடு, இங்கே சதாகாலமும் எழுந்தருளி, நினது தரிசனஞ் செய்யும் பக்தர்களுடைய சகல பாபங்களையும் விமோசனம் செய்துகொண்டிருக்க வேண்டும்; எனது பேரால் இந்த க்ஷேத்திரம், புண்டரீகபுரம் (பண்டரி புரம்) எனப் பிரசித்திபெற்று விளங்கவும், என்பொருட்டு நீ எழுந்தருளினமையால், உன் திருநாமம், புண்டரீகவரதன் என்றும் பாண்டுரங்கன் என்றும் வழங்கிவரவும் அநுக்ரஹிக்கவேண்டும். இன்னும், இந்த க்ஷேத்திரத்தில், சகல தீர்த்தங்களினும் உத்கிருஷ்டமாகிய தீர்த்தம் ஒன்றை நிருமித்து, அதில் மூழ்குபவர்களைப் பரிசுத்தர்கள் ஆக்கியருளவேண்டும்; இதுவே எனது கோரிக்கை" என்றனன். அதற்கு பகவான், மிகவுங் களிகூர்ந்து, புண்டரீகனை நோக்கி, "நீ, வேண்டிக்கொண்டபடியே எல்லாம் உண்டாகும். இன்னும், திரிலோகத்தில் எங்கெங்கும் உள்ள தீர்த்தங்கள் அனைத்தும் இன்றைக்கே இங்கு வரும்" என்று வாக்களித்தனன். அப்படியே அன்றையதினம் பகலிலேயே எல்லா நதிகளும் அங்கு நவீனமாய் நிருமிக்கப்பட்ட புண்டரீக தீர்த்தத்தில் வந்துசேர்ந்து நிறைந்திருந்தன.

பார்வதீ! முன்பு, திரிபுர தஹனஞ் செய்ததனால் நேரிட்ட தோஷத்தைநிவாரணஞ் செய்துகொள்ளும்பொருட்டு நான் பீமசங்கரி என்னும் க்ஷேத்திரத்திற்கு வந்து, தவஞ்செய்துகொண்டிருந்த காலத்தில், எனது தேகத்திலிருந்து வெயர்வைநீர் வெள்ளமாயோடி, பீமா என்னும் பெயரால் விளங்கியிருந்தது. அது எனது ஞான சக்தியின் வல்லமையால் மஹாத்வனியுடனும் அலைகளுடனும் புண்டரீகன் கிருகம் வரையில் பிரவகித்துக்கொண்டிருக்கையில், அந்தஸ்தலத்தில் வாழ்ந்துகொண்டிருந்த பீமசேனபைரவர், அந்த மஹாத்வனியைக் கேட்டு, "ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி இங்கு எழுந்தருளியிருக்கின்றார் என்னும் பயமின்றி, மஹா ரவத்தோடு பிரவேசிக்கின்றனையா?" என்று கதாயுதத்தைப் பிரயோகித்தார். அதுமுதல் அந்த நதி பயமடைந்து இன்னும் நிச்சப்தமாய் ஓடிக்கொண்டிருக்கின்றது. இப்போதும் அந்த நதி தன்னிடத்தில் மூழ்குகிறவர்களுடைய பாபங்களை பரிகரித்துக்கொண்டு, கங்கை



யைப்போல விளங்கி, ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஆலயத்தைச் சமீபித்து, சந்திர வட்டம்போல தென்திசையிலிருந்து கீழ்த்திசைக்குப் போய்க் கொண்டிருக்கின்றது. ஆகையால் இதற்குச் சந்திரபாகா நதி என்று பெயர் உண்டாயிருக்கின்றது. முற்காலத்தில் சந்திரன் குருவின் சாபம் ஏற்று, அதனைப் பரிகரித்துக்கொள்ளவேண்டி, இந்த நதியில் மூழ்கினன். பாநுதீர்த்தத்துக்கு முற்பாகத்தில் உள்ள விட்டல்ஸ்வாமிக் கெதிரில் இந்தச் சந்திரதீர்த்தம் பிரவகித்துக்கொண்டு, தன்னிடத்தில் மூழ்குபவர்களுடைய பாவங்களை ஏற்றுக்கொண்டு, தனக்குத் தீ அணுகாதபடி, ஸ்வாமியைத் துதித்துக்கொண்டு, இன்னும் விளங் கொண்டிருக்கின்றது.

இங்ஙனம் இருக்கையில், கமலாஸனியாகிய லக்ஷ்மீ தேவிக் ஸேவை அளித்த ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி அங்ஙனமே புண்டரீகனுக்கு எதிரிற் சென்று நிற்பேன் எனக்கூறி, புறப்பட்டுச்சென்றனன் அல்லவா? லக்ஷ்மீதேவி, பகவத் விஶ்லேஷத்தைப் பொறுதவளாகி, ஸ்வஸௌந்தரியத்துடனும் திவ்ய வஸ்த்ராபரணங்களுடனும், பகவானைப் பின்பற்றிச் சென்று, விட்டல மூர்த்தியாகிய அந்த பகவானுக்கு இடது பக்கத்தில் நின்றனள். கம்ஸாதி துஷ்டதானவர்களுடைய மதம்அடக்கினவனும், தர்ம ராஜாதி சிஷ்டர்களை இரக்ஷித்தவனுமாகிய ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியினுடைய கிருபாவிசேஷத்தால், நற்கதி அடைந்த தேவேந்திரன், மயனை அழைத்து, "ஏ, மயனே! பூலோகத்தில் விஷ்ணு சக்ர மத்தியில் பண்டரிபுரமும், அதற்கிடையில் பிந்து தீர்த்தமும், அதற்கிடையில் அர்த்த மாத்ராக்ருதியாய் விட்டல் என்னும் பெயருள்ள பீடமும் விளங்கியிருக்கின்றன.

அங்கே பகவான் ஸாக்ஷாத்கரித்து இருக்கின்றனன். நீ அவ்விடத்தில் திவ்யமான பகவதாலயமும், கோபுர ப்ராகார மண்டபாதிகளும், ச்ருங்கார நகரமும், பிரதிஷ்டிக்கக்கடவை" என்று கூறினன். அது கேட்டமயன், இந்திரன் இஷ்டம்போலவே எல்லாவற்றையும் அமைத்துச் சென்றனன். அதுமுதல் ஸகல தேவர்களும், முனிவர்களும், தவச்சிரேஷ்டர்களும், பக்தர்களும், முமுக்ஷுக்களும், ஸாதுக்களும் வந்து, விட்டல நாதனையும் ரக்கமா பாயையும் (ருக்மிணீ தேவியையும்) ஸேவித்துக்கொண்டு ஆனந்த மிக்கவர்களாய் விளங்குகின்றனர்.

பார்வதீ! பண்டரீபுர ஸ்தலத்தோடு ஸமானமான க்ஷேத்திரமும், விட்டலமூர்த்தி, ருக்மிணீதேவி, பாண்டுரங்க மூர்த்திகளைப்போல பிரத்தியக்ஷமான தெய்வங்களும், சந்திரபாகை தீர்த்தம், புண்டரீக தீர்த்தம் முதலான தீர்த்தங்களுக்குச் சமானமான தீர்த்தங்களும், திரிலோகத்தில் எங்கும் இல்லை. இந்த திவ்யக்ஷேத்ர ஸ்மரணையால் ஸகல பாவங்களும் விலகும்; ஐஹிகாமுஷ்மிக ஸுகங்களும் கைகூடும்" என்று பரமேஸ்வரன் பார்வதிதேவிக்குக் கூறினன்.

முற்றிற்று.

12-0786

## மங்களம்,

(நேரிசை ஆசிரியப்பா)

மங்களம் விட்டலே சாய யோகி
ஹிருத்பத் மவாஸிநே மங்களம் ஸ்ரீமத்
பண்டரி நாதா யமங்களம் பக்தக்
ரீதா யமங்களம் விஷ்ணுபக் தாக்ரகண்
யாயஞா னவைராக் யஸிந்தவே திந்து
பில்வநி வாஸா யஜயதே வாய
மங்களம் ஆத்மரா மாத்மஜா யாய
கல்யா ணகுண ஸிந்தவே ஸ்ரீமத்
துளசிதா ஸாயரா மபக்தா யமங்களம்
விட்டலே சபதாம் போஜ லிங்யஸ்
தாத்ம பராயச ஸர்வஸத் குணயுக்
தாயநா மதேவா யமங்களம் அயோநிஜா
யகுமவே கங்கா தீரநி வாஸிநே
ஸ்ரீராம பக்தமுக்யாய கபீர்தா ஸாய
மங்களம் ஞானப் ரதாயலோ காநாம்
அநகா யமஹாத் மநேஸா க்ஷாத்விஷ்ணு
ஸ்வரூபா யஜ்ஞான தேவாய மங்களம்
மங்களம் கூர்மதா ஸாய சோகா
மேளா யமங்களம் மங்களம் ரோஹிதா
ஸாயஸா மந்தா யாஸ்து மங்களம்
மங்களம் ராமதா ஸாயஏ கநாதா
யாமங்களம் மங்களம் பாநுதா ஸாய
துக்கா ராமா யமங்களம் மங்களம்
போஸலா யாஸ்து தசாவந் தாய
மங்களம் மங்களம் நிம்பரா ஜாய
ஸர்வேப் யோநித் யமங்களம் மங்களம்
மத்குருப் யோஸ்து தத்குருப் யோஸ்து
மங்களம் அஸ்மத் ஸர்வ
குருப்யோஸ் துநித்ய ஸ்ரீநித்ய மங்களம்.

ஸ்ரீபாண்டுரங்க பரப்ரஹ்மணே நம:

N13